வெளியீடு 30-4-2003 Issued 30-4-2003

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

DIGITIZED

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, மே 10, 2002 – தொகுதி 30 – எண் 1

**Friday the 10th May, 2002 – Volume 30 – No. 1**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

**Legislative Assembly Secretariat, Fort St. George, Chennai - 600 009**

ரூ. 3.00] [Price Rs. 3.0

295/2003

10-5-2002

## உள்ளடக்கம்

பக்கங்கள்


ஆளுநரும் அமைச்சரவையும் ix-xiii

Governor and Council of Ministers xv-xviii

பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் xix-xxiii

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) xxv-xxxv

**வினாக்கள்-விடைகள்—**

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள் விதி 51-ன்கீழ் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பெற்று அவற்றிற்கு சம்பந்தப்பட்ட அமைச்சர்களால் அளிக்கப்பட்ட விடைகளுடன் அவைமுன் வைக்கப்பெற்றவை (பட்டியல்கள் 10, 11, 12, 13, 14 மற்றும் 15) (இணைப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளன)

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல் 16) (இணைப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளன)

**கவன ஈர்ப்பு—**

விதி 55-ன்கீழ் அனுமதிக்கப்பெற்று அவற்றிற்குச் சம்பந்தப்பட்ட அமைச்சர்களால் அளிக்கப்பட்ட விவர அறிக்கைகளுடன் அவைமுன் வைக்கப்பெற்றவை (1 முதல் 43 வரை) (இணைப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளன)

**தகவல் கோரல்—**

உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

225169
சென்னை-600 009
நூலகம்



பக்கங்கள்

4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—

(அ) அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 — 2-3

(ஆ) திருவள்ளுவர் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2002 — 3

(இ) தமிழ்நாடு திறந்தவெளிப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2002

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—

(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண் 3) சட்டமுன்வடிவு, 2002

*மாண்புமிகு திரு. சி. பொன்னையன் — 4,5

(ஆ) தமிழ்நாடு அத்தியாவசியப் பணிகளைப் பேணிவருதல் சட்டமுன்வடிவு, 2002 — 6-47

*மாண்புமிகு திரு. சி. பொன்னையன் — 6,30

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் — 6-9,30,43

டாக்டர் க. பொன்முடி — 9-16

திரு. ஜி.கே. மணி — 16-17

திரு. ஜே. ஹேமச்சந்திரன் — 18-23,36,37,44

திரு. வை. சிவபுண்ணியம் — 23-27

திரு. கே.என். இலட்சுமணன் — 27

திருமதி எஸ். மகேஸ்வரி — 28-29

(இ) தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் பற்றிய சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 — 47-76



பக்கங்கள்

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

(ஈ) அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 — 76-78

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை — 47,48,49,55, 65-74,76,77

திரு. சி. ஞானசேகரன் — 47-51

திருமதி டி. யசோதா — 51-53

டாக்டர் க. பொன்முடி — 53-56

திரு. வி.கே. லட்சுமணன் — 56-57

*திரு. கி. பாரிமோகன் — 57-59

திரு. போளூர் வரதன் — 59-62

செல்வி க. பாலபாரதி — 62-64

*திரு. வே. கிருஷ்ணமூர்த்தி — 64-65

(உ) குற்ற வழக்கு விசாரணைமுறைத் தொகுப்புச் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு, 2002 — 78-108

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் — 78,106-107,108

திரு. இ. புகழேந்தி — 78-88

திரு. சி. ஞானசேகரன் — 88-97,98

திரு. ஜி. பழனிசாமி — 97,105

திரு. தி. வேல்முருகன் — 98-101

திருமதி எஸ். மகேஸ்வரி — 102-103

திரு. என். நன்மாறன் — 104

திரு. கே.என். இலட்சுமணன் — 106

| | பக்கங்கள் |
|---|---|
| **5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—** தொடர்ச்சி | |
| (ஊ) தமிழ்நாடு புகைபிடித்தலையும் எச்சில் உமிழ்வதையும் தடைசெய்தல் சட்டமுன்வடிவு, 2002 | 109-130 |
| மாண்புமிகு திரு. செ. செம்மலை | 109,123-129, 130 |
| திரு. டி.பி.எம். மைதீன்கான் | 109-113 |
| திரு. டி. சுதர்சனம் | 113-114 |
| *திரு. டி.கே. இராஜா | 114-116 |
| திரு. கு. ஜெயக்குமார் | 116-117 |
| செல்வி க. பாலபாரதி | 118-119 |
| திரு. வை. சிவபுண்ணியம் | 120-122 |
| (எ) தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 | 131-200 |
| (ஏ) தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரிய (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 | 200-202 |
| (ஐ) தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 | 202-205 |
| (ஒ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 | 206-213 |
| (ஓ) தமிழ்நாடு மாநகராட்சிகள் மற்றும் நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்டச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 | 213-214 |
| (ஔ) சென்னைப் பெருநகர்ப் பரப்பிட நிலத்தடி நீர் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2002 | 215-216 |





| | பக்கங்கள் |
|---|---|
| **5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—** தொடர்ச்சி. | |
| (அஅ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002. | 217-218 |
| மாண்புமிகு திரு. சி. துரைராஜ் | 131,188-193, 200,201-202, 203,204,205, 206-213,214, 215,216,217,218 |
| பேராசிரியர் க. அன்பழகன் | 132-146 |
| *திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி | 146-151 |
| திரு. ஜி.கே. மணி | 151-161 |
| *திரு. எச்.எம். ராஜு | 164-167 |
| திரு. கே. மகேந்திரன் | 167-170 |
| திரு. ஜி. பழனிசாமி | 170-183 |
| *திரு. ப. அரசன் | 183-187 |
| (ஆஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 | 219-245 |
| (இஇ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 | 238-239 |
| (ஈஈ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 | 240-241 |
| (உஉ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஏழாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 | 241-243 |
| (ஊஊ) தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 | 243-245 |
| (எஎ) தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002. | 245-247 |
| *மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி | 219,234-236, 237,238,239, 240,241,242, 243,244,245, 246,247 |

| | பக்கங்கள் |
|---|---|
| **5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—** தொடர்ச்சி. | |
| (ஏஏ) தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002—தொடர்ச்சி. | |
| திரு. சி. ஞானசேகரன் | 219,220-221 |
| திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் | 222-224 |
| திரு. கு. ஜெயக்குமார் | 224-228 |
| திரு. கே. ஆறுமுகம் | 228-230 |
| திரு. என். நன்மாறன் | 230 |
| திரு. ஜி. பழனிசாமி | 231 |
| *திரு. ப. அரசன் | 232-234 |
| (ஏஏ) தமிழ்நாடு பன்முறைச் செயற்பாடுகள், காணொலி பதிவுப்பேழைக் கருவி, கம்பிவட தொலைக்காட்சி இணைப்பு ஆகியவற்றின் மூலம் தொலைகாட்சித் திரையில் படக்காட்சிகள் காட்டுதல் (முறைப் படுத்தப்படுதல்) சட்டமுன்வடிவு, 2002 | 247-276 |
| *மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன் | 248,272-274, 275 |
| திரு. மீ.அ. வைதியலிங்கம் | 248-250 |
| திரு. சி. ஞானசேகரன் | 251-255 |
| திரு. ஐ. கணேசன் | 255-258 |
| திருமதி டி. யசோதா | 258,260-262 |
| திரு. கே.சி. கருணாகரன் | 263,267-269 |
| திரு. ஜி. பழனிசாமி | 270-271 |
| *திரு. ப. அரசன் | 271-272 |





| | பக்கங்கள் |
|---|---|
| **5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)— தொடர்ச்சி** | |
| (ஐஐ) அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 | 277-293 |
| (ஒஒ) திருவள்ளுவர் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2002 | 293-295 |
| (ஓஓ) தமிழ்நாடு திறந்தவெளிப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2002 | 296-298 |
| மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை | 277,278,284, 285-292,293, 294,295,296, 297,298 |
| திரு. வி.கே. லட்சுமணன் | 277-280,285 |
| திரு. டி.கே. இராஜா | 280-281 |
| திரு. ஜே. ஹேமச்சந்திரன் | 281-283 |
| திரு. ஜி. பழனிசாமி | 283-285 |
| **6. அறிவிப்புகள்—** | |
| (அ) 'யார்-எவர்' என்ற புத்தகம் உறுப்பினர்களுக்கு வழங்கப்பெறுதல் | 219-220 |
| (ஆ) திருவள்ளுவர் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2002 (ஆஇ) | 293 |
| (இ) தமிழ்நாடு திறந்தவெளிப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2002 (ஆஇ) | 295 |
| (ஈ) பேரவை நிறைவேற்றிய அலுவல்கள் | 300-312 |

| | பக்கங்கள் |
|---|---|
| **7. அரசினர் தீர்மானங்கள்—** | |
| (அ) விதிகள் 30,130,132 ஆகியவற்றைத் தளர்த்துதல். | 276-277 |
| (ஆ) விதி 25(1)-ன்கீழ் பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல் | 312-313 |
| **8. அரசினர் தனித் தீர்மானம்—** | |
| கால்நடை மருத்துவப் பயிற்சி, தொழில் ஆற்றுவதை முறைப்படுத்துதல் மற்றும் அதுதொடர்பான அனைத்துப் பொருட்பாடுகளுக்கும் இந்தியா முழுவதிலும் ஒரே சீரான சட்டத்தைக் கொண்டு வருதல்—1984 ஆம் ஆண்டு இந்தியக் கால்நடை மருத்துவமன்றச் சட்டம் (மத்தியச் சட்டம் 52/1984) தமிழ்நாடு மாநிலத்தில் ஏற்கப்படுதல் | 298-300 |
| மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் | 298-299 |
| **9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—** | 313-319 |




## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர்—திரு. பெ.ஸ்ரீ. ராமமோகன் ராவ்

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

**1. முதலமைச்சர்** .. **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா :**

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை மற்றும் சிறுபான்மையினர் நலன்.

**2. பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் :**

பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள், சிறுபாசனம் உட்பட பாசனம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, இலஞ்ச ஒழிப்பு மற்றும் சிறைகள்.

**3. நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :**

நிதி, திட்டமிடல், தேர்தல் மற்றும் சட்டமன்றம், சட்டமியற்றல், எடைகள், அளவைகள், கடன் கொடுத்தல் மீதான சட்டம் உட்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள், நிறுவனங்களைப் பதிவு செய்தல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல்.

**4. கல்வி அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:**

கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல், விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், தொல்பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

**5. சட்டத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் :**

சட்டம் மற்றும் நீதிமன்றங்கள்.

**6. இந்து-சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி :**

இந்து-சமய மற்றும் அறநிலையங்கள்.

**7. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. செ. செம்மலை :**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி, குடும்ப நலன்.

**8. உள்ளாட்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி. துரைராஜ் :**

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

**9. கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ப. தனபால் :**

கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல், விலைக் கட்டுப்பாடு மற்றும் புள்ளியியல்.

**10. வருவாய்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம் :**

வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத் தாள் சட்டம், எழுதுபொருள் அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம் மற்றும் கடவுச் சீட்டுகள்.



**11. வேளாண்மைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இரா ஜீவானந்தம் :**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு.

**12. சமூக நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி :**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு இல்லங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.

**13. ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி :**

ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.

**14. போக்குவரத்துத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன் :**

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம், துறைமுகங்கள்.

**15. மின் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன் :**

மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு.

**16. தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி :**

தொழிற்சாலைகள், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள், கனிமங்கள், மின்னணுவியல் மற்றும் வணிக வரிகள்.

17. வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ப. மோகன் :

வனம், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.

18. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன் :

குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள், கதர் கிராமத் தொழில் வாரியம்.

19. வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் :

வீட்டு வசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

20. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் :

கால்நடை பராமரிப்பு.

21. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே. சுதர்சனம் :

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்.

22. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. வ.து. நடராஜன் :

தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வக்ஃபு.



23. பால் வளத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன் :

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.

24. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன் :

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம், செய்தித்தாள் கட்டுப்பாடு.

25. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம் :

கைத்தறி மற்றும் துணித் தொழில்.

26. மீன்வளத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன் :

மீன்வளம்.

27. சுற்றுலாத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. அ. மில்லர் :

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

# GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR—THIRU P.S. RAMAMOHAN RAO

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | |
|---|---|
| **Chief Minister** | .. **The Hon. Selvi J Jayalalithaa:** Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police and Minorities Welfare. |
| **2. Minister for Public Works and Prohibition and Excise** | .. **The Hon. Thiru O. Panneerselvam:** Public Works, Highways, Irrigation including minor irrigation, Prohibition and Excise, Molasses, Prevention of corruption and Prisons. |
| **Minister for Finance and Information Technology** | .. **The Hon. Thiru C. Ponnaiyan:** Finance, Planning, Elections and Legislature, Legislation, Weights and Measures, Debt Relief including Legislation on Money lending, Chits and Registration of Companies and Information Technology. |
| **4. Minister for Education** | .. **The Hon. Dr. M. Thambidurai:** Education, Technical Education, Science and Technology, Sports and Youth Welfare, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians Overseas, Refugees and Evacuees. |

5. **Minister for Law** .. **The Hon. Thiru D. Jayakumar:**

Law and Courts.

6. **Minister for Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Thiru P.C. Ramasamy:**

Hindu Religious and Charitable Endowmen

7. **Minister for Health** .. **The Hon. Thiru S. Semmalai:**

Health, Medical Education and Family Welfare.

8. **Minister for Local Administration** .. **The Hon. Thiru C. Durairaj:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply.

9. **Minister for Co-operation, Food and Civil Supplies and Consumer Protection** .. **The Hon. Thiru P. Dhanabal:**

Co-operation, Food, Civil Supplies, Price Control and Statistics.

10. **Minister for Revenue** .. **The Hon. Thiru N. Thalavai Sundaram:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery and Printing, Government Press, Bhoodhan & Gramdhan and Passports.

11. **Minister for Agriculture** .. **The Hon. Thiru R. Jeevanantham:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development.



12. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. B. Valarmathi:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration.

13. **Minister for Adi-Dravidar Welfare** .. **The Hon. Thiru S. Karuppasamy:**

Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-servicemen.

14. **Minister for Transport** .. **The Hon. Thiru R. Viswanathan:**

Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

15. **Minister for Electricity** .. **The Hon. Thiru Nainar Nagendran:**

Electricity, Non-conventional energy development.

16. **Minister for Industries and Commercial Taxes** .. **The Hon. Thiru Se. Ma. Velusamy:**

Industries, Iron and Steel Control, Mines & Minerals, Electronics and Commercial Taxes.

17. **Minister for Forests and Environment** .. **The Hon. Thiru P. Mohan:**

Forests & Environment and Pollution Control.

18. **Minister for Rural Industries** .. **The Hon. Thiru R. Vilwanathan:**

Rural Industries including Cottage Industries, Small Scale Industries, Khadi and Village Industries Board.

19. **Minister for Housing and Urban Development** .. **The Hon. Thiru M.C. Sampath:**

Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and C.M.D.A.,

20. **Minister for Animal Husbandry** .. **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:**

Animal Husbandry.

21. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru K. Sudarsanam:**

Backward Classes, Most Backward Classes and De-notified Communities.

22. **Minister for Labour** .. **The Hon. Thiru Va.Thu. Natarajan:**

Labour, Employment and Training, Urban and Rural Employment, Census and Wakfs.

23. **Minister for Dairy Development** .. **The Hon. Thiru S. Ramachandran:**

Milk and Dairy Development.

24. **Minister for Information and Publicity** .. **The Hon. Thiru K.K. Balasubramanian:**

Information and Publicity, Film Technology, Cinematograph Act, Newsprint Control.

25. **Minister for Handlooms and Textiles** .. **The Hon. Thiru V. Somasundaram:**

Handlooms and Textiles.

26. **Minister for Fisheries** .. **The Hon. Thiru M. Radhakrishnan:**

Fisheries.

27. **Minister for Tourism** .. **The Hon. Thiru A. Miller:**

Tourism and Tourism Development Corporation.



## *பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்*

*பேரவைத் தலைவர்*

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து**

*பேரவைத் துணைத் தலைவர்*

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம்**

*மாற்றுத் தலைவர்கள்**

**திரு. பி.ஆர். சுந்தரம்**

**திரு. அ. பாப்பா சுந்தரம்**

**திரு. ப. இராஜரெத்தினம்**

**திரு. எம்.ஏ. ஹக்கீம்**

**திரு. செ.கு. தமிழரசன்**

**திரு. லா. சந்தானம்**

*முதன்மைச் செயலாளர்*

**திரு. செ.சு. ஜானகிராமன்**

*செயலாளர்*

**திரு. வெ. இராசாராமன்**

*12-3-2002 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | | |
|---|---|---|
| திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்.சி., பி.ஜி.எல். | .. | கூடுதல் செயலாளர் |
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| திரு. செ. சந்திரகுமார், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி வீ.நா. உமா, பி.ஏ., (விடுப்பு) | .. | குழு அலுவலர் |
| திரு. தி. திருமாவளவன், பி.எஸ்.சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. வே. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. | பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| திரு. சி. சடகோபி, எம்.ஏ., எம்.பி.ஏ. | .. | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| திரு. சு. ராஜகுரு | .. | குழு அலுவலர் |
| திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்.சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ., | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. | துணைச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. மா. செல்வராஜ், பி.எஸ்.சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. | குழு அலுவலர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. | குழு அலுவலர் |
| திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. (விடுப்பு) | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. | குழு அலுவலர் |
| திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்.சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்.சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | .. | தலைமை நிருபர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ. | .. | தலைமை நிருபர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |



| | | |
|---|---|---|
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி ச.இரா. சுகுணா, பி.ஏ. (விடுப்பு) | .. | தலைமை நிருபர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. ந. ருத்திரமணி, எம்.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | .. | தலைமை நிருபர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | .. | தலைமை நிருபர் |
| செல்வி சு. வத்சலா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள்

(அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. | திருவாரூர் (செ.வ.) |
| 2. | அண்ணாதுரை, திரு. செ. | .. | ஜெயங்கொண்டம் |
| 3. | அண்ணாமலை, திரு. கு. | .. | தென்காசி |
| 4. | அண்ணாவி, திரு. ப. | .. | தொட்டியம் |
| 5. | அப்பாவு, திரு. மு. | .. | ராதாபுரம் |
| 6. | அய்யாறு வாண்டையார், திரு. கே. | .. | திருவையாறு |
| 7. | அரசன், திரு. ப. | .. | அறந்தாங்கி |
| 8. | அருணாசலம், திரு. அ. | .. | வரகூர் (செ.வ.) |
| 9. | அருள், திரு. பி.எஸ். | .. | புவனகிரி |
| 10. | அழகம்மாள், திருமதி வி. | .. | தலைவாசல் (செ.வ.) |
| 11. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. | திருச்செந்தூர் |
| 12. | அன்பழகன், திரு. ஆ.கு.சி. | .. | பெரணமல்லூர் |
| 13. | அன்பழகன், திரு. கு. | .. | நிலக்கோட்டை (செ.வ.) |
| 14. | அன்பழகன், திரு. கே.பி. | .. | பாலக்கோடு |
| 15. | அன்பழகன், திரு. ஜெ. | .. | தியாகராய நகர் |
| 16. | அன்பழகன், பேராசிரியர் க. | .. | துறைமுகம் |
| 17. | அன்பில் பெரியசாமி, திரு. | .. | திருச்சிராப்பள்ளி-2 |
| 18. | அன்வர் ராஜா, திரு. அ. | .. | இராமநாதபுரம் |
| 19. | ஆண்டிவேல், திரு. ப. | .. | வேடசந்தூர் |
| 20. | ஆறுமுகம், திரு. கே. | .. | செங்கல்பட்டு |

21. ஆறுமுகம், திரு. த. .. திருவொற்றியூர்
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணா நகர்
23. ஆஸ்டின், திரு. .. நாகர்கோவில்
24. இரவிராஜ், திரு. கோ. .. திருத்தணி
25. இராசேந்திரன், திரு. சி. .. திருவோணம்
26. இராசேந்திரன், திரு. சோ. .. கோவில்பட்டி
27. இராமசாமி, திரு. கே.ஆர். .. திருவாடானை
28. இராமசாமி, திரு. பி.சி. .. மொடக்குறிச்சி
29. இராமச்சந்திரன், திரு. எஸ். .. கலசப்பாக்கம்
30. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். .. கம்பம்
31. இராமச்சந்திரன், திரு. கே.கே. எஸ்.எஸ்.ஆர். .. சாத்தூர்
32. இராமு, திரு. ந. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
33. இராம் பிரபு, திரு. இரா. .. பரமக்குடி (செ.வ.)
34. இராஜசேகர், திரு. மா. .. ராஜபாளையம் (செ.வ.)
35. இராஜரெத்தினம், திரு. ப. .. பெரம்பலூர் (செ.வ.)
36. இராஜா, திரு. டி.கே. .. திருப்பத்தூர்
37. இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. .. பத்மநாபபுரம்
38. இராஜேந்திரன், திரு. பி.ஜி. .. ஆலங்குளம்
39. இலட்சுமணன், திரு. கே.என். .. மயிலாப்பூர்
40. இளவழகன், திரு. ப. .. அரியலூர்
41. இளையகண்ணு, திரு. கா.தி. .. ஏற்காடு (ஆவா.)
42. இன்பத் தமிழன், திரு. இரா.தா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்



43. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)
44. உசேன், திரு. எஸ்.ஏ.எம். .. திருவல்லிக்கேணி
45. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்
46. உமாதேவன், திரு. கே.கே. .. திருப்பத்தூர்
47. உலகரட்சகன், திரு. பி.எஸ். .. செய்யாறு
48. ஏழுமலை, திரு. வெ. .. செஞ்சி
49. கணபதி, திரு. ந. .. வானூர் (செ.வ.)
50. கணேசன், திரு. ஐ. .. எடப்பாடி
51. கணேசன், திரு. ஆர்.டி. .. தேனி
52. கண்ணன், திரு. ஏ.எஸ். .. பொன்னேரி (செ.வ.)
53. கந்தசாமி, திரு. க.ரா. .. சத்தியமங்கலம்
54. கந்தசாமி, திரு. கா. .. குன்னூர் (செ.வ.)
55. கருணாகரன், திரு. கே.சி. .. சிங்காநல்லூர்
56. கருணாநிதி, திரு. மு. .. சேப்பாக்கம்
57. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செவ)
58. கருப்பணன், திரு. கே.சி. .. பவானி
59. கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ. .. குளத்தூர் (செ.வ.)
60. கலாவதி, திருமதி கு. .. சேந்தமங்கலம் (ஆவா.)
61. கனகதாரா, செல்வி சி. .. பேரணாம்பட்டு (செ.வ.)
62. கனிதா சம்பத், திருமதி எஸ். .. திருப்போரூர் (செ.வ.)
63. காசாம்பு பூமாலை, திருமதி .. சங்கராபுரம்
64. காமராஜ், திரு. மே.ப. .. தாரமங்கலம்
65. கார்த்தி, திரு. மு. .. சேலம்-2

66. காளிமுத்து, டாக்டர் கா. .. திருமங்கலம்
67. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. .. அரூர் (செ.வ.)
68. கிருஷ்ணன், திரு. ஆர். .. அந்தியூர் (செ.வ.)
69. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்
70. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. .. ஆண்டிமடம்
71. கோதண்டராமன், திரு. ஜி. .. முகையூர்
72. கோபிநாத், திரு. கே. .. ஓசூர்
73. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். .. விருத்தாசலம்
74. கோவிந்தராஜ், திரு. வெ. .. கிருஷ்ணகிரி
75. கோவை தங்கம், திரு. .. வால்பாறை (செ.வ.)
76. சக்திவேல் முருகன், திரு. எம். .. அம்பாசமுத்திரம்
77. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்
78. சசிகலா, திருமதி ஆர். .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
79. சண்முகநாதன், திரு. எஸ்.பி. .. ஸ்ரீவைகுண்டம்
80. சண்முகம், திரு. சி. .. பூந்தமல்லி
81. சண்முகம், திரு. சி.வி. .. திண்டிவனம்
82. சண்முகவேலு, திரு. சி. .. உடுமலைப்பேட்டை
83. சந்தானம், திரு. லா. .. உசிலம்பட்டி
84. சந்திரசேகரன், திரு. எம்.எஸ். .. இராணிப்பேட்டை
85. சந்திரமோகன், திரு. நா. .. சீர்காழி (செ.வ.)
86. சந்திரன், திரு. வீ. .. சிவகங்கை
87. சம்பத், திரு. எம்.சி. .. நெல்லிக்குப்பம்
88. சரவணன், திரு. துரை. கி. .. சிதம்பரம்



89. சரோஜா, திருமதி இரா. .. உப்பிலியாபுரம் (ஆவா.)
90. சாமி, திரு. ஆர். .. மேலூர்
91. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
92. சிதம்பரம், திரு. ப. .. பவானிசாகர்
93. சிவகாமி, திருமதி வி. .. தாராபுரம் (செ.வ.)
94. சிவசாமி, திரு. கே.கே. .. அருப்புக்கோட்டை
95. சிவசாமி, திரு. சி. .. திருப்பூர்
96. சிவசுப்பிரமணியன், திரு. டி.என். .. கரூர்
97. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
98. சிவபெருமாள், திரு. அ. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
99. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்
100. சின்னசாமி, திரு. மா. .. பழனி (செ.வ.)
101. சீனிவேல், திரு. எஸ்.எம். .. திருப்பரங்குன்றம்
102. சுதர்சனம், திரு. கே. .. கும்மிடிப்பூண்டி
103. சுதர்சனம், திரு. டி. .. திருவள்ளூர்
104. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்
105. சுந்தராம்பாள், திருமதி செ. .. மேட்டூர்
106. சுப்பிரமணியன், திரு. வீ. .. கண்டமங்கலம் (செ.வ.)
107. சுப்பையா பாண்டியன், திரு. எம். .. கடையநல்லூர்
108. சூரியகலா, திருமதி சி.எம். .. குடியாத்தம்
109. செம்மலை, திரு. செ. .. ஓமலூர்
110. செல்லையா, திரு. வி.ஏ. .. மருங்காபுரி
111. செல்வம், திரு. எஸ்.கே. .. வீரபாண்டி

112. செல்வராஜ், திரு. ஏ.கே. .. மேட்டுப்பாளையம்
113. செல்வி முருகேசன், திருமதி .. காங்கேயம்
114. சேகரன், திரு. கே.என். .. திருவெறும்பூர்
115. சேகர்பாபு, திரு. பி.கே. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
116. சோமசுந்தரம், திரு. வி. .. உத்திரமேரூர்
117. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
118. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. .. திருநாவலூர்
119. தமிழரசன், திரு. செ.கு. .. நன்னிலம் (செ.வ.)
120. தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி .. மேல்மலையனூர்
121. தம்பிதுரை, டாக்டர் மு. .. பர்கூர்
122. தவமணி, திரு. க. .. திருவிடைமருதூர்
123. தளவாய் சுந்தரம், திரு. ந. .. கன்னியாகுமரி
124. தனபால், திரு. ப. .. சங்கரி (செ.வ.)
125. தாமோதரன், திரு. எஸ். .. விருதுநகர்
126. தாமோதரன், திரு. செ. .. கிணத்துக்கடவு
127. தாமோதிரன், திரு. ப.வெ. .. பொங்கலூர்
128. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. .. பேராவூரணி
129. திருநாவுக்கரசு, திரு. எஸ்.எஸ். .. காஞ்சிபுரம்
130. திருமாவளவன், திரு. இரா. .. மங்களூர் (செ.வ.)
131. துரைமுருகன், திரு. .. காட்பாடி
132. துரைராஜ், திரு. சி. .. சேடப்பட்டி
133. தென்னரசு, திரு. கே.எஸ். .. ஈரோடு



134. நடராஜன், திரு. அ. .. குத்தாலம்
135. நடராஜன், திரு. எஸ். .. நாட்ராம்பள்ளி
136. நடராஜன், திரு. பி.கே.டி. .. ஆத்தூர்
137. நடராஜன், திரு. வது. .. இளையான்குடி
138. நயினார் நாகேந்திரன், திரு. .. திருநெல்வேலி
139. நரசிம்மன், திரு. பி.எம். .. பள்ளிப்பட்டு
140. நளினி மனோகரன், திருமதி .. போளூர்
141. நன்மாறன், திரு. என். .. மதுரை கிழக்கு
142. நீலகண்டன், திரு. ப. .. ஆற்காடு
143. நெப்போலியன், திரு. து. .. வில்லிவாக்கம்
144. பச்சைமால், திரு. தா. .. குளச்சல்
145. பதினெட்டாம்படியான், திரு. க. .. முதுகுளத்தூர்
146. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1
147. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
148. பவானி கருணாகரன், திருமதி கே. .. அரக்கோணம் (செ.வ.)
149. பழனிசாமி, திரு. கே.எஸ். .. பெருந்துறை
150. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
151. பழனியப்பன், திரு. பெ. .. மொரப்பூர்
152. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
153. பன்னீர்செல்வம், திரு. ஓ. .. பெரியகுளம்
154. பாண்டுரங்கன், திரு. கே. .. அணைக்கட்டு
155. பாப்பா சுந்தரம், திரு. அ. .. குளித்தலை
156. பாரமலை, திரு. க. .. மானாமதுரை (செ.வ.)

157. பாரிமோகன், திரு. கி. .. தருமபுரி
158. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. கடலாடி
159. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். .. தொண்டாமுத்தூர்
160. பாலசுப்ரமணியன், திரு. கே.கே. .. ஸ்ரீரங்கம்
161. பாலபாரதி, செல்வி க. .. திண்டுக்கல்
162. பாலன், திரு. எஸ்.எம். .. லால்குடி
163. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். .. சேரன்மகாதேவி
164. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
165. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
166. பூபதி மாரியப்பன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)
167. பெருமாள், திரு. என்.கே. .. விளாத்திகுளம்
168. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
169. பொன்னம்பலம், திரு. ப. .. சமயநல்லூர் (செ.வ.)
170. பொன்னையன், திரு. சி. .. திருச்செங்கோடு
171. போளூர் வரதன், திரு. .. செங்கம் (செ.வ.)
172. மகாலிங்கம், திரு. எஸ். .. அவினாசி (செ.வ.)
173. மகேந்திரன், திரு. கே. .. பெரம்பூர் (செ.வ.)
174. மகேஸ்வரி, திருமதி எஸ். .. கோயம்புத்தூர் மேற்கு
175. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
176. மணி, திரு. டி. .. விளவங்கோடு
177. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்
178. மணி நாடார், திரு. எஸ்.எஸ். .. சாத்தான்குளம்



179. மலையப்பசாமி, திரு. அ.இரா. .. கபிலர்மலை
180. மல்லிகா சின்னசாமி, திருமதி .. முசிறி
181. மாணிக்கராஜ், திரு. எஸ். .. நாங்குநேரி
182. மில்லர், திரு. அ. .. கூடலூர்
183. முரளிதரன், திரு. கே.வி. .. தளி
184. முருகவேல் ராஜன், திரு. க. .. வந்தவாசி (செ.வ.)
185. முருகேசன், திரு. ஆகு. .. ஆத்தூர்
186. முனுசாமி, திரு. கா.பூ. .. காவேரிப்பட்டினம்
187. மைதீன்கான், திரு. டி.பி.எம். .. பாளையங்கோட்டை
188. மோகன், திரு. ப. .. சின்னசேலம்
189. யசோதா, திருமதி டி. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
190. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
191. ரங்கராஜன், திரு. என்.ஆர். .. பட்டுக்கோட்டை
192. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். .. கோபிசெட்டிப்பாளையம்
193. ராதாகிருஷ்ணன், திரு. எம். .. திருமயம்
194. ராமராஜ், திரு. ச. .. போடிநாயக்கனூர்
195. ராம்குமார், திரு. எம். .. பாபநாசம்
196. ராஜகோபால், திரு. ஆ .. சிவகாசி
197. ராஜம்மாள், திருமதி எஸ். .. தூத்துக்குடி
198. ராஜா, திரு. எச். .. காரைக்குடி
199. ராஜாங்கம், திரு. வி.ஆர். .. சோழவந்தான்
200. ராஜு, திரு. எச்.எம். .. உதகமண்டலம்
201. ரெங்கநாதன், திரு. என். .. பூம்புகார்

| | | |
|---|---|---|
| 202. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. | .. | பேரூர் |
| 203. லட்சுமணன், திரு. வி.கே. | .. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 204. லியாவுதீன் சேட், திரு. இ.ஏ. | .. | அரவக்குறிச்சி |
| 205. வளர்மதி, திருமதி பா. | .. | ஆலந்தூர் |
| 206. வளர்மதி ஜெபராஜ், திருமதி | .. | மதுரை மேற்கு |
| 207. வள்ளல் பெருமான், டாக்டர் பி. | .. | காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 208. வாசுதேவன், திரு. பெ. | .. | மதுராந்தகம் |
| 209. விசுவநாதன், திரு. இரா. | .. | நத்தம் |
| 210. வில்வநாதன், திரு. இரா. | .. | சோளிங்கர் |
| 211. விநாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. | .. | பூங்காநகர் |
| 212. விஜயபாஸ்கர், டாக்டர் சி. | .. | புதுக்கோட்டை |
| 213. விஜயலட்சுமி பழனிச்சாமி திருமதி ப. | .. | பனமரத்துப்பட்டி |
| 214. வீரபாண்டியன், திரு. ஜெக. | .. | மயிலாடுதுறை |
| 215. வெங்கடாசலம், திரு. அ. | .. | ஆலங்குடி |
| 216. வெங்கடாஜலம், திரு. செ. | .. | சேலம்-1 |
| 217. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. | வேதாரண்யம் |
| 218. வேலுசாமி, திரு. செ.ம. | .. | பல்லடம் |
| 219. வேலு, திரு. எ.வ. | .. | தண்டராம்பட்டு |
| 220. வேல் முருகன், திரு. தி. | .. | பண்ருட்டி |
| 221. வைதியலிங்கம், திரு. மீ.அ. | .. | தாம்பரம் |
| 222. வைத்திலிங்கம், திரு. ஆர். | .. | ஒரத்தநாடு |



| | | |
|---|---|---|
| 223. ஜீவானந்தம், திரு. இரா. | .. | நாகப்பட்டினம் |
| 224. ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. | .. | ஆரணி |
| 225. ஜெயக்குமார், திரு. கு. | .. | நாமக்கல் (செ.வ.) |
| 226. ஜெயக்குமார், திரு. டி. | .. | இராயபுரம் |
| 227. ஜெயராமன், திரு. வி. | .. | பொள்ளாச்சி |
| 228. ஜெயலலிதா, செல்வி ஜெ | .. | ஆண்டிப்பட்டி |
| 229. ஸ்டாலின், திரு. மு.க. | .. | ஆயிரம் விளக்கு |
| 230. ஹக்கீம், திரு. எம்.ஏ. | .. | மதுரை மத்தி |
| 231. ஹேமச்சந்திரன், திரு. ஜே. | .. | திருவட்டாறு |
| 232. சான்ட்ரா டான் க்ரவல், திருமதி | .. | (நியமனம்) |
| 233. (வெற்றிடம்) | .. | சைதாப்பேட்டை |
| 234. (வெற்றிடம்) | .. | வாணியம்பாடி |
| 235. (வெற்றிடம்) | .. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. என்.ஆர். சந்திரன் .. தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## சித்திரை 27, சித்ரபானு — திருவள்ளுவர் ஆண்டு 2033

## 2002 மே 10, வெள்ளிக்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

**"சூழாமல் தானே முடிவெய்தும் தம்குடியைத்**

**தாழா உஞற்று பவர்க்கு"**

தம்மைச் சார்ந்த குடிகளை உயர்த்தும் செயல்களில் காலம் தாழ்த்தாமல் ஈடுபட்டு முயலுகிறவர்களுக்குத் தாமாகவே வெற்றிகள் வந்து குவிந்துவிடும்.

## 1. வினாக்கள்-விடைகள்

**(அ) உடுக்குறியிட்ட வினாக்கள் விதி 51-ன்கீழ் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பெற்று அவற்றிற்குச் சம்பந்தப்பட்ட அமைச்சர்களால் அளிக்கப்பட்ட விடைகளுடன் அவைமுன் வைக்கப்பெற்றவை (பட்டியல்கள் 10, 11, 12, 13, 14 மற்றும் 15) @**

**(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல் 16 )@@**

## 2. கவன ஈர்ப்பு

**விதி 55-ன்கீழ் அனுமதிக்கப்பெற்று அவற்றிற்குச் சம்பந்தப்பட்ட அமைச்சர்களால் அளிக்கப்பட்ட விவர அறிக்கைகளுடன் அவைமுன் வைக்கப்பெற்றவை (1 முதல் 43 வரை) @@@**

*@ 321 முதல் 952 வரையிலான பக்கங்களில் இணைப்பு-I ஆக அச்சிடப்பெற்றுள்ளன.*

*@@ 952 முதல் 1027 வரையிலான பக்கங்களில் இணைப்பு-II ஆக அச்சிடப்பெற்றுள்ளன*

*@@@ 1027 முதல் 1075 வரையிலான பக்கங்களில் இணைப்பு-III ஆக அச்சிடப்பெற்றுள்ளன.*

[2002 மே 10

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி* இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்)

## 3. தகவல் கோரல்

### உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணா நதித் திட்டத்தைப் பற்றி நான் வினாவை எழுப்பி....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, அதை அப்புறம் பார்ப்போம். அரசினர் சட்டமுன்வடிவுகள்—அறிமுகம் செய்தல். (குறுக்கீடு) இல்லை. எல்லா கவன ஈர்ப்புக்கும் பதில்கள் வைக்கப்பட்டுவிட்டன.

## 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2002 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக் கழக (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.



2002 மே 10]

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஆ) திருவள்ளுவர் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு திருவள்ளுவர் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு திருவள்ளுவர் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (இ) தமிழ்நாடு திறந்தவெளிப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்தவெளிப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்தவெளிப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

[2002 மே 10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண் 3) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/2002) மாண்புமிகு நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/20002)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

@9-5-2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



2002 மே 10] [பேரவைத் தலைவர்]

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டுமென்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டுமென்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/2002) நிறைவேற்றப் பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஆ) தமிழ்நாடு அத்தியாவசியப் பணிகளைப் பேணிவருதல் சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு அத்தியாவசியப் பணிகளைப் பேணிவருதல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/2002), மாண்புமிகு நிதி மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை. ஆய்வுக்கு எடுத்துக்கொள்கிறோம்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அது ஏற்கெனவே அறிமுகம் செய்யப்பட்டாயிற்று. அது இப்போது ஆய்வுக்குத்தான் வருகிறது. I raise a Point of Order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதாவது, இந்தியாவிலே உள்ள அரசியல் சட்டம் அடிப்படை உரிமைகளை மக்களுக்குக் கொடுத்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், அமைச்சர் move பண்ணட்டும். மாண்புமிகு நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு அத்தியாவசியப் பணிகளைப் பேணிவருதல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/2002) (a) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."

எனக் கோருகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

(முற்பகல் 10-05

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் எழுப்புகிற ஒழுங்குப் பிரச்சினை என்பது, அரசு

(a) 6-5-2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



அலுவலர்கள்—அரசுப் பணியாளர்களைப் பொறுத்தவரையில், தேர்வு செய்வதற்கும், அவர்களை விடுவிப்பதற்கும் அரசியல் சட்டம் 309, 311 ஆவது Article-களிலே தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. அவற்றைத் தவிர்த்து, வேறு இதுபோன்ற சட்டங்களைக் கொண்டு வந்தால், அந்தச் சட்டங்கள் செல்லாது என்பது எல்லோரும் அறிந்த ஒன்று. செல்லாத ஒரு சட்டத்தைக் கொண்டு வரவேண்டுமா என்பதுதான் அவர் எழுப்புகிற Point of Order. அதே Point of Order-ஐத்தான் நானும் எழுப்புகிறேன். இதிலே பேச வேண்டுமென்றால், நான் பேசி அதை விளக்குகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இன்று 20-க்கும் மேற்பட்ட சட்டமுன்வடிவுகள் இங்கே ஆய்வு செய்யப்படுகின்றன. இன்று காலையிலே மட்டும் 20 சட்டமுன்வடிவுகள் ஆய்வுக்கு எடுத்துகொள்ளப்படுகின்றன. மதியம் மீண்டும் 5 சட்டமுன்வடிவுகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் படவிருக்கின்றன. ஆகவே, ஒரே நாளிலே 25 சட்டமுன்வடிவுகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன. நிறையச் சட்டங்கள் கொண்டு வருவது, நிர்வாகம் சரியாகச் செயல்படாததையே காட்டும். இதுபோன்ற ஒரு சட்டமுன்வடிவு இதுவரைக்கும் கொண்டு வரப்பட்டிருக்கிறதா என்றால், தமிழகத்திலே இன்றுவரை இதுபோன்று அத்தியாவசியப் பணிகளிலே இருக்கின்ற, அரசு ஊழியர்கள் உட்பட இருக்கின்ற அவர்களுடைய வேலைநிறுத்தத்தைத் தடை செய்கிற சட்டம் தமிழகத்திலே எந்த ஆட்சியாலும் கொண்டுவரப்படவில்லை. அப்படிப்பட்ட ஒரு சட்டம் இன்று கொண்டுவரப்பட்டிருக்கிறது. வெள்ளைக்காரன் காலத்திலே, தொழிலாளர்கள் பிரச்சினையில் போலீசார் தலையீட்டை அனுமதிக்கவில்லை. Industrial Disputes Act அதைத் தெளிவு படுத்தியிருக்கிறது.

அதேமாதிரி அரசு ஊழியர்கள் விஷயத்திலும் போலீசை நிச்சயமாக அனுமதிக்க முடியாது. போலீஸ் நிர்வாகமே உள் துறைக்குக் கீழேதான் வருகிறது. அப்படிப்பட்ட உள் துறையிலே பணியாற்றுகிற அலுவலர்களையே, போலீசை வைத்து, அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதைப் போல ஒரு சட்டம் வரவே முடியாது. அதுமட்டுல்ல. அரசியல் சட்டப் பிரிவுகள் 309, 311-க்கு எதிராகச் சட்டங்கள் இயற்ற முடியுமா என்றால், அது முடியாது. எனவே, இந்தச் சட்டம் செல்லுபடியாகாத சட்டம் என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது. எந்த வகையில் பார்த்தாலும் செல்லுபடியாகவில்லை. இந்தச் சட்டம் தயாரிப்பதிலே முறையாகக் கவனம் செலுத்தப்பட்டிருக்கிறதா என்றால், நிச்சயமாகச் செலுத்தப்படவில்லை என்பதுதான் என்னுடைய கருத்து. காரணம், சில

தேவையில்லாத பகுதிகள் இந்தச் சட்டமுன்வடிவிலே இருக்கின்றன. சில பகுதிகள எந்த வகையிலும் பயனே தராது. இன்னும் சொல்லப் போனால், இந்தச சட்டத்தை வைத்துக்கொண்டு ஏதாவது நடவடிக்கை எடுக்க முடியுமா என்றால், நடவடிக்கை எடுக்க முடியாது. காரணம், what is the Cognizable Offence என்பது தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. Criminal Procedure Code—குற்றவியல் நடைமுறைச் சட்டத்தைப் பொறுத்தவரையில், ஒரு குற்றம், போலீசார் நேரடியாகத் தலையிட வேண்டும், அதிலே அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொன்னால், 7 வருட தண்டனை என்று இருக்க வேண்டும். 3 வருடத்திற்குக் குறையாமல், 7 வருடம் வரைக்கும் தண்டனை என்று இருக்கிற சட்டம்தான்--அந்தச் சட்டம்தான். அதுதான்--Cognizable Offence. Cognizable Offence இல்லையென்றால் என்ன பிரயோஜனம்? ஒரு நடவடிக்கையும் எடுக்க முடியாது. ஒரு நடவடிக்கையும் எடுக்க முடியாததற்கு ஒரு சட்டம் தேவையா என்று பார்க்க வேண்டும்.

அதேபோல், செக்ஷன் 2 (vii). அதிலே, எதற்கு இந்தச் சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று புரியாமலேயே கொண்டு வந்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். உயர் நீதிமன்றத்திலே பணியாற்றுபவர்கள்மீது இந்தச் சட்டம் பாயும் என்று அதிலே சொல்கிறார்கள். அப்படிப் பாய முடியுமா என்றால், நிச்சயமாகப் பாய முடியாது. என்ன காரணம் என்றால், அவர்கள் தலைமை நீதிபதியின் கட்டுப்பாட்டிலே இருக்கிறார்கள். தலைமை நீதிபதியின் கட்டுப்பாட்டிலே இருப்பவர்கள்மீது நாம் சட்டத்தைக் கொண்டு வரமுடியாது.

அதேபோல், "any public services and posts in connection with the affairs of the State and also persons appointed to the Secretarial staff of the State Legislative Assembly and the officers and servants of the High Court" என்று இருக்கிறது.

அதேபோல், சட்டப் பேரவைச் செயலகத்திலே பணிபுரிபவர்கள்மீது இந்த அரசுக்கு நேரடியாகக் கட்டுப்பாடு இருக்கிறதா என்றால், கட்டுப்பாடு இல்லை. அது உங்களுடைய தலைமையின்கீழே இயங்குகிறது. சரி, அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க முடியாதா? எடுக்க முடியும். எப்படி எடுக்க முடியும். நீங்கள் கேட்டுக்கொண்டால், நடவடிக்கை எடுக்கலாம்.

அதேமாதிரி, தலைமை நீதிபதி கேட்டுக்கொண்டால் நடவடிக்கை எடுக்கலாம். அதை இங்கே செக்ஷன் 6 தெளிவுபடுத்துகிறது. தெளிவு படுத்தினாலும் கூட, அப்படி செக்ஷன் 6-ன்கீழ் நடவடிக்கை எடுப்பதற்கு 2 (vii) வேண்டுமா என்றால், தேவையில்லை. அது 2 (viii) லேயே வருகிறது.





"Any other service or employment or class thereof connected with any matter with respect to which the State Legislature has power to make laws under List-II in the Seventh Schedule to the Constitution and which the Government, being of opinion that strikes therein would prejudicially affect the maintenance of any public utility service, the public safety or the maintenance of supplies and services necessary for the life of the community or would result in the infliction of grave hardship on the community, may, by notification, declare to be an essential service for the purpose of this Act".

Section 2 (viii) read with Section 2 can be invoked there. அப்படி இருக்கும்போது செக்ஷன் 2 (vii) எதற்கு? ஆக, கவனம் செலுத்தித் தயாரிக்கப்பட்ட சட்டமுன்வடிவாக எனக்குத் தெரியவில்லை. இது தேவையில்லாத ஒரு சட்டம். ஒரு unnecessary statute. இப்படி ஒரு சட்டமே சட்டப் புத்தகத்திலே வேண்டியதில்லை. இப்படி ஒரு சட்டத்தை, சட்டமுன்வடிவைக் கொண்டு வந்து, கெட்ட பெயர் வாங்குவதற்கு பதிலாக better late than never-- இந்தக் கட்டத்திலேகூட நான் சொல்கிறேன். இந்தச் சட்டமுன்வடிவைத் திரும்பப் பெற்றுக்கொள்ளுங்கள். இதை வைத்துக்கொண்டு நீங்கள் நடவடிக்கை எடுக்க முடியாது. இதை வைத்துக்கொண்டு, ஒரு வேலைநிறுத்தம் வந்தால் அதை illegal என்று நீங்கள் declare செய்ய முடியுமா என்றால் declare செய்ய முடியாது. தனித்தனியாகப் போராட்டம் செய்தாலும் ஒரு நடவடிக்கையும் எடுக்க முடியாது. அதேமாதிரி, அரசியல் சட்டப் பிரிவுகள் 309, 311 இதற்கு நிச்சயமாகத் தடையாக இருக்கின்றன. எனவே, இந்தச் சட்டமுன்வடிவு தேவையில்லை. இதைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுகொண்டு அமர்கிறேன், வணக்கம்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எஸ்.ஆர்.பி. அவர்கள் சொன்னதைப்போல, சட்ட நுணுக்கங்களைவிட, கொள்கை அடிப்படையிலேயும், நியாயத்தின் அடிப்படையிலேயும், தொழிலாளர்கள் போராடிப் பெற்றிருக்கிற உரிமைகளின் அடிப்படையிலேயும் இந்த மசோதாவை ஒரு கறுப்புச் சட்டமாகவே கருதி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே நாங்கள் இதை முழுமையாக எதிர்க்கிறோம்.

அத்தியாவசியப் பணிகள் என்று சொல்லுகிறபோது, குடிநீர் வழங்குதல், அதுமட்டுமல்லாமல் மருத்துவப் பணிகள், மின்சாரப் பணிகள்

போன்றவற்றை அத்தியாவசியப் பணிகளாக ஏற்றுக்கொண்டாலும்கூட, இந்தச் சட்டத்திலே சொல்லப்பட்டிருக்கிற அத்தியாவசியப் பணிகள் என்பது 'மாநகராட்சியுடன், நகராட்சி மன்றத்துடன், பிற உள்ளாட்சி அதிகார அமைப்புகளுடன் தொடர்புடைய பணி எதுவும்'—அப்போது என்ன அர்த்தம் என்றால், Local self-Government—'உள்ளாட்சித் துறைகளிலே பணியாற்றுகிற எல்லா அலுவலர்களும்'—தீர்ந்துபோய்விட்டது; Executive Officer ஆக இருந்தாலும் சரி, Scavenger ஆக இருந்தாலும் சரி. அதிலே பணியாற்றுகிற, நகராட்சியிலே பணியாற்றினாலும், மாநகராட்சியிலே பணியாற்றினாலும் உள்ளாட்சியிலே இருக்கிற பஞ்சாயத்துகளிலே பணியாற்றினாலும், அந்த ஊழியர்கள் அனைவருடைய பணியும் அத்தியாவசியப் பணி- நீங்கள் குறிப்பிட்டிருக்கிற செக்ஷன் 5 மற்றும் 7-லே சொல்லுகிறபோது, மாநில அரசின் அலுவல்களோடு தொடர்புடைய பொதுப் பணிகள்; அது என்ன பொருள் என்று இன்னும் கொஞ்சம் பார்த்தால், அதாவது அரசோடு தொடர்புடைய பொதுப் பணிகள் என்றால், எல்லாம் அதுதான். வாத்தியார் வேலை செய்வதும் பொதுப் பணிதான். அப்போது அதுவும் இதிலே அடங்குகிறதா? அதனுடைய interpretation என்ன? 'மாநில அரசின் அலுவல்களோடு தொடர்புடைய பொதுப் பணிகள் மற்றும் பதவிகள் எவையும், மாநில சட்டமன்றப் பேரவையின் செயலகப் பணியிடங்களுக்கு நியமிக்கப்படும்'—அது இல்லாமல், மாநிலச் 'செயலகப் பணிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள பணியாளர்கள்' அரசோடு தொடர்புடைய பொதுப் பணிகளிலே பணியாற்றுகிற பணியாளர்கள் என்று சொன்னால், all government staff. அரசு ஊழியர்கள் அனைவரும் என்ற பொருளிலேகூட அதை எடுத்துக் கொள்ளலாம், அப்போது Local self-government-ல் பணியாற்றுகிற அந்த ஊழியர்கள், அரசாங்கத்திலே பணியாற்றுகிற அரசு ஊழியர்கள் Secretariat-லே பணியாற்றுகிற Secretariat பணியாளர்கள், நீதித் துறையிலே பணியாற்றுகிற --Judicial--உயர் நீதிமன்றத்திலே பணியாற்றுகிற நீதிமன்ற ஊழியர்கள்; அப்போது யாரைத்தான் நீங்கள் அத்தியாவசியப் பணி இல்லை என்று விட்டு வைத்திருக்கிறீர்கள்? முதலில் அதைச் சொல்லுங்கள். எல்லாவற்றையுமே அத்தியாவசியப் பணிகள் என்று சொல்லிவிட்டு, அவர்களுக்கு வேலைநிறுத்தம் செய்வதற்கு உரிமை இல்லை என்று சொன்னால், இது தொழிலாளர்கள் போராடிப் பெற்ற உரிமையினுடைய கழுத்தை நெரிப்பதைப் போன்று இருக்கிறது. சிகாகோ நகரில் ரத்தம சிந்திப் போராடிப் பெற்றார்கள் அந்த உரிமையை, அந்த உரிமையையே நெரிப்பதாகவும், தொழிலாளர்களுக்கு வேலைநிறுத்தம் செய்வதற்கு எந்த உரிமையும் இல்லை என்று சொல்வதாகவும் அமைந்திருக்கிறது.





அதிலே, போக்குவரத்துத் தொழிலாளர்கள், அவர்களையும் இணைத்துக் கொண்டீர்கள். Quasi-Government—Government staff, Local body staff, Quasi-Government staff, அனைத்து ஊழியர்களுமே இதிலே அத்தியாவசியப் பணிகள்தான் என்று சொன்னால், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், நீங்கள் தயவுசெய்து 'இதுவெல்லாம் அத்தியாவசியப் பணிகள் இல்லை' என்று சொல்லிவிட்டு, மீதியெல்லாம் அத்தியாவசியப் பணி என்று சொல்லியிருந்தீர்கள் என்றால் சரியாக இருந்திருக்கும். ஏனென்றால் எல்லாவற்றையும் இதிலே சேர்த்திருக்கிறீர்கள். இந்தச் சட்டத்திற்கு இப்போது என்ன அவசியம்? ஆளுங்கட்சி வரிசையிலே அமர்ந்து இருப்பவர்கள் தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும். கடந்த கால ஆட்சியிலே, போக்குவரத்து ஊழியர்களை அரசு ஊழியர்கள் ஆக்க வேண்டுமென்று போராடியபோது அதற்கு ஆதரவு அளித்தவர்கள் யார்? அறிக்கை விட்டவர்கள் யார்? தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும் இன்று போக்குவரத்துத் துறை அமைச்சராக இருக்கிற அமைச்சர் அவர்களும், அவரோடு அன்று எதிர்க்கட்சித் தலைவராக இருந்த மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களும், அவர்களுக்கு எல்லாம் ஆதரவாக இங்கே குரல் கொடுத்தவர்களும். அந்த வேலைநிறுத்தத்திற்கு ஆதரவு கொடுத்ததைத் தவறு என்று நான் சொல்லவில்லை. போராடுகிறபோது அவர்களுடைய உரிமைகளுக்காக சட்டமன்றத்திலே குரல் கொடுத்தார்கள். அந்த உரிமைகளை, அப்போது முதல்வராக இருந்த கலைஞர், உடனடியாக வேலைநிறுத்தமே கூடாது என்று தடை செய்யவில்லை. அழைத்துப் பேசினோம், கேட்ட சலுகைகளைக் கொடுத்தோம். அவர்களோடு பல உறவு முறைகளை உருவாக்கிக்கொண்டு, அதை நிறுத்தி வைத்தோம். அதுதான் முறை. எந்த ஓர் அரசாங்கமாக இருந்தாலும், அதைத்தான் செய்ய வேண்டும். இன்று போக்குவரத்துத் தொழிலாளர்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட உரிமை பறிக்கப்பட்டு இருக்கிற காரணத்தால்--20 பர்செண்ட் போனஸ் கொடுத்தபோதுகூட, ஏன், அன்று எதிர்க்கட்சி வரிசையிலே இருந்த நீங்கள் சொல்லவில்லையா? 20 பர்செண்ட் இருந்த போனஸை 25 பர்செண்ட் ஆக்க வேண்டுமென்று சொல்லி, ஒரு நாள் போராட்டத்திற்கு அன்று உங்களுடைய கட்சியினுடைய தலைவியாக இருந்தவர்கள் அறிவிப்புக் கொடுத்ததன் அடிப்படையிலே ஒரு நாள் போராட்டம் நடத்தவில்லையா? அதையெல்லாம் செய்தீர்களே? அப்போது அந்தப் போராட்டத்திலே ஈடுபடுகிறபோது, எதிர்க்கட்சியாக இருக்கிறபோது ஒரு அணுகுமுறை, ஆளுங்கட்சி என்று வருகிறபோது ஒரு அணுகுமுறை என்று இருந்தால், இதைக் கொள்கை ரீதியிலே, நடைமுறை ரீதியிலே எந்த அளவுக்கு ஏற்றுக்கொள்ள முடியும்? அந்த அளவிலேதான், எதிர்க்கட்சியாக

இருக்கிறபோது சொன்னீர்கள். ஏன் உங்கள் தேர்தல் அறிக்கையிலேயே— நான் சுட்டிக்காட்ட வேண்டுமென்று சொன்னால், உங்கள் தேர்தல் அறிக்கையிலேயே— நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். அரசு ஊழியர்களைப் பற்றிப் பேசுகிறபோது, நேற்றுக்கூட நிதியமைச்சர் சொன்னார். அரசு ஊழியர்களுக்கு மத்திய அரசு கொடுக்கப் போவதை எல்லாம் கொடுக்க வேண்டுமா என்றுகூட நிதியமைச்சர் கேட்டார்.

*முற்பகல் 10-15*

உங்கள் தேர்தல் அறிக்கையிலே இருப்பதை நான் படிக்க விரும்புகிறேன். "அரசு ஊழியர்கள் நலன் காக்க ஆக்கபூர்வமான செயல் திட்டங்கள் உருவாக்கப்படும். 25 ஆண்டுப் பணி முடிப்போருக்கு தனிச் சிறப்பு நிலை; Super Grade வழங்கி, ஊக்க ஊதியம் வழங்கல்; உயர் கல்விக்கு ஊக்க ஊதியம் தொடர்பான நிபந்தனைகளை நீக்குதல்; மருத்துவச் செலவு ஈட்டுப்படி காலதாமதமின்றிக் கிடைத்தல்; மருத்துவப் படியை உயர்த்துதல், மத்திய அரசுக்கு இணையான வீட்டு வாடகைப்படி, முதுநிலை ஆசிரியர்களுக்குப் படிப்புக்கு ஊக்க ஊதியம், வீட்டுக் கடன், வாகனக் கடன், ஒரு வழிப் பயணச் சலுகை ஆகியவற்றுக்கான ஒதுக்கீட்டை உயர்த்துதல், தனியார் பள்ளி, கல்லூரி ஆசிரியர்கள், அலுவலர்களின் பிரச்சினைகள் ஆகியவை பரிவுடன் பரிசீலிக்கப்பட்டுத் தீர்வு காணப்படும்". இது உங்கள் தேர்தல் அறிக்கையிலேயே, அடித்துக் கொடுக்கப்பட்டிருக்கிற ஒன்று. இதிலே ஏதாவதொன்றைச் செய்திருக்கிறீர்களா? செய்யவேண்டாம். இருப்பதைப் பறிக்காமல் இருந்திருக்கிறீர்களா? பறிக்கக்கூட வேண்டாம், எங்கள் உரிமைகளைக் கொடுங்கள் என்று அவர்கள் கேட்கிறபோது, அவர்கள் உரிமைக் குரலைக் கூடவா நசுக்க வேண்டும்? அவர்களுக்குப் போராடுவதற்கு உரிமை இல்லையா? போராடிப் பெற்ற உரிமை. அதுமட்டும் அல்ல, உங்கள் சட்டப் பிரிவிலேயே ஒன்றைச் சொல்லியிருக்கிறீர்கள். மிகக் கொடுமையானது அதுதான். வேலைநேரத்தைத் தடை செய்வதோடு மட்டுமல்ல, 8 மணி நேர வேலை என்பது உலகத் தொழிலாளர்கள் ஒன்றுகூடிப் போராடிப் பெற்ற உரிமை. அந்த 8 மணி நேர வேலைக்குக்கூட நீங்கள் இந்தச் சட்டத்திலே ஆபத்தை விளைவித்திருக்கிறீர்கள். 'அத்தியாவசியப் பணி எதனையும் பேணி வருவதற்கு' மிகை நேரத்தில் பணி செய்வது மிகத் தேவையானதாக இருக்குமிடத்து, அதனைச் செய்வதற்கு மறுப்பதையும், 'ஓவர் டைம்', அதை யாராவது செய்ய மாட்டேன் என்று சொன்னார்கள் என்றால், அவர் மீது நடவடிக்கை எடுத்து 3 வருடங்கள் ஜெயிலுக்கு அனுப்புவதற்குக்கூட இதிலே விதி இருக்கிறது என்று சொன்னால், இது என்ன கறுப்புச் சட்டமா,



இல்லையா? Are we moving towards fascism? Do you want to create a Nazist State? இத்தாலியிலே பாசிச ஆட்சியும், நாசிஸ ஆட்சியும் ஒரே கட்சி, ஒரே ஆட்சி, ஒரே நாடு என்ற அடிப்படையிலே உருவாக்கப்பட்ட நிலைமைக்கு இந்த நாடு சென்று கொண்டிருக்கிறதா? தன்னுடைய குரலைக் கொடுக்கக் கூடாதா?

அதுமட்டும் அல்ல. இதிலேயே மற்றொன்றையும் சொல்லியிருக்கிறார்கள். இந்தப் போராட்டத்தைத் தூண்டுவதற்கான தண்டத் தொகை விதிப்பு முதலானவை. இந்தச் சட்டத்தின்படி, "சட்ட விரோதமான வேலைநிறுத்தமொன்றில், பிற நபர்களைப் பங்கேற்குமாறு தூண்டுகிற அல்லது கிளர்ந்தெழச் செய்கிற அல்லது அது தொடர்பாகப் பிறவாறு மேலும் செயற்படுகிற நபரெவரும், தண்டனைத் தீர்ப்பின் பேரில் மூன்றாண்டுகளுக்கு நீடிக்கக்கூடியதொரு கால அளவிற்கான சிறைத் தண்டனையோ அல்லது ஐந்தாயிரம் ரூபாய் வரையிலான அபராதமோ அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்." இதனுடைய நோக்கம் என்ன? இதற்கெல்லாம் retrospective effect கொடுங்களேன். எது எதற்கோ retrospective effect கொடுக்கும்போது, இந்தப் போராட்டத்திற்கு retrospective effect கொடுத்தால் எத்தனை பேர் சிறையிலே இருக்க வேண்டியதிருக்கும்—3 ஆண்டு சிறையிலே? ஆகவே, இந்தப் போராட்டத்தைத் தூண்டுகிற சங்கங்கள், தொழிற்சங்கங்கள் இருந்தால், அவர்கள் போராட்டத்திற்கு ஆதரவு தந்தால், அந்தச் சங்கங்களினுடைய உரிமைகள் பறிக்கப்படுகின்றன. அரசியல் கட்சிகள், அவர்கள்கூடப் போராட்டத்தைத் தூண்டினார்கள் என்று சொல்லி, அவர்கள்மீது பழி வாங்குவதற்கு இந்தச் சட்டங்கள் வழிவகுக்கும்.

ஆகவே, போராடிப் பெற்ற உரிமைகளிலே, நீண்ட காலமாக, தொழிலாளர்கள் எந்தெந்தக் காலத்திலேயோ போராடிப் பெற்ற இந்த உரிமைகளிலே கை வைப்பது என்பது; இந்த சர்வாதிகாரத்தின் மூலமாக எந்த நாட்டிலேயும் யாரும் வென்றதாக வரலாறே கிடையாது. முசோலினி எண்ணினார், பாசிஸத்தை உருவாக்குகிறபோதுகூட (மணியடிக்கப்பெற்றது) ஒரே கட்சி இருக்க...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, சட்டமுன்வடிவுக்கு வந்து, சட்டமுன்வடிவிலே என்ன விளக்கம் என்று அதைச் சொல்லி முடியுங்கள். முசோலினி, இத்தாலி, பாசிஸ்ட், நாசிஸ்ட், இதற்கெல்லாம் நேரம் இல்லை. சட்டமுன்வடிவிலே எஸ்.ஆர்.பி. பேசினார்கள். அவரும் எதிர்த்தார். என்ன கருத்தோ, அதைச் சொல்லி முடியுங்கள். (குறுக்கீடுகள்)

**டாக்டர் க. பொன்முடி:** நன்றி, நன்றி, நன்றி. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சரி, உட்காருங்கள். பேசட்டும்.

**டாக்டர் க. பொன்முடி:** ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) இந்தச் சட்டமுன்வடிவு என்பது; மகாத்மா காந்தி அவர்கள் இந்தியாவிலே இருந்தவர்தான். அவர்கள் தென் ஆப்பிரிக்காவுக்குச் சென்று போராடுகிறபோதுகூட தொழிலாளர்களுக்காகப் போராடச் சென்றவர்தான். ஆகவே நம்முடைய நாட்டைச் சேர்ந்தவர்களெல்லாம் வெளிநாடுகளுக்குச் சென்று தொழிலாளர்களின் உரிமைகளுக்காகப் போராடுகிறபோது, தமிழகத்திலே இருக்கிற தொழிலாளர்களுடைய உரிமைக் குரலைப் பறிக்கின்ற வகையிலே இந்தச் சட்டம் அமைவது சரியாக இருக்காது. ஆகவே, இது ஒரு கறுப்புச் சட்டமாக, இந்தத் தமிழ்நாட்டினுடைய வரலாற்றிலே இடம் பெற்றுவிடக் கூடாது.

மாண்புமிகு நிதியமைச்சர், பேரறிஞர் அண்ணாவினுடைய கொள்கைகளையெல்லாம் அடிக்கடி பேசக்கூடியவர். அவருக்கும் இது தெரியும். ஆகவே, தொழிலாளர்களுடைய உரிமைகள் பறிக்கப்படக் கூடாது என்ற உணர்வோடுதான் இதைப் பேசினேனே தவிர, மற்றவர்களை இதிலே புண்படுத்த வேண்டுமென்ற எண்ணம்கூடக் கிடையாது.

தமிழகத்தைப் பொறுத்தவரையிலும், இந்திய நாட்டைப் பொறுத்தவரையிலும், இதுபோன்ற நெருக்கடி காலச் சட்டங்களைக் கொண்டு வந்தவர்களுக்கெல்லாம்கூட மக்கள் என்ன பாடம், தீர்ப்பு அளித்திருக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். ஆகவே, இன்று போக்குவரத்து......... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசி முடியுங்கள், பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்)

**டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் எல்லாம் ஒரு தடவை பேசினால், ஏன் உட்கார்ந்துகொண்டே பேசுகிறீர்கள் என்கிறீர்கள். இத்தனை பேர் கத்துகிறார்களே! தயவுசெய்து நான் என்ன தப்பாகச் சொல்லிவிட்டேன்? சொல்லுங்கள். தயவுசெய்து சொல்லுங்கள். என்ன தப்பாகச் சொன்னேன்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசக்கூடிய முறைதான் காரணம்.

**டாக்டர் க. பொன்முடி:** என்ன? என்ன முறை சொல்லுங்கள். தப்பாக ஏதாவது சொன்னால் கேளுங்கள்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமுன்வடிவுமீது (குறுக்கீடுகள்) எஸ்.ஆர்.பி. அவர் கருத்தைச் சொன்னார். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். எஸ்.ஆர்.பி. அவர்களும் இதை எதிர்த்துத்தான் அமர்ந்திருக்கிறார். (குறுக்கீடு) நீங்கள் இந்தச் சட்டமுன்வடிவின் மேலே என்ன கருத்துச் சொல்லவேண்டுமோ, சொல்லுங்கள். நீங்கள் மாறி, மாறிச் சொல்லிவிட்டீர்கள். கறுப்புச் சட்டம் என்று சொல்லிவிட்டீர்கள், எல்லாவற்றையும் சொல்லிவிட்டீர்கள். (குறுக்கீடுகள்) சொல்லி முடியுங்கள் அதை. முடியுங்கள். (குறுக்கீடுகள்)

**டாக்டர் க. பொன்முடி:** அப்படிச் சொல்லக் கூடாதா? பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள்.

*முற்பகல் 10-20*

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எஸ்.ஆர்.பி. ஒரு Legal, constitutional question-ஐ எழுப்பியிருக்கிறார். இன்னும் அவர்கள் கட்சியிலேயும் பேசப் போகிறார்கள். அப்போது எப்படிப் பேசுகிறார்கள் என்று பாருங்கள். சி.பி.எம். கட்சியிலேயும் பேசுவார்கள். இது உண்மையிலேயே போராடிப் பெற்ற ஓர் உரிமை என்ற அடிப்படையிலே பேசினேனே தவிர, அண்ணா தி.மு.க. தொழிற்சங்கத்திலே இருக்கின்றவர்களுக்குக்கூட இந்த உணர்வுகள் இருக்கின்றன. யாரும் இல்லை என்று சொல்ல முடியாது. பேசினால், அவர்களும் இதைத்தான் பேசுவார்கள். தொழிற்சங்கவாதிகள் என்ற முறையிலே, தொழிற்சங்கத்திலே இருப்பவர்கள் யாரும் இந்த உரிமையை விட்டுக் கொடுப்பதற்கு முன்வர மாட்டார்கள். ஆகவே போராடிப் பெற்ற இந்த உரிமைகள், நிலைத்து நிற்க வேண்டும் என்று சொன்னால், இந்தச் சட்டத்தை நீங்கள் திரும்பப் பெற வேண்டும்.

தொழிலாளர்களுக்கு இருக்கிற உரிமை, அவர்கள் வேலைநிறுத்தம் செய்வது மட்டுமல்ல, ஓவர் டைம் செய்வது தொடர்பாக —நீங்கள் அதையும் தடை செய்யவேண்டும்—அவர்களுக்கும் அதிலே தண்டனை உண்டு என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். பிரச்சாரம் செய்தால் அவர்களுக்கும் தண்டனை உண்டு என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். பிரச்சாரம் செய்வது மட்டும் அல்ல, அவர்களுக்கு நிதியுதவி வழங்கினால் அதற்கும் தண்டனை உண்டு என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். அத்தியாவசியப் பணிகள் என்று எப்போது வேண்டுமானாலும், எந்தப் பணிகளை வேண்டுமானாலும் சேர்த்துக்கொள்ளலாம், அரசாங்கம் சேர்த்துக்கொள்ளலாம் என்ற உரிமையையும் நீங்கள் உள்ளடக்கியிருக்கிறீர்கள். ஆகவே, என்னைப்

பொறுத்தவரையிலே, it is leading to a fascist regime என்ற அடிப்படையிலே, இதை நான் முழுமையாகக் கண்டித்து அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக அரசு, அத்தியாவசியப் பணிகளைப் பேணிவருதல் என்ற வகையிலே ஒரு சட்டமுன்வடிவை அறிமுகம் செய்திருக்கிறீர்கள். இந்தச் சட்டத்தினுடைய அடிப்படைகளை, நோக்கங்களைப் பார்க்கின்ற நேரத்திலே, நாம் ஜனநாயக நாட்டிலே, சுதந்திர நாட்டிலே வாழ்ந்து கொண்டிருக்கிறோமா என்ற ஓர் அச்சம் நமக்கு வந்திருக்கிறது. ஆகவே, இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையிலே, அதுவும், இதனுடைய ஷரத்துகளைப் பார்க்கின்ற நேரத்திலே, போக்குவரத்துப் பணியாளர்கள், மின் வாரியத்திலே பணியாற்றக்கூடியவர்கள், மருத்துவமனைகளிலே பணியாற்றக்கூடியவர்கள், மாநகராட்சிகள், நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் போன்ற வகையிலே உள்ளாட்சிகளிலே பணியாற்றக்கூடியவர்கள், உயர் நீதிமன்றங்களிலே பணியாற்றக் கூடியவர்கள், மற்ற நீதிமன்றப் பணியாளர்கள், குடிநீர் வழங்கலில் பணியாற்றக்கூடியவர்கள், அதோடு மட்டுமல்லாமல், மாநில அரசின் அலுவல்களோடு தொடர்புடைய பொதுப் பணிகள், மாநிலச் சட்டமன்றப் பேரவைச் செயலகப் பணியிடங்கள் என்று, இப்படிப் பார்க்கின்ற நேரத்திலே, அரசுத் துறைகளிலே, அரசுப் பொதுத் துறை நிறுவனங்களிலே, எப்படிப் பணியாற்றினாலும்கூட, அரசுச் சம்பளம் யாரெல்லாம் வாங்குகிறார்களோ, அவர்களைக் கட்டுப்படுத்தக்கூடிய ஒரு சட்டம் என்ற பொருள்படக்கூடிய வகையிலே இருக்கிறது. ஆக, அரசு அலுவலர்கள் — அரசுப் பணியாளர்கள் என்பவர்கள் நம்முடைய அரசின் கட்டுப்பாட்டிலே இயங்கக்கூடியவர்கள். அப்படி இவர்கள், தன்னுடைய மேலதிகாரிகள், மேலாண்மையிடம் ஏதாவது கோரிக்கை வைக்கின்ற நேரத்திலே அல்லது மேலாண்மை இந்தப் பணியாளர்களுக்கு, தொழிலாளர்களுக்கு விரோதமாக இருக்கின்ற நேரத்திலே, தங்களுடைய உரிமைகளை எடுத்துச் சொல்வதற்கு ஜனநாயக ரீதியில் உரிமை இருக்கிறது. ஆகவே, இப்படி எதையும் பேசக்கூடாது. எதையும் கேட்கக்கூடாது, உரிமைகளைப் பற்றியே பேசக்கூடாது என்று சொன்னால், இது என்ன ஜனநாயக நாடா அல்லது சர்வாதிகார ஆட்சியா என்பதைத்தான் இங்கே நான் மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இப்படிப்பட்ட சட்டம் தேவையா? இதை நாங்கள் சொல்லவில்லை. எதிர்க்கட்சி வரிசையிலே பேசவில்லை. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருக்கக்கூடிய அந்தத் தொழிற்சங்கத்திலே இருக்கக்கூடியவர்களை அழைத்துப் பேசினால்,





அவர்களே தெளிவாகச் சொல்வார்கள். ஆகவே, இந்த வகையிலே இந்தச் சட்டம் என்பது, அடக்குமுறைச் சட்டம். நாம் வெள்ளைக் காரர்களிடத்திலே சுதந்திரம் பெற்று, அவர்களிடத்திலிருந்து மீளுவதற்காகச் சட்டங்களையெல்லாம் திருத்திக் கொண்டிருக்கக்கூடியது இந்த நேரம், இன்று காலச் சூழலுக்கேற்ப சட்டங்களை மாற்றியமைக்க வேண்டும் என்று சொல்கிறோம். இப்போது வெங்கடாசலய்யா அவர்கள் தலைமையில் ஒரு கமிஷன் போட்டு, இருந்த சட்டங்களை எல்லாம் நடைமுறைக்கு ஏற்றவாறு திருத்திக் கொண்டிருக்கிற இந்தக் காலகட்டத்திலே, மீண்டும் வெள்ளைக்காரர்களுடைய சட்டத்திற்கு மேலாகச் சென்று, சர்வாதிகார முறையிலே இருக்கக்கூடிய ஒரு சட்டமாகக் கொண்டுவரக்கூடிய இந்தக் கறுப்புச் சட்டம், சர்வாதிகாரச் சட்டம் தேவைதானா என்பதை இங்கே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, இப்படிப்பட்ட சட்டம் என்பது —இதைச் சாதாரண சட்டமாக நீங்கள் கருதினாலும்கூட, இது மனித உரிமைகளையே மீறக்கூடிய சட்டம். ஆகவே, இந்தச் சட்டம் என்பது —எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாத சட்டம். இன்று நினைத்துப் பார்க்கலாம். இன்று ஆளுங்கட்சி வரிசையிலே இருக்கிறோம் என்று சொல்லி, சட்டத்தைக் கொண்டு வருவீர்கள் என்று சொன்னால், இதிலே பாதிக்கப்படக்கூடியவர்கள் எதிர்க்கட்சி வரிசையிலே இருப்பவர்கள் என்று நினைத்துவிடக்கூடாது. எல்லாத் தரப்பு அரசுப் பணியாளர்களும் —போக்குவரத்துத் துறையில் இந்தச் சட்டம் என்பது போக்குவரத்துப் பணியாளர்களுக்காக, அந்தத் தொழிலாளர்களுக்காகக் கொண்டு வரப்பட்டதாகவே கருதுகிறோம்—ஏதோ போராடினார்கள், போனஸ் கேட்டார்கள் என்ற ஒரு நோக்கத்திற்காக இப்படிச் சட்டம் கொண்டு வருவீர்கள் என்று சொன்னால், இது தமிழ்நாட்டிலே மிகப் பெரிய கிளர்ச்சியை, மிகப் பெரிய புரட்சியைக் கட்டாயம் உருவாக்கும். அந்தக் காரணத்தினாலே, இந்தச் சட்டம் என்பது தேவையில்லாத சட்டம். இது மக்களுக்கு, தொழிலாளர்களுக்கு, அரசுப் பணியாளர்களுக்கு, அத்தனை பேருக்கும் விரோதமான சட்டம். இது கறுப்புச் சட்டம், சர்வாதிகாரச் சட்டம், இந்தச் சட்டம் தேவையில்லை எனப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே கடுமையாகக் கண்டனம் தெரிவித்து, எதிர்த்து, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வெளிநடப்புச் செய்கிறோம்.

*முற்பகல் 10-25*

*(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தைச் சட்ட ரீதியாகவும், தார்மீக ரீதியாகவும் நாம் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை நான் இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களுக்கு ஒரு Quasi-Judicial Functionகூட இருக்கிறது. இந்தச் சட்டம் என்பது admissibleதானா என்ற ஒரு பிரச்சினையை நான் முதலிலே கிளப்ப விரும்புகிறேன். இந்திய அரசமைப்புச் சட்டத்தினுடைய Article 90, சங்கம் சேர்வதற்கான உரிமையைக் கொடுத்திருக்கிறது. சங்கம் சேர்வது எதற்கு? விரோதத்திற்கு அல்ல. அவர்களுடைய உரிமைகளை அவர்கள் விவாதித்து, முடிவு செய்து, அதற்கு redressal—அதாவது, அதற்குப் பரிகாரங்கள் தேடுவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு என்ற நோக்கத்தோடுதான் இந்திய அரசமைப்புச் சட்டத்திலே, சங்கம் சேர்வதற்கான உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. சங்கம் சேர்வதற்கான அந்த அடிப்படையான நோக்கத்தையே இன்று உடைக்கக்கூடிய முறையிலே அல்லது அதைத் தடை செய்யக்கூடிய முறையிலே இந்தச் சட்டம் அமைகிறது என்பது அல்லது இந்தச் சட்ட மசோதா அமைகிறது என்பது என்னுடைய கருத்து. ஆகவே, அப்படிப்பட்ட ஒரு சட்டத்தை இங்கு விவாதத்திற்கு எடுத்துக்கொள்வது சரிதானா என்பது, பேரவைத் தலைவருடைய Quasi-Judicial Function-இலே முடிவு செய்யப்பட வேண்டும் என்பது என்னுடைய கருத்து.

இதனுடைய அடிப்படையிலேதான், அரசமைப்புச் சட்டத்தின் Article 90- ன்படி கொடுக்கப்பட்டிருக்கிற உரிமையை ஏற்றுக்கொண்டுதான், 1947-லே இந்தியாவினுடைய நாடாளுமன்றத்திலே நிறைவேற்றப்பட்ட தொழில் தகராறுகள் சட்டம், தொழிலாளிகளுக்கு வேலைநிறுத்தம் செய்வதற்கான உரிமையை வழங்கியிருக்கிறது. "Provided he should give 14 days notice" ஒரு Public Utility Service-லே அவன் 14 நாட்கள் நோட்டீஸ் கொடுத்து வேலைநிறுத்தம் செய்வதற்கான உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது.

இந்திய அரசமைப்புச் சட்டத்தினுடைய பின்னணியில் நாடாளுமன்றம் நிறைவேற்றிய அந்தச் சட்டம் கொடுக்கிற அடிப்படை உரிமையையும் பிடுங்குகிற இந்தச் சட்டத்தை இங்கே நிறைவேற்றுவதற்கு இந்தச் சட்டமன்றத்திற்கு அதிகாரம் உண்டா என்று நான் கேட்டுக்கொள்ள



விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* பேரவைத் தலைவர் அவர்கள் அவருடைய Quasi-Judicial Function-லே முடிவு செய்யப்பட வேண்டிய ஒரு விஷயம் இது. ஆகவே, இதை raise செய்துவிட்டு, நான் மற்றச் சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சட்டத்திலே என்ன சொல்லப்படுகிறது? 'Strike' means-அப்படி என்று சொல்லிவிட்டு, 'Refusal to work overtime while such work is necessary for the maintenance of any essential service'. Essential Service-ஐ maintain செய்வதற்கு, அவன் அதிக நேரம் வேலை செய்ய வேண்டும் என்று முடிவு செய்வது யார்? Who? அதாவது ஒரு Executive. உதாரணமாக, Transport-ல் உள்ள ஒரு Depot இருக்கிறது. அங்கே ஒரு Branch Manager இருக்கிறார். அந்த Branch Managerதான் முடிவு செய்வதா? 'எனக்கு உடம்பு சரியில்லை, எனக்கு வேலை செய்ய முடியவில்லை' என்றால், 'இல்லை, நீ வேலை செய்துதான் ஆக வேண்டும்' என்று முடிவு செய்வதற்கான அதிகாரத்தை இந்தச் சட்டம் யாருக்குக் கொடுக்கிறது? ஒரு சாதாரண Branch Manager-க்கு.

*முற்பகல் 10-30*

இது, அடிப்படையாக இந்த நாடு ஏற்றுக் கொண்டிருக்கிற, தொழிலாளி வர்க்கத்தினுடைய உரிமையை நிலைநாட்டுவதற்காக ஏற்றுக் கொண்டிருக்கின்ற சட்டங்களை எல்லாம் மீறுகிற ஒரு சட்டம். இந்த நேரத்திலே, தொழில் தகராறு சட்டத்திலே, தொழிலாளி, அவனுடைய உரிமையை நிருவாகம் மறுக்கிற நேரத்தில் வேலைநிறுத்தம் செய்வதற்கான உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. அந்த முறையில் அவன் நோட்டீஸ் கொடுக்கிற நேரத்திலே, the Labour Department should start conciliatory process. அதாவது, சமரசப் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும். போக்குவரத்துத் துறையிலே ஒரு வேலைநிறுத்தம் ஏற்பட்டது. சென்ற நவம்பர் மாதத்திலே, இன்று ஆளுங்கட்சியிலே அல்லது அமைச்சர்கள் அதை வேறு மாதிரி நினைத்திருக்கலாம். எனக்குத் தெரிந்த அளவிலே, it was a spontaneous strike. எந்தச் சங்கமும் call கொடுத்து நடத்தப்பட்டது அல்ல. அவன் பல ஆண்டுகளாகப் பெற்றுக்கொண்டிருந்த போனஸ் அவனுக்கு மறுக்கப்பட்ட நேரத்தில், அவனுக்கு ஆத்திரம் வந்து, அவன் வேலைநிறுத்தம் செய்தான். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கைது செய்த நேரத்திலே, அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக்காரர்கள் பேருந்துகளை உடைக்கவில்லையா? அது அவர்களுடைய spontaneous முடிவு. யாரும் அதைத் தப்பு என்று சொல்ல முடியாது. எல்லாத் தரப்பிலேயும் இருக்கிறது அதேமாதிரி. அதாவது,

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [2002 மே 10

அவனுடைய உரிமை அல்லது அவனுடைய உணர்வை நிலைநாட்டுவதற்காக வேண்டி அவன் எடுத்துக்கொள்கிற ஒரு நடவடிக்கை. அந்த உணர்வோடு பார்க்கவேண்டும். நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இங்கே மாண்புமிகு Labour Minister அவர்களும் இருக்கிறார்கள் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும் இருக்கிறார்கள். நீங்கள் conciliation நடத்தினீர்களா? உங்களுடைய Labour Department இது சம்பந்தமாக ஒரு கூட்டமாவது கூப்பிட்டு, வேலைநிறுத்தத்தைத் தவிர்ப்பதற்கான ஏதேனும் நடவடிக்கை எடுத்துக்கொண்டதா? அப்படி இந்தியாவினுடைய அரசமைப்புச் சட்டத்தை, இந்திய Parliament-லே நிறைவேற்றப்பட்டிருக்கிற சட்டங்களை இந்தச் சட்டங்களுடைய நோக்கத்தையெல்லாம் நீங்கள் கடைப்பிடிக்க மறுக்கிறீர்கள். அதை மறுத்துக்கொண்டு, நீங்கள் fascist நோக்கத்திலே ஒரு சட்டத்தை இங்கே கொண்டு வந்திருக்கிறீர்கள். ஒரு தொழிலாளி, 'எனக்கு உடம்பு சரியில்லை. எனக்கு வேலை செய்ய முடியவில்லை' என்று சொன்னால், 'இல்லை, வேலை செய்யவேண்டும்' என்று ஒரு Branch Manager சொல்லலாம். அது overtime—Overtime work இன்று சட்டப்படி ஒரு compulsory thing அல்ல. ஆனால், இந்தச் சட்டத்திலே அதைக் கட்டாயப்படுத்துவதற்கான உரிமை ஓர் அதிகாரிக்குக் கொடுக்கப்படுகிறது. இது சட்டபூர்வமாக இன்று நாடாளுமன்றம் ஏற்றுக்கொண்டிருக்கிற சட்டத்தினுடைய கருத்துகளுக்கு, அதனுடைய ஷரத்துகளுக்கு முற்றிலும் மாறுபட்ட ஒன்று என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னொன்று, இந்தச் சட்டம் தார்மீகமாக ஒன்றை எடுத்துக் காட்டுகிறது. அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசுக்கு இந்த நாட்டிலே இருக்கிற உழைப்பாளி மக்களுடைய நியாயமான பிரச்சினைகளை, அவர்களோடு பேசித் தீர்ப்பதற்கான மனோபாவம் இல்லை என்று இந்தச் சட்டம் காட்டுகிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்திய நாட்டினுடைய சட்டம் என்ன சொல்கிறது? தொழிலாளியும் வேலைநிறுத்தத்திற்கு notice கொடுத்தால், அல்லது அதற்கு அவன் முற்பட்டால், அவனைக் கூப்பிட்டு வைத்து conciliatory process நடத்தப்பட வேண்டும். அந்த machinery-யே இல்லை. அது இல்லாமல் என்ன சட்டம் கொண்டு வருவது? அந்தத் தொழிலாளி வேலைநிறுத்தம் செய்தால், 3 ஆண்டு காலம் அவனுக்குச் சிறை. அதற்கு உதவி செய்தால் 3 ஆண்டு காலம் சிறை அல்லது 5000 ரூபாய் அபராதம் அல்லது இது இரண்டும் சேர்ந்து; இப்படிப்பட்ட ஒரு, மக்களுடைய அடிப்படையான உரிமையை மீறுகிற, அவனுடைய குரலை



2002 மே 10] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

அறுக்கிற சட்டம், அரை நூற்றாண்டு காலத்திலே, ஏதாவது சட்டப் பேரவையிலே அல்லது நாடாளுமன்றத்திலே கொண்டு வந்து தாக்கல் செய்யப்பட்டிருக்கிறதா, நிறைவேற்றப்பட்டிருக்கிறதா என்று அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தம்பிமாரே, சட்டமன்ற உறுப்பினர்களே, நீங்கள் சிந்திக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே பணிவன்புடன் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இது ஓர் அரசியல் பிரச்சினை அல்ல. நாளை நீங்களும் வேலைநிறுத்தம் செய்யக்கூடிய நிலை ஏற்படலாம். நான் ஓர் எடுத்துக்காட்டை மட்டும் சொல்கிறேன். போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே இருந்து கொண்டிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியிலே இருக்கிற ஒரு பணிமனை; திருவட்டாறு பணிமனை. அந்தப் பணிமனையிலே ஒரு தொழிலாளி Retire ஆகிறான். அங்கே ஒரு வழக்கம் கடைப்பிடிக்கப்பட்டிருக்கிறது. Retire ஆகிற தொழிலாளி எந்தச் சங்கத்தைச் சார்ந்திருக்கிறானோ, அந்தச் சங்கத்தினுடைய nominee-க்கு அந்த ரூட்டைக் கொடுப்பது என்பது ஒரு வழக்கமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. அந்த முறையிலே Managing Director ஒரு தொழிலாளிக்குக் கொடுப்பதற்குச் சொல்கிறார். அங்கே இருக்கிற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர்களும், அங்கே அவர்களுடைய ஆளாக Managing Director வைக்கப்பட்டிருக்கின்ற அந்த Controller-ம் சேர்ந்து, Branch Manager யாருக்கு வேலை கொடுக்கச் சொன்னார்களோ, அவருக்கு கொஞ்சம் கொடுத்த நேரத்திலே, Branch Manager-ஐக் அவருக்குக் கொடுத்தால் தட்டிவிட்டிருக்கிறார்கள். என்ன நடந்தது? வேலைநிறுத்தம் செய்து நாங்கள் அனுமதிக்க மாட்டோம் என்று சொல்லி, தடுத்தார்கள். நான் அந்தத் தொழிலாளியை வேலைக்குப் போகாமல் ஏற்கெனவே சொன்னது போல, spontaneous ஆக அதைச் செய்துள்ளனர். இந்தச் சட்டப்படி அது குற்றம். அவர்களை 3 ஆண்டு காலம் சிறையில் தள்ளவேண்டும். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தம்பிமாரை அப்படிச் சிறையில் தள்ளுவதற்கு நீங்கள் தயாராவீர்களா?

முற்பகல் 10-35

ஆகவே, இன்றைக்கு இந்தச் சட்டம், ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடிக்கிற இடத்திற்குக் கொண்டு போகிற சட்டம் என்பதை நான் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, இந்தச் சட்டத்தைப் பொறுத்தளவிலே, நாங்கள் மதச் சார்பற்ற ஜனநாயக அணியினுடைய அங்கம் வகித்த ஓர் உறுப்பு என்ற அந்த உரிமையோடு சொல்கிறேன். இந்த நாட்டிலே இருக்கிற உழைப்பாளி மக்களுடைய

உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்குத்தான், மதச் சார்பற்ற ஜனநாயக அணியை வெற்றி பெறச் செய்யவேண்டுமென்று, இந்த நாட்டிலேயிருக்கிற மக்களிடம், நீங்களும், நாங்களும் சேர்ந்து ஓட்டு கேட்டோம். நாம் வெற்றி பெற்று வந்தோம். பெரிய கட்சி என்ற முறையில் நீங்கள் இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பிலே வந்திருக்கிறீர்கள். நாங்கள் அதிலே மகிழ்ச்சியடைந்தோம். ஆனால், இன்றைக்கு நீங்கள் இந்த நாட்டிலே இருக்கிற உழைப்பாளி மக்களுடைய அடிப்படையான உரிமைகளை, அவர்களுடைய உணர்வுகளை நீங்கள் புரிந்துகொண்டு—புரிந்துகொள்ளவில்லை என்று நடித்து, அவர்களுடைய அடிப்படையான உரிமைகளைப் பிடுங்குகிற முறையிலே இந்தச் சட்டத்தைக் (மணியடிக்கப்பெற்றது) கொண்டு வந்திருக்கிறீர்கள். இது ஜனநாயக விரோதமான சட்டம். இந்த நாட்டிலேயிருக்கிற உழைப்பாளி மக்களுடைய—இதிலே ஒரு தொழிலாளி மட்டுமல்ல, அரசு ஊழியன், அதேபோன்று ......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், கருத்தைக் கொஞ்சம் சுருக்கமாகச் சொல்லி முடியுங்கள். இன்னும் 23 சட்டமுன்வடிவுகள் இருக்கின்றன. (குறுக்கீடு) உங்களுடைய கருத்தைச் சொல்லுங்கள். அதைப் பற்றி ஒன்றுமில்லை.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** Speaker Sir, அடிப்படையான உரிமைகளை மீறுகிற சட்டத்தின் மேலே பேசுவதற்கு நியாயமான அவகாசம் தரவில்லை என்றால், நாங்கள் போய் விடுகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, பேசுங்கள். (குறுக்கீடு) பேசுங்கள். இன்றைக்கு முழு நாளும், இதைப் பற்றிப் பேச முடியாது.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** நான் என்ன சொல்கிறேன் என்றால், இன்றைக்கு இந்தச் சட்டத்தைப் பொறுத்தளவிலே இந்தச் சபை வழியாக, தமிழகத்திலே இருக்கிற 6 கோடி மக்களிடம் நாங்கள் நியாயத்தைக் கேட்கிறோம். அந்த முறையிலே நாங்கள் இந்த விஷயத்தை இங்கே எடுத்து வைப்பதற்குக் கடமைப்பட்டிருக்கிறோம். இன்றைக்கு இந்த நாட்டினுடைய அரசியல் சட்டமும், தொழில் தகராறுகள் சட்டமும் எல்லாம் சுட்டிக்காட்டுவது போல, தொழிலாளிகளுடைய, உழைப்பாளிகளுடைய—இதிலே அரசு ஊழியரையும் நீங்கள் சேர்த்திருக்கிறீர்கள். Local self-Government Employee-யைச் சேர்த்திருக்கிறீர்கள். Fire Brigade Service காரர்களைச் சேர்த்திருக்கிறீர்கள். Public Service-லே உள்ளவர்களைச் சேர்த்திருக்கிறீர்கள். `Any other service or employment or class thereof; இதை யார் முடிவு செய்வது? அதிகாரிகள் முடிவு செய்வது. இப்படி



அதிகாரிகளுக்கு, அதாவது Executive-க்கு, ஒரு சர்வ தந்திர சுதந்திரமாக, இந்த நாட்டிலேயிருக்கிற உழைப்பாளி மக்களை அடிமைகளாக நடத்துவதற்கு அனுமதித்துள்ள, ஒரு மனிதாபிமானமற்ற, பாசிச நோக்கத்தோடு உருவாக்கப்பட்டிருக்கிற இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவது நியாயமல்ல, சரியல்ல. தமிழகத்திலே இருக்கிற உழைப்பாளி மக்களுக்கு மட்டுமல்ல; பாரத நாட்டிலே இருக்கிற உழைப்பாளி மக்களுக்கே நீங்கள் துரோகம் செய்கிறீர்கள். மே தினத்தை நீங்கள் கொண்டாடுகிறீர்கள். மே தினத்தைக் கொண்டாடுகிற நேரத்திலே, மே தினத்திற்காக உயிரை விட்டவன், இந்தச் சட்டத்தை உருவாக்குவதற்காகவா அவன் உயிரை விட்டான்? (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அவனுடைய ஞாபகத்தைப் புகழ்ந்து 10 நாட்கள்கூட ஆகவில்லை. அதற்குள்ளாக நீங்கள் இந்த மாதிரி ஒரு சட்டத்தைக் கொண்டு வருவது, தார்மீகமாகச் சரியல்ல. இந்தச் சட்டம் சட்டபூர்வமாக நிற்காது என்று நான் சொன்னேன். தார்மீகமாகக்கூட இதை நிறைவேற்றுவது நியாயமல்ல, சரியல்ல என்று நான் இந்த நேரத்திலே பணிவன்புடன் தெரிவித்து, இன்னும் காலதாமதம் ஆகவில்லை. இந்தச் சட்டத்தைத் திரும்பப் பெறுவதற்கான அவகாசம் அரசுக்கு உண்டு. நீங்கள் சிந்திக்க வேண்டும். சிந்தித்து, இந்த நாட்டிலே இருக்கிற உழைப்பாளி மக்களுடைய நலனைப் பேணக்கூடிய முறையிலே நீங்கள் இந்தச் சட்டத்தை வாபஸ் பெறவேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதைப்போல, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே, முதலாவதாகவே இந்தச் சட்டத்தை நான் கடுமையாக எதிர்க்கிறேன். பொதுப் பயன்பாட்டுப் பணியில் வேலைநிறுத்தங்களை மேற்கொள்வது என்றால், கடைப்பிடிக்கவேண்டிய விதிமுறைகள் குறித்து, தொழில் தகராறுகள் சட்டத்திலே 5-வது அத்தியாயம் மிக விரிவாகக் கூறுகிறது. அதன் அடிப்படையிலேதான் இதுவரையிலும் வேலைநிறுத்தங்களும் நடைபெற்று வருகின்றன. ஆனால், இந்தச் சட்டம் இப்போது புதிய முறையிலே கொண்டுவரப்படுவது என்பதைத் தேவையற்ற ஒன்றாக நான் கருதுகிறேன். குறிப்பாக, வேலைநிறுத்தத்தைத் தடைசெய்து, கோரிக்கைகளை நடுவர் மன்றத்திற்கு விடுவதற்காக மாநில அரசுக்கு அதிகாரம் அளித்து, தொழில் தகராறு சட்டத்திலே 10(பி) பிரிவு, மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்திலேயே கொண்டு வரப்பட்டது. சென்ற கூட்டத் தொடர் நடைபெற்றுக் கொண்டிருக்கிறபோது, பஞ்சாலைத் தொழிலாளர்கள் போராட்டம்

[திரு. வை. சிவபுண்ணியம்] [2002 மே 10

நடைபெற்றபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, இந்த 10(பி) பிரிவின்கீழே, அந்தப் போராட்டத்தைத் தடை செய்தே அறிவித்தார்கள். அப்படிப் போராட்டத்தைத் தடை செய்யவேண்டுமென்று அரசு கருதுமேயானால், அதைத் தடை செய்வதற்கான சட்டங்கள் ஏற்கெனவே ஏராளமாக இருக்கின்றன. அதுவே கடுமையான சட்டமாக இருக்கிறபோது, இந்தக் கொடுமையான சட்டம் தேவையா என்பதுதான் எங்களுடைய கேள்வி.

*முற்பகல் 10-40*

ஆகவே, அந்தச் சட்டத்தின் அடிப்படையிலேயே அதைத் தடுப்பதற்கான முயற்சி சென்ற ஆண்டே நடைபெற்றது. குறிப்பாக, திடீர் வேலைநிறுத்தத் தடை மட்டுமல்ல, ஆலை மூடல், கதவடைப்பையும் தடை செய்கிறது என்று சொல்லப்பட்டிருந்தது. ஆனால், இப்போது என்ன வந்திருக்கிறது? இந்தச் சட்டத்தைப் பற்றி ஆய்வு செய்த ஒரு முடிவாக வந்திருக்கிற ஒரு வெளிப்பாடு என்னவென்றால்; தொழிலாளர்களுடைய போராட்டத்தின் மூலமாக மட்டுமே தொழில்கள் பாதிக்கின்றன; அல்லது உற்பத்தி பாதிக்கிறது என்று பொருள் கொள்ளும் வகையில் ஆய்வு சொல்லவில்லை. ஆய்விலே சொல்லப்பட்டிருக்கிற செய்தி; இந்தப் போராட்டம் மட்டும் காரணம் அல்ல. ஆலை மூடலும், கதவடைப்பும்தான் இந்த உற்பத்திப் பெருக்கத்தைத் தடை செய்வதற்குரிய முயற்சியாக இருக்கிறது, பொருளாதாரத் தேக்கத்திற்கு முயற்சியாக இருக்கிறது, நாடு பின்னடைந்து செல்வதற்குரிய முயற்சியாக இருக்கிறது என்று இணைந்து ஆய்விலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, வெறும் போராடுகிற உரிமையைப் பெற்றிருப்பதை மட்டும் தடுப்பதாலே, நாடு முன்னேறி விடாது. ஆகவே, இந்தத் தலைப்பை மாற்றி இந்தச் சட்டத்தைப் பற்றி இங்கே சிந்தித்திருக்கிறீர்கள் என்பதை நான் சொல்லக் கடமைபபட்டிருக்கிறேன்.

அடுத்ததாக, குறிப்பாகத் தொழிலாளர்களைப் பற்றிப் பேசவே இல்லை. இந்தச் சட்டத்திலே என்ன பெரிய வருத்தமான செய்தி என்றால், போராடுகிற தொழிலாளர்களுடைய உரிமையைப் பறிப்பதற்காக மட்டுமே இதிலே சொல்லப்படுகிறது. பல சட்டங்களில் உரிமையைப் பற்றிச் சொல்வதும் உண்டு; கடமையைப் பற்றிச் சொல்கிற முறையும் இருக்கும். ஆனால், இதிலே அப்படியே கிடையாது. இந்தத் தொழிலாளர்களுடைய பிரச்சினைகளை, அவர்களுக்குத் தீர்வு காண்பதற்கான முயற்சிகளைப் பற்றி ஏதாவது ஒரு வரி, எங்காவது ஒரு இடத்திலே இருக்குமா என்று தேடித் தேடிப் பார்த்தேன். இல்லை. அது ரொம்ப வேதனையான



2002 மே 10] [திரு. வை. சிவபுண்ணியம்]

செய்தியாக இருக்கிறது. அப்படியென்றால், இந்தத் தொழிலாளர்களை இந்த அரசு ஏன் விரோதத்தோடு பார்க்கிறது? விரோதத்தோடு பார்ப்பதாகவும், குரோதத்தோடு பார்ப்பதாகவும்தான் நான் கருதுகிறேன். அப்படி ஒரு மோசமான நிலையில் தொழிலாளர்கள் இருக்கிறார்களா? இந்த நாட்டிற்குரிய முன்னேற்றத்திற்கான முயற்சிகளை எடுக்கவில்லையா? போக்குவரத்துத் தொழிலாளர்களைப் பற்றி நான் சொன்னேன். 35 கோடி ரூபாய் செலவிலே தொடங்கப்பட்டது அந்தப் பொது நிறுவனம். இன்றைக்கு 20,000 கோடி ரூபாய் மூலதனமாக உருவாகியிருக்கிறது. அவர்களுடைய போராட்டத்தை நசுக்குவதற்கு ஒருபுறம் நீங்கள் முயற்சி எடுக்கிறீர்கள். ஆனால், இந்த 20,000 கோடி ரூபாய் சொத்தை உருவாக்கியவர்கள் ஒரு இலட்சம் பேர், அந்தப் போக்குவரத்துத் தொழிலாளிகள். அவர்கள் ரத்தம் சிந்தவில்லையா? பல்வேறு சாலை விபத்துகளிலே அவர்களுடைய உயிர் பலியாகிக் கொண்டு இருக்கிறது. பல பேர் செத்திருக்கிறார்கள். பல பேர் முடமாகி இருக்கிறார்கள். நொண்டியாகி இருக்கிறார்கள். பல பேர் கண் இல்லாமல் போயிருக்கிறார்கள். இப்படியெல்லாம் உழைத்ததன் மூலமாக உருவாகியதுதான் இன்றைக்குப் பொதுத் துறையாக உயர்ந்து நிற்கிற போக்குவரத்துத் துறை. ஆகையினாலே, தொழிலாளிக்கே சம்பந்தம் இல்லாமல், ஏதோ அப்படியே கண்மூடி மந்திரமாக அல்லது மாயத்திலே வந்தது மாதிரி விஷயங்களைப் பேசுவது என்பது ரொம்ப வருத்தமாக இருக்கிறது; வேதனையாக இருக்கிறது.

ஆகவே, இந்த முறையைப் பற்றிச் சொல்கிறபோது, அரசுப் பணியாளர்கள், போக்குவரத்துத் தொழிலாளர்களைப் பற்றித்தான் இதிலே ரொம்ப முன்னால் வரப்போகிறது. இப்போது என்ன விஷயம் என்றால், அச்சமே என்ன வருகிறது என்றால், போக்குவரத்துத் தொழிலாளி மீதுதான் இந்தச் சட்டம் முதலாவது பாய்வதற்கு ரொம்பத் தயாராக இருக்கிறது இப்போது. அவர்களைத் தனியார்மயமாக்குவதற்கான முயற்சி எடுக்கிறபோது, இந்த விஷயங்கள் மூலமாகக் கொண்டு வருவதற்கு உரிய ஒரு முயற்சியாக இது இருக்கிறது என்பதுதான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய அழுத்தமான கருத்து. அதேபோல, எந்தத் தொழிலைப் பற்றியும் வந்திருக்கிறது இப்போது--உள்ளாட்சியிலே இருந்து, ஊராட்சியில் இருந்து, நகராட்சியிலிருந்து, யாரும் போராட முடியாது. இப்போது இன்னும் ஒன்று அதிலே சேர்க்கப்பட்டிருக்கிறது. சட்டமன்ற வளாகத்திற்கு உட்பட்ட பணியாளர்களேகூட அந்த மாதிரியான விஷயங்களிலே ஈடுபட்டால், சபாநாயகருடைய அனுமதியைப் பெற்றுக் கைது பண்ணலாம் என்று வருகிறது. இப்படியே வந்து, சட்டமன்றத்திற்கு

உள்ளேயும் வந்து, இதைப் பற்றிப் பேசுகிற சட்டமன்ற உறுப்பினர்களுக்கே ஏதாவது சிக்கல் வந்து விடுமோ என்ற ஓர் அச்சம் இருக்கிறது. அப்படியென்றால், இந்தச் சட்டம் ஏன் இப்படி வருகிறது? ஏன் இப்படிச் சிந்திக்க வேண்டும்? மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய சிந்தனையிலேயோ அல்லது நிதியமைச்சருடைய சிந்தனையிலேயோ இப்படி வந்ததா? எனக்கு மிக ஆழமான கருத்து இருக்கிறது. அப்படி வரவில்லை. இதை ஏதோ, மேட்டுக்குடியிலிருந்து வந்த சிந்தனையின் அடிப்படையிலே உதித்த சட்டமாக நான் கருதுகிறேன். இதை யார் சொன்னார்கள், என்ன என்பது எனக்குத் தெரியவில்லை. உண்மையிலேயே நீங்கள் அப்படி நினைக்கமாட்டீர்கள் என்றுதான் நான் மனப்பூர்வமாக நம்புகிறேன். இது உயர்குடி சிந்தனையிலே உதித்த சட்டமாக வந்திருக்கிற காரணத்தினாலே, தயவுசெய்து இதை நிறைவேற்றாதீர்கள். இதனால் நாம் பாவத்திற்கும், பழிக்கும் ஆளாகக்கூடிய ஒரு நிலை இன்று ஏற்பட்டு விடும் என்றுதான் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் சொன்னார்கள்; 'ஓவர்டைம்' பற்றி. உடல் நலம் சரியில்லை என்று சொன்னால்கூட, ஓவர்டைம் பார்க்க வேண்டுமா? இப்போது சாக வேண்டுமென்றால்கூட, அந்தச் சட்டத்தைக் கேட்டுக்கொண்டுதான் சாக வேண்டுமா தொழிலாளி? அப்படி ஒரு நிர்ப்பந்தமான நிலை வருகிறது என்று சொன்னால், என்ன அநியாயம் இது? இதைக் கேட்கவே முடியாது; பார்க்கவே முடியாது என்று சொன்னால், இது ரொம்ப சிந்திக்க வேண்டிய விஷயமாக இருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட ஷரத்துக்கள் அதிலே வருகின்றன. அதேபோல, குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், நீண்ட காலமாகப் போராடிப் பெற்றிருக்கிற இந்தச் சலுகைகளையெல்லாம் ஒரே சட்டத்தின் மூலமாகப் பறித்து விடுவதற்கான ஒரு முயற்சியாக இது இருக்கிறது. அரசியல் அமைப்புச் சட்டம் வழங்குகிற அடிப்படை உரிமையே இதிலே பறிக்கப்படுகிறது. குறிப்பாக, இந்தச் சட்டத்தைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால், இது ஒரு வாய்ப்பூட்டுச் சட்டம்தான். இது ஒரு ஆள் தூக்கிச் சட்டம். அப்படித்தான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் இதைக் குற்றமாகவே சொல்கிறேன். இது வாய்ப்பூட்டுச் சட்டம்; ஆள் தூக்கிச் சட்டம். கறுப்புச் சட்டமாக இது வருகிறது என்பதுதான் எங்களுடைய கடுமையான கருத்து. மனிதாபிமானமற்ற முறையிலே இந்தச் சட்டத்தைப் பயன்படுத்துவதற்கு உரிய வாய்ப்பு இருக்கிறது. நம்முடைய ஜனநாயக நாட்டில் இந்தச் சட்டம் வருமானால், மிகப் பெரிய பிரச்சினையை ஏற்படுத்திவிடும்.



முற்பகல் 10-45

ஒரே ஒரு விஷயத்தைச் சொல்கிறேன். ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிலாளர்கள். அந்தத் தொழிற்சாலை எங்கேயிருக்கிறது என்று, அது இருந்த இடம் தெரியாமலேயே போய்க்கொண்டிருக்கிறது. அதிலேயிருந்த தொழிலாளர்கள் போராடிப், போராடிப் பார்த்து, 168 தொழிலாளர்கள் மடிந்தே போனார்கள், செத்தே போய்விட்டார்கள். பல நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் இன்றைக்கு சென்னை நகர வீதிகளிலே பிச்சை எடுத்துக்கொண்டிருக்கின்றார்கள். ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிலாளர்கள் தெருவிலே பிச்சை எடுத்துத் திரிந்துகொண்டு இருக்கிறார்கள். போராடிப், போராடிப் பார்த்து, எந்தப் பலனும் இல்லை. இது யாருக்கும் தெரியாதது அல்ல. எல்லா ஆட்சிக் காலத்திலேயும் பேசப்பட்ட உண்மை இது. ஆகவே, தொழிலாளர்களுடைய இந்தப் போராட்டத்தை நசுக்குவதற்கான இந்தச் சட்டமும், திட்டமும் தேவையா? ஏற்கெனவே இருக்கிற சட்டங்களே போதுமானதாக இருக்கிறபோது, இந்த ஒரு சட்டம் என்பது தமிழகத்திற்குத் தேவை இல்லை. இந்த ஆட்சியின்மீது களங்கத்தை அல்லது ஒரு தீராத பழியை, தீராத உணர்வுகளை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பை இது ஏற்படுத்திவிடும் என்கிற காரணத்தினாலே--பிளாஸ்டிக் தடைச் சட்டத்தைப் பற்றிப் பரிசீலிக்க அனுப்பினீர்கள். இதைப் பரிசீலிப்பதற்குரிய வாய்ப்பே அளிக்காமல்— இந்தத் தடைச் சட்டத்தை இந்த அளவிலேயே நீங்கள் வாபஸ் பெறவேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே கருத்தாகச் சொல்லி முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.என். இலட்சுமணன்.

**திரு. கே.என். இலட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணியாளர்களும், ஊழியர்களும் தங்களுடைய குறைகளைப் போக்கிக் கொள்வதற்காகப் போராடுகின்ற உரிமை, அடிப்படை உரிமை ஆகும். பல்வேறு சங்கங்களை அமைத்துக்கொண்டு, தங்களுடைய குறைகளை அரசிடம் தெரிவித்துக்கொள்கின்றார்கள். அப்போது அவர்களுடைய குறைகளைத் தீர்த்து, ஒரு முடிவுக்கு வரவேண்டிய கடமை அரசுக்கு இருக்கிறது. கடைசிக் கட்டத்திலேதான் போராட்டம், வேலைநிறுத்தம் என்கின்ற முடிவிற்குத் தொழிலாளர்களும், உழைப்பாளர்களும், பணியாளர்களும் போய்க்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இது மக்களுடைய ஆட்சி. மக்களுடைய குறையைத் தீர்ப்பது அரசினுடைய கடமை. ஆகவே, அவர்களுடைய உரிமையை முடக்குவதற்காக இருக்கின்ற இந்தச் சட்டத்தை விலக்கிக் கொள்ளுமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

[2002 மே 10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எஸ். மகேஸ்வரி.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய தேசிய காங்கிரசின் சார்பாக இந்தச் சட்டமுன்வடிவை நாங்கள் வன்மையாக ஆட்சேபிக்கின்றோம். ஏனென்றால், தொழிலாளர்களின் உரிமையைப் பறிக்கின்ற சட்டமாக இது இருக்கின்றது. I also adopt the submission of the Hon'ble Member S.R.B. அதோடு, இந்தச் சட்டம் அமல்படுத்தப்படுமானால் அத்தியாவசியப் பணியிலே ஈடுபடுகின்ற தொழிலாளர்களுக்கு எத்தகைய அநீதி இழைக்கப்பட்டாலும், அவர்கள் நீதி கேட்டுப் போராட முடியாது. அவர்களுக்கு எத்தகைய கொடுமைகள் இழைக்கப்பட்டாலும், அவர்கள் வாய்மூடி மௌனமாக இருக்கவேண்டுமேயொழிய, அவர்கள் உரிமைக்காகக் குரல் கொடுக்க முடியாது. அந்த அளவிற்கு இந்தச் சட்டங்களின் ஷரத்துகளானது தொழிலாளர்களது உரிமைகளை ஒடுக்குவதாக, முடக்குவதாக இருக்கின்றன.

அதேபோன்று, மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் சொன்னதைப்போல, வேலைநிறுத்தம் என்பது தொழிலாளர்கள் சட்டத்தாலேயே பரிந்துரைக்கப்பட்டு சொல்லப்பட்டிருக்கின்ற, சட்ட ரீதியான, சட்ட பூர்வமான, ஜீவாதார உரிமை; தொழிலாளர் வர்க்கத்தின் ஒரு ஜீவாதார உரிமை. ஆகவே, அவர்கள் வேலைநிறுத்தம் செய்யக்கூடாது என்பது, அவர்களுடைய அடிப்படை உரிமைகளைப் பறிக்கின்ற செயலாகும். இதைத் தொழிலாளர்கள் வர்க்கத்திற்கு இழைக்கப்படுகின்ற ஒரு மாபெரும் அநீதியாகத்தான் இந்திய தேசிய காங்கிரஸ் கருதுகிறது. அதோடு, வேலை நிறுத்தம் என்பது, தொழில் தகராறுகள் சட்டத்திலே சொல்லப்பட்டுள்ளபோது, தொழில் தகராறுகள் சட்டம் என்பது மத்திய அரசு சட்டம் It is a Central Act. ஆகவே, Central Act-லே சொல்லப்பட்டிருக்கின்ற ஓர் உரிமையை, நமது State Act-ஆல் நாம் பறித்துவிட முடியாது. அதற்கு எந்த உரிமையும் இந்த மாநில அரசுக்குக் கிடையாது என்பதையும் இந்த நேரத்திலே வலியுறுத்திச் சொல்லிக்கொண்டு, இந்த நேரத்திலே இன்னொன்றையும் நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகின்றேன். போக்குவரத்துத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்தபோது, நீங்கள் அந்த வேலைநிறுத்தத்தை உடைக்க் வேண்டுமென்பதற்காகத் தற்காலிகப் பணியாளர்களை அமர்த்தி, பேருந்துகளை இயக்கி, பொதுமக்களுக்கு எந்தப் பிரச்சினையும் ஏற்படாமல் நீங்கள் பாதுகாப்பு அளித்தீர்கள். அப்படிப்பட்ட ஒரு முறையையேகூட நீங்கள் எப்பொழுது வேண்டுமானாலும் கடைப்பிடிக்கலாம். உண்மையிலேயே



2002 மே 10] [திருமதி எஸ். மகேஸ்வரி]

சொல்லவேண்டுமென்று சொன்னால், அதுகூட unfair labour practice என்றுதான் சொல்ல வேண்டும். ஆனாலும்கூட, பொது மக்களின் நலன் கருதி அதனை ஓரளவிற்கு நாம் ஏற்றுக்கொள்ளலாம். அதற்காகத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தமே செய்யக்கூடாது என்பது எவ்வகையிலும் ஏற்புடையதாக இல்லையென்பதைச் சொல்லிக்கொள்கிறேன். அதைவிடக் கொடுமை என்னவென்றால், இந்த அத்தியாவசியப் பணியாளர்கள் வேலைநிறுத்தம் செய்யக்கூடாது என்று அரசாணை பிறப்பிக்கப்படுமேயானால், அதையும் மீறி இந்தத் தொழிலாளர்கள், அத்தியாவசியப் பணியாளர்கள் வேலைநிறுத்தத்திலே ஈடுபட்டால், அது illegal strike என்று சொல்லப்பட்டிருக்கிறது. தொழிலாளர் சட்டத்திலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்று சொன்னால், 14 days notice கொடுக்காமல் அவர்கள் வேலைநிறுத்தம் செய்தால், அது illegal strike என்று சொல்லப்பட்டிருக்கிறது. அல்லது அந்த 14 days notice கொடுத்து அந்த notice period expiry ஆவதற்கு முன்பு இவர்கள் வேலைநிறுத்தம் செய்தாலோ, அல்லது அந்த நோட்டீசின்மீது conciliation proceedings commence ஆன பிறகு இவர்கள் வேலைநிறுத்தம் செய்தாலோதான் அது illegal strike என்று சொல்லப்பட்டிருக்கிறது.

*முற்பகல் 10.50*

ஆனால் அந்தச் சட்ட விதிகளுக்கு எல்லாம் முரண்பாடாக, ஆணை பிறப்பிக்கப்பட்ட உடனே இவர்கள் வேலைநிறுத்தம் செய்தால் அது illegal strike-ஆகக் கருதப்படும் என்று சொல்லி, அவ்வாறு சட்ட விரோத வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டால் அவர்களுக்குச் சிறைத் தண்டனை போன்ற கொடுமையான, கடுமையான தண்டனை விதிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருப்பதை நாங்கள் கடுமையாகக் கண்டிக்கிறோம். அதோடு, இது தொழிலாளர்களது குரல்வளையை நெரிக்கின்ற செயல், நெறியற்ற செயல் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொண்டு, 1938 ஆம் ஆண்டிலே மகாராஷ்டிரா சட்டமன்றத்திலே இதுபோன்றதொரு சட்டம் நிறைவேற்றப்பட்டபோது, அறிவுலக மாமேதை, சட்ட மாமேதை அம்பேத்கர் அவர்கள், இதைக் கறுப்புச் சட்டம் என்று வர்ணித்தார்கள். ஆகவே, நாங்களும் இதைக் கறுப்புச் சட்டமாகவே கருதுகிறோம். எங்களைப் பொறுத்தமட்டிலும், இது ஒரு ஜனநாயக விரோதச் சட்டம் என்பதோடு, இது தொழிலாளர்கள் வர்க்கத்தின் வயிற்றிலே அடிக்கின்ற சட்டம், இடிக்கின்ற சட்டம், தொழிலாளர்களையே முடிக்கின்ற சட்டம் என்பதைச் சொல்லி, இந்தச் சட்டத்தை இந்திய தேசிய காங்கிரஸின் சார்பாக வன்மையாக ஆட்சேபித்து அமர்கிறேன்.

முற்பகல் 10-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள்.

• **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், பெரியவர் திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் பேசுகின்றபோது, (குறுக்கீடு) இந்தச் சட்டம் செல்லாது என்பது பற்றிக் கூறி இருக்கிறார்கள். அரசியல் சட்டத்தினுடைய 310, 309, 311 ஆகிய பிரிவுகள் எல்லாம், அரசு அலுவலர்களுடைய நியமனம், ஒழுங்கு நடவடிக்கை, பணி நீக்கம் ஆகியவற்றைப் பற்றி மட்டுமே குறிப்பிடுகின்றன. பணியாளர்களுடைய வேலைநிறுத்தம் குறித்து இதுபோன்ற சட்டத்தைக் கொண்டுவர மாநிலங்களுக்கு உரிமை இருக்கிறது என்பது ஏற்கெனவே தீர்வாகக் கூறப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தில் cognizability என்று காட்டுகிற offence இல்லை என்பதை மாண்புமிகு திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அதிலே Supreme Court ஒரு தீர்ப்பு அளித்திருக்கிறது. Supreme Court-னுடைய தீர்ப்பின்படி, here, 'this may extend to three years' என்று இருக்கிறது. '3 years and above' என்றுதான் இதனுடைய பொருள். எனவே, 3 years என்ற provision...

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு. விளக்கம், அரை நிமிஷம். '3 years and above' என்று சொன்னால், 3 வருடம் என்றாலே, அந்தப் பொருள் வந்துவிடும் என்று சொல்கிறார். நிச்சயமாக வராது. 'Upto 3 years' என்று இருக்கிறது. உதாரணமாக, தேர்தலிலே நிற்பதற்குத் தடை செய்கின்ற அந்தச் சட்டத்தில் '2 ஆண்டுகள்' என்று இருக்கிறது. ஆகவே, 'இரண்டு ஆண்டுகள்' என்றிருந்தால், 2 ஆண்டுகள் தண்டிக்கப்பட்டாலோ, 2 ஆண்டுகள் மட்டுமே தண்டிக்கப்படக்கூடிய சட்டத்தில் தண்டிக்கப்பட்டாலோ நிச்சயமாக அவர்கள் தகுதி இழப்பதில்லை. 2 ஆண்டுகளுக்கும் மேலே தண்டிக்கப்பட்டால்தான் அவர்கள் அந்தத் தகுதியை இழக்கிறார்கள். Criminal Procedure Code, 173-ன்படி நிச்சயமாக 'it is above 3 years and upto 7 years' அதுதான் Cr.P.C. 173. அதுதான் congnizable offence.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எஸ்.ஆர்.பி. கூறிய அந்த அடிப்படையில் இதுபற்றி நானும் ஆய்ந்தேன். நாங்கள் ஆய்ந்து பார்த்தோம். உச்ச நீதிமன்றம், A.K. Jain and others Vs. Union of India and others' என்ற வழக்கிலே, AIR 1970—Supreme Court, page 277, Division Bench, Supreme Court இதுகுறித்து ஒரு



தீர்ப்பினை வழங்கியிருக்கிறது. அந்தத் தீர்ப்பின் அடிப்படையில், 'upto 3 years' என்றால், 'that is inclusive of the beginning of the 3rd year' என்ற முறையிலே, இதற்கு உட்பட்டு வருகிறது என்று, 'cognizability is being accepted by the Supreme Court in its verdict' என்ற முறையிலே, அது சட்ட ரீதியாகச் செல்லும் என்று நான் அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதைப்போலவே, மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் பேசுகிறபோது, இந்தச் சட்டத்தினுடைய செயல்பாடு, தொழிலாளர் வர்க்கத்தை மிகவும் பாதித்துவிடும் என்பதனை எடுத்துச் சொன்னார்கள். இந்த அரசைப் பொறுத்தவரைக்கும், நாங்கள் பல முறை இந்த அவையிலே தெளிவுபடுத்தியிருப்பதையொட்டி மீண்டும் உறுதியளிக்க விரும்புகின்றேன். இந்த அரசு தொழிலாளர்களுக்காக எல்லாவிதச் சலுகைகளையும், சாதக அணுகுமுறைகளையும் மேற்கொள்ளுமேயொழிய, எந்தநேரத்திலும் தொழிலாளர்களின் நலன்களுக்குப் பாதகமாக எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்காது என்பதனை அவைக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-55

இந்தச் சட்டத்தைக் கொண்டுவருகின்ற காரணத்தினாலேயே, உடனே ஸ்டிரைக் தடை செய்யப்பட்டுவிடும் என்பது பொருளல்ல. மாறாக, இந்தச் சட்டத்தினுடைய 3(1) என்ற பிரிவின்படி, அரசு ஓர் அறிவிக்கையை (Notification) வெளியிடவேண்டும். அப்படி வெளியிடப்படுகின்ற அறிவிக்கைகூட மூன்று மாத காலத்திற்குத்தான் அமலில் இருக்கும். பின்பு தேவை என்று கருதப்படுகிறபோதுதான், அந்த அறிவிக்கையை மீண்டும் நீட்டிக்க முடியும். அரசைப் பொறுத்தவரைக்கும், பொது மக்களின் நலன் கருதி, பொதுச் சொத்தின் நலன் கருதி தவிர்க்க முடியாத நேரத்தில் தொழிலாளர்களின் நலனில் அக்கறையுள்ள மாண்புமிகு அவை உறுப்பினர்கள் போன்றவர்களெல்லாரும்கூட நாட்டின் நலன் கருதி இது தவிர்க்க முடியாத ஒன்று என்று எண்ணுகிறபோதுதான் இந்தச் சட்டம் பயன்படுத்தப்படுமேயொழிய, மக்களுக்கு, தொழிலாளர்களுக்குப் பாதிப்பை உருவாக்கக்கூடிய அளவுக்கு எந்த நேரத்திலும் இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தும் இந்த அரசு என்ற ஐயம் உங்களுக்கு இருக்கவேண்டாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அவைக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

ஏதோ தமிழகத்தில்தான் முதன்முறையாக இப்படிப்பட்ட ஒரு சட்டம் இந்தியத் துணைக் கண்டத்திலேயே எங்கும் இல்லாத அளவுக்கு, எந்தக்

காலத்திலும் இல்லாத அளவுக்கு இந்தச் சட்டம் வந்தது என்ற பொருள்படும்படி மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் பேசுகிறபோது சொன்னார்கள். ஆனால் அப்படியில்லை. இந்தச் சட்டத்தை, இதுபோன்ற ஒரு சட்டத்தை, முதன்முறையாகத் தமிழகத்திலே கொண்டுவருவதற்கு வித்திட்ட கதாநாயக அரசே 1973-லே தமிழகத்தை ஆண்ட திரு. கருணாநிதி அவர்களுடைய தலைமையில் இருந்த தி.மு.க. அரசுதான். 1973-ஆம் ஆண்டு தமிழ்நாடு அத்தியாவசியப் பணிகளைப் பேணிவருதல் அவசரச் சட்டத்தைப் பிறப்பிப்பதற்காக அவர்கள் ஒரு முடிவினை எடுத்து, அப்போது அந்த முடிவின்படி, மைய அரசுக்கு அதை அனுப்பினார்கள். மைய அரசைப் பொறுத்தவரைக்கும், அதிலே சில குறைகள் இருப்பதைச் சுட்டிக்காட்டி, அந்தக் குறைகளைத் திருத்தவேண்டுமென்று அந்த Draft Bill-ஐ மாநில அரசுக்கு மீண்டும் திருப்பியனுப்பினார்கள். அப்படி அதை அனுப்பியபோது அவர்கள் ஒரு ஆலோசனையைச் சொன்னார்கள்.

"The Government of India have suggested that whenever an emergent situation arises and Governor feels that promulgation of an ordinance on the basis of the draft ordinance is necessary, a reference may be made so that the President's instructions under Art. 213 sub-clause 1 may be obtained" என்று எழுதினார்கள். அப்போது எப்படிப்பட்ட முடிவு எடுக்கப்பட்டது என்றால், மைய அரசினுடைய அந்தப் பதிலுக்குப் பிறகு, 'If and when the draft is finalised, the provisions of such bill may be useful for adoption of the State Acts' என்று சொல்லி, 'the draft ordinance may be kept ready for use whenever an emergent situation arises' என்று எழுதி, அதில் அன்றைய முதலமைச்சர் மாண்புமிகு திரு. கருணாநிதி அவர்கள், 15-1-1974-லே கையெழுத்திட்டிருக்கிறார்கள் என்பதனை, மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். ஏதோ இந்த அணுகுமுறை தற்போதுதான் முதன்முதலாக மேற்கொள்ளப்பட்டது என்ற எண்ணம் வேண்டாம் என்பதற்காக இதைச் சொல்கிறேன். அதைப்போலவே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மகேஸ்வரி அவர்கள் பேசுகிறபோது, இது ஒரு கறுப்புச் சட்டம், தொழிலாளர்களுடைய வயிற்றிலே அடிக்கின்ற சட்டம் என்பதைச் சொன்னார்கள். எங்குமே இல்லாத ஒரு சட்டம் இங்கு வந்ததே என்று சொன்னார்கள். 1981-ஆம் ஆண்டு Essential Service Maintenance Act என்பதனை அப்போது உங்களது தேசியப் பேரியக்கம் டெல்லியில்





ஆட்சியில் இருந்தபோது, மத்திய ஆட்சியிலே அவர்களே கொண்டு வந்தார்கள் என்பதனை மாண்புமிகு காங்கிரஸ் பேரியக்கத்தினுடைய உறுப்பினர் மகேஸ்வரி அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)*

*(உறுப்பினர்கள் திரு. கே.சி. கருணாகரன், திரு. போளூர் வரதன், டாக்டர் க. பொன்முடி, திரு. ஜே. ஹேமச்சந்திரன் ஆகியோர் எழுந்து நின்று பேச முற்பட்டனர்.)*

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் முடித்துவிடட்டும். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** Let me conclude. நான் பேசிக் கொண்டிருக்கிறேன் அல்லவா? *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடிக்கட்டும், பேசி முடிக்கட்டும். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...*(குறுக்கீடுகள்)* இல்லை *(குறுக்கீடுகள்)* இருங்கள்; நான்...*(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இருங்கள், நிதியமைச்சர் பேசியதற்குப் பிறகு கேளுங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கருணாகரன் அவர்களும், திரு ஹேமச்சந்திரன் அவர்களும், அவை உறுப்பினர்கள் எழுப்பிய வினாக்களுக்குப் பதில் கூறவேண்டாம் என்று கூறுகிறார்களா? மாண்புமிகு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும், மாண்புமிகு மகேஸ்வரி கூறியதற்குப் பதிலைச் சொல்ல வேண்டாம் என்று சொல்கிறீர்களா? *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், திரு. போளூர் வரதன், உட்காருங்கள். திரு. பொன்முடி, உட்காருங்கள். அமைச்சர் பேசி முடித்ததற்குப் பிறகு கேளுங்கள். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** *மன்னிக்க வேண்டும்; உங்களுடைய (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடித்த பிறகு கேளுங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** நான்...(குறுக்கீடுகள்) நான்...(குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளக்கம் கூறாமல் நான் அமர்ந்து விட்டால், விளக்கம் கூற மறந்து விட்டீர்களே என்று சொல்லி, என்னை நீங்கள் நினைவுபடுத்தலாம்; ஆனால், நான் பேசிக் கொண்டிருக்கிறபோதே, (குறுக்கீடுகள்) நான் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** எனக்கு ஒரு விளக்கம்; அமைச்சரிடமிருந்து---

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், நிதியமைச்சர் பேசி முடிக்கட்டும்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** I am continuing my address. (Interruption) I am continuing my address. நான் விளக்கம் சொல்லவில்லை என்று ஏன் எண்ணுகிறீர்கள்? ஏதோ முதன்முறையாக தமிழகத்திலே இது கொண்டு வரப்பட்டது என்ற கருத்து இருக்க வேண்டாம் என்பதற்காகச் சொல்கிறேன். ஆனாலும்கூட, மைய அரசு அப்படி ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தாலும்கூட, 1991 வரைதான் அது இருந்தது. 1991-லே அதைக் காலாவதியாக விட்டு விட்டார்கள். அதையும் நான் ஒத்துக்கொள்கிறேன். இதைச் சொல்வதற்குக் காரணம், ஏதோ நாங்கள்தான் முதன்முறையாக இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தோம் என்ற எண்ணம் அவைக்கு இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் இதை நான் சொல்கிறேன். நமது மாநிலத்தைப் பொறுத்தவரைக்கும், தற்போது நிலவுகிற நிதி நெருக்கடி எல்லோருக்கும் தெரியும். மாநிலத்தினுடைய ஒட்டுமொத்தப் பொருளாதாரத்தை உயர்த்த வேண்டுமென்றால், அனைத்து மக்களும் கடினமாக உழைக்க வேண்டும். தொழிற்சாலைகளும் செம்மையாகச் செயல்பட வேண்டும்; தொழிலாளர்களும் நிலைமையினைக் கருத்திற்கொண்டு, நாட்டினுடைய நெருக்கடியைக் கருத்திற்கொண்டு ஒட்டுமொத்தப் பொருளாதாரச் செம்மை உருவாவதற்கு அச்சாணிகளாக, ஆணிவேர்களாக இருக்கின்ற உழைக்கின்ற வர்க்கம், இன்னும் சற்று அதிகப் பொறுப்போடு செயல்படக்கூடிய சூழலில்தான், நாம் சந்தித்து வருகின்ற பொருளாதார நெருக்கடி தீர்ந்திடும். Below poverty line என்ற முறையிலே





35 சதவிகிதம் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிற தமிழகத்தில், பணியிலே இருக்கிறவர்கள் பாதுகாப்போடு ஊதியத்தைப் பெற்றுக் கொண்டிருக்கிறவர்கள் பாதிப்புக்கு உள்ளாகக் கூடாது என்பது அரசினுடைய கொள்கைதான். ஆனால், அதே நேரத்தில், வேலையில்லாமல், ஒரு வேளை உணவுகூட முழுமையாகக் கிட்டாமல், வறுமைப் பிணி என்ற நிலையிலே வாழ்கின்ற மக்கள், தமிழகத்தில் 35 சதவிகிதம் பேர் இருக்கிறார்கள். அந்த மக்கள், அமைப்பு சாராத் தொழிலாளிகள் என்ற நிலையிலே இருக்கின்ற மக்கள்: வேலை அறவே கிட்டாத நிலையிலே இருக்கிற மக்கள்; அந்த மக்களினுடைய வாழ்வும் ஒரு நல்ல நிலைக்கு வர வேண்டுமென்றால், தமிழகத்திலே தொழில் அமைதி வேண்டும்; பொருளாதாரச் செம்மை வேண்டும். அதற்குத் தொழிலதிபர்கள் ஒத்துழைக்காத நேரத்தில், கடுமையான நடவடிக்கை எடுக்கத் தயங்காத இந்த அரசு, தொழிலாளர்கள் நலன் பேண நடவடிக்கை எடுக்கிற இந்த அரசு, தொழிலாளிகளுக்கு, உழைக்கும் வர்க்கத்திற்கு ஒரு வேண்டுகோளை விடுக்கிறது. Organised Sector என்று சொல்லக்கூடிய, அமைப்புக்குட்பட்டு இருக்கிற உழைக்கும் வர்க்கத்தினர், தங்களுடைய உழைப்பை இன்னும் சற்று அதிகமாகத் தருகிறபோது, கடமையுணர்வைச் சற்று அதிகமாகக் காட்டுகிறபோது, அதன் பலன், வேலை இல்லாமல் தத்தளிக்கின்ற, வறுமைக் கோட்டின் எல்லைக்குக் கீழே இருக்கின்ற 35 சதவிகித பாமர மக்கள், பரிதவிக்கின்ற மக்களுக்கும் கிடைக்குமென்பதை உணர வேண்டும். தொழில் அமைதி பேணப்பட வேண்டும்; ஒட்டுமொத்தப் பொருளாதாரச் செம்மை தமிழகத்தில் உருவாக வேண்டும்; இக்கட்டான நிதி நெருக்கடியில்--தமிழகத்தில் மட்டுமல்ல; இந்திய அளவிலும் there is an industrial recession; there is an economic recession. Inflationary trend is getting increased day by day என்ற நிலையிலே--ஒரு தொழில் அமைதியை, தொழில் வளர்ச்சியை, பொருளாதார வளர்ச்சியை உருவாக்க, உழைக்கும் வர்க்கத்தினுடைய ஒத்துழைப்பு, எந்தக் காலத்திலும் இல்லாத அளவுக்கு, நிகழ்காலத்திலே, வருங்காலத்திலே அதிகமாக இருக்கிறது என்பதனை நான் அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அப்படி அவர்கள் அதற்கு ஒத்துழைக்க வேண்டுமென்று நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புறத்தில் வாழும் ஏழைகள், அமைப்பு ரீதியில் இல்லாத தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள், குடிசைகளிலே வாழ்கின்ற நகர்ப்புறவாசிகள் ஆகியோருக்குத் திட்டம் தீட்டிச் செயல்படுத்தும் பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. அதை வெற்றிபெறச் செய்யக்கூடிய பொறுப்பு, உழைக்கும் வர்க்கத்தின் கையிலே இருக்கிறது. இந்த புதிய

பொறுப்பை நிறைவேற்றுவதில் நம் அனைவருக்கும் கடமை இருக்கிறது. இதிலே கட்சி பேதங்களுக்கு அப்பால் நின்று, எல்லோரும் உழைக்கும் வர்க்கத்தினுடைய பிரதிநிதிகள்தான் எனச் செயல்பட வேண்டும். உழைக்கும் வர்க்கத்தினுடைய ஆதரவு இல்லாமல் ஆட்சிப் பீடத்திற்கு யாருமே வந்துவிட முடியாது; உழைக்கும் வர்க்கத்தினுடைய நலனைப் பேணத் தவறுகிறபோது, அது ஒரு மாபெரும் குற்றமாகும். அரசு அதை உணருகிறது. உழைக்கும் வர்க்கத்தினுடைய ஒத்துழைப்பு இல்லாமல் ஒட்டுமொத்தப் பொருளாதாரச் செம்மையை நாம் உருவாக்க முடியாது. உழைக்கும் வர்க்கத்திற்குச் சலுகைகளை இந்த அரசு தரும். உழைக்கும் வர்க்கத்தினுடைய நலனைப் பேணக்கூடிய அளவிற்குத் தொழிலாளர் சட்டங்களை, மாண்புமிகு உறுப்பினர் ஹேமா அவர்கள் ஏற்கெனவே எடுத்துச் சொன்னதுபோல, தக்கவாறு திருத்தி, தொழிலாளர்களுடைய நலனைப் பேணுவதற்கும் உரிய நடவடிக்கைகளைக் கட்டாயம் எடுக்கும். ஆனால், சில நேரங்களில்...

முற்பகல் 11-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிதி அமைச்சர், ஹேமா என்பது யார்? ஹேமச்சந்திரனைச் சொல்கிறீர்களா? (குறுக்கீடுகள்) அவருடைய வீட்டிலேகூட இவ்வளவு செல்லமாகக் கூப்பிட்டு இருக்கமாட்டார்கள். (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மன்னிக்க வேண்டும். கிட்டத்தட்ட 30 ஆண்டு காலமாக நட்பு முறையிலே 'ஹேமா, ஹேமா' என்று அவரை அழைத்துப் பழகிவிட்ட காரணத்தால்...(சிரிப்பு) (குறுக்கீடு)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, என்னை அவர் அப்படித்தான் கூப்பிடுவார்; அதனால் சொல்லி இருக்கிறார்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்போலவே இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரைக்கும் ஆந்திர மாநிலத்திலே ஏற்கெனவே இருக்கிறது; இந்தச் சட்டம் கேரள மாநிலத்திலே ஏற்கெனவே நடைமுறையில் இருக்கிறது; இந்தச் சட்டம் கர்நாடக மாநிலத்திலும் இருக்கிறது; இராஜஸ்தான் மாநிலத்திலும் இருக்கிறது; மராட்டிய மாநிலத்திலும் இந்தச் சட்டம் நடைமுறையிலே இருக்கிறது. ஏதோ இந்தியத் துணைக் கண்டத்தில் இப்படி அத்தியாவசியப் பணிகளைப் பேணிப் பாதுகாக்கும் ஒரு சட்டம் தமிழகத்தில்தான் முதன்முறையாகக் கொண்டுவரப்படுகிறது என்ற ஓர் உணர்வு மாண்புமிகு அவை உறுப்பினர்களுக்கு இருக்க வேண்டாம் என்பதற்காகச்



சொல்கிறேன். ஆந்திராவிலே இருக்கிறது இந்தச் சட்டம். கேரள மாநிலத்திலே இருக்கிறது இந்தச் சட்டம், கர்நாடக மாநிலத்திலே இருக்கிறது இந்தச் சட்டம். இராஜஸ்தான் மாநிலத்தில் இருக்கிறது இந்தச் சட்டம்; மராட்டிய மாநிலத்திலேயும் இருக்கிறது. ஆனால், தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும், மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் ஓர் உறுதியினைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு சட்டத்தை நிறைவேற்றிவிடுகிற காரணத்தினாலேயே, அந்தச் சட்டம் தொழிலாளர்களுக்கு, உழைக்கும் வர்க்கத்திற்குப் பாதகமாகப் பயன்படுத்தப்படும் என்ற அச்சம் உங்களுக்கு வேண்டாம் என்பதை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் சார்பிலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நான் ஏற்கெனவே சொன்னேன். இந்தச் சட்டம் வருகிறபோது (குறுக்கீடு) இரண்டே நிமிடத்தில் பேசிவிடுகிறேன்...

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அப்படியென்றால், கதவடைப்புச் செய்கிற முதலாளியை இதிலே ஏன் சேர்க்கவில்லை; சட்டவிரோதமாக லாக்-அவுட் பண்ணும் முதலாளியை ஏன் சேர்க்கவில்லை? அவர்களுக்கு எதிராக இதுமாதிரிச் சட்டம் கொண்டுவர வேண்டுமல்லவா? அதைக் கொண்டுவரவில்லையே?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்களுடைய கருத்து, ஆலோசனை, நல்ல ஆலோசனை. இருக்கின்ற சட்டங்களை வைத்து நாம் கடுமையான நடவடிக்கைகளைத் தொழிற்சாலைகள்மீது எடுக்க முடியும். நம்முடைய தொழிலாளர் வர்க்கம், மிகவும் சக்தி வாய்ந்த தொழிலாளர் வர்க்கம். தொழிலாளர் வர்க்கத்தினுடைய சக்தியே தொழில் அதிபர்களினுடைய தவறைத் தவிடுபொடி ஆக்கிவிடும் என்ற நிலையிலே இருக்கிற காரணத்தினால், உங்கள் உணர்வை நாங்கள் மதிக்கிறோம்; அதை நடைமுறைப்படுத்த தக்க நடவடிக்கைகளை நாங்கள் அவ்வப்போது எடுப்போம்.

இந்தச் சட்டம் மிக ஒரு கறுப்புச் சட்டம் என்றும், கொடுமையான சட்டம் என்றும், தொழிலாளர்களின் கழுத்தை நெரிக்கின்ற சட்டம் என்றும், சிகாகோவில் சிந்திய ரத்தத்தை நாம் மறந்துவிட்டு, பெற்ற உரிமையினைப் பறிக்கலாமா என்றும், Nazist State என்றும், we are moving towards fascism என்றும் மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள் பேசுகிறபோது சொன்னார்கள். அவர்கள் கூறிய கூற்றில் எல்லாம் எந்த அளவிற்குக் குறை கூறினாரோ, facist அணுகுமுறை என்று

சொன்னாரோ, Nazist regime என்று சொன்னாரோ, கறுப்புச் சட்டம் என்று சொன்னாரோ, குரல்வளையை நசுக்குகிற சட்டம் என்று சொன்னாரோ, அந்தக் குற்றச்சாட்டுகளை எல்லாம் அவர்கள் எங்கள்மீது சுமத்தவில்லை; அவர்களது தலைவர் திரு. கருணாநிதி அவர்கள்மீது சுமத்துகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). காரணம், நான் ஏற்கெனவே சொன்னேன். 1974-லேயே அவரே கையெழுத்துப் போட்டு முடிவு எடுக்கப்பட்டு —'as and when necessary, it may be kept ready for use whenever an emergent situtation arises' என்று அவர்களே இட்டு இருக்கிற சட்டம் என்பதனையும் நான் சொல்ல விரும்புகிறேன். அதையடுத்து, 1997 ஆம் ஆண்டு மீண்டும் இந்தச் சட்டத்தைக் கொண்டுவருவதற்கு அன்றைய தி.மு.க. அரசு நடவடிக்கையை மேற்கொள்கிறது. அப்போது, 'தற்போதுள்ள சூழ்நிலையில் மாநில அரசுக்கு இன்றியமையாப் பணிகளில் ஏற்படக்கூடிய வேலைநிறுத்தங்கள் தொடர்பாக உரிய நேரத்திலும், செவ்விய வகையிலும் நடவடிக்கை மேற்கொள்வதற்குப் போதுமான அதிகாரங்கள் மாநில அரசு பெற்று இருக்க வேண்டியது அவசியமாகும்'. இது மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள், 27-12-1997-லே அவர்களே கையெழுத்திட்டு--கோப்பிலே கையெழுத்திட்டு மேற்கொண்ட முடிவாகும்.

*முற்பகல் 11-10*

'தற்போது மாநில அரசுக்கு இன்றியமையாப் பணிகளிலே ஏற்படக்கூடிய வேலைநிறுத்தம் தொடர்பாக, உரிய நேரத்திலும் செவ்விய வகையிலும் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்குப் போதுமான அதிகாரங்களை அரசு பெற்று இருக்க வேண்டும் என்ற நோக்கில் இந்தச் சட்டத்தைக் கொண்டு வரலாம்' என்று குறிப்பிட்டு, கையெழுத்திட்டு, அப்போது அதை நடைமுறைக்குக் கொண்டு வராமல், விட்டுவிட்டார்கள். அவர்கள் எத்தகைய ஒரு சட்டமுன்வடிவை, திரு. கருணாநிதி அவர்கள் அந்தக் குறிப்பில் 27-12-1997-லே அனுமதித்துக் கையெழுத்திட்டார்களோ, அதில் ஒரு வரிகூட மாற்றாமல், அந்தச் சட்டத்தைத்தான் இந்த அரசு தற்போது இன்று தாக்கல் செய்திருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதனை நான் அவைக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அந்தச் சட்டத்தில்தான், "Any Public Services and posts in connection with the affairs of the State, and also persons appointed to the Secretarial staff of the State Legislative Assembly and the officers and servants of the High Court" என்ற பிரிவும் (குறுக்கீடு) நான் பேசி முடித்து விடுகிறேன், முடித்து விடுகிறேன். ஒரே நிமிடம்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசி முடித்து விடட்டும். (குறுக்கீடு) டிராஃப்ட் போட்டார்கள் என்று சொல்கிறார். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை, இல்லை. அவர்கள் போட்டு, டிராஃப்ட் approval வாங்கி (குறுக்கீடு) இல்லை, இல்லை. அதைத்தான் சொல்கிறேன். (குறுக்கீடு) முயற்சி எல்லாம் இல்லை. முயற்சி இல்லை. நான் சொல்கிறேன், கேளுங்கள். (குறுக்கீடு) மன்னிக்க வேண்டுகிறேன். அதைத்தான் நான் சொல்கிறேன். போட்டு, அனுமதியைப் பெற்று, 'as and when necessary'—தேவையான நேரத்தில் இதைப் பயன்படுத்தலாம்' என்று ஆணையிட்டு—(குறுக்கீடு) மன்னிக்க வேண்டுகிறேன்—ஆணையிட்டு, அந்த அடிப்படையில் ஒரு டிராஃப்ட்டை அவர்கள் தயார் செய்தார்கள். அந்த டிராஃப்ட்டில்தான், இப்படி மாண்புமிகு உறுப்பினர் எஸ்.ஆர்.பி. அவர்கள் சொன்ன, "any person, who instigates, or incites other persons to take part in, or otherwise acts in furtherance of, a strike which is illegal under this Act, shall on conviction, be punished with imprisonment for a term which may extend to 3 years, or with fine which may extend to five thousand rupees, or with both" என்று இந்த ஷரத்தினையும், "If the Government are satisfied that in the public interest or in the interest of the public order, it is necessary or expedient so to do, they may, by general or special order, prohibit strikes in such essential service and from such date as may be specified..." என்று சொல்லி தற்போது கொண்டு வந்திருக்கிற சட்டமுன்வடிவைப் பொறுத்தவரைக்கும், இதிலே இருக்கிற "A to Z" இருக்கிற அத்துணை ஷரத்துக்களும் முன்பே தயாரிக்கப்பட்டு, அதற்கு ஒப்புதல் அளித்து, முன்னாள் முதலமைச்சர் 27-12-1997-லே ஒப்புதல் அளித்து, 'தேவையான நேரத்தில்--தேவையான நேரத்தில் தற்போது மாநில அரசுக்கு இன்றியமையாப் பணிகளில் ஏற்படக்கூடிய வேலைநிறுத்தம் தொடர்பாக, உரிய நேரத்திலும், செவ்விய வகையிலும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் போதிய அதிகாரங்கள் மாநில அரசு பெற்று இருக்க வேண்டும். தேவையான நேரத்தில் இதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்' என்று அவர்கள் முடிவு செய்து, தயாரித்து, ஒப்புதல் அளித்த (குறுக்கீடு) சொல்லி முடித்து விடுகிறேன். ஒப்புதல் அளித்த இந்த ஷரத்துக்களுக்குத்தான் இந்த அரசு தற்போது சட்டமுன்வடிவம் தருகிறது. (குறுக்கீடு) வேண்டாம், வேண்டாம். அமைதியாக இருங்கள், சட்டமுன்வடிவம் தருகிறது. எதற்காகச் சொல்கிறேன் என்றால், இதை நான் சுட்டிக்காட்டுவதற்கான காரணத்தை மாண்புமிகு பொன்முடி அவர்களுக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அந்தத் தேதியில், 27-12-1997-லும், அதைப்போல (குறுக்கீடு) முடித்து விடுகிறேன்;

1974-லும், இரண்டு முறையிலும், இந்தக் கோப்புகளில் இந்த ஷரத்துகளைக் கொண்டுவந்தபோது தொழிலாளர்களுடைய கழுத்தை உங்களது தலைவர் நெரிக்க வேண்டுமென்ற முடிவை அப்போதே எடுத்து இருந்தார். தொழிலாளர்களுடைய வயிற்றிலே அடிக்க வேண்டுமென்ற முடிவை, fascist regime-ஆக, fascist அணுகுமுறையிலே, nazist regime-ஆக அவர் காலத்திலே எடுக்கப்பட்டது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். ஆனால் ஓர் உத்தரவாதத்தை அவைக்கு நான் தருகிறேன். இந்த அரசைப் பொறுத்தவரைக்கும்..

**திரு. துரைமுருகன்.** தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசி முடித்து விடட்டும். முடித்து விடட்டும், உங்களைக் கூப்பிடுகிறேன். நானே உங்களை அழைக்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** ஒரு நிமிடம். நான் முடித்து விட்டேன். I am concluding. ஆனால், இதை நான் சுட்டிக்காட்டுவதற்குக் காரணம், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசைப் பொறுத்தவரைக்கும், நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, தமிழகத்திலே இருக்கிற இன்றைய பொருளாதாரத் தொய்வு, அதிகப்படியான வறுமைப் பிணி, 35 சதவிகிதம் மக்களுக்குமேல் வறுமைக் கோட்டின் எல்லைக்குள் வாழ்கிற நிலைமை; தொழில் அமைதியினுடைய முக்கியத்துவம், Industrial recession, Economic recession என்ற ஒரு அவல நிலை. அதை மேம்படுத்தவேண்டிய கட்டாய நிலை, அமைப்பு சார்ந்த தொழிலாளர்களைவிட, அமைப்பு சாராத் தொழிலாளர்கள் கிட்டத்தட்ட 90 சதவிகிதத்திற்கும் மேல் அதிகம் இருக்கின்ற காரணத்தால் அந்தப் பாமர, வேலையின்றித் தத்தளிக்கின்ற மக்களுக்கு வேலைவாய்ப்பு ஆகியவை கிடைத்திட, உழைக்கும் வர்க்கம் தங்கள் பணிகளை இன்னும் அதிகப்படுத்த வேண்டும். உழைக்கும் வர்க்கத்திற்கு இந்த அரசு என்றும் உறுதுணையாக இருக்கும். பொது மக்களின் நலன் கருதி, ஏழைகளின் நலன் கருதி உங்களைப் போன்ற உறுப்பினர்களின் எண்ணத்திற்கு மாறாகச் செல்லாமல், மக்களின் நலன் காக்கும் முறையிலே இந்தச் சட்டம் தேவையான நேரத்தில், பயன்படுத்தப்படுமேயொழிய, உழைக்கும் வர்க்கத்திற்குப் பாதகமாக இந்தச் சட்டத்தின்மூலம் அதிகாரத்தைத் தன்னிச்சையாக அரசு கையிலே எடுத்துக்கொண்டு செயல்படுத்தாது என்பதைச் சொல்லி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தர வேண்டுகிறேன்.



*முற்பகல் 11-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துரைமுருகன்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இத்தகைய ஒரு சட்டத்தைத் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கொண்டு வருவதற்கு நினைத்தார்கள்; அதை அன்றைக்கு ஆயத்தப்படுத்தினார்கள்; தேவை என்றால் அதைப் பிரயோகப்படுத்தலாம் என்று இருந்தார்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, தேவை என்றால் அதை இப்படிப் பயன்படுத்தலாம் என்று நினைத்திருந்தார்கள் என்று சொன்னார்கள். ஒரு ஆட்சியிலே நினைத்ததாகக்கூட இருக்கட்டும். இப்போது அந்தச் சட்டத்தை, அன்றைக்கு நினைத்ததைச் செயல்வடிவம் கொடுத்து, ஒரு சட்டமாக்க வேண்டிய அவசியம் என்ன இப்போது வந்து இருக்கிறது? இப்பொழுது என்ன தலைமுழுகிப்போய் விட்டது? இரண்டாவது, ஒரு ஆட்சியிலே, அந்த ஊரிலே இருக்கிறது, இந்த ஊரிலே இருக்கிறது, எனக்கு முன்னால் இருந்தவர்கள் கொண்டு வந்தார்கள் என்பது அல்ல. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே கொண்டு வந்தார்கள், காங்கிரசிலே செய்தார்கள் என்பது அல்ல. நீங்கள் என்ன செய்தீர்கள் என்பதைப் பார்க்க வேண்டுமே தவிர. அவர்கள் கொண்டு வந்தார்கள், காங்கிரசிலே சொன்னார்கள்' தி.மு.க. நினைத்தது என்று—நாங்கள் நினைத்தோம் என்று—சொன்னார். ஆனால் நீங்கள் அதற்குச் செயல்வடிவம் கொடுப்பதற்கு முன்வந்திருக்கிறீர்கள். நினைப்பை மாற்றிக்கொண்டு நாங்கள் நிறுத்தி விட்டோம். ஆனால், அந்தத் திட்டத்தை இப்படிச் சட்டமாகக் கொண்டுவரவில்லை. அதை நினைத்த மாத்திரத்திலேயே அங்கேயே பைலோடு முடித்துவிட்டோம். ஆனால், நீங்கள் சட்டமன்றம் வரையிலே கொண்டு வந்து, இந்தச் சட்டத்தை நிறைவேற்றி, தொழிலாளர் வர்க்கத்தைப் பழி வாங்குவதற்கு—நாங்கள் கத்தி வாங்கலாம் என்று நினைத்தோம். வாங்கி வெட்டிவிட்டீர்கள் நீங்கள். (குறுக்கீடு) வெட்டப் போகிறீர்கள்; வெட்டப் போகிறீர்கள். ஆகையினாலே, எங்களுடைய நினைப்பு குற்றமாகாது, சட்டத்தில். ஆனால், செய்கை குற்றமாகும். எனவே, தொழிலாளர் வர்க்கத்திற்கு ஒரு குற்றம் இழைத்தவர்கள் நீங்களாவீர்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் பதில் சொல்லட்டும்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நினைப்பு என்று சொன்னார். நினைப்பு மட்டும் அல்ல. கோப்பிலும் உத்திரவிடப்பட்டு

விட்டது. Draft Bill-ம் தயாரிக்கப்பட்டுவிட்டது. ஆனால், தேவையான நேரத்தில் அதைப் பயன்படுத்தலாம் என்று முடிவெடுத்தீர்கள். நீங்கள் பயன்படுத்தவில்லை, ஒத்துக்கொள்கிறேன். நீங்கள் பயன்படுத்தாத காரணம், அந்தப் பெருமை உங்களைச் சேராது. அதைப் பயன்படுத்த வேண்டாத அளவிற்கு, பொது மக்களின் நலன் கருதி, நாட்டின் நலன் கருதி, உங்களுக்கு அந்தத் தொல்லையைத் தராமல் இருந்த எதிர்க்கட்சியான புரட்சித் தலைவியினுடைய கட்சிக்கும், மற்றவர்களுக்கும்தான் அந்தப் பெருமை சேருமே ஒழிய, அந்தப் பெருமை உங்களுக்குச் சேராது. *(சிரிப்பு)*

**திரு. துரைமுருகன்:** நாட்டு நலன் கருதி, இந்த எதிர்க்கட்சிகள் எல்லாம் சொல்லுகின்ற இந்தக் கோரிக்கையை ஏற்று, நாட்டு நலனை வைத்து இந்தச் சட்டத்தை, நீங்களும்—கலைஞர் எதிர்க்கட்சியை மதித்து, அந்தச் சட்டத்தை கொண்டுவருவதைக் கைவிட்டதைப்போல், நீங்களும்—இந்த எதிர்க்கட்சிகள் சொல்வதையெல்லாம் கேட்டு, மதித்து, இந்தச் சட்டத்தைக் கைவிட்டால் நானே உங்களைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். *(குறுக்கீடு)*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, செம்மலை சொல்லிவிடட்டும்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக் காலத்தில் வந்திருக்குமேயானால் அது ** இருந்து இருக்கும். ஆனால் இந்தச் சட்டம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்திலே வருவதாலே ** இது மக்களுடைய பாதுகாப்புக்காகப் பயன்படுமே தவிர, தொழிலாளர்களுடைய நலனுக்கு எதிராக நிச்சயமாகப் பயன்படாது என்ற உத்தரவாதத்தைத்தான் நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் இங்கே சபையிலே தெரிவித்திருக்கிறார். *(குறுக்கீடு).*

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் செம்மலை சொல்கிறார். இந்தச் சட்டம் கிடைத்து இருந்தால் தி.மு.க. கையிலே ** இருந்து இருக்கும் என்று. எங்கள் கையிலே வந்திருந்தாலாவது ** இருக்கும். நீங்கள் ** போயிருக்கும். *(குறுக்கீடு)*

*முற்பகல் 11-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி. *(குறுக்கீடு)*

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.





**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொல்வது....

**திரு. துரைமுருகன்:** ** என்றால் என்ன?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்பது ஒன்றும் தவறல்ல. ** பயன்படுத்தித் தீரவேண்டும். *(குறுக்கீடு)* ** என்று சொல்வது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. *(குறுக்கீடு)* ஏற்கெனவே பேசப்பட்டுவிட்டது. சட்டமுன்வடிவின் மேலே பேசப்பட்டுவிட்டது. எல்லாக் கருத்துகளும் சொல்லப்பட்டு விட்டன.

**திரு. துரைமுருகன்:** 'ஆளை' என்று சொன்னது வேண்டுமானால் வேண்டாம்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அந்த இரண்டையும் நீக்கிவிட்டால் பிரச்சினை இருக்காது.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டையுமே நான் நீக்கிவிடுகிறேன். ** இரண்டும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கோரிக்கையைத் தெளிவாக வைத்தோம். இந்தச் சட்டம் தொழிலாளர்களுடைய குரல்வளையை நெரிக்கிற சட்டம். இந்தச் சட்டம் அரசுப் பணியாளர்களுடைய குரல்வளையை நெரிக்கின்ற சட்டம். ஜனநாயக உரிமைகளைப் பறிக்கின்ற சட்டம். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி, உட்காருங்கள். நான் கூப்பிடுகிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அதுமட்டுமல்ல, இந்திய அரசியல் சட்டத்திற்கு எதிரான சட்டம் என்று சொன்னோம். அமைச்சரவர்கள், மத்தியிலே நிறைவேற்றியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். மத்தியிலே நிறைவேற்றப்பட்ட சட்டம் கைவிடப்பட்டு நீண்ட காலமாகி விட்டது. அவரே ஒப்புக்கொண்டார்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

[திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்] [2002 மே 10

ஒருபோதும், இந்தியாவிலே எங்கேயும் நிறைவேற்றப்படாத சட்டம் என்கிற சொல்லை நான் பயன்படுத்தவே இல்லை. தமிழ்நாட்டிலே முதன்முறையாக இப்போதுதான் இந்தச் சட்டத்தை நிறைவேற்றுகிறீர்கள். முன்பு கொண்டுவரப்பட்டபோது, அது குரல்வளையை நெரிக்கின்ற சட்டம் என்று சொன்னால், இன்றும் நிச்சயமாக ஜனநாயக உரிமைகளைப் பறிக்கின்ற சட்டமாக அந்தச் சட்டம் இருக்கிறது. தொழிலாளர்களுடைய குரல்வளையை நெரிக்கின்ற, அரசுப் பணியாளர்களுடைய குரல்வளையை நெரிக்கின்ற அந்தக் கறுப்புச் சட்டத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று நாங்கள் கோரிக்கை வைத்தோம். அந்தக் கோரிக்கையை ஏற்காமல், நிறைவேற்ற முற்படுகின்ற காரணத்தால், தமிழ் மாநில காங்கிரஸ் வெளிநடப்புச் செய்கிறது.

*(தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)*

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அந்தச் சட்டம் என்று சொல்கிறார். அப்படியென்றால், அந்தத் தொழிலாளிகளை வரவழைத்து அல்லது பிரச்சினைக்குரிய ஆட்களை வரவழைத்துப் பேசி ஒரு முடிவை ஏற்படுத்துவதற்குப் பதிலாக, அவர்களே, அரசினுடைய கையிலே ** உழைப்பாளி மக்களைப் பயமுறுத்தக்கூடிய ** என்ற முறையிலே உள்ள ஒரு சட்டத்தை நீங்கள் நிறைவேற்றுவதற்கு முயற்சிப்பதை நாங்கள் கடுமையாக ஆட்சேபித்து வெளிநடப்புச் செய்கிறோம்.

*(மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)*

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் விரோதச் சட்டத்தை நியாயப்படுத்துகிற வகையிலே நிறைவேற்றுவதற்கு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்திருக்கிறார்கள். இது ஜனநாயகத்திற்கு விரோதமான ஒரு சட்டம். இது தொழிலாளர்களைப் பாதிக்கக்கூடிய ஒரு சட்டம். இந்தச் சட்டத்தைக் கண்டித்து, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக வெளிநடப்புச் செய்கிறோம்.

*(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)*

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



2002 மே 10]

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே உரிமைக்காகப் போராடும்போது, வேலைநிறுத்தம் செய்தல் என்பது தொழிலாளர்களுடைய பிறப்புரிமை. அது அவர்கள் போராடிப் பெற்ற உரிமை. அந்த உரிமையை நசுக்குகின்ற வகையில் தொழிலாளர் வர்க்கத்திற்கு எதிராக இந்த அரசு போர் தொடுத்திருக்கிறது. எனவே இந்த அக்கிரமத்திற்குத் திராவிட முன்னேற்றக் கழகம் துணை போகாது என்ற காரணத்தால், நாங்களும் வெளிநடப்புச் செய்கிறோம்.

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி யசோதா, (குறுக்கீடு) பொன்முடி அனுமதிக்க முடியாது. யசோதா, உட்காருங்கள், பொன்முடி, உங்கள் தலைவர் போனதற்குப் பிறகு கேட்கக்கூடாது. முறையல்ல. (குறுக்கீடு) திருமதி யசோதா, சொல்லுங்கள்.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு இல்லாத ஒரு சட்டமாக இன்றைக்கு நிறைவேற்ற இருக்கின்றபோது, நீங்கள் தொழிலாளர்களுக்குப் பாதகமாக இது இருக்காது என்று உத்தரவாதம் கொடுத்தாலும்கூட, உங்களுக்குப் பின்னாலே வருகிறவர்கள் இந்தச் சட்டத்தை நிச்சயமாகத் தவறாக பயன்படுத்தக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கிற காரணத்தால், இந்தச் சட்டத்தினுடைய கடுமையைக் கண்டித்து நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யசோதா, எங்களுக்குப் பின்னால் யாரும் வரமாட்டார்கள் என்பது நம்பிக்கை. (மேசையைத் தட்டும் ஒலி)

*(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)*

**திரு. கே.என். இலட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை எதிர்த்து, பாரதிய ஜனதா கட்சி வெளிநடப்புச் செய்கிறது.

*(பாரதிய ஜனதா கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)*

*முற்பகல் 11-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 8 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 8 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.



**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு அத்தியாவசியப் பணிகளைப் பேணிவருதல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/2002) நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (இ) தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் பற்றிய சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் பற்றிய சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/2002). மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் பற்றிய சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/2002) @ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கக்கூடிய அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கும்

@ 9-5-2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

சேர்த்து ஒரு திருத்தத்தை இப்பொழுது அரசு கொண்டு வந்து இருக்கிறது. அரசுக் கலைக் கல்லூரிகளிலே கல்வி அளித்தலைத் திறம்பட நிருவகிக்கவும், அக்கல்லூரிகளின் உள்கட்டமைப்புகளை மேம்படுத்தத் தேவையான நிதியினை மைய அரசு முகமைகளிலிருந்து பெறுவதற்காகவுமே இந்த ஒரு திருத்தத்தைக் கொண்டு வருவதாக நம்முடைய அமைச்சரவர்கள் தன்னுடைய நோக்க விளக்கவுரையிலே இங்கே விளக்கியிருக்கிறார்கள். ஏற்கெனவே பல்கலைக்கழகங்கள் பல கல்லூரிகளை உள்ளடக்கிக் கொண்டு இருக்கிற நேரத்தில், இந்த அரசுக் கல்லூரிகள் தனியாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. அப்படி இருந்தும்கூட, வேலைப்பளு குறைவாக இருக்கிற காலகட்டத்திலேயே நிறைய முறைகேடுகள் சென்னைப் பல்கலைக்கழகத்திலேயே நடந்து இருக்கின்றன. உதாரணமாக, 127 Lecturers-ஐப் போடுகிறபோது, அதிலே பெரிய முறைகேடுகள். அதேபோல Computer Education, Certificate Course கொடுப்பதிலே ஏற்கெனவே ** என்பவரை இவர்கள் சஸ்பெண்டு செய்துவிட்டு, இப்போது 6 கோடி ரூபாய் அளவில் பெரிய ஊழல் நடந்திருக்கிறது. மூன்றாண்டுகளுக்கு முன்னாலே, Engineering Course-லே 2400 மார்க் எடுத்தால்தான் ஒரு மாணவன் பாஸ் என்று சொன்னால், அரை மார்க்கைப் போடுவது என்ற முறையிலேகூட பல முறைகேடுகள் நடந்து, அது தன்னாட்சி பெற்ற ஒரு நிறுவனம் என்ற காரணத்தால் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படாமல், அவர்களே சர்வாதிகாரப் போக்கோடு நடந்து கொண்டு கொள்ளையோ கொள்ளை என்று அடித்துக்கொண்டிருக்கிற இந்தப் பல்கலைக்கழகங்களுக்கு இன்னும் நாம் வேலைப்பளுவைக் கொடுக்கிறபோது, எப்படி இது சரியாக வரும் என்று எனக்குத் தெரியவில்லை. அரசுக் கல்லூரிகளிலே பணியாற்றிக் கொண்டிருக்கிற பேராசிரியர்கள் மற்றும் அங்கிருக்கக்கூடிய ஊழியர்கள் எல்லாம் இவர்கள் உரிமைகள் பறிக்கப்படும் என்ற ஒரு அச்சத்தோடு இருக்கிறார்கள். இரண்டாவது, பல்கலைக்கழகங்களோடு இந்தக் கல்லூரிகளை இணைக்கிறபோது, இப்பொழுது அரசுக் கல்லூரிகளில் குறைந்த fees; சில காலேஜஸ்-க்குப் போனால், நிறைய fees. University-லே high fees.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சில குற்றச்சாட்டுகளை, சில allegations-ஐச் சொல்கிறார். அதைச் சொல்கிறபோது, அதற்குரிய ஆதாரங்களைத் தந்துதான் சொல்ல வேண்டுமேயொழிய, அவர்களை நீக்கிவிட்டார்கள், இவர்களை நீக்கி விட்டார்கள் என்று பெயரையெல்லாம்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



சொல்லி, ஊழல் நடந்திருக்கிறது, 6 கோடி, 7 கோடி என்று சொல்கிறார். ஆகவே, இவற்றையெல்லாம் நீங்கள் அவைக் குறிப்பிலே ஏற்றக்கூடாது. அவர் அதற்கான ஆதாரங்களைக் கொடுத்தார் என்றால், அப்படிக் குறைபாடுகள் இருந்தால் இந்த அரசு அதைக் கவனித்து, தக்க நடவடிக்கையை எடுக்கும் என்று சொல்ல விரும்புகிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏன் இந்த அளவுக்கு ஆத்திரப்படுகிறார்கள் என்று தெரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆத்திரம் இல்லை. அவையினுடைய நடவடிக்கைகள் அப்படி. (கூச்சல்-குழப்பம்)

**திரு. சி. ஞானசேகரன்:** I have got every right to rebut it. If you want, you can ask. We can prove. இந்த மாதிரிக் கூச்சல் போட எனக்கும் தெரியும். இந்த மாதிரிக் கூச்சல் எனக்கும் போடத் தெரியும். நான் இதையெல்லாம் போட்டவர்களைப் பார்த்திருக்கிறேன். நீங்களெல்லாம் புதிதாக வந்திருக்கிறீர்கள். பார்த்திருக்கிறேன் நான் எவ்வளவோ.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஞானசேகரன் அவர்கள், எதுவாக இருந்தாலும் பரவாயில்லை. விதிமுறைகளை நீங்கள் நன்றாக அறிந்தவர்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** ஆதாரம் இருக்கிறது. ஆதாரத்தையே முன்னிறுத்திப் பேசவில்லை. சில முறைகேடுகளைச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சில முறைகேடுகள் என்று பேசலாம்.

**திரு. சி. ஞானசேகரன்:** சில முறைகேடுகளைத்தான் சொல்கிறேன். நான் ஊழல் என்ற வார்த்தையைப் பயன்படுத்தவில்லை. முறைகேடுகள் என்று சொல்லுகிறேன். குறைபாடுகளைச் சொல்லாமல் நான் பேச வேண்டுமென்று சொன்னால், பிறகு எதைப் பேசுவது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குறைபாடுகளைச் சொல்லுங்கள். (குறுக்கீடு) முறைகேடுகள் நடந்தன என்று சொல்லுங்கள். பெயர்களைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டாம்.

**திரு. சி. ஞானசேகரன்:** பெயரை வேண்டுமானால் எடுத்துவிடுங்கள். ** என்ற பெயரை எடுத்து விடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்தப் பெயர் நீக்கப்படுகிறது. கல்வி அமைச்சர் அதைத்தான் சொன்னார். நீங்கள்தான் ரொம்பக் கோபப்படுகிறீர்கள். கல்வி அமைச்சர் கோபப்படவில்லை. அந்தப் பெயரைத்தான் நீக்கவேண்டுமென்று சொன்னார். அந்தப் பெயர் நீக்கப்படுகிறது.

*முற்பகல் 11-30*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் எதற்காக இதைச் சொல்ல வருகிறேன் என்று சொன்னால், ஏற்கெனவே ஒரு குறிப்பிட்ட அளவு பளு வைத்திருக்கிறபோதே இந்த அளவிற்கு முறைகேடுகளை நம்மாலே தடுத்து நிறுத்த முடியவில்லை. சட்டமன்றத்திலே நாங்கள் பல முறை இதைப் பேசியிருக்கிறோம். பேசியும்கூட அந்தக் காலகட்டத்திலும் நடவடிக்கை எடுக்கவில்லை. இப்போதும் எடுக்காமல், தன்னாட்சி நிறுவனம் என்ற பெயரால் இன்னும் அப்படியே இந்த Computer course, அதாவது சாதாரணமாக ஒரு Private agency கொடுக்கக்கூடிய Computer course, நடத்தக்கூடிய ஒரு Certificate Course-ஐ நடத்திவிட்டு, ஒரு மாணவரிடம் 16 ஆயிரம் ரூபாய் என்று வசூல் செய்து இன்று பெரிய அளவிலே நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அது ஒரு University-யினுடைய வேலையே இல்லை. அப்படித் தேவையில்லாத வேலையையெல்லாம் தன்னாட்சி நிறுவனம் செய்து கொண்டிருக்கக்கூடிய நிலையில் இவர்களையே கட்டுப்படுத்த முடியாதபோது, நீங்கள் இந்தக் கல்லூரிகளையெல்லாம் கொண்டுபோய்--அரசுக் கல்லூரிகளை--இணைத்துவிடுவோம் என்று சொன்னால், அங்கே பணியாற்றக்கூடிய ஊழியர்களுக்குப் பாதுகாப்பின்மை வந்துவிடுகிறது என்று அச்சப்படுகிறார்கள்.

இரண்டாவது, fees structure அதிகமாகப் போகிறது. அரசுக் கல்லூரியிலே ஒரு ஏழை மாணவன் ஓரளவு பணத்தைச் செலுத்திவிட்டுப் படிக்க முடிகிறது. ஆனால், in all Universities அந்த fees ரொம்ப அதிகமாக வசூலிக்கப்படுகிற காரணத்தினாலே அதிலே அது பெரிய அளவிலே பாதிப்பு ஏற்படுத்துகிறது என்று மாணவர்களும் அஞ்சுகிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட அச்சத்திற்கு இடமில்லாமல் மாண்புமிகு அமைச்சர்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





அவர்கள் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய கருத்தை வலியுறுத்தி, நான் அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக் கல்லூரிகளை யுனிவர்சிட்டியுடன் இணைப்பது குறித்து வந்திருக்கின்ற இந்தச் சட்டமுன்வடிவை நான் வரவேற்கின்றேன். University Cadre என்பது தனி; Service Cadre என்பது தனி. ஓய்வு பெறும் வயது, அகில இந்திய ரீதியிலேகூட 60 என்றும், மத்திய பல்கலைக்கழகங்களுக்கு 62 என்றும், கல்லூரி விரிவுரையாளர்கள் மற்றும் ரீடர்களுக்கு 58 என்றும் கொடுக்கப்பட்டிருக்கின்ற சூழ்நிலையில், பல்கலைக்கழகத்தில் முதல் பணி விரிவுரையாளர்கள், அவர்கள் மட்டுமே பி.எச்.டி. இல்லாமல் பணியில் அமர்த்தப்படலாம். கல்லூரியில் விரிவுரையாளர்கள் முதல் கல்லூரி முதல்வர்கள் வரை, பி.எச்.டி. இல்லாமலேயே வரமுடியும். பல்கலைக்கழகத்தில் ரீடர்கள், பேராசிரியர்கள், பி.எச்.டி. இல்லாமல் வரவே முடியாது. காலேஜில் 100 பேர் இருப்பதாக வைத்துக்கொண்டால், அதில் 10 பேர்தான் பி.எச்.டி. ஆக இருப்பார்கள். 90 பேர் பி.எச்.டி. ஆக இல்லாதவர்களாக இருப்பார்கள். ஆனால், பல்கலைக்கழகத்தில் முழுக்க, முழுக்க, நேர்மாறாக இருக்கும். 100 பேருக்கு, குறைந்தபட்சம் 90 பேராவது பி.எச்.டி.யாக இருப்பார்கள். பல்கலைக்கழகத்தில் முதன்மையானது ஆராய்ச்சிதான். அடுத்ததுதான் teaching. கல்லூரியில் முதன்மையானது teaching. அடுத்ததுதான் ஆராய்ச்சி. துவக்கமே சரியாக இல்லையென்றாலும்கூட, இரண்டையும் சமநிலைப்படுத்துவதாக இருந்தாலும், அதற்குக்கால அவகாசம் தேவை. அவசரப்பட்டு உடனடியாக முடிவுக்கு வருவது சிறப்பாக இருக்காது. Cadre மாறுவதால் சம்பளமும் மாறுகிறது. பல்கலைக்கழகத்தில் இணைப்பதனால் பல பலன்கள் உண்டு. கல்லூரியில் பாடம் நடத்தாமலேயே மாணவர்களைக் கண் ஜாடை காட்டிவிட்டு, வெளியேற்றிவிட்டு, மாணவர்கள் இல்லை, அதனால் போதிக்க முடியவில்லை என்ற நிலை மாறுபடும். மாதாமாதம் விரிவுரையாளர்களோ, ரீடர்களோ, அவர்கள் நடத்திய பாடங்களைப் பற்றியும், அந்த நிலைகளைப் பற்றியும் யுனிவர்சிட்டிக்குத் தெரிவித்து, அவர்கள் வருடத்திற்கு ஒரு முறை பெயர், அவர்களின் ஆராய்ச்சி வெளியீடுகள், சாதனைகள் அனைத்தையும் ஆண்டறிக்கையாக வெளியிடுவதால், பணி புரியும் ரீடர்கள், விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள், கட்டாயம் தாங்கள் ஏற்ற பணியை முடிக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப்படும்போது கல்வியினுடைய தரம்

உலக அரங்கில் உயரும் என்பதில் சந்தேகம் இல்லை. இதுபோன்ற நடைமுறை கல்லூரிகளில் கிடையாது. தனியார் கல்லூரிகளில் ஏன் பேராசிரியர்களைக் கடுமையாகப் பழி வாங்குகிறார்கள் என்று சொன்னால், அது மாணவர்களின் தேர்ச்சிக்காக என்பதோடு மட்டுமல்லாது, மற்ற கல்லூரிகளுடன் போட்டி போட்டுச் சாதிக்க வேண்டும் என்ற எண்ணமேயாகும். இது அரசுக் கல்லூரிகளில் கிடையாது. அரசுக் கல்லூரிகளில் எப்படியிருக்கிறது என்று சொன்னால், 'பாப்பாத்தி அம்மா, மாடு வந்தால் பார்த்துக்கொள்' என்பதைப்போல்தான் இன்றைக்கு இருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். சம்பளம் மாணவர்களுக்கு அதிகமாகிவிடும் பல்கலைக்கழகத்துடன் இணைத்தால் என்கிற வாதம் பத்தாம் பசலிக் கொள்கை எனக் குறிப்பிட விரும்புகிறேன். சம்பளம் பல்கலைக்கழகம் நிர்ணயிக்கும்போது, நிதித் துறைச் செயலாளர், கல்வித் துறைச் செயலாளர், ஆசிரியர் பிரதிநிதிகள் அனைவரும் அமர்ந்து பேசி, முடிவெடுக்கவேண்டிய ஒன்று என அறிகிறேன். ஆகையால், மாணவர்களுக்கு எந்தவிதமான பாதகமும் இதனால் ஏற்படுவதற்கில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன். 69% பல்கலைக்கழகத்தில்தான் கொடுக்கப்படுகிறது. 'SpecialQuota - Ex-servicemen, Freedom Fighters' வாரிசுதாரர்கள், கலைஞர்கள், இவர்களுக்கெல்லாம் தனித் தனி ஒதுக்கீடு பல்கலைக்கழகத்திலே இருக்கிறது. ஆசிரியர்கள் வேலையை இழப்பார்கள் என்ற பீதி இருக்கிறது. ஜனநாயகத்தில் பணியில் உள்ளவர்கள் எப்படிப் பணியிலிருந்து போக முடியும்? ஆசிரியர்கள் வேலை செய்யாமல் இருக்க முடியாது பல்கலைக்கழகத்தில் இணைந்தால் என்பது மட்டும் உண்மை.

*முற்பகல் 11-35*

Academic கல்வி செயல் முறைகள் மட்டுமே பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்படுமா அல்லது சர்வீஸ் கண்டிஷன் பாதிக்கப்படாது இது நடைமுறைப்படுத்தப்படுமா என்பது தெளிவாகத் தெரியாத சூழ்நிலையில், நிதானத்துடன் இதனைக் கையாள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கல்லூரிகளுக்கும், பல்கலைக்கழகப் பிரதிநிதி ஒருவர் நியமிக்கப்படுகிறார். அந்தக் கல்லூரிகள், மாதம் ஒரு முறை பல்கலைக்கழகப் பிரதிநிதியை வைத்துக் கூட்டம் போட்டு, கல்லூரியின் முழு நடவடிக்கைகளை அவருக்குக் கூற வேண்டும். இதை 100-க்கு 90 கல்லூரிகள் கடைப்பிடிப்பதே இல்லை. கூட்டம் போடுவதில்லை. கூட்டம் போட்டாலும் பல்கலைக்கழகப் பிரதிநிதிகளைக் கூப்பிடுவதும் இல்லை. ஆனால் இன்றைக்கு ஆசிரியர்களாக இருக்கிறவர்கள்பற்றி நிறைய என்னால் குற்றம் சொல்ல முடியும். பல ஆசிரியர்கள், பேராசிரியர்கள், கல்லூரியிலே பணி செய்து கொண்டு தனிப்பட்ட முறையிலே





தொழில்களை நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். என்னிடத்திலே ஆதாரம் இருக்கிறது என்றாலும்கூட, அதை நான் குறிப்பிட்ட அமைச்சரிடத்திலே கொடுக்க இருக்கின்றேன். பச்சையப்பன் காலேஜிலே இருக்கிறார் ஒரு லெக்சரர், அவரை 5 மணிக்கு மேலே நீங்கள் பார்த்தீர்கள் என்றால், அண்ணா நகர் எதிரிலே இருக்கிற பிராந்திக் கடையிலே உட்கார்ந்து இருக்கிறார். மத்தியான நேரத்திலும் அவர் அங்கே உட்கார்ந்து இருக்கிறார். ஒரு கல்லூரியிலே பணி செய்கின்ற ஒரு பேராசிரியர், அவர் ஒரு ஒயின் ஷாப்பிலே இருந்துகொண்டு அந்த வியாபாரத்தைப் பார்க்கும்போது, அதைப் பார்ப்பதற்கே ஓர் அருவருப்பான சூழ்நிலை இருக்கிறது. இதுபோலப் பல நிகழ்ச்சிகளை, பல நிலைகளை என்னால் எடுத்துக் கூறமுடியும். இருந்தாலும்கூட, பல்கலைக்கழகத்தில் பணிபுரிந்தால், உழைப்புக்கு ஏற்ற ஊதியம், பல நாடுகளைச் சுற்றிப் பார்க்கும் வாய்ப்பு, இவை அனைத்தும் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது என்று தெரிந்தும், உழைக்காமல் காலம் ஓட்ட எண்ணுபவர்கள் இதனை வரவேற்காதது ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆகவே என்னைப் பொறுத்தமட்டிலும் இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்று அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திருமதி யசோதா, அடுத்த சட்டமுன்வடிவிலும் சேர்த்து கருத்துச் சொல்ல வேண்டுமென்றால் சொல்லிவிடுங்கள். அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் (குறுக்கீடு) திரு. பொன்முடி, நீங்கள் இந்த இரண்டிலும் சேர்த்துப் பேசலாம்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, பல்கலைக்கழகங்கள் என்று உருவாக்கப்படுகின்றபோது, அவை ஆராய்ச்சிகளுக்காக உருவாக்கப்பட்டவைதான் — Research-oriented. கல்லூரிகள் என்று சொல்கிறபோது, அவை பட்டப்படிப்பிற்காக உருவாக்கப்பட்டவைதான். அதுதான் நோக்கமாக ஆரம்ப காலத்திலிருந்து இருந்து வந்தது. பல்கலைக்கழகங்களுக்கே அனைத்துக் கல்லூரிகளையும் நிர்வகிக்கின்ற பொறுப்பைக் கொடுப்போம் என்று சொன்னால், அது சரியாக வராது. மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இப்போது பல்கலைக்கழகங்களை நிர்வகிப்பதிலேயே பல்வேறு சிக்கல்கள், நிர்வாகச் சிக்கல்களாக இருந்து வருவதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நன்கு அறிவார்கள்.

ஒரு Director of Collegiate Education— கல்லூரிக் கல்வி இயக்குநரகம் செய்து கொண்டிருந்த பணியை இன்று ஒரேயடியாக நீங்கள் இந்தப் பல்கலைக் கழகத்திலே திணிப்பீர்கள் என்று சொன்னால், இந்தப் பல்கலைக்கழகங்கள் அரசுக் கல்லூரிகளை ஏற்று நடத்துவதற்கு இயலுமா, அது அந்த நிர்வாகத் திறனைச் செம்மையாகச் செயல்படுத்துவதற்குச் சாத்தியக்கூறுகள் உண்டா, என்பதை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். அதுமட்டும் அல்ல, கல்லூரியிலே பணியாற்றுகிற ஆசிரியர்களுக்கும், பல்கலைக்கழக ஆசிரியர்களுக்குமிடையே சர்வீஸ் கண்டிஷன்ஸ், அவர்களுக்கு இடையிலே இருக்கின்ற ஊதிய உயர்வுகள், அவர்களுக்கு இருக்கிற பணி நிபந்தனைகள் எல்லாம் வேறு, வேறு விதத்திலே இருக்கின்றன. குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், பல்கலைக்கழகத்திலே பணியாற்றுகின்ற ஆசிரியர்களுடைய ஓய்வு பெறுகிற வயது 60. கல்லூரியிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்களுடைய வயது 58. பல்கலைக்கழக ஆசிரியர்களாக அவர்களை நீங்கள் ஏற்றுக்கொண்டால், கல்லூரி ஆசிரியர்களுக்கு 60 ஆக உயர்த்தப் போகிறீர்களா? உயர்த்தினால் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள். 58-ஐ 60-ஆக உயர்த்தப் போகிறீர்களா? ஆனால், இப்போது நீங்கள் அண்ணா பல்கலைக்கழகத்திலே இருக்கிறபோது, அதிலே சேர்த்த அரசுப் பொறியியல் கல்லூரி ஆசிரியர்களுக்கு அந்த 58 தான் இருக்கும். ஏனென்றால், நீங்கள் முதலிலேயே, அரசுக் கல்லூரிகளில் இருந்த பணியாளர்கள் என்று உத்தரவு இட்டிருக்கிறீர்கள். ஆகவே அவர்கள் என்ன நினைக்கிறார்கள்? அண்ணா பல்கலைக்கழகத்திலே இணைக்கப்பட்டு இருக்கிற அந்தக் கல்லூரிகளினுடைய ஆசிரியர்களுடைய ஓய்வு பெறும் வயது 58தான். பல்கலைக்கழகத்திலே இருப்பவர்களுக்கு 60. நீங்கள் அவர்களைப் பல்கலைக்கழக ஊழியர்களாக அறிவித்துவிட்டு. ஆனால் ஓய்வு பெறும் வயது மட்டும் அவர்களுக்கு 58 என்றிருக்கும் என்று சொன்னால், அது ஏற்புடையதாக இருக்காது.அந்த அச்சம் அவர்களுக்கு இருக்கிறது.

அது மட்டும் அல்ல. இந்தப் பல்கலைக்கழகம் என்பது நிர்வாக burden-- நான் முன்பே சுட்டிக்காட்டியது போல ஒரு Collegiate Education Directorate-- உங்களுக்குத் தெரியும், அது எவ்வளவு பணிகளை எந்த அளவிற்கு உள்ளடக்கி இருந்தது என்பது. அது ஒரு Research-oriented ஆகத்தான் இருக்க வேண்டும். அதிலே, பல்வேறு கல்லூரிகளிலே, இங்கே படித்த பேரவைத் தலைவர், மற்ற உறுப்பினர்கள், நாம் எல்லாம் கல்லூரியிலே படித்துவிட்டு, பல்கலைக்கழகத்திலே படிக்கிற வாய்ப்பு-- பல பேருக்குக்--கிடைத்து, பல பேருக்குப் படிக்க வாய்ப்புக்கூடக்





கிடைக்காமல் இருக்கலாம். Residential University என்று, ஒரே இடத்திலேயே பல்கலைக்கழகங்கள் இருப்பதுண்டு. அப்படிப்பட்ட பல்கலைக்கழகங்கள் தமிழகத்திலேயிருந்து மாறி வருகிற ஒரு சூழ்நிலை, ஆகவேதான், இது கல்லூரி ஆசிரியர்களிடத்திலே பதற்றமான நிலைமையை உருவாக்கி இருக்கிறது.

முற்பகல் *11-40*

அரசாங்கத்திலே ஒரு பாதுகாப்பான பணி இருக்கிறது. பல்கலைக்கழகம், U.G.C. கொடுக்கிற நிதியை வைத்துக்கொண்டு மட்டுமே பல்கலைக்கழகங்களை நிர்வகிக்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது. நிதிப் பற்றாக்குறை ஏற்படுவதற்கான அவசியங்கள் அப்போதைக்கு அப்போது ஏற்படுவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், அரசுக் கல்லூரிகளிலே படிக்கின்ற மாணவர்களுக்குக் கட்டணம் குறைவாக இருக்கிறது. ஆனால், பல்கலைக்கழகத்திலே படிக்கிறபோது அவர்கள் கட்ட வேண்டிய கட்டணமும் அதிகமாக இருக்கிறது. நீங்கள் இல்லையென்று மறுக்க முடியாது. ஏனென்று சொன்னால், நீங்கள் இப்போது அண்ணா பல்கலைக்கழகத்தோடு சேர்த்திருக்கிற அரசுப் பொறியியல் கல்லூரி மாணவர்களுக்கு, அரசுக் கல்லூரியாக இருக்கிறபோது அவர்கள் கட்டிய கட்டணத்தைவிட இப்போது பல்கலைக்கழகத்திலே அவர்கள் கட்டிக்கொண்டிருக்கிற கட்டணம் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மாணவர்களுக்கு ஒரு பயம், அரசுக் கல்லூரிகளிலே நமக்குக் கட்டணம் குறைவாக இருக்கிறது. பல்கலைக்கழகத்துடன் இணைத்துவிட்டால் கட்டணம் கட்ட வேண்டியதும் அதிகமாக இருக்குமோ என்ற பயமும் அவர்களுக்கு இருக்கிற காரணத்தால், தற்போது இருப்பதைப் போலவே அது இருக்கலாம். அந்தச் சட்டத்திலே சொல்கிறபோது, சில கல்லூரிகள் எல்லாம் விடப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, விழுப்புரத்திலே இருக்கின்ற அரசினர் கலைக் கல்லூரி, கடலூரிலே இருக்கிற அரசினர் கலைக் கல்லூரி, அந்தப் பெயர்கள் எல்லாம் இதிலே காணவில்லை.

**.மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொன்முடி அவர்கள் தொகுதி சார்ந்த அந்த விழுப்புரம் அரசினர் க்லைக் கல்லூரி பற்றிக் குறிப்பிடுகின்றார். திருவள்ளுவர் பல்கலைக்கழகம் வரவிருக்கிறது. அதற்கான சட்டமுன்வடிவை அறிமுகம் செய்திருக்கிறோம். ஆகவே, அதில் அந்தக் கல்லூரிகள் எல்லாம் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளுவர் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவை எல்லாம் காலையிலேதான் எங்களுக்குக் கொடுத்திருக்கிறீர்கள். படிக்க நேரமில்லை. அதைப் படித்திருந்தால் நான் சொல்லியிருக்க மாட்டேன். காலையிலே இங்கு வந்துதான் அதெல்லாம் கிடைத்திருக்கிறது. ஆகவே, அதிலே சேர்த்திருக்கிறீர்கள் என்று சொன்னாலும்கூட, இதிலே குறிப்பாக அரசுக் கலைக் கல்லூரிகளுக்கு.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, அது இன்னும் ஆய்வுக்கு வரவில்லை. (குறுக்கீடு) அது இன்னும் ஆய்வுக்கு வரவில்லை.

**டாக்டர் க. பொன்முடி:** அறிமுகப்படுத்தியிருக்கிறீர்கள். ஆகவே, இதைப் பொறுத்தவரையிலே, இந்தக் கல்லூரிகளைப் பொறுத்தவரையிலே, அவை அரசுக் கலைக் கல்லூரிகளாக இயங்குவதுதான் அவர்களுக்குச் சிறப்புடையதாக இருக்கும். பல்கலைக்கழகங்களுக்கு அந்த நிர்வாகச் சுமையைக் குறைப்பதாக இருக்கும். Collegiate Education Directorate என்று இருக்கிற அந்த அமைப்பே இல்லாமல் செய்துவிடுகிற ஒரு முயற்சியாக இது அமையும் என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மற்றொரு பில் நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள், Open University, அது வருகிறதல்லவா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அது வேண்டாம். அது ஆய்வுக்கு வரவில்லை. அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் மட்டும்தான்... (குறுக்கீடு) அது இன்னும் ஆய்வுக்கு வரவில்லை. திரு. வி.கே. லட்சுமணன், இந்த இரண்டிலும் பேசலாம்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகச் சட்டத் திருத்தத்தை நான் மகிழ்ச்சியோடு வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தப் பல்கலைக்கழகமானது, ஒரு Unitary பல்கலைக்கழகமாக இருந்தபோது, இந்தப் பல்கலைக்கழகம் கடந்த பல ஆண்டுகளாக எந்தவிதமான முன்னேற்றமும் அடையவில்லை. இப்போது இந்தப் பல்கலைக்கழகத்தோடு, அருகிலே இருக்கின்ற அரசுக் கல்லூரிகளை இணைக்கின்றபோது இந்தப் பல்கலைக்கழகம் நல்லமுறையிலே செயல்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று நான் உறுதியாக நம்புகிறேன். இதைச் சுற்றியிருக்கின்ற அரசுக் கல்லூரிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்கள், அரசுப் பணியாளர்கள் என்ற நிலைமை மாறி, பல்கலைக்கழகத்திலே பணியாற்றுகின்ற உயர்ந்த





அந்தஸ்தை அவர்கள் பெற இருக்கிறார்கள். அதேபோல, அந்தக் கல்லூரியிலே படிக்கின்ற மாணவர்கள் வெறும் கல்லூரி மாணவர்கள் என்ற நிலைமை மாறி, பல்கலைக்கழக மாணவர்கள் என்ற நிலைமைக்கு அவர்கள் உயர்த்தப்பட இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, சுற்றியிருக்கின்ற அரசுக் கலைக் கல்லூரிகளிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் எவ்வளவு ஆண்டு பணியாற்றினாலும் Reader என்ற பதவிக்கு மேலே போக முடியாது. ஆனால், இன்றைக்குப் பல்கலைக்கழகத்தோடு இணைக்கின்றபோது, அவர்கள் பேராசிரியர்களாக வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதுமட்டுமல்ல, Constituent College என்று சொல்கிறபோது, அது ஒரு பல்கலைக்கழகக் கல்லூரி என்றுதான் சொல்ல வேண்டும். ஆக, ஏறத்தாழ பல்கலைக்கழகத்திலே நடைபெறுகின்ற எல்லா ஆராய்ச்சிகளும் அங்கேயே நடைபெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதுமட்டுமல்ல, மேலை நாட்டுப் பல்கலைக்கழகங்களோடு ஆராய்ச்சிக்காக ஒப்பந்தம் செய்துகொண்டு, அதன் மூலமாக இந்தக் கல்லூரிகளும் முன்னேறுவதற்கு ஏராளமான வாய்ப்புகள் இருக்கின்றன. பல்கலைக்கழக மானியக் குழுவினுடைய விதிகளுக்கேற்ப, அதாவது ஒரு நாளைக்கு 7 மணி நேரம், ஒரு வாரத்திற்கு 6 நாட்கள் பணியாற்றுவது என்ற அந்த விதிகளுக்கேற்பப் பணியாற்ற வேண்டிய நிலையும் அங்கே ஏற்படும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். ஊதியத்தைப் பொறுத்தமட்டில் எந்த வேறுபாடும் இருக்காது என்று நான் உறுதியாக நம்புகிறேன். அதுமட்டுமின்றி மத்திய அரசினுடைய நிதி வழங்கும் நிறுவனங்கள்— U.G.C., I.C.R., I.C.M.R., D.B.T., D.R.D.O. போன்ற நிறுவனங்களுடைய நிதிகளை நேரடியாக இந்தக் கல்லூரிகள் பெற்று, அதன் மூலமாக ஆராய்ச்சியில் ஈடுபடுவதற்கு ஏராளமான வாய்ப்புகள் இருக்கின்றன. எனவே, இதையெல்லாம் இன்றைக்கு இந்தத் திருத்தத்தின் மூலமாக நாம் பெற இருக்கிறோம். எனவே, இந்தத் திருத்தத்தை நான் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன்.

*முற்பகல் 1145*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக திரு. கி. பாரிமோகன்.

***திரு. கி. பாரிமோகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் பற்றிய சட்டங்களுக்கான திருத்தச் சட்டமுன்வடிவிலே பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக சில கருத்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு முன்னாலே பேசியவர்கள் குறிப்பிட்டதைப்போல, இன்றைக்குக் கிராமப்புறத்திலே

வாழ்ந்து கொண்டிருக்கிற மாணவர்கள் அரசுக் கல்லூரிகளை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்தக் கல்லூரிகளில் படிக்கின்ற மாணவர்களுக்கு, அவர்களுடைய சேர்க்கைக் கட்டணம், பயிற்சிக் கட்டணம் உயரக்கூடிய சூழ்நிலை இதனால் ஏற்படுகிற நிலை இருக்கிறது. அந்தந்தப் பகுதியிலே இருக்கின்ற பல்கலைக்கழகங்களோடு இந்த அரசுக் கல்லூரிகள் சேர்க்கப்படும்போது, அங்கே பாதிக்கப்படுபவர்கள் கிராமத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிற தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட சிறுபான்மைச் சமுதாயங்களைச் சேர்ந்த மாணவர்களாக இருக்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதே நேரத்திலே இன்றைக்குப் பல்கலைக்கழகங்கள் என்று கூறுகின்றபோது, எனக்கு முன்னாலே பேசிய நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் சொன்னதுபோல், உதாரணத்திற்கு சென்னைப் பல்கலைக்கழகத்தை எடுத்துக்கொண்டால், பல்வேறு காலகட்டங்களிலே சென்னைப் பல்கலைக்கழகத்தில் பல்வேறு விதிமுறை மீறல்கள், முறைகேடுகள் நடைபெற்றன. பல்வேறு பத்திரிகைகளில் ஆதாரபூர்வமாக வந்து கொண்டிருக்கிறது. சமீபத்திலேகூட ஓராண்டுக்கு முன்னால் ஒரு மிகப் பெரிய போராட்டம் மாணவர்களால் நடத்தப்பட்டது. உயர் நீதிமன்றத்திலே வழக்கு நிலுவையில் இருந்து கொண்டிருக்கிறது. நம்முடைய கல்வி அமைச்சர் அவர்களிடத்தில்கூட, நான் அத்தனை விவரங்களையும் வருங்காலத்திலே எல்லாம் கொடுக்கிறேன் என்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த அளவுக்கு சென்னைப் பல்கலைக்கழகத்திலே மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குகின்றபோது, தகுதியானவர்களுக்குக் கொடுக்காமல், ஏதாவது ஒரு விதி மீறலைச் செய்து, அதில் ஏதாவது ஒரு பொத்தல் காரணத்தைச் சொல்லி, தகுதியான மாணவர்கள், கிராமப்புறத்திலே இருந்து வருகின்றவர்கள், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்கள் சென்னைப் பல்கலைக் கழகத்தில் வேலைவாய்ப்பைப் பெறுகின்ற அந்தச் சூழ்நிலைத் தகுதியின் அடிப்படையிலே இருக்கின்றபோதுகூட ஏதாவது ஒரு குறையைச் சொல்லி, அந்த மாணவர்கள் சேருகின்ற ஒரு சூழ்நிலையை அங்கே இருக்கின்ற ஒரு சிலர் தடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இது காலம் காலமாக நடைபெற்றுக்கொண்டு வருகிறது. பல்கலைக்கழகம் பற்றிச் சொல்ல வேண்டும் என்றால், சென்னைப் பல்கலைக்கழகம் ஒன்றே ஓர் உதாரணமாக இருக்கும். ஆகவே, வருங்காலத்தில் நம்முடைய கல்வி





அமைச்சர் அவர்கள் அவருடைய காலத்திலே கண்டிப்பாக இவற்றை எல்லாம் சீர்திருத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பேராசிரியர்களுக்குப் பதவி உயர்விலே சிக்கல் ஏற்படுகின்ற ஒரு சூழ்நிலை, இந்த இணைப்பிலே ஏற்படுகின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. பேராசிரியர்கள், மாணவர்களைப் பாதிக்கின்ற சூழ்நிலை, பல்கலைக்கழகத்தினுடைய இந்தத் திருத்தச் சட்டங்கள் மூலம் ஏற்படுகின்ற வாய்ப்பு இருக்கிறது. அதேபோலப் பல்கலைக்கழகங்களிலே இடஒதுக்கீடு சரியாகப் பின்பற்றப்படுவது இல்லை. அதனால் பல்கலைக்கழகங்களிலே சமூக நீதி கிடைப்பதில்லை. சமூக அநீதியை இன்றைக்குப் பல்கலைக்கழகங்கள் கொடுத்துக் கொண்டிருக்கின்றன என்பதுதான் உண்மை. ஆகவே, இந்தப் பல்கலைக்கழகங்கள் பற்றிய இந்தத் திருத்தச் சட்டமுன்வடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொள்வதோடு, வருங்காலத்திலும் நமது கல்வி அமைச்சர் இதற்கெல்லாம் சரியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** போளூர் வரதன். (குறுக்கீடு) யசோதா பேசி விட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் பேசிவிட்டீர்கள் அல்லவா? (குறுக்கீடு) சரி. திரு. போளூர் வரதன்.

**திரு. போளூர் வரதன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசுக் கல்லூரிகளை பல்கலைக்கழகங்களோடு இணைக்கின்ற இந்த Bill மீது பேசுகின்ற வாய்ப்பு அளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அரசாங்கம் இன்றைக்கு இந்த நிலையை ஏன் கொண்டு வந்திருக்கிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இங்கே இருக்கின்ற நம்முடைய சட்ட மந்திரிகூட தியாகராயர் கல்லூரியிலே படித்தவர். நம்முடைய கல்வி அமைச்சர் அண்ணா பல்கலைக்கழகத்தில் படித்தவர். நம்முடைய ரெவின்யூ மினிஸ்டர் என்னுடன் Law College-லே படித்தவர். இப்படி இங்கே இருக்கக்கூடியவர்கள் பல்வேறு கல்லூரிகளிலே படித்தவர்கள் என்றாலும்கூட, யுனிவர்சிட்டி என்று வருகிறபோது, அன்று சென்னைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை யுனிவர்சிட்டி மதுரை யுனிவர்சிட்டி என்ற சில யுனிவர்சிட்டிகள் மட்டும்தான் தமிழகத்தில் இருந்தன. அதற்குப் பின்னாலே பல்வேறு பல்கலைக்கழகங்களை உருவாக்கினோமே தவிர, அதற்கு என்று சில நெறிமுறைகளை ஆட்சியாளர்கள் உருவாக்கவில்லை.....

*முற்பகல் 11-50*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இரண்டு நிமிடங்களிலே பேச்சை முடித்துவிட்டு, உட்கார்ந்துகொள்ளுங்கள்.

**திரு. போளூர் வரதன்:** நான் வேண்டுமானால் உட்கார்ந்து விடுகிறேன், சார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை. அவர், உங்களுடைய பார்ட்டி., பேசிவிட்டார்கள்.

**திரு. போளூர் வரதன்:** இல்லை. எஜுகேஷன் வேண்டும் என்று சொல்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி யசோதா அவர்கள் பேசிவிட்டார்கள்.

**திரு. போளூர் வரதன்:** நான் என்ன சொல்கிறேன்? இப்போது நான் யாருக்கும் விரோதமாகப் பேசவில்லை. கல்வி எப்படி இருக்க வேண்டும் தமிழ்நாட்டிலே என்ற, என்னுடைய கருத்தைச் சொல்வதற்குக்கூட நீங்கள் விடவில்லை என்றால்.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நிறைய உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது.

**திரு. போளூர் வரதன்:** மணி அடிக்கிறீர்கள் என்றால் நான் என்ன பண்ணப் போகிறேன்? உட்கார்ந்துகொள்ளப் போகிறேன். அரசுக் கலைக் கல்லூரிகளைப் பல்கலைக்கழகங்களோடு இன்றைக்கு இணைக்கின்றபோது, அதிலே சில குறைபாடுகள் இருக்கின்றன. அதை அரசு நிவர்த்தி செய்ய வேண்டும். சென்னை யுனிவர்சிட்டி மாணவன் நான் என்று சொல்கிறபோது, நாங்கள் படிக்கின்றபோது யுனிவர்சிட்டியினுடைய வரலாறுகள் வேறு மாதிரி இருந்தன.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மதுரையிலே படிக்கின்றபோது....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு நிமிடங்களிலே பேசி முடித்துவிடுங்கள். ஏனென்றால், அது மரபு கிடையாது. ஓர் இயக்கத்திற்கு ஒருவர்தான் பேசுவது என்ற மாதிரி வைத்திருக்கிறோம். திருமதி யசோதா பேசியாகிவிட்டது. (குறுக்கீடு) இரண்டு பேர் பேசவில்லையே!



**திரு. போளூர் வரதன்:** நான் ஒரு நிமிடத்திலே பேச்சை முடித்துக்கொள்கிறேன். இருங்கள், பிரச்சினை அது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, பேசுங்கள்.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**திரு. போளூர் வரதன்:** அக்கா, உட்காருங்கள். (குறுக்கீடு) யசோதா அக்கா உட்காருங்கள். அக்கா, உட்காருங்கள்.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. கீரைக் கடைக்கு எதிர்க் கடை என்ற அளவிலே கூடாது.

**திரு. போளூர் வரதன்:** அரசுக் கல்லூரிகள் பல்கலைக்கழகங்களோடு இணைக்கப்படுகின்றபோது, ஆசிரியர்கள் என்ன நினைக்கிறார்கள்? பேராசிரியர்கள் என்று சொன்னால், நமக்குப் பதவி குறைக்கப்படுமோ என்கிற ஒரு அவநம்பிக்கை இன்றைக்கு ஆசிரியர்கள், பேராசிரியர்கள் மத்தியிலே இருக்கிறது. அதற்கு அரசு முதலில் உத்தரவாதத்தைக் கொடுக்க வேண்டும்.

அதுமட்டுமல்ல, பல்கலைக்கழகங்களிலே இருக்கின்ற பேராசிரியர்கள் சம்பளம் வேறுவிதமாக இருக்கிறது. கல்லூரிகளிலே பணிபுரிகின்ற ஆசிரியர்களுடைய சம்பளம் வேறு விதமாக இருக்கிறது. கல்லூரியிலே இருக்கின்ற ஆசிரியர்கள், மற்ற இதர அரசு ஊழியர்களுக்கு என்று பார்க்கின்றபோது, அங்கே இருக்கின்ற Quota system, S.C., B.C, others, இந்த சிஸ்டத்திலே முழுமையாக fill-up பண்ணப்படுவதில்லை. அதே நிலை பல்கலைக்கழகங்களிலேயும் இருக்கிறது. அப்படி இணைக்கப்படுகின்றபோது மார்க் சிஸ்டத்தை வைத்திருக்கிறீர்கள். அந்த மார்க் சிஸ்டம் என்று பாக்கின்றபோது, கிராமப்புறங்களிலே இருக்கின்ற மாணவர்களால் சென்டம் மார்க் வாங்க முடியாது. கிராமப்புறங்களிலே இருக்கின்ற மாணவர்களுக்கு மேல்படிப்புக்குப் பல்கலைக்கழகம் என்று வருகின்றபோது, பல்கலைக்கழகத்திற்கு என்று ஒரு சில விதிமுறைகளை வைத்திருக்கிறார்கள். அதற்கு உட்பட்ட மார்க் இல்லையென்று சொன்னால், Higher studies-க்கு வரமுடியாது. அப்படி வருகின்றபோது கிராமப்புறங்களிலே இருக்கின்ற மாணவர்களுக்கு ஒரு பர்சன்டேஜ் ஆப் மார்க்ஸ் add பண்ணுவதற்கு நீங்கள் விதிமுறையிலே இணைக்கவேண்டும்.

[திரு. போளூர் வரதன்] [2002 மே 10

அப்படி இணைப்பதன் மூலமாக, கிராமப்புறங்களிலே இருக்கின்ற மாணவர்கள் பல்கலைக்கழகங்களிலே இருக்கின்ற கோர்ஸ்களிலே Higher studies படிப்பதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. கல்வியில் எல்லா நிலைகளிலேயும் சமமாக இருக்க வேண்டும். ஜாதி, மதப் பாகுபாடு இன்றி கல்வி அனைவருக்கும் கிடைப்பதற்கு இந்தப் பல்கலைக்கழகங்கள் Universities முயற்சிக்க வேண்டும். பெரும்பாலும் இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்ற இந்தப் போராட்டமே, salary ப்ராப்ளத்தினால்தான். கல்லூரிகளைப் பல்கலைக்கழகங்களுடன் இணைக்கின்றபோது அந்த மாற்றம், ratio ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் என்று எண்ணுகிறார்கள் கல்வியாளர்கள். அவர்களுடைய குறைகளைப் போக்கி, அரசு இந்த வேரியேஷன்களை எடுத்து, ஒரு நல்ல நிலையில் அவை இணைக்கப்படுகின்றபோது தமிழகத்தினுடைய கல்வியினுடைய தரம் உயரும் என்பதைக் கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி க. பாலபாரதி.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழையெளிய மாணவர்களுக்கு உயர் கல்வியை எட்டாக்கனியாக ஆக்குவதற்குரிய ஒரு முயற்சியாகத்தான் இந்த மசோதாவை நாங்கள் பார்க்கின்றோம். ஏழையெளிய, நடுத்தர மாணவர்கள், குறிப்பாகப் பெண்களினுடைய கல்வி உரிமையைப் பறிக்கக்கூடிய அபாயம் இருப்பதனாலே, இந்தச் சட்டமுன்வடிவை நாங்கள் எதிர்க்கின்றோம். இந்த மசோதாவை வாபஸ் பெற வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம். இது மாணவர்களுக்குக் கல்விக் கட்டணத்தைக் கடுமையாக உயர்த்தக்கூடிய நடவடிக்கை என்ற முறையில், இதனை வாபஸ் பெற வேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம்.

அதேபோன்று, அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தோடு இதர உறுப்புக் கல்லூரிகளாகச் சேர்க்கக்கூடிய நடவடிக்கை என்பது மாணவிகளுக்கும், பேராசிரியர்களுக்கும் மிகப் பெரிய சிக்கலை ஏற்படுத்தும். கொடைக்கானல் என்பது ஒரு மலைப் பகுதி. போக்குவரத்துக்கான வசதி ஓரளவே இருக்கக்கூடிய பகுதி. தங்கும் வசதியும் அங்கு போதிய அளவுக்கு நிறைவு செய்யப்பட்டதாக இல்லை. ஆகவே, மாணவிகள், பேராசிரியர்களுடைய பாதுகாப்பை முன்னிட்டு கொடைக்கானலில் அமையக்கூடிய இந்தப் பல்கலைக்கழகத்தை--திண்டுக்கல், ஒடுக்கம் பகுதியில் ஏற்கெனவே 160 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு, கோப்பு நிலுவையில் இருக்கிறது--அங்கு கொண்டு வருவது



2002 மே 10] [செல்வி க. பாலபாரதி]

அந்த மாணவிகளுக்கு, பெண்களுக்குப் பாதுகாப்பாகவும், இன்னும் இந்தப் பல்கலைக்கழகத்தை விரிவுபடுத்துவதற்கும் உதவிகரமாக இருக்கும்.

*முற்பகல் 11-55*

மேலும், இந்த மகளிர் கல்லூரிகளை உறுப்புக் கல்லூரிகளாக மாற்றும்போது, கல்லூரிகளில் பயிலும் மாணவிகளுடைய கல்விக் கட்டணம் எவ்வாறு இருக்கப் போகிறது என்பது தெரிவிக்கப்படவில்லை. ஆசிரியர்களுடைய பணிநிலைகள் எவ்வாறு இருக்கப் போகின்றன, ஆசிரியர்களுடைய ஊதியப் பட்டுவாடா எவ்வாறு இருக்கப் போகிறது, பல்கலைக்கழகம் மற்றும் உறுப்புக் கல்லூரி ஆசிரியர்களுக்கான பணி நிலைகள், பணி மூப்பு எவ்வாறு நிர்ணயிக்கப்பட இருக்கின்றன என்பது எல்லாம் ஒரு மிகப் பெரிய அளவுக்குக் கவலைப்படக்கூடிய விஷயமாகவும், அதற்குப் பாதிப்பு ஏற்படக்கூடிய அம்சமாகவும் இருக்கிறது. மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்திற்கு உட்பட்ட கல்லூரிகளாக, திண்டுக்கல், நிலக்கோட்டை மகளிர் கல்லூரிகளுடைய மாணவிகள் தங்களுடைய குறைகளை நிவர்த்தி செய்து கொள்வதற்கு திண்டுக்கல் போன்ற இடம்தான் இன்றைக்கு வசதியாக இருந்துகொண்டிருக்கிறது. அதேபோன்று Controller of Examinations, Registrar என்ற இரு பதவிகளுக்கும் கல்வித் தகுதி என்பது இந்த மசோதாவில் வரையறை செய்யப்படவில்லை. அது செய்யப்பட வேண்டும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு கட்சிக்கு ஒருவர்தான் பேச முடியும்.

**செல்வி க. பாலபாரதி:** நாமினேடட் உறுப்பினர்கள் மூன்றில் ஒரு பங்கு மட்டுமே இருக்க வேண்டும். துணைவேந்தர் நியமனத்தில் தற்போதுள்ள முறைக்குப் பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய விதமாக இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, துணைவேந்தர் நியமனத்தில் தற்போதுள்ள முறையே பின்பற்றப்பட வேண்டும்.

அதேபோன்று P.F. பற்றி இதிலே கூறப்பட்டிருக்கிறது. ஆனால், salary grant பற்றி எதுவும் கூறப்படவில்லை. கல்விக் கட்டணத்தை உயர்த்த சிண்டிகேட்டுக்கு உரிமை உண்டு என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் எவ்வளவு என்று வரையறுத்துக் கூறப்படவில்லை. அதேபோன்று, வயது வித்தியாசம் என்பதும், பணியிலே ஈடுபடக்கூடிய பல்கலைக்கழகப் பேராசிரியர்களுக்கு இடையில் வேறுபாடு என்பதும் இருக்கிறது. ஆகவே, இந்தச் சட்டத்தை நாங்கள் எதிர்க்கின்றோம். இதை வாபஸ் பெற

வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கிறோம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, 23 மசோதாக்கள் இருக்கின்றன. (குறுக்கீடு) ஏதாவது கேள்வி வேண்டுமானால் கேட்கச் சொல்லுங்கள். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் யாராவது பேச வேண்டுமா? (குறுக்கீடு) கோ. இரவிராஜ். ஒரு கட்சிக்கு ஒருவர்தான் பேச முடியும். உட்காருங்கள். அது புது மரபு. (குறுக்கீடு) திரு. கிருஷ்ணமூர்த்தி.

***திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வித் துறை நிர்வாகம், கல்லூரி நடத்துவது, நிர்வாகம் போன்றவற்றை நடத்துவது என்பது வேறு, இதற்கான நிதி ஆதாரங்களைப் பெறுவது என்பது வேறு. குறிப்பாக, நிதி ஆதாரங்களை எங்கிருந்து பெற முடியும்? தமிழகத்தில் உள்ள ஏழை மாணவர்கள் எல்லாம் அரசுக் கல்லூரிகளிலும், அரசு உதவி பெறும் கல்லூரிகளிலும்தான் குறைந்த கட்டணத்தைச் செலுத்திப் படித்து வருகிறார்கள். பல்கலைக்கழகங்களின் நேரடிப் பொறுப்பில் கொண்டுவரும்போது, கல்விக் கட்டணம் அதிகரிக்கப்படும்போது, அதனால் ஏழை மாணவர்கள் உயர் கல்விக்கான வாய்ப்பு இல்லாமல் போகின்ற நிலை ஏற்படும். தற்போது அரசுக் கல்லூரி ஆசிரியர்களாக இருப்பவர்கள் பல்கலைக்கழக ஆசிரியர்களாக மாறும்போது, அவர்களுக்கு இணையான உதவிகளைப் பெறுவார்கள். ஓய்வு பெறும் வயது என்பது 58 ஆக இருக்கிறது அரசுக் கல்லூரிகளில். பல்கலைக்கழகங்களில் 60 ஆக மாற்றப்படும். பல அரசுக் கல்லூரி ஆசிரியர்கள் பல்கலைக்கழக ஆசிரியர்களாக மாறும்போது, அவர்கள் பல்கலைக்கழகத் துணைவேந்தர்களுக்கு இணையாக மாற்றப்படுவார்கள். தமிழகத்தில் உள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கும் பொதுவான சட்டம் கொண்டு வரப்படும் என்று ஏற்கெனவே கல்வி அமைச்சர் அறிவித்துள்ளார். இந்த நிலையில் பல்கலைக்கழகங்களின் பொதுச் சட்டத்தை உடனடியாக அறிமுகப்படுத்தவில்லை. இவை தற்போது முன்வைக்கப்பட்ட திட்டங்கள். தேர்வுகள் நடத்துகின்ற தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் கல்வியாளராக இருக்க வேண்டுமா என்பது தெளிவாக இல்லை. தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் கல்வியாளராக இருக்க வேண்டும் என்று சட்டத்திலே தெளிவாக வரையறுத்துக் கூறிட வேண்டும். தற்போது, எல்லாப் பல்கலைக்கழகங்களும் அஞ்சல் வழிக் கல்விப் படிப்புகளை நடத்துகின்றன. அதன் இயக்குநர், ஊழியர்கள், மாணவர்களின் நலன் குறித்து தமிழ்நாட்டில் உள்ள எந்தப் பல்கலைக்கழகச் சட்டத்திலும் விதிகள் வகுக்கப்படவில்லை. இதற்கான விதிகளும் வகுக்கப்பட வேண்டும். கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தில், பல்கலைக்கழகப் பணிக் குழுவின் பரிந்துரைகளுக்கு மாறாக, கல்வியாளர் இல்லாத ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.





ஒவ்வொரு மாநிலத்திலும் திறந்தவெளிப் பல்கலைக்கழகம் அமைக்கப்பட வேண்டுமென்பதைக் கல்வியாளர்கள் குழுக்கள் பரிந்துரை செய்துள்ளன. இதனையொட்டி, 10 மாநிலங்கள் திறந்தவெளிப் பல்கலைக்கழகங்களை அமைத்துள்ளன. தமிழகத்திலேயும் ஒரு திறந்த வெளிப் பல்கலைக்கழகம் அமைக்க இன்றைய முதலமைச்சர் முந்தைய ஆட்சிக் காலத்தில் ஒரு சட்டமுன்வடிவைத் தயாரித்தார். அதை இப்போது நடைமுறைப்படுத்த வேண்டும். இதனால் ஏழை மாணவர்கள் இன்னும் குறைந்த செலவில் கல்வி பெற வாய்ப்புக் கிடைக்கும் என்று கூறி, பல்கலைக்கழகங்களோடு அரசுக் கல்லூரிகளை இணைப்பதன் மூலம் ஏழையெளிய மாணவர்கள் கல்வி பெறுகின்ற வாய்ப்பே இல்லாமல் போய்விடும். அதேபோன்று சமூக நீதி போன்றவைகளெல்லாம் கிட்டாமல் போகின்ற வாய்ப்பு இதன் மூலம் ஏற்படும் என்பதைச் சொல்லி, இந்தச் சட்டமுன்வடிவிலே திருத்தம் கொண்டு வரவேண்டுமென்பதையும் சொல்லி, இதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக எதிர்க்கிறோம்.

நண்பகல் 12-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள், உயர் கல்வியிலே பல மாற்றங்களைக் கொண்டு வந்து, தமிழகத்தை இந்தியாவினுடைய முதல் மாநிலமாக மாற்றுவதற்காக இத்தகைய ஒரு சட்டமுன்வடிவை இங்கே கொண்டு வந்திருக்கின்றார்கள். உயர் கல்வியைப் பொறுத்தவரையில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பல்வேறு மாற்றங்களையும், திட்டங்களையும் கொண்டு வந்து, புரட்சியை உருவாக்கியது என்பதை யாரும் மறுக்க முடியாது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான், பல்வேறு புதிய பல்கலைக்கழகங்கள் எல்லாம் உருவாக்கப்பட்டன. ஆகவே, உயர் கல்விக்கு அதிக முக்கியத்துவம் தரவேண்டுமென்பதில் புரட்சித் தலைவி அவர்கள் மிகவும் கண்ணுங்கருத்துமாக இருக்கின்றார்கள்.

உயர் கல்வியைப் பார்க்கும்போது, உயர் கல்வியில், அதற்கு ஒரு தன்னாட்சியை வழங்குவது என்பது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை. ஏனென்றால், உயர் கல்வியில், பல மாண்புமிகு உறுப்பினர்கள் பேசியதுபோல, ஆராய்ச்சிக்கு முக்கியத்துவம் தர வேண்டும். ஆராய்ச்சியின் மூலமாகத்தான் புதிய கண்டுபிடிப்புகளை இந்த நாட்டிலே உருவாக்க முடியும். அதன் மூலம் சமுதாயம் முன்னேற முடியும்; இந்த நாடும் முன்னேறும். ஆகவேதான், நல்லதொரு கல்வி நிலையங்களை உருவாக்கி, ஆராய்ச்சியை உருவாக்கி, அதன் மூலம் தமிழகத்தை முன்னணியில் கொண்டு வருவதுதான் புரட்சித் தலைவி அவர்களுடைய எண்ணமாகும். அதனடிப்படையில், பல்வேறு பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்பட்டன. பல்வேறு பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்பட்டவுடன், சில பல்கலைக்கழகங்களில் ஆராய்ச்சி மட்டும்தான் இருந்து கொண்டிருக்கின்றது என்பது உண்மைதான். ஆனால், ஒரு பல்கலைக்கழகம் என்றால், பட்டப் படிப்பு இருக்க வேண்டும்; அதுபோல, முதுகலைப் பட்டப் படிப்பு இருக்க வேண்டும். பிறகு, ஆராய்ச்சி இருக்க வேண்டும். இவையெல்லாம் சேர்ந்தால்தான் ஒரு பல்கலைக்கழகம் முழுமை பெற்ற ஒரு அமைப்பாக இருக்கும். ஆகவே, சென்னைப் பல்கலைக்கழகத்தை எடுத்துக்கொண்டு சில குறைபாடுகளை மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். அங்கே முறைகேடுகள் இருப்பதாகச் சொன்னார்கள். அந்த நிர்வாகத்திலே அந்த முறைகேடுகள் இருந்தால், இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அவற்றின் மீது கண்டிப்பாக இந்த அரசானது நடவடிக்கை எடுக்கும் என்பதை உறுதியோடு சொல்ல விரும்புகிறேன். எந்த முறைகேடுகள் நடைபெற்றாலும், அவற்றின்மீது நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அரசுக்கு அதிகாரம் உள்ளது. ஆகவே, முறைகேடுகள் வராமல் பார்த்துக்கொள்வதை, இந்த அரசு பார்த்துக்கொள்ளும் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

அதோடு, இந்தப் பல்கலைக்கழகங்களுடன் கல்லூரிகளைச் சேர்ப்பதா, வேண்டாமா என்பதைப் பற்றி எல்லாம் சில கருத்துகளைச் சொன்னார்கள். பொதுவாக, பல்கலைக்கழகம் வருவதைத்தான் இந்த நாட்டிலே ஒவ்வொருவரும் விரும்புவார்கள். ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு பல்கலைக்கழகம் வேண்டுமென்பதுதான் என்னுடைய, எல்லோருடைய கருத்தும் ஆகும். அப்படியிருக்கும்போது, இது ஒன்றும் நாம் புதிதாக ஏதோ ஒரு கல்லூரியை வேண்டுமென்றே ஒரு பல்கலைக்கழகத்துடன் சேர்த்துவிடவில்லை. பார்த்தீர்கள் என்றால், முதலிலே நம்முடைய சென்னைப் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்ட நேரத்தில், அப்போது அது தேர்வுகளை நடத்துவதையும், அதற்குப் பிறகு பட்டங்கள் தருகின்ற





முறையைத்தான் செயல்படுத்திக்கொண்டு இருந்தது. காலப்போக்கில்தான் மெதுவாக ஆராய்ச்சியும், சில பாடங்களும் அங்கே புகுத்தப்பட்டன. ஆனால், அதற்குப் பிறகு பார்த்தீர்கள் என்றால், பல்வேறு கல்லூரிகளையெல்லாம் நாம் பல்கலைக்கழகமாக மாற்றி இருக்கின்றோம். அக்ரிகல்சுரல் யுனிவர்சிட்டியை எடுத்துக் கொண்டால், முதலிலே அது கல்லூரியாகத்தான் இருந்தது. அதேபோல, அனிமல் ஹஸ்பண்டரி என்ற அந்தப் பல்கலைக் கழகம், முதலிலே பார்த்தீர்கள் என்றால், கல்லூரியாக இருந்து, பின்னர் பல்கலைக்கழகமாக மாற்றப்பட்டது.

அண்ணா பல்கலைக்கழகம் என்று பார்த்தீர்கள் என்றால், அதுவும் கல்லூரியாகத்தான் இருந்தது. அந்தக் கல்லூரிதான் பல்கலைக்கழகமாக மாற்றப்பட்டது. அதுபோல பல இடங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, கல்லூரிகளைப் பல்கலைக்கழகங்களுடன் சேர்ப்பதையும், மாற்றுவதையும் புதிதாக இந்த நாட்டிலே கொண்டு வந்துவிடவில்லை. இவையெல்லாம் நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கின்றன. அண்டை மாநிலத்தை எடுத்துக்கொண்டால், கர்நாடகத்திலே பார்த்தீர்கள் என்றால், எல்லா அரசுக் கல்லூரிகளையும் பல்கலைக்கழகத்துடன் இணைத்திருக்கின்றார்கள். இதை எதற்குச் சொல்கிறேன் என்றால், பல்கலைக்கழகமானது ஒரு தன்னாட்சி பெற்ற நிறுவனம். உயர் கல்வியிலே கல்லூரிகளுக்கு ஒரு தன்னாட்சி தரவேண்டும் என்றுதான் எல்லோரும் விரும்புகிறார்கள். ஏதோ அரசு அதற்காக ஓர் இயக்குநரை வைத்துக்கொண்டு, அதன் மூலமாகத்தான் நிர்வாகம் செய்ய வேண்டும் என்ற தேவை கிடையாது. ஆகவே, நிர்வாகம் வேறு, அந்த நிர்வாகத்திற்கெல்லாம் நாம் அவர்களுக்குச் சுதந்திரத்தை அளித்து, அந்தக் கல்லூரி ஆசிரியர்களானவர்களும், கல்வி நிர்வாகமானதும் அரசினுடைய நேரடிப் பார்வையிலே இருக்கக்கூடாது என்றுதான் இந்த அரசு விரும்புகிறது. ஏனென்றால், கல்வியானது உயர் கல்வியானது, தன்னாட்சி கொடுப்பதன் மூலம் வளரும் என்ற நம்பிக்கை இந்த ஆட்சிக்கு இருந்து கொண்டிருக்கிறது.

பிற்பகல் 12-05

அத்துடன் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லும்போது சில கருத்துகளைச் சொன்னார்கள். ஞானசேகரன் சொல்லும்போது, சென்னைப் பல்கலைக்கழகத்தின் முறைகேடுகளைப் பற்றிச் சொன்னார். நான் அவருக்குச் சொல்லிக்கொள்கின்றேன், அவை என்ன என்று தெரிந்தவுடன், நாங்கள் அதன்மீது நடவடிக்கை எடுப்போம் என்று உறுதி தருகின்றோம்.

அடுத்தபடியாக, திருமதி யசோதா அவர்கள் பேசும்போது, கல்லூரி ஆசிரியர்களைப் பற்றியும், அவர்கள் எவ்வாறு ஆராய்ச்சி எல்லாம் செய்ய வேண்டும் என்றும் சொன்னார்கள். ஒரு கல்லூரி என்றால், ஏதோ பட்டப் படிப்பு மட்டும் சொல்லிக் கொடுப்பதற்காக ஒரு கல்லூரி கிடையாது. அதிலே ஆராய்ச்சியும் இருக்க வேண்டும். அந்த உயர் கல்வியிலே ஆராய்ச்சி இருந்தால்தான், அந்தக் கல்லூரியின் தரமும் உயரும். மாணவர்களும் நல்ல கல்வி பெற முடியும். ஆசிரியர்களும் தங்களை அதற்கேற்றாற்போல் அமைத்துக் கொள்ள முடியும். ஆகவே, அந்தக் கல்லூரி ஏதோ பட்டப் படிப்போடு நின்றுவிடாமல், ஆராய்ச்சிக்கும் முக்கியத்துவம் தரவேண்டிய நிலையிலே இருக்கின்றோம். ஆகவே, இந்த ஆராய்ச்சி எல்லாம் வளர வேண்டும் என்றால், அது பல்கலைக்கழகத்தின் நேரடியான பார்வையிலே இருக்கும்போது சிறப்பாகச் செயல்படுத்துவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன.

அதுபோல நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள் சொல்லும்போது, சில கருத்துகளைச் சொன்னார்கள். நிதிப் பற்றாக்குறை பல்கலைக்கழகத்தில் இருக்கும்போது, எவ்வாறு இந்தக் கல்லூரிகளை நிர்வகிக்க முடியும் என்று சொன்னார்கள். கல்லூரியைப் பொறுத்தவரை, இதுவரை அரசு என்ன செலவு செய்துகொண்டு இருக்கிறதோ, அவ்வளவு பணத்தையும் நாம் பல்கலைக்கழகத்திற்குத் தரத்தான் இருக்கின்றோம். ஆகவே, இந்த ஆசிரியர்களுக்கு என்ன உரிமை பாதுகாக்கப்பட வேண்டுமோ, அவர்களுடைய பணிகள் பாதுகாக்கப்பட வேண்டுமோ, அத்தகைய நிலைமையானது இருந்துகொண்டுதான் இருக்கும். ஆகவே, அந்த விஷயத்தில் எந்தவிதத்திலும் அரசு பின்வாங்காது. நீங்கள் பார்த்தீர்கள் என்றால், இப்பொழுது நம்முடைய அரசுக்குக்கூட நிதி நெருக்கடி இருக்கிறது. ஒவ்வொரு மாதமும் நிதி அமைச்சரைப் பார்ப்பீர்கள் என்றால், சம்பளம் கொடுப்பதற்கு எவ்வளவு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார் என்பது தெரியும், ஆனால், பல்கலைக்கழகத்திலே சம்பளம் தரமுடியாது என்ற பிரச்சினை எழவில்லை என்று நான் சொல்ல விரும்புகின்றேன். ஆகவே, அப்படியே ஒரு நிலைமை வந்தால்கூட அரசு சும்மா இருக்காது. ஏனென்றால், அது நம்முடைய அங்கம்தான். அது தன்னாட்சி தரப்பட்டதாக இருந்தாலும், அது நம்முடைய குழந்தை. அதற்கு வேண்டிய அனைத்துச் செலவையும், அதற்கு வேண்டிய ஆதரவையும் தருவது இந்த ஆட்சியினுடைய கடமை. ஆகவே, எப்படியும் ஆசிரியர்களை சம்பளம் இல்லாமல் விட்டுவிட முடியாது. அவர்களுக்குச் சம்பளம் தந்துதான் தீருவோம்.

பிறகு சர்வீஸ் கண்டிஷன் பற்றிச் சொன்னார்கள். பொன்முடி பேசும்போது, 58 வயதா, 60 வயதா என்று கேள்வி இருக்கிறது.





பல்கலைக்கழகங்களைப் பொறுத்தவரையில் பார்ப்பீர்கள் என்றால், 60 வயதாகும் வரையில் அவர்கள் பணியாற்றலாம். அதிலே எந்தவித வேறுபாடும் கிடையாது. நாம் இவர்களையெல்லாம் அந்தப் பல்கலைக்கழகங்களிலே சேர்க்கும்போது, அவர்களும் அதற்குட்பட்டு, அவர்களுடைய ஓய்வுபெறுகின்ற காலமானது 58-லிருந்து 60 ஆக உயர்கிறது. ஆகவே, 2 ஆண்டுகள் மேலும் பணியாற்ற வாய்ப்பு இருக்கிறது. குறைந்து விடவில்லை. ஆகவே, அதிலும் பலன் இருக்கிறது. அதுபோல அவர்களுக்கு பென்ஷன், மற்ற எல்லா benefits-ம் அரசிடம் என்ன பெற்றார்களோ, அவற்றை முழுவதும் அந்தத் துறைக்கு மாற்றி, அவற்றை முழுவதும் செயல்படுத்துவதற்கு அரசு எல்லாத் திட்டங்களையும் செயல்படுத்தும். ஏனென்றால், பல்வேறு உறுப்பினர்கள் சொன்னதுபோல, Agricultural University, Veterinary University, இவற்றிலிருந்த அரசுப் பணியாளர்களும், அவர்கள் எல்லாம் பல்கலைக்கழக ஊழியர்களாக மாறினார்கள். அவர்கள் விருப்பப்பட்டுத்தான் சேர்ந்திருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லா உரிமைகளும் பாதுகாக்கப்பட்டிருக்கின்றன. எல்லாச் சலுகைகளும் காப்பாற்றப்பட்டுத்தான் வருகிறது. அண்ணா பல்கலைக்கழகத்தை எடுத்துக் கொண்டீர்கள் என்றால், அங்கே பார்த்தீர்கள் என்றால், சென்ற தொடரிலேயே 6 எஞ்சினியரிங் கல்லூரிகளை அதிலே சேர்த்திருக்கின்றோம். ஏதோ புதிதாகக் கொண்டுவந்து விடவில்லை. முன்பு சேர்த்திருக்கின்றோம். அதிலும் அவர்கள் சேர்ந்து, யாரும் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. அதற்கு வேண்டிய என்னென்ன கிராண்ட்ஸ்--மானியம்—கொடுக்கவேண்டுமோ, அவற்றையும் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அங்கிருக்கிற ஆசிரியர்களும் எந்தவிதமான குறைபாடுகளும் சொல்லவில்லை. ஏனென்றால், கல்லூரி என்றாலே கல்லூரியிலே ஆசிரியர்களாகப் பணியாற்றுகின்றவர்கள் கல்வியில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்கள், அரசுக் கல்லூரி ஆசிரியர்களைக் காட்டிலும், ஒரு பல்கலைக்கழகத்தின் ஆசிரியர் என்றால் ஒரு பெருமையாக இருக்குமே தவிர, அதைவிடக் கீழ்நிலை கிடையாது. அதோடு, Career advancement பல்கலைக்கழகத்திலே அதிகம். நீங்கள் பார்த்தீர்கள் என்றால், புரமோஷன் வரவேண்டும் என்றால், வேகன்சி வர வேண்டும் என்றால், இவர்கள் வெயிட் பண்ண வேண்டும். பல்கலைக்கழகத்திலே அப்படியில்லை. ஆட்டோமேட்டிக் புரமோஷன் இருக்கிறது. ஆகவே, அங்கிருக்கின்ற ஆசிரியர்களைப் பார்த்தீர்கள் என்றால், அவர்களுக்கு உயர்வு அதிகமாக இருக்கின்றதே தவிர, குறைந்து விடாது. ஆகவே எதற்காக ஆசிரியர்கள் பயப்படுகிறார்கள் என்று எங்களுக்குப் புரியவில்லை. ஆசிரியர்களைப் பொறுத்தவரை, அவர்களுக்குரிய அத்தனை உரிமைகளும் பாதுகாக்கப்படும். அவர்கள் Carrier advancement பார்த்தால், புரமோஷன் வாய்ப்பு அதிகமாக இருக்கிறது. அவர்களிடம் அரசினுடைய எந்தத்

[டாக்டர் மு. தம்பிதுரை] [2002 மே 10

தலையீடும் இல்லை. டிரான்ஸ்பர் எல்லாம் நினைத்தால் முன்பு போட வேண்டிய நிலைமைகள் இருந்தன. ஆனால், அவற்றையெல்லாம் மாற்றி கவுன்சலிங் சிஸ்டம் கொண்டு வந்திருக்கிறோம். ஆனால், கவுன்சலிங் கொண்டு வந்தால்கூட அதைவிட இவர்களுக்குப் பார்த்தால் ஒரு பல்கலைக்கழகமாக இருக்கும்போது, அவர்கள் யாரிடம் பணியாற்றுகிறார்கள் என்றால், ஒரு பேராசிரியரிடம் பணியாற்றுகிறார்கள். அப்போது ஐ.ஏ.எஸ். ஆஃபீசர்கள் எல்லாம் டைரக்டர்களாக உட்கார்ந்தார்கள் போன ஆட்சியிலே. அவர்களிடம் ஒரு கல்வியாளர் பணியாற்றுகிற நிலைமை இருந்ததை மாற்றுகிறோம் இப்போது.

*பிற்பகல் 12-10*

அரசாங்கத்தினுடைய எந்த ஒரு கட்டுப்பாடும் இருக்காது. நேரடியாக அவர்கள் இல்லாமல், ஒரு பேராசிரியர் இருக்கின்றார். அவருக்கு மேலே Vice Chancellor இருக்கின்றார். பிறகு அதற்கு மேலே, அதற்கு அடுத்ததாக, பதிவாளர் இருக்கின்றார். அவரும் ஒரு பேராசிரியர்தான். பிறகு அங்கே சிண்டிகேட் இருக்கிறது, செனட் இருக்கிறது, Academic Council இருக்கிறது. எந்தக் குறைபாடு இருந்தாலும், அவர்கள் அந்த உறுப்பினர்களிடத்திலே சொல்லலாம். இப்போதுள்ள முறையில் அரசுக்கும், கல்லூரிக்கும் என்ன தொடர்பு இருக்கிறது? நாம் transfer போடுகிறோமே தவிர, அதனுடைய வளர்ச்சிக்காக நாம் என்ன செய்யக்கூடிய நிலையில் இருக்கின்றோம்? ஆனால், பல்கலைக்கழகங்கள் என்றால், அது வேறு.

பல்கலைக்கழகங்களில் ஒவ்வொரு மாதமும், சிண்டிகேட், செனட் கூட்டங்கள் நடைபெறுகின்றன. அவர்கள் அப்போது அவர்களுடைய குறைகளைச் சொல்லலாம். அந்தக் கல்லூரியை மேலும் விரிவாக்கம் செய்வதற்குச் செய்யலாம். இதுபோன்ற முறையானது மற்ற மாநிலங்களிலேயும் இருந்துகொண்டுதான் இருக்கிறது. டெல்லியை எடுத்துக்கொண்டால், Constituent collegeதான், எல்லாம், இருக்கிறது. அரசாங்கம் கல்லூரிகளை நடத்துவது கிடையாது. அரசுக் கல்லூரிகள் எல்லாம் Delhi University -யிலேதான் இருக்கின்றன. அங்கே ஆசிரியர்களுக்கு என்ன குறைபாடு ஏற்பட்டுவிட்டது? வெளி நாடுகளுக்குச் செல்ல வேண்டுமென்றால், ஓர் ஆராய்ச்சிக்குச் செல்ல வேண்டுமென்றால், ஒரு International Conference-க்குச் செல்ல வேண்டுமென்றால், அவர்கள் அரசிடத்திலே இருந்து அனுமதி பெறுவதற்கு எவ்வளவு அவதியுறுகிறார்கள்? ஆனால் பல்கலைக்கழகத்திலே அப்படிப்பட்ட பிரச்சினை கிடையாது. உடனடியாகச் செல்லலாம். ஆகவே, அவர்களுடைய அறிவையும், திறமையையும் வளர்த்துக் கொள்வதற்கு



2002 மே 10] [டாக்டர் மு. தம்பிதுரை]

பல்கலைக்கழகம்தான் ஏதுவாக இருக்குமேயொழிய, அரசினுடைய மேற்பார்வையில் நேரடியாக இருப்பதால் சில சிக்கல்கள் இருக்கின்றன என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்தக் கல்லூரிகளை வளர்க்க வேண்டுமென்று சொன்னால், U.G.C.-யினுடைய grant -12 (B) Scale பார்த்தால், கல்லூரிகளுக்கு நிறையப் பணம் கிடைப்பதற்கு வாய்ப்புகள் நிறைய இருக்கின்றன. ஒரு பக்கம் தமிழக அரசும் உதவி செய்கிறது. பிறகு U.G.C. மூலமாகவும் grant பெறலாம். சில Special schemes, research schemes எல்லாம் இருக்கின்றன. அவற்றின் மூலமாகவும் பணம் பெறலாம். இப்படிப் பணம் பெறுவதன் மூலமாக, இந்த அரசுக் கல்லூரிகளையெல்லாம் பல்கலைக்கழகங்களோடு சேர்க்கும்போது, இன்னும் மேன்மேலும் வளர்வதற்கு வாய்ப்புகள் இருக்கின்றதேயொழிய, எந்த அளவுக்கும் தரம் தாழ்ந்துவிட வாய்ப்புக் கிடையாது. ஆகவேதான் அரசாங்கம் இந்த முடிவை எடுத்திருக்கிறது.

பாரிமோகன் அவர்களும், போளூர் வரதன் அவர்களும் பேசும்போது, இடஒதுக்கீடு பற்றிச் சொன்னார்கள். இந்த அரசாங்கம் இட ஒதுக்கீட்டைச் செயல்படுத்த வேண்டும் என்பதைக் கருத்தாகக் கொண்டிருக்கிறது. இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது, மானியத்திலே பேசும்போது, அந்தந்தப் பல்கலைக்கழகங்கள் இடஒதுக்கீடு செய்யாவிட்டால், அங்கே செய்ய வேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறார்கள். ஆகவே, அப்படிக் குறைபாடுகள் இருந்தால், நடவடிக்கை எடுப்பதற்கு நமக்கு அதிகாரம் உண்டு. அதனைச் செயல்படுத்த வேண்டும் என்பதுதான் அரசினுடைய எண்ணமும் ஆகும். ஆகவே, அத்தகைய இடர்ப்பாடுகள் அல்லது குறைபாடுகள் வராமல் பார்த்துக்கொள்வதற்கு அரசு உத்தரவாதம் தருகிறது.

கட்டணத்தைப் பற்றிச் சொன்னார்கள். கட்டணத்தை எந்த அளவுக்கு விதிக்கலாம் என்பதைப் பற்றியெல்லாம் முடிவு செய்ய சிண்டிகேட் இருக்கிறது. செனட் இருக்கிறது. அவர்களெல்லாம் முடிவு எடுப்பார்கள். அதற்காக, நினைத்தபடி கட்டணத்தை உயர்த்திவிட முடியாது. அது ஒரு ஜனநாயக அமைப்பு. அங்கேயும் ஒரு கட்டுப்பாடு இருக்கத்தான் செய்கிறது. அந்த அமைப்புகளிலேயும் உறுப்பினர்கள் இருக்கிறார்கள். கல்லூரி முதல்வர்கள் இருக்கிறார்கள். ஆசிரியர் பிரதிநிதிகள் இருக்கின்றார்கள். நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களும் அதிலே உறுப்பினர்களாக இருக்கிறார்கள். ஆகவே, ஏதோ பல்கலைக்கழகத்தோடு சேர்த்த உடனேயே கட்டணத்தை உயர்த்தி விடுவார்கள் என்றால், அது

[டாக்டர் மு. தம்பிதுரை] [2002 மே 10

வேண்டாம் என்று முடிவு எடுத்தீர்கள் என்றால், அங்கே நீங்கள் பேசுவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. ஆகவே, அரசுக் கல்லூரிகளாக இருந்தாலும் சரி, பல்கலைக்கழகக் கல்லூரியாக இருந்தாலும் சரி, கட்டண வீதத்தை நிர்ணயம் செய்வதற்கு அது, அதற்கு சில இடங்களிலே கட்டுப்பாடுகள் இருக்கின்றன. அதன் மூலமாகத்தான் மாற்ற முடியுமேயொழிய, வேறு ஒன்றும் செய்ய முடியாது. பாலபாரதி அவர்களும் அதைத்தான் சொல்லியிருக்கின்றார்கள்.

ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்களை நான் கேட்டுக்கொள்வது, உயர் கல்வியிலே தன்னாட்சி தருவதற்காகவும், ஆசிரியர் நலன் கருதியும், கல்வியின் தரத்தை உயர்த்துவதற்காகவும், தமிழகத்தில் ஒரு புதுமையைக் கொண்டு வருவதற்காகவும் புரட்சித் தலைவி அவர்கள் கொண்டு வந்த இந்தச் சட்டமுன்வடிவை நீங்கள் நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொண்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தெரசா மகளிர் பல்கலைக்கழகம் சம்பந்தமாக ஏதாவது சொல்ல வேண்டுமென்றாலும் சொல்லிவிடுங்கள். எல்லோரும் பேசியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதர் தெரசா பல்கலைக்கழகம் புரட்சித் தலைவர் அவர்களால் உருவாக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகமாகும். பெண்களுடைய வளர்ச்சிக்காகவும், அவர்களை முன்னேற்றுவதற்காகவும் பல்வேறு ஆராய்ச்சிகளையெல்லாம் கொண்டு, அந்தப் பல்கலைக்கழகமானது, ஒரு முன்மாதிரியான பல்கலைக்கழகமாக இருக்கவேண்டுமென்ற ஓர் எண்ணத்தில் கொண்டு வரப்பட்ட பல்கலைக்கழகம் ஆகும். ஆனால், காலப்போக்கிலே பல பிரச்சினைகள் காரணமாக, இடமாற்றம் செய்யப்பட்டு அந்தப் பல்கலைக்கழகம் முடக்கி வைக்கப்பட்டுவிட்டது.

ஆனால், புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடனேயே அங்கே சிறந்த முறையிலே அந்தப் பல்கலைக்கழகம் செயல்பட வேண்டும் என்பதற்காக, கொடைக்கானலிலே அதற்கான இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு அங்கே கட்டடம் கட்டுவதற்காக, பணத்தை ஒதுக்குவதற்காக அம்மா அவர்கள் உறுதி தந்திருக்கின்றார்கள். அதை ஒரு இணைப்புப் பல்கலைக்கழகமாக மாற்றி, பெண்கள் கல்லூரிகளையும் அதோடு சேர்த்து, அது சிறந்த முறையிலே பணியாற்றுவதற்காக இந்தச் சட்டமுன்வடிவில் இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தப் பல்கலைக்கழகம் மேலும்



2002 மே 10] [டாக்டர் மு. தம்பிதுரை]

முன்னேறுவதற்காக, நல்ல திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக இந்த அரசு முயற்சி எடுக்கும் என்று கூறி, இந்தச் சட்டமுன்வடிவையும் நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-15*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரிகள், பல்கலைக்கழகங்களின் உறுப்புகளாக மாறினாலும்கூட, கொடுக்கப்படுகின்ற மானியங்களிலே எதுவும் குறைவு இருக்காது; எந்த அளவிற்கு மானியங்கள் தேவைப்படுகின்றனவோ, அந்த அளவிற்குக் கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால் நிதியமைச்சர் சமர்ப்பித்த நிதிநிலை அறிக்கையிலேயும் சரி, கல்வித் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பிலேயும் சரி, இப்பொழுது இருக்கிற அளவிலேயே நிலைநிறுத்தப்படும் என்று இருக்கிறது. அதுவே கீழே, படிப்படியாகக் குறைக்கப்படும் என்று இருக்கிறது. ஆனால், 'குறைக்கப்படும்' என்பது எதற்காகவென்றால், இந்த உறுப்புக் கல்லூரிகளாக மாறிவிட்டால், படிப்படியாகக் குறைக்கப்படும் என்றுதான் அதன் பொருள். அப்படியிருக்கும்போது, இப்போது அவர் கொடுக்கின்ற விளக்கம், குறைக்கப்படமாட்டாது; தேவையான அளவிற்கு மானியங்கள் (Grants) கொடுப்போம் என்று சொல்கிறாரே, Budget-ல்--நிதிநிலை அறிக்கையிலே இருப்பது சரியா? இப்போது அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கம் சரியா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது இருக்கும் நிதி நெருக்கடியை வைத்துத்தான் அந்த வகையிலே சொல்லியிருக்கிறாரேயொழிய, நிதியானது முன்னேற்றம் அடைந்த பிறகு, இத்தகைய நிலைமைகள் எல்லாம் வராது. அதோடு, சில நேரங்களிலே பார்த்தால், சில கல்லூரிகளுக்கு அதிகமான வருவாய் எப்படிக் கிடைக்கும் என்றால், 12(பி)யிலே (குறுக்கீடு) இருங்கள், சொல்கிறேன். இருங்கள். U.G.C. Scheme -லே நிறைய funds இருக்கின்றன. அந்த மாதிரி நிதிகள் கிடைக்கும்பொழுது, தேவைகளைக் குறைக்கும் நிலைமை ஏற்பட்டுவிடும். ஆகவே, அதை வைத்துத்தான் சொல்லியிருக்கிறார்களேயொழிய, வேறு ஒன்றும் கிடையாது. படிப்படியாகக் குறைப்பது என்றால், நாம் U.G.C. -ன் மூலமாக அல்லது சில ஆராய்ச்சிகளின் மூலமாக அந்தக் கல்லூரிகளுக்குப் பணம் வரும் பொழுது, அதைப் படிப்படியாகக் குறைக்கலாம். ஆனால், அதே நேரத்தில், இடர்ப்பாடுகள் ஏற்பட்டால், பிரச்சினைகள் ஏற்பட்டால், அந்தப்

[டாக்டர் மு. தம்பிதுரை] [2002 மே 10

பிரச்சினைகளை வளரவிடாமல், அதற்குரிய பரிகாரத்தை இந்த அரசு செய்யும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கை, பக்கம் 9, பத்தி 18-ல், பல்வேறு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வரும் ஒட்டுமொத்த மானியங்கள் அல்லது உதவி மானியங்களின் தேவை குறித்து மறு ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. பள்ளிக் கல்வித் துறையிடமிருந்து உதவி மானியங்கள் பெறும் தனியார் மற்றும் அரசு நிதி உதவி பெறும் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றுக்கான நிதி உதவியின் அளவு நடப்பாண்டு அளவிலேயே நிலைநிறுத்தப்படும். அறிவாலோசனை வழங்கல் (Consultancy), செலவில் சிக்கனம் பேணுதல், மற்றும் ஏழை மாணவர்களைப் பாதிக்காதவண்ணம், பிற மாணவர்களிடமிருந்து பண்பாட்டுக் கட்டணத்தை ஓரளவிற்காவது வசூலித்தல் போன்றவற்றின் மூலம் பல்கலைக்கழகங்களும், நிதியுதவி பெறும் கல்லூரிகளும் தங்களது சொந்த நிதி ஆதாரங்களைப் பெருக்கிக்கொள்ள ஊக்குவிக்கப்படும். இதனையொட்டி, இந்நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வரும் அரசு நிதி உதவி படிப்படியாகக் குறைக்கப்படும் என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனவேதான் இதைக் கேட்கிறேன். அதைத் தெளிவுபடுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் கல்வியைப் பொறுத்த வரையில், இந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டு வருவதற்குக் காரணம், தன்னாட்சி தருவதற்காகத்தான் முக்கியத்துவம் தரப்படுகிறது. இப்பொழுது இருக்கும் சூழ்நிலையில், நிதியை ஒவ்வொரு கல்வி நிலையங்களும் பெருக்குவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் பெருக்குவதற்கான சாத்தியக்கூறுகளையெல்லாம் பரிசீலனை செய்ய வேண்டும் என்பதுதான் இதனுடைய கருத்தேயொழிய, அதற்காக, நாம் தருகின்ற மானியத்தை முழுவதும் எடுத்துவிடுவோம் என்பதாகக் கிடையாது. அத்தகைய, நிதியைப் படிப்படியாக பெருக்க வேண்டும். அதைப் பெருக்குகின்ற சமயத்திலே இது படிப்படியாகக் குறைக்கப்படுமேயொழிய, நிதியைப் பெருக்காவிட்டால் நாம் கொடுத்துத்தான் ஆக வேண்டும். சம்பளம் கொடுக்காமல் College-ஐ எப்படி நடத்த முடியும்? ஆகவே, அந்தச் சூழ்நிலையில், அத்தகைய ஆசிரியர்களுக்கோ, மாணவர்களுக்கோ பிரச்சினை வாராமல் இந்த அரசு பாதுகாக்கும் என்பதை மீண்டும் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.



2002 மே 10]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. பிரிவுகள் 2 முதல் 4 வரை, மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, மற்றும் இணைப்புப் பட்டியல், சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.

[2002 மே 10

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் பற்றிய சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/2002) நிறைவேற்றப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம் தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 12-20

**(ஈ) அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 2002 ஆம் ஆண்டு அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/2002) மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/2002)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

(@) 9-5-2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



2002 மே 10] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

'மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 17 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 17 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/2002) நிறைவேற்றப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

[2002 மே 10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

**(உ) குற்ற வழக்கு விசாரணைமுறைத் தொகுப்புச் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு, 2002**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 2002 ஆம் ஆண்டு குற்ற வழக்கு விசாரணைமுறைத் தொகுப்புச் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/2002), மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு குற்ற வழக்கு விசாரணைமுறைத் தொகுப்புச் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/2002)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் திருத்தம் குறித்த என்னுடைய கருத்துகளை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக எடுத்து வைக்கின்றேன்.

இந்தத் திருத்தத்தைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே இருந்து கொண்டிருக்கின்ற சட்டங்களில், நடைமுறைகளில் ஒரு மாற்றத்தைக் கொண்டுவர வேண்டுமென்றால், ஒரு திருத்தத்தைக் கொண்டு வரவேண்டுமென்றால், அந்தச் சட்டத்தினுடைய அடிப்படையை, நோக்கத்தைப் புரிந்துகொண்டு, மிகவும் சிந்தித்து, ஆழ்ந்து திருத்தங்கள்

@ 8-5-2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



2002 மே 10] [திரு. இ. புகழேந்தி]

கொண்டு வரப்படவேண்டும். ஏற்கெனவே இருக்கின்ற நடைமுறை; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறைத் துறை என்பது அரசிடம் இருக்கின்ற ஒரு துறையாகும்; அரசுத் துறை. நீதித் துறையிடம் இருக்கின்ற நிர்வாகத்திலே இருக்கின்றது நீதிமன்றம். நீதிமன்றத்திற்குக் குற்றம் சாட்டப்பட்டவர், 15 நாட்களுக்கு ஒரு முறை கொண்டுவரப்பட வேண்டும். Remand period extend செய்ய வேண்டும் என்கின்றபோது, அவர் நேரடியாக — in person— நீதி நிர்வாகத்தின் முன்னால், நீதிமன்ற நடுவரின் முன்னால் நிறுத்தப்படவேண்டும் என்பது இதனுடைய நோக்கம். ஏனென்றால், அரசுத் துறையாக இருக்கின்ற சிறைத் துறையில் இருக்கின்ற குற்றம் சாட்டப்பட்டவரை நேரடியாகப் பார்க்கவேண்டும் என்பதும், அவர் வழக்கறிஞரை, வருகின்ற நீதிமன்றத்திலே பார்க்கக்கூடிய ஒரு வாய்ப்பிருக்கிறது என்பதும் உள்ள நிலை. இவைகள் நாம் உற்று, முதல் நிலையாகக் கவனிக்கப்பட வேண்டியவை என்று நான் கருதுகிறேன்.

பிற்பகல் 12-25

அதுமட்டுமல்ல, மின்னணு காணொளி இணைப்பு ஊடகம்—இந்த மின்னணு காணொளி இணைப்பு ஊடக முறையில் இந்த அரசு ஆய்வு செய்திருக்கிறதா? இதை நிறைவேற்றுகின்ற நிலையில், இது எவ்விதமாக நடைமுறைச் சிக்கலுக்கு உள்ளாகும் என்பதைப் புரிந்துகொண்டிருக்கிறதா என்பதையெல்லாம், நான் இங்கே அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். உதாரணமாக, ஒரு நடுவர் மன்றம்; அதைப்போலச் சிறைச்சாலை. இந்த நடுவர் மன்றம், இந்தச் சிறைச்சாலை இரண்டிற்குமான தொடர்பு நிலைகளைக் கொண்டு வருவதற்கு, Internet connection அதாவது lease line, Internet connection என்கின்றபோது, B.S.N.L. (Bharat Sanchar Nigam Limited) மூலமாக, அவர்களிடம் அனுமதி பெற்று, கொண்டு வருகிறோம். அப்படிக் கொண்டு வருகின்ற இந்த lease line -ல் இருக்கக்கூடிய பிரச்சினைகள்; இதிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேற்றுக்கூடச் சொன்னார்கள். பார்க்க மட்டுமல்ல; பேசவும் முடியும் என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். ஆம், பேசவும் முடியும். ஆனால், இன்றைக்கு இருக்கின்ற technology நம்முடைய நிலைப்பாட்டில், Voice chatting. அது எப்படியென்றால், கடலூரை உதாரணத்திற்கு நான் சொல்ல விரும்புகிறேன். 64 K.B.P.S. Kilo--bytes per second Band-width என்பது measurement of speed. அதை வைத்துத்தான் Voice Chatting— Voice வருவது கடலூரைப் பொறுத்தவரையில். இப்போது சிட்டியிலே இருக்கிற நிலைமைகள் வேறு; சிட்டியைத் தாண்டி அங்கே இன்னும் 128

எல்லாம் சரியாக வந்து சேரவில்லை. ஆகவே, voice என்பது சரியாக, தொடர்ந்து, சீரான நிலையில் வருவதற்கான வாய்ப்புகள், சாத்தியக்கூறுகள் மிகக் குறைவு. அதுதான் இன்றைக்கு இருக்கிறது. இது எல்லா இடங்களிலேயும் நிலவுகிற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால், நாம் பார்க்கிறோம். பார்ப்பது எப்படி? Web Camera. Web Camera ஒன்று வைக்கிறார்கள். எப்படி வைக்கிறார்கள்? நடுவர் மன்றத்திலே ஒரு computer. சிறைச்சாலையிலே ஒரு computer.

சிறைச்சாலையிலேகூட, கடலூர் மத்திய சிறைச்சாலையிலே--23 நடுவர் மன்றங்களை உள்ளடக்கியது, எங்கள் மாவட்டத்தில். அதுமட்டுமல்லாது--தஞ்சை, செங்கல்பட்டு, நாகை போன்ற இடங்களிலேயிருந்துகூட, குற்றம் சாட்டப்பட்டவர்கள், இடம் இல்லாத நிலையில், கடலூர் கொண்டு வரப்படுவார்கள். இப்படி அந்த சிறைச்சாலையிலே அங்கே வைக்கப்படுகின்ற அவர்கள், ஆங்காங்கு வைக்கப்பட்டிருக்கிற Computers மூலமாக நேரடியாகத் தொடர்பு கொள்ள முடியுமா என்றால், அதிலும் ஒரு கேள்வி. ஏனென்றால் கிளைச் சிறைச்சாலைகளிலேயும் remand கைதிகள் இருக்கின்ற சூழ்நிலைகள் உண்டு.

ஆக, ஒரு நீதிமன்றத்தில் கிட்டத்தட்ட 50 ஆயிரம் ரூபாய்க்கு மேலே உள்ள ஒரு Computer. சிறைச்சாலைகளிலே கடலூர் மாவட்டத்திலே மட்டும் 23 computers என்றால், மாநிலம் முழுவதும் சுமார் 400-க்கும் மேற்பட்ட நடுவர் மன்றங்கள் இருக்கும். சிறைச்சாலைகள், கிளைச் சிறைகள். அத்தனை இடங்களிலும் இத்தனை செலவுகளை அரசு செய்தாக வேண்டும். இது ஒன்று. பணச் செலவு என்று நோக்கத்திலே குறிப்பிட்டு இருப்பதால், இதை நான் இங்கே தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன். அதுமட்டுமல்ல, நாம் தனியாக Dish வைக்கிறோமா? அல்லது இந்த link line -ல் கொடுக்கிறோம் என்றால், Dish வைப்பதற்கு முன்னால் அதிலே ஒரு குறை. சரியாக அது இன்னும் இயக்கப்படவில்லை. இங்கே தமிழகத்திலே சரியான result இல்லை என்பதையும் உங்களுக்கு நான் சொல்லிக்கொண்டு. அதைப்போல, நாம் Dish Antenna வைக்கவில்லையென்றால்-- Modem--இந்த Telephone line- ஐப்போல, மாதாமாதம் பணம் கட்ட வேண்டும். நான் கேட்பது, நிறுவுகின்ற நிலையில் இவ்வளவு சிக்கல்கள் இருக்கிறபோது, நீதிமன்றங்களிலே நாம் தொடர்ந்து பணியாற்றுகின்ற காரணத்தால், நமக்குத் தெரியும்; இங்கே இருக்கின்ற பல பேர் வழக்கறிஞர்கள். ஒரு 5, 6 ஆண்டுகளுக்கு முன்பு—இப்போது Judicial Magistrate —ஒரு 5, 6 ஆண்டுகளுக்கு முன்பு Judicial I Class Magistrate; Judicial II Class Magistrate என்று இருந்த காலங்களில், I Class Magistrate





ஆக இருப்பவர்கள், வாரத்திற்கு ஒரு நாள், வெள்ளிக்கிழமை மதியம், இரயில்வே கோர்ட்டுக்குப் போய் வருவார்கள். இது உங்களுக்குத் தெரியும். ஆக, இரயில்வே கோர்ட்டுக்குப் போவதற்கு எப்படி அவருக்கு ஒரு duty. இருக்கிறதோ, அதைப்போல, நடுவர்களாக இருப்பவர்களுக்கு, ஒரு turn duty-ஆக, நீதிமன்றங்களிலே இருக்கிற நடுவர்கள் சிறைக்கே சென்று, அவர்கள் remand extension நேரடியாகக்கூடத் தரலாம். இது ஒரு ஆலோசனைதான். ஏனென்றால், நேற்றைக்கு நிதியமைச்சர்கூடச் சொன்னார், நல்ல ஆலோசனைகள் இருந்தால் சொல்லுங்கள் என்று. ஏனென்றால், இதிலே இருக்கின்ற அந்தச் சிக்கல்களில் இன்னொன்று. பார்க்கலாம்; பேசலாம். Web Camera. Web Camera -வினுடைய area. அந்த Web Camera -வில் ஒரு accused -இனுடைய முகம் அல்லது அவருடைய உருவம் தெரிய வாய்ப்பு இருக்கிறதே தவிர, அக்கம்பக்கத்திலே இருப்பவர்கள், side நிலைகள், அல்லது எதிரிலே இருப்பவர்களை நாம் பார்ப்பதற்கான வாய்ப்புகள் குறைவு. நான் யாரையும் குறை சொல்ல வேண்டுமென்றோ, அல்லது யார் மீதாவது குற்றம் சுமத்த வேண்டும் என்றோ சொல்லவில்லை. எங்கோ ஓரிடத்தில், யாரோ ஒருவர், தங்களுடைய ஒரு மிரட்டலாக, அல்லது தாங்கள் சொல்வதைச் சொல்ல வேண்டுமென்று சொல்லக்கூடிய ஒரு நிலையை அச்சுறுத்தலாகக்கூட அங்கே சொல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதைப் பணியாற்றுகின்ற வழக்கறிஞர்களும், இன்னும் இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்களும் மிக நன்றாக அறிவார்கள். ஆகவே, குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு இருக்கக்கூடிய வாய்ப்பு நிலைகளில், தன்னை நிரபராதி என்று நிரூபிக்கக்கூடிய வாய்ப்பு நிலைகளில் சில உரிமைகளை இழக்கக்கூடிய நிலைகளும்--(குறுக்கீடு) நான் சொல்லி முடித்து விடுகிறேன்—இருக்கிறது என்பதை நான் இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அதைப்போல, ஒரு ஜெயிலிலே மட்டும், சென்டிரல் ஜெயிலில் மட்டும் இந்த நிலையை உருவாக்கிவிட்டோமானால், மற்ற கிளைச் சிறைகளிலே இருக்கிறவர்களையும், அந்த சென்ட்ரல் ஜெயிலுக்குக் கொண்டு வரவேண்டும். அதுவும் மனித சக்திதான். அங்கிருந்து அவர்களைக் கொண்டு வரவேண்டிய நிலைப்பாடுகளும் இதிலே இருக்கின்றன. கோளாறுகள் அடிக்கடி--அதாவது மின்வெட்டு என்று நான் சொல்லவில்லை--அந்த லைனிலேயே வரும்போது, இன்டர்நெட் லைனில் வரும்போது பல கோளாறுகளும், பல சிக்கல்களும் ஏற்படுகின்றன; இப்போது நடந்துகொண்டு இருக்கின்றன நடைமுறையிலே.

*பிற்பகல் 12-30*

ஆகவே 24 மணி நேரமும் அது இயங்க வேண்டும். 24 மணி நேரமும் அது இயங்குகின்றபோது, இதிலே ஏற்படக்கூடிய இந்தத் தடைகள், இந்தக் கோளாறுகளின் காரணமாகவும், அக்யூஸ்டு-மாஜிஸ்ட்ரேட் என்ற அந்த நிலைகளைச் சரியான நேரத்திலே சந்திப்பதற்கான வாய்ப்புகளும், சாத்தியக்கூறுகளும் குறைவதற்கு வாய்ப்புகள் உண்டு என்ற காரணத்தினாலும் சொல்கிறேன். உடனே நிறைவேற்றப்படும். என்றால் உடனே எப்படிச் செய்ய முடியும்? அதற்காகத்தான் நான் கேட்டேன். எவ்வளவு செலவு ஆகும்? ஆய்வு நடந்ததா? நீதிமன்றத்திலே இப்போது ஃபோனே கிடையாது. நடுவர் கோர்ட்டிலே ஃபோன் கிடையாது. நடுவர் கோர்ட்டிலே ஃபோன் கிடையாது என்பது மட்டுமல்ல, 10 ஆயிரம் ரூபாய்க்கு ஒரு ஜெராக்ஸ் மெஷின் இருந்தாலும்கூட பளுக்கள் குறையும். இவை எல்லாம் இல்லாத நடுவர் மன்றங்கள், வாடகைக் கட்டடங்களிலே எங்கெங்கோ இயங்குகின்றன. ஆகவே, அங்கே வைப்பதற்கு, இவற்றைக் கொண்டுப் போவதற்கு டெக்னிக்கல் ஆகவும், அதைப்போல, அரசியல் சட்ட விதிமுறைகளின்படியும் இதிலே சிக்கல்கள் இருக்கின்றன. நான் அதற்குள்ளே இப்போது போகவில்லை. ஆகவே, நடைமுறைச் சிக்கலை உங்கள் முன்னாலே நான் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இது, பணச் செலவையும் அதிகரிக்கும். நிர்வாகப் பிரச்சினையையும் உருவாக்கும். தனியாக ஆட்களைப் போட்டு இயக்க வேண்டுமென்றால், அவர்களைப் பராமரிக்க அதற்கும் செலவு வகைகளை நாம் செய்தாக வேண்டும். ஆக, சரியான முறையிலே, எந்த நோக்கத்திற்கு இது உருவாக்கப்பட்டதோ, அதையும் இது செய்வதற்கான வழிவகைகளை உருவாக்காது என்கின்ற காரணத்தினாலும், அரசிற்கு ஒரு ஆலோசனையாக நான் சொல்ல விரும்புவது ஒன்று, இதை மறுபரிசீலனை செய்யலாம்; அல்லது முழுவதுமாக எந்த வகையிலேயுமே ஏற்றுக்கொள்ள முடியாத வகையில் இருக்கின்ற காரணத்தால், குற்றஞ்சாட்டப்பட்ட மனிதர்களுக்கான உரிமைகளை, சலுகைகளை, வாய்ப்புகளை மறுக்கின்ற ஒரு சூழ்நிலை இதிலே அதிகம் பொதிந்து இருக்கின்ற காரணத்தினால், இதனை இந்த அரசு கைவிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

*** மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த Video Conferencing System கொண்டு வருவதை மாண்புமிகு உறுப்பினர் திரு. புகழேந்தி அவர்கள் குறை கூறி





இருக்கிறார்கள். அதை விமர்சித்து இருக்கிறார். அதில் எழக்கூடியதாக அவர் கருதுகின்ற பல குறைபாடுகளை அவர் இங்கே எடுத்துரைத்திருக்கிறார். இதே ரீதியில், இந்தச் சட்டமுன்வடிவின்மீது பேசக்கூடிய பிற உறுப்பினர்களும், எதிர்க்கட்சி உறுப்பினர்களும் கருத்துகளைத் தெரிவிக்க வாய்ப்பு உள்ளதால், சில விளக்கங்களை இப்போதே சொல்லிவிடுவது நல்லது என்று கருதுகின்றேன்.

மாஜிஸ்ரேட்டுக்கும், கைதிகளுக்கும் இடையே ஒரு தொடர்பு ஏற்படுத்துவதற்காக, நேரடியான தொடர்பு ஏற்படுத்துவதற்காக Video Conferencing முறையைக் கொண்டு வரவேண்டும் என்ற அவசியம் எதனால் எழுந்தது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். சில கைதிகள், அதுவும் ஆபத்தான பேர்வழிகளாகக் கருதப்படுகின்ற கைதிகள் தப்பித்துச் சென்றதால் எழுந்த ஒரு யோசனை இது. மேலும், கைதிகளைச் சிறைச்சாலைகளிலிருந்து நீதிமன்றங்களுக்கு, அழைத்துச் செல்லும்போது, வழியில் ஏற்படக்கூடிய பாதுகாப்பு அபாயங்கள்—security risks-- இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டுதான், இந்த முறையை அறிமுகப்படுத்தவேண்டுமென்று அரசு கருதுகிறது. ஏற்கெனவே, இந்த Video Conferencing முறை வெற்றிகரமாக ஆந்திர மாநிலத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் புகழேந்தி அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். அவர் ஏதோ மிகவும் அறிவார்ந்த கருத்துகளைச் சொல்வதாக நினைத்துக்கொண்டு, சில technical points-ஐ எல்லாம் இங்கே பேசினார்கள். அவையெல்லாம் இந்தத் திட்டத்திற்குப் பொருந்தாது. Optical Fibre Cable என்ற முறையைக் கொண்டு வரும்போது, இந்தியாவிலிருந்து சிங்கப்பூருக்குக்கூட Video Conferencing மூலமாகப் பேச முடியும். அந்தத் திட்டம்கூட விரைவில் துவங்கப்பட உள்ளது. இங்கே தமிழ்நாட்டிலிருந்து சிங்கப்பூர் வரை கடலுக்கு அடியிலேயே கேபிள் கொண்டு சென்று இருக்கிறார்கள், Sub-marine under-water cable . ஆகவே, அதன் மூலம் சென்னையில் இருந்துகொண்டு சிங்கப்பூரிலுள்ளவர்களோடு Video Conferencing மூலமாகப் பேச முடியும். இங்கிருந்து அமெரிக்காவிலுள்ளவர்களோடுகூட Video Conferencing மூலமாகப் பேச முடியும். ஏற்கெனவே, ஆந்திர மாநிலத்தில் ஒரு மாஜிஸ்ட்ரேட் ஒரு கைதியை ரிமாண்டு செய்வது குறித்து, Criminal Procedure Code, Section 167-ன்கீழ் முடிவு எடுப்பதற்கு ஏதுவாக, Section 167 (2) (b) of the Criminal Procedure Code- ஐ amend செய்திருக்கிறார்கள்.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2002 மே 10

*பிற்பகல் 12-35*

இதற்காக அங்கே உயர் நீதிமன்றத்தின் அனுமதியை வேண்டி உயர் நீதிமன்றமும் ஒப்புதல் அளித்திருக்கிறது.

காவல் துறையினர் அழைத்துச் செல்லும்போதோ அல்லது சிறைச் சாலைகளிலிருந்தோ கைதிகள் தப்பித்துச் செல்வது என்பது, புதிதாக இன்று, நேற்று நடக்கின்ற ஒரு விஷயம் அல்ல. கடந்த 10 ஆண்டுகளில் இவ்வாறு தப்பித்துச்சென்ற கைதிகளின் விவரங்களை இங்கே நான் தெரிவிக்க விரும்புகிறேன். 1991-ல் 53 பேர், 1992-ல் 49 பேர், 1993-ல் 48 பேர், 1994-ல் 42 பேர், 1995-ல் 47 பேர், 1996-ல் 36 பேர், 1997-ல் 59 பேர்,, 1998-ல் 70 பேர், 1999-ல் 76 பேர், 2000-ஆவது ஆண்டில் 56 பேர், 2001-ல் 73 பேர். ஆக மொத்தம் 609 கைதிகள், கடந்த 10 ஆண்டுகளில் மட்டும் இவ்வாறு காவல் துறையினரால், சிறைச்சாலைகளிலிருந்து நீதி மன்றங்களுக்கு அழைத்துச் செல்லும் வழியிலோ அல்லது சிறைச்சாலைகளிலிருந்தோ தப்பித்துச் சென்றிருக்கிறார்கள்.

Video Conferencing முறையின் அடிப்படைத் தத்துவம் என்னவென்றால், geographical ரீதியாக வெவ்வேறு இடங்களில் இருக்கின்ற நபர்களுக்கிடையே ஒரு நேரடித் தொடர்பை, ஒரு நேரடிச் சந்திப்பையே, அது facilitate செய்கிறது. அதற்கான வழியை அது செய்து கொடுக்கிறது. Video Conferencing என்று சொன்னால்;--இந்தத் தலைமைச் செயலகம் இருக்கிறது. இது மிகப் பெரிய வளாகம்.—இங்கே முதலமைச்சர் அறையில் உட்கார்ந்து கொண்டு இருக்கையில் ஒவ்வொரு அதிகாரியும் இங்கே முதலமைச்சர் அலுவலகத்திற்கு வந்து சேருவதற்கு நீண்ட நேரம் ஆகிவிடுகிறது. அப்படி அதிகாரிகளுடன் முதலமைச்சர் பேசவேண்டுமென்று சொன்னால், அவர்கள் இனிமேல் நேரடியாக வரவேண்டிய அவசியமே இருக்காது. Video Conferencing மூலமாகவே, முதலமைச்சர் தன்னுடைய அலுவலகத்தில் உட்கார்ந்துகொண்டு, அவரவர் அலுவலகத்தில் உட்கார்ந்து இருக்கும் அரசு அதிகாரிகளோடு நேரடியாகக் கலந்துரையாடல் நடத்த முடியும். அதைப்போலவே, இங்கே தலைமைச் செயலகத்தில் உட்கார்ந்துகொண்டு, வெவ்வேறு மாவட்டங்களில் இருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல் துறைக் கண்காணிப்பாளர்கள், இவர்களோடு நேரடியாகக் கலந்துரையாடல் நடத்த முடியும். அதுபோன்றே, வெவ்வேறு மாநிலங்களுக்கிடையேயும் இந்த Video Conferencing மூலமாக, இங்கே இருக்கின்ற ஒருவர், வேறு மாநிலத்தில் இருக்கின்ற ஒருவரோடு பேச முடியும். வேறு நாடுகளில் இருக்கின்றவர்களோடும் பேச முடியும். ஆகவே, நன்றாகத் திட்டமிட்டுச் செயல்படுத்துகின்ற Video Conferencing முறையினால் பல பேருடைய



2002 மே 10] [செல்வி ஜெ ஜெயலலிதா]

பொன்னான நேரம் பாதுகாக்கப்படுகின்றது. நேரத்தை வீணாக்காமல் பாதுகாக்க முடியும்.

அதுமட்டுமல்லாமல், வீண் செலவையும் இது தவிர்க்கும். இந்தத் திட்டத்திற்கு எக்கச்சக்கமாகச் செலவாகும் என்பதுபோல் மாண்புமிகு உறுப்பினர் புகழேந்தி அவர்கள் இங்கே பேசினார்கள். அவ்வளவு ஒன்றும் செலவு ஆகாது. அதிகமாகச் செலவு ஆகாது. நீதிமன்றங்களுக்கும், அதாவது, மாஜிஸ்ட்ரேட்களுக்கும், கைதிகளுக்கும் இடையே இந்த Video Conferencing முறையை ஏற்படுத்திச் செயல்படுத்துவதனால், நமக்கு limited ஆக police man-power இருக்கின்ற நிலையில் காவல் துறையிலுள்ள மனித சக்திக் குற்றங்களைக் கண்டுபிடிப்பதில், குற்றங்களைக் கட்டுப்படுத்துவதில், சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதில், இதர முக்கியமான பணிகளில் அவர்கள் அதிக நேரமும், கவனமும் செலுத்துவதற்கு இது வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்பொழுது dangerous convicts, dangerous criminals என்று கருதப்படுகின்ற, அபாயகரமான, ஆபத்தான கைதிகளைச், சிறைச்சாலையிலிருந்து நீதிமன்றங்களுக்கு அழைத்துச் செல்லும்போது escort duty-க்காக, பாதுகாப்புப் பணிக்காக ஏராளமான காவல் துறையினர், கூடச் செல்ல வேண்டியிருக்கிறது. வாகனங்களுக்குச் செலவு ஆகிறது. இரயில் பயணங்களுக்குச் செலவு ஆகிறது. அவர்கள் அத்தனை பேருக்கும் டி.ஏ., சாப்பாட்டுச் செலவு, உணவுப் படி என்று எக்கச்சக்கமாகச் செலவு ஆகிறது. இந்தச் செலவுகளை நாம் பார்க்கின்றபோது, Video Conferencing முறையைக் கொண்டுவந்து அமல்படுத்துவதற்கு ஆகின்ற செலவு மிக, மிகக் குறைவானது. அது ஒரு One time expenditure. ஒரு முறைதான் செயல்படுத்தப் போகிறோம். ஒரு முறைதான் அதைச் செலவு செய்யப் போகிறோம். இதனால் recurring expenditure, maintenance -க்கு எல்லாம் ரொம்ப ஆகாது. Limited expenditure; அதிகமாக ஆகாது. ஏற்கெனவே கணக்கிட்டு இருக்கிறோம். அந்த விவரங்கள் தற்போது என்னிடத்தில் இல்லை. பிறகு உங்களுக்குத் தெரிவிக்கிறேன். ஆகவே, இது மிகப் பெரிய செலவினத்தை அரசுக்கு ஏற்படுத்துமோ என்ற அச்சம் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தேவையில்லை. This can be effected at a very reasonable cost. முக்கியமாக, இந்த escort duty -க்காகக் காவல் துறையினருடைய நேரம் வீணாகிறது. இதற்காக அரசாங்கத்திற்குத் தேவையில்லாத வீண் செலவு ஏற்படுகிறது. இவற்றையெல்லாம் கட்டுப்படுத்துவதற்கு இந்த Video conferencing முறை உதவி புரியும், வழிவகுக்கும் என்பதனால்தான், இதைக் கொண்டு வரவேண்டுமென்று அரசு கருதுகிறது. இது ஒரு முற்போக்கான திட்டம். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் இதற்கு ஆதரவு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அமைகிறேன்.

[2002 மே 10

*பிற்பகல் 12-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் Video Conferencing முறையைப் பற்றி விளக்கமாகச் சொன்னார்கள். எங்களுக்கு இருக்கிற ஐயம்; பணச் செலவைப் பற்றியோ அல்லது வளர்ந்து வருகிற விஞ்ஞான யுகத்தில் இது தேவையற்ற ஒன்று என்றோ நாங்கள் கருதவில்லை. இதிலே இருப்பதெல்லாம் ஒரேயொரு அச்சம்தான். என்னவென்று கேட்டால், குற்றம் சாட்டப்பட்ட கைதி, மாஜிஸ்ட்ரேட்டுக்கு முன்னால் நிற்கிறபோது, தன்னைப் போலீசார் துன்புறுத்தினார்களா, அடித்தார்களா, அல்லது அவர் எப்படி நடத்தப்பட்டார், எவ்வளவு கொடூரமாக நடத்தப்பட்டார்கள் என்பதை மனம்விட்டு, நேருக்கு நேர் சொல்கிறபோது, அவனுடைய முகக்குறி, அவன் சொல்கிற வார்த்தைகளின் தொனி, இவை மூலம் அவனுக்கு ஒரு பரிகாரம் கிடைக்கும். ஆனால் Video Conferencing-ல் உட்கார்ந்துகொண்டு, கேமராவை வைத்துவிட்டு, 'மரியாதை, சுட்டு விடுவோம். ஜாக்கிரதை' என்றால், 'நல்லா செய்றாங்கய்யா, நல்லா செய்றாங்கய்யா' அப்படீன்னு சொல்வானே தவிர, நேச்சுரலாக அவனுக்குக் கிடைக்கிற அந்த உரிமை போய்விடுமோ என்பதுதான் இதிலே இருக்கிற பிரச்சினையே தவிர, வேறல்ல. இன்றைக்கு Video Conferencing என்பது வளர்ந்து வருகிற விஞ்ஞான உலகத்தில் ஒரு புதிய கண்டுபிடிப்பு. அது வரவேற்கத்தக்கது. அதில் தலையிடவில்லை. முதலமைச்சர் அவர்கள் சொல்வதைப்போல அங்கே உட்கார்ந்துகொண்டு கலெக்டரிடம் கடகடவென்று பேசலாம். அதற்கு உதவும். ஆனால், பாதிக்கப்பட்டு, அடங்கி, ஒடுங்கி, உதை வாங்கியிருக்கிறானே, அவனுக்குச் சரியாக வருமா?

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்கு வளமான கற்பனை இருக்கிறது. அதற்கு என்னுடைய பாராட்டைத் தெரிவிக்கிறேன். ஆனால், இந்த Video Conferencing முறையில், Camera வைக்கிறார்கள் என்று சொன்னால், அதற்கு ஒரு limited frame கிடையாது. தேவைப்பட்டால் close-up-ஐக் காட்ட முடியும். தேவைப்பட்டால் முழு அறையையும் காட்ட முடியும். அங்கே இருக்கின்ற கைதி மட்டுமல்ல, அக்கம்பக்கத்தில் இருக்கின்ற காவல் துறையினரையும் காட்ட முடியும். ஆகவே, அப்படியெல்லாம் யாரும் மிரட்டி, உண்மைக்கு மாறான ஒரு வாக்குமூலத்தைக் கொடுக்கச் சொல்லி, கைதியை நிர்ப்பந்தப்படுத்த



2002 மே 10] [செல்வி ஜெ ஜெயலலிதா]

முடியாது.' அதற்கெல்லாம் இதில் வழியே இல்லை. அப்படிக் கைதி விரும்பினால், யாராவது துன்புறுத்தியிருந்தால், அந்தக் காயங்களைக்கூட வீடியோவிலேயே, Video Conferencing மூலம் அவர் நீதிபதிக்குக் காட்ட முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Criminal Procedure Code-க்கு...

*** மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புகழேந்தி அவர்கள் பேசுகிறபோது, இந்த continuous recurring expenditure in regard to maintenance-ஐப் பற்றிச் சொன்னார்கள். ஆனால், இந்த Optic Fibre Connectivity கொடுக்க முன்வந்திருக்கிற நிறுவனங்கள் அந்த ஒப்பந்தத்தை மாநில அரசோடு போட்டிருக்கிற, Reliance, Bharti Airtel, Dishnet போன்ற நிறுவனங்கள் எல்லாம், மைய அரசினுடைய ஆணையின்படி ஒப்பந்தம் போட்டிருக்கின்றன. அரசு அலுவலகங்கள் எங்கு இருந்தாலும், அது சிறைச்சாலையாக இருக்கட்டும், எங்கு இருந்தாலும் நிறுவனத்தினர் தங்கள் செலவிலேயே இதைக் கொடுக்கிறார்கள். There won't be any expenditure that would be incurred by Government. அந்தச் செலவையும் அவர்கள்தான் ஏற்றுக்கொள்கிறார்கள் என்பது ஒப்பந்தத்தில் இருக்கிறது. அந்த விதத்தில் அரசுக்குச் செலவு ஏற்படாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர் செலவினங்கள் என்கிறபோது, maintenance--பராமரிப்பு--என்று சொன்னேன். ஒரு கம்ப்யூட்டரைக்கூட நாம் வாங்கி வைத்தால், ஒன்றரை வருடம், இரண்டு வருடத்தில் அதில் ஏற்படக்கூடிய செலவுகள் அந்தப் பராமரிப்புச் செலவுகள் எல்லாம் இதில்தானே சேரும்? எடுத்தவுடனேயே நீங்கள் இன்றைக்கு கான்ட்ராக்ட் போட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியதைப்போல, இங்கேயிருந்து கலெக்டர்களிடம் பேசுவது, அதிகாரிகளிடம் பேசுவது என்பதெல்லாம் வரவேற்கக்கூடிய ஒன்று. ஆனால், இதிலே ஏற்கெனவே நான் குறிப்பிட்டபடி accused-னுடைய நிலைகளைப்பற்றி மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும் சொன்னார்கள். அவனுடைய நிலைமை; மிகவும் கடினமான ஒரு சூழ்நிலையில்தான் இருக்கிறான். அதாவது, நீதி நிர்வாகத்தினுடைய

நீதித் துறை ஒரு பக்கம். அதுதான் நீதிமன்றம். அரசாங்கத்தினுடைய துறை, சிறைத் துறை இந்தச் சிறைத் துறையில் இருப்பவரை நீதித் துறை நேரடியாகக் காணவேண்டுமென்ற தத்துவத்தின் அடிப்படையில்தான், 15 நாட்களுக்கு ஒரு முறையாவது பார்க்கவேண்டுமென்பதுதான் சிஸ்டமே, சட்டமே. அதை நாம் புரிந்துகொண்டு, விஞ்ஞான முறைப்படி, அதற்கு மேலும் மெருகேற்றி சரியாகக் கொண்டு வருவீர்களென்றால், எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால், இன்றைக்கு இருக்கக்கூடிய சூழ்நிலையில் இது குறைபாடுடைய சட்டம்.

*பிற்பகல் 12-45*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முறையினை நடைமுறைப்படுத்துவதற்கு, நீதித் துறை ஆதரித்து இருக்கிறது. நீதித் துறை பரிந்துரைத்து இருக்கிறது. எப்படி, எப்படிச் செயல்படுத்தலாம் என்று உயர் நீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதி அவர்களே இதற்கான வரையறைகளை, அணுகுமுறைகளை அரசுக்குத் தந்து இருக்கிறார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** ஒரு நிமிடம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. புகழேந்தி கேட்ட விவரத்தையும் நான் பெற்றுவிட்டேன். இந்த Video Conferencing முறையைத் தமிழ்நாடு முழுவதும் செயல்படுத்துவதற்கு, தொடரும் செலவினத்தையும் சேர்த்து 9 கோடி ரூபாய் ஆகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது மிக அதிகம் அல்ல என்று மாண்புமிகு உறுப்பினரே ஏற்றுக்கொள்வார் என்று நம்புகிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்ற வழக்கு விசாரணை முறைத் தொகுப்புச் சட்டம், 1973 ஆம் ஆண்டிற்கான ஒரு திருத்தச் சட்டத்தை இன்று தமிழக அரசு கொண்டு வந்திருப்பதை, தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக நான் எதிர்க்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இங்கே தெளிவான விளக்கத்தைத் தந்தாலும்கூட, அந்த விளக்கம் சட்டத்திற்குப் பொருந்துமா என்று சொன்னால், நிச்சயமாக இருக்காது. ஒரு குற்றவாளி கைது செய்யபபட்டவுடன்.....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** ஒரு நிமிடம்.... மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புதிய முறைக்கு உயர் நீதிமன்றமே





ஒப்புதல் அளிக்கும்போது, இது சட்டத்திற்குப் பொருந்தாது என்று மாண்புமிகு உறுப்பினர் எப்படிக் கூறுகிறார் என்று எனக்குப் புரியவில்லை. எது சட்டம், எது சட்டமாகாது, எது சட்டத்திற்கு உட்பட்டது, எது சட்டத்திற்கு உட்படாதது என்று நீதிமன்றம்தான் முடிவு செய்ய வேண்டும். நீதிமன்றமே ஒப்புதல் அளித்திருக்கும்போது, இதில் என்ன சிக்கல் இருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றம் என்பது, இயற்றப்பட்ட சட்டத்திற்கு தீர்ப்புத் தரலாமேயொழிய, அவர்களே ஒரு சட்டத்தை இயற்ற முடியாது. அது நம்முடைய வரையறைக்கு உட்பட்டது. 1973 ஆம் ஆண்டு நாம் ஒரு சட்டத்தை இயற்றி இருக்கிறோம். அந்தச் சட்டத்தின்படி, அதாவது 57-வது பிரிவின்படி, ஒரு குற்றவாளி கைது செய்யப்பட்டால், 24 மணி நேரத்திற்குள் Article 21 (2) பிரகாரம், உடனடியாக அவரை நீதிமன்றத்திற்குக் கொண்டுவந்து ஒப்படைக்கப்பட வேண்டும் என்று நாம் ஒரு சட்டத்தை இயற்றினோம். பிறகு, அதே Criminal Procedure Code-இல் அதாவது. Seection 167, Sub-section 2 பிரகாரம், ஒரு குற்றம் சாட்டப்பட்ட நபர் கைது செய்யப்பட்டவுடன் (குறுக்கீடு) switch இருக்கிற இடம் தெரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் வைத்திருக்கிற புத்தக அளவு அவ்வளவு பெரியது! (சிரிப்பு)

**THIRU C. GNANASEKARAN:** 'The Magistrate to whom the accused person is forwarded under this section may, whether he has or has no jurisdiction to try the case, from time to time, authorise the detention of the accused in such custody as such Magistrate thinks fit, for a term not exceeding 15 days in whole, and if he has no jurisdiction to try the case or commit it for trial and considers further detention unnecessary, he may order the accused to be forwarded to a Magistrate having such jurisdiction' என்று அந்த section-இல் சொல்லப்படுகிறபோது, அந்த section-லேயே, 15 நாளைக்கு ஒரு முறை, நீதிமன்றத்தின் முன்னால் கொண்டு வந்து நிறுத்தப்பட வேண்டுமென்று ஏற்கெனவே நாடாளுமன்றத்திலே சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. இது ஒரு Central Act. அவ்வாறு இயற்றப்படக்கூடிய ஒரு சட்டத்திற்கு, ஒரு High Court, உயர் நீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதியோ, நீதிபதியோ அல்லது உச்ச நீதிமன்றத்தினுடைய நீதிபதியோ, தலைமை நீதிபதியோ,

[திரு. சி. ஞானசேகரன்] [2002 மே 10

தனியாக opinion கொடுக்க முடியாது. ஏற்கெனவே, இப்படிப்பட்ட ஒரு வழக்கு உச்ச நீதிமன்றத்திற்கோ, உயர் நீதிமன்றத்திற்கோ சென்று, இப்படிப் புதிதாக ஒரு Video Conferencing, அதாவது, 167, sub-section 2-க்கு ஒரு amendment தமிழ்நாட்டிலே கொண்டு வந்திருக்கிறார்கள் என்று வருகிறபோது, இதை ஏற்கலாமா, ஏற்கக் கூடாதா என்று, பிறகுதான் தீர்ப்புச் சொல்லலாமேயொழிய, எடுத்த எடுப்பிலேயே உயர் நீதிமன்றம், 'பரவாயில்லை; Video Conferencing-ஐ நீங்கள் தொடங்குங்கள்; பரவாயில்லை' என்று ஒப்புதலைக் கொடுக்க உச்ச நீதிமன்றத்திற்கும், எந்த உயர் நீதிமன்றத்திற்கும் அதிகாரம் கிடையாது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நான் ஏற்கெனவே தெரிவித்ததுபோல, இந்த Video Conferencing முறைக்கு ஆந்திர மாநிலத்தில், ஆந்திர உயர் நீதிமன்றம் ஒப்புதல் அளித்து, அது அங்கே இப்போது நடைமுறையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சருடைய விளக்கத்திற்கு நன்றி. இருந்தாலும்கூட, ஆந்திராவில் நடக்கக்கூடிய அந்த நடைமுறைக்கு உயர் நீதிமன்றம் ஒப்புதல் அளித்தால், அந்த ஒப்புதலை நிச்சயமாக ஏற்க முடியாது. That is not even constitutional.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் நீதிமன்றம் அளித்த ஒரு தீர்ப்பை ஏற்கலாமா, ஏற்கக் கூடாதா என்பது குறித்து சட்டமன்றத்தில் விவாதிக்கக் கூடாது. அதற்கு வேண்டுமானால் உச்ச நீதிமன்றத்தில் ஒரு வழக்குப் போட்டு, அதை question செய்யலாம்.

*பிற்பகல் 12-50*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில நேரங்களில் உயர் நீதிமன்றமாக இருந்தாலும், உச்ச நீதிமன்றமாக இருந்தாலும், தீர்ப்பு வழங்கிய பிறகு, அரசியல் சட்டத்திற்குட்பட்டு அந்தத் தீர்ப்புக்கு எதிராகத் தாராளமாக நாம் சட்டங்கள் இயற்றலாம். இந்த Video Conferencing-இல் என்ன பிரச்சினை என்றால்; செலவு பற்றி, நாம் அதைப் பெரிய செலவு என்று நினைக்கவில்லை; 37 ஆயிரம் கோடி ரூபாய் செலவு செய்கிற ஒரு மாநிலத்திலே, 9 கோடி ரூபாய் ஒரு செலவே அல்ல; ஆனால், நேரடியாகக் கைதி போய் நீதிபதியின் முன்னாலே நிற்கின்ற நேரத்தில் கைதிக்கு



2002 மே 10] [திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்]

சுதந்திரமாகத் தன்னுடைய கஷ்ட நஷ்டங்களைச் சொல்ல முடியும். ஆனால், Video Conferencing என்பதில் அறையிலே யாருமே இல்லாவிட்டாலும்கூட, அறைக்கு வெளியிலே இருந்து பார்த்துக்கொண்டு இருப்பார்கள். 'இடிக்கப்படுவோம்' என்ற அச்சத்திலேதான் பதில் சொல்லியாக வேண்டும்.

நான் வழக்குரைஞராக சென்னை உயர் நீதிமன்றத்திலே பணியாற்றிக்கொண்டிருந்த நேரத்தில், ஒரு 'ஹேபியஸ் கார்பஸ்' ரிட் வந்தது. அது ஒரு ஆண், பெண் சம்பந்தப்பட்ட ரிட். ஆண் போட்டு இருந்தார். பெண்ணை உயர் நீதிமன்றத்திலே, அவரது பெற்றோர்கள் அழைத்து வந்தார்கள். நீதிபதிகள் கேள்வி கேட்ட நேரத்தில், தூரத்திலே இருந்து பெண் சொன்ன பதில் திருப்தியாக இல்லை. ஆகையினால் வழக்குரைஞர் அதற்கு ஆட்சேபனை தெரிவித்தார். நீதிபதி அருகிலே வரவைத்தார். வரவைத்து, பக்கத்தில் நிறுத்தி வைத்து, பொறுமையாகக் கேள்விகள் கேட்டார். அந்தப் பெண் தயங்கித் தயங்கி, 'நான் விரும்பித்தான் பெற்றோர்களோடு இருக்கிறேன்' என்று சொன்னார். சொன்னாலும்கூட, இரண்டு நீதிபதிகளிலே ஒரு நீதிபதிக்கு அது சமாதானமாகவில்லை. எனவே, அவரிடத்திலே சொன்னார். 'I am convinced; she is under duress' என்று சொன்னார். நேரிலே பார்த்த காரணத்தாலே, 'She is under duress' என்று அவராலே கண்டுபிடிக்க முடிந்ததே தவிர, அந்தப் பெண்ணோ, ஆணோ, ஒரு குற்றவாளியோ சிறையிலே இருக்கின்ற நேரத்தில், இரண்டு பக்கங்களிலேயும் இருந்து கொண்டு, யாரோ அச்சுறுத்திக் கொண்டிருந்தால், Video Conferencing முறையிலே அச்சுறுத்தப்படுகிறாரா, duress-ல் இருக்கிறாரா என்று கண்டுபிடிக்க முடியாது. எனவே, நிச்சயமாகக் குற்றவாளியை நேரில் ஆஜர்படுத்த வேண்டும். சில நேரங்களிலே அதில் சிரமம் இருக்கும் என்று எனக்குத் தெரியும். அப்படி இருந்தால் மாஜிஸ்ட்ரேட்டே சிறைக்குப் போய், அவர்களை ரிமாண்ட் செய்யலாம்; அதிலே தவறு இல்லை. ஆனால், மாஜிஸ்ட்ரேட் முன்னால் நேரடியாகக் குற்றவாளியை ஆஜர் செய்வதுதான் முறை.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எஸ்.ஆர்.பி. எடுத்துரைத்திருக்கின்ற வாதமே தவறான வாதம். ஒரு accused-ஐ ஒரு கைதியை நேரில் நீதிமன்றத்திற்குக் கொண்டுபோய் மாஜிஸ்ட்ரேட் முன்னால் ஆஜர்படுத்தி, அங்கே அவர் தனக்கு ஏற்பட்ட ஒரு கொடுமையை மாஜிஸ்ட்ரேட்டிடம் கூறுகிறார்; வெளிப்படையாகக் கூறுகிறார் என்று சொன்னால், திரும்ப மாஜிஸ்ட்ரேட் அவரை ரிமாண்ட் செய்யும்போது, திரும்ப சிறைக்குத்தானே

செல்ல வேண்டும்? அங்கே மட்டும் அப்போது சிறை அதிகாரிகள், காவல் துறை அதிகாரிகள், அவரைப் பழி வாங்க மாட்டார்களா? (மேசையைத் தட்டும் ஒலி) 'எங்களைப் பற்றி ஏன்யா அந்த நீதிபதியிடம் சொன்னாய்?' என்று பழி வாங்க முடியாதா? ஆகவே, இந்த வாதமே தவறான வாதம். ஆகவே, நேரில் கண்டாலும் சரி, Video Conferencing மூலம் பேசினாலும் சரி, கைதிகளுக்கு உண்மை நிலையை எடுத்துச் சொல்கின்ற வாய்ப்பு உண்டு.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நேரிலே சொல்லும்போது, that will be recorded. The Magistrate will pass an order to the effect that when he is produced next, there should be no complaints. இவையெல்லாம் செய்ய வேண்டும் என்று அந்த உத்தரவில் சொல்லுவார்கள். நிச்சயமாக நேரிலே வந்து சொல்லிக் காணுகின்ற அந்தப் பரிகாரம், Video Conferencing மூலமாகக் கண்டிப்பாகக் கிடைக்காது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, we are not proposing to bring in Video Conferencing to the exclusion of all other methods. Video Conferencing முறைக்குச் சட்ட அங்கீகாரம் கொடுத்து, அதைக் கொண்டு வருவதனால், எந்தக் கைதியும் இனிமேல் நேரில் கோர்ட்டுக்கு அழைத்துச் சென்று ஆஜர்படுத்தப்படவே மாட்டார் என்று சொல்லவில்லை. அதைப்போலவே, மாஜிஸ்ரேட்களுக்கு எப்போதெல்லாம் வசதிப்படுகிறதோ, அவர்களும் சிறைச்சாலைகளுக்குச் சென்று ரிமாண்ட் செய்வதற்கும் சட்டத்தில் இடம் இருக்கிறது; அதற்கும் உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி அங்கீகாரம் அளித்து இருக்கிறார். ஆகவே, தேவைப்படுகின்றபோது இந்த Video Conferencing முறை அமல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது இமாம் அலி, ஹைதர் அலி நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்லப்படும் போதுதான் தப்பித்துச் சென்றார்கள். அப்படிப்பட்ட dangerous criminals விஷயத்தில்தான் இந்த வீடியோ கான்ஃபரன்ஸிங் முறை அத்தியாவசியம் என்று நாங்கள் கருதுகிறோம். தேவைப்படாதபோது மற்ற முறைகளையும் பின்பற்றுவதில் தவறு இல்லை என்றுதான் கருதுகிறோம்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குற்றத்தை இழைத்தவர் நீதிமன்றத்திற்கு வருகிறபோது, Charge sheet வாங்குவதற்கு அவர்தான் நேரில் சென்றாக வேண்டும். அதேபோல்,





விசாரணை முடிந்த பிறகு, 313—அதாவது statement under Section 313, accused statement வாங்குவதற்கு அவர்தான் போய் ஆகவேண்டும். அதேபோல் 315-வது செக்ஷன் பிரகாரம், அவரே ஒரு witness ஆக, ஒரு அக்யூஸ்டே, if he wants to examine himself as a witness என்று சொன்னால், அப்போது அவர் தேவைப்படுகிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இவ்வளவு விளக்கம் தேவை இல்லை. முதலமைச்சர் சொல்லி விட்டார்கள். அதாவது, 'தேவைப்படக்கூடிய நேரத்தில்தான்' என்று.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை, எதற்காகச் சொல்ல வருகிறேன் என்றால், சட்டத்திற்கு...

*பிற்பகல் 12-55*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் அடிப்படையான அரிச்சுவடி விஷயங்களை எல்லாம் அரசுக்குச் சொல்லித் தரத் தேவையில்லை. குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் கைதிகள் நேரில் சென்றாக வேண்டும் என்பது எங்களுக்குத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி).

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அடிப்படையாக இருக்கக்கூடிய கருத்துகளை வைத்துக்கொண்டுதான் சொல்ல வேண்டும். நீங்கள் Video conferencing-லே ஒரு நாளைக்குக் கொண்டுபோய்ச் சிறையிலே வைத்துக்கொண்டு சாட்சியங்கள் வந்து, அந்த accused-ஐ அடையாளம் காட்ட வேண்டுமென்று சொன்னால், எப்படிக் காட்டுவது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலமைச்சர் தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். அதாவது, Video conferencing என்பது எல்லா நேரத்திலும் பயன்படுத்தக்கூடியது என்பது மாதிரி அல்ல. சில நேரங்களில், சில தீவிரவாதிகள், சில ஆபத்தான குற்றவாளிகள், இவர்களுக்காகத்தான் இதைப் பயன்படுத்தக்கூடிய நிலைமையிருக்கிறது, மற்ற முறைகளையும் நாங்கள் பின்பற்றுகிறோம் என்று சொல்லி விட்டார்கள். அதனால் இதில் பிரச்சினைக்கே இடமில்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவொரு சட்டப் பிரச்சினை. கொஞ்சம் நேரத்தைக் கொடுத்தீர்கள் என்றால், என்னால் முடிந்த அளவுக்குக் கருத்தைச் சொல்லிவிடுகிறேன்.

[2002 மே 10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. நீங்கள் இந்தச் சட்டமுன்வடிவின்மீது உங்கள் கருத்து என்னவென்று சொல்லுங்கள்.

**THIRU C. GNANASEKARAN:** If you are convinced, you can accept my views. Otherwise, you can reject my views. I have got certain points. I have to adduce those points.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இவ்வளவு பெரிய் சட்டப் புத்தகத்தை நீங்கள் தூக்கிக் கொண்டு வந்திருக்க வேண்டியதில்லை. புகழேந்தி மாதிரி சின்னக் காகிதமே போதும். சொல்ல வேண்டிய விஷயங்களை மட்டும் சொல்லுங்கள். சட்டமுன்வடிவின்மீது என்ன சொல்ல வேண்டுமோ, அதைச் சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** சொல்லி விடுகிறேன். இதிலே சுப்ரீம் கோர்ட்டிலேகூட, 167-வது செக்ஷனிலேகூட, நமது சென்னை உயர் நீதிமன்றத்தினுடைய தீர்ப்பேகூட,

"The object of the production of the accused is not merely to authorise the detention, but also to prevent abuse by investigating agency."

'1990 Criminal Law Journal, Page 704, Madras, Arunachalam, Judge—

அதிலே இன்னொன்று, "There is no scope for remanding the petitioners for 15 days again, as the total period would exceed the maximum 15 days contemplated by Section 167, Sub-section 1, G.K. Moopanar Vs. State of Tamil Nadu, 1990. Criminal Law Journal, Page 2655, Divisional Bench Judgement".

"The Magistrate under Section 167, sub-section 2 authorises detention of the accused, such a...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஞானசேகரன், இதிலே விளக்கம் வேண்டியதில்லை. எஸ்.ஆர்.பி. அவர்களே சமாதானமாகி உட்கார்ந்து விட்டார். (குறுக்கீடு) நீங்கள் என்ன? ஞானசேகரனையாவது சமாதானப்படுத்துங்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை. சட்டமுன்வடிவின்மீது சில கருத்துகளை மட்டும் சொல்லலாம், அதுதான்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அவர் என்ன சொல்கிறார் என்றால், Judicial application of mind என்பது வேண்டுமென்று சொல்கிறார். அதுதான் சொல்கிறார்.



2002 மே 10]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமுன்வடிவின்மீது நீங்கள் தெரிவிக்க வேண்டிய சில கருத்துகளை மட்டும் சொல்லி, முடியுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** கருத்துகளைச் சொல்லிவிடுகிறேன். சட்டப் புத்தகத்தையே திறக்கவில்லை. சொல்லிவிடுகிறேன். அதாவது 167, சப் செக்ஷன் 2— இந்தப் பிரிவு பிரகாரம், 15 நாட்களுக்குள் ஒரு போலீஸ் அதிகாரி தன்னுடைய இன்வெஸ்டிகேஷனை முழுமையாக முடித்து விட வேண்டும் என்று முதல் கட்டத்திலே சொல்கிறார்கள். அந்த இன்வெஸ்டிகேஷனை அதற்குள் முடிக்க முடியவில்லை என்று சொன்னால், அப்போதுதான் ரிமாண்ட் எக்ஸ்டென்ஷன் என்கிற பீரியடே வருகிறது. ஆகவே, இப்படி ரிமாண்ட் எக்ஸ்டென்ஷனுக்குக் கண்டிப்பாக judicial application of mind is quite essential. இதிலே...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வளவு நீண்ட, விரிவான விவாதம் இதன்மீது தேவையில்லை என்பது என்னுடைய பணிவான கருத்து. இந்த Bill இந்த மசோதா என்பது என்ன? It provides for a State amendment to a Central Act. ஏற்கெனவே மத்தியில் இருக்கின்ற ஒரு சட்டத்திற்கு மாநில அரசு ஒரு திருத்தத்தைக் கொண்டு வருகிறது. ஒரு State amendment. இதை மாநிலச் சட்டப் பேரவை அங்கீகாரம் அளித்து, நிறைவேற்றிவிட்ட பிறகு மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் விரும்பினால், இதை நீதிமன்றங்களில் challenge செய்யலாம். அதற்குச் சட்டத்தில் இடம் இருக்கிறது. இதற்கு இந்தச் சட்டமன்றப் பேரவை ஒப்புதல் அளித்த பிறகு, மேதகு ஆளுநர் அவர்கள் ஒப்புதல் அளித்த பிறகு, இது Concurrent List -ல் இருப்பதால், மத்திய அரசுக்கு அனுப்பப்படும். மேதகு ஜனாதிபதி அவர்களுடைய அங்கீகாரத்தை, ஒப்புதலைப் பெற்ற பிறகுதான் இது சட்டமாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, இந்தச் சட்டப் பேரவையில் நிறைவேற்றுவதனால், இது உடனே அமலுக்கு வந்துவிடாது. இதன்பிறகு, இத்தனை படிகள் இருக்கின்றன. தாங்கள் எப்போது விரும்பினாலும் இதை நீதிமன்றத்தில் challenge செய்யலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஞானசேகரன், கருத்தை மட்டும் சொல்லுங்கள், உலகம் இன்றைக்கோடு அழிந்து போகாது. (சிரிப்பு)

**திரு. சி. ஞானசேகரன்:** கருத்தைச் சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் எல்லாம் இருந்தும்கூட, இதிலே விவாதம் இல்லாமல் செய்து விடக்கூடாது என்பதற்காக என்னுடைய

[திரு. சி. ஞானசேகரன்] [2002 மே 10

கருத்துகளைச் சொல்கிறேன். நாளைக்கு ஒரு சட்டமன்ற உறுப்பினரேகூட, Video conferencing— அதாவது அசெம்பிளிக்கு வராமல், வீட்டிலே இருந்துகொண்டு, 'எனக்கு டைம் இல்லை. ரொம்ப எக்ஸ்பென்ஸ் ஆகிறது' என்று சொல்லி அவர் வீட்டிலே இருந்து கொண்டே சட்டமன்ற நிகழ்ச்சியிலே கலந்துகொள்ள முடியாது. காரணம், ஒவ்வொன்றுக்கும் ஒரு நியதியை நாம் வைத்திருக்கிறோம். 609 குற்றவாளிகள் தப்பித்துவிட்டார்கள் என்பதற்காக, இமாம் அலி கிடைக்கவில்லை என்பதற்காக, நம்முடைய ஒரு....-

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை எதிர்க்க வேண்டுமென்ற ஆதங்கத்தில் மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள், ஆபத்தான கைதிகளோடு சட்டமன்ற உறுப்பினர்களை ஒப்பிடுவது ஏற்க முடியாத ஒன்றாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் மக்களின் பிரதிநிதிகள். அவர்கள் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற, தங்கள் ஜனநாயக் கடமைகளை நிறைவேற்றுவதற்காக இந்தச் சட்டப் பேரவைக்கு வந்தே ஆக வேண்டும். அப்படி வருவதற்குத் தயாராக இல்லை என்றால், அவர்கள் தேர்தலிலே நிற்கக் கூடாது. ஆகவே, அவர்கள் நிலையும், சட்டமன்ற உறுப்பினர்கள் நிலையும், கைதிகள் நிலையும், அதுவும் ஆபத்தான கைதிகள் நிலையும் வெவ்வேறான ஒன்று. அவற்றை ஒப்பிடக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-00*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, எனக்கு உள்ள பிரச்சினை. இன்னும் 23 Bills இருக்கின்றன. எனவே, கொஞ்சம் கருத்தைச் சொல்லி முடியுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய காவல் துறை, எப்படிப்பட்ட ஆபத்தான குற்றவாளிகளாக இருந்தாலும், அவர்களைக் கொண்டுபோய் மாஜிஸ்ட்ரேட்டிடம் நிச்சயமாக நிறுத்த வேண்டும். சில நேரங்களில் குற்றவாளிகளே வழக்குகளை நடத்துகிறார்கள். சாதாரணமாக Video Conferencing என்று அவர்களைச்



2002 மே 10] [திரு. சி. ஞானசேகரன்]

சிறையிலேயே வைத்துவிட்டார்கள் என்று சொன்னால், என்ன நிலைமை Accused in person are cross-examining the witnesses--அப்படிப் பட்டவர்களுக்கு என்ன நிலையை உருவாக்கப் போகிறீர்கள்? அவன் ஜெயிலில் இருந்துகொண்டு இங்கே எப்படி cross-examine பண்ணுவான்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஞானசேகரன், முதலமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். எல்லா நேரத்திலும் பயன்படுத்தக்கூடியது அல்ல. இதில் மற்ற முறைகளும் கடைப்பிடிக்கப்படும், சில நேரங்களில்தான் அது பயன்படுத்தப்படும் என்றே சொல்லிவிட்டார்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, cross-examination என்பது trial -ன்போதுதான் வரும். This is only to cover remand. *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்று எப்போது நடைமுறைக்கு வருகிறது என்றால், நீதிபதிகளே நேரடியாகப் போய் ஜெயிலிலே, மத்திய சிறையிலேயே விசாரிக்கலாம் அல்லவா? அப்படி என்றால், மத்திய சிறையிலே ஒரு அவசியம் கருதி, ஒரு தீவிரவாதி காவல் துறையில் இருந்து தப்பித்து விடுவார் என்கிற ஒரு அச்சம் ஏற்படுகிறபோது, நீதிபதிகளையே கொண்டு, நேரடியாக மத்திய சிறையிலே, பாதுகாப்பான இடத்தில் விசாரிப்பதற்குக்கூட ஒரு வாய்ப்புக் கிடைக்கிறது இல்லையா? அதிலே, Video conferencing மூலமாகவே அவர்களுடைய கருத்துகளைக் கேட்டு விசாரிப்பதற்கு மாறாக, அப்படிப் பயங்கரவாதிகளாக இருக்கக்கூடியவர்களை விசாரிப்பதற்கு நீதிபதிகளே அங்கேபோய் அந்த ஜெயிலில் விசாரித்துவிட்டு வந்துவிடலாம் என்றுகூடப் பரிசீலனை செய்யலாமே? அவசியம் ஏற்பட்டால் அப்படிக் கூடப் பரிசீலனை பண்ணலாமே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த Bill-லே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நீங்கள் பேசியதை நான் வரவு வைத்துக்கொள்கிறேன். ஞானசேகரன், உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கருத்துக்கு ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். அதாவது, ஒரு accused--suppose the accused is not able to get bail for six months or one year--once in 15 days நீதிமன்றத்திற்கு வந்தே ஆக வேண்டும். அதுதான் Law. அது trial-ஆக இருந்தாலும் சரி, அது charge sheet போடுவதற்கு முன்னாலே, அந்த ஸ்டேஜில் இருந்தாலும் சரி, எந்த ஸ்டேஜிலும் 15 நாளுக்கு ஒரு முறை கடைசி வரை அவன் சென்றுதான் ஆக வேண்டும். ஆகவே, இப்படிப்பட்ட நிலையில், சில கைதிகள் தப்பித்து விட்டார்கள் என்பதற்காக, நாம் நம்முடைய அரசாங்கத்தின் போலீஸ் துறையினுடைய அந்தத் திறமையின்மையை ஒப்புக்கொண்டு ஏதோ இப்படி ஒரு சட்டத்தைக் கொண்டு வருவதாக நினைத்து விடக்கூடாது என்பதற்காக, ஏற்கெனவே இருக்கக்கூடிய Central Act-க்கு விரோதமாக இப்படி ஒரு சட்டத்தை நாம் கொண்டு வந்தால், அது நிச்சயமாகச் செல்லுபடியாகாது. ஆகவே, நான் என்னுடைய கருத்தைச் சொல்லி, இந்தச் சட்டத்தை எதிர்த்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1892-ம் ஆண்டு இந்திய அரசியல் சட்டமன்றங்கள் சட்டம் இயற்றப்பட்ட இந்த அவையிலே, நம்முடைய சட்ட அமைச்சரால் கொண்டு வரப்படுகின்ற சட்டத் திருத்த மசோதாவில் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகப் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய முதற்கண் நன்றி கலந்த வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தச் சட்டத் திருத்தம் என்பது, ஒரு கைதிக்கு இந்திய நாட்டில் இருக்கிற, ஜனநாயக முறைப்படி தனக்குப் பாதிப்பு ஏற்படுகிறதா அல்லது சிறைச்சாலையில் ஏற்படுகின்ற மன நிலை, அவருடைய உடல் நிலை, இவற்றை ஒரு நீதிபதியின் முன்பு, தன்னை நிலைநிறுத்துகின்றபோது, தான் எந்த நிலையில் இருக்கின்றோம் என்பதனை, அவருடைய உற்றார், உறவினர்களும் தெரிந்து கொள்ளுகின்ற வகையிலும், நீதிபதி அவர்கள் தெரிந்துகொள்ளுகின்ற வகையிலும், இன்றையதினம் வரை நம்முடைய தமிழகத்தில் இருக்கின்ற அத்தனை நீதிமன்றங்களிலும் சிறைச்சாலையில் இருக்கின்ற கைதியை நீதிபதியின்முன் ஆஜர்படுத்துவது வழக்கமாக இருக்கின்றது. ஆனால், நம்முடைய அரசு கொண்டு வந்து இருக்கின்ற இந்தச் சட்டத் திருத்தம் மூலமாக, கைதியைச் சிறைச்சாலையிலே வைத்துக்கொண்டு Video Conferencing மூலமாக, re-remand செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது



என்ற நிலை ஏற்படுகிறபோது, இன்றைக்கு நம்முடைய முதல்வர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, ஆந்திராவிலே நக்சலைட்டுகள் இருக்கின்றார்கள். தீவிரவாதிகள் இருக்கின்றார்கள். பல சட்டமன்ற உறுப்பினர்கள் தாக்கப்பட்டு இருக்கின்றார்கள். அமைச்சர் பெருமக்கள் தாக்கப்பட்டு இருக்கின்றார்கள். அங்கு அதுபோன்ற ஒரு சட்டம் தேவைப்படும். ஆதலால், அங்கு அது கொண்டுவரப்பட்டு இருக்கலாம். ஆனால், இன்றைக்குத் தமிழகத்தை ஆண்டு கொண்டு இருக்கின்ற நம்முடைய இரண்டு அரசுகளுமேகூட, அமைதிப் பூங்காவாகத் திகழ்கின்றது என்று சொல்லி வருகின்ற நம்முடைய தமிழகத்திலே, இப்படி ஒரு கைதியினுடைய...

*பிற்பகல் 1-05*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், தமிழகத்தை ஆண்டு கொண்டிருக்கிற இரு அரசுகள் என்று குறிப்பிட்டார். அது என்னவென்று புரியவில்லை. ஓர் அரசுதான் ஆண்டு கொண்டிருக்கிறது. அதை மாண்புமிகு உறுப்பினரே விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு ஆட்சிகளும்; கடந்த தி.மு.க. ஆட்சி, இப்போது அண்ணா தி.மு.க. ஆட்சி. ஆக, இரண்டு ஆட்சிகள் என்று சொல்கின்றேன். அவர்கள் ஆளுகின்றபோதும் அமைதிப் பூங்காவாகத் திகழ்கிறது என்கிறார்கள்; அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வருகின்றபோது, அமைதிப் பூங்காவாகத் திகழ்கிறது என்கிறார்கள். இரண்டு கட்சிகளும் ஆளுகின்றபோது அமைதிப் பூங்காவாகத் திகழ்கின்ற நம்முடைய தமிழகத்திலே, ஆந்திராவில் ஏற்பட்டிருக்கின்ற ஒரு நிலைமை இன்றைக்குத் தமிழகத்திலே ஏற்பட்டிருக்கிறது என்று நம்முடைய அரசு கருதுகிறதா என்பதை நான் இங்கு கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், இன்றைக்கு ஒரு கைதியை நீதிமன்றத்திற்கு முன், நீதிபதி முன் ஆஜர்படுத்தக் கொண்டு வருகின்றபோது, ஜனநாயகத்திலே ஒரு கைதிக்கு இருக்கின்ற உரிமை, அவர் நீதிமன்றத்திலே நீதிபதிக்கு முன்பு தனக்கு சிறைச்சாலையிலே ஏற்படுகின்ற இன்னல்களை. பிரச்சினைகளை மனம்விட்டு கதறி அழுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. ஆனால், இன்றைக்கு Video Conferencing-லேகூட கதறி அழலாம் என்று நம்முடைய அமைச்சர் அவர்கள் பதில் அளித்தாலும்கூட, சிறைச்சாலையில் இருக்கின்ற கைதிகளை, நீதிமன்றத்திற்குமுன் ஆஜர்படுத்துகின்றபோது,

அந்தக் கைதியுடன் சம்பந்தப்பட்ட வழக்கறிஞர்கள் கூட இருப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. அரசுத் தரப்பிலே Public Prosecutor இருக்கின்றார், நீதிபதி கண் முன்னாலே பார்க்கின்றார். ஆனால், இவர்கள் எல்லாம் அந்தச் சிறைச்சாலையிலே இருப்பதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறதா—

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்தில் ஒரு கைதி ஆஜர்படுத்தப்படும்போது, எப்படி அவருடைய வழக்கறிஞர் அவருடன் இருக்க அனுமதி அளிக்கப்படுகிறதோ, அதைப்போலவே, Video Conferencing முறை செயல்படுத்தப்பட்டால், அப்போதும் வழக்கறிஞர், கைதியுடன் இருக்க அனுமதி இருக்கும். அதுமட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியாதது அல்ல. கைதிகள் சிறையில் இருக்கும்போது அவர்களுடைய வழக்கறிஞர்கள் எப்போது வேண்டுமானாலும் அவர்களைச் சந்திக்க முடியும். அதற்குச் சட்டத்தில் இடம் இருக்கிறது.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல்வர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. அடுத்தபடியாக, கைதியைச் சிறைச்சாலையிலிருந்து கோர்ட்டுக்கு நீதிபதிமுன் ஆஜர்படுத்த வருகின்றபோது--சில தீவிரவாதிகளையோ அல்லது வேறு சில படுபயங்கரமான குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகி சிறைச்சாலையில் இருக்கின்ற கைதிகளையோ நான் கூறவில்லை.--இன்றைக்கு இருக்கிற அரசியல் சூழ்நிலையில், அரசியல் காரணமாக, சில அரசியல்வாதிகள் பாதிக்கப்படுகின்றபோது, சிறைச்சாலையில் இருக்கின்றபோது, அவர்களுக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகளை, பிணக்குகளை, இந்த நாட்டு மக்களுக்கும், தன்னுடைய கட்சிக்கும் எடுத்துச் சொல்வதற்கு ஒரு வாய்ப்பு நீதிபதிமுன் ஆஜர்படுத்துகின்றபோது, நம்முடைய பத்திரிகையாளர்கள் அந்தச் சிறைக் கைதியை நேரடியாகப் பார்ப்பதற்கும், அவர்கள் மூலமாகச் சில செய்திகளை உள்வாங்கிக் கொள்வதற்கும், அவை பத்திரிகையிலே நாடு பூராவும் செய்தியாக வருவதற்கும் வாய்ப்பு இருந்தது. ஆனால் இந்த Video Conferencing முறையிலே பத்திரிகை தர்மத்தைக் காக்கக்கூடிய அந்த நிலை இன்றைக்குப் பறிபோய்விடும் என்கிற ஓர் அச்ச நிலை ஏற்பட்டிருக்கிறது. அதேபோல், இன்றைக்கு, நவீன உலகத்தில், Computer Graphics-ல் இன்றைக்கு அரசியல்வாதிகளைக்கூட அல்லது ஆட்சியாளர்களைக்கூட, முதலமைச்சரைக்கூட, பல்வேறு அமைச்சர் பெருமக்களைக்கூட, உருவமே வேறாக இருக்கின்றபோது, வேறு உருவத்தைப் பொருத்தி, இவர்தான் அது என்று காட்டக்கூடிய ஒரு நவீன கம்ப்யூட்டர் உலகத்திலே, சிறைச்சாலையிலே இல்லாத ஒரு





கைதியை, அந்தச் சிறைச்சாலையில் இருக்கிற மாதிரி காட்டக்கூடிய நிலை இருக்கிறது. தணு, சிவராசன்—இவர்களுடைய படம்பற்றிக்கூட, இந்த அவையிலே விவாதிக்கப்பட்டிருக்கிறது. அதுபோல ஒரு நிலை, இந்தச் சிறைச்சாலையில், இந்தக் கைதிக்கு ஏற்படுகிறது என்று சொன்னால், சட்டத்தின்முன் தண்டிக்கப்பட வேண்டிய கைதி அல்லது சட்டத்தின் முன்பு காவலை நீட்டிப்பதற்கு உத்தரவிடுகின்ற நீதிபதியின் உத்தரவுக்குப் போகின்ற கைதி, அந்தச் சிறைச்சாலையிலே இல்லாமல், சில சிறை அலுவலர்களுடைய ஒத்துழைப்போடு வேறு ஒரு குற்றத்தை வெளியிலே இருந்து செய்வதற்கு வழிவகை செய்கிற நிலையை இந்தச் சட்டத் திருத்தம் கொண்டுவரும் என்பதைப் பாட்டாளி மக்கள் கட்சி சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறது. காரணம், இன்றைக்கு செஞ்சி சிறையிலேகூட ரீட்டா என்கிற பெண் கைதி, சிறைக் காவலராலேயே கற்பழிக்கப்பட்டிருக்கிறார். நான் எதற்காக இதைச் சொல்கிறேன் என்று சொன்னால், இன்றைக்கு நிலைமை சிறைச்சாலையிலே அப்படி இருக்கிறது. காவல் நிலையங்களிலே அப்படி நிலைமை இருக்கிறது. ஆக, நிலைமைகள் எல்லாம் தமிழகத்திலே இவ்வாறு இருக்கின்றபோது, நாம் 15 நாட்களுக்கு ஒரு முறை முழுமையாக அந்த மனிதனை, அவனுடைய ஜனநாயக உரிமையை, அவனுக்கு இருக்கின்ற அடிப்படை உரிமைகளை, இன்றைக்கு மக்கள் மன்றத்தின் மூலமும், பத்திரிகைகள் மூலமும், நீதிபதிமுன் எடுத்து வைப்பதற்குச் சரியான ஒரு சூழல் அமைக்கப்படாத ஒரு நிலை. சிறைக் கொட்டடிக்குள்ளேயே அவனுடைய உரிமையைத் தீர்மானிக்கக்கூடிய இந்தச் சட்டம் என்பது மிகக் கடுமையான ஒரு சட்டம். முதல்வர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் இது தீவிரவாதிகளுக்குப் பொருந்தும் என்று சொன்னாலும்கூட, அரசியல் காரணங்களுக்காக, அரசியல்வாதிகள், இன்னும் சில தனிப்பட்ட விருப்பு, வெறுப்புகளுக்கும் ஆளாகி சிறைச்சாலையிலே இருக்கின்றபோது அவர்களுடைய உரிமைகளை எடுத்துச் சொல்வதற்கு இந்தச் சட்டம் எதிரானதாக அமையும் என்பதைச் சொல்லி நேரம் கருதி, பேரவைத் தலைவர் மணி அடித்த காரணத்தால், இதை எதிர்த்து, இதை இந்த அரசு மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று வேண்டுகோள் வைத்து அமர்கின்றேன்.

பிற்பகல் 1-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணியடித்த காரணத்தால் எதிர்ப்பு என்று சொல்கிறீர்கள்; மணியடிக்கவில்லையென்றால் ஆதரிப்பீர்களா? (சிரிப்பு) திருமதி மகேஸ்வரி. கொஞ்சம் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும். உங்கள் சுருக்கமாக ஏதாவது கருத்தை வேண்டுமானால் சொல்லுங்கள். உங்கள் ஆதரவையோ, எதிர்ப்பையோ சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவின் நோக்கம் நல்ல நோக்கம். இதிலே தவறு ஏதுமில்லை. ஏனென்றால், குற்றம் சாட்டப்பட்ட நபர்களைக் காவல் துறையினர் நீதிமன்றத்திற்குமுன்பு கொண்டுவந்து நிறுத்தும்போது, அவர்களுக்கு மனித நேரங்கள் வீணாவதோடு, பண விரயமும் ஏற்படுகிறது. ஆகவே, இந்த விரயங்களைத் தவிர்க்க வேண்டுமென்பதற்காக இந்தச் சட்டமுன்வடிவு கொண்டு வரப்பட்டுள்ளது என்று இங்கே சொல்லியிருக்கின்றீர்கள். அதுமட்டுமல்ல, குற்றம் சாட்டப்பட்டவர்களைச் சிறையிலிருந்து நீதிமன்றங்களுக்கு அழைத்துச் செல்லுகிற வழியிலே, பல நேரங்களில் குற்றவாளிகள் தப்பித்துச் செல்ல முயற்சிக்கின்றார்கள். சில நேரங்களிலே அந்த முயற்சியிலே வெற்றியும் பெறுகின்றார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். ஆகவே, இதனால் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இதுபோன்ற பிரச்சினைகளுக்கு ஒரு முடிவு கட்ட வேண்டும் என்பதற்காகவும் இந்தச் சட்டமுன்வடிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது என்றுகூட மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே ஒரு விளக்கம் அளித்திருக்கிறார்கள். ஆகவேதான் சொன்னேன். இந்த நோக்கத்தில் தவறு இலலை. ஆனால் இதிலே சில குறைபாடுகள் மட்டும் இருக்கின்றன. நான் ஆரம்பத்திலேயே எண்ணினேன். இந்த அடிப்படை நோக்கமே இதிலே நிறைவேறாமல் போய்விடுமோ என்று அச்சப்பட்டேன். ஆனால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு நல்ல விளக்கம் கொடுத்த பிறகு, எனக்கு அந்த அச்சமெல்லாம் நீங்கிவிட்டது. ஏனென்றால், நீங்கள் பண விரயத்தைக் குறைக்க வேண்டுமென்று சொல்லி இந்த முறையைப் புகுத்துவதால், பெரும் பண விரயம் ஏற்படும் என்று நான் ஆரம்பத்திலேயே கருதினேன். ஆனால், ஒட்டுமொத்தமாகத் தமிழகத்திற்கு இதற்கு 9 கோடி ரூபாய்தான் முதலீடு செய்ய வேண்டியுள்ளது என்ற ஒரு நல்ல விளக்கத்தை அவர்கள் சொன்னார்கள். ஆனாலும்கூட, கால விரயத்தை நீங்கள் எந்த அளவிற்குக் கட்டுப்படுத்த முடியும் என்பது தெரியவில்லை. ஏனென்றால், கைதியை அவர்களுடைய அறையிலிருந்து நீங்கள் Video Conferencing Hall-க்குக் கொண்டு வந்து, நீங்கள் அந்தத் திரை முன்னே அமர்த்தி அந்த வழக்கு விசாரணை முடியும் வரை காவலர்கள் அந்தக் கைதியோடு இருக்க வேண்டும். ஆகவே காவலர்களின் அந்தக் காலமானது பெருமளவிற்கு--அந்தக் கால விரயமானது பெருமளவிற்குக் கட்டுப்படுத்தப்பட இயலாது என்ற ஒரு கருத்தைச் சொல்லிக் கொள்கிறேன். ஏற்கெனவே நமது, மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல் முருகன் எல்லாம் சொன்னார்கள். இது கம்ப்யூட்டர் உலகம். Graphics, Animation என்றெல்லாம் சொல்லி, இன்றைக்கு மனிதன் எதை



எதையோ படைத்துக் கொண்டிருக்கின்றான். ஆகவே, இந்தத் திரையிலே தோன்றுவது உண்மையிலேயே குற்றம் சாட்டப்பட்ட நபர்தானா? அல்லது, அதுபோன்ற ஒரு உருவ ஒப்புமையா என்றெல்லாம்கூட ஒரு குழப்பம் நேரலாம். உங்கள் ஆட்சியிலே அதுபோன்ற பிரச்சினை எழாமல் இருக்கலாம். ஆனால், எதிர்காலத்தில் இப்படிப்பட்ட சூழல்கள் நிகழாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. ஆகவே, இந்தக் கருத்தையும் சொல்லி, அதேபோன்று கைதிகளாக்கப்பட்டவர்கள் நேரடியாக நீதிமன்றத்தின்முன் ஆஜர்படுத்தப்படும்போது எத்தகைய வசதிகள் அவர்களுக்கு உண்டோ, அவர்களது கருத்துகளை எந்த நிர்ப்பந்தமும் இன்றி, எந்த அச்சமுமின்றி அவர்கள் தெளிவாக எடுத்துச் சொல்லலாம். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் நமது துரைமுருகன் அண்ணா அவர்கள்கூட அபிநயத்தோடு அழகாக இங்கே நடத்திக் காட்டினார்கள், அவர்களுக்குள்ள பிரச்சினையை. ஆகவே, அவர்களுடைய கருத்துகளை சுதந்திரமாகச் சொல்ல முடியாமல் அந்தத் திரையின் பின்னே, மறைவாக அவர்களுக்கு எப்படிப்பட்ட நிர்பந்தங்கள் வேண்டுமானாலும் இருக்கலாம். ஆகவே, இதனால் என்ன நேரிடுகிறது என்று சொன்னால், அந்த Principle of Justice என்று சொல்லப்படுகின்ற, இயற்கை நியதிகள் அந்தக் கைதிக்கு மறுக்கப்படுகின்றன.

அதுமட்டுமல்ல, இறுதியாக இன்னொரு கருத்தையும் சொல்கிறேன். எல்லோருமே சொன்னார்கள். வழக்கறிஞர் அங்கே அவர்களை அடிக்கடி சந்திக்க முடியாது என்ற அச்சத்தையெல்லாம் சொன்னார்கள். எங்களுக்கு என்ன பிரச்சினை என்றால், எங்கள் பிழைப்பிலே மண் விழுந்துவிடுமோ என்ற அச்சம் இருக்கிறது. முதலுக்கே மோசம் ஆகிவிடுமோ என்ற அச்சம்கூட இருக்கிறது. ஆகவே, எங்கள் சுயநல நோக்கிலேயும் நான் இந்த நேரத்திலே எங்கள் பிரச்சினையையும் உங்களுக்குச் சுட்டிக்காட்ட விழைகிறேன். ஆகவே, நீங்கள் இந்தச் சட்டமுன்வடிவைத் தயவுசெய்து மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே மன்றாடிக் கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன். (குறுக்கீடு) திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர்., திரு. நன்மாறன் பேசிவிடட்டும். (குறுக்கீடு)

[2002 மே 10

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, Point of Order. பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சரவர்களின் கவனத்திற்கும் நான் கொண்டு வருவது, மதுரை, கடலூர், வேலூர் மத்திய சிறைச்சாலைகளிலெல்லாம், கோர்ட் buildings புதிதாக போன ஆட்சிக் காலத்திலே கட்டப்பட்டு, அங்கே நடைமுறையில் இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, நீதிபதிகளை அங்கே போட்டு, போன தடவை விசாரித்திருக்கிறார்கள். மதுரை சிறைச்சாலையிலே புதுக்கட்டடமே இருக்கிறது. இந்தத் தடவை நாங்களெல்லாம் உள்ளே இருக்கும்போது அவற்றையெல்லாம் போய்ப் பார்த்தோம். மழைக்கு அங்கேயே படுத்துகிடந்தோம். ஆகவே, அந்த இடத்திலே பார்க்கும்போது, புதிதாக மூன்று இடங்களில் புதுக் கட்டடங்களே இருக்கின்றன. எல்லாவிதமான வசதி வாய்ப்புகளும் அங்கே இருக்கின்றன. கடலூரில் இருக்கிறது. வேலூரில் இருக்கிறது; மதுரையில் இருக்கிறது; ஆகவே, அதையே பயன்படுத்தி அங்கேயிருக்கிற கோர்ட்டாரை வரவழைத்து அங்கேயே வாய்தா போடலாமே! அந்த வேலையையும் பார்க்கலாம்.

பிற்பகல் 1-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவு குறித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கருத்தைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். குற்றம் சாட்டப்பட்டிருக்கிற ஒருவர், நேரடியாக நீதிமன்றத்திற்குச் சென்று, நீதிபதியின் முன்னிலையில் தன்னுடைய முறையீட்டைத் தெரிவிப்பதுதான் பொருத்தமாக இருக்கும் என்பதை நாங்கள் தெரிவிக்கிறோம். இப்போது அரசு கொண்டு வந்திருக்கிற இந்தப் புதிய முறையை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஏற்றுக்கொள்ளவில்லை என்பதையும், இது குற்றம் சாட்டப்பட்டிருப்பவர்களுடைய நியாயத்தை, மேலும் நிரூபிப்பதற்குத் துணை புரியாது என்பதையும் தெரிவித்து, அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்பதையும், எங்களுடைய எதிர்ப்பையும் தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி. ஏற்கெனவே சொல்லிவிட்டீர்கள்.



2002 மே 10]

**திரு. ஜி. பழனிசாமி:** சொல்லிவிட்டேன். ரொம்பச் சுருக்கமாகச் சொல்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை அரசு மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன் ஒரு கைதியைக் கோர்ட்டுக்கு அழைத்து வருகிறபோது, அவர்கள் தப்பித்து விடுவார்கள் என்பதற்காக இந்தச் சட்டத்தைக் கொண்டுவருவதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு நல்ல விளக்கத்தை அளித்திருக்கிறார்கள். அதோடுமட்டுமல்ல. கோர்ட்டுக்குக் கொண்டு வருகிறபோதுகூட, கைதிகளைக் கொண்டு வருகிறபோதுகூட, வெளியிலே இருக்கிறவர்கள் நிறையக் கடத்திச் சென்றுவிட்ட வரலாறுகள் உண்டு. அவர்களைச் சிறையிலேயிருந்து காவல் துறையினுடைய பாதுகாப்போடு அழைத்து வருகிறபோதெல்லாம், தீவிரவாதிகள் நேரடியாக வந்து அவர்களை இடையிலே மறித்து, பயங்கர ஆயுதங்களோடு கடத்திச் சென்றிருக்கிற வரலாறுகள் தமிழகத்திலே நிறைய நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்படிக் கடத்திச் சென்றுவிடுவதைவிட, தப்பித்து விடுவதைவிட, சிறையிலே இருந்து தப்பித்துப் போயிருக்கிற கைதிகளே, நூற்றுக்கணக்கான கைதிகள் சிறைச் சாலைகளிலே தொடர்ந்து தப்பித்து இருக்கிறார்கள். அப்போது சிறையினுடைய பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டியிருக்கிறது. காவல் துறை குற்றவாளிகளை நீதிமன்றத்திற்கு அழைத்து வருகிறபோது, அந்தப் பாதுகாப்புகளைப் பலப்படுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது. ஒரு காவல் நிலையத்திலே ஒரு குற்றம் நடைபெறுகிறது; ஒரு காவல் சரகத்திலே குற்றம் நடைபெறுகிறது என்று சொன்னால், கொலையோ, கொள்ளையோ நடக்கிறது என்று சொன்னால், அந்தக் காவல் துறையினர் கண்டுபிடிக்கவில்லை என்பதற்காக, நாம் அந்தக் காவல் நிலையத்தைக் கலைத்துவிடுவதில்லை. வேறு அதிகாரிகளை நியமிக்கிறோம். வேறு அதிகாரிகளை, திறமையானவர்களை, துப்பறிவதற்காக நியமிக்கவேண்டிய அவசியங்கள் எல்லாம்கூட ஏற்படுகின்றன. அதைப்போன்று, காவல் துறையிலிருந்து கைதிகள் தப்பித்து விடுவார்கள் என்று சொன்னால், அவர்களுக்குப் பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டுமே தவிர, அதற்காக இப்படிப்பட்ட ஒரு சட்டத்தைக் கொண்டு வரவேண்டிய அவசியம் இல்லை. இதை அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும். ஏனென்றால், சிறையிலிருந்தே கைதிகள் தப்பித்து விடுகிறார்கள். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலைகூட அமைந்துவிடுகிறது. ஆகையால் அரசு அதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.என். இலட்சுமணன்.

[2002 மே 10

**திரு. கே.என். இலட்சுமணன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருத்தச் சட்டத்தை நாங்கள் ஆதரிக்கின்றோம். காரணம், (குறுக்கீடு) பயங்கரவாத... (மேசையைத் தட்டும் ஒலி).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பழனிசாமி, பயமுறுத்தக்கூடாது, அவரை. (சிரிப்பு)

**திரு. கே.என். இலட்சுமணன்:** பயங்கரக் கைதிகள் இருக்கின்றார்கள். அதற்கு மட்டும்தான் இந்த வசதி செய்யப்பட்டிருக்கிறது. எத்தனையோ கைதிகள் 15 நாட்களுக்கு ஒருமுறை வெளியே வரும்போது—பாட்சா போன்ற பயங்கரவாதிகளை எல்லாம் பத்திரிகை நிருபர்கள் அப்போதுதான் பார்ப்பதற்கு ஒரு சமயம் கிடைக்கிறது. ஏதோ ஒரு ஹீரோ போன்று, ஒரு தியாகி போன்று (மேசையைத் தட்டும் ஒலி) பேட்டி கொடுத்திருப்பதை எல்லாம் பார்க்க முடிகிறது. அதுமட்டுமல்ல. மாண்புமிகு தலைவர் அவர்களே, நீதிபதியின் முன்னாலேயே தாக்கி விடுகிறேன், உங்களுடைய குடும்பத்தையே நாசமாக்கிவிடுவேன்' என்று மிரட்டுகின்ற தன்மையையும் நாம் நேரடியாகப் பார்க்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) அத்தகைய பயங்கரவாதிகளை வெளியே கொண்டு வராமல் இருப்பதற்கு இது வரப்பிரசாதமாக இருக்கின்றது என்று கூறி வரவேற்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களில் சிலர் இந்தச் சட்டத்தை எதிர்த்தும், மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் இந்தச் சட்டத்தை ஆதரித்தும் பேசினார்கள். நான் ஒரே ஒரு கருத்தாக, இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதன் மூலம், கைதிகளுக்கும் ஒரு முழுமையான அளவிற்குப் பாதுகாப்பு உள்ளது என்பதை இங்கே நான் சுட்டிக்காட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். இரண்டாண்டுகளுக்கு முன்பாக, கடலூர் நீதிமன்றத்திற்குக் கைதிகள் கொண்டுவரப்பட்டபோது, நீதிமன்றத்திலேயே மூன்று கைதிகள் வெட்டிக் கொல்லப்பட்ட சம்பவங்களை எல்லாம் நிச்சயமாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் மறந்திருக்க மாட்டார்கள். எனவே, இந்தச் சட்டம், கைதிகளுக்கும் ஒரு பாதுகாப்பாக இருக்கின்ற தன்மையை மாண்புமிகு உறுப்பினர்கள் உணரவேண்டும்.



2002 மே 10] [திரு. டி. ஜெயக்குமார்]

பிற்பகல் 1-20

மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தெள்ளத் தெளிவாக, இந்தச் சட்டத்தினுடைய நோக்கத்தையும், இந்தச் சட்டம் கொண்டு வருவதால் விசாரணைக் கைதிகளுடைய அடிப்படை உரிமைகள் எந்த அளவிற்கும் பாதிக்கப்படாது என்கின்ற ஓர் உறுதியான கருத்தையும் இங்கே சொல்லியிருக்கின்றார்கள். அதேபோன்று, கைதிகள் தப்பி ஓடுகின்ற நிலைமையும்—ஏறக்குறைய 10 ஆண்டு காலங்களிலே 609 கைதிகள் தப்பி ஓடிவிட்ட அந்த நிலைமையை சொல்லி, இந்தச் சட்டம் எந்த அளவிற்கு அவசியம் என்பதை மாண்புமிகு அம்மா அவர்கள் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மனித சக்திச் செலவு, வீண் செலவு, மற்றும் எரிபொருள் சிக்கனம் மற்றும் அனாவசியச் செலவுகள் எல்லாம் இதிலே தவிர்க்கப்பட்டுவிடும். விஞ்ஞான யுக்தியை நாடு பெற்றிட வேண்டும் என்கின்ற வகையிலும் இந்தச் சட்டத்தை இயற்றி, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவின் சிந்தனையிலே அறிவுப்பூர்வமாக உதித்த இந்தத் திட்டத்திற்கு அம்மா அவர்கள் முழுமையான அளவிற்கு விளக்கங்களை எடுத்துச் சொல்லிவிட்டார்கள். எனவே, நான் எடுத்துச் சொல்வதற்கு ஒன்றுமில்லை. இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எங்களுக்கெல்லாம் ஒரு சிறந்த பேராசிரியராகவும், நாங்கள் எல்லாம் எல்.கே.ஜி. ஆகவும் இருக்கின்ற காரணத்தினால், அம்மாவினுடைய விளக்கத்தை ஏற்றுக்கொண்டு, சட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தம் இல்லை.

[பேரவைத் தலைவர்] [2002 மே 10

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க.

(ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

(இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க.

(ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

(இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு குற்ற வழக்கு விசாரணைமுறைத் தொகுப்புச் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/2002) நிறைவேற்றப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க.

(ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

(இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.



2002 மே 10]

## (ஊ) தமிழ்நாடு புகைபிடித்தலையும் எச்சில் உமிழ்வதையும் தடை செய்தல் சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு புகைபிடித்தலையும் எச்சில் உமிழ்வதையும் தடை செய்தல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2002). மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு புகைபிடித்தலையும் எச்சில் உமிழ்வதையும் தடை செய்தல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2002)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுதர்சனம், (குறுக்கீடு) இல்லை. மாண்புமிகு உறுப்பினர் மைதீன்கான் பேசுங்கள்.

**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு புகைபிடித்தலையும், எச்சில் உமிழ்வதையும் தடை செய்தல் சட்டமுன்வடிவின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய கருத்தை நான் எடுத்து வைக்க விரும்புகின்றேன். நேற்றையதினம் நிதியமைச்சர் அவர்கள், இந்தச் சட்டமுன்வடிவு உச்ச நீதிமன்றத்தின் அறிவுறுத்தலின்படி இங்கே கொண்டு வரப்படுகிறது என்பதைச் சொன்னார்கள். இது, ஒருவேளை 'புகைபிடித்தலினுடைய' என்று ஒட்டுமொத்தமாக இருந்தாலும்கூட, புகைபிடித்தல் என்றாலே பொது இடங்களில் புகைபிடிப்பது, பீடி அல்லது சிகரெட்; இன்று ஓரளவு நடுத்தர வசதி உள்ளவர்களும், அதற்கு மேலே உள்ளவர்களும்தான் சிகரெட் பிடிக்கிறார்கள். அதேபோல சிகரெட் உற்பத்தி என்பதையும், இந்தியத் திருநாட்டிலேயே விரல் விட்டு எண்ணக்கூடிய மிகச் சிலர்தான். அதுவும் சில கோடீஸ்வரர்கள்தான்--அந்தத் தொழிலைச்--செய்கிறார்கள். அதிலும்கூட மனித சக்தி பயன்படுத்தப்படவில்லை. மாறாக, இயந்திர சக்திதான் பயன்படுத்தப்படுகிறது. அந்தப் பிரச்சினைக்குள் நான் போக விரும்பவில்லை. ஆனால் பீடியைப் பொறுத்தவரையில், இன்றைக்குப் பொது இடங்களிலே புகைபிடிக்கக் கூடாது என்று சொன்னாலும்கூட, அதை அதிகமாகப் பிடிப்பது என்பது ஏழையெளிய மக்கள்தான்.

@ 4-4-2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[திரு. டி.பி.எம். மைதீன்கான்] [2002 மே 10

பிற்பகல் 1-25

நான் அவர்களுக்கு வக்காலத்து வாங்க விரும்பவில்லை. பொது இடங்களில் புகைபிடிப்பதும், எச்சில் உமிழ்வதும் சுகாதாரத்திற்குக் கேடு, மனிதனுடைய நலனுக்கு நல்லதல்ல என்பதை ஒத்துக்கொள்கிறோம். ஆனால், அதைச் சட்டத்தின் மூலம் தடை செய்யும்போது--இன்றைக்குத் தமிழ்நாட்டில் மட்டும் சற்றேறக்குறைய 7 இலட்சம் தொழிலாளர்கள் இந்தப் பீடித் தொழிலிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, பீடித் தொழிலில் உள்ள அந்த 7 இலட்சம் குடும்பங்களும், அந்தத் தொழிலில் இருக்கின்ற கூலித் தொழிலாளர்களும், அதை விற்கின்ற பெட்டிக் கடைக்காரர்களும், மிகவும் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்ற அந்த ஏழை எளிய மக்களும்--ஏறத்தாழ 20 இலட்சம் பேர் பாதிக்கப்படுகின்றார்கள். இன்றைக்கு, இந்தப் புகையிலை உற்பத்தியாளர்கள் தமிழ்நாட்டிலே 100-க்கு மேற்பட்டவர்கள் இருக்கிறார்கள் அவர்கள் எல்லாம்—அவர்களின் பெரும்பான்மையானவர்கள்--வெளி மாநிலத்தைச் சார்ந்தவர்கள், ஏதோ தமிழ்நாட்டிலுள்ள ஏழை, எளியவர்களுக்கு வேலை கிடைக்க வேண்டும் என்பதற்காக அவர்கள் இங்கே தொழில் செய்யவில்லை. பொதுவாக, ஒரு தொழில் செய்வது என்றால், உற்பத்தி செய்வது என்றால், ஒன்று அங்கே raw material--உற்பத்திப் பொருள், மூலப் பொருள்—கிடைக்கப்பெற வேண்டும் அல்லது சீதோஷ்ண நிலை அடிப்படையில் அது அமைய வேண்டும் என்பதுதான் தொழில் முயற்சியிலே ஈடுபடுபவர்கள் செய்யக்கூடியது. பீடிகளுக்கு உள்ள மூலப் பொருள் தமிழ்நாட்டிலே கிடைப்பதில்லை. மகாராஷ்டிரா, ஆந்திரா, குஜராத், மத்தியப்பிரதேசம் போன்ற வட மாநிலங்களிலேயிருந்துதான் இங்கே வருகிறது. அவர்கள், தமிழ்நாட்டிலே குறைந்த கூலி அளவிலே ஆட்கள் கிடைக்கின்ற காரணத்தினாலேதான் அந்தத் தொழிலை இங்கே வந்து செய்கிறார்கள் என்றால், நான் கேட்பதெல்லாம் அந்தக் குறைந்த கூலியே கிடைத்தால் போதுமென்று ஒரு நேரமாவது தன்னுடைய வயிற்றைக் கழுவிக்கொள்ளலாம் என்கிற நிலையில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் இருக்கிற மிகவும் கஷ்டப்படுகிற, கிட்டத்தட்ட 20 இலட்சம் பேர் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள் என்றால், அவர்கள் இந்தச் சட்டத்தால் பாதிக்கப்படுவார்களே என்கிற அந்த ஐயப்பாடுதான் எனக்கு இருக்கிறது. அப்படிப் பாதிக்கப்படப் போகிற தொழிலாளர்களுக்கு இந்த அரசு என்ன மாற்று வழிகளைச் செய்யப்போகிறது என்பதை அரசின் மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இன்றைக்குச் சில சட்டங்களை நாம் போட்டாலும்கூட, பேரறிஞர் அண்ணா அவர்கள் 'சட்டம் ஒரு இருட்டறை; அதிலே வக்கீலின் வாதம் ஒரு விளக்கு; அது ஏழைகளுக்கு எட்டாது' என்று சொன்னார்கள். கிட்டத்தட்ட, நான் சொல்வது பூராவுமே, ஏழை எளிய மக்கள்தான் இந்தச் சட்டத்திலே பாதிக்கப்படுகிறார்கள். இன்றைக்குக்கூட....



2002 மே 10] [திரு. டி.பி.எம். மைதீன்கான்]

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது இடங்களில் புகைபிடிக்கக் கூடாது என்பது உச்ச நீதிமன்றத்தின் ஆணை. அதை மீறி, மாநில அரசு எதுவும் செய்ய முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேச்சின் ஆரம்பத்திலேயே, நேற்றையதினம் நிதியமைச்சர் சொன்னதைக் குறிப்பிட்டுக் காட்டி, தெரிந்துதான் பேசுகிறேன். பாதிக்கப்பட்ட மக்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட வேண்டுமென்றுதான் சொன்னேனே தவிர, அந்தச் சட்டத்தைப் பற்றி, உச்ச நீதிமன்ற அறிவுறுத்தலைப் பற்றி, நான் நீதிமன்ற விஷயத்திற்குள்ளே செல்ல விரும்பவில்லை. ஒரு காலகட்டத்தில் சைக்கிளில் டபுள்ஸ்--பின்னாலே ஒரு ஆளை ஏற்றிக்கொண்டு செல்வது சட்டபூர்வமாகத் தடுக்கப்பட்டிருந்தது தமிழ்நாட்டிலே. ஒரு காலகட்டத்தில், அந்தச் சட்டத்தால் பாதிக்கப்பட்டது ஏழை, எளிய மக்கள்தான். அதுமட்டுமல்ல, அதனால் அதிகார துஷ்பிரயோகம் நடக்கிறது என்றும், அதனால் ஒரு சில காவல் துறையினரால் ஏழை, எளிய மக்கள் பாதிக்கப்படுகின்றார்கள் என்ற காரணத்தினால் அந்த டபுள்ஸ் செல்வதை அனுமதிக்க வேண்டிய சூழ்நிலை தமிழ்நாட்டில் ஏற்பட்டது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தினால் ஏழை, எளிய மக்கள் பாதிக்கப்படுவதற்கு எந்தக் காரணமும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தச் சட்டத்தின் மூலம், பீடி உற்பத்தி செய்யக் கூடாது என்று எந்த அம்சமும் இல்லை. பீடி உற்பத்தி செய்யக் கூடாது என்றோ, விற்பனை செய்யக் கூடாது என்றோ இந்த அரசு சொல்லவில்லை. பொது இடங்களில் புகைபிடிக்கக் கூடாது என்றுதான் இந்தச் சட்டம் கூறுகிறது. ஆகவே, உற்பத்தி செய்பவர்கள் தொடர்ந்து செய்யலாம். விற்பனை செய்பவர்கள் தொடர்ந்து விற்பனை செய்யலாம். வாங்குபவர்களும் தொடர்ந்து வாங்கி, அவரவர் இல்லங்களில், தனி இடங்களில் புகைபிடித்துக்கொள்ளலாம்.

**திரு. சி. ஞானசேகரன்:** Point of order. பேரவைத் தலைவர் அவர்களே, முதல்வர் அவர்கள் விளக்கத்தை அளித்தார்கள். ஆனால், அந்தச் சட்டத்தில் செக்ஷன் 7—ல் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், 100 மீட்டர், பள்ளி....

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையின் முன்னனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. சி. ஞானசேகரன்:** 100 மீட்டருக்கு உள்ளே நீங்கள் வைக்கக்கூடாது; புகைபிடிக்கக் கூடாது என்று சொல்கிற காரணத்தாலே, அந்தத் தொழில் நிச்சயமாகப் பாதிக்கிறது. செக்ஷன் 7தான் பெரிய ஆபத்து. அதை மட்டுமாவது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்து விட்டால், பிறகு அவர்கள் எல்லாம் உற்பத்தி செய்வார்கள், செய்ய முடியும்.

**திரு. டிபி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சட்டம் இயற்றப்படும்போது, நேற்றுகூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், ஒரு பிரச்சினையைச் சிந்திக்கும்போது நாணயத்தின் இரு பக்கம் போல என்று. ஆகவே, பாதிக்கப்படுகின்ற பகுதியையும் நீங்கள் கவனிக்க வேண்டுமென்றுதான் நான் சொல்கிறேனே தவிர, பாதிக்கப்படுகிற அந்த மக்கள் 7 இலட்சம் பேர் என்று சொன்னேன். தமிழ்நாட்டில் மட்டும் ஏறத்தாழ 5 இலட்சம் பேர் இருக்கின்றார்கள். அதிலும் குறிப்பாக, என்னுடைய தொகுதியிலே 50,000 பேர் அந்தத் தொழிலைச் செய்கிறார்கள். இங்கே வந்திருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள், நெல்லை, அம்பாசமுத்திரம், தென்காசி, ஆலங்குளம் போன்ற பகுதிகளிலே பல ஆயிரக்கணக்கிலே அந்த மக்கள் அந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்வு இந்தச் சட்டத்தினால் பாதிக்கப்படக்கூடுமேயானால்--பாதிக்கப்படக்கூடாது என்பதுதான் இதன் நோக்கம். பாதிக்கப்படுமேயானால்—அதனுடைய முடிவு, பட்டினிச் சாவாகத்தான் இருக்குமென்று ஏற்கெனவே நான் சட்டமன்றத்திலே பேசியிருக்கிறேன். அதை மீண்டும் நான் சொல்ல ஆசைப்படுகிறேன். நான் எதையும்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிறையப் பேர் பேச வேண்டும். சீக்கிரம் உரையை முடித்து விடுங்கள்.

**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** முடித்து விடுகிறேன். நான் ஏற்கெனவே குறைவாகப் பேசுகிற ஆள்தான். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது என்னுடைய தொகுதி சம்பந்தப்பட்ட விஷயம். நானே விரும்பி எடுத்துக் கொண்டு பேசுகிற துறை என்பதால், இன்றைக்கு இதன் மூலம் சட்டத்தை—ஏற்கெனவே நேற்று பிளாஸ்டிக் தடைச் சட்டத்திலே முதலமைச்சர் அவர்கள் முடிவு எடுத்தார்கள். எங்கள் கட்சியின் சார்பாக





திரு. பொன்முடி, மற்றும் சி.பி.எம்., சி.பி.ஐ. மற்றும் காங்கிரஸ் போன்ற கட்சித் தோழர்கள் எல்லாம் சொன்ன பல கருத்துகளின் அடிப்படையிலே, அதைப் பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்புவதாகச் சொன்னார்கள். இதையும் அப்படி அனுப்பி ஆய்வு செய்யப்பட வேண்டுமென்று என்னுடைய ஆலோசனை அல்ல, வேண்டுகோளாக வைக்கிறேன். இன்றைக்குத் தமிழ்நாட்டிலுள்ள தொழிலாளர்கள்தான் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள். இதிலே இந்தியாவிலே உள்ள யாரும் பாதிக்கப்படப் போவதில்லை. கேரள உயர் நீதிமன்ற ஆணையின்படி, இன்றைக்குக் கேரளாவில் மட்டும் ஓரளவு இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது உண்மை என்றாலும்கூட, இன்னும் பல மாநிலங்கள் அந்த சுப்ரீம் கோர்ட் ஆர்டர்படி ஒருவேளை அவர்கள் அனுமதித்தாலும்கூட, இதிலே அதிகமாகப் பாதிக்கப்படுவது தமிழ்நாட்டினுடைய ஏழைகள். அதிலும் குறிப்பாகப் பெண்கள் என்கிற காரணத்தினால்தான், இதுபோன்ற பிரச்சினைகளில் தயவுசெய்து அரசு நன்கு சிந்தித்து அந்தப் பாமர மக்கள் பாதிக்கப்படாமல்—ஒருவேளை அப்படிச் சட்டம் கொண்டு வரப்படுமேயானால், அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கு நல்ல ஒரு திட்டத்தை அறிவித்துவிட்டு, இதைக் கொண்டுவரப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று சொல்லி, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்தம் ஒரு நல்ல நோக்கத்திற்காகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. என்றாலும், நடைமுறையிலே பல்வேறு சிக்கல்கள் இருக்கின்றன என்பதை இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்வது என்னுடைய கடமை என்கிற காரணத்தினாலே, இரண்டொரு கருத்துகளைச் சொல்ல விழைகிறேன். இந்தச் சட்டத் திருத்தமானது, பொது இடங்களிலே புகைபிடித்தல், எச்சில் உமிழ்தல் மிகப் பெரிய குற்றம் என்று உச்ச நீதிமன்றம் தடை விதித்திருக்கிறது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். இருந்தாலும், தமிழகத்தைப் பொறுத்தவரை, நம்முடைய வேலூர் மாவட்டம், திருநெல்வேலி மாவட்டம் ஆகியவற்றில் பீடித் தொழிலாளர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்களுக்கு எந்தவிதமான அச்சமும் தேவையில்லை என்று முதலமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். ஆனால், இந்தச் சட்டத் திருத்தத்திலே 7-வது பத்தி என்ன சொல்கிறது என்றால், பொது இடங்களில் இருந்து 100 மீட்டர் தூரத்திற்கு உள்ளாகக் கடைகள் வைத்திருந்தால், அந்தக்

கடைகளிலே பீடி, சிகரெட் போன்ற புகைபிடிக்கும் பொருட்கள் வைத்திருந்தால், அவர்களுக்கு 500 ரூபாய் வரை அபராதம் விதிக்கலாம் என்றும், அது இரண்டாவது முறையாக ஆகின்றபோது ஆயிரம் ரூபாயாக மாறக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்றும், இங்கே குறிப்பிட்டு இருக்கின்றீர்கள். தமிழகத்தைப் பொறுத்தவரை, ஊராட்சி ஒன்றியமாக இருந்தாலும் சரி, நகராட்சியாக இருந்தாலும் சரி, மாநகராட்சியாக இருந்தாலும் சரி, பொது இடங்கள் அதிகமாகவே இருக்கின்றன. 100 மீட்டருக்குள்ளாக அங்கே கடைகள் நிறையவே இருக்கின்றன. அந்தக் கடைகளிலே பீடி, சிகரெட், பான் மசாலா போன்ற பொருட்கள் எல்லாம் வைத்து விற்பது, நீண்ட நாட்களாக வர்த்தகம் செய்கின்றவர்களுக்கு ஒரு தொழிலாக இருக்கிறது. அந்தத் தொழில் இப்போது இந்தச் சட்டத்தின் மூலமாகப் பெரிதும் பாதிக்கப்படும். அதை நினைவிலே கொண்டு--இந்தச் சட்டத் திருத்தம் போலீசாரின் கையிலே போய் சிக்கி, ஏழை மக்கள் துன்புறுத்தப்படுவார்கள். அதனாலே--அருள்கூர்ந்து இந்தச் சட்டத் திருத்தத்தின் ஏழாவது பிரிவைத், தயவுசெய்து நீக்கிக் கொள்ள வேண்டும் என்று பணிவன்போடு கேட்டு அமர்கிறேன்.

*பிற்பகல் 1-35*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சிகரெட், பீடிகளை விற்கும் கடைகளை ஒரு 100 மீட்டருக்கு அப்பால் தள்ளி வைப்பதனால் யாருக்கும் எந்தப் பாதிப்பும் ஏற்பட்டுவிடாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். புகைபிடிப்பது என்பது, எளிதில் விடமுடியாத ஒரு பழக்கம். ஆகவே, கடைகள் எங்கே இருந்தாலும், புகைபிடிக்கும் பழக்கம் உள்ளவர்கள் தேடிச் சென்று (மேசையைத் தட்டும் ஒலி) எப்படியும் வாங்கி, புகைபிடிப்பார்கள். ஆகவே, யாருக்கும் எந்தவிதமான பாதிப்பும் ஏற்பட்டுவிடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாட்டாளி மக்கள் கட்சி சார்பாகப் பேச வேண்டுமா? (குறுக்கீடு)

***திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள புகைபிடித்தல், எச்சில் உமிழ்தல் பற்றிய சட்டமுன்வடிவைப் பற்றி பாட்டாளி மக்கள் கட்சியினுடைய கருத்தை நான் எடுத்து வைக்கிறேன்.





இன்றைக்கு சிகரெட் பாக்கெட்டுகளிலேகூட, "smoking is injurious to health" என்று சொல்லப்பட்டிருக்கிறது. "புகைபிடித்தல் உடல் நலத்திற்குக் கேடு" என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதேபோல், மதுபான பாட்டிலிலேகூட "குடி குடியைக் கெடுக்கும்", "குடிப் பழக்கம் உடல் நலத்தைக் கெடுக்கும்" என்று சொல்லப்பட்டாலும்கூட, இன்றைக்கு யாரும் அதைப்பற்றிக் கவலைப்படாமல், தொடர்ந்து புகைபி'டித்தும், குடித்தும் தவறு செய்துகொண்டுதான் இருக்கிறார்கள். எனவே, இந்தப் புகைபிடித்தலால் புற்றுநோய், ஆஸ்துமா, T.B. போன்ற கொடிய நோய்கள் எல்லாம் இன்றைக்கு ஏற்பட்டு, மக்கள் எல்லாம் பாதிக்கப்படுகிறார்கள்.

அதேபோல், பொது இடங்களிலேகூட குப்பைகளை எல்லாம் கொட்டி. சிகரெட், பீடி பிடித்தல், எச்சில் உமிழ்தல் என்று இன்றைக்குச் சுற்றுப்புறச் சூழலுக்கே கேடுகளாக இருக்கின்றதைத் தடுக்கும் வகையில் உள்ள இச் சட்டமுன்வடிவைக் கொண்டு வருவது பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வரவேற்கக்கூடிய ஒன்றாக இருந்தாலும்கூட, எங்களுடைய பசுமைத் தாயகத்தினுடைய தலைவர் டாக்டர் சின்ன அய்யா அவர்கள் இந்தப் பசுமைத் தாயகம் அமைப்பின் மூலமாகப் பல இலட்சம் இளைஞர்களுக்கு எல்லாம் இன்றைக்குச் சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கின்ற வகையிலே, பொது இடங்களிலே குப்பைகள் கொட்டக்கூடாது என்று சொல்லி, பொது இடத்தில் புகை பிடிக்கக் கூடாது, எச்சில் துப்பக் கூடாது, எச்சில் துப்பினால் அதிலிருந்து பல்வேறுபட்ட நோய்கள், தொற்று நோய்கள் பரவி வருகின்றன என்று எங்களுக்கு எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அந்தவகையிலே அவர்கள் இந்தச் சட்டத்தை ஆதரித்துக்கூட அறிக்கை விட்டிருக்கிறார்கள். இருந்தாலும்கூட, மேலைநாடுகளிலே எல்லாம் எச்சில் துப்புவதற்கு என்று தனி இடம் ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். அந்த இடத்தில்தான் துப்ப வேண்டும். இங்கே நம்முடைய நாட்டிலே கண்ட இடங்களிலே எச்சிலைத் துப்புவதனால் இன்றைக்குத் தொற்று நோய்கள் எல்லாம் பரவிக் கொண்டிருக்கின்றன. அந்தவகையிலே பொது இடத்திலே புகை பிடிப்பதால், தானும் கெட்டு, பிறரையும் கெடுக்கின்றவர்களைத் தடுக்கும் இந்தச் சட்டம் வரவேற்கக்கூடிய ஒன்றுதான்.

இன்றைக்குத் தமிழ்நாட்டிலே பீடி சுற்றும், சிகரெட் மற்றும் புகையிலை உற்பத்தி செய்கின்ற தொழிலாளர்கள் பல இலட்சம் தொழிலாளர்கள். இன்றைக்குப் பீடி சுற்றினால்தான் தங்கள் வயிற்றுப் பிழைப்பு என்று இருக்கும் அந்தத் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள். இவர்களுக்கு ஒரு மாற்று ஏற்பாட்டை, இந்தச் சட்டத்தால் பாதிக்கப்படுகின்ற

தொழிலாளர்களுக்குச் செய்து கொடுக்க வேண்டும். விழிப்புணர்வை ஏற்படுத்தி செய்து கொடுத்துவிட்டு, இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தால் நன்றாக இருக்கும் என்று சொல்லி, அந்தத் தொழிலாளி மக்களைப் பாதுகாக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக வற்புறுத்தி, இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்று அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் ஜெயக்குமார்.

**திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நல்ல சட்டமுன்வடிவின்மீது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துகளை எடுத்து வைப்பதற்காக அளிக்கப்பட்ட வாய்ப்புக்காக என்னுடைய நன்றியினை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இதுபோன்ற நல்ல சட்டங்கள் வருகின்ற நேரத்திலே இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியானது அதை வரவேற்பதில் முன்னணியிலே நிற்கும் என்பதற்கு ஓர் உதாரணத்தை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். இதன் ஆரம்பமே இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியிலிருந்துதான் உதயமாகியிருக்கின்றது. எங்களுடைய கட்சியைச் சார்ந்த மராட்டிய மாநிலத்தில், பம்பாய் நகரத்தில் காங்கிரஸ் கட்சியின் தலைவர் முரளி தியோரா அவர்கள், 1999 ஆம் ஆண்டு பொது நல வழக்கு ஒன்றை, கட்சியின் சார்பாக உச்ச நீதிமன்றத்தில் தொடர, அதன் விடிவாகத்தான் இதுபோன்ற ஒரு சட்டமுன்வடிவு வரவேண்டும் என்றும், பொது இடங்களிலேயும், பொதுப் பயன்பாட்டிற்காக இருக்கின்ற இடத்தில் எல்லாமும் புகைபிடித்தலும், எச்சில் உமிழ்வதும் இருக்கக்கூடாது என்றும் உயர் நீதிமன்றம்--மன்னிக்க வேண்டும்—உச்ச நீதிமன்றம் சட்டத்தைப் பிறப்பித்திருக்கின்றது. அதன் தொடர்ச்சியாகத்தான் இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு அரசு இந்தச் சட்டத்தை இங்கே முன்மொழிந்திருக்கிறது. இதற்காக, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே இருந்து, இந்தச் சட்டம் வந்திருக்கிறது என்பதை நினைக்கிறபோது, எங்களுக்குச் சற்றுப் பெருமையாக இருக்கிறது.

பிற்பகல் 1-40

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு வந்த பிறகு தமிழக அரசு இந்தச் சட்டத்தைக் கொண்டு வரவில்லை. இந்த அரசு பொறுப்பேற்றது கடந்த ஆண்டு 2001 மே மாதம் 14 ஆம் தேதி. 25-06-2001 அன்று நடந்த அமைச்சரவைக் கூட்டத்திலேயே இந்தச் சட்டத்தைக் கொண்டு வர





முடிவு எடுக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதன் பின்னர் கடந்த ஆண்டு, 8-11-2001 அன்றுதான் திரு. முரளி தியோரா அவர்கள் தொடர்ந்த வழக்கில் சுப்ரீம் கோர்ட்டில் ஆணை பெறப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கு. ஜெயக்குமார்:** விளக்கத்திற்கு நன்றி. ஆக, இந்தச் சட்டமுன்வடிவு மக்களுடைய நலனைப் பாதுகாப்பதற்காகவும், குறிப்பாகப் பள்ளிக்கூடப் பகுதிகளிலே இது இருக்கக்கூடாது என்றும், 100 மீட்டர் பரப்பளவு தூரத்திலே இத்தகைய பொருட்களை எல்லாம் விற்கக்கூடாது என்றும் இதிலே குறிப்பிட்டிருக்கிறீர்கள். மிகவும் நல்ல ஒரு அம்சம் இது. ஏனென்றால் சிறு வயதிலே, டீன் ஏஜ் என்று சொல்லுகிறார்களே, அந்தப் பருவத்திலே எதையும் செய்து பார்க்க வேண்டும் என்ற துடிப்பு இருக்கின்ற நேரத்திலே இதைப் பிள்ளைகள் ஆரம்பிக்க, அது தொற்று நோயாகத் தொடர்வதைத் தடுப்பதற்காக இத்தகைய ஓர் அமைப்பை இதிலே கொடுத்திருக்கிறீர்கள். இது வரவேற்கத்தக்கது. அதே நேரத்தில், இந்தச் சபையிலே இருக்கின்ற பெருவாரியான உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். இதனால் பாதிக்கப்படக்கூடியவர்கள் தொழிலாளர்கள். குறிப்பாகப் பெட்டிக் கடைகளில்தான் இந்தப் பொருட்களை வைத்து விற்கின்றார்கள். அந்தப் பெட்டிக் கடைகளைச் சார்ந்தவர்கள் எல்லாம் மிகவும் ஏழ்மை நிலையிலே இருக்கின்றவர்கள். அதிகமான வருமானம் இல்லாதவர்கள். குறிப்பாக, பீடி, சிகரெட் விற்பதன் மூலமாக அவர்களுக்குக் கணிசமான இலாபம் கிடைக்கிறது என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். எனவே, இதன் சார்பாக அரசு சற்றுக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதில் 100 மீட்டர் என்று சொல்லியிருக்கின்றீர்கள்—பரப்பளவை அதாவது, பள்ளி அல்லது பிற கல்வி நிலையங்கள் எவற்றையும் சுற்றியுள்ள 100 மீட்டர் பரப்பிடம் ஒன்றுக்குள்ளாக—பரப்பிடம் என்று சொல்லியிருக்கிறீர்கள். பரப்பிடத்திற்குப் பதிலாக ஒரு சிறு மாற்றத்தை இதிலே ஏற்படுத்தலாம். தேர்தல் நேரங்களிலேகூட வாக்குச் சாவடியிலிருந்து 100 மீட்டர் என்று தூரத்தைத்தான் நாம் குறிப்பிடுகிறோமே ஒழிய, பரப்பளவைக் குறிப்பிடுவது கிடையாது. அதேபோன்று, பரப்பளவு—என்பதற்குப் பதிலாக 'தூரம்' என்ற ஒரு சிறு மாற்றத்தை மட்டும் நீங்கள் ஏற்படுத்தினால், இதனால் பாதிக்கப்படுகின்றவர்கள் ஓரளவுக்குப் பாதிக்கப்படாமல் இருப்பார்கள், அவர்களுடைய வயிற்றுப் பிழைப்பு கெடாமல் இருக்கும் என்ற கருத்தை இங்கே சொல்லி, இத்தகையதொரு நல்ல சட்டமுன்வடிவைக் கொடுத்திருக்கிற இந்த அரசுக்கு என்னுடைய வாழ்த்துகளையும் தெரிவித்து அமைகிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி க. பாலபாரதி.

**செல்வி க. பாலபாரதி:** பேரவைத் தலைவர் அவர்களே, புகைபிடித்தலையும், எச்சில் உமிழ்வதையும் தடை செய்யக்கூடிய இந்தச் சட்டத்தினுடைய மையப் பொருளில், தனி மனிதனுடைய உடல் நலனைப் பாதுகாப்பது, சமூக நலனைப் பாதுகாப்பது, சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது என்ற நல்ல நோக்கம் இணைந்து இருக்கிறது என்ற முறையில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக அந்த மையக் கருவை நான் வரவேற்கின்றேன். அதேசமயத்தில், நேற்றைக்கு முன்தினம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே சுற்றுச்சூழல் பாதுகாப்புக்குறித்து ஒரு நல்ல விளக்கத்தைச் சொல்லி உரையாற்றினார்கள். அவர்கள் கூறியபோது, ஒரு பிரச்சினைக்கு இரண்டு பக்கங்கள் இருப்பதைப் பார்க்க வேண்டுமென்று அவர்கள் சொன்னதை, மாண்புமிகு முதல்வர் அவர்கள் மீண்டும் ஒரு முறை அதைக் கருணையோடு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், தமிழ்நாட்டினுடைய பல மாவட்டங்களில், திருநெல்வேலி மாவட்டம், வாணியம்பாடி, குடியாத்தம், இன்னும் பல்வேறு இடங்களில் 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட சிறுபான்மை மக்கள் உள்ளிட்டோர் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். பீடித் தொழிலுக்கு இப்போது பிரச்சினை இல்லை என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறியிருந்தபோதிலும்--ஏற்கெனவே மினி சிகரெட்டுகள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகின்றன—மிகப் பெரிய கம்பெனிகள், பன்னாட்டுக் கம்பெனிகள் எல்லாம் சிகரெட்டுகளை உற்பத்தி செய்வதால், இன்று பீடித் தொழில் நலிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. இதற்கு மத்தியிலேதான்--இந்தச் சட்டம் வருகிறபோது, குடும்பம் முழுவதும் உட்கார்ந்து கவலைப்படக்கூடிய, வேதனைப்படக்கூடிய அச்சத்தோடு இருந்து கொண்டிருக்கிறார்கள். ஒரு குடும்பத்தில் அம்மா, அண்ணன், அக்கா, தங்கை அனைவரும் பீடி சுற்றுகிறார்கள். அப்பா மட்டும்தான் ஊர் சுற்றுவார் என்று அந்த பீடி சுற்றக்கூடிய குடும்பங்களிலே இருக்கக்கூடிய குழந்தைகூடச் சொல்லக்கூடிய நிலைமை யதார்த்தமாக இருக்கிறது. ஆகவே, அவர்களுடைய தொழிலை, வாழ்க்கையைப் பாதுகாக்க வேண்டிய கடமை இந்த அரசாங்கத்திற்கு இருக்கிறது என்று நான் பார்க்கின்றேன்.

*பிற்பகல் 1-45*

உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு மதிக்கப்பட வேண்டும். ஆனால், சமீப காலத்திலே உச்ச நீதிமன்றம், மத்திய உணவுப் பொருள் கிடங்கிலே



வீணாகிக் கொண்டிருக்கக்கூடிய உணவுப் பொருட்களையெல்லாம் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருப்பவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்றுகூட ஒரு தீர்ப்பைச் சொன்னார்கள். ஆனால், மத்திய அரசாங்கம் காது கொடுத்துக் கேட்கவில்லை. இப்படி உச்ச நீதிமன்றம் சொல்லக்கூடிய சில தீர்ப்புகளையெல்லாம் மத்திய அரசாங்கம் மீறியிருக்கிறது. நான் மீற வேண்டுமென்று சொல்லவில்லை. ஆனால், மக்களினுடைய, சமூகத்தில் இருக்கக்கூடியவர்களினுடைய நலனோடு இணைத்துப் பார்க்க வேண்டி இருக்கிறது; இலட்சக்கணக்கான தொழிலாளர் குடும்பங்களைக் காப்பாற்ற வேண்டியிருக்கிறது. அதேபோன்று, பல்லாயிரக்கணக்கான கடைகள், சிறு வியாபாரக் கடைகள், அவர்களெல்லாம் வாடகைக்குக் கடை பிடித்து, பள்ளிக்கூடம், கோயில், இதுபோன்ற இடங்களிலே வைத்துவிட்டார்கள். அங்கே எல்லாம் பீடி, சிகரெட் இருக்கிறதா என்று காவல் துறை அதிகாரிகள் சோதனையிடச் சென்றால், அவர்களுடைய வியாபாரம் என்பது கடுமையாகப் பாதிக்கும். ஆகவே, வியாபாரிகளும் இந்த அரசுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள்; கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய பிரச்சினையையும் நீங்கள் கவனித்து, இந்த வியாபாரக் கடை மக்களுக்கு இருக்கக்கூடிய நிபந்தனையான 100 மீட்டர் தூரம் என்பதைக் குறைக்க வேண்டும். ஆகவே, இந்த மசோதாவைப் பின்னர் சட்டம் ஆக்கலாம். அதற்காக இதனை செலக்ட் கமிட்டிக்கு அனுப்பிவைக்க நீங்கள் பரிவோடு பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளச் சாராயத்தைக் காய்ச்சுவதிலும், அதை விற்பதிலும்கூட இலட்சக்கணக்கானவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க முடியுமா? அதற்காக அரசு நடவடிக்கை எடுக்க முடியுமா? அதைப்போலத்தான் இந்த பீடி, புகைபிடிப்பதுகூட. இது ஒரு சுகாதாரக் கேடு. வருங்காலச் சந்ததியினர் நல்ல ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டுமென்பதால்தான் பொது இடங்களில் புகைபிடிக்கக் கூடாது என்ற சட்டம் கொண்டு வரப்படுகிறது.

நான் ஏற்கெனவே தெரிவித்ததுபோல், தற்போது பீடித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை எதுவும் இல்லை. பீடி உற்பத்தி செய்வதற்கோ அல்லது பீடியை விற்பனை செய்வதற்கோ எந்தவிதமான தடையும் இல்லை. அப்படி எதிர்காலத்தில் ஒரு சூழ்நிலை உருவானால்--பீடித் தொழிலாளர்களும் இந்த மாநில மக்கள்தான்--அவர்களைப் பாதுகாக்க வேண்டிய கடமையும், பொறுப்பும்

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2002 மே 10

இந்த அரசுக்கு உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அப்போது அப்படியொரு சூழ்நிலை எழுந்தால், அரசு தேவையான நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of Order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அவர் பேசட்டும். உட்காருங்கள். அவர் பேசி முடித்துவிடட்டும். திரு. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் என்பது தொலைநோக்குப் பார்வையோடு கூடிய சமூக, சமுதாயப் பிரச்சினைகளிலே ஒன்றாகப் பார்க்கக்கூடிய சட்டம்தான். இதை ஒருபுறத்திலே வரவேற்கக்கூடிய அவசியம் இருக்கிறது. நான் பேசுகிறபோது ஒரு கருத்தைச் சொல்லிவிடுகிறேன். பீடி, சிகரெட், புகையிலை, வெற்றிலை, பாக்கு, மது அருந்துவது, இந்தப் பழக்கம் எதுவுமே எனக்குக்கிடையாது. (சிரிப்பு) ஆனாலும், இந்த அரங்கத்திலே இருக்கிறவர்களுக்கு 60 சதவீதம் பேருக்காகவாவது பேச வேண்டிய அவசியத்திலே இருக்கிறேன் என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இதைப் புரிந்துகொள்வீர்கள்.

குறிப்பாக, பீடி, சிகரெட் புகைக்கிற காரணத்தினாலே புற்றுநோய் வருகிறது என்று ஆராய்ச்சியிலே கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இது அமெரிக்காவிலே கண்டுபிடிக்கப்பட்டு, பல இலட்சம் பேர் இதனால் மரணமுற்றிருக்கிறார்கள் என்ற செய்தி பத்திரிகையிலே தொடர்ந்து வந்துகொண்டேயிருக்கிறது. ஆகவே, இதைத் தடுக்க வேண்டுமென்பது நல்ல நோக்கம்தான். ஆனால், அதே நேரத்தில், அப்படி இலட்சக்கணக்கான பேர்கள் மாண்டு கொண்டிருக்கிற அந்த அமெரிக்காவிலேகூட இதைத் தடை செய்வதற்கான முயற்சியை அங்கே எடுக்கவில்லை. இப்படியும் ஒருபுறம் இருக்கிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சில விளக்கங்களை, நல்ல விளக்கங்களைச் சொல்லியிருக்கிறார்கள். அதனடிப்படையிலே இதைப் பற்றிப் பரிசீலிக்க வேண்டுமென்பதற்காக இன்னொன்றையும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு குறிப்பைச் சொன்னார்கள்.



2002 மே 10] [திரு. வை. சிவபுண்ணியம்]

கள்ளச் சாராயத்தைக் காய்ச்சுபவர்கள் ஒரு இலட்சம் பேர்கள் இருக்கிறார்கள் என்பதற்காகப் பாதுகாக்க முடியுமா என்றால், கண்டிப்பாக முடியாது. ஏனென்றால், அது சட்ட விரோதமான செயல். ஆனால், பீடித் தொழிலைச் செய்வது அப்படி அல்ல. இது தொழிலைச் சார்ந்திருக்கிற செயல். ஆகவே, குடிசைத் தொழிலாக இருக்கிற இந்தத் தொழிலுக்குப் பாதுகாப்பு அளிக்காமல் இருக்க முடியாது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், சட்ட விரோதமான தொழிலையும், இந்தக் குடிசைத் தொழிலையும் சம்பந்தப்படுத்திச் சொல்லிவிட்டால், 30 இலட்சம் தொழிலாளர்கள் பாதிக்கப்படுவதற்கான மிகப் பெரிய அபாயம் இருக்கிறது. காரணம், தீப்பெட்டித் தொழிலில் 10 இலட்சம் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். பீடித் தொழிலிலே 20 இலட்சம் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். கிட்டத்தட்ட 30 இலட்சம் தொழிலாளர்களுடைய குடும்பங்கள் தமிழகத்திலே ஒரு பாதிப்புக்கு ஆளாகிற ஒரு நிலை ஏற்பட்டுவிடும் என்ற அபாயத்தைச் சொல்ல வேண்டிய...

பிற்பகல் 1-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தீப்பெட்டி என்பது என்ன பீடி பற்ற வைக்கத்தானா? குத்து விளக்கு ஏற்றவும் பயன்படும்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை, நான் சொல்லிவிடுகிறேன். தீப்பெட்டித் தொழிலில் ஈடுபட்டு இருக்கிற 10 இலட்சம் பேர் செய்யக்கூடிய அந்தத் தீப்பெட்டி உற்பத்தி இருக்கிறதே, அதிலே 90 சதவிகிதம் தீப்பெட்டி இந்தக் காரியத்திற்கு மட்டுமே பயன்படுகிறது. பீடி, சிகரெட் குடிப்பதற்காக மட்டும்தான் பயன்படுகிறது. 10 சதவிகிதம் மட்டும்தான் வீட்டு உபயோகத்திற்கும், இதர உபயோகத்திற்கும் பயன்படுத்தப்படுகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே பெரும்பான்மையான பயன்பாடு, 90 சதவிகிதம் இதற்காகப் பயன்படுகிற காரணத்தினாலே, இப்படிப்பட்ட ஒரு தொழில் மிகப் பெரிய நசிவு அடைகிற நிலை ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறோம். ஆகவே, இதைப் பரிசீலிக்க...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிவபுண்ணியம், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** முடித்துவிடுகிறேன். இதைப் பரிசீலிக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, அதிலே இன்னொரு வாய்ப்பு வந்துவிடக் கூடாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பிராந்திக் கடை திறந்த விஷயங்களைப் பற்றிச் சொல்லி Bar திறப்பதற்குரிய அனுமதியை அளித்தார்கள். அப்படிச் சொல்கிறபோது ஒரு செய்தியைச் சொன்னார்கள். Bar திறக்கப்படாததன் காரணத்தினாலே சட்ட விரோதமான முறையிலே பல கோடிக்கணக்கான ரூபாய். அரசுக்கு வர வேண்டிய பணம் என்பது வேறு வழிகளிலே அது சென்று கொண்டே இருந்தது. காவல் துறை மூலமாகவும், இதர துறை மூலமாகவும் தவறான காரியங்களிலே பணம் பெறப்பட்டது. அதை அரசின் கஜானாவிற்குத் திருப்பி விடுவதற்கான முயற்சி என்று சொன்னார்கள். வரவேற்கக்கூடிய ஒன்றாகக்கூட அதை நாம் கருதினோம்.

அதே நேரத்தில், காவல் துறைக்கு ஏற்பட்ட இந்த இழப்பை ஈடுசெய்வதற்காக இந்தச் சட்டம் வழிவகை கண்டு விடக்கூடாது. காரணம், தேவையானவர்களை, தேவையற்றவர்களைப் பயன்படுத்தி இந்தச் சட்டத்தின் மூலமாகத் தண்டித்து விடுகின்ற அபாயம் இருக்கிறது. ஓர் உதாரணம், திருத்துறைப்பூண்டியிலே பழனிசாமி அவர்களுடைய தொகுதியில், தலைஞாயிறு கிராமத்தைச் சேர்ந்த ஒருவர், தன்னுடைய மனைவி, குழந்தைகளோடு மருத்துவமனைக்கு வந்தபோது, டீ வாங்கிக் கொண்டு வந்து குழந்தைக்குக் கொடுப்பதற்காக வந்தார். இது உண்மைச் சம்பவம். இப்போது சமீபத்திலே நடந்தது. அவர் வாங்கி வருகிறபோதே, வாயிலே பீடியோடு வந்தார். உடனடியாகக் காவல் துறையினர் அவரைக் கைது செய்து, அவரை அழைத்துச் சென்று சிறைச்சாலைக்குக் கொண்டு சென்று விட்டார்கள். இந்த நிலைமை தெரியாமல் மனைவியும், குழந்தையும், உடல் நலக் கேட்டோடு இருந்த அந்தக் குழந்தையைக் கையிலே வைத்துக் கொண்டு, காலையிலே சென்ற கணவனைக் காணாமல் மாலை 3 மணி வரை தவித்ததற்குப் பின்னாலே, செய்தி கேள்விப்பட்டு, அவர் காவல் நிலையத்திற்குச் சென்று பார்க்கிறபோது, அந்தக் காவல் நிலையத்திலிருந்து அவர் வெளிவருவதற்குள்ளாகவே, குழந்தை இறந்துவிடுகிறது. ஆகவே, இப்படி ஒரு மிகப் பெரிய பாதிப்பு இந்தச் சட்டத்தின் மூலமாக வந்திருக்கிறது என்பதை மட்டும் நான் முதலமைச்சரவர்களுடைய கவனத்திற்குச் சொல்கிறேன். ஆகவே, சட்டம் நல்ல நோக்கத்திற்கானது. நடைமுறைப்படுத்துவதிலே இவ்வளவு சிக்கலும், ஆபத்தும் இருக்கிறது. அதைப் பரிசீலிக்க வேண்டும் என்பதை மட்டும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கேட்டு, அமைகின்றேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை இந்த மாமன்றத்திலே ஆய்விற்கு எடுத்துக்கொள்கிறபோது கடுமையான எதிர்ப்பு இருக்கும் என்று நான் எதிர்பார்த்தேன். ஆனால், எதிர்க்கட்சியாக இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகம்கூட இந்தச் சட்டத்தை வரவேற்கிற வகையிலே பேசி அமர்ந்திருக்கிறார்கள். அவர்களுக்கும் நன்றி. இந்தச் சட்டத்தை வரவேற்ற அனைத்துக் கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்களுக்கும் நான் என்னுடைய நன்றியை முதலிலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாமன்ற உறுப்பினர்கள் எல்லாம் இங்கே பேசுகின்றபோது, ஒரு நல்ல நோக்கத்தோடு இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதை இங்கே சொன்னார்கள். நான் என்னுடைய துறை மானியக் கோரிக்கையிலே பேசுகின்றபோதுகூடச் சொன்னேன். வெறும் அரசியல்வாதி அடுத்த தேர்தலைப் பற்றி மட்டுமே சிந்திப்பான். ஆனால் ஒரு அரசியல் ஞானி அடுத்த தலைமுறையைப் பற்றிச் சிந்திப்பான் (மேசையைத் தட்டும் ஒலி) என்று நான் அன்றையதினம் சொன்னேன். அதைப்போல இன்றைக்கு, ஓர் அரசியல் ஞானியாக, அடுத்த தலைமுறையைப் பற்றிச் சிந்திக்கிற ஒரு தெய்வத் தாயாக இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இங்கே கம்பீரமாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதில் நாம் எல்லாம் அனைவரும் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறோம். நேற்றைக்கு முன்தினம் இதே மாமன்றத்தில் பிளாஸ்டிக் பொருட்களை உபயோகப்படுத்துவதைத் தடை செய்கிற அந்தச் சட்டத்தின்மீது இந்த மாமன்றத்திலே கருத்துகளைச் சொன்ன நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள், அதனால் ஏற்படுகிற சுற்றுப்புறச் சுகாதாரக் கேடுகள், ஆரோக்கிய வாழ்விற்கு அதனால் ஏற்படுகிற அபாயம், அவற்றை எரிப்பதால் வெளியாகும் விஷ வாயுவான கார்பன் மோனாக்சைடால் ஏற்படுகிற, வரவிருக்கிற, வருகிற வியாதிகள், அதனால், ஆயுள் குறைதல் போன்றவற்றையெல்லாம்--இங்கே அவர் எடுத்து வைத்ததார்கள். அந்த கருத்துகளை மாமன்ற உறுப்பினர்கள் கருத்தில் கொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-55

இங்கே பேசிய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர் உட்பட, கம்யூனிஸ்ட் கட்சி இயக்கங்களைச் சார்ந்த உறுப்பினர்கள் உட்படச் சொன்ன ஒரே ஒரு கருத்து இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்கள் பாதிக்கக்கூடாது என்பதுதான் நான் ஒன்றை மட்டும் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நேற்றைக்கு முன்தினம் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இங்கே பேசுகிறபோது, இதுபோன்ற சட்டப் பிரச்சினைகள் வருகிறபோது, ஒரு நாணயத்திற்கு எப்படி இரு பக்கத்தையும் பார்க்க வேண்டுமோ, அதைப் போல இரு தரப்பையும் பார்க்க வேண்டுமென்று அன்றைக்கே சொன்னார்கள். நீங்கள் அனைவரும் ஒரு பக்கத்தை மட்டுமே பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால், நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், இந்த மனித சமுதாயத்தை அழிவிலிருந்து காப்பாற்றுகிற அந்தக் கடமை உணர்வோடு மறு பக்கத்தையும் அவர் எண்ணிக் கொண்டிருக்கிறார் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நான் இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கிறவர்கள் பாதிக்கப்பட மாட்டார்கள் என்ற உத்தரவாதத்தையும் இங்கே மாண்புமிகு டாக்டர் இதய தெய்வம் புரட்சித் தலைவி இங்கே சொல்லியிருக்கிறார்கள். எனவே, அந்தத் தொழிலிலே ஈடுபட்டுள்ளவர்களைத் துன்புறுத்த வேண்டும் என்பது இந்த அரசினுடைய நோக்கமாக நிச்சயமாக இருக்காது என்பதை நீங்கள் எல்லாம் நன்றாக அறிந்திருப்பீர்கள். பொதுவாக, இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு அம்மா அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னதைப்போல, பொது இடங்களில் புகைபிடிப்பதைத்தான் இந்தச் சட்டம் தடை செய்கிறதே தவிர, ஒட்டுமொத்தமாக, புகைப்பதையே தடுக்கவில்லை என்பதையும் இந்த நேரத்திலே நான் நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்னும் ஒன்றைச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் பாலபாரதி அவர்கள் பேசுகிறபோது சொன்னார்கள். இந்தத் தொழிலிலே பெண்கள், தாய்மார்கள், சகோதரிகள்தான் அதிகமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்; அவர்களைக் காப்பாற்றக்கூடிய ஆண் ஊர் சுற்றிக் கொண்டிருக்கிறார் என்று சொன்னார்கள். இந்தச் சட்டத்திற்குப் பிறகாவது, அப்படி ஊர் சுற்றுகிற அந்தக் குடும்பத் தலைவன் இனிமேலாவது



பொறுப்போடு அந்தக் குடும்பத்தைக் காப்பாற்றுகிற அந்த நிலைக்கு நிச்சயமாக மாற்றப்படுவார் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்னும் சொல்லப் போனால், இதை ஒரு முக்கியத் தொழிலாகப் பெரும்பாலும் செய்வதில்லை. இதைச் செய்கிறவர்கள் ஒரு உப தொழிலாகத்தான் செய்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால், இதனாலே பீடி உற்பத்தியிலே வேண்டுமானால் ஒரு சரிவு ஏற்படலாமே தவிர, பீடியை உற்பத்தி செய்கிறவர்கள், இன்றைக்கும் தமிழகத்திலிருந்து 65 முதல் 75 சதவிகிதம் பீடிகளை ஆந்திரா, ஒரிசா, உத்தரப்பிரதேசம் போன்ற மாநிலங்களுக்குத்தான் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, பீடித் தொழிலாளர்கள் முழுக்க, முழுக்க வேலை இழப்பார்கள் என்பதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. இந்த பீடித் தொழிலிலே இன்றைக்கு ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றவர்கள் 2.30 இலட்சம் தொழிலாளர்கள் என்று கணக்கிடப்பட்டிருக்கிறார்கள். இருந்தாலும், நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், இந்தப் பழக்கத்திற்கு அடிமையாகிக் கொண்டிருக்கின்ற 2¼ கோடி மக்களை எண்ணிப் பார்த்து, இந்த 2.30 இலட்சம் மக்கள், இந்தத் தொழிலைக் கைவிடுகிற காலத்திலே அவர்களைக் காப்பாற்றுவதற்கும் நல்ல திட்டத்தை நிச்சயமாக அறிவிப்பார்கள் அல்லது அவர்களைக் காப்பாற்றுவார்கள் என்ற அந்த ஓர் உறுதியையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். எப்போதுமே, one cannot walk on the meadows without stepping on the grasses. 'புல்லை மிதிக்காமல், வரப்பில் நடக்க முடியாது' என்று சொல்வார்கள். அதைப்போல, ஒரு நல்ல நோக்கத்தோடு கொண்டு வருகிற சட்டத்தின் காரணமாக, ஒரு சில பேர் பாதிக்கப்பட்டாலும், அவர்கள் பாதிப்புக்கு உள்ளாகாதவாறு, நிச்சயமாக தாயுள்ளம் கொண்ட நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள், அவர்களுக்கும் மறு வாழ்வு, புனர் வாழ்வு அளிப்பார்கள் என்ற அந்த ஒரு உறுதியை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்களும் இந்தச் சட்டத்தின் மூலம் பயப்படவோ, பீதியடையவோ வேண்டியதில்லை. பால் ஊட்டும் குழந்தைக்கு உடல் நிலை சரியில்லை என்று சொன்னால், தாய் பத்தியமாக இருப்பாள். அதைப்போல, ஒட்டுமொத்தமாக இந்தச் சமுதாயத்தைக் காப்பாற்றக்கூடிய ஒரு நல்ல நோக்கத்தோடு கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தச் சட்டத்தினாலே அப்படி அந்தத் தொழிலாளர்கள் பாதிப்புக்குள்ளானால்கூட, அவர்கள் அதைப் பெரிதுபடுத்தாமல்,

அவர்கள் மாற்றுத் தொழிலுக்கு, வேறு தொழில்களுக்குப் போவதை யாரும் தடுக்கப் போவதில்லை. காரணம், அகில இந்திய விவசாய ஆராய்ச்சி நிலையம் ஆந்திரப் பிரதேசத்திலே ராஜமுந்திரியிலே இருக்கிறது. அந்த ஆராய்ச்சி நிலையம்கூட, புகையிலைப் பயிர்களுக்குப் பதிலாக மற்ற விவசாயப் பயிர்களை வெற்றிகரமாகவும், இலாபகரமாகவும் விவசாயம் செய்யலாம் என்று ஆராய்ச்சி செய்துள்ளது. இன்றைக்கு ஆந்திராவிலே புகையிலையை உற்பத்தி செய்பவர்கள் படிப்படியாக வேறு பயிர்களுக்கு மாறிக்கொண்டு இருக்கிறார்கள். எனவே இந்தத் தொழிலையே நம்பி இருக்கிற, நம்பி இருப்பதாகச் சொல்லப்படுகிற அந்தத் தொழிலாளர்கள்கூட இன்றைக்கு வேறு தொழில்களுக்கு மாறுவார்களேயானால், நிச்சயமாக நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு அவர்களுக்கு உறுதுணையாக இருக்கும், அதற்கான வசதிகளை நிச்சயமாகச் செய்யும். காரணம், இதை நாம் நியாயப்படுத்தக் கூடாது.

*பிற்பகல் 2-00*

புரட்சித் தலைவி அவர்கள் சொன்னதைப்போல, கள்ளச் சாராயத்தைக் காய்ச்சி விற்பவர்கள்கூட இன்றைக்கு சட்ட விரோதமாகத் தொழில் செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே, அந்தத் தொழிலை நாம் அங்கீகரிக்க முடியாது. அதேபோல, கஞ்சாச் செடிகளைப் பயிரிடுபவர்கள்கூட அந்தச் செடியைப் பயிரிட்டு அதன் மூலம் வருமானத்தைப் பெருக்கிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களை, அந்தத் தொழிலை நாம் நிச்சயமாக அங்கீகரிக்க முடியாது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்கள் சொல்லுகிறபோது, வளர்ந்த நாடான அமெரிக்காவிலேகூட இதைத் தடை செய்யவில்லை என்று சொன்னார்கள். அவருடைய கவனத்திற்கு நான் ஒன்றைச் சொல்லுகிறேன். 1987 ஆம் ஆண்டே அமெரிக்காவில் Federal Government ஒரு தடைச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள்; அரசு நிறுவனங்களிலே புகைபிடிக்கக் கூடாது என்ற கடுமையான ஒரு சட்டத்தை அங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். அதேபோல 1987-லே நியூயார்க் அரசு, அரசு நிறுவனங்கள் மட்டுமல்ல, உள்ளரங்கங்கள், பள்ளி, திறந்தவெளி அரங்கம், நீதிமன்றம், இளைப்பாறும் அறைகள், மருத்துவமனைகள், திரையரங்குகள் போன்றவற்றில் எல்லாம் புகை பிடிக்கக் கூடாது என்று சொல்லி, அங்கே கடுமையான சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். இன்னும் சொன்னால், இதற்கு முன்பே பெல்ஜியம் நாட்டிலே பொது இடங்களிலே





புகைபிடிப்பதற்குத் தடையை விதித்திருக்கிறார்கள். சிங்கப்பூரிலே 1986-லே பொது இடங்களிலே மட்டுமல்ல, தனியார் அலுவலகங்களிலும் தடை விதித்திருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இதனாலே என்ன தீமை என்பதை மட்டும் நான் ஒரு சில நிமிடங்களிலே சொல்லி முடித்து விடுகிறேன்.

A British Report says—"Of the thousand adults in Britain, one will be murdered, six will be killed in road accidents and 250 will die yearly due to tobacco related diseases."

இதையெல்லாம் நீங்கள் கருத்தில் கொள்ளவேண்டும், அதேபோல, in United States, 5% of total deaths are due to alcohol, 2% due to drugs and 20% due to smoking. நம்முடைய இந்திய நாட்டில் tobacco kills 10 lakh people per year. *10* இலட்சம் பேர் இன்றைக்கு ஒரு ஆண்டுக்கு இந்தியாவிலே செத்துக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால், இதுபோன்று சிகரெட், பீடி வியாபாரிகள்கூட அரசாங்கத்திற்கு மனுவாக அனுப்பியிருக்கிறார்கள். இதை விற்பதன் மூலம் உங்களுக்கு Excise duty வருகிறது. அந்த Excise duty-ஐ எல்லாம் அரசு இழக்கிறது என்றுகூடச் சொன்னார்கள். நான் அவர்களுக்குப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். இந்தியாவைப் பொறுத்தவரை, *1,515* கோடி ரூபாய் ஆண்டுக்கு Excise duty-ன் மூலம் வருமானம் வந்தாலும், இதைப் பயன்படுத்துவதால் பொது மக்களுக்கு ஏற்படுகிற வியாதிகளுக்கு அரசாங்கம் செய்கிற செலவு ரூபாய் *3,000* கோடி என்பதைத் தயவு செய்து நீங்கள் இந்த நேரத்திலே எண்ணிப் பார்க்க வேண்டும். காரணம், அந்த அளவிற்கு 'நிக்கோடின்' என்ற அந்த poisonous substance இதிலே இருக்கிறது. எனவே, அந்த வகையிலே இதையெல்லாம் நாம் தவிர்க்க வேண்டும். இன்னொன்றையும் சொல்கிறேன். சிகரெட்டைப் பிடிப்பவர்களுக்கு, ஏன் பிடிக்கிறோம் என்று அவர்களுக்கேகூட தெரியாது. என்ன காரணத்திற்காக சிகரெட் பிடிக்கிறீர்கள், பீடி பிடிக்கிறீர்கள் என்று கேட்டால்கூட, அவர்களுக்கு அந்தக் காரணத்தைச் சொல்ல முடியாது. ஒரு பழக்கமாக இதை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால், விஷத்தைக் குடிப்பவன்கூட, அவன் மட்டும்தான் பாதிப்பான். ஆனால் சிகரெட், பீடி குடிப்பதன் மூலம் அவன் மட்டும் பாதிக்கப்படுவதில்லை. பக்கத்திலே இருக்கிற passsive smokers, அவர்களும் பாதிக்கப்படுகிறார்கள். அந்த வகையிலே ஒருவன் இங்கே ஒரு பொது இடத்திலே பிடித்தால் அவன் மட்டும் பாதிக்கப்படுவதில்லை.

10 பேர் இருந்தால். அதிலே 6 பேர் அதனாலே பாதிக்கப்படுகிறார்கள். எனவே, ஒரு சிகரெட் பிடிப்பவனுக்கு என்ன பாதிப்பு ஏற்படுகிறதோ, அதேபோல இந்த passive smokers-க்கும் ஏற்படுகிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** சிகரெட் பிடிப்பதாலே அவர்கள் மட்டும் பாதிக்கப்படுவதில்லை. பக்கத்திலே இருக்கக்கூடிய passive smok-ers பாதிக்கப்படுவதாகச் சொன்னார்கள். சற்று முன்பு எதிர்க்கட்சியின் துணைத் தலைவர் அவர்கள் என்னிடத்திலே கூறிக்கொண்டிருந்தார்கள். அவர் புகைபிடிக்கின்ற பழக்கத்தை இப்பொழுது நிறுத்திவிட்டார். முன்பு நிறையப் புகைப்பார். ஒரு முறை ரயிலிலே போய்க் கொண்டிருந்தபோது, சிறிது நேரத்திலே 10 சிகரெட்டைக் குடித்துவிட்டு, அந்தப் பாக்கெட்டை வெளியிலே எறிந்துவிட்டாராம். பக்கத்திலே உட்கார்ந்திருந்தவர் கேட்டார், இந்த சிகரெட் பாக்கெட் என்ன விலை என்று கேட்டாராம். ஒரு 4 ரூபாய், 4½ ரூபாய் இருக்கும் என்றாராம், அவர் ஜோபியிலிருந்து 2½ ரூபாயை எடுத்து இவரிடம் கொடுத்துவிட்டாராம். நீங்கள் எவ்வளவு பிடித்தீர்களோ, அதைவிட நான் அதிகமாகப் புகை புகைத்துவிட்டேன் என்று சொன்னாராம். (சிரிப்பு) அந்த மாதிரி passive smokers are always affected by this.

பிற்பகல் 2-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இதை எதிர்க்கட்சித் துணைத் தலைவரே சொல்லியிருக்கலாமே! எஸ்.ஆர்.பி-யிடம் சொல்லிச் சொல்ல வேண்டுமா?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புகைபிடிக்கிற பழக்கத்தினாலே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் எஸ்.ஆர்.பி. அவர்கள் சொன்னதைப்போல, passive smokers மட்டுமல்ல, இதிலே இன்னொரு வகை இருக்கிறது. Smokers, Passive smokers, Co-smokers; அந்த Co-smokers யார் என்றால், when the husband smokes, the wife does not prevent him from smoking. In fact, she enjoys the smell of cigarette/beedi, which her husband uses. This group is called Co-smokers, என்று சொல்கிறார்கள். காரணம், கணவன் பிடிப்பதாலே குடும்பத்திலே இருக்கிறவர்கள்கூட, அந்தப் புகையை விரும்பி அதற்கு addict-ஆகி விடுகிறார்கள். எனவே, குடும்பத்திலேயிருக்கிற மனைவி பாதிக்கப்படுகிறாள். குடும்பத்திலே இருக்கிற குழந்தைகள் பாதிக்கப்படுகின்றனர். எனவே, இந்த வகையிலே அமெரிக்காவில் மட்டும்





ஆண்டுக்கு 30,000-லிருந்து 50,000 வரை, பீடி, சிகரெட் புகையினாலே இறக்கிறார்கள், பாதிக்கப்படுகிறார்கள் என்று இன்றைக்குக் கணக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, இதனாலே நுரையீரல் புற்று நோய் ஏற்பட்டு, அந்த நுரையீரல் புற்று நோயின் காரணமாக மட்டும், அமெரிக்காவிலே 3,000-லிருந்து 5,000 பேர் இறந்து கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், புகைபிடிப்பது தீமை என்பதை எல்லோரும் ஒத்துக்கொள்கிறார்கள். அதிலே பிரச்சினை இல்லை. (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** அந்த வகையிலே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் சொல்வதை நான் புரிந்துகொண்டேன். (சிரிப்பு) சீக்கிரம் முடித்து விடுங்கள் என்று சொல்கிறீர்கள். எனவே, பேரவைத் தலைவர் சொன்னதைப்போல, புகை பிடிப்பதாலே ஏற்படுகின்ற கெடுதலை மாமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேரும் நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறீர்கள். அதற்கு ஆமோதிக்கிறீர்கள். காரணம், நேரமாகிவிட்டது. எனவே, நீங்கள் எல்லாம் வரவேற்கக்கூடிய இந்த ஒரு நல்ல சட்டம், நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், எதிர்காலச் சந்ததியினுடைய நலன் கருதிக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. உச்ச நீதிமன்றமே இதற்கு நல்ல ஒரு தீர்ப்பைக் கொடுத்திருக்கிறது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் செல்வி பாலபாரதி அவர்களும், திரு. மைதீன்கான் அவர்களும், இதை செலக்ட் கமிட்டிக்கு அனுப்ப வேண்டுமென்று சொன்னார்கள். உச்ச நீதிமன்றமே ஆய்ந்தறிந்து, ஒரு நல்ல தீர்ப்பைச் சொல்லிவிட்டபிறகு, செலக்ட் கமிட்டி ஒன்றும் பெரிதாகச் செய்யப் போவதில்லை. எனவே, இந்தச் சட்டமுன்வடிவை செலக்ட் கமிட்டிக்கு அனுப்ப வேண்டிய அவசியம் இல்லை என்பதை மட்டும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, இந்தச் சட்டமுன்வடிவை ஏகமனதாக நிறைவேற்றித் தரும்படி அன்புடன் கேட்டு, விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 18 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 18 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க

மறுப்போர் 'இல்லை' என்க. (ஆம்)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன். (இல்லை)

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க

மறுப்போர் 'இல்லை' என்க. (ஆம்)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன். (இல்லை)

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு புகைபிடித்தலையும், எச்சில் உமிழ்வதையும் தடை செய்தல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2002) நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க

மறுப்போர் 'இல்லை' என்க. (ஆம்)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன். (இல்லை)

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.



பேரவையின் இன்றைய காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் மாலை 4-30 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-09 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

பிற்பகல் 4-30

பிற்பகல் 4-30 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)-தொடர்ச்சி

### (ஏ) தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2002) மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு- (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2002)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து வருகிற 6 சட்டமுன்வடிவுகளும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்குத் தொடர்புள்ளவை என்பதால், கருத்துகளைக் கூற விரும்பும் உறுப்பினர்கள், 7 சட்டமுன்வடிவுகள் குறித்தும் கூறலாம். (குறுக்கீடு) இல்லை, இல்லை. அப்படிப் பண்ண முடியாது. மாண்புமிகு பேராசிரியர் அவர்கள்.

@4-4-2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகச் சட்டமன்றத்தில் உள்ளாட்சி மன்றங்களைக் குறித்து பல கால கட்டங்களில் நிறைவேற்றப்பட்ட சட்டங்களையொட்டி, சில திருத்தங்களை நிறைவேற்ற வேண்டுமென்று கருதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் இந்தத் திருத்தங்கள் தரப்பட்டிருக்கின்றன. 1919-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சென்னை மாநகராட்சிச் சட்டம், 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிச் சட்டம், 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டம், 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டம், அதையொட்டி ஊராட்சி மன்றங்களைப் பற்றிய சட்ட விதிகள், பேரூராட்சி, நகராட்சி பற்றிய சட்ட விதிகள், இவைகளிலேயெல்லாம் திருத்தம் வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்தத் திருத்தங்கள் தரப்பட்டிருக்கின்றன. இவ்வளவையும் சேர்த்துப் படிக்கிறபோது, எத்தனை தாட்கள், எத்தனை பக்கங்கள், எத்தனை விதிகள் நான் படித்துப் பார்த்தேனோ, அத்தனையும் சேர்ந்து ஒரே தலைவிதியாகத்தான் இருக்கிறதே தவிர, இதிலே விளக்கம் பெறுவதற்கோ, தனித்தனியாகச் சிந்திப்பதற்கோகூட அவசியம் இல்லாத நிலைமை இருக்கிறது. ஏற்கெனவே, இந்தச் சட்டப் பேரவையில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த இன்றைய சென்னை மாநகர மேயர், சட்டமன்ற உறுப்பினர் மு.க. ஸ்டாலின் பேசுகிறபோது, மாநகராட்சி மன்றத்தில் தனக்கு இழைக்கப்படுகிற முறையற்ற நடவடிக்கைகள் காரணமாக, இழைக்கப்படுகிற அநீதி காரணமாக, தான் மேயர் பதவியைக் கூடத் துறப்பதற்குத் தயார் என்ற பொருள்பட அவர் இங்கே பேசினார். அப்பொழுது, அதற்குப் பின்னர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு கருத்தை வெளியிடுவதாகக் கருதிச் சொன்னார்கள். 'மேயர் ஏதோ பதவி துறப்பதாகச் சொல்கிறார்; வீர வசனம் பேசுகிறார்'—ஒரு வேளை நான் சொல்கிற வார்த்தையிலே வேறுபாடு இருந்தாலும், எண்ணத்திலே வேறுபாடு இல்லை—'இந்தச் சட்டமன்றத்தில், விரைவில், சட்டமன்ற உறுப்பினராக இருக்கின்ற ஸ்டாலின், ஒன்று, சட்டமன்ற உறுப்பினராக இருக்க வேண்டும்; இல்லையானால், மேயராக இருக்க வேண்டுமென்ற நிலையை ஏற்படுத்த ஒரு சட்டம் வர இருக்கிறது. அதை முன்கூட்டித் தெரிந்துகொண்டுதான் அவர் அப்படிப் பேசுகிறார்' என்ற கருத்தை—கருத்து என்றுதான் நான் சொல்கிறேன்--வார்த்தை என்று தயவு செய்து கருத வேண்டாம். அந்தக் கருத்தை--முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இப்போது வந்திருக்கிற இந்தத் திருத்தச் சட்டங்கள் பெரும் பகுதி அந்த ஒரே நோக்கத்திலே கொண்டுவரப்பட்ட சட்டமாக இருக்கிறது. இதிலே முதல் திருத்தச் சட்டம், மேயர், துணை மேயர் ஆகிய பொறுப்பிலே உள்ளவர்கள்...



*பிற்பகல் 4-35*

*மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொண்டுவரப்பட்டு இருக்கின்ற சட்டமுன்வடிவுகள் எல்லாம், ஏதோ சென்னை மேயருக்கு எதிராக மட்டும் கொண்டு வரப்பட்டதாக மரியாதைக்குரிய மாண்புமிகு பேரவையினுடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கருதக்கூடாது. நீங்கள் எல்லாவற்றையும் நன்கு படித்திருப்பீர்கள். அனைத்து உள்ளாட்சி அமைப்புகள், மாநகராட்சிகள்--சென்னை மாநகராட்சி மட்டுமல்ல--அனைத்து மாநகராட்சிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் எல்லாவற்றிற்கும் பொதுவான சட்டங்களாகத்தான் இது கொண்டு வரப்பட்டிருக்கிறதேயொழிய, இது ஏதோ சென்னை மாநகராட்சி மேயருக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட சட்டம் என்று கூறுவது தவறு. அப்படிப்பட்ட உள்நோக்கமும் இந்த அரசுக்கு இல்லை.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பொன்னையன் அவர்களுடைய திறமையை நான் பல ஆண்டுகளாக அறிந்திருக்கிறேன். அந்த அறிவாற்றலை நான் மிகவும் பாராட்டுகிறேன். நம்முடைய நோக்கம் எல்லாம், பொது நோக்கம் என்ற பெயராலேதான் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதையும் நான் அறிவேன். அதற்காக இவ்வளவு பக்கங்கள் செலவாகி இருப்பதைப் பற்றி மட்டும்தான் நான் வருத்தப்படுகிறேன். விளைவுகளைப் பற்றி அதிகம் கவலைப்பட்டு எனக்குப் பழக்கம் கிடையாது. ஆனால், இந்த முதல் திருத்தச் சட்டம்—இந்தச் சட்டத் திருத்தம்--நிறைவேற்றப்பட்டு, அரசு முறைப்படி ஆளுநராலே ஏற்றுக் கொள்ளப்பட்டு, அரசிதழில் வெளியிடப்பட்ட 15 நாட்களுக்குள், ஒருவர் சட்டமன்ற உறுப்பினராகவோ அல்லது நாடாளுமன்ற உறுப்பினராகவோ இருப்பாரேயானால், அவரே மேயராகவோ, துணை மேயராகவோ, அந்தப் பொறுப்பிலேயும் இருக்க நேரிடுமானால், அதிலே ஒன்றை அவர் ராஜினாமா செய்யாவிட்டால், அதிலேயிருந்து விலகாவிட்டால், மேயர் பதவியிலிருந்து, துணை மேயர் பதவியிலிருந்து அவர் விலகிவிட்டதாகக் கருதப்படும்; நீக்கப்பட்டதாகக் கருதப்படும் என்பதுதான் சட்டத்தினுடைய ஷரத்து. இந்த ஷரத்து அல்லது இந்த விதி, சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் அல்லது நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் உள்ளாட்சி மன்றத்திலே பொறுப்பிலே, அதுவும் குறிப்பாக, சென்னை போன்ற மாநகரத்தில், கோவையில், மதுரையில், மேயர், துணை மேயர் போன்ற பதவிகளிலே இருப்பது, நிர்வாகத்திலே அவர் ஆற்ற வேண்டிய கடமையை நிறைவாக ஆற்ற முடியாது என்ற காரணத்தால், அந்தக் கடமைக்குக் குறை ஏற்படும் என்ற

[பேராசிரியர் க. அன்பழகன்] [2002 மே 10

காரணத்தால் கொண்டு வரப்படுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மேயர்,
துணை மேயர் போன்ற பதவிகளில் சட்டமன்ற உறுப்பினர்கள்
இடம்பெற்று இருப்பார்களேயானால், அந்தப் பதவியிலேயும், சட்டமன்ற
உறுப்பினர் பதவியிலேயும், பொறுப்பிலேயும், இரண்டிலேயும்
இருக்கக்கூடாது. சட்டமன்ற உறுப்பினர் என்பது நிர்வாகப் பதவி அல்ல
என்பதும், மேயர் பதவிதான் நிர்வாகப் பதவி என்பதும் நான் அறிந்த
ஒரு செய்தி. அமைச்சர்கள்தான் நிர்வாகப் பொறுப்புள்ளவர்கள்.
சட்டமன்ற உறுப்பினர்கள் அல்ல. நிர்வாகப் பதவியில் இல்லாத
சட்டமன்ற உறுப்பினர்கள், இந்தப் பதவிபோல இன்னொரு
பதவியிலேயிருந்து, வருமானம் பெறுவார்களேயானால், Office of Profit
என்ற முறையிலே இருக்குமானால், அது முறையல்ல என்ற கருத்து
ஏற்கெனவே நடைமுறையிலே இருந்த கருத்து. பேரறிஞர் அண்ணா
அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற அந்தக் காலகட்டத்தில் சில
தனி அமைப்புகள், வாரியங்களைப் போன்ற அமைப்புகள், டிரஸ்டுகள்,
இவற்றிற்குச் சட்டமன்ற உறுப்பினர்களை நியமிக்கிறபோது, அது
செல்லுபடியாகாது என்ற ஒரு நிலைமை இருந்ததன் காரணமாக, அண்ணா
அவர்கள் 87 பதவிகளை `Office of Profit' என்பதிலேயிருந்து விலக்கி,
அதற்காக ஒரு சட்டம் கொண்டு வந்து இங்கே நிறைவேற்றப்பட்டு
இருக்கிறது.

குடிநீர் வாரியத் தலைவர், குடிசை மாற்று வாரியத் தலைவர் அல்லது
வேறு விதமாக சமுதாயத் தொண்டு ஆற்றுவதற்குரிய பல்வேறு
அமைப்புகளுடைய தலைவராகப் பொறுப்பேற்பவர்கள், சட்டமன்ற
உறுப்பினர்களாக இருப்பது ஏற்கெனவே உள்ள விதிமுறைகளின்படி
செல்லாது என்ற காரணத்தினால், அந்த 87 பதவிகளில்—ஏறத்தாழ, அவை,
'Office of Profit'—ஊதியம் பெறுகின்ற பதவிகளாகக் கருதப்பட மாட்டாது
என்பதற்கு அறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலே ஒரு சட்டத் திருத்தம்
இங்கே நிறைவேற்றப்பட்டது. அதற்கு என்ன காரணம் என்று கேட்டால்,
சட்டமன்ற உறுப்பினர்கள் இப்படிப் பல்வேறு பொறுப்புகளிலே இருப்பது
பெரிய தவறு அல்ல என்பது அண்ணாவினுடைய எண்ணம். மாண்புமிகு
எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்திலேயும் அந்த எண்ணம்தான் கோலோச்சியது.
இன்றைக்கும் நாம் எண்ணிப் பார்ப்போமேயானால், சட்டமன்ற
உறுப்பினராக இருப்பது, ஏதோ உள்ளாட்சி மன்ற நிருவாகத்திற்கு
மாறுபட்டதும் அல்ல. உள்ளாட்சி மன்ற நிர்வாகத்திலே
உள்ளவர்கள் ஒரு பஞ்சாயத்து யூனியன் தலைவர் அல்லது ஒரு
மாவட்ட ஊராட்சிக் கவுன்சில் உறுப்பினர் அல்லது தலைவர்
அல்லது ஒரு நகராட்சி மன்றத் தலைவர், சட்டமன்ற உறுப்பினராக



2002 மே 10] [பேராசிரியர் க. அன்பழகன்]

இருப்பது, நாம் ஆற்ற வேண்டியிருக்கிற கடமைகளுக்கு உறுதுணையாக
இருக்குமே தவிர, மாறுபாடாக இருக்காது.

*பிற்பகல் 4-40*

எனக்குத் தெரிந்து சட்டமன்ற மேலவை இருந்த காலத்தில், உள்ளாட்சி
மன்றங்களிலேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அங்கேயிருந்து,
அங்கே பொறுப்பிலே உள்ளவர்களே தேர்ந்தெடுக்கப்பட்டு இங்கே
சட்டமன்ற மேலவையிலே இடம் பெற்றார்கள். ஆகவே, அதிலே ஒரு
பெரிய கொள்கை மாறுபாடு இல்லை என்பதை நான் வலியுறுத்திச்
சொல்ல விரும்புகிறேன். மற்றொன்று, முதலில் இது மாநகராட்சி
மன்றத்திற்காகக் கொண்டு வரப்பட்டு, அதற்குப் பின்னர் நகராட்சி மன்றத்
தலைவர்களுக்கும், நகராட்சி மன்றத் துணைத் தலைவருக்கும் என்ற
முறையிலே கொண்டுவரப்பட்டு, பேரூராட்சி மன்றத் தலைவர், பேரூராட்சி
மன்றத் துணைத் தலைவர் என அவர்களுக்கும் கொண்டு வரப்பட்டு,
திருத்தங்கள், அதற்குப் பின்னர் கிராமப் பஞ்சாயத்துத் தலைவர், கிராமப்
பஞ்சாயத்துத் துணைத் தலைவருக்கும் கொண்டு வரப்பட்டு, இவ்வளவு
விரிவுபடுத்தினால்கூட ஒருவேளை அது பொது நோக்கம் உள்ளதாக
ஆகாமல் போய்விடுமோ என்ற சந்தேகம் பொன்னையன் அவர்களுக்கு
ஏற்பட்டு, அந்தப் பொது நோக்கத்தை மிகத் தெளிவாக
வலியுறுத்துவதற்காக, உறுப்பினர்களுக்கும், அதற்காக ஒரு amendment;
13-வது சட்டத் திருத்தத்திற்கு ஒரு amendment. 15-வது சட்டத் திருத்தத்துக்கு
ஒரு amendment அந்தப் பக்கம் முழுவதும் Mayor, Deputy Mayor and
Councillors. அது ஒரு பக்கம் பூராவும். ஒவ்வொரு சட்டத்திலேயும்
அதுமாதிரி, Chairman, Vice-Chairman and Members என்பது. இந்த Members-ம்,
Councillors-ம் அமைச்சர் பொன்னையனையும், ஆட்சியையும்
காப்பாற்றுகிறார்கள் என்று நான் மகிழ்ச்சியோடு குறிப்பிட விரும்புகிறேன்.
ஏனென்றால், நோக்கம் இல்லை என்று சொல்வதற்கு; சட்டமன்ற
உறுப்பினர், ஒரு கவுன்சில் உறுப்பினராக இருந்தால் என்ன பணி
அதனாலே கெட்டுவிடும்? இன்னும் சொல்லப் போனால்,
இப்பொழுதேகூட மாநகராட்சி மன்ற நடவடிக்கைகளில் சட்டமன்ற
உறுப்பினர்கள் சென்னையிலே தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் எல்லாம்
போய் கலந்து கொள்ளலாம். மதுரையிலே அப்படிக் கலந்து கொள்ளலாம்.
கோயம்புத்தூரிலே கலந்து கொள்ளலாம். சட்டமன்ற உறுப்பினர்களுக்கும்,
உள்ளாட்சி மன்றத்திற்கும் இடையிலே ஓர் உறவு இருப்பது நல்லது என்ற
அடிப்படையில் ஏற்பட்ட கருத்து. இன்னும் சொல்லப் போனால்,
நாடாளுமன்ற உறுப்பினர்களே மாவட்ட ஊராட்சிக் கவுன்சிலில்
கலந்துகொண்டு கருத்துகளைத் தெரிவிக்கலாம். ஏற்கெனவே

District Development Council இருந்தபோது நாடாளுமன்ற உறுப்பினர்களே
கலந்து கொண்டார்கள். சரி, இந்தச் சட்டம் பொது நோக்கத்திலேதானே
வந்திருக்கிறது. ரொம்பப் பேர் அடிபட்டுப் போய்விடுவார்கள். ரொம்பப்
பேர் சட்டமன்ற உறுப்பினர்கள் ராஜினாமா செய்துவிட்டுப் போகப்
போகிறார்கள் என்று எண்ணிக்கொண்டு பார்த்தால், ஒருவர்கூட இதிலே
அகப்படவில்லை, மு.க. ஸ்டாலினைத் தவிர. ஸ்டாலின் அவர்கள் மேயராக
இருக்கிறாரா, இல்லையா, சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறாரா,
இல்லையா என்பது எனக்கு அவ்வளவு முக்கியமாகத் தோன்றவில்லை.
ஏனென்றால், அவரைப் பொறுத்தவரையில், இந்த வேலை
இல்லாவிட்டால் இன்னொரு வேலை அவருக்கு எப்போதும் காத்துக்
கொண்டு இருக்கிறது. இன்னும் சொல்லப் போனால், individual-க்காக
நான் பேசவில்லை. எப்படி பொன்னையன் அவர்கள், ஸ்டாலினுக்காக
இந்தச் சட்டம் வரவில்லை என்பதிலே அவர் உறுதியாக இருக்கிறாரோ,
அதேபோலத்தான் தனிப்பட்ட ஸ்டாலினுக்காக நான் வாதாடவில்லை.
இந்த institution—Mayor is not merely an office, but it is an institution.

இன்னும் ஒன்றை நாம் எண்ணிப் பார்த்துக்கொள்ள வேண்டும்.
இன்றைக்குத்தான் சட்டமன்றத்திற்கு, நாம் மாநில சுயாட்சி கேட்கிற
கொள்கையோடு சேர்ந்து இயங்குகிற ஒரு சட்டமன்றமாக இருக்கிற
காரணத்தினால் நமக்கு இடையிலே கருத்து வேறுபாடுகள்
இருந்தாலும்கூட, இதற்கொரு முக்கியத்துவம் நாளுக்கு நாள் வளர்கிறது.
அகில இந்திய அளவிலே, சுதந்திரம் கிடைப்பதற்கு முன்னால்,
டெல்லியிலே இருந்த Legislative Council என்ற அந்த அமைப்போ அல்லது
மாநிலங்களிலே இரட்டை ஆட்சி முறையிலே இருந்த கவுன்சிலோ அதிக
செல்வாக்குப் பெறாத ஒரு காலம் இருந்தது. அந்தக் காலகட்டத்திலே
மாநகராட்சி மன்றம், அதிலும் குறிப்பாக, Metropolitan Municipality என்ற
சிறப்பு, சென்னை மாநகரத்திற்கு உண்டு. நீதிக் கட்சி காலத்தில், திராவிடர்
இயக்கங்களுடைய தோற்றுவாய் என்று சொல்லக்கூடிய நீதிக் கட்சி
காலத்தில் சர். பி. தியாகராயர் அவர்கள்தான்--தியாகராய செட்டியார்,
தெலுங்கு பேசிய, சென்னையிலே வாழ்ந்த பெருமகன், வெள்ளுடை
வேந்தர் என்று பெயர் பெற்றவர், அவரைத்தான் முதன்முதலாக—
சென்னை மாநகர் இன்றைய மாநகராட்சி என்ற அடைமொழியோடு
அழைக்கப்படாத ஒரு காலம் அது. Corporation என்று வழங்கப்படாத
காலம்—இந்திய முதல் தலைவர் He is the first Indian President of the Cor-
poration of Madras என்று அழைப்பார்கள்.





பிற்பகல் 4-4.5

அவரது காலத்தில் வேல்ஸ் இளவரசர் சென்னைக்கு வந்தார். அவருக்கு வரவேற்புக் கொடுப்பதற்கு இந்திய அமைப்புகள், இந்தியாவிலே உள்ள Constitutional institution என்ற முறையில் அந்த அமைப்பினுடைய தலைவர் அவருக்கு வரவேற்பு வழங்க வேண்டுமென்று வெள்ளைக்கார அரசே கருதி, வெள்ளைக்கார அரசு கருதிய காரணத்தால், இந்தியாவிலே சுதந்திர உணர்வு பெற்றிருந்த, சுதந்திரத்திற்குப் போராடியவர்கள் எல்லாம் அதை எதிர்த்தார்கள் என்ற காலம் அல்ல அது, தேசியக் கவி பாரதியாரே வேல்ஸ் இளவரசருக்கு வரவேற்பு வாழ்த்துக் கவிதை இயற்றி, அது அன்றைக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அநேகமாக 1918 அல்லது 1919 ஆக இருக்கலாம். அப்போது தியாகராயர் சென்னை நகரத்தினுடைய தலைவர். அவர் அந்த வரவேற்பை வழங்கவேண்டுமென்று கேட்டபோது, வரவேற்பு வழங்க நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று அவர் தெரிவித்தார். உடனே அன்றைக்கு இருந்த ஆளுநர்—கவர்னர்—கறுப்பு உடை அணிந்து வரவேற்க வேண்டுமென்று சொன்னார். தியாகராயர் நான் வெள்ளுடை தவிர வேறு உடை அணிவதில்லை என்று சொன்னார். அது முறையல்லவே என்று ஆளுநர் சார்பிலே சொல்லப்பட்டது. அப்படியானால் வரவேற்பை நான் வழங்க இயலாது என்று தெரிவித்தார். அதற்குப் பின்னர் வெள்ளுடையிலேதான் அவர் வரவேற்பு வழங்க அனுமதிக்கப்பட்டார். வரவேற்பு வழங்கப்பட்டது.

இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், சட்டமன்றங்கள், நாடாளுமன்றத்திற்கு இருக்கின்றதைப்போல முக்கியத்துவம் ஒரு காலத்திலே மேயர் பொறுப்புக்கும், மேயர் இடத்திலேயிருந்த தலைவர் பொறுப்புக்கும், அந்த அமைப்புக்கும் இருந்தது. இன்றைக்கு, அந்த அமைப்பினுடைய தலைவர், சட்டமன்ற உறுப்பினராக இருக்கவேண்டாம் அல்லது நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கக்கூடாது என்று வருகிற இப்படிப்பட்ட திருத்தம், உள்ளாட்சி மன்றங்களிலே நமக்கிருக்கின்ற தொடர்பு, இயல்பாக அந்த அமைப்போடு நமக்கு இருக்க வேண்டிய தொடர்பை நாம் விரும்பவில்லை என்பதை எடுத்துக்காட்டுகிறது.

இன்னொரு வகையிலே சொல்வதாக இருந்தால், சென்னைப் பல்கலைக்கழகத்தினுடைய துணைவேந்தராக 27 ஆண்டுகாலம் இருந்த டாக்டர் இலட்சுமணசுவாமி முதலியார் அவர்கள், பல்கலைக் கழகப் பிரதிநிதியாக Legislative Council உறுப்பினராக நம்முடைய சட்டமன்ற மேலவையிலே பல ஆண்டுகள் இருந்தார். எதிர்க்கட்சித்

தலைவராகவும் இருந்து பணியாற்றினார். ஆகவே, இது வேறு நோக்கத்தோடு, ஒரு குறிப்பிட்ட சிலர் இப்படிப்பட்ட பதவிகளில் இருக்கக்கூடாது என்பதற்காக வந்திருப்பதாகத்தான் எனக்குத் தோன்றுகிறதே தவிர, இதிலே ஒரு பெரிய பொது நோக்கம் இழையோடுவதாக என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அதேபோல மற்றொன்று. அரசியல் சட்டத்தினுடைய 74-வது திருத்தம், 74th Amendment என்று சொல்லப்படுவது, இந்தியா முழுவதும் உள்ளாட்சி மன்றங்கள் வலுவிழந்து போன நிலையில், செயலற்றுப் போன நிலையில், அவற்றைச் செயல்படுத்துவதற்கு மாநில அரசுகள் முன்வராத ஒரு காலகட்டத்தில் அவை செயல்படுத்தப்பட்டே ஆகவேண்டும், மாநில அரசுகள் உள்ளாட்சி மன்ற அமைப்புகளில் குறுக்கிடுவதற்கான வாய்ப்பு இருக்கக்கூடாது, நாடாளுமன்றம், சட்டமன்றத்தினுடைய நடவடிக்கையில் குறுக்கிடுவதற்கான வாய்ப்புகள் குறைக்கப்பட வேண்டும் என்பது--அது வேறு ஒரு கருத்து--அதைப்போல சட்டமன்றமோ, மாநில அரசாங்கமோ, உள்ளாட்சி மன்றங்களுடைய இயக்கம் தொடர்ந்து சுழல்வதைத் தடுப்பதற்கு ஏதுவாக இருக்கக்கூடாது, தேர்தலை நிறுத்தி வைக்கக்கூடாது என்பதற்காக, மேயர், மாநகராட்சி மன்ற உறுப்பினர், நகராட்சி மன்றத் தலைவர்கள், நகராட்சி மன்ற உறுப்பினர்கள் ஆகிய இந்த எல்லா அமைப்புகளும்--இதிலும் ஏறத்தாழ ஒரு 3 Tier--மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி. இன்னொரு பக்கம், ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், மாவட்ட ஊராட்சி. ஆகவே அதிலே ஒரு 3 Tier; இதிலே ஒரு 3 Tier. அகில இந்தியாவிலே பார்த்தால், பாராளுமன்றம், சட்டமன்றம், உள்ளாட்சி மன்றம். அதிலே ஒரு 3 Tier. ஆகவே, இப்படிப்பட்ட முறையில், ஒரு கடிகாரத்திலே பல்வேறு சக்கரங்கள் இயங்குகின்ற அளவைப் பொறுத்துத்தான் கடிகாரம் காட்டுகிற நேரம் சரியாக இருக்கிற வாய்ப்பை எப்படி நாம் பெறுகிறோமோ, அதைப்போல, சமுதாயத்தினுடைய வளர்ச்சிக்கு, தேவைக்கு இந்த அமைப்புகள் எல்லாம் இயங்கிக்கொண்டே இருக்கவேண்டும் என்பதற்காக அந்தச் சட்டம் வந்த நேரத்தில், அந்த உள்ளாட்சி மன்றங்கள் இயங்குவதற்கு நிதி ஒதுக்குவது உள்பட அரசியல் சட்டத்தின் மூலமாக வரையறுக்கப்பட்டு, அந்த இயக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது, வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடைபெற்றாலும், அ.தி.மு.க. ஆட்சி நடைபெற்றாலும், முதலமைச்சர் யாராக இருந்தாலும், இது தொடர்ந்து நடைபெற வேண்டும். அதைப்போல, சென்னை மாநகராட்சியினுடைய தேர்தல் விதிமுறைகளை--ஏற்கெனவே இன்றைய முதலமைச்சர்





*1991-1996-ல் முதலமைச்சராக இருந்த காலத்தில், அதற்கான விதிமுறைகள் செய்யப்பட்டு, மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிற முறை ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.*

*பிற்பகல் 4-50*

*தி.மு.க. ஆட்சி 1996-லே ஏற்பட்டவுடன், அந்தத் தேர்தல் நடைபெற்று—சென்னை மாநகராட்சித் தேர்தல் நடைபெற்று—மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மேயராக திரு. மு.க. ஸ்டாலின் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். அவர் இல்லையென்றாலும், யார் தேர்ந்தெடுக்கப்பட்டாலும்—ஏனென்றால், அவர் பெயரைச் சொல்லி, அவரைத் தவிர யாரும் வர மாட்டார்களா என்ற கேள்வி வரும். யார் நின்று வெற்றி பெறுகிறாரோ, அவர் வருவார். இப்போதுகூட, இந்தத் தேர்தலிலேகூட யாரோ வெற்றி பெறலாம் என்று எதிர்பார்த்தார்கள். எதிர்பார்த்தார்கள்; அது நடைபெறவில்லை. ஆகவே, இந்த நிலையில், பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பிரதிநிதி, சட்டமன்றத்திற்குப் பிரதிநிதியாக வருகிறவர்களை, சட்டப்படி,* on legal merit, *ஒருவரை நீக்கலாம். நான்கூட ஒரு முறை, மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, இந்தி எதிர்ப்புக்கு—அது பேரவைத் தலைவருக்கு உடன்பாடானதுதான். அன்றைக்குக் கொளுத்தியது மட்டும்தான் உடன்பாடு இல்லையே தவிர, மற்ற நேரத்திலே உடன்பாடுதான். ஆகவே, அதற்கு--எம்.ஜி.ஆர். அவர்களும், என்னுடைய நண்பர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களும், என்னையும், என்னோடு சேர்த்து 9 உறுப்பினர்களைச் சட்டமன்றத்திலே இருந்து நீக்கினார்கள். அது ஒரு விதத்திலே அன்றைக்கு எனக்கு ஒரு பெரிய பாதுகாப்பாக அமைந்தது. இருந்தாலும்கூட,* legal measures, *சட்டப்படி எடுக்கிற நடவடிக்கையில், மேயரோ, துணை மேயரோ, உறுப்பினர்களோ, தலைவரோ,* any office-bearer of any local Board *என்ற முறையில் நீக்கப்படலாம். அதிலே எனக்கு மாறுபாடு இல்லை. அது யாருக்கும் உரிய உரிமை. சென்னை மாநகராட்சி மன்றத்திலே திராவிட முன்னேற்றக் கழகம் செல்வாக்குப் பெற்றிருந்தபோது, அதிலே இருந்த உறுப்பினர்களைப் பற்றி சில புகார்கள் வெளிவந்து, அந்தப் புகார்களை ஆய்வு செய்தபோது, அதிலே ஓரளவு உண்மை இருக்கிறது என்ற அளவிலே மட்டும் தெரிந்தபோது, இது திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இழிவு ஏற்படுத்தும் என்று கருதிய காரணத்தால், ஒரு மாநகராட்சி மன்றம் கலைக்கப்பட்டது. ஆகவே, அந்த நடவடிக்கைகள் வேறு. ஆனால், இது* disqualification *என்ற சொற்றொடரால் வருகிறது. அந்த* phrase, disqualification, *யார், யாருக்கு*

[பேராசிரியர் க. அன்பழகன்] [2002 மே 10

உரியதோ! இப்போது சில பொறுப்புகளுக்கு வருவதற்கு, அறிவு குழம்பியவராக இருக்கக்கூடாது; மனக் குழப்பம் உள்ளவராக இருக்கக்கூடாது; Insolvent ஆனவராக இருக்கக் கூடாது; Criminal குற்றவாளியாகி தண்டனை பெற்றிருக்கக் கூடாது என்று சில விதிமுறைகள், இதிலேயும் கூட இருக்கின்றன. அதுதான் disqualification; நிற்பதற்கான தகுதியற்றவர். சட்டமன்றத்திற்கு 25 வயது, உள்ளாட்சி மன்றங்களுக்கு 21 வயது; அது ஒன்றிலேதான் வித்தியாசம். ஆகவே அந்த முறையிலே நிற்கக் கூடாது என்பதற்காகச் சொல்லப்படுகிற விதி அது. Disqualification என்பது, அந்தத் தகுதியைப் பெறாதவர். சட்டமன்ற உறுப்பினர் மேயராக நிற்கக் கூடாது என்று சொல்வது, disqualification என்கிற சொல்லால் சொல்வதைக்கூட என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அதற்கு வேறுவிதமான சொல் சட்ட முறையிலே கண்டுபிடிக்கப்பட வேண்டும். They are not permitted; It is not permissible. அதைப்போல இருக்க வேண்டுமே தவிர, disqualification என்றால், தகுதியற்றவர் என்று சொல்கிறபோது, அவர் குறைபாட்டிற்கு உரியவராக இருப்பவர். அது அந்தக் காலத்திலே, சோழர் ஆட்சிக் காலத்திலே, பல்லவர் ஆட்சிக் காலத்திலே, ஓர் ஊராட்சி மன்றத் தேர்தல் நடைபெறுமானால் குடவோலை முறையிலே தேர்ந்தெடுக்கப்படுவதற்கு சில விதிமுறைகள் இருந்தன. திருமணம் ஆகாதவர்களுக்கு வாக்களிக்கிற உரிமை இல்லாத காலம்கூட இருந்தது. அது disqualification. 2 பதவிகளில் இருக்கக்கூடாது என்று சொல்வதை அந்த disqualification என்று இதில் சொல்வது முறையல்ல. இருந்தாலும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆக, மேயராக வருவதற்கு, நகராட்சி மன்றத் தலைவராக வருவதற்குச் சட்டங்கள் ஏற்கெனவே இயற்றப்பட்டிருந்தாலுங்கூட, அரசமைப்புச் சட்டத்தின் மூலமாக, அதிலே வந்த திருத்தம் மூலமாக, இந்த மேயர் பொறுப்பு, துணை மேயர் பொறுப்பு, உறுப்பினர்கள் பொறுப்பு எல்லாம் அமைந்திருக்கிறபோது, சட்டமன்றத்தின் மூலமாக ஒரு திருத்தச் சட்டம் கொண்டு வந்து, யார் இருக்கலாம்; யார் இருக்கக்கூடாது என்று செய்கிற அந்த ஒரு நிலைமையை நாம் மேற்கொள்வதை, அரசமைப்புச் சட்ட அடிப்படை ஏற்றுக்கொள்ளுமா என்ற சந்தேகம் எனக்கு இருக்கிறது. கர்நாடக மாநிலத்திலே இப்படி ஒரு நிலைமை ஏற்பட்டதாகவும்--நான் அதைப் பற்றி விவரம் கேட்டேன். விவரம் எனக்கு இன்னும் வந்து சேரவில்லை--அங்கே உயர் நீதிமன்றம், மாநில அரசு இந்தச் சட்டத்திற்குள் தலையிடக் கூடாது என்ற கருத்தைத் தெரிவித்ததாகவும் நான்



2002 மே 10] [பேராசிரியர் க. அன்பழகன்]

கேள்விப்பட்டேன். கேள்வி என்று சொல்கிறேன்; அதனால் தவறாக இருந்தால் மன்னித்துக்கொள்ளுங்கள்.

மற்றொன்று; தேர்தல் சட்டங்கள் எதுவாக இருந்தாலும், தேர்தல் ஆணையமாக இருந்தாலும் சரி, பாராளுமன்ற அரசியல் சட்டமாக இருந்தாலும் சரி, தேர்தலைப் பற்றிய, தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பொறுப்பை நிர்வகிக்கக்கூடிய, எதைப் பற்றிய கருத்தாக இருந்தாலும், it should be only prospective, not retrospective. இந்தச் சட்டமே நியாயம் என்று அமைச்சர்கள் வாதாடி, நிறைவேற்றப்பட்டால்கூட, இந்தச் சட்டத்தைக் கொண்டு செலுத்துகிற அந்த அதிகாரம், இனி எதிர்காலத்தில் அப்படிப்பட்டவர்கள் தேர்தலுக்கு நிற்கக்கூடாது என்று தடுக்கத்தான் பயன்பட முடியுமே தவிர, ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்ட— ஏற்கெனவே திருமணம் ஆனவருக்கு, எப்படிப்பட்ட கணவன், மனைவி வாய்க்க வேண்டும் என்று ஒரு சட்டம் பொன்னையன் அவர்கள் செய்து, அதற்காக இருக்கிறவரை விலக்குவதாக இருந்தால், எனக்குக்கூட கொஞ்சம் இலாபம்தான்; அது வேறு. *(சிரிப்பு)*

*பிற்பகல் 4-55*

சட்டங்கள், கருத்துகள் இடம் பெறுவது தவறல்ல. அதைச் செயல்படுத்துவது என்பது, என்னுடைய மகனுக்குச் செலுத்த வேண்டிய நியாயத்தை எனக்குச் செலுத்தினால் பொருந்தாது. ஆகவே, retrospective முறையில், இந்தச் சட்டம் வெளியிடப்பட்ட 15 நாட்களுக்குள் ஒரு பதவியில் இருந்து விலகிக்கொள்ள வேண்டும் என்பது, அதைவிட ஒரு கடிதம்; கடிதம்கூட இல்லை; முதலமைச்சர் சொல்லட்டும். 'நீ விலகிக்கொள்ளேன்யா; எனக்குக் கொஞ்சம் நல்லா இருக்கும்' என்று சொல்லட்டும்; நாங்களே கலைஞரிடத்திலே சொல்லி, விலகிக்கொள்ளச் சொல்லலாம். பிறகு இதற்கு ஏன் இவ்வளவு சட்டம்? இன்னும் சொல்லப் போனால், ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்பது ஒரு காலத்திலே தோழமையோடு செயல்படக்கூடிய வாய்ப்பு இருந்தது. ஆனால், தமிழ்நாட்டிலே அது சற்றுக் குறைவுதான். அது நான் இளைஞனாக இருந்த காலத்திலே இருந்து, பெரியவர்களிடத்திலே மரியாதை வேண்டுமானால் காட்டுவோமே தவிர, ஓர் அழுத்தமான மாறுபாடு உள்ளத்திற்குள்ளே வளர்ந்து போய்விட்டது. அது ஏன் வளர்ந்தது என்பது எனக்கே தெரியாது. எனக்கே இருக்கிற ஒரு பெரிய குறைபாடு. துரைமுருகன் மாதிரி எனக்கு எல்லோரிடத்திலும் பழக முடியாது. ஏதோ கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லிவிட்டுப் போய்க் கொண்டிருக்கிற

[பேராசிரியர் க. அன்பழகன்] [2002 மே 10

பழக்கம்தான் எனக்கு. அதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், சில
கருத்துகள் பிறருக்கு உடன்பாடாக இருக்காது என்கிற காரணத்தினாலே,
அந்தக் கருத்து நமக்குச் சொந்தமாக இருக்கிற காரணத்தினால் நம்மை
அவர்கள் விரும்பமாட்டார்கள் என்று கருதி, அப்படியே ஒதுங்கி ஒரு
பழக்கம். ஆகவே, அந்த முறையிலே, தமிழ்நாட்டு அரசியலில், வேறு மற்ற
துறைகளில் எவ்வளவு மாறுபாடு இருந்தாலும், உள்ளாட்சி மன்றங்களை,
அதிலேயும் குறிப்பாக, அரசியல் சட்டத் திருத்தம், 74-வது திருத்தம் வந்து
நிறைவேற்றப்பட்டதற்குப் பின்னர், இன்றைக்கு அந்தச் சட்டத்தினுடைய
நோக்கம் ஒரு வகையில் பாதிக்கும்படியாக, ஏற்கெனவே
தேர்ந்தெடுக்கப்பட்டதில், அதிலே எவ்வளவோ மாறுபாடுகள்
இருந்தாலும்கூட, தேர்ந்தெடுக்கப்பட்டு, வெற்றி பெற்று வந்த ஒருவரை
அந்தப் பதவியிலே இருந்து நீக்குவதற்காக இன்றைக்கு இந்தச் சட்டம்
அல்லது நீங்கச் செய்வதற்காக அல்லது சட்டமன்ற உறுப்பினர் பதவியை
விட்டு விலகச் செய்வதற்காக, ஏதேனும் ஒன்றில் விலகினால்தான் ஒன்றில்
இருக்கலாம் என்ற முறையில் இந்தச் சட்டம் வந்து இருப்பது, நோய்க்குப்
பரிகாரமாக ஆகாமல், பரிகாரமே நோயாக ஆகிவிட்டால் என்னவோ,
அப்படிப்பட்ட நிலைமையைத்தான் ஏற்படுத்துகிறது என்பதை நான்
வலியுறுத்தி இந்த அவையில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்று, இந்தத் தேர்தல் நடைபெற்றபோது, 2001 அக்டோபரிலே
தேர்தல் நடைபெற்றபோது, அன்றைக்கு இந்த ஆட்சிதான் நடைபெற்றது.
அந்தத் தேர்தலில், ஏறத்தாழ 5 ஆண்டு காலம் மேயராக இருந்த ஸ்டாலின்
நிற்பார் என்பது அரசுக்குத் தெரியும்; ஸ்டாலினோ அல்லது X or Y
இரண்டாம் தரம் நிற்பதே கூடாது என்று கருதி இருந்தாலோ, அல்லது
சட்டமன்ற உறுப்பினராக இருப்பவர் நிற்கக் கூடாது என்று
கருதியிருந்தாலோ, அப்பொழுதே, தேர்தலுக்கு நிற்பதற்கு முன்னர், இப்படி
ஒரு விதியை நிறைவேற்றக்கூடிய வாய்ப்பு இருந்து, நிறைவேற்றி இருந்தால்
அது வேறு; ஆகவே, அந்த வாய்ப்பு இல்லாதபோது, இப்பொழுது இந்த
விதியைக் கொண்டுவருவது, அதுவும் கவுன்சிலர்களுக்காகக் கொண்டு
வருவது, Members of almost all the local Boards என்று சொல்லக்கூடிய
முறை, எல்லா உறுப்பினர்களுக்கும் இது பொருந்தும் என்று சொல்வது,
இது நான் சைவன் என்று காட்டுவதற்கு நெற்றியிலே விபூதி பூசுவதற்குப்
பதிலாக, விபூதியைக் கொட்டி அதிலே புரண்டுவிட்டுப் போவதைப் போல
இருக்கிறது.

இன்னுமொன்று. தேர்ந்தெடுக்கப்பட்ட பொது மக்களுடைய
பிரதிநிதிகள், தலைவர்கள் யாரும் அவர்களுக்குத்தான் அதிகாரங்கள்



2002 மே 10] [பேராசிரியர் க. அன்பழகன்]

இருக்க வேண்டும் என்பது அகில இந்திய அளவில் நாம் பெற்று இருக்கிற
அரசியல் சட்ட அடிப்படையில் இந்தியாவிலே உள்ள எல்லாப்
பகுதிகளிலேயும் உள்ள எல்லா அமைப்புகளுக்கும் பொருந்துகிற ஒன்று.
தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்குத்தான் அதிகாரம். இதிலே, 'Tamil Nadu
Municipal Corporations Law Amendment Act' என்று வந்திருக்கிற இந்தச்
சட்டத்திலே, இது 6-வது திருத்தச் சட்டம்; மாநகராட்சி மன்றங்களிலே
பல்வேறு குழுக்கள், நிலைக் குழுக்கள், மேற்பட்ட அமைப்புகள்; அந்த
ஒவ்வொரு குழுவிலேயும் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள், அதிலேயும்
இப்போது அந்தக் குழுக்களிலே பெரும்பாலும்--சென்னை
மாநகராட்சிக்காகப் பேசுவதாக எடுத்துக்கொள்ளக் கூடாது—ஆளுங்
கட்சியைச் சேர்ந்தவர்களேகூட இடம் பெற்று இருக்கிறார்கள். அது யார்
என்பது முக்கியமல்ல. அந்தக் குழுக்களுக்கு இருக்க வேண்டிய பல
அதிகாரங்கள் மெல்ல ஆணையருக்குத் தரப்படுவதாகப் பல திருத்தங்கள்
வந்து இருக்கின்றன. 10 ஆயிரம் ரூபாய் வரையிலே அந்த உள்வட்டக்
குழு; அதற்கு மேற்பட்டு இலட்சம் ரூபாய் வரையில் ஆணையர்; அதற்கு
மேற்பட்டு மறுபடியும் மேல்நிலைக் குழு என்று பல குழுக்களுக்கு அந்த
அதிகாரங்கள் இருந்தாலும்கூட, மேயர் கேட்கிறபோது, ரிப்போர்ட்
அனுப்புவதற்கு கமிஷனர் கடமைப்பட்டு இருக்கிறார் என்பது முதல்
திருத்தம். மேயர் மூலமாகச் செயல்படுவது என்ற முறையை மாற்றி,
கமிஷனர் மூலமாகத்தான் மாநகராட்சி மன்றம் செயல்பட வேண்டும்
என்றால், உள்ளாட்சி மன்ற அமைப்பு என்பது ஒரு ஐ.ஏ.எஸ்.
அதிகாரியினுடைய அதிகாரத்திற்கு ஆட்பட்டதாக மாற்றப்படுகிறது.

*பிற்பகல் 5-00*

அது ஒன்றும் நாட்டிலே ஆச்சரியமல்ல. மாநகராட்சி மன்றம்
இல்லாதபோது ஐ.ஏ.எஸ். அதிகாரிகள்தான், தேர்ந்தெடுக்கப்படாதபோது.
23 ஆண்டு காலம் மாநகராட்சி மன்றம் இல்லை. யாரோ ஐ.ஏ.எஸ்.
அதிகாரிகள்தான் நடத்தினர். இது ஒன்றும் பெரிய ஆச்சரியம் இல்லை.
இது ரொம்ப சாதாரணம். இன்னும் சொல்லப் போனால் எதிலேயும்
ஒரு மாற்றம் இல்லாமல் அப்படியே பாதுகாக்கக்கூடிய திறமை ஐ.ஏ.எஸ்.
அதிகாரிகளுக்கு உண்டு. மக்களுக்குத் தேவை பல மாற்றங்கள். அந்த
மாற்றங்களைச் செய்யக்கூடியவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். ஆகவே,
அந்த வாய்ப்பு குறையக்கூடிய ஒரு நிலைமை இருப்பது காரணமாக,
மேயருடைய அதிகாரங்கள் கமிஷனருக்கு மாற்றப்படக்கூடிய முறையிலே

வந்து இருக்கிற திருத்தங்கள் அவ்வளவு நியாயம் அல்ல என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

இன்னொரு திருத்தம், மேயரோ, துணை மேயரோ, Chairman or Vice Chairman, யாராக இருந்தாலும் வெளிநாட்டுக்குப் போவதாக இருந்தால் அரசாங்கத்தினுடைய அனுமதி பெற்றுத்தான் போகவேண்டும் என்று ஒரு கருத்து; அரசாங்கத்திற்குத் தெரிவித்துவிட்டுச் செல்லவேண்டும் என்றால், அது வேறு. ஒரு பெரிய அதிகாரிகூட, தான் விடுமுறை எடுத்துக்கொள்வதை inform பண்ணுவார். அனுமதி கேட்க மாட்டார். ஓர் அமைச்சர் முதலமைச்சரிடத்திலேகூட மரியாதை நிமித்தமாக அனுமதி கேட்பது வேறு. ஆனால், நான் ஊரில் இல்லை என்றுதான் தெரிவிப்பார்கள். அதற்குத் தாங்கள் அனுமதி வழங்க வேண்டும் என்று கேட்பது, அது ஒரு கட்டாயம் அல்ல. அது பழக்கம் அல்ல. ஒரு Mayor— elected Mayor, 5,60,000 பேர் வாக்களித்த ஒரு மேயர். நான் வாக்குப் பெற்றது 40,000, 50,000. 5,00,000 பேர் வாக்களித்து நம் கண் எதிரில் வெற்றி பெற்ற ஒருவர் அரசாங்கத்தை அனுமதி கேட்க வேண்டும். ஒரு கார்ப்பரேஷன் மேயராக இருக்கலாம். ஜப்பானுக்குப் போகக் கூடாதா? அமெரிக்காவுக்குப் போகக் கூடாதா? அதுவும் அழைப்பு வந்து போகக்கூடாதா? அப்படிப் போவது அந்தப் பொறுப்பு அடிப்படையில் இருக்கக்கூடாது என்ற கருத்து இருக்கிறது. As Mayor போகக் கூடாது. தனிப்பட்ட individual, அவர் சொந்த உறவுக் கல்யாணம் அல்லது நண்பர்கள் வீட்டு நிகழ்ச்சி, அதற்கு அவர் போவது என்றால் போகலாம். அதைத் தடுக்க முடியாது. As Mayor or as Deputy Mayor அல்லது நகராட்சி மன்றத் தலைவர் அல்லது நகராட்சி மன்றத் துணைத் தலைவர் என்ற முறையில் செல்வதற்கு அரசு அனுமதி பெறவேண்டும். அவர்கள் ஏற்று இருக்கிற பொறுப்பைப் பார்க்கிறபோது, அரசு அனுமதி பெறவேண்டும் என்று சொல்வது, அவ்வளவு நாகரீகம் அல்ல. இரண்டாவது, தவறி அப்படிக்குகூ போய்விட்டார் என்று வைத்துக்கொள்ளுங்கள். தண்டனை இதிலே இருக்கிறது. 1000 ரூபாய் அபராதம். அவரவர்கள் முதலிலேயே Challan அனுப்பிவிட்டுப் போய்க்கொண்டே இருப்பார்கள். தண்டனை கொடுப்பது என்பது முறையா என்று யோசியுங்கள். சட்டமன்ற உறுப்பினர் வெளிநாடு போய்விட்டு வந்ததற்கு, பாராளுமன்றத்திலே அபராதம் 2,000 ரூபாய் என்று போட்டால், நாம் அதை விரும்புவோமா, நாம் அதை ஏற்றுக்கொள்வோமா? நாம் ஒரு கட்டுப்பாட்டை ஏற்றுக்கொள்வது என்பது வேறு. அரசாங்கத்திற்குத் தெரிவித்துவிட்டுத்தான் செல்ல வேண்டும். பொது நோக்கம் உள்ள நிகழ்ச்சிகளுக்குத்தான் செல்ல வேண்டும். ஒரு வேளை தீவிரவாதியாக இருந்து வெளிநாட்டிற்குப் போய்த் தீவிரவாதிகளைச்





சந்திப்பதற்குப் போவதாக இருந்தால், அதற்கு மேயர் பதவியையோ, துணை மேயர் பதவியையோ பயன்படுத்தக் கூடாது என்று சட்டம் இருக்குமானால், அதை நான் ஏற்றுக்கொள்ளத் தயார்.

இப்படி வந்திருக்கிற பல்வேறு திருத்தங்கள், மாநகராட்சி மன்றத்திலே பொறுப்பேற்றுள்ளவர்களை மதிப்பதாகக் காட்டவில்லை. நாம் அவர்களை, நம்மைவிட அதிகம் மதிக்கத் தேவையில்லை. ஆனால் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிற என்னைவிட, ஒரு அமைச்சராக இருப்பவரைவிட, ஒரு மாநகராட்சி மன்றத்திலே மேயராக இருப்பவரை நாம் குறைத்து மதிப்பதாக ஒரு எண்ணம் ஏற்படக்கூடும். எனவே, இப்படிப்பட்ட திருத்தங்களைத் திராவிட முன்னேற்றக் கழகம் சார்பாக நான் ஏற்றுக்கொள்ள மறுக்கிறேன். என்னுடைய எதிர்ப்பைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** த.மா.கா. சார்பிலே திரு. வினாயகமூர்த்தி.

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் பேசும்போது, disqualification என்ற வார்த்தை இருக்கக் கூடாது என்று சொன்னார். அதற்கு விளக்கம் கூறக் கடமைப்பட்டுள்ளேன். Article 101-லே Disqualification of Members: 'No person shall be a member of both Houses of Parliament and provision shall be made by Parliament by law for the vacation by a person who is chosen a member of both Houses of his seat in one House or the other'. ஆகவே, இந்த disqualification என்ற வார்த்தை தெளிவாக இருக்கிறது. அதற்கு மேலாக நீங்கள் ஒரு கருத்தைச் சொன்னீர்கள். அயல்நாட்டுக்குப் போகிறவர்கள் இங்கு இருந்து போகும்போது அவர் அங்கே போய் terrorist-ஐச் சந்திக்கிறார்களா என்று கேட்டீர்கள். நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர், பாலசிங்கம் என்பவரைச் சந்தித்து இருக்கிறார். அது உங்களுக்கு நன்றாகவே தெரியும். ஆகவே, இதேபோன்ற காரணத்தினால், இந்தச் சட்டங்கள் வந்துகொண்டிருக்கின்றன.

[2002 மே 10

பிற்பகல் 5-05

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்காக அல்ல, என்னுடைய தமிழ் அறிவுக்கு எட்டியதைச் சொல்வதற்காக. Disqualification என்றால் தகுதி இழந்தவர். என்னுடைய எண்ணம், தகுதி இழக்கவில்லை. உரிமை இழந்தவர் என்று வேண்டுமானால் சொல்லலாம். 'They have no right to claim' என்று சொல்லலாமே தவிர, 'They are disqualified' என்று சொல்லக்கூடாது. அது அரசியல் சட்டத்தில் இருந்தால்கூட என்னுடைய அறிவு இப்படித்தான் சொல்கிறது.

*** திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி சம்பந்தப்பட்ட வகையிலே சில சட்டத் திருத்தங்கள் இங்கே கொண்டு வரப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, One man, One post என்கின்ற அளவிலே, சட்டமன்ற உறுப்பினராகவோ அல்லது நாடாளுமன்றத்தின் இரு அவைகளினுடைய உறுப்பினராகவோ இருக்கின்றவர்கள், மேயராகவோ, துணை மேயராகவோ அல்லது நகராட்சியினுடைய தலைவராகவோ, துணைத் தலைவராகவோ, பேரூராட்சியினுடைய தலைவராகவோ, துணைத் தலைவராகவோ, மாவட்டப் பஞ்சாயத்தினுடைய தலைவராகவோ, துணைத் தலைவராகவோ, ஊராட்சி ஒன்றியத்தினுடைய தலைவராகவோ, துணைத் தலைவராகவோ, ஊராட்சியினுடைய தலைவராகவோ, துணைத் தலைவராகவோகூட இருக்கக்கூடாது என்கின்ற அளவிலே தடை விதிக்கப்படுகின்ற வகையிலே இங்கே சட்டத் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

சென்ற உள்ளாட்சி மன்றத்தினுடைய தேர்தல்கள் நடைபெறுவதற்கு முன்பாக இந்தத் திருத்தங்கள் வரப்பெற்றிருந்தால், ஓரளவுக்கு ஒரு மனதோடு ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கலாம் என்று நான் கருதுகின்றேன். உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் முடிந்த பின்னாலே இன்றைக்கு இப்படிப்பட்ட ஒரு திருத்தத்தைக் கொண்டுவருவதன் மூலமாக, தனி ஒருவரைக் குறி வைத்து இப்படிப்பட்ட திருத்தம் வந்திருக்கிறதோ என்கின்ற அளவிலே விமர்சனங்கள் இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. என்னைப் பொறுத்தளவிலே, ஆய்ந்து பார்க்கின்ற அளவிலே, சென்னை மாநகர மேயரைத் தவிர, வேறு யாரும் இந்தச் சட்டத் திருத்தங்களால் பாதிப்புக்கு உள்ளாகப் போவதில்லை என்கின்ற



2002 மே 10] [திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி]

நிலை தெரிகின்றபொழுது இப்படிப்பட்ட விமர்சனங்களுக்கு வலுச் சேர்ப்பதைப்போல இருப்பதாக நான் கருதுகிறேன். ஒன்றை அரசிடம் நான் அன்போடு கேட்டுக்கொள்வேன். கொள்கை அளவிலே ஒருவருக்கு ஒரு பதவிதான் இருக்கவேண்டும் என்பதை ஏறக்குறைய எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய நிலை இருக்கிறது. தமிழ் மாநில காங்கிரசாரும் அதை ஒப்புக்கொள்கிறோம். பேராசிரியர் அவர்கள் சொன்னதைப் போல, இதை உடனடியாக அமல் நடத்த வேண்டுமென்கின்ற நிலை இல்லாமல், அடுத்த தேர்தலிலே இருந்து அமல் நடத்தலாம் என்கின்ற ஒரு நிலை வகுக்கப்படுமானால், அது எல்லோருக்கும் ஏற்புடையதாக இருக்கும் என்று நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். ஆக, ஒருவருக்கு ஒரு பதவி என்பதைக் கொள்கை அளவிலே ஏற்றுக்கொண்டாலும், உடனடியாக அமல் நடத்த வேண்டும் என்பதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று அரசை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, மேயருடைய பதவியினைச் சார்ந்திருக்கின்ற அதிகாரங்கள் சம்பந்தமாக, உரிமைகள் சம்பந்தமாக, அவர் வெளிநாடு போகின்றபோது பெறவேண்டிய அனுமதிகள் சம்பந்தமாகத் திருத்தங்கள் இங்கே வந்திருக்கின்றன. நிதி சம்பந்தமான அதிகாரங்கள் பற்றிய திருத்தங்கள் வந்திருப்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், சில வருடங்களுக்கு முன்னால் வரை, மேயர் பொறுப்பில் இருக்கின்றவர்களுக்கு நிதி சம்பந்தமான அதிகாரம் ஏதும் இல்லாமல் இருந்தது. அந்தப் பதவியைப் பொறுத்தவரையில், appointing அதிகாரமோ அல்லது ஒப்பந்தங்களை முடிவு செய்கின்ற அதிகாரமோ இல்லாத நிலையிலே சில சிறப்பு உரிமைகள் மட்டுமே இருந்திருக்கின்றன. ஆக, இன்றைய சூழ்நிலையிலே அப்படி நிதி சம்பந்தமான அதிகாரங்கள் தேவையில்லை என்று சொன்னால், அதைப் பற்றிய திருத்தங்கள் வருவதிலே எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால், உரிமைகளைப் பொறுத்தமட்டிலே காலையிலேகூட இந்த அவையிலே பேசப்பட்டது. சிறையிலே இருக்கின்ற கைதிகள்கூட உரிமைகளை இழக்கக் கூடாது என்று பேசப்பட்டது. ஊதியம் பெறுகின்ற தொழிலாளர்கள், சிப்பந்திகள்கூட அவர்கள் உரிமைகளை இழக்கக் கூடாது என்ற கருத்து இங்கே தெரிவிக்கப்பட்டது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பொறுப்புள்ளவருக்கு இருக்கின்ற அதிகாரங்களைக் குறைக்க வேண்டும், உரிமைகளைக் குறைக்க வேண்டுமென்று சொல்வது அவ்வளவு நியாயமானது அல்ல என்று நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

பிற்பகல் 5-10

குறிப்பாக, Section 37 of M.C. M.C. Act. அதிலே சொல்லப்பட்டிருக்கின்ற உரிமைகள் 'The prerogatives of the Mayor' என்ற தலைப்பிலே குறிக்கப்பட்டிருக்கின்றன. அதாவது, மேயருடைய சிறப்புரிமைகள் என்று இங்கே அதற்குத் தமிழிலே மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. அதிலே சொல்லியிருக்கின்ற பொருள், ஒரு harmless Section என்றுதான் என்னால் சொல்ல முடியும். 'மேயர் மாநகராட்சியின் பதிவேடுகள் அனைத்தையும் பார்வையிடுவதற்கு அதிகாரம் உடையவராக இருப்பதோடு, மாநகராட்சி நிர்வாகம் தொடர்பான ஒரு பொருள் குறித்து ஆணையாளரிடமிருந்து அறிக்கைகள் பெறலாம். மேயர் மூலமாக அன்றி மாநகராட்சிக்கும், அரசுக்கும் இடையே எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் நடத்தப்படக் கூடாது.' இதுதான் முக்கியமான விஷயம். மேயர் பதவிக்கு ஜீவனாக இருக்கின்ற ஒரு உரிமை இதுதான். பல நேரங்களிலே பல பெரியவர்கள் இதைக் கொச்சைப்படுத்திப் பேசி இருப்பதைக்கூட நான் பார்த்திருக்கின்றேன். மேயருக்கு என்ன அதிகாரம்? ஒரு Post Office வேலை. கவர்மென்டிலிருந்து வருகின்ற லெட்டரை அவர் கமிஷனருக்கு அனுப்பவேண்டும். கமிஷனர் கவர்மென்டுக்கு அனுப்புகிற கடிதங்களை இவர் பார்த்து அங்கே அனுப்பி வைக்கவேண்டும். இதுதான் அவருக்குரிய வேலை என்று கொச்சைப்படுத்திக்கூடப் பேசியிருக்கின்றார்கள். அது எப்படிப் பேசப்பட்டாலும், அவருக்கு இருக்கின்ற முக்கியமான உரிமை, சிறப்புரிமை—Prerogative என்று ஆங்கிலத்தில் சொல்லியிருக்கின்ற அந்த உரிமை முக்கியமானது. அதைத் தவிர்க்க வேண்டுமென்று சொல்வதை ஏற்றுக்கொள்ள இயலவில்லை என்று நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். ஏனென்று சொன்னால், மாநகராட்சிக்கும், இங்கே மாநில அரசுக்கும் இணைப்புப் பாலமாக மேயர் இருக்க வேண்டியது அவசியம். இங்கேயிருந்து செல்லுகின்ற கடிதங்களிலே இருக்கின்ற விஷயங்களை அவர் தெரிந்து வைத்திருந்தால்தான் அல்லது ஆணையாளர் அரசாங்கத்திற்கு அனுப்புகின்ற கடிதங்களிலே இருக்கின்ற விஷயங்களை அவர் தெரிந்து வைத்திருந்தால்தான், மாமன்றத்தினுடைய சபையை நடத்துகின்றபோது, உறுப்பினர்கள் கேட்கின்ற கேள்விகளுக்கு அவர் சரியான முறையிலே பதில் கொடுக்க முடியும். அப்படியில்லாமல், எந்த விஷயமும் தெரியாதவராக, அந்தப் பதவியிலே இருப்பவரை, வைத்திருப்பது என்பது அவ்வளவு நியாயமாகாது என்பதை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றேன்.





இங்கே வந்திருக்கின்ற திருத்தம் என்பது, மேயர் அறிக்கையைப் பெறலாம்; மேயர் மாநகராட்சி நிர்வாகம் தொடர்பான எதன்மீதும் ஆணையரிடமிருந்து அறிக்கையைப் பெறலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது சாதாரண உறுப்பினர்களுக்கு இருக்கின்ற ஓர் உரிமையே தவிர, இதை மேயருக்கு என்று தனிப்பட்டுக் கொடுக்கப்பட்டிருக்கின்ற உரிமையாக எடுத்துக்கொள்ள முடியாது.

இன்னொன்று. இந்தத் திருத்தத்தை நிறைவேற்றிவிட்டால் இன்னொரு சங்கடமும் இருக்கின்றது என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன். செக்ஷன் 25-ன்படி, இதே அடிப்படையிலே ஆணையாளர்களிடமிருந்து எந்த உறுப்பினரும் எந்தப் பொருளைப் பற்றியும் அவர்கள் ரெக்கார்டுகளைப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளலாம். அப்படி ஆணையாளர் மறுக்கின்றபோது மேயருக்குத்தான் உறுப்பினர்கள் அப்பீல் செய்யவேண்டுமென்று இங்கே சட்டத்திலே சொல்லப்பட்டிருக்கின்றது. ஆக, மேயருடைய decision is final என்று அதிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. மற்ற உறுப்பினர்களுக்குச் சங்கடங்கள் வருகின்றபோது, அதற்கு நிவாரணம் செய்து கொடுக்கின்ற பொறுப்பிலே இருக்கின்ற மேயரே, சாதாரண உறுப்பினர்களுக்குள்ள அதிகாரத்தோடு நின்றுவிட்டால், உறுப்பினர்களுக்குச் சங்கடம் வருகின்றபோது யாரிடம் சென்று முறையிட முடியும் என்ற ஒரு கேள்வி எழுகிறது. ஆகவே, இந்த நிலையைத் தவிர்க்கவேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

ஆக, இருக்கின்ற இந்தச் சட்ட விதிகளையெல்லாம், 1919-லே உருவாக்கிய இந்தச் சட்டம் பல்வேறு மாறுதல்களுக்கு உட்பட்டு இன்றைய நிலைக்கு வந்திருப்பதைப் பார்க்கின்றபோது, பல இடங்கள் `not relevant' என்று சொல்கின்ற அளவிலே இருக்கின்றன. முழுமையான revision இந்த M.C.M.C.Act-க்குத் தேவை என்பதை நான் வலியுறுத்துகின்றேன். இதைப் பொறுத்தளவிலே, மேயருக்கு ஒரு பதவி என்பதை retrospective effect இல்லாத அளவிலே அதை நிறைவேற்றுவதற்கு வேண்டுமானாலும் நாங்கள் உடன்படுகின்றோம் என்று சொல்லி, அதிகாரங்களைக் குறைக்கின்ற, உரிமைகளைக் குறைக்கின்ற எந்த விஷயத்தையும் ஏற்றுக்கொள்வதற்கு இயலவில்லை என்பதை இங்கே வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். இன்றைய ஜனநாயக முறையிலே மக்கள் பிரதிநிதிகளுக்கு அதிக அதிகாரம் தேவை என்று ஓங்கி, உரத்த குரலிலே சொல்லிக்கொண்டிருக்கின்ற நேரத்தில், தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற மக்கள் பிரதிநிதிகளின் அதிகாரங்களையும், உரிமைகளையும்

களைந்தெறிந்து வெற்றுடம்பாக ஆக்கி அவர்களை நிற்க வைப்பது என்பது
சரியான முறையல்ல என்பதையும் சொல்லிக்கொள்கிறேன். அத்துடன்,
மக்கள் பிரதிநிதிகளைத் தவிர்த்து அதிகார வர்க்கத்தை அதிகார
மையங்களாக ஆக்குகின்ற முயற்சியும் அவ்வளவு சரியானதல்ல என்பதைச்
சொல்லி, இதை மறு ஆலோசனை செய்ய வேண்டும் என்று கேட்டு,
அமைகின்றேன்.

*பிற்பகல் 5-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** ஒரே ஒரு விஷயம். மேயரோ, துணை
மேயரோ அல்லது மாநகராட்சி மன்ற உறுப்பினரோ வெளிநாடுகள் செல்ல
வேண்டும் என்று சொன்னால், அரசினுடைய அனுமதியைப் பெற
வேண்டும் என்று இங்கே சொல்லப்பட்டிருக்கின்றது. சமீபத்தில்தான் மேயர்
வெளிநாட்டிற்குப் போய் இருக்கிறார். இன்னும் வந்து சேரவில்லை என்று
நான் நினைக்கின்றேன். இந்த நிலையிலே இப்படி ஒரு சட்டத் திருத்தம்
இங்கே வந்திருக்கின்றது. ஒரு மாநகராட்சி மேயர், தமிழகத்தினுடைய 60
இலட்சம் மக்களுடைய பிரதிநிதியாக, தமிழ்நாட்டினுடைய பத்தில் ஒரு
பங்கு மக்கள் தொகைக்கு ஒரு தலைவராகத்
தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றவர், மரபுப்படி சொல்லி விட்டுப் போகலாம்
என்று கேட்கலாமே ஒழிய, அனுமதியைப் பெற்றுத்தான் போக வேண்டும்
என்று குறிப்பிடுவது, ஏற்புடையதல்ல இது மேலெழுந்தவாரியாகப்
பார்க்கின்றபோது நியாயமாகத் தெரியலாம் இன்றைக்கு அவர் வேறு
ஒரு கட்சி, இங்கே இருப்பது வேறு ஒரு கட்சியாக இருந்து
கொண்டிருக்கிறது. இதே நிலை நீடித்தாலோ அல்லது வேறு வகையிலே
மாற்றங்கள் வந்தாலோ, நியாயமாக வெளிநாடு செல்வதற்கு உரிய
அனுமதியைப் பெறுவதற்குக்கூட சங்கடங்கள் ஏற்பட முடியும் என்று
நான் எண்ணிப் பார்க்கின்றேன். ஆக, ஒரு பெரிய பொறுப்பிற்கு, ஒரு
இன்ஃபர்மேஷன் கொடுத்தால் போதும் என்ற நிலை இருக்க வேண்டுமே
ஒழிய, இதை நிர்பந்தப்படுத்துகின்ற, சட்ட ரீதியாகக் கட்டாயப்படுத்துகின்ற
ஒரு நிலை, வரக்கூடிய காலங்களுக்கு இருக்கக்கூடாது என்பதை நான்
தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மேயராக
மதிப்பிற்குரிய ஸ்டாலின் அவர்கள் இருக்கலாம். நாளைக்கு வேறு யாரும்,



எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களும் மேயராக வருகின்றபோது, இவை எல்லாம் சரியானவைகளாக இல்லாமல் இருப்பதை நாமே உணருகின்ற நிலை ஏற்படலாம் என்பதை அன்போடு தெரிவித்துக் கொண்டு, மீண்டும், மீண்டும் புனராலோசனை செய்து, இந்தத் திருத்தங்களைக் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த *13/2002, 15/2002, 6/2002, 31/2002, 10/2002, 24/2002, 17/2002* ஆகிய சட்டமுன்வடிவுகளைப் பற்றி, ஒன்றாக இணைத்து இந்த ஆய்விலே பேச வேண்டும் என்று பணித்த தங்களுக்கு முதலிலே நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே சில கருத்துகளைக் கூற நான் விழைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவு—*13/2002* என்பது, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி மன்றங்களினுடைய தலைவர்கள், உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றியங்களினுடைய தலைவர்கள், உறுப்பினர்கள், மாவட்ட ஊராட்சித் தலைவர்கள், உறுப்பினர்கள் ஆகியோர், ஒரு பதவியில் இருக்கலாமே தவிர, அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக, சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்துவிடக் கூடாது என்ற அந்தச் சட்டத் திருத்தமாகும். அதைப் போலவே *15/2002* என்பது, பேரூராட்சித் தலைவர் மற்றும் உறுப்பினர், நகராட்சி மன்றத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள், மாநகராட்சி மேயர் மற்றும் உறுப்பினர்கள் ஆகியோர் இந்தப் பொறுப்புகளைத் தவிர, சட்டமன்ற உறுப்பினர்களாக, நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்கக் கூடாது என்று அதைத் தடை செய்யும் சட்டமாக இங்கே அறிமுகம் செய்யப்பட்டு இருக்கிறது. இந்தச் சட்டத் திருத்தத்தை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு விவாதிக்கின்ற நேரத்திலே, எனக்கு முன்னாலே மாண்புமிகு தலைவர் பெருமக்கள் பேசிய கருத்தோடு, இன்று பரவலாகத் தமிழ்நாட்டிலே, அரசியல் கட்சிகள் மாத்திரமல்லாமல், பொது மக்கள் மத்தியிலே பேசிக்கொள்வது, பேசப்படுவது என்ன என்று சொன்னால், இன்று தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் யாரும் உள்ளாட்சியிலே இப்படிப்பட்ட பொறுப்புகளில் இல்லை.

[திரு. ஜி.கே. மணி] [2002 மே 10

பிற்பகல் 5-20

இன்று மரியாதைக்குரிய மாண்புமிகு ஸ்டாலின், எம்.எல்.ஏ.-வாகவும் இருக்கிறார், சென்னை மாநகரத்தினுடைய மேயராகவும் இருக்கிறார். ஆகவே, அவருக்காகவே கொண்டுவரப்பட்ட சட்டமுன்வடிவு என்று இங்கே பரவலாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அதிலும் இன்னொன்றை நான் சுட்டிக்காட்ட விரும்புவது; இதே மாமன்றத்திலே மாண்புமிகு ஸ்டாலின் அவர்கள் பேசுகின்றபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 'சட்டத் திருத்தம் வரவிருக்கிறது, நீங்கள் மேயராக இருக்க வேண்டும் அல்லது எம்.எல்.ஏ.-வாக இருக்க வேண்டும், ஏதாவது ஒரு பதவியில்தான் இருக்க வேண்டும்' என்று இந்த மாமன்றத்திலே சுட்டிக்காட்டினார்கள். இன்று அதை வைத்துத்தான் இந்தச் சட்டத் திருத்தம் வருகிறதோ என்றெல்லாம் பரவலாகப் பேசப்பட்டு வருகிறது. ஆகவே, அந்த வகையிலே சட்டத் திருத்தம் என்பதை ஒருவருக்காகக் கொண்டு வருவது என்பது முறையானதாக இருக்காது. எந்த அரசியல் கட்சியைச் சார்ந்திருந்தாலும்கூட, அப்படிப்பட்ட சட்டத் திருத்தம் ஒருவருக்காக வருவது என்பது முறையானதாகவும் இருக்காது. இனி வருங்காலங்களில் சென்னை மாநகருக்கு அல்லது மற்ற பொறுப்புகள் என்று சொல்லப்பட்டிருக்கிற இந்தப் பொறுப்புகளுக்கு எந்த அரசியல் கட்சியிலேயிருந்து யார் வேண்டுமானாலும் வரலாம். கடந்த இதே மாமன்றத்திலே சட்டப் பேரவை உறுப்பினர்களாக இருந்தவர்கள் நிறையப் பேர் ஊராட்சி ஒன்றியங்களுடைய பெருந்தலைவர்களாகவும், நகராட்சி மன்றங்களுடைய தலைவர்களாகவும் இருந்தார்கள், பல்வேறு அரசியல் கட்சிகளின் சார்பிலே. ஆகவே, அந்த வகையிலே இருந்த இந்த ஒரு பதவியைப் பறிப்பதற்காகக் கொண்டு வந்த சட்டமாகவே பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே கருதுகிறோம். ஆகவே, இப்படிப்பட்ட சட்டம் என்பது அரசியல் கட்சிகளிலேகூடச் சொல்லப்படுகிறது. எல்லாக் கட்சிகளிலும் பரவலாக ஒருவருக்கு ஒரு பதவி என்று சொல்லப்படுகிறது. அந்த வகையிலே எடுத்துக்கொண்டாலும்கூட, இங்கே சட்டமன்றத் தோ்தலுக்குப் பிறகு, உள்ளாட்சி அமைப்புகளுடைய தேர்தல் நடைபெற்றது. அந்த உள்ளாட்சி மன்றத் தேர்தலுக்கு முன்பு இப்படிப்பட்ட ஒரு சட்டத் திருத்தம் வந்திருக்குமென்று சொன்னால், இது பொதுவானதாகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது; ஒருவருக்கு ஒரு பதவி என்ற அடிப்படையிலே கொண்டு வந்த சட்டமாகவே கருதலாம். ஆனால், உள்ளாட்சி...

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராசிரியர் அவர்களும், தற்போது ஜி.கே. மணி அவர்களும்



2002 மே 10] [டாக்டர் மு. தம்பிதுரை]

பேசும்போது, ஏதோ ஒருவரைக் குறிப்பிட்டுத்தான் இந்தச் சட்டம் வந்திருக்கிறது என்று பேசிக் கொண்டிருக்கின்றார்கள். அதோடு பேசும்போது என்ன சொல்கிறார் என்றால், ஒருவருக்கு ஒரு பதவி என்பதுதான் அனைவரும், எல்லாக் கட்சிகளும் சொல்வது என்றும் சொல்கின்றார்கள். ஆகவே, முந்தைய தேர்தலில் பல பேர், பல பதவிகளை, பல கட்சிகளில் வகித்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால், இந்த முறை ஏன் அந்த நிலைமை ஏற்பட்டது? மற்ற கட்சிகளாக இருக்கட்டும், எங்களுடைய கட்சியாக இருக்கட்டும், மற்றவர்களுக்கு ஒரு பதவி என்று இருக்கும்போது, தி.மு.க. கட்சியில் இருக்கின்ற மாண்புமிகு ஸ்டாலின் அவர்களுக்கு மட்டும் ஏன் இரண்டு பதவிகள் தரப்பட்டன? ஏதோ ஒரு பதவிதான் இருக்க வேண்டும் என்று, அவர்களிடம் பல சட்டமன்ற உறுப்பினர்கள்கூட இருக்கும்போதும், மற்ற கட்சிகளிலும் இருக்கும்போதும், அங்கு அவருக்கு மட்டும் ஏன் கொடுத்தார்கள்? ஆகவே, இதற்கு ஒரு சட்டம் கொண்டு வருகிறோம் என்றால், தவறு செய்தது யார்? ஆகவே, இந்தச் சட்டம்...(குறுக்கீடு) மக்கள் ஓட்டுப் போட்டால்கூட கட்சிகள்தான் நிறுத்தி வைக்கின்றார்கள். ஒவ்வொரு கட்சியிலும் ஒரு பதவியில் இருக்கும்போது, இன்னொரு பதவியைத் தந்திருக்கக்கூடாது. நீங்கள் அந்த இடத்தைத் தந்ததன் காரணமாகத்தான், ஒருவருக்கு அந்தக் கட்சியிலே சலுகை தந்ததன் காரணமாகத்தான் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எங்களுக்கு ஒன்றும் அவருக்குப் பதவி கூடாது என்பது கிடையாது.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் தம்பிதுரை அவர்கள் ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள், யார் செய்த தவறு என்று. நான் செய்த தவறு என்பதை ஒப்புக்கொள்கிறேன்.(குறுக்கீடு)

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மணி, ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ஏற்கெனவே நான் மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் பேசுகிறபோது கூறியதை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் அவையிலே கூறியதைத் தவறான கண்ணோட்டத்தோடு, பொருள்படும்படி, மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் கூறுகிறார் என்றே நான் கருதுகிறேன். இந்த அரசினுடைய, எங்கள் இயக்கத்தினுடைய ஒரு கொள்கை முடிவு; ஒருவருக்கு ஒரு பதவிதான் இருக்க வேண்டுமென்ற கொள்கை முடிவு இருந்த காரணத்தினால்தான், எங்கள் எம்.எல்.ஏ.க்கள் எந்த ஒரு பொறுப்பிலும் உள்ளாட்சித் தேர்தலிலே நிறுத்தி வைக்கப்படவில்லை என்பதை அவை அறிய வேண்டும் என்பதற்காக

[திரு. சி. பொன்னையன்] [2002 மே 10

நான் சொல்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே எடுத்த கொள்கை முடிவை நடைமுறைப்படுத்துகிறபோது, ஏதோ சென்னை மாநகராட்சிக்கு மட்டும்தான் இதைக் கொண்டுவர வேண்டுமென்ற நோக்கத்தோடு எந்தக் காலத்திலும் அப்படிப்பட்ட ஒரு கொள்கை முடிவு எடுக்கவில்லை. அப்படிப்பட்ட உணர்வோடும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அவையிலே இதைக் கூறவில்லை.

பிற்பகல் 5-25

மாறாக, இப்படி ஒரு கொள்கை முடிவு நடைமுறைக்கு வருகிறபோது, ஒரு சட்டமுன்வடிவு கொண்டு வருகிறபோது, அது தமிழகத்திலே இருக்கின்ற 6 மாநகராட்சிகளுக்கும் பொருந்தும். அனைத்து முனிசிபாலிட்டிகளுக்கும் பொருந்தும். அனைத்துப் பஞ்சாயத்து யூனியன்களுக்கும் பொருந்தும் என்ற முறையிலே, அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் இது பொருந்தும் என்ற முறையிலே இப்படிப்பட்ட ஒரு அணுகுமுறை, ஒருவருக்கு ஒரு பதவி என்கிற அணுகுமுறை வரவேண்டுமென்ற நோக்கத்தோடுதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படிப்பட்ட ஒரு சட்டமுன்வடிவு வருகிறபோது, அதிலே எதிர்க்கட்சியினுடைய உறுப்பினர் மாண்புமிகு ஸ்டாலின் அவர்களுக்கு இரண்டு பதவிகள் இருக்கிற காரணத்தால், பொதுவாக, பொது நோக்கோடு கொண்டு வரப்படும் இந்தச் சட்டமுன்வடிவுக்கு அவரும் உட்படக்கூடிய சூழல் வரும் என்ற அந்தப் பொது நோக்கோடுதான் கூறினாரே ஒழிய, திரு. ஸ்டாலின் அவர்களுக்கு எதிராக இந்தச் சட்டமுன்வடிவு கொண்டுவரப்பட்டது என்பது தவறு. பொது நோக்கோடு, அனைவருக்கும் பொதுவாக, அனைத்து மாநகராட்சிகளுக்கும், உள்ளாட்சி அமைப்புகளுக்கும் பொதுவாகத்தான் இந்தச் சட்டமுன்வடிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதனை அவைக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவருடைய கட்சியில் ஒருவருக்கு ஒரு பதவிதான். இதுதான் principle அதை follow பண்ணுகிறார். உங்களுடைய கட்சியில் தாமரைக்கனி இருந்தபோது, எம்.எல்.ஏ.வாக நிறுத்தி வைத்து (Interruption) No. No. அப்புறம் சேர்மனாக நிற்க வைத்தீர்களே? அப்போது எங்கே போயிற்று? போன வருடம் ஒரு கொள்கை, இந்த வருடம் ஒரு கொள்கையா? (குறுக்கீடு) அதெல்லாம் இல்லை. ஒரு கொள்கையில் ஒரு நியாயம், if there is any law, we are ready to obey.



2002 மே 10]

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கூறியது, இந்த ஆட்சி, மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய இந்த ஆட்சியினுடைய கொள்கை என்று சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேராசிரியர் அவர்கள்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் அரசாங்கம் ஒரு கொள்கையை, உள்ளபடியே ஏற்கெனவே அவர்கள் மேற்கொண்ட கொள்கையாகவும் இருக்கலாம், புதிதாகவும் ஒரு கொள்கையைக் கொண்டு வரலாம். அது அவர்களுடைய உரிமை. எந்தக் கொள்கையையும் ஓர் அவையிலே நிறைவேற்றுகிறபோது prospective—எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்துவதற்காகத்தான் கொண்டு வரவேண்டுமே தவிர, ஏற்கெனவே உள்ள சட்டத்தின்படி, முறைப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைப் பதவி இழக்கச் செய்வதற்கு இந்தக் கொள்கையைப் பயன்படுத்துவது முறையல்ல என்பது என்னுடைய தாழ்மையான கருத்து.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர்கூடச் சொன்னார்கள், ஒரு கட்சியிலே ஒருவருக்கு ஒரு பதவி என்பது—பல்வேறு கட்சிகளிலே பின்பற்றப்படுவதாகவும், அதே நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் மரியாதைக்குரிய மேயர் அவர்களுக்கு மாத்திரம், ஸ்டாலின் அவர்களுக்கு மாத்திரம் கொடுத்ததாகச் சொன்னார்கள். அப்படியல்ல. கடந்த 5 ஆண்டு காலத்திலே நானும் இந்தச் சட்டப் பேரவையில் இருந்தேன். நானும், நம்முடைய அமைச்சர் அவர்கள் சார்ந்து இருக்கக்கூடிய என்னுடைய தருமபுரி மாவட்டத்திலேகூட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே ஒன்றியத் தலைவர்களும், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்களும் இருந்தார்கள். அவர்களே சட்டமன்ற உறுப்பினர்களாகவும் இருந்தார்கள், திராவிட முன்னேற்றக் கழகம் சார்பிலே. ஆகவே, அது ஏதோ ஸ்டாலின் அவர்களுக்காகக் கொண்டு வந்ததாக மாத்திரமல்ல. அவருக்கு மட்டும் இந்தப் பொறுப்பு; பதவிகள் வழங்கப்பட்டதாக நாம் எடுத்துக்கொள்வது தவறான ஒன்று ஆகும். ஆகவே, அப்படிப் பரவலாக நான்கூடக் காலையிலே தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியிலே, காங்கிரஸ் கட்சியிலே கேட்டேன். அவர்களும் எங்களிடம் கூட இனி வரக்கூடிய காலங்களில் ஒருவருக்கு ஒரு பதவி என்று சொன்னார்கள்.

ஆகவே இப்படி, கட்சிகளில் அவரவர்கள் வகுத்துக் கொள்வது அவர்கள் உரிமை. மற்றொரு கட்சியிலே நாம் தலையிடுவது என்பது முறையாக

[திரு. ஜி.கே. மணி] [2002 மே 10

இருக்காது என்ற அந்த அடிப்படையிலேதான் இதைச் சொல்லிக்கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். மரியாதைக்குரிய மாண்புமிகு ஸ்டாலின் அவர்களுக்காகக் கொண்டு வரவில்லை. உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒட்டுமொத்தமாகக் கொண்டு வந்தது என்று சொன்னார்கள். அப்படி ஒட்டுமொத்தமாகக் கொண்டு வருவதாகக் கருதுவோம் என்று சொன்னால், இது எப்போது கொண்டு வந்திருக்கப்பட வேண்டும்? உள்ளாட்சித் தேர்தல் நடத்தப்படுவதற்கு முன்பு இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்து, இதன் அடிப்படையிலே தேர்தல் நடத்துகிறோம்; யாரும், நாடாளுமன்ற உறுப்பினர்களாக, சட்டமன்ற உறுப்பினர்களாக இருப்பவர்கள் உள்ளாட்சி அமைப்புகளிலே போட்டியிடக் கூடாது என்று கொண்டு வந்து இருந்தால், அது பொருத்தமுடையதாக இருக்கும். அதுவும் இப்போதுகூட நீங்கள் கொண்டுவருவதாகச் சொன்னால், இந்தச் சட்டத்திருத்தம் என்பது, இனி வரக்கூடிய உள்ளாட்சித் தேர்தல்களில் அமலாக்கப்படும், பின்பற்றப்படும் அப்போது வைத்துக் கொள்ளலாம் என்று சொன்னால், அதுவும் ஏற்புடையதாக இருக்கும். ஆகவே, சட்டமன்றத் தேர்தலுக்குப் பிறகு, உள்ளாட்சித் தேர்தலையும் நீங்களே நடத்திவிட்டு, இதுகாறும் பணியாற்றிவிட்டு; இப்போது இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்ததுதான் உள்நோக்கம் கொண்டதாக இருக்கிறது என்பதை மீண்டும் இங்கே நான் சொல்லிக்கொள்கிறேன்.

இந்தச் சட்டத் திருத்தத்திலே நான் மீண்டும், மீண்டும் வலியுறுத்த விரும்புவது என்னவென்றால், இந்தச் சட்டத் திருத்தத்தின் அடிப்படையில் இப்போது தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அப்படியே நீடிக்கலாம். இனி வரக்கூடிய தேர்தல்களில், உள்ளாட்சித் தேர்தல்களிலே இதைப் பின்பற்றுவது பொருத்தமுடையதாக இருக்குமென்று அதை வலியுறுத்தி, ஒருவருக்கு ஒரு பதவி என்று கொண்டு வந்திருக்கக்கூடிய இந்தச் சட்டத்தைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே கடுமையாக எதிர்க்கிறேன். வன்மையாக எதிர்க்கிறேன் என்பதை இங்கே நான் சொல்லிக்கொள்கிறேன்.

பிற்பகல் *5-30*

அதற்கு அடுத்தது, மேயர் பதவியிலே இருக்கக்கூடியவர்கள், எந்த மாநகராட்சி மேயராக இருந்தாலும்கூட, அந்த மேயர், பதவியிலே இருக்கின்ற நேரத்திலே, மேல் அதிகாரிகளுக்கோ அல்லது இங்கே முதலமைச்சருக்கோ, மற்ற அமைச்சர்களுக்கோ, அரசு அலுவலர்களுக்கோ



2002 மே 10] [திரு. ஜி.கே. மணி]

அல்லது மத்திய அரசுக்கோ கடிதத் தொடர்பு போன்ற எந்த ஆவணங்களாக இருந்தாலும், எல்லாவற்றையும் தயாரிப்பதற்கு, கடிதம் எழுதுவதற்கு கமிஷனருக்கு அதிகாரம் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இப்போது நம்மைப் பொறுத்தவரையிலே நாம் பேசிக்கொள்வோம் என்று சொன்னால், பஞ்சாயத்து ராஜ் சட்டப்படி உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கூடுதலான அதிகாரம் வேண்டும் என்று எல்லோரும் சொல்லிக் கொண்டிருக்கிறோம். உள்ளாட்சி அமைப்பிலே தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் எல்லாம் சங்கம் வைத்திருக்கிறார்கள். அவர்கள் கேட்பது, உள்ளாட்சி அமைப்புகள் தன்னாட்சி பெற்ற நிறுவனங்களாக, அமைப்புகளாக இருக்க வேண்டும்; எங்களுக்குக் கூடுதலான அதிகாரம் வேண்டும்; இப்போது அதிகாரங்களே இல்லை; நிதியாதாரங்களே இல்லை என்று எல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், ஆந்திரத்திலே, கர்நாடகத்திலே, கேரளாவிலே பார்ப்போம் என்று சொன்னால், தமிழ்நாட்டைவிட பிற மாநிலங்களிலே, தென்னாட்டிலே இருக்கக்கூடிய மாநிலங்களிலே, வட மாநிலங்களிலே கூடுதலான அதிகாரம் இருக்கிறது. இப்படிக் கூடுதலான அதிகாரங்களைக் கேட்டுக்கொண்டிருக்கக்கூடிய இந்த நேரத்திலே, மேயருக்கு இருக்கக்கூடிய அந்த அதிகாரத்தைப் பறிப்பது என்பது பொருத்தமுடையதாக இருக்காது. அந்த அதிகாரத்தைப் பறித்துவிட்டால், மேயர் பதவியே தேவையில்லை. பழைய மாதிரியே ஸ்பெஷல் ஆபீசர்-- அந்த அலுவலர்களைக் கொண்டே நிர்வாகத்தை நடத்திக்கொள்ளலாம். தேர்தலே தேவையில்லை. எதற்காகத் தேர்தலை நடத்திக்கொண்டு இருக்க வேண்டும்? ஆகவே, இனி வரக்கூடிய காலகட்டங்களிலே இது எல்லோரையும் பாதிக்கக்கூடிய அம்சமாக இருக்கும் என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுமாத்திரமல்ல, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மிகப் பெரிய பொறுப்பிலே இருந்துகொண்டிருக்கிறார்கள். நான் குறை சொல்வதாக அல்ல. முதலமைச்சர் அவர்கள் இங்கே பொறுப்பிலே இருந்துகொண்டு, முதலமைச்சரை விட்டுவிட்டு, இந்த நாட்டினுடைய தலைமைச் செயலாளராக இருக்கக்கூடியவர், தமிழ்நாட்டைப் பற்றி, நிதியாதாரங்களைப் பற்றிப் பல்வேறு கோரிக்கைகளை வைத்து, மத்திய அரசுக்குக் கடிதம் எழுதுகிறார் என்று சொன்னால், அது எந்த வகையிலே ஏற்புடையதாக இருக்கும்? நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். நிதியமைச்சர் அவர்களை விட்டுவிட்டு, நிதித் துறைச் செயலாளரே மற்ற ஆவணங்களைத் தயாரிப்பது, கடிதம் எழுதுவது, தொடர்பு

வைத்துக்கொள்வது, நிதி கேட்பது போன்ற அதிகாரத்தை அந்த அதிகாரியே எடுத்துக்கொள்ளலாம், பயன்படுத்திக்கொள்ளலாம் என்று சொன்னால்...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் தவறான தகவலை அவைக்குச் சொல்கிறார்கள். நடைமுறை; பாரதப் பிரதமருக்கு நிதி குறித்து ஓர் அஞ்சல் எழுதவேண்டும் என்றால், மாண்புமிகு முதலமைச்சர்தான் எழுதுவார்; முதலமைச்சர்தான் எழுதுகிறார். மைய நிதியமைச்சருக்குக்கூட அஞ்சல் எழுதுகிறபோது, மாண்புமிகு முதலமைச்சர்தான் எழுதுகிறார். ஆனால், நிதித் துறையிலே இருக்கிற ஒரு செயலாளருக்கு, அதிகாரிகளுக்கு எழுதுகிறபோது, தலைமைச் செயலாளர் அல்லது நிதித் துறைச் செயலாளர்தான் எழுதுவார். இதுதான் Business Rules. இதுதான் நடைமுறை.

**திரு. ஜி.கே. மணி:** இந்த நடைமுறையை நான் ஏற்றுக்கொள்கிறேன். இந்த நடைமுறை இப்படி இருக்கின்ற நேரத்திலே, மேயராகப் பொறுப்பிலே இருக்கக்கூடியவர், முதலமைச்சர் அவர்களுக்கோ, நிதியமைச்சருக்கோ, பிரதமருக்கோ, மற்ற அமைச்சர்களுக்கோ, மத்திய அரசுக்கோ கடிதம் எழுதுவது கூடாது; கமிஷனர்தான் எழுதவேண்டும் என்று சொல்வது, அதிகாரத்தைப் பறிக்கக்கூடியதாக இருக்கும் என்பதைத்தான் நான் இங்கே சுட்டிக்காட்டுகிறேன். (குறுக்கீடு) இந்தச் சட்டத்திலே அப்படித்தானே வருகிறது. ஆகவே, அந்த வகையிலே (குறுக்கீடு) இந்தச் சட்டத்திலே அப்படித்தானே வருகிறது? ஆகவே, அந்த வகையிலே அப்படி மேயருக்கு இருக்கக்கூடிய அதிகாரத்தை கமிஷனருக்குக் கொடுப்பது எந்த வகையிலும் ஏற்புடையதாக இருக்காது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டும் என்று சொன்னால், அது பேரூராட்சித் தலைவர், பேரூராட்சி உறுப்பினர்கள், நகராட்சி மன்றத் தலைவர், ஊராட்சி உறுப்பினர்கள், மாநகராட்சி மேயர், மாநகராட்சி உறுப்பினர்கள் எல்லாம், அரசாங்கத்தினுடைய அனுமதியைப் பெற்றுத்தான் செல்ல வேண்டும் என்ற ஒரு நிலை உருவாகும் என்று சொன்னால், இது எந்த வகையிலே பொருத்தமாக இருக்கும்?

உள்ளாட்சி மன்றத்திலே வெற்றி பெற்றவர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகளாக இருக்கக்கூடியவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்கின்ற நேரத்தில், அரசுக்குத் தெரிவிக்கலாம்; தகவல் கொடுக்கலாம் என்று





சொன்னாலும்கூட, அதை ஏற்றுக்கொள்ளலாம். அப்படி அனுமதி பெற்றுத்தான் செல்ல வேண்டும் என்று சொன்னால், இப்போது தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலே, எவ்வளவோ கருத்து மாறுபாடுகள் அரசியல் ரீதியாக இருக்கின்றன. பிற மாநிலங்களில், வட மாநிலங்களில் அல்லது மத்திய அரசிலே இருக்கக்கூடிய அரசியல் கட்சிகளைப் போல நம்முடைய தமிழ்நாட்டிலே இல்லை. இங்கே அரசியல் சூழ்நிலைகள் மாறுபட்டு இருக்கின்றன. இந்த மாறுபட்ட சூழ்நிலையிலே, அவசியத் தேவையின் அடிப்படையிலே, வெளிநாட்டிலே இருக்கக்கூடிய ஒருவர், அவருடைய உறவினர் இறந்துவிடுகிறார். அல்லது அவசரத் தேவையாகச் செல்ல வேண்டியிருக்கிறது, அந்த நேரத்திலே அரசாங்கத்தினுடைய அனுமதியைப் பெற்றுத்தான் அவர் வெளிநாடு செல்ல வேண்டுமென்று சொன்னால், அரசியல் சூழ்நிலை காரணமாக அனுமதி மறுக்கப்படுகிறது என்றால், அவர் எந்த வகையிலே வெளிநாடு செல்ல முடியும்?

*பிற்பகல் 5-35*

ஆகவே, இப்படிப்பட்ட சட்டத் திருத்தம் என்பது, சட்டமுன்வடிவு என்பது, நிச்சயமாக ஏற்புடையதாக இருக்காது. அனுமதி இல்லாமல் செல்லலாம், அரசுக்குத் தெரிவிக்கலாம் என்று சொன்னாலும்கூட ஏற்புடையதாக இருக்கும். அந்த வகையிலே இப்போதுகூட உதாரணத்துக்குச் சொல்லுகிறேன். எனக்குக்கூட, நான் வெளிநாடு செல்வதற்காக விசா வைத்திருந்தேன். ஆனால், நான் எந்த ஒரு பெரிய தவறும் செய்யவில்லை. எங்கள் பகுதியிலே மூடிய ஒரு தொழிற்சாலையைத் திறக்க வேண்டுமென்று சொல்லி, தொழிலாளர்களோடு, அதிலே அண்ணா தி.மு.க. உட்பட, அண்ணா தி.மு.க தொழிற்--சங்கம், மற்ற எல்லாக் கட்சிகளுடைய தொழிற்சங்கங்கள் எல்லாம் சேர்ந்து போராடின. நானும் அந்தப் போராட்டத்திலே கலந்துகொண்டேன். அவ்வளவுதான். அந்தப் போராட்டத்தினுடைய வழக்கு நிலுவையில் இருக்கிற காரணத்தாலே, தொடர்ந்து பல ஆண்டுகளாக வழக்கு நிலுவையிலே இருக்கிறது என்ற காரணத்தாலே என்னுடைய விசா ரத்து செய்யப்படுகிறது, வேதனையோடு சொல்லுகிறேன். நான் ஒன்றும் வெளிநாட்டுக்குப் போக வேண்டும் என்ற அவசியம் இல்லை. இப்படி, சாதாரண ஒரு பிரச்சினைக்குக்கூட விசா ரத்து செய்யப்படுகிறது என்று சொல்கிற நிலையிலே, இந்த அரசாங்கத்தை ஏமாற்றிவிட்டு அல்லது தவறு செய்வதற்காக வெளிநாட்டுக்கு யாரும் செல்ல முடியாது. வெளிநாடு செல்வதற்கு எவ்வளவு நிபந்தனைகள் இருக்கின்றன என்பதை எல்லாம் நாம் நன்றாக அறிந்திருக்கிறோம். ஆகவே, இப்படிப்பட்ட

சூழ்நிலையில் இவ்வளவு நிபந்தனைகள் இருந்து, இவ்வளவு கண்டிஷன்களை எல்லாம் தாண்டி வெளிநாட்டுக்குச் செல்லக்கூடிய நிர்பந்தம் இருக்கிற நேரத்திலே அரசு அனுமதியைப் பெற்றுத்தான் வெளிநாடு செல்ல வேண்டும் என்ற ஒரு நிலை நிச்சயமாக உருவாகக் கூடாது. அரசுக்குத் தெரிவிக்கலாம் என்ற கருத்து இருந்தால்கூட, அதுவே ஏற்புடையதாக இருக்கும் என்ற அளவிலே பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே இந்தக் கருத்துகளைச் சொல்லிக் கொள்கிறேன். இன்னும் 2, 3 சட்ட முன்வடிவுகள் இருக்கின்றன. அவற்றையும் பற்றி இதிலே பேசலாமா, பிறகு பேசலாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உள்ளாட்சித் துறை அமைச்சரின் சட்டமுன்வடிவுகள் அனைத்திலும் ஒன்றாகத்தான் பேச வேண்டும்.

**திரு. ஜி.கே. மணி:** ஆகவே, அந்த அளவிலே பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் இந்தச் சட்டத் திருத்தத்தைக் கடுமையாக எதிர்க்கிறேன் என்ற கருத்தைச் சொல்லிக் கொள்கிறேன். இன்னொன்று, மாநகராட்சி அமைப்புகளிலே குடிநீர் பற்றிச் சொல்லியிருக்கிறீர்கள். சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன். குடிநீர் வடிகால் வாரியம், மாநகராட்சி, நகராட்சிப் பகுதிகளிலே, அந்த மாநகராட்சிக்குத் தெரியாமல், நகராட்சி மன்றத்திற்குத் தெரியாமல், அவர்களே ஆய்வு செய்யலாம்; திட்டங்களை நிறைவேற்றலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த மாநகராட்சியினுடைய தேவை, நகராட்சியினுடைய தேவை எல்லாம், அங்கே இருக்கக்கூடியவர்களுக்குத்தான் தெரியும். எந்த அளவிலே அவர்களுக்குக் குடிநீர்த் தேவை, எந்தெந்தப் பகுதிகளுக்குத் தேவை என்பதும், அவர்களுக்குத் தேவையான அந்தத் தேவை அவர்களுக்குத்தான் தெரியுமே தவிர, குடிநீர் வடிகால் வாரியத்திற்கு அப்படிப்பட்ட தேவை என்பது தெரியாது. ஆகவே, அங்கே இருக்கக்கூடிய உள்ளாட்சி அமைப்புகளைக் கலந்துதான் செய்ய வேண்டும், அதுதான் பொருத்தம் உடையதாக இருக்கும். அப்படி இந்தச் சட்டத் திருத்தத்தின் வாயிலாக உள்ளாட்சி மன்றத்தினுடைய, நகராட்சி, மாநகராட்சியினுடைய அதிகாரத்தைப் பறிப்பதாக இருக்கும் என்ற அந்தக் கருத்தையும் சொல்லிக்கொள்கிறேன்.

அதேபோல இன்னொன்று. மாநகராட்சிப் பகுதிகளில் அனுமதி இல்லாமல் கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அந்தக் கட்டடங்களை இப்போது இடிக்கவும் முடியாது. ஆகவே, இந்தச் சூழ்நிலையிலே அவர்களுக்கு ஒப்புதல் அளிக்க வேண்டும். ஒப்புதல் அளிப்பதற்காகக் கட்டணம் கூடுதலாக விதிப்பது என்பதும்கூடப் பொருத்தமாக இருக்காது. ஆகவே, கட்டணத்தைக் குறைத்து, கூடுதலாகக் கால அவகாசம் கொடுத்து,





அதை நன்கு முறைப்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நிலத்தடி நீர் சம்பந்தமாக ஒன்று சொல்லப்பட்டிருக்கிறது. மாநகராட்சிப் பகுதி, புறநகர்ப் பகுதி, மாநகராட்சிப் பகுதிகளிலே, புறநகர்ப் பகுதிகளிலே, தமிழ்நாடு முழுவதுமாக இருந்தாலும் வைத்துக்கொள்ளலாம், நிலத்தடி நீரைச் சேமிப்பதற்காகச் சொல்லியிருக்கிறீர்கள். அதை வரவேற்கிறோம். எந்தப் பகுதியாக இருந்தாலும்கூட, நிலத்தடி நீரைச் சேகரிப்பதற்குப் பல்வேறு முயற்சிகளை மேற்கொள்ளலாம். ஆனால், நீர் ஆதாரங்களை நாம் எடுக்கின்ற நேரத்திலே, உதாரணத்திற்கு, விவசாயிகள் எடுக்கிறார்கள் புறநகர்ப் பகுதிகளிலே. அந்த விவசாயிக்கு, 'நீ 200 அடிதான் போர்-வெல் போடவேண்டும், 100 அடிதான் கிணறு வெட்ட வேண்டும், அதற்கு மேல் தண்ணீர் எடுக்கக்கூடாது' என்று சொல்லி நிபந்தனை விதிப்பது என்று சொன்னால், விவசாயமே செய்ய முடியாது. விவசாயிகள் வாழ்வு இன்னும் கேள்விக்குறி ஆகிவிடும். ஆகவே, இந்தச் சட்டத்திலும் திருத்தங்கள் செய்ய வேண்டியிருக்கிறது. அதையும் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டு, நான் முன்பு சொன்ன 3 சட்டமுன்வடிவுகள் (குறுக்கீடு) 7 சட்டமுன்வடிவுகளில், முதலாவது 3 சட்டமுன்வடிவுகள், 15/2002, 13/2002, 6/2002, இவைகளெல்லாம் உள்ளாட்சி அமைப்புகளிலே மேயர் பதவியைப் பறிக்கக்கூடிய அந்தச் சட்டத் திருத்தங்கள், கடுமையான கண்டனத்திற்கு உரியவை. பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வன்மையாகக் கண்டித்து, எதிர்த்து அமைகிறேன்.

*பிற்பகல் 5-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**திரு. அ. அன்வர் ராஜா:** பேரவைத் தலைவர் அவர்களே,........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அன்வர் ராஜா, என்ன? (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

**திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருவருக்கு ஒரு பதவி என்பதை நாங்கள் வரவேற்கிறோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் பேராசிரியர் அவர்கள் இப்போது சொன்னார்கள். அவர்களுடைய தலைவர், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய

தலைவர் திரு. கருணாநிதி அவர்கள்கூட இந்தச் சட்டமுன்வடிவை அறிமுகப்படுத்தியதற்குப் பிறகு, ஓர் அறிக்கையிலே அதே கருத்தை ஒப்புக்கொண்டார்கள். இங்கே இருக்கிற எல்லாத் தலைவர்களும் அதையே ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அதிலே எந்த மாற்றுக் கருத்தும் யாருக்கும் இல்லை. இப்போது பேராசிரியர் அவர்கள் பேசுகிறபோது இன்னொரு கருத்தையும் சொன்னார்கள். இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்து, வருகிற தேர்தலில் இதை நடைமுறைப்படுத்தலாம் என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள்.

நான் ஒரு சம்பவத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். 1986 ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றத் தேர்தல் நடந்தது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் முதலமைச்சராக இருந்தார்கள். ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் பதவி 3 ஆண்டுகளுக்கு என்று சட்டத் திருத்தம் கொண்டு வந்து நடத்தினார்கள். அப்போது நானெல்லாம் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவராகப் போட்டியிட்டேன். இப்போது இருக்கின்ற உள்ளாட்சித் துறை அமைச்சர்கூட அப்போது ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவராக இருந்தார். 3 ஆண்டுகளுக்கு என்று சட்டத் திருத்தம் கொண்டு வந்து தேர்தல் நடத்தினார்கள். நாங்கள் போட்டியிட்டு வெற்றி பெற்றோம். 3 ஆண்டுகளில் எங்களுடைய பதவி, 1989 பிப்ரவரியோடு முடிந்தது. அப்போது மீண்டும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்துவிட்டது. வந்து நீங்கள் ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்தீர்கள். 3 ஆண்டை 5 ஆண்டு என்று மாற்றிச் சட்டத் திருத்தம் கொண்டு வந்தீர்கள். 3 ஆண்டுகள் கழித்து, அந்தப் பதவிக் காலம் முடிந்ததற்குப் பிறகு நீங்கள் உடனடியாகத் தேர்தலை அறிவிக்கவில்லை. எக்ஸ்டென்ஷன் செய்து, இன்னும் இரண்டு ஆண்டுகளுக்குப் பதவியிலே இவர்களே நீடிப்பார்கள் என்று நீங்கள் எக்ஸ்டென்ஷன் செய்து கொடுத்தீர்களா, இல்லையா என்பதை அருள்கூர்ந்து நான் கேட்க விரும்புகிறேன். அப்படி எக்ஸ்டென்ஷன் செய்ததன் காரணமாக—ஏன் அப்படிக் கொடுக்கப்பட்டது என்றால் (குறுக்கீடு) ஒரேயொரு விஷயத்தைச் சொல்லிவிடுகிறேன். ஏன் அப்படிக் கொடுக்கப்பட்டது என்றால், அப்போது வெற்றி பெற்ற ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்களில் அதிகமானவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்போது வெற்றி பெற்ற உள்ளாட்சி மன்றத்தினுடைய, நகராட்சி மன்றத்தினுடைய தலைவர்கள் ஏறத்தாழ 90 பேர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அவர்களுக்கு அப்போது சட்டத்தின் வாயிலாகப் பதவி நீட்டிப்பு வழங்கப்பட்டது. அப்போது நீங்கள் சொன்ன அதே



நடைமுறையைத்தான் இப்போது நம்முடைய அரசாங்கம் பின்பற்றுகிறது. டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பின்பற்றுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுருக்கமாகத்தான் சொல்ல விரும்புகிறேன். அப்போது தேர்தல் நடத்தக்கூடிய வாய்ப்பு இல்லாத காரணத்தினால், அதிகாரிகளிடத்திலே ஒப்படைக்கக் கூடாது என்பதற்காக நீட்டிப்பு வழங்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்கள். (குறுக்கீடு)

**திரு. அ. அன்வர் ராஜா:** தலைவர் அவர்களே, அதைத்தான் நானும் தெரிவிக்க விரும்புகிறேன். அதாவது, அப்போது நீங்கள் 5 ஆண்டுகள் என்று சட்டத் திருத்தம் கொண்டு வருகிறபோது, உடனே தேர்தலை நடத்தியிருக்க வேண்டும். இல்லை என்றால், ஸ்பெஷல் ஆபீசரிடம் கொடுத்து, 6 மாதங்களுக்குப் பிறகு, 5 ஆண்டுகளுக்குத் தேர்தல் நடத்தியிருக்க வேண்டும். ஆனால் 3 ஆண்டுகளுக்கென்று தேர்ந்தெடுக்கப்பட்ட எங்களுக்கு, 5 ஆண்டுகளுக்கு என்று எங்களுக்கு நீட்டிப்புக் கொடுக்க உங்களால் முடிந்தபோது, இப்போது எங்களால் ஏன் இதைச் செய்ய முடியாது என்பதுதான் என்னுடைய வாதம். (மேசையைத் தட்டும் ஒலி)

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளும் கட்சியினால் செய்ய முடியாது என்பது வாதம் அல்ல. செய்யக்கூடாது என்பது வேண்டுகோள். இன்னொன்று, பாதிக்கப்படக்கூடாது. எந்தச் சட்டத்தாலேயும். நீட்டிப்புத் தருகிறபோது யாரும் பாதிக்கப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராஜு அவர்கள். (குறுக்கீடு)

**திரு. அ. அன்வர் ராஜா:** தலைவர் அவர்களே, நீட்டிப்புத் தருகிறபோது பாதிக்கப்படவில்லை என்கிறார்கள். உண்மையிலேயே நான் தெரிவிக்க விரும்புகிறேன். அப்போது நீங்கள் தேர்தல் வைத்திருப்பீர்களேயானால், நிச்சயமாக ஒரு 10 சதவீதம்கூட திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்றிருக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) அண்ணா தி.மு.க.தான் வெற்றி பெற்றிருக்கும் என்ற அந்தச் சூழ்நிலை அப்போதிருந்த காரணத்தினால்தான், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் அதிகமாக உள்ளாட்சி மன்றங்களிலே தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த காரணத்தினால்தான், ஆளும் கட்சியாகவும் நீங்களே வந்துவிட்ட

காரணத்தினால், நீங்களே உங்களுக்குச் சாதகமாக, அவர்கள் தொடர்ந்து நீடிக்க வேண்டுமென்று நீட்டிப்புக் கொடுத்தீர்கள் என்பதுதான் உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு.

***திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட சட்டமுன்வடிவு எண்கள் 6,10,13,15,17,24 மற்றும் 31 ஆகிய தலைப்புகளில் எனக்குப் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு முதற்கண் நன்றியைக் கூறிக்கொண்டு, என்னுடைய சில கருத்துகளை இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தேசப் பிதா அண்ணல் காந்திஜி, 'கிராம இராஜ்ஜியம், இராம இராஜ்ஜியம்' 'மக்களாட்சி, மகேசன் ஆட்சி', மக்களாட்சி மக்களுக்கே கொடுக்கப்பட வேண்டுமென்று சொல்லியிருந்தார்கள். ஸ்ரீசத்திய ஹரிச்சந்திரா நாடகம் பார்த்த பிறகுதான், 'உண்மையே கடவுள்' என்று நான் அறிந்தேன். ஆக, அந்த உண்மையின் பெயரால் மக்களுக்கு, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, 35 விழுக்காட்டுக்குக் கீழே உள்ள ஏழை, எளிய மக்களுக்கு அரசினுடைய எந்தத் திட்டமானாலும் போய்ச் சேர வேண்டும் என்ற ஓர் அறிவுரையைத் தந்திருக்கிறார்கள். அது எந்தத் திட்டமானாலும் ஏழை, எளிய, அடிமட்ட மக்களுக்குச் சேரவேண்டும் என்ற ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தின் மூலமாக, அறிஞர் ஜான் ரஸ்கின் அவர்கள் எழுதிய ``Unto this last" என்ற புத்தகத்திலே அந்த ஏழை, எளிய மக்களுக்கு எல்லாம் அந்தத் திட்டங்கள் எல்லாம் சேரும்போதுதான் ஒரு அரசு நல்ல அரசா அல்லது அரசு எப்படிப்பட்ட அரசாக இருக்கும் என்பதை மக்கள் சொல்வார்கள் என்று சொல்லியிருக்கிறார்.

பிற்பகல் 5-45

அன்புத் தலைவர் ராஜீவ் காந்தி அவர்கள் உயிருடன் இருக்கும்போது, சட்டத் திருத்தங்கள் 73, 74 என இரண்டு சட்டங்களைக் கொண்டு வந்தார்கள். Unfortunately those two were defeated by two votes. இரண்டு ஓட்டுகளால் அந்தச் சட்டத் திருத்தங்கள் இரண்டும் தோற்கடிக்கப்பட்டன. ஆனால், அவர்கள் அமரரான பிறகு இந்த இரண்டு சட்டங்களும் நிறைவேற்றப்பட்டன. பஞ்சாயத்துராஜ் திட்டம், நகர் பாலிகா திட்டம் என்ற நல்ல முக்கியமான திட்டங்கள் நாட்டிற்கு அளிக்கப்பட்டுள்ளன. மக்கள் பிரதிநிதிகள் முக்கியத்துவம் அடைகிறார்கள். அவர்களின்



தீர்மானத்தையே அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும். அவர்கள் என்னென்ன தீர்மானங்கள் எடுக்கிறார்களோ, அந்தத் தீர்மானங்கள்தான் செயல்பட வேண்டும். அந்த வகையிலே இன்றையதினம் கர்நாடக மாநிலம் இந்தியாவிலேயே முன்னோடியாக இருப்பதை நாம் எல்லோரும் நன்கு அறிகிறோம். அங்கு இருக்கும் ஒரு மாவட்டத்தில் உள்ள ஜில்லா பரிஷத் சேர்மனுக்குள்ள அதிகாரம் இந்தியாவிலுள்ள மற்ற எந்தவொரு ஜில்லாவினுடைய ஜில்லா பரிஷத் சேர்மனுக்கும் கிடையாது. அங்குள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஜில்லா பரிஷத் சேர்மன் அவர்களுக்கு Ex-officio Secretary என்ற வகையில்தான் இருப்பார்கள். பல கோடிக்கணக்கான ரூபாய்களுக்குக் கையெழுத்துப் போடுவது அந்த ஜில்லா பரிஷத் சேர்மன் அவர்கள்தான். இரண்டாவதாக இப்பொழுது கேரள மாநிலம் வந்து கொண்டிருக்கிறது. மூன்றாவது எடுத்துக்கொண்டால், மத்தியப்பிரதேசம். மாண்புமிகு முதல்வர் திக் விஜய் சிங் அவர்கள் கிராமச் சபைக் கூட்டத்திற்கே சென்று, அந்தக் கூட்டத்திலே உள்ள அந்த ஊராட்சித் தலைவர்களைப் பார்த்து, அங்குள்ள கவுன்சிலர்களைப் பார்த்து, உங்களுடைய திட்டம் எவ்வளவு என்று கேட்கிறார்கள். அந்தத் திட்டம் எவ்வளவு என்று தெரிந்த பிறகு, அங்கே அந்தக் கிராமச் சபைக் கூட்டத்திலே காசோலை கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் ஏராளமான சட்டமுன்வடிவுகள் இருக்கின்றன. உங்களுடைய கருத்தை சட்டமுன்வடிவின்மீது தெரிவிக்க வேண்டும்.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகையால், அந்த அளவிலே அதிகாரங்கள் எல்லாம் தேர்ந்தெடுக்கப்பட்ட அவரவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்ற முறையிலே, இன்றையதினம் கொண்டு வந்த சட்டங்களையெல்லாம் பார்த்தால், நாம் வேறு எங்கோ செல்வதாகத் தெரிகிறது. ஆகவே, தயவுசெய்து அந்த அதிகாரங்கள் எல்லாம், அந்த மக்களுக்குக் கண்டிப்பாகப் போய்ச் சேர வேண்டும் என்றால், அந்த மக்கள் ஆட்சி, பேரூராட்சியாக இருந்தாலும் சரி, ஊராட்சியாக இருந்தாலும் சரி, ஊராட்சி மன்றங்களாக இருந்தாலும் சரி, அது எந்தவொரு நிர்வாகமாக இருந்தாலும், அவர்களுக்கு அந்த அதிகாரங்கள் இருக்க வேண்டும். அவர்கள் என்ன முடிவு எடுக்கிறார்களோ, அந்த முடிவை ஏற்றுக்கொண்டு, அவர்களுக்கு நாம் உதவி செய்யலாமேயொழிய, அவர்களுக்கு எந்தவிதமான உபத்திரவமும் செய்யக்கூடாது என்ற ஒரு கருத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், வெளிநாட்டிற்கு இவர்கள் எல்லாம் செல்லும்போது அனுமதி வாங்கிச் செல்ல வேண்டும் என்பதைக் காட்டிலும், ஒரு அறிவிப்புக் கொடுத்துவிட்டுச் செல்லலாம் என்று மாற்றியமைத்துக்கொள்ளலாம். ஏன் என்றால், எதற்காகச் சொல்கிறேன் என்றால், தகவல் சொல்ல வேண்டும் என்றால், கண்டிப்பாகத் தவறு செய்யும் துணிவு யாருக்கும் வராது. ஆகவே, அதிகார துஷ்பிரயோகமோ, அதிகார அத்துமீறல்களோ இதன் மூலமாக வராது என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், நிலத்தடி நீரின் முக்கியத்துவத்தைப் பற்றி ஓரிரு வார்த்தைகள் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மழை நீர் வர, வர நமது நாட்டிலே குறைந்து கொண்டே வருகிறது. மழை நீரைச் சேகரிக்க வேண்டும். நிலத்தடி நீர் குறைவாக வந்து கொண்டிருக்கிறது. அதற்குரிய காரணங்களையெல்லாம் நாம் அறிந்து, தேவைப்படும்போது மட்டும், குடிநீரானாலும் சரி, அது எந்த நீராக இருந்தாலும் சரி, வீணாகச் செலவு செய்யாமல் மக்களுக்கு விழிப்புணர்ச்சியை முதலிலே கொண்டு வர வேண்டும். நிலத்தடி நீரை எப்படிச் சேகரிக்க வேண்டும் என்று விளம்பரம் மூலமாகவும், வானொலி மூலமாகவும், தொலைக்காட்சி மூலமாகவும் மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும்! அவர்கள் விருப்பம் போல நீரைப் பயன்படுத்திப் பழக்கப்பட்டுவிட்டார்கள். அந்தப் பழக்கத்தை மாற்றுவதற்காக, அவர்களுக்கு எல்லாம் நாம் சொல்ல வேண்டும். அதற்காகப் பல முகாம்கள் எல்லாம் போட்டு, நீரைச் சேமித்து வைத்தால்தான் வருங்காலத்திலே நிலத்தடி நீர் எப்போதும் இருக்கும் வகையில் விழிப்புணர்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

கிணறுகள் ஆழம் வரையறுக்கப்படுவது என்பதை நான் வரவேற்கிறேன். ஏன் என்றால், ஒவ்வொருவரும் அவரவருக்கு இஷ்டப்படி 50 அடி, 60 அடி, 70 அடி என்று இல்லாமல், ஒரே வகையிலே அந்தக் கிணறுகளை எல்லாம் பதிவு செய்து, பிறகு அந்தக் கிணறுகள் ஆழத்தை எல்லாம் இவ்வளவுதான் இருக்க வேண்டும் என்று சொன்னால், வருங்காலத்திலே மழை குறைவாக இருக்கும்போது, குடிநீருக்கு அதிக அளவிலே கஷ்டம் வரும் நிலைமை ஆகிவிடும். ஆகவே, இவற்றையெல்லாம் சரியாக ஒழுங்கு செய்தால் சரியாக இருக்கும் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 5-50)

மேலும், அதிகாரங்கள் என்று சொல்லும்போது, நமது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும் விளக்கம் சொன்னார்கள். அதிகாரிகள் கடிதம் எழுதும் போது யார்,





யாருக்கு என்று சொன்னாலும் அந்தப் பதவியைப் பொறுத்து எழுதலாம். ஆனால், அந்த எழுதும் அதிகாரங்கள் எல்லாம் கண்டிப்பாக, நாம் தேர்ந்தெடுத்த, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்குக் கண்டிப்பாக அந்த முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும். அதிகாரங்களைக் கண்டிப்பாக நிறுத்தக்கூடாது. அவர்களுக்கு அந்த அதிகாரம் கண்டிப்பாகத் தேவை. இதையெல்லாம் எதற்காகச் சொல்கிறேன் என்றால், இந்தச் சட்டமுன்வடிவு அடிமட்டத்திலுள்ள ஊராட்சிக் கவுன்சிலர் வரைக்கும் வந்துவிட்டது. ஆகவே, அவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தப் பிரதிநிதிகள், அவரவர்களுக்கு வேண்டியதை அவர்களுக்கு நாம் இங்கிருந்து செய்வதைக் காட்டிலும், அந்தந்தக் கிராமங்களில், அந்தந்த ஊராட்சிகளில், அந்தந்தப் பேரூராட்சிகளில், அந்த ஜில்லா பரிஷத்துகளில், அவர்களுக்கு என்னென்ன வேண்டும் என்பது அவர்களுக்கு நம்மைக்காட்டிலும் நன்றாகத் தெரியும். ஆகவே, இந்தச் சட்டத் திருத்த முன்வடிவுகளையெல்லாம் மீண்டும் பரிசீலனை செய்து, நல்ல வகையிலே நீங்கள் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டு, எனக்குப் பேச அனுமதி கொடுத்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு மீண்டும் நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக திரு. மகேந்திரன்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்டு இருக்கக்கூடிய 7 சட்டமுன்வடிவுகளில், குறிப்பாக, மாநகராட்சி மேயர், துணை மேயர், நகராட்சித் தலைவர், துணைத் தலைவர், ஊராட்சி ஒன்றியத்தினுடைய தலைவர், துணைத் தலைவர், மாவட்ட ஊராட்சி ஒன்றியத்தினுடைய தலைவர், துணைத் தலைவர் ஆகியோர்கள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்கக்கூடாது; ஏதாவது ஒரு பதவியிலே இருக்க வேண்டும் என்ற வகையில் சட்டமுன்வடிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரையில், ஒருவருக்கு ஒரு பதவி என்பதிலே மாறுபட்ட கருத்து என்பது கிடையாது. சட்டமன்றத் தேர்தல் கடந்த ஆண்டு மே மாதம் 10 ஆம் தேதி நடைபெற்றதற்குப் பின்பு, ஆளுநர் உரையின்மீதான விவாதம் மே மாதம் இறுதியிலே நடந்திருக்கிறது. அதற்குப் பின்பாக நிதிநிலை அறிக்கை மீதான விவாதம், இந்தப் பேரவையிலே கடந்த ஆண்டு நடந்து முடிந்திருக்கிறது. அதற்குப் பின்பாகத்தான் உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தல் தமிழ்நாட்டிலே நடத்தி முடிக்கப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டு

[திரு. கே. மகேந்திரன்] [2002 மே 10

நடைபெற்ற நிதிநிலை அறிக்கைக் கூட்டத் தொடரிலே இதுபோன்ற ஒரு சட்டமுன்வடிவு கொண்டு வரப்பட்டு இருக்கும் என்றால், நிச்சயமாக இந்தச் சட்டத்தினால் யாரும் பாதிக்கப்பட்டிருக்காத ஒரு நிலைமை ஏற்பட்டு இருக்கும். ஆனால், இந்தச் சட்டம் இன்றைக்கு அமலாக்கப்பட்டால், ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியதைப்போல, சென்னை மாநகரத்தினுடைய மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கக்கூடிய—அநேகமாகத் தமிழகத்தில் இருக்கக்கூடிய ஊராட்சி ஒன்றியங்கள், 6 மாநகராட்சிகள், 102 நகராட்சிகள் — இந்த நகராட்சிகளினுடைய. மாநகராட்சிகளினுடைய, ஊராட்சி ஒன்றியங்களினுடைய தலைவர்கள், மாவட்ட ஊராட்சி ஒன்றியங்களினுடைய தலைவர்களிலே யாருமே சட்டமன்ற உறுப்பினராக, நாடாளுமன்ற உறுப்பினராக இல்லாத சூழ்நிலையில், சென்னை மாநகராட்சியினுடைய மேயர் மட்டும் இன்றைக்குச் சட்டமன்ற உறுப்பினராகவும் இருக்கக்கூடிய காரணத்தால், இந்தச் சட்டம் என்பது ஒரு தனி நபருக்கு எதிராகக் கொண்டு வரப்படக்கூடிய சட்டமாக இருக்கிறதோ என்ற ஐயப்பாடு இன்றைக்கு மக்கள் மத்தியிலே ஏற்பட்டிருக்கிறது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட இங்கே சுட்டிக்காட்டினார்கள், யார் செய்த தவறு என்று. ஒரு குறிப்பிட்ட கட்சியிலே, யார் நிற்பது, யார் நிற்கக்கூடாது என்பது, அந்தக் கட்சி முடிவு எடுக்க வேண்டிய விஷயம். அப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்தச் சட்டம் அமலாக்கப்பட்டால், சட்டமுன்வடிவு ஏற்றுக்கொள்ளப்பட்டால், மாநகராட்சியினுடைய மேயராக, 5 இலட்சத்து 60 ஆயிரம் வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கக்கூடிய மக்களுடைய உணர்வு என்பது மதிக்கப்படாமல், அது மிதிக்கப்படக்கூடிய சூழல் ஏற்பட்டுவிடும். ஆகவே, இந்தச் சட்டமுன்வடிவைத் திரும்பப் பெற வேண்டும். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக இந்தச் சட்டமுன்வடிவை நாங்கள் எதிர்க்கிறோம் என்று சொல்வதோடு—இந்தச் சட்டமுன்வடிவிலே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்; மாநகராட்சியினுடைய மேயர், துணை மேயர் உட்பட உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கக்கூடிய தலைவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டுமென்றால், அரசினுடைய அனுமதியைப் பெற்றுச் செல்ல வேண்டுமென்ற ஒரு ஷரத்து இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறது. வெளிநாடுகளுக்குச் செல்லும்போது—அதிலும் பார்த்தீர்கள் என்றால், அநேகமாக இன்றைக்குச் சென்னை மாநகராட்சியினுடைய மேயர் அவர்கள் வெளிநாட்டுக்குச் சென்று இருக்கக்கூடிய சூழ்நிலையிலே இந்தச்



2002 மே 10] [திரு. கே. மகேந்திரன்]

சட்டமுன்வடிவு என்பது விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. பொதுவாக, எங்களைப் பொறுத்தவரை, ஒருவருக்கு ஒரு பதவி, அதிகாரப் பரவல் என்பதெல்லாம் இன்றைக்கு இந்தியாவிலேயே தமிழகத்திலே தேவையா என்றால் நிச்சயமாகத் தேவை. ஆனால், குறிப்பிட்ட நபர்களுக்கு எதிராக இதுபோன்ற சட்டங்கள் கொண்டு வருவது என்பது எந்த வகையிலும் நியாயமாக இருக்க முடியாது. ஏதோ மாண்புமிகு உறுப்பினர் ஸ்டாலின் அவர்களை நியாயப்படுத்த வேண்டும் என்பதற்காக இதை நாங்கள் சுட்டிக்காட்டவில்லை. சென்னை மாநகரத்திலே உள்ள மக்களுடைய உணர்வு மதிக்கப்பட வேண்டும். மிதிக்கப்படக்கூடாது என்று மீண்டும் வலியுறுத்துகிறேன். ஆகவே, வெளிநாடுகளுக்குச் செல்லும்போது அரசுக்குத் தகவல் சொல்லவேண்டும் என்று மாற்றிக்கொள்ள வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 5-55*

அதேபோன்று, மாநகரத்தினுடைய மேயருடைய உரிமைகள் சம்பந்தமாக, அதிகாரங்களை அதிகப்படுத்துவது சம்பந்தமாக பல ஷரத்துக்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அந்த ஷரத்திலே மேயர், கமிஷனரிடம் அறிக்கையைக் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம் என்று ஒரு ஷரத்து இருக்கிறது. அறிக்கையைக் கேட்டுப் பெறுவது என்பது அது என்ன அதிகாரம் என்று எங்களுக்குத் தெரியவில்லை. ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் பெரியவர் வினாயகமூர்த்தி அவர்கள் சுட்டிக்காட்டியதுபோல, இன்று உறுப்பினர்களுக்கு ஏதாவது பிரச்சினை ஏற்பட்டால், தீர்க்கப்படாத விவரம் வந்தால், அதனைத் தீர்க்கக்கூடிய இடத்திலே மக்களால் தேர்ந்தெடுக்கக்கூடிய மேயர்தான் பணியாற்றக்கூடிய நிலைமை இருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில், அறிக்கை மட்டும்தான் பெற முடியும் என்றால், அது என்ன அதிகாரம் என்றே புரியவில்லை. அதேபோன்று, அந்த ஷரத்திலே 25 இலட்சம் ரூபாய்க்குக் கூடுதலான திட்டச் செலவிற்கு மாநில அரசினுடைய ஒப்புதல் பெறப்பட வேண்டும் என்று சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. இன்றைக்குச் சென்னை மாநகராட்சியிலே நடைபெறக்கூடிய வேலைகள், எந்த வேலைகளாக இருந்தாலும் சரி, அநேகமாகப் பெரும்பாலான வேலைகள் கடந்த மாமன்றக் கூட்டத்திலேகூட—பல வேலைகள்—தீர்மானிக்கப் பட்டிருக்கின்றன. குறிப்பாக, ஆர்.கே. நகர் பகுதிக்கு ஒரு 3 பணிகள் என்று 50 இலட்சம் ரூபாய்க்கும் அதிகமான திட்ட மதிப்பீட்டிலே உருவாக்கிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மாமன்றத்திலே ஒப்புதல்

பெறப்பட்டிருக்கிறது. 2.5 இலட்சம் ரூபாய்க்குக் கூடுதலான பணிகள்,
திட்ட மதிப்பீடுகள் என்பதற்கு அரசினுடைய ஒப்புதல் பெற
வேண்டுமென்றால், அநேகமாக மாநகரங்களிலே திட்டங்களைச்
செயல்படுத்துவதிலேயே பெரிய சிரமங்கள் ஏற்பட்டு விடும். ஒரு Subway
அமைப்பதாக இருந்தாலும் சரி, எதுவாக இருந்தாலும் சரி, சில
சிரமங்களைச் சந்திக்க வேண்டிய நிலைமை ஏற்படும். மாண்புமிகு நிதி
அமைச்சர் அவர்கள் அடிக்கடிச் சுட்டிக்காட்டுவார்கள். இன்றைக்கு மைய
அரசு. மாநில அரசினுடைய அதிகாரங்களையெல்லாம், படிப்படியாக,
படிப்படியாகப் பறித்துக் கொண்டிருக்கிறது என்று ஏராளமான
விவரங்களை, அநேகமாக இந்த மாமன்ற உறுப்பினர்கள் தெரிந்துகொள்ள
வேண்டிய பல விவரங்களைத் தொடர்ச்சியாகச் சுட்டிக்காட்டிக்
கொண்டிருக்கிறார். இந்த மாமன்றத்திலே இருக்கக்கூடிய ஆளும் கட்சியும்,
பிரதான எதிர்க்கட்சியும், பேரறிஞர் அண்ணாவினுடைய வழியிலே
வந்தவர்கள். மாநிலத்திற்கு சுயாட்சி வேண்டும், அதிக அதிகாரங்கள்
வேண்டுமென்று தொடர்ச்சியாக இன்றைக்கு நீங்களும்
பேசிக்கொண்டிருக்கிறீர்கள். நாங்களும் பேசிக்கொண்டிருக்கிறோம்.
இப்படிப்பட்ட சூழ்நிலையிலே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கக்கூடிய
உள்ளாட்சி அமைப்புகளுக்கு இருக்கக்கூடிய குறைந்தபட்ச அதிகாரங்களும்
பறிக்கப்படாத நிலைமை தொடர வேண்டுமென்று மார்க்சிஸ்ட்
கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக மெத்தப் பணிவன்போடு
கேட்டுக்கொண்டு, இன்றைக்கு அறிவிக்கப்பட்டிருக்கக்கூடிய அதிகாரப்
பறிப்புகள்—பொதுவாக, தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கக்கூடிய அதிகாரப்
அமைப்புகள், அந்த அமைப்புகளிலே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கக்கூடிய உள்ளாட்சி
தலைவர், துணைத் தலைவர் ஆகியவர்களுக்கு இருக்கக்கூடிய
அதிகாரங்களையோ அல்லது உரிமைகளையோ பறிக்கக்கூடிய
சட்டமுன்வடிவுகளை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக
எதிர்த்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
உள்ளாட்சித் துறை அமைச்சரின் சார்பாக அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிற
சட்டமுன்வடிவுகள், சட்டத் திருத்தங்கள் குறித்து இந்திய கம்யூனிஸ்ட்
கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துகளை நான் முன்மொழியக்
கடமைப்பட்டிருக்கின்றேன். குறிப்பாக, நம்முடைய மாண்புமிகு
உறுப்பினர்கள் பல பேர், மாநகராட்சியினுடைய தலைவர்,
மாநகராட்சியினுடைய துணைத் தலைவர், நகராட்சியினுடைய தலைவர்,





நகராட்சியினுடைய துணைத் தலைவர், மாவட்ட ஊராட்சித் தலைவர், துணைத் தலைவர்களுக்கு, 'ஒருவருக்கு ஒரு பதவி' என்கிற சட்டத் திருத்தம் இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய கட்சிகளுக்கு, ஒவ்வொரு கட்சிக்கும் ஒவ்வொரு கொள்கை நிலை இருக்கிறது. நடைபெறுகிற தேர்தலிலேகூட ஒவ்வொருவரும் ஒவ்வொரு தேர்தல் அறிக்கையைத்தான் முன்மொழிகிறார்கள். அவரவர்களது நிர்வாகத்திற்கு ஏற்ற வகையிலே அவர்களுடைய தேர்தல் அறிக்கையிலே முன்மொழியப்பட்டிருக்கிறது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கொள்கை என்பது உறுதியான கொள்கையாக இருக்கலாம். நான் அதை மறுப்பதற்கில்லை.

பிற்பகல் 6-00

ஒன்றை நான் நினைவுபடுத்துவது என்பது, உள்ளாட்சி அமைப்புக்கான தேர்தல் நடந்து முடிந்த பின்னால், ஒரு சட்டத் திருத்தம் கொண்டு வரவேண்டுமென்றால், நடைமுறையிலே இருக்கிற சிக்கலுக்கு வேண்டுமானால் சில திருத்தங்களைக் கொண்டுவர முடியும். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தச் சட்டத் திருத்தங்களைக் கொண்டு வந்திருக்கிறார்; குடிதண்ணீர் பாதுகாக்கப்பட வேண்டும்; பலமாடிக் கட்டடங்கள், ஆழ்குழாய்க் கிணறு போட்டு, வண்டி வைத்து எடுத்துக் கொள்ளக்கூடாது. அதனை வரைமுறைப்படுத்த வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். அதுபோன்ற திருத்தங்களைக் கொண்டு வரலாம். சாத்தியமான, மக்களுக்குத் தேவையான சில சட்டத் திருத்தங்களைக் கொண்டு வருவதிலே தவறு கிடையாது. ஆனால், உறுப்பினருக்கு ஒரு பதவி என்கிற அடிப்படையிலே ஒரு சட்டத்தைக் கொண்டு வருகிறபோது—இதே சட்டமன்றத்திற்கு அருகில் மேலவை மண்டபம் இருக்கிறது. அந்த மேலவை தமிழகத்திற்குத் தேவையில்லை என்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே செய்தார்கள். அறிஞர்களும், அரசியல்வாதிகளும் பல பேர் சட்டமன்றத்திற்கு மக்களாலேயே தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பப்படுகிறார்கள். ஆகையால் பெரிய அறிவாளிகள், அறிவிலே சிறந்தவர்கள், சில சிந்தனையாளர்கள் மட்டும் அங்கே போய் உட்கார்ந்து, சட்டங்களை ஆராய வேண்டிய அவசியமில்லை என்று, அந்த மேலவையை எடுத்துவிட்டார். அப்படி மேலவை இருக்கின்றபோது, அந்தத் தீர்மானம் சட்டமன்றத்திலே கொண்டு வரப்படவில்லை. அந்த மேலவையே வேண்டாம் என்று, அந்தச் சபையே இல்லாதபோது, அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றினார். அதுவே நமக்கு ஓர் உதாரணமாகும்.

[திரு. ஜி. பழனிசாமி] [2002 மே 10

இடைப்பட்ட காலத்திலே, அந்த மேலவையைக் கலைப்பதற்கான ஒரு தீர்மானத்தை இந்தச் சட்டமன்றத்திலே நிறைவேற்றவில்லை. குறிப்பாக, அந்த மேலவையே இல்லாத காலங்களிலேதான், அந்த மேலவை தேவைதானா, தேவையில்லையா? அரசுக்கு ஒரு தேவையற்ற செலவு அதன் மூலமாக ஆகிறது என்று கொண்டு வந்தார்கள். மக்களுடைய திட்டங்களும் அதனால் பாதிக்கப்படுகின்றன, மக்களுக்கான திட்டங்கள் அதனால் தடைப்படுகிறது என்பதை யோசித்து அதைக் கொண்டு வரவில்லை. ஆகையால், செலவாகிறது, தேவையற்றது, இங்கே விவாதிக்கிற ஒரு பொருள் குறித்து, அந்த மேலவையிலும் விவாதிக்கிறோம். ஆகையால் மேலவை தேவையில்லை, என்றுஅப்படித்தான் கொண்டு வந்தோம். அதிலே காங்கிரஸ் கட்சிக்கு உடன்பாடு இல்லாமல் இருக்கலாம். நாங்கள் எல்லாம் ஒத்த கருத்து உடையவர்கள். ஆனால், ஒரு அமைப்பினுடைய தேர்தலை நடத்தி முடித்த பின்னால், இப்படிப்பட்ட சிந்தனைகள் அரசுக்கு வருகிறது என்று சொன்னால், அநேகமாக, மக்களுக்குத் தேவையான ஒரு சிக்கனத்தை உருவாக்க வேண்டும் என்று சொன்னால், இன்னும் பஞ்சாயத்து ராஜ் சட்டத்திலே நாடாளுமன்றத்திலேயே பல சட்டங்களைக் கொண்டுவர முடியவில்லை. பஞ்சாயத்து ராஜ் சட்டத்திலே அதை வகுத்திருக்க வேண்டுமல்லவா? அதிக அதிகாரத்தை வழங்க வேண்டும் என்று சொல்கிறபோது, பஞ்சாயத்து ராஜ் சட்டத்திலேயே இது கொண்டு வரப்பட்டு இருக்க வேண்டும். அப்படிக் கொண்டு வந்திருந்தால், அதை மாநில அரசு பின்பற்றுவதிலே தவறே கிடையாது. அப்படி இதிலே ஏதாவது ஒரு வரி, ஷரத்து இருக்கிறதா என்று பார்த்தோம் என்று சொன்னால், பஞ்சாயத்து ராஜ் சட்டத்திலே கிடையாது. அதிகாரம் போதாது, இன்னும் அதிகாரம் கொடுக்க வேண்டும் என்றுதான் இருக்கிறது. (குறுக்கீடு) பஞ்சாயத்துராஜ், நகர் பாலிகா ஆகிய சட்டங்களிலே, அப்படிப்பட்ட சட்ட ஷரத்துக்களை ஏதாவது மாநில அரசுகள் பின்பற்ற வேண்டுமென்று சொன்னால், அவற்றைப் பின்பற்றலாம். காலையிலேகூட நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது மத்திய அரசினுடைய சட்டம், மாநில அரசு நிறைவேற்றாமல் இருக்க முடியாது. இதை அமல்படுத்தி ஆக வேண்டும் என்று சொன்னார்.

அதுபோன்று இந்தச் சட்டத்திலே ஏதாவது ஒரு ஷரத்து இருக்கிறதா என்று சொன்னால், அதற்கு வாய்ப்பே இல்லை. இந்தச் சூழ்நிலையில், இது மு.க. ஸ்டாலினுக்கா, மு.க. ஸ்டாலினாக இல்லாதவர்களுக்கா? நான் ஆளுங்கட்சியின் சார்பிலே சொல்கிற வாதங்களை நூற்றுக்கு நூறு ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். இது, மு.க. ஸ்டாலினுக்காக அல்ல என்பதை நானும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். அப்புறம்



2002 மே 10] [திரு. ஜி. பழனிசாமி]

ஏன் இந்தச் சட்டம்? எதற்கு இது வர வேண்டும்? அது தேவைதானா? அது தேவையில்லை. அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும் என்பதற்காக நான் சொல்கிறேன். இந்தச் சட்டம் சரியாக இருக்கும் என்று சொன்னால், ஒருவருக்கு ஒரு பதவி—ஒன்று, நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர் அல்லது மாநகராட்சியினுடைய தலைவர் அல்லது நகராட்சியினுடைய தலைவர், மாவட்ட ஊராட்சித் தலைவர் என்று ஒரு பதவியிலேதான் இருக்க வேண்டும் என்று சொன்னால், அந்த நல்ல நோக்கத்தோடு இந்தச் சட்டம் நிறைவேற்றப்படும் என்று சொன்னால், வரக்கூடிய காலத்திற்கு நடைமுறைப்படுத்தக்கூடிய சட்டமாக அந்தச் சட்டம் அமையவேண்டும். அப்போதுதான் ஒரு ஜனநாயகத்தை மதிப்பதாக அர்த்தம். இல்லையென்று சொன்னால், ஒரு அரசியல் வேற்றுமையின் காரணமாக உருவாக்கப்பட்ட சட்டமாகத்தான் அது அமையும்.

இதைப்போன்ற சட்டங்களைக் கொண்டு வருவதேகூட—மக்கள் ஜனநாயக அமைப்புகளிலே ஒரு சட்டத்தை நிறைவேற்றுகிறபோது, முதலிலே அரசாங்கத்தினுடைய கொள்கைகளை நீங்கள் வெளியிடுங்கள். 6 மாதங்களில் உள்ளாட்சி அமைப்புகளில், ஸ்தல ஸ்தாபனங்களில் கருத்துகளைச் சேகரியுங்கள். அரசியல் கட்சியினுடைய, அறிஞர்களுடைய கருத்துகளைச் சேகரியுங்கள். ஒரு ஜனநாயகபூர்வமான சட்டத்தைக் கொண்டு வருவதற்கான, அதை நிலைநாட்டுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுங்கள். அது ஒரு நிலையான சட்டமாக இருக்கும். அழியாத சட்டமாக இருக்கும். நிலைத்து இருக்கக்கூடிய சட்டமாக இருக்கும். அப்படித்தான் சட்டங்களைப்பற்றி மேலை நாடுகள், பல வகையிலே நமக்கு வழிகாட்டியிருக்கின்றது. இதெல்லாம் அதிகாரிகளுக்குத் தெரியும். ஆகவே, நம்முடைய முதலமைச்சருக்குத் தெரியாது என்று நான் சொல்ல முடியாது இப்பொழுது. ஆளுங்கட்சிக்குத் தெரியாது என்று சொல்ல முடியாது. ஆளுங்கட்சி என்ன நினைக்கிறதோ, அதுதானே சட்டமுன்வடிவு? ஆகவே, இதையெல்லாம் நாம் பரிசீலிக்க வேண்டியிருக்கிறது.

பிற்பகல் 6-05

அதேபோன்று, வெளிநாடுகளுக்குப் போவதிலே, ஊராட்சி மன்றத்தினுடைய, மாநகராட்சியினுடைய தலைவர், மாநகராட்சியினுடைய துணைத் தலைவர், ஸ்தல ஸ்தாபன அமைப்புகளிலே இருக்கிற தலைவர்கள், உறுப்பினர்கள் வரையிலும் அரசாங்கத்திலே அனுமதியைப் பெற்றுத் தான் போக வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இங்கே பேசிய பல கட்சிகளைச் சார்ந்த மாமன்ற உறுப்பினர்கள், வெளிநாடுகளுக்குச் செல்லும்போது, உள்ளாட்சி அமைப்புகளில் பதவி வகிப்பவர்கள் மாநில அரசின் அனுமதியைப் பெற்றுத்தான் செல்ல வேண்டும் என்று கொண்டுவரப்படுகின்ற இந்தச் சட்டத் திருத்தத்தை விமர்சித்து, இது தேவையில்லை, இதைத் திரும்பப் பெறவேண்டும் என்றெல்லாம் பேசினார்கள். சில விவரங்களை இந்த அவைக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் வெளிநாட்டிற்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால், சட்டப் பேரவைத் தலைவர் மூலமாக முதலமைச்சரின் அனுமதியைப் பெற்றுத்தான் அவர்கள் செல்ல வேண்டும். அதேபோல், நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டுமானால், மக்களவை சபாநாயகர் மூலமாகவோ அல்லது மாநிலங்களவைத் தலைவர் மூலமாகவோ மாண்புமிகு பாரதப் பிரதமரின் அனுமதியைப் பெற்றுத்தான் அவர்கள் வெளிநாட்டுக்குச் செல்ல முடியும். மாநில அரசின் அமைச்சர்கள் வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டுமானால், அந்த மாநில முதலமைச்சரின் அனுமதியைப் பெற்று, பின்னர் நாட்டின் பிரதமரின் அனுமதியைப் பெற்றுத்தான் அவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்ல முடியும். மாநில முதலமைச்சர்களே வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டுமானால், மாண்புமிகு பாரதப் பிரதமரின் அனுமதியைப் பெற்றுத்தான் வெளிநாட்டிற்குச் செல்ல முடியும். ஆகவே, மேயராகவோ, துணை மேயராகவோ, உள்ளாட்சி அமைப்புகளில் நகரசபைத் தலைவராகவோ, துணைத் தலைவராகவோ, இதரப் பொறுப்புகளை வகிப்பவர்கள், இப்படி இருக்கின்றவர்களெல்லாம், இவர்களைவிடப் பெரிய பதவிகளில் உள்ளவர்களா? மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்று சொன்னால், சட்டமன்ற உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள்தான். அதைப்போலவே, உயர்நீதிமன்ற நீதிபதிகள் வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டுமென்றாலும் கூட அவர்கள் Ministry of Law, Justice and Company Affairs மூலமாக மத்திய அரசின் அனுமதியைப் பெற்றுத்தான் அவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்ல முடியும். உச்ச நீதிமன்ற நீதிபதிகளாக இருந்தாலும், அவர்களும் மத்திய அரசின் அனுமதியைப் பெற்றுத்தான் செல்ல முடியும். உயர் நீதிமன்றங்களின் தலைமை நீதிபதிகளானாலும், உச்ச நீதிமன்றத்தின்





தலைமை நீதிபதியானாலும், அவர்களும்கூட, மத்திய அரசின் அனுமதியைப் பெற்றுத்தான் வெளிநாடுகளுக்குச் செல்ல முடியும்.

ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் என்றால், அவர்கள் மாநில முதலமைச்சரின் அனுமதியைப் பெற்று, பின்னர், மத்திய அரசின் அனுமதியைப் பெற்றுத்தான் வெளிநாடுகளுக்குச் செல்ல முடியும். அதைப்போலவே, ஐ.பி.எஸ். ஆபீசர்ஸ், காவல் துறை அதிகாரிகள் வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டுமானாலும்கூட, அவர்கள் முதலமைச்சரின் அனுமதியைப் பெற்று, பின்னர் மத்திய அரசின் அனுமதியைப் பெற்றுத்தான் வெளிநாடுகளுக்குச் செல்ல முடியும். ஆகவே, இத்தகைய எல்லாவிதமான பதவிகளிலும், பொறுப்புகளிலும் உள்ளவர்கள் அரசின் உரிய அனுமதியைப் பெற்றுத்தான் செல்லும்போது, அரசின் உரிய அனுமதியைப் பெற்றுத்தான் செல்ல வேண்டுமென்று ஏற்கெனவே சட்டங்கள் இருக்கின்றபோது, உள்ளாட்சி அமைப்புகளில் பொறுப்பு வகிப்பவர்கள் மாநில அரசின் அனுமதியைப் பெற்றுத்தான் வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டும் என்று சட்டம் கொண்டு வருவதில் எந்தத் தவறும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த முறை, சுமார் இரண்டு ஆண்டு காலத்திற்கு முன்பு, வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் வெளிநாடு செல்கின்றபோது முதலமைச்சரிடம் அனுமதி பெற்று, அனுமதியைக் கொடுத்திருக்கக்கூடிய ஆதாரங்களெல்லாம் இங்கே இருக்கின்றன. அனுமதி பெற்றுத்தான் போயிருக்கிறார். அவ்வாறு இருக்கின்றபொழுது, இந்த முறை வெளிநாடு போவதற்கு ஏன் அனுமதி பெறவில்லை என்று இந்த நேரத்திலே நாங்கள் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரையோ அல்லது மாண்புமிகு தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களையோ கேட்டு, விவாதம் செய்வதற்காக அல்ல. கடந்த முறை இருந்த அரசிடம் அந்த முதலமைச்சரிடம், அதே பொறுப்பிலே இருந்தவர், அனுமதி வாங்கிப் போகின்றபொழுது, இந்த முறை இருக்கின்ற முதலமைச்சருக்கு, ஒரு மரியாதை நிமித்தமாகத் தகவல் சொல்லியிருக்க வேண்டும் அல்லது அனுமதி வாங்கியிருக்க வேண்டும் என்பதை வரைமுறைப்படுத்துவதற்காகவும், இனிமேல் எதிர்காலத்திலே இப்படிப்பட்ட தவறுகள் நடக்கக்கூடாது என்பதற்காகவும்தான் இந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 6-10

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து ஒரு விளக்கத்தை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். மேயர் அவர்களுக்கு வந்த அழைப்பு, கனடா நாட்டிலேயிருந்து வந்த அழைப்பு, மத்தியிலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்பொழுது போனதைப் பற்றியே பிரச்சினை இல்லை. இனிமேல் வரைமுறைப்படுத்துவதற்காகத்தான். பழனிசாமி, பேசுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** அவர் கேட்கிறார், நான் சொல்கிறேன். ஏன் போனார் என்று அமைச்சர் கேட்டார். அதற்குப் பதில் சொல்கிறேன்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்பொழுது போனதைப் பற்றியே பிரச்சினையில்லை. இனிமேல் வரைமுறைப்படுத்துவதற்காக இந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறது. அவ்வளவுதான். பழனிசாமி (குறுக்கீடு) இப்போது போனதைப் பற்றியே பிரச்சினையில்லை. இனிமேல் இதை வரைமுறைப்படுத்துவதற்காக, சட்டமன்ற உறுப்பினர்கள் போவதற்கும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் போவதற்கும் இப்படிப்பட்ட வரைமுறை செய்யப்பட்டிருக்கிறது என்பதைத்தான் முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பழனிசாமி, பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மேயர் அவர்கள் வெளிநாட்டிலிருந்து அழைக்கப்பட்டு, மத்திய அரசாங்கத்திலே இருந்து அவரைத் தேர்ந்தெடுத்து அனுப்புகிறபோதுகூட, அதையே அவர்கள் கார்ப்பரேஷனிலே தீர்மானமாக வைத்தார்கள். தீர்மானம் வைத்தபோது, தீர்மானத்திற்காக அவர்கள் அறிவிப்பாக வைத்தபோது, அங்கேயே என்ன அரசியல் நடந்தது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் பத்திரிகைகள் மூலம் தெரிந்திருப்பீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னது (குறுக்கீடு) உட்காருங்கள். நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள், பொன்முடி. நான் சொல்லிவிடுகிறேன். உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னது, கடந்த முறை அவர் வெளிநாட்டிற்குப் போகிறபோது, அப்போது முதலமைச்சருடைய அனுமதியைப் பெற்று அவர் போய் இருக்கிறார். ஆகவே, இந்த முறை முதலமைச்சருக்குத் தெரிவித்துவிட்டாவது போய்



இருக்க வேண்டும். அனுமதியைப் பெற்றாவது போய் இருக்க வேண்டும். இனிமேல் எதிர்காலத்திலே இப்படிப்பட்ட சிக்கல்கள் வரக்கூடாது என்பதற்காக, ஒரு வரைமுறைப்படுத்துவதற்காகத்தான் இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருப்பதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். உயர் அதிகாரிகள், முதலமைச்சர் எல்லாம் ஒரு பாதுகாப்புக் கருதி, ஒரு அனுமதியைப் பெற்று, நமது அரசு அனுமதியைப் பெற்றுப் போனால்தான், அவர்களுக்கு அன்னிய நாடுகளிலே போகிறபோதுகூட ஒரு பாதுகாப்புக் கிடைக்கும். அந்த அரசால்கூட, நாம் எங்கே போகிறோம், என்ன பணியிலே ஈடுபடுகிறோம் என்று கண்காணிப்பதற்கு ஒரு வாய்ப்பு இருக்கிறது. அப்படி அரசு அதிகாரிகள், மேல், மேல் பதவிகளிலுள்ள அதிகாரிகளிடத்திலே அனுமதி பெற்றுப் போவது வழக்கம்தான். அதை நான் மறுக்கவேயில்லை. இருந்தாலும், எனக்குத் தெரிந்த வரையிலே, இப்படியெல்லாம் சட்டங்கள் இல்லாதபோதுகூட, தஞ்சை மாவட்டத்திலே, மக்கள் பணியிலே, ஒரு சிற்றூராட்சியினுடைய, ஒரு ஊராட்சி ஒன்றியத்தினுடைய பெருந்தலைவர் சிறப்பான முறையிலே பணியாற்றினார் என்பதற்கு, தமிழ்நாட்டினுடைய வரலாற்றிலேயே எஸ்.ஜி. முருகையன் உலக நாடுகள் பூராவும் அவரைக் கூப்பிட்டார்கள், எப்படி ஐயா செய்ய முடிந்தது என்று. அவ்வளவு நாடுகளும் கூப்பிட்டார்கள். அமெரிக்கா உள்ளிட்ட அனைத்து நாடுகளும் கூப்பிட்டார்கள். 13 நாடுகள் கூப்பிட்டார்கள். மக்களைப் பயன்படுத்திக் கொண்டு எப்படி இந்த ஊராட்சிகளை, சிறந்த ஊராட்சி ஒன்றியத்தை உருவாக்க முடிந்தது, இதுவரையிலும் தமிழ்நாட்டில் எவரும் பண்ணவில்லை என்று கூப்பிட்டார்கள். அவ்வளவு நாடுகளுக்கும் போனார்கள். அப்படி நடந்தது. ஏனென்றால், இந்த மாதிரியான சந்தர்ப்பங்கள் வருகிறபோது, ஒன்று, மாநகராட்சியிலே மு.க. ஸ்டாலின் மேயராக இருக்கிறார். மாநகராட்சியினுடைய மேயர் வெளிநாடு சென்றிருக்கிறார் என்கின்ற காரணத்திற்காகவே இந்தச் சட்டம் வருகிறதா என்கின்ற ஒரு தோற்றம் (குறுக்கீடு) ஒரு தோற்றம் இங்கு வந்திருக்கிறது, சட்டமுன்வடிவிற்கும், சட்டத் திருத்தத்திற்கும், அதனுடைய அமைப்பிற்கும், இரண்டும் சார்ந்ததாக இது அமைகின்றது. மாண்புமிகு நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஏற்கெனவே ஒரு அரசுப் பணியில் மாநகராட்சியினுடைய மேயர் வெளிநாட்டிற்குச் சென்று இருக்கலாம். அவர் இப்போது போய் இருப்பது சொந்த வேலையாகப் போய் இருக்கிறாரா அல்லது அரசுப் பணியாகப்

[திரு. ஜி. பழனிசாமி] [2002 மே 10

போய் இருக்கிறாரா என்பது வேறு. அதையெல்லாம் பரிசீலிக்க வேண்டியிருக்கிறது. மாண்புமிகு மரியாதைக்குரிய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அவர்கள்கூடச் சொன்னார்கள். எங்காவது உறவினர் இறந்து போய்விட்டால், அல்லது ஒரு நண்பருக்கு உடல் நிலை சரியில்லை என்று சொன்னால், பார்க்கப் போக வேண்டுமென்று சொன்னால், என்ன செய்வது? அனுமதி பெற்றுப் போக வேண்டுமென்றால் காலத்தோடு போக முடியுமா என்றெல்லாம் சொல்கிறார்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாட்டிலேயிருக்கின்ற எனது உறவினர் திடீரென்று இறந்து போய்விட்டால் அல்லது எனது நண்பருக்கு வெளிநாட்டில் உடல் நலம் இல்லையென்று சொன்னால், அதற்காக மத்திய அரசின் அனுமதியைப் பெறாமல் நான் போக முடியுமா? சட்டம், சட்டம்தான். யாராக இருந்தாலும், எப்படிப்பட்ட சூழ்நிலையாக இருந்தாலும், சட்டத்தின்படிதான் நடக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 6-15*

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. மு. கருணாநிதி அவர்களுடைய மகன் திரு. ஸ்டாலின் வேண்டுமானால், யாரிடமும் சொல்லாமல், மத்திய அரசிடம் அனுமதியைப் பெற்றுப் போகலாம். ஆனால், சென்னை மாநகராட்சியினுடைய மேயர் என்ற காரணத்தினால், ஏறத்தாழ 5 இலட்சம் வாக்குகள் பெற்ற சென்னை மாநகராட்சி மேயர் வெளிநாட்டிற்குப் போகிறார் என்று சொன்னால், ஒரு அரசாங்கம் இருக்கிறது.—அந்த மாநகராட்சியை நிர்வாகம் பண்ணுவதற்கும், அதிகாரம் செலுத்துவதற்கும் மாநில அரசு இருக்கிறது. அந்த மாநகராட்சியினுடைய மேயர், தன்னுடைய சொந்த விஷயமாக இருந்தால், போவது, வருவது என்பது பற்றி எங்களுக்கு ஒன்றும் இல்லை. அலுவல் நிமித்தமாக அல்லது அங்கே மேயர்களுடைய மாநாடு என்பது போன்ற பல்வேறு அலுவல் பணி காரணமாகப் போகின்றபோது, பணத்தைப் பற்றிப் பிரச்சினை இல்லை. அவருடைய சொந்தப் பணத்தில் போகலாம். அந்த நாடுகூட என்ற முறையிலே அவர் போவதை, தன்னுடைய விருப்பப்படி போவதைக் கட்டுப்படுத்துவதற்கு இந்த மாநில அரசு எதிர்காலத்தில் இப்படிப்பட்ட ஒரு தவறு நிகழாமல், எங்களுடைய கட்சிக்காரர் மேயராக இருந்தாலும் சரி அல்லது பல்வேறு மாநகராட்சிகளினுடைய மேயர்களாக இருப்பவர்கள் போனாலும் சரி, வரைமுறைப்படுத்தப்பட வேண்டும், அரசாங்கத்திற்கு அதைத் தெரியப்படுத்த வேண்டும் என்ற ஒரு நல்ல நோக்கத்திற்காகத்தான் இந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.



2002 மே 10] [திரு. சி. துரைராஜ்]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேராசிரியர்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கத்திற்குத் தெரிவிக்க வேண்டும், உள்ளாட்சி மன்றத் தலைவர்கள் என்பது வேறு. தெரிவிப்பதற்கு ஒரு கடமை இருக்கிறது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். Permission வாங்கவேண்டும் என்ற சற்று வேறுபட்ட ஒரு கருத்து அதிலே இடம் பெறுகிறது. தெரிவிப்பது என்பது ஒரு நாகரீகமான முறை. இரண்டாவது, பெரிய அதிகாரிகள் எல்லாம் விடுமுறையிலே போகிறபோது தாங்கள் விடுமுறை எடுத்துக் கொள்வதாகத் தெரிவிப்பார்கள். விடுமுறை வழங்க வேண்டுமென்று கேட்க மாட்டார்கள். ஆக, அப்படி ஒரு முறை இருக்குமானால், அதிலே எந்த வேறுபாடும் ஏற்படுவதற்கு அவசியம் இல்லை.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த முறை அரசு அனுமதித்துத்தான் அவர் வெளிநாடு போய் இருக்கிறார். இரண்டு முறை. ஒரு முறை, அமெரிக்காவிற்குப் போய் இருக்கிறார். அப்போது முதலமைச்சர் வரை கோப்புகள் எல்லாம் படித்துப் பார்த்து, முதலமைச்சரே கையெழுத்துப் போட்டு, அவர் வெளிநாடு செல்வதற்கு அனுமதி வழங்கப்படுகிறது என்று அரசே ஆணையிட்டு இருக்கிறது. அரசாணையினுடைய எண் முதற்கொண்டு இங்கே கைவசம் இருக்கிறது என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு ஒரு விளக்கம் என்று எனக்குத் தோன்றுவது, அப்பொழுது மேயராக இருந்த ஸ்டாலின் வெளிநாட்டுக்குச் செல்வதற்கு மாநகராட்சி மன்றப் பணமோ, தமிழக அரசினுடைய பணமோ செலவிட்டு, அந்த அடிப்படையிலே செல்வதற்கு அனுமதி பெற வேண்டிய அவசியம் அதற்கு ஏற்பட்டிருக்கும். வெளிநாடு செல்வது என்பது வேறு, செல்வதற்கு அரசு அனுமதி பெறுவது என்பது வேறு. செல்வதைத் தெரிவிக்க வேண்டும் என்பதைக்கூட நான் ஏற்றுக்கொள்கிறேன்.

[பேராசிரியர் க. அன்பழகன்] [2002 மே 10

ஏனென்றால், அரசுக்குத் தெரியாமல் ஒரு மாநகராட்சி மன்றத் தலைவரோ—அப்போது மாநகராட்சி மன்றப் பணத்திலே சென்று இருக்கக்கூடும். இப்பொழுது வேறு ஒருவருடைய அழைப்பிலே செல்கிற காரணத்தினாலே, அந்தச் செலவு மாநகராட்சி மன்றத்திற்கு இல்லை என்று கருதுகிறேன். ஆனால், வெளிநாடு செல்ல மத்திய அரசு அனுமதிக்க வேண்டும். ஆக, அந்த அடிப்படையிலே அவர் சென்றிருப்பதாக நான் எண்ணுகிறேன். அறிகிறேன் என்று சொல்வதுகூடத் தவறு; நான் suggest பண்ணுகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4-7-1997லே திரு. ஸ்டாலின் அவர்கள் வெளிநாடு சென்றது, International Conference of Mayors கலந்துகொள்வதற்காக முறைப்படி, மேயர் நிலையிலே இருந்த அவர், மாநில அரசுக்கு எழுதி, முதலமைச்சருடைய அனுமதியைப் பெறவேண்டும் என்ற விதியின் அடிப்படையில், அனுமதியைப் பெற்றுத்தான் சென்றிருக்கிறார். அதற்கு அரசு ஆணையிட்டு இருக்கிறது. அதைப்போலவேதான் 31-10-2000-ல் அவர் மொரீசியஸ் நாட்டிற்குச் செல்ல வேண்டும் என்று விரும்பியபோது, அதுவும் —ஏனென்றால், மொரீசியஸ் நாட்டிற்கும், இங்கு சென்னைக்கும் இடையே ஒரு விமானப் போக்குவரத்து முதன்முதலாகத் தொடங்கப்பட்டபோது, அதற்குச் செல்ல வேண்டும் என்பதற்காக, தான் சென்றதற்கு, தன் குடும்பத்திற்கு உள்ள செலவையும், மேயர், அவருடைய குடும்ப உறுப்பினர்கள் மற்றும் பாதுகாப்பு அதிகாரி ஆகியோருக்கு ஆகும் பயணச் செலவுகளை அரசு ஏற்றுக்கொள்வதுடன், அந்நாட்டில் தங்கும் நாட்களில் அனைத்து வசதிகளையும் அந்நாட்டு அரசே செய்து தரவேண்டும் என்றும் சொல்லி அனுமதியைக் கேட்டு, அந்த அனுமதி வழங்கி, முதலமைச்சருடைய ஆணையைப் பெற்றுத்தான் சென்று இருக்கிறார். மாநில உள்ளாட்சி அமைப்புகளைப் பொறுத்தவரைக்கும், ஏதோ மைய அரசினுடைய அனுமதி கிடைத்தால் போதும் என்று சொல்வது தவறு. சென்னை மாநகராட்சி, மைய அரசினுடைய நேரடிக் கட்டுப்பாட்டில் இல்லை. உள்ளாட்சி அமைப்புகள் அனைத்தும் அரசியல் சட்டத்திற்கு உட்பட்டு, மாநில அரசினுடைய நிர்வாகத்திற்கு உள்ளே இருக்கின்றன. மேயர் என்ற முறையிலே அவர் வெளிநாடு செல்கிறபோது, மாநில அரசினுடைய அதிகார வரம்பிற்கு உட்பட்டு இருக்கின்ற காரணத்தினால், அரசினுடைய அனுமதி வாங்காமல் சென்றது சட்டத்திற்கும், விதிகளுக்கும் மாறான குற்றம் ஆகும் என்பதனை அவைக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



2002 மே 10]

பிற்பகல் 6-20

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே அவர் சென்றபோது மாநில அரசினால் அனுப்பப்பட்டதாக மாண்புமிகு அமைச்சர் அவர்களே சொல்லியிருக்கிறார்கள். இந்த நிலையைப் பொறுத்தவரை, மத்திய அரசாங்கமே, அங்கே இருக்கிற நகர்ப்புற அமைச்சரே, இந்தியாவின் சார்பிலே நீங்கள் அந்த மாநாட்டில் கலந்துகொள்ள வேண்டுமென்று, வெளிநாட்டின் அழைப்பின் பேரில் அவர் அனுப்பப்பட்டிருக்கிறார். அனுப்பப்பட்டதற்குப் பிறகும்கூட, பிரதம அமைச்சரிடமிருந்து அவருக்கு அனுமதி வழங்கப்பட்டு இருக்கிறது. அவரிடத்திலிருந்தேகூட அவர் வெளிநாடு செல்வதற்கு அனுமதி வாங்கியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, மாநகராட்சியில் நடைபெற்ற மாநகராட்சிக் கூட்டத்தில்கூட, தான் வெளிநாடு செல்வது பற்றி அவர்களுக்கு அங்கே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அப்போது மாநகராட்சியிலே இருந்த, ஆளுங்கட்சியைச் சேர்ந்த துணை மேயர் அவர்கள், அதைப் பற்றி ஒரு தவறான தகவலை, கோர்ட்டில் இருக்கிறபோது செல்லலாமா என்று சொல்லி, அது பத்திரிகைகளில் வந்ததையும் நீங்கள் படித்திருப்பீர்கள்.

ஆகவே, அவர் நல்ல எண்ணத்தோடு மாநகராட்சி மன்றத்திலே தெரிவித்து, அரசுக்குத் தெரிவிக்கப்படவேண்டுமென்ற எண்ணத்தோடு அவர் அதை வெளியிட்டபோதுகூட, அதுவும் அரசியலாக்கப்பட்டபோது, அவருக்கு மறுபடியும் ஒரு கடிதம் கொடுக்கப்படுகிறது. இவர்களே ஒரு தீர்மானத்தை இயற்றி அவருக்குக் கொடுக்கிறார்கள். நீங்கள் அரசாங்கத்திற்கு இதை அனுப்பவேண்டுமென்று. அதற்குப் பிறகும்கூட, மேயர் அவர்கள் அந்த கமிஷனருக்கு, நான் இநதத் தேதியில் செல்கிறேன். அரசாங்கத்திற்கு இதை அறிவித்துவிடுங்கள், என்று சொல்லி, அவருக்கும் இதைச் சொல்லிவிட்டுத்தான், அந்த கமிஷனர் அவர்களுக்குக் கடிதம் எழுதிக் கொடுத்துவிட்டுத்தான் சென்றிருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைய அரசினுடைய அனுமதியைப் பெற்றுச் செல்லலாம் என்று எண்ணுகிற சென்னை மேயர், தி.மு.க. ஆண்ட காலத்திலே, விதியை, நடைமுறையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று—தி.மு.க. ஆண்ட காரணத்தால், தி.மு.க. அரசினுடைய அனுமதியைப் பெற்று, விதிகளைக் கடைப்பிடித்து, விதிகளை மீறாமல் வெளிநாடு சென்றார். இப்போது

தனக்கு வேண்டாத கட்சி ஆட்சி, தமிழகத்தில் இருக்கிற காரணத்தால், வேண்டாத முதலமைச்சர் தமிழகத்தில் இருக்கிற காரணத்தால், சட்டத்தை மீறி, விதியை மீறி, மாநில அரசினுடைய அனுமதியைப் பெறாமல், மேயர் என்ற ஸ்தானத்தில் இருந்துகொண்டு, அரசினுடைய நிர்வாகத்திற்கு உட்பட்டு இருந்துகொண்டு, வெளிநாடு செல்லலாம் என்று எண்ணுவது விதியை மீறுகின்ற ஒன்று.

அவர்கள் ஆட்சி இருக்கிறபோது அனுமதியைப் பெறலாம். மாற்று ஆட்சி, வேண்டாத ஆட்சி இருக்கும்போது, சட்டத்தை, விதிகளைத் தூக்கி எறிந்துவிடலாம் என்பது மேயருடைய எண்ணம் என்றால், அது சட்டத்திற்கும், விதிகளுக்கும் மாறான செயலாகும் என்பதனை அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, விடுங்கள். இதிலே விவாதம் பண்ணிக்கொண்டிருக்க முடியாது. திரு. பழனிசாமி, நீங்கள் பேசுங்கள். பேசி முடியுங்கள். 17 சட்டமுன்வடிவுகள் இருக்கின்றன. (குறுக்கீடு) திரு. பொன்முடி, மாறி, மாறி இதிலேயே விவாதம் பண்ண முடியாது. உங்களுக்கு அனுமதி கொடுக்கப்பட்டு விட்டது. உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி, என்ன என்று சொல்லுங்கள். திரு. க. பொன்முடி, உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அனுமதி கோரிய கடிதத்தை இங்கே படித்துக் காட்டினார்கள். அந்த ஆணையையும் இங்கே படித்துக் காட்டினார்கள். அந்த ஆணையில், அவர், தான் செல்வதற்குண்டான நிதிச் செலவை அரசாங்கத்திடம் கோருவதாக எழுதப்பட்டிருக்கிறது. அப்படியானால், மாநகராட்சி, அரசினுடைய நிதி உதவியைப் பெற்றுச் செல்வதற்காக அனுமதி கோரியிருக்கிறாரா அல்லது தன்னுடைய சொந்தச் செலவில் சென்றாலும்கூட அனுமதியைப் பெற வேண்டுமென்று விதி இருக்கிறதா? உதாரணத்திற்கு, அரசாங்கமே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, நீங்கள் உட்காருங்கள். திரு. பழனிசாமி, நீங்கள் பேசி முடியுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே உள்ளாட்சி அமைப்புகளுக்கு, மாநகராட்சிகளுக்கு, நகராட்சிகளுக்கு அதிகாரம் தேவை, வழங்கப்படவேண்டுமென்று சொல்லிக்கொண்டு இருப்பதிலே, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு





body, மக்களுக்கு அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய அமைப்புகள் இருக்கிறபோது, மேலே இருக்கிற ஆணையரைக் கேட்டுத்தான் அதனுடைய திட்டப் பணிகளை நிறைவேற்றவேண்டும் என்று இன்றையதினம் ஒரு சட்டம் சொன்னால், இன்றைக்குக்கூட உள்ளாட்சி அமைப்புகளில் கீழே இருக்கக்கூடிய, மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்திலேயும், டி.ஆர்.டி.ஏ. களிடத்திலேயும் அவர்கள் அலைவதிலே, திட்டங்களைப் பெறுவதிலும் பல்வேறு சிரமங்களும், கஷ்டங்களும் இருக்கின்றன. ஆகவே, இந்தச் சூழ்நிலையில் இப்படிப்பட்ட ஒரு சட்டத்தைக் கொண்டு வருகிறபோது, எந்த ஒரு திட்டத்தையும் மக்களுக்காக உடனடியாக நிறைவேற்ற முடியாது. அதையும் இந்த அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, குறிப்பாக, ஒருவருக்கு ஒரு பதவி என்கிற இந்தச் சட்டத்தை அரசு மறு பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எதிர்வரும் காலங்களில், வருகிற உள்ளாட்சி அமைப்புகளுடைய அந்தத் தேர்தல்கள் நடக்கக்கூடிய காலத்தில் இந்தச் சட்டம் பொருந்துகிற வகையில் சட்டத்தை மாற்றவேண்டுமென்று சொல்லி, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அரசன், சுருக்கமாகப் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) என்ன, நீண்ட நேரம் பேச வேண்டுமா? (குறுக்கீடு) நேரம் இல்லை. ஐந்து மணித்துளிகளில் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசுங்கள்.

பிற்பகல் 6-25

***திரு ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசவே இல்லை. ஆனால், எனக்கு நீங்கள் ஒரு நீதி வழங்க வேண்டும். ஒரு உறுப்பினராக இருக்கிற கட்சியினர் சில பேர், 30 நிமிடம், 35 நிமிடம் பேசியிருக்கிறார்கள். அதைப்போல, எங்களைவிட ஒரு உறுப்பினர்தான் அதிகமாக இருக்கிறார்கள், இந்திய தேசிய காங்கிரசிலே; அவர்கள்கூட இரண்டு பேர் பேசி இருக்கிறார்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. நேரத்தினுடைய நெருக்கடி கருதித்தான் சொல்கிறேன். இன்னும் 17 சட்டமுன்வடிவுகள் இருக்கின்றன. (குறுக்கீடு)

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, புகழேந்தி..(குறுக்கீடு) திரு. அரசனுக்குச். சொல்கிற பதிலை நீங்கள் எடுத்துக்கொள்கிறீர்கள். உங்களுக்குச் சொல்கிறதை அவர் எடுத்துக்கொள்கிறார். (குறுக்கீடு) திரு. புகழேந்தி, என்ன? சொல்லுங்கள்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், ஏற்கெனவே விதி இருப்பதாகச் சொன்னார்கள். ஏற்கெனவே ஒரு விதி இருக்குமானால், இப்போது எதற்கு இப்படி ஒரு சட்டம் என்பதே ஒரு கேள்வி ஆகிறது. ஆகவே, ஏற்கெனவே விதி இருக்கிறது என்று சொல்கிறபோது, புதிய சட்டமே எதற்கு?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Executive Order or விதிகளை மீறுகிறபோது, சட்டம் என்று வந்துவிட்டால், கிடுக்கிப்பிடியாக அது பிடித்து விடும் என்ற காரணத்தால், இதுபோன்ற தவறுகள் எதிர்காலத்தில் நடக்கக்கூடாது என்பதற்காக, விதி சட்டமாக்கப்படுகிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அரசன், (குறுக்கீடு) இல்லை, இல்லை. புகழேந்தி. நீங்கள் கேட்டதற்கு விளக்கம் சொல்லிவிட்டார்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறையிலே பல்வேறு திருத்தச் சட்டமுன்வடிவுகளிலே, எங்கள் இயக்கத்தின் சார்பாக ஒரு சில கருத்துகளை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே விவாதத்திற்கு வைக்கப்பட்டிருக்கிற பொருள்களிலே மிக முக்கியமான பொருள் என்ன என்று சொன்னால், சட்டமன்ற உறுப்பினராக ஆகியிருக்கிற ஒருவர் அல்லது நாடாளுமன்ற உறுப்பினராக ஆகியிருக்கிற ஒருவர் உள்ளாட்சி மன்றங்களிலே பதவிகளை வகிக்கக்கூடாது என்கிற ஒரு சட்டத் திருத்தத்தை நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். ஒரு நல்ல சட்டத் திருத்தம். ஆனால், அந்தச் சட்டத்தை எப்போதிலிருந்து நீங்கள் அமல்படுத்தப் போகிறீர்கள் என்பதிலேதான் ஒரு தவறான முன்னுதாரணத்தினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரும், இந்த அரசும் செய்கிறது என்பதை நான் வருத்தத்தோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால், வருகிற ஒரு சட்டம் என்பது. சட்டம் நிறைவேறியதற்குப் பின்னாலே, அந்தச சட்டத்திற்கு வடிவம் கொடுக்க வேண்டுமேயல்லாமல், அதற்கு முன்னாலே ஒரு முன் தேதியிட்டுக் கொடுப்பது என்பது, அரசியலிலே ஒரு நல்ல நாகரீகமான முன்னுதாரணமாக அமையாது. நம்முடைய





முன்னாள் அமைச்சர், மாண்புமிகு உறுப்பினர் அன்வர் ராஜா அவர்கள் சொன்னார்கள்; ஏற்கெனவே இப்படி ஒரு சட்டம் நிறைவேற்றி இருக்கிறீர்களே என்று நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களைப் பார்த்துக் கேட்டார்கள். நீங்கள் 3 ஆண்டுகள் இருந்த பிறகு, 5 ஆண்டுகள் இருப்பதற்காக, நல்ல பலனுக்காக அந்தச் சட்டத்தை அவர்கள் போட்டார்கள். இங்கே எப்படி வருகிறது என்று சொன்னால், பதவியிலே இருக்கிற ஒருவரை...(குறுக்கீடு)

**திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும். திரு. அன்வர் ராஜா, அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு) சரி, என்ன கேளுங்கள்.

**திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் தவறாகச் சொல்கிறார். நான் இன்னும் சொல்ல வேண்டுமானால், இரு கூறுகளாக இருந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய தலைமையில் ஒன்றாகி, மதுரை கிழக்கிலும், மருங்காபுரியிலும் நாங்கள் வெற்றி பெற்று, இனிமேல் எப்போது தேர்தல் வந்தாலும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான் ஆட்சியைப் பிடிக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) என்று இந்தத் தமிழகத்திலே இருக்கின்ற எல்லோரும் முழு மனதாக நம்புகிற அந்தக் காலத்தில்தான், அந்தத் தேர்தல் நடத்தப்படாமல், extension தரப்பட்டது. அப்போது தேர்தல் வைத்திருந்தால், என்ன ஆகி இருக்கும்? 10 சதவிகிதம்கூட திராவிட முன்னேற்றக் கழகம் தேறி இருக்க முடியாது என்பதுதான் உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி என்றால், 1991 ஆம் ஆண்டு மகத்தான வெற்றி பெற்று நீங்கள் வந்த பிறகு, 5 ஆண்டு காலம் அந்தத் தேர்தலை, பஞ்சாயத்துத் தேர்தலை வைக்காமல் போனீர்களே உள்ளாட்சிக்கு, அதற்கு என்ன அர்த்தம்? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களாலே, என்னைப் போலவே அமைப்பாளராக நியமிக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் திரு. அன்வர் ராஜா அவர்கள் ஒரு தவறான கருத்தைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். 1980 ஆம் ஆண்டு, நாடாளுமன்றத் தேர்தலிலே இரண்டு தொகுதிகளிலே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். இயக்கம் வெற்றி பெற்றது.

[2002 மே 10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசன், சட்டமுன்வடிவுக்கு வாருங்கள்.

பிற்பகல் 6-30

**திரு. ப. அரசன்:** சட்டமுன்வடிவுதான். தவறான கருத்தைச் சொல்லிக்கொண்டிருந்தால் எப்படி?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமுன்வடிவில் உங்கள் கருத்தைச் சொல்லுங்கள்.

**திரு. ப. அரசன்:** அன்வர் ராஜா அவர்கள், அனைத்திந்திய அண்ணா தி.மு.க. 234 தொகுதிகளிலும் வேட்பாளர்களை நிறுத்தி வெற்றி பெற வைத்துவிட முடியும் என்கிற அந்தக் கணக்கிலே அவர் பேசிக்கொண்டிருக்கிறார். அரசியலிலே, தேர்தலிலே வெற்றி பெற்றதற்குப் பின்னாலேதான் எதையும் சொல்ல முடியுமேயல்லாமல், 2 இடைத்தேர்தல்களிலே பெற்ற ஒரு வெற்றியை வைத்துக்கொண்டு மட்டும் கணக்கிட்டுவிட முடியாது என்பதை நான் மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஆகவே, அன்றைக்குக் கொண்டு வந்த சட்டம், பதவி நீட்டிப்புக்காக. அதிலே பல பேர் பலன் பெற்றார்கள். 385 ஊராட்சி ஒன்றியங்களினுடைய பெருந்தலைவர்களும் பலன் பெற்றார்கள். அதிலே எல்லாக் கட்சிகளிலே இருப்பவர்களும் இருந்தார்கள். ஆனால், இன்றைக்குக் கொண்டு வந்திருக்கிற சட்டம், சட்டத்திற்குக் கொடுக்கப்படுகிற வடிவம் தவறானதாக இருக்கிறது. இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டு, நாளைக்கே ஒரு தேர்தல் வந்து, அதிலே யாரும் நிற்க முடியவில்லை என்று சொன்னால், அதிலே யாருக்கும் ஆட்சேபனையே இல்லை. ஆனால், ஜனநாயக ரீதியிலே, பொது மக்களாலே, 60 இலட்சம் மக்கள் வாழ்கிற ஒரு நகரத்திலே வாழ்ந்து, வெற்றி பெற்றிருக்கிற ஒரு மேயரை, ஒரு தலைவரைப் பதவியிலே இருந்து இறக்குவதற்காகக் கொண்டு வரப்படுகிற சட்டம் என்பது ஒரு நல்ல முன்னுதாரணமாகாது.

ஏற்கெனவே உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்கள் இல்லை. உள்ளாட்சி அமைப்புகளைப் பற்றி மிக நன்றாகத் தெரிந்த நம்முடைய மாண்புமிகு முன்னாள் அமைச்சர், அருமை அண்ணன் கோ.சி. மணி அவர்கள்கூட, அவர்களுடைய 5 ஆண்டு காலத்திலே உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்களைத் தரவில்லை; இன்றைக்கும் ஆட்சிக்கு வந்து 1-1/2 ஆண்டு காலம் ஆகிறது; இந்த அரசாங்கமும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்களைத் தரவில்லை. இப்படி உள்ளாட்சி





அமைப்புகளுக்கு அதிகாரங்களைத் தராத நேரத்தில், இருக்கின்ற அதிகாரங்களையும் பறிப்பது என்பது சரியான செயல் அல்ல என்பதை இந்த நேரத்திலே நான் கோடிட்டுக் காண்பிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு சட்டத்தை நிறைவேற்றுகிறபோது அதிலே எந்தவிதமான ஐயப்பாடும் யாருக்கும் வரக்கூடாது. ஒரு சட்டத்தை நிறைவேற்றி அதைச் செயல்படுத்துகிறபோது அதனாலே யாருக்கும் துன்பம் வரக்கூடாது; அதுதான் ஒரு அரசாங்கம் இயற்றுகிற சட்டம் என்பது. எல்லோரும் சொல்லிக்கொள்வதும் அதுதான். நாங்கள் சட்டம் போட்டு இருக்கிறோம்; மக்களுக்கு நல்ல பலனைத் தருவோம்; நல்ல காரியங்களைச் செய்வோம் என்றுதான் எல்லோரும் சொல்லிக் கொண்டிருக்கிறோம். எல்லா அரசியல் கட்சிகளும் அதைத்தான் சொல்லிக் கொண்டிருக்கின்றன. ஆனால், இந்தச் சட்டம் திட்டமிட்டே, வேண்டுமென்றே, ஒரு தனி மனிதரைக் குறி வைத்துச் செய்யப்படுகிற சட்டம் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லி, இந்தச் சட்டத்திற்கு வருகிற காலத்திற்கு என்னுடைய ஆதரவைத் தருகிறேன்; ஆனால், முன் தேதியிட்டுச் செயல்படுத்துகிற அந்தக் காரியத்திற்கு என்னுடைய கண்டனத்தை வன்மையாகத் தெரிவித்து, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர். (குறுக்கீடு) திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 7 சட்டமுன்வடிவுகளிலே பெரும்பாலும் விமர்சனத்திற்கு உள்ளான சட்டமுன்வடிவுகள் 2 அல்லது 3 என்று வைத்துக்கொள்ளலாம். ஒன்று, நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கின்ற ஒருவர் அல்லது சட்டமன்ற உறுப்பினராக இருக்கின்ற ஒருவர் மேயராகவோ, துணை மேயராகவோ, நகராட்சித் தலைவராகவோ அல்லது உள்ளாட்சிகளிலே வேறு எந்தத் தலைமைப் பொறுப்புக்குமோ வரக்கூடாது என்கிற சட்டமுன்வடிவு. இன்னொன்று, மேயராக, துணை மேயராக, கவுன்சிலராக, நகராட்சித் தலைவராக, நகராட்சித் துணைத் தலைவராக, கவுன்சிலராக, பேரூராட்சித் தலைவராக, பேரூராட்சித் துணைத் தலைவராக, கவுன்சிலராக —அதிலே ஒரு முக்கியமான விஷயம் விடப்பட்டு இருக்கிறது; எது என்று கேட்டால், மாவட்டப் பஞ்சாயத்துக்கு அது பொருந்தாது; ஊராட்சி ஒன்றியக் குழுவுக்கு அது பொருந்தாது; ஊராட்சித் தலைவருக்கு அது பொருந்தாது; அந்த மாதிரி சட்டமுன்வடிவில் இருக்கிறது; இவைதான் பெருமளவுக்கு விமர்சனத்திற்கு வந்த சட்டமுன்வடிவுகள். இந்தச் சட்டமுன்வடிவுகளைப் பொறுத்தவரையில், சபையிலே பேசப்பட்ட

போதும் சரி, வெளியிலே விமர்சனங்களுக்கு ஆளாகியபோதும் சரி, ஒரு தனி நபரைக் குறி வைத்துக் கொண்டுவரப்பட்ட சட்டங்கள், சட்டமுன்வடிவுகள் என்றுதான் சொல்கிறார்கள். ஒரு தனி நபரைக் குறி வைத்து ஒரு சட்டமுன்வடிவு வருமேயானால், சட்டம் வருமேயானால், அந்தச் சட்டம் செல்லுபடியாகாது; செல்லாது. அதற்குப் பெயர் 'Bill of Attainder' என்று சொல்வார்கள். இந்தச் சட்டமுன்வடிவு அப்படித்தான் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று சொன்னால், நிச்சயமாக நீதிமன்றத்திற்கு முன்னாலே இந்தச் சட்டமுன்வடிவு நிற்காது. எனவே, அப்படிப்பட்ட ஒரு சட்டமுன்வடிவு வேண்டுமா என்பதை நீங்கள் யோசிக்க வேண்டும். ஆனால், அத்தனை பேரும் ஒரு விஷயத்தை ஏற்றுக்கொண்டார்கள். இனிமேல் வருங்காலத்தில், தேர்தல் வருகின்ற நேரத்தில், ஒரு எம்.எல்.ஏ.யோ, ஒரு எம்.பி.யோ, உள்ளாட்சிகளுக்கு நிற்கக்கூடாது என்பதை அத்தனை பேரும் ஏற்றுக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால், retrospective என்பதை விட்டுவிட்டு, prospective என்று போட்டால், 'வருங்காலத்தில்' என்று போட்டால், அத்தனை பேரும் ஏற்றுக்கொள்கிறார்கள். எனவே, இதை நீங்கள் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோலத்தான், மேயர் வெளிநாடு போகிற விஷயமும் அதே மாதிரிதான் Bill of Attainder-ல் வரும். Bill of Attainder-ல் வந்தால் நிச்சயமாகச் சட்டம் செல்லாது என்பதை நான் இந்த நேரத்திலே பேரவையின் கவனத்திற்கும், அரசின் கவனத்திற்கும் கொண்டு வருகிறேன். இயன்ற வரையில் இதை நீங்கள் சரி செய்ய வேண்டும். இல்லாவிட்டால், நிச்சயமாக இந்தச் சட்டம் செல்லாது.

*பிற்பகல் 6-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே ஒரு முக்கியமான விஷயத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தச் சட்டம், எந்தவொரு தனி நபரையும் அல்லது ஒரு குறிப்பிட்ட நபரையும்பழி வாங்குகின்ற எண்ணத்தோடு கொண்டு வரப்பட்டதல்ல என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு முதலமைச்சராக இருக்கக்கூடிய மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் யாரையும் தனிப்பட்ட முறையிலே பழி வாங்க வேண்டுமென்ற ஒரு தீய எண்ணத்தோடு இந்தச் சட்டம் கொண்டு வரப்படவில்லை என்பதையும்





தெரிவித்துக்கொண்டு, இந்த அவையிலே இருக்கக்கூடிய ஒரு சில சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழகத்திலே இருக்கக்கூடிய பல்வேறு ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள் போன்றவர்களால் எல்லாம் நம்முடைய தமிழ்நாட்டினுடைய தேர்தல் ஆணையாளருக்குக் கடிதம் மூலமாக எழுதப்பட்டு, அந்தக் கடிதத்தினுடைய நகல் அல்லது தேர்தல் ஆணையாளர் அவர்களிடமிருந்து பெறப்பட்ட தகவலின் அடிப்படையிலேதான் மாநிலத் தேர்தல் ஆணையாளர் நம்முடைய தமிழக அரசுக்கு ஒரு கடிதம் அனுப்பியிருக்கின்றார். இவ்வாறு பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள் எல்லாம் — ஒருவருக்கு இரண்டு பதவி என்ற முறை சரிதானா என்றுகூடப் பல சட்டமன்ற உறுப்பினர்களும், ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்களும் கேள்வி கேட்டு -- மனுக்கள் மூலமாகத் தெரிவித்திருக்கிறார்கள். இது தொடர்பாக நீங்கள் ஒரு நல்ல முடிவு எடுங்கள் என்று கோரிக்கை விட்டதற்குப் பின்புதான் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டு இருக்கிறது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதன் அடிப்படையிலேதான் இந்தச் சட்டம் கொண்டு வருவதற்கு நாங்கள், எங்களுடைய அரசு முன் வந்திருக்கிறதே தவிர, இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதுபோலேயோ, மாண்புமிகு உறுப்பினர்கள் பல பேர் பேசியதைப்போலேயோ, திரு. மு.க. ஸ்டாலின் அவர்களைப் பழி வாங்க வேண்டுமென்ற எண்ணம் எங்களுக்கு எந்தவொரு காலகட்டத்திலும் தனிப்பட்ட முறையிலே இல்லை. அந்த அளவுக்கு நாங்கள் -- மிகப் பெரிய செல்வாக்குப் பெற்ற எங்களுடைய அம்மா அவர்கள் அரசியலிலே அவர் ஒருவரைப் பழி வாங்க வேண்டுமென்பதற்காக இந்தச் சட்டத்தின் மூலமாக நாங்கள் -- பழி வாங்குவதால் என்ன இலாபம் என்பதையும் தயவுசெய்து நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்பது என்னுடைய பணிவான வேண்டுகோள். எனவே, எதிர்காலத்திலே, இன்னும் சொல்லப் போனால், நாங்கள் எல்லாம் வசிக்கின்ற சின்னக் கிராமத்திலே -- ஒரு சட்டமன்ற உறுப்பினர் அல்லது ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் ஒரு சின்னக் கிராம ஊராட்சியிலே, ஊராட்சித் தலைவர் பதவிக்குப் போட்டியிட்டால் அந்தக் கிராமத்திலே இருக்கக்கூடியவர், எம்.எல்.ஏ. தேர்தலில் நிற்கும்போது அவரை எதிர்த்து யார் போட்டியிட முடியும்? எம்.பி. ஒருவர் நம் ஊர் ஊராட்சித் தலைவர் பதவிக்குப் போட்டியிடும்போது அவரை எதிர்த்து நம்மால் நிற்க முடியுமா என்று ஒரு சாதாரணக் கிராமத்திலே, பொருளாதாரத்திலே

பின்தங்கியவராக இருக்கக்கூடியவர்கூட, ஒரு சட்டமன்ற உறுப்பினரை எதிர்த்து அல்லது ஒரு நாடாளுமன்ற உறுப்பினரை எதிர்த்துப் போட்டியிட முடியுமா என்பதைத் தயவுசெய்து நீங்கள் இந்த நேரத்திலே சிந்தித்துப் பாருங்கள். அதுபோலத்தான் ஒருவருக்கு ஒரு பதவி என்ற ஒரு நல்ல நோக்கத்திற்காகத்தான் இந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறதே தவிர, ஒருவரைப் பழி வாங்க வேண்டும் என்ற எண்ணம் இல்லை. ஒருவருடைய பதவியைப் பறித்தால் எங்களுக்கு என்ன ஆதாயம்? அதிலே நாங்கள் மகிழ்ச்சி அடையக்கூடியவர்கள் அல்ல என்பதை இந்த நேரத்திலே தெரியப்படுத்தி, ஒருவருக்கு ஒரு பதவி என்ற சட்டத் திருத்தத்தை நீங்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாக ஆதரித்து நிறைவேற்றித் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அடுத்து...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஹேமச்சந்திரன், அமைச்சர் பதில் சொல்லிவிடட்டும். உட்காருங்கள். (குறுக்கீடு) அமைச்சர் பதில் சொல்லி முடித்துவிடட்டும். (குறுக்கீடு)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அப்படியென்றால் ஏன் retrospective effect கொடுக்கிறீர்கள்? நாங்கள் உங்களுடைய அந்தக் கொள்கையை ஆதரிக்கிறோம். அதே நேரத்திலே, இதற்கு முன்காலப் பிராபல்யம் கொடுப்பது என்பதுதான், தவறான எண்ணத்தை மக்களிடம் ஏற்படுத்துகிறது என்பது எங்களுடைய தாழ்மையான கருத்து. ஆகவே, அதை நீங்கள் விட்டுவிடுங்கள். எதிர்காலத்திலே அதை அமல்படுத்துங்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பலர், இதற்கு ஏன் retrospective effect கொடுக்க வேண்டுமென்கிற ஒரு கருத்தைச் சொன்னார்கள். அடிப்படையிலே அவர்கள் கருத்தைத் தவறாக புரிந்துகொண்டார்கள். We are not giving retrospective effect; we are giving retro-active effect. அதற்கு விளக்கம் சொல்கிறேன். There is difference between retrospective law and retro-active law. Retro-active means, acting backward, affecting what is past. Retrospective means looking back, contemplating what is past. There is a slight distinction between an Act which is retrospective and an Act which is retro active, In 1985 'Law Weekly' page 760, a Division Bench of the Madras High Court, after noting the warning issued by Buckley, L.J. in West Vs. Gwynne observed as follows:



பிற்பகல் 6-40

"The word 'retrospective' is very often used loosely; that a good deal of confusion had been caused by the fact that the word is used in more senses than one and that a statute is not retrospective merely because it affects existing rights nor is it retrospective merely because a part of the requisites for its action is drawn from a time antecedent to its passing." இதுதான் நிலைமை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்திலே இருக்கக்கூடிய மாநகராட்சிகளில் 1919 ஆம் ஆண்டு சட்டப்படி மாநகராட்சியை நிர்வாகம் செய்வதற்கு, நிர்வகிப்பதற்கு ஓர் அதிகார அமைப்பாக, அந்த மாநகராட்சிகளினுடைய வார்டு குழு, நிலைக் குழு, கவுன்சில், ஆணையாளர் என்ற 4 அமைப்புகள் மட்டும்தான் இருந்து வந்து இருக்கின்றன. 1996 ஆம் ஆண்டு ஓர் அவசரச் சட்டத்தின் மூலமாக, அதாவது 27-12-1996-ல் ஓர் அவசரச் சட்டத்தை உருவாக்கி, 9-5-1997 நாளிட்ட அரசாணை எண் 116-ன்படி மேயருக்கு நிதி அதிகாரம் வழங்க வேண்டுமென்ற ஒரே காரணத்திற்காகத்தான் இந்த விதிமுறைகளை எல்லாம் உருவாக்கி இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மேயருக்கு நிதி அதிகாரம் கொடுப்பதற்கான ஒரே காரணம்தான். அதைக் கூட, சட்டத் திருத்தமாகக் கொண்டு வராமல், புதிய விதிமுறைகளாக, Rules-களாகத்தான் அமைத்து இருக்கிறார்கள். இவ்விதிமுறைகளின்படி மேயர் ஒப்பந்தப்படி பணிகளில் ஒப்புதல் வழங்கவும், அல்லது மதிப்பீடுகளை அங்கீகரிக்கவுமான சில சட்ட விதிமுறைகளை எல்லாம் அவர்களே உருவாக்கி இருக்கின்றார்கள். இது எதிர்காலத்திலே பல்வேறு தவறான முறைகளிலே செயல்படுத்துவதற்கு வழி வகுக்கும் என்ற காரணத்தினால், 1919 ஆம் ஆண்டு, அதற்கு இருந்த விதிமுறைப்படியே மீண்டும் அதே நிலையிலே இருக்க வேண்டும் என்பதுதான் இந்தச் சட்டத் திருத்தத்தினுடைய நோக்கம் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

வெளிநாடு போவது பற்றி இங்கே தெளிவாக எல்லோரும் பேசினார்கள். முன்பு இதே மேயர்தான் சென்னையில் மேயராக இருந்தார். இன்றைக்கும் அவர்தான் மேயர். கடந்த முறை--அவர் இரண்டு முறை வெளிநாடுகளுக்குச் செல்லும்போதும், மாநில அரசாங்கத்தினுடைய அனுமதியைப் பெற்றுத்தான்--மாநில முதலமைச்சர், 'அவர் வெளிநாடு

[திரு. சி. துரைராஜ்] [2002 மே 10

போவதற்கு அனுமதி வழங்கப்படுகிறது. வழங்கலாம்' என்று கோப்புகளிலே
கையொப்பம் இட்டதற்குப் பின்புதான் போயிருக்கிறார். அவர் போவது,
அவருடைய சொந்தப் பணமாக இருந்தாலும் சரி அல்லது அரசுப்
பணமாக இருந்தாலும் சரி, ஆனால் மாநில அரசாங்கத்திற்குக் கட்டுப்பட்ட
ஒரு நிர்வாகத்திற்கு மேயராக இருக்கக்கூடியவர், மாநில
அரசாங்கத்தினுடைய அனுமதியைப் பெற்றுப் போகவேண்டும் என்பது
தான் ஒரு விதிமுறையே தவிர, தனிப்பட்ட முறையிலே, அவர்
திரு. மு. கருணாநிதியினுடைய மகன் ஸ்டாலின் என்ற முறையிலே போய்
இருந்தால் எங்களுக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை. ஆனால், அதே
சமயத்தில் 45 இலட்சம் மக்கள் தொகை கொண்ட சென்னை
மாநகராட்சியினுடைய மேயர் என்ற முறையிலே அவர் வெளிநாடு
செல்கிறார் என்றால், இந்த மாநகராட்சியினுடைய மேயராக
இருக்கக்கூடியவர், மாநில அரசாங்கத்தினுடைய அனுமதியைப் பெற்றுப்
போகவேண்டும். அதேபோல ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சி,
நகராட்சி போன்ற, தமிழகத்தில் இருக்கக்கூடிய பல்வேறு உள்ளாட்சி
அமைப்புகளிலே இருக்கக்கூடிய பிரதிநிதிகளாக இருந்தாலும் சரி அல்லது
தலைவர், துணைத் தலைவர், வார்டு உறுப்பினராக
இருக்கக்கூடியவர்களாக இருந்தாலும் சரி மாநகராட்சி சார்பிலோ,
நகராட்சி சார்பிலோ வெளிநாடு செல்வதாக இருந்தால், மாநில
அரசாங்கத்தினுடைய அனுமதியைப் பெறவேண்டும் என்று ஒரு
சட்டத்தைக் கொண்டு வருவதற்காகத்தான், நெறிமுறைப்படுத்து
வதற்காகத்தான் இந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறது என்பதை இந்த
நேரத்தில் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, நிலத்தடி நீர் சம்பந்தமாக--சென்னை, காஞ்சிபுரம்,
திருவள்ளூர் மாவட்டப் பகுதிகளிலே, சென்னை மாநகரினுடைய
மக்களுடைய பிரச்சினைகளை, குடிநீர்ப் பிரச்சினைகளைப்
போக்குவதற்குக் கடந்த காலங்களில் நாம் எவ்வாறெல்லாம்
கஷ்டப்பட்டோம் என்பதை நீங்கள் எல்லாம் நன்கு அறிவீர்கள். அதை
ஒழுங்குபடுத்துவதற்காகத்தான், நிலத்தடி நீர்ச் சட்டத்திலே, கடந்த
காலங்களிலே உருவாக்கப்பட்ட சட்டத்தில், 1987 ஆம் ஆண்டு
இயற்றப்பட்ட சட்டத்தில் ஒரு வரைமுறை இல்லாத காரணத்தால், இந்தப்
புதிய சட்டத்தின் மூலம் அதை வரைமுறைப்படுத்தி, அந்த நிலத்தடி
நீரினுடைய மட்டத்தை உயர்த்துவதற்கும், பல்வேறு நல்ல சட்டங்களை
எல்லாம் இங்கே கொண்டு வருவதற்கும் இந்தச் சட்டத்திலே வழிவகை
செய்யப்பட்டுள்ளது. எனவே, இந்தச் சட்டத்தையும் நிறைவேற்றித் தருமாறு
அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



2002 மே 10] [திரு. சி. துரைராஜ்]

பிற்பகல் 6-45

சென்னையைத் தவிர்த்து மீதம் உள்ள 5 மாநகராட்சிகளில் விதிமுறைகளை மீறிக் கட்டடம் கட்டியவர்கள், ஏற்கெனவே கட்டிய கட்டடங்களைத் தங்களுடைய விருப்பப்படி மாற்றியமைத்தவர்களுக்கெல்லாம், வரைமுறைப்படுத்துவதற்காக இந்தச் சட்டத்தின் மூலம் புதிய வழிமுறை உருவாக்கப்பட்டிருக்கிறது. சென்னையைத் தவிர்த்து மீதியுள்ள 5 மாநகராட்சிகளில் அவ்வாறு கட்டடங்கள் கட்டியவர்கள், விருப்பப்படி கட்டிய கட்டடத்தை மாற்றியமைத்தவர்களுக்கு 6 மாதத்திற்கு ஒரு முறை அபராதம், ஒரு குறிப்பிட்ட தொகையை வசூல் செய்த முறையையும் மாற்றி, ஒரே முறை—சென்னை மாநகராட்சியிலே எப்படி ஒரு விதிமுறை இருக்கிறதோ, அதேபோல மீதம் உள்ள 5 மாநகராட்சிகளுக்கும் ஒரே முறையில், ஒரே தவணையாக, கட்டட உரிமையாளர்களிடமிருந்து அந்தக் கட்டடத்தினுடைய நீளம், அகலம், அந்தக் கட்டடத்தினுடைய தன்மைக்கேற்ப ஒரு தொகையை வசூல் செய்வதற்கு இந்தச் சட்டம் வழிவகை செய்கிறது; ஊராட்சி, நகராட்சி, மாநகராட்சி போன்ற அமைப்புகளுக்கு எல்லாம் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம்தான் திட்டங்கள் ஆய்வு செய்யப்பட வேண்டும் அல்லது மதிப்பீடு தயார் செய்தல் வேண்டும் என்ற ஒரு நிலை இருக்கிறது. அந்த நிலையை மாற்றி, ஒரு தனிப்பட்ட நபர் மூலமாகவோ அல்லது வெளிநாட்டு அமைப்புகள் மூலமாகவோ சில திட்டங்களையும் தயார் செய்யலாம் என்ற ஒரு மாற்றத்தைக் கொண்டு வருவதற்காக, குடிநீர் வடிகால் வாரியத்திற்குள்ள சட்டத்தை, சட்டத் திருத்தத்தை மாற்றுவதற்கு என இங்கே 7 சட்டத் திருத்தங்கள் என்னால் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தச் சட்டத் திருத்தங்களைச் சட்டமாக நிறைவேற்றித் தருமாறு அன்போடு கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (குறுக்கீடுகள்)

அடுத்து திருத்தம் வருகிறது. (குறுக்கீடுகள்) திருத்தம் அடுத்து வருகிறது. பிரிவுவாரியாகத் திருத்தம் வருகிறது.

**திரு. துரைமுருகன்:** நாங்கள் அந்த பில்லையே எதிர்க்கிறோம். திருத்தம் எதற்கு?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது சரி (குறுக்கீடு) இல்லை, இல்லை' உங்களுடைய திருத்தம் வருகிறது. நீங்கள் கொடுத்த திருத்தம் வருகிறது. (குறுக்கீடு) பேராசிரியர் அவர்களே, நீங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக எதுவும் சொல்கிறீர்களா? (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** திருத்தத்தை உள்ளடக்கி இப்போதே பேசுவார் பேராசிரியர் அவர்கள். அவ்வளவுதான். திருத்தத்தை உள்ளடக்கிப் பேசுவார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படியா!

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வளவு மாற்றுக் கட்சியைச் சேர்ந்த அனைத்துக் கட்சித் தலைவர்களும் வலியுறுத்திக் கேட்டும், எந்த வகையிலேயும், எதிர்க்கட்சிகளினுடைய திருத்தம் எதையும் ஏற்றுக்கொண்டதாக உள்ளாட்சித் துறை அமைச்சர் எந்தவொரு கருத்தையும் ஏற்றுத் தெரிவிக்காத காரணத்தால், திராவிட முன்னேற்றக் கழகம், எங்களுடைய எதிர்ப்பைத் தெரிவிக்க வெளிநடப்புச் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். வெளிநடப்புச் செய்கிறோம்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட 2½ மணி நேரமாக நடைபெற்ற இந்த விவாதத்தில் பெரும்பாலானோர் வலியுறுத்தியபடி, இதை வருங்காலத்தில் மட்டும் அமலுக்குக் கொண்டுவர வேண்டும் என்று நாங்கள் வைத்த கோரிக்கையை ஏற்றுக்கொள்ளாததைக் கண்டித்தும், செல்லுபடியாகாத சட்டத்திற்காக 2½ மணி நேரத்திற்கு மேல் இந்தச் சட்டமன்றத்திலே விவாதித்தது சரியல்ல என்பதை வலியுறுத்துகின்ற வகையிலேயும், தமிழ் மாநில காங்கிரஸ் வெளிநடப்புச் செய்கிறது.

(தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட, ஒருவருக்கு ஒரு பதவி, வெளிநாடு செல்வதற்கு அனுமதி போன்ற இந்தச் சட்டத் திருத்தங்களிலே, எதிர்க்கட்சிகள் எல்லாம் சேர்ந்து ஒரே குரலில் இந்தச் சட்டம் வேண்டாம்; இந்தச் சட்டத் திருத்தம் என்பது தேவையில்லாத ஒன்று; ஒரு தனி நபரைக் குறி வைத்துப் பழிவாங்கக்கூடிய



ஒன்று என்றெல்லாம் வலியுறுத்தி, தங்களுடைய எதிர்ப்புகளை, கண்டனத்தைத் தெரிவித்தும்கூட, இந்தத் தமிழக அரசு இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருகின்ற காரணத்தாலே, இது தேவையில்லாத சட்டம், இந்தச் சட்டத்தைக் கண்டித்து, எதிர்த்து, பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் தேவையான ஒன்றாக இருந்தாலும்கூட, இதனுடைய செயல்பாடுகளை வருங்காலத்திலே நீங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று வைத்த எங்களுடைய கோரிக்கை ஏற்கப்படாத காரணத்தினால், நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடபபுச் செய்தனர்.)

பிற்பகல் 6-50

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனநாயக விரோதமான முறையில் இந்த நடவடிக்கை அமைகிறது என்ற காரணத்தால், நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

**திரு. ஜி. பழனிசாமி:** ஒருவருக்கு ஒரு பதவி என்ற சட்டத்தை அரசு மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று நாங்கள் வலியுறுத்தியதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் யோசிப்பார்கள் என்று எதிர்பார்த்தோம். அது நடக்காததால் அதை எதிர்த்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வெளிநடப்புச் செய்கிறோம்.

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம், நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

## பிரிவு-2

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரிவு 2, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. துரைமுருகன், திரு. மு.க. ஸ்டாலின், டாக்டர் க. பொன்முடி, திரு. கு.பிச்சாண்டி, திரு. இ. புகழேந்தி மற்றும் திரு. எ.வ. வேலு ஆகியோர் திருத்தத்தைத் தந்திருக்கிறார்கள். திருத்தங்களை முன்மொழிவதற்கு அவர்கள் இல்லாத காரணத்தால், அது விடப்படுகிறது.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம், நிறைவேறியது.

பிரிவு 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 3, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று, கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம், நிறைவேறியது.

## பிரிவு-4

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரிவு 4, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தம் திருத்தத்தை மொழியலாம்.





**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"In clause 4, in sub-clause (a), for 'exceeds one lakh of rupees shall be made by the Commissioner, *substitute*' does not exceed one lakh of rupees shall be made by the Commissioner".

என்ற திருத்தத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று, கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், திருத்தம், ஏற்கப்பட்டது.

பிரிவு 4 திருத்தப்பட்டபடி சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று, கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவுகள் 5 மற்றும் 6, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 5 மற்றும் 6, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று. கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு-7

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரிவு 7. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தம் திருத்தத்தை மொழியலாம்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"In clause 7, in sub-clause (a) *for* 'exceeds fifty thousand rupees shall be made by the Commissioner', *substitute* 'does not exceed fifty thousand rupees shall be made by the Commissioner.'

என்ற திருத்தத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், திருத்தம் ஏற்கப்பட்டது.

பிரிவு 7, திருத்தப்பட்டபடி சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவுகள் 8 மற்றும் 9, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 8 மற்றும் 9, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)





ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரிவு 10. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தம் திருத்தத்தை மொழியலாம்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"In Clause 10, in sub-clause (a), *for* 'exceeds fifty thousand rupees shall be made by the Commissioner', *substitute* 'does not exceed fifty thousand rupees shall be made by the Commissioner.'

என்று திருத்தத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், திருத்தம் ஏற்கப்பட்டது.

பிரிவு 10, திருத்தப்பட்டபடி சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு "சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2002) திருத்தப்பட்டபடி நிறைவேற்றப் பெறவேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு திருத்தப்பட்டபடி ஏற்கப்பட்டது.

**(ஏ) தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரிய (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரிய (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/2002). மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரிய (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/2002)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்" எனக் கோருகிறேன்.

@ 17-4-2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தம் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

பிற்பகல் 6-55

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[திரு. சி. துரைராஜ்] [2002 மே 10

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரிய (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/2002) நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

**(ஐ) தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2002). மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2002)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@ 22-4-2002-ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



2002 மே 10] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

**பிரிவு - 2**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரிவு 2. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தம் திருத்தத்தை மொழியலாம்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"In Clause 2,

(a) *for* 'chairman and vice-chairman', *substitute* 'chairman, vice-chairman and member.'

(b) *for* 'president or Vice-President', *subsitute* 'president, vice-president or member."

(c) *for* 'Chairman and Vice-Chairman', *substitute* 'chairman, vice-chairman or member'."

என்ற திருத்தத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், திருத்தம் ஏற்கப்பட்டது.

பிரிவு 2, திருத்தப்பட்டபடி சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

## பிரிவு - 3

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரிவு 3, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தம் திருத்தத்தை மொழியலாம்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

``In Clause 3,

(a) in the marginal heading *for* 'chairman or vice-chairman', *substitute* 'chairman, Vice-Chairman and member'.

(b) *for* 'president or Vice-President', *substitute* 'president, vice-president or member'.

(c) *for* 'chairman or Vice-Chairman', *substitute* 'chairman, vice-chairman or member'."

என்ற திருத்தத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், திருத்தம் ஏற்கப்பட்டது

பிரிவு 3, திருத்தப்பட்டபடி சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம் தீர்மானம், நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2002) திருத்தப்பட்டபடி நிறைவேற்றப் பெறவேண்டும்."
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு திருத்தப்பட்டபடி ஏற்கப்பட்டது.

### (ஏ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/2002) மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/2002)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

### பிரிவு-2-ல் உள்ள கூறு 52-ஏ

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரிவு 2-ல் உள்ள கூறு 52-ஏ, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. துரைமுருகன், திரு. மு.க. ஸ்டாலின், டாக்டர் க. பொன்முடி, திரு. கு. பிச்சாண்டி, திரு. இ. புகழேந்தி மற்றும் திரு. எ.வ. வேலு ஆகியோர் திருத்தத்தைத் தந்திருக்கிறார்கள். திருத்தத்தை முன் மொழிவதற்கு அவர்கள் இல்லாத காரணத்தால், அது விடப்படுகிறது.

பிரிவு 2-ல் உள்ள கூறு 52-ஏ, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@22-4-2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.





ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

### பிரிவு-2

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரிவு 2, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தம் திருத்தத்தை மொழியலாம்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"In Clause 2,

(a) *for* 'Mayor and Deputy Mayor', *substitute*, 'Mayor, Deputy Mayor and Councillor'.

(b) *for* 'Mayor or Deputy Mayor', *substitute*, 'Mayor, Deputy Mayor or Councillor'.

என்ற திருத்தத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், திருத்தம் ஏற்கப்பட்டது.

பிரிவு 2, திருத்தப்பட்டபடி சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [2002 மே 10

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு - 3

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரிவு 3, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தம் திருத்தத்தை மொழியலாம்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"In Clause 3,

(a) *for* 'Mayor and Deputy Mayor', *substitute*, 'Mayor, Deputy Mayor and Councillor'.

(b) *for* 'Mayor or Deputy Mayor', *substitute*, 'Mayor, Deputy Mayor or Councillor'."

என்ற திருத்தத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், திருத்தம் ஏற்கப்பட்டது.

பிரிவு 3, திருத்தப்பட்டபடி சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



2002 மே 10] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு - 4

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரிவு 4, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தம் திருத்தத்தை மொழியலாம்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"In Clause 4,

(a) *for* 'Mayor and Deputy Mayor', *substitute*, 'Mayor, Deputy Mayor and Councillor'.

(b) *for* 'Mayor or Deputy Mayor', *substitute*, 'Mayor, Deputy Mayor or Councillor'."

என்ற திருத்தத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், திருத்தம் ஏற்கப்பட்டது.

பிரிவு 4, திருத்தப்பட்டபடி சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம் தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு - 5

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரிவு 5, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தம் திருத்தத்தை மொழியலாம்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"In Clause 5,

(a) *for* 'Chairman and Vice-Chairman', *substitute*, 'Chairman, Vice-Chairman and Councillor'.

(b) *for* 'Chairman or Vice-Chairman', *substitute*, 'Chairman, Vice-Chairman or Councillor'."

என்ற திருத்தத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், திருத்தம் ஏற்கப்பட்டது.

பிரிவு 5, திருத்தப்பட்டபடி சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.





ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு - 6

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரிவு 6, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. துரைமுருகன், திரு. மு.க. ஸ்டாலின், டாக்டர் க. பொன்முடி, திரு. கு. பிச்சாண்டி, திரு. இ. புகழேந்தி மற்றும் திரு. எ.வ. வேலு ஆகியோர் திருத்தத்தைத் தந்திருக்கிறார்கள். திருத்தத்தை முன்மொழிவதற்கு அவர்கள் இல்லாத காரணத்தால், அது விடப்படுகிறது.

பிற்பகல் 7-00

பிரிவு 6, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தம் திருத்தத்தை மொழியலாம்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"In clause 6,

(a) In the marginal heading *for* 'Chairman or Vice-Chairman', *substitute*, 'Chairman, Vice-Chairman and Councillor';

(b) *for* 'Mayor or Deputy Mayor of a Municipal Corporation or Chairman or Vice-Chairman of a Municipality or of a Town Panchayat', *substitute*, 'Mayor, Deputy Mayor or Councillor of a Municipal Corporation or Chairman, Vice-Chairman or Councillor of a Municipality or of a Town Panchayat'."

என்ற திருத்தத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், திருத்தம் ஏற்கப்பட்டது.

பிரிவு 6, திருத்தப்பட்டபடி சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/2002) திருத்தப்பட்டபடி நிறைவேற்றப் பெறவேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.





ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு திருத்தப்பட்டபடி ஏற்கப்பட்டது.

### (ஒ) தமிழ்நாடு மாநகராட்சிகள் மற்றும் நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்டச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிகள் மற்றும் நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்டச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/2002). மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிகள் மற்றும் நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்டச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/2002) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, திருத்தங்கள் இல்லை.

---

@2-5-2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[பேரவைத் தலைவர்] [2002 மே 10

பிரிவுகள் 2 முதல் 4 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிகள் மற்றும் நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்டச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/2002) நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.



2002 மே 10]

### (ஔ) சென்னைப் பெருநகர்ப் பரப்பிட நிலத்தடி நீர் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர்ப் பரப்பிட நிலத்தடி நீர் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/2002). மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர்ப் பரப்பிட நிலத்தடி நீர் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/2002) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 8 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 8 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@8-5-2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[பேரவைத் தலைவர்] [2002 மே 10

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர்ப் பரப்பிட நிலத்தடி நீர் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/2002) நிறைவேற்றப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.



2002 மே 10]

**(அ.அ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/2002). மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/2002) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 6 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 6 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@ 9-5-2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/2002) நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.





### (ஆஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/2002). மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/2002) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து வருகிற 5 சட்டமுன்வடிவுகளும் மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களுக்குத் தொடர்புடையவை. எனவே, கருத்துகள் கூற விரும்பும் உறுப்பினர்கள், இந்த 6 சட்டமுன்வடிவுகள்மீதும் கூறலாம். யாராவது பேசுகிறீர்களா? (குறுக்கீடு) திரு. சி. ஞானசேகரன்.

பிற்பகல் 7-05

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது விற்பனை வரி சம்பந்தமாகப் பல சட்டமுன்வடிவுகள் இங்கே கொண்டு வரப்பட்டிருக்கின்றன. இதை நாங்கள் மானியக் கோரிக்கையிலும்....

## 6. அறிவிப்புகள்

### (அ) 'யார்-எவர்' என்ற புத்தகம் உறுப்பினர்களுக்கு வழங்கப் பெறுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணித்துளி. பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 12-வது சட்டமன்றப் பேரவையின் உறுப்பினர்களின் வாழ்க்கை விவரக் குறிப்புகள் அடங்கிய 'யார்-எவர்' என்ற புத்தகம் அச்சிடப்பெற்று,

@ 8-5-2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[பேரவைத் தலைவர்] [2002 மே 10

சட்டமன்றப் பேரவைச் செயலக நூலக 2-வது பிரிவில் தயாராக உள்ளது. உறுப்பினர்கள் அப்புத்தகத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

### (ஆஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002—தொடர்ச்சி

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை விவாதத்தின்போதும், அதேபோல, நிதிநிலை அறிக்கையினுடைய விவாதத்தின்போதும், புதிதாக விதிக்கப்பட்டிருக்கிற அந்த விற்பனை வரி குறித்தும், அதேபோல, உயர்த்தப்பட்டிருக்கிற வரி குறித்தும் நாங்கள் நிறையவே சொல்லியிருக்கிறோம்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

நுழைவு வரி 'என்கிற பெயரால், Entry Tax எல்லாம் போட்டு, இப்போது வியாபார மந்தமே தமிழகத்திலே ஏற்படக்கூடிய ஒரு நிலையை அரசு உருவாக்கியிருக்கிறது. ஏற்கெனவே, நம்முடைய விவசாய இடுபொருட்களுக்கு, உரம் போன்றவற்றிற்கு எல்லாம் பலமுனை வரியை நீங்கள் போட்டு, அந்தப் பலமுனை வரி போடுகிற காரணத்தினாலே, அது மத்திய அரசு விதித்திருக்கிற அந்த M.R.P. Rate-ஐவிட உரங்கள், இடுபொருட்கள் எல்லாமே Essential Commodities Act-லே வரக்கூடிய காரணத்தினாலே, அந்த M.R.P. Rate-ஐவிட நீங்கள் அதிகமாக வரியைப் போட்டு விலையை உயர்த்துகிற காரணத்தினாலே, அது மத்திய அரசு சட்டத்திற்கே விரோதமாக அமைகிறது என்றுகூட நாங்கள் வலியுறுத்தினோம். Entry Tax-ஐப் போடுகிற காரணத்தினாலே பல்வேறு பொருட்களுக்கு விலை உயர்வு ஏற்படுகிறது. அதேபோல, பொருளாதார மந்தம் ஏற்படுகிறது. பக்கத்து மாநிலங்களிலே, பாண்டிச்சேரி, ஆந்திரா, கர்நாடகா போன்ற இடங்களிலே பொருள் விலை குறைவு என்று சொன்னால், யாருமே அங்கேதான் போய் வாங்கிவிடுவார்கள். ஒரு மனித சமுதாயத்தினுடைய எண்ணம் எது என்று சொன்னால், பக்கத்து மாநிலத்திலே எங்கேயாவது பொருள் கொஞ்சம் குறைந்த விலையிலே கிடைக்கிறது என்று சொன்னால், அங்குதான் போய் வாங்குவார்களேயொழிய, நீங்கள் விதித்திருக்கிற வரி காரணமாக விலைகள் எல்லாம் உயர்ந்து, அதாவது பொது விற்பனை வரி அதிகரிக்கப்பட்டிருக்கிற



2002 மே 10] [திரு. சி. ஞானசேகரன்]

காரணத்தினாலே, சில நேரங்களிலே புதியதாக விதிக்கப்பட்டிருக்கிற காரணத்தினாலே பொருட்களுடைய விலையேற்றம் என்று வருகிறபோது, தமிழ்நாட்டினுடைய வியாபாரம் முழுக்க, முழுக்க நிச்சயமாக மந்த நிலையை அடையும் என்பதை நான் இங்கே வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நீங்கள் விற்பனை வரியை எவ்வளவுதான் போட்டாலும், வரி உயர, உயர, வரி ஏய்ப்புக்கு நீங்கள் வழியைச் செய்து கொண்டிருக்கிறீர்கள். இப்போது தமிழகத்திலே போடப்படுகிற பட்ஜெட்டிலே 66 சதவீதம் இன்று இந்தப் பொது விற்பனை வரியிலிருந்து நமக்குக் கிடைக்கிறது. இந்த 66 சதவீதம் கிடைக்கிறது என்று சொல்கிறபோது, இதில் வரி ஏய்ப்பு இன்னும் ஒரு 20, 25 சதவீதம் தமிழகத்திலே இருந்து கொண்டிருக்கிறது. எந்த ஒரு வியாபாரியும் இப்போது உண்மையான கணக்கைக் காட்டுவதில்லை. அவர்கள் நல்லவர்களாக இருந்தாலும்கூட, அதிகாரிகள் அவர்களை விட்டு வைப்பதில்லை. ஏன் இவ்வளவு கட்டுகிறீர்கள், வேண்டாம் என்று வேறு வழியை அவர்களே அவர்களுக்குச் சொல்லிக் கொடுத்து, எப்படியாவது வரியை ஏய்க்க முடியும் என்கிற ஒரு வித்தையைக் கற்றுக் கொடுக்கக்கூடியவர்களே இந்தத் துறையைச் சார்ந்தவர்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நீங்கள் உண்மையைக் கண்டுபிடித்து, வரி ஏய்ப்பைத் தடுத்தாலே, இந்தப் பொது விற்பனை வரியை நீங்கள் தவிர்க்கலாம். அதேபோல, entry tax-ஐத் தடுக்கலாம். இவற்றையெல்லாம் நீங்கள் செய்வதற்குப் பதிலாக—நாம் மக்களுக்கு ஒரு நல்ல வாக்கைக் கொடுத்துவிட்டுத்தான் அவர்களுடைய வாக்கைப் பெற்று நாம் இப்போது வெற்றி பெற்று வந்திருக்கிறோம். கூடுதலாக நிச்சயமாக வரியைப் போடாது, இவர்கள் ஆட்சி அமைத்தால் ஒரு நல்ல ஆட்சியைக் கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையோடு நமக்கு வாக்கு அளித்து, இங்கே அமர வைத்திருக்கிறார்கள். அவர்களை நாம் இப்போது வஞ்சிக்கின்ற வகையில் இந்த அரசு விற்பனை வரியை ஏராளமாக உயர்த்தி இருக்கிறது. Entry Tax-ஐப் புதியதாகப் போட்டு இருக்கிறீர்கள். ஒருமுனை வரி என்பது தான் நிச்சயமாக நம்முடைய நாட்டினுடைய வளர்ச்சிக்கும் சரி, பணத்தைப் பெறுவதற்கும் சரி, ஒரு நல்ல வழியாக அமையும். அவற்றையெல்லாம் கெடுத்துக்கொண்டு, இப்போது பலமுனை வரி என்று போட்டு, முழுக்க, முழுக்க வரி ஏய்ப்புக்கு வழியைக் காட்டிவிட்டீர்கள். ஆகவே, இந்த உயர்வை, புதியதாகப் போடப்பட்டிருக்கிற entry tax-ஐ நான் தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக இங்கே முழுமையாக எதிர்த்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்.

*பிற்பகல் 7-10*

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு விற்பனை வரியினுடைய பல சட்டங்களை ஆய்வுக்கு எடுத்து நீங்கள் நிறைவேற்றப் போகிறீர்கள். மானியக் கோரிக்கை நேரத்திலே, இங்கே இருக்கின்ற அத்துணை எதிர்க்கட்சிகளைச் சார்ந்தவர்களும் நல்ல ஆலோசனைகளை உங்களுக்குச் சொன்னார்கள். இங்கே பேசிய யாருமே. வரி போட வேண்டாம் என்று ஒரு கட்சிகூடச் சொல்லவில்லை.

வரி போடுங்கள் என்றுதான் சொன்னோமேயொழிய, வரியைப் போட வேண்டாமென்று சொல்லவில்லை. வரி வர வேண்டும், அதன் மூலமாக நாட்டிலே நல்ல காரியங்கள் நடக்க வேண்டுமென்ற எண்ணத்தோடுதான் எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் அன்றைக்கு, வரியைப் போடுங்கள்; ஆனால், ஒருமுனை வரியாகப் போடுங்கள் என்று சொன்னோம். அதற்கு எந்தவிதமான ஒரு மாறுதலான கருத்தும் அரசாங்கத்திலே இருப்பதாக எங்களுக்குத் தெரியவில்லை. இன்றைக்கு நீங்கள், கலைஞர் ஆட்சி காலத்திலே ஒருமுனை வரியாக இருந்ததை மாற்றி கூடுதல் வரி, சர்சார்ஜ், நுழைவு வரி என்று சொல்லி பல குழப்பமான சூழ்நிலையை உருவாக்கி வைத்திருக்கிறீர்கள். ஒரு பொருள், சரக்கு வாங்கிக் கொண்டு அந்தச் சரக்கு வெளியே போகின்ற நேரத்திலே, ஒரு முனை வரியாக இருந்தால், செக்போஸ்டிலே பிரச்சினையே இல்லாமல் போய்விடும். ஆனால், அது பலமுனை வரிக்குள் வருகின்ற நேரத்திலே, எந்த பாயின்டிலே எங்கே வாங்கினாய் என்று கேட்கக்கூடிய ஒரு மோசமான சூழ்நிலை; இன்னும் சொல்லப் போனால், நீங்கள் செக்போஸ்ட் எல்லாம் வைக்கப் போகிறீர்கள்.

அன்றைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பிலே பார்த்தோம் என்று சொன்னால், வேறு ஏதோ அறிவிப்பு வரும் என்று நாங்கள் வேகமாகப் புத்தகத்தைத் திறந்து பார்த்தால், நாங்கள் செக்போஸ்ட் வைக்கப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். செக்போஸ்ட் வைக்கின்ற நேரத்திலே, பலமுனை வரி வருகின்ற நேரத்திலே traffic வரும். பழைய ஆட்சிக் காலத்திலே இதெல்லாம் இருந்து இருக்கிறது. டிராஃபிக் ஜாம் வரும். வரிசையாக லாரிகள் நிற்கும். அதிகாரிகள் லஞ்சம் வாங்கக்கூடிய போக்கெல்லாம் வரக்கூடிய சூழ்நிலை வரும். ஆகவே,





நாங்கள் இந்த அரசாங்கத்திற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் சொல்வது எல்லாம், நீங்கள் வரி போட வேண்டாம் என்று சொல்லவில்லை, ஒருமுனை வரியாக வையுங்கள். இன்னொன்று, Entry tax போட்டிருக்கிறீர்கள். அந்த Entry tax எப்படி வருகிறது என்று சொன்னால், நம்முடைய மாநிலத்திலே இல்லாத பொருட்கள் அங்கிருந்து வருகின்றன. அந்த Entry tax மூலமாக— வருகிற அந்த raw materials-களுக்கு நீங்கள் Entry tax போடுவதன் மூலமாக இங்கே சரக்குகளுடைய விலை கூடி நாம் வேறு மாநிலத்தோடு போட்டி போட முடியவில்லை. இருக்கின்ற நிதர்சனமான உண்மைகள் இதெல்லாம். ஆகவே, இங்கே இருக்கிற அமைச்சருக்கு நான் மறுபடியும் சொல்லிக்கொள்வது எல்லாம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே சொல்லி, மாண்புமிகு நிதியமைச்சரை வைத்துப் பேசி, வியாபாரிகளை, தொழிலதிபர்களை அழைத்துப் பேசுங்கள். உங்களுக்கு என்னென்ன சிரமங்கள் இருக்கின்றன, எங்களுக்கு வரி இவ்வளவு வர வேண்டும், வழிகளைச் சொல்லுங்கள் என்று கேட்டு, அப்படி ஒரு காரியம் செய்தால்தான் சரியாக வருமேயொழிய அதிகாரிகள் எப்போதும் கணக்குகள்தான் சொல்வார்கள். அவர்களைப் பொறுத்தவரையில் கணக்குகளைப் போட்டு, அதிலே வரி வரும், இதிலே வரி வரும் என்று சொல்வார்களேயொழிய உண்மையான சூழ்நிலை, நீங்கள் எதிர்பார்ப்பது வரப் போவது இல்லை. நீங்கள் ஒருமுனையாக வரி போடுகிறீர்கள் என்று சொன்னால், 8,000 கோடியாக இருக்கிற அந்த வரி 9,000 கோடியாகக்கூடிய நிலை இந்தத் தடவை நிச்சயமாக வரும். அதற்கு வேண்டிய வழிவகைகளை நீங்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று, இந்த ஆண்டிலே மதிப்புக் கூட்டு வரி— மத்திய அரசாங்கத்திலே இருந்து புதிதாக மதிப்புக் கூட்டு வரி, அதையும் கொண்டு வரக்கூடிய வேலையைச் செய்வதாக நீங்கள் சொல்லியிருக்கின்றீர்கள். இந்த மதிப்புக் கூட்டு வரி இன்னும் சிக்கலான வேலை. மதிப்புக் கூட்டு வரியைப் பார்ப்போம் என்று சொன்னால், பலமுனை வரியினுடைய மாறுபட்ட ஒரு வரிதான் அந்த வரி. அதையெல்லாம் கொண்டுவருவதற்கு முன்பாக, தொழிலதிபர்கள், வியாபாரிகளை அழைத்து வைத்துப் பேசி, இந்த மதிப்புக் கூட்டு வரியிலே என்னென்ன பிரச்சினைகள் என்று கேட்டுச் செய்ய வேண்டும். காரணம், நாம் C-form-மே இப்போது வெளி மாநிலத்திற்கு விட்டுக் கொண்டு, C-Form-மே நம்மாலே வாங்கித் தர முடியவில்லை. அப்படியெல்லாம் சிக்கல் இருக்கிறது. ஆக்வே பிராக்டிக்கலாக இதில் இருக்கிற சிக்கல்களைப்

புரிந்துகொண்டு, அரசாங்கத்திற்கு எந்தவிதமான வரி இழப்பும் இல்லாமல், அப்படிப்பட்ட காரியத்தை நீங்கள் செய்ய வேண்டும். இந்தத் தடவை பார்ப்போம் என்று சொன்னால், நீங்கள் வரியை எதற்குப் போட்டிருக்கிறீர்கள் என்று சொன்னால், கற்பூரம், அகர்பத்தி, சாம்பிராணியைக்கூட நீங்கள் விடவில்லை. 4 சதவிகித வரி போட்டிருக்கிறீர்கள். போன ஆட்சியில் நாங்கள் போடாத, இல்லாத வரியை எல்லாம், இன்று சாதாரணப் பொருட்களுக்கு எல்லாம், அன்றாடம் பொது மக்கள்—நீங்கள் வரி போடுங்கள், வரி போடுகின்ற நேரத்திலே, எதற்கு வரி போட வேண்டும், எதற்கு வரி போட வேண்டாமென்று பிரித்து, அன்றாடம் ஏழை மக்கள் உபயோகிக்கின்ற பொருட்களுக்கு வரியை நீங்கள் விலக்குவீர்கள் என்று சொன்னால், அதனால் இந்த அரசாங்கத்திற்கு நல்ல பெயர் கிடைக்கும். போன அரசாங்கத்திலே எங்கள் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள், வரியைப் போட்டார்கள். ஆனால், பொது மக்கள் அன்றாடம் உபயோகிக்கும் பொருட்களுக்கு எல்லாம் வரியை நீக்கி இருந்தார்கள். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை நீங்கள் உண்டாக்கியாக வேண்டும். நாங்களும் சரி, பொது மக்களும் சரி, எல்லோருமே, எதிர்க்கட்சிகளைச் சார்ந்த அத்தனை பேர்களுமே நிறைய வரிவிலக்கு வருமென்று எதிர்பார்த்தோம். ஆனால் நம்முடைய முதலமைச்சர் அவர்கள், ஒரே ஒரு பொருளுக்கு மட்டும் வரிவிலக்கைச் சொல்லியிருக்கிறார்கள். அதுகூட நீங்கள் இன்னும் போடவில்லை. போடுவதாகச் சொன்ன பட்டுக்கு, 3,000 ரூபாய்க்கு மேல் இருக்கிற அந்தப் பட்டுக்கு 1% வரியை நாங்கள் போடவில்லை என்று சொல்லியிருக்கிறார்களேயொழிய, வேறு எந்தவிதமான வரிச் சலுகையும் இந்த அரசாங்கத்திலேயிருந்து கிடைக்கவில்லை என்ற வருத்தம் பொது மக்களுக்கும் இருக்கிறது, தொழில் அதிபர்களுக்கும் இருக்கிறது என்பதைச் சொல்லிக் கொண்டு, வரியைக் குறைத்து, நல்ல முறையிலே வரி வசூல் செய்யக்கூடிய சூழ்நிலையை இந்த அரசாங்கம் உண்டாக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அமர்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் கு. ஜெயக்குமார் அவர்கள்.

**திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வாய்ப்புக்கு நன்றி. இந்த நான்காவது திருத்தச் சட்டத்தின் மூலமும், மற்றும் இருக்கின்ற சட்டமுன்வடிவுகள் 6, 7 இருக்கின்றன. அவை அனைத்தின் மூலமும் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக



கருத்துகளை எடுத்து வைக்க நான் இங்கே விழைகிறேன். இந்த நான்காவது திருத்தச் சட்டம் 23-3-2002-லிருந்தும் 1-4-2002-லிருந்தும் அமலுக்கு வருவதாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று குறிப்பிட்டு இருக்கிறீர்கள். ஆகவே, ஏற்கெனவே ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்று சொல்லிவிட்ட பிறகு இதன்மீது எடுத்து வைக்கிற கருத்துகள் எந்த அளவுக்கு ஏற்றதாக இருக்குமென்று எனக்குத் தெரியவில்லை. இருப்பினும் இங்கே சபையில் பதிவேடுகளிலே இருக்க வேண்டும் என்பதற்காக என்னுடைய கருத்துகளை நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு விழுக்காடு என்றும், 4 விழுக்காடு என்றும், 10 விழுக்காடு என்றும் பல விழுக்காடுகளை இங்கே கொடுத்திருக்கின்றீர்கள், வரிகளாக. இதில் பல பொருட்களை ஒவ்வொரு பட்டியலிலே இங்கே கொடுத்திருக்கிறீர்கள். நான் ஏற்கெனவே இந்தத் தலைப்பின்மீது, தொழில் துறை மற்றும் வணிக வரித் துறை என்ற தலைப்பின்மீது இந்தச் சபையிலே பேசியிருக்கின்ற காரணத்தால், என்னுடைய எண்ணம் எப்படிப்பட்டது என்று மாண்புமிகு அமைச்சர் பெருந்தகை அவர்களுக்கு நன்றாகத் தெரியும் என்று நான் அறிகிறேன். மாண்புமிகு உறுப்பினர்....

*பிற்பகல் 7-15*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இரண்டு நிமிடங்களிலே பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு கே.கே.எஸ்.எஸ்.ஆர். அவர்கள்கூடச் சொன்னார்கள். அதே வழியிலேதான், நான் வரிகள் எல்லாம் போட வேண்டாம் என்று சொல்லவில்லை. இந்தப் பொருட்கள்—ஒரு சில பொருட்கள், குழந்தைகளுக்கான பால் என்று சொல்லியிருக்கிறீர்கள்—குழந்தைகளுக்கான பால் உணவு. இதை 4 சதவீதத்தில் வைத்திருக்கிறீர்கள். இதை ஏன் 1 சதவீதத்தில் வைக்கக்கூடாது என்றும், இதன்மீது ஒரே கருத்தைச் சொல்வது சாலப் பொருந்தும் என்றும் கருதுகிறேன். நீங்கள் நோக்க காரண விளக்கவுரை என்று கொடுத்திருக்கின்றீர்கள். இது எனக்கு விளக்கவுரையாகத் தோன்றவில்லை. இது மிகவும் சுருக்க உரையாகத்தான் இருக்கின்றது. இதைப் படித்து எதையும் பெரிதாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. இருப்பினும், நல்ல ஒரு முயற்சியாக, நீங்கள் விதிக்கின்ற வரியை ஏழை மக்களைப் பாதிக்காமல், அதே நேரத்தில் அரசாங்கத்திற்கும் வருமானம் வருகின்ற வழிமுறைகளில் விதிக்க வேண்டும் என்பதை இங்கே வலியுறுத்தி, இதற்கான ஒரு முறையாக, நீங்கள் இந்தப் பொருட்களை எல்லாம், ஏ, பி, சி, என்ற கேட்டகிரியிலே எடுத்துக்கொண்டு—சிலவற்றில்

[திரு. கு. ஜெயக்குமார்] [2002 மே 10

அதிமான அளவுகள் இருக்கும்; ஆனால், நாம் விதிக்கிற வரி குறைவாக இருக்கும். அதனால் பெரிய வருமானம் வந்துவிடாது. சில பொருட்கள் குறைவான அளவாக இருக்கலாம். ஆனால், அதன்மீது விதிக்கின்ற வரி அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், அரசுக்கு அதிகமான வரி வருமானம் ஏற்படும். ஆக, இந்த ஏ, பி, சி, டி. என்ற கேட்டகிரியிலே (மணியடிக்கப்பெற்றது) நீங்கள் அத்தனை பொருட்களையும் அமர்த்தி, அதன்மூலம் நீங்கள் வரிகளை விதிப்பது நலமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

இங்கே ஐந்தாம் திருத்தத்தில், 12.5 சதவீதம் இருக்கின்ற அந்த வரியினை 25 விழுக்காடாக—யார் தவறு செய்கின்றார்களோ, யார் மேல் முறையீட்டிற்குச் செல்கின்றார்களோ, அவர்களிடம்—25 சதவீதம் உயர்த்தப்படும் என்று குறிப்பிட்டிருக்கின்றீர்கள். ஏன் இந்த 25 சதவீதம் என்று எனக்குத் தெரியவில்லை.

Is it a random number? What is the basis for this 25%? There should be some rationale behind it. You should have given the reason in this explanatory note. விளக்க உரை என்று சொன்னேனே, அது சுருக்க உரையாக இருக்கின்றது. ஏன் 12—1/2 சதவீதத்திலிருந்து 25 சதவீதம் என்று உயர்த்தப்பட்டிருக்கின்றது என்று எந்த ஒரு விளக்கமும் இங்கே கொடுக்கப்படவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைக் கொடுப்பார்கள் என்று கருதி, இங்கே தீர்த்தளிக்கப்பட்ட வரித் தொகையைச் செலுத்துவதைத் தாமதிக்கவே பெரும்பாலானவர்கள் முயலுவார்கள். அதை நாம் ஊக்குவிப்பதாக இருக்கக் கூடாது. அதை ஊக்குவிக்காத முறையில்தான் இந்த 25 சதவீதம் என்று நீங்கள் திருத்தியிருக்கின்றீர்கள் என்று நான் எடுத்துக்கொள்கிறேன். அந்த விதத்திலே உங்கள் விளக்க உரையிலே இதற்குப் பதில் அளித்தால் நலமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

உணவு விடுதிகளைப் பற்றிச் சொல்லியிருக்கின்றீர்கள், ஆறாவது திருத்தத்திலே. இதன்மீது பார்க்கின்றபோது, இதிலே 5 ஆம் இணைப்பு என்று ஒரு பட்டியலைக் கொடுத்திருக்கின்றீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேச்சை முடித்துவிடுங்கள்.

**திரு. கு. ஜெயக்குமார்:** மூன்று நிமிடங்கள்கூட எடுத்துக் கொள்ளவில்லை, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எல்லோருக்கும் மூன்று நிமிடங்கள்தான்.



2002 மே 10]

**திரு. கு. ஜெயக்குமார்:** பேச்சை முடித்து விடுகிறேன். இரண்டு வார்த்தைகளுக்கு மேல் பேசவில்லை நான். இங்கே ஐந்தாம் இணைப்புப் பட்டியல் என்ற ஒரு பெரிய பட்டியலைக் கொடுத்திருக்கின்றீர்கள், ஆறாம் திருத்தச் சட்டத்திலே. அந்தப் பட்டியல் என்ன என்றே எனக்குத் தெரியாது. நூலகத்திற்குச் சென்று பார்க்கவும் முடியாது. 10 இலட்சம் முதல் 25 இலட்சம் வரையானவர்களுக்கு 12 ஆயிரம் விதிக்க வேண்டும் என்று சொல்லி இருக்கின்றீர்கள். காரணங்களைக் கூறியிருந்தால் நலமாக இருக்கும்.

அடுத்ததாக, இங்கே ஏழாம் திருத்தச் சட்டத்தைச் சொல்லி இருக்கின்றீர்கள். இந்த ஏழாம் திருத்தச் சட்டத்திலே நோக்கத்தை நீங்கள் விளக்கியிருக்கின்றீர்கள். இதிலே Multi-point tax-ஐயும் சொல்லியிருக்கின்றீர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள்கூட இங்கே குறிப்பிட்டார். இந்த Multi-point tax, ஏற்கெனவே நான் சொன்னது போன்று, ஏற்கெனவே இருக்கின்ற முறையே உங்களுக்குச் சாதகமாக நல்ல வரி வசூலைக் கொடுக்கின்றபோது, ஏன் இதற்குச் செல்ல வேண்டும் என்பதைச் சிந்திக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். பெரும்பாலான உறுப்பினர்கள், அவையிலே இருப்பவர்கள் இதே கருத்தை எடுத்துச்சொல்லி இருக்கின்றார்கள். அடுத்து-

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் கே. ஆறுமுகம். (குறுக்கீடு) திரு. ஜெயக்குமார், முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. கு. ஜெயக்குமார்:** கூடுதல் விற்பனை வரியைப் பற்றியும் நீங்கள் இங்கே சொல்லியிருக்கின்றீர்கள். இந்தக் கூடுதல் விற்பனை வரி எந்த அளவிற்கு அரசுக்கு வருமானத்தை ஏற்றிக் கொடுக்கும் என்றும் இதில் குறிப்பிடப்படவில்லை; தெரிந்துகொள்ளவும் முடியவில்லை. இந்தக் கூடுதல் விற்பனை வரி என்பதை எந்த வழிமுறைகளிலே செய்யப் போகிறீர்கள் என்பது தெரியாத காலகட்டத்திலே நீங்கள் இதைச் சற்று விளக்கினால் நலமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

ஆடம்பர வசதிகள் மீதான வரியைப் பற்றியும் கூறியிருக்கிறீர்கள். இந்த ஆடம்பரத்திலேகூட பல பொருட்களை இங்கே சொல்லியிருக்கிறீர்கள். பெரிய பட்டியலையும் இங்கே கொடுத்துக் காண்பித்திருக்கின்றீர்கள். ஆகவே, இந்தச் சமயத்திலே, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களுடைய ஊரிலே, இன்றைக்குக்கூட செய்தித்தாளிலே பார்த்தேன்...

பிற்பகல் 7-20

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தனியாகப் பேசிக் கொள்ளலாம். உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. கு. ஜெயக்குமார்:** இன்றைக்குக்கூடச் செய்தித்தாளிலே பார்த்தேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அங்கே பாதிக்கப்பட்ட ஒரு நகைத் தொழிலாளி குடும்பத்திற்கு இரண்டு இலட்சம் ரூபாய், அந்தக் குழந்தைகளுக்குக் கொடுத்திருக்கிறார்கள். நகைத் தொழிலாளர்கள் எல்லாம் எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றால், இங்கே பொன், வெள்ளி, பிளாட்டினம் ஆகியவற்றுக்கெல்லாம் ஒரு சதவிகிதம் வரி விதித்திருக்கிறீர்கள். இது அந்த மக்களைப் பாதிக்கக்கூடியதாக இருக்கும். நலிந்து இருக்கிற தொழிலை மேலும் நலிவு அடையச் செய்துவிடக் கூடாது என்ற கருத்தினைக்கூறி, நல்லதொரு வாய்ப்பளித்த துணைத் தலைவருக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஆறுமுகம் அவர்கள்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே வணிக வரிச் சட்டமுன்வடிவுகளைக் கொண்டு வந்திருக்கிற தமிழக அரசாங்கத்திற்குக் கிடைக்கப் பெறுகின்ற வரியில் மூன்றிலே இரண்டு பங்கு வணிக வரியாகவே இருந்து கொண்டிருக்கிறது என்பதை அரசாங்கம் சொல்லியிருக்கிறது. அதிலே குறிப்பாக, இப்போது புதிதாக இந்த ஆண்டு, பல்வேறு பொருட்களுக்கு நுழைவு வரியைப் போட்டு, வருகிற பொருட்களுக்கு—விற்பனை செய்கிற—அதன் மூலம் வருகிற பொருட்களுக்கு விற்பனை வரியை உயர்த்துவதாலே பொருட்களின் விலை ஏறுகிற அபாயம் இருக்கிறது. அதுமட்டுமல்ல, ஏற்கெனவே பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகச் சொல்லப்பட்டிருக்கிற ஒரு கருத்து, இந்த விவசாய இடுபொருட்கள், பூச்சிக்கொல்லி மருந்துகளுக்கு எல்லாம் இன்றைக்குப் பலமுனை வரியை விதித்திருக்கிறீர்கள். அது விவசாயிகளை மேலும் பாதிக்கும். அது உற்பத்திச் செலவை அதிகரிக்கின்ற ஒரு நிலைமைக்குச் சென்று கொண்டிருக்கிறது. அதையும் இந்த அரசாங்கம் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மதிப்புக் கூட்டு வரி—Value added tax— என்பது புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்தியாவிலே பல்வேறு மாநிலங்களில் இன்னும் அது அறிமுகப்படுத்தப்படவில்லை. இந்த அளவிலே இப்போது நாம் அறிமுகப்படுத்தினால், ஏற்கெனவே வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சியதாக அது இருக்கும். ஏனென்று சொன்னால், இந்த ஆண்டு



நம்முடைய அரசாங்கம், ஏறக்குறைய சாம்பிராணியில் இருந்து, கைக்குட்டையில் இருந்து, புளிய நாரிலிருந்து, அத்தனைக்கும் வரி போட்டிருக்கிறது. நாட்டு மருந்துக்குக் கூட இப்போது 10 சதவீதம் வரியாக உயர்த்தியிருக்கிறது. குழந்தைகள் உபயோகிக்கும் அந்தப் பால் புட்டிக்குக்கூட 4 சதவீதம் வரி போடப்பட்டிருக்கிறது. ஏழைகள் உபயோகிக்கிற டி.வி. ஆன்டெனா—இப்போது டி.வி. ஆன்டெனாவே அதிகமாக உபயோகிக்கப்படுவதில்லை. அதாவது கேபிள் டி.வி.யைப் பயன்படுத்துகிறவர்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள். இப்போது டி.வி. ஆன்டெனாவை அதிகமாக உபயோகிக்கிறவர்கள் கிராமத்திலே இருப்பவர்கள்தான். அந்த டி.வி. அன்டெனாவுக்குக்கூட இப்போது வரி உயர்த்தப்பட்டிருக்கிறது. இப்படிப் பல்வேறு வகைகளிலே வரியை உயர்த்திக் கொண்டு செல்வதைத் தவிர்க்க வேண்டுமென்று பட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் சொல்லிக்கொள்ள நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம். இப்போது அரசாங்கம் எப்படியெல்லாம் வருவாயைத் திரட்ட வேண்டும் என்றெல்லாம், பாட்டாளி மக்கள் கட்சி, ஏற்கெனவே எங்களுடைய உறுப்பினர்கள் பேசுகிறபோது எல்லாம் சொல்லியிருக்கிறோம். அதைப் பின்பற்றினாலே, இந்த ஆண்டு போடப்பட்டிருக்கின்ற 690 கோடி ரூபாய் வரியை உயர்த்தாமலேயே, இந்த அரசாங்கத்தை நடத்தியிருக்க முடியும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று, இப்போது இந்தியாவில் தயாரிக்கப்படுகின்ற அயல்நாட்டு மது வகைகளுக்கு 50 சதவீதத்திலிருந்து 55 சதவிகிதமாக உயர்த்தி இருக்கிறீர்கள். அதை வேண்டுமானால், 75 சதவிகிதம்கூட உயர்த்தலாம். அதுமட்டுமல்ல, அயல்நாடுகளிலிருந்து தருவிக்கப்படுகின்ற, அயல்நாட்டு மதுவுக்கு இப்போது 70 சதவீதம் வரி விதித்திருக்கிறீர்கள். அதை 100 சதவீதமாக விதிக்க வேண்டும். ஏனென்றால் குடிக்கிறவர்களுக்கு அந்தப் பழக்கத்தைக் குறைப்பதற்குக்கூட அது ஒரு வாய்ப்பாக இருக்கும். இதையெல்லாம் நம்முடைய அரசாங்கம் செயல்முறைப்படுத்த வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, 5-வது சட்டத் திருத்தத்தில் ஒன்று சொல்லியிருக்கிறீர்கள். அதாவது, disputed tax-ல் 12½ பர்சென்ட் என்று இருப்பதை, 12 ½-லிருந்து 25 சதவீதமாக உயர்த்தியிருக்கிறீர்கள். இவையெல்லாம் dispute-ல் இருக்கிற அவர்கள் இன்னும் அதில் அதிகம் ஏமாற்றுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதுமட்டுமல்ல, இப்போது அரசாங்கத்திடம் வரி ஏய்த்துக் கொண்டிருக்கிறவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுத்தாலே இந்த வரி ஏற்றத்தைத் தடுப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று கூறி, இந்த

அரசாங்கம், நுழைவு வரி, பலமுனை வரி, மதிப்புக் கூட்டு வரி என்று எல்லாம் போட்டு மக்களை வாட்டுவதை நிறுத்தி, மக்களுக்கு உகந்த வரிகளை மட்டுமே போட வேண்டுமென்று சொல்லி, இந்த வாய்ப்பினை அளித்த உங்களுக்கு நன்றியைக் கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் நன்மாறன் அவர்கள்.

பிறபகல் 7-25

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களால் முன்வைக்கப்பட்டுள்ள திருத்தங்களில் நுழைவு வரி என்பதை நாங்கள் தொடர்ந்து எதிர்த்து வருகின்றோம். மீண்டும் அதனை இந்த அவையில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோன்று விற்பனை வரி. புதிதாகப் பல பொருட்கள் அதிலே இணைக்கப்பட்டுள்ளன. இது நாம் எதிர்பார்ப்பதற்கு மாறான விளைவை ஏற்படுத்தும் என்ற கவலையைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே தொழில் நடத்த வாய்ப்பு இல்லாமல், அண்டை மாநிலங்களுக்கு அனைவரும் செல்லக்கூடிய அபாயம் இருப்பதாகத்தான் வர்த்தகர்கள், சிறு தொழில் அதிபர்கள் கவலையோடு தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு சூழல் உருவாகுமென்று சொன்னால். ஒரு கூடுதலான ஆசையின் விளைவாக, எதிர் விளைவு ஏற்பட்டதாக மாறிவிடுமோ என்கிற அச்சத்தையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, சமாதான் திட்டம் என்கிற பெயரில் வரி ஏய்ப்புக்கு வழி செய்திட வேண்டாம் என்பதையும் நாங்கள் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அரசுக்குக் கிடைக்க வேண்டிய வரிகள் வந்து சேர வேண்டும். நாம் திட்டமிடுகிற வரி, அதற்காகச் செலுத்தப்படுகிற செயல்பாடுகள், இவை அனைத்திலேயும் வெற்றி காண வேண்டும். தேங்கியிருக்கக்கூடிய வரிகளிலும் முறைப்படுத்தி, அவற்றை வசூலிக்க வேண்டுமென்பதை நாங்கள் தெரிவித்துக்கொண்டு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வர்த்தக வளர்ச்சிக்கு உதவுகிற முறையில் அரசின் அணுகுமுறை இருக்க வேண்டுமென்பதையும், தொழில் வர்த்தகச் சங்கத்தினரைக் கலந்து பேசி, அவர்களுக்கும் பதற்றம் ஏற்படாத ஒரு சூழலை உருவாக்க வேண்டுமென்பதையும் தெரிவித்து அமைகிறேன், வணக்கம்.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ஜி. பழனிசாமி அவர்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வரிச் சீரமைப்புச் சட்டமுன்வடிவின்மீது பேசும்போது, இன்றைக்கு விவசாயிகள் பயன்படுத்தக்கூடிய உரம், பூசசி மருந்து, பூச்சிக்கொல்லி மருந்து ஆகியவற்றிற்கு இன்றையதினத்திலே வரி அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதனாலே விவசாயிகள் முழுமையும் தங்களுடைய வேளாண்மைத் தொழிலிலே—இவை எல்லாம் எதிர்பார்த்து வரக்கூடிய தொழில் அல்ல. அப்படிப்பட்ட பொருட்களுக்கு இன்றையதினத்திலே வரி விதிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே, நம்முடைய நிதியமைச்சர் அவர்களே, மத்திய அரசால் அறிவிக்கப்பட்டிருக்கிற நுழைவு வரியை இந்த மாநிலத்திலே அனுமதிக்க மாட்டோம் என்று வலுவாகச் சொன்னார்கள். ஆனால், அதே நுழைவு வரி இன்றையதினத்திலே அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

இந்த வரிகள், நுழைவு வரிகளின் மூலமாக, வாங்கிச் சாப்பிடக்கூடிய நுகர்வோர்களுக்கும் எந்தவொரு பாதுகாப்பும் கிடையாது, வரி உயர்வில். வரி போட்டிருக்கிற அரசுக்கும் அந்த வரிகளுடைய வருவாய் அரசாங்கத்தினுடைய கஜானாவிற்கு வருகிறதா என்று சொன்னால், அதுவும் வரவில்லை. வரிகளை மட்டுமே அறிவித்ததோடு மட்டும் அல்ல, அந்த வரிகளின் மூலம் அரசாங்கத்தினுடைய கஜானாவிற்கு எப்படி நிதியைத் திரட்டப் போகிறீர்கள் என்பதற்குச் சரியான விளக்கமும் புரியவில்லை. அப்படிப் பார்த்தால், 1991 ஆம் ஆண்டிலேயிருந்து இன்று வரையும், போட்ட வரிகள் மூலம் அரசாங்கத்திற்கு வந்து சேர வேண்டியது 7,000 கோடி ரூபாய் இருக்கிறது. அதற்குரிய ஒரு சட்டமுன்வடிவோ, அதற்கான என்ன நடவடிக்கை என்பதோ இன்று வரையிலும் அரசாங்கத்திடமிருந்து பதில் பெற முடியாத ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. அந்தச் சூழ்நிலையில்தான் இது பெரிதும் மக்களைப் பாதிக்கக்கூடிய வரி என்பதைத் தொடர்ந்து நாங்கள் வலியுறுத்தியிருக்கிறோம். அரசு, சில இனங்களிலிருந்து விதிவிலக்கு அளிக்கக்கூடிய அளவிற்கு ஆராய, நிதிச் சீராய்வுக் குழுவை அமைத்து ஆராய வேண்டுமென்று கேட்டு, அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் அரசன் அவர்கள்.

[2002 மே 10

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களாலே அறிமுகம் செய்யப்பட்டிருக்கிற 6 சட்டமுன்வடிவுகளில் என்னுடைய கருத்தை எடுத்துச் சொல்ல வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏற்கெனவே, நம்முடைய மாமன்றத்திலே பல்வேறு உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப்போல, இந்த வரிகளின் வாயிலாக வருகிற தொகை என்ன என்பதையும், நம்முடைய அரசாங்கத்திற்கு ஏற்கெனவே வியாபாரிகளாலே தரப்பட வேண்டிய, வசூலிக்கப்பட வேண்டிய வரிகள் எவ்வளவு வரவேண்டும் என்கிற கணக்கையும் எடுத்துப் பார்த்தால், இந்த வரி தேவையில்லையே என்று தோன்றும். சற்றேறக்குறைய 7,000 கோடி ரூபாய் நம்முடைய அரசுக் கருவூலத்திற்கு வரவேண்டியிருக்கிற சூழ்நிலையில், அவற்றை நல்ல முறையிலே, செயலாக்கத்தோடு வசூலிப்பதற்கான முன்முயற்சியை எடுக்காமல், வசூலிப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளிலே இறங்காமல், ஒரு சரியான தொலைநோக்குச் சிந்தனையில்லாமல், வரிகளைப் போட்டிருக்கிறீர்கள் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இவை என்ன விளைவுகளை ஏற்படுத்தும் என்று சொன்னால், நம்முடைய மாநிலத்திலே முதலீடுகள்கூடக் குறைவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. ஏன் என்று சொன்னால், இப்பொழுது அகில இந்தியாவிலும் நம்முடைய மக்கள் சென்று தொழில் செய்கிற சூழ்நிலை உருவாகியிருக்கிறது. பக்கத்திலே இருக்கிற பாண்டிச்சேரி மாநிலத்திலே பல்வேறு சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. பக்கத்திலே இருக்கிற கர்நாடக மாநிலத்திலே பல்வேறு சலுகைகள் அளிக்கப்பட்டு இருக்கின்றன. அப்படி அங்கே சலுகை இருக்கிறபொழுது நம்முடைய தொழில் முனைவோர் என்ன நினைப்பார்கள் என்று சொன்னால், எதற்காகத் தமிழ்நாட்டிலே கஷ்டப்பட வேண்டும், நம்முடைய பணத்தை முதலீடு செய்து அல்லது வேறு எங்கோ வங்கியிலாவது கடன் பெற்று, தமிழகத்திலேயிருந்து தொழில் தொடங்குவதிலே, தொழில் செய்வதிலே சிரமப்படுவதைவிட, வேறு மாநிலங்களுக்குச் சென்று தொழில் தொடங்கலாமா என்கிற எண்ணம் வந்து, அதனாலே தமிழகத்திலே தொழில் முதலீடுகள் குறைவதற்கு வாய்ப்பிருக்கிறது என்பதை நான் மாண்புமிகு தொழில் அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.



2002 மே 10] [திரு. ப. அரசன்]

பிற்பகல் 7-30

நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நேற்றைக்கு இங்கே உரையாற்றுகிறபோது சொன்னார்கள். வரி போடக் கூடாது என்று சொல்கிறீர்களே, எப்படி அரசாங்கத்திற்கு வருமானத்தை ஈட்ட வேண்டும். எதற்கெல்லாம் வரி போட வேண்டும் என்று அவர்கள் கேட்டார்கள். நான் இந்த மன்றத்தின் மூலமாக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அவருக்கு மிக நன்றாகத் தெரியும். யார் வரியைத் தாங்குவார்கள், யார் வரிப் பளுவைத் தாங்குவார்கள், யாராலே அந்தச் சிரமத்தைத் தாங்க முடியாது என்பதை அவர்கள் மிக நன்றாக அறிவார்கள். ஏன் என்று சொன்னால், இன்று விவசாயத்தில் சொல்ல முடியாத அளவிற்கு விவசாயிகள் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஏன் என்று சொன்னால், இயற்கையினுடைய சீற்றங்கள், பூச்சிகளுடைய தொல்லைகள், இப்படிப் பல்வேறு சிரமங்களிலே இருக்கிற விவசாயிக்கு நீங்கள் உதவியாக இருக்கவேண்டுமேயல்லாமல், விவசாயி பயன்படுத்துகிற இடுபொருட்களுக்கு எல்லாம் வரி விதிப்பது என்பது அவ்வளவு நல்லது அல்ல, நல்ல முன் மாதிரி அல்ல என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

ஏற்கெனவே சொன்னதைப்போல, 40 ஆண்டு காலம் செய்யாத ஒரு காரியத்தை, நுழைவு வரிபோடுவதை, நம்முடைய அரசாங்கம் செய்ய வேண்டாம் என நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஏன் என்று சொன்னால், எப்படிப் பார்த்தாலும் வியாபாரிகள் வரியைச் செலுத்திவிட்டு, அந்தச் சுமையை நம்முடைய மக்கள்மீது, நுகர்வோர்மீது, உபயோகிப்பாளர்கள்மீதுதான் சுமத்துகிறார்கள். வியாபாரிகள் மிகத் திறமையானவர்கள். ஆகவே, நுழைவு வரியை நம்முடைய அரசாங்கம் ரத்து செய்ய வேண்டுமென நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, வரியை உயர்த்துகிறபோது, வரி ஏய்ப்புச் செய்வதற்காக இது வியாபாரிகளைக்கூடக் கொஞ்சம் தூண்டும். நான் வியாபாரம் செய்தாலும் சரி, யார் வியாபாரம் செய்தாலும், முதலீடு செய்து ஒரு காரியத்தைச் செய்கிறபோது எப்படி அதிக இலாபம் சம்பாதிக்க வேண்டும் என்று நினைப்போமே தவிர, அதுதான் மனித எண்ணமே தவிர, நஷ்டம் அடைய வேண்டும் என்று எந்த மனிதனும் நினைக்கமாட்டான்.

அந்த வகையிலே, முதலீடு செய்கிற வியாபாரிகளை இந்த வரிகள் தவறு செய்யத் தூண்டும். அப்படிப்பட்ட ஓர் உணர்வை வியாபாரிகளிடத்திலே ஏற்படுத்திவிடக் கூடாது என்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, பலமுனை வரி, மதிப்புக் கூட்டு வரி என்றெல்லாம் வரியிட்டிருக்கிறீர்கள். நான் என்னுடைய உரையில் தொடக்கத்திலே சொன்னதைப்போல, இந்த வரிகளுடைய மொத்தத் தொகையைவிட, நீங்கள் முயன்று பேசிப் பார்ப்பீர்களோ அல்லது 'சமாதான் திட்டம்' என்று எந்தத் திட்டத்தைச் சொல்வீர்களோ, எப்படியாவது ஏற்கெனவே நமக்கு வர வேண்டிய அந்த 7,000 கோடி ரூபாய் வரி பாக்கியில் ஒரு 2,000 கோடி ரூபாய் வசூலித்தால், நம்முடைய பற்றாக்குறை பட்ஜெட்கூடத் தீர்ந்துவிடும் என்பதை நான் மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதேபோல....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசன், உரையை முடியுங்கள், எல்லோரும் இரண்டு நிமிடங்கள்தான் பேசியிருக்கிறார்கள். (குறுக்கீடு) உரையை முடியுங்கள்.

*பிற்பகல் 7-35*

**திரு. ப. அரசன்:** ஒரு நிமிடம். அதைப்போல, அரிசிக்கு வரி போட்டிருக்கிறீர்கள். கோதுமைக்கு வரி போட்டு இருக்கிறீர்கள். அவற்றையெல்லாம் குறைக்க வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் வரி விதிப்புச் சட்டமுன்வடிவுகள் பற்றி அவையில் பல்வேறு கருத்துகளைக் கூறினார்கள். மதிப்பிற்குரிய உறுப்பினர் ஜெயக்குமார் அவர்கள் மேல் முறையீட்டு அதிகாரியிடம் மேல் முறையீடு செலுத்த வேண்டிய சர்ச்சைக்குரிய வரியை 12.5 விழுக்காட்டிலிருந்து 25 விழுக்காடாக உயர்வு செய்தது ஏனென்று குறிப்பிட்டார்கள். மேல் முறையீட்டைப் பொறுத்தவரையில், அதிகமாகத் தேக்க நிலையில் இருக்கின்ற காரணத்தால் மேல் முறையீட்டைச் செய்பவர்களுக்கு 12.5 சதவீதத்தைவிட, 25 சதவீதத்தை விதிப்போமானால், அதிகமான அளவுக்கு அரசுக்கு வருமானம் வருவதற்கான வாய்ப்பு





இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அன்பிற்குரிய மாமன்ற உறுப்பினர்கள் எல்லாம், பல்வேறு கருத்துகளைக் கூறியபோது, இன்றைய அரசினுடைய நிலைமையைப் பற்றியும் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஏழையெளிய பொது மக்களுக்கு வீட்டு வசதி, குடிதண்ணீர் வசதி, சாலை வசதிகள், போக்குவரத்து வசதிகள், மருத்துவ வசதிகள், கல்வி வசதி போன்றவற்றை வழங்க நிதி அதிக அளவில் தேவைப்படுகிறது. இதற்கான நிதியினைப் பெருக்கவே பொருட்கள்மீது விற்பனை வரி விதிக்கப்படுகின்றது. மறு விற்பனை வரி, உபரி வரி, ஆடம்பர வரி போன்றவைகள் விதிக்கப்படுகின்றன.

மறு விற்பனை வரி, உபரி வரி முதலியன அத்தியாவசியப் பொருட்களான அரிசி, கோதுமை போன்றவைகள்மீது விதிக்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதேபோன்று, அத்தியாவசியப் பொருளான அரிசி வாங்கி உண்ணும் மக்களுக்கு விலை உயர்வோ, வரிச் சுமையோ அறவே இருக்கக் கூடாது என்பதுதான் மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கொள்கை. அந்த நோக்கோடு, அரிசி ஆலைகளுக்கும், மொத்தக் கொள்முதல் வியாபாரிகளுக்கும் மட்டுமே 2 சதவீத விற்பனை வரிக்குப் பதிலாக, இன்று இணக்க விகித வரியாக, Compounding tax ஆக விதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இது retail வியாபாரிகளையோ, பொது மக்களையோ பாதிக்காது. அரிசிக்கு மறு விற்பனை வரியோ, உபரி வரியோ, கூடுதல் வரியோ கிடையாது. மேலும், பொது விநியோக முறையில் ஏழைகளுக்கு வழங்கப்படும் அரிசிக்கு எந்த வரியும் விதிக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசால் வணிகர்களுக்குப் பல சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. காகிதம், மின் மற்றும் மின்னணுப் பொருட்களுடைய உற்பத்தியாளர்கள் கச்சாப் பொருட்களின்மீது செலுத்தியுள்ள வரியினை ஈடு செய்துகொள்ள வழி செய்யப்பட்டுள்ளது. சிறந்த தீர்ப்பின் அடிப்படையில் செய்யப்படும் வரி விதிப்புகளைச் சரியான முறையில் அலுவலர்கள் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் சில நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. இதனால் வணிகர்களுக்கு ஏற்படும் இடர்ப்பாடுகள் வெகுவாகக் குறையும். மேலும், இம்முறையில் வரி விதிப்புச் செய்வதை ஆய்வு செய்ய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, ஒரு சிறப்புக் குழு அமைக்க வழி செய்துள்ளது.

அச்சகத் தொழில் செய்வோருக்குச் சலுகையாக, ஒப்பந்தப் பணியாக இருப்பினும், விற்பனையாக இருப்பினும், இந்த வகையானவர்கள்மீது வணிகர்களின் விருப்பத்தின்பேரில், இணக்க விகித வரி கட்ட வழி செய்யப்பட்டுள்ளது.

நீண்ட காலமாக நிலுவையாக உள்ள சில வகையான வரி நிலுவைகளைத் தீர்வு செய்யவும், தீர்வாணையம் அமைக்கப்படுகிறது. இறக்குமதிப் பொருட்கள்மீது புதிதாக வரி ஏதும் விதிக்கப்படவில்லை. ஏற்கெனவே கச்சாப் பட்டு, சர்க்கரை, துணி, சிகரெட், மது பானங்கள் மீதான—இவ்வரியானது இறக்குமதி மேல் இல்லை. இறக்குமதி செய்து, மீண்டும் தமிழ்நாட்டில் விற்கப்படும் பொருட்கள் மீது. ஆக இந்த வரி விதிப்பு சரியானது என்பதற்குச் சட்ட வல்லுநர்கள் கருத்துப் பெறப்பட்டுள்ளது என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

இறக்குமதிப் பொருட்கள்மீது அதிகப்படியான வரி விதிப்பதால் உள்நாட்டிலுள்ள உற்பத்தியாளர்கள் பயன் பெறுவார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பதிவுச் சான்றுக் கட்டணம், நீண்ட காலமாக ஒரே அளவில் இருந்தது. எனவே, இக்கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. எனவே மாமன்ற உறுப்பினர்கள் சட்டமுன்வடிவுகளை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.





பிற்பகல் 7-40

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/2002) நிறைவேற்றப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

**(இ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/2002). மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு@ (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/2002) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

---

@8-5-2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

**மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.**

**மாண்புமிகு செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/2002) நிறைவேற்றப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

[2002 மே 10

### (ஈஈ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/2002). மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/2002) (@) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 6 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 6 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

---

(@)8-5-2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது



2002 மே 10] [பேரவைத் தலைவர்]

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/2002) நிறைவேற்றப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

### (உஉ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஏழாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஏழாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/2002). மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

[2002 மே 10

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஏழாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/2002) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 24 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 24 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@9-5-2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.





ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஏழாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/2002) நிறைவேற்றப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 7-45

**(ஊஊ) தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/2002), மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

[2002 மே 10

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/2002) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தம் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@9-5-2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



2002 மே 10] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/2002) நிறைவேற்றப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (எ) தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/2002). மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

[2002 மே 10

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/2002) (1) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 7 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 7 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

(1) 9-5-2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



2002 மே 10] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/2002) நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஏ) தமிழ்நாடு பன்முறைச் செயற்பாடுகள், காணொலி பதிவுப்பேழைக் கருவி, கம்பிவட தொலைக்காட்சி இணைப்பு ஆகியவற்றின் மூலம் தொலைக்காட்சித் திரையில் படக்காட்சிகள் காட்டுதல் (முறைப்படுத்தப்படுதல்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பன்முறைச் செயற்பாடுகள், காணொலி பதிவுப் பேழைக் கருவி, கம்பிவட தொலைக்காட்சி இணைப்பு ஆகியவற்றின் மூலம் தொலைக்காட்சித் திரையில் படக்காட்சிகள் காட்டுதல் (முறைப்படுத்தப்படுதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/2002). மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள்.

[2002 மே 10

***மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பன்முறைச் செயற்பாடுகள், காணொலி பதிவுப்பேழைக் கருவி, கம்பிவட தொலைக்காட்சி இணைப்பு ஆகியவற்றின் மூலம் தொலைக்காட்சித் திரையில் படக்காட்சிகள் காட்டுதல் (முறைப்படுத்தப்படுதல்) சட்டமுன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/2002) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பன்முறைச் செயற்பாடுகள், காணொலி பதிவுப்பேழைக் கருவி, கம்பிவட தொலைக்காட்சி இணைப்பு ஆகியவற்றின் மூலம் தொலைக்காட்சித் திரையில் படக்காட்சிகள் காட்டுதல் (முறைப்படுத்தப்படுதல்) சட்டமுன்வடிவிலே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே என்னுடைய சில கருத்துகளைப் பதிவு செய்ய விரும்புகிறேன்.

இந்தச் சட்டத்தை மாநில அரசு அவசர அவசரமாகக் கொண்டு வருகிறதோ என்று எண்ணத் தோன்றுகிறது. 1984 ஆம் ஆண்டு, அன்றைய அ.தி.மு.க. ஆட்சி, டிவி. ஆப்பரேட்டர்களுக்கு என்று ஒரு சட்டம் கொண்டு வந்தது. 1995 ஆம் ஆண்டு, மத்திய அரசு Cable T.V. Regulation Act என்ற ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தது. அப்படிக் கொண்டு வந்ததற்குப் பின்னால், அன்றைய மாநில அரசு, தன்னுடைய உயரதிகாரிகள் மூலம் கேபிள் டி.வி. ஆப்பரேட்டர்களுக்கு எல்லாம் ஒரு கடிதத்தை அனுப்பியது. "மத்திய அரசு இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிற காரணத்தால், இனிமேல் மாநில அரசுக்கு இதில் சம்பந்தம் இல்லை. இனிமேல் நீங்கள் தலைமைத் தபால் துறை அதிகாரியிடத்திலே, அலுவலகத்திலே அனுமதி பெற்று, நீங்கள் கேபிள் டிவி.-யை ஆப்பரேட் செய்துகொள்ளலாம்" என்று எழுத்து மூலமாகக் கடிதம் தந்தது. இப்போது மீண்டும் இந்தச்

@9-5-2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



2002 மே 10] [திரு. மீ.அ. வைத்தியலிங்கம்]

பிற்பகல் 7-50

சட்டத்தைக் கொண்டு வருகிறபோது, இது 1995 ஆம் ஆண்டின் மத்திய அரசினுடைய சட்டத்தை மீறுவதாக ஆகாதா என்ற என்னுடைய கருத்தினை நான் பதிவு செய்ய விரும்புகிறேன். அதுமட்டுமல்ல, தற்போது மத்திய அரசு, மத்திய அமைச்சரவை, கடந்த 7-5-2002-லே கூடி, பொது மக்களுடைய நலன் கருதி, நுகர்வோர் விரும்புகிற சேனல்களைப் பார்ப்பதற்காக, மற்றவற்றிற்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காக ஒரு மசோதாவைக் கொண்டு வரவேண்டும் என்று முடிவு செய்து, 1995 ஆம் ஆண்டினுடைய சட்டத்தை முறைப்படுத்துவதற்காக, வருகிற 17-5-2002 அன்று ஒரு மசோதா வந்து, பாராளுமன்றத்திலே நிறைவேற இருக்கிறது. அப்படியானால், மாநில அரசு, மத்திய அரசினுடைய சட்டத்தை எப்படிக் கையிலே எடுத்துக்கொள்ள முடியும் என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. சென்னையிலே காவல் துறை ஆணையர், மற்ற மாவட்டங்களிலே மாவட்டங்களுடைய ஆட்சித் தலைவர்கள் இதற்கு உரிமம் வழங்க வேண்டும் என்று சொன்னால், ஒரு தொழிலுக்கு இரண்டு அரசுகளுடைய உரிமம் பெறவேண்டிய கட்டாயம் வராதா? மேலும், இது கையூட்டை வளர்ப்பதற்கு வாய்ப்பாக அமைந்து விடாதா? இதிலே மாநில அரசு பெரிதா; மத்திய அரசு பெரிதா என்கிற நிலை வந்துவிடாதா என்பதையெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இந்தச் சட்டமுன்வடிவிலே, அமைதியைக் குலைக்கும் நிகழ்ச்சி என உரிமம் அளிக்கிறவர்கள் கருதினால், தடுத்து விடலாம் என்று இருக்கிறது. எவையெவை அமைதியைக் குலைக்கும் நிகழ்ச்சி என்று எடுத்துக்கொள்ளப் போகிறார்கள் அதிகாரிகள் என்று பார்த்தால், அவர்கள் விரும்பினால், தேவைப்படாதவர்கள்மீது அதைப் புகுத்தி, தடுத்துவிடக்கூடிய வாய்ப்புகள் இதனால் ஏற்படாதா என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இன்னொன்று. அரசு ஆதரவு நிகழ்ச்சிகள், அதாவது, அரசு விரும்பினால், பொது நலனுக்குத் தேவையென்று சொன்னால், அரசு சொல்கிற நிகழ்ச்சிகளைக் காட்டியாக வேண்டும் என்று இருப்பது, மக்கள் பொழுதுபோக்கிற்காகப் பார்க்கிற அந்த உரிமையிலே, சுதந்திரத்திலே, உணர்விலே தலையிடுவது ஆகாதா என்பதனையும் இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறன்.

[திரு. மீ.அ. வைதியலிங்கம்] [2002 மே 10

அதைவிட முக்கியமாக, கேபிள் டி.வி.யிலே அதிர்ச்சி ஏற்பட்டால் அதனால் தீங்கு விளைந்தால், கேபிள் டி.வி. ஆப்பரேட்டர்களுக்கு இரண்டு ஆண்டு சிறை, 25,000 ரூபாய் அபராதம் என்று சுட்டிக்காட்டியிருப்பது எந்த வகையில் நியாயம் என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை அதைவிட மேலாக, கேபிள் டி.வி.யிலே தவறு நேர்ந்து ஒருவர் இறந்தால், 5 ஆண்டு சிறைவாசம், 50,000 ரூபாய் அபராதம் என்று சுட்டிக்காட்டி இருக்கிறீர்களே, அப்படியானால், நாம் பத்திரிகைகளை அன்றாடம் படிக்கிறோம். மழைக் காலம் வந்துவிட்டால், ஏன் சாதாரண நாட்களிலேகூட, மின் கம்பிவடங்கள் அறுந்து விழுகின்றன. பல பேர் இறக்கிறார்கள்; பல கால்நடைகள் இறக்கின்றன; அதற்கெல்லாம் மின் துறை அமைச்சரோ, சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளோ பொறுப்பேற்றுக் கொள்வார்களா; பொறுப்பேற்றுக் கொள்ள முடியுமா? இது நடைமுறை சாத்தியக்கூறு ஆகுமா? அதைப்போலத்தான் இது. கேபிள் டி.வி.யிலே ஏதாவது ஒரு தவறு ஏற்பட்டு ஒருவர் இறந்தால், அந்த ஆப்பரேட்டர்களுக்கு ஐந்து ஆண்டு காலம் சிறைவாசம் அல்லது 50,000 ரூபாய் அபராதம் என்பது. ஒரு மின் துறையிலே அது ஏற்பட்டுவிட்டால், எப்படியோ அப்படித்தான். இது எப்படிப் பொருந்தி வரும் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. இப்படிப்பட்ட நிலைமைகள் பொது நலனுக்குத் தீங்கு என்று நினைத்தால் அல்லது ஒருவர் விரும்பினால், ஒருவருக்கு அரசு நன்மை என்று கருதினால், விலக்கு அளிக்கலாம் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆகவே, குறிப்பிட்ட, வேண்டியவர்களுக்குச் சலுகைகள் அளிப்பதாக ஆகாதா? யாரோ தனக்கு வேண்டியவர்களை வளர்ப்பதற்காக இது பயன்படுத்தப்படுகிறது என்று எண்ணினால் என்ன தவறு என்பதனையும் நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இறுதியாக, நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த உரிமையைக் காவல் துறை அதிகாரிகளிடத்தில் நீங்கள் தந்து விடுவீர்களேயானால், எப்படி நாட்டிலே மதுவிலக்குக் கொள்கை இன்றைக்குத் தோல்வி அடைந்திருக்கிறதோ, பல்வேறு இடங்களிலே எந்தக் கடுமையான சட்டங்கள் கொண்டு வந்தாலும், கள்ளச் சாராயம் காய்ச்சுவதை, விஷச் சாராயத்தால் மக்கள் இறப்பதைத் தடுக்க முடியவில்லையோ, அந்த நிலைமை வந்துவிடும் என்கிற காரணத்தால், இந்தச் சட்டத்தை மாநில அரசு மறுபரிசிலனை செய்ய வேண்டுமென்று கேட்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய எதிர்ப்பைத் தெரிவித்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.



2002 மே 10]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசால் இப்போது கொண்டு வரப்பட்டிருக்கிற "Tamil Nadu Exhibition on Television Screen through multi system operations, Video Cassette Recorder and Cable Television Network (Regulation) Act" என்பது, ஒரு நல்ல நோக்கத்தோடு கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே மறுக்கவில்லை. ஆனால், சில கண்டிஷன்கள்தான் கொஞ்சம் கடுமையாக இருக்கின்றன என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பொதுவாக, எனக்கு முன்னாலே மாண்புமிகு உறுப்பினர் வைதியலிங்கம் அவர்கள் பேசுகிறபோது, மத்திய அரசின் மூலமாக இயற்றப்பட்டிருக்கிற சட்டத்தின் வாயிலாக, ஒரு தபால் துறை அதிகாரியிடமே நாம் லைசென்சை வாங்கிவிடக்கூடிய வாய்ப்பு இருக்கிறபோது, இதிலே மீண்டும் மாவட்ட ஆட்சித் தலைவரை அணுகியோ அல்லது சென்னை மாநகரம் போன்ற பகுதிகளிலே கமிஷனர் ஆஃப் போலீசை அணுகியோ நாம் லைசென்சைப் பெற வேண்டுமா என்கிற ஒரு வினாவைக்கூட இங்கே எழுப்பினார்கள். ஆனால், இன்று வளர்ந்து வருகிற இந்த விஞ்ஞான காலத்தில், தபால் துறையில் வழங்கப்படுகிற அந்த லைசென்ஸ்—வெறும் லைசென்சை மட்டும் அவர்கள் கொடுத்து விடுகிறார்களேயொழிய, ரெகுலேட் செய்வதற்கு எந்தவிதமான வழிமுறைகளும் அங்கே இல்லை.

பிற்பகல் 7-55

உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், கேபிள் டி.வி.ஐப் போட்டுவிட்டு, அவர்கள் சில இடங்களிலே, இதே சென்னை மாநகராட்சியிலே, ஒவ்வொரு வீட்டு இணைப்பிற்கும் மாதம் 60 ரூபாய்க்கு நான் கேபிள் டி.வி. கனெக்ஷன் கொடுக்கிறேன் என்று சொல்லக்கூடிய ஆட்களும் இங்கு இருக்கிறார்கள். அதே நேரத்தில் மாதம் 250 ரூபாய் கொடுத்தால்தான் உங்களுக்கு கேபிள் டி.வி. கனெக்ஷன்; நீங்கள் பணத்தைக் கொடுக்கவில்லையென்று சொன்னால், கட் செய்து விடுவேன் என்று அவர்களாகவே கட் செய்துவிடுகின்ற ஒரு கொடுமை நிறைய இருக்கிறது. இன்னும் சொல்லப் போனால், கேபிள் டி.வி. பெரும்பான்மையான இடங்களிலே ரௌடிகள் கையிலே மாட்டியிருக்கிறது என்பதை நான் இங்கே வருத்தத்தோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், இதில் வருகிறவர்களையெல்லாம் முழுவதும் மிரட்டி, இப்படியே இவர்கள் இவ்வளவு ரூபாய் கொடுத்தால்தான் உங்களுக்கு கனெக்ஷன் என்று சொல்லி, இல்லையென்று சொன்னால் அவர்கள்

[திரு. சி. ஞானசேகரன்] [2002 மே 10

கட் பண்ணி விடுகிறார்கள். எந்தவிதமான கிளியர் பிக்சரும் நம்மால் பார்க்க முடியவில்லை. ஆகவே, தமிழ்நாடு முழுக்க. என்னைக் கேட்டால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், துறையினுடைய அமைச்சர் அவர்களும் ஒரு வீட்டிற்கு. மாநகராட்சிக்கு இவ்வளவுதான் ரேட், அதேபோல நகராட்சிக்கு இவ்வளவுதான் ரேட், பேரூராட்சிக்கு இவ்வளவுதான் ரேட், கிராமத்திலே இவ்வளவுதான் ரேட் என்று நீங்கள் தயவுசெய்து ரேட்டையே ஃபிக்ஸ் செய்தால்தான் நம்முடைய தமிழகத்து மக்கள் ஓராளவிற்குப் பயம் இல்லாமல் அவர்களுடைய இடத்திலே கேபிள் டி.வி. கனெக்ஷனை அவர்கள் முழுமையாகப் பயன்படுத்த முடியும். இல்லையென்று சொன்னால், போடுகிறபோது 70 ரூபாய் என்று போடுகிறார்கள். பிறகு, இரண்டு மாதம் கழித்து 200 ரூபாய் என்று ஏற்றிவிடுகிறார்கள். பிறகு 250 ரூபாய் என்று சொல்கிறார்கள். ஆனால், இதற்குப் பழக்கப்பட்டு விட்டவர்கள், முதலிலே எப்படியோ மாட்டிக் கொண்டோம், இனி இதைத் தொடர்ந்து, சனியன் பார்த்துத்தான் ஆகவேண்டுமென்று, அவர்கள் கேட்கிற தொகையைக் கொடுக்க வேண்டிய நிலைமையும் இருக்கிறது.

ஆகவே, இந்தச் சட்டத்தின் வாயிலாக, இதனை ரெகுலேட் செய்வதற்குக்கூட ஒரு தொகையை நிர்ணயம் செய்துவிடுவது மேல் என்று நான் இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சில நேரங்களிலே இதே சென்னையிலேகூட, ஒரு சில பேர், குறிப்பிட்ட டி.வி.காரர்கள் ஒன்றாக ஒரு சிண்டிகேட் ஃபார்ம் செய்து கொண்டு, அவர்கள் வேறு ஒருவருக்கு வழியைவிட மறுக்கிறார்கள். உதாரணத்திற்கு, இரண்டு நாட்களுக்கு முன்னாலே அருமைச் சகோதரி மாண்புமிகு உறுப்பினர் யசோதா அவர்களுக்குக்கூடத் தெரியும். அவர்களுடைய தொகுதிக்குட்பட்ட மணப்பாக்கம் என்ற இடத்திலே, கிராமத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிற குன்றத்தூரினுடைய வைஸ்-சேர்மன், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்தான், காமராஜ் என்று பெயர், எங்களுடைய கர்மவீரர் காமராஜர் பெயரைத் தாங்கியிருக்கக்கூடிய அவர். முதலிலே ஸ்டார் டி.வி. கேட்டு அக்ரிமென்ட் போட்டு என்னிடம் காண்பித்தார். அந்த அக்ரிமென்ட் போட்ட நபருக்கு, 25 இலட்சம் ரூபாய் அந்த அக்ரிமென்டை நம்பி, ஸ்டார் டி.வி. கனெக்ஷனுக்காக டி.வி. ஆன்டெனாவுக்கெல்லாம் நிறையச் செலவு செய்து விட்டார். ஆனால், இப்போது வேறு ஒருவர் ஆதிக்கம் செலுத்தி, அந்த டி.வி.-ஐப் பிடித்துக்கொண்டிருக்கின்ற காரணத்தினாலே, இந்த 25 இலட்சம் ரூபாய்



2002 மே 10] [திரு. சி. ஞானசேகரன்]

செலவு செய்த அந்த நபர் இன்று பெரிய பாதிப்பிற்குள்ளாகி, என்னிடம் வந்து முறையிட்டு, பிறகு அவர் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் யசோதா அவர்களிடமும் சொல்லி இருக்கிறார்கள். பிறகு அவருக்கு எந்தவிதமான நீதியும் கிடைக்காமல் காவல் நிலையத்திலே போய்ப் புகார் கொடுத்திருக்கிறார். 25 இலட்சம் ரூபாய் அவருக்கு நஷ்டம். ஒரு அக்ரிமென்டை ஸ்டார் டி.வி.காரர்கள் போட்டு விடுகிறார்கள். பிறகு வேறு யாராவது ஒரு பெரிய ஆள் வந்து மாட்டினால், அவர்கள் திடீரென்று நமக்குப் பட்டை நாமத்தைப் போட்டுவிட்டு, பிறகு யார் பெரிய ஆளோ, அவர்களது பக்கம் சாய்ந்துவிடக்கூடிய ஒரு நிலையும் இருக்கிறது. ஆகவே, யாரும் ஏமாற்றப்படாமல் இருப்பதற்கான வழிமுறைகளை இதிலே காணவேண்டுமென்று நான் நிச்சயமாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சினிமா படத்தைக் காட்டுவதைக்கூட லெட்டர் ஆஃப் கன்சென்ட்-- சில நேரங்களிலே படம் காட்டுவதற்கு ஓர் எளிமையான வழிமுறையை நீங்கள் இப்போது கடைப்பிடிக்க வேண்டும். ஏனென்றால், ஒரு நாளைக்கு 4 சினிமா, 5 சினிமா டி.வி.யிலே பார்த்துப் பார்த்துப் பழக்கப்பட்டு விட்டார்கள், இப்போது நம்முடைய தமிழ்நாட்டிலே. சினிமா தியேட்டர் போகக்கூடிய கூட்டம் குறைந்து விட்டது. நாம் இந்தச் சட்டத்தை மிகக் கடுமையாக்க, கடுமையாக்க, நாளைக்கு சினிமாவைப் பார்க்கக்கூடிய ஒரு வசதி, இந்த கேபிள் டி.வி. மூலம் கிடைக்காமல் போய்விட்டால்— நம்முடைய தமிழ்நாட்டினுடைய மக்கள், குறிப்பாகப் பெண்கள், வீட்டிலே இருப்பவர்களுக்கு இது ஒரு பொழுதுபோக்கு அம்சமாக இருந்துகொண்டிருக்கிறது. அவர்களை நாம் வஞ்சித்து விடக்கூடாது. அதையும் நாம் எளிமைப்படுத்திட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். சில நேரங்களில், இன்ஸ்பெக்டர் ஆஃப் போலீசுக்கு 19-வது செக்ஷன் பிரகாரம் நிறைய உரிமைகளைக் கொடுத்திருக்கிறோம். அதிலே ஏதாவது சந்தேகம் இருக்குமானால், அவர் உள்ளே போய் search செய்யலாம். பிறகு பொருட்களைக் கைப்பற்றலாம் என்றிருக்கிறது. பொதுவாக, Criminal Procedure Code-லேகூட, ஒரு குற்றம் நிகழ்ந்து இருக்குமானால், ஒரு வீட்டிற்குள் நுழைய வேண்டுமென்று சொன்னால், அங்கே இருக்கக்கூடிய Judicial Magistrate-டிடம் Warrant வாங்கிக்கொண்டுதான் உள்ளே செல்ல வேண்டும் என்று இருக்கிறது. Search Warrant பெற்றுவிட்டு, பிறகு செல்ல வேண்டுமென்ற வழிமுறையை வைத்தால்தான் நல்லது. இல்லையென்று சொன்னால், இங்கு இருக்கக்கூடிய அதிகாரிகள், அவர்களுடைய அதிகாரத்தைத்

துஷ்பிரயோகம் செய்து, பணம் பறிக்கப் போய்விடக்கூடிய நிலையும் வந்துவிடும். எச்சரிக்கையாக இருப்பதற்காக நான் இந்த நேரத்திலே அரசைக் கேட்டுக்கொள்வதெல்லாம், கிரிமினல் புரொசிஜர் கோட்-படி நீங்கள் Search Warrant-ஐ அவர்கள் ஜுடிசியல் மாஜிஸ்ட்ரேட்டிடம் பெற்றுவிட்டுத்தான், பிறகு ஒரு Premises-ஐ அவர்கள் Search செய்ய வேண்டும், பொருட்களைக் கைப்பற்ற வேண்டுமென்ற நியதியை வைத்தீர்கள் என்று சொன்னால், கேபிள் டி.வி.-ஐ நடத்தக்கூடியவர்கள் பாதுகாப்பாக இருப்பார்கள், நம்பிக்கையோடு செயல்படக்கூடிய ஒரு சூழ்நிலையும் வரும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 8-00*

மாண்புமிகு உறுப்பினர் வைதியலிங்கம் இங்கு சுட்டிக்காட்டியதுபோல, அந்தத் தண்டனை மிகவும் அதிகமாக இருக்கிறது. அதிலே, பொதுவாக, இறப்பு என்று ஏற்பட்டால், அதிலே கொடுக்கக்கூடிய தண்டனை மிகக் கடுமையாக இருக்கின்ற காரணத்தினாலே— Consumer Rights என்பது இப்பொழுது அதிகமாக, பரவலாக எல்லோருக்கும் தெரிந்துவிட்ட ஒன்று. யாராவது ஒரு பொருளை அவர்கள் புகுத்தினார்கள் என்று சொன்னால், அதிலே பாதிப்பு Consumer-க்கு ஏற்பட்டால், உடனே Consumer Court-க்குப் போய் விடுகிறார்கள் அல்லது தங்களுடைய உரிமையை நிலைநாட்ட விரும்புகிறார்கள். அப்படி ஒரு பொருளை அவர்கள் புதிதாக அறிமுகப்படுத்துகிறபோது, கேபிள் டி.வி. போன்றவற்றை அவர்கள் நாட்டிலே நிலைநிறுத்துகிறபோது, அதனால் ஒரு கேடு விளையும் என்று சொன்னால், யார் அந்தச் செயலைச் செய்தார்களோ, அதற்கு அவர்கள்தான் பொறுப்பு ஏற்க வேண்டும் என்பதிலே எள்ளளவும் யாருக்கும் ஐயம் இருக்க முடியாது. ஏனென்றால், அதற்குப் போய் வேறு யாரும் பொறுப்பு ஏற்றுக்கொள்ள முடியாது. நாளைக்கு அதனாலே ஒரு இறப்பு என்று ஏற்படக்கூடிய ஒரு சூழ்நிலை—பொதுவாக இறப்பு வராது, ஒருவேளை வந்தால், இதிலே லாபம் அடையக்கூடியவர்கள் அந்தப் பொறுப்பைக்கூட ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொன்னால், பிறகு யார் அதற்குப் பொறுப்பு? ஒரு சாதாரணப் பாமரன் யாராவது அதிலே மாட்டிக்கொண்டு இறந்து விட்டான் என்று சொன்னால், அதற்கு ஒரு இலட்சம் ரூபாய் நஷ்ட ஈடு கொடுக்கவேண்டுமென்று சொன்னால், யார் பாக்கெட்டிலே இருந்து அந்த ரூபாயை நாம் கொடுக்கப் போகிறோம்? அரசு அதற்கெல்லாம் கொடுக்க முடியாது. ஆகவே, பணத்தைச் சம்பாதிக்கக்கூடிய—கேபிள் டி.வி.யிலே நல்ல வருமானம். நீங்கள்





சட்டமன்ற உறுப்பினராகவோ அல்லது நாடாளுமன்ற உறுப்பினராகவோ, ஒரு பேராசிரியராகவோ இருக்க வேண்டாம். கேபிள் டிவியை ஓர் ஊரிலே வைத்துவிட்டீர்கள் என்று சொன்னால், அதிலேயே பெரிய பணக்காரர் ஆகி நல்ல வருமானத்தைப் பெறக்கூடிய துறையாக மாறி விட்டது அந்தத் துறை. ஆகவே, அப்படிச் சம்பாதிக்கக்கூடியவர்கள் (மணியடிக்கப்பெற்றது) பணத்தை....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் 3 சட்டமுன்வடிவுகள் இருக்கின்றன. கொஞ்சம் சீக்கிரம் உரையை முடித்து விடுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** இதோ முடித்து விடுகிறேன். பணத்திற்கு நிச்சயமாக அவர்களே அதற்குப் பொறுப்பு ஏற்கக்கூடிய நிலையை வைப்பதுதான் நல்லது. ஆனால், இவ்வளவு கடுமையாக இருப்பதற்குப் பதில், தண்டனையைக் குறைக்கலாம் என்கின்ற ஆலோசனையைச் சொல்லி, இதிலே அதிகாரிகள் தங்களுடைய அந்த அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்யாமல் இருந்து, கேபிள் டி.வி.-க்காரர்களுக்கும் உரிய பாதுகாப்பை, குறிப்பாக அதைப் பார்த்துக் கொண்டிருக்கிற Consumer-களுக்கு, வீட்டிலே இருக்கக்கூடிய பெண்மணிகள், மற்றவர்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் வரக்கூடாது. ஏனென்றால், இது மாதிரி ஒரு action எடுத்து ஒரு ஏரியாவிலே ஒருவரை அரஸ்ட் பண்ணுகிறோம் என்று சொன்னால், 15 நாட்களுக்கு அந்த இடத்திலே டி.வி. இல்லை, கேபிள் டி.வி. இல்லை என்று சொன்னால், பிறகு அதனாலும் ஒரு கொந்தளிப்பை அந்தப் பகுதியிலே ஏற்படுத்திவிடும். அதற்கும் எப்படியாவது ஒரு alter-native— தொடர்ந்து அந்த இயக்கம் நடக்கக்கூடிய அளவிற்கு ஒரு வழிமுறையை இந்த அரசு காண்பிக்க வேண்டும் என்று கேட்டு, என்னுடைய கருத்தைச் சொல்லி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமுன்வடிவு 35/2002-லே என்னுடைய கருத்தினை, பாட்டாளி மக்கள் கட்சியின் கருத்தினை மிகச் சுருக்கமாகச் சொல்லலாம் என்று மனப்பூர்வமாக எண்ணுகிறேன் என்று சொல்லி, மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒரு குடும்பம் சினிமாவிற்குப் போகவேண்டுமென்றால் எவ்வளவு ரூபாய் ஆகும் என்பதனைத் தயவுசெய்து சிந்தித்துப் பாருங்கள். பெண்களை மிகவும் கவரக்கூடியது டி.வி. அந்த டி.வி.யிலே வரக்கூடிய சேனல், அதிலும் 9 மணிக்கு மேலே ஆகிவிட்டால், வீட்டுக்காரனுக்குச் சோறு போடுகிறார்களோ, இல்லையோ, அம்மாவிற்குக்கூடத் தெரியும்.

[திரு. ஐ. கணேசன்] [2002 மே 10

அண்ணியைப் பார்க்காதவர்கள் யாராவது இருக்கிறார்களா? இருக்க முடியுமா? எந்த வேலையாக இருந்தாலும் விட்டுவிட்டு, ஓடோடிப் பார்க்கக்கூடிய இந்த டி.வி.க்கு இவ்வளவு பெரிய சட்டமா? சிந்திக்க வேண்டாமா? (சிரிப்பு) விபத்து—ஒரு தொழிலாளி ஒரு ஒயரை எடுத்துக் கொண்டு டி.வி.யிலே கனெக்ஷன் கொடுக்கிறார். தற்செயலாக ஒரு விபத்து ஏற்பட்டுவிடுகிறது. அதற்குப் போய் ஒரு இலட்சம் ரூபாய், 3 ஆண்டு சிறைச்சாலை, நியாயமா? சிந்தித்துப் பாருங்கள். அதுமட்டுமல்ல, நண்பர்கள் சொன்னதுபோல, இந்த டி.வி.யிலே பணியாற்றக்கூடியவர்கள் அத்தனை பேரும் ஞானசேகரனுடைய கண்ணுக்கு வேண்டுமானால் மஞ்சளாகத் தெரியலாமேயொழிய, படித்த இளைஞர்கள், வேலையில்லாத இளைஞர்கள், வேறு வேலை இல்லையென்று, இவர்களாகத் தேடிக்கொண்ட இளைஞர்கள், வீட்டை அடமானம் வைத்து, தோட்டத்தை அடமானம் வைத்து, பல்வேறு பொருட்களை அடமானம் வைத்து, தன்னுடைய அனைத்து உழைப்புகளையும் போட்டு நடத்தக்கூடிய அந்தத் தொழிலுக்கு இவ்வளவு பெரிய வரியா? இவ்வளவு பெரிய சட்டமா? சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

*பிற்பகல் 8-05*

இன்று நாட்டிலே, வளர்ந்துவரும் விஞ்ஞான யுகத்திலே, நாம் அத்தனை பேரும் பார்க்கக்கூடிய வகையில் கிராமம் தோறும் பட்டிதொட்டியெல்லாம் டி.வி. வந்துவிட்டது. எந்த ஊரில் 250 ரூபாய் கொடுக்கிறான்? ஞானசேகரன், தன்னுடைய சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் கொடுப்பது மாதத்திற்கு 250 ரூபாயா? சென்னையிலேயோ குறுக்கீடு இல்லை. அண்ணன் 150 ரூபாய்தான் கொடுக்கிறார். நாங்களும் 150 ரூபாய்தான் கொடுக்கிறோம். எல்லாவற்றுக்கும் சேர்த்துத்தான். எங்கள் ஊரிலே 70 ரூபாயிலிருந்து 100 வரைக்கும்தான் இருக்கிறது. எந்த ஊரிலும் 250 ரூபாய் இல்லை. இது மிகப் பெரிய கடுமையான சட்டம். அது மட்டுமல்ல, டி.வி. இல்லையென்றால் வாரத்திற்கு எவ்வளவு செலவு? நம்முடைய மனைவி, குழந்தைகள் பண்ணுகிற தொல்லை எவ்வளவு? சினிமாவுக்குக் கூட்டிக்கிட்டுப் போ என்கிறார்கள். ஒரு சினிமாவுக்குப் போகவேண்டுமானால், குறைந்தது 300 ரூபாயாவது ஆகும் அல்லவா? குடும்பத்தோடு போனால்— நாமும் ரேட்டை ஏற்றிக் கொள்ளச் சொல்லிவிட்டோம். புதுப்படம் போட்டால் 4 வாரத்திற்கு ஏற்றிக்கொள்ளச் சொல்லிவிட்டோம்—முடியுமா? ஒரு விவசாயி, ஒரு கூலித் தொழிலாளி, ஒரு வண்டி இழுக்கிறவன் எப்படியோ கடனோ, உடனோ வாங்கி சீட்டைப் போட்டு, 1500 ரூபாய், 2000 ரூபாய்க்கு டி.வி. வாங்கி



2002 மே 10] [திரு. ஐ. கணேசன்]

வைத்திருக்கிறான். அவன் வீட்டுக்காரி எதையோ சிக்கனப்படுத்தி 100 ரூபாயைக் கொடுத்து கேபிள் கனெக்ஷன் வாங்கியிருக்கிறது. அதைப் போய் நாம் கட் பண்ணுவது, கனெக்ஷனை வெட்டுவது, ஜெயில் தண்டனை கொடுப்பது, இது முறையாகத் தெரியவில்லை. தயவுசெய்து இதை நீங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். படித்த இளைஞர்களுக்கு எம்ப்ளாய்மென்டில் இப்போது வேலையே கொடுப்பதில்லை. அரசாங்கத்தில் அந்த அளவுக்கு கஜானா காலி. அதை முறையாகச் செய்ய முடியவில்லை. அப்படியிருக்கும்போது, அந்த இளைஞர்களுக்கு நாம் என்ன செய்யப் போகிறோம்? தயவுசெய்து சிந்தித்துப் பார்க்கவேண்டும். அது மட்டுமில்லை. காவல் துறையில் உள்ளவர்களுக்கு இந்த அதிகாரத்தைக் கொடுத்தால், நீ ராத்திரியில் போய்க் கதவைத் தட்டு, கதவைத் திறக்கவில்லையென்றால் உடைத்துவிட்டு உள்ளே போ என்றால், என்ன இது? அவன் கதவைத் திறக்கவில்லையென்றால், கதவை உடைத்துக்கொண்டு போய் எல்லாவற்றையும் பறிமுதல் பண்ணிக்கிட்டு வா என்றால், போலீஸ்காரன்கிட்டே போனால் திரும்புமா? தயவுசெய்து இதைச் சிந்தித்துப் பார்த்து, நீங்கள் நல்லதொரு முடிவை எடுத்து, இதை மறுபரிசீலனை செய்து, அந்த இளைஞர்களுக்கு எல்லாம் வேலை வாய்ப்பைக் கொடுக்கக்கூடிய அளவுக்கு இதிலே தயவுசெய்து கருணை காட்டவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எந்த ஊரிலும் 250 ரூபாய் வரைக்கும் போகவில்லை. குறைவாகத்தான் வைத்திருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு வரி என்ற பெயரில் பல்வேறு தொல்லைகளைக் கொடுத்துவிடாதீர்கள் என்பதை மட்டும் நான் சொல்லிக்கொள்கிறேன். எவ்வளவோ ஏழைகள், படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் இதை ஒரு சின்னத் தொழிலாகச் செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு பாதுகாப்புக் கொடுங்கள். விபத்து ஏற்பட்டால் இவ்வளவு பெரிய கடுமையான தண்டனையா என்பதை மறுபரிசீலனை செய்ய வேண்டும். போலீஸ்காரர்களுக்குக் கொடுக்கிற அதிகாரத்தையும் மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

அதேபோல, நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் காலையில் பேசினார்கள். எனக்கு ரொம்ப வருத்தம். நன்றியைப் பற்றிச் சொன்னார். நாலாவது முறையாக நான் இங்கே வந்து, முதல் முறையாகப் பேசும்போது எங்களுக்கு நன்றி சொல்லவில்லையே என்று சொன்னார். இன்றைக்கு அவருடைய சட்டமுன்வடிவு விவாதத்திற்கு வந்தபோது, எவ்வளவு பெருந்தன்மையோடு, அதனுடைய கருத்தை, அதனுடைய

[திரு. ஐ. கணேசன்] [2002 மே 10

ஆழத்தை, அதனால் ஏற்படுகிற தொல்லைகளைக் குறித்து, எவ்வளவு ஆணித்தரமாக எங்களுடைய தம்பி டி.கே. இராஜா எடுத்துவைத்து ஆதரித்தார்? அமைச்சர் திரும்பத் திரும்ப, சகோதரி, என்னுடைய சகோதரி தங்கை பாலபாரதியிலிருந்து, கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வரை, ஏன் பிரதான எதிர்க்கட்சியான தி.மு.க.வுக்கும் நன்றி சொன்னாரே, பா.ம.க.வுக்கு நன்றி சொன்னால் என்ன கெட்டா போச்சு? அதனால் என்ன நஷ்டம்? ஏன் அதைச் சொல்லவில்லை? அவ்வளவு பயமா? எங்கள்கிட்டே வந்து சொல்கிறீர்களே! மாமியார் உடைத்தால் மண் குடம், மருமகள் உடைத்தால் பொன் குடமா? தயவுசெய்து சிந்தியுங்கள். நாங்கள் தைரியமாக இருக்கிறோம். மடியில் பயம் இல்லை, வழியில் கனம் இல்லை. (சிரிப்பு) மடியில் சரி...மடியில் கனம் இல்லை, வழியில் பயம் இல்லை. நாங்கள் தைரியமாக இருக்கிறோம். உங்கள் அரசாங்கம் கொண்டு வருகிற பில்லில்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன், நேரம் ஆக, நேரம் ஆக, கொஞ்சம் குழம்புகிறது. அதனால் சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** நான் முடித்துக்கொள்கிறேன். எதற்குச் சொல்கிறேன் என்றால், முதன்முதலில் அவர் சொல்லி ஆரம்பித்தார். இன்றைக்கு அவைக் கூட்டம் முடிகிறது. அதுவும், இதுவும் சேர்ந்து ஒரே கனெக்ஷனாக இருக்கட்டுமே என்றுதான் சொல்கிறேன். அமைச்சரும் நமக்கு வேண்டியவர்தான். அதற்காக ஒன்றுமில்லை. ஆனால் இது நன்றாக இல்லை. ஆகவே, யார் உடைத்தாலும் குடம், குடம்தான் என்பதைச் சொல்லி, இந்தச் சட்டத்தை மறுபரிசீலனை செய்யுங்கள் என்று சொல்லி, இந்த வாய்ப்பை நல்கியதற்குத் தங்களுக்கு நன்றி சொல்லி அமைகிறேன், நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 8-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2002 ஆம் ஆண்டு, தமிழ்நாடு பன்முறைச் செயற்பாடுகள், கானொலி....(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி மகேஸ்வரி, ஏதாவது சொல்ல வேண்டுமென்றால், திருமதி யசோதாவிடம் கொடுத்துவிடுங்கள்.



2002 மே 10]

**திருமதி டி. யசோதா:** பதிவுப்பேழைக் கருவி, கம்பிவட தொலைக்காட்சி இணைப்பு....(குறுக்கீடு) அம்மாவுக்கு நன்றி.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் துறை மானியக் கோரிக்கையிலே நான் பேசியபோது, கோவை மாவட்டத்திலே, கெம்பட்டி காலனியைச் சேர்ந்த இராஜேந்திரன் என்கின்ற தங்க நகைத் தொழிலாளி, தொழில் நசிவு காரணமாக, மனமுடைந்து போய், குடும்பத்தோடு தற்கொலை செய்துகொண்டார் என்றும், அந்தத் தற்கொலை முயற்சியிலே இராஜேந்திரனும், அவரது மனைவியும், அவரது ஒரு மூத்த குழந்தையும் இறந்து போயினர் என்றும், ஆனால், அதிர்ஷ்டவசமாக அவரது இன்னொரு பெண் குழந்தையும், ஒரு ஆண் குழந்தையும் தப்பித்துக் கொண்டார்கள்; பிழைத்துக் கொண்டார்கள் என்றும் சொல்லி, ஆகவே, தாய், தந்தையரை இழந்து நிராதரவாய் நிற்கின்ற அந்த இரண்டு குழந்தைகளுக்குக் குறைந்தபட்சம், தலா ஒரு இலட்சம் ரூபாயாவது உதவித் தொகை வழங்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் நான் ஒரு கோரிக்கை வைத்தேன். தாயுள்ளமும், தயா சிந்தனையும் கொண்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள் எனது கோரிக்கையைப் பரிவோடும், பாசத்தோடும் ஏற்று, போர்க்கால அடிப்படையிலே அதற்கு உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொண்டு, இன்றையதினம் காலையிலே, அந்த இரண்டு குழந்தைகளுக்கும் தலா ஒரு இலட்சம் ரூபாய் (மேசையைத் தட்டும் ஒலி) உதவித் தொகையாக வழங்கியுள்ளார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியை, இந்த மாமன்றத்தோடு, நெகிழ்ச்சியோடு நான் பரிமாறிக் கொள்ள விழைகின்றேன். அந்தக் குழந்தைகளின் தாய், தந்தையர் இருந்திருந்தால்கூட, இப்படி ஒரு சிறப்பான எதிர்காலம், பாதுகாப்பான எதிர்காலம் அந்தக் குழந்தைகளுக்குக் கிட்டியிருக்குமா என்பது சந்தேகம்தான். இனி, அந்தக் குழந்தைகளுக்குத் தாய், தந்தையர் இல்லை என்ற குறை என்றும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) தாயாகி, தந்தையாகி, தாயுமானவராய்த் தாங்கி நிற்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்கள், அவர்களுக்கு எல்லாமாய் நிறைந்து நின்று, அவர்களது ஏக்கத்தைத் தீர்த்து வைத்திருக்கின்றார்கள்; ஏற்றம் தந்திருக்கின்றார்கள். பாலுக்காக அழுத பாலகன் சம்பந்தருக்கு ஞானப் பால் ஊட்டி, ஞான சம்பந்தராக்கிய உமையவளின் உருவாய், திருவாய் உயர்ந்து நிற்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) என் சார்பாகவும், பயன்பெற்ற குழந்தைகள் சார்பாகவும், எனது தொகுதி மக்களின் சார்பாகவும் இலட்சோப இலட்சம் தங்க நகைத் தொழிலாளிகளின் சார்பாகவும், எனது உளமார்ந்த, மனமார்ந்த, நெஞ்சார்ந்த நன்றிகளை நிறைவோடு சமர்ப்பித்துக் கொண்டு,

[திருமதி எஸ். மகேஸ்வரி] [2002 மே 10

பொற்கொல்லர்களைப் பொறுத்தமட்டிலும், இது பொற்காலம் என்றே நினைக்கின்றேன். இருண்டு கிடந்த அவர்களின் வாழ்விலும் இனி விடிவெள்ளி முளைத்துவிட்டது என்ற நம்பிக்கையோடு, மீண்டும் உங்களது கருணை உள்ளத்திற்கு, சிரம் தாழ்த்தி, கரம் கூப்பி எனது நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு, அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திருமதி டி. யசோதா:** அதுதான் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

*2002* ஆம் ஆண்டு தமிழ்நாடு பன்முறைச் செயற்பாடுகள், காணொலி, பதிவுப் பேழைக் கருவி, கம்பிவட தொலைக்காட்சி இணைப்பு ஆகியவற்றின் மூலம் தொலைக்காட்சித் திரையில் படக்காட்சிகள் காட்டுதல் (முறைப்படுத்தப்படுதல்)—இதுதான் முக்கியமானது. இராட்சசனுக்குக் கை, கால் முளைத்த மாதிரி இருக்கிறது, இந்தக் கேபிள் டி.வி. விவகாரம். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், நான் ஏற்கெனவே பேசி இருக்கிறேன், இந்த மாமன்றத்திலே. போஸ்ட் ஆபீஸிலே *500* ரூபாய் கட்டினால், அவன் ஒரு பெர்மிஷன் கொடுத்து விடுகிறான். ஒரே இடத்திற்கு, *3* பேர், *4* பேர் கேட்டாலும், அதே மாதிரிக் கொடுத்து விடுகிறான். கமிஷனர் ஆபீஸிலே போய்க் கேட்கும்போது, காவல் துறை சம்பந்தப்பட்டவர்களாக இருந்தால், காவல் நிலையங்களுக்கு அருகிலே இருக்கிற அவர்கள் குவார்ட்டர்ஸ்-ஆக இருந்தால், அவர்கள் கொடுத்து விடுகிறார்கள். ஆகவே, ஏற்கெனவே, போஸ்ட் ஆபீஸிலே வாங்கியவர்களுக்கும், கமிஷனர் ஆபீஸிலே வாங்கியவர்களுக்கும் பிரச்சினைகள் இருந்து, பல பிரச்சினைகளை நான் இன்றைய மாநகரக் காவல் துறை ஆணையரிடமே கொண்டு போய் இருக்கின்றேன். அதேபோல, இந்தப் பிரச்சினைகளை முறைப்படுத்தியாக வேண்டும். எனக்கு முன்னாலே பேசிய பல உறுப்பினர்கள் இங்கே சொன்னார்கள்; நிறைய இளைஞர்கள் இதிலே பொறுப்பேற்றுச் செய்கின்றார்கள்; ஆகவே, இதிலே நாம் தலையிடுவது சரியாக இருக்குமா என்று. நான் இப்போதுகூடச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கேபிள் டிவிக்கு இங்கே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள், நாம் போய் 'ஒயர்' போடப் போவதில்லை. ஏற்கெனவே போட்டவர்கள்தான் போடப் போகிறார்கள். அதை முறைப்படுத்த வேண்டும் என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், எனக்கு முன்னாலே பேசிய ஞானசேகரன் அவர்கள் குறிப்பிட்டார்கள். கேபிள் டி.வி. மெட்ராஸிலே இரண்டுதான். ஒன்று சுமங்கலி; இன்னொன்று



2002 மே 10] [திருமதி டி. யசோதா]

ஹாத்வே. இந்த இரண்டு கேபிள் டி.வி.க்களும்தான் தமிழ்நாட்டிற்கு மொத்தமாகக் குத்தகை எடுத்தமாதிரி, எல்லோருக்கும் அவர்கள் பார்த்துத்தான் பிச்சை போட்டு, அதன் மூலமாகத்தான் அவர்களுக்குக் கிடைக்க வேண்டும் என்ற ஒரு நிலைமை இன்றைக்கு உருவாகி இருக்கிறது என்பதை யாரும் மறந்துவிட முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 8-15*

கேபிள் டி.வி. போடுகிறவர்கள் இப்போது சாதாரணமாக இல்லை; நல்ல வசதியாக, ரொம்ப நல்ல, பெரிய நிலையிலேதான் அவர்கள் இருக்கிறார்கள். அதே நேரத்திலே, நான் உதாரணத்திற்குச் சொல்ல விரும்புகின்றேன். கடந்த ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் கலைஞர் அவர்கள் கைது செய்யப்பட்டது உங்கள் அனைவருக்கும் தெரியும்; இந்த மாமன்றத்திலே இருக்கிற உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் தெரியும்; நாடு அறியும். உடனடியாக சன் டி.வி.-யிலே அந்தச் செய்திகள் வந்தன. வந்தவுடனே, அது டில்லி வரைக்கும் போய்விட்டது; டில்லியைத் தாண்டி உலகம் எங்குமே அந்தச் செய்தி பரவிவிட்டது. அதற்குப் பிறகுதான் போலீஸ் துறை, ஜெயா டி.வி-யிலே அவர்களுடைய விளக்கத்தைக் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. நம்முடைய செய்தி இரண்டாவதாகப் போய்ச் சேர்ந்தது. அதன் காரணமாக, ஜெயா டி.வி.-யிலே வந்த அந்த மறுப்பான செய்தியையும், அந்தத் தொலைக்காட்சியிலே வந்த அந்த படத்தையும், என்னுடைய தொகுதியிலே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் வசித்த அந்த மணப்பாக்கம் பகுதியிலே இருக்கின்ற ஒரு டி.வி.-காரர்கள்--டி.வி. என்று சொல்ல முடியாது; ஸ்டார் டி.வி. ஷார்ட் விஷன் என்று ஒன்று நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சும்மா நடத்தவில்லை. ஸ்டார் டி.வி.-க்கு ஏற்கெனவே *37* ஆயிரம் ரூபாய் கட்டி இருக்கிறார்கள். அதனுடைய ரசீது இது. (ஒரு தாளைக் காட்டினார்.) *37* ஆயிரம் ரூபாய் மட்டுமல்ல; அதற்கு அடுத்தது *30* ஆயிரம் ரூபாய் ஒன்று கட்டி இருக்கிறார்கள்; அதற்கு அடுத்தது *27* ஆயிரம் ரூபாய் கட்டி இருக்கிறார்கள். இவ்வளவும் கட்டி, ஸ்டார் இந்தியா லிமிடெட்டிடம் பெர்மிஷன் வாங்கி இருக்கிறார்கள். பெர்மிஷன் வாங்கி அந்த இணைப்பை நடத்திக் கொண்டிருக்கிறபோதுதான், கலைஞர் அவர்களுடைய அந்த நிகழ்ச்சி, ஜெயா டி.வி.-யிலே வந்த அந்த கேசட், அதிலே போட்டுக் காட்டப்பட்ட காரணத்தினாலே, பணத்தை வாங்கிக் கொண்ட அந்த ஸ்டார் விஷன், கம்ப்ளீட்டாக சுமங்கலி டி.வி.-யினுடைய உந்துதலின் பேரில், கட்டாயத்தின்

பேரில் அவர்களுடைய அந்தத் தொடர்பைத் துண்டித்து விட்டார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தனிப்பட்டவர்களுக்கு இருக்கின்ற அந்தச் செல்வாக்கின் காரணமாகவும், தனிப்பட்டவர்கள் அத்தனை பேரும் அதை monopoly-ஆக வைத்துக் கொண்டிருக்கின்ற காரணத்தினாலேயும் அவர்கள் நினைத்ததுதான் செய்திகளாக இந்த நாட்டு மக்களுக்குப் போய்ச் சேர வேண்டும்; அவர்கள் நினைப்பதுதான் தொலைக்காட்சிப் பெட்டிகளிலே வர வேண்டும் என்கின்ற அந்தச் சர்வாதிகார எண்ணத்தை ஒடுக்க வேண்டுமென்று சொன்னால், (மேசையைத் தட்டும் ஒலி) நிச்சயமாக இந்தப் பதிவுப்பேழைக் கருவிகள் சட்டத்தைப் பயன்படுத்தி, கேபிள் டி.வி.-யை நாம் முறைப்படுத்தித்தான் ஆகவேண்டும். நான் இதிலே தெரிவித்துக்கொள்ள விரும்புவது எல்லாம் என்னவென்று சொன்னால், எனக்கு முன்னாலே பேசிய சகோதரர் மாண்புமிகு உறுப்பினர் கணேசன் அவர்கள் சொன்னார்கள்: 150 ரூபாய் பெரிய தொகை இல்லை என்று சொல்கிறார்; சினிமாவுக்குப் போனால் 300 ரூபாய் ஆகும்; 400 ரூபாய் ஆகும் என்கிறார். நம்மாலே 150 ரூபாயைத் தாங்கிக்கொள்ள முடியும். ஆனால், கிராமப்புறங்களிலே இருக்கின்றவர்களாலே அந்த 150 ரூபாயைத் தாங்கிக் கொள்ள முடியுமா என்பதை நாம் பார்த்தாக வேண்டும். மாநகரத்திற்கு, முனிசிபாலிட்டிக்கு, பேரூராட்சிக்கு என்று ஒரு தொகையும், பஞ்சாயத்துகளுக்கு என்று ஒரு தொகையும் ஒரே சீராகத் தமிழகம் முழுமையும் இருக்கக்கூடிய ஒரு வாய்ப்பினை இந்தத் திருத்தத்தாலே நீங்கள் கொண்டுவர முடியும் என்று நான் நினைக்கிறேன்.

அதேபோல, வீடியோ லைப்ரரி வைத்து இருக்கின்றவர்கள் குறுகிய காலத்திலே மிகப் பெரிய வசதி படைத்தவர்களாக மாறி இருந்தாலும்கூட, அரசாங்கத்துக்கு அதனாலே எந்தவிதமான வருமானமும் இல்லை. அந்த வருமானம் ஓரளவுக்காவது திசை திருப்பப்பட்டால், அரசுக்கு அதனுடைய வருமானம் வருமேயானால், நிச்சயமாக அதனாலே நல்ல பணிகளை இந்த அரசின் மூலமாக, ஏழை எளிய மக்களுக்கு ஆற்ற முடியும் என்கின்ற காரணத்தினால்—கேபிள் டி.வி. என்று சொல்வது, யாரோ சிலர் மட்டும் வைத்துக்கொண்டு, அவர்களே அனுபவித்துக் கொண்டு இருக்க வேண்டும்; அந்தக் குடும்பமே அனுபவித்துக் கொண்டு இருக்க வேண்டும் என்கின்ற நிலையை மாற்றி, பரவலாக, எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்கின்ற நிலையிலே இந்தத் திருத்தத்தை நீங்கள் கொண்டுவர வேண்டும் என்று கேட்டு அமைகின்றேன். நன்றி, வணக்கம்.





பிற்பகல் 8-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன். (குறுக்கீடு)

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அக்கா யசோதா அவர்கள் சொல்லும்போது, 150 ரூபாய் பெரிய தொகை என்று சொன்னார்கள். நான் அதில் ஒன்றும் உள்ளே புகவில்லை. கிராமத்திலே 75 ரூபாய் என்று சொன்னேன். அதை ஏன் சொல்லவில்லை என்று தெரியவில்லை. எங்கள் ஊர் எடப்பாடி முனிசிபாலிட்டிதான், அங்கேகூட 75 ரூபாய்தான் வாங்குகிறார்கள். இங்கே, சென்னையிலே, சட்டமன்ற விடுதியிலேயே 150 ரூபாய்தான் வாங்குகிறார்கள் என்று சொன்னேன். அதைக் கொஞ்சம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கு. பிச்சாண்டி:** Point of Order.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேபிள் டி.வி...(குறுக்கீடு) நான் முடித்து விடுகிறேன். டிரெயினுக்குப் போக வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கருணாகரன் பேசி முடித்து விடட்டும். (குறுக்கீடு) அவர் பேசி முடித்து விடட்டும்.

**திரு. கே.சி. கருணாகரன்:** டிரெயினுக்குப் போக வேண்டும். (குறுக்கீடு)

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சி உறுப்பினர், குடும்ப டி.வி. என்று சொல்கிறார்கள். அப்போது ஜெயா டி.வி. மட்டும் என்ன அரசாங்க டி.வி.யா என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. சம்பந்தம் இல்லாமல் சொல்கிறீர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் யசோதா அவர்கள் உண்மையைத்தான் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் பிச்சாண்டி அவர்கள் எழுந்து, சம்பந்தமில்லாத கேள்வியை இப்போது கேட்டிருக்கிறார். ஜெயா டி.வி. நிறுவனம், டி.வி.யைத்தான் நடத்திக் கொண்டிருக்கிறது. அவர்கள் கேபிள் டி.வி.யை நடத்தவில்லை. இங்கே மாண்புமிகு உறுப்பினர் யசோதா அவர்கள் குறிப்பிட்டது, சுமங்கலி கேபிள் விஷன்—எஸ்.சி.வி. என்னும் கேபிள் டி.வி. multi system operators, அது யாருக்குச் சொந்தம் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அவர்கள் இன்று ஏகபோக உரிமை

என்பதுபோல், ஒரு monopoly-ஆக நடத்திக் கொண்டிருக்கிறார்கள். எந்த அளவுக்கு அவர்கள் தங்களுடைய சுய கட்டுப்பாட்டில் இந்தக் கேபிள் டி.வி. ஆப்பரேட்டர்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்குச் சில புள்ளிவிவரங்களைத் தர விரும்புகிறேன். அதற்கு முன்னால் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

1991 முதல் 1996 வரை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தபோது, கேபிள் டி.வி. ஆப்பரேட்டர்ஸை வரைமுறைப்படுத்த வேண்டும், கட்டுப்படுத்த வேண்டும் என்பதற்காக ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தது. அப்போது ஒரு கேபிள் டி.வி. ஆப்பரேட்டருக்கு அதிகபட்சம் 100 கனெக்ஷன்கள் கொடுக்கலாம் என்று ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டது. அப்போது ஒரு லைசென்சிங் முறையும் இருந்தது. கேபிள் டி.வி. ஆப்பரேட்டர்ஸ், அரசிடமிருந்து, உரிய அத்தாரிட்டியிடமிருந்து லைசென்சைப் பெற்று அந்தத் தொழிலை நடத்த வேண்டும் என்ற முறை இருந்தது. அதன் பிறகு, தி.மு.க. ஆட்சி வந்ததற்குப் பிறகு, 1996-க்குப் பிறகு இந்த லைசென்சுகளை எல்லாம், வேண்டுமென்றே renew செய்யாமல், அப்படியே காலாவதியாக விட்டுவிட்டார்கள். பின்னர் அந்த லைசென்ஸ் கொடுக்கும் முறையையே கைவிட்டுவிட்டார்கள். ஆகவே, யார் வேண்டுமானாலும், எங்கே வேண்டுமானாலும் கேபிள் டி.வி. நிறுவனங்களைத் தொடங்கலாம் என்றவொரு நிலை ஏற்படுத்தப்பட்டது. இதற்கு அரசுத் தரப்பிலிருந்து எந்தவிதமான கட்டுப்பாடும் இல்லை, எந்தவிதமான சட்டங்களும் இல்லை. அப்படித்தான் 1996 முதல் 2001 வரை நடந்திருக்கிறது. ஆகவே, சிலர் தங்களுக்கு இருக்கின்ற Muscle power, man power—ஆள் பலம், பணபலம், இவற்றையெல்லாம் வைத்துக்கொண்டு, அன்றைய அரசிடம் அவர்களுக்கிருந்த செல்வாக்குகளையும் வைத்துக்கொண்டு, அவர்களுக்கு இருந்த அதிகாரத்தை வைத்துக்கொண்டு, சிறிய கேபிள் டி.வி. ஆப்பரேட்டர்களை எல்லாம் மிரட்டி, தங்களுடைய கட்டுப்பாட்டில் கொண்டு வந்து, எந்தவிதமான சட்ட திட்டங்களும் இல்லாமல், எந்தவிதமான வரைமுறையும் இல்லாமல், யாருக்கு வேண்டுமானாலும் கேபிள் டி.வி. ஆப்பரேட் செய்வதற்கு உரிமை வழங்குவது, அவர்களுக்குப் பிடிக்கவில்லையென்றால் உடனடியாக அவர்களுக்குக் கொடுத்த அனுமதியை ரத்துச் செய்வது என்பன போன்ற முறைகளைக் கொண்டு வந்தார்கள்: முறைகேடுகளை அமல்படுத்தினார்கள். ஆகவே, அரசுத் தரப்பிலிருந்து, ஒரு effective regulatory mechanism—எந்தவிதமான கட்டுப்படுத்துகின்ற சட்ட திட்டங்களும் இல்லாமல் போனதால், கேபிள் டி.வி. ஆப்பரேட்டர்களும், அவர்களிடம் பணம் கட்டி, subscribe செய்கின்ற



பொது மக்களும், multi system operatorகள், பெரிய பண முதலைகளால் அவர்கள் கன்ட்ரோல் செய்யப்பட்டார்கள். அவர்கள் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டு வரப்பட்டார்கள். யார் யாருக்கு, எந்தெந்த இடத்தில் எவ்வளவு கன்ட்ரோல் இருக்கிறது என்ற புள்ளிவிவரத்தை மட்டும் இங்கே தருகிறேன். சுமங்கலி கேபிள் விஷன்—எஸ்.சி.விக்கு சென்னையில் 70 சதவிகிதம்; கோயம்புத்தூரில் 100 சதவிகிதம், திருச்சியில் 100 சதவிகிதம். அங்கே வேறு யாரும் இந்தத் தொழிலில் நுழைய முடியவில்லை, வேறு யாருக்கும் அதில் பங்கு இல்லை. திருநெல்வேலியில், சுமங்கலி கேபிள் விஷனுக்கு 70 சதவிகிதம் கன்ட்ரோல், மதுரையில் 30 சதவிகிதம். இதைத் தவிர Hathway என்ற நிறுவனத்திற்கு சென்னையில் 28 சதவிகிதம். கரண் என்ற நிறுவனத்திற்கு திருநெல்வேலியில் 30 சதவிகிதம்.

*பிற்பகல் 8-25*

இது போகத்தான், சிறிய, சிறிய ஆப்பரேட்டர்களுக்கு அந்த கிராமப்புறப் பகுதிகளிலும், இதர சின்னச் சின்ன டவுன்களிலும், நகராட்சிகளிலும், டவுன்—பேரூராட்சிகளிலும், அவர்களுக்கு இந்தத் தொழில் நடத்துகின்ற வாய்ப்புக் கிடைத்திருக்கின்றது. ஆகவே, நீங்கள் இந்தப் புள்ளிவிவரங்களைப் பார்த்தீர்களானால், இந்த சுமங்கலி கேபிள் விஷனுக்குக் கிட்டத்தட்ட ஏகபோக உரிமை கொடுக்கின்ற அளவுக்கு, கடந்த ஆட்சி, அவர்களுக்குத் தேவையான சலுகைகளை எல்லாம் செய்து கொடுத்து இருக்கிறது. ஆகவே, இதனால் அரசுக்கு எந்தவிதமான வருமானமும் இல்லை. இந்தப் பெரிய multi system operators, Sumangali Cable Vision போன்ற நிறுவனங்களால், சிறிய, சிறிய கேபிள் டி.வி. ஆப்பரேட்டர்கள் எல்லாம் மிரட்டப்பட்டு, அவர்கள் கேட்கின்ற கட்டணத்தைச் செலுத்த முடியாமல், சில பேர் தற்கொலைகூடச் செய்து கொண்டு இருக்கிறார்கள். இப்படிப்பட்ட சம்பவங்கள் கோயம்புத்தூரிலும், திருச்சியிலும், கடந்த ஆட்சிக் காலத்தில், தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்து இருக்கின்றன. ஆகவே, ஒரு குறிப்பிட்ட குடும்பத்தின் ஆதிக்கத்தில் இந்தத் தொழிலே போய்விடக்கூடாது. பலருக்கும் இதில் ஈடுபடுகின்ற வாய்ப்புக் கிடைக்க வேண்டும். இன்று படித்து, பட்டதாரிகளாக இருக்கின்ற இளைஞர்கள் எத்தனையோ பேருக்கு எந்தவிதமான வேலைவாய்ப்பும் இல்லை. ஆகவே, அப்படிப்பட்டவர்கள், படித்து வேலை இல்லாமல் இருக்கின்ற பட்டதாரிகள், ex-servicemen— இராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்றவர்கள், விதவைகள், கைவிடப்பட்ட பெண்கள், கைவிடப்பட்ட தாய்மார்கள், இப்படிப்பட்ட பலருக்கும் இந்த கேபிள் டி.வி. தொழிலில் ஈடுபடுகின்ற ஒரு வாய்ப்புக் கிடைக்க வேண்டும்.

ஒருவருக்கு, ஒரு குடும்பத்திற்கு ஏகபோக உரிமை என்பது ரத்துச் செய்யப்பட வேண்டும். இந்தத் தொழிலின் மூலம் அரசுக்கும் ஒரு குறிப்பிட்ட வருமானம் கிடைக்கப் பெறவேண்டும் என்பதற்காகத்தான் இந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருணாகரன் (குறுக்கீடு)

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் யசோதா அவர்கள் கலைஞர் கைதை ஜெயா டி.வியில் காண்பிப்பதற்கு முன்பாக அந்த டி.வியில் காண்பித்தார்கள் என்று சொல்வது, ஜெயா டி.வி. அரசாங்க டி.வி.யா என்பதுதான் என்னுடைய கேள்வி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மறுப்பு என்பது, காவல் துறையின் சார்பாக அந்த டி.வி.-யிலே சொல்லப்பட்டது என்றுதான் யசோதா சொன்னார்.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் என் பெயரைக் குறிப்பிட்ட காரணத்தினாலே சொல்கிறேன். இப்போது சுமங்கலி, சன், இன்னும் எடுத்துக்கொள்ளுங்கள், அதற்கு 7 தலைமுறைக்கு ஆட்கள் இருக்கிறார்கள். நம்ம ஜெயா டி.வி. சொந்தக்காரர்கள் என்று எடுத்துக்கொண்டால், அந்த அம்மாவைத் தவிர வேறு யாரும் கிடையாது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ஜெயா டி.வி. என்னுடையது அல்ல, என்னுடையது அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி டி. யசோதா:** பெயர் மட்டுமே அவர்களுடையதாக இருக்கலாம். ஆனால், அவர்களை, நம்முடைய முதல்வரைப் பொறுத்தமட்டிலும் அவர் ஒருவர்தான். அவர்களுக்குப் பின்னாலே சொந்தம் கொண்டாடுவதற்கு, உரிமை கொண்டாடுவதற்கு யாருமே இல்லை என்கின்ற நிலை இருக்கின்றபோது, மற்றவர்களை வைத்து அதை நாம் தொடர்புபடுத்திப் பேசுவதே மிகவும் வேதனைக்குரியது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஜெயா டி.வி. அரசு டி.வி. என்று சொல்லிக்கொள்வதற்கு



நான் தயாராக இல்லை. அதே நேரத்திலே நான் குறிப்பிட்டது, சுமங்கலி என்று சொன்னேனே தவிர, யாருக்குச் சொந்தமானது என்று நான் சொல்லவில்லை. ஆனாலும்கூட, அவர்கள் அடிக்கடி எங்கள் அப்பன் குதிருக்குள் இல்லை என்று அவர்களாகவே வெளியே வருகிறார்களே தவிர, அதை நான் சொல்லவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மாவிற்குப் பின்னால் பல கோடிக்கணக்கான அண்ணா தி.மு.க. தொண்டர்கள் இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** அசரீரி மாதிரிக் கேட்டது. அதனால் சுற்று முற்றும் பார்த்தேன். (சிரிப்பு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தச் சட்டமுன்வடிவு சம்பந்தமாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் அளித்திருக்கக்கூடிய விளக்கம், முழுக்க, முழுக்க 100 சதவிகிதம் உண்மையானது (மேசையைத் தட்டும் ஒலி) மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, கேபிள் டி.வி.யினுடைய ஏகபோகத் தனி ஆதிக்கத்தை ஒழிக்க வேண்டும் என்பதற்காக, கூலிக்கு வேலை செய்கிற, சிறிய ஏழை, நடுத்தர, படித்த இளைஞர்களைக் கொண்டு இருக்கக்கூடிய ஆப்பரேட்டர்களைக் கொண்டிருக்கக்கூடிய ஒரு தொழிற்சங்கத்தையே உருவாக்கி, நாங்கள் இதற்கான இயக்கம் நடத்தி வந்திருக்கிறோம். முதல்வர் அவர்கள் சொன்னதுபோல், கோவை மாவட்டத்தில் 100 சதவிகிதம் ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தின் ஆதிக்கத்தின்கீழ்தான் அது செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது. ஒரு நாள் இரவில் தந்திக் கம்பங்கள் நடுவதைப் போல, கோவை ஆற்றுப்பாலத்திலே தொடங்கி, மேட்டுப்பாளையம் வரைக்கும், விடிவதற்குள் பார்த்தால், திடீரென்று வெள்ளிக் கம்பங்களைப் போல் நட்டு, ஒரே இரவில் அந்த வேலை நடந்ததை எல்லாம் பார்த்து எங்களுக்கே ஆச்சரியமாகப் போனது.

பிற்பகல் 8-30

ரிலையன்ஸ் நிறுவனம்கூட கேபிள்களை இவ்வளவு வேகத்தில் பதிக்க முடியாது. அந்த அளவுக்குச் செய்தார்கள். ஆகவே, இப்படிப்பட்ட ஆதிக்கப்பிடியிலேயிருந்து, அதை யார் நடத்தினாலும் சரி, அதை விடுவிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, ஒரு கட்டுப்பாட்டுக்குள், வரையறைக்குள் கொண்டுவர வேண்டும் என்கிற எண்ணத்தோடு இந்த மசோதா கொண்டு வரப்படுவதை நாங்கள் வரவேற்கிறோம். அதே நேரத்தில், 1996 ஆம்

வருடத்திலே இருந்து இப்போதுவரை, அரசாங்கத்திற்கு வரவேண்டிய உரிய நிதி ஆதாரங்கள் இதன் மூலம் வராமல் இருந்திருக்கின்றன என்பதையும் சுட்டிக்காட்டி இருப்பதனால், அரசுக்குக் கிடைக்க வேண்டிய நிதியை இதன் மூலம் பெறுவதற்குரிய நிலையிலே கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருகிற இந்த ஏற்பாட்டை, நோக்கம் மற்றும் காரண விளக்கங்களில் சொல்லப்பட்டிருப்பதை நாங்கள் வரவேற்கிறோம். அதே நேரத்தில், சில திருத்தங்களையும் தயவுசெய்து அரசு பரிசீலிக்க வேண்டும் என்று நாங்கள் மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பில் அன்போடு கேட்டுக்கொள்கிறோம். ஏனென்றால், இது நடைமுறையில் சாதாரணமானவர்களுக்குப் பரவலாக்கப்படுகிறபோது, அதனால் ஏற்படுகிற சில பாதிப்புகளுக்கு, 'வழங்கப்படும்' என்று அறிவிக்கப்பட்டிருக்கிற தண்டனை கடுமையானதாக இருக்கிறது. அதை மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள்கூடச் சொன்னார்கள். ஆகவே, அந்தக் கடுமையைக் குறைக்க வேண்டும். மின்சார வாரியம் நடுகிறது, விபத்து ஏற்படுகிறது. பல பேர் சாகிறார்கள். யாரிடம் அதற்காக நாம் ஃபைன் போட முடியும்? (குறுக்கீடு) Electricity Board கொடுக்கும். ஒரு வாரியம் கொடுக்கும். ஒரு Board கொடுக்கும். ஒரு Operator எப்படிக் கொடுக்க முடியும்? தனி, சிறிய நிறுவனங்கள் எப்படிக் கொடுக்க முடியும்? அதனால், அதைக் கம்மி பண்ண வேண்டும்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Cable T.V. Operators, Cable T.V. Connection கொடுக்கின்றபோது, அந்தத் தொடர்பை அவர்கள்தான் ஏற்படுத்திக் கொடுக்கிறார்கள். பல இடங்களில் Cable T.V. Operator-கள் தவறான முறையில் அந்த Connection கொடுத்ததால், மின்சாரம் தாக்கி, பல பேர் இறந்திருக்கிறார்கள். பல விபத்துகள் நேர்ந்திருக்கின்றன. அதற்காகத்தான் இந்த ஷரத்தைக் கொண்டு வந்திருக்கிறோம்.

**திரு. கே.சி. கருணாகரன்:** பாதுகாப்புக் கருதிக் கொண்டு வரப்படுகிற மாண்புமிகு முதல்வர் அவர்களின் கருத்தை நாங்கள் ஏற்கிறோம். அதே நேரத்தில், இது சில தனிப்பட்டவர்களைப் பாதிப்புக்கு உள்ளாக்கி விடக்கூடாது என்கிற எச்சரிக்கையின் காரணமாகத்தான் நாங்கள் இதைச் சொல்கிறோம். அதனாலே, இந்த லைசென்ஸ் தருகிற தகுதிகளை வரையறுக்கிற திருத்தம் வேண்டும். தகுதியுள்ளவர்களுக்கு லைசென்சுகள் தரபபட வேண்டும். தனியான, பெரிய, ஏகபோக நிறுவனங்களிலே இருந்து மொத்தக் குத்தகைக்கு விடுவதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.



அதேபோல, மாதாந்திரக் கட்டணத்தை அரசு நிர்ணயித்து அறிவிக்க வேண்டும். நகரத்திற்கு இவ்வளவு; மாநகரத்திற்கு இவ்வளவு; பேரூராட்சி, ஊராட்சிகளுக்கு இவ்வளவு; இவ்வளவுதான் கலெக்ட் பண்ண வேண்டும் என்று சொல்லி, அந்தத் தொகையை நம்முடைய அரசு அறிவிக்க வேண்டும். அப்போதுதான் ஜனங்களுக்கும் இது பயனுள்ளதாக இருக்கும். இதைப் பயன்படுத்துகிறவர்களுக்கும் பிரயோசனமாக இருக்கும் என்கிற வகையில் இந்தத் திருத்தங்களை நாங்கள் முன்மொழிகிறோம்.

அதேமாதிரி decoder விற்பனைக்கு வழிமுறை நிர்ணயம் செய்யப்பட வேண்டும். Pay Channel Package-ஆவதைத் தடுத்து நிறுத்த வேண்டும். Pay Channel-களின் கட்டணத்திற்கு, நான் ஏற்கெனவே சொன்னது மாதிரி, உச்சவரம்பு நிர்ணயிக்க வேண்டும். M.R.T.P. சட்டத்தின்படி தனித்தனியே பிரிப்பதன் மூலம், அவற்றின் பிடியிலிருந்து சிறு கேபிள் மற்றும் டி.வி. ஆப்பரேட்டர்களைப் பாதுகாத்து M.S.O.-வை வலுவிழக்கச் செய்ய வேண்டும். மேற்கூறியவைகளை உடனடியாகச் செய்திட மத்திய அரசாங்கத்தை இந்த மசோதாவின் மூலமாகவே நாம் சட்ட ரீதியாக வற்புறுத்த வேண்டும்.

கடைசியாக, 50 ஆயிரம் பேர் வரைக்கும் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களோடு 3 பேர்கள் என்று average ஆகக் கணக்குப் போட்டால்கூட, 1 ½ இலட்சம் பேர் சம்பந்தப்பட்டிருக்கக்கூடிய ஒரு தொழிலாக எதிர்காலத்தில் இது மாறப் போகிறது. பெரு நகரங்களிலிருந்து குக்கிராமங்கள் வரைக்கும் டி.வி. இப்போது ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கிறது, எல்லா வீடுகளிலும். பெரும்பகுதியான ஜனங்கள் இதைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் இது வலுவடையக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இன்னும் அதிகப்படியானவர்கள் இதிலே ஈடுபடவும் வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, S.S.I. Unit-ன்கீழ், சிறு தொழில் அமைப்பின்கீழ் இதைக் கொண்டு வரவேண்டும் என்ற எங்கள் கருத்தைச் சொல்லி, இந்த மசோதாவை ஆதரிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி, பேசவேண்டுமா?

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேபிள் டி.வி. என்பது அத்தியாவசியமான ஒன்றாக ஆகிவிட்டது. தமிழகத்தில் கிராமங்கள், நகரங்கள், அத்தனை இடங்களிலும் மக்கள் விரும்பிப் பார்த்து. இன்றைக்கு அவர்கள் விழிப்புணர்வும் பெற்றிருக்கிறார்கள். எந்த அளவுக்கு கேபிள் டி.வி. மூலமாக மக்கள் விழிப்புணர்வு பெற்றிருக்கிறார்களோ, அந்த அளவுக்கு ஒரு பக்கம் பாதிப்பும் இருக்கிறது. கிராமப்புற மக்களிடத்திலே விழிப்புணர்வும் இந்த கேபிள் டி.வி.யினாலே ஏற்பட்டிருக்கிறது. இது ஆரம்பிக்கப்பட்டபோது அரசாங்கம் சரியாகக் கவனம் செலுத்தாததனுடைய விளைவாக, சில விஷயங்கள் வரையறுக்கப்படாமல் போயின. இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தச் சட்டத்தின் மூலமாக வரைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். இது வரவேற்கப்பட வேண்டியது.

*பிற்பகல் 8-35*

ஆனால், அதேநேரத்திலே அவர்களுக்காக விதிக்கப்பட்டிருக்கிற அந்தத் தண்டனை என்பதை அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும். ஆனால், மாண்புமிகு உறுப்பினர்கள் மற்றவர்கள் பேசியதைப்போன்று, இதிலே மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்டிருக்கிற இளைஞர்கள், படித்தவர்கள் வேலை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்திலே, அப்படி வேலை பார்த்து, தங்களுக்கு வேலையில்லாமல் அவர்களும் பல்வேறு கோரிக்கைகளை அரசுக்குத் தொடர்ந்து வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். அதே நேரத்திலே, குத்தகை முறையிலே ஆதிக்கமும் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப்போன்று, சில பெருநகரங்களிலே பார்த்தோம் என்று சொன்னால், அவர்களைத் தவிர, வேறு யாரும் வைத்துக்கொள்ளக் கூடாது, கேபிள் டி.வி. இணைப்பே கொடுக்கக்கூடாது என்ற ஒரு நிர்ப்பந்தத்தை அந்த இடத்திலே ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு ஒரு கட்டுப்பாடு விதிக்கலாம். ஒரு கேபிள் டி.வி. ஆப்பரேட்டர் 500 இணைப்புகளைக் கொடுக்கலாமா என்று முதலில் நிர்ணயித்து, அந்த நிர்ணயத்தை அப்படிக் கொண்டு வருவதன் மூலம் மற்றவர்களுக்கு அதிலிருந்து வேலைவாய்ப்பு அளிப்பதற்கு வாய்ப்புகளைக்கூட உருவாக்க முடியும். அதே நேரத்தில், ஏற்கெனவே ஒரு இணைப்புக் கொடுத்தால், நகராட்சிகளுக்கு ரூ.25/- வரி வசூல் செய்யலாம் என்று வணிக வரித் துறை மூலம் வசூல் செய்து கொண்டிருந்தார்கள். அது கிராமங்களுக்கு ரூ.10/-ம், நகரங்களுக்கு ரூ.25/-ம் வசூலிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. ஆனால்,





தற்போது வசூலேயில்லாமல் உள்ளது. அதிலேகூட வணிக வரித் துறையிலே ஒரு தவறு நடந்தது. யாராவது ஒருவர் 300 இணைப்புகள் கொடுத்து இருந்தால், நீ 300-க்கும் பணம் கட்டவேண்டாம், 200-க்குக் கட்டுங்கள் போதும், 100-க்கு எங்களிடத்திலே கொடுத்துவிடுங்கள் என்கிற ஒரு சமரசப் பேச்செல்லாம் நடந்து, அதிலே தகராறெல்லாம் ஏற்பட்டதுண்டு. அதனால், அதை முறைப்படுத்துவது சரியானது. அரசுக்கு, நகராட்சிகளுக்கு, பேரூராட்சிகளுக்கு அதன் மூலம் வருகிற வரியை அந்த இடத்தில் அவர்களே வசூலித்துக் கொள்ளலாம் என்ற ஒரு விதியைப் போன்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதில் தண்டனை என்பதைக் குறைக்க வேண்டும். அப்படிக் குறைப்பதன் மூலமாக, இந்தத் தண்டனையிலிருந்து விடுபடுவதற்கான வழி ஏற்படும். அதிகபட்சமான தண்டனையாக இருக்கிறது. அதை முறைப்படுத்துவது சரியாக இருக்கும். இதை வரவேற்று அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர். (குறுக்கீடு) திரு. அரசன், ரொம்ப நேரம் ஆகிறது. இரண்டு நிமிடங்களில் ஏதாவது சொல்லுங்கள்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற சட்டமுன்வடிவிலே ஒரு சில கருத்துகளைச் சொல்ல விரும்புகிறேன். ஏறத்தாழ 60 சேனல்கள் இருக்கிற அந்த இணைப்புகளை சில தனியார்கள் தங்களுடைய ஆக்கிரமிப்பிலே வைத்துக்கொண்டு, தான் இலாபம் பெறவேண்டுமென்பதற்காக, தான் ஆதாயம் பெறவேண்டுமென்பதற்காக, ஒரு சில குடும்பங்கள் மட்டும் பயன் பெறவேண்டும் என்பதற்காக இருந்த நிலைமையை மாற்றி, அரசுக்கு வருவாயைத் தருகிற ஒரு சட்டமுன்வடிவைக் கொண்டு வந்திருக்கிற இந்த அரசினை நான் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தப்பு செய்தால் தப்பு என்று சொல்லிவிட்டுப் போகிறேன். அதுமட்டுமில்லாமல், இந்தத் துறை பல்வேறு படித்த இளைஞர்களுக்கெல்லாம் வேலைவாய்ப்பைத் தருகிற ஒரு துறை. வேலைவாய்ப்பு மிகக் குறைவாக இருக்கிற இந்த நேரத்தில் வேலைவாய்ப்பைத் தந்து, தன்னுடைய முயற்சியினால் மிக அதிக வருவாயைப் பெறுகிற ஒரு செயலை இந்தத் துறையினாலே செய்ய முடியும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைச் சரியான முறையிலே நெறிப்படுத்த வேண்டுமென்று நான் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பல்வேறு இடங்களிலே சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், குறிப்பாக எதையும் சொல்லவில்லை. தங்களுடைய பதிலுரையிலே அல்லது சட்டம் போடுகிறபோதாவது, எந்த வகையிலே அனுமதி வழங்கப் போகிறீர்கள், அதற்கு எவ்வளவு கட்டணம் வாங்கப் போகிறீர்கள் என்பதையெல்லாம் சொல்ல வேண்டும். எனக்கு முன்னாலே நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, தண்டனை என்பது சில நேரங்களில் தவறுதலாகக்கூட வந்துவிட முடியும். கேபிள் ஆப்பரேட்டர் செய்யாத ஒரு காரியத்தை வேறு சிலர் அந்த ஆப்பரேட்டருக்குத் தெரியாமலே செய்துவிட்டு, கேபிள் ஆப்பரேட்டர் தண்டனை பெறுகிற ஒரு சூழ்நிலை உருவாகிவிடும்.

*பிற்பகல் 8-40*

ஆகவே, அதைக் கொஞ்சம் கூர்மையாகச் சிந்தித்துப் பார்த்து, அந்தச் செயலை யார் செய்வார்கள்? இல்லை, அந்தக் கேபிள் ஆப்பரேட்டரே செய்தால்கூட, இவ்வளவு பெரிய தண்டனை கொடுக்கக் கூடாது என்பதனை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஒரு நல்ல சட்டமுன்வடிவை, அரசுக்கு வருவாய் தருகிற ஒரு சட்டமுன்வடிவை, பல்வேறு படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புத் தருகிற ஒரு சட்டமுன்வடிவை நான் வரவேற்று, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று அறிமுகப்படுத்தியிருக்கிற சட்டமுன்வடிவில் இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் வைதியலிங்கம் அவர்கள், மத்திய அரசு கொண்டு வந்த சட்டத்திற்குப் பிறகு, இங்கே இந்தச் சட்டம் தேவையா என்பதை ஒரு கேள்வியாக வைத்துச் சென்றிருக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள், இந்தச் சட்டமுன்வடிவினுடைய நோக்கங்களைப் பற்றி எங்களுக்கு ஆலோசனை வழங்கி, இந்தச் சட்டமுன்வடிவினுடைய நோக்கங்கள் என்ன என்பதையெல்லாம் இங்கே பேசிய மாமன்ற உறுப்பினர்களுக்கு அம்மா அவர்கள் தெளிவாக எடுத்து வைத்திருக்கிறார்கள். ஆகவே, இந்தச் சட்டமுன்வடிவினுடைய நோக்கங்கள், ஏழை எளிய மக்களுக்காக-- அத்தனை பேரும் வரவேற்கும் இன்று இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றிக்





கொடுக்கிற இந்த நேரத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர்களுக்கு ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லி அமர்கிறேன். 1997 ஆம் ஆண்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு கேபிள் டி.வி. இணைப்பு 100 என்று இருந்ததை 500 ஆக ஒரு G.O. மூலமாக அதற்கு சட்டமன்றத்திலே ஒரு முன்வடிவம் கொடுக்காமலே திருத்தியுள்ளார்கள். Monopoly-யாக இங்கே தமிழகத்திலே நடத்திக் கொண்டிருக்கிற கேபிள் டி.வி. நடத்துபவர்களை மிரட்டி, உருட்டி S.C.V. -ன்கீழ்க் கொண்டுவந்த அவர்கள் அதற்கு ஒரு சட்டமுன்வடிவைக் கொண்டுவராமலே, G.O. மூலமாகப் போட்டு, அவர்களுக்கு ஆதரவாக, குடும்பத்திற்கு ஆதரவாக நடந்தார்களேயொழிய, அதை ஒழுங்குபடுத்துகிற நிலையை அவர்கள் உருவாக்கவில்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து, படிப்பது இராமாயணம், இடிப்பது பெருமாள் கோவில் என்பதைப்போல, கேபிள் டி.வி.யினுடைய சட்டங்களை அவர்கள் சலுகையாக அறிவித்துச் சென்றார்களே தவிர, அதில் ஒழுங்குமுறை செய்யப்படவில்லை மத்திய சர்க்கார் 1995 ஆம் ஆண்டு சட்டம் கொண்டு வந்தது; ஆனால், அந்தச் சட்டத்திற்குப் பிறகு இதுபோன்று சட்டங்கள் தேவையா என்பதை அவர்கள் வைத்தார்கள். ஆனால், அதற்குப் பிறகு 1997 ஆம் ஆண்டு அந்தத் திருத்தத்திற்கு, சட்டத்திற்கு சட்டமன்றத்திலே ஒரு முன்வடிவம் கொடுக்காமல் G.O. மூலமாக, அவர்களுக்கு வேண்டிய அந்தக் குடும்பத்திற்காக 500 கேபிள் டி.வி. இணைப்புகள் என்ற அந்த நிலையை அவர்கள் கொண்டு வந்தார்கள். மாநில அரசினுடைய உத்தேசச் சட்டத்தில் கூறப்பட்டிருக்கும் பிரிவுகள் எவையாவது மத்திய அரசின் திருத்தத்திற்கு முரண்பட்டிருந்தால், நிச்சயமாக அது ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்ததே, படித்த இளைஞர்கள் பயன்பெறுவதற்காக. 60 சேனல் இருக்கிற இடத்தில் அந்த சுமங்கலி டி.வி. போன்ற அந்த இரண்டு Monopoly-யாக நடத்துபவர்கள், அங்கே அவர்களை மிரட்டி, உருட்டி, ஒவ்வொரு மாவட்ட நகரங்களிலும் எந்த அளவிற்குக் கேபிள் டி.வி. ஆப்பரேட்டர்கள் சிரமப்பட்டார்கள் என்பதை நாடறியும். அவர்கள் கேபிள் டி.வி. நடத்துபவர்களை வழிமுறைப்படுத்துகிறபோது, அங்கே அவர்கள் எந்த சேனல் நடத்துகிறார்களோ, அந்தச் சேனல்களுக்கு மட்டும் அவர்கள் நேரடியாகப் பணம் கட்டி நடத்தினால் போதும் என்ற நிலை வந்தால் நிச்சயமாகக் கிராமங்களில் இருக்கிற பட்டதாரி இளைஞர்கள்கூட கேபிள் டி.வி.யை நடத்துவதற்கு உண்டான உரிமங்களை அரசு மூலமாகப் பெற்று, பட்டதாரிப் படிப்பை முடித்திருக்கிற அத்துணை பேரும்

பயன்பெறுவார்கள் என்பதை இந்த நேரத்தில் மாமன்றத்தில் பேசிய அனைத்து உறுப்பினர்களுக்கும் தெரிவித்து, இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 8-45*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எழுப்பிய சில கேள்விகளுக்கு இங்கே நான் விளக்கம் அளிக்க விரும்புகின்றேன். 1991-ல் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு கொண்டு வந்த சட்டத்தில், ஒரு கேபிள் டி.வி. ஆப்பரேட்டருக்கு அதிகபட்சம் 100 இணைப்புகள் தரலாம் என்று இருந்தது. அதன் பின்னர், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தது போல், தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 1997-ல் ஒரு ஜி.ஓ. மூலமாக, ஒரு கேபிள் டி.வி. ஆப்பரேட்டருக்கு 500 இணைப்புகள் கொடுக்கலாம் என்று ஓர் அறிவிப்பைச் செய்தார்கள். இப்பொழுது மீண்டும் பலருக்கு இந்தக் கேபிள் டி.வி. ஆப்பரேட்டர் தொழில் நடத்தும் வாய்ப்புக் கிடைக்க வேண்டும் என்பதற்காக, அதிகபட்சம் ஒரு கேபிள் டி.வி. ஆப்பரேட்டருக்கு 100 இணைப்புகள் தரலாம் என்பதை இந்த அரசு கொண்டு வரவுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் சில கேள்விகள் இங்கே எழுப்பப்பட்டன. யாரிடம் இந்த உரிமத்தைப் பெற வேண்டும்? எவ்வளவு கட்டணம் செலுத்த வேண்டும்? மாநகராட்சிக்கு எவ்வளவு? நகராட்சிக்கு எவ்வளவு? பேரூராட்சிக்கு எவ்வளவு என்ற கேள்விகள் எல்லாம் இங்கே கேட்கப்பட்டன. இவைகள் எல்லாம் இந்தச் சட்டமுன்வடிவில் இடம் பெறாது. இவைகள், இதற்கான விதிகள், rules frame செய்யப்படும்போது விவரிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.



சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 26 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 26 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே. கே. பாலசுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பன்முறைச் செயற்பாடுகள், காணொலி, பதிவுப்பேழைக் கருவி, கம்பிவட தொலைக் காட்சி இணைப்பு ஆகியவற்றின் மூலம் தொலைக்காட்சித் திரையில் படக்காட்சிகள் காட்டுதல் (முறைப்படுத்தப்படுதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/2002) நிறைவேற்றப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

[2002 மே 10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## 7. அரசினர் தீர்மானங்கள்

### (அ) விதிகள் 30, 130, 132, ஆகியவற்றைத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தீர்மானம். இன்று அறிமுகம் செய்யப்பட்ட 3 சட்டமுன்வடிவுகளையும் இன்றே ஆய்வுக்கு எடுத்துக்கொள்வது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதி 30, 130, 132 ஆகியவற்றைத் தளர்த்தி, 2002 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/2002), 2002 ஆம் ஆண்டு திருவள்ளுவர் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 38/2002), 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்தவெளிப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 39/2002) ஆகியன இன்றே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



2002 மே 10] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)-தொடர்ச்சி

### (ஐஐ) அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2002 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/2002) மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/2002) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து வருகிற இரு சட்டமுன்வடிவுகளும் மாண்புமிகு கல்வி அமைச்சருக்குத் தொடர்புடையவை. கருத்துகளைக் கூற விரும்பும் உறுப்பினர்கள் இந்த 3 சட்டமுன்வடிவுகளின்மீதும் கூறலாம். யார்? ஞானசேகரனா, லட்சுமணனா? (குறுக்கீடு) இல்லை, இல்லை. யாராவது ஒருவர்-- ஒரு கட்சிக்கு ஒருவர்--மட்டும் பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** திருவள்ளுவர் பல்கலைக்கழகம் வேலூரிலே வருவதால் நான் பேசலாம் என்றிருந்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதையும் சேர்த்து லட்சுமணனைப் பேசச் சொல்லுங்கள்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூரில் திருவள்ளுவர் பெயரிலே ஒரு பல்கலைக்கழகத்தை உருவாக்க இந்த அரசு முன் வந்திருப்பதை நாங்கள் பாராட்டுகிறோம். அதற்கான சட்டமுன்வடிவு இன்றைக்கு வெளியிடப்பட்டிருக்கிறது. இந்தச்

---

@ 10-5-2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

சட்டமுன்வடிவை நான் மகிழ்ச்சியோடு வரவேற்கின்றேன். இன்று காலையிலிருந்து நம்முடைய தமிழக முதல்வருடைய இசைவோடு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் உயர் கல்வித் துறையிலே பல நல்ல சட்டமுன்வடிவுகளைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அத்துணை சட்டமுன்வடிவுகளையும் நான் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். குறிப்பாக, இன்றைக்கு இந்த Open University -க்கு 'திறந்தவெளிப் பல்கலைக்கழகம்' என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பதிலாக 'திறந்த நிலைப் பல்கலைக்கழகம்' என்று சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். காரணம், திறந்தவெளி என்று சொன்னால், அது ஏதோ...

*பிற்பகல் 8-50*

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நம்முடைய தமிழக முதல்வர் அம்மா அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தத் திருத்தத்தை, 'திறந்தவெளி' என்பதை 'திறந்தநிலை' என்று, அந்தப் பல்கலைக்கழகத்துக்கான பெயர் மாறுதலை ஏற்றுக்கொள்கிறோம் என்று அறிவிக்கச் சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** திருத்தத்தை ஏற்றுக்கொண்டதற்காக நன்றி. இந்தத் திறந்தநிலைப் பல்கலைக்கழகத்திற்கு ஒரு நீண்ட வரலாறு உண்டு. 1982 ஆம் ஆண்டு முதன்முதலாக ஆந்திர மாநிலத்திலே, திறந்தநிலைப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது. இன்று வரை 10 திறந்தநிலைப் பல்கலைக்கழகங்கள் பாரத நாட்டிலே இருக்கின்றன. இந்தத் திறந்தநிலைப் பல்கலைக்கழகங்கள் மிக நல்ல முறையிலே செயல்பட்டு வருகின்றன. சென்ற கல்வி மானியத்திலேகூட, தமிழ்நாட்டிலே இதுபோல ஒரு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் கொண்டு வரவேண்டுமென்று நான் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொண்டேன். இன்றைக்கு அது வந்திருப்பது நான் கேட்டுக்கொண்டதற்கிணங்கவோ அல்லது எப்படியிருந்தாலும்கூட அதற்காக நான் தமிழக அரசுக்கு நன்றி சொல்லப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன். நாம் விரும்புகின்ற கல்வியை, விரும்புகின்ற நேரத்திலே, விரும்புகின்ற இடத்திலேயிருந்து படிக்க வேண்டுமென்று சொன்னால், அதற்கு வகுப்பறைக் கல்வி உதவாது. அதற்கு நமக்கு உதவி அளிக்கக்கூடியது தொலைநிலைக் கல்விதான்-- distant mode. அதனால், அந்தக் கல்வியின் மூலமாகத்தான் நாம் இன்றைக்குப் படித்தாக வேண்டிய ஒரு சூழ்நிலையிலே இருக்கிறோம். இந்தத் தொலைநிலைக் கல்வியிலே flexibility இருக்கிறது. அதாவது, நெகிழ்வுத் தன்மையிருக்கிறது.





அதே சமயத்திலே, உற்பத்தித் திறன் இருக்கிறது. எப்படி, பொருளுக்கு உற்பத்தித் திறன் உண்டோ, அதைப்போல கல்விக்கும் உற்பத்தித் திறன் இருக்கிறது. Productivity இருக்கிறது. அதேபோல, சமூக நீதியும் இருக்கிறது. ஆகவே, எல்லாம் ஒரு சேர ஒருவருக்குக் கிடைக்க வேண்டுமென்று சொன்னால், அதற்கு நாம் இன்றைக்கு இந்தத் திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தைத்தான் அணுக வேண்டிய ஒரு சூழ்நிலையில் இருக்கிறோம். அஞ்சல் வழிப் பாடமாக ஆரம்பித்து, அதற்குப் பின்பு, வானொலி மூலமாகப் பாடத்தைச் சொல்லிக் கொடுத்து, அதற்குப் பிறகு ஒலிப்பேழை என்று வந்து, பிறகு ஒளிப்பேழை என்று வந்து, அதற்குப் பின்னாலே செயற்கைக்கோள் மூலமாக, tele-conference மூலமாக இன்றைக்குப் பாடத்தைப் படிக்கின்ற நிலைக்கு இது வளர்ந்திருக்கிறது. அதற்குப் பின்னாலே, இணையம், இணையப் பல்கலைக்கழகம் என்று, Virtual University என்ற அளவுக்கு இன்றைக்கு இந்தத் தொலைநிலைக் கல்வியானது, Open University, திறந்த நிலைப் பல்கலைக்கழகத்தின் மூலமாக வளர்ந்திருக்கிறது என்பதை நாம் இன்றைக்கு உணர்ந்தாக வேண்டும். உலகம் எங்கும் Multi-national Corporations எப்படி வளர்ந்திருக்கின்றனவோ, அதைப்போல, இன்றைக்கு இந்த Multi-national Universities-கூட ஏராளமாக வந்திருப்பதை நாம் பார்க்கிறோம். அவையெல்லாம் இன்றைக்கு 'World Education Market' என்று சொல்லப்படுகிற அளவுக்கு, ஒரு சந்தையிலே பல்கலைக்கழகங்கள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து, அவர்கள் எல்லோரும், எங்களுடைய பல்கலைக்கழகம் சிறந்தது என்று சொல்லி, எங்களுடைய பாடத் திட்டம் சிறந்தது என்று சொல்கின்ற அளவுக்கு இன்றைக்குக் கல்வியானது பரவலாக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் இன்றைக்கு உணர்ந்தாக வேண்டும். ஆக, நம்முடைய மாநிலத்திலே, தமிழ்நாட்டிலே இன்றைக்கு மாணவர்கள் விரும்புகின்ற பாடங்களை, விரும்புகின்ற இடத்திலேயிருந்து எளிதாகப் பயின்றுகொள்ள வேண்டுமென்று சொன்னால், இந்தத் திறந்தநிலைப் பல்கலைக்கழகமானது மிக மிக இன்றியமையாதது. 10 ஆண்டுகள் கழித்து இதை நாம் ஆரம்பித்தால்கூட, இன்றைக்கு 11-வது பல்கலைக்கழகமாக பாரத நாட்டிலே இந்தப் பல்கலைக்கழகம் உருவாகிறது.

நான் உங்களைப் பார்த்துக் கேட்டுக்கொள்ள விரும்புவது எல்லாம், தொடக்க காலத்திலே எப்படி அச்சடித்த பாடத்தைக் கொடுத்து, அதற்குப் பிறகு படிப்படியாக வளர்ந்ததோ, அப்படியெல்லாம் நாம் வளராமல், உடனடியாக Internet மூலமாக, நம்முடைய இணையத்தின் மூலமாக, இணையப் பல்கலைக்கழகமாக அந்த அளவுக்கு இது வளரும் என்று சொன்னால், நவீன தொலைத் தொடர்புச் சாதனங்களை, Information

Technology-ஐ முழுமையாகப் பயன்படுத்தி, அதன் மூலமாக, நாம் இந்தத் தொலைநிலைக் கல்வியை வளர்ப்பதற்கு எல்லா முயற்சியையும் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான், இருக்கிற உலகப் போட்டியிலே நாம் இன்றைக்கு வெற்றி பெறமுடியும். IGNOU-தான் நமக்கு வழிகாட்டி. IGNOU-லே 3 இலட்சம் பேர் படிக்கிறார்கள். 3 இலட்சம் பேர். சென்ற முறை, சென்ற மார்ச் மாதம் 78,000 பேருக்குப் பட்டம் வழங்கப்பட்டிருக்கிறது—78,000 பேருக்கு. IGNOU இன்றைக்கு உலகத்திலே 21 நாடுகளில் தன்னுடைய கிளைகளை வைத்திருக்கிறது.

நம்முடைய மதிப்பிற்குரிய டாக்டர் வி.சி. குழந்தைசாமி அவர்கள் அந்தப் பல்கலைக்கழகத்திலே 4 ½ ஆண்டு காலம் துணைவேந்தராக இருந்தபோது, அந்தப் பல்கலைக்கழகத்தின் தரத்தை மிகப் பெரிய அளவிலே உயர்த்தி இருக்கிறார்கள். இன்றைக்கு நாம் பார்க்கவேண்டியது எல்லாம், நமக்கு வழிகாட்டியாக IGNOU இருக்கிறது. IGNOU எப்படி வளர்ந்து இருக்கிறதோ, அதேபோல் நாமும் வளர வேண்டும். 'ஞானவாணி' என்று தனியாக அவர்களுக்கு ஒரு வானொலி இருக்கிறது. அதேபோல 'ஞானதர்சன்' என்று தனியாக ஒரு தொலைக்காட்சி இருக்கிறது. ஆக, இப்படி நாம் இப்பொழுதேகூட அந்த அளவுக்கு ஞானவாணியைப் போல, ஞானதர்சனைப் போல, இங்கே நம்முடைய தொலைநோக்குக் கல்வியை நம்முடைய தமிழ்நாட்டிலே வளர்ப்பதற்கு நாம் முயற்சி மேற்கொள்ள வேண்டுமென்று கூறி, முதலிலேயே சொல்லி விட்டேன். மீண்டும் சொல்கிறேன்—திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தை வேலூரில் துவங்க அரசு முன் வந்திருப்பதை நான் பாராட்டுகிறேன். அதற்கான எல்லா முயற்சிகளையும் மேற்கொண்ட, ஞானசேகரனுடைய கோரிக்கையை ஏற்றுக்கொண்ட தமிழக முதல்வர் அவர்களுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராஜா, சுருக்கமாகப் பேச்சை முடித்து விடுங்கள்.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் கொண்டு வந்துள்ள அண்ணா பல்கலைக் கழகத்துடன் அரசுக் கல்லூரிகளை இணைப்பதற்கான சட்டமுன்வடிவு மற்றும் வேலூரில் அமைக்கப்படவுள்ள திருவள்ளுவர் பல்கலைக்கழகம், திறந்தநிலைப் பல்கலைக்கழகம்—இந்தச் சட்டமுன்வடிவுகள் மீது 'பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக கருத்துகளைச் சொல்ல விரும்புகிறேன்.





அண்ணா பல்கலைக்கழகத்துடன் அரசுக் கல்லூரிகள் இணைக்கப்படுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பல்கலைக்கழகத்திலே இடஒதுக்கீடு முறை பின்பற்றப்படுவதில்லை. அதேபோல், எங்களுடைய மாவட்டமான வேலூரிலே திருவள்ளுவரின் பெயரால் பல்கலைக் கழகத்தைக் கொண்டு வந்ததற்காக நாங்கள் வரவேற்கின்றோம். அதே நேரத்திலே, பல்கலைக்கழகத்தில் எல்லாம் இடஒதுக்கீடு முறையாகப் பின்பற்றப்படுவதில்லை. இந்தப் பல்கலைக்கழகம் கொண்டு வந்ததன் நோக்கம், அடித்தட்டு மக்களுக்காக, அடக்கப்பட்ட மக்களுக்காக, B.C., M.B.C., S.C., S.T., மக்கள் முன்னேற்றம் ஏற்பட வேண்டுமென்று இங்கு சொல்லப்பட்டு இருக்கிறது. அப்படியானால், இதிலே வேலைவாய்ப்பு, மாணவ, மாணவிகள் சேர்க்கையிலே என்ன அளவுகோல் பின்பற்றப்படுகிறது என்று குறிப்பிடப்படவில்லை. இடஒதுக்கீட்டு முறையில் தற்போது இருக்கின்ற நடைமுறைதான் என்றால், எப்படி அடக்கப்பட்ட S.C., S.T., M.B.C., B.C., மாணவர்கள் முன்னேற்றத்திற்கு உதவும் என்று நாங்கள் கேட்க விரும்புகின்றோம். அதிலே பணிபுரிகின்ற, இணைப்பிலே பணிபுரிகின்ற ஆசிரியர்கள் சம்பளம் குறைவு, பதவி உயர்வு இருக்காது என்று அச்சப்படும் நிலை இருக்கிறது. அதேபோல், ஓய்வு பெறும் வயது 58-லிருந்து 60 ஆக உயருமா என்ற ஒரு அச்சம் அவர்களுக்கு இருக்கிறது. அதேபோல, பல்கலைக்கழகங்களிலே படிக்கின்ற மாணவர்களுடைய கல்விக் கட்டணம் உயரும் என்ற அச்சம் இருக்கிறது. எனவே, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஏழை எளிய மாணவர்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். திறந்தவெளிப் பல்கலைக்கழகத்திலே சாதாரண மாணவர்களும், ஏழையெளிய குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் படித்துப் பட்டம் பெற கட்டணம் முதலான நடைமுறைகள் எளிதாக்கப்பட வேண்டும். எனவே, இந்தச் சட்டமுன்வடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கோரி அமர்கின்றேன்.

பிற்பகல் 9-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன், கொஞ்சம் சுருக்கமாகப் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலையிலே இதேபோன்ற இரண்டு சட்டமுன்வடிவுகள்மீதான விவாதங்களுக்குப் பதில் சொல்லக்கூடிய நேரத்திலே மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்கள், கல்வியை வளர்ப்பதற்காகத்தான் இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். ஆனால்,

நடைமுறையிலே நாம் என்ன பார்க்கிறோம் என்றால், இன்று அரசுக் கல்லூரிகளைக்கூட யுனிவர்சிட்டியின் கன்ட்ரோலுக்கு விடக்கூடிய ஒரு நிலையைத்தான் இந்தச் சட்டங்களிலேயிருந்து பார்க்க முடிகிறது. இது எதிர்காலத்திலே கல்வியைக் கடுமையாகப் பாதிக்கும் என்று நாங்கள் முழுக்கக் கருதுகிறோம். யுனிவர்சிட்டிக்கு அவை வருகிற நேரத்திலே, இப்போது service conditions-ம், அதே மாதிரி wages-ம் எல்லாம் freeze பண்ணப்பட்டு, இனிமேல் யுனிவர்சிட்டியினுடைய கன்ட்ரோலுக்குப் போகிறது. யுனிவர்சிட்டி என்ற விஷயத்தைப் பொறுத்தளவில் வருகிற நேரத்திலே, இன்று யுனிவர்சிட்டியின்கீழே இருக்கின்ற பல கல்லூரிகளிலே, உதாரணமாகச் சொல்கிறேன், பெரிய பிரசித்தி பெற்ற கல்லூரி என்று சொல்கிறார்கள், எஸ்.ஏ. ராஜாவினுடைய கல்லூரியை. 12,000 ரூபாய் சம்பளத்திற்கு ஒப்பமிட்டு 4,000 ரூபாய் கொடுக்கிறார்கள்.

அதேபோன்று, அட்மிஷனுக்கு ஏகப்பட்ட பணத்தை வாங்குகிறார்கள். இப்படிப்பட்ட முறைகேடுகளைக் கட்டுப்படுத்துவதற்கு யுனிவர்சிட்டியாலே முடியவில்லை. நானும் யுனிவர்சிட்டியிலே—இந்தச் சட்டமன்றப் பேரவையாலே அனுப்பப்பட்டு, மனோன்மணீயம் சுந்தரனார் யுனிவர்சிட்டியிலே செனட் கூட்டத்திலே அப்போது கலந்துகொண்ட நேரத்திலே, ஏராளமான புகார்கள் ஆசிரியர்களாலே அங்கே வைக்கப்பட்டன. ஆனால், யுனிவர்சிட்டியாலே அதை effective-ஆக வைத்து நடத்திக்கொள்ள முடியவில்லை என்பதை நாம் பார்க்கிறோம். ஆகவே, இன்று மத்திய அரசுதான் யுனிவர்சிட்டிக்குத் தேவையான பணத்தைக் கொடுக்கிறது. University Grants Commission வழியாகத்தான் பணம் வரவேண்டியிருக்கிறது. இதிலே அரசும் கொடுக்கிறது என்ற முறையிலே புரொவிஷன் போடப்பட்டிருக்கிறது. ஆனால், இன்று நிதிப் பற்றாக்குறையிலே மாநில அரசுகள் இருந்துகொண்டிருக்கின்றன என்ற பின்னணியிலேதான், இது இன்று யுனிவர்சிட்டியினுடைய கிரான்ட்ஸ் கமிஷனுடைய ஏற்பாட்டுக்குத் தள்ளிவிடப்படுகிறதா என்ற ஐயப்பாடு ஏற்படுகிறது.

நான் ஒன்றை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புவது, கல்வி என்பதை இன்றைக்கு மத்திய அரசு வசதி படைத்தவர்களுடைய ஏற்பாடாக மாற்றுகிற ஒரு தவறான கல்விக் கொள்கையைக் கடைப்பிடித்துக் கொண்டிருக்கின்றது என்பது எங்களுடைய கட்சியினுடைய கருத்து. அந்த முறையிலே, அந்தப் பாதையிலே இந்த மாநில அரசும் செல்வதற்கு முயற்சிக்கிறதா என்ற ஐயப்பாடு இந்த நிலையிலேயிருந்து எங்களுக்கு ஏற்படுகிறது. நான் இந்த நேரத்திலே





பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புவது, இன்று கல்வியைப் பொறுத்த அளவிலே, ஏழை, எளிய மக்களுடைய குழந்தைகளும் படித்து வருவதற்குத் தகுந்த அளவிலே உள்ள ஏற்பாட்டைக் கடைப்பிடிக்கிற ஒரு கொள்கையைத்தான் இந்தத் தமிழக அரசு கடைப்பிடிக்க வேண்டுமே தவிர, அதற்குத் தகுந்த அளவிலே உள்ள ஏற்பாடுகளாக, அதற்குத் தகுந்த அளவிலே உள்ள கன்ட்ரோலை அரசு இதிலே வைக்க வேண்டும். யுனிவர்சிட்டியினுடைய முழுக்க முழுக்க அவர்களுடைய கன்ட்ரோலுக்கு விடுவது என்றால், அது எதிர்காலத்தைக் கடுமையாகப் பாதிக்கும் என்ற ஐயப்பாடு எங்களுக்கு இருக்கிறது. அதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, தமிழக அரசு கல்வியைப் பொறுத்தளவிலே, அது சாதாரண மக்களுக்கும் கிடைக்கக்கூடிய முறையிலே—இப்போதுகூட அட்மிஷனிலே எல்லாம் ரிசர்வேஷன் என்ற பிரச்சினைகள் எல்லாம் வருகின்றன. அதேபோன்று, பணம் கொடுத்தால்தான், இன்றைக்குக் கிடைக்கிறது என்ற நிலை ஏற்படுகிற நேரத்திலே எல்லாம், இது யுனிவர்சிட்டியினுடைய கன்ட்ரோலுக்குப் போவது என்றால், அதனால் கடுமையாகப் பாதிக்கப்படும் என்ற ஐயப்பாடு இன்றைக்கு மக்களிடம் ஏற்பட்டிருக்கின்றது. அதைப் போக்கக்கூடிய முறையிலே உள்ள நடவடிக்கைகளைத் தமிழக அரசு எடுக்க வேண்டும் என்று பணிவன்புடன் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி, சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** சுருக்கமாக, ரொம்பவும் சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலையிலே மாண்புமிகு நம்முடைய கல்வியமைச்சர் அவர்கள் இதற்கு நீண்ட விளக்கங்களை அளித்தார்கள். அதனுடைய தொடர்ச்சியானது இது. இந்தத் திறந்தநிலை—இப்போது பெயர் மாற்றம் செய்ததனாலே, இந்தத் திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தில் ஏற்கெனவே படித்துப் பட்டம் பெற்ற பல பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். சமீபத்திலே நான் சட்டமன்றத்திலே விதி 55-ன்கீழே கவன ஈர்ப்புக் கொண்டு வந்ததனால், அந்த விளக்கம் பெற்ற பின்னால், பல பேர் இப்படிப் படித்துக்கொண்டிருந்தவர்கள் விழித்துக்கொண்டார்கள். இல்லையென்று சொன்னால், தமிழகத்திலே கல்விக் கொள்கையிலே ஒரு சரியான விளம்பரம், சரியான அறிவிப்பு இல்லாததனுடைய விளைவு, பல பேர் படித்துவிட்டு, நாம் என்ன செய்வது என்றே தெரியாமல் இருக்கிறார்கள். அதோடு மட்டுமல்ல, இப்படிப்

[திரு. ஜி. பழனிசாமி] [2002 மே 10

படித்துப் பட்டம் பெற்று, பதவி உயர்வு பெற்றவர்களுக்கு இன்றைக்குப் பதவி இறக்கம் செய்யப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 9-05

7 ஆண்டு காலம், 8 ஆண்டு காலம் தங்களுடைய சர்வீஸிலே பதவி உயர்வு பெற்றவர்கள் மீண்டும் பதவி இறக்கம் செய்யப்பட்டு அதற்கெல்லாம் உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது. எவ்வளவு முரண்பாடு வந்திருக்கிறது பாருங்கள். அநேகமாக இந்த 55-வது விதியின்கீழ் அறிவிப்பு வந்த உடனே, தமிழ்நாட்டிலே இந்தப் பட்டங்களிலே நாம் சேர்ந்து படிப்பதுதான் சரி என்று அமைச்சருடைய விளக்கத்திற்குப் பின்னாலே வந்திருக்கிறது. அதுபோல, கல்வித் துறையிலே ஒரு முரண்பாடு இல்லாமல் கொண்டு வருவதற்கு நம்முடைய கல்வித் துறை அதிகாரிகள் அதற்குரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும். அதோடு மட்டும் அல்லாமல், இன்னொன்று. கல்லூரிகளைப் பல்கலைக்கழகத்துடன் நாம் இணைத்தோம். அதிலே இருக்கிற ஆசிரியர்கள், மாணவர்கள் தேர்வு எல்லாம் அதிலே வந்திருக்கிறது. அதில் இருக்கிற பாதிப்புகளைச் சொல்லியிருக்கிறோம். ஆனால், அண்ணா பல்கலைக்கழகத்தில் இருக்கிற அதனுடைய அலுவலகப் பணியாளர்களை ஏன் இப்போது நாம் எடுக்கிறோம் என்று தெரியவில்லை. நான் சந்தேகப்படுவது, யாராவது சில அதிகாரிகள் வெளியே வரவேண்டுமா? அதற்காக இந்தச் சட்டமுன்வடிவு வருகிறதா?

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா பல்கலைக்கழகத்தில் என்ன கருத்துச் சொல்லியிருக்கிறோம் என்றால், அண்ணா பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டபோது, அதை இணைப்புப் பல்கலைக்கழகம் ஆக்கியபோது 6 பொறியியல் கல்லூரிகளை அதில் இணைத்திருக்கிறோம். அப்பொழுது அங்கே பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் அந்த அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டனர். ஆனால் ஆசிரியர் அல்லாத பணியாற்றுகிறவர்களுக்கு ஒரு வாய்ப்பு: அவர்கள் அண்ணா பல்கலைக்கழகத்தில் வேண்டும் என்றால் பணியாற்றலாம் அல்லது தொழில்நுட்பத் துறையானது இருக்கிறது—பாலிடெக்னிக்; அந்த டைரக்டரேட்டிலே பணியாற்றுவதற்கு ஒரு வாய்ப்புத் தருவதற்காகத்தான் அதைக் கொடுக்கிறோமே தவிர, அவர்களை நீக்குவதற்காகக் கிடையாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2002 மே 10]

**திரு. வி.கே. லட்சுமணன்:** Point of Order. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் மூலமாகக் கல்வி கற்பதற்கும், அஞ்சல் வழி மூலமாகக் கல்வி கற்பதற்கும் வேறுபாடு இருக்கிறது. இன்றைக்குத் தமிழ்நாட்டில் இருக்கிற பல பல்கலைக்கழகங்கள் அஞ்சல் வழிப் பாடத்தை நடத்திக் கொண்டிருக்கின்றன. பாரத நாடு முழுவதும் 70 பல்கலைக்கழகங்களின் அஞ்சல் வழிப் பாடம் நடத்தப்படுகிறது. ஆனால், நமக்கு இருப்பது இன்றைய நிலையிலே 10 திறந்தநிலைப் பல்கலைக்கழகங்கள்தான். ஆகவே, பழனிசாமி அவர்கள் கூறுகிற அந்தக் குற்றச்சாட்டு அஞ்சல் வழிக் கல்விக்கா? அல்லது....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டும் இல்லை. அவர் அண்ணா பல்கலைக்கழகத்தைப் பற்றிக் கேட்கிறார்.

**திரு. ஜி. பழனிசாமி:** நான் கேட்பது என்பது, நாம் கல்லூரிகளைப் பல்கலைக்கழகத்திலே இணைக்கிறபோது அவர்களை ஏன் இப்போது எடுக்க வேண்டிய அவசியம் இருக்கிறது? அதிலே என்ன சிக்கன நடவடிக்கை அரசிடம் இருக்கிறது என்ற வினாவை நான் அமைச்சரிடத்திலே தொடுக்கிறேன். அவரும் சொல்லுகிறார். (குறுக்கீடு). அப்படி இல்லையென்றால் ரைட் அப்படி ஒரு பாதிப்பு வராத வகையிலே பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர். (குறுக்கீடு) ராஜு, பின்னால் ஏதாவது கேட்டுக்கொள்ளலாம். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் கல்வித் துறையில் நாட்டிலே தமிழகம் முதல் மாநிலமாக விளங்குவதற்காகப் புரட்சித் தலைவி அவர்கள் பல்வேறு திட்டங்களை முனைப்புடன் செய்து வருகிறார்கள். அதன் அடிப்படையில்தான், தமிழகமானது, நிதித் துறையிலே, நிதியின் காரணமாகப் பல சிக்கல்கள் இருந்தாலும்கூட, அந்த உயர் கல்வியை மேலும், மேலும் வளர்ப்பதற்காக, அதனுடைய தரத்தை உயர்த்துவதற்காகப் புரட்சித் தலைவி அவர்கள் இதுபோன்ற பல திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதில் பணப் பிரச்சினை இருந்தாலும்கூட, இந்த ஆண்டிலேயே புதியதாக இரண்டு பல்கலைக்கழகங்களைத் துவங்க இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தான் பல்வேறு பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்பட்டன என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்றாகும். அண்ணாவின் பெயரால் பல்கலைக்கழகம் துவக்கப்பட்டது. தமிழுக்குத் தமிழ்ப் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது. பாரதியார் பெயரால் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது. பாரதிதாசன் அவர்கள் பெயரால் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது. அன்னை தெரசா பெயரால் மகளிர் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது. அழகப்பா பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது. மருத்துவப் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது. 1992-ல் அம்மா அவர்கள் ஆட்சியில் இருக்கும்போது, தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம் துவக்கப்பட்டது. இந்த ஆண்டு அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த உடனேயே அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தினுடைய பரப்பை விரிவாக்கி, தமிழகம் முழுவதும் ஒரே மாதிரியான, உயர்ந்த ஒரு கல்வியை, தொழிற்கல்வியைப் பெறவேண்டும் என்பதற்காக அண்ணா பல்கலைக்கழகமானது இணைப்புப் பல்கலைக்கழகமாக மாற்றப்பட்டது. இந்த ஆண்டு கவர்னர் உரையிலே புரட்சித் தலைவி அவர்கள் சொல்லும்போது, வேலூரிலே ஒரு புதிய பல்கலைக்கழகம் உருவாக்கப்படும் என்று தெரிவித்தார்கள். தெரிவித்ததோடு மட்டுமல்லாமல், இந்த ஆண்டே அதற்காக 50 இலட்சம் ரூபாயை உடனடியாக ஒதுக்கி, அந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக இந்தத் தொடரிலேயே அதற்கான சட்டமுன்வடிவையும் கொண்டு வந்திருக்கின்றார்கள்.

பிற்பகல் 9-10

தமிழுக்குப் புகழ் என்றால் அது திருக்குறள்தான். அந்தத் திருக்குறளைப் பெற்றதனால் நாம பெருமை அடைகின்றோம். அந்தத் திருக்குறளுக்கு வேண்டிய இடத்தைத் தரவேண்டுமென்று நேற்றே திரு. மணி அவர்கள் பேசும்போது சொன்னார்கள். தமிழுக்கு என்ன தொண்டாற்ற வேண்டுமென்ற கேள்வியைக் கேட்டார்கள். புரட்சித் தலைவி அவர்கள் நேற்று விளக்கமாகச் சொன்னார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், அதனுடைய தலைவியாகிய தன்னுடைய தலைமையிலே இயங்கும்போது என்னென்ன திட்டங்களையெல்லாம், தமிழ் வளர்வதற்காக, தமிழ் மொழியை இந்தியாவினுடைய ஆட்சி மொழியாக்க வேண்டுமென்பதற்காக எடுத்த முனைப்பான திட்டங்களை எல்லாம் விளக்கிச் சொன்னார்கள்.





அண்ணாவின் கொள்கையாகிய தமிழ் உட்பட்ட அனைத்து இந்திய மொழிகளையும் ஆட்சிமொழியாக்க வேண்டுமென்பதை அரசியல் வழியாக ஒரு செயற்குழுவிலேயும், ஒரு பொதுக்குழுவிலேயும் முதன்முதலாகத் தீர்மானத்தைப் போட்டதே 1991-ல் புரட்சித் தலைவி அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) 1991-லே புரட்சித் தலைவி அவர்கள் பதவியேற்ற உடனேயே முதன்முதலாகக் கூட்டப்பட்ட அந்தச் செயற்குழுவிலும், பொதுக்குழுவிலும் அண்ணாவின் கொள்கையாகிய அனைத்து மொழிகளையும்—தமிழ் உட்பட்ட அனைத்து மொழிகளையும்—இந்தியாவின் ஆட்சிமொழிகளாக்க வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்தினார்கள். அந்த நேரத்திலே, டில்லியிலே தன்னுடைய இயக்கமானது பங்கேற்கும் நேரத்திலே அதற்கு ஒரு செயல் திட்டத்தையும் செயல்படுத்திக் காட்டினார்கள். அதை நேற்றைக்கு விளக்கமாகச் சொன்னார்கள்.

தமிழைப் பற்றிப் பேசுகிறோம், தமிழின் பெருமையைப் பற்றிப் பேசுகிறோம்; திருவள்ளுவரைப் பற்றிப் பேசுகிறோம்; பேசும்போதெல்லாம் திருக்குறளை ஆங்காங்கே எடுத்துக் கையாளவும் செய்கின்றோம். அத்தகைய திருவள்ளுவருடைய பெயரால் ஒரு பல்கலைக்கழகத்தை உருவாக்க வேண்டுமென்று யாரும் நினைத்துப் பார்த்ததே கிடையாது. தான் ஆட்சிக்கு வந்தவுடனேயே, அந்தத் தமிழுக்குப் பெருமை தர வேண்டும் என்பதற்காக, தமிழினுடைய உயர்வுக்குப் பெருமை தருவதற்காக, தமிழினுடைய வளர்ச்சியினுடைய அந்தப் புகழை வளர்க்க வேண்டுமென்பதற்காக, திருவள்ளுவர் பெயரால், அதுவும் வேலூரிலே அமைக்க வேண்டுமென்ற ஒரு திட்டம் புரட்சித் தலைவி அவர்களுடைய எண்ணத்தில்தான் உதித்தது. உதித்த உடனே செயல்படுத்திக் காண்பித்திருக்கின்றார்கள்.

வேலூர் மாவட்டத்தைப் பற்றி--வேலூர் மாவட்டம் மட்டுமல்ல--அதை ஒட்டியுள்ள திருவண்ணாமலை மாவட்டம், விழுப்புரம் மாவட்டம், கடலூர் மாவட்டம் ஆகிய நான்கு மாவட்டங்களைப் பற்றி, கல்வியினுடைய நிலைமையைப் பற்றியெல்லாம் பல நேரத்திலே பலர் இங்கே பேசியிருக்கின்றார்கள். இந்த அவையிலே பேசியிருக்கின்றார்கள். கல்வியிலே பின்தங்கிய மாவட்டங்களாக அந்த மாவட்டங்கள் இருக்கின்றன. அந்தப் பகுதியிலே ஏழை மக்கள் வசிக்கின்றார்கள். ஒடுக்கப்பட்ட மக்கள் வாழ்கின்றார்கள். சமூக நிலையிலே மிகவும் பின்தங்கியிருக்கின்ற மக்கள் வாழ்கின்றார்கள். இந்த நிலையிலே இருக்கும் மக்களினுடைய கல்வியினுடைய நிலையும் குறைந்துதான் இருக்கிறது.

[டாக்டர் மு. தம்பிதுரை] [2002 மே 10

தமிழகத்தினுடைய பல பகுதிகளிலே பிளஸ்-1, பிளஸ்-2 தேர்விலே பார்த்தீர்கள் என்றாலும், எஸ்.எஸ்.எல்.சி. தேர்விலே முடிவுகளைப் பார்த்தீர்கள் என்றாலும், இந்த 4 மாவட்டங்களினுடைய வெற்றி விகிதாச்சாரம் மிகவும் குறைந்த நிலையிலேயே இருக்கிறது. இதுதான் உண்மை. ஆகவே, கல்வியிலும் பின்தங்கிய மாவட்டங்களாக இந்த 4 மாவட்டங்களும் இருக்கின்றன. ஆகவே, இந்த மாவட்டங்களை முன்னேற்ற வேண்டுமென்றால், நல்ல கல்வி தர வேண்டுமென்றால், அதற்கு நல்ல திட்டங்கள் தேவைப்படுகின்றன. ஆகவே, இந்த மாவட்டங்களையெல்லாம் ஒன்று சேர்த்து, இந்த ஒடுக்கப்பட்ட சமுதாயத்திலேயுள்ள மக்களுக்காக, பின்தங்கிய மக்களுக்காக, ஆதிதிராவிட மக்களுக்காக, இவர்களினுடைய கல்வித் தரத்தை உயர்த்தவேண்டும் என்பதற்காக ஒரு நல்ல எண்ணத்தில்தான் புரட்சித் தலைவி அவர்கள் இந்த மாவட்டங்களுக்கு முக்கியத்துவம் தர வேண்டுமென்ற ஒரேயொரு எண்ணத்தில்தான் திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். திருவள்ளுவர் அனைவருக்கும் அப்பாற்பட்டவர்தான். எந்தச் சாதியையும் சேர்ந்தவர் கிடையாது; எந்த மதத்தையும் சேர்ந்தவர் கிடையாது. ஆனால், அவருடைய கருத்துகள் அனைவருக்கும் தேவையான கருத்துகள். அத்தகைய திருவள்ளுவர் பெயரால் ஒரு பல்கலைக்கழகத்தைப் புரட்சித் தலைவி அமைத்திருப்பது அனைவரும் பாராட்டுவதற்குரிய ஒன்றாகும். அதோடு, இதனுடைய குறிக்கோளே, இந்த ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர் ஆகியோரை உள்ளடக்கிய ஒடுக்கப்பட்ட மக்கள் பொருளாதார, சமூக மேம்பாட்டினை எய்தும் நோக்குடன்தான் இந்தப் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 9-15

ஆகவே, பொருளாதாரத்திலே—கல்வியிலே முன்னேறி, அதிலே பொருளாதாரத்திலே முன்னேற வேண்டும் என்பதுதான் இந்தப் பல்கலைக்கழகத்தின் குறிக்கோள் ஆகும். அதோடு, ஒரு பல்கலைக் கழகத்தைப் பற்றி, இத்தகைய பட்டங்களைப் பெறுவதற்கு வாய்ப்புகள் இருந்தாலும், சில நேரத்திலே முறைசாரா முறையிலே படித்து சிலர் பட்டங்களைப் பெற விரும்புகின்றார்கள். ஏழை, எளிய மக்கள் வாழ்கின்ற நாடு இந்திய நாடு. அதிலும் குறிப்பாக, தமிழகத்தில் பல்வேறு பகுதியிலே பின்தங்கிய மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். கல்வியைத் தொடர்ந்து படிக்க முடியாமல் இடையிலே விட்டுவிடுபவர்கள் பல பேர் இருக்கின்றார்கள். அவர்களுக்கும் ஒரு வாய்ப்புத் தர வேண்டுமென்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விரும்புகின்றார்கள். கல்வி ஏதோ, வசதியுள்ளவர்களுக்கு, பணம் படைத்தவர்களுக்கு மட்டும் கல்லூரியிலே சென்றும், பல்கலைக்கழகத்திற்குச் சென்றும் படிக்கிற வாய்ப்பு இருந்தால் போதாது. சாதாரண விவசாயி மகனும், சாதாரணக் கூலித் தொழிலாளி மகனும் கிராமத்தில் இருந்தால்கூட, அவன் தொடர்ந்து தன் கல்வியைப் படிக்க வேண்டும், இடையிலே விட்டிருந்தால்கூட, வயது வரம்பின்றி அவர்கள் திறமையைக் காண்பித்து, நல்ல பட்டம் பெறுவதற்காகத்தான் திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தை உருவாக்கியிருக்கிறோம். அதுவொரு பெரிய சாதனை, அதனை உருவாக்கியிருக்கிறார்கள். இதிலே வயது வரம்பு கிடையாது. திறமையிருந்தால் போதும், அறிவு பெற்றிருந்தால் போதும். இவர்களுக்கெல்லாம், இந்தத் திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் மூலமாக உயர்ந்த கல்வியைத் தந்து, அதன் மூலமாக அவர்கள் திறமையைக் காண்பித்து, பட்டங்கள் பெறுவதற்கும் இந்த வாய்ப்பை புரட்சித் தலைவி அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள் என்ற பெருமையான செய்தியை உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகின்றேன்.



2002 மே 10] [டாக்டர் மு. தம்பிதுரை]

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் லட்சுமணன் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். இந்தத் திறந்தநிலைப் பல்கலைக்கழகமானது, கல்வியறிவை வளர்ப்பதற்காக, நல்ல பாடங்களைச் சொல்லிக் கொடுப்பதற்காக, நவீன தொலைத் தொடர்புச் சாதனங்களைப் பயன்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். புரட்சித் தலைவி அவர்கள் காலையிலேகூடச் சொன்னார்கள். எந்த அளவிற்கு இந்த அரசானது, ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தவுடனேயே, பல்வேறு துறைகளில் நவீன, தொலைத் தொடர்புகளைப் பயன்படுத்துகிறோம் என்று விளக்கமாகச் சொன்னார்கள். ஆகவே, இந்த அரசை, இந்த நாட்டை ஆள்வதற்காகத் திட்டங்கள் செய்துவரும் புரட்சித் தலைவி அவர்கள், அந்த நவீன தொடர்பை, அரசை ஆள்வதற்காக மட்டுமல்லாமல், உண்மையிலேயே நல்ல கல்வியைத் தருவதற்கும் பயன்படுத்துவதற்காகத் திட்டங்களை வகுத்திருக்கிறார்கள். அதன் மூலமாக, லட்சுமணன் அவர்கள் என்ன சொன்னார்களோ, அதைச் செயற்படுத்துவோம் என்ற உறுதியையும் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தது, மாண்புமிகு ராஜா அவர்கள் இடஒதுக்கீட்டைப் பற்றிப் பேசினார்கள். பல்கலைக்கழகங்களிலே சரியான முறையில் இடஒதுக்கீடு செய்வதில்லை என்ற கருத்தைச் சொன்னார்கள். இது குறித்து அரசு ஆய்ந்து கொண்டிருக்கிறது. எந்தப் பல்கலைக்கழகமாவது இட

[டாக்டர் மு. தம்பிதுரை] [2002 மே 10

ஒதுக்கீட்டைச் செயல்படுத்தாமல் இருந்திருந்தால், அதைச் செய்து முடிப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

நம்முடைய ஹேமச்சந்திரன் அவர்கள் பேசும்போது ஒரு கருத்தைச் சொன்னார்கள். பல்கலைக்கழகத்துடன் அரசுக் கல்லூரிகளை இணைப்பதன் மூலமாக ஏழை மாணவர்கள் கல்வி பெறுவது கடினமாகிவிடும் என்ற கருத்தைச் சொன்னார்கள். அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. அரசு அதைப் பற்றிப் பார்த்துக்கொள்ளும். புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற உடனேயே சொல்லியிருக்கின்றார்கள். தேர்தல் அறிக்கையிலும் சொல்லியிருக்கின்றார்கள். ஏழை, எளிய மக்களுக்கு உயர்ந்த கல்வியைத் தருவதற்காக. அனைத்து உதவிகளையும், பொருள் உதவிகளையும் செயவதற்கு இந்த அரசானது செயல்படும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், ஓர் அறிவிப்பையும் தேர்தல் அறிக்கையில் சொல்லி, செய்து காண்பித்திருக்கிறார்கள் இந்த ஆண்டிலே. ஆதிதிராவிடப் பெண்கள், இளங்கலைப் பட்டப் படிப்பு மட்டுமல்ல, முதுகலைப் பட்டப் படிப்பைப் படிப்பதற்கும், இலவசமாக இந்த அரசு அனைத்து உதவிகளையும் செய்து, அவர்கள் படிப்பதற்கு ஆவன செய்யும் என்று சொல்லியிருக்கின்றார்கள். ஆகவே, நீங்கள் பயப்படுவதுபோல், ஏழை மக்களுக்கு எந்தவிதமான தொல்லையும் இந்த ஆட்சியிலே வந்துவிடாது. கல்வி பெறுவதுதான் மிக முக்கியம். ஆகவே, அந்தக் கல்வியைப் பெறுவதற்குப் புரட்சித் தலைவி அவர்கள் என்ன திட்டங்களைச் செயல்படுத்த வேண்டுமோ, அனைத்துத் திட்டங்களையும் செயல்படுத்துவார்கள் என்ற உறுதியைத் தருகின்றேன்.

துணைவேந்தர் அவர்கள் இந்தப் பொறுப்பை ஏற்றவுடனேயே, இந்தக் கல்லூரிகளையெல்லாம் அவர்கள் கட்டிக் காக்க முடியுமா என்று சொல்கின்றீர்கள். அந்தப் பல்கலைக்கழகத்தையே கட்டிக் காக்க முடியவில்லை, எப்படிக் கல்லூரிகளையெல்லாம் கட்டிக் காப்பார்கள் என்ற ஒரு கருத்தை எழுப்பினார் ஹேமச்சந்திரன் அவர்கள். ஏதோ ஒரு சில நிகழ்ச்சிகள் இருக்கலாம். அதற்காக ஒட்டுமொத்தமாக ஒரு துணை வேந்தர் தகுதி இல்லாதவர் என்ற கருத்தைக் கொண்டுவரக் கூடாது. பேராசிரியராக இருந்து பணியாற்றியவர்தான் துணைவேந்தராக வருகின்றார்கள். முந்தைய ஆட்சியிலே வேண்டுமானால் நடந்திருக்கலாம். தங்களுக்கு வேண்டியவர்களையெல்லாம் துணைவேந்தர்களாக நியமித்தது



2002 மே 10] [டாக்டர் மு. தம்பிதுரை]

முந்தைய ஆட்சி. ஆனால் இந்த ஆட்சியில், புரட்சித் தலைவி பொறுப்பேற்றவுடன் நீங்கள் பார்த்தீர்கள் என்றால், அரசியல் தலையீடே இதில் கிடையாது. யார், யார் வந்திருக்கிறார்கள் புதிய துணைவேந்தர்களாக என்றால், அரசியலுக்கு அப்பாற்பட்டவர்கள், அவர்கள் எங்களுக்காக எந்த நேரத்திலும் வந்து தேர்தல் பிரச்சாரம் செய்தது கிடையாது. அத்தகைய நிலைமையும் எங்களுக்கு உருவாகவில்லை. புரட்சித் தலைவி அவர்கள் இத்தகைய துணைவேந்தர் நியமனங்களில் எந்தத் தலையீடும் கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். ஒரு Expert Committee இருக்கிறது. வல்லுனர்கள் குழு இதற்காக இருக்கிறது. அந்தக் குழு யாரைச் சிபாரிசு செய்கிறதோ, அவர்களை ஆளுநர் அவர்கள் நியமனம் செய்கிறார். அத்தகைய நிலைதான் உள்ளது. ஆகவே, திறமை உள்ளவர்கள்தான் இந்த ஆட்சி பொறுப்பேற்ற உடனே துணைவேந்தர்களாக வந்திருக்கின்றார்கள்.

பிற்பகல் 9-20

மதுரைப் பல்கலைக்கழகத்தை எடுத்துக்கொள்ளுங்கள். தமிழ்ப் பல்கலைக்கழகத்தை எடுத்துக்கொள்ளுங்கள். மற்ற பல்கலைக் கழகங்களிலும் நியமிக்கப்பட்டுள்ள அத்தனை துணைவேந்தர்களும் திறமை மிக்கவர்கள். அனைவரும் பாராட்டுகிறார்கள். மதுரைக்குச் சென்றால், அங்கே உள்ளவர்கள், ஒரு நல்ல துணைவேந்தரைப் பெற்று இருக்கின்றோம், பல்கலைக்கழகத்தில் பல மாறுதல்கள் வந்திருக்கின்றன என்று பாராட்டுகின்றார்கள். புரட்சித் தலைவியைப் பாராட்டுகின்றார்கள். ஏனென்றால், தலையீடு கிடையாது. எங்களுக்கு வேண்டியவர்களை நியமிக்கவில்லை. ஆகவே, அப்படித் திறமையுள்ள துணை வேந்தர்களைத்தான் நாம் பெற்றுக் கொண்டிருக்கிறோம். கல்லூரிகளைச் சேர்க்கும்போது, அந்தக் கல்லூரிகளையும் சிறந்த நிருவாகம் செய்வார்கள். உறுப்பினர்கள் சொல்வதுபோல், ஆசிரியர்களுக்கு எந்தத் தொல்லையும் வந்துவிடாது. அவர்களுக்கு வேண்டிய ஊதியம், உயர்வுகள் எல்லாம் கிடைப்பதற்கு அந்தப் பல்கலைக்கழகம் ஆவன செய்யும். அவ்வாறு செய்யத் தவறினால் இந்த அரசாங்கம் சும்மா இருக்காது. அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும் என்ற உறுதியைச் சொல்ல விரும்புகிறேன்.

உறுப்பினர் பழனிசாமி அவர்கள் பேசும்போது சில கருத்துகளைச் சொன்னார்கள். விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன். இத்தகைய பல்வேறு நல்ல திட்டங்களையெல்லாம் புரட்சித் தலைவி அவர்கள் செய்து வருகின்றார்கள். அவர்களால் உருவாக்கப்பட்ட திருவள்ளுவர்

பல்கலைக்கழகம், தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் ஆகியன குறித்து அவைமுன் வைக்கப்பட்டுள்ள சட்டமுன்வடிவுகளை நீங்கள் நிறைவேற்றித் தரவேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/2002) நிறைவேற்றப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## 6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) திருவள்ளுவர் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2002 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2002 ஆம் ஆண்டு திருவள்ளுவர் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவைப் பேரவையில் ஆய்வு செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

### (ஓ) திருவள்ளுவர் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு திருவள்ளுவர் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 38/2002), மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.

[2002 மே 10

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு திருவள்ளுவர் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 38/2002) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 65 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 65 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க . (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.

---

@ 10-5-2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



2002 மே 10]

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு திருவள்ளுவர் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 38/2002) நிறைவேற்றப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 9-25

## 6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (இ) தமிழ்நாடு திறந்தவெளிப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2002 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்தவெளிப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவைப் பேரவையில் ஆய்வு செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள்.

[2002 மே 10

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

### (ஓஓ) தமிழ்நாடு திறந்தவெளிப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்) 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்தவெளிப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 39/2002) மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002-ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்தவெளிப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 39/2002) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 54 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 54 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

@ 10-5-2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



2002 மே 10] [பேரவைத் தலைவர்]

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் தம் திருத்தத்தை மொழியலாம்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு திறந்தவெளிப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 39/2000) என்பதற்குப் பதிலாக, "2002 ஆம் ஆண்டு திறந்தநிலைப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 39/2002)" என்னும் திருத்தத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், திருத்தம் ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு திருத்தப்பட்டபடி சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.

[2002 மே 10

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு திறந்தவெளிப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 39/2002) திருத்தப்பட்டபடி நிறைவேற்றப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு திருத்தப்பட்டபடி ஏற்கப்பட்டது.

## 8. அரசினர் தனித் தீர்மானம்

### கால்நடை மருத்துவப் பயிற்சி, தொழில் ஆற்றுவதை முறைப்படுத்துதல் மற்றும் அதுதொடர்பான அனைத்துப் பொருட்பாடுகளுக்கும் இந்தியா முழுவதிலும் ஒரே சீரான சட்டத்தைக் கொண்டு வருதல்—1984 ஆம் ஆண்டு இந்தியக் கால்நடை மருத்துவமன்றச் சட்டம் (மத்தியச் சட்டம் 52/1984) தமிழ்நாடு மாநிலத்தில் ஏற்கப்படுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தனித் தீர்மானம், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் தனித் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை மருத்துவப் பயிற்சியினையும் தொழில் ஆற்றுவதையும் முறைப்படுத்துவதற்கும் அது தொடர்பான அல்லது அதற்குத் துணையானதும் சார்பானதுமான அனைத்துப் பொருட்பாடுகளுக்கும் இந்தியா முழுவதிலும் ஒரே சீரான சட்டத்தைக் கொண்டிருப்பது விரும்பத்தக்கது என்று இந்தச் சட்டப் பேரவை கருதுகிறது என்பதாலும்,



2002 மே 10] [திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்]

அத்தகைய ஒரு சட்டத்தின் நுதல்பொருள், இந்திய அரசமைப்பின் ஏழாம் இணைப்புப் பட்டியலிலுள்ள II ஆம் பட்டியின் 15 மற்றும் 32 ஆகிய பதிவுகளிலும், III ஆம் பட்டியின் 26 ஆம் பதிவிலும் விவரிக்கப்பட்டுள்ள பொருட்பாடுகளுக்குப் பெரும்பாலும் தொடர்புடையதாக இருப்பதாலும்,

இந்திய அரசமைப்பின் 249 மற்றும் 250 ஆகிய உறுப்புகளில் வகை செய்யப்பட்டவாறு தவிர, மேற்சொன்ன II ஆம் பட்டியின் 15 மற்றும் 32 ஆகிய பதிவுகளில் விவரிக்கப்பட்டுள்ள பொருட்பாடுகள் தொடர்பாக மாநிலங்களுக்கு அத்தகைய ஒரு சட்டத்தை இயற்றுவதற்கு நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் எதுவும் இல்லையென்பதாலும், அரசமைப்பின் 252 ஆம் உறுப்பின் (1)-ஆம் கூறின்படியான அதிகாரங்களின் காரணத்தினாலும், ஹரியானா, பீகார், ஒரிசா, இமாச்சலப் பிரதேசம், இராஜஸ்தான் ஆகிய மாநிலங்களின் சட்டமன்றங்களின் அனைத்து அவைகளினாலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை ஒட்டியும், நாடாளுமன்றம் 1984 ஆம் ஆண்டு இந்தியக் கால்நடை மருத்துவமன்றச் சட்டத்தை (மத்திய சட்டம் 52/1984) ஏற்றிருக்கிறது என்பதாலும்,

1984 ஆம் ஆண்டு இந்தியக் கால்நடை மருத்துவமன்றச் சட்டமானது (மத்திய சட்டம் 52/1984) தமிழ்நாடு மற்றும் ஜம்மு காஷ்மீர் நீங்கலாக அனைத்து மாநிலங்களிலும் அளாவி நிற்கிறது என்பதாலும்,

அரசமைப்பின் 252 ஆம் உறுப்பின் (1)-ஆம் கூறினை ஒட்டி அதன் பொருட்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் வாயிலாக இந்தச் சட்டத்தை ஏற்கின்ற பிற மாநிலங்களுக்கு இந்தச் சட்டம் அளாவி நிற்கும் என்பதாலும்,

1984 ஆம் ஆண்டு இந்தியக் கால்நடை மருத்துவமன்றச் சட்டமானது (மத்திய சட்டம் 52/1984) தமிழ்நாடு மாநிலத்தில் ஏற்கப்படுவது விரும்பத்தக்கது என்று சட்டமன்றத்திற்குத் தோன்றுவதாலும்,

எனவே, அரசமைப்பின் 252 ஆம் உறுப்பின் (1)-ஆம் கூறினை ஒட்டி, 1984 ஆம் ஆண்டு இந்தியக் கால்நடை மருத்துவமன்றச் சட்டம் (மத்திய சட்டம் 52/1984) தமிழ்நாடு மாநிலத்தில் ஏற்கபபடுவதற்காக, சட்டமன்றம் இதன்மூலம் தீர்மானம் நிறைவேற்றுகிறது."

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டியது இந்தக் காலகட்டத்தில் மிகவும் அவசியம். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் இதனை ஏற்று, தனித் தீர்மானத்தை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

[2002 மே 10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தனித் தீர்மானம் நிறைவேறியது.

பிற்பகல் 9-30

## 6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஈ) பேரவை நிறைவேற்றிய அலுவல்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூன்றாவது முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு மிக வெற்றிகரமாக இக்கூட்டத் தொடரை நிறைவு செய்யப் பூரண ஒத்துழைப்பும், உதவியும் நல்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்து, (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இக்கூட்டத் தொடர் நிறைவேற்றிய அலுவல்களைப் பேரவைக்கு அறிவிக்கிறேன்:

இந்த மூன்றாவது கூட்டத் தொடரின் முதல் கூட்டம் 9-3-2002 அன்று தொடங்கி 15-3-2002 வரை நடந்து முடிந்துள்ளது. இரண்டாவது கூட்டம் 27-3-2002 அன்று தொடங்கி, இன்று 10-5-2002 வரை நடைபெற்றுள்ளது.

பேரவை கூடிய மொத்த நாட்கள் - 36

மாலையிலும் பேரவை கூடிய நாட்கள் - 11

அவைக் கூட்டம் நடைபெற்ற நேரம் - 165 மணி, 40 நிமிடம்

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம் நடைபெற்ற மொத்த நாட்கள் - 4

உரையாற்றிய மொத்த உறுப்பினர்கள் - 39 பேர்

உரையாற்றிய நேரம் - 13 மணி 43 நிமிடம்



2002 மே 10] [பேரவைத் தலைவர்]

அதில் ஆளுங்கட்சியினர் 10 பேர், பேசிய நேரம் 3 மணி 33 நிமிடம்.

இதர கட்சியினர் 29 பேர், பேசிய நேரம் 10 மணி 10 நிமிடம்.

இதர கட்சியினருக்குக் கூடுதலாக 7 மணி நேரம் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுக்கப்பட்டது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிலுரை ஆற்றிய நேரம் 1 மணி, 26 நிமிடம்.

2002-2003 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை, 27-3-2002 அன்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பேரவைக்கு அளித்தார்கள்.

வரவு-செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம் நடைபெற்ற நாட்கள் - 7.

பங்குகொண்ட உறுப்பினர்கள் - 27 பேர்.

உறுப்பினர்கள் உரையாற்றிய நேரம் - 11 மணி 54 நிமிடம்.

அதில் ஆளுங்கட்சியினர் 4 பேர், பேசிய நேரம் 1 மணி, 24 நிமிடம்.

இதர கட்சியினர் 23 பேர், பேசிய நேரம் 10 மணி 30 நிமிடம்.

இதர கட்சியினருக்குக் கூடுதலாக 7 மணி நேரம் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பதிலளித்த நேரம் 4 மணி 45 நிமிடம். (மேசையைத் தட்டும் ஒலி).

இந்த அளவுக்கு விளக்கமான பதிலுரையை அளித்த மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கு—நாவலர் நம்மிடம் இல்லை என்கிற குறையைப் போக்கிய நிதியமைச்சர் அவர்களுக்கு—பேரவையின் சார்பில் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம்:—கடந்த ஆண்டுகளில் 61 மானியக் கோரிக்கைத் தலைப்புகளின்கீழ் நிதியொதுக்கம் செய்யப்பட்டு வந்தது. இவ்வாண்டு அவ்வகைப்பாடு உறுப்பினர்கள் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் துறைவாரியான தலைப்பில் எளிமைப்படுத்தி, சீரமைக்கப்பட்டு, 49 மானியக் கோரிக்கைகளாகக் குறைக்கப்பட்டுள்ளன.

அவையனைத்தும் விவாதித்து நிறைவேற்றப்பெற்றன. எந்த ஒரு மானியக் கோரிக்கையும் கில்லட்டின் செய்யப்படவில்லை.

விவாதம் நடைபெற்ற நாட்கள் - 20.

மாலையிலும் விவாதம் நடைபெற்ற நாட்கள் - 6.

உரையாற்றிய உறுப்பினர்கள் - 165 பேர்.

உரையாற்றிய மொத்த நேரம் - 44 மணி 10 நிமிடம்.

அதில் ஆளுங்கட்சியினர் 34 பேர், பேசிய நேரம் 9 மணி 17 நிமிடம்.

இதர கட்சியினர் 131 பேர், பேசிய நேரம் 34 மணி 53 நிமிடம்.

இதர கட்சியினருக்கு ஏறக்குறைய 24 மணி நேரம் கூடுதலாக வாய்ப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர்கள் பதிலுரையாற்றிய மொத்த நேரம் - 26 மணி 30 நிமிடம்.

மாண்புமிகு முதலமைச்சர் தனது பொறுப்பில் உள்ள துறைகள் சம்பந்தமாக பதில் அளித்த நேரம் - 2 மணி 7 நிமிடம்.

பேரவை வரலாற்றில் முதன்முறையாக மானியக் கோரிக்கை விவாத பதிலுரையின்போது, அமைச்சர்கள் அறிவித்த முக்கிய அறிவிப்புகள் அச்சிடப்பட்டு, பதிலுரையின்போதே உறுப்பினர்களுக்கு அவையில் வழங்கப்பெற்றது.

வெட்டுத் தீர்மானம்— வரப்பெற்றவை 8,294 அனுமதிக்கப்பெற்றவை 7,448.

சட்டமன்ற வரலாற்றிலேயே முதன்முறையாக அதிக அளவில் எதிர்க்கட்சி உறுப்பினர்களால் 1,326 வெட்டுத் தீர்மானங்கள் பேரவையில் முன்மொழியப்பட்டன.

பல துறைகள் தொடர்பான பதிலுரை அளித்த நிகழ்வுகள் அல்லாமல், இதர துறைகள் தொடர்பான விவாதங்களிலும், அவ்வப்போது பேரவையில் உடனுக்குடன் எதிர்க்கட்சியினர் எழுப்பிய பிரச்சினைகளுக்கு





மாண்புமிகு முதலமைச்சரே விளக்கங்கள் அளித்த நேர்வுகள்—173 நேர்வுகளில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே விளக்கம் அளித்தார்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

அவர்கள் விளக்கம் அளித்த நேரம்—2 மணி, 30 நிமிடம்.

வினாக்கள்-விடைகள்:—

சென்ற ஆண்டு வரவு-செலவுத் திட்டக் கூட்டத் தொடர் முடிவுற்ற 14-9-2001 முதல் 8-5-2002 வரை, பேரவைச் சரித்திரத்திலேயே முதன்முறையாக 11,620 வினாக்கள் உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

அளித்த உறுப்பினர்கள் எண்ணிக்கை - 127

அனுமதிக்கப்பெற்றவை - 5,460

உடுக்குறியிட்டவை - 3,254

உடுக்குறியிடாதவை - 2,206

குறுகிய கால வினா - 102

அனுமதிக்கப்பெற்ற வினாக்களில் முதல் ஐந்து நிலைகளில் இருப்பவர்கள்:—

முதலாவதாக, திரு. ஐ. கணேசன்.

இரண்டாவதாக, திரு. நா. சந்திரமோகன்.

மூன்றாவதாக, திரு. மு. அப்பாவு.

நான்காவதாக, திரு. லா. சந்தானம்.

ஐந்தாவதாக, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

அனுமதிக்கப்பெற்ற வினாக்களில் 500-க்கும் மேல் கொடுத்துள்ள கட்சிகள் விவரம்:—

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்-2,184 வினாக்கள்.

பாட்டாளி மக்கள் கட்சி - 1,541 வினாக்கள்.

[பேரவைத் தலைவர்] [2002 மே 10

தமிழ் மாநில காங்கிரஸ் - 617 வினாக்கள்

உடுக்குறியிட்ட வினாக்கள்:—

அவையில் விடையளிக்கப்பட்டவை - 332.

அவற்றில் அதிக அளவில் மூல வினா கேட்டு முதல் மூன்று நிலைகளில் இருப்பவர்கள்:—

திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்-8 வினாக்கள். அவருக்கு என் பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி.கே. சேகர்பாபு-7 வினாக்கள். அவருக்கும் என் பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வெ. ஏழுமலை. திரு. கா. கந்தசாமி, திரு. நா. சந்திரமோகன், திரு. க. பாரமலை ஆகியோர் தலா 5 வினாக்கள். அவர்களுக்கும் என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

20 மூல வினாக்களுக்கு மேல் விடையளித்த அமைச்சர்கள்:—

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் - 41 வினாக்கள்.

மாண்புமிகு கல்வி அமைச்சர் - 37 வினாக்கள்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் - 35 வினாக்கள்

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் - 30 வினாக்கள்.

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் - 21 வினாக்கள்.

பிற்பகல் 9-35

துணை வினாக்கள்-800

இதில் ஆளும்கட்சியினர் - 307

இதர கட்சியினர் - 493



2002 மே 10] [பேரவைத் தலைவர்]

அவர்களில் 20 வினாக்களுக்கு மேல் கேட்டவர்கள்

வழக்கம் போல, திரு. சி. ஞானசேகரன் - 34 வினாக்கள்.

திரு. ஜி.கே. மணி - 30 வினாக்கள்.

திரு. வை. சிவபுண்ணியம் - 25 வினாக்கள்.

திரு. லா. சந்தானம் - 23 வினாக்கள்.

திரு. ஜி. பழனிசாமி - 20 வினாக்கள்.

வினாக்கள்-விடைகள் எடுத்துக்கொள்ளப்பெற்ற நாட்கள் - 24.

வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பட்ட நாட்கள் - 19,

நீட்டிக்கப்பட்ட நேரம் - 3 மணி 57 நிமிடம்.

குறுகிய கால வினாக்கள் - 2.

உடுக்குறியிடாத வினாக்கள்:-

அவைமுன் வைக்கப்பெற்றவை - 765.

உடுக்குறியிடாதவையாக மாற்றப்பட்ட உடுக்குறியிட்ட வினாக்கள் 1,112.

அவசரத் தன்மை வாய்ந்த மிக முக்கியமான பொருள்கள் குறித்து சிறப்புக் கவன ஈர்ப்பு (Special Mention) என்ற வகையில் எடுத்துக்கொள்ளப்பெற்றவை - 9.

இதில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிலளித்தவை - 6.

எடுத்துக்கொள்ளப்பெற்ற மொத்த நேரம் - 2 மணி 29 நிமிடம்.

உரையாற்றிய உறுப்பினர்கள் - 25 பேர்.

இதில் இதர கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் - 24 பேர்.

பேசிய நேரம் - 1 மணி 22 நிமிடம்.

ஆளுங்கட்சி உறுப்பினர் ஒருவர், ஒரு நிமிடம் பேசியுள்ளார்.

[பேரவைத் தலைவர்] [2002 மே 10

கவன ஈர்ப்பு:

வரப்பெற்றவை-520.

அனுமதிக்கப் பெற்றவை - 140.

விளக்கம் அளிக்கப்பெற்றவை - 31.

அவற்றில் ஆளுங்கட்சியினர் அளித்தவை - 5.

விளக்கம் கேட்டோர் - 5 பேர்.

இதர கட்சியினர் அளித்தவை - 26.

விளக்கம் கேட்டோர் - 44 பேர்.

அவைமுன் வைக்கப்பெற்றவை - 44.

உரிமை மீறல் குறித்த பிரச்சினைகள்:

எழுப்பப்பெற்றவை - 4.

தீர்ப்பளிக்கப்பெற்றவை - 4.

அரசினர் சட்டமுன்வடிவுகள்:—

வரப்பெற்றவை - 39.

நிறைவேற்றப்பெற்றவை - 38.

திருவள்ளுவர் பல்கலைக்கழகம் நிறுவுதல், கம்பிவட தொலைக்காட்சி ஒளிபரப்பை முறைப்படுத்துதல், குற்ற வழக்கு விசாரணைமுறை, ஒருவருக்கு ஒரு பதவி என்கிற அடிப்படையில் உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர் பதவிகளுக்கான தகுதி நிர்ணயித்தல், பொது இடங்களில் புகை பிடித்தலையும், எச்சில் உமிழ்வதையும் தடை செய்தல், அத்தியாவசியப் பணிகளைப் பேணுதல் போன்றவை குறித்த சட்டமுன்வடிவுகள் இவற்றில் அடங்கும்.

தமிழ்நாடு பிளாஸ்டிக் பொருள்கள் (விற்பதனை, சேமித்து வைப்பதனை, ஏற்றிச் செல்வதனை மற்றும் பயன்படுத்துவதைத் தடை செய்தல்) சட்டமுன்வடிவு ஆய்வுக் குழுவிற்கு விடப்பெற்றது.

சட்டமுன்வடிவுகளின்மீது உரையாற்றியவர்கள் 108 பேர்.

மொத்த நேரம் 11 மணி 38 நிமிடம்.



2002 மே 10] [பேரவைத் தலைவர்]

உரையாற்றியவர்களில் ஆளுங்கட்சியினர் ஒருவர் மட்டுமே.

உரையாற்றிய நேரம் 17 நிமிடம்.

விதி 110-ன்கீழ் அமைச்சர்களின் அறிக்கைகள்:—

மொத்தம் அளிக்கப்பெற்றவை -10.

இதில் மாண்புமிகு முதலமைச்சர் அளித்தவை - 8.

அரசினர் தனித் தீர்மானம்:—

வரப்பெற்றவை - 2.

நிறைவேற்றப்பெற்றவை - 2.

ராஜீவ் காந்தி அவர்கள் கொலை வழக்கில் அறிவிக்கப்பட்ட குற்றவாளியான விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனை இந்தியாவிற்குக் கொண்டு வந்து நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தக் கோரும் வரலாற்றுச் சிறப்பு மிக்க தனித் தீர்மானமும், 1984 ஆம் ஆண்டு இந்தியக் கால்நடை மருத்துவமன்றச் சட்டத்தை நமது மாநிலத்தில் ஏற்றுக்கொள்வது தொடர்பான தனித் தீர்மானமும் ஆகும்.

பேரவைக் குழுக்கள் அவைக்கு அளித்துள்ள அறிக்கைகள்:—

பொதுக் கணக்குக் குழு - 95.

பொது நிறுவனங்கள் குழு - 57.

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு - 12.

மதிப்பீட்டுக் குழு - 9.

மனுக்கள் குழு - 8.

அரசு உறுதிமொழிக் குழு - 5.

கடந்த நிதியாண்டு அமைக்கப்பெற்ற சட்டமன்றப் பேரவையின் அனைத்துக் குழுக்களின் பதவிக் காலம் மேலும் ஓராண்டு நீட்டிக்கப்பட்டுள்ளது. இதுவும் சட்டமன்றப் பேரவையைப் பொறுத்தவரை முதல் நிகழ்வு என்பதைப் பெருமிதத்துடன் நான் கூறிக்கொள்கின்றேன்.

## பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

**(அ) சட்டமுறை விதிகளும் ஆணைகளும் 204.**

**(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள் 461.**

கடந்த ஆண்டு, முதல் இரண்டு கூட்டத் தொடரில் அனைத்து நாட்களும் அவைக்கு வந்திருந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை - 67. இந்த மூன்றாவது கூட்டத் தொடரின்போது அனைத்து நாட்களும் அவைக்கு வந்திருந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை—63.

இந்த பன்னிரண்டாவது பேரவை தொடங்கிய 22-5-2001 முதல் இன்று வரை அனைத்து நாட்களும் பேரவைக்கு வருகை தந்த உறுப்பினர்கள் பட்டியல் வருமாறு:—

திருவாளர்கள்/திருமதி

கு. அண்ணாமலை

ப. அண்ணாவி

அழகம்மாள்

கே.பி. அன்பழகன்

மா. இராஜசேகர்

ஏ.எஸ். கண்ணன்

ஐ. கணேசன்

டாக்டர் ஆ. கருப்பாயி

ஆர். கிருஷ்ணன்

வெ. கோவிந்தராஜ்,

எம். சக்திவேல் முருகன்

ஆர். சசிகலா

கே.கே. சிவசாமி

சி. சிவசாமி

அ. சிவபெருமாள்

செ. சுந்தராம்பாள்

சி.எம். சூரியகலா

வி.ஏ. செல்லையா



தமிழ்மொழி ராஜதத்தன்

க. தவமணி

ப.வெ. தாமோதிரன்

பி.கே.டி. நடராஜன்

கே.எஸ். பழனிசாமி

பி.எம். நரசிம்மன்

பி.எச். பால் மனோஜ் பாண்டியன்

ப. பொன்னம்பலம்

எஸ். மாணிக்கராஜ்

கா.பு. முனுசாமி

என். ரெங்கநாதன்

எஸ்.எஸ். ரமணீதரன்

ஜெமினி கே. ராமச்சந்திரன்

பெ. பழனியப்பன்

எஸ். ராஜம்மாள்

வி.ஆர். ராஜாங்கம்

மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்

அவர்களுக்கு என் பாராட்டுக்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

வருகைப் பதிவேட்டில் உறுப்பினர்கள் கையொப்பம் இட்டுள்ளதை அடிப்படையாகக் கொண்டு இப்பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளதால், பேரவைக்கு வந்திருந்து, வருகைப் பதிவேட்டில் கையொப்பமிடாத உறுப்பினர்களின் பெயர்கள் இப்பட்டியலில் இடம் பெறாது. மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் அனைத்து நாட்களிலும் அவைக்கு வந்திருந்தாலும், அவர்கள் இப்பதிவேட்டில் கையெழுத்திடுவதில்லை என்பதால் அவர்களின் பெயர்கள் இப்பட்டியலில் இடம் பெறவில்லை.

[பேரவைத் தலைவர்] [2002 மே 10

இக்கூட்டத் தொடரில் பேரவை தொடர்ந்து இரண்டு வாரங்கள், காலை, மாலை இரண்டு வேளைகளிலும் கூடியபோதிலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனைத்து நாட்களும் அவைக்கு வந்திருந்ததோடு, அரிய பல விளக்கங்களை அளித்தார்கள் என்பது பேரவை அறிந்ததே. (மேசையைத் தட்டும் ஒலி)

குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், 3-5-2002 அன்று சட்டத் துறை மற்றும் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறைகளின் மானியக் கோரிக்கைகள்மீது விவாதம் நடைபெற்றபோது, கிண்டியில் உள்ள தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகப் பட்டமளிக்கும் விழாவில் இரவு 7-30 மணி வரை கலந்துகொண்டுவிட்டு, அதன்பின் பேரவைக்கு வந்திருந்து, விவாதத்தில் பங்கு கொண்டு, இரவு 9-17-க்குப் பேரவை முடியும் வரைக்கும் முதலமைச்சர் அவர்கள் இருந்தார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு, நன்றியோடு எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறேன். சட்டமன்றப் பேரவையின்மீது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுள்ள மதிப்பிற்கும், ஈடுபாட்டிற்கும் இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். அவருக்குப் பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் பாராட்டுதல்களையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். அவரையே மற்ற உறுப்பினர்கள் அனைவரும் பின்பற்ற வேண்டும் என்று பேரவைத் தலைவர் என்ற முறையிலே நான் விரும்புகிறேன்.

பிற்பகல் 9-40

பார்வையாளர்கள் மாடத்தில் அனுமதிக்கப்பட்டவர்கள்-13,954 பேர்.

ஆண்கள் 12,745 பேர்.

பெண்கள் 1209 பேர்.

பேரவைத் தலைவர் மாடம் மற்றும் பேரவைத் தலைவர் அலுவலகத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ள வரிசைகளில் அனுமதிக்கப்பெற்றவர்கள் - 3,902 பேர்.

சட்டமன்ற நூலகத்திற்கு வருகை தந்தோர் - 707

வழங்கப்பெற்ற நூல்கள் - 845

இவ்வாண்டு புதியதாக வாங்கப்பெற்ற நூல்கள் - 239



2002 மே 10] [பேரவைத் தலைவர்]

இக்கூட்டத் தொடரில் உறுப்பினர்கள் ஆற்றிய மொத்த உரைகள் (குறுக்கீடுகள் தவிர)—870

தட்டச்சு செய்யப்பெற்ற மொத்தப் பக்கங்கள் - 9,700

மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு வழங்கப்பெற்ற நடவடிக்கைக் குறிப்புகளின் எண்ணிக்கை - 2,511

தலைமைச் செயலகத்தின் பல்வேறு துறைகளுக்கு அனுப்பப்பட்ட நடவடிக்கைக் குறிப்புகளின் எண்ணிக்கை - 524

இக்கூட்டத் தொடர் மிகச் சிறப்பாக நடந்தேற உதவி செய்த மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவர்களில் முதன்மையாக, பேரவையை நடத்துவதில் எனக்கு வழிகாட்டுதலும், ஊக்கமும், ஆதரவும் அளித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் என்னுடைய நன்றியினையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று, விவாதங்களில் அவ்வப்போது விரிவான விளக்கங்களை எடுத்து வைத்ததோடு, பேரவையை நல்ல முறையில் நடத்திச் செல்லத் துணை புரிந்த மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களுக்கும், எனக்கு மிகவும் உறுதுணையாக இருந்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் மற்றும் மாற்றுத் தலைவர்களான திரு. பி.ஆர். சுந்தரம், திரு. அ. பாப்பா சுந்தரம், திரு. ப. இராஜரெத்தினம், திரு. எம்.ஏ. ஹக்கீம், திரு. செ.கு. தமிழரசன், திரு. லா. சந்தானம் ஆகியோருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவை நடவடிக்கைகளில் பங்கேற்று எனக்கு உதவிகரமாக இருந்த மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், இதர கட்சிகளின் தலைவர்களுக்கும், மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா அவர்களுக்கும், இதர கட்சிக் கொறடாக்களுக்கும் எனது நன்றியை உரித்தாக்குகிறேன்.

பேரவையினுடைய அலுவல்களைச் செம்மையாக நிறைவேற்றிட முழு ஈடுபாட்டுடனும், உற்சாகத்துடனும் எனக்கு உதவி புரிந்த பேரவை முதன்மைச் செயலாளர் திரு. செ.சு. ஜானகிராமன் அவர்களுக்கும், பேரவைச் செயலாளர் திரு. வெ. இராசாராமன் அவர்களுக்கும், பேரவையின் அனைத்து அலுவலர்களுக்கும், பேரவை நிருபர்களுக்கும், இதர பணியாளர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[பேரவைத் தலைவர்] [2002 மே 10

பேரவை நடக்கும் காலத்தில் குளிர்சாதன வசதி, மின் வசதி, ஒலிபெருக்கி வசதிகள் செய்த பொதுப் பணித் துறையினருக்கும், போக்குவரத்துத் துறையினருக்கும், பேரவைக் காவலர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவை நிகழ்ச்சிகளைத் தினமும் ஒளிப்பதிவு செய்து, ஒளிபரப்புச் செய்ய உதவிய தமிழ்நாடு திரைப்படப் பிரிவினருக்கும், பேரவை நடவடிக்கைகளை உடனுக்குடன் நாட்டு மக்களுக்கு எடுத்துச் சென்ற அகில இந்திய வானொலி, இந்தியத் தொலைக்காட்சி, இதர தனியார் தொலைக்காட்சிகள், பத்திரிகைகள், செய்தி நிறுவனங்கள், செய்தியாளர்கள் மற்றும் நிருபர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவையின் அனைத்து அலுவல்களையும் முன் நின்று நடத்துவதற்குப் பெரிதும் துணை புரிந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களுக்கும் மீண்டும் ஒரு முறை தனியே நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். உங்கள் அனைவர் சார்பிலும் அவர்களுக்கு எனது உளங்கனிந்த நன்றியைத் தெரிவிப்பதோடு, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றி கூறி முடிக்கிறேன்.

## 7. அரசினர் தீர்மானங்கள்-தொடர்ச்சி

### (ஆ) விதி 25(1)-ன்கீழ் பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறுவது குறித்த அரசினர் தீர்மானம், மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

*** மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 25(1)ன்கீழ் பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறவேண்டும்"
என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



2002 மே 10] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறுகிறது. வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் *9-43* மணிக்கு, மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

180. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் மூன்றாவது அட்டவணையில் பி பகுதியைச் சேர்ந்த 1,2,30,36,39 மற்றும் முதலாவது அட்டவணையில் பி பாகத்தில் 18 ஆம் இனத்தில் (iii) துணை இனத்தில் சில பொருட்களை இணைப்பது சம்பந்தமாக வணிக வரித் துறையின் 27-3-2002 ஆம் நாளிட்ட 30 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். (ஆறு அறிவிக்கைகள் [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

181. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்படி சில பெட்ரோலியப் பொருட்களை சில எண்ணெய் நிறுவனங்களுக்கு விற்பனை மற்றும் கொள்முதல் செய்வதில் வரி குறைப்பது குறித்து வணிக வரிகள் துறையின் 27-3-2002 ஆம் நாளிட்ட 31 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். (ஒன்பது அறிவிக்கைகள்) [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

182. வணிக வரிகள் துறையின் 18-8-2001 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட 11(1)/வ.வ./45(இ-4)/2001 ஆம் எண் அறிவிக்கை மற்றும் 11(1)/வ.வ.அ.நி./41 (ஏ-2)/93 ஆம் எண் அறிவிக்கை ஆகிய அறிவிக்கைகளில் வேறுபாடு செய்வது குறித்து வணிக வரிகள் துறையின் 27-3-2002 ஆம் நாளிட்ட 32 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது

[2002 மே 10

விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

183. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்படி விற்பனை மற்றும் கொள்முதல் செய்வதில் சில பொருட்களுக்கு வரி குறைப்பு மற்றும் விலக்களிப்பது குறித்து வணிக வரிகள் துறையின் 27-3-2002 ஆம் நாளிட்ட 33 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். (ஆறு அறிவிக்கைகள்) [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

184. வணிக வரிகள் துறையில் வெளியிடப்பட்ட 31 அறிவிக்கைகள் மற்றும் வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையில் உருவாகி 17-3-1993 ஆம் நாளிட்ட அறிவிக்கை எண் 11(1)/வ.வ.அ.நி./41(ஏ-2)/93 ஆகிய அறிவிக்கைகளை ரத்து செய்வது தொடர்பாக வணிக வரிகள் துறையின் 27-3-2002 ஆம் நாளிட்ட 34 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

185. வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையில் உருவாகி 12-1-1998 ஆம் நாள் தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட 11(1)/வ.வ.(ம)அ.நி./(ஏ-9)/98 ஆம் அறிவிக்கையில் வேறுபாடு செய்வது குறித்து வணிக வரிகள் துறையின் 28-3-2002 ஆம் நாளிட்ட 36 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

186. பெட்ரோலியப் பொருட்கள்மீதான வரி விதிப்பு முறைகளை மாற்றி அமைத்தது குறித்து வணிக வரிகள் துறையின் 31-3-2002 ஆம் நாளிட்ட 38 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். (நான்கு அறிவிக்கைகள்) [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவு மற்றும் 1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/1970) 4(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

187. அரிசி மற்றும் கோதுமை விற்பனைமீது 1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் வணிகர் எவரும் மற்றும்



2002 மே 10]

சேலத்திலுள்ள சேலம் மாவட்ட மாச்சத்து மற்றும் சவ்வரிசி தயாரிப்பாளர்கள் பணி வசதி தொழில் கூட்டுறவுச் சங்கம் செலுத்தத்தக்க கூடுதல் வரியிலிருந்து விலக்களிப்பது குறித்தும் வணிக வரிகள் துறையின் 1-4-2002 ஆம் நாளிட்ட 39 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவு மற்றும் 1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டத்தின். (தமிழ்நாடு சட்டம் 14/1970) 4(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

188. பொது மக்கள் நலனிற்குத் தேவையானது என்று கருதிப்பார்த்து (1) திருவாளர்கள் மதுரை பவர் கார்ப்பரேஷன், சமயநல்லூர் (2) திருவாளர்கள் சாமல்பட்டி பவர் கார்பரேஷன் (3) திருவாளர்கள் ஜி.எம்.ஆர். பவர் கார்பரேஷன் (தனியார்) நிறுவனம் ஆகிய நிறுவனங்கள் இறக்குமதி செய்யும் அடர்த்தி குறைந்த கந்தக மிகு இருப்பின் மீது (LSHS) 3 சதவீதத்திற்கும் மேற்பட்டு செலுத்தத்தக்க வரிக்கு 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளூர்ப் பகுதிகளுக்குள் பொருள்களைக் கொண்டு வருவதன் மீதான வரிச் சட்டத்தின்கீழ் ஓராண்டு கால அளவிற்கு விலக்களிப்பது குறித்து வணிக வரிகள் துறையின் 27-3-2002 ஆம் நாளிட்ட 26 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளூர்ப் பகுதிக்குள் பொருள்களைக் கொண்டு வருவதன் மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/2001) 14(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

189. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் அல்லது 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் மறு விற்பனை செய்யும் நோக்கத்திற்காக 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளூர்ப் பகுதிகளுக்குள் பொருள்களைக் கொண்டு வருவதன்மீதான வரிச் சட்டத்தின் விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணைச் சரக்குகளை யாதொரு உள்ளூர்ப் பகுதிக்குள் கொண்டுவரும் சில எண்ணெய் நிறுவனங்கள் மேற்சொன்ன சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் செலுத்தத்தக்க வரியிலிருந்து பொது நலன் கருதி விலக்களிப்பது குறித்து வணிக வரிகள் துறையின் 27-3-2002 ஆம் நாளிட்ட 27 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளூர்ப் பகுதிகளுக்குள் பொருள்களைக் கொண்டு வருவதன் மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/2001) 14(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

[2002 மே 10

190. 1995-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (தேர்தல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்தது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 2-6-2001-ஆம் நாளிட்ட 151 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

191. 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இட ஒதுக்கீடுகள் மற்றும் சுழற்சி முறையில் இட ஒதுக்கீடுகள்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 14-6-2001 ஆம் நாளிட்ட 157 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

192. 2000-2001 ஆம் ஆண்டிற்கான நீலகிரி மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

193. 2000-2001 ஆம் ஆண்டிற்கான சிவகங்கை மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

194. 2000-2001 ஆம் ஆண்டிற்கான காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

195. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தஞ்சாவூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

196. 2000-2001 ஆம் ஆண்டிற்கான பெரம்பலூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)



2002 மே 10]

197. 2000-2001 ஆம் ஆண்டிற்கான அரியலூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

198. 2000-2001 ஆம் ஆண்டிற்கான சேலம் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

199. 2001 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 அன்றுடன் முடிவடைந்த ஆண்டுக்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (ஊராட்சி அமைப்புகள்). [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

200. 2001 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 அன்றுடன் முடிவடைந்த ஆண்டுக்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (வணிகம்). [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

201. 2001 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 அன்றுடன் முடிவடைந்த ஆண்டுக்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (வருவாய் வரவினங்கள்). [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

202. 2001 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 அன்றுடன் முடிவடைந்த ஆண்டுக்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (சிவில்). [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

203. தமிழ்நாடு அரசின் 2000-2001 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கக் கணக்குகள். [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (ஆங்கிலம்)

204. தமிழ்நாடு அரசின் 2000-2001 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் கணக்குகள். [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (ஆங்கிலம்)

[2002 மே 10

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

446. 2000-2001 ஆம் ஆண்டிற்கான சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் இருபத்தி மூன்றாவது ஆண்டறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)

447. 1999-2000 ஆம் ஆண்டிற்கான பொதுத் துறை நிறுவனங்களின் செயல்பாடு - ஆண்டு ஆய்வு அறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)

448. 7-5-2002 அன்று சட்டமன்றப் பேரவையில் வைக்கப்பெற்ற வணிக வரிகள் துறையின் 1-3-2002 ஆம் நாளிட்ட 16 ஆம் எண் அரசாணையின் பிழை திருத்த அறிவிக்கை. (தமிழ்)

449. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கைமீதான விவாதத்தின்போது மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகள். (2002-2003) (தமிழ்)

450. வருவாய்த் துறை மற்றும் இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள். (2002-2003) (தமிழ்)

451. எரிசக்தித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகள். (2002-2003) (தமிழ், ஆங்கிலம்)

452. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள். (2002-2003) (தமிழ்)

453. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (பத்தாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 200 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டவை)

454. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (பதினொன்றாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 200 வரை)



2002 மே 10]

(உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டவை)

455. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (பன்னிரெண்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 200 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டவை.)

456. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (பதிமூன்றாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 200 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டவை)

457. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (பதினான்காவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 200 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டவை)

458. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (பதினைந்தாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 112 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டவை)

459. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (பதினாறாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 115 வரை)

460. நிதிநிலைக் குறிப்பு பகுதி-1 (2002-2003)

461. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 55-ன்கீழ் அனுமதிக்கப்பெற்ற கவன ஈர்ப்பு அறிவிப்புகளின்மீது பெறப்பட்ட அறிக்கைகளின் பட்டியல். (வரிசை எண்கள் 1 முதல் 43 வரை)

# இணைப்பு-I

*(1 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

**உடுக்குறியிட்ட வினாக்கள் விதி 51-ன்கீழ் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பெற்று அவற்றிற்கு சம்பந்தப்பட்ட அமைச்சர்களால் அளிக்கப்பட்ட விடைகளுடன் அவைமுன் வைக்கப்பெற்றவை. (பட்டியல்கள் 10, 11, 12, 13, 14 மற்றும் 15)**

**பட்டியல் 10***

1—

**குறைபாடுகளை நிவர்த்தி செய்தல்**

**வினா எண் 808—திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரம்பிக்குளம்-ஆளியாறு பாசனத் திட்டத்தில் தற்போது ஒரு மடை விட்டு ஒரு மடை பாசனம் பெற்று வருவதில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். ஒரு மடை விட்டு ஒரு மடை பாசன முறையில் கால்வாய் கடை வரம்பில் ஆங்காங்கே ஏற்படும் பற்றாக்குறைபாடுகள், முடிந்தவரை அவ்வப்போதே சரி செய்யப்படுகின்றன. அரசாணை எண் 196 பொதுப் பணித் துறை நாள் 24-4-2000-ன்படி இப்புதிய பரிட்சார்த்த முறைப் பாசனத்தின் அனுபவத்தின்பேரில் மாறுதல்கள் ஏதேனும் தேவைப்பட்டால் அவை மேற்படி பாசன முறையினை நான்கு அல்லது ஐந்து சுற்றுகள் செயல்படுத்தியபின் மேற்கொள்ளப்படும்.

---

* இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

2—

## அணை கட்டுதல்

**வினா எண் 831—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டத்தில் மேல் அரசம்பட்டு அணை கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது? அதற்காக ஆகும் திட்டச் செலவு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், வேலூர் வட்டம் மேல் அரசம்பட்டு கிராமத்தில் கோயில்மலையாற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு ரூ.25.30 கோடிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. நிதி நிலைமைக்கு ஏற்ப வருமாண்டுகளில் இப்பணி எடுத்துச் செய்யப்படும்.

3—

## தூர்வாருதல்

**வினா எண் 842—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் தொகுதியில் சதுப்பேரி, தொரப்பாடி ஏரிகளைத் தூர்வாரும் பணிகள், எவ்வளவு செலவில், எப்போது தொடங்கப்படும்?



விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

பாலார் வடிநில முறைசாரா ஏரிகள் புனரமைப்பு நீர்வள ஆதார ஒருங்கிணைப்புத் திட்டத்தின்கீழ் வேலூர் தொகுதியில் சதுப்பேரியில் தூர்வாரும் பணிகள் ரூ.68.20 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் தொடங்கி நடைபெற்று வருகின்றன. தொரப்பாடி ஏரியில் தூர்வாரும் பணிகளை மேற்கொள்ள திட்டம் ஏதும் தற்சமயம் பரிசீலனையில் இல்லை.

4—

## மேம்பாலம்

**வினா எண் 975—திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரத்தில் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி அருகில் நெல்லை-பாபநாசம் நெடுஞ்சாலையில் உள்ள ரயில் பாதையில் மேம்பாலம் அமைக்கும் திட்டத்திற்கான செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

5—

## சாலையை அகலப்படுத்துதல்

**வினா எண் 983—திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2002 மே 10

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதியில் தாழையூத்து-கள்ளிமந்தயம் சாலையை அகலப்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

6—

**பாலம் கட்டுதல்**

**வினா எண் 984—திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதி, தாழையூத்து-கள்ளிமந்தயம் சாலையில் பொருளூர் அருகே நல்லதங்காள் ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.



2002 மே 10]

7—

**பாலம் அமைத்தல்**

**வினா எண் 985—திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதி, ஜவ்வாதுபட்டி-சினனக்காம்பட்டி சாலையில் 3/8-ல் அத்தப்பன்பட்டி அருகே பாலம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

8—

**பாலம் கட்டுதல்**

**வினா எண் 986—திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதி, வேம்பட்டி-கூத்தம்பூண்டி சாலையில் அப்பியம்பட்டி அருகே ஒரு பாலம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

[2002 மே 10

9—

சாலை அகலப்படுத்துதல்

**வினா எண் 1777—திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதி, கள்ளிமந்தயம்-கூத்தம்பூண்டி சாலை அகலப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

10—

குடிநீர் வசதி

**வினா எண் 1931—திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் பகுதியில், பாலாறு பகுதியில் பாலாறு வரண்டுவிட்டதால் குடிநீர்ப் பிரச்சினை தீர, காவிரித் தண்ணீரில் இருந்து 25 டி.எம்.சி. தண்ணீரைப் பேத்தமங்கலம் ஏரியில் இருந்து பாலாற்றில் கொண்டுவரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—



2002 மே 10]

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

காவிரியிலிருந்து 25 டி.எம்.சி. தண்ணீர் spare செய்யும் சாத்தியக்கூறுகள் இல்லை. பேத்தமங்கலம் ஏரி கர்நாடக மாநிலத்தில் உள்ளதாலும், அதன் நீர் ஆந்திரப் பகுதியில் பாய்ந்த பிறகே தமிழகத்தில் பெறவேண்டிய நிலை உள்ளதாலும், 25 டி.எம்.சி. தண்ணீர் பெற்றாலும்கூட, முழுமையாகத் தமிழகத்திற்குக் கிடைத்திட வாய்ப்பில்லையாதலால், இத்திட்டத்திற்கான சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.

11—

புதிய அணை

**வினா எண் 1950—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வைகை அணையை ஆழப்படுத்தி, தூர் வாரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) வைகை ஆற்றில் மேலும் ஒரு புதிய அணை கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

(இ) இவ்வினா எழ இடமில்லை.

[2002 மே 10

**12—**

**இணையான ஊதியம்**

**வினா எண் 1957—திரு. க. முருகவேல் ராஜன் :** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறைக் காவலர்களுக்கு, சிறை அதிகாரிகளுக்கும், காவலர்களுக்கும் காவல் துறையினருக்கு வழங்கப்படும் ஊதியத்திற்கு இணையான ஊதியமும், சலுகைகளும் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) மத்திய சிறைச்சாலைகளில் உள்ள சிறைக் காவலர்களுக்கு, காவல் பணி சுற்றும் நேரம் குறைக்க அரசு முன்வருமா.

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) காவல் துறைக் காவலர்களுக்கு இணையாக சிறைக் காவலர்களுக்கு ஊதியம் நிர்ணயம் செய்யும் செயற்குறிப்பு அரசின் நிதித் துறையில் பரிசீலனையில் உள்ளது.

(ஆ தற்போது 8 மணி நேர வேலைத் திட்டம் அனைத்து மத்திய சிறைகளிலும் அறிமுகப்படுத்தப்பட்டு, செயல்பட்டு வருகிறது.

**13—**

**வாய்க்காலை நீட்டித்தல்**

**வினா எண் 2512—திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியம், அத்தியூர் வரை வரும் சாத்தனூர் அணைப் பாசன வாய்க்காலை இளையனார் குப்பம், சீர்ப்பனந்தல், கடம்பூர் மாடாம்பூ வரையில் நீட்டித்து விரிவுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2002 மே 10]

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) இத்திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

(ஆ இவ்வினாவிற்கு இடமில்லை.

**14—**

**வாய்க்கால் செப்பனிடுதல்**

**வினா எண் 3313—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, ஏரிகளுக்குத் தண்ணீர் வரும் வரத்து வாய்க்கால் செப்பனிட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) செஞ்சி தொகுதியில் 2001-2002 ஆம் ஆண்டில் ஏரிகளுக்குத் தண்ணீர் வரும் வரத்து வாய்க்கால் செப்பனிட அரசிடம் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ இவ்வினாவிற்கு இடமில்லை.

**15—**

**சாலை பழுதுபார்த்தல்**

**வினா எண் 3527—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2002 மே 10

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், திசையன்விளை-பெட்டைகுளம் செல்லும் சாலை பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நிதி நெருக்கடி காரணமாக, தற்போது பழுதுபார்க்கும் வாய்ப்பில்லை.

**16—**

**சாலையைப் புதுப்பித்தல்**

**வினா எண் 4563—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி மேலச்செவல் செங்கிகுளம் சாலையை (1/0-7/0 கி.மீ. 6.00) புதுப்பித்து மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**17—**

**சாலையைப் புதுப்பித்தல்**

**வினா எண் 4599—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2002 மே 10]

(அ) சேரன்மகாதேவி தொகுதி முக்கூடல்-சிங்கம்பாறை (0/0-1/8 கி.மீ. 1/8) சாலையைப் புதுப்பித்துப் பராமரிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**18—**

**புறவழிச் சாலை அமைத்தல்**

**வினா எண் 5115—திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம், கல்லிடைக்குறிச்சி நகரப் பஞ்சாயத்து மக்கள் பயன்பெற புறவழிச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**19—**

**இருவழிச் சாலை**

**வினா எண் 7241—திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமயநல்லூர் தொகுதி, மத்திகுளம்-பூலாம்பட்டி கிராமப்புறச் சாலையினை இரண்டு வழிச் சாலையாக மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**20—**

**கலைக் கல்லூரி**

**வினா எண் 78—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரியில் கலைக் கல்லூரி ஏற்படுத்த அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரி பகுதியில் நடப்பாண்டில் புதிய அரசு கலைக் கல்லூரி தொடங்குவதற்கான செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**21—**

**கலைக் கல்லூரி**

**வினா எண் 260—திருமதி கே. பவானி கருணாகரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) அரக்கோணம் தொகுதியில் கலைக் கல்லூரி ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) அரக்கோணம் தொகுதியில் அரசு கலைக் கல்லூரி தொடங்குவதற்கான செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**22—**

**தேசிய நூல்**

**வினா எண் 300—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருக்குறளை தேசிய நூலாக்க அரசு முயற்சி மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திருக்குறளை தேசிய நூலாக அறிவிக்குமாறு அரசு, மத்திய அரசை வலியுறுத்தி வருகிறது.

**23—**

**உள் விளையாட்டு அரங்கம்**

**வினா எண் 310—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2002 மே 10

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் உள் விளையாட்டு அரங்கம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் உள் விளையாட்டு அரங்கம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**24—**

### தமிழ் ஆட்சிமொழி

**வினா எண் 387—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய அரசின் ஆட்சிமொழிகளில் தமிழைச் சேர்க்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) இல்லையெனில், அந்தத் திட்டத்தை அரசு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நிலை எழவில்லை.

**25—**

### கலைக் கல்லூரி

**வினா எண் 401—திரு. எஸ். மகாலிங்கம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2002 மே 10]

அவினாசி தொகுதியில் கலைக் கல்லூரி அமைக்க நடப்பாண்டில் அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

அரசின் நிதி நிலையைக் கருத்தில் கொண்டு நடப்பாண்டில் அவினாசி தொகுதியில் கல்லூரிகள் தொடங்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**26—**

### உயர் விருது

**வினா எண் 495—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்தியாவில் அணுகுண்டு சோதனை கண்ட விஞ்ஞானிகள் திரு. அப்துல் கலாம் மற்றும் திரு. சிதம்பரம் ஆகியோரைப் பாராட்டி உயர் விருது வழங்க தமிழக அரசிடம் கருத்துரு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்த தகவல்களை அரசு தெரிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**27—**

### தொழில் நுட்பப் பயிலகம்

**வினா எண் 533—திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதியில் அரசு தொழில்நுட்பப் பயிலகம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

இல்லை.

**28—**

**மகளிர் கல்லூரி**

**வினா எண் 534—திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதியில் மகளிர் கல்லூரி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

அரசின் நிதி நிலையைக் கருத்தில் கொண்டு நடப்பாண்டில் தருமபுரி தொகுதியில் புதிய அரசு மகளிர் கல்லூரி தொடங்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**29—**

**பொறியியல் கல்லூரி**

**வினா எண் 535—திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரியில் பொறியியல் கல்லூரி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

இல்லை.



**30—**

**புலவர் கல்லூரி**

**வினா எண் 1026—திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடையநல்லூரில் தமிழ்க் (புலவர்) கல்லூரி அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

கடையநல்லூரில் அரசு தமிழ்க் (புலவர்) கல்லூரி அமைப்பதற்கான செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**31—**

**பெண்கள் கலைக் கல்லூரி**

**வினா எண் 1114—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூரில் பெண்கள் கலைக் கல்லூரியை அரசு தொடங்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் நகரில் நடப்பாண்டில் அரசு மகளிர் கலைக் கல்லூரி தொடங்குவதற்கான செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**32—**

**அரசு ஆரம்பப் பள்ளி**

**வினா எண் 1183—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2002 மே 10

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி ஒன்றியம், சீமானூத்து பஞ்சாயத்து பெரிய செம்மேட்டுப்பட்டிக்கு அரசு ஆரம்பப் பள்ளி ஏற்படுத்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி ஒன்றியம், சீமானூத்து பஞ்சாயத்து பெரிய செம்மேட்டுப்பட்டியில் புதிய ஆரம்பப் பள்ளி ஏற்படுத்த கருத்துருக்கள் பெறப்படவில்லை.

**33—**

**உயர்நிலைப் பள்ளியாக்குதல்**

**வினா எண் 1184—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், சக்கரப்பநாயக்கனூர் பஞ்சாயத்து நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், சக்கரப்பநாயக்கனூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த 2001-2002 ஆம் கல்வி ஆண்டில் கருத்துரு பெறப்படவில்லை. வரும் கல்வி ஆண்டில் இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தக் கோரி கருத்துரு பெறப்பட்டால், உரிய தகுதி உள்ளதென உயர்மட்டக் குழுவினால் பரிந்துரைக்கப்படுமானால், உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயரத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க இயலும்.



2002 மே 10]

**34—**

**கூடுதல் கட்டடம்**

**வினா எண் 1235—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, சுஞ்சல் நத்தம் ஊராட்சி, ஏரியூர் அரசு மேல்நிலைப் பள்ளிக்குப் போதுமான கட்டட வசதியில்லாமலிருப்பதால், அங்கு கூடுதல் கட்டடம் கட்ட அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, சுஞ்சல் நத்தம், ஊராட்சி, ஏரியூர் அரசு மேல்நிலைப் பள்ளி, நபார்டு (NABARD-RIDF-VI, PHASE-II) திட்டத்தில் கடன் உதவி பெற்று, கூடுதல் வகுப்பறை கட்டும் திட்டப் பட்டியிலில் சேர்க்கப்பட்டுள்ளது. நபார்டு வங்கியின் கடன் உதவி கிடைக்கப்பெறின், இப்பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்ட ஆவன செய்யப்படும்.

**35—**

**பல்தொழில்நுட்பப் பயிலகம்**

**வினா எண் 1284—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டையில் பல்தொழில்நுட்பப் பயிலகம் (பாலிடெக்னிக்) அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

[2002 மே 10

36—

சுற்றுச்சுவர் கட்டுதல்

**வினா எண் 1285—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, வெட்டன்விடுதியில் இருக்கும் உயர்நிலைப் பள்ளிக்குச் சுற்றுச்சுவர் கட்டிக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, வெட்டன்விடுதியில் இருக்கும் உயர்நிலைப் பள்ளிக்குச் சுற்றுச்சுவர் அமைப்பது சார்பாக, சுற்றுச்சுவர் அமைக்க பொதுவாக அரசு நிதி ஒதுக்கீடு ஏதும் செய்வதில்லை. இருப்பினும், அரசாணை நிலை எண் 581, கல்வித் துறை, நாள் 14-7-1994-ன்படி பசுமை வேலி அமைத்துக் கொள்வதற்கு வனத் துறை அலுவலருடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு முதன்மைக் கல்வி அலுவலருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

37—

உயர்நிலைப் பள்ளியாக்குதல்

**வினா எண் 1403—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் ஒன்றியத்திலுள்ள பெரியதத்தூர் கிராமத்திலுள்ள அரசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் மாவட்டம், ஆண்டிமடம் ஒன்றியம், பெரியதத்தூர் அரசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த 2001-2002 ஆம் கல்வி ஆண்டில் கருத்துரு பெறப்படவில்லை.



2002 மே 10]

வரும் கல்வி ஆண்டில் இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தக் கோரி கருத்துரு பெறப்பட்டால், உரிய தகுதி உள்ளதென உயர்மட்டக் குழுவினால் பரிந்துரைக்கப்படுமானால், உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க இயலும்.

38—

கலையரங்கம்

**வினா எண் 1427—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பழவூர் அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் கே.சி. பழவூர் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகளுக்குக் கலையரங்கம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

பள்ளிகளுக்குக் கலையரங்கம் கட்டிக் கொடுக்க அரசின் நிதி நிலைமை இடம் கொடுக்காது. எனவே, திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பழவூர் அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் கே.சி. பழவூர் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்காகக் கலையரங்கம் கட்ட இயலாது.

39—

சுற்றுப்புறச்சுவர்

**வினா எண் 1428—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பழவூர் அரசு உயர்நிலைப் பள்ளி, கே.சி. பழவூர் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி ஆகியவற்றிற்குச் சுற்றுப்புறச் சுவர் கட்ட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், பழவூர், அரசு உயர்நிலைப் பள்ளி, கே.சி. பழவூர் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி ஆகியவற்றுக்குச் சுற்றுச்சுவர்

அமைப்பது சார்பாக அரசின் நிதி ஒதுக்கீடு ஏதுமில்லை. எனவே, அரசாணை எண்.581, கல்வித் துறை, நாள் 14-7-1994-ன்படி பசுமை வேலி அமைத்துக் கொள்வதற்கு வனத் துறை அலுவலருடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு முதன்மைக் கல்வி அலுவலருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

40—

**ஊதியம் மறுப்பு**

**வினா எண் 1429—திரு. டி. மணி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், சி.எஸ்.ஐ. மேலாண்மைப் பள்ளியில் பணிபுரிந்து வரும் நிரந்தரப் பள்ளி ஆசிரியர்கள் 32 பேருக்கு ஊதியம் மறுக்கப்படுவதன் காரணம் என்ன?

(ஆ) அவர்களுக்கு ஊதியம் வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?"

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள சி.எஸ்.ஐ. கூட்டு மேலாண்மை நிர்வாகப் பிரச்சினை காரணமாக, நிர்வாகத்திலுள்ள இரு பிரிவுகள் சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடர்ந்த பல்வேறு வழக்குகளின் காரணமாக நிர்வாகம் முடங்கியிருந்ததால், மேற்கண்ட நிர்வாகத்தின்கீழ் இயங்கும் பள்ளிகளில் 12 நிரந்தர ஆசிரியர்கள் மற்றும் ஒரு ஆசிரியரல்லாப் பணியாளர் ஆகிய 13 பேருக்கு மட்டும் ஊதியம் வழங்கப்படவில்லை.

(ஆ) மேற்குறிப்பிட்டவர்களுக்கு ஊதியம் வழங்க சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலர்களால் தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



41—

**பெண்கள் உயர்நிலைப் பள்ளி**

**வினா எண் 1431—திருமதி ஆர். சசிகலா:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தொகுதி, வெள்ளியனை கஸ்பாவில் தற்பொழுது பொது அரசு மேல்நிலைப் பள்ளி உள்ளதை பெண்கள் உயர்நிலைப் பள்ளியாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

அரசாணை (நிலை) எண் 96, பள்ளிக் கல்வித் துறை, நாள் 2-7-2002-ல், 2001-2002 ஆம் கல்வி ஆண்டில் கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தொகுதி, வெள்ளியனையில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியைப் பிரித்து அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளியாகச் செயல்பட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. புதிய அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளி 12-7-2001 முதல் இயங்கி வருகிறது.

42—

**உயர்நிலைப் பள்ளியாக்குதல்**

**வினா எண் 1432—திருமதி ஆர். சசிகலா:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணராயபுரம் தொகுதி, வெள்ளியனை ஊராட்சி, ஜல்லிப்பட்டியில் தற்பொழுதுள்ள பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

கிருஷ்ணராயபுரம் தொகுதி, வெள்ளியனை ஊராட்சி, ஜல்லிப்பட்டியில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த கருத்துரு ஏதும் பெறப்படவில்லை. வரும் கல்வி ஆண்டில் இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த கருத்துரு பெறப்பட்டால், உரிய தகுதி உள்ளதென உயர்மட்டக்

[2002 மே 10

குழுவினால் பரிந்துரைக்கப்படுமானால், உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க இயலும்.

43—

**கணினி பாடத் திட்டம்**

**வினா எண் 1685—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதிக்குட்பட்ட இரும்புலிகுறிச்சியில் அரசு மேல்நிலைப் பள்ளியில் கணினி பாடத் திட்டம் தொடங்க அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 2001-2002 ஆம் ஆண்டில் கணினிக் கல்வி அறிமுகப்படுத்தப்படத் தேர்ந்தெடுக்கப்பட்ட 127 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் மேலே குறிப்பிடப்பட்ட பள்ளியும் ஒன்று.

44—

**தொழில்நுட்பப் பயிலகம்.**

**வினா எண் 1687—திரு ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் தொகுதியில் அரசு தொழில்நுட்பப் பயிலகம் அமைய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.



2002 மே 10]

45—

**பருவமுறைத் தேர்வு**

**வினா எண் 2228—திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்நிலை முதலாமாண்டு, இரண்டாமாண்டு மாணவர்களுக்குப் பருவ முறைத் தேர்வுகளை (செமஸ்டர்) நடத்த அரசு பரிசீலனை செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

மேல்நிலைக் கல்வியின் பருவமுறைத் தேர்வுகளை (செமஸ்டர் முறை) கொண்டு வருதல் தேவைதானா என்பது குறித்து, மேல்நிலைக் கல்விக் குழுமம், மேல்நிலைத் தேர்வுக் குழுமம் மற்றும் கல்வியாளர்கள் ஆகியோர் கலந்தாலோசித்து, இது குறித்துப் பரிந்துரைத்தால் அதனை அரசு பரிசீலிக்கும். தற்போது கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை.

46—

**கிராமியக் கலைகள் மேம்பாடு**

**வினா எண் 2250—திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிராமப்புறக் கூத்து, தோற்பாவை, களிநடனம் போன்ற கிராமியக் கலைகள் மேம்பட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

ஆம்.

47—

**நூலகக் கட்டடம்**

**வினா எண் 2272—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2002 மே 10

(அ) ஆண்டிமடம் தொகுதி, வரதராஜன்பேட்டை பேரூராட்சியில் வரதராஜன்பேட்டை, தென்னூர் ஆகிய இடங்களில் நூலகக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆண்டிமடம் தொகுதி, வரதராஜன்பேட்டை பேரூராட்சி, வரதராஜன்பேட்டையில் கிளை நூலகம் ஒன்று வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இந்நூலகத்திற்குக் கட்டடம் கட்ட காலிமனை பெறப்படவில்லை. காலிமனை பெறப்பட்டதும் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும். ஆண்டிமடம் தொகுதி, தென்னூரில் பகுதி நேர நூலகம் ஒன்று இலவசக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. பகுதி நேர நூலகங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**48—**

### நூல் நிலையம்

**வினா எண் 2282—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, காங்குழி கிராமத்திற்கு நூல் நிலையம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆண்டிமடம் தொகுதி, காங்குழி கிராமத்தில் நூல் நிலையம் அமைக்க நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை அவ்வூர் மக்கள் நிறைவு செய்யாததால் அவ்வூரில் நூல் நிலையம் அமைக்க இயலவில்லை.



2002 மே 10]

**49—**

### மேல்நிலைப் பள்ளியாக்குதல்

**வினா எண் 2735—திரு. என். ரெங்கநாதன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, திருவெண்காட்டிலுள்ள அருள்மிகு சுவேதாரண்ய சுவாமி ஆண்கள் மற்றும் பெண்கள் உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பூம்புகார் தொகுதி, திருவெண்காட்டிலுள்ள அருள்மிகு சுவேதாரண்ய சுவாமி ஆண்கள் மற்றும் பெண்கள் உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தக் கோரும் கருத்துரு இவ்வாண்டு பெறப்படவில்லை. அவ்வாறான கருத்துருக்கள் பெறப்படும்போது மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்த உயர்மட்டக் குழுவால் அரசின் நிதிநிலைக்குட்பட்டுப் பரிசீலிக்கப்படும்.

**50—**

### மேல்நிலைப் பள்ளியாக்குதல்

**வினா எண் 2760—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதியிலுள்ள கீழக்குப்பம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதியிலுள்ள கீழக்குப்பம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தக் கோரும்

கருத்துருக்கள் 2001-2002 ஆம் கல்வி ஆண்டில் பெறப்படவில்லை. மேற்படி பள்ளி சார்பாகக் கருத்துருக்கள் பெறப்பட்டு, அதனை அடுத்த கல்வியாண்டில் அரசின் நிதிநிலைக்குட்பட்டு உயர்மட்டக் குழுவால் பரிந்துரைக்கப்பட்டால், மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தக் கருதப்படும்.

51—

## குடிநீர்த் தொட்டி

**வினா எண் 2814—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி அரசு மேல்நிலைப் பள்ளியில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்து மேல்நிலை குடிநீர்த் தொட்டி கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

பூவிருந்தவல்லி, அரசு மேல்நிலைப் பள்ளியில் தற்போது பெற்றோர்—ஆசிரியர் கழகம் மூலம் பள்ளியில் ஆழ்துளைக் கிணறு எடுக்கப்பட்டு தண்ணீர் உள்ளது.

52—

## தொழில்நுட்பப் பயிலகம்

**வினா எண் 2835—திருமதி கே. பவானி கருணாகரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் மற்றும் பனப்பாக்கத்தில் அரசு தொழில் நுட்பப் பயிலகம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.



53—

## நூலகக் கட்டடம்

**வினா எண் 2847—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, நாகம்பந்தல் கிராமத்திற்கு நூலகக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆண்டிமடம் தொகுதி, நாகம்பந்தல் கிராமத்தில் கிளை நூலகம், ஊர்ப்புற நூலகம், பகுதி நேர நூலகம் ஏதும் இல்லாத நிலையில் கட்டடம் கட்டும் பிரச்சினை எழவில்லை. இவ்வூரின் மக்கள் தொகை 2015. இவ்வூர் மக்கள், நூலகம் அமைக்க நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை நிறைவு செய்யாததாலும், விண்ணப்பம் ஏதும் பெறப்படாததாலும் இவ்வூரில் நூலகம் திறக்க இயலவில்லை.

54—

## விகிதத்தை குறைத்தல்

**வினா எண் 3213—திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள ஆரம்பப் பள்ளிகளில் ஆசிரியர், மாணவர் விகிதத்தை 1:40 லிருந்து 1:20 ஆகக் குறைக்க செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். உயர்மட்டக் குழுவின் பரிந்துரைப்படி அரசாணை எண் 525, கல்வி, நாள் 29-12-1997-ல், தமிழகத்திலுள்ள

பள்ளிகளில் ஆசிரியர், மாணவர் விகிதம் 1:40 என நிர்ணயிக்கப்பட்டது. தற்போதைக்கு மேற்கண்ட விகிதம் தொடர்ந்து நடைமுறையில் இருக்கிறது. இந்நிலையில், பல்வேறு ஆசிரியர் சங்கங்கள் மேற்கண்ட ஆசிரியர், மாணவர் விகிதத்தை மாற்றியமைத்து, 1:30; 1:20 என்ற வகைகளில் நிர்ணயிக்க வேண்டுகோள்களை விடுத்து வருகின்றன. எனவே, அரசின் நிதி வசதிக்குட்பட்டு, தற்போதுள்ள ஆசிரியர், மாணவர் விகிதத்தைச் சீரமைக்கவும், ஒவ்வொரு வகுப்புக்கும் ஓர் ஆசிரியர் என்ற நிலையை ஏற்படுத்தவும் முயற்சி மேற்கொள்ளப்படும்.

**55—**

### தனி இயக்ககம்

**வினா எண் 3215—திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கு என்று தனி இயக்ககம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மெட்ரிகுலேஷன் பள்ளிகளுக்குத் தனி இயக்குநரகம் ஏற்படுத்துவதற்கான கருத்துரு ஆராயப்பட்டு வருகிறது.

**56—**

### நல பணித் திட்டம்

**வினா எண் 3224—திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அனைத்து உயர்நிலை-மேல்நிலைப் பள்ளிகளிலும் நாட்டு நலப் பணித் திட்டம், என்.எஸ்.எஸ். மற்றும் என்.சி.சி. போன்ற தேசிய நலப் பயிற்சித் திட்டங்கள் செயல்படுகின்றனவா?



விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

தமிழ்நாட்டில் உள்ள மொத்தம் 3439 மேல்நிலைப் பள்ளிகளில், 1250 மேல்நிலைப் பள்ளிகளில் நாட்டு நலப் பணித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. உயர்நிலைப் பள்ளிகள் அளவில் நாட்டு நலப் பணித் திட்டம் செயல்படுத்தப்படவில்லை.

தமிழ்நாட்டில் 676 உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் தேசிய மாணவர் படை செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இதில் 264 அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளும், 350 அரசு உதவி பெறும் உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளும், 62 தனியார் சுயநிதி உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளும் அடங்கும்.

**57—**

### உயர்நிலைப் பள்ளியாக்குதல்

**வினா எண் 3353—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி ஒன்றியம், திருநின்றவூர் பேரூராட்சியில் உயர்நிலைப் பள்ளி இல்லையென்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், இப்பகுதியில் உயர்நிலைப் பள்ளி ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி ஒன்றியம், திருநின்றவூரில் ஏற்கெனவே இயங்கிவந்த அரசு உயர்நிலைப் பள்ளி 2001-2002 ஆம் ஆண்டு முதல் அரசு மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டு, செயல்பட்டு வருகிறது. எனினும், அப்பகுதியில் இயங்கும் நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திட கருத்துரு ஏதும் பெறப்பட்டு, உயர்மட்டக் குழுவால் பரிந்துரைக்கப்படுமானால், அரசின் நிதிநிலைக்கேற்ப அக்கருத்துரு அரசால் பரிசீலிக்கப்படும்.

**58—**

### சுற்றுச்சுவர்

**வினா எண் 3366—திரு. வெ. ஏழுமலை :** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* செஞ்சி தொகுதி, ராஜாதேசிங்கு அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்குச் சுற்றுச்சுவர் கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

*(அ)* இல்லை.

*(ஆ)* கேள்விக்கு இடமில்லை.

**59—**

### இந்திய ஆட்சிமொழி

**வினா எண் 3428—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தமிழ் மொழியை இந்திய ஆட்சிமொழியில் ஒன்றாகச் சேர்க்க மைய அரசை மாநில அரசு வலியுறுத்தும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், அது குறித்து அரசு தெரிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

*(அ)* ஆம், அரசிடம் உள்ளது.

*(ஆ)* தெரிவிக்கும்.



**60—**

### கணினி படிப்பு

**வினா எண் 3455—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* 2000-2001 ஆம் ஆண்டு சில அரசு மேல்நிலைப் பள்ளிகளில கணினிப் படிப்பு நடைமுறைப்படுத்தப்படாமல் இருப்பது உண்மையா?

*(ஆ)* ஆம் எனில், கணினிப் படிப்பு நடைமுறைப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* தமிழ்நாட்டிலுள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகளில் 1999-2000 ஆம் ஆண்டில் 666 மேல்நிலைப் பள்ளிகளிலும், 2000-2001-ல் 515 அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும், 16 சென்னை மாநகராட்சிப் பள்ளிகளிலும், கணினிக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டு நடைபெற்று வருகிறது. 2001-2002 ஆம் ஆண்டில் 127 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கணினிக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டு வகுப்புகள நடைபெற அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மீதமுள்ள அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளில் படிப்படியாகக் கணினிக் கல்வி அரசின் நிதி நிலைக்கு ஏற்ப அறிமுகப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**61—**

### துணை இயக்குநர் அலுவலகம்

**வினா எண் 3466—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாவட்டந்தோறும் மண்டலத் தேர்வுத் துணை இயக்குநர் அலுவலகம் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

மாவட்டந்தோறும் மண்டலத் தேர்வுத் துணை இயக்குநர் அலுவலகம் ஏற்படுத்துவது என்பது அதிக நிதிச் செலவினை அரசுக்கு ஏற்படுத்தும்.

தற்பொழுது நிலவி வரும் கடுமையான நிதிப் பற்றாக்குறையினாலும், புதிய பணியிடங்கள் ஏதும் ஏற்படுத்தத் தடை இருப்பதாலும் இத்தகைய கருத்துருக்களைப் பரிசீலிக்க வாய்ப்பில்லை.

**62—**

**பெண்கள் மேல்நிலைப் பள்ளி**

**வினா எண் 3658—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி நகரத்தில் அரசு பெண்கள் மேல்நிலைப பள்ளி தொடங்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி நகரத்தில் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி தொடங்க இக்கல்வியாண்டில் கருத்துருக்கள் ஏதும் பெறப்படவில்லை. மேற்கண்ட பள்ளி குறித்து, வரும் கல்வியாண்டில் கருத்துரு பெறப்பட்டு உயர்மட்டக் குழுவால் பரிந்துரைக்கப்பட்டால், அரசின் நிதிநிலைக்குட்பட்டு மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தக் கருதப்படும்.

**63—**

**மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துதல்**

**வினா எண் 3661—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசலில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்திட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசலில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்திடக் கோரும் கருத்துருக்கள் 2001-2002 ஆம் கல்வியாண்டில் பெறப்படவில்லை. மேற்கண்ட பள்ளி குறித்து வரும் கல்வியாண்டில் கருத்துரு பெறப்பட்டால், உயர்மட்டக் குழுவால் பரிசீலிக்கப்பட்டு, அரசின் நிதிநிலைக்குட்பட்டு, மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தக் கருதப்படும்.

**64—**

**மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துதல்**

**வினா எண் 3753—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை நகராட்சி, காமராஜபுரம் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

புதுக்கோட்டை நகராட்சி, காமராஜபுரம் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தக் கோரும் கருத்துருக்கள் 2001-2002 ஆம் கல்வி ஆண்டில் பெறப்படவில்லை. மேற்படி பள்ளி சார்பாகக் கருத்துருக்கள் பெறப்பட்டால், அதனை அடுத்த கல்வியாண்டில் அரசின் நிதிநிலைக்குட்பட்டு உயர்மட்டக் குழுவால் பரிசீலிக்கப்பட்டு, மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தக் கருதப்படும்.

**65—**

**மேல்நிலைப் பள்ளியாக்குதல்**

**வினா எண் 3758—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2002 மே 10

(அ) புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதியில் இருக்கும் இராபூசல் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2001-2002 ஆம் கல்வியாண்டில் 125 அரசு/நகராட்சி/மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை, மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்கண்ட பள்ளி குறித்து, வரும் கல்வியாண்டில் கருத்துரு பெறப்பட்டால், உயர்மட்டக் குழுவால் பரிசீலிக்கப்பட்டு, அரசின் நிதிநிலைக்குட்பட்டு, மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தக் கருதப்படும்.

**66—**

**மேல்நிலைப் பள்ளியாக்குதல்**

**வினா எண் 3891—திரு. வெ. ஏழுமலை :** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, ஆவணிப்பூர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செஞ்சி தொகுதி, ஆவணிப்பூர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தக் கோரும் கருத்துருக்கள், விழுப்புரம் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரிடமிருந்து தாமதமாகப் பெறப்பட்டது. எனவே, மேற்படி கருத்துரு 2001-2002 ஆம் கல்வியாண்டில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. மேற்கண்ட பள்ளி சார்பான கருத்துரு அடுத்த கல்வியாண்டில் உயர்மட்டக் குழுவால் பரிசீலிக்கப்பட்டு, அரசின் நிதிநிலைக்குட்பட்டு, மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தக் கருதப்படும்.



2002 மே 10]

**67—**

**மேல்நிலை பள்ளியாக்குதல்**

**வினா எண் 4172—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி ஒன்றியம், பூலாம்பட்டியிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2001-2002 ஆம் கல்வியாண்டில் 125 அரசு/நகராட்சி/மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்கண்ட பள்ளி குறித்து வரும் கல்வியாண்டில் கருத்துரு பெறப்பட்டால், உயர்மட்டக் குழுவால் பரிசீலிக்கப்பட்டு, அரசின் நிதிநிலைக்குட்பட்டு, மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தக் கருதப்படும்.

**68—**

**மேல்நிலைப் பள்ளியாக்குதல்**

**வினா எண் 4173—திரு. ஐ. கணேசன் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி ஒன்றியம், சித்தூர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2001-2002 ஆம் கல்வியாண்டில் 125 அரசு/நகராட்சி/மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்கண்ட பள்ளி குறித்து

வரும் கல்வியாண்டில் கருத்துரு பெறப்பட்டால், உயர்மட்டக் குழுவால் பரிசீலிக்கப்பட்டு, அரசின் நிதிநிலைக்குட்பட்டு மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தக் கருதப்படும்.

**69—**

**உயர்நிலைப் பள்ளியாக்குதல்**

**வினா எண் 4192—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியிலுள்ள திருநகரி கிராம நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்ற அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2001-2002 ஆம் கல்வியாண்டில் 100 அரசு/ஊராட்சி ஒன்றிய/நகராட்சி/மாநகராட்சி நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தியும், அரசு மேல்நிலைப் பள்ளிகளிலிருந்து மகளிரைப் பிரித்து மகளிர் உயர்நிலைப் பள்ளிகளாகத் தொடங்கவும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேற்கண்ட பள்ளி குறித்து, வரும் கல்வியாண்டில் கருத்துரு பெறப்பட்டு, உயர்மட்டக் குழுவால் பரிந்துரைக்கப்படுமானால், அரசின் நிதிநிலைக்குட்பட்டு, உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தக் கருதப்படும்.

**70—**

**உயர்நிலைப் பள்ளியாக உயர்த்துதல்**

**வினா எண் 4193—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியிலுள்ள எடமணல் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்ற அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2001-2002 ஆம் கல்வியாண்டில் 100 அரசு/ஊராட்சி ஒன்றிய/நகராட்சி/மாநகராட்சி நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தியும், அரசு மேல்நிலைப் பள்ளிகளிலிருந்து மகளிரைப் பிரித்து மகளிர் உயர்நிலைப் பள்ளிகளாகத் தொடங்கவும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்கண்ட பள்ளி குறித்து வரும் கல்வியாண்டில் கருத்துரு பெறப்பட்டு, உயர்மட்டக் குழுவால் பரிந்துரைக்கப்படுமானால், அரசின் நிதிநிலைக்குட்பட்டு, உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தக் கருதப்படும்.

**71—**

**உயர்நிலைப் பள்ளியாக்குதல்**

**வினா எண் 5075—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பெத்தநாய்க்கன்குப்பம் கிராமத்தில் உள்ள ஆரம்பப் பள்ளி உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நடுநிலைப் பள்ளிகளை மட்டுமே உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த இயலும், ஆரம்பப் பள்ளியை நேரடியாக உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த விதிகளில் இடமில்லை. எனவே, பண்ருட்டி தொகுதி, பெத்தநாயக்கன்குப்பம் கிராமத்தில் உள்ள ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திய பின்னரே உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலும்.

72—

### மேல்நிலைப் பள்ளியாக்குதல்

**வினா எண் 5389—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, மருதுமுத்தூர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2001-2002 ஆம் கல்வியாண்டில் 125 அரசு/நகராட்சி/மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்கண்ட பள்ளி குறித்து வரும் கல்வியாண்டில் கருத்துரு பெறப்பட்டால், உயர்மட்டக் குழுவால் பரிசீலிக்கப்பட்டு, அரசின் நிதிநிலைக்குட்பட்டு, மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தக் கருதப்படும்.

73—

### பயிற்சி நிலையம் பராமரித்தல்

**வினா எண் 5462—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், செங்கற்பட்டு வட்டம், ஆலத்தூரிலுள்ள சாரண, சாரணிய மாநிலப் பயிற்சி நிலையம் சரியாகப் பராமரிக்கப்படாமல் உள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) அதில் எத்தனை பேர் பணிபுரிகிறார்கள்?

(இ) ஆண்டுக்கு எவ்வளவு பராமரிப்பு மற்றும் பயிற்சிக்குச் செலவினங்கள் ஒதுக்கப்படுகின்றன?



விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) ஆண்டுதோறும் உரிய பராமரிப்புப் பணிகள் தேவையான நேரங்களில் செய்யப்பட்டு வந்துள்ளன. அண்மையில்கூட மாநில அளவிலான இரண்டு பயிற்சிகள் நடைபெற்றுள்ளன.

(ஆ) காவலர் ஒருவர் மட்டுமே பணிபுரிகிறார்.

(இ) குறிப்பிட்ட தொகை ஆண்டுதோறும் நிரந்தரமாக ஒதுக்கப்படுவதில்லை. அவ்வப்போது எழும் பராமரிப்புப் பணிகளுக்காக முகாம் காலங்களில், முகாம் நேரத்தில் பெறப்படும் தொகையிலிருந்து செலவிடப்படுகிறது.

74—

### மேல்நிலைப் பள்ளி துவக்குதல்

**வினா எண் 5478—திரு. மா.ப. ரோகிணி (என்கிற) கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரூர் தொகுதிக்குட்பட்ட குறிச்சி பேரூராட்சியில் மேல்நிலைப் பள்ளி தொடங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

பேரூர் தொகுதிக்குட்பட்ட குறிச்சி பேரூராட்சி அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தக் கோரும் கருத்துருக்கள் 2001-2002 ஆம் கல்வியாண்டில் பெறப்படவில்லை. மேற்படி பள்ளி சார்பாகக் கருத்துருக்கள் பெறப்பட்டால், அதனை அடுத்த கல்வியாண்டில் அரசின் நிதிநிலைக்குட்பட்டு, உயர்மட்டக் குழுவால் மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தக் கருதப்படும்.

75—

### மகளிர் கலைக்கல்லூரி

**வினா எண் 5527—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2002 மே 10

(அ) முசிறியில் அரசு மகளிர் கலைக் கல்லூரி அமைத்துத்தர அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) அரசின் தற்போதைய நிதிநிலை காரணமாகப் புதிய அரசு கலைக் கல்லூரிகளைத் துவக்குவதில்லை என அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது. எனவே, முசிறியில் அரசு மகளிர் கலைக் கல்லூரி ஆரம்பிக்க வாய்ப்பு இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**76—**

**பொது நூலகம்**

**வினா எண் 6346—திரு. வி.ஆர். ராஜாங்கம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டி ஒன்றியம், கச்சிராயிருப்பு கிராமத்தில் பொது நூலகம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டி ஒன்றியம், கச்சிராயிருப்பு கிராமத்தில் நூலகம் திறக்க வேண்டி விண்ணப்பம் பெறப்படாததாலும், ஒரு நூலகம் அமைக்க நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை அவ்வூர் மக்கள் நிறைவு செய்யாததாலும் அவ்விடத்தில் நூலகம் அமைக்க இயலவில்லை.

**77—**

**மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துதல்**

**வினா எண் 6349—திரு. வி.ஆர். ராஜாங்கம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2002 மே 10]

சோழவந்தான் தொகுதி, மணியஞ்சி கிராமத்திலுள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

2001-2002 ஆம் கல்வியாண்டில் 125 அரசு/நகராட்சி/மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்கண்ட பள்ளி குறித்து வரும் கல்வியாண்டில் கருத்துரு பெறப்பட்டால், உயர்மட்டக் குழுவால் பரிசீலிக்கப்பட்டு, அரசின் நிதிநிலைக்குட்பட்டு, மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தக் கருதப்படும்.

**78—**

**மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துதல்**

**வினா எண் 6350—திரு. வி.ஆர். ராஜாங்கம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூர் ஒன்றியம், சேந்தமங்கலத்தில் நடுநிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூர் ஒன்றியம், சேந்தமங்கலத்தில் உள்ள நடுநிலைப் பள்ளியை நேரிடையாக மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த வழிவகை இல்லை. அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள நெறிமுறைகளைப் பூர்த்தி செய்யும் உயர்நிலைப் பள்ளிகள் மட்டுமே உயர்மட்டக் குழுவால் மேல்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்தக் கருதப்படும்.

**79—**

**கையகப்படுத்தப்பட்ட நிலம்**

**வினா எண் 6661—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் 2-வது தொகுதி மிட்டா அய்யம்பெருமாம்பட்டி கிராமத்தில் அரசினர் மகளிர் கலைக் கல்லூரி கட்டுவதற்கு கையகப்படுத்தப்பட்ட நிலம் எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

சேலம் 2-வது தொகுதி மிட்டா அய்யம்பெருமாம்பட்டி கிராமத்தில் சேலம்-8 அரசினர் மகளிர் கலைக் கல்லூரிக்கென கையகப்படுத்தப்பட்ட நிலத்தின் பரப்பளவு 14.17 ஏக்கர். இதில் தொழிற்பயிற்சி நிலையத்திலிருந்து பெறப்பட்ட நிலமும் அடங்கும்.

**80—**

## மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துதல்

**வினா எண் 6710—திரு. எம். ராம்குமார் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் தொகுதியில் திருப்புறம்பியம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

2001-2002 ஆம் கல்வியாண்டில் 125 அரசு/நகராட்சி/மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்கண்ட பள்ளி குறித்து வரும் கல்வியாண்டில் கருத்துரு பெறப்பட்டு, உயர்மட்டக் குழுவால் பரிந்துரைக்கப்பட்டால், அரசின் நிதிநிலைக்குட்பட்டு, மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தக் கருதப்படும்.

**81—**

## சுற்றுச்சுவர்

**வினா எண் 6754—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரத்தில் உள்ள மகளிர் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு உடனடியாகச் சுற்றுச்சுவர் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரத்தில் உள்ள மகளிர் அரசு உயர்நிலைப் பள்ளிக்குச் சுற்றுச்சுவர் அமைப்பது தொடர்பாக, அரசுப் பள்ளிகளுக்குச் சுற்றுச்சுவர் அமைப்பது அரசின் கொள்கையல்ல. எனவே, அரசாணை எண் 581, கல்வித் துறை, நாள் 14-7-1994 படி பசுமை வேலி அமைப்பது சார்பாக வனத் துறை அலுவலருடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு முதன்மைக் கல்வி அலுவலருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**82—**

## பழுதுபார்த்தல்

**வினா எண் 6755—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் கே.ஏ. நாச்சியப்பா அரசினர் மேல்நிலைப் பள்ளி வகுப்பறைகளில் மிகவும் பழுதடைந்துள்ளவைகளை இந்நிதியாண்டில் பழுதுபார்க்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் கே.ஏ. நாச்சியப்பா அரசு மேல்நிலைப் பள்ளி வகுப்பறைகளில் மிகவும் பழுதடைந்துள்ளவைகளைச் சீர் செய்ய 2001-2002ஆம் நிதி ஆண்டில் சிறப்பு மராமத்துப் பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு பொதுப் பணித் துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி பள்ளியின் வகுப்பறை எண் 21, 22 மற்றும் 20, சிறப்பு மராமத்துப் பணிக்கு ரூ.90,000/- மதிப்பீட்டிலும், இயற்பியல் ஆய்வுக் கூடம், நூலகம் மற்றும் வராண்டா சிறப்பு மராமத்துப் பணிக்கு ரூ.75,000/- மதிப்பீட்டிலும், திட்ட வருடாந்திரப் பராமரிப்பிற்கு ரூ. 33,000/- மதிப்பீட்டிலும் திட்ட மதிப்பீடுகள் அனுப்பப்பட்டுள்ளன. நிதி வசதிக் கையிருப்பிற்கேற்ப பணிகளை தொடங்கப்பெறும்.

83—

### பணியிடங்கள் நிரப்புதல்

**வினா எண் 6997—திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னைப் பல்கலைக்கழகத்தில் இடஒதுக்கீட்டை அமலாக்காமல் பணியிடங்கள் நிரப்பப்படுவதைத் தடுத்து இடஒதுக்கீட்டின் அடிப்படையில் பணியிடங்கள் நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

சென்னைப் பல்கலைக்கழகத்தில் காலி ஏற்படும் விரிவுரையாளர் பதவி இடங்கள் சார்பாக ஒவ்வொரு துறையையும் ஓர் அலகாகக் கொண்டு நிரப்பியதில், வகுப்புவாரி மற்றும் இடஒதுக்கீடு விதிகளை அரசு ஆணைகளில் உள்ளவாறு தவறாது கடைப்பிடித்து, பணியிடங்கள் நிரப்பப்படுகின்றன. இந்நிலையில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் இடஒதுக்கீடு அமலாக்கப்படவில்லை என்ற நிலை எழவில்லை.

84—

### மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துதல்

**வினா எண் 7185—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பழவூர் அரசு உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்படுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

2001-2002ஆம் கல்வியாண்டில் 125 அரசு, நகராட்சி/மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்கண்ட பள்ளி குறித்து, வரும் கல்வியாண்டில் கருத்துரு பெறப்பட்டால், உயர்மட்டக் குழுவால் பரிசீலிக்கப்பட்டு, அரசின் நிதிநிலைக்குட்பட்டு, மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தக் கருதப்படும்.



85—

### மகளிர் கல்லூரி

**வினா எண் 7638—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதியில் மகளிர் கல்லூரி ஆரம்பிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) தாம்பரம் தொகுதியில் மகளிர் கல்லூரி ஆரம்பிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழ வாய்ப்பில்லை.

86—

### மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துதல்

**வினா எண் 7639—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, உள்ளகரம், புழுதிவாக்கம் அரசினர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தும் திட்டம், அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2001-2002 ஆம் கல்வியாண்டில் 125 அரசு/நகராட்சி/மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்கண்ட பள்ளி குறித்து வரும் கல்வியாண்டில் கருத்துரு பெறப்பட்டு, உயர்மட்டக் குழுவால்

[2002 மே 10

பரிந்துரைக்கப்பட்டால், அரசின் நிதிநிலைக்குட்பட்டு, மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தக் கருதப்படும்.

87—

**கலை, அறிவியல் கல்லூரி**

**வினா எண் 7980—திரு. கே.எஸ். பழனிசாமி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதியில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆரம்பிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா? கல்லூரி துவங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

அரசின் தற்போதைய நிதிநிலைமையின் காரணமாகப் புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் துவக்குவதில்லை என அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது. எனவே, ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதியில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆரம்பிக்கும் வாய்ப்பு இல்லை.

88—

**பள்ளி தொடங்குதல்**

**வினா எண் 8852—திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராணிப்பேட்டை நகரத்தில் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி தொடங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

2001-2002 ஆம் கல்வியாண்டில் 125 அரசு/நகராட்சி/மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தி அரசாணை (நிலை) எண் 95, பள்ளிக் கல்வி, நாள் 2-7-2001-ல் ஆணை



2002 மே 10]

வெளியிடப்பட்டது. வரும் கல்வியாண்டில் ராணிப்பேட்டை நகரத்தில் மகளிர் மேல்நிலைப் பள்ளி துவக்கக் கருத்துருக்கள் பெறப்பட்டால், அரசின் நிதிநிலைக்குட்பட்டு, மேல்நிலைப் பள்ளி துவக்க உயர்மட்டக் குழுவால் பரிசீலிக்கப்படும்.

89—

**துணைவேந்தர் நியமனம்**

**வினா எண் 8911—திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துணைவேந்தர்கள் நியமனம் செய்யப்படாத பல்கலைக்கழகங்கள் எத்தனை?

(ஆ) உடனடியாக நியமனம் செய்யும் திட்டம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) உயர் கல்வித் துறையின்கீழ் உள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கும் தற்போது துணைவேந்தர்கள் நியமனம் செய்யப்பட்டுவிட்டனர்.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

90—

**பொது நூலகம்**

**வினா எண் 9005—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியம், வடக்கு அரியநாயகிபுரத்தில் பொது நூலகம் நிறுவுவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன் மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியம் வடக்கு அரியநாயகிபுரத்தில் நூலகம் அமைக்க வேண்டி விண்ணப்பம் பெறப்படாததாலும், ஒரு நூலகம் அமைக்க நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை அவ்வூர் மக்கள் நிறைவு செய்யாததாலும் அவ்விடத்தில் நூலகம் அமைக்க இயலவில்லை.

**91—**

**கலைக் கல்லூரி**

**வினா எண் 9102-திரு சி. சண்முகம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி தொகுதியில் கலைக் கல்லூரி திறக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை-

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை கல்வி அமைச்சர்:**

(அ) அரசின் தற்போதைய நிதிநிலைமையின் காரணமாக திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி தொகுதியில் அரசு கலைக் கல்லூரி திறப்பதற்கான வாய்ப்புகள் ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**92—**

**மகளிர் மேல்நிலைப் பள்ளி**

**வினா எண் 9183—திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பனமரத்துப்பட்டி தொகுதி, மல்லூரில் தனியாக மகளிர் மேல்நிலைப் பள்ளி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?



(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2001-2002 ஆம் கல்வியாண்டில் 125 அரசு/நகராட்சி/மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்கண்ட பள்ளி குறித்து வரும் கல்வியாண்டில் கருத்துரு பெறப்பட்டால், உயர்மட்டக் குழுவால் பரிசீலிக்கப்பட்டு, அரசின் நிதிநிலைக்குட்பட்டு, மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தக் கருதப்படும்.

**93—**

**மேல்நிலைப் பள்ளியாக்குதல்**

**வினா எண் 9185—திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பனமரத்துப்பட்டி தொகுதி, திருமனூர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது உயர்த்தப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2001-2002 ஆம் கல்வியாண்டில் 125 அரசு/நகராட்சி/மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்கண்ட பள்ளி குறித்து வரும் கல்வியாண்டில் கருத்துரு பெறப்பட்டு, உயர்மட்டக் குழுவால் பரிந்துரைக்கப்பட்டால், அரசின் நிதிநிலைக்குட்பட்டு, மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தக் கருதப்படும்.

[2002 மே 10

94—

**பி.எஸ்ஸி கல்வி**

**வினா எண் 10090—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு, இராஜேஸ்வரி வேதாசலம் அரசு கலைக் கல்லூரியில் புதிய பி.எஸ்.சி. கணினி அறிவியல் பாடத்தை அரசு இவ்வாண்டு கொண்டு வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

செங்கல்பட்டு, இராஜேஸ்வரி வேதாசலம் அரசு கலைக் கல்லூரியில் புதிய பி.எஸ்.சி. கணினி அறிவியல் பாடத்தை அரசின் தற்போதைய நிதிநிலை காரணமாக இவ்வாண்டு கொண்டு வர இயலவில்லை.

95—

**நூல் நிலையம்**

**வினா எண் 10256—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சேந்தங்குடி ஊராட்சியில் நூல் நிலையம் அமைத்துக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, சேந்தங்குடி ஊராட்சியில் ஒரு நூலகம் அமைக்க நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை அவ்வூர் மக்கள் நிறைவு செய்யாததால் அவ்விடத்தில் நூலகம் அமைக்க இயலவில்லை.



2002 மே 10]

96—

**பெயர் மாற்றம்**

**வினா எண் 10308—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரையில், மதுரை காமராசர் பல்கலைக்கழகம் என்று இருப்பது போல, சேலத்திலுள்ள பெரியார் பல்கலைக்கழகத்தை, சேலம் பெரியார் பல்கலைக்கழகம் என்று பெயர் மாற்றம் செய்திட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

இல்லை.

97—

**தொழில்நுட்பப் பயிலகம்**

**வினா எண் 10635—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, ஓமலூர் பேருந்து நிலையம் கிழக்குப்புறமுள்ள காலி நிலத்தில் புதிதாக அரசு தொழில்நுட்பப் பயிலகம் துவங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

98—

**கோளரங்கம்**

**வினா எண் 12005—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலியில் அறிவியல் கோளரங்கம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலியில் அறிவியல் கோளரங்கம் அமைக்கத் தற்போது அரசிடம் செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

**99—**

**பதவி உயர்வு**

**வினா எண் 12418—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு மாவட்டக் கல்வி அலுவலர், முதன்மைக் கல்வி அலுவலர் ஆகிய பணிகளுக்குப் பதவி உயர்வு வழங்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதுபற்றிய விவரங்களை அரசு தெரிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மாவட்டக் கல்வி அலுவலர் பணியிடத்திற்கான பதவி உயர்வு, உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் ஆகிய இருவருக்குமிடையே 2:1 என்ற விகிதாச்சாரத்தில் அளிக்கப்படுகிறது. மாவட்டக் கல்வி அலுவலர்களாகப் பணியாற்றுபவர்களின் முந்துரிமை (Seniority) அடிப்படையில் முதன்மைக் கல்வி அலுவலராகப் பதவி உயர்வு வழங்கப்படுகிறது.



**100—**

**நிறுவனத்தின் கிளை**

**வினா எண் 12421—திரு ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலுள்ள உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் கிளை ஒன்றை சேலத்தில் துவக்க அரசு முன்வருமா?

(ஆ) அதன் விவரம் அரசு தெரிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) சேலத்தில் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் கிளை துவங்கும் கருத்துரு ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) இக்கேள்விக்குப் பதில் எழவில்லை.

**101—**

**மேல்நிலைப் பள்ளியாக்குதல்**

**வினா எண் 12686—திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொங்கலூர் தொகுதியில் சுல்தான்பேட்டை ஒன்றியத்திற்கு உட்பட்ட செஞ்சேரி மலைப் பகுதியில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக அரசு அறிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

2001-2002 ஆம் கல்வியாண்டில் 125 அரசு/நகராட்சி/மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. பொங்கலூர் தொகுதி, செஞ்சேரி மலைப் பகுதியிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த, வரும் கல்வியாண்டில் கருத்துரு பெறப்பட்டால் உயர்மட்டக் குழுவால் பரிசீலிக்கப்பட்டு, அரசின் நிதிநிலைக்குட்பட்டு, மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தக் கருதப்படும்.

[2002 மே 10

102—

## விளையாட்டு அரங்கம்

**வினா எண் 13529—திரு மா. இராஜசேகர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராஜபாளையத்தில் விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் வகையில் விளையாட்டு அரங்கம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

இராஜபாளையத்தில் விளையாட்டு அரங்கம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

103—

## மேல்நிலைப் பள்ளியாக்குதல்

**வினா எண் 13927—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பத்திரக்கோட்டை கிராமத்திலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2001-2002 ஆம் கல்வியாண்டில் 125 அரசு/நகராட்சி/மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. பண்ருட்டி தொகுதி, பத்திரக்கோட்டை கிராமத்திலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த, வரும் கல்வியாண்டில் கருத்துரு பெறப்பட்டால் உயர்மட்டக் குழுவால் பரிசீலிக்கப்பட்டு அரசின் நிதிநிலைக்குட்பட்டு, மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தக் கருதப்படும்.



2002 மே 10]

104—

## மேல்நிலைப் பள்ளியாக்குதல்

**வினா எண் 16433—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, மருதாடு ஊராட்சியிலுள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

2001-2002 ஆம் கல்வியாண்டில் 125 அரசு/நகராட்சி/மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. வந்தவாசி தொகுதி, மருதாடு ஊராட்சியிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த, வரும் கல்வியாண்டில் கருத்துரு பெறப்பட்டால் உயர்மட்டக் குழுவால் பரிசீலிக்கப்பட்டு, அரசின் நிதிநிலைக்குட்பட்டு, மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தக் கருதப்படும்.

105—

## எய்ட்ஸ் விழிப்புணர்வு

**வினா எண் 149—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் எய்ட்ஸ் நோய் (AIDS) பற்றிய விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்த அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

(ஆ) மத்திய அரசு, மாநில அரசுக்கு அளித்த உதவிகள் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம் தமிழகத்தில் எய்ட்ஸ் நோய் பற்றிய விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்த முனைப்புடன் பொது ஜனத் தொடர்பு/பத்திரிகை/தொலைக்காட்சி/சுவர் விளம்பரங்கள்/விழிப்புணர்வுக் கூட்டங்கள் போன்ற பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

(ஆ) மத்திய அரசு, தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டு நிறுவனத்தின் மூலமாக தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கத்திற்குக் கீழ்க்கண்டவாறு நிதி உதவி வழங்கியுள்ளது:

| வ. எண் | வருடம் | நிதி ஒதுக்கீடு | செலவழிக்கப்பட்ட தொகை |
|---|---|---|---|
| 1. | 1994-95 | ரூ. 277.44 இலட்சம் | ரூ. 277.79 இலட்சம் |
| 2. | 1995-96 | ரூ. 650.00 இலட்சம் | ரூ. 679.73 இலட்சம் |
| 3. | 1996-97 | ரூ. 1743.94 இலட்சம் | ரூ. 1297.80 இலட்சம் |
| 4. | 1997-98 | ரூ. 2000.00 இலட்சம் | ரூ. 1722.59 இலட்சம் |
| 5. | 1998-99 | ரூ. 1595.13. இலட்சம் | ரூ. 1460.77 இலட்சம் |
| 6. | 1999-2000 | ரூ. 1571.13 இலட்சம் | ரூ. 1400.13 இலட்சம் |
| 7. | 2000-2001 | ரூ. 1000.00 இலட்சம் | ரூ. 769.15 இலட்சம் |

**106—**

**யானைக்கால் நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் விவரம்**

**வினா எண் 156—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் யானைக்கால் வியாதியால் எவ்வளவு பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அரசு கண்டறிந்துள்ளது?

(ஆ) இந்த நோய்த் தடுப்புத் திட்டத்திற்கு மத்திய அரசு தமிழ் நாட்டிற்கு ஒதுக்கிய தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) 35537 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.

(ஆ) மத்திய அரசு தமிழ்நாட்டிற்கு 2000-2001-ல் யானைக்கால் நோய்த் தடுப்புத் திட்டத்திற்கு ரூ.1.76 கோடி மதிப்பில் மருந்துப் பொருட்களையும், ரூ.88.54 இலட்சம் மதிப்பிற்கு புழுக்கொல்லியினையும் (நகர்ப்புற மலேரியா திட்டத்திற்கும் சேர்த்து) வழங்கியுள்ளது.



**107—**

**புதிய ஆம்புலன்ஸ்**

**வினா எண் 448—திரு. வை. சிவபுண்ணியம் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி அரசு தலைமை மருத்துவமனைக்குப் புதிய ஆம்புலன்ஸ் வண்டி உடனடியாக வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மன்னார்குடியில் உள்ள அரசு மருத்துவமனையில் தற்சமயம் ஒரு ஆம்புலன்ஸ் வண்டியும், குடும்ப நலத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஒரு ஊர்தியும் நல்ல முறையில் சேவை புரிந்து கொண்டிருக்கின்றன. இம்மருத்துவமனைக்குத் தற்பொழுது கூடுதலாக ஆம்புலன்ஸ் வழங்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**108—**

**இதய நோய் சிகிச்சைப் பிரிவு**

**வினா எண் 449—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி அரசு தலைமை மருத்துவமனையில் இதய நோய் சிகிச்சைப் பிரிவு ஒன்று தொடங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மன்னார்குடி, அரசு மருத்துவமனையில் இதய நோய் சிகிச்சைப் பிரிவு தொடங்குவது குறித்த கருத்துரு எதுவும் தற்போது அரசிடம் இல்லை. அரசின் நிதிநிலைமை சீரடையும்பொழுது,

[2002 மே 10

மன்னார்குடி அரசு மருத்துவமனையில் இதய நோய் சிகிச்சைப் பிரிவு தொடங்குவது குறித்து அரசு கவனத்தில் கொள்ளும்.

**109—**

**மருத்துவமனைக்கு அனைத்து வசதிகள்**

**வினா எண் 450—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி தொகுதிக்குட்பட்ட மிகப் பெரிய ஊராட்சியான பரவாக்கோட்டையில் அரசு மருத்துவமனையினை படுக்கை வசதிகள், மருத்துவர், மருத்துவ வசதிகளுடன் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி ஊராட்சி ஒன்றியம், பரவாக்கோட்டை கிராமத்தில் துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. இதனை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றுதல் மற்றும் படுக்கை வசதிகளுடன் மருத்துவ நிலையமாக அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

**110—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 451—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், வடபாதிமங்கலம் ஊராட்சியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2002 மே 10]

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி ஊராட்சி ஒன்றியம், வடபாதிமங்கலம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**111—**

**பல் மருத்துவக் கல்லூரி**

**வினா எண் 465—திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா?

தருமபுரியில் அரசு பல் மருத்துவக் கல்லூரி அமைத்திட நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

தருமபுரியில் அரசு பல் மருத்துவக் கல்லூரி அமைத்திடும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

**112—**

**மருத்துவமனைகளின் விவரம்**

**வினா எண் 474—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் இயங்கி வரும் அரசு மருத்துவமனைகள் எத்தனை?

(ஆ) அதில் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் எத்தனை?

(இ) அதற்கு 2000-2001-ல் செலவிடப்பட்ட மருந்துக்கான செலவுத் தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் மொத்தம் 301 அரசு மருத்துவமனைகள்/ நிலையங்கள் இயங்கி வருகின்றன.

(ஆ) அதில் 12 மருத்துவமனைகள் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளாகும்.

(இ) இம்மருத்துவமனைகளுக்கு 2000-2001 ஆம் ஆண்டில் மருந்துக்காக சுமார் ரூ.74 கோடி செலவிடப்பட்டுள்ளது.

**112—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 490—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கஸ்தூரிரெங்கபுரம், துலுக்கர்பட்டி ஆகிய இடங்களில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் ஊராட்சி ஒன்றியம், கஸ்தூரிரெங்கபுரம் மற்றும் வள்ளியூர் ஊராட்சி ஒன்றியம், துலுக்கர்பட்டி ஆகிய கிராமங்களில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**114—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 491—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கூட்டப்புளி, பெருமணல், இடிந்தகரை, கூத்தங்குழி, உவரி, கூடுதாழை, பெரியதாழை, கூட்டப்பனை ஆகிய மீனவக் கிராமங்களில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துக் கொடுக்கப்படுமா?



விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கூட்டப்புளி, பெருமணல், இடிந்தகரை, கூத்தங்குழி, உவரி, கூடுதாழை, பெரியதாழை, கூட்டப்பனை ஆகிய கிராமங்களில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**115—**

**முழுநேர மருத்துவமனை**

**வினா எண் 550—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குத்தாலம் அரசு மருத்துவமனையினை 24 மணி நேரமும் செயல்படும் மருத்துவமனையாக மாற்றித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் அரசு மருத்துவமனை ஏற்கெனவே 24 மணி நேரமும் செயல்பட்டு வருகிறது.

(ஆ) இவ்வினா எழாது.

**116—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 667—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, வெள்ளிமேடுபேட்டையில் சார் மையத்தினை (Sub centre) மாற்றி ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

[2002 மே 10

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், ஒலக்கூர் ஊராட்சி ஒன்றியம், வெள்ளிமேடுபேட்டை கிராமத்தில் சார் மையத்தினை மாற்றி புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**117—**

**குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு**

**வினா எண் 669—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி அரசு மருத்துவமனையில் குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு கட்டி முடித்து 2 ஆண்டுகள் ஆகியும் இன்னும் திறக்கப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது திறக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) செஞ்சி அரசு மருத்துவமனையில் குழந்தைகள் நல சிகிச்சைப் பிரிவு கட்டி முடிக்கப்பட்டு மார்ச் 2000 முதல் செயல்பட்டு வருகிறது.

(ஆ) இவ்வினா எழவில்லை

**118—**

**மருத்துவமனைக்குக் கூடுதல் வசதி**

**வினா எண் 670—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி அரசு மருத்துவமனை பிரசவ வார்டில் கூடுதல் படுக்கை வசதி செய்து தரவும், மயக்க மருந்து கொடுக்கும் மருத்துவரை நியமிக்கவும் அரசு முன்வருமா?



2002 மே 10]

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) செஞ்சி அரசு மருத்துவமனையில் பிரசவ வார்டில் தற்போதுள்ள 24 படுக்கைகள் போதுமானதாக உள்ளன. திண்டிவனம் மற்றும் விழுப்புரம் அரசு மருத்துவமனைகளிலிருந்து மயக்கவியல் மருத்துவர்கள் மாற்றுப் பணியில் பணியமர்த்தப்படுகிறார்கள்.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**119—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 675—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி வட்டம், அவியூர் ஊராட்சியில் இயங்கி வரும் ஊராட்சி ஒன்றிய மருந்தகத்தை அரசு ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், அவியூர் ஊராட்சி ஒன்றிய மருந்தகத்தினை அரசு ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்ற சாத்தியக்கூறுகள் இல்லை.

**120—**

**படுக்கை வசதி அதிகரித்தல்**

**வினா எண் 962—திருமதி கே. பவானி கருணாகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2002 மே 10

(அ) அரக்கோணம் நகரில் உள்ள அரசு மருத்துவமனைகளில் தற்போது 40 படுக்கை வசதி உள்ளதை 80 படுக்கை வசதியாக விரைந்து உயர்த்த அரசு ஏதேனும் நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) அரக்கோணம் அரசு மருத்துவமனையில் ஏற்கெனவே 116 படுக்கை வசதி உள்ளது. தற்போது மேலும் 46 படுக்கை வசதி கொண்ட புதிய பிரிவுகளும் கட்டப்பட்டுள்ளன.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**121—**

### இருதய நோய்ப் பிரிவு மற்றும் இரத்த வங்கி

**வினா எண் 963—திருமதி கே. பவானி கருணாகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் நகரில் உள்ள அரசு மருத்துவமனையில் இருதய நோய்ப் பிரிவு (Cardiology) மற்றும் இரத்த வங்கி (Blood Bank) செயல்படாமல் உள்ளதைச் செயல்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் அரசு மருத்துவமனையில் 6 படுக்கைகள் கொண்ட தீவிர இருதய சிகிச்சைப் பிரிவு கட்டி முடிக்கப்பட்டு 31-3-2000 முதல் செயல்பட்டு வருகிறது. மருந்துக் கட்டுப்பாட்டு இயக்குநரிடமிருந்து உரிமம் கிடைக்கப்பெற்றதும் குருதி வங்கி செயல்படுத்தப்படும்.



2002 மே 10]

**122—**

### ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 998—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, ஒலக்கூர் ஒன்றியம், ஓங்கூர் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், ஒலக்கூர் ஊராட்சி ஒன்றியம், ஓங்கூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**123—**

### மருத்துவக் கல்லூரி

**வினா எண் 1760—திரு. வெ. கோவிந்தராஜ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரி நகரை ஒட்டி தேசிய நெடுஞ்சாலை 47, தேசிய நெடுஞ்சாலை 7 ஆகிய வழித்தடங்களில் தினந்தோறும் விபத்துகள் நடைபெறுவதால் கிருஷ்ணகிரியில் மருத்துவக் கல்லூரி அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

கிருஷ்ணகிரியில் மருத்துவக் கல்லூரி அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**124—** [2002 மே 10

### மருத்துவமனைக்கு அனைத்து வசதிகள்

**வினா எண் 1812—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூவிருந்தவல்லி தொகுதியில் உள்ள ஆரம்ப சுகாதார மருத்துவ மனைகளுக்குக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்கவும், பிரசவ மருத்துவமனை பாதுகாப்பாக இயங்க சுற்றுச்சுவர் கட்டிக் கொடுக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) பூவிருந்தவல்லி தொகுதியில் இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன. நேமம் ஆரம்ப சுகாதார நிலையம் அரசுக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. திருநின்றவூர் ஆரம்ப சுகாதார நிலையம் தற்போது தற்காலிக முறையில் ஊராட்சி ஒன்றியம் கட்டிய துணை சுகாதார நிலையக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. போதிய நிலம் கிடைத்தவுடன் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(ஆ) இத்தொகுதியில் 15 துணை சுகாதார நிலையங்கள் உள்ளன. 2 துணை சுகாதார நிலையங்களுக்குச் சுற்றுச்சுவர் வசதி உள்ளது. எஞ்சிய துணை சுகாதார நிலையங்களுக்குச் சுற்றுச்சுவர் கட்டும் திட்டம் இல்லை.

**125—**

### கூடுதல் படுக்கை வசதி

**வினா எண் 1831—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறையில் வட்டாரத் தலைமை மருத்துவமனையில் கூடுதல் படுக்கை வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா?



2002 மே 10]

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை அரசு மருத்துவமனையில் கூடுதல் படுக்கை வசதியை அதிகரிக்கும் திட்டம் எதுவும் அரசிடம் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**126—**

### கலப்படத்தைத் தடுக்க நடவடிக்கை

**வினா எண் 1847—திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உணவுப் பொருள் கலப்படத்தைத் தவிர்க்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் உணவுக் கலப்படத்தைத் தவிர்க்க அரசு சிறந்த முறையில் நடவடிக்கை எடுத்து வருகிறது.

**127—**

### மகப்பேறு மருத்துவமனை

**வினா எண் 1970—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் ஒன்றிய அளவில் மகப்பேறு மருத்துவமனைகள் தனியாக அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது ஒன்றிய அளவில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் மகப்பேறு சிகிச்சை செய்வதற்கான வசதியும், மகப்பேறு அறுவை சிகிச்சை மற்றும் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்வதற்கான அறுவை அரங்கு வசதியும் உள்ளன. எனவே, ஒன்றிய அளவில் தனியாக மகப்பேறு மருத்துவமனைகள் அமைக்கும் தேவை எழவில்லை.

(ஆ) வினா எழாது.

**128—**

**ஆரம்பச் சுகாதார நிலையம்**

**வினா எண் 1971—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட சத்தியநாதபுரம் ஊராட்சி, மேட்டுப்பட்டியைத் தலைமையிடமாகக் கொண்டு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியம், மேட்டுப்பட்டியைத் தலைமையிடமாகக் கொண்டு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**129—**

**ஆரம்பச் சுகாதார நிலையம்**

**வினா எண் 1972—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட கிராமங்களில் போதிய மருத்துவ வசதி இல்லாததால் மருகம்பட்டியைத் தலைமையிடமாகக் கொண்டு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட மருகம்பட்டியினைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

**130—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 1976—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட நல்லாம்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியம், நல்லாம்பட்டி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**131—**

**துணை சுகாதார நிலையம்**

**வினா எண் 1977—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2002 மே 10

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, வத்தலாபுரத்தில் ஆரம்ப துணை சுகாதார நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியம், வத்தலாபுரம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**132—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 2024—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கெண்டையனஅள்ளி ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று புதியதாக மருக்கம்பட்டியில் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியம், மருக்கம்பட்டி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.



2002 மே 10]

**133—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 2062—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா?

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், காவல்கிணறு கிராமத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில், காவல் கிணறு கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

**134—**

**படுக்கை வசதி**

**வினா எண் 2506—திரு. க. சிவராஜ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியம், பகண்டை கூட்டுச் சாலையில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தைப் படுக்கை வசதியுடன் கூடியதாக விரிவாக்கம் செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியத்தில் பகண்டைக் கூட்டுச் சாலையில் வானாபுரம் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுகிறது. இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தினைக் கூடுதலான படுக்கை வசதிகளுடன் விரிவாக்கம் செய்திட அவசியமில்லை. தற்போதுள்ள வசதிகள் போதுமானதாகும்.

[2002 மே 10

**135—**

**சி.டி. ஸ்கேன்**

**வினா எண் 2516—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், சேலம் அரசு மருத்துவமனையில் சி.டி. ஸ்கேன் பழுதடைந்துள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சி.டி. ஸ்கேன் 11-5-2001 முதல் இரண்டு நாட்கள் மட்டும் பழுதடைந்து இருந்தது. பின்னர், உடன் சரிபார்க்கப்பட்டு இதுநாள் வரை நல்ல முறையில் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.

**136—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 2534—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, இராமகொண்ட அள்ளி ஊராட்சி மலையனூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போழுது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியம், மலையனூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.



2002 மே 10]

**137—**

**மருத்துவ வசதி அதிகரித்தல்**

**வினா எண் 3118—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரணாம்பட்டு நகரிலுள்ள அரசு மருத்துவமனையில் இருதய நோய்ப் பிரிவு, பல் மருத்துவப் பிரிவு, கண் சிகிச்சைப் பிரிவு ஆகிய புதிய பிரிவுகளைத் துவக்கி மருத்துவ வசதியை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டில் அரசு மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. இம் மருத்துவமனையில் இருதய நோய்ப் பிரிவு, பல் சிகிச்சைப் பிரிவு, கண் சிகிச்சைப் பிரிவு ஆகிய சிறப்புப் பிரிவுகள் இல்லை. சிகிச்சைக்கு வரும் நோயாளிகளுக்கு, இருக்கும் மருத்துவர்களைக் கொண்டு சிகிச்சை அளிக்கப்படுகிறது. மேலும் தேவையின் அடிப்படையில் நிதிநிலைக்குத் தக்கவாறு மருத்துவமனை முன்னேற்றத்திற்காக மேற்படி சிறப்புப் பிரிவுகள் ஏற்படுத்துவது குறித்து கவனத்தில் கொள்ளப்படும்.

**138—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 3261—திரு. டி. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதி, கொல்லங்கோடு பேரூராட்சிப் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

கன்னியாகுமரி மாவட்டம், முஞ்சிரை ஊராட்சி ஒன்றியம், கொல்லங்கோடு கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

[2002 மே 10

**139—**

### ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 3282—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, சிறுதொண்டமாதேவி ஊரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், சிறுதொண்டமாதேவி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**140—**

### ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 3284—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, மேட்டுக்குப்பம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், மேட்டுக்குப்பம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.



2002 மே 10]

**141—**

### ஆம்புலன்ஸ் வசதி

**வினா எண் 3522—திருமதி சி.எம். சூரியகலா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் தொகுதி, குடியாத்தம் அரசு மருத்துவமனையில் அதிநவீன ஆம்புலன்ஸ் வசதி ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) இது குறித்து கருத்துரு எதுவும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**142—**

### பிரேத பரிசோதனை

**வினா எண் 3594—திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலுள்ள அரசு மருத்துவமனைகளில் மாலை 6 மணிக்கு மேல் பிரேதப் பரிசோதனை செய்யப்படுவதில்லை என்ற தடையை நீக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு.செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

தமிழகத்திலுள்ள அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் மாலை 6 மணிக்கு மேல் பிரேதப் பரிசோதனை செய்யக்கூடாது என்ற இத்தடையை நீக்க இயலாது.

[2002 மே 10

143—

## பிரசவப் பிரிவை விரிவுபடுத்துதல்

**வினா எண் 3607—திரு. எஸ்.எம். சீனிவேல்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பரங்குன்றம் தொகுதி, அவனியாபுரம் பேரூராட்சியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் பிரசவப் பிரிவினை விரிவுபடுத்தி அதற்கேற்ப வசதிகள் செய்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் தொகுதி, அவனியாபுரம் பேரூராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படவில்லை. இந்தப் பேரூராட்சியில் ஐந்து துணை சுகாதார நிலையங்கள் உள்ளன. இவை மூலமாக மகப்பேறு மருத்துவம் மற்றும் குழந்தைகள் நலம் கவனிக்கப்பட்டு வருவதால், இதற்காகத் தனியாகப் பிரசவப் பிரிவு ஏற்படுத்த வேண்டிய அவசியம் இல்லை.

144—

## மருத்துவமனைக் கட்டடம்

**வினா எண் 3624—திரு. க. பாரமலை:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், திருப்புவனத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் 20 படுக்கைகள் கொண்ட விரிவாக்கக் கட்டடம் பயன்படுத்தப்படாமல் உள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதைப் பயன்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?



2002 மே 10]

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் சமுதாய நல நிலையத்தில் உள்ள 20 படுக்கைகள் கொண்ட விரிவாக்கக் கட்டடம் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

145—

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 3978—டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதியிலுள்ள இராப்பூசல் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் விரைவில் அமைத்துத்தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு.செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், இராப்பூசல் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

146—

## கூடுதல் மருத்துவர்கள்

**வினா எண் 4032—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள மருத்துவமனைகளில் கூடுதலாகப் பல் மருத்துவர்கள் நியமனம் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2002 மே 10

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் உள்ள அரசு மருத்துவமனைகளில் கூடுதலாகப் பல் மருத்துவர் நியமனம் செய்யும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

**147—**

## இலவச மருந்து

**வினா எண் 4034—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறுநீரக அறுவை சிகிச்சை பெற்றவர்களுக்கு அரசு மருத்துவமனைகள் மூலம் சைக்ளோஸ்போரின் மருந்தை அரசு இலவசமாக வழங்கும் செயற்குறிப்பு உள்ளதா?

ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு/தனியார் மருத்துவமனைகளில் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்து கொண்ட அரசு ஊழியர்கள்/அவர் தம் குடும்பத்தினர்/அவர் ஆதரவில் வாழ்வோர் ஆகியோர்களுக்கு, மருத்துவக் கல்வி இயக்குநரின் பரிந்துரையுடன், சைக்ளோஸ்போரின் மருந்து அரசு மருத்துவமனைகள் மூலம் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. அதுபோல அரசு மருத்துவமனைகளில் இந்த அறுவை சிகிச்சை செய்து கொண்ட பொது மக்களுக்கும், சைக்ளோஸ்போரின் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.



2002 மே 10]

**148—**

## மருத்துவ வசதி

**வினா எண் 4035—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், ஏர்வாடியில் தனியார் காப்பகங்களில் வைக்கப்பட்டிருக்கும் மன நோயாளிகளுக்குப் போதிய மருத்துவ வசதி அளிக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு.செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

ஏர்வாடி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து தகுதி வாய்ந்த மருத்துவரால் மன நோயாளிகளுக்கு முறையாக சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

**149—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 4437—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், தங்காயூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியம், தங்காயூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

**150—**

### ஓட்டுநர் பணியிடம்

**வினா எண் 4480—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, மருங்கூர் கிராம மருத்துவமனையில் நோயாளி ஊர்தி ஓட்டுநர் பணியிடம் நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி ஊராட்சி ஒன்றியத்தில் மருங்கூரில் பிரதான 24 மணி நேர ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. வேறு ஆரம்ப சுகாதார நிலையங்களைச் சார்ந்த ஓட்டுநர்களைக் கொண்டு ஆம்புலன்ஸ் ஊர்திகள் செயல்படுத்தப்படுகின்றன.

**151—**

### ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 4481—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, நடுமேட்டுக்குப்பம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், நடுமேட்டுக்குப்பம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.





**152—**

### மருத்துவமனைக்குக் கட்டடம்

**வினா எண் 4496—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாமல்லபுரத்தில் இயங்கும் அரசு மருத்துவமனைக்குப் போதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் திட்ட மதிப்பீடு என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மாமல்லபுரம் அரசு மருத்துவமனைக்குக் கட்டடம் கட்டித் தருவதற்கான திட்டம் எதுவும் அரசிடம் தற்போது இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**153—**

### ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 4497—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த இடங்களில் அமைக்கவுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

[2002 மே 10

**154—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 4532—திரு. டி. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், கொல்லங்கோடு பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு அனுமதி வழங்கியுள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு.செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

கன்னியாகுமரி மாவட்டம், முஞ்சிறை ஊராட்சி ஒன்றியம், கொல்லங்கோடு கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**155—**

**மருத்துவர் குடியிருப்பு**

**வினா எண் 4819—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சி, கே.கே. நகர், இ. காட்டூரில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மருத்துவர் குடியிருப்புகள் ஏற்படுத்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

நடப்பாண்டில் ஆரம்ப சுகாதார நிலையப் பணியாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்படாததால், பணியாளர் குடியிருப்பு கட்டும் திட்டம் தற்சமயம் ஏதும் இல்லை.



2002 மே 10]

**156—**

**புதிய கட்டடம்**

**வினா எண் 5182—திரு. ப. வெ. தாமோதிரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனையில் மேலும் ஒரு கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) உடுமலைப்பேட்டை அரசு மருத்துவம்னையில் புதியதாகக் கட்டடம் கட்டும் திட்டம் எதுவும் அரசிடம் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**157—**

**காலிப் பணியிடங்கள்**

**வினா எண் 5189—திரு. ப. வெ. தாமோதிரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனையில் லேப் டெக்னீஷியன் பணியிடம் நீண்ட நாட்களாகக் காலியாக உள்ளதை நிரப்ப அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனையில் காலியாக உள்ள ஆய்வுக்கூட நுட்புனர் பணியிடங்களை, தொகுப்பூதிய

[2002 மே 10

முறையில் நிரப்புவதற்கு, அரசாணை (டி) எண் 1577, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 7-11-2001-ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளதையடுத்து, பணி நியமன அலுவலர் என்ற முறையில் மாவட்ட நலப் பணிகள் இணை இயக்குநர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

**158—**

**மருத்துவர்களை அதிகரித்தல்**

**வினா எண் 5190—திரு. ப.வே. தாமோதிரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனையில் புற நோயாளிகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு தற்போதைய மொத்த மருத்துவர் எண்ணிக்கையுடன் மேலும் 5 மருத்துவர்களை நியமிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனையில் தற்போது 12 மருத்துவர்கள் பணிபுரிகின்றனர். இவ்வெண்ணிக்கை இம்மருத்துவமனைக்கு வரும் புற நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப் போதுமானதாக உள்ளது.

(ஆ) இக்கேள்வி எழாது.

**159—**

**மயக்கவியல் மருத்துவர்கள்**

**வினா எண் 5191—திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2002 மே 10]

(அ) உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனையில் மயக்கவியல் மருத்துவர்கள் போதுமான அளவில் இல்லாததால், அறுவை சிகிச்சைகளை உரிய காலகட்டத்தில் செய்ய முடிவதில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், இதுகுறித்து அரசு எடுக்கும் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனையில் 4 மயக்கவியல் மருத்துவர்கள் உள்ளனர். இது போதுமானதாக உள்ளது. அறுவை சிகிச்சைகளும் முறையாக நடைபெறுகின்றன.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**160—**

**சிறப்பு மருத்துவர்கள்**

**வினா எண் 5193—திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனையில் தோல் நோய், கண், காது, மூக்கு, தொண்டை சிறப்பு மருத்துவர்கள் இல்லாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இக்குறையைக் களைய அரசு எடுக்கும் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) கோயம்பத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனையில் தற்போது உள்ள மருத்துவர்களைக் கொண்டு தோல் நோய், கண், காது, மூக்கு, தொண்டை நோய்களுக்குச் சிறப்பாக சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், தேவை ஏற்படும்பொழுது மற்றும் சிறப்பு

[2002 மே 10

சிகிச்சை தேவைப்படும்பொழுது அந்நோயாளிகள் அருகில் உள்ள மருத்துவமனைக்கோ அல்லது திருப்பூர் மாவட்ட அரசு தலைமையிட மருத்துவமனைக்கோ அனுப்பப்பட்டு வருகின்றனர்.

(ஆ) எழாது.

**161—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 5213—திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொங்கலூர் தொகுதி, சுல்தான்பேட்டை பகுதி, கம்மாளப்பட்டியில் புதியதாக ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

கோயம்பத்தூர் மாவட்டம், சுல்தான்பேட்டை ஊராட்சி ஒன்றியம், சி. கம்மாளப்பட்டி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**162—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 5286—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, எலையமுத்தூர் ஊராட்சி மற்றும் அதன் சுற்றுப்புறக் கிராமங்களுக்காக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் கருத்துருவை அரசு பரிசீலிக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2002 மே 10]

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்பத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், எலையமுத்தூர் ஊராட்சி மற்றும் அதன் சுற்றுப்புறக் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**163—**

**புதிய கட்டடம்**

**வினா எண் 5748—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி அரசு மருத்துவமனையில் நோயாளிகளின் படுக்கை எண்ணிக்கையை அதிகரிக்க புதிய கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) சீர்காழி அரசு மருத்துவமனையில் படுக்கை எண்ணிக்கையை அதிகரிப்பதற்காகப் புதிய கட்டடம் கட்டித் தரும் திட்டம் எதுவும் அரசிடம் தற்போது இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**164—**

**காலரா நோய்க்கான பிரிவு**

**வினா எண் 5751—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி அரசு மருத்துவமனையில் காலரா நோய்க்கான பிரிவு ஒன்று அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) சீர்காழி அரசு மருத்துவமனையில் காலரா நோய்க்கான பிரிவு ஏற்படுத்த அரசிடம் திட்டம் ஏதும் இல்லை. ஆனால், இந்நோய் சம்பந்தமாக வரும் நோயாளிகளுக்குத் தகுந்த சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

(ஆ) இக்கேள்விக்குப் பதில் எழவில்லை.

**165—**

**சித்த ஆராய்ச்சி மையம்**

**வினா எண் 6046—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை தாம்பரத்தில் தேசிய சித்த ஆராய்ச்சி மையம் தொடங்குவதற்கு (National Research Institute) நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்பட உள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னை தாம்பரத்தில் தேசிய சித்த மருத்துவ நிலையம் அமைப்பதற்கு 14.78 ஏக்கர் நிலம் தமிழக அரசால் இலவசமாக மத்திய அரசுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. தேசிய மருத்துவ ஆராய்ச்சி நிலைய வளாகத்தைச் சுற்றி, சுற்றுச் சுவர் எழுப்ப ரூ.22.00 இலட்சம் அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது. பின்னர், இந்நிலையம் அமைப்பதற்கான செலவினை மத்திய அரசும், மாநில அரசும், (தமிழக அரசும்) பகிர்ந்து



கொள்ளவேண்டும் என்ற நிலை உருவாகியது. இதன் அடிப்படையில் இந்நிலையம் அமைப்பதற்கென மூலதனச் செலவுகளை மத்திய, மாநில அரசுகள் முறையே 60:40 என்ற விகிதாச்சாரத்தின் அடிப்படையிலும், தொடரும் செலவினங்களை 75:25 என்ற விகிதாச்சாரத்தின் அடிப்படையிலும் பங்கிட்டுக் கொள்ளுதல் தொடர்பாக மத்திய அரசிடம் கருத்துக் கேட்கப்பட்டது. இப்பொருள் குறித்து மத்திய மாநில அரசு அதிகாரிகள் புதுதில்லியில் 7-9-2001 அன்று Expenditure on Finance Committee கூட்டத்தில் கூடி விவாதித்தனர். மத்திய அரசு இத்திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

**166—**

**மருந்துகள் வழங்குதல்**

**வினா எண் 6047—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் மருத்துவமனையில் சிறுநீரகம், இருதயம் போன்ற அறுவை சிகிச்சை செய்தவர்களுக்கு அரசு மருத்துவமனையில் மருந்து, மாத்திரைகள் வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தனியார் மருத்துவமனையில் சிறுநீரகம் மற்றும் இருதயம் போன்ற அறுவை சிகிச்சை செய்து கொண்ட நோயாளிகள், அரசு மருத்துவமனைக்கு வந்து பதிவு செய்தவர்களுக்கு, சைக்ளோஸ்போரின் என்ற விலை உயர்ந்த மருந்தைத் தவிர, மற்ற ஏனைய மருந்துகள் 14 நாட்களுக்கு ஒரு முறை வழங்கப்பட்டு வருகிறது. சைக்ளோஸ்போரின் மருந்து மட்டும் சிறப்பு நேர்வாகக் கருதி, சில நபர்களுக்கு அரசின் அனுமதியுடன் வழங்கப்படுகிறது. அரசு ஊழியர் மற்றும் அவரது குடும்பத்தினர்களுக்கு சைக்ளோஸ்போரின் மருந்து அரசின் அனுமதியுடன் வழங்கப்படுகிறது.

[2002 மே 10

167—

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 6091—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், திருவத்தேவன் ஊராட்சியில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம், திருவத்தேவன் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

168—

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 6092—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், புதுப்பட்டினம் ஊராட்சியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம், புதுப்பட்டினம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.



2002 மே 10]

169—

**மருத்துவமனையாகத் தரம் உயர்த்துதல்**

**வினா எண் 6094—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பெருமகளூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவமனையாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பெருமகளூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

170—

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 6099—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பஞ்சநதிபுரம் கிராமத்தில் புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஊராட்சி ஒன்றியம், பஞ்சநதிபுரம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

[2002 மே 10

171—

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 6192—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலச்செவல் பேரூராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மாதேவி ஊராட்சி ஒன்றியம், மேலச்செவல் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

172—

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 6193—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியம், குத்தபாஞ்சான் கிராமத்திற்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், பாப்பாக்குடி ஊராட்சி ஒன்றியம், குத்தபாஞ்சான் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.



2002 மே 10]

173—

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 6194—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியம், தாளார்குளத்தில் ஆரம்ப சுகாதார மையம் ஒன்றை ஏற்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், பாப்பாக்குடி ஊராட்சி ஒன்றியம், தாளார்குளம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

174—

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 6501—திரு. வெ. கோவிந்தராஜ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி தொகுதி, கிருஷ்ணகிரி ஒன்றியம், எலுமிச்சங்கிரி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியம், எலுமிச்சங்கிரி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**175—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 6513—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, ஒட்டங்காடு ஊராட்சியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஊராட்சி ஒன்றியம், ஒட்டங்காடு கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**176—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 6514—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, திருவத்தேவன் ஊராட்சியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்தித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?



(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம், திருவத்தேவன் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**177—**

**கண் மருத்துவப் பிரிவு**

**வினா எண் 6515—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, பேராவூரணி அரசு மருத்துவமனைக்குக் கண் மருத்துவப் பிரிவு தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி அரசு மருத்துவமனைக்குக் கண் மருத்துவப் பிரிவு தொடங்குவது குறித்து கருத்துரு தற்போது அரசிடம் இல்லை. அரசின் நிதிநிலைமை சீரடையும்பொழுது பேராவூரணி அரசு மருத்துவமனைக்குக் கண் சிகிச்சைப் பிரிவு தொடங்குவது குறித்து அரசு, கவனத்தில் கொள்ளும்.

178—

**கூடுதல் கட்டடம்**

**வினா எண் 6517—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, பேராவூரணி அரசு மருத்துவமனைக்கு அதிகப் படுக்கை வசதிகள் வேண்டி கூடுதல் கட்டடம் கட்டித்தரும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

இல்லை.

179—

**மருத்துவமனையைச் சீரமைத்தல்**

**வினா எண் 6533—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆர்.கே.நகர் தொகுதி, கைலாச முதலி தெரு, ஸ்டான்லி மருத்துவமனையின் துணை மருத்துவமனையினைச் சீரமைத்து அப்பகுதி மக்களுக்கு முழு அளவில் பயன்பட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

ஆர்.கே.நகர் தொகுதியில் உள்ள தண்டையார்பேட்டை புறநகர் மருத்துவமனை, ஸ்டான்லி மருத்துவமனையின் துணை மருத்துவமனையாகும். இது தற்பொழுது 100 படுக்கைகள் மற்றும் சிறப்பு சிகிச்சைப் பிரிவுகளுடன் நன்கு செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையினை மேலும் சீரமைப்பதற்கான திட்டம் ஏதும் அரசிடம் தற்போது இல்லை.



180—

**குழுக்களை மாற்றி அமைத்தல்**

**வினா எண் 6535—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு பொது மருத்துவமனைகளில் அமைக்கப்பட்டுள்ள ஆலோசனைக் குழுக்களை மாற்றியமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மருத்துவமனைகளில் போதிய வசதிகளைச் செய்யவும், சுற்றுப்புறச் சுகாதாரத்தினைப் பேணவும், பொது மக்களின் நலத்தினை உறுதி செய்யவும், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், மாவட்டத் தலைமை மருத்துவமனைகள், வட்டம் மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகள் ஆகியவற்றில் மருத்துவமனை ஆலோசனைக் குழுக்கள் இவ்வரசால் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

181—

**எக்ஸ்ரே பிரிவு**

**வினா எண் 6583—திரு. வி.ஆர். ராஜாங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாடிப்பட்டி ஒன்றியம், சோழவந்தான் நகரில் உள்ள அரசு மருத்துவமனைக்கு எக்ஸ்ரே பிரிவு தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

வாடிப்பட்டி ஒன்றியம், சோழவந்தான் அரசு மருத்துவமனையில் 'எக்ஸ்ரே' பிரிவு தொடங்குவதற்கான திட்டம் அரசிடம் தற்போது இல்லை.

[2002 மே 10

182—

## அங்காடிகள் மூலம் விற்பனை

**வினா எண் 7257—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அயோடின் கலந்த உப்பின் பயன் குறித்து மக்கள் அறிந்திட செய்யவும் அவ்வுப்பினை அங்காடிகள் மூலம் விற்பனை செய்யவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) கன்னியாகுமரி நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் அங்காடிகள் மூலம் அயோடின் கலந்த உப்பு விற்பனை செய்யப்படுகிறது.

(ஆ) 1991 முதல் நடைமுறையில் உள்ளது.

183—

## இரத்த வங்கிகள்

**வினா எண் 7259—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் இரத்த வங்கிகள் அனைத்தும் உரிமம் பெற்று இயங்கி வருகின்றனவா?

(ஆ) இல்லை எனில், உரிமம் பெறாத இரத்த வங்கிகள் கண்டறியப்பட்டு அவற்றின்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?



2002 மே 10]

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் தற்போது இயங்கிவரும் இரத்த வங்கிகள் அனைத்தும் தக்க உரிமம் பெற்று இயங்கி வருகின்றன. மருந்து மற்றும் அழகு சாதன விதிமுறைப்படி இரத்த வங்கியின் உரிமம் பெற்ற பிறகே குருதி வங்கிகள் இயங்க வேண்டும்.

(ஆ) உரிமம் பெறாமல் இரத்த வங்கிகள் இயங்கி வருவது கண்டறியப்பட்டால், அக்குருதி வங்கியின்மீது மருந்து மற்றும் அழகு சாதன விதியின்படி தக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

184—

## குடும்பக் கட்டுப்பாடு

**வினா எண் 7264—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைத் தீவிரப்படுத்த அரசிடம் சிறப்புத் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் குடும்ப நலத் திட்டம், மகப்பேறு மற்றும் குழந்தை நலத் திட்டத்துடன் சேர்த்து மக்கள் திட்டமாக சீரிய முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தியாவில், தமிழகம், கேரளாவுக்கு அடுத்தபடியாக குறைந்த பிறப்பு விகிதம் 19.3 (1999 ஆம் ஆண்டு) உள்ள மாநிலமாக உள்ளது. தமிழ்நாட்டில் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை தீவிரப்படுத்த அரசிடம் சிறப்புத் திட்டம் ஏதும் இல்லை.

[2002 மே 10

185—

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 7486—திருமதி ஆர். சசிகலா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, தான்தோன்றிமலை ஒன்றியம், ஏமூர் பஞ்சாயத்துப் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கரூர் மாவட்டம், தான்தோன்றிமலை ஊராட்சி ஒன்றியம், ஏமூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

186—

## புதிய கட்டடம்

**வினா எண் 7895—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி அரசு மருத்துவமனையில் பெண்கள் வார்டுக்குப் புதிய கட்டடம் கட்டிட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.



2002 மே 10]

187—

## குடியிருப்பினைப் புதுப்பித்தல்

**வினா எண் 7907—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, சாரம் ஆரம்ப சுகாதார நிலைய பணியாளர்கள் குடியிருப்பு, மிகவும் பழுதடைந்துள்ளதைப் புதுப்பிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சாரம் ஆரம்ப சுகாதார நிலையக் குடியிருப்புக் கட்டடப் பழுதுகள் சரிசெய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

188—

## பணியிடங்கள்

**வினா எண் 8027—திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) பயிற்சி பெற்ற பல்நோக்கு சுகாதாரப் பணியாளர் காலியிடங்கள் இருந்தும், பணி வழங்கப்படாமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) அரசின் நிதி நெருக்கடியினைக் கருத்தில்கொண்டு பல்நோக்கு சுகாதாரப் பணியாளர் பயிற்சி பெற்றவர்களுக்கு சுகாதார ஆய்வாளர் நிலை-2 பணியிடம் வழங்கும் செயற்குறிப்பு தற்போது ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

**189—**

**கூடுதல் கட்டடம்**

**வினா எண் 8072—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தொளசம்பட்டி ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவமனைக்குக் கூடுதல் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தொளசம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குத் தற்போதுள்ள கட்டட வசதிகள் போதுமானதால் கூடுதல் கட்டடம் கட்ட வேண்டிய அவசியமில்லை.

**190—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 8074—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தாரமங்கலம் தொகுதி, பெரியேரிப்பட்டிக்குப் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், பெரியேரிப்பட்டி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**191—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 8076—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஊராட்சி ஒன்றியத்தில் சிக்கம்பட்டி ஊராட்சி, குப்பனூர் கிராமத்திற்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், குப்பனூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

[2002 மே 10

192—

### ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 8077—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் பேரூராட்சி, பாரக்கல்லூர் 14வது வார்டில் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியம், பாரக்கல்லூர் 14வது வார்டில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

193—

### ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 8145—திரு. கே.கே. சிவசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை தொகுதி, காரியாபட்டி வட்டம், முடுக்கன்குளம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2002 மே 10]

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி ஊராட்சி ஒன்றியம், முடுக்கன்குளம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

194—

### அரசு மருத்துவமனை

**வினா எண் 8253—திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அம்பாசமுத்திரம், கடையம் ஒன்றியம், பொட்டல்புதூரில் அரசு மருத்துவமனை ஒன்று அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், கடையம் ஊராட்சி ஒன்றியம், பொட்டல்புதூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

195—

### சுற்றுச்சுவர்

**வினா எண் 8487—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், சதுரங்கப்பட்டினம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச்சுவர் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

[2002 மே 10

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் சுற்றுச் சுவர் கட்ட அரசு நிதி ஒதுக்கீடு செய்யவில்லை. எனவே சுற்றுச் சுவர் கட்டும் திட்டம் பரிசீலனையில் இல்லை.

**196—**

**தாய்ப் பால் வாரம் அனுசரித்தல்**

**வினா எண் 8490—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குழந்தைகளுக்கு வலுவூட்டக்கூடிய தாய்ப் பால் கொடுக்கும் வழக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் தாய்ப் பால் வாரம் என அனுசரிக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

குழந்தைகளுக்கு வலுவூட்டக்கூடிய தாய்ப் பால் கொடுக்கும் வழக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் தாய்ப் பால் வாரம் ஏற்கெனவே அனுசரிக்கப்பட்டு வருகிறது. நடப்பாண்டில் தாய்ப் பால் வாரம் 2001 நவம்பர் மாதம் 15ம் தேதி முதல் 21-ம் தேதி வரை யூனிசெப் உதவியுடன் அனுசரிக்கப்பட்டது.

**197—**

**மருத்துவமனையை விரிவுபடுத்துதல்**

**வினா எண் 8496—திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அம்பாசமுத்திரம் அரசு மருத்துவமனையை விரிவுபடுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?



2002 மே 10]

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

அம்பாசமுத்திரம் அரசு மருத்துவமனையை விரிவுபடுத்தும் திட்டம் எதுவும் அரசிடம் தற்போது இல்லை.

**198—**

**மருத்துவமனை**

**வினா எண் 8502—திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தொகுதி, பொட்டல்புதூரில் அரசு சிறிய மருத்துவமனை அமைக்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், கடையம் ஊராட்சி ஒன்றியம், பொட்டல்புதூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**199—**

**தடுப்பூசி**

**வினா எண் 8580—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாடு முழுவதும் மஞ்சள் காமாலைக்குத் தடுப்பூசி போடுவதில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஈடுபடுவது போல், அரசே குறைந்த கட்டணத்திற்குத் தடுப்பூசி போட அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2002 மே 10

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

'ஹெபாடிடிஸ்' எனும் மஞ்சள் காமாலை நோய்க்கான தடுப்பூசி மருந்தினை மைய அரசும், உலக சுகாதார நிறுவனமும் இதுகாறும் பரிந்துரைக்கவில்லை. ஆதலால், அரசே குறைந்த கட்டணத்திற்குத் தடுப்பூசி போட நடவடிக்கை எடுக்கவில்லை.

**200—**

### குழந்தைகள் காப்பகம்

**வினா எண் 9364—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, சென்னை புறநகர் மருத்துவமனையான 'பெரிஃபரல்' மருத்துவமனையில் அரசு ஊழியர் மற்றும் நோயாளிகளின் குழந்தைகளைப் பராமரிக்க குழந்தைகள் காப்பகம் அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, சென்னை புறநகர் மருத்துவமனையான 'பெரிஃபரல்' மருத்துவமனையில் அரசு ஊழியர் மற்றும் நோயாளிகளின் குழந்தைகளைப் பராமரிக்கக் குழந்தைகள் காப்பகம் அமைக்கப்படும் வாய்ப்புகள் இல்லை.

## பட்டியல் 11*

**1—**

### சாலை சீரமைப்பு

**வினா எண் 731—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.



2002 மே 10]

(அ) சாத்தான்குளம் தொகுதி, கருங்குளம் ஒன்றியம், சேரக்குளம்-மகிழ்ச்சிபுரம், சீறியந்தூர் சாலையைச் சீரமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) எதிர்வரும் ஆண்டுகளில் அரசின் நிதிநிலைக்கேற்ப இச்சாலையைச் சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**2—**

### ஆக்கிரமிப்பு அகற்றல்

**வினா எண் 857—திருமதி ஆர். சசிகலா:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மலைச் சரிவிலிருந்து காவேரி ஆறு வரை உள்ள குளங்களின் ஆக்கிரமிப்புகளை அகற்றி, வடிகாலைத் தூர்வாரிப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

கடலூர் மலைச் சரிவிலிருந்து காவேரி ஆறு வரை உள்ள பொதுப் பணித் துறைக் குளங்கள் மூன்று ஆகும். மூன்று குளங்களில் மாவத்தூர் ஏரி 1998-1999 ஆம் ஆண்டில் ரூ.10.00 லட்சம் மதிப்பீட்டில் தூர்வாரப்பட்டு ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டது. மீதமுள்ள பன்னைப்பட்டி, பஞ்சப்பட்டி ஆகிய இரண்டு குளங்களும் அரசு நிதிக்கு ஏற்பத் தூர்வாரி ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும்.

3—

## பணி நிர்ணயம்

**வினா எண் 1988—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சிறையில் 16 மணி நேரம் பணி செய்யும் சிறைக் காவலர்களுக்கு, 8 மணி நேரம் பணி என நிர்ணயம் செய்யப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) சிறைக் காவலர்கள் 16 மணி நேரம் பணிபுரிவதில்லை. சேலம் மத்திய சிறையில் உள்ளதுபோல, அனைத்து மத்திய சிறைகளிலும், பெண்கள் தனிச் சிறைகள், பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை ஆகியவற்றில் 8 மணி நேரம் எனத் திட்டம் துவங்கப்பட்டு நடைமுறையில் இருந்து வருகிறது.*

*(ஆ) கேள்வி எழவில்லை.*

4—

## சாலை செப்பனிடுதல்

**வினா எண் 2294—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி உட்கோட்டம், வாலாந்தூர் பாப்பாபட்டி சாலையைச் செப்பனிட அரசு முன்வருமா?



*விடை—*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*7.6 கி.மீ. நீளமுள்ள இச்சாலையில் 2.4 கி.மீ. முதல் 4/4 கி.மீ. வரையிலான பகுதி மட்டுமே பழுதடைந்துள்ளது. எஞ்சிய பகுதிகள் நல்ல நிலையில் உள்ளன. பழுதடைந்த பகுதியை செப்பனிட, சுமார் ரூ.9.00 இலட்சம் தேவைப்படும். நிதிநிலை காரணமாக இப்பணியைத் தற்போது செயல்படுத்தும் சாத்தியக் கூறுகள் இல்லை.*

5—

## சாலை புதுப்பித்தல்

**வினா எண் 2333—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், ஆவரை குளம்-மதகனேரி 4.5 கி.மீ. சாலையைப் புதுப்பிக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இல்லை.*

6—

## சர்க்கரைக் கழிவு

**வினா எண் 2348—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) கரும்பு ஆலையிலிருந்து வெளியேறும் சர்க்கரைப் பாகுக் கழிவுகள் என்ன உபயோகத்திற்குப் பயன்படுத்த அனுமதி வழங்கப்படுகிறது?*

(ஆ) அதனைத் தவறான வழிகளில் பயன்படுத்தாதவாறு அரசு ஏவ்வாறு கண்காணிக்கிறது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) சர்க்கரைப் பாகுக் கழிவு என்ற கருப்பஞ்சாற்றுக் கசண்டு, சாராவி தயாரிக்க, கால்நடைத் தீவனம் தயாரிக்க, நல்லெண்ணெய் தயாரிக்க மற்றும் ஏனைய உபயோகங்களுக்குப் பயன்படுத்த அனுமதி வழங்கப்படுகிறது.

(ஆ) 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு கருப்பஞ்சாற்றுக் கசண்டு கட்டுப்பாடு மற்றும் முறைப்படுத்துதல் விதிகளின்கீழ் கருப்பஞ்சாற்றுக் கசண்டு தவறான வழிகளில் பயன்படுத்தாதவாறு கண்காணிக்கப்படுகிறது.

**7—**

**வாய்க்கால் இணைப்பு**

**வினா எண் 2553—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பஞ்சப்பள்ளி வாய்க்காலை பாப்பாரப்பட்டியைச் சுற்றியுள்ள ஏரிகளில் இணைக்க அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பஞ்சப்பள்ளி வாய்க்காலை பாப்பாரப்பட்டியைச் சுற்றியுள்ள ஏரிகளில் இணைக்கும் திட்டம், சென்னை மண்டலத் தலைமைப் பொறியாளரின் பரிசீலனையில் உள்ளது.



**8—**

**கால்வாய் நீட்டிப்பு**

**வினா எண் 2591—திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாணியாறு அணையின் இடதுபுறக் கால்வாயை நீட்டித்து கிராமியப்பட்டி வழியாக புதிய கால்வாயும், வலதுபுறக் கால்வாயை நீட்டித்து, புதுப்பட்டி வரையிலும் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வாணியாறு அணையின் இடதுபுறக் கால்வாயை நீட்டித்து கிராமியப்பட்டி வழியாக புதிய கால்வாயும், வலதுபுறக் கால்வாயை நீட்டித்து, புதுப்பட்டி வரையிலும் அமைக்கும் திட்டம் எதுவும் தற்போது இல்லை.

**9—**

**பாசனக் கால்வாய்**

**வினா எண் 2595—திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மொரப்பூர் தொகுதியில் ஈச்சம்பாடி அணையிலிருந்து விவசாயத்திற்கு நீர்ப்பாசனக் கால்வாய் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், மொரப்பூர் தொகுதியில் ஈச்சம்பாடி அணையிலிருந்து விவசாயத்திற்குப் புதியதாக நீர்ப்பாசனம் அமைக்கும் திட்டம் எதுவும் இல்லை.

**10—**

**சாலை செப்பனிடுதல்**

**வினா எண் 3114—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி உட்கோட்டம், வாலாந்தூர் சாலையிலிருந்து குறவகுடி வழியாக அய்யனார் குளம் செல்லும் சாலை மிகவும் பழுதடைந்துள்ளதைச் செப்பனிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

மொத்தம் 5.80 கி.மீ. நீளமுள்ள இச்சாலையில் பழுதடைந்துள்ள 5.00 கி.மீ. சாலைப் பகுதியைச் செப்பனிடத் தோராயமாக ரூ.20.00 இலட்சம் தேவைப்படும். நிதி நெருக்கடி காரணமாக, இப்பணியினைத் தற்போது செய்திட சாத்தியக்கூறுகள் இல்லை.

**11—**

**கள்ளச் சாராயத்தைத் தடுத்தல்**

**வினா எண் 3517—திருமதி சி.எம். சூரியகலா:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) கள்ளச் சாராயத்தைத் தடுக்க 1991-1996 காலத்தில் வி.ஏ.ஓ., கிராம உதவியாளர்கள், காவல் துறை உதவி ஆய்வாளர்கள்தான் பொறுப்பு என்ற ஆணையை அரசு திரும்பக் கொண்டுவருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். ஏற்கெனவே கொண்டு வந்துள்ளது.

(ஆ) 25-05-2001 அன்று சட்டமன்றப் பேரவையில் நிகழ்த்தப்பட்ட ஆளுநர் உரையில், ஏழை, எளிய மக்களின், குறிப்பாக மகளிரின் துயருக்குக் காரணமான கள்ளச் சாராய நடமாட்டத்தைத் தீவிரமாக ஒழித்துக் கட்ட இந்த அரசு உறுதி பூண்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. எனவே, அரசின் இந்தக் கொள்கையைக் கடைப்பிடிப்பதற்காக; கள்ளச் சாராயத்தை ஒழிக்கும் பொறுப்பினை கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் காவல் நிலைய அதிகாரிகள் வசம் ஒப்படைத்து 1991-96 காலத்தில் வெளியிடப்பட்ட அரசு ஆணைகள் மீண்டும் வலியுறுத்தப்பட்டதுடன், இதில் தவறுகள் நேரும் பட்சத்தில் அவர்களின்மீது கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று 13-07-2001 நாளிட்ட அரசு கடிதத்தில் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

**12—**

**பழுதடைந்த சாலை**

**வினா எண் 3528—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், ஆணைகுடி சொக்கலிங்கபுரம் சாலை பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) நிதி நெருக்கடி காரணமாகத் தற்போது இப்பணியினைச் செய்திடும் சாத்தியக்கூறுகள் இல்லை.*

**13—**

**புதிய அணை கட்டுதல்**

**வினா எண் 3930—திரு. ப. அரசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், மணமேல்குடி வட்டத்தில் மும்பாலை கிராமம் அருகே காட்டாற்றில் மும்பாலை அணைக்கட்டு கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

பரிசீலனையில் இல்லை; ஆனால் ஆய்வில் உள்ளது. சாத்தியக்கூறு இருப்பின், நிதி ஆதாரத்தைப் பொறுத்து, பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**14—**

**புதிய பாலம் கட்டுதல்**

**வினா எண் 3990—திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடையநல்லூர் தொகுதி, சொக்கம்பட்டி திரிகூடபுரம் செல்லும் பாதையில் காளமேகம் ஓடையில் பாலம் கட்டித் தரப்படுமா?



விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

இல்லை.

**15—**

**இலஞ்ச ஒழிப்புத் துறையின் நடவடிக்கை**

**வினா எண் 4037—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் இலஞ்ச ஒழிப்புத் துறையின் மூலம் 2000 ஆம் ஆண்டு எத்தனை அலுவலர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது?

(ஆ) அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) 2000 ஆம் ஆண்டில் 480 அரசு அலுவலர்கள்மீது ஊழல் தடுப்புக் கண்காணிப்புத் துறையால் புதிதாக வழக்குகள்/விசாரணைகள் பதிவு செய்யப்பட்டன.*

*(ஆ) இவ்வாறு புதிதாகத் தொடங்கப்பட்ட வழக்குகள்/விசாரணையில் 65 நபர்கள்மீது முன் விசாரணை (Preliminary Enquiry) பதிவு செய்யப்பட்டது. 113 நபர்கள்மீது விரிவான விசாரணை (Detailed Enquiry) பதிவு செய்யப்பட்டது. 158 நபர்கள் பொறி (Traps) வைத்துப் பிடிக்கப்பட்டனர். 144 நபர்கள்மீது குற்ற வழக்கு (Regular Cases) தொடரப்பட்டது.*

**16—**

**வாய்க்கால் செப்பனிடுதல்**

**வினா எண் 4043—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2002 மே 10

(அ) சீர்காழி ஒன்றியம், பெருந்தோட்டம் ஏரியிலிருந்து அதிகப் பாசனப் பரப்பை உள்ளடக்கிய பண்டாரவடை வாய்க்காலைத் தூர்வாரி செப்பனிடத் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி ஒன்றியம், பெருந்தோட்டம் ஏரியிலிருந்து அதிகப் பாசனப் பரப்பை உள்ளடக்கிய பண்டாரவடை வாய்க்காலைத் தூர்வாரிச் செப்பனிடத் திட்டம் தற்போது இல்லை.

**17—**

**தடுப்புச் சுவர் கட்டுதல்**

**வினா எண் 4045—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி மற்றும் ஒன்றியத்திலுள்ள திட்டை ஊராட்சி, சிவனார் வளாகம் கிராமத்திலுள்ள உப்பனாறு ஆற்றில் தடுப்புச் சுவர் கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி மற்றும் ஒன்றியத்திலுள்ள திட்டை ஊராட்சி, சிவனார் விளாகம் கிராமத்தில் உள்ள உப்பனாறு ஆற்றில் தடுப்புச் சுவர் கட்டும் திட்டம் அரசிடம் தற்சமயம் இல்லை.



2002 மே 10]

**18—**

**விவசாய மேம்பாடு**

**வினா எண் 4047—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி மற்றும் ஒன்றியம், மருதங்குடி ஊராட்சியில் பாசன வாய்க்காலான ஐவேலி வாய்க்காலை வெட்டி, விவசாயத்தை மேம்பாடு செய்ய அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி மற்றும் ஒன்றியம், மருதங்குடி ஊராட்சியில் பாசன வாய்க்காலான ஐவேலி வாய்க்கால் 2001-2002-ல் ரூ.1.20 இலட்ச செலவில் வாய்க்கால் ஆரம்பம் முதல் கடைமடை வரை தூர்வாரப்பட்டுள்ளது.

**19—**

**சாலைப் புதுப்பித்தல்**

**வினா எண் 4538—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, நெல்லையப்பபுரத்திலிருந்து கிருஷ்ணப்பேரி வரை சாலையைச் செப்பனிட்டுப் புதுப்பிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2002 மே 10

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**20—**

**சாலை செப்பனிடுதல்**

**வினா எண் 4544—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, அம்பாசமுத்திரம்-ஆலங்குளம் சாலையிலிருந்து ஆதிச்சாலை வரை (0/0-1/6 கி.மீ.) செப்பனிட்டு புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**21—**

**சாலை வசதி**

**வினா எண் 4560—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, குமாரசாமிபுரம் - ஆழ்வார் துலுக்கம்பட்டிக்கு (06-2/6 கி.மீ.) சாலை வசதியை மேம்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2002 மே 10]

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர் செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**22—**

**சாலைப் பராமரிப்பு**

**வினா எண் 4582—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, ரெட்டியார்புரம் (கி.மீ. 0/0-1/0 கி.மீ.) சாலையைப் புதுப்பித்துப் பராமரிப்புச் செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இச்சாலையில் 0.4 கி.மீ. நல்ல நிலையில் உள்ளது. மீதமுள்ள 0.6 கி.மீ. சாலைப் பகுதியை வரும் ஆண்டுகளில் அரசின் நிதி நிலைமைக்கேற்ப முன்னுரிமை அளித்துப் புதுப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**23—**

**சாலையைப் புதுப்பித்தல்**

**வினா எண் 4583—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, நைனார்தம்பிரான் காலனி கி.மீ. 0/0-1/0) சாலையைப் புதுப்பித்துப் பராமரிப்புச் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**24—**

**சாலைப் பராமரிப்பு**

**வினா எண் 4584—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, வீரவநல்லூர் - கிரிஅம்மாள்புரம் கி.மீ. 2/2-4/8) சாலையைப் புதுப்பித்து பராமரிப்பு செய்வதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**25—**

**சாலைப் புதுப்பித்தல்**

**வினா எண் 4596—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கண்டப்பட்டி (கி.மீ.0/0-1/0) கி.மீ. 1.0 சாலையைப் புதுப்பிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?



(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**26—**

**வாய்க்காலைச் சீரமைத்தல்**

**வினா எண் 5187—திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை அருகே உள்ள தேவரடியாள் குளத்தை தூர்வாரியும், அக்குளத்திற்கு வரும் வழங்கு வாய்க்காலைச் சீரமைத்து மராமத்து செய்யும் கருத்துருவை அரசு பரிசீலிக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை அருகே உள்ள தேவரடியாள்குளம் மற்றும் அதன் வழங்கு வாய்க்காலை சீரமைத்து மராமத்து செய்யும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**27—**

**நதிகள் தேசியமயம்**

**வினா எண் 5197—திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாட்டிலுள்ள அனைத்து நதிகளையும் தேசியமயமாக்கவும் நதிகளை இணைக்கவும் மத்திய அரசிடம் தமிழக அரசு வலியுறுத்துமா?

[2002 மே 10

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

நாட்டிலுள்ள அனைத்து நதிகளையும் தேசியமயமாக்கி நதிகளை இணைப்பது குறித்து மத்திய அரசுதான் ஒரு முடிவை எடுக்க வேண்டும். நதிகளை இணைப்பது குறித்து தேசிய நீர் மேம்பாட்டு முகமை ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது. இவ்வரசு இதற்கான ஒத்துழைப்பை நல்கி வருகிறது.

**28—**

**தண்ணீர் தட்டுப்பாடு**

**வினா எண் 5208—திரு. ப.வெ. தாமோதிரன்: மற்றும் திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பி.ஏ.பி. பாசனத் திட்டத்தின் மூலம் ஒரு மடை விட்டு ஒரு மடைக்கு, பாசனத்திற்குத் தண்ணீர் விட்டதில் கடைமடைப் பகுதி விவசாயிகளுக்குச் சரியாக தண்ணீர் பாய்வதில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இக்குறையைக் களைய அரசு எடுக்கும் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இதற்கு முன்பிருந்த பாசன முறையில் கடைக்கோடியில் இருந்த பாசனப் பகுதிகளுக்குத் தண்ணீர்த் தட்டுப்பாடு இருந்தது. பி.ஏ.பி. பாசனப் பகுதியில் ஒரு மடை விட்டு ஒரு மடை பாசன முறை மூலம் கடைக்கோடியில் உள்ள பாசனப் பகுதிகளுக்குத் தண்ணீர்த் தட்டுப்பாடு கூடுமானவரை குறைக்கப்பட்டுள்ளது.



2002 மே 10]

**29—**

**பாசன விரிவுத் திட்டம்**

**வினா எண் 5218—திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொங்கலூர் தொகுதியில் வாய்ப்பிருந்தும் பல காரணங்களால் பயன்பெறாமல் நின்றுவிட்ட பி.ஏ.பி. பாசனமில்லாத பகுதிகளுக்கு பி.ஏ.பி. திட்டத்தை விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

புதிய நிலங்களை ஆயக்கட்டில் சேர்த்து விரிவுபடுத்தும் திட்டக் கருத்துருக்கள் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**30—**

**பாசன சங்கங்கள்**

**வினா எண் 5242—திரு. மா.ப ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அமராவதி புது மற்றும் பழைய ஆயக்கட்டுப் பாசனப் பகுதிகளில் ஒவ்வொரு மடையிலும் வாய்க்கால்கள் உரிய பராமரிப்பின்றி பாசனத் தண்ணீர் வீணாவதைத் தடுக்க பாசனச் சங்கங்கள் ஏற்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அமராவதி புது மற்றும் பழைய ஆயக்கட்டுப் பகுதிகளில் பாசனச் சங்கங்கள் உள்ளன. அனைத்துச் சங்கங்களைப்

[2002 மே 10

புதுப்பித்தல் மற்றும் பதிவு பெறுதல் ஆகியவற்றிற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

31—

**அணை தூர்வாருதல்**

**வினா எண் 5248—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*அமராவதி அணையைத் தூர்வார அரசு உடன் நடவடிக்கை எடுக்க ஆவன செய்யுமா?*

விடை—

**'மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

அமராவதி அணை நீரினுள் உள்ள மணல் தூர்வாரும் அளவினைக் கண்டறிய, ஐ.ஹெச்.ஹெச்., பூண்டி ஆய்வு மையத்தின் மூலம் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால், ஒரு அணையைத் தூர்வாருவது சாத்தியக்கூறுகள் இல்லாத ஒரு பணி என்பதும் கவனத்துக்குக் கொண்டு வரப்படுகிறது.

32—

**நீர்வார சந்தை**

**வினா எண் 5267—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*நீர்ப்பாசனம் குறித்து விவசாயிகளிடம் பிரச்சினை ஏற்பட்டால், அக்குறையினை உடனுக்குடன் களைய பாசனப் பிரிவு அலுவலகங்களில் அதிகாரிகளும் விவசாயிகளும் அடிக்கடிக் கலந்துரையாட மடை வாரியாக முறையீட்டு நாள் வைக்க அரசு முன்வருமா?*



2002 மே 10]

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

விவசாயிகளின் பிரச்சினைகளைக் களைய வேண்டி அனைத்துப் பாசனப் பிரிவு அலுவலகங்களில் ஒவ்வொரு திங்கட்கிழமையும் நீர்வார சந்தைக் கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது.

33—

**சிறப்பு மராமத்துத் திட்டம்**

**வினா எண் 5598—திரு. ப. அரசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவில், மணமேல்குடி வட்டத்தில் உள்ள ஏரிகளைச் சிறப்பு மராமத்து செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவில் வட்டம், ஆவுடையார்கோவில் ஏரி ரூ.3.77 இலட்சத்திற்குத் தூர்வாரி புனரமைக்கப்பட்டுள்ளது. மற்ற ஏரிகள் நிதிநிலைமைக்கேற்ப தூர்வாரி மராமத்து செய்யப்படும்.

34—

**பாசன வசதி**

**வினா எண் 5599—திரு. ப. அரசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*கேரளாவில் மேற்குத் திசை நோக்கி ஓடி கடலில் கலந்து வீணாகும் ஆற்று நீரைத் திருப்பி, தமிழகத்தில் பாசன வசதி பெறும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?*

[2002 மே 10

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

கேரளாவில் மேற்குத் திசை நோக்கிப் பாய்ந்து கடலில் கலக்கும் ஆறுகளான பம்பா மற்றும் அச்சன்கோவில் ஆறுகளைத் திருப்பி வைப்பாற்றுடன் இணைத்து தமிழகத்தில் பாசன வசதி போன்ற பிற வசதிகள் கொண்ட திட்டம் தேசிய நீர் மேம்பாட்டு முகமையின் (National Water Development Agency) பரிசீலனையில் உள்ளது. இம்முகமை இதற்காகத் தயாரித்துள்ள அறிக்கைக்குத் தமிழ்நாடு அரசு அதன் இசைவை 1995 ஆம் ஆண்டு அளித்துள்ளது. கேரள அரசு அதன் இசைவை இன்னமும் அளிக்கவில்லை.

**35—**

**வாய்க்காலைச் செப்பனிடல்**

**வினா எண் 5755—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி ஒன்றியம், மருதங்குடி பஞ்சாயத்து ஆலஞ்சேரி, ஐவேலி கிராமங்களில் உள்ள ஐவேலி வாய்க்காலைத் தூர்வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி ஒன்றியம், மருதங்குடி பஞ்சாயத்து ஆலஞ்சேரி, ஐவேலி கிராமங்களில் உள்ள ஐவேலி வாய்க்காலில் தூர்வாரும் பணி 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.1.20 இலட்சம் மதிப்பீட்டில் செய்து முடிக்கப்பட்டது.



2002 மே 10]

**36—**

**கள்ளச்சாராய சாவுகள்**

**வினா எண் 5770—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, வளத்தி காவல் நிலைய எல்லைக்குள் கள்ளச் சாராயம் குடித்து இறந்தவர் எத்தனை பேர் என்று அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செஞ்சி தொகுதி, வளத்தி காவல் நிலையச் சரகத்திற்குட்பட்ட இடங்களில் கள்ளச் சாராயச் சாவுகள் ஏதும் நடைபெறவில்லை.

**37—**

**புதிய படித்துறை கட்டுதல்**

**வினா எண் 6085—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சொக்கநாதபுரம் ஊராட்சியில் உள்ள ஒத்தக்கடைப் பகுதி, செவலியான்குளத்திற்குப் படித் துறை கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சொக்கநாதபுரம் ஊராட்சியில் உள்ள செவலியான்குளம் ஏரியில் 1999-2000 ஆம் ஆண்டு

[2002 மே 10

மராமத்துப் பணிகள் செய்யும்போது படித்துறைகளும் கட்டி முடிக்கப்பட்டன.

38—

**விவசாயம் பாதிப்பு**

**வினா எண் 6088—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் :** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், புக்கரம்பை ஊராட்சியில் தண்ணீர் தேங்கி விவசாயம் பாதிப்பதைத் தடுக்க வடிகால் வாய்க்கால் ஏறபடுத்தித் தர அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியத்தில் 2000-2001 ஆம் ஆண்டு தூர்வாரும் திட்டத்தின்கீழ் பாதிரக் குளத்திலிருந்து கண்ணுடையான் ஏரிக்குச் செல்லும் வடிகால் வாரியையும், வீரசோழ குளத்திலிருந்து செறுபாலக்காடு ஏரிக்குச் செல்லும் வடிகால் வாரியையும் தூர்வாரும் பணிகள் செய்து முடித்த பிறகு, தற்சமயம் புக்கரம்பை ஊராட்சியில் தண்ணீர் தேங்கி விவசாயம் பாதிப்பது தடுக்கப்பட்டு விட்டது.

39—

**சாலையை விரிவுபடுத்துதல்**

**வினா எண் 6187—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாளையங்கோட்டை - அம்பாசமுத்திரம் சாலையில் மேலச் செவலிலிருந்து பத்தமடை வரையுள்ள 2 கி.மீ. சாலையை விரிவுபடுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2002 மே 10]

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

40—

**சாலை மேம்பாடு**

**வினா எண் 6490-திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் தொகுதி, பாபநாசம்-கபிஸ்தலம் சாலையிலிருந்து உள்ளிக்கடை செல்லும் தார்ச் சாலையில் அரசலாறு தென்கரையில் மேட்டுத்தெரு (ஷட்டர்ஸ்) பாலம் வரையில் கரை அரிப்பு ஏற்பட்டுள்ள இடங்களைச் சீரமைத்து, தடுப்புச் சுவர் கட்டி, சாலையை மேம்பாடு செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

பாபநாசம் தொகுதி, பாபநாசம் கபிஸ்தலம் சாலையிலிருந்து உள்ளிக்கடை செல்லும் தார்ச் சாலையில் அரசலாறு தென்கரையில் மேட்டுத்தெரு (ஷட்டர்ஸ்) பாலம் வரையில் கரை அரிப்பு ஏற்பட்டுள்ள இடங்களின் வேலையை, அரசின் நிதிநிலைமைக்கேற்ப செயலாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

41—

**கால்வாயை உயர்த்துதல்**

**வினா எண் 6494—திரு. வெ. கோவிந்தராஜ்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2002 மே 10

(அ) தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி தொகுதி, எண்ணேகோல் ஊராட்சியில் எண்ணேகோல்புதூர் கிராமம், தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே உள்ள வலதுபுறக் கால்வாயை மூன்று அடி உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி தொகுதிக்குட்பட்ட எண்ணேகோல் ஊராட்சியில் எண்ணேகோல்புதூர் கிராமத்தில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கேயுள்ள வலதுபுறக் கால்வாயை மேலும் மூன்று அடி உயர்த்தும் திட்டம் எதுவும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**42—**

**ஏரி சீரமைப்பு**

**வினா எண் 6571—திரு. எஸ்.எம். பாலன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) லால்குடி தொகுதி, சங்கேந்தி கிராமத்தின் ஏரியைத் தூர்வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நிதிநிலைமைக்கு ஏற்ப செய்யப்படும்.



2002 மே 10]

**43—**

**புற வழிச்சாலை அமைத்தல்**

**வினா எண் 6603—திரு. வி.ஆர். ராஜாங்கம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் நகரத்தைச் சுற்றியுள்ள பகுதியில் புறவழிச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

இல்லை.

**44—**

**தடுப்புச் சுவர் கட்டுதல்**

**வினா எண் 7233—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி மற்றும் பேரூராட்சி அண்ணாநகர் பூனைக்குத்தி ஆற்றங்கரையில் தடுப்புச் சுவர் அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி மற்றும் பேரூராட்சி அண்ணாநகர் பகுதியில் பூனைக்குத்தியாற்றின் கரையில் தடுப்புச் சுவர் அமைக்கும் செயற்குறிப்பு ஏதுமில்லை.

[2002 மே 10

45—

**பாசன வசதி**

**வினா எண் 7911—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கேரளாவில் மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளைத் தமிழ்நாட்டுக்குத் திருப்பி விடுவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கேரளாவில் மேற்குத் திசை நோக்கி, கடலில் கலக்கும் ஆறுகளான பம்பா மற்றும் அச்சன்கோவில் ஆறுகளைத் திருப்பி, வைப்பாற்றுடன் இணைத்து, தமிழகத்தில் பாசன வசதி, குடிநீர் வசதி கிடைக்கக்கூடிய திட்டம் தேசிய நீர் மேம்பாட்டு முகமையின் ஆய்வில் உள்ளது. இதற்கான ஒத்துழைப்பை இவ்வரசு அளித்து வருகிறது.

46—

**ஏரி பழுதுபார்த்தல்**

**வினா எண் 8150—திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம் மற்றும் ஒன்றியம் சோகத்தூர் பஞ்சாயத்தில் உள்ள ஏரி பழுதடைந்து உள்ளதை நிரந்தரமாகப் பழுதுபார்த்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம் மற்றும் ஒன்றியம், சோகத்தூர் பஞ்சாயத்தில் உள்ள ஏரியில் மராமத்துப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, சீர் செய்யப்பட்டு, பராமரிக்கப்பட்டு நல்ல நிலையில் உள்ளது.



2002 மே 10]

47—

**ஏரி சீரமைப்பு**

**வினா எண் 8680—திருமதி ஆர். சசிகலா:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணராயபுரம் வட்டம், உள்வீரராக்கியத்தில் இருக்கும் ஏரியைச் சீரமைத்து, கரையைப் பலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

கிருஷ்ணராயபுரம் வட்டம், பாலாராஜபுரம் கிராமத்தில் உள்ள வீரராக்கியம் ஏரி பொதுப் பணித் துறையினரால் 1998-99 ஆம் ஆண்டு ரூ.10.00 இலட்சத்தில் தூர்வாரப்பட்டு, கரை சீரமைக்கப்பட்டது. தற்போது இந்த ஏரியின் கரை தரத்தில் உள்ளது.

48—

**கண்மாய் சீரமைப்பு**

**வினா எண் 13923-திரு. மா. இராஜசேகர்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராஜபாளையம் தொகுதிக்குட்பட்ட விவசாயக் கண்மாய்களைத் தூர்வாரி கண்மாயின் கொள்ளளவை அதிகரித்து கண்மாயைச் சீரமைக்கும் பணியை மேற்கொள்ள அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

அரசின் நிதிநிலைமைக்கேற்ப பணி மேற்கொள்ளப்படும்.

49—

## நிதிச் சுமை

**வினா எண் 289—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக வழங்கப்படும் சம்பளம், மாநில அரசு மற்றும் மின் வாரிய ஊழியர்களுக்கும் வழங்கப்படும்போது, வீட்டு வாடகைப்படி மட்டும் குறைவாக வழங்கப்படுவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்த வித்தியாசத்தைச் சரி செய்ய மத்திய அரசிற்கு இணையாக வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம், மாநில அரசு ஊழியர்களுக்கும் மத்திய அரசுக்கு இணையான வீட்டு வாடகைப்படி வழங்க, தற்போதுள்ள கடுமையான நிதிச் சுமை மற்றும் நிதி நெருக்கடி காரணமாக இயலாததாகவே இருக்கிறது.

50—

## புதிய கருவூலம்

**வினா எண் 380-திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நிதி மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டத்திற்கு எடப்பாடி நகரைத் தலைமையிடமாகக் கொண்டு துணைக் கருவூலம் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



விடை—

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்:**

(அ) சங்ககிரி சார்நிலைக் கருவூலத்தைப் பிரித்து எடப்பாடியில் புதியதாக ஒரு சார்நிலைக் கருவூலம் அமைத்தால், எடப்பாடி சார்நிலைக் கருவூலத்தில் வேலைப்பளுவும் கணிசமான அளவுக்குக் குறைந்துவிடும். இவ்வாறு இரண்டு இடங்களிலும் போதுமான வேலைப்பளு இல்லாமல் போவதுடன், அரசுக்கு இதனால் சுமார் ரூ.11.75 இலட்சம் தொடர் செலவு ஏற்படும் நிலையும் உருவாகும். சங்ககிரி, எடப்பாடி ஆகிய இரு வட்டங்களுக்கான கருவூலப் பணியினை சங்ககிரியிலுள்ள சார்நிலைக் கருவூலமே மேற்கொள்ள இயலும் என்பதால், புதிதாக சார்நிலைக் கருவூலம் ஒன்றினை எடப்பாடியில் அமைக்க வேண்டிய அவசியமில்லை என்று அரசு கருதுகிறது.

(ஆ) இக்கேள்விக்கு விடையளிக்கும் அவசியம் எழவில்லை.

51—

## புதிய வாக்குச் சாவடி

**வினா எண் 1180—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு நிதி மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், எறவார்பட்டி பஞ்சாயத்து கவுல்பட்டிக்குத் தனியாக அனைத்து தேர்தல்களுக்கும் வாக்குச் சாவடி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்:**

01-01-2002 ஆம் நாளை, தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியல்களில் தீவிர சிறப்புத் திருத்தம் மேற்கொள்ளுமாறு இந்தியத் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. இதன்படி, தற்பொழுதுள்ள துணை வாக்குச் சாவடிகள் புதிய வாக்குச் சாவடிகளாக மாற்றப்பட்டுத் தொடர் எண்கள் கொடுக்கப்பட வேண்டும் என்றும், வாக்காளர் பட்டியலில் உள்ள பகுதிகளைப் பிரிப்பதன் மூலம், தற்போதுள்ள துணை

[2002 மே 10

வாக்குச் சாவடிகள் முதல்நிலை வாக்குச் சாவடிகளாக மாற்றப்பட்டு அடுத்த பாகத்தின் எண் கொடுக்கப்பட வேண்டுமெனவும் இந்தியத் தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது. தற்பொழுதுள்ள வாக்குச் சாவடிகளை விரிவாகச் சீரமைக்க நடவடிக்கை எடுப்பதற்கு இந்தியத் தேர்தல் ஆணையம் பணித்துள்ளது. எனவே, 25-03-2002 அன்று இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்ட பின்னர், வாக்குச் சாவடிகள் குறித்து ஆய்வு செய்யப்படும்.

**52—**

### வாக்காளர் பட்டியல்

**வினா எண் 1181—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு நிதி மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறைஅமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி ஒன்றியம், மானூத்து பஞ்சாயத்து, காராம்பட்டி பொது மக்கள் ராஜாக்காபட்டிக்கு வாக்கு அளிக்கச் செல்வதால் காராம்பட்டி வாக்காளர்களை எருமார்பட்டி வாக்குச் சாவடி பட்டியலில் சேர்க்க அனுமதி வழங்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்.**

*01-01-2002* ஆம் நாளை, தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியல்களில் தீவிர சிறப்புத் திருத்தம் மேற்கொள்ளுமாறு இந்தியத் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. இதன்படி, தற்பொழுதுள்ள துணை வாக்குச் சாவடிகள் புதிய வாக்குச் சாவடிகளாக மாற்றப்பட்டுத் தொடர் எண்கள் கொடுக்கப்பட வேண்டும் என்றும், வாக்காளர் பட்டியலில் உள்ள பகுதிகளைப் பிரிப்பதன் மூலம், தற்போதுள்ள துணை வாக்குச் சாவடிகள் முதல்நிலை வாக்குச் சாவடிகளாக மாற்றப்பட்டு அடுத்த பாகத்தின் எண் கொடுக்கப்பட வேண்டுமெனவும் இந்தியத் தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது. தற்பொழுதுள்ள வாக்குச் சாவடிகளை விரிவாகச் சீரமைக்க நடவடிக்கை எடுப்பதற்கு இந்தியத் தேர்தல் ஆணையம் பணித்துள்ளது. எனவே, 25-03-2002 அன்று இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்ட பின்னர், வாக்குச் சாவடிகள் குறித்து ஆய்வு செய்யப்படும்.



2002 மே 10]

**53—**

### வாக்காளர் பட்டியல் மாற்றம்

**வினா எண் 1182—திரு. லா.சந்தானம்,** மாண்புமிகு நிதி மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலமபட்டி தொகுதி, உசிலம்பட்டி ஒன்றியம் நடுபட்டி பஞ்சாயத்து, பெருமாள்கோயில்பட்டி பொதுமக்கள் வாக்களிக்க வெள்ளமலைப்பட்டி செல்வதால் அருகிலுள்ள தாதம்பட்டி வாக்குச் சாவடிப் பட்டியலில் சேர்க்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்.**

*01-01-2002* ஆம் நாளை, தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியல்களில் தீவிர சிறப்புத் திருத்தம் மேற்கொள்ளுமாறு இந்தியத் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. இதன்படி, தற்பொழுதுள்ள துணை வாக்குச் சாவடிகள் புதிய வாக்குச் சாவடிகளாக மாற்றப்பட்டுத் தொடர் எண்கள் கொடுக்கப்பட வேண்டும் என்றும், வாககாளர் பட்டியலில் உள்ள பகுதிகளைப் பிரிப்பதன் மூலம் தற்போதுள்ள துணை வாக்குச் சாவடிகள் முதல்நிலை வாக்குச் சாவடிகளாக மாற்றப்பட்டு, அடுத்த பாகத்தின் எண் கொடுக்கப்பட வேண்டுமெனவும் இந்தியத் தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது. தற்பொழுதுள்ள வாக்குச் சாவடிகளை விரிவாகச் சீரமைக்க நடவடிக்கை எடுப்பதற்கு இந்தியத் தேர்தல் ஆணையம் பணித்துள்ளது. எனவே, 25-03-2002 அன்று இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்ட பின்னர், வாக்குச் சாவடிகள் குறித்து ஆய்வு செய்யப்படும்.

**54—**

### ஓய்வூதியம்

**வினா எண் 4904—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு நிதி மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓய்வு பெற்ற அலுவலர்கள், அவர்களின் ஓய்வு பெற்ற பணப்பலன்களை உடனடியாகப் பெற முடியவில்லை என்று முறையீடுகள் அரசுக்கு வந்துள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அதற்கான அரசின் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு ஓய்வூதிய விதி 51 மற்றும் 61-ன்படி ஓய்வூதியப் படிவங்களைத் தயார் செய்யும் வேலையை அலுவலர்கள் ஓய்வு பெறுவதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாகவே செய்ய வேண்டும். மேலும், அலுவலர்கள் ஓய்வு பெறுவதற்கு ஆறு மாதங்களுக்கு முன்பாகவே மாநிலக் கணக்காயருக்கு ஓய்வூதிய விண்ணப்பங்கள், சம்பந்தப்பட்ட அலுவலகத் தலைமையால் அனுப்பப்பட வேண்டும். இதற்கான விதிமுறைகள் தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978-ல் உள்ளன. மேலும் நிதி (ஓய்வூதியம்) துறையின் 17-09-1999 ஆம் நாளிட்ட அரசு கடிதம் எண் 21212/ஓய்வூதியம்/89-2-ல் மத்திய அரசு வெளியிட்ட அறிவுரைகளைப் பின்பற்றி ஓய்வூதியப் பலன்களை விரைந்து வழங்குவதற்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

**55—**

## போக்குவரத்துப் படி

**வினா எண் 5347—திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** மாண்புமிகு நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மைய அரசு அலுவலர்களுக்குப் போக்குவரத்துப் படி வழங்குவதுபோல், மாநில அரசின் அலுவலர்களுக்கும் வழங்க அரசு பரிசீலிக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) பதில் எழவில்லை.



**56—**

## தேர்வுநிலை நகராட்சி

**வினா எண் 6768—திருமதி வி. சிவகாமி:** மாண்புமிகு நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாராபுரம் தேர்வுநிலை நகராட்சியாகியும் இன்னும் அப்பகுதி அரசு ஊழியர்களுக்கு வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி இதுவரை வழங்கப்படாத காரணம் என்ன?

(ஆ) எந்தத் தேதியில் வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்:**

(அ) ஒரு நகராட்சி தேர்வுநிலை நக்ராட்சியாகவோ அல்லது சிறப்புநிலை நகராட்சியாகவோ மாறினால், அதற்குத் தகுந்தபடி அரசு ஊழியர்களுக்கு வீட்டு வாடகைப்படி உயர்த்தி வழங்கப்படுவதில்லை.

(ஆ) பதில் எழவில்லை.

**57—**

## வாக்காளர் பட்டியல்

**வினா எண் 6853—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாக்காளர் பட்டியலில் விடுபட்ட வாக்காளர்களைச் சேர்க்கவும், புதிதாகச் சேர்க்கப்படும் வாக்காளர்களுக்கு வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கவும் சிறப்புத் திருத்தப் பணி ஆரம்பிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்:**

1950 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், பிரிவு 21-ன்படி வாக்காளர் பட்டியல் திருத்தம் குறித்து அறிவிக்கும் அதிகாரம் இந்தியத் தேர்தல் ஆணையத்திற்கே உண்டு. இது குறித்து முடிவெடுக்கும் அதிகாரம் மாநில அரசின் அதிகார வரம்பிற்குள் இல்லை. மேலும் 1-1-2002-ஐ, தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியலில் தீவிர சிறப்புத் திருத்தத்திற்கான கால அட்டவணையை இந்தியத் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. முதற்கட்டப் பணிகள் 13-8-2001 முதல் தொடங்கியுள்ளன. வீடு வீடாகச் சென்று கணக்கெடுக்கும் பணி 5-11-2001 முதல் 4-12-2001 வரை நடைபெறவிருக்கின்றது. அவ்வமயம் தகுதியுள்ள வாக்காளர்கள் அனைவரின் பெயர்களும் பட்டியலில் சேர்க்கப்பட வாய்ப்பு ஏற்படுகின்றது. எனவே, தற்போதுள்ள வாக்காளர் பட்டியலில் விடுபட்டுள்ள வாக்காளர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட இத்திருத்தம் ஏதுவாகின்றது. இறுதி வாக்காளர் பட்டியல் 25-3-2002 அன்று வெளியிடப்பட்ட பின்னர், அடையாள அட்டை வழங்கப்படாமல் விடுபட்ட வாக்காளர்களுக்கும், புதிதாகச் சேர்க்கப்பட்ட வாக்காளர்களுக்கும் அடுத்த சுற்றில் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கும் பணிக்கான வழிவகைகள் இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுரையின்படித் தனியாக ஆராய்ந்து முடிவெடுக்கப்படும்.

**58—**

**கட்டாய ஓய்வுத் திட்டம்**

**வினா எண் 7591—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய அரசின் பொது நிறுவனங்களில் கட்டாய ஓய்வு அளிக்கும் திட்டத்தைச் செயல்படுத்துவது போல் மாநில அரசின் பொது நிறுவனங்களிலும் செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்:**

(அ) செயல்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) 5-1-1978-லிருந்து இதைச் செயல்படுத்த ஆணைகள் உள்ளன.



**59—**

**மண்டல வாரி**

**வினா எண் 2720—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடந்த அரசு சட்டக் கல்லூரி மாணவர் சேர்க்கையில் அறிமுகப்படுத்திய எந்தத் தொழிற் படிப்பிலும் இல்லாத மாணவர்களைப் பாதிக்கும் மண்டல வாரி (Regional system) சேர்க்கை முறையை இந்த அரசு தொடருமா?

விடை—

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டத் துறை அமைச்சர்:**

ஆம்.

**60—**

**சட்ட இதழ்**

**வினா எண் 7964—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உயர் நீதிமன்றம் வெளியிட்டு வரும் தீர்ப்புத் திரட்டினை, மாதமிரு முறை வெளிவரும் சட்ட இதழை, இலவசமாகச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதுபற்றிய விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**61—**

**புதிய நீதிமன்றம்**

**வினா எண் 13058—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில் தருமபுரியில் தலைமைக் குற்றவியல் மற்றும் உரிமையியல் நீதிமன்றம் தொடங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* தருமபுரி மாவட்டம், தருமபுரியில் ஒரு மாவட்ட உரிமையியல் நீதிமன்றமும், இரண்டு குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களும் ஏற்கெனவே இயங்கி வருகின்றன. ஆகவே, மேலும் ஒரு தலைமைக் குற்றவியல் மற்றும் உரிமையியல் நீதிமன்றம் ஏற்படுத்தும் அவசியம் எழவில்லை.

**62—**

### ஓய்வூதியத் திட்டம்

**வினா எண் 13115—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* வழக்கறிஞர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* இல்லை.

**63—**

### இலவச உணவு

**வினா எண் 362—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* பக்தர்களுக்குத் திருப்பதி—திருமலையில் ஒருவேளை உணவு இலவசமாக வழங்கப்படுவதுபோல பழனி தண்டாயுதபாணி திருக்கோயிலிலும் வழங்க அரசு பரிசீலிக்குமா?

*(ஆ)* ஆம் எனில், அதன் விவரம் என்ன?





விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* பக்தர்களுக்குத் திருப்பதி—திருமலையில் ஒருவேளை உணவு இலவசமாக வழங்கப்படுவதுபோல பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலிலும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**64—**

### தமிழில் அர்ச்சனை

**வினா எண் 368—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டிலுள்ள கோயில்களில் தமிழில் அர்ச்சனை செய்யும் ஓதுவார்களின் பணிக்குக் கல்வித் தகுதி மற்றும் வயது வரம்பு அரசு நிர்ணயம் செய்துள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

ஓதுவார்கள் நியமனத்திற்கு கல்வித் தகுதி ஏதும் நிர்ணயம் செய்யப்படவில்லை. தேவாரப் பாடசாலைகளில் பன்னிரு திருமுறைகள், வேதபாராயணம், தேவாரம், திருவாசகம் ஆகியவற்றை முறையாகப் பயின்று தேர்ச்சி பெற்றுச் சான்றிதழ் பெற்றவர்களே திருக்கோயில்களில் ஓதுவார்களாக நியமனம் செய்யப்படுகிறார்கள். திருக்கோயில் பணியாளர் நியமனத்திற்கு 25 வயதிற்கு மேற்பட்டவராகவும், 45 வயதிற்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டுமென்ற விதிகளின்படியே திருக்கோயிலில் பணியாற்றும் ஓதுவார்களும் மேற்படி வயது வரம்பிற்கு உட்பட்டு நியமனம் செய்யப்பட்டு வருகின்றனர்.

**65—**

### கோயில் திருப்பணி

**வினா எண் 543—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2002 மே 10

மன்னார்குடி நகரிலுள்ள மீனாட்சியம்மன் ஆலயத்தைப் புதுப்பித்துக் குடமுழுக்குச் செய்திட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

மன்னார்குடி நகரிலுள்ள மீனாட்சியம்மன் ஆலயத்தைப் புதுப்பித்துக் குடமுழுக்குச் செய்ய இத்திருக்கோயிலில் போதிய நிதிவசதி இல்லாததால் உபயதாரர்களால் அளிக்கும் நிதி உதவியைக்கொண்டு இத்திருப்பணி வேலைகள் படிப்படியாகச் செய்யப்படும்.

**66—**

**கிராம தேவதைகள்**

**வினா எண் 2225—திரு பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செவி வழிச் செய்திகள் மூலமும், வழக்கக் கதைகள் மூலமும் அறியப்படும் அனைத்துக் கிராம தேவதைகளின் வரலாறுகளைத் தொகுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செவி வழிச் செய்திகள் மூலமும் வழக்கக் கதைகள் மூலமும் அறியப்படும் அனைத்துக் கிராம தேவதைகள் வரலாறுகளைத் தொகுக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

**67—**

**சுற்றுலா**

**வினா எண் 2234-திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2002 மே 10]

தஞ்சை மாவட்டத்திலுள்ள அனைத்துத் திருத்தலங்களுக்கும் சென்று வர சென்னையிலிருந்து இந்து அறநிலையத் துறை மூலம் சுற்றுலாப் பேருந்து விடப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

தஞ்சை மாவட்டத்திலுள்ள அனைத்துத் திருத்தலங்களுக்கும் சென்று வருவதற்குச் சென்னையிலிருந்து இந்து அறநிலையத் துறை மூலமாகச் சுற்றுலாப் பேருந்து இயக்கிடத் திட்டம் ஏதுமில்லை.

**68—**

**சினிமா படப்பிடிப்பு**

**வினா எண் 2243—திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயில்களில் சினிமாப் படப்பிடிப்பு நடத்த அரசு தடை செய்துள்ளதா?

(ஆ) இல்லையெனில், பரிசீலனை செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) படப்பிடிப்புக்கு அனுமதிக்கப்படும் நேர்வுகளில் பல நிபந்தனைகளுடன் படப்பிடிப்புக்கு அனுமதி வழங்கப்படுகிறது. எனவே திருக்கோயில்களில் சினிமாப் படப்பிடிப்பு நடத்தத் தடையேதும் பிறப்பிக்கவேண்டிய அவசியம் இல்லை.

69—

### கோயில் சீரமைப்பு

**வினா எண் 2815—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், பண்ருட்டி வெங்கிடாம்பேட்டையிலுள்ள பெருமாள் கோயில் சீர் செய்யப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், வெங்கிடாம்பேட்டை அருள்மிகு வேணுகோபாலசுவாமி பெருமாள் திருக்கோயில் அமைந்துள்ள ஊர் கிராமமாக இருப்பதால் உபயத் திருப்பணி செய்ய உபயதாரர்கள் எவரும் முன்வரவில்லை. இந்நிலையில் திருப்பணிக்குத் தேவையான தொகை முழுவதும் மானியமாக வழங்கினால் மட்டுமே, இத்திருக்கோயிலைத் திருப்பணி செய்ய இயலும், என்ற நிலை உள்ளது. பொது மக்கள் மேற்படி திருக்கோயிலைத் திருப்பணி செய்ய முன்வந்தால், அவர்களின் பங்களிப்பு மற்றும் ஒத்துழைப்புடன் இத்திருக்கோயிலைத் திருப்பணி செய்ய மானியம் வழங்குவது குறித்துப் பரிசீலித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

70—

### கோயில் நிலங்கள்

**வினா எண் 3226—திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயில் நிலங்களில் பயிர் செய்யும் குத்தகைதாரர்களுக்குச் சுழற்சி முறையில் பயிர் செய்ய அனுமதி அளிக்க அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

கோயில் நிலங்களில் பயிர் செய்யும் குத்தகைதாரர்களுக்குச் சுழற்சி முறையில் பயிர் செய்ய அரசு அனுமதி இல்லை.





71—

### கோயில் பராமரிப்பு

**வினா எண் 3851—திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடையநல்லூர் தொகுதி, அய்யாபுரம் அருந்ததியர் மக்களின் அருள்மிகு சின்னத்தம்பி கோயிலைப் பராமரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

72—

### தார்ச்சாலை அமைத்தல்

**வினா எண் 4373—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கல்லிடைக்குறிச்சியில் குமரக்கோயில் ரதவீதி, வடக்கு மாடவீதி, தெற்கு மாடவீதி மற்றும் சன்னதித் தெரு ஆகியவற்றிற்கு இந்து அறநிலையத் துறை மூலம் தார்ச் சாலை அமைக்க செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, கல்லிடைக்குறிச்சியில் குமரக்கோயிலைச் சுற்றியுள்ள ரதவீதி, வடக்கு மாடவீதி, தெற்கு மாடவீதி மற்றும் சன்னதித் தெரு ஆகிய தெருக்கள் கல்லிடைக்குறிச்சி தேர்வுநிலைப்

பேரூராட்சிக்குச் சொந்தமானதாகும். மேற்படி வீதிகளின் பராமரிப்புகளை வழக்கமாகக் கல்லிடைக்குறிச்சி தேர்வுநிலைப் பேரூராட்சியே இதுவரை செய்து வருகிறது. எனவே, இந்து அறநிலையத் துறை மூலம் மேற்படி வீதிகளுக்குத் தார்ச் சாலை அமைக்க அரசின் பரிசீலனையில் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

**73—**

## புதிய கோயில் கட்டுதல்

**வினா எண் 6726—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* போரணாம்பட்டு தொகுதி, ஆலங்காயம் ஒன்றியம், தேவஸ்தானம் கிராமம், கோயில் கட்டி கும்பாபிஷேகம் செய்ய அரசிடம் திட்டம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* வேலூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், பேர்ணாம்பட்டு தொகுதி, தேவஸ்தானம் கிராமம் அ/மி. அத்தீஸ்வரர் திருக்கோயில் திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன. பணி முடிவடைந்தவுடன் கும்பாபிஷேகம் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

**74—**

## ஆலய வளர்ச்சி

**வினா எண் 7059—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* உடுமலைப்பேட்டை மாரியம்மன் கோயிலுக்குச் சொந்தமான காலி இடங்களைக் குடியிருப்புகளாக மாற்றி ஆலய வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?



விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ)* உடுமலைப்பேட்டை அ/மி. மாரியம்மன் கோயிலுக்குச் சொந்தமான காலி இடங்கள் குறித்து வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. மேலும் தற்போது மேற்படி திருக்கோயிலில் நிதி ஆதாரங்கள் போதுமானதாக இல்லை. எனவே, திருக்கோயிலுக்குச் சொந்தமான காலியிடங்களைக் குடியிருப்புகளாக மாற்றி ஆலய வளர்ச்சிப் பணிகளை உடன் மேற்கொள்ள இயலாது.

*(ஆ)* நீதிமன்றத்தில் நடைபெறும் வழக்கு முடிவடைந்த பின்னர், திருக்கோயில் நிதியாதாரங்களைப் பொறுத்து நடவடிக்கை எடுக்கப்படும்.

**75—**

## சுகாதாரக் கேடு

**வினா எண் 10156—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தஞ்சை பெரிய கோயிலின் சுற்றுச்சுவரினை ஒட்டியுள்ள அகழிகளில் குப்பைகளைக் கொட்டுவதால் சுகாதாரக் கேடு ஏற்பட்டு பக்தர்களும், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் பாதிக்கப்படுவதை அரசு அறியுமா?

*(ஆ)* ஆம் எனில், அரசு மேற்கொள்ளும் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தானத்தைச் சேர்ந்த அருள்மிகு பெருவுடையார் கோயிலைச் சுற்றியுள்ள அகழியில் குப்பைகளைக் கொட்டி சுகாதாரக் கேடுகளை விளைவிக்கக்கூடாது என்று, சம்பந்தப்பட்ட திருக்கோயில் பணியாளர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாகத்தால் குப்பைகள் கொட்டுவதற்குத் தனியாக இடம் ஒதுக்கப்பட்டு, அதில் குப்பைகள் கொட்டப்பட்டு வருகிறது.

[2002 மே 10

76—

## கோயில் திருப்பணி

**வினா எண் 10385—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், கண்டிரமாணிக்கம் ஊராட்சி, ஸ்ரீகன்னி முத்துமாரியம்மன் கோயிலைக் கட்டி முடிக்க மற்றும் திருப்பணி செய்ய அறநிலையத் துறை மூலம் உதவித் தொகை கொடுப்பதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

இல்லை.

77—

## அறங்காவலர்கள்

**வினா எண் 10484—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பெண்கள் அறங்காவலர்களாக நியமிக்கப்படுகிறார்களா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். தமிழ்நாட்டில் பெண்கள் அறங்காவலர்களாக நியமனம் செய்யப்படுகிறார்கள்.

(ஆ) இந்து சமய அறநிலைய ஆட்சித் துறைக் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களில், சட்டப் பிரிவு 26-இன்கீழ் குறிப்பிட்டுள்ள



2002 மே 10]

தகவின்மையில்லாத அனைவரும், பெண்கள் உட்பட, அறங்காவலர்களாக நியமனம் செய்யப்படுகிறார்கள்.

78—

## கோயில் புதுப்பித்தல்

**வினா எண் 10534—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதிக்குட்பட்ட புலியூர் காட்டுச்சாகையிலுள்ள பழுதடைந்துள்ள முருகன் கோயிலைப் புதுப்பித்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதிக்கு உட்பட்ட புலியூர் காட்டுசாகையில் பழுதடைந்துள்ள முருகன் திருக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் ஆளுகையின் கீழ் இல்லை என்பதாலும், ஆதிதிராவிடர்கள் வாழும் பகுதியில் அமைந்திருக்கவில்லை என்பதாலும், இத்திருக்கோயிலைப் புதுப்பிக்க இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை மூலம் நிதியுதவி வழங்க வழிவகையில்லை.

79—

## கோயில் பாதுகாப்பு

**வினா எண் 10803—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் அதிகமாகத் தங்க, வைரங்கள் உள்ள கோயில்களில் நகைகள், சிலைகளைப் பாதுகாக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை —

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருக்கோயில்களில் உள்ள தங்கத்தினாலும், வைரத்தினாலும் ஆன நகைகள் மற்றும் சிலைகள் கீழ்க்காணும் பொதுவான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டு பாதுகாக்கப்பட்டு வருகின்றன:—

(1) கள்வர் எச்சரிக்கை மணி பொருத்துதல்

(2) கோள் சொல்லிக் கடிகாரம் (Tell Tale Clock) நிறுவுதல்

(3) பாதுகாப்புப் பெட்டக வசதி செய்தல்

(4) தொட்டிப்பூட்டு முறை அமல் செய்தல்

(5) இரவு நேரங்களில் ஒரு மணிக்கு ஒரு முறை மணி அடித்து ஒலி எழுப்புதல்

(6) திருக்கோயில்களில் விலையுயர்ந்த திருவாபரணங்கள் காப்பீடு செய்தல்

(7) திருக்கோயில்களில் இரவு மற்றும் பகல் நேரக் காவலர் நியமனம் செய்தல்.

**80—**

### கோயில் திருப்பணி

**வினா எண் 10909—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், கைலாசநாதர் ஆலயத்தைப் புதுப்பிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?



விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் (1) தாரமங்கலம் அ/மி. கைலாசநாதர் திருக்கோயில், (2) பூலாம்பட்டி அ/மி. கைலாசநாதர் திருக்கோயில் என்ற இரண்டு திருக்கோயில்கள் உள்ளன. இவற்றில் தாரமங்கலம் அ/மி. கைலாசநாதர் திருக்கோயில் புதுப்பிக்கப்பட்டு 19-8-1994-ல் குடமுழுக்கு நடைபெற்றுள்ளது.

பூலாம்பட்டி அ/மி. கைலாசநாதர் திருக்கோயில் குடமுழுக்கு 1984-ல் நடைபெற்றது. தற்போது உபயதாரர்கள் மூலம் மூன்று விமானத் திருப்பணிகள் நடத்தவும், குடமுழுக்குச் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

**81—**

### தார்ச் சாலை அமைத்தல்

**வினா எண் 12031—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி கொழுந்துமாமலை ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்குச் செல்லும் சாலையைத் தார்ச் சாலையாக அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசின் பரிசீலனையில் இல்லை

82—

### கிரிவலம்

**வினா எண் 12203—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் ஆலயத்திற்குப் பௌர்ணமி அன்று கிரிவலம் வரும் பக்தர்களுக்குப் போதுமான அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

கிரிவலம் வரும் பக்தர்களுக்குக் குடிநீர் வசதி, கழிவறை வசதி மற்றும் ஓய்வெடுக்க இருக்கை வசதி ஆகியவை செய்யப்பட்டுள்ளன.

83—

### கிராமக் கோயில்

**வினா எண் 12635—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதியில், சென்னை சாலையில் அமைந்துள்ள முத்தையா நகரிலுள்ள முத்துமாரியம்மன் கோயிலுக்கு முதலமைச்சரின் கிராமக் கோயில் பராமரிப்புத் திட்டத்தின்கீழ் ஒரு கால பூசை நடத்தித் தந்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதியில், சென்னை சாலையில் அமைந்துள்ள முத்தையா நகரிலுள்ள முத்துமாரியம்மன் திருக்கோயில்



இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் ஆளுகையின்கீழ் இல்லாத திருக்கோயிலாகும். இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் ஆளுகையின்கீழ் இல்லாத திருக்கோயில்களுக்கு ஒரு கால பூசைத் திட்டத்தின்கீழ் நிதியுதவி வழங்க வழிவகையில்லை.

84—

### சுகாதாரக் கேடு

**வினா எண் 12779—திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனிக்கு அன்றாடம் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருவதால் ஏற்படும் சுகாதாரக் கேட்டினைக் களைய, தண்டாயுதபாணி தேவஸ்தான நிதியிலிருந்து சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்து, சுகாதாரத்தைப் பாதுகாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பல்வேறு விதமான சுகாதாரப் பணிகள், பழனி அ/மி. தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. திருக்கோயில் நிதியிலிருந்து அரசாணைப்படி 75% தொகை நகராட்சிக்கு பங்குத் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. இது தவிர, பழனி திருக்கோயில் பொறுப்பில் இருக்கும் பழனி மலைக்கோயில் படிப்பாதைகள், யானைப்பாதை, கிரிவீதி, குடமுழுக்கு நிலைவரங்கம், வின்ச் நிலையம் ஆகிய இடங்களைச் சுத்தமாகவும், சுகாதாரமாகவும் பேண 1-2-2002 முதல் 31-1-2003 வரையுள்ள காலத்திற்குச் பொள்ளாச்சியை, சேர்ந்த தனியார் நிறுவனத்திடம் ரூ. 87,290/- செலவில் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆண்டு தோறும் கணிசமான தொகை சுகாதாரத் தலைப்பில் வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீட்டின் அடிப்படையில் செய்யப்பட்டு வருவதால், சுகாதாரக் கேட்டினைக் களைய திருக்கோயில் நிதியிலிருந்து தனியே சிறப்பு ஒதுக்கீடு ஏதும் தேவையில்லை.

85—

### புதிய திருமண மண்டபம்

**வினா எண் 5090—திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் தொகுதி, கோவிந்தநாட்டுச்சேரி ஊராட்சி, நாய்க்கர்பேட்டை கிராமத்திலும், மணலூர் ஊராட்சியிலும், சருக்கை ஊராட்சி, வடசருக்கை கிராமத்திலும் திருமண மண்டபம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருமண மண்டபம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

86—

### புதிய நிழற்குடை

**வினா எண் 5100—திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் தொகுதி, பண்டாரவாடை ஊராட்சி, புதுரோடில் பயணிகள் நிழற்குடை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

87—

### தண்ணீர்த் தட்டுப்பாடு

**வினா எண் 5382—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) சேரன்மகாதேவி தொகுதி, வடக்குச் சிங்கம்பாறைப் பகுதிக்கு முக்கூடல் பேரூராட்சி மூலம் குழாய்களில் தண்ணீர் கிடைக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, வடக்குச் சிங்கம்பாறைப் பகுதியில் 2 பொது நல்லிகள் மூலம் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

88—

### இலவச வீடு

**வினா எண் 5416—திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை வட்டம், இராவணாபுரம் கிராமத்தில் உள்ள விவசாயிகளுக்கு இலவச வீடுகள் கட்டத் திட்டம் ஏதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை வட்டம், இராவணாபுரம் ஊராட்சியில் உள்ள மற்றும் விவசாயிகளுக்கென இலவச வீடுகள் கட்டத் தனியாகத் திட்டம் ஏதும் இல்லை.

89—

### புதிய மேல்நிலைத் தொட்டி

**வினா எண் 5476—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2002 மே 10

(அ) பேரூர் தொகுதியிலுள்ள குறிச்சி பேரூராட்சியில் புதியதாக மேல்நிலைத் தொட்டி கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நிதிநிலை சீரடையும்போது கட்டப்படும்.

**90—**

**புதிய செக்டேம் கட்டுதல்**

**வினா எண் 5481—திரு. டி. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், தாமிரபரணி ஆற்றிலிருந்து குடிநீருக்காகப் பயன்படுத்துகின்ற பல கிணறுகள் உடைந்ததன் விளைவாகப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட முடியாத நிலை உள்ளது பற்றி அரசிற்கு ஏதேனும் தகவல் வந்துள்ளதா?

(ஆ) இக்கிணறுகளுக்குப் பதிலாக, புதிய குடிநீர்க் கிணறுகள் அமைக்க வாரியம் ஏதேனும் முயற்சி மேற்கொண்டுள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நீருறிஞ்சுக் கிணறுகளைச் சுற்றிலும் சமூக விரோதிகளால் மணல் எடுக்கப்பட்டதால் குழித்துறையாறு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் ஒரு கிணறும், பத்மநாபபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் இரண்டு கிணறுகளும், அருமனை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் ஒரு கிணறும் சாய்ந்து விழுந்துள்ளன. இதனால் திட்டங்களில் வடிவமைக்கப்பட்டுள்ள குடிநீரின் அளவு பயனாளிகளுக்கு வழங்கப்பட முடியவில்லை. மாற்றுக் கிணறுகள் வாரியத்தின் மூலம் செயல்படுத்தப் போதிய மணல்பாங்கான இடம் கிடைக்கவில்லை. எனவே, நீரூற்றைப் பெருக்கும்பொருட்டு



2002 மே 10]

தாமிரபரணி ஆற்றின் குறுக்கே ஐந்து இடங்களில் செக்டேம் கட்டும் உத்தேசம் பரிசீலனையில் உள்ளது.

**91—**

**புதிய சமுதாயக் கூடம்**

**வினா எண் 5504—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, மாளிகம்பட்டு காலனியில் சாலை வசதி, சுடுகாட்டு சாலை வசதி மற்றும் சமுதாயக் கூடம் அமைத்துத் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, மாளிகம்பட்டு காலனியில் சாலை வசதி மற்றும் சமுதாயக் கூடம் அமைக்கும் பணி ஏற்கெனவே செய்து கொடுக்கப்பட்டுள்ளது. சுடுகாட்டுப் பாதையைப் பொறுத்தவரையில் இதன் நீளம் 2.5 கி.மீ. ஆகும். இதில் 0.5 கி.மீ. பாதை 1997-98-ல் ஜெ.ஜி.எஸ்.ஒய். திட்டத்தின்கீழ் பராமரிக்கப்பட்டது. மீதமுள்ள பாதை வரும் நிதி ஆண்டில் கிடைக்கின்ற நிதியைப் பொறுத்து மேம்பாடு செய்ய பரிசீலிக்கப்படும்.

**92—**

**கொத்தடிமைகள்**

**வினா எண் 5563—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், சஞ்சீவராயன் கோயில் புதுநகரில் கொத்தடிமையிலிருந்து மீட்கப்பட்டவர்கள் வாழும் பகுதியில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்து, குடிநீர் வழங்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[2002 மே 10

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கொள்ளிடம் ஒன்றியம், சஞ்சீவராயன் கோயில் புதுநகரில் கொத்தடிமையிலிருந்து மீட்கப்பட்டவர்கள் வாழும் பகுதியில் தற்சமயம் குடிநீர் வசதி இல்லை; எனவே, இப்பகுதிக்கு ஊரகக் குடிநீர்த் திட்டக் கோட்பாட்டிற்குள், தகுதி மற்றும் தேவை அடிப்படையில், வரும் நிதியாண்டில் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப் பரிசீலிக்கப்படும்.

**93—**

**மின் விளக்குப் பராமரிப்பு**

**வினா எண் 5888—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், வள்ளியம்மாள் கிராமத்திற்கு மின் விளக்கு அமைக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், வெங்கடாம்பட்டி ஊராட்சி, வள்ளியம்மாள் கிராமத்திற்கு ஏற்கெனவே மின் விளக்கு அமைக்கப்பட்டு நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. எனவே, கூடுதலாகத் தெருவிளக்கு அமைக்கத் தேவை ஏதுமில்லை.



2002 மே 10]

**94—**

**புதிய தொகுப்பு வீடுகள்**

**வினா எண் 5892—திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) உடுமலைப்பேட்டை அருகே அந்தியூர் ஆதிதிராவிட மக்களுக்கு மேலும் புதிதாகத் தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை வட்டம், அந்தியூர் ஊராட்சிக்கு 1996-97-ல் 315 வீடுகளும், 2001-2002-ல் 5 வீடுகளும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. எனவே, இனி வரும் ஆண்டுகளில் மைய அரசின் நிதி ஒதுக்கீடு கூடுதலாக வரப்பெற்றால் அந்தியூர் ஆதிதிராவிட மக்களுக்கு மேலும் புதியதாகத் தொகுப்பு வீடுகள் கட்டித்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**95—**

**புதிய சமுதாயக் கூடம்**

**வினா எண் 5933—திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் தொகுதி, சோமேஸ்வரபுரம் ஊராட்சியில் சமுதாயக் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

[2002 மே 10

96—

**பொதுக் குடிநீர்**

**வினா எண் 5986—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை நகர் சாதிக் நகரில் பொது மக்கள் நலன் கருதி இரண்டு குடிநீர் பொதுக் குழாய் அமைத்துத் தர அரசு பரிசீலிக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது இது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை சாதிக் நகர் பகுதியில் 4 பொதுக் குடிநீர்க் குழாய்கள் அமைக்கப்பட்டு, குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

97—

**ஊராட்சி பிரிப்புத் திட்டம்**

**வினா எண் 5993—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம் மிகவும் பெரிய ஒன்றியமாக உள்ளதால், அதனை இரண்டாகப் பிரிக்க அரசு விரைந்து ஆணை பிறப்பிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

98—

**புதிய திருமண மண்டபம்**

**வினா எண் 6230—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2002 மே 10]

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கழுமங்குடா பகுதியில் திருமண மண்டபம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கழுமங்குடா பகுதியில் திருமண மண்டபம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

99—

**புதிய திருமண மண்டபம்**

**வினா எண் 6271—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கொள்ளுக்காடு ஊராட்சியில் திருமண மண்டபம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

100—

**ஊராட்சி மேம்பாடு**

**வினா எண் 6293—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, வல்லம் ஒன்றியம், அருகாவூர் ஊராட்சியிலிருந்து பனப்பாக்கம் கிராமத்தை பிரித்துத் தனி ஊராட்சியாக ஆக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது பிரிக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) வினா எழவில்லை.*

**101—**

**புதிய கணினி அமைப்பு**

**வினா எண் 6360—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சி, வல்லம், ஒலக்கூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களுக்குக் கணினி வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?*

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் ஊராட்சி ஒன்றியப் பொது நிதியிலிருந்து கணினியினை அமைத்துக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**102—**

**புதிய சமுதாயக் கூடம்**

**வினா எண் 6888—திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*பாபநாசம் தொகுதி, இன்னம்பூர் ஊராட்சிக்கு, கிராம சமுதாயக் கூடம் அமைத்துத்தர அரசு முன்வருமா?*



விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பாபநாசம் தொகுதி, இன்னம்பூர் ஊராட்சிக்கு, கிராம சமுதாயக் கூடம் கட்ட ஊராட்சி ஒன்றியத்தில் போதிய நிதி வசதி இல்லை.

**103—**

**புதிய சமுதாயக் கூடம்**

**வினா எண் 6891—திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*பாபநாசம் தொகுதி, பூச்சாத்தனூர் கிராமத்திற்கு ஒரு சமுதாயக் கூடம் கட்டித்தர அரசு முன்வருமா?*

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பாபநாசம் தொகுதி, பூச்சாத்தனூர் கிராமத்திற்கு சமுதாயக் கூடம் கட்ட ஊராட்சி ஒன்றியத்தில் போதிய நிதி வசதி இல்லை.

**104—**

**புதிய சமுதாயக் கூடம்**

**வினா எண் 6892—திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*பாபநாசம் தொகுதி, சேங்கலூர் ஊராட்சியில் ஆதிதிராவிட மக்களுக்கு ஒரு சமுதாயக் கூடம் கட்டித்தர அரசு முன்வருமா?*

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பாபநாசம் தொகுதி, சேங்கலூர் ஊராட்சியில் ஆதிதிராவிட மக்களுக்கு சமுதாயக் கூடம் கட்ட ஊராட்சி ஒன்றியத்தில் போதிய நிதி வசதி இல்லை.

105—

புதிய சமுதாயக் கூடம்

**வினா எண் 6905—திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் தொகுதி, நீலத்தநல்லூர் ஊராட்சி, மேலாத்துகுறிச்சி கிராமத்தில் ஒரு சமுதாயக் கூடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பாபநாசம் தொகுதி, நீலத்தநல்லூர் ஊராட்சி, மேலாத்துகுறிச்சி கிராமத்தில் ஒரு சமுதாயக் கூடம் கட்ட ஊராட்சி ஒன்றியத்தில் போதிய நிதி வசதி இல்லை.

106—

புதிய வணிக வளாகம்

**வினா எண் 6996—திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி நகரிலுள்ள பயனற்ற இராஜகோபால் கவுண்டர் பூங்காவை அகற்றி வணிக வளாகம் கட்டி நகராட்சி வருமானத்தைப் பெருக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் ஒரே பூங்காவான இராஜகோபால் கவுண்டர் பூங்காவை அகற்றி அங்கு நகராட்சியினால் புதியதாக வணிக வளாகம் கட்டும் செயற்குறிப்பு ஏதுமில்லை.

107—

புதிய சுகாதார வளாகம்

**வினா எண் 7084—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



*(அ)* விருத்தாச்சலம் நகரில் தேவையான இடங்களில் பொதுக் கழிப்பிடம், குளியலறைகள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், இப்பணியைச் செய்ய நகராட்சிக்கு முறையான உத்தரவு பிறப்பிக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* விருத்தாச்சலம் நகரில் நகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் இரண்டு சுகாதார வளாகம் கட்ட நகராட்சி நிருவாக ஆணையரால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

108—

புதிய குடிநீர்த் திட்டம்

**வினா எண் 7103—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* செஞ்சி தொகுதி, ஒலக்கூர் ஒன்றியம், கீழ்கூடலூர் ஊராட்சி ஆதிதிராவிடர் காலனிக்குக் குடிநீர் வசதி செய்திட அரசிடம் திட்டம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* செஞ்சி தொகுதி, ஒலக்கூர் ஒன்றியம், கீழ்கூடலூர் ஊராட்சியைச் சார்ந்த கீழ்கூடலூர் ஆதி திராவிடர் காலனிக்குத் தற்சமயம் நான்கு கையிறைப்பான்கள் மற்றும் கீழ்கூடலூர் குடிநீர்த் திட்டத்திலிருந்து குழாய் நீட்டிப்பு மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. ஊரகக் குடிநீர்த் திட்ட கோட்பாடுகளுக்குட்பட்டு, தேவை, தகுதி மற்றும் நிதி ஆதார அடிப்படையில், வரும் நிதியாண்டுகளில் இக்குடியிருப்புக்குப் புதிய குடிநீர்த் திட்டம் நிறைவேற்றுவது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

[2002 மே 10

109—

## சுகாதாரக் கேடு

**வினா எண் 7174—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாநகராட்சியில் கிச்சிப்பாளையம் அருகே நகரின் மையப் பகுதியில் குப்பை மேடு உள்ளதால் சுகாதாரக் கேடு ஏற்படுவதால் வேறு இடத்திற்கு மாற்ற நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம்.

110—

## குடிநீர் விநியோகம்

**வினா எண் 7182—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டம், குன்னூர் நகராட்சி, காந்திபுரத்தில் குடிநீர்த் தட்டுப்பாட்டைத் தீர்க்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நீலகிரி மாவட்டம், குன்னூர் நகராட்சி, காந்திபுரத்தில் குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்க 7 பொதுக் குழாய்களும், இந்திரா நகர் பகுதியில் ஒன்பது பொதுக் குழாய்களும் அமைத்து, குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

111—

## பாதாளச் சாக்கடைத் திட்டம்

**வினா எண் 7346—திரு. மீ.அ. வைத்தியலிங்கம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2002 மே 10]

(அ) தாம்பரம் தொகுதி, உள்ளகரம், புழுதிவாக்கம் பேரூராட்சிப் பகுதியில் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணி முடிவடைந்த பகுதியிலுள்ள குடியிருப்புக்கு இணைப்பு வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இன்றைய நிலை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தற்போது 71 குடியிருப்புகளுக்குப் பாதாளச் சாக்கடை இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

112—

## தேசிய குடிநீர்த் திட்டம்

**வினா எண் 7605—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், பணியாண்டப்பள்ளி ஊராட்சிக்குட்பட்ட பாரதிநகர் வீரப்பள்ளியில் இராஜீவ் காந்தி தேசிய குடிநீர்த் திட்டத்தின்கீழ் ஆழ்துளைக் கிணறு அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், பணியாண்டப்பள்ளி ஊராட்சிக்குட்பட்ட பாரதி நகர் வீரப்பள்ளியில், இராஜீவ் காந்தி தேசிய குடிநீர்த் திட்டத்தின்கீழ் மாற்று ஆழ்துளைக் கிணறு அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. பொது மக்களின் பங்கேற்புத் தொகையினைப் பெற்று ஆழ்துளைக் கிணறு அமைத்து மக்கள் பயனுக்குக் கொண்டு வர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

[2002 மே 10

113—

### புதிய நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 7052—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குடவாசல் ஒன்றியம், மணவாள நல்லூர் ஊராட்சி, கீரவாஞ்சேரி கிராமம் மாதாகோயில் தெருவிற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசு உதவுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மாதாகோயில் தெரு, குடவாசல் ஊராட்சி ஒன்றியம், மணவாள நல்லூர் ஊராட்சி, மணவாள நல்லூர் குடியிருப்பின் ஒரு பகுதியாகும். மணவாள நல்லூர் குடியிருப்பிற்கு 1982 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய விசைப்பம்புத் திட்டம் தற்போது பயனில் உள்ளது. மேலும் 1999-2000 ஆம் ஆண்டு அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் மாதாகோயில் பகுதிக்குக் குடிநீர்க் குழாய் நீட்டிப்பு மூலம் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

நடப்பு நிதி ஆண்டில் (2001-2002) ஒரு ஆழ்துளைக் கிணறுடன்கூடிய கைப்பம்புத் திட்டம் நிறைவேற்றப்பட்டு செயலாக்கத்தில் உள்ளது. இத்திட்டங்களின் மூலம் இக்குடியிருப்புக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

எனவே, இப்பகுதிக்குத் தனியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

114—

### புதிய பள்ளிக் கட்டடம்

**வினா எண் 7749—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, கோயில் குப்பம், சாத்தனூர் ஊராட்சிப் பள்ளிக்கு கூடுதல் பள்ளிக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?



2002 மே 10]

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வந்தவாசி தொகுதி, கோயில் குப்பம், சாத்தனூர் ஊராட்சிப் பள்ளியில் தற்போது உள்ள கட்டடம் போதுமானதாக உள்ளது.

115—

### புதிய கட்டடம்

**வினா எண் 7758—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, ஏரமலூர் கிராமப் பள்ளிக்கூடத்திற்குப் புதிதாக கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வந்தவாசி தொகுதி, ஏரமலூர் கிராமப் பள்ளிக்கூடம் தனியார் பள்ளி. ஆகையால் அப்பள்ளிக்குப் புதிதாக கட்டடம் கட்ட இயலாது.

116—

### பள்ளியைப் புதுப்பித்தல்

**வினா எண் 7759—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, கீழ்சீசமங்கலம், பழுதடைந்துள்ள கிராமப் பள்ளியினைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

[2002 மே 10

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வந்தவாசி தொகுதி, கீழ்சீசமங்கலம், பழுதடைந்துள்ள கிராமப் பள்ளியினைப் புதுப்பிக்க ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்குத் தக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

**117—**

**புதிய ஊராட்சித் திட்டம்**

**வினா எண் 7764—திரு. என். ரெங்கநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) மிகப் பெரிய ஊராட்சி ஒன்றியங்களில் ஒன்றான செம்பனார் கோவில் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து செம்பனார்கோவில் ஒன்றியம், தரங்கம்பாடி ஒன்றியம் என இரண்டாகப் பிரிக்கும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இல்லை.*

**118—**

**புதிய அலுவலகக் கட்டடம்**

**வினா எண் 8018—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*வந்தவாசி தொகுதி, தெள்ளாரில் கிராம நிருவாக அலுவலர்களுக்குப் புதிதாக அலுவலகம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?*



2002 மே 10]

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நடப்பு நிதியாண்டில் அனைத்து மாவட்டங்களிலும் தேவை அடிப்படையில் முன்னுரிமை அளிக்கப்பட்டு, 4,000 கிராம நிருவாக அலுவலருக்கான அலுவலகக் கட்டடங்கள் ரூபாய் 90 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. சட்டமன்ற உறுப்பினர் கோரியுள்ள இடம் முன்னுரிமைக்குத் தகுதியுடையதாயின், நடப்பு நிதி ஆண்டில் அங்கு கிராம நிருவாக அலுவலருக்கான அலுவலகக் கட்டடம் கட்டித்தரப் பரிசிலிக்கப்படும்.

**119—**

**புதிய வீடுகள்**

**வினா எண் 8024(அ)—திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*நகர்ப்புறங்களில் புதிய வீடுகள் கட்ட ஒப்புதல் வழங்கும்போது, மழை நீர் சேமிப்புத் திட்டம் கட்டாயமாக்கப்பட அரசு முன்வருமா?*

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம்.

**120—**

**புதிய அலுவலகக் கட்டடம்**

**வினா எண் 8068—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், பெரியேரிப்பட்டி கிராம நிருவாக அலுவலர் அலுவலகத்திற்குப் புதிதாகக் கட்டடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2002 மே 10

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நடப்பு நிதியாண்டில் அனைத்து மாவட்டங்களிலும் தேவை அடிப்படையில் முன்னுரிமை அளிக்கப்பட்டு 4000 கிராம நிருவாக அலுவலருக்கான அலுவலகக் கட்டடங்கள் ரூபாய் 60 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. சட்டமன்ற உறுப்பினர் கோரியுள்ள இடம் முன்னுரிமைக்குத் தகுதியுடையதாயின் நடப்பு நிதி ஆண்டில் அங்கு கிராம நிருவாக அலுவலருக்கான அலுவலகக் கட்டடம் கட்டித்தரப் பரிசீலிக்கப்படும்.

**121—**

**புதிய அலுவலகக் கட்டடம்**

**வினா எண் 8497—திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அம்பாசமுத்திரம் தொகுதி, அடையகருங்குளம் ஊராட்சி அலுவலகத்தை ஒட்டி கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நடப்பு நிதியாண்டில் அனைத்து மாவட்டங்களிலும் தேவை அடிப்படையில் முன்னுரிமை அளிக்கப்பட்டு 4000 கிராம நிருவாக அலுவலருக்கான அலுவலகக் கட்டடங்கள் ரூபாய் 60 ஆயிரம் மதிப்பீட்டில் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. சட்டமன்ற உறுப்பினர் கோரியுள்ள இடம் முன்னுரிமைக்குத் தகுதியுடையதாயின், நடப்பு நிதி ஆண்டில் அங்கு கிராம நிருவாக அலுவலருக்கான அலுவலகக் கட்டடம் கட்டித்தரப் பரிசீலிக்கப்படும்.



2002 மே 10]

**122—**

**புதிய நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 8784—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்தமடை பேரூராட்சி குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க கூடுதலாக ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பதற்கு அரசு நடவடிக்கையை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) பத்தமடை பேரூராட்சி குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க தற்போது மேல்நிலைத் தொட்டிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

(ஆ) வினா எழவில்லை.

**123—**

**புதிய சமுதாயக் கூடம்**

**வினா எண் 9274—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பிளியனூர் ஊராட்சி, பிக்கம்பட்டியில் சமுதாயக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பிளியனூர் ஊராட்சி, பிக்கம்பட்டியில் சமுதாயக் கூடம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2002 மே 10

**124—**

**பழுதடைந்த வீடுகள்**

**வினா எண் 9294—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், ஈச்சம்மாடி காலனியில் சமுதாயக் கூடம் மற்றும் காலனி வீடுகள் மிகவும் பழுதடைந்துள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் சீர் செய்து செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போதுள்ள நிதி நெருக்கடியின் காரணமாக காலனி வீடுகள் பழுது பார்க்கும் திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை. சமுதாயக் கூடத்தைப் பழுது பார்க்க ஊராட்சியின் நிதிநிலைமையும் போதுமானதாக இல்லை.

**125—**

**இலவச வீடுகள்**

**வினா எண் 9626—திரு. இரா. திருமாவளவன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் சாதிக் கலவரத்தின் மூலம் வீடுகள் தீயால் கொளுத்தப்பட்டு வீட்டை இழந்தவர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். சாதிக் கலவரத்தின் மூலம் தீயால் வீடு இழந்தவர்களுக்குத் தகுதியின் அடிப்படையில் இலவசத் தொகுப்பு வீடுகள்



2002 மே 10]

கட்டிக் கொடுக்க அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் திட்ட அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

**126—**

**ஒன்றிய மேம்பாடு**

**வினா எண் 10928—திரு. என். ரெங்கநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில் ஒன்றியத்தை, செம்பனார்கோவில், தரங்கம்பாடி என இரண்டு ஒன்றியங்களாகப் பிரிக்கும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இவ்வாண்டே பிரிக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**127—**

**புதிய ஊராட்சி**

**வினா எண் 10995—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குத்தாலம் தொகுதி, குத்தலாம் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து கிழக்கில் உள்ள 25 ஊராட்சிகளுக்கு மங்கநல்லூரைத் தலைமையிடமாக அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

[2002 மே 10

128—

## தனி ஊராட்சி

**வினா எண் 11091—திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மொரப்பூர் தொகுதி, பாப்பிரெட்டி வட்டம், பெரிய ஊராட்சியாக உள்ள வெங்கடசமுத்திரத்தை இரண்டாகப் பிரித்து கோழி மேக்கனூரை மையமாக வைத்து, தனி ஊராட்சியாக அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

129—

## மின் விளக்குத் திட்டம்

**வினா எண் 11237—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், குட்டம் ஊராட்சி, அண்ணாநகர் பகுதியில் சோடியம் மின் விளக்கு அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், குட்டம் ஊராட்சி, அண்ணாநகர் பகுதியில் சோடியம் மின் விளக்கு அமைக்கத் தற்போது சாத்தியமில்லை.



2002 மே 10]

130—

## புதிய மின் விளக்குத் திட்டம்

**வினா எண் 11339—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், நாட்ராம்பள்ளி தொகுதி, நாட்ராம்பள்ளி ஒன்றியத்திற்கு உட்பட்ட பச்சூர், கொத்தூர், மல்லக்குண்டா, நாயன செருவு, உள்ளிட்ட பகுதிகளுக்கு மின் விளக்கு அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், நாட்ராம்பள்ளி தொகுதி, நாட்ராம்பள்ளி ஒன்றியத்திற்கு உட்பட்ட பச்சூர், கொத்தூர், மல்லகொண்டா, நாயனசெருவு உள்ளிட்ட பகுதிகளில் ஏற்கெனவே, தெருவிளக்குகள் உள்ளன. அப்பகுதிகளில் புதியதாகத் தற்போது மின் விளக்கு அமைக்க சம்பந்தப்பட்ட ஊராட்சிகளில் போதிய நிதி ஆதாரம் இல்லை. எனவே, புதியதாக மின் விளக்கு அமைப்பதற்கான திட்டம் ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

131—

## புதிய அலுவலக கட்டடம்

**வினா எண் 11585—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, அம்பலவாணன்பேட்டை கிராமத்தில் முருகன்கோயில் அருகில் 76/16, ஏ.111 என்ற சர்வே எண் புறம்போக்கு இடத்தில் கிராம நிருவாக அலுவலகம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2002 மே 10

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நடப்பு நிதியாண்டில் அனைத்து மாவட்டங்களிலும் தேவை அடிப்படையில் முன்னுரிமை அளிக்கப்பட்டு 4000 கிராம நிர்வாக அலுவலருக்கான அலுவலகக் கட்டடங்கள் ரூபாய் 60 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. சட்டமன்ற உறுப்பினர் கோரியுள்ள இடம் முன்னுரிமைக்குத் தகுதியுடையதாயின் நடப்பு நிதி ஆண்டில் அங்கு கிராம நிர்வாக அலுவலருக்கான அலுவலகக் கட்டடம் கட்டித்தரப் பரிசீலிக்கப்படும்.

**132—**

**பொதுக் குடிநீர் திட்டம்**

**வினா எண் 12821—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உள்ளாட்சிகளில் தாழ்த்தப்பட்ட மக்களும், சிறுபான்மை மக்களும் மிகுதியாக வாழும் பகுதிகளில் பொதுக் குடிநீர்க் குழாய்கள் நிறுவுவதற்கேற்ப அதற்குள்ள தடையைத் தளர்த்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உள்ளாட்சிகளில் தாழ்த்தப்பட்ட மக்களும், சிறுபான்மை மக்களும் மிகுதியாக வாழும் பகுதிகளில், பொதுக் குடிநீர்க் குழாய்கள் நிறுவுவதற்குத் தடையேதும் இல்லை. எனவே, தடையைத் தளர்த்துவது என்ற கேள்வி எழவில்லை.

**133—**

**சுலப தவணைத் திட்டம்**

**வினா எண் 423—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2002 மே 10]

தமிழகத்தில் விவசாயிகள் பெற்ற கடனை சுலபமான தவணைகளில் செலுத்தும் வகையில் அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

ஆம். எடுத்து வருகிறது.

**134—**

**அயோடின் உப்பு**

**வினா எண் 428—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நியாயவிலைக் கடைகள் மூலம் தமிழ்நாடு முழுவதும் 2000-2001 ஆம் ஆண்டில் 'அயோடின் கலந்த உப்பு' எவ்வளவு விற்பனை செய்யப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

2000-2001 ஆம் ஆண்டில் தமிழகம் முழுவதும் உள்ள நியாய விலைக் கடைகள் மூலமாக மொத்தம் 6501.02 மெட்ரிக் டன்கள் அயோடின் கலந்த அரசு உப்பு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

**135—**

**விவசாய நலன்**

**வினா எண் 6006—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மார்க்கெட்டிங் சொசைட்டி மூலம் நெல் விற்பனை செய்யும் விவசாயிகளுக்கு பணம் பட்டுவாடா செய்வதை வணிகர்கள் தாமதப்படுத்துவது அரசுக்குத் தெரியுமா?

[2002 மே 10

(ஆ) ஆம் எனில், உடனுக்குடன் விவசாயிகளுக்குப் பணம் கிடைக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விற்பனைச் சங்கங்களில் நெல் கொள்முதல் செய்தவகையில் விவசாயிகளுக்கு உடனுக்குடன் பணம் பட்டுவாடா செய்யப்படுகிறது. எனவே, விவசாயிகளுக்குப் பணம் பட்டுவாடா செய்ய வேண்டிய நிலுவை ஏதும் இல்லை.

**136—**

**புதிய கிளைக் கடை**

**வினா எண் 604—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கரைச்சாத்துப்புதூர் கிராமத்தில் நியாய விலைக் கிளைக் கடை அமைக்க அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், புலிமான்குளம் நியாய விலைக் கடையின்கீழ் ஏற்கெனவே தோப்புவிளையில் 214 குடும்ப அட்டைகளுடன் ஒரு பகுதி நேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. அரசாணை நிலை எண் 12, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 18-1-2001-ல் அவசியம் ஏற்பட்டால், நிதிச் செலவில்லாமல் இரண்டாவது பகுதி நேரக் கடையினைத் திறக்கலாம் என அரசு ஆணையிட்டுள்ளது. அதன் அடிப்படையில் இது குறித்து மண்டல இணைப் பதிவாளரிடம் (கூட்டுறவுச் சங்கங்கள்) கருத்துரு பெற்று விரைவில் கரைச்சாத்துப்புதூரில் இரண்டாவது பகுதி நேரக் கடை திறப்பது குறித்து ஆராயப்படும்.



2002 மே 10]

**137—**

**புதிய கிளைக் கடை**

**வினா எண் 606—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், ஆவரைக்குளம் ஊராட்சி, பிள்ளையார் குடியிருப்பு கிராமத்தில் நியாய விலைக் கிளைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், அழகனேரி நியாய விலைக் கடையின்கீழ் மதகனேரி கிராமத்தில் ஏற்கெனவே 346 குடும்ப அட்டைகளுடன் ஒரு பகுதி நேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. இரண்டாவது பகுதி நேரக் கடை ஒன்று பிள்ளையார் குடியிருப்பில் திறக்க வாய்ப்பில்லை.

**138—**

**நுகர்வோர் நீதிமன்றம்**

**வினா எண் 630—திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரியில் நுகர்வோர் நீதிமன்றம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டத்திற்கான நுகர்வோர் குறைதீர் மன்றம் தற்போது கிருஷ்ணகிரியில் 6-4-1994 முதல் சேலம் மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றத்துடன் ஒருங்கிணைந்த மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றமாக வாரத்தில் இரு நாட்கள் செயல்பட்டு வருகிறது.

[2002 மே 10

**139—**

**பாதுகாப்பு நிலையம்**

**வினா எண் 632—திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரியில் மாவட்ட குடிமைப் பொருள் பாதுகாப்பு நிலையம் (Food cell) அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டத்தில் குடிமைப் பொருள் வழங்கல், குற்றப் புலனாய்வுத் துறையின் ஓர் அலகு (Unit) கிருஷ்ணகிரியைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருவதால், தருமபுரிக்கென தனியாக ஓர் அலகு தேவையில்லை. மேலும், தருமபுரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரியைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வரும் அலகுக்கு எல்லை நிமித்தம் தருமபுரி மாவட்டம் மட்டிலுமே ஆகும்.

**140—**

**புதிய கொள்முதல் நிலையம்**

**வினா எண் 647—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தான்குளம் தொகுதி, ஆழ்வார் திருநகரியில் நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—



2002 மே 10]

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) இதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**141—**

**நியாய விலைக் கடை**

**வினா எண் 920—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கொண்டையன-அள்ளி ஊராட்சி, கெ. புதூர் பகுதி நேர நியாயவிலைக் கடையை முழு நேர நியாய விலைக் கடையாக மாற்றிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கெ. புதூர் பகுதி நேர நியாயவிலைக் கடை மொத்தம் 363 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருவதால் இதனை முழு நேரக் கடையாக மாற்ற வாய்ப்பில்லை.

**142—**

**புதிய குடும்ப அட்டைகள்**

**வினா எண் 2107—திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2002 மே 10

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டத்தில் உள்ள அனைத்துப் பகுதிகளிலும் இதுவரை குடும்ப அட்டை வழங்கப்படாதவர்களுக்குக் குடும்ப அட்டை வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

புதிய குடும்ப அட்டைகள் கோரி வரப்பெறும் அனைத்து மனுக்கள்மீதும் உடனுக்குடன் விசாரணை செய்து, தகுதியான குடும்பங்களுக்குக் குடும்ப அட்டை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

**143—**

### விழிப்புணர்வு

**வினா எண் 2127—திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராம அங்காடிகளில் நடைபெறும் ஊழல்களைத் தடுக்க கிராம அளவில் பொது மக்களைக் கொண்டு விழிப்புணர்வுக் குழு அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பொது விநியோகத் திட்டத்தின் செயல்பாட்டினைக் கண்காணிக்கவும், கிராம அங்காடிகளில் நடைபெறும் முறைகேடுகளைத் தடுக்கவும், வருவாய்க் கோட்ட அளவிலும் மற்றும் மாவட்ட அளவிலும் பொது விநியோகத் திட்ட ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றன. மேலும், கிராமப் பஞ்சாயத்து அளவிலான கண்காணிப்புக் குழுக்களும் அமைக்க அரசால் (ஊரக வளர்ச்சித் துறை) ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.



2002 மே 10]

**144—**

### புதிய கட்டடம்

**வினா எண் 2157—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, கீழநெடுவாய், இராமன், மேலூர் ஆகிய கிராமங்களில் கூட்டுறவு அங்காடிகள் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆண்டிமடம் தொகுதியில் கீழநெடுவாய், இராமன் மற்றும் மேலூர் கிராமங்களில் உள்ள நியாய விலைக் கடைகளுக்கு 2001-2002 மற்றும் 2002-2003 ஆம் ஆண்டுகளில் கட்டடம் கட்ட ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**145—**

### விலை உயர்வு

**வினா எண் 2457—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டு உணவு விடுதிகளில், உணவுப் பண்டங்கள் விலை உயர்ந்து வருவதைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

[2002 மே 10

(ஆ) தமிழக உணவு விடுதிகளில் அத்தியாவசிய உணவுப் பண்டங்களின் விலை நிலவரங்கள் மாதந்தோறும் மாவட்ட ஆட்சித் தலைவர்களால் கண்காணிக்கப்பட்டு, விலை உயர்ந்து வருவதைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**146—**

### பகுதிநேரக் கடை

**வினா எண் 2479—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பண்ருட்டி தொகுதி, கருப்பஞ்சாவடிக்குப் பகுதி நேர நியாய விலைக் கடை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதியில், கட்டியாங்குப்பம் கிராம நியாய விலைக் கடையிலிருந்து கருப்பஞ்சாவடி ஒரு கிலோ மீட்டர் தூரம் மட்டுமே உள்ளதாலும், கருப்பஞ்சாவடியில் 75 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளதாலும், அரசாணையில் நிர்ணயிக்கப்பட்ட நிபந்தனைகள் பொருந்தவில்லை. எனவே, கருப்பஞ்சாவடிக்குப் பகுதி நேர நியாய விலைக் கடை அமைத்துத்தர வாய்ப்பு இல்லை.

**147—**

### புதிய நியாய விலைக் கடை

**வினா எண் 2635—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சி, இ.காட்டூர், இ.மேட்டுக்காடு, மாரித்தான் வளவு, இட்டனூர் கிராமங்களுக்காக மேட்டுக்காட்டில் புதிதாக நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?



2002 மே 10]

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சியைச் சேர்ந்த இ.காட்டூர், இ.மேட்டுக்காடு, மாரித்தான் வளவு, இட்டனூர் ஆகிய கிராமங்களுக்கென இ.மேட்டுக்காட்டில் 359 குடும்ப அட்டைகளுடன் ஒரு பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்கப்பட்டு 10-9-2001 முதல் செயல்பட்டு வருகிறது.

**148—**

### புதிய குடும்ப அட்டை

**வினா எண் 2945—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டத்திற்குட்பட்ட ஊர்களில் குடும்ப அட்டை கோரி வந்துள்ள மனுக்கள் எத்தனை?

(ஆ) அதில் 2000-2001-க்குள் வழங்கப்பட்ட குடும்ப அட்டைகள் எத்தனை?

(இ) மீதமுள்ள குடும்பங்களுக்கு அட்டைகள் எப்போது வழங்கப்பட உள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ), (ஆ) மற்றும் (இ): சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டத்திற்குட்பட்ட ஊர்களில் குடும்ப அட்டை கோரி வந்துள்ள 4048 மனுக்களில், 2000-2001-க்குள் 2078 மனுக்களுக்கு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுவிட்டன. 933 மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள 1035 மனுக்களில், 341 மனுக்கள் சங்ககிரி கோட்டாட்சித் தலைவரது தணிக்கையில் உள்ளன. மீதமுள்ள 694 மனுக்கள் வட்ட வழங்கல் அலுவலரின் நேரடி விசாரணையில் உள்ளன. விசாரணை முடிந்து தகுதியான மனுதாரர்களுக்குக் குடும்ப அட்டைகள் வழங்கப்படும்.

[2002 மே 10

149—

**நியாய விலைக் கடை**

**வினா எண் 2947—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) பகுதி நேர நியாய விலைக் கடைகளை முழுநேர நியாய விலைக் கடைகளாக மாற்ற என்ன மாதிரியான வரன்முறை கையாளப்படுகிறது?*

*(ஆ) அதன்படி மலைவாழ் மக்கள் வசிக்குமிடங்களில் அவ்விதிகளைத் தளர்த்தும் கருத்துரு அரசிடம் உள்ளதா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

*(அ) பகுதி நேர நியாய விலைக் கடைகளை முழுநேர நியாய விலைக் கடைகளாக மாற்றுவதற்கெனத் தனியாக வரன்முறைகள் ஏதும் இல்லை. இருப்பினும், கிராமப்புறமாக இருந்தால் 500 குடும்ப அட்டைகளும், நகர்ப்புறமாக இருந்தால் 800 குடும்ப அட்டைகளும் இணைக்கப்பட்டிருக்கும். பகுதி நேரக் கடைகளை முழு நேரக் கடைகளாக்க கோரிக்கை ஏதேனும் பெறப்பட்டால் அவற்றின்மீது சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

*(ஆ) மலைவாழ் மக்கள் வசிக்குமிடங்களில் புதிய முழு நேர நியாய விலைக் கடைகள் திறப்பது அவசியம் எனக் கருதினால், மாவட்ட ஆட்சித் தலைவர் தமக்குள்ள விருப்பதிகாரங்களைப் பயன்படுத்தி புதிய நியாய விலைக் கடைகளைத் திறக்கலாம்.*

150—

**நியமன ஒதுக்கீடு**

**வினா எண் 2953—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) கூட்டுறவுச் சங்கங்களில் பணி நியமனம் செய்யும்போது அரசுப் பணியாளர்கள் நியமன ஒதுக்கீட்டு முறை கடைப்பிடிக்கப்படுகிறதா?*



2002 மே 10]

*(ஆ) அதைக் கடைப்பிடிக்காத சங்க நியமனக் குழு மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறதா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கூட்டுறவுச் சங்கங்களில் பணி நியமனம் செய்யும்போது அரசுப் பணியாளர்கள் நியமன ஒதுக்கீட்டு முறை கடைப்பிடிக்கப்படுகிறது. அதைக் கடைப்பிடிக்காத சங்க நியமனக் குழுக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது.*

151—

**புதிய வேளாண்மை வங்கி**

**வினா எண் 2973—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கெண்டையன அள்ளி ஊராட்சியில் தொடக்க வேளாண்மை வங்கி அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?*

*(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

*நபார்டு வங்கியின் அறிவுரைப்படி, பயிரிடக்கூடிய நிலப்பரப்பு 2000 ஹெக்டேர் இருந்தால்தான் ஒரு தொடக்க வேளாண்மை வங்கி அமைக்க இயலும். தருமபுரி மாவட்டம் பெண்ணாகரம் தொகுதி, கெண்டையனஹ அள்ளி ஊராட்சியில் பயிரிடக்கூடிய நிலப்பரப்பு சுமார் 135 ஹெக்டேர் மட்டுமே இருப்பதால், அங்கு ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அமைக்க இயலாத நிலை உள்ளது.*

152—

### வழங்கல் அளவை

**வினா எண் 3064—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*கிராமப் பகுதிகளுக்கு வழங்கப்படும் 3 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கல் அளவை 5 லிட்டர் என உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

*கிராமப் பகுதிகளுக்கு தற்போது வழங்கப்படும் மண்ணெண்ணெய் வழங்கல் அளவை 3 லிட்டரில் இருந்து 5 லிட்டராக உயர்த்தி வழங்குவது குறித்து அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.*

153—

### அரசின் பரிசீலனை

**வினா எண் 3557—திரு. டி. மணி:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*கன்னியாகுமரி மாவட்டத்தில் பேரூராட்சிப் பகுதிகளில் வசிக்கும் குடும்ப அட்டைதாரர்களுக்குக் குடும்பம் ஒன்றுக்கு 5 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கப்படுவதுபோன்று ஊராட்சிப் பகுதிகளில் வசிக்கும் அட்டைதாரர்களுக்கும் குடும்பம் ஒன்றுக்கு 5 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

*கன்னியாகுமரி மாவட்டத்தில் பேரூராட்சிப் பகுதிகளில் வசிக்கும் குடும்ப அட்டைதாரர்களுக்குக் குடும்பம் ஒன்றுக்கு 5 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கப்படுவதுபோன்று ஊராட்சிப் பகுதிகளில் வசிக்கும் அட்டைதாரர்களுக்கும் குடும்ப அட்டை ஒன்றுக்கு 5 லிட்டர்*



*வீதம் மண்ணெண்ணெய் வழங்குவது தொடர்பாக அரசின் பரிசீலனை ஏதும் தற்போது இல்லை.*

154—

### கிராமக் குடும்ப அட்டை

**வினா எண் 3576—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) நியாய விலைக் கடைகளில் வழங்கப்பட்டு வந்த 4 லிட்டர் மண்ணெண்ணெய் இப்போதும் வழங்கிடும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

*(அ) கிராமப் பகுதிகளில் குடும்ப அட்டைதாரர்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டு வந்த 3 லிட்டர் வழங்கல் அளவுடன் கூடுதலாக 1 லிட்டர் சேர்த்து 4 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்குவது தொடர்பான திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.*

*(ஆ) கேள்விக்கு இடமில்லை.*

155—

### தடுப்பு நடவடிக்கை

**வினா எண் 3577—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தமிழ்நாடு வாணிபக் கழகத்தின் மூலம் நியாய விலைக் கடைகளில் இறக்கப்படும் அரிசி மற்றும் சர்க்கரை ஆகிய பொருட்களில் எடை குறைவாக உள்ளதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளிலிருந்து பொது விநியோகத் திட்டத்திற்காக நியாய விலைக் கடைகளுக்கு வழங்கப்படும் அரிசி, சர்க்கரை உள்ளிட்ட அனைத்து அத்தியாவசியப் பொருட்களும், சம்பந்தப்பட்ட நியாய விலைக் கடைகள்/கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் துல்லியமாகத் தராசுகள் சரிபார்க்கப்பட்டு நூறு சதவீதம் (100%) சமச்சீர் எடை செய்து வழங்கப்பட்டு வருகிறது. மேலும், கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகளிடம் நூறு சதவீதம் எடை செய்து வழங்கியதற்கான சான்றொப்பமும் பெறப்படுகிறது. இப்பணி ஒழுங்காக நடைபெறுகிறதா எனக் கண்காணிக்கத் திடீர் ஆய்வுகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

**156—**

### பயிற்சிப் பள்ளி

**வினா எண் 3705—திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தற்பொழுது மொரப்பூரிலுள்ள கூட்டுறவுப் பயிற்சிப் பள்ளி தருமபுரி அல்லது கிருஷ்ணகிரிக்கு மாற்றப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

இல்லை.

**157—**

### புதிய கடை

**வினா எண் 3738—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரி வட்டம், இட்டக்கல் ஹாடாவில் நியாய விலைக் கடை ஏற்படுத்தப்படுமா?



(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

நீலகிரி மாவட்டம், கோத்தகிரி வட்டம், இட்டக்கல் ஹாடா பகுதியில் புதியதாக மகளிர் நியாய விலைக் கடை திறக்க 25-7-2001-ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்திரா காந்தி மகளிர் சுய உதவிக் குழு என்ற மகளிர் அமைப்புக்கு நியாய விலைக் கடை திறக்க அனுமதி அளிக்கப்பட்டு நியாய விலைக் கடை திறக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**158—**

### புதிய நியாய விலைக் கடை

**வினா எண் 3792—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, வீரசிங்கன் குப்பத்தில் உள்ள புதிய நியாய விலைக் கடையைத் திறப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (அ) அரசாணை (நிலை) எண் 63, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 11-3-1997-ன்படி ஊரகப் பகுதி நியாய விலைக் கடைகளில் 800 குடும்ப அட்டைகளுக்கு மேல் இருந்தால் மட்டுமே புதிய பகுதி நேர நியாய விலைக் கடை திறக்க ஆய்வு செய்யப்படும். மேலும், பகுதி நேரக் கடை திறந்தபின் தாய்க் கடையில் 500 குடும்ப அட்டைகளுக்குக் குறையாமல் இருக்க வேண்டும். வீரசிங்கன் குப்பத்தில் மொத்தம் 523 குடும்ப அட்டைகளே இருப்பதால் அதிலிருந்து புதிய நியாய விலைக் கடை திறக்க வாய்ப்பில்லை.

[2002 மே 10

159—

### தேர்தல்

**வினா எண் 3817—திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவு அமைப்புகளுக்குத் தேர்தல் நடத்த, தனியாக தேர்தல் ஆணையம் ஒன்றை உருவாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

160—

### அடையாள அட்டை

**வினா எண் 3821—திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

இத்தகைய கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.



2002 மே 10]

161—

### கொள்முதல் மையம்

**வினா எண் 4074—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் தென்னை மரம் அதிகம் பயிரிடுவதால் தேசியக் கூட்டுறவு இணையத்துடன்கூடிய கொப்பரைத் தேங்காய் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் சேலம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம், கொப்பரைக் கொள்முதல் மையமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

162—

### உணவுப் பங்கீட்டு அட்டை

**வினா எண் 4090—திருமதி சி.எம். சூரியகலா:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் தொகுதியில் அதிக குடும்பங்களுக்கு உணவுப் பங்கீட்டு அட்டை இல்லையென்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், உணவுப் பங்கீட்டு அட்டைகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(இ) உணவுப் பங்கீட்டு அட்டைகள் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பரிந்துரை செய்தால் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குடியாத்தம் தொகுதியில் 1998-2000 ஆம் ஆண்டுகளில் குடும்ப அட்டை கோரி வரப்பெற்ற 65,317 மனுக்களில், 62,643 மனுக்களுக்குப் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. 2674 மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. 1-1-2001 முதல் 31-8-2001 வரை குடும்ப அட்டை கோரி வரப்பெற்ற 1539 மனுக்களில் 204 மனுக்களுக்குப் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. 121 மனுக்களுக்குப் புதிய குடும்ப அட்டைகள் அச்சிடப் பரிந்துரைக்கப் பட்டுள்ளது. 960 மனுக்கள் விசாரணையில் நிலுவையிலுள்ளன. 254 மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. குடும்ப அட்டைகள் கோரி வரப்பெறுகின்ற மனுக்கள்மீது உடனுக்குடன் விசாரணை செய்து தகுதியான மனுதாரர்களுக்குக் குடும்ப அட்டைகள் வழங்க நடவடிக்கையெடுக்கப்பட்டு வருகின்றது.

(இ) சட்டமன்ற உறுப்பினர்களால் பரிந்துரைக்கப்படும் மனுக்கள் மீது விரைவில் விசாரணையை முடித்து, தகுதியான குடும்பங்களுக்குப் புதிய குடும்ப அட்டை வழங்கப்படும்.

**163—**

**ஒதுக்கீடு**

**வினா எண் 4097—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை நகராட்சியில் உள்ள கூட்டுறவு அங்காடிகளுக்கு வழங்கப்படும் மண்ணெண்ணெய் போதுமான அளவு இல்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், போதுமான அளவு வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) புதுக்கோட்டை நகராட்சியில் உள்ள கூட்டுறவு அங்காடிகளுக்குப் போதுமான அளவில் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.



**164—**

**குடும்ப அட்டை விவரம்**

**வினா எண் 4282—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை நகராட்சியிலுள்ள கூட்டுறவு அங்காடிகளில் எத்தனை ரேசன் கார்டுகள் உள்ளன?

(ஆ) அந்த ரேசன் கார்டுகளுக்கு உள்ள மண்ணெண்ணெயின் அளவு எவ்வளவு?

(இ) மண்ணெண்ணெய் போதுமான அளவுக்குக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) புதுக்கோட்டை நகராட்சியில் உள்ள 24 கூட்டுறவு அங்காடிகளில் மொத்தம் 29,077 குடும்ப அட்டைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

(ஆ) மேற்படி குடும்ப அட்டைகளுக்கு உரிய மண்ணெண்ணெய் அளவு 2,02,058 லிட்டராகும்.

(இ) மண்ணெண்ணெய் போதுமான அளவு, அதாவது 2,02,058 லிட்டர் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

**165—**

**வார்டு விதம்**

**வினா எண் 4296—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகரப் பகுதிகளில் இரண்டு வார்டுக்கு ஒரு இடத்தில் நியாய விலைக் கடைகள் திறக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து தகவல் தரப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகரப் பகுதிகளில் ஒரு கடைக்கு இரண்டு வார்டு வீதம் 8 கடைகளும், ஒரு கடைக்கு மூன்று வார்டு வீதம் 3 கடைகளும், ஒரு கடைக்கு ஒன்றரை வார்டு வீதம் 2 கடைகளும், ஒரு கடைக்கு ஒரு வார்டு வீதம் 2 கடைகளும் இயங்கி வருகின்றன.

**166—**

**புதிய கடை**

**வினா எண் 4745—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், பாச்சாலியூர் கிராமத்தில் நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

எடப்பாடி வட்டம், கொங்கணாபுரம் ஒன்றியம், சின்னப்பம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின்கீழ் ஆயமரத்தூர் நியாய விலைக் கடை 578 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இக்கடையுடன் இணைக்கப்பட்டுள்ள பாச்சாலியூர் சுமார் 1 கிலோ மீட்டர் (2 பர்லாங்) தொலைவில்தான் அமைந்துள்ளது. பகுதி நேரக் கடை அமைத்தபின் தாய்க் கடையில் 500 குடும்ப அட்டைகளுக்குக் குறையாமலும் தாய்க் கடைக்கும், பகுதி நேரக் கடைகளுக்கும் இடையே



குறைந்தது 2 கிலோ மீட்டர் தொலைவு இருக்க வேண்டும் என்ற வரையறைகள் பொருந்தாததால் பாச்சாலியூர் பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க வாய்ப்பில்லை.

**167—**

**முகவர்கள் நியமனம்**

**வினா எண் 4833—திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் மண்ணெண்ணெய் சில்லறை விற்பனை முகவர்களை நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு மண்ணெண்ணெய் விநியோகம் செய்வதற்காக சில்லறை விற்பனை முகவர்களை நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**168—**

**அறிந்த விவரம்**

**வினா எண் 4928—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு முழுவதும் கிராமங்களிலுள்ள நியாய விலைக் கடைகளில் குடும்ப அட்டைக்கு 3 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது 4 லிட்டர் வழங்கப்படும்?

[2002 மே 10

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு முழுவதும் கிராமப் பகுதியில் உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு நியாய விலை அங்காடி மூலம் 3 லிட்டர் வீதம் மண்ணெண்ணெய் வழங்கப்படுவது அரசினால் ஏற்கெனவே அறியப்பட்டதே.

(ஆ) கிராமப் பகுதியில் உள்ள அட்டைதாரர்களுக்கு 4 லிட்டர் வீதம் மண்ணெண்ணெய் வழங்குவது குறித்து அரசின் பரிசீலனை ஏதும் தற்போது இல்லை.

**169—**

### பகுதி நேர கடை

**வினா எண் 4962—திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை அருகே கே. ரெட்டிபாளையம் கிராமத்தில் நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், கே. ரெட்டிபாளையம் கிராமத்தைச் சேர்ந்த 138 குடும்ப அட்டைகளையும், சர்க்கார் புதூர் கிராமத்தைச் சேர்ந்த 160 குடும்ப அட்டைகளையும் சேர்த்து சர்க்கார் புதூரில் ஒரு பகுதி நேர நியாய விலைக் கடை இயங்கி வருகிறது. மேற்கண்ட இரண்டு கிராமங்களுக்கும் இடைப்பட்ட தூரம் 1½ கி.மீ. என்பதால் கே. ரெட்டிபாளையம் கிராமத்தில் தனியாக ஒரு பகுதி நேர நியாய விலைக் கடை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.



2002 மே 10]

**170—**

### நியாய விலைக் கடை

**வினா எண் 4984—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, அழகப்பசமுத்திரம் ஊராட்சியில் நியாய விலைக் கடை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதி, அழகப்பசமுத்திரம் ஊராட்சியில் உள்ள அழகப்பசமுத்திரம் கிராமத்தில் 461 குடும்ப அட்டைகளுடன் ஒரு நியாய விலைக் கடையும், அழகப்பசமுத்திரம் காலனியில் 338 குடும்ப அட்டைகளுடன் ஒரு நியாய விலைக் கடையும், ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றன. இவ்விரண்டு நியாய விலைக் கடைகளுக்கும் இடையே 1 கிலோ மீட்டர் தூரம்தான் உள்ளது. எனவே, மேலும் ஒரு நியாய விலைக் கடை அழகப்பசமுத்திரம் ஊராட்சியில் அமைப்பதற்கான வாய்ப்பு இல்லை.

**171—**

### புதிய கடை

**வினா எண் 4985—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, காளங்குப்பம் கிராமத்தில் நியாய விலைக் கடை அமைத்துத் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ): கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், காளங்குப்பம் கிராமத்தில் 146 குடும்ப அட்டைகளே உள்ள சூழ்நிலையில் அக்கிராமத்திற்கெனத் தனியாக நியாய விலைக் கடை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.*

**172—**

**புதிய கடை**

**வினா எண் 5644—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) பண்ருட்டி தொகுதிக்குட்பட்ட பெரியகோயில் குப்பம் கிராமத்தில் நியாய விலைக் கடை அமைத்துத் தரப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி வட்டம், பாச்சாரபாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின்கீழ் இயங்கி வரும் கீழூர் நியாய விலைக் கடைக்கும், பெரியகோயில் குப்பம் கிராமத்திற்கும் இடைப்பட்ட தொலைவு 1 கிலோ மீட்டருக்கும் குறைவாக உள்ளது. புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமையவிருக்கும் இடத்திற்கும், தாய்க் கடைக்கும் இடையே குறைந்தது 2 கிலோ மீட்டர் இருக்க வேண்டும் என்ற வரையறை உள்ளது. அவ்வரையறை பொருந்தாததால் பெரியகோயில் குப்பம் பகுதியில் நியாய விலைக் கடை அமைக்க வாய்ப்பில்லை.*



**173—**

**புதிய அங்காடி**

**வினா எண் 5645—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) பண்ருட்டி தொகுதி, முத்தரசன் குப்பம் கிராமத்தில் கூட்டுறவு அங்காடி அமைக்கப்படுமா?*

*(ஆ) ஆம் எனில் எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி வட்டம், கீழமாம்பட்டு நியாய விலைக் கடையில் 792 குடும்ப அட்டைகள் இருந்ததால் அந்தக் கடையைச் சார்ந்த முத்தரசன் குப்பத்தில் 203 குடும்ப அட்டைகளுடன் ஒரு பகுதி நேர நியாய விலைக் கடை இரண்டு ஆண்டுகளாகச் செயல்பட்டு வருகிறது.*

**174—**

**குடும்ப அட்டை கோட்டா**

**வினா எண் 5710—திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொங்கலூர் தொகுதியில் குடும்ப அட்டை கோட்டாவோடு நெசவாளர் கோட்டா ஒன்று ஏற்படுத்தி கூடுதல் மண்ணெண்ணெய் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

பொங்கலூர் தொகுதியில் குடும்ப அட்டை கோட்டாவோடு நெசவாளர் கோட்டா ஒன்று ஏற்படுத்தி கூடுதல் மண்ணெண்ணெய்

[2002 மே 10

நெசவாளர்களுக்கு வழங்குவது தொடர்பாக அரசின் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

175—

**வங்கிக் கடன்**

**வினா எண் 5721—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு முழுவதும் உள்ள நிலவள வங்கிகளில் வாங்கியுள்ள கடன்களுக்கு வட்டி, அபராத வட்டித் தள்ளுபடி பொருந்தும் என்று ஆணையிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

176—

**புதிய நியாய விலைக் கடை**

**வினா எண் 5875—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, அம்மையப்பட்டு ஊராட்சிக்குத் தனியாக புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

புதிய நியாய விலைக் கடை அமைக்க வேண்டுமென்றால் கடை அமையவிருக்கும் இடத்திற்கும் அருகில் உள்ள நியாய விலைக் கடைக்கும்



2002 மே 10]

இடையே குறைந்தது 2 கிலோ மீட்டர் தொலைவு இருக்க வேண்டும். ஆனால் அம்மையப்பட்டு பகுதிக்கும் மும்முனி நியாய விலைக் கடைக்கும் இடையே ½ கிலோ மீட்டர் தூரமே உள்ளது. எனவே அம்மையப்பட்டு பகுதியில் நியாய விலைக் கடை அமைக்க வாய்ப்பில்லை.

177—

**தாய்க் கடை**

**வினா எண் 5883—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதியில் பாப்பாக்குடி ஒன்றியம் இடைக்கால் கிராமத்தில் மூன்று நாட்கள் திறக்கப்படும் நியாய விலைக் கடை எல்லா நாட்களும் திறக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், பாப்பாக்குடி ஒன்றியத்திலுள்ள இடைக்கால் கிராம நியாயவிலைக் கடையில் 447 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. இக்கடையின்கீழ் கலிதீர்த்தான்பட்டி (269 குடும்ப அட்டைகள்), பனையங்குறிச்சி (247 குடும்ப அட்டைகள்) ஆகிய இரண்டு பகுதி நேரக் கடைகள் வாரத்தில் மூன்று நாட்கள் செயல்பட்டு வருகின்றன. எனவே, இடைக்கால் தாய்க் கடையானது எல்லா நாட்களும் திறந்து செயல்படுவதற்கான வாய்ப்பும், தேவையும் இல்லை.

178—

**பொது விநியோகத் திட்டம்**

**வினா எண் 5890—திரு. எஸ்.எம். சீனிவேல்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2002 மே 10

முன்பிருந்தது போன்று மூன்று ரூபாய்க்கு ஒரு லிட்டர் மண்ணெண்ணெய் வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

பொது விநியோகத் திட்டத்தின்கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்யப்படும் மண்ணெண்ணெய் லிட்டர் ஒன்றுக்கு ரூ.3 என்ற விலையில் வழங்கிடச் சாத்தியக்கூறுகள் இல்லை.

**179—**

**புதிய தொழில் நுட்பம்**

**வினா எண் 5943—திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நுகர்பொருள் துறையைக் கணினிமயமாக்க அரசு விரைந்து செயலாற்றுமா?

(ஆ) ஆம் எனில், இது குறித்து அரசு எடுக்கும் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர் அலுவலகத்தில் தகவல் சேகரிப்பு மையம் மற்றும் குடும்ப அட்டை அச்சிடும் மையம் நிறுவுவதற்கு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. ஜூன் 2001 முதல் தமிழகம் முழுவதற்குமான குடும்ப அட்டைகள் அச்சிடும் பணி, ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெற்று வருகின்றது.

பொது விநியோகத் திட்டத்தினைச் செயலாக்கம் செய்யும் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, கூட்டுறவுத் துறை, குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை மற்றும்



2002 மே 10]

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஆகிய நிறுவனங்களில் பொது விநியோகத் திட்டம் தொடர்பாகத் தனித்தனியே புள்ளிவிவரம் பெற்று ஆய்வு செய்யப்படுவதனை ஒருங்கிணைத்து கடை/கிடங்கு வாரியான பொது விநியோகத் திட்ட நடவடிக்கைகளைத் தினசரி கண்காணிக்கும் விதமாகவும், பொது விநியோகத் திட்டத்தில் கணினி மூலம் எழுத்துக்கள் தேர்ந்தறியும் தொழில் நுட்பத்தினை-(ICR-Intelligent Character Recognition/OCR Optical Character Recognition)-அறிமுகப்படுத்தி பொது விநியோகத் திட்டத்தின் தகவல் சேகரிப்பு மையமாகச் செயல்படுத்தவும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

**180—**

**கிளைக் கடை**

**வினா எண் 5960—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம் ராதாபுரம் வட்டம் அச்சம்பாடு, புதுக்குடியிருப்பு ஆகிய கிராமங்களைச் சேர்த்து நியாய விலைக் கிளைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

அச்சம்பாடு மற்றும் புதுக்குடியிருப்பு ஆகிய இரண்டு பகுதிகளிலும் மொத்தம் 110 குடும்ப அட்டைகளே உள்ளன. மேலும் இப்பகுதிகள் கிழவனேரி கிராமத்தில் உள்ள தாய்க் கடையிலிருந்து முறையே 1 கிலோ மீட்டர் தொலைவிலும், 1-3/4 கிலோ மீட்டர் தொலைவிலும் அமைந்துள்ளன. பகுதிநேரக் கடை அமைக்க, குறைந்தது 200 குடும்ப அட்டைகளும், 2 கிலோ மீட்டர் தொலைவும் இருக்க வேண்டும் என்கிற வரையறைகள் பொருந்தாததால், அச்சம்பாடு மற்றும் புதுக்குடியிருப்புப் பகுதிகளுக்கு ஒரு பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க வாய்ப்பில்லை.

[2002 மே 10

181

## அங்காடித் திட்டம்

**வினா எண் 6023—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஆணைக்காடு பகுதியில் கூட்டுறவு அங்காடி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், காளகம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின்கீழ் காளகம் அங்காடி செயல்பட்டு வருகிறது. இந்த அங்காடியில் 592 குடும்ப அட்டைகள் உள்ளன. காளகம் அங்காடியின் செயல்பாட்டில் உள்ள ஆணைக்காடு கிராமத்தில் 130 குடும்ப அட்டைகள் உள்ளன. பகுதி நேர நியாய விலை அங்காடி அமைக்க, குறைந்தது 200 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். பகுதி நேர நியாய விலை அங்காடி அமைத்த பின்பு தாய்க் கடையில் குறைந்தது 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். இவ்விரண்டு வரையறைகளும் பொருந்தாததால், ஆணைக்காடு பகுதியில் பகுதி நேர அங்காடி அமைக்க வாய்ப்பில்லை.

182—

## புதிய அங்காடி

**வினா எண் 6257—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பேராவூரணி பேரூராட்சியில் பொன்காடு பகுதியில் கூட்டுறவு அங்காடி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?



2002 மே 10]

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கியின்கீழ் பேராவூரணி கடை எண் 6, 1294 குடும்ப அட்டைகளுடன் செயல்படுகிறது. இந்த அங்காடி பேராவூரணி நகரம், பொன்காடு பகுதியிலேயே அமைந்து உள்ளது. இதனால் பொன்காடு மற்றும் பேராவூரணி பகுதி மக்கள் எவ்வித இடையூறுகளுமின்றி அத்தியாவசியப் பொருட்களைப் பெற்று வருகின்றனர்.

183—

## வங்கியின் அனுமதி

**வினா எண் 6278—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் மத்தியக் கூட்டுறவு வங்கியைப் பிரித்து நாகப்பட்டினத்தில் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி அமைப்பதற்கான செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது செயல்பட்டு வரும் கும்பகோணம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியை நாகப்பட்டினத்தைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட உரிய துணை விதித் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு, இவ்வாறு தலைமையிடத்தை மாற்றுவதற்கு அனுமதி கோரி தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் மூலம் இந்திய ரிசர்வ் வங்கிக்கு முன்மொழிவுகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இது சம்பந்தமாக இந்திய ரிசர்வ் வங்கியின் அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது.

(ஆ) இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து அனுமதி கிடைக்கப் பெற்றவுடன் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**184—**

**புதிய அங்காடி**

**வினா எண் 6288—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், தேனங்காடு குறவன் கொல்லை கிராமத்திற்குத் தனியாகக் கூட்டுறவு அங்காடி ஏற்படுத்தித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, குருவிக்கரம்பை-2 நியாய விலைக் கடை 476 குடும்ப அட்டைகளுடன் செயல்படுகிறது. இக்கடையைச் சேர்ந்த தேனங்காடு பகுதியில் 152 குடும்ப அட்டைகளே உள்ளன. அரசாணை வரையறைகளின்படி பகுதி நேர அங்காடி அமைக்க, குறைந்தது 200 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். பகுதி நேர அங்காடி அமைத்தபின் தாய்க் கடையில் குறைந்தது 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். இவ்விரு வரையறைகளும் பொருந்தாததால், தேனங்காடு பகுதியில் பகுதி நேர அங்காடி அமைக்க வாய்ப்பில்லை.

**185—**

**பகுதி நேரக் கடை**

**வினா எண் 6302—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி-காந்திநகர் (காடாம்புலியூர் ஊராட்சி) மக்களுக்குப் பகுதி நேர நியாய விலைக் கடை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?



(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு விதிமுறைகளின்படி பகுதி நேரக் கடை அமைப்பதற்கு தாய்க் கடைக்கும், பகுதி நேரக் கடைக்கும் இடைப்பட்ட தூரம் 2 கி.மீ. இருக்க வேண்டும். ஆனால் காடாம்புலியூர் நியாய விலைக் கடைக்கும், காந்தி நகருக்கும் இடைப்பட்ட தூரம் 1/2 கி.மீ. மட்டுமே உள்ளதால், காந்திநகர் பகுதியில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைப்பதற்கு வாய்ப்பு இல்லை.

**186—**

**பகுதி நேரக் கடை**

**வினா எண் 6397—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதிக்குட்பட்ட ஆத்திரிக்குப்பம் கிராமத்திற்கு நியாய விலைக் கடை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதிக்குட்பட்ட ஆத்திரிகுப்பம் கிராமத்தில் ஒரு பகுதி நேர நியாய விலைக் கடை 26-4-2001 முதல் செயல்பட்டு வருகிறது.

**187—**

**புதிய குடும்ப அட்டை**

**வினா எண் 6431—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2002 மே 10

(அ) பண்ருட்டி தொகுதி, கீழக்குப்பம் சிறுதொண்டமாதேவி கிராமத்தில் குடும்ப அட்டை வழங்கப்படாதவர்களுக்கு அதனை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கீழக்குப்பம் மற்றும் சிறுதொண்டமாதேவி கிராம நியாய விலைக் கடைகளில் முறையே 460, 696 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. புதிய குடும்ப அட்டை கோரி கீழக்குப்பம் கிராமத்திலிருந்து கோரிக்கைகள் ஏதும் 2001 ஆம் ஆண்டில் வரப்பெறவில்லை. சிறுதொண்டமாதேவி கிராமத்தில் புதிய குடும்ப அட்டை கோரி வரப்பெற்ற 11 மனுக்களில், மனுதாரர்களது பெற்றோரது குடும்ப அட்டைகளில் மனுதாரர்களது பெயர்கள் இணைக்கப்பட்டுள்ளதால், நீக்கல் சான்று பெற்று விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தி மனுக்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன.

**188—**

### நுகர்வோர் விருப்பம்

**வினா எண் 6454—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொது விநியோகத் திட்டத்தின்கீழ் எத்தனை வகையான குடும்ப அட்டைகள் வழங்கப்படுகின்றன?

(ஆ) உணவுப் பொருட்கள் வழங்குவதில் ஏதேனும் வருமான வரம்புகள் உள்ளனவா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அரிசி வேண்டுவோருக்கு இளஞ்சிவப்பு நிற அட்டைகளும், அரிசிக்குப் பதிலாக



2002 மே 10]

சர்க்கரை அல்லது மண்ணெண்ணெய் வேண்டுவோருக்கு மஞ்சள் நிறக் குடும்ப அட்டைகளும், காவல் துறையினருக்கு காக்கி நிற அட்டைகளுமாக மூன்று வகையான குடும்ப அட்டைகள் தற்சமயம் வழங்கப்பட்டுள்ளன. நுகர்வோர்களது விருப்பத்தினடிப்படையில் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதால், உணவுப் பொருட்கள் வழங்குவதில் வருமான வரம்புகள் எதுவும் விதிக்கப்படவில்லை.

**189—**

### மலைப் பகுதி

**வினா எண் 6455—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் சமையல் எரிவாயு வைத்திருக்கும் குடும்பத்தாருக்கு எத்தனை லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது?

(ஆ) மலைப் பகுதிகளில் வசிப்போர்க்குக் கூடுதலாக மண்ணெண்ணெய் வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) நீலகிரி மாவட்டம் உட்பட மாநிலம் முழுவதும் ஒரு சமையல் எரிவாயு இணைப்புப் பெற்ற குடும்ப அட்டைதாரர்களுக்கு 3 லிட்டர் வீதம் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது. இரு எரிவாயு இணைப்புப் பெற்றுள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு மண்ணெண்ணெய் ஏதும் வழங்கப்படுவதில்லை.

(ஆ) மலைப் பகுதியில் வசிப்போருக்குப் பிற பகுதியில் வசிக்கும் குடும்ப அட்டைதாரரைவிட ஏற்கெனவே மண்ணெண்ணெய் கூடுதலாக வழங்கப்பட்டு வருகிறது.

[2002 மே 10

**190—**

### புதிய கூட்டுறவுக் கடை

**வினா எண் 6621—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, மணிமங்கலம் மற்றும் கிராம காலனி மக்களுக்குக் கூட்டுறவுக் கடை அமைக்கப் போதுமான குடும்ப அட்டை எண்ணிக்கை இருப்பதனால் கூட்டுறவுக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

வந்தவாசி தொகுதி, மணிமங்கலம் கிராமத்தில் 104 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளதால் நடைமுறையிலுள்ள அரசாணையின் வரையறைகளின்படி பகுதி நேரக் கடை திறக்க வாய்ப்பு இல்லை.

**191—**

### ஓய்வூதியம்

**வினா எண் 7691—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவது போன்று தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிப் பணியாளர்களுக்கும் ஓய்வூதியம் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவது போன்று தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிப் பணியாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



2002 மே 10]

**192**

### சங்கங்களுக்குத் தேர்தல்

**வினா எண் 7693—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்தும் உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். கூடிய விரைவில் நடத்தப்படும்.

**193—**

### வங்கிகளின் செயல்பாடு

**வினா எண் 7696—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளை ஒரே துறையின் கட்டுப்பாட்டில் கொண்டுவர அரசு முயற்சி மேற்கொள்ளுமா? தற்போது மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் கட்டுப்பாட்டிலும், கூட்டுறவு அரசுத் துறையின்கீழ் நிர்வாகமும் நடைபெற்று வருகிறது. இதனை மாற்றி ஒரு துறையின்கீழ்க் கொண்டுவந்தால் வங்கிகள் சிறப்பாகச் செயல்பட வாய்ப்பிருக்கிறது. அரசு முயற்சி மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் உள்ள 4589 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளும் கூட்டுறவுத் துறையின் கட்டுப்பாட்டில்தான்

[2002 மே 10

செயல்பட்டு வருகின்றன. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளிடமிருந்து நிதியுதவி பெற்று செயல்படுகின்றன.

**194—**

**சட்டம்**

**வினா எண் 7700—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாதிரி கூட்டுறவுச் சட்டத்தை அமுல்படுத்த தமிழக அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**195—**

**சொந்த கட்டடம்**

**வினா எண் 7828—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியம், ஆரூர்பட்டி ஊராட்சியிலுள்ள ஆரூர்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குச் சொந்தக் கட்டடம் கட்ட இந்த நிதியாண்டில் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2002 மே 10]

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆரூர்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி தொடர்ந்து நஷ்டத்தில் இயங்கி வருவதால் சொந்தக் கட்டடம் கட்டச் சாத்தியக் கூறுகள் இல்லை.

**196—**

**வங்கியின் அனுமதி**

**வினா எண் 7829—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஆரூர்பட்டி ஊராட்சியிலுள்ள ஆரூர்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு லேவாதேவியைப் பெருக்க மத்திய காலக் கடன் வழங்க சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் அனுமதி கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஆரூர்பட்டி ஊராட்சியிலுள்ள ஆரூர்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு லேவாதேவியைப் பெருக்க, மத்திய காலக் கடன் வழங்க, சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் அனுமதி வழங்க இயலாது.

**197—**

**கையகப்படுத்திய நிலம்**

**வினா எண் 8722—எஸ்.எம். பாலன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) லால்குடி கூட்டுறவு பாலிடெக்னிக்கிற்குக் கையகப்படுத்திய இடத்தில் இருந்து திருச்சி லால்குடி மெயின் ரோட்டிற்கு வந்துசேர புதிய ரோடு போடுவதற்குரிய நிலம் கையகப்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) லால்குடி கூட்டுறவு பாலிடெக்னிக்கிற்குப் புதிய பாதை போடுவதற்கு நிலம் கட்டாயக் கையகப்படுத்துவதற்கு, திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதி கிடைக்கப்பெற்றவுடன், நிலம் கையகப்படுத்திய பின், பாதை அமைக்கும் பணி தொடங்கப்படும்.

**198—**

**பகுத்தாய்வு**

**வினா எண் 8830—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் ரூ. 1.50 கோடிகளுக்கு மேல் நடைமுறை மூலதனம் உள்ளதை 'ஏ' வகுப்பு என்றும், ரூ.1 கோடிக்கு மேல் ரூ.1.50 கோடி வரை 'பி' வகுப்பு என்றும், ரூ.1 கோடிக்கு கீழ் உள்ளதை 'சி' வகுப்பு என்றும் பிரித்துப் பாகுபடுத்த அரசு முயற்சி மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அத்தகைய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**199—**

**அங்காடி மாற்றம்**

**வினா எண் 9141—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியம், சிலுப்பனூர் கிராமத்திற்கு உள்ள பகுதி நேர அங்காடியை முழு நேர அங்காடியாக மாற்றித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரியலூர் மாவட்டம், செந்துறை ஒன்றியம், சிலுப்பனூர் கிராமத்தில் 498 குடும்ப அட்டைகளுடன் ஒரு முழு நேர நியாய விலை அங்காடி மட்டுமே செயல்பட்டு வருகிறது. இக்கிராமத்தில் பகுதி நேர அங்காடி ஏதும் இல்லை. இக்கடையைச் சேர்ந்த தளவாய் கடலூர் பகுதியில் 233 குடும்ப அட்டைகளுடன் ஒரு பகுதி நேர அங்காடி செயல்பட்டு வருகிறது. சிலுப்பனூர் அங்காடி, வாரத்தில் 4 நாட்களும், தளவாய் கடலூர் பகுதி நேர அங்காடி 2 நாட்களும் செயல்படுகின்றன.

**200—**

**நடவடிக்கை**

**வினா எண் 9199—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2002 மே 10

(அ) தமிழ்நாட்டில் போலி குடும்ப அட்டைகள் கண்டறியப்படுகிறதா?

(ஆ) போலி குடும்ப அட்டைகளை ஒழிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் குடும்ப அட்டைகள் தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டு, போலி எனக் கண்டறியப்படும் குடும்ப அட்டைகள் உடனுக்குடன் ரத்து செய்யப்படுகின்றன.

## பட்டியல் 12*

1—

### தெருவிளக்கு அமைத்தல்

**வினா எண் 6—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஒன்றியம், கத்தக்குறிச்சி பஞ்சாயத்தில் தெருவிளக்கு அமைப்பதற்குப் பணம் கட்டி, காலதாமதமாவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது தெருவிளக்கு அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஒன்றியம், கத்தக்குறிச்சி பஞ்சாயத்தில் 11 புதிய தெருவிளக்குகள் அமைக்கப்பட்டு, தற்போது நல்ல நிலையில் இயங்கி வருகிறது.

*இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.



2002 மே 10]

2—

### குடிநீர் கட்டணம்

**வினா எண் 9—டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை நகராட்சியில் அதிகமாக உள்ள குடிநீர்க் கட்டணத்தைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நகராட்சியின் நிதிநிலையையும், உலக வங்கி மற்றும் ஹட்கோ போன்ற நிறுவனங்களிடம் பெற்ற கடனுக்காகச் செலுத்த வேண்டிய தொகையையும் கருத்தில் கொண்டு புதுக்கோட்டை நகராட்சியில் விதிக்கப்படும் குடிநீர்க் கட்டண வீதத்தை குறைக்க இயலாது.

3—

### பாதாளச் சாக்கடை

**வினா எண் 10—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை நகருக்குப் பாதாளச் சாக்கடை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை நகருக்குத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ரூ.29.50 கோடி தோராய மதிப்பீட்டில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

4—

### கடைகள் ஒதுக்கீடு

**வினா எண் 81—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) நீலகிரி மாவட்டம், குன்னூர் நகராட்சிக் கடைகளை அந்தந்தக் குத்தகைதாரர்களுக்கு ஒதுக்கீடு செய்ய அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குன்னூர் நகராட்சிக்குச் சொந்தமான தினசரி மார்க்கெட்டிலும், நகரின் வெளிப்பகுதியிலுமாக உள்ள 898 கடைகளில், 829 கடைகளுக்கான உரிமம் 31-03-2001-ல் முடிந்துவிட்டது. அதில், பழைய உரிமதாரர்களே நடத்திவரும் 377 கடைகளைப் பொறுத்தவரை 25 சதவீதம் கட்டணம் உயர்வு செய்து உரிமம் வழங்க நகராட்சியால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மற்ற 452 கடைகளைக் காலி செய்துவிட்டு, பொது ஏலத்தில் உரிமம் வழங்க எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. உயர் நீதிமன்றத்தால் வழங்கப்படும் தீர்ப்பின் அடிப்படையில் மேல் நடவடிக்கை தொடரப்படும்.

5—

### குடிநீர் வழங்குதல்

**வினா எண் 96—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி ஒன்றியத்தில் புதியதாகக் கட்டிய 10 மேல்நிலைத் தொட்டிகளிலிருந்து குடிநீர் வழங்கவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், அவைகளுக்குக் குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*



விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி ஒன்றியத்தில் காவேரி ஆற்று நீரை நீராதாரமாகக் கொண்ட இராசிபுரம் - எடப்பாடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து 49 வழியோரக் கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டத்தின் (நிலை-2)கீழ்க் கட்டப்பட்ட 10 மேல்நிலைத் தொட்டிகள் மூலமாகத் தற்போது காவிரிக் குடிநீர் மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

6—

### குடிநீர் வழங்குதல்

**வினா எண் 97—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி ஒன்றியத்திலுள்ள கண்ணந்தேரி பஞ்சாயத்தில் புதியதாகக் கட்டிய 15 மேல்நிலைத் தொட்டிகளிலிருந்து 4 ஆண்டு காலமாகக் குடிநீர் வழங்கவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், அங்குள்ள மேல்நிலைத் தொட்டிகளுக்குக் குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி ஒன்றியம், கண்ணந்தேரி பஞ்சாயத்தில், காவேரி ஆற்று நீரை நீராதாரமாகக் கொண்ட இராசிபுரம் - எடப்பாடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து 49 வழியோர கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டத்தின் (நிலை-2) கீழ் கட்டப்பட்ட 15 மேல்நிலைத் தொட்டிகள் மூலமாகத் தற்போது காவிரிக் குடிநீர் மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

[2002 மே 10

7—

## காவிரி குடிநீர்த் திட்டம்

**வினா எண் 117—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* புதுக்கோட்டை நகருக்கு வரும் காவிரிக் குடிநீரை அருகிலுள்ள ஒன்றியங்களுக்கும் பகிர்ந்தளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* புதுக்கோட்டை நகருக்குக் காவிரிக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் புதுக்கோட்டை நகராட்சி, 3 பேரூராட்சிகள் மற்றும் புதுக்கோட்டை, திருச்சி, கரூர் மாவட்டங்களில் 15 வழியோரக் கிராமங்கள் பயனடையும் வகையில் நிறைவேற்றப்பட்ட வரையறுக்கப்பட்ட திட்டமாகும். திட்டம் உருவாக்கப்பட்டு உலக வங்கி உதவியுடன் ரூ.40.62 கோடியில் செயல்படுத்தப்பட்டு 10/1994 முதல் பராமரிக்கப்பட்டு வருகிறது. எனவே, இத்திட்டத்தில் கூடுதலாக ஒன்றியங்களுக்குக் குடிநீர் பகிர்ந்தளிக்கச் சாத்தியம் இல்லை.

8—

## மேல்நிலைத் தொட்டி அமைத்தல்

**வினா எண் 288—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் எத்தனை மேல்நிலைத் தொட்டிகள் கட்டப்பட்டு பேரூராட்சி நிர்வாகத்திடம் ஒப்படை செய்யப்பட்டுள்ளன?

*(ஆ)* இன்னும் ஒப்படை செய்யப்படாமல் உள்ளவை எத்தனை?



2002 மே 10]

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* சேலம் மாவட்டம், இடங்கணசாலை பேரூராட்சியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் 17 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டு பேரூராட்சிக்கு ஒப்படைப்புச் செய்யப்பட்டுள்ளது.

*(ஆ)* மூன்று நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டு இன்னும் பேரூராட்சிக்கு ஒப்படைப்புச் செய்யப்படாமல் உள்ளது.

9—

## ஆதிதிராவிடர் குடியிருப்புக்கு குடிநீர்

**வினா எண் 516—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், லெவிஞ்சுபுரம் ஊராட்சி, இந்திராகாலனி, கைலாசபுரம் ஆதிதிராவிட மக்கள் வசிக்கும் பகுதிக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டிக் குடிநீர் வழங்கிட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், லெவிஞ்சுபுரம் ஊராட்சி, கைலாசபுரம் ஆதிதிராவிடர் காலனி (இந்திராகாலனி) குடியிருப்புக்கு மாடம்பள்ளி, தர்மம் கிராமத்திலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து குழாய் நீட்டிப்புச் செய்து 3 பொதுக் குழாய்கள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. ஆதிதிராவிடர் காலனி பகுதிக்குத் தனியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பது குறித்த கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

[2002 மே 10

10—

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

**வினா எண் 517—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஊராட்சி, லெவிஞ்சுபுரம் ஊராட்சி, மகாராஜபுரம், விஸ்வநாதபுரம், நரிப்பாறைக் கிராமங்களுக்கு 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம். திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஊராட்சி ஒன்றியம், லெவிஞ்சுபுரம் ஊராட்சியில் உள்ள மகாராஜபுரம், விஸ்வநாதபுரம், நரிப்பாறை ஆகிய குடியிருப்புகள் நாங்குநேரி - திசையன்விளை மற்றும் 342 வழியோரக் கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் ஏற்கெனவே லெவிஞ்சுபுரத்தில் உள்ள 10,000 லிட்டர் மற்றும் தற்போது கட்டப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு நீரேற்றி, அதிலிருந்து குழாய் நீட்டிப்புச் செய்து குடிநீர் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

11—

### அத்திக்கடவு குடிநீர்த் திட்டம்

**வினா எண் 519—திரு. எஸ். மகாலிங்கம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவிநாசி தொகுதியில் குடிதண்ணீர் அற்ற கிராமங்களுக்கு அத்திக்கடவு குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆமெனில், எப்போது?



2002 மே 10]

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பவானி ஆற்றின் உபரி வெள்ள நீரை அத்திக்கடவு என்ற இடத்தில் தடுத்து நிறுத்தி, கோவை மற்றும் ஈரோடு மாவட்டங்களைச் சார்ந்த 1) காரமடை 2) அன்னூர் 3) அவிநாசி 4) நம்பியூர் 5) சென்னிமலை 6) ஊத்துக்குளி 7) பெருந்துறை ஆகிய ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள குளம், குட்டைகளில் நிரப்பி, நிலத்தடி நீரின் வளத்தை மேம்படுத்தும் திட்டத்தின் சாத்தியக்கூறுகளை ஆராயும் பொருட்டு ஒரு ஆலோசகர் நியமிக்கப்பட்டு, ஆலோசகரிடமிருந்து இறுதி ஆய்வறிக்கை பெறப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டது. அரசு அரசாணை (நிலை) எண் 66, நாள் 22-03-2001-ல் பொறியியல் இயக்குநர், த.கு.வ.வாரியம், சென்னை-5 அவர்கள் தலைமையில் மூன்று உறுப்பினர்கள் கொண்ட ஒரு குழுவினை அமைத்து ஆலோசகரின் அறிக்கையை ஆய்வு செய்து குழுவின் பரிந்துரைகளை மூன்று மாதங்களுக்குள் அரசுக்குச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. தற்பொழுது குழுவின் பரிந்துரைகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பெறப்பட்டு, அரசுக்கு அனுப்பப்பட்டு அரசின் ஆய்வில் உள்ளது.

12—

### வீடுகளுக்கு குடிநீர் இணைப்புகள்

**வினா எண் 526—திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி நகராட்சியில் வீடுகளுக்குக் குடிநீர் இணைப்புகளைப் புதியதாக வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம்.

13—

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

**வினா எண் 528—திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2002 மே 10

தருமபுரி நகரை ஒட்டியுள்ள இலக்கியம்பட்டி பஞ்சாயத்து குடியிருப்பு வாசிகளுக்குக் குடிநீர் வழங்க மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம். தக்க பரிசீலனைக்குப்பின் நடவடிக்கை எடுக்கும்.

**14—**

**நிழற்குடை அமைத்தல்**

**வினா எண் 638—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி, வெட்டன் விடுதியில் பயணியர் நிழற்குடை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

**15—**

**தெரு மின் விளக்குகள் அமைத்தல்**

**வினா எண் 658—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், சக்கரப்பநாயக்கனூர் பஞ்சாயத்திற்குக் கூடுதல் தெரு மின் விளக்குகள் அமைத்துத்தர அரசு முன்வருமா?



2002 மே 10]

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், சக்கரப்பநாயக்கனூர் பஞ்சாயத்திற்குக் கூடுதல் தெரு மின் விளக்குகள் அமைக்கச் சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை.

**16—**

**தார்ச் சாலை அமைத்தல்**

**வினா எண் 775—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி நகராட்சி, 9-வது வார்டு, கருக்கட்டான்பட்டி பகுதிக்குத் தார்ச் சாலை அமைத்துத் தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி நகராட்சி, 9-வது வார்டு கருக்கட்டான்பட்டி பகுதிக்கு உசிலம்பட்டி நகராட்சியில் போதிய நிதி ஆதாரம் இல்லாததால் தார்ச் சாலை அமைத்துத்தர இயலவில்லை.

**17—**

**பேருந்து நிலையம் கட்டுதல்**

**வினா எண் 873—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, மங்கநல்லூர் கடைவீதியில் பேருந்து நிலையம் கட்டுவதற்கு அரசு முன்வருமா?

[2002 மே 10

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

**18—**

**தொலைக்காட்சிப் பெட்டி அளித்தல்**

**வினா எண் 874—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தொலைக்காட்சிப் பெட்டி (டி.வி.) இல்லாத கிராமங்களுக்குத் தொலைக்காட்சிப் பெட்டி தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தொலைக்காட்சி பெட்டி இல்லாத கிராமங்களுக்குத் தொலைக் காட்சிப் பெட்டிகளை அரசே வழங்க இயலாது.

**19—**

**தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

**வினா எண் 887—திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமயநல்லூர் தொகுதியில் ஆதிதிராவிடர் மக்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டுவது போன்று, பிற வகுப்பைச் சார்ந்த ஏழை மக்களுக்கும் தொகுப்பு வீடுகள் கட்டும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சமயநல்லூர் தொகுதியில் 2001-2002 ஆம் நிதியாண்டில் 154 தொகுப்பு வீடுகள் கட்டப்படவுள்ளன. அதில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு 100 தொகுப்பு வீடுகளும், ஆதிதிராவிடர்-பழங்குடியினர் அல்லாதோருக்கு 15 தொகுப்பு வீடுகளும் ஒதுக்கப்பட்டுள்ளன.



2002 மே 10]

**20—**

**புதிய ஒன்றியத்தை உருவாக்குதல்**

**வினா எண் 909—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து புதிய இரண்டு ஒன்றியங்களை உருவாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், சிக்கல் ஊரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய ஒன்றியத்தை உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) கடலாடி ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து சாயல்குடியைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய ஊராட்சி ஒன்றியத்தை அமைக்கும் கருத்துரு அரசால் பெறப்பட்டுள்ளது.

**21—**

**துப்புரவு பணியாளர்கள் நியமனம்**

**வினா எண் 911—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரம் பேரூராட்சியில் துப்பரவுப் பணியாளர்களை அதிக அளவில் நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரம் பேரூராட்சியில் துப்பரவுப் பணியாளர் பணியிடங்கள் போதுமான அளவு உள்ளதால் கூடுதலாகப் பணியிடங்கள் தோற்றுவிக்க வழிவகை இல்லை.

22—

## பேருந்து நிலையம் விரிவுபடுத்துதல்

**வினா எண் 1029—திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடையநல்லூர் நகரப் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கடையநல்லூர் நகரப் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தச் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

23—

## சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் கட்டுதல்

**வினா எண் 1050—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் நகரில் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் கட்ட நகராட்சிக்குச் சொந்தமான இடத்தை வழங்கத் தீர்மானம் இயற்றப்பட்டும், இன்னும் வழங்கப்படாததை அரசு அறியுமா?

(ஆ) அந்த இடத்தை எப்போது அரசு வழங்கும்?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் நகராட்சி, வார்டு எண் 5, பிளாக் எண் 13, நகரளவு எண் 587/6-ல் 2000 சதுர அடி இடத்தை, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி அலுவலகம் கட்ட ஒதுக்கீடு செய்ய நகர்மன்றம் இசைவு தெரிவித்துள்ளது. பூங்காப் பயனுக்காக நில உரிமை மாற்றம் செய்யப்பட்ட மேற்படி இடத்தின் பயன் மாற்றம் ஏற்படுவதால், நிலப்பயன் மாற்றல் ஆணை மாவட்ட ஆட்சியரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. அது கிடைக்கப்பெற்றதும், குறிப்பிடப்பட்ட இடத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி அலுவலகம் கட்ட முன் நுழைவு செய்ய சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுமதி வழங்கப்படும்.



24—

## குப்பைகளைக் கொட்டுதல்

**வினா எண் 1053—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் நகராட்சிக்குச் சொந்தமான கழிவு நீர்ப் பண்ணையை குத்தகைக்கு விடுவதை நிறுத்தி, அங்கு குப்பைகளை கொட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வேலூர் நகராட்சிக்குச் சொந்தமான கழிவு நீர்ப் பண்ணை, பாலாற்றின் கரையை ஒட்டியுள்ளதால், அது குப்பை கொட்டுவதற்கு ஏற்ற இடமல்ல, எனவே, அதைக் குப்பை கொட்டும் இடமாக மாற்றும் உத்தேசமில்லை.

25—

## குடிநீர் வழங்குதல்

**வினா எண் 1059—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் நகராட்சிக்குக் குடிநீர் விநியோகம் செய்யும் வேலூர் நகராட்சிக்குச் சொந்தமான ஓட்டேரி, பல நபர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) அந்த ஆக்கிரமிப்புகள் முழுவதும் எப்போது அகற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் நகராட்சிக்குக் குடிநீர் வழங்கும் ஓட்டேரியை ஒட்டிய பகுதி விருபாட்சிபுரம் கிராமத்தைச் சார்ந்தது. எனவே, அதிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற மாவட்ட நிர்வாகத்தைக் கலந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

26—

## குடிநீர்த் தட்டுப்பாடு

**வினா எண் 1061—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் குடிநீர்த் தட்டுப்பாட்டை நிரந்தரமாகப் போக்க ஒகேனக்கல்லிலிருந்து காவிரியாற்று நீர் எடுத்துவரும் திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்? அதற்காகும் மதிப்பீடு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வேலூர் நகராட்சி மற்றும் இதர வழியோர நகராட்சி மற்றும் பேரூராட்சிகளின் குடிநீர்த் திட்டங்களின் நீராதாரங்கள் பாலாற்றில் தோல் தொழிற்சாலைக் கழிவு நீரினால் மாசு அடைந்துள்ளதால், இதற்கு மாற்றுத் திட்டமாக வேலூர் நகராட்சி மற்றும் 3 நகராட்சிகள், மற்றும் 4 பேரூராட்சிகள், ஏனைய வழியோர ஊரகக் குடியிருப்புகள் மற்றும் புளோரைடினால் பாதிக்கப்பட்ட 631 குடியிருப்புகளுக்கும் சேர்த்து ஒகேனக்கல்லுக்கு அருகில் காவேரி ஆற்றிலிருந்து குடிநீர் கொண்டு வரும் திட்டம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இத்திட்டத்திற்கான ஆய்வு மதிப்பீடு ரூ.400.00 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுப் பரிசீலனையில் உள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1-8-2001 மற்றும் 2-8-2001 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் வேலூர் நகராட்சிக்கு ஒகேனக்கல் அருகே காவிரி ஆற்றிலிருந்து குடிநீர் வழங்கப்படும் என அறிவித்துள்ளதால், வேலூர் மாவட்டத்தில், வேலூர் நகராட்சி மற்றும் இதர வழியோர உள்ளாட்சி அமைப்புகள் பயன்பெறும் வகையில் ஒகேனக்கல் அருகே காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைக்கத் தனியார் தொழில்நுட்ப ஆலோசகர் மூலம் கருத்துரு தயாரிக்க உத்தேசிக்கப்பட்டு, அதற்கான உரிய நடவடிக்கைகள் வாரியத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், வேலூர் நகராட்சி, சத்துவாச்சாரி பேரூராட்சி மற்றும் 12 வழியோரக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.19.22 கோடி மதிப்பீட்டில் அரசு ஆணை எண் 106, நாள் 11-8-2000-ன்படி நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டுப் பரிசீலனையில் உள்ளது. ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டதும் பணிகள் தொடங்கப்படும்.





27—

## புதிய பேருந்து நிலையம் அமைத்தல்

**வினா எண் 1065—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூரில் புதிய பேருந்து நிலையம் அமைக்க கூட்டுறவுத் துறைக்குச் சொந்தமான பழத் தொழிற்சாலை இடத்தை 10 வாரத்தில் கையகப்படுத்திப் பணி தொடங்கப்பட வேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்றம் ஆணையிட்டதை அரசு அறியுமா?

(ஆ) நிலம் கையகப்படுத்தும் பணி தொடங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) வேலூர் நகராட்சியில் பேருந்து நிலையம் அமைக்க கூட்டுறவுத் துறைக்குச் சொந்தமான பழத் தொழிற்சாலை நிலத்தினை நிலமெடுப்புச் சட்டத்தின்கீழ்க் கையகப்படுத்தி நிலக்கிரயம் செலுத்துவதற்குத் தேவையான நிதியை தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதிகள் மேம்பாட்டுக் கழகத்திடம் (TUFIDCO) கடனாகப் பெற நகராட்சியால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. உயர் நீதிமன்றத்தின் காலக் கெடுவிற்குள் நிலத்தைக் கையகப்படுத்த இயலாத நிலை உள்ளதால் மேலும் 6 மாத காலத்திற்குக் காலக்கெடு நீட்டிப்புச் செய்து தர வேண்டி உயர் நீதிமன்றத்தில் நகராட்சியால் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

28—

## கிணறு புதுப்பித்தல்

**வினா எண் 1131—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி பேரூராட்சி, விழுப்புரம் சாலையில் மேனிலைத் தொட்டி, கிணறு இவற்றைச் சரி செய்து தண்ணீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) கிணற்று நீர் உப்பு நீராக உள்ளது. கிணற்று மேல்நீர்த் தேக்கத் தொட்டிக்கு அருகில் உள்ள நீர், குடிநீருக்கு உகந்ததல்ல. உப்பு நீராக உள்ளது. மேலும் பொது மக்கள் அக்கிணற்றில் குப்பைக் கூளங்களைக் கொட்டி அசுத்தப்படுத்தியுள்ளனர். தற்போது அக்கிணற்றில் தண்ணீரே இல்லை. எனவே, இக்கிணற்றைப் புதுப்பிக்கச் சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) வினா எழவில்லை

**29—**

**கூட்டுக் குடிநீர்த் திட்டம்**

**வினா எண் 1138—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் எந்த நிலையில் உள்ளன?

(ஆ) இத்திட்டத்தின் மூலம் அரூர் தொகுக்குட்பட்ட கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஒகேனக்கல் அருகே காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு குடிநீர் மற்றும் சுகாதார வசதியுடன் ஒருங்கிணைந்த திட்டம் ஒன்றினைத் தருமபுரி மாவட்டம் முழுவதிலும் உள்ள 3 நகராட்சிகள், 17 பேரூராட்சிகள் மற்றும் 18 ஒன்றியங்களிலுள்ள 5542 குடியிருப்புகளும் பயன்பெறும் வகையில் ரூ.1008 கோடிக்குத் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் அரூர் தொகுதிக்குட்பட்ட அனைத்துக் குடியிருப்புகளும் அடங்கும். இத்திட்ட மதிப்பீடு ரூ.1008 கோடியைக் கருத்தில் கொண்டு வெளிநாட்டு நிதி உதவி மூலம் இத்திட்டத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



**30—**

**காவிரிக் குடிநீர் வழங்குதல்**

**வினா எண் 1159—திரு. ப. இராஜரெத்தினம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை விரைவுபடுத்தி பெரம்பலூர் நகருக்கும், வழியோரக் கிராமங்களுக்கும் காவிரிக் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பெரம்பலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை விரைவுபடுத்தி பெரம்பலூர் நகருக்கும், வழியோரக் கிராமங்களுக்கும் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**31—**

**மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி கட்டுதல்**

**வினா எண் 1169—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், புள்ளனேரி பஞ்சாயத்து கீழப்பச்சேரி, மேலப்பச்சேரி மக்களுக்கு மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி கட்டித்தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஊரகக் குடிநீர்த் திட்டக் கோட்பாடுகளுக்குட்பட்டு, தகுதி, தேவை மற்றும் நிதி ஆதாரங்களைக் கருத்தில் கொண்டு, வரும் நிதியாண்டில் மேற்கண்ட கிராமத்திற்குப் புதிய குடிநீர்த் திட்டம் செயலாக்க, முன்னுரிமையின் அடிப்படையில் எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

32—

## குடிதண்ணீர் வழங்குதல்

**வினா எண் 1171—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி நகராட்சிப் பகுதிக்கு வைகை ஆற்றிலிருந்து தண்ணீர் கொண்டு வர நிதி ஒதுக்கீடு செய்தும் இதுவரை தண்ணீர் வரவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், விரைவாகக் குடிதண்ணீர் வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) உசிலம்பட்டி நகராட்சிக்கான குடிநீர் வழங்கும் அளவை அதிகரிப்பதற்கான குடிநீர் விரிவாக்கத் திட்டத்திற்கு ரூ. 290 இலட்சம் மதிப்பீட்டில் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

33—

## குடிதண்ணீர் வழங்குதல்

**வினா எண் 1189—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி பஞ்சாயத்து யூனியன்களில் நடுப்பட்டி பஞ்சாயத்து, தாதம்பட்டிபெருமாள் கோவில்பட்டி கூட்டுக் குடிநீர்த் தொட்டியில் உப்புத் தண்ணீராக உள்ளதால் குடிதண்ணீராக பயன்படுத்த முடியாத நிலையுள்ளதால் நல்ல குடிதண்ணீர் வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தாதம்பட்டி-பெருமாள் கோவில்பட்டி குடியிருப்பின் குடிநீர் கடின நீராக உள்ளதால், நன்னீராக்கும் உபகரணம் நிறுவ உத்தேசிக்கப்பட்டு அதற்கான கருத்துரு பரிசீலனையில் உள்ளது.



34—

## டோராப்பாறை திட்டம்

**வினா எண் 1207—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி யூனியன் தெற்குப் பகுதியிலுள்ள மக்களுக்கு குடிதண்ணீர்ப் பிரச்சினை உள்ளதால் டோராப்பாறை திட்டத்தை செயல்படுத்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி ஒன்றியம், தெற்குப் பகுதியில் உள்ள மக்களின் குடிநீர்ப் பிரச்சினை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இதைக் கருத்திற்கொண்டு, வைகை அணையின் கீழ்புறத்திலிருந்து ஆற்று நீரை ஆதாரமாகக் கொண்டு, சேடப்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கான விரிவான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் உசிலம்பட்டி ஒன்றியத்தில் 83 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட 83 குடியிருப்புகளில் 46 குடியிருப்புகள் உசிலம்பட்டி ஒன்றியத்தின் தெற்குப் பகுதியைச் சேர்ந்ததாகும்.

35—

## குடிநீர் தொட்டி அமைத்தல்

**வினா எண் 1208—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, சக்கரப்பநாயக்கனூர் பஞ்சாயத்து, கிருஷ்ணாபுரத்திற்கு மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி கட்டித்தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஊரகக் குடிநீர்த் திட்டக் கோட்பாடுகளுக்குட்பட்டுத் தகுதி, தேவை மற்றும் நிதி ஆதாரங்களைக் கருத்தில்கொண்டு திட்ட முன்னுரிமையின் அடிப்படையில், வரும் நிதியாண்டில் மேற்கண்ட கிராமத்திற்குக் குடிநீர்த் திட்டம் செயலாக்குவது குறித்துப் பரிசீலிக்கப்படும்.

**36—**

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

**வினா எண் 1209—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், முதலைக்குளம் பஞ்சாயத்து, கொசவபட்டிக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

2001-2002 ஆம் நிதியாண்டில் மேற்கண்ட கிராமத்திற்குக் குடிநீர்த் திட்டம் செயலாக்குவது குறித்து, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் உள்ளது.

**37—**

### துவக்கப் பள்ளிக்கு கட்டட வசதி

**வினா எண் 1242—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், மஞ்சாரஅள்ளி ஊராட்சி, நரசிமேடு ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளிக்குக் கட்டட வசதி இல்லாமலிருப்பது அரசு கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் இப்பள்ளிக்குக் கட்டட வசதி செய்து தரப்படுமா?



விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியம், மஞ்சாரஅள்ளி ஊராட்சி, நரசிமேடு ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளிக்குக் கட்டட வசதி செய்யும் பணி — ரூ.3.15 லட்சம் மதிப்பீட்டில் கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

**38—**

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

**வினா எண் 1257—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கெண்டையனஅள்ளி ஊராட்சி, அத்திமரத்தூர் கிராமத்தில் நடப்பாண்டில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கெண்டையனஅள்ளி ஊராட்சி, அத்திமரத்தூர் கிராமத்திற்கு, வரும் நிதியாண்டுகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய குடிநீர்த் திட்டம் நிறைவேற்றுவது குறித்துப் பரிசீலிக்கப்படும்.

**39—**

### குடிநீர் வசதி செய்தல்

**வினா எண் 1260—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், மஞ்சாரஅள்ளி ஊராட்சி, ஊத்துப்பள்ளத்தூர் கிராமத்தில் போதுமான குடிநீர் வசதி இல்லாமல் இருப்பதால், இங்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மஞ்சாரஅள்ளி ஊராட்சி, ஊத்துப்பள்ளத்தூர் கிராமத்திற்கு, வரும் நிதியாண்டுகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய குடிநீர்த் திட்டம் நிறைவேற்றுவது குறித்துப் பரிசீலிக்கப்படும்.

40—

**குடிநீர் வசதி**

**வினா எண் 1261—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, சுஞ்சல்நத்தம் ஊராட்சி, ஏரியூரில் போதுமான குடிநர் வசதியில்லாமலிருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் அங்கு கூடுதலாக ஒரு மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, சுஞ்சல்நத்தம் ஊராட்சி, ஏரியூர் குடியிருப்பின் குடிநீர் பற்றிய பிரச்சினை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இக்குடியிருப்பிற்கு, வரும் நிதியாண்டுகளில் குடிநீர் வசதி நிலையை உயர்த்த குடிநீர்த் திட்டம் நிறைவேற்றுவது குறித்துப் பரிசிலிக்கப்படும்.



41—

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்**

**வினா எண் 1263—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மாதேஅள்ளி ஊராட்சி, ஆண்டதெஅள்ளி கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க நடப்பு ஆண்டில் அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மாதேஅள்ளி ஊராட்சி, ஆண்டதெஅள்ளி கிராமத்திற்கு, வரும் நிதி ஆண்டுகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் நிறைவேற்றுவது குறித்துப் பரிசீலிக்கப்படும்.

42—

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்**

**வினா எண் 1264—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மாதேஅள்ளியில் போதுமான குடிநீர் வசதி இல்லாமல் இருப்பதால் அங்கு கூடுதலாக மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மாதேஅள்ளி குடியிருப்புக்கு 1998 ஆம் ஆண்டு 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டு, தற்போது போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருவதால் கூடுதலாக ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

43—

## குடிநீர்த் திட்டம்

**வினா எண் 1265—திரு. ஜி.கே.மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், மாதேஅள்ளி ஊராட்சி, பில்லப்பநாயக்கன் அள்ளியில் குடிநீர்ப் பற்றாக்குறை இருப்பதால், இங்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மாதேஅள்ளி ஊராட்சி, பில்லப்பநாயக்கன்அள்ளியில் குடிநீர்ப் பற்றாக்குறை இருப்பது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும் இக்குடியிருப்பிற்கு, வரும் நிதியாண்டுகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய குடிநீர்த் திட்டம் நிறைவேற்றுவது குறித்துப் பரிசீலிக்கப்படும்.

44—

## நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

**வினா எண் 1277—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை நகராட்சி, ஜீவா நகருக்குத் தனியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் பணி எந்நிலையில் உள்ளது?

(ஆ) அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) புதுக்கோட்டை ஒன்றியம், புதுக்கோட்டை ஊராட்சி, ஜீவா நகருக்கு 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய விசையிறைப்பான் திட்டம் 1987 ஆம் ஆண்டு



முடிக்கப்பட்டு, ஊராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டது. பின், பொது மக்களின் வேண்டுகோளுக்கிணங்க 1997 ஆம் ஆண்டு புதுக்கோட்டை நகராட்சி, காவிரிக் குடிநீர்த் திட்டத்தின் நீர் உந்து குழாயில் இருந்து ஒரு பிரிவு குழாய் மூலம் ஜீவா நகர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்குக் காவிரிக் குடிநீர் விநியோகம் செய்து வருகிறது.

(ஆ) புதுக்கோட்டை காவிரிக் குடிநீர்த் திட்ட இறுதிக் கட்ட (2001) மக்கள் தொகைக்கு ஏற்ப விசையிறைப்பான் மாற்றி அமைப்பதற்கு நகராட்சி முழுச் செலவுத் தொகையை ஏற்கும் வகையில் ஒப்புதல் பெற்ற பின் விசையிறைப்பான் மாற்றி அமைத்துக் கிடைக்கும் உபரி நீரின் மூலம் குறைவாக உள்ள குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

45—

## சோடியம் ஆவி விளக்கு அமைத்தல்

**வினா எண் 1281—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை நகராட்சியில் அனைத்து இடங்களிலும் சோடியம் ஆவி விளக்குகள் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

46—

## பள்ளிக் கட்டடம் கட்டுதல்

**வினா எண் 1286—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி, வெட்டன்விடுதியில் இருக்கும் ஆரம்ப பள்ளிக்குக் கூடுதல் பள்ளிக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை.—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆலங்குடி தொகுதி, வெட்டன்விடுதியில் இருக்கும் ஆரம்பப் பள்ளிக்குத் தற்போதுள்ள பிரதானக் கட்டடம் போதுமானதாக உள்ளது.

**47—**

## குழாய் இணைப்பு வழங்குதல்

**வினா எண் 1334—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சி, கொசப்பட்டியில் உள்ள ஜல்லிக்கொழந்தான்வளவு பகுதியில் மேலும் ஒரு குழாய் இணைப்பு வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சி, கொசப்பட்டியில் உள்ள ஜல்லிக்கொழந்தான்வளவு பகுதியில் மேலும் ஒரு குழாய் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**48—**

## குடிநீர்ப் பற்றாக்குறை

**வினா எண் 1344—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, இடங்கணசாலை கிராமம், ராசிக்கவுண்டனூர் பகுதியில் குடிநீர்ப் பற்றாக்குறை உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அங்கு மேல்நிலைத் தொட்டி கட்டி, குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?



விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இக்குடியிருப்புக்கு 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட புதிய நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**49—**

## வீட்டுமனைப் பிரிவு விற்பனை

**வினா எண் 1364—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பொருளாதார நிலையில் பின்தங்கிய நகராட்சிகளில் கட்டுமான விஸ்தரிப்பு இல்லாத பகுதிகளில், அனுமதி பெறாத வீட்டுமனைப் பிரிவுகளை விற்பனை செய்ய அனுமதிக்கும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதுபற்றிய விவரம் என்ன?

(இ) இல்லையெனில் சட்டத்தைத் தளர்த்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

(இ) அரசின் பரிசீலனையில் இல்லை.

**50—**

## மேல்நிலைத் தொட்டி அமைத்தல்

**வினா எண் 1384—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டத்திலுள்ள புலியூர் காட்டுசாகையில் மேல்நிலைத் தொட்டி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம். கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டத்திலுள்ள புலியூர் காட்டுசாகை குடியிருப்புக்கு 1993-94 ஆம் ஆண்டு பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் நிறைவேற்ற பணிகள் துவக்கப்பட்டு, கிராம மக்களிடையே மேனிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்கான இடம் தெரிவு செய்வதில் பிரச்சினை ஏற்பட்டு, பண்ருட்டி நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையில் உள்ளது. இறுதி முடிவு கிடைக்கப் பெற்றவுடன் மேற்கண்ட கிராமத்திற்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டப் பணிகள் நிறைவேற்றப்படும்.

**51—**

## தீப்பிடிக்காத கூரை வேய்தல்

**வினா எண் 1409—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடத்தில் வாரச் சந்தைக்கு தீப்பிடிக்காத கூரை வேய்ந்த கடைகள் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். 52 கடைகள் கட்டித் தரப்பட்டுள்ளன.

**52—**

## குடிநீர்த் தட்டுப்பாடு

**வினா எண் 1412—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், அப்புவிளை ஊராட்சி, அப்புவிளை கிராமத்தில் குடிநீர்ப் பிரச்சினை உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுக்கவுள்ள நடவடிக்கை என்ன?



விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், அப்புவிளை ஊராட்சி, அப்புவிளை கிராமத்தில் ஆறு ஆழ்குழாய்க் கிணறுகள் உள்ளன. வறட்சியின் காரணமாக ஆறு ஆழ்குழாய்க் கிணறுகளிலும் சுமாராகத் தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது.

**53—**

## குடிநீர்ப் பிரச்சினை

**வினா எண் 1415—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், மகாதேவன் குளம் கிராமத்தில் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், மகாதேவன்குளம் கிராமத்தில் தற்போது குடிநீர்ப் பிரச்சினை இல்லை.

**54—**

## மின் விளக்கு வசதி

**வினா எண் 1423—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், உவரி 1-வது வார்டு பகுதியில் தெருக்கள், இல்லங்களுக்கு மின் விளக்கு வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படுமா?

[2002 மே 10

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், உவரி 1-வது வார்டு பகுதியில் உள்ள வீடுகள் மீன் துறையினரால் கட்டப்பட்டவை. இக்குடியிருப்புகள் சம்பந்தப்பட்டவர்களுக்கு மீன் துறையினால் பெயர் மாற்றம் செய்யப்பட்டபின் மின் விளக்கு வசதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

**55—**

**பேருந்து நிலையம் விரிவுபடுத்துதல்**

**வினா எண் 1462—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி பேருந்து நிலையம் மிகவும் சிறியதாக உள்ளதால் அதை விரிவுபடுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கருத்துரு ஏதும் இல்லை.

**56—**

**கூடுதல் பள்ளிக் கட்டடம் கட்டுதல்**

**வினா எண் 1478—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர்மலை ஒன்றியம், சிறுநல்லிகோவில் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் கூடுதல் பள்ளிக் கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) அந்தத் தொடக்கப் பள்ளி நடுநிலைப் பள்ளியாக நிலை உயர்த்தப்படுமா?



2002 மே 10]

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) கபிலர்மலை ஒன்றியம், சிறுநல்லிகோயில் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்குப் போதுமான அளவு பள்ளிக் கட்டடம் உள்ளது.

(ஆ) அவசியம் எழவில்லை.

**57—**

**குடிநீர் வசதி செய்தல்**

**வினா எண் 1489—திரு. எஸ். தாமோதரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருதுநகர் தொகுதி, ரோசல்பட்டி பஞ்சாயத்துக்கு உடனடியாகக் குடிநீர் வசதி செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

விருதுநகர் தொகுதி, ரோசல்பட்டி மற்றும் 11 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.326 இலட்சம் மதிப்பீட்டில் 2000-2001 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டு, தற்போது பொது மக்களுக்குப் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**58—**

**கூட்டுக் குடிநீர்த் திட்டம்**

**வினா எண் 1493—திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிணத்துக்கடவு மற்றும் பொள்ளாச்சி தொகுதிகளில் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்கிட அம்பராம்பாளையம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினைச் செயல்படுத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், நடப்பு நிதியாண்டில் செயல்படுத்தப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டத்தில், பொள்ளாச்சி வடக்கு, பொள்ளாச்சி தெற்கு, கிணத்துக்கடவு மற்றும் குடிமங்கலம் ஆகிய நான்கு ஒன்றியங்களிலுள்ள 295 கிராமங்கள் பயன்பெறும் வகையில் பொள்ளாச்சியிலிருந்து 10 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள குளத்தூருக்கு அருகில் ஆழியாறு நதியினை நீராதாரமாகக் கொண்டு ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்ற அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தின் தலைமையிடப் பணிகள் முடிவடைந்துள்ளன. இதர பணிகளுக்கு ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட உள்ளது. இத்திட்டப் பணிகளை இரண்டு ஆண்டுகளுக்குள் முடித்து மக்கள் பயனுக்குக் கொண்டு வர இலக்கிடப்பட்டுள்ளது.

59—

## பேருந்து நிலையம் அமைத்தல்

**வினா எண் 1499—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி பேருந்து நிலையம், போக்குவரத்து அதிகரித்துள்ளதால் அரசு ஐந்து கண் வாராவதி பின்புறம் உள்ள, நகராட்சிக்கு உட்பட்ட சர்வே எண் 38/1 குளம் புறம்போக்கு இடத்தில் பேருந்து நிலையம் அமைக்க ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வந்தவாசி நகராட்சிக்குட்பட்ட நகரளவு எண் 38/1-ல் உள்ள அரசு குட்டைப் புறம்போக்கில் 5.51 ஏக்கர் நிலத்தை, தடையுத்தரவிலிருந்து விலக்கு அளித்து உரிமை மாற்றம் செய்து பெற திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியருக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. வருவாய்த் துறையால் இந்நிலம் நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்ட பின்னர், பேருந்து நிலையம் அமைக்க நகராட்சியால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



60—

## உப்பு நீரை நல்ல நீராக்குதல்

**வினா எண் 1502—திருமதி ஆர். சசிகலா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஒன்றியப் பகுதியில் குடிநீர் உப்பு நீராக உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், காவிரிக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை மீண்டும் அமல்படுத்தி கடவூர் ஒன்றியத்தில் நல்ல நீராக வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கரூர் மாவட்டத்தில், கடவூர் ஒன்றியத்தில் ஒரு சில பகுதிகளில் மட்டும் குடிநீர் உப்பு நீராக உள்ளது.

காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு கடவூர் மற்றும் வையம்பட்டி ஒன்றியங்களைச் சார்ந்த 505 ஊரகக் குடியிருப்புகளுக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்துவதற்கான ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தில் கடவூர் ஒன்றியத்தைச் சார்ந்த 263 குடியிருப்புகளும் சேர்க்கப்பட்டுள்ளன. ஆய்வுப் பணிகளை விரைவில் முடித்து, திட்டத்தைச் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

61—

## பேருந்து நிலையம் அமைத்தல்

**வினா எண் 1505—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் பேரூராட்சியில் பயன்படாமல் இருந்துவரும் குளத்தினில் பேருந்து நிலையம் அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

குத்தாலம் பேரூராட்சியில் பயன்படாமல் இருந்துவரும் குளத்தினில் பேருந்து நிலையம் அமைத்துக் கொடுக்கத் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**62—**

## பேருந்து நிலையம் அமைத்தல்

**வினா எண் 1514—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தான்குளம் தொகுதி, ஆழ்வார் திருநகரி பேரூராட்சியில் அரசு பேருந்து நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சாத்தான்குளம் தொகுதி, ஆழ்வார் திருநகரி பேரூராட்சியில் அரசு பேருந்து நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் இல்லை.

**63—**

## கழிவு நீர்க் கால்வாய் அமைத்தல்

**வினா எண் 1520—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தான்குளம் பேரூராட்சிப் பகுதியில் சிமெண்ட் சாலை மற்றும் கழிவு நீர் செல்லும் கால்வாய் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சாத்தான்குளம் பேரூராட்சியில் சிமெண்ட் சாலை மற்றும் கழிவு நீர்க் கால்வாய் அமைக்கத் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**64—**

## குடிநீர் வசதி செய்தல்

**வினா எண் 1522—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தான்குளம்-உடன்குடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் எல்லாக் கிராமங்களுக்கும் குடிநீர் வசதி எப்போது முழுமை பெறும்?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் விரைவுபடுத்தப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) சாத்தான்குளம், உடன்குடி பேரூராட்சிகள் மற்றும் 308 வழியோரக் கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் சாத்தான்குளம் பேரூராட்சிப் பகுதிக்குக் குடிநீர் 16-2-2001 முதலும், உடன்குடி பேரூராட்சிப் பகுதிக்குக் குடிநீர் 15-6-2001 முதலும் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 308 கிராமப் பகுதிகளுக்கும் குடிநீர் வழங்கும்பொருட்டு ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது. ஜூன் 2002-க்குள் பணிகள் முடிக்கவும், வழியோரக் கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) 308 கிராமங்களுக்கான ஒப்பந்தப் புள்ளிகள்மீது இறுதி முடிவு செய்யப்பட்டு, பணி ஏற்பு ஆணை வழங்கப்பட்டவுடன், இத்திட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு, 9 மாதங்களில் பணிகள் விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

65—

## தொகுப்புக் கடைகள் கட்டுதல்

**வினா எண் 1527—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தான்குளம் தொகுதி, நாசரேத் பேரூராட்சிக்குட்பட்ட சந்தையில் தொகுப்புக் கடைகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சாத்தான்குளம் தொகுதி, நாசரேத் பேரூராட்சிக்குட்பட்ட சந்தையில் தொகுப்புக் கடைகள் கட்ட அரசிடம் திட்டம் ஏதுமில்லை.

66—

## கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைத்தல்

**வினா எண் 1529—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தான்குளம் தொகுதி, நாசரேத் பேரூராட்சிக்குட்பட்ட நாசரேத் கூட்டுக் குடிநீர்த் திட்டம் எப்போது பயன்பாட்டுக்கு வரும்?

(ஆ) இத்திட்டம் விரைவுபடுத்தப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) நாசரேத் நகரப் பேரூராட்சிக்கான குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் 2/2002-ல் மக்கள் பயனுக்குக் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது.

(ஆ) இத்திட்டப் பணிகளை 12/2001-க்குள் விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.



67—

## தண்ணீர் வழங்குதல்

**வினா எண் 1536—திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூர் வட்டம், கேத்தலூர் பகுதியிலுள்ள பெரிய மேல்நிலைத் தொட்டிக்குப் போதிய தண்ணீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம், நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

68—

## கூட்டுக் குடிநீர்த் திட்டம்

**வினா எண் 1540—திருமதி சி.எம். சூரியகலா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குடியாத்தம் தொகுதியிலுள்ள கீழ்பட்டி, வளத்தூர், உள்ளி, சிங்கல்பாடி, அனங்கநெல்லூர், கொத்தகுப்பம், கூடநகரம் ஆகிய ஊராட்சிகளில் தோல் கழிவு நீர் பாலாற்றில் கலந்ததால் மேற்படி ஊராட்சிகளிலுள்ள கிராமங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க, கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

குடியாத்தம் தொகுதியிலுள்ள கீழ்பட்டி, வளத்தூர், உள்ளி, சிங்கல்பாடி, அனங்கநெல்லூர், கொத்தகுப்பம், கூடநகரம் ஆகிய ஊராட்சிகளில் உள்ள குடியிருப்புகள் யாவும் குடியாத்தம் ஒன்றியத்தில் உள்ளன. இவை யாவும் பாலாற்றின் வடகரையில் ஆம்பூருக்கும், அகரம்சேரிக்கும் இடையில் அமைந்துள்ளன. மொத்தம் உள்ள 49 குடியிருப்புகளில், 47 குடியிருப்புகளுக்கு உள்ளூர் நீராதாரங்களைக் கொண்டும், 2 குடியிருப்புகளுக்கு ஆற்று நீராதாரங்களைக் கொண்டும் திட்டங்கள் வடிவமைக்கப்பட்டுச் செயல்படுத்தப்பட்டுள்ளன. மேற்படி

ஊராட்சிகளில் உள்ள அனைத்துக் குடியிருப்புகளுக்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட சாத்தியக்கூறுகள் இப்போது இல்லை. எனவே, சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்டுள்ள ஊராட்சிகளில் உள்ள குடியிருப்புகளில் பாலாற்றில் தோல் கழிவு நீரினால் நீராதாரம் பாதிக்கப்பட்டுள்ள குடியிருப்புகளுக்குக் குறுகிய காலத்தில் குடிநீர்த் திட்டங்கள் அமைக்க அக்குடியிருப்புகளின் அருகிலுள்ள அல்லது சற்றுத் தொலைவிலோ தக்க நீராதாரம் அமைத்து, தனி மின் விசைத் திட்டம் மட்டுமே செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் ஆராயப்படவுள்ளன.

69—

### பாதாள சாக்கடைத் திட்டம்

**வினா எண் 1541—திருமதி சி.எம். சூரியகலா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குடியாத்தம் நகரில் கழிவு நீர்க் கால்வாய்கள் சரிவரப் பராமரிப்பு இல்லாததால், கழிவு நீர் தெருக்களில் தேங்கி கொசு அதிகரிப்பதால் பாதாளச் சாக்கடைத் திட்டம் நிறைவேற்றிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

குடியாத்தம் நகரில் கழிவு நீர்க் கால்வாய்களில் தொடர்ந்து தூர்வாரப்பட்டு, கொசுக்கொல்லி மருந்துகள் தெளிக்கப்பட்டு, கழிவு நீர் தேங்காதவாறு கால்வாய்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. எனவே பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டம் குடியாத்தம் நகராட்சியின் திட்டங்களில் தற்பொழுது இல்லை.

70—

### மேல்நிலைத் தொட்டி அமைத்தல்

**வினா எண் 1637—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், பண்ருட்டியிலுள்ள பேய்க்காநத்தம் கிராமத்திற்கு ஆழ்குழாய்க் கிணறு மற்றும் மேல்நிலைத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?



விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி ஒன்றியம், கோரணப்பட்டு ஊராட்சியைச் சார்ந்த பேய்க்காநத்தம் குடியிருப்பில் தற்சமயம் ஒரு கையிறைப்பான் மூலம் நாளொன்றுக்கு, நபர் ஒருவருக்கு 10 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இக்குடியிருப்பிற்கு, வரும் நிதியாண்டுகளில் முன்னுரிமையின் அடிப்படையில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப் பரிசீலிக்கப்படும்.

71—

### மேல்நிலைத் தொட்டி அமைத்தல்

**வினா எண் 1646—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், கோரணப்பட்டு, புலியூர் ஆகிய இடங்களுக்கு மேல்நிலைத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி ஒன்றியம், கோரணப்பட்டு மற்றும் புலியூர் ஆகிய குடியிருப்புகளுக்கு புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய குடிநீர்த் திட்டம், ராஜீவ் காந்தி தேசிய குடிநீர் மற்றும் சுகாதாரத் திட்டம் மூலமாக நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது. பயனாளிகளிடமிருந்து பங்கேற்புத் தொகை பெறப்பட்டு, தனியாகக் குடிநீர்த் திட்டங்கள் செயலுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

72—

### குடிநீர்த் திட்டம் அமைத்தல்

**வினா எண் 1647—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், புலியூருக்கு மேல்நிலைத் தொட்டி அமைத்துத் தரப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி ஒன்றியம், புலியூர் ஊராட்சியைச் சார்ந்த புலியூருக்கு புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம், ராஜீவ் காந்தி தேசிய குடிநீர் மற்றும் சுகாதாரத் திட்டம் மூலமாகச் செயல்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது. பயனாளிகளிடமிருந்து பங்கேற்புத் தொகை பெறப்பட்டு புதிய குடிநீர்த் திட்டம் செயலுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

73—

## ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்

**வினா எண் 1653—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், கடலூர் வட்டம், கேசவநாராயணபுரத்திற்கு ஆழ்குழாய்க் கிணறு மற்றும் மேல்நிலைத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி ஒன்றியம், தம்பிப்பேட்டை ஊராட்சியைச் சார்ந்த கேசவநாராயணபுரம் குடியிருப்பிற்குத் தற்பொழுது தம்பிப்பேட்டை குடிநீர்த் திட்டத்திலிருந்து குழாய் நீட்டிப்பு மூலமாக குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வந்தது. பகிர்மானக் குழாயில் போதிய அளவு நீர் அழுத்தமில்லாததால், இக்குடியிருப்புக்குத் தேவையான குடிநீர் வழங்க இயலவில்லை. ஊரகக் குடிநீர்த் திட்டக் கோட்பாடுகளுக்குட்பட்டு முன்னுரிமை அடிப்படையில் இக்குடியிருப்புக்கு, வரும் நிதியாண்டுகளில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய குடிநீர்த் திட்டம் நிறைவேற்றுவது குறித்துப் பரிசீலிக்கப்படும்.



74—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

**வினா எண் 1663—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், கடலூர் வட்டம், கட்டியங்குப்பம் மாரியம்மன் கோவில் தெருவிற்கு மேல்நிலைத் தொட்டி அமைத்துத் தரப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி ஒன்றியம், கிருஷ்ணான்குப்பம் ஊராட்சியைச் சார்ந்த கட்டியான்குப்பம் மாரியம்மன் கோவில் குடியிருப்பிற்கு முன்னுரிமை அடிப்படையில், வரும் நிதியாண்டுகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய குடிநீர்த் திட்டம் நிறைவேற்றுவது குறித்துப் பரிசீலிக்கப்படும்.

75—

## பஞ்சாயத்துக் கட்டடம் கட்டுதல்

**வினா எண் 1672—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், கோரணப்பட்டு ஊராட்சிக்குப் பஞ்சாயத்துக் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், கோரணப்பட்டு ஊராட்சிக்கான ஊராட்சி மன்றம் அவ்வூராட்சிக்குட்பட்ட அப்பியம்பேட்டை கிராமத்தில் பழைய ஊராட்சி மன்ற கட்டடத்தில் இயங்கி வருகிறது. எனவே, ஊராட்சி மன்றக் கட்டடம் கட்டும் அவசியம் எழவில்லை.

[2002 மே 10

76—

## குடிநீர் வழங்குதல்

**வினா எண் 1682—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை நகருக்குக் கொள்ளிடம் ஆற்றிலிருந்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆண்டிமடம் தொகுதிக்கு உட்பட்ட செந்துறை நகருக்குக் கொள்ளிடம் ஆற்றிலிருந்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசு திட்டமிட்டுள்ளது.

(ஆ) இதற்கான திட்டம், செந்துறை, வேப்பூர், அரியலூர், திருமானூர் மற்றும் ஆலத்தூர் ஒன்றியங்களில் உள்ள மொத்தம் 517 கிராமங்களுக்காக ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.56.78 கோடிக்குத் தயாரிக்கப்பட்டு அரசு ஒப்புதல் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேற்காணும் திட்டம் அரசு ஒப்புதல் பெற்றபின் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

77—

## கிராமங்களில் விழாக்கள் நடத்துதல்

**வினா எண் 1844—திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இந்திய சுதந்திர தினம் மற்றும் குடியரசு தினம் ஆகிய நாட்களில் தமிழகத்தில் உள்ள அனைத்துக் கிராமங்களிலும் விழாக்கள் நடத்த அரசு தக்க ஆணை பிறப்பிக்குமா?



2002 மே 10]

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இந்திய சுதந்திர தினம் மற்றும் குடியரசு தினம் ஆகிய நாட்களில் தமிழகத்தில் உள்ள அனைத்துக் கிராமங்களிலும் விழாக்கள் நடத்த அரசு முடிவு செய்து, ஒவ்வொரு ஆண்டும் அனைத்து மாவட்ட ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊராட்சித் தலைவர்களுக்கு அறிவுரைகள் வழங்குமாறு (சென்னையைத் தவிர) அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

78—

## நிர்வாக அலுவலகக் கட்டடம் கட்டுதல்

**வினா எண் 2064—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பழவூர் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலகக் கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நடப்பு நிதியாண்டில் அனைத்து மாவட்டங்களிலும் தேவை அடிப்படையில் முன்னுரிமை அளிக்கப்பட்டு 4000 கிராம நிர்வாக அலுவலர் அலுவலகக் கட்டடங்கள் கட்டித் தரப்படும். சட்டமன்ற உறுப்பினர் கோரியுள்ள கிராமம் முன்னுரிமைக்குத் தகுதியுடையதாயின், நடப்பு ஆண்டில் அங்கு கிராம நிர்வாக அலுவலகக் கட்டடம் கட்டித் தரப் பரிசீலிக்கப்படும்.

79—

## புதிய ஊராட்சி அமைத்தல்

**வினா எண் 2116—திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரம், தொப்பம்பட்டி ஆகிய இரண்டு ஒன்றியங்களையும் பிரித்து, கள்ளிமந்தயத்தைத் தலைமையிடமாகக்

கொண்டு, புதிய ஊராட்சி ஒன்றியம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**80—**

## நிர்வாக வசதி

**வினா எண் 2143—திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மொரப்பூர் தொகுதி, சித்தேரி ஊராட்சியை நிர்வாக வசதிக்காகப் பிரிக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**81—**

## குடிநீர்த் தட்டுப்பாடு

**வினா எண் 2265—திரு. தா. பச்சைமால்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளச்சல் தொகுதியில் குடிநீர்த் தட்டுப்பாடு உள்ள கிராமங்களில் குடிநீர்த் தட்டுப்பாட்டைச் சமாளிக்கும் வகையில் மாற்றுத் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?



விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கன்னியாகுமரி மாவட்டம், இராஜாக்கமங்கலம் மற்றும் குருந்தங்கோடு ஊராட்சி ஒன்றியங்களில் மொத்தமுள்ள 152 குடியிருப்புகளில், 98 குடியிருப்புகள் குளச்சல் சட்டமன்றத் தொகுதியில் அடங்கும். இந்த 98 குடியிருப்புகளுள் 63 குடியிருப்புகளுக்கு முழுமையான அளவு குடிநீர் வசதி அளிக்கப்பட்டுள்ளது. பகுதி அளவு குடிநீர் வசதி பெறும் 35 குடியிருப்புகளுக்கும் நடப்பு (2001-2002) நிதியாண்டில் குடிநீர்த் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு, இதுவரை 10 குடியிருப்புகளுக்குக் குடிநீர்த் திட்டப் பணிகள் முடிவடைந்துள்ளன. இதர குடியிருப்புகளுக்கான பணிகளை நடப்பாண்டு இறுதிக்குள் முடித்து, மக்கள் பயனுக்குக் கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**82—**

## காலனிக்கு நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 2278—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, சிலம்பூர் ஊராட்சி, புக்குழி காலனிக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தருவது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் ஒன்றியம், சிலம்பூர் ஊராட்சியில் உள்ள புக்குழி காலனி கொள்ளிடம் ஆற்றை நீராதாரமாகக் கொண்ட ஆண்டிமடம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இக்குடியிருப்புக்கு 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு வருகிறது.

83—

## நீர்த்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் வழங்குதல்

**வினா எண் 2281—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, கொளத்தூர் கீழத் தெருவில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆண்டிமடம் தொகுதி, கொளத்தூர் கீழத் தெரு ஆண்டிமடம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டு 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

84—

## குடிநீர்த் திட்டம் அமைத்தல்

**வினா எண் 2284—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, வாரியங்காவல் ஊராட்சி 1-வது வார்டில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆண்டிமடம் தொகுதி, வாரியங்காவல் ஊராட்சி 1-வது வார்டு ஆண்டிமடம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டு 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய குடிநீர்த் திட்டம் நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது.



85—

## குடிநீர் வழங்குதல்

**வினா எண் 2285—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, ஆண்டிமடம் ஒன்றியத்தில் சிலம்பூர், திருக்கோணம் கிராமங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆண்டிமடம் தொகுதி, ஆண்டிமடம் ஒன்றியத்தில் உள்ள திருக்கோணம் குடியிருப்பு ஆண்டிமடம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. இக்குடியிருப்புக்கு 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. சிலம்பூர் குடியிருப்பிற்கு ஏற்கெனவே 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட்டுள்ளது.

86—

## ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்

**வினா எண் 2288—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, திருக்களப்பூர் மேலத் தெருவில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆண்டிமடம் தொகுதி, திருக்களப்பூர் ஊராட்சி, திருக்களப்பூர் மேலத் தெரு குடியிருப்புக்கு ஒரு ஆழ்துளைக் கிணறு அமைக்கப்பட்டு, 1,00,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய குடிநீர்த் திட்டம், 1990 ஆம் ஆண்டு முடிக்கப்பட்டுப் பயனில் உள்ளது. புதிய நீராதாரம் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் திட்டம் பரிசீலனையில் இல்லை.

87—

## மேல்நிலை தண்ணீர்த் தொட்டி அமைத்தல்

**வினா எண் 2445—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, ஓலையூர், குடிகாட்டில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ஆண்டிமடம் தொகுதி, ஓலையூர் ஊராட்சியில், ஓலையூர் குடிகாடு, ஆண்டிமடம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டு 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணிகள் 12/2002-க்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

88—

## கடைகள் கட்டுதல்

**வினா எண் 2654—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஒகேனக்கல் சுற்றுலா மையத்தில் கடைகள் கட்டி வாடகைக்கு விட்டு வருவாயைப் பெருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

89—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

**வினா எண் 2683—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், ஆவரைகுளம் ஊராட்சி, அம்பலவாணபுரம் கிராமத்தில் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்திட புதிதாக நீர் ஆதாரத்துடன் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், ஆவரைகுளம் ஊராட்சி, அம்பலவாணபுரம் குடியிருப்பில் தற்போது அமைந்துள்ள 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் தற்போது நாள் ஒன்றுக்கு, நபர் ஒருவருக்கு 20 லிட்டர் வீதம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. நாங்குநேரி-திசையன்விளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் இக்குடியிருப்பு சேர்க்கப்பட்டுள்ளது. இக்கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம் கூடுதலாகக் குடிநீர் வழங்கப்படும். இப்பணிகள் நடப்பு நிதியாண்டில் முடிவுறும்.

90—

## தாமிரபரணி ஆற்றுநீர் வழங்குதல்

**வினா எண் 2692—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், ஆவரைகுளம் ஊராட்சி, மதகனேரி கிராம குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்திட புதிதாக நீராதாரம் தோற்றுவித்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், ஆவரைகுளம் ஊராட்சி, மதகனேரி குடியிருப்பு, நாங்குநேரி-திசையன்விளை மற்றும் 342 வழியோரக் கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் தாமிரபரணி ஆற்று நீர் வழங்கப்பட உள்ளது. இத்திட்டப் பணிகள் 3/2002-க்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

91—

## கொட்டப்பனையூரில் தண்ணீர்த் திட்டம்

**வினா எண் 2711—திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை கிழக்கு ஒன்றியம், இளமனூர் பஞ்சாயத்து, கொட்டப்பனையூரில் குடிநீருக்கு மேல்நிலைத் தொட்டி கட்டித் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ஊரகக் குடிநீர்த் திட்டக் கோட்பாடுகளுக்குட்பட்டுத் தகுதி, தேவை மற்றும் நிதி ஆதார அடிப்படையில், வரும் நிதியாண்டில் மேற்கண்ட கிராமத்திற்குக் குடிநீர்த் திட்டம் மேற்கொள்வதுபற்றி ஆய்வு செய்யப்படவுள்ளது.



92—

## வைகை ஆற்றிலிருந்து தண்ணீர்

**வினா எண் 2717—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், விளாங்குடி பேரூராட்சிப் பகுதி மக்களுக்கு வைகை ஆற்றிலிருந்து தண்ணீர் வழங்கும் திட்டம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

விளாங்குடி பேரூராட்சிப் பகுதி மக்களுக்கு வைகை ஆற்றிலிருந்து தண்ணீர் வழங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

93—

## கூட்டுக் குடிநீர்த் திட்டம்

**வினா எண் 2718—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வைகை ஆற்றிலிருந்து தண்ணீர் எடுத்து இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள அனைத்துக் கிராமங்களுக்கும் வழங்க கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஒன்றை அரசு செயல்படுத்துமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இராமநாதபுரம் மாவட்டத்திற்கு வைகை ஆற்றிலிருந்து தண்ணீர் கொண்டு வரும் திட்டம் ஏதுமில்லை. ஆனால், திருச்சி அருகில் உள்ள முத்தரசநல்லூர் என்னுமிடத்தில் காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்கு வெளிநாட்டு நிதி உதவி (External Assistance) பெறக் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. நிதி உதவி கிடைத்தவுடன் அரசின் நிர்வாக ஒப்புதல் பெற்று, திட்டம் செயலுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

94—

## ஆழ்துளைக் கிணறு

**வினா எண் 2736—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதியிலுள்ள கீழக்குப்பம் கிராமத்தில் ஆழ்துளைக் கிணறு அமைத்துத் தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கடலூர் மாவட்டம், பண்ருட்டி ஒன்றியம், கீழக்குப்பம் ஊராட்சியைச் சேர்ந்த கீழக்குப்பம் குடியிருப்பில் தற்சமயம் 60,000 லிட்டர் மற்றும் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மூலம் போதிய குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, ஆழ்துளைக் கிணறு எதுவும் மேலும் அமைக்கப்படத் தேவையில்லை.

95—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 2737—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதி, சிவனந்திபுரத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பண்ருட்டி தொகுதி, சிவனந்திபுரத்தில், வரும் நிதியாண்டுகளில் முன்னுரிமை அடிப்படையில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் நிறைவேற்றுவது குறித்துப் பரிசீலிக்கப்படும்.



96—

## மேல்நிலைத் தொட்டி

**வினா எண் 2744—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதியிலுள்ள அன்னதானம் பேட்டைக்கு ஆழ்குழாய்க் கிணறு மற்றும் மேல்நிலைத் தொட்டி அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி ஒன்றியத்தைச் சார்ந்த அன்னதானம்பேட்டை குடியிருப்பிற்குத் தற்பொழுது 15,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய குடிநீர்த் திட்டத்தின் மூலம் சராசரியாக நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 20 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இக்குடியிருப்பிற்கு ராஜீவ் காந்தி தேசிய குடிநீர்த் திட்டம் மூலம் மக்களின் பங்கேற்புடன் ஒரு புதிய குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்துவதுகுறித்துப் பரிசீலிக்கப்படும்.

97—

## மணிக்கூண்டு

**வினா எண் 2749—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதியிலுள்ள சிறுதொண்டமாதேவியில் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி மூலம் தெரு வாரியாகக் குழாய் இணைப்பு மற்றும் மணிக்கூண்டு அமைத்துத் தரப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கடலூர் மாவட்டம், பண்ருட்டி ஒன்றியம், அரசடிக்குப்பம் ஊராட்சியைச் சார்ந்த சிறுதொண்டமாதேவி குடியிருப்பில் தற்சமயம்

80,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் மூலம் சராசரியாக நாளொன்றுக்கு, நபர் ஒருவருக்கு 40 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இருப்பினும் தொலைபேசித் துறையினரால் கேபிள் பதிக்கும்போது தெருக் குழாய்கள் சேதம் அடைந்துள்ளன. மேலும், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும் பழுதடைந்து உள்ளது. இப்பழுதுகளைச் சரி செய்ய, ராஜீவ் காந்தி தேசிய குடிநீர்த் திட்டம் மூலம் மக்கள் பங்கேற்புடன் நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

98—

## ஆழ்குழாய்க் கிணறு

**வினா எண் 2755—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதியிலுள்ள வத்தணாங்குப்பத்தில் மேல்நிலைக் குடிநீர்த்தேக்கத் தொட்டியும், ஆழ்குழாய்க் கிணறும் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி ஒன்றியத்தைச் சார்ந்த பெத்தான்குப்பம் குடியிருப்பிற்கு 15,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய குடிநீர்த் திட்டத்தின் மூலம் நாளொன்றுக்கு, நபர் ஒருவருக்கு 20 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இக்குடியிருப்பிற்கு ராஜீவ்காந்தி தேசிய குடிநீர்த் திட்டம் மூலம் மக்களின் பங்கேற்புடன் ஒரு புதிய குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்துவது குறித்துப் பரிசீலிக்கப்படும்.

99—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 2758—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதியிலுள்ள அம்பலவாணன்



பேட்டையில் மின் இணைப்புடன் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி ஒன்றியத்தைச் சார்ந்த அம்பலவாணன்பேட்டை குடியிருப்பிற்கு தற்பொழுது 15,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டத்தின் மூலம் சராசரியாக நாளொன்றுக்கு, நபர் ஒருவருக்கு 20 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இக்குடியிருப்பிற்கு இராஜீவ் காந்தி தேசிய குடிநீர்த் திட்டம் மூலம் மக்களின் பங்கேற்புடன் ஒரு புதிய குடிநீர் மேம்பாட்டுத்திட்டம் செயல்படுத்துவது குறித்துப் பரிசீலிக்கப்படும்.

100—

## கூட்டுக் குடிநீர்த் திட்டம்

**வினா எண் 2792—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் நடப்பாண்டில் நிறைவேற்றப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஒகேனக்கல் அருகே காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு குடிநீர் மற்றும் சுகாதார வசதியுடன் ஒருங்கிணைந்த திட்டம் ஒன்றினைத் தருமபுரி மாவட்டம் முழுவதிலும் உள்ள 3 நகராட்சிகள், 17 பேரூராட்சிகள் மற்றும் 18 ஒன்றியங்களிலுள்ள 5542 குடியிருப்புகளும் பயன்பெறும் வகையில் ரூ.1008 கோடிக்குத் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

இத்திட்ட மதிப்பீடு ரூ.1008 கோடியைக் கருத்தில் கொண்டு வெளிநாட்டு நிதி உதவி மூலம் இத்திட்டத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அரசின் நிர்வாக ஒப்புதலும், நிதி ஒதுக்கீடும் பெற்றவுடன் திட்டப் பணிகள் ஆரம்பிக்கப்படும்.

101—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 2796—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, இராமகொண்டஅள்ளி, புதுமாங்குறிச்சி கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க நடப்பாண்டில் அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, இராமகொண்ட அள்ளி ஊராட்சியைச் சேர்ந்த புதுமாங்குறிச்சி குடியிருப்பில் இரு கையிறைப்பான் திட்டங்கள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, நடப்பாண்டில் அக்கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க இயலாது.

102—

## மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி

**வினா எண் 2808—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கெண்டையனஅள்ளி ஊராட்சி, வேப்பமரத்து கொட்டாய் கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் இத்திட்டம் நிறைவேற்றப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கெண்டையனஅள்ளி ஊராட்சி, வேப்பமரத்து கொட்டாய் குடியிருப்பில் தற்பொழுது மக்கள் தொகை 40 ஆகும். இங்கு மக்கள் தொகை



குறைவாக இருப்பதால் ஊரகக் குடிநீர்த் திட்டக் கோட்பாடுகளின்படி இக்குடியிருப்புக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய குடிநீர்த் திட்டம் அமைக்க இயலாது.

103—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 2809—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கெண்டையன அள்ளி ஊராட்சி, தொப்பையாறு கிராமத்திற்குப் போதுமான குடிநீர் வசதியில்லாமலிருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கெண்டையன அள்ளி ஊராட்சி, தொப்பையாறு கிராமத்தின் குடிநீர் பற்றிய பிரச்சினை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

(ஆ) இக்குடியிருப்புக்குத் தற்போது இரண்டு கையிறைப்பான்கள் மூலம் நாளொன்றுக்கு, நபர் ஒருவருக்கு 15 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

வரும் நிதியாண்டுகளில் முன்னுரிமையின் அடிப்படையில் இக்குடியிருப்பிற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப் பரிசீலிக்கப்படும்.

104—

## கூடுதல் கட்டடம்

**வினா எண் 2810—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி நாகமரை ஊராட்சி, கருங்காலிமேடு கிராம ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி நாகமரை ஊராட்சி, கருங்காலிமேடு கிராம ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளிக்குப் போதுமான கட்டட வசதி உள்ளது.

**105—**

## தார்ச் சாலை அமைக்கும் பணி

**வினா எண் 2825—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் 2-வது தொகுதி, 14-வது டிவிசனின் சங்கர் நகர் பகுதியில் சாலையைச் சீர் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் 2-வது தொகுதி, 14-வது டிவிசனில் சங்கர் நகரில் குறுக்குத் தெருவிற்கு தார்ச் சாலை அமைக்கத் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு சேலம் மாநகராட்சி மாமன்றம் ஒப்புதல் தந்துள்ளது. அதனடிப்படையில் பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. மாநகராட்சியின் நிதிநிலைமைக்கேற்ப இதர சாலைகளும் படிப்படியாகச் சீர் செய்யப்படும்.

**106—**

## குடிநீர்த் திட்டம்

**வினா எண் 2834—திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் பேரூராட்சி மற்றும் ஒன்றியம், தொப்பம்பட்டி ஒன்றியம் ஆகிய ஒன்றியங்களுக்குக் காவிரி ஆற்றிலிருந்து குடிநீர் கொண்டு வரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், தாடிக்கொம்பு கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்குக் காவிரி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு தற்போது ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் ஒட்டன்சத்திரம் பேரூராட்சி மற்றும் ஒட்டன்சத்திரம் ஒன்றியக் குடியிருப்புகள் சேர்க்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கான ஆய்வுப் பணிகள் மற்றும் விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கும் பணிகள் 3/2002-க்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளன. ஒட்டன்சத்திரம் தொகுதி, தொப்பம்பட்டி ஒன்றியத்திற்கு காவிரி ஆற்றிலிருந்து குடிநீர் கொண்டு வரும் திட்டத்திற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை. இருந்தபோதிலும் மேற்கண்ட திட்டத்தின்கீழ் தொப்பம்பட்டி ஒன்றியத்திலுள்ள குடிநீர்த் தட்டுப்பாடு உள்ள குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கப் பரிசீலிக்கப்படும்.

**107—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 2837—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, குவாகம் கிராமத்தில் ஆண்டாள் தெருவிற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன் செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆண்டிமடம் தொகுதி, குவாகம் ஊராட்சியில் உள்ள ஆண்டாள் தெரு, ஆண்டிமடம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டு 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**108—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 2839—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, கொக்கரணை கிராமத்தில் ஆழ்குழாய்க் கிணறும், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித்துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆண்டிமடம் தொகுதி, கொக்கரணை கிராமம், ஆண்டிமடம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ்ச் சேர்க்கப்பட்டு 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**109—**

## சாலை அமைக்கும் பணி

**வினா எண் 2846—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) ஆண்டிமடம் தொகுதி, வரதராஜன்பேட்டை பேரூராட்சிக்கு உட்பட்ட மாதாகோவில் முதல் கட்டமுட்டான் ஏரி வரைக்கும் சாலை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) கருத்துரு ஏதும் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**110—**

## கூட்டுக் குடிநீர்த் திட்டம்

**வினா எண் 2861—திரு. பெ. பழனிப்பன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மொரப்பூர் தொகுதி மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மொரப்பூர் தொகுதி, மொரப்பூர் ஒன்றியம் (பகுதி) மற்றும் பாப்பிரெட்டிப்பட்டி ஒன்றியங்களை உள்ளடக்கியது. ஒகேனக்கல் அருகே காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு குடிநீர் மற்றும் சுகாதார வசதியுடன் ஒருங்கிணைந்த திட்டம் ஒன்றினைத் தருமபுரி மாவட்டம் முழுவதிலும் உள்ள 3 நகராட்சிகள், 18 பேரூராட்சிகள் மற்றும் 18 ஒன்றியங்களிலுள்ள 5542 குடியிருப்புகளும் பயன்பெறும் வகையில் ரூ.1008 கோடிக்குத் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டத்தில் மொரப்பூர் தொகுதியும் உள்ளடங்கும்.

இத்திட்ட மதிப்பீடு ரூ.1008 கோடியைக் கருத்தில் கொண்டு வெளிநாட்டு நிதி உதவி மூலம் இத்திட்டத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்தத் திட்டம் நிறைவேறும்போது சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்டுள்ள பகுதி மக்கள் பயனடைவார்கள்.

111—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

**வினா எண் 2866—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதியில் கொடுக்கூர் கிராமத்தில இருளர் தெருவில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆண்டிமடம் தொகுதியில் உள்ள கொடுக்கூர் குடியிருப்பு தற்பொழுது செயலாக்கத்தில் உள்ள ஆண்டிமடம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ்ச் சேர்க்கப்பட்டு 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய குடிநீர்த் திட்டம் அமைக்கத் திட்டமிடப்பட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

112—

## கூடுதல் கட்டடம்

**வினா எண் 2869—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, கொடுக்கூர் ஊராட்சிப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆண்டிமடம் தொகுதி, கொடுக்கூர் ஊராட்சிப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் ஏற்கெனவே கட்டிக் கொடுக்கப்பட்டு விட்டது.



113—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 2870—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, வரதராஜன்பேட்டை பேரூராட்சி மணக்கொல்லை கிழக்கு ஆதிதிராவிடர் காலனிக்கு, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம், செய்யும்.

(ஆ) 2001-2002-ல் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

114—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 2871—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, வரதராஜன்பேட்டை பேரூராட்சி, மேட்டுக்குப்பம், மருதூர் செங்குந்தர் காலனி ஆகிய இடங்களுக்கு ஆழ்குழாய்க் கிணறு அமைத்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆண்டிமடம் தொகுதி, வரதராஜன்பேட்டை பேரூராட்சிக்குட்பட்ட மேட்டுக்குப்பம் குடியிருப்புக்கு ஏற்கெனவே ஒரு ஆழ்துளைக் கிணறு மற்றும் 10,000 லிட்டர் கொள்ளளவு

கொண்ட ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய குடிநீர்த் திட்டம் பயனில் உள்ளது. மேட்டுக்குப்பம் மற்றும் சாரகம் பகுதிகளுக்காக 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பதற்கான திட்டம் பரிசீலனையில் உள்ளது.

மருதூர் ஊராட்சியைச் சார்ந்த செங்குந்தர் காலனி குடியிருப்பு ஆண்டிமடம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ்ச் சேர்க்கப்பட்டு 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கத் திட்டமிடப்பட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**115—**

## உயர்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 2875—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, இலையூர் ஊராட்சி கண்டியங்கொல்லையில் உயர்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம். ஆவன செய்யும்.

(ஆ) நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**116—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 2886—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, கூவத்தூர் டாக்டர் இராமதாஸ் நகரில் ஆழ்குழாய்க் கிணறும், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?



(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆண்டிமடம் தொகுதி, கூவத்தூர் டாக்டர் இராமதாஸ் நகருக்குத் தற்போது கூவத்தூர் குடிகாட்டில் உள்ள 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து குழாய் நீட்டிப்புத் திட்டம் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, தகுதி, தேவை மற்றும் நிதி ஆதார வசதிகளைக் கருத்திற்கொண்டு ஊரகக் குடிநீர்க் கோட்பாடுகளின்படி, வரும் நிதியாண்டுகளில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் மேற்கொள்ளப் பரிசிலிக்கப்படும்.

**117—**

## கூட்டுக் குடிநீர்த் திட்டம்

**வினா எண் 2894—திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி குடிநீர்ப் பிரச்சினையின் நிரந்தரத் தீர்வுக்காக உலக வங்கி மூலமாக ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றிட அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1-8-2001 மற்றும் 2-8-2001 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் வேலூர் நகராட்சிக்கு ஒகேனக்கல் அருகே காவிரி ஆற்றிலிருந்து குடிநீர் வழங்கப்படும் என அறிவித்துள்ளதால், வேலூர் மாவட்டத்தில் வேலூர் நகராட்சி மற்றும் திருப்பத்தூர், வாணியம்பாடி, ஆம்பூர் ஆகிய மூன்று நகராட்சிகள், நான்கு பேரூராட்சிகள், வழியோர ஊரகக் குடியிருப்புகள் மற்றும் புளோரைடால் பாதிக்கப்பட்ட 831 குடியிருப்புகள் பயன்பெறும் வகையில், ஒகேனக்கல் அருகே காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைக்க உத்தேசிக்கப்பட்டு அதற்கான உரிய நடவடிக்கைகள் வாரியத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்கீழ் திருப்பத்தூர் நகராட்சி மற்றும் கந்திலி, திருப்பத்தூர், ஆலங்காயம் ஒன்றியங்களைச் சேர்ந்த குடியிருப்புகளும்

பயனடைய உள்ளன. எனவே, இத்திட்டம் நிறைவேற்றப்படும்பொழுது திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி குடிநீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண முடியும்.

**118—**

## கட்டட வசதி செய்தல்

**வினா எண் 2897—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெரும்பாலை ஊராட்சி, பள்ளிப்பட்டி ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளிக்குப் போதுமான கட்டட வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் கூடுதல் பள்ளிக் கட்டடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) பெரும்பாலை ஊராட்சியைச் சேர்ந்த பள்ளிப்பட்டி கிராமத்தில் ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளி இதுவரை துவக்கப்படவில்லை.

(ஆ) கேள்வி எழாது.

**119—**

## குழாய் இணைப்பு

**வினா எண் 3207—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி சட்டமன்றத் தொகுதி, பெரிய காட்டுப்பாளையம் ஊராட்சி, நடுமேட்டுக்குப்பம் கிராமத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ஆழ்குழாய்க் கிணறு அமைக்கப்பட்டது. இதற்கு மேல்நிலைத் தொட்டி, இயக்கி மற்றும் தெருக் குழாய் இணைப்பு அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி ஒன்றியம், பெரிய காட்டுப்பாளையம் ஊராட்சியைச் சார்ந்த நடுமேட்டுக்குப்பம் குடியிருப்புக்குத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய குடிநீர்த் திட்டம் ரூ.5.88 இலட்சம் மதிப்பீட்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தை விரைவில் முடித்து மக்களின் பயனுக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**120—**

## மின் விளக்குகள்

**வினா எண் 3233—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதிக்கு உட்பட்ட திருவதிகை 16-வது வார்டில் மின் விளக்குகள் எரிவதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி நகராட்சி 16-வது வார்டில் அனைத்து விளக்குகளும் நல்ல நிலையில் எரிந்து கொண்டிருக்கின்றன.

**121—**

## பேருந்து நிலையம்

**வினா எண் 3367—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி பேரூராட்சி பேருந்து நிலையத்தில் பொது மக்கள் தங்குவதற்குக் கட்டிய இடங்களில் வைக்கப்பட்டுள்ள கடைகளை அகற்றிட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செஞ்சி பேரூராட்சி பேருந்து நிலையத்தில் பொது மக்கள் தங்குவதற்குக் கட்டிய இடத்தில் கடைகள் மற்றும் ஆக்கிரமிப்பு தற்போது இல்லை. ஆக்கிரமிப்புகள் ஏற்படும்போது பேரூராட்சிப் பணியாளர்களைக் கொண்டு அவ்வப்போது அகற்றப்பட்டு வருகின்றன.

**122—**

## கூட்டுக் குடிநீர்த் திட்டம்

**வினா எண் 3372—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், குண்டல் கிராமத்தில் நீராதாரம் உள்ளதால், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் குடிநீர் வழங்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், குண்டல் குடியிருப்பு தற்பொழுது செயலாக்கத்தில் உள்ள நாங்குநேரி-திசையன்விளை மற்றும் 342 வழியோரக் கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் பயனடைய உள்ளது. இக்கூட்டுக் குடிநீர்த் திட்டம் நடப்பு நிதியாண்டில் முடிக்க இலக்கிடப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

**123—**

## புதிய நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 3408—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) பண்ருட்டியிலுள்ள சிறுவத்தூர் கிராமத்தில் புதியதாக நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பண்ருட்டி ஒன்றியம், சிறுவத்தூர் ஊராட்சி, சிறுவத்தூர் குடியிருப்பிற்கு 1986-87 ஆம் ஆண்டு ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்றும், 1997-98 ஆம் ஆண்டில் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்றும் கட்டப்பட்டு, குடிநீர்த் திட்டங்கள் மக்கள் பயனில் உள்ளன. கூடுதல் குடிநீர் வசதி அளிக்கும் பொருட்டு ராஜீவ் காந்தி தேசிய குடிநீர்த் திட்டத்தின் மூலமாகக் கூடுதல் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. பயனாளிகளிடமிருந்து பங்கேற்புத் தொகை பெறப்பட்டு, குடிநீர்த் திட்டம் செயலாக்கத்திற்கு எடுக்கப்படும்.

**124—**

## புதிய ஆழ்குழாய்க் கிணறு

**வினா எண் 3412—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, காட்டுக்கடலூர் கிராமத்தைச் சேர்ந்த எம்.ஜி.ஆர். நகரிலுள்ள 250 வீடுகளில் குடிநீர் வசதிக்கு எனப் புதிய ஆழ்குழாய்க் கிணறு அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி ஒன்றியம், காட்டுக்கடலூர் ஊராட்சியைச் சார்ந்த காட்டுக்கடலூரின் ஒரு பகுதியான எம்.ஜி.ஆர். நகருக்கு தற்சமயம் ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து குடிநீர் வழங்கப்பட்டு

[2002 மே 10

வருகிறது. இப்பகுதியில் ஏற்கெனவே 15 வருடங்களுக்குமுன் இயங்கி வந்த தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி, ஆழ்துளைக் கிணறு மற்றும் மின் மோட்டார் உள்ளிட்ட அனைத்தும் பழுதடைந்து உள்ளன. எனவே அங்கு ஆழ்துளைக் கிணறும் மின் இறைப்பானும் புதியதாக அமைத்து தரைமட்ட தொட்டியைச் சீர் செய்ய ராஜீவ் காந்தி தேசிய குடிநீர்த் திட்டத்தின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பயனாளிகளின் பங்கேற்புத் தொகை பெறப்பட்டு, திட்டம் மேற்கொள்ளப்படும்.

**125—**

## ஆழ்குழாய்க் கிணறு

**வினா எண் 3482—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டியிலுள்ள மாளிகம்பட்டு என்ற கிராமத்தில் (கிழக்குத் தெரு) குடிநீர் வசதி போதுமானதாக இல்லையென்பதால், கூடுதலாக இன்னும் ஒரு ஆழ்குழாய்க் கிணறு அமைத்துத் தருவதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பண்ருட்டி ஒன்றியம், மாளிகம்பட்டு கிராமத்தில் கிழக்குப் பகுதியில் உள்ள மேட்டுப் பகுதிக்குத் தனியாக ஒரு மேல்நிலைத் தொட்டி மூலம் குடிநீர் வழங்க மக்களின் பங்கேற்புடன் ராஜீவ் காந்தி தேசிய குடிநீர்த் திட்டத்தின்கீழ்ச் செயல்படுத்திட முடிவு செய்யப்பட்டு உள்ளது. பயனாளிகளின் பங்கேற்புத் தொகையைப் பெற்றபின், திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**126—**

## புதிய ஆழ்குழாய்க் கிணறு

**வினா எண் 3483—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2002 மே 10]

(அ) பண்ருட்டியிலுள்ள சீரங்குப்பம் 32-வது வார்டில் குடிநீர் வசதியில்லாததால், கூடுதலாகப் புதிய ஆழ்குழாய்க் கிணறு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) பண்ருட்டி நகராட்சி, 32-வது வார்டில் சீரங்குப்பம், இருளர் குப்பம் மற்றும் ஆண்டிக்குப்பம் பகுதிகள் உள்ளன. இந்த 32-வது வார்டின் மொத்த மக்கள் தொகை 1243 ஆகும். ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு ஆழ்துளைக் கிணறு மூலமாகக் காலையிலும், மாலையிலும், 37 பொதுக் குழாய்கள் மூலமாகக் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது அப்பகுதிகளில் நாள் ஒன்றுக்கு, நபர் ஒருவருக்கு 90 லிட்டர் வீதம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

(ஆ) கேள்வி எழவில்லை.

**127—**

## குடிநீர் விநியோகம்

**வினா எண் 3493—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சியில் பல பகுதிகளில் குடிநீர் விநியோகம் சரியாக நடைபெறவில்லை என்பது அரசின் கவனத்திற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது சீராக குடிநீர் விநியோகம் செய்யப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் நகராட்சியானது மாநகராட்சியாக உயர்வு பெற்றவுடன் புதிதாக இணைக்கப்பட்ட அனைத்து உள்ளாட்சி அமைப்புகளைச் சார்ந்த பகுதிகளையும் உள்ளடக்கிய மாநகராட்சியின் பெரும்பாலான பகுதிகளுக்கும் குடிநீர் தடையின்றி வழங்கப்பட்டு வருகின்றது. விடுபட்ட பகுதிகளுக்கு காவிரிக் குடிநீர் வழங்கிட ரூ.24.84 கோடியில் திட்டம் தயாரிக்கப்பட்டு அதற்கான பணிகள்

தற்போது நடைபெற்று வருகின்றன. விரைவில் மாநகராட்சியின் அனைத்துப் பகுதிகளுக்கும் சீராக குடிநீர் விநியோகிக்கப்படும்.

**128—**

## குடிநீர் வழங்கும் திட்டம்

**வினா எண் 3497—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் இரண்டாவது தொகுதி, செட்டிச்சாவடி ஊராட்சி முழுவதும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் இரண்டாவது தொகுதி, செட்டிச்சாவடி மற்றும் கொண்டப்பன் நாயக்கன்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த குடியிருப்புகளுக்கான காவிரிக் குடிநீர் வழங்கும் திட்டம் ரூ.52.99 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு, பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இத்திட்டத்தை 31-12-2001-க்குள் முடித்து மக்கள் பயனுக்குக் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**129—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 3500—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதிக்குட்பட்ட சிறுதொண்டமாதேவியிலிருந்து மேற்கு கொள்ளுகாரன் குட்டைக்குப் போகும் வழியில் ஆழ்குழாய்க் கிணறு இருப்பதால், அதற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதிக்குட்பட்ட சிறுதொண்டமாதேவியிலிருந்து மேற்கு கொள்ளுகாரன் குட்டைக்குப் போகும் வழியில் அமைந்துள்ள ஆழ்துளைக் கிணறு நீராதாரத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**130—**

## கழிவு நீர்க் கால்வாய்கள்

**வினா எண் 3504—திருமதி சி.எம். சூரியகலா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் நகரத்திலுள்ள கழிவு நீர்க் கால்வாய்கள் 30 வருடங்களாகத் தூர் எடுக்கவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், கழிவு நீர்க் கால்வாய்களைத் தூர் எடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குடியாத்தம் நகராட்சியில் உள்ள கழிவு நீர்க் கால்வாய்களில் தூர்வாரும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

**131—**

## குடிநீர் திட்டங்கள்

**வினா எண் 3559—திரு. டி. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், நடைக்காவு ஊராட்சியில் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கன்னியாகுமரி மாவட்டம், முஞ்சிறை ஊராட்சி ஒன்றியம், நடைக்காவு ஊராட்சிக்குட்பட்ட 5 குடியிருப்புகளிலும் குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு, தற்போது நாள் ஒன்றுக்கு, நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்படுகிறது.

**132—**

## குடிநீர்த் தட்டுப்பாடு

**வினா எண் 3560—திரு. டி. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், குளப்புறம் ஊராட்சியில் ஏற்பட்டுள்ள கடுமையான குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கன்னியாகுமரி மாவட்டம், முஞ்சிறை ஊராட்சி ஒன்றியம், குளப்புறம் ஊராட்சிக்குட்பட்ட 5 குடியிருப்புகளுக்கும் களியக்காவிளை, மெதுகும்மல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டு, தற்போது நாள் ஒன்றுக்கு, நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்படுகிறது.

**133—**

## கடுமையான குடிநீர்த் தட்டுப்பாடு

**வினா எண் 3561—திரு. டி. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், சூழால் ஊராட்சியில் ஏற்பட்டுள்ள கடுமையான குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?



விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கன்னியாகுமரி மாவட்டம், முஞ்சிறை ஊராட்சி ஒன்றியம், சூழால் ஊராட்சிக்குட்பட்ட 3 குடியிருப்புகளுக்குக் குடிநீர்த் திட்டம், கொல்லங்கோடு, ஏழுதேசம் பேரூராட்சிகள் மற்றும் 21 வழியோரக் கிராமங்களுக்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்பட்டு, இக்குடியிருப்புகளுக்குத் தற்போது நாள் ஒன்றுக்கு, நபர் ஒருவருக்கு 10 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்படுகிறது.

**134—**

## குடிநீர்த் தட்டுப்பாடு

**வினா எண் 3562—திரு. டி. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், அடைக்காக்குழி ஊராட்சியில் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கன்னியாகுமரி மாவட்டம், முஞ்சிறை ஊராட்சி ஒன்றியம், அடைக்காக்குழி ஊராட்சிக்குட்பட்ட 4 குடியிருப்புகளிலும் குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு, தற்போது நாள் ஒன்றுக்கு, நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்படுகிறது.

**135—**

## குடிநீர்த் தட்டுப்பாடு

**வினா எண் 3563—திரு. டி. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், விளாத்துறை ஊராட்சியில் ஏற்பட்டுள்ள கடுமையான குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கன்னியாகுமரி மாவட்டம், முஞ்சிறை ஊராட்சி ஒன்றியம், விளாத்துறை ஊராட்சிக்குட்பட்ட 16 குடியிருப்புகளிலும் குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு, தற்போது நாள் ஒன்றுக்கு, நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்படுகிறது. தற்போது இப்பேரூராட்சிக்குட்பட்ட ஒச்சவிளை, கோயிக்காவிளை, பேப்பிலாவிளை, ஆலாபாடு ஆகிய நான்கு குடியிருப்புகளுக்குப் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் குழித்துறையாற்றில் ஒரு நீர் உறிஞ்சுக் கிணறு அமைக்கப்பட்டுள்ளது. மேலும், 1.00 இலட்சம் லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் பணி முன்னேற்றத்தில் உள்ளது. இப்பணிகள் 9/2001-ல் முடிக்கப்பட உள்ளன.

**136—**

## குடிநீர் வழங்கும் திட்டம்

**வினா எண் 3650—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், ஆலாத்தூர் ஊராட்சி, நந்திமாங்குடி கிராமத்திற்குக் குடிநீர் வழங்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், ஆலாத்தூர் ஊராட்சி, நந்திமாங்குடி கிராமத்திற்கு நடப்பு நிதியாண்டில் (2001-2002) குடிநீர்த் திட்டம் மேற்கொள்ளப்பட்டு 12/2000-ல் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.



**137—**

## குடிநீர் வசதி

**வினா எண் 3651—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், இருள்நீக்கி ஊராட்சியின் கருவக்குளம் கிராமத்தில் சின்னக் குருகாடியிலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து கருவக்குளம் கிராமத்திற்குத் தண்ணீர் கிடைக்கச் செய்யும் திட்டம் அரசிடத்தில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கருவக்குளம் பகுதி, திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், இருள்நீக்கி ஊராட்சியில் உள்ள சின்னக் குருகாடி என்ற குடியிருப்பின் ஒரு பகுதியாகும். சின்னக் குருகாடி குடியிருப்பிற்கு விசைப்பம்பு திட்டம் நிறைவேற்றப்பட்டு 25-12-2000 முதல் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்திலிருந்து 200 மீட்டர் தூரத்திலுள்ள கருவக்குளம் குடியிருப்புக்கு ஒரு பொதுக் குழாய் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. மேலும் ஒரு வடிமுனைக் குழாய் இப்பகுதியில் உள்ளது. மக்கள் தொகை சுமார் 40 மட்டுமே கொண்ட இப்பகுதிக்குத் தற்போதைய குடிநீர் வசதி போதுமானதாக உள்ளது.

**138—**

## காய்கறி அங்காடி

**வினா எண் 3660—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி நகரத்தில் அரசு இடத்தில் புதிய காய்கறி அங்காடி அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி நகராட்சியில் புதிய காய்கறி அங்காடி அமைப்பது குறித்த திட்டம் ஏதும் தற்போது இல்லை.

139—

## குடிநீர்த் தட்டுப்பாடு

**வினா எண் 3665—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலுள்ள முகப்பேர், பெரம்பூர் பகுதிகளின் குடிநீர்த் தட்டுப்பாட்டைக் களைய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னை நகரில் கடும் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டதைத் தொடர்ந்து, முகப்பேர் கிழக்கு மற்றும் மேற்குப் பகுதிகளில் 192 குடிநீர்த் தொட்டிகள் நிறுவப்பட்டு லாரிகள் மூலம் குடிநீர் வழங்கப்படுவதுடன், 74 இந்தியா மார்க்-2 பம்புகளும் அமைக்கப்பட்டும், குடிநீர் தங்குதடையின்றி வழங்கப்பட்டு வருகிறது. அதேபோன்று பெரம்பூர் பகுதியிலும் 754 குடிநீர்த் தொட்டிகள் மூலம் குடிநீர் வழங்கப்படுவதுடன், 440 இந்தியா மார்க்-2 பம்புகள் அமைக்கப்பட்டும் குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது.

140—

## குடிநீர்த் திட்டம்

**வினா எண் 3671—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆம்பூர் தொகுதிக்குட்பட்ட பகுதியில் ஒகேனக்கல் குடிநீர்த் திட்டம் கொண்டுவர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1-8-2001 மற்றும் 2-8-2001 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள்



மாநாட்டில், வேலூர் நகராட்சிக்கு ஒகேனக்கல் அருகே காவிரி ஆற்றிலிருந்து குடிநீர் வழங்கப்படும் என அறிவித்துள்ளதால், வேலூர் மாவட்டத்தில் வேலூர் நகராட்சி மற்றும் திருப்பத்தூர், வாணியம்பாடி, ஆம்பூர் ஆகிய 3 நகராட்சிகள், நான்கு பேரூராட்சிகள் வழியோர ஊரகக் குடியிருப்புகள் மற்றும் புளோரைடால் பாதிக்கப்பட்ட 631 குடியிருப்புகள் பயன்பெறும் வகையில், ஒகேனக்கல் அருகே காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு, ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைக்க ஆய்வுப் பணிகள் வாரியத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

141—

## குடிநீர்ப் பிரச்சினை

**வினா எண் 3678—திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னைக் குடிநீர்ப் பிரச்சினைக்காக பழவேற்காடு, ஆதம்பாக்கம் ஏரிகளைப் பயன்படுத்தும் திட்டம் அரசுக்கு இருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், இது சம்பந்தமாக எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

142—

## கூட்டுக் குடிநீர் வழங்கும் திட்டம்

**வினா எண் 3683—திரு. க. பாரமலை:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வைகை ஆற்றில் திருப்பாச்சேத்திக்கு அருகில் ஆழ்கிணறு தோண்டி விருதுநகர் மாவட்டம், கட்டனூர் மற்றும் பல கிராமங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட கூட்டுக் குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வைகை ஆற்றில் திருப்பாச்சேத்திக்கு அருகில் இரண்டு நீர் உறிஞ்சும் கிணறுகளை நீராதாரமாகக் கொண்டு, விருதுநகர் மாவட்டம், நரிக்குடி ஒன்றியத்தில் உள்ள கட்டனூர் மற்றும் 29 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. விரைவில் பணிகளை முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**143—**

## மாற்று ஆழ்துளைக் கிணறு

**வினா எண் 3694—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, வல்லம் ஒன்றியம், சோழங்குணம் கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு மாற்று ஆழ்துளைக் கிணறு புதியதாக அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செஞ்சி தொகுதி, வல்லம் ஒன்றியம், சோழங்குணம் கிராமத்தின் குடிநீர் பற்றிய பிரச்சினை அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு, அக்குடியிருப்புக்குத் தற்சமயம் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய



குடிநீர்த் திட்டத்திற்கான நீராதாரமான ஆழ்துளைக் கிணற்றின் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டு, தற்பொழுது திட்டம் நன்கு செயல்படுகிறது. எனவே, மாற்று ஆழ்துளைக் கிணறு அமைக்க அவசியம் எழவில்லை.

**144—**

## புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 3697—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, வல்லம் ஒன்றியம், மரூர் கிராமத்தில் ஆதிதிராவிடர் காலனிக்கு புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) செஞ்சி தொகுதி, வல்லம் ஒன்றியம், மரூர் கிராமத்தில் உள்ள ஆதிதிராவிடர் காலனியின் குடிநீர் பற்றிய பிரச்சினை அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

(ஆ) இக்குடியிருப்புக்கு வரும் நிதியாண்டுகளில் தேவை, தகுதி, நிதி ஆதாரம் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, முன்னுரிமையின் அடிப்படையில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய குடிநீர்த் திட்டம் நிறைவேற்றுவது குறித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

**145—**

## பேருந்து நிலையம் கட்டும் பணி

**வினா எண் 3710—திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராயக்கோட்டை பேருந்து நிலையம் கட்டப்படும் பணியை விரைந்து முடித்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், ராயக்கோட்டையில் பேருந்து நிலையம் அமைக்கும் பணி மேற்கொள்ளச் சாத்தியம் இல்லை.

**146—**

**சந்தை வசதி**

**வினா எண் 3728—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரி ஒன்றியம், சோலூர் மட்டத்தில் சந்தை வசதி ஏற்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரி ஒன்றியம், சோலூர் மட்டத்தில் சந்தை வசதி ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**147—**

**சமுதாய நலக் கூடம்**

**வினா எண் 3730—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரி ஒன்றியம், சோலூர் மட்டத்தில் சமுதாய நலக் கூடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரி ஒன்றியம், சோலூர் மட்டத்தில் சமுதாயக் கூடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**148—**

**சமூக நலக் கூடம்**

**வினா எண் 3731—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரி ஒன்றியம், தேனாடு கிராமம், கரக்கோடு மட்டம் என்ற இடத்தில் சமூக நலக் கூடம் கட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரி ஒன்றியம், தேனாடு கிராமம், கரக்கோடு மட்டம் என்ற இடத்தில் சமூக நலக் கூடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**149—**

**குடிநீர்ப் பற்றாக்குறை**

**வினா எண் 3734—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரி ஒன்றியம், தேனாடு கிராமம், துறையூர் ஹட்டியில் குடிநீர்ப் பற்றாக்குறை இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைத் தீர்க்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரி ஒன்றியம், தேனாடு கிராமம், துறையூர் ஹட்டியில் பழுதடைந்த பகிர்மானக் குழாய்கள் சீர்செய்யப்பட்டு, தற்போது குடிநீர் விநியோகம் சீராக நல்லமுறையில் நடைபெற்று வருகிறது.

**150—**

## குடிநீர்க் குழாய் இணைப்பு

**வினா எண் 3748—திரு. நா. சந்திரமோகன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியிலுள்ள மீனவர் கிராமமான புதுப்பட்டினம், தொடுவாய், திருமுல்லைவாசல், கூழையார், நாயக்கர்குப்பம், கீழ்மூவர்க்கரை, தென்னாம்பட்டினம் ஆகிய கிராமங்களுக்குக் குடிநீர்க் குழாய் இணைப்பு வழங்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதியில், தொடுவாய், திருமுல்லைவாசல், புதுப்பட்டினம், கூழையார் ஆகிய குடியிருப்புகளுக்கு ரூ.9.27 கோடி மதிப்பீட்டில் கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. கீழ்மூவர்க்கரை குடியிருப்புக்கு நடப்பு நிதியாண்டில் ரூ.7.66 லட்சம் செலவில் தனி மின்விசைத் திட்டம் செயலாக்கத்தில் உள்ளது.

**151—**

## குடிநீர் வழங்கும் பணி

**வினா எண் 3749—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) சீர்காழி தொகுதியில் கடலோர மீனவக் கிராமங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சீர்காழி தொகுதியிலுள்ள மீனவக் குடியிருப்புகளுக்கு ரூ.9.27 கோடி மதிப்பீட்டில் கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் ரூ.18.25 கோடி மதிப்பீட்டில் செம்பனார்கோவில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம் குடிநீர் வழங்கும் பணி முடிவடைந்துள்ளது.

**152—**

## வடிகட்டும் குடிநீர்த் தொட்டி

**வினா எண் 3771—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், குன்னூர் வட்டம், ஜெகதளா பேரூராட்சியில் வடிகட்டும் குடிநீர்த் தொட்டி கட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) நீலகிரி மாவட்டம், குன்னூர் வட்டம், ஜெகதளா பேரூராட்சியில் வடிகட்டும் குடிநீர்த் தொட்டி அமைக்கப்படும்.

(ஆ) நடப்பு ஆண்டில் (2001-2002) பணி மேற்கொள்ளப்படும்.

**153—**

## பயணிகள் நிழற்குடை

**வினா எண் 3776—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரி ஒன்றியம், இட்டக்கல் ஹாடாவில் பயணிகள் நிழற்குடை அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரி ஊராட்சி ஒன்றியம், இட்டக்கல் ஹாடாவில் பயணியர் நிழற்குடை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

154—

## மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி

**வினா எண் 3829—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், சேரி ஊராட்சியில் மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி கட்டும் திட்டம் அரசிடத்தில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்.

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், சேரி ஊராட்சியில் (1) கீழ்கண்டமங்கலம் (2) கீழசேரி (3) மேலசேரி மற்றும் (4) மேல்கண்டமங்கலம் என்ற 4 குடியிருப்புகள் உள்ளன.

மேற்காணும் 4 குடியிருப்புகளும் வேதாரண்யம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டு செயலாக்கத்தில் உள்ளது. வேதாரண்யம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேறும்போது இக்குடியிருப்புகளும் குடிநீர் வசதி பெறும்.



155—

## ஆதிதிராவிட மக்கள்

**வினா எண் 3855—திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆதிதிராவிட மக்கள் குடியிருக்கும் பழுதடைந்த தொகுப்பு வீடுகளைப் புதுப்பித்துத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆதிதிராவிட மக்கள் குடியிருக்கும் பழுதடைந்த தொகுப்பு வீடுகளைப் புதுப்பித்துத்தர அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

156—

## ஆழ்குழாய்க் கிணறுகள்

**வினா எண் 3857—திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடையநல்லூர் தொகுதி, கொடிக்குறிச்சி கிராமக் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கடையநல்லூர் தொகுதி, கொடிக்குறிச்சி குடியிருப்பில் ஆழ்குழாய்க் கிணற்றை நீராதாரமாகக் கொண்டு 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் இக்குடியிருப்பில் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்படாவண்ணம், தாமிரபரணி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வரும் கடையநல்லூர் - புளியங்குடி நகராட்சி மற்றும் 84 வழியோரக் கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலும் இக்குடியிருப்பு பயனடைய உள்ளது.

157—

## குடிநீர் வசதி

**வினா எண் 4066—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

அ) எடப்பாடி ஒன்றியம், செட்டிமாங்குறிச்சி ஊராட்சி, சூரியம்பாளையம் காட்டுவளவிற்குக் குடிநீர் வசதி இல்லை என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அப்பகுதிக்குக் குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) எடப்பாடி ஒன்றியம், செட்டிமாங்குறிச்சி ஊராட்சி, சூரியம்பாளையம் காட்டுவளவு, அரியாம்பாளையம் காட்டுவளவு குடியிருப்பின் ஒரு பகுதியாகும். இக்குடியிருப்பு காவிரி ஆற்று நீரை நீராதாரமாக கொண்ட இருப்பாளி பெருங்கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் கீழ்ச் சேர்க்கப்பட்டு, திட்டப் பணிகள் செயலாக்கத்தில் உள்ளன. இத்திட்டப் பணிகளை 3/2003-க்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

158—

## குடிநீர்த் தட்டுப்பாடு

**வினா எண் 4085—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் ஊராட்சி ஒன்றியம், குமாரபுரம் ஊராட்சி, முறம்பு பகுதியில் குடிநீர்த் தட்டுப்பாடு உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன?



விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் ஊராட்சி ஒன்றியம், குமாரபுரம் ஊராட்சி, முறம்பு குடியிருப்புக்கு 2000-2001ஆம் நிதியாண்டில் ஆழ்குழாய்க் கிணற்றை நீராதாரமாகக் கொண்டு நல்லம்மாள்புரத்தில் கட்டப்பட்ட 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து குழாய் நீட்டிப்பு செய்யப்பட்டு, ஒரு பொது நல்லி மூலம் குடிநீர் வழங்கப்பட்டு, திட்டம் பொது மக்கள் பயனில் உள்ளது.

159—

## குடிநீர் வசதி செய்தல்

**வினா எண் 4086—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பி. ஆண்டிக்குப்பம் அரிசன காலனிக்கு குடிநீர் வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி ஒன்றியம், பணிக்கன்குப்பம் ஊராட்சியைச் சார்ந்த பி. ஆண்டிக்குப்பம் அரிசன காலனி, பி. ஆண்டிக்குப்பம் குடியிருப்பின் ஒரு பகுதியாகும். இக்குடியிருப்பு முழுவதற்கும் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. கூடுதல் குடிநீர் வசதிக்கு, ராஜீவ் காந்தி தேசிய குடிநீர்த் திட்டம் மூலம் நிறைவேற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது. பயனாளிகளின் பங்குத் தொகை பெறப்பட்டவுடன் திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

160—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 4118—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் ஒன்றியம், கோரணம்பட்டி கிராமம், தொப்பக்காடு பகுதி மக்களுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி, குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் ஒன்றியம், கோரணம்பட்டி கிராமம், தொப்பக்காடு குடியிருப்புக்கு தற்பொழுது செயலாக்கத்திலுள்ள இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்று கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

161—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 4123—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி 24, 25 மற்றும் 26-வது வார்டு கவுண்டம்பட்டியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி, குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி 24, 25 மற்றும் 26-வது வார்டு கவுண்டம்பட்டியில் குடிநீர் வாரியத்தின் மூலம் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டத் தற்போது திட்டம் எதுவுமில்லை.



162—

## புதிதாகக் கட்டடங்கள்

**வினா எண் 4124—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி நகராட்சிக்குட்பட்ட கவுண்டம்பட்டியிலுள்ள நகராட்சித் துவக்கப் பள்ளிக்குப் போதுமான இடவசதி இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், புதிதாகக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) போதுமான இடவசதி உள்ளது.

(ஆ) புதிதாகக் கட்டடங்கள் ஏற்கெனவே கட்டப்பட்டுள்ளன.

163—

## சாலைகள் சீரமைக்கும் பணி

**வினா எண் 4125—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி நகராட்சி, சின்னமணலி, கிழக்குத் தெரு பகுதியிலுள்ள சாலைகளைச் சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி நகராட்சியில் போதிய நிதி வசதி இல்லாததால் சின்னமணலி, கிழக்குத் தெரு பகுதியிலுள்ள சாலைகளைச் சீரமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

164—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 4127—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி ஒன்றியம், சித்தூர் கிராமம், நாச்சூரான் காடு பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி, குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி ஒன்றியம், வேம்பனேரி ஊராட்சி, நாச்சூரான்காடு பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் திட்டம் தற்போது அரசிடம் இல்லை.

165—

## காவிரிக் குடிநீர்

**வினா எண் 4153—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி ஒன்றியம், எர்ணாபுரம் கிராமம், பாட்டப்பன் நகர் பகுதி மக்களுக்குப் புதிதாகக் குழாய் இணைப்பு அமைத்து, காவிரிக் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி ஒன்றியம், எர்ணாபுரம் கிராமம், பாட்டப்பன் நகர் பகுதி மக்களுக்கு தற்போது செயலாக்கத்தில் உள்ள இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் காவிரிக் குடிநீர் வழங்கத் திட்டமிடப்பட்டு, அதற்கான பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.



166—

## காவிரிக் குடிநீர்

**வினா எண் 4163—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், கோரணம்பட்டி, நாச்சனூர் பகுதி மக்களுக்குக் காவிரிக் குடிநீர் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், கோரணம்பட்டி, நாச்சனூர் பகுதி மக்களுக்கு செயலாக்கத்திலுள்ள இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் காவிரிக் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

167—

## காவிரிக் குடிநீர் வழங்கத் திட்டம்

**வினா எண் 4169—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், கன்னந்தேரி கிராமம் ஒண்டிக்கடை கரட்டுக்காடு பெருமாள் வளவில் மக்களுக்குக் காவிரிக் குடிநீர் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், கன்னந்தேரி கிராமம், ஒண்டிக்கடை கரட்டுக்காடு பெருமாள் வளவு குடியிருப்பு மக்களுக்கு, பயனில் உள்ள கையிறைப்பான் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. மேலும் இக்குடியிருப்புக்கு செயலாக்கத்திலுள்ள இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் காவிரிக் குடிநீர் வழங்கத் திட்டமிடப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

168—

## கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம்

**வினா எண் 4182—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தை மகாபலிபுரத்தில் உருவாக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தை மகாபலிபுரத்தில் உருவாக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

169—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 4204—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி பேரூராட்சி, சந்தைமேட்டில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது செஞ்சி பேரூராட்சி, செஞ்சி-அனந்தபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் தென்பெண்ணையாற்றிலிருந்து குடிநீர் வசதி பெறுகின்றது. இக்கூட்டுக் குடிநீர்த் திட்டம் தற்போது வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இப்பேரூராட்சிக்குட்பட்ட சந்தை மேட்டுப் பகுதி 8,9,10,11 வார்டுகள் மேட்டுப் பகுதி ஆகும். இந்தப் பகுதிக்கும், தற்போது பேரூராட்சியால் கேட் வால்வு அமைக்கப்பட்டு, குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இந்த நிதியாண்டில் புதிய கூடுதல் மேல்நிலைத் தொட்டி அமைக்க வாரியத்தின் வசம் தற்போது திட்டம் எதுவும் இல்லை.



170—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண்.4210—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, ஆயிப்பேட்டை கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, குறிஞ்சிப்பாடி ஒன்றியத்தைச் சார்ந்த ஆயிப்பேட்டை குடியிருப்பில் தற்சமயம் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. கூடுதல் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க ராஜீவ் காந்தி தேசிய குடிநீர்க் குழுமம் மூலமாக பயனாளிகளின் பங்கேற்புடன்கூடிய குடிநீர்த் திட்டம் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

171—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 4211—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, அன்னதானம்பட்டி கிராமத்திற்குக் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அன்னதானம்பட்டி கிராமத்தில் ஏற்கெனவே ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி உள்ளது. மற்றொன்று கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

172—

## குடிநீர் வசதி

**வினா எண்.—4223 திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பெத்தநாயக்கன்குப்பம் மேட்டுப் பகுதி மக்களுக்கு குடிநீர் வசதி ஏற்படுத்தித் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, குறிஞ்சிப்பாடி ஒன்றியம், பெத்தநாயக்கன்குப்பம் ஊராட்சியைச் சார்ந்த பெத்தநாயக்கன் குடியிருப்பில் தற்சமயம் 15,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. கூடுதல் குடிநீர் வசதிக்கு ராஜீவ் காந்தி தேசிய குடிநீர்க் குழுமம் மூலமாக மக்களின் பங்கேற்புடன்கூடிய குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது. பயனாளிகளின் பங்கேற்புத் தொகை பெறப்பட்டவுடன் புதிய குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

173—

## புதிய கிணறு அமைக்கும் திட்டம்

**வினா எண்—4232 திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை வட்டம், ஜல்லிப்பட்டி கிராமப் பஞ்சாயத்து, லிங்கமாவூரில் ஆழ்குழாய்க் கிணற்றில் தண்ணீர் இல்லாததால் புதிய கிணறு அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், ஜல்லிப்பட்டி ஊராட்சி, லிங்கமனூர் குடியிருப்புக்கு நடப்பு நிதியாண்டில் (2001-2002) குடிநீர்த் திட்டம் செயலாக்க உத்தேசிக்கப்பட்டு, குடிநீர் ஆதாரம் அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை 3/2002-க்குள் முடித்து மக்கள் பயனுக்குக் கொண்டுவர இலக்கிடப்பட்டுள்ளது.

174—

## புதியதாகக் குடிநீர் வசதி

**வினா எண்.4240— திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை அருகே புங்கமுத்தூரில் அரிசன காலனிக்கு (புதிதாக) குடிநீர் வசதி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) போதுமான நீராதாரமிருப்பதால் அரசு நடவடிக்கை தேவையில்லை.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

175—

## தொகுப்பு வீடு கட்டும் திட்டம்

**வினா எண் 4251—திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை வட்டம், சங்கராம நல்லூர் பேரூராட்சி, மயிலாபுரம் கிராமத்தில் ஆதிதிராவிடர்களுக்குத் தொகுப்பு வீடு கட்டும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை வட்டம், சங்கராம நல்லூர் பேரூராட்சி, மயிலாபுரம் கிராமத்தில் ஆதிதிராவிடர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

176—

## கூட்டுக் குடிநீர்த் திட்டம்

**வினா எண் 4252—திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை வட்டம், ஜல்லிப்பட்டி பஞ்சாயத்து, அம்மாபட்டியில் கரிசல் மண் உள்ள இடத்திற்குத் திருமூர்த்திமலை தண்ணீர் கொண்டு செல்லும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) உடுமலைப்பேட்டை வட்டம், ஜல்லிப்பட்டி பஞ்சாயத்து, அம்மாபட்டியில் கரிசல் மண் உள்ள இடத்திற்குத் திருமூர்த்திமலை தண்ணீர் கொண்டு செல்லும் திட்டம், கணக்கம்பாளையம் மற்றும் 7 ஊராட்சிகளுக்கான குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. கணக்கம்பாளையம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு திட்ட மதிப்பீடு ரூ.996 இலட்சங்களுக்கு வாரியத்தின் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. நிதிநிலைக்கேற்ப இத்திட்டத்திற்கான பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.



177—

## தெரு விளக்குகள்

**வினா எண் 4284—டாக்டர். சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை ஒன்றியத்திலுள்ள ஆட்டாங்குடி பகுதியில் தெரு விளக்குகள் எரியாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைச் சீர் செய்ய எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை ஒன்றியத்தில் ஆட்டாங்குடி பகுதியில் தெரு விளக்குகள் தற்போது எரிய வைக்கப்பட்டுள்ளன.

178—

## குடிநீர்ப் பற்றாக்குறை

**வினா எண் 4302—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம் கச்சுப்பள்ளி கிராமம், கோவலன்காடு (தெற்கு வளவு) பகுதி மக்களுக்குக் குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் உடனடியாகக் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், கச்சுப்பள்ளி கிராமம், கோவலன்காடு (தெற்கு வளவு) பகுதி மக்களுக்குக் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க, தற்பொழுது செயலாக்கத்திலுள்ள இருப்பாளி கூட்டுக் குடிநீர் திட்டத்தின்கீழ் காவிரிக் குடிநீர் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

179—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 4305—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, செடுதான்குப்பம் கிராமத்தில் ஆழ்குழாய்க் கிணறு போட்டு மேல்நிலைத் தொட்டி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பண்ருட்டி தொகுதி, கம்மாபுரம் ஒன்றியம், இருப்பு ஊராட்சியைச் சார்ந்த செடுதான்குப்பம் குடியிருப்பில் தற்சமயம் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் மூலம் அத்தியாவசியத் தேவைகளுக்குத் தேவையான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, இக்குடியிருப்பிற்குப் புதிய குடிநீர்த் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

180—

## குடிநீர் வசதி

**வினா எண் 4308—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, தெற்கு கீழ்மாம்பட்டு கிராமத்தில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்து, குடிநீர் வசதி செய்து தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், கீழ்மாம்பட்டு ஊராட்சியைச் சார்ந்த கீழ்மாம்பட்டு (தெற்கு) குடியிருப்பில் தற்சமயம் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட



மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. கூடுதல் குடிநீர் வசதிக்காக, ஒரு புதிய ஆழ்துளைக் கிணறு மக்கள் பங்கேற்புடன்கூடிய ராஜீவ் காந்தி தேசிய குடிநீர்த் திட்டத்தின் மூலம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. பயனாளிகளின் பங்கேற்புத் தொகை பெறப்பட்டவுடன் புதிய குடிநீர்த் திட்டத்தினை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

181—

## ஆழ்குழாய்க் கிணறு

**வினா எண் 4310—திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை அருகே சின்னப்பூலாங்கிணறு கிராமத்தில் குடிநீர் விநியோகத்தைச் சரி செய்ய உடனடியாக ஆழ்குழாய்க் கிணறு அமைத்து, நீரேற்று இயக்கி பொருத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், ராகல்பாவி ஊராட்சி, சின்னப்பூலாங்கிணறு குடியிருப்புக்கு நடைமுறையிலுள்ள திட்டங்களில் இருந்து நாள் ஒன்றுக்கு, நபர் ஒருவருக்கு 20 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்படுகிறது. மேலும், நடப்பு நிதியாண்டில் ஒரு கையிறைப்பான் திட்டம் செயல்படுத்தப்பட்டு பயனில் உள்ளது. எனவே தற்போது அங்கு உடனடியாக ஆழ்குழாய்க் கிணறு அமைக்க இயலாது.

182—

## குடிநீர்த் தட்டுப்பாடு

**வினா எண் 4311—திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை அருகே சின்னப்பூலாங்கிணறு ஆதி திராவிடர் காலனியில் குடிநீர்த் தட்டுப்பாட்டை போக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை ஒன்றியம், ராகல்பாவி ஊராட்சியிலுள்ள சின்னபூலாங்கிணறு ஆதி திராவிடர் காலனி, சின்னபூலாங்கிணறு குடியிருப்பின் ஒரு பகுதியாகும். சின்னபூலாங்கிணறு ஆதிதிராவிடர் காலனி குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க வறட்சி நிவாரணப் பணிகளின்கீழ் புதிய ஆழ்குழாய்க் கிணறு அமைக்கப்பட்டு கைப்பம்பு பொருத்தப்பட்டு 9/2001-லிருந்து மக்கள் பயன்படுத்தி வருகிறார்கள்.

183—

## திருமூர்த்தி மலைத் தண்ணீர்

**வினா எண் 4314—திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை வட்டம், ஜல்லிப்பட்டி பஞ்சாயத்து, ஜல்லிப்பட்டியில் திருமூர்த்தி மலைத் தண்ணீர் சரியாக வருவதில்லை என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு என்ன நடவடிக்கையை உத்தேசித்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) அரசின் கவனத்திற்கு எதுவும் வரவில்லை.

(ஆ) தற்போதுள்ள நீராதாரங்களின் மூலம் போதுமான குடிநீர் வழங்கப்படுகிறது. நகராட்சி முதலாவது குடிநீர்த் திட்டத்தின் மூலமும் தற்பொழுது அத்தியாவசியத் தேவைக்கான குடிநீர் போதுமான அளவு வழங்கப்படுகிறது.



184—

## புதிய ஆழ்குழாய்க் கிணறு

**வினா எண் 4320—திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை வட்டம், ஜல்லிப்பட்டி பஞ்சாயத்து, வெங்கிட்டாபுரம் கிராம ஆழ்குழாய்க் கிணற்றில் தண்ணீர் இல்லாததால் அரசு புதிய ஆழ்குழாய்க் கிணறு அமைத்துத் தருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், ஜல்லிப்பட்டி ஊராட்சி, வெங்கிட்டாபுரம் குடியிருப்புக்குக் குடிநீர்ப் பற்றாக்குறையைத் தீர்க்க ராஜீவ் காந்தி தேசியக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் புதிய ஆழ்குழாய்க் கிணறு அமைப்பதற்காக மக்கள் பங்களிப்புத் தொகை பெறப்பட்டு திட்டத்தினை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

185—

## கூட்டுக் குடிநீர்த் திட்டம்

**வினா எண் 4324—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், கச்சுப்பள்ளி கிராமம், கொல்லப்பட்டி பெரியகாட்டுவளவு பகுதி மக்களுக்குக் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், கச்சுப்பள்ளி கிராமம், கொல்லப்பட்டி, பெரியகாட்டுவளவு குடியிருப்புக்கு, தற்பொழுது செயலாக்கத்திலுள்ள இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் காவிரிக் குடிநீர் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**186—**

### அலுவலகக் கட்டடத் திட்டம்

**வினா எண் 4528—திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை ஒன்றியம், கே. வல்லக்குண்டாபுரத்தில் அரசுக்குச் சொந்தமான கிராம நிர்வாக அலுவலகக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நடப்பு நிதியாண்டில் அனைத்து மாவட்டங்களிலும் தேவை அடிப்படையில் முன்னுரிமை அளிக்கப்பட்டு 4,000 கிராம நிர்வாக அலுவலருக்கான அலுவலகக் கட்டடங்கள் ரூபாய் 60 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. சட்டமன்ற உறுப்பினர் கோரியுள்ள இடம் முன்னுரிமைக்குத் தகுதியுடையதாயின் நடப்பு நிதி ஆண்டில் அங்கு கிராம நிர்வாக அலுவலருக்கான அலுவலகக் கட்டடம் கட்டித்தரப் பரிசீலிக்கப்படும்.

**187—**

### காவிரிக் குடிநீர் வழங்கும் திட்டம்

**வினா எண் 4641—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



எடப்பாடி ஒன்றியம், செட்டிமாங்குறிச்சி ஊராட்சி, கொட்டாபுளியூர் என்ற குக்கிராமத்திற்குக் குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி ஒன்றியம், செட்டிமாங்குறிச்சி ஊராட்சி, கொட்டாபுளியூர் குடியிருப்புக்கு, தற்பொழுது செயலாக்கத்திலுள்ள இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் காவிரிக் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**188—**

### குடிநீர் வழங்கும் திட்டம்

**வினா எண் 4645—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, செட்டிமாங்குறிச்சி ஊராட்சி, பரமானந்தம் பூசாரிவளவு மக்களுக்குக் குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, செட்டிமாங்குறிச்சி ஊராட்சி, பரமானந்தம் பூசாரிவளவு குடியிருப்புக்கு, தற்பொழுது செயலாக்கத்தில் உள்ள இருப்பாளி கூட்டுக் குடிநீர் திட்டத்தின்கீழ் காவிரிக் குடிநீர் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**189—**

### சோடியம் விளக்கு

**வினா எண் 4828—திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடையநல்லூர் தொகுதி, தர்மாபுரம் பகுதியிலுள்ள (புன்னையாபுரம்) முத்தரையர் தெருவிற்கு சோடியம் விளக்கு அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கடையநல்லூர் தொகுதி, தர்மாபுரம் பகுதியிலுள்ள (புன்னையாபுரம்) முத்தரையர் தெருவிற்கு சோடியம் விளக்கு அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**190—**

## சோடியம் விளக்கு அமைக்கும் திட்டம்

**வினா எண் 4855—திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடையநல்லூர் தொகுதி, கம்பனேரி ஊராட்சி, வலசை கிராமத்திற்கு சோடியம் விளக்கு அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கடையநல்லூர் தொகுதி, கம்பனேரி ஊராட்சி, வலசை கிராமத்திற்கு சோடியம் விளக்கு அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்புகள் இல்லை.

**191—**

## கூடுதல் பள்ளிக் கட்டடம்

**வினா எண் 4871—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, ஒலக்கூர் ஒன்றியத்தில் பாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளிக்குக் கூடுதல் பள்ளிக் கட்டடம் கட்டித்தர அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) தற்போதுள்ள கட்டடம் போதுமானதாக உள்ளது.

(ஆ) கேள்வி எழாது.

**192—**

## குடிநீர் வழங்கும் திட்டம்

**வினா எண் 4875—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி ஒன்றியம், செட்டிமாங்குறிச்சி ஊராட்சி, ஊஞ்சக்காடு பகுதிக்குக் குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி ஒன்றியம், செட்டிமாங்குறிச்சி ஊராட்சி, ஊஞ்சக்காடு குடியிருப்பு, காவிரி ஆற்று நீரை நீராதாரமாகக் கொண்டு, தற்போது செயலாக்கத்திலுள்ள இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் பயனடையும் குடியிருப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகளை 2002 ஆம் ஆண்டு இறுதிக்குள் முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இக்கூட்டுக் குடிநீர்த் திட்டம் முடிவடையும்பொழுது மேற்கண்ட குடியிருப்புகள் பயனடையும்.

**193—**

## பஞ்சாயத்துக் கட்டடம்

**வினா எண் 5004—திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை வட்டம், ஜல்லிப்பட்டி பஞ்சாயத்துக் கட்டடம் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) உடுமலைப்பேட்டை வட்டம், ஜல்லிப்பட்டி பஞ்சாயத்துக் கட்டடம் புதுப்பிக்க ஆவன செய்யப்படும்.

(ஆ) 2001-2002 ஆம் நிதியாண்டில் செய்யப்படும்.

**194—**

## கூட்டுக் குடிநீர்த் திட்டம்

**வினா எண் 5045—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் நாகப்பட்டினம் தொகுதியை இணைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) தற்பொழுது செயலாக்கத்தில் இருந்து வரும் வேதாரண்யம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் நாகப்பட்டினம் நகராட்சியை இணைக்கும் கருத்துருவை ஆராய்ந்ததில் நாகப்பட்டினம் நகராட்சியின் வருங்காலத் தேவைகள் அனைத்தையும் முழுமையாக நிறைவேற்றும் அளவுக்குத் தொழில்நுட்பச் சாத்தியக் கூறுகள் இல்லை.

எனவே நாகப்பட்டினம், திருமருகல், கீழையூர், தலைஞாயிறு மற்றும் கீழ்வேந்தர் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள அனைத்து ஊரகக் குடியிருப்புகள், திட்டச்சேரி, வேளாங்கண்ணி மற்றும் கீழ்வேளூர் பேரூராட்சிகள் மற்றும் நாகப்பட்டினம் நகராட்சி ஆகியவை பயன்பெறும் வகையில் ஒரு புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைச் செயலாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான முதல் கட்டப் பணிகளுக்கு உத்தேச மதிப்பீடு ரூ.70.62 கோடிக்குத் தொழில்நுட்பக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. விரிவான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது.



**195—**

## கடும் குடிநீர்ப் பிரச்சினை

**வினா எண் 5060—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரி பேரூராட்சி, அணையட்டி பகுதியில் கடும் குடிநீர்ப் பிரச்சினை இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனை தீர்க்க முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரி பேரூராட்சியில் பருவ மழை பொய்த்துவிட்டதால் குடிநீர் விநியோகம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இப்பகுதிக்கு இரண்டு நாட்களுக்கு ஒரு முறை லாரி மூலம் குடிநீர் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**196—**

## புதிய ஆழ்குழாய்க் கிணறு

**வினா எண் 5065—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, சத்திரம், சிவநந்திபுரம், கோரணப்பட்டு பகுதிகளில் புதிய ஆழ்குழாய்க் கிணறு அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, குறிஞ்சிப்பாடி ஒன்றியம், கோரணப்பட்டு ஊராட்சியைச் சார்ந்த சத்திரம், சிவநந்திபுரம் மற்றும் கோரணப்பட்டு ஆகிய பகுதிகளில் ஒவ்வொன்றிலும் தற்சமயம் 5,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டியின் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட மூன்று குடியிருப்புகளுக்கும் கூடுதல் குடிநீர் வசதி அளிப்பதற்காக, ராஜீவ்

காந்தி தேசிய குழுமம் மூலமாக மக்கள் பங்கேற்புடன்கூடிய குடிநீர்த் திட்டம் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. பயனாளிகளின் பங்கேற்புத் தொகை பெறப்பட்டவுடன் இக்குடியிருப்புகளுக்குப் புதிய குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்கள் நிறைவேற்றப்படும்.

**197—**

## குடிநீர் வசதி

**வினா எண் 5069—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, வடக்குத்து கிராமத்தில் ஆழ்கிணறு அமைத்து, குடிநீர் வசதி செய்து தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, குறிஞ்சிப்பாடி ஒன்றியம், வடக்குத்து ஊராட்சியைச் சார்ந்த வடக்குத்து குடியிருப்பில் தற்சமயம் 15,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. கூடுதல் குடிநீர் வசதிக்கு ராஜீவ் காந்தி தேசிய குடிநீர் மற்றும் சுகாதாரக் குழு மூலமாகக் கூடுதல் நீராதாரத்துடன், புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது. பயனாளிகளின் பங்கேற்புத் தொகை பெறப்பட்டவுடன் புதிய குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

**198—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 5077—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகராட்சி, சீராங்குப்பத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) கெடிலம் ஆற்றின் அருகில் அமைந்துள்ள, பண்ருட்டி நகராட்சியைச் சார்ந்த தனிக்குடியிருப்புப் பகுதியான சீராங்குப்பம் பகுதிக்கு நகராட்சியின் கோரிக்கையின்படி நாள் ஒன்றுக்கு, நபர் ஒருவருக்கு 90 லிட்டர் வழங்கும் வகையில் ரூ.345.93 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, நகராட்சி மன்றத் தீர்மானமும், நிலைச் சான்றிதழும் கேட்கப்பட்டது. இந்த மதிப்பீட்டில், சீராங்குப்பம் இருளர் குப்பம் பகுதிகளுக்கு ஏற்கெனவே உள்ள நீர் ஆதாரத்தை உபயோகித்து 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து, குடிநீர் வசதி செய்து தர வழிவகை செய்யப்பட்டிருந்தது. ஆனால் நகராட்சி இத்திட்டத்திற்கு இசைவு அளிக்காததால், இத்திட்டம் தற்போது எடுத்துக்கொள்ளப்படவில்லை. இப்பகுதிக்குக் குடிநீர்ப் பிரச்சினை இல்லை என்பதால், சீராங்குப்பத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தருவது குறித்துப் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**199—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 5084—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, கஞ்சமநாதன்பேட்டையில் நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, குறிஞ்சிப்பாடி ஒன்றியம், கஞ்சமநாதன்பேட்டை ஊராட்சியைச் சார்ந்த கஞ்சமநாதன்பேட்டை குடியிருப்பில் தற்சமயம் 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட குடியிருப்பிற்கான கூடுதல் குடிநீர் வசதிக்கு ராஜீவ் காந்தி தேசிய குடிநீர்க் குழுமம் மூலமாக மக்களின் பங்கேற்புடன் கூடிய குடிநீர் அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. பயனாளிகளின் பங்கேற்புத் தொகை பெறப்பட்டவுடன், புதிய மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**200—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 5085—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, மானடிக்குப்பம் ஊராட்சியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதியில் மானடிக்குப்பம் என்ற ஊராட்சி ஏதும் இல்லை. இருப்பினும், பண்ருட்டி ஒன்றியத்தைச் சார்ந்த, வல்லம் ஊராட்சி மானடிக்குப்பம் குடியிருப்பில் தற்போது 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் தொட்டியின் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. குடிநீர் போதுமான அளவு கிடைக்காத பகுதிகளுக்கு அந்தப் பகுதியில் ஓர் ஆழ்துளைக் கிணறும், மின் இறைப்பான், மின் இறைப்பான் அறை, 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும் அமைக்க பொது மக்கள் பங்கேற்புடன்கூடிய ராஜீவ் காந்தி தேசிய குடிநீர்த் திட்டத்தின்கீழ் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முதல்



கட்டமாக ஆழ்துளைக் குழாய்க் கிணறும், மின் இறைப்பான் மற்றும் மின் இறைப்பான் அறை கொண்ட திட்டம் செயல்பாட்டில் உள்ளது. கூடுதல் குடிநீர் வசதிக்குப் பயனாளிகளின் பங்கேற்புத் தொகை முழுமையாகப் பெறப்பட்டவுடன் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தரப்படும்.

# பட்டியல் 13*

**1—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 9317—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியம், முல்லையூர் கிராமத்திற்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பரம்பலூர் மாவட்டம், செந்துறை ஊராட்சி ஒன்றியம், முல்லையூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**2—**

## கட்டட வசதி

**வினா எண் 9340—திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் அரசு மருத்துவமனைக்குக் கூடுதலாக 200 படுக்கைகள் கொண்ட கட்டடம் கட்டி வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

---

*இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று.

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

திருப்பூர், அரசு மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் சிகிச்சை பெறும் சராசரி உள்நோயாளிகளின் எண்ணிக்கைக்குக் கூடுதலாகவே தற்போது படுக்கை வசதி உள்ளது. எனவே, மேலும் படுக்கை வசதி செய்து தருவதற்கான கட்டடம் கட்டும் திட்டம் அரசிடம் இல்லை.

3—

## முதன்மையான ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 9350—திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் வட்டம், பெருமாநல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை 32 படுக்கை வசதிகள் கொண்ட முதன்மையான ஆரம்ப சுகாதார நிலையமாக உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

திருப்பூர் சுகாதார மாவட்டம், திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் செயல்படும் பெருமாநல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தினை 30 படுக்கை வசதிகொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தும் திட்டம் ஏதும் இல்லை.

4—

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 9427—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், 52. புதுக்குடி ஊராட்சிக்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?



விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

திருவாரூர் மாவட்டம், குடவாசல் ஊராட்சி ஒன்றியம், 52. புதுக்குடி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

5—

## புதிய ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 9432—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், நெம்மேலி ஊராட்சிக்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத்தர அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

திருவாரூர் மாவட்டம், குடவாசல் ஊராட்சி ஒன்றியம், நெம்மேலி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

6—

## "பெரியரல்" மருத்துவமனை

**வினா எண் 9477—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில் சென்னைப் புறநகர் மருத்துவமனையான "பெரியரல்" மருத்துவமனையை நவீனப்படுத்தி மருத்துவக் கருவிகள் மற்றும் மருத்துவர்களை அதிகப்படுத்தி மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

இராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில் சென்னைப் புறநகர் மருத்துவமனையான "பெரிபரல்" மருத்துவமனையை நவீனப்படுத்தவோ, மருத்துவக் கருவிகள் மற்றும் மருத்துவர்களை அதிகப்படுத்தவோ திட்டம் ஏதும் இல்லை.

7—

## புதிய ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 9896அ—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, கந்தம்பாளையம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், பரமத்தி ஊராட்சி ஒன்றியம், கந்தம்பாளையம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

8—

## சித்த மருத்துவக் கல்லூரி

**வினா எண் 9962—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டத்தில் சித்த மருத்துவக் கல்லூரி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?



விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டத்தில் அரசு சித்த மருத்துவக் கல்லூரி தொடங்கும் செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

9—

## அரசு மருத்துவமனை

**வினா எண் 16132—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் மாவட்டத் தலைநகரங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளில் முதியோர் வார்டு என ஒன்றை அமைத்து மருத்துவம் பார்க்க அரசு வழிவகை செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

கடலூர், நாகப்பட்டினம், தர்மபுரி, ஈரோடு மற்றும் இராமநாதபுரம் மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் முதியோர் பிரிவு தனியாக அமைக்க ஒப்பளிப்பு செய்யப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

10—

## கூட்டுறவுச் சங்கம்

**வினா எண் 2112—திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரத்தில் புதிதாக வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஒட்டன்சத்திரத்தில் புதிதாக வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

11—

## வேளாண்மைக் கூட்டுறவு வங்கி

**வினா எண் 9210—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, ஆரூர்பட்டி கிராமத்தில் உள்ள தரிசு, புறம்போக்கு நிலத்தில் ஆரூர்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குப் புதிதாக கட்டடம் கட்ட அரசு நிலம் ஒதுக்கித் தருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

தாரமங்கலம் தொகுதி, ஆரூர்பட்டி கிராமத்தில் தரிசு, புறம்போக்கு நிலத்தினைத் தெரிவு செய்து ஆரூர்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கான அடி மனை வேண்டி நில ஆர்ஜிதம் செய்யவோ அல்லது கிரயம் பெறவோ இதுகாறும் ஆரூர்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலிருந்து முன்மொழிவுகள் ஏதும் அரசுக்கு வரவில்லை.

12—

## மண்ணெண்ணெய் வழங்கும் நிலையம்

**வினா எண் 9248—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



திருநெல்வேலி மாவட்டத்தில் எத்தனை இடங்களில் புதிதாக மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் அமைக்க அரசு உத்தேசித்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

**திருநெல்வேலி மண்டலத்தில் தற்போது 10 மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்கள் செயல்படுகின்றன. மேலும், அம்பாசமுத்திரம் வட்டத்தில் கல்லிடைக்குறிச்சி மற்றும் சேரன்மகாதேவி ஆகிய இடங்களில் மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்கள் அமைக்க நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு, மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்களுக்குக் கட்டுமானப் பணி நடைபெற்று வருகின்றது.**

13—

## நியாய விலைக் கிளைக் கடை

**வினா எண் 9253—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கோட்டைக் கருங்குளம் ஊராட்சி, வடிவம்மன்பட்டி கிராமத்தில் நியாய விலைக் கிளைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கோட்டைக் கருங்குளம் நியாய விலைக் கடையில் 498 குடும்ப அட்டைகள் உள்ளன. பகுதி நேரக் கடை கோரும் வடிவம்மன்பட்டிக்கும், தாய்க் கடையான கோட்டைக் கருங்குளம் நியாய விலைக் கடைக்கும் இடையே உள்ள தொலைவு 1.5 கி.மீ. ஆகும். பகுதி நேரக் கடை பிரிக்கப்பட்ட பின்னர் தாய்க் கடையில் 500 குடும்ப அட்டைகளுக்குக் குறையாமல் இருக்க வேண்டும். மற்றும் தாய்க் கடைக்கும் பகுதி நேரக் கடைக்கும் இடையே குறைந்தது 2 கி.மீ. தொலைவு இருக்க வேண்டும் என்கிற வரையறைகள் பொருந்தாததால் வடிவம்மன்பட்டியில் பகுதி நேரக் கடை திறக்க வாய்ப்பு இல்லை.

14—

## வங்கிக் கடன்

**வினா எண் 9780—திரு. கே.கே. உமாதேவன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிராமங்களில் வங்கிக் கடன் மூலம் சமையல் எரிவாயு இணைப்புப் பெற்றவர்களுக்கும், விளக்கு எரிக்கப் பயன்படுத்தும் வகையில் நியாய விலைக் கடைகள் மூலம் மண்ணெண்ணெய் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

கிராமங்களில் வங்கிக் கடன் மூலம் சமையல் எரிவாயு இணைப்புப் பெற்றவர்களுக்கு, விளக்கு எரிக்கப் பயன்படுத்தும் வகையில், நியாய விலைக் கடைகள் மூலம் மண்ணெண்ணெய் வழங்க வழிவகை இல்லை.

15—

## கிளை அங்காடி

**வினா எண் 11025—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிராமங்களில் இயங்கும் கூட்டுறவு அங்காடிகளில் 2 கிலோ மீட்டருக்கும் அதிக தூரம் உள்ள கிராமங்களுக்கு, குடும்ப அட்டையின் எண்ணிக்கையைக் கணக்கில் கொள்ளாமல் கிளை அங்காடி திறக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

இத்தகைய கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



16—

## புதிய குடும்ப அட்டைகள்

**வினா எண் 11104—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் குடும்ப அட்டைகள் கோரி விண்ணப்பித்துள்ளவர்களுக்கு புதிய குடும்ப அட்டைகள் விரைவாக வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் குடும்ப அட்டைகள் கோரிப் பெறப்படும் மனுக்கள் உடனுக்குடன் விசாரணை செய்யப்பட்டு, தகுதியின் அடிப்படையில் மனுக்களுக்குக் குடும்ப அட்டைகள் அச்சிடப்பட்டு உடனடியாக வழங்கப்பட்டு வருகின்றன.

17—

## அரிசி வழங்கும் திட்டம்

**வினா எண் 13621—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடும்ப அட்டைதாரர்களுக்கு, மிகவும் ஏழ்மை நிலையிலுள்ள குடும்பங்களுக்கு மாதம் ஒன்றுக்குக் குறைந்தபட்சம் 25 கிலோ அரிசி வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மைய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள அந்தியோதயா அன்னயோஜனா திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டிற்கு ஒதுக்கீடு

செய்யப்பட்டுள்ள வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள 7.45 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதம் ஒன்றுக்கு கிலோ ரூ.3.00 என்ற விலையில் 25 கிலோ அரிசி டிசம்பர் 2001 முதல் வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

18—

## தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி

**வினா எண் 13836—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம் பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியைப் பிரித்து சத்தியநாதபுரம் ஊராட்சி, மோட்டுப்பட்டியில் ஒரு புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி துவங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

சத்தியநாதபுரம் ஊராட்சி, மோட்டுப்பட்டியில் ஒரு புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி துவங்க சாத்தியக்கூறுகள் இல்லை.

19—

## மண்ணெண்ணெய்க் கிடங்குகள்

**வினா எண் 18598—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டம், குன்னூர், கோத்தகிரி ஆகிய இடங்களில் நியாய விலைக் கடைகளுக்கு விநியோகம் செய்திட மண்ணெண்ணெய்க் கிடங்குகள் அமைத்திட அரசு முன்வருமா?



விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

நீலகிரி மாவட்டம், குன்னூரில் ஒரு மண்ணெண்ணெய் மொத்த வணிகரும், கோத்தகிரியில் ஒரு மண்ணெண்ணெய் மொத்த வணிகரும் ஏற்கெனவே நியாய விலைக் கடைகளுக்கு மண்ணெண்ணெய் விநியோகம் செய்து வருகின்றனர். இவை தவிர, கூடுதலாக மண்ணெண்ணெய்க் கிடங்குகள் அமைத்திட அரசளவில் கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை.

20—

## மகளிர் கூட்டுறவு விற்பனைச் சங்கம்

**வினா எண் 20493—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரணாம்பட்டு தொகுதி, காலப்பேட்டையில் மகளிர் கூட்டுறவு விற்பனைச் சங்கக் கடை மற்றும் அலுவலகம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

தற்போது மேற்படி திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை."

21—

## வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 3—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை நகரத்தில் வீட்டுமனைப் பட்டா கேட்டு விண்ணப்பித்தவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்கள் அனைவருக்கும் வீட்டுமனைப் பட்டா வழங்க அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை நகரத்தில் இலவச வீட்டுமனைப் பட்டா கேட்டு 194 நபர்கள் விண்ணப்பித்துள்ளனர்.

(ஆ) இவர்களுக்குத் தகுதியின் அடிப்படையில் பட்டா வழங்கத் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

22—

## பட்டா வழங்கும் திட்டம்

**வினா எண் 191—திரு. எஸ். மகாலிங்கம்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசி தொகுதி, பொன்றாபுரம், செம்பாகவுண்டன் பாளையம், ராயம்பாளையம் ஆகிய கிராமங்களில் உள்ளவர்களுக்குப் பட்டா இதுவரை வழங்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், விரைவில் பட்டா வழங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம்.

23—

## பத்திரப் பதிவு அலுவலகம்

**வினா எண் 666—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதியில் வெள்ளிமேடு பேட்டையில் பத்திரப் பதிவு அலுவலகம் அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) செஞ்சி தொகுதியில் வெள்ளிமேடு பேட்டையில் புதிதாக சார் பதிவாளர் அலுவலகம் அமைக்கச் சாத்தியக்கூறு இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

24—

## விற்பனை நிலையங்கள்

**வினா எண் 2663—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒவ்வொரு மாவட்டத் தலைமையிடத்திலும், எழுதுபொருள் அச்சுத் துறையின் மூலம் வெளியிடப்படும் அரசு வெளியீடுகள் எளிதில் கிடைக்க விற்பனை நிலையங்கள் தொடங்க அரசு அனுமதி வழங்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) அரசிற்கு உத்தேசம் இல்லை.

(ஆ) தற்போது எழவில்லை.

25—

## இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 3291—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரி வட்டம், குயின் சோலை மற்றும் கணபதிபுரத்தில் புறம்போக்கு நிலத்தில் வசிக்கும் ஏழைகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**26—**

## கலைமகள் சபா

**வினா எண் 4808—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலைமகள் சபா என்ற நிறுவனம் பொது மக்களிடம் வசூலித்த தொகை எவ்வளவு என்று அரசு கண்டறிந்துள்ளது?

(ஆ) அத்தொகை பொது மக்களுக்கு மீண்டும் கிடைக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) கலைமகள் சபா என்ற நிறுவனம் பொது மக்களிடம் வசூலித்த தொகை ரூ. 120,46,94,154 எனக் கண்டறியப்பட்டு உள்ளது. உயர் நீதிமன்ற ஆணையின்படி கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டு வருகின்றன. தணிக்கைக்குப்பின்தான் அத்தொகையினை உறுதி செய்ய முடியும்.

(ஆ) இத்தொகையினை மீண்டும் பொது மக்களுக்கு அளிப்பதற்கான நடவடிக்கை உயர் நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்டுள்ள பராமரிப்பாளர்களால் எடுக்கப்பட்டு வருகிறது. கலைமகள் சபா உறுப்பினர்களிடமிருந்து வசூலித்த தொகையைத் திருப்பித்தர உயர் நீதிமன்றத்தினால் நியமிக்கப்பட்ட மூன்று பராமரிப்பாளர்களால் (Joint Receivers) சொத்துப் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதுவரை வில்லங்கம் இல்லாத வாகனங்கள், வீடியோ, ஆடியோ சாதனங்கள், கட்டுமானப் பொருட்கள் ஏலம் விடப்பட்டுவிட்டன. மற்ற அசையும், அசையாச் சொத்துக்களை ஏலம் விட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கலைமகள் சபாவின் அனைத்துச் சொத்துக்களையும் விற்பனை செய்த பின்னரே, அச்சபாவின் உறுப்பினர்களுக்கு (Prorata) விகிதாச்சாரத்தின் அடிப்படையில், தொகையினை வழங்க இயலும்.



**27—**

## இலவசப் பட்டா

**வினா எண் 5281—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை அருகே எலையமுத்தூர் ஊராட்சியைச் சேர்ந்த செல்வபுரத்தில் ஏழை மக்களுக்கு இலவசப் பட்டா வழங்கும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், உடுமலை வட்டம், எலையமுத்தூர் கிராமம், செல்வபுரம் பகுதியில் 15 நபர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுவிட்டது. இரு நபர்களுக்கு நிலக்கிரயம் வசூல் செய்து பட்டா வழங்கப்பட உள்ளது. க.ச. 417/3 நெடுஞ்சாலைப் புறம்போக்காக இருப்பதால் நத்தமாக மாற்றம் செய்ய நெடுஞ்சாலைத் துறையினர் ஆட்சேபனை தெரிவித்ததால், அப்பகுதியில் வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

**28—**

## அதிக அளவு மழை

**வினா எண் 6356—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் எந்த ஆண்டு அதிக அளவு மழை பெய்தது?

(ஆ) மழையின் அளவு ஆண்டுதோறும் குறைவதற்குக் காரணம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் 1996 ஆம் ஆண்டு பெய்த 1384.8 மி.மீ மழையே ஒரு வருடத்தில் மிக அதிகமாகப் பெய்த மழையாகப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. சில ஆண்டுகளில் மழை அதிகமாகவும், சில ஆண்டுகளில் மழை குறைவாகவும் மாறி, மாறிப் பெய்து வருகிறது. இது இயற்கையாக நிகழும் நிகழ்வாகும். எனவே ஆண்டுதோறும் மழையின் அளவு குறைந்து வருகிறது எனக் கருத இயலாது.

29—

## கரும்பு உற்பத்தி

**வினா எண் 255—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல், சேலம் மாவட்டங்களில், கடந்த 2000-2001 ஆம் ஆண்டில் எத்தனை ஏக்கரில் கரும்பு உற்பத்தி செய்யப்பட்டது?

(ஆ) அவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட கரும்பு அளவு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத்துறை அமைச்சர்:**

(அ) கடந்த 2000-2001 ஆம் ஆண்டில் நாமக்கல் மாவட்டத்தில் 0.109 இலட்சம் ஹெக்டேர் பரப்பிலும், சேலம் மாவட்டத்தில் 0.099 இலட்சம் ஹெக்டேர் பரப்பிலும் கரும்பு பயிர் செய்யப்பட்டது.

(ஆ) நாமக்கல் மாவட்டத்தில் 1.763 இலட்சம் மெட்ரிக் டன்னும், சேலம் மாவட்டத்தில் 0.930 இலட்சம் மெட்ரிக் டன்னும் வெல்லமாகக் கரும்பு உற்பத்தி செய்யப்பட்டது.

30—

## நில மேம்பாட்டுத் திட்டம்

**வினா எண் 258—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) எடப்பாடி தொகுதியில் சமுதாய தரிசு நில மேம்பாட்டுத் திட்டப் பணிகளுக்கு 2000-2001 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி எவ்வளவு?

(ஆ) அதில் செலவிடப்பட்டது எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி தொகுதியில் சமுதாய தரிசுநில மேம்பாட்டுத் திட்டப் பணிகளுக்கு 2000-2001 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

(ஆ) வினா எழவில்லை.

31—

## சர்க்கரைக் கட்டுமானம்

**வினா எண் 411—திருமதி நளினி மனோகரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பிழிதிறனைக் கணக்கில் கொள்ளாமல் கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ.1,000/- வழங்க அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

கரும்பிற்கு விலை அறிவிக்கும்போது கரும்பின் சர்க்கரைக் கட்டுமானத்தின் அடிப்படையிலேயே மத்திய அரசு சட்டபூர்வ விலை அறிவித்து வருகிறது. கரும்புச் சாகுபடிச் செலவுகள் கூடுதலாகி வரும் காரணத்தாலும், கரும்புக் கட்டுப்பாட்டுச் சட்டம் 1966, பிரிவு 5 ஏ-ன்கீழ் மாநில கரும்புக்குக் கூடுதல் விலை அறிவிக்கத் தாமதமாவதாலும் மாநில அரசும் சர்க்கரைக் கட்டுமானத்தை (பிழிதிறன்) அடிப்படையாக வைத்து பரிந்துரை விலைகள் அறிவித்து வருகிறது. 8.5% சர்க்கரைக் கட்டுமானத்தை அடிப்படையாகக் கொண்டு மாநில அரசு பரிந்துரை விலை நிர்ணயம் செய்த வகையில் கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளுக்கு இதுவரை ஒட்டுமொத்த நட்டம் (cumulative loss) ரூ.815.17 கோடி ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் பிழிதிறனைக்

கணக்கில் கொள்ளாமல் ஒரு டன் கரும்புக்கு ரூ.1,000/- வழங்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

32—

**பணம் பட்டுவாடா**

**வினா எண் 636—திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டத்திலுள்ள கரும்பு விவசாயிகளுக்கு ஒரே தவணையில் பணம் பட்டுவாடா செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

ஆலையின் நிதி நிலைமை மிகவும் நலிவடைந்துள்ளதால், தற்சமயம் ஒரே தவணையில் பணம் பட்டுவாடாச் செய்யச் சாத்தியக்கூறுகள் இல்லை.

33—

**தேங்காய் ஏற்றுமதி செய்தல்**

**வினா எண் 897—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் தேங்காய் விலை வீழ்ச்சி அடைந்துள்ளதைத் தொடர்ந்து தேங்காய் ஏற்றுமதி செய்திட மாநில அரசு முயற்சிகள் மேற்கொள்ளுமா?

(ஆ) மாநில அரசே கொள்முதல் செய்ய முன்வருமா?

(இ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மாநில அரசு நேரடியாகத் தேங்காய்களை ஏற்றுமதி செய்யும் திட்டம் ஏதுமில்லை. தமிழ்நாடு முழுவதும் தேங்காய் விலை வீழ்ச்சி அடைந்துள்ளதால் மத்திய அரசு தேசிய கூட்டுறவு விற்பனை இணையம் (நேஃபட்) மூலம் குறைந்த அளவு ஆதரவு விலையில் கொப்பரைத் தேங்காயினைக் கொள்முதல் செய்து வருகிறது. மாநிலத்தில் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் (டான்ஃபெட்) கொப்பரைத் தேங்காய் கொள்முதலில் ஒருங்கிணைப்பு முகவராகச் செயல்பட்டு, கொப்பரைத் தேங்காயினைக் கொள்முதல் செய்கிறது. 2001 ஆம் ஆண்டில் பந்து கொப்பரைத் தேங்காய்க்கு ஒரு குவிண்டாலுக்கு ரூ.3,550-ம், அரவைக் கொப்பரைத் தேங்காய்க்கு ஒரு குவிண்டாலுக்கு ரூ.3,300-ம் குறைந்த அளவு ஆதரவு விலையாக மத்திய அரசு நிர்ணயித்துள்ளது.



(ஆ) மாநில அரசு தேங்காய்களைக் கொள்முதல் செய்யும் திட்டம் எதுவுமில்லை.

(இ) வினா எழவில்லை.

34—

**தக்காளிப் பவுடர் தொழிற்சாலை**

**வினா எண் 979—திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தக்காளி அதிகமாக உற்பத்தியாகும் ஒட்டன்சத்திரத்தில் தக்காளிப் பவுடர் தொழிற்சாலை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தக்காளி அதிகமாக உற்பத்தியாகும் ஒட்டன்சத்திரத்தில் தக்காளிப் பவுடர் தொழிற்சாலை அமைக்கத் திட்டம் ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

35—

**ஆயில் இன்ஜின்கள்**

**வினா எண் 1301—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் விவசாய இலவச மின் இணைப்புக் கோரிக் காத்திருப்பவர்களுக்கு ஆயில் இன்ஜின்கள் மானிய விலையில் கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

விவசாயிகளுக்கு மானிய விலையில் ஆயில் இன்ஜின்கள் வழங்கும் திட்டம் ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

36—

## வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம்

**வினா எண் 2115—திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதியில், ஒட்டன்சத்திரத்தில் வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இல்லை.

37—

## விவசாயப் பயிர்ப் பாதுகாப்புத் திட்டம்

**வினா எண் 2119—திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயப் பயிர்ப் பாதுகாப்புத் திட்டத்தினைச் செயல்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): ஒவ்வொரு ஆண்டும் பயிர்ப் பாதுகாப்புத் திட்டம்/பயிர்க் காப்புறுதித் (பாதுகாப்பு) திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



38—

## சிறப்புச் சலுகை

**வினா எண் 2120—திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மூன்று போகம் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு அரசு சிறப்புச் சலுகை தர முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எந்த வகையில் சலுகை தரப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): வேளாண்மை உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக மானியச் சலுகைகள் பல்வேறு திட்டங்களின்கீழ் அரசால் வழங்கப்படுகின்றன. மேலும், அதிக விளைச்சலை ஊக்குவிக்க பரிசுத் திட்டங்களும் அரசால் செயல்படுத்தப்படுகின்றன. எனவே, மூன்று போகம் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கென்று தனியாகச் சிறப்புச் சலுகை ஏதும் அரசால் வழங்கப்படுவதில்லை.

39—

## நெல் விலை நிர்ணயம்

**வினா எண் 2140—திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெல்லுக்கு விலை நிர்ணயம் செய்வதுபோல் குச்சிக்கிழங்குக்கும் அரசு விலை நிர்ணயம் செய்ய முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

நெல்லுக்கு விலை நிர்ணயம் செய்வதுபோல் குச்சிக்கிழங்குக்கும் விலை நிர்ணயம் செய்யக் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

40— [2002 மே 10

## குளிரூட்டும் அறை அமைக்கும் திட்டம்

**வினா எண் 2308—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், காவல்கிணறு காய், கனி சந்தையில் காய், கனிகளுக்கான குளிரூட்டும் அறை அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

இல்லை.

41—

## வீரிய ரக விதைகள்

**வினா எண் 2933—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெளிநாட்டிலிருந்து காப்புரிமை வாங்கியுள்ள வீரிய ரக விதைகள் இந்தியாவில் விற்பனை செய்யப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், என்ன ரக வீரிய விதைகள் விற்பனைக்கு வந்துள்ளன?

(இ) அவ்வித விற்பனையால் அரசுக்குக் கிடைத்த வருவாய் எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) வெளிநாட்டிலிருந்து காப்புரிமை பெற்ற வீரிய ரக விதைகள், தமிழ்நாட்டில் வேளாண்மைத் துறை மூலமாக விற்பனை செய்யப்படுவதில்லை. இந்தியாவில் விற்பனை செய்யப்படும் விவரம் குறித்துத் தகவல்கள் ஏதும் இத்துறையிடம் இல்லை.



2002 மே 10]

(ஆ) வெளிநாட்டிலிருந்து காப்புரிமை வாங்கிய வீரிய ரக விதைகள் தனியார் மூலம் விற்பனை செய்வது குறித்து, தனியார் வியாபாரிகளிடமிருந்து விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை.

(இ) வினா எழவில்லை.

42—

## வேளாண்மைப் பொறியியல் துறை

**வினா எண் 2941—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் நெல் நடவு இயந்திரங்கள் விவசாயிகளுக்கு வாடகைக்கு விடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், சேலம் மாவட்டத்திற்கு அவ்வகை இயந்திரம் வழங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

43—

## வேளாண்மைப் பல்கலைக்கழகம்

**வினா எண் 2942— திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உருவாக்கப்படும் தொழில்நுட்ப இயந்திரங்கள் வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்படுகின்றனவா?

(ஆ) ஆம் எனில், அதன் மூலம் பல்கலைக்கழக நிர்வாகத்திற்குக் கிடைத்த இலாபம் என்ன?

(இ) அனுப்பப்பட்ட இயந்திரங்கள் எத்தனை?

(ஈ) விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். அனுப்பப்படுகிறது.

(ஆ) இதில் இலாப நோக்கம் ஏதுமில்லை.

(இ) 18 வகையான வேளாண்மை இயந்திரங்கள் மற்றும் வேளாண்மைக் கருவிகள் அனுப்பப்பட்டுள்ளன.

(ஈ) கேரளம், உத்திரப்பிரதேசம், ஆந்திரம், கர்நாடகம், ஓரிஸ்ஸா, மத்தியப்பிரதேசம், மேற்கு வங்காளம், அசாம், இராஜஸ்தான், மகாராஷ்டிரம் ஆகிய பிற மாநிலங்களுக்கும், நேபாளம் முதலிய அண்டை நாடுகளுக்கும், அந்தமான் முதலிய யூனியன் பகுதிகளுக்கும் 18 வகையான வேளாண்மை இயந்திரங்கள் மற்றும் வேளாண் கருவிகள் அனுப்பப்பட்டுள்ளன. நெல் விதைக்கும் கருவி, நிலக்கடலைக் காய் பிரித்தெடுக்கும் கருவி மற்றும் சாய்வு உருளை களை எடுக்கும் கருவிகள், பவர் டில்லர்களின் மூலம் குழி தோண்டும் கருவி மற்றும் நீர் இறைக்கும் கருவிகள் போன்றவை அனுப்பப்பட்ட முக்கியக் கருவிகளாகும்.

44—

## புல் விதைகள் மற்றும் கரணைகள்

**வினா எண் 3052—திரு. ஸா. சந்தானம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்க உறுப்பினர்களின் சொந்த நிலத்தில் புல் வளர்ப்பதற்குத் தேவையான புல் விதைகள் மற்றும் கரணைகள் இலவசமாக வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தற்போது அரசிடம் வேளாண் துறை மூலம் தீவனப் புல் மற்றும் கரணைகள், புல் விதைகள் இலவசமாக வழங்குவதற்குத் திட்டம் ஏதும் நடைமுறையில் இல்லை.



45—

## வேளாண் கல்லூரி

**வினா எண் 3703—திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பையூரிலுள்ள வேளாண்மைப் பல்கலைக்கழக மண்டல ஆராய்ச்சி நிலையத்தில் வேளாண் கல்லூரி தொடங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

இல்லை.

46—

## கால்சியம் அமோனியம் நைட்ரேட் உரம்

**வினா எண் 3713—திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கால்சியம் அமோனியம் நைட்ரேட் உரம் கிடைக்காமல் விவசாயிகள் கூடுதல் விலை கொடுத்து வாங்கும் நிலையைப் போக்கிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

கால்சியம் அமோனியம் நைட்ரேட் உரம் கட்டுப்பாடு நீக்கம் செய்யப்பட்ட உரமாக இருப்பினும், இவ்வுரத்தின் அதிகபட்ச விலையை மைய அரசோ அல்லது மாநில அரசோ நிர்ணயம் செய்வதில்லை. இவ்வுரத்தினை உற்பத்தி செய்து விநியோகம் செய்யும் நிறுவனமே அதிகபட்ச விலையை நிர்ணயம் செய்கிறது. இந்த உரத்தைப் பஞ்சாப் மாநிலத்திலிருந்து தமிழ்நாட்டிற்குக் கொண்டு வந்து விற்பனை செய்வதால், போக்குவரத்துச் செலவும் சேர்ந்து டன் ஒன்றுக்கு ரூ.7,800 வரை விற்பனை செய்யப்படுகிறது. இவ்வுரத்தினைப் பஞ்சாப் மாநிலத்தில் உற்பத்தி செய்து தமிழ்நாட்டில் விநியோகிக்கும் நிறுவனம் "நேஷனல் ஃபெர்டிலைசர்ஸ் லிமிடெட்" ஆகும்.

தேவைப்படும் மாவட்டங்களுக்கு, பருவத்திற்கு ஏற்ப இந்நிறுவனத்தின் மூலம் உரங்கள் விநியோகம் மேற்கொள்ள வேளாண்மைத் துறை நடவடிக்கை எடுத்து வருகிறது.

47—

**உழவர் பயிற்சி நிலையங்கள்**

**வினா எண் 3780—திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விவசாய நிலங்களையும், விளைபொருட்களையும் பாழ்படுத்தும் எலி, அந்து போன்ற உயிரிகளை அழிக்க விவசாயிகளுக்கு ஏதேனும் பயிற்சி அளிக்கப்படுகிறதா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தமிழக அரசின் வேளாண் துறையின்கீழ் இயங்கிவரும் உழவர் பயிற்சி நிலையங்கள் மூலமாகப் பல்வேறு பயிர் உற்பத்தித் தொழில் நுட்பங்கள் பற்றிய பயிற்சிகளுடன், எலி, அந்துப்பூச்சி ஒழிப்பு பற்றிய பயிற்சிகளும் விவசாயிகளுக்கு அளிக்கப்படுகின்றன.

48—

**உப பயிர் வகைகள்**

**வினா எண் 3781—திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பயறு, உளுந்து, காராமணி போன்ற உப பயிர் வகைகளை அரசு நேரடிக் கொள்முதல் நிலையங்கள் மூலம் கொள்முதல் செய்கிறதா?

(ஆ) ஆம் எனில், ஆண்டு ஒன்றுக்குச் செய்யப்படும் கொள்முதல் அளவு யாது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.



49—

**உயர் ரக பருத்தி ரகங்கள்**

**வினா எண் 3783—திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உயர் ரக பருத்தி ரகங்கள் பற்றி விவசாயிகள் அறியவும், அவற்றைப் பயிரிடவும் அரசு மேற்கொண்டுள்ள முயற்சி யாது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

உயர் ரக பருத்தி பற்றி விவசாயிகள் அறிந்து பயிரிட மாநில அளவிலும், மத்திய அரசு அளவிலும் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

50—

**வேளாண் இடுபொருட்கள் விலை**

**வினா எண் 3784—திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேளாண் இடுபொருட்கள் விலையைக் கட்டுப்பாட்டில் வைக்க அரசு மேற்கொண்டுள்ள முயற்சி என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

வேளாண் துறை மூலம் வழங்கப்படும் நெல் மற்றும் சிறு தானிய விதைகளுக்கு அரசு ஆண்டுதோறும் நிர்ணயிக்கும் விலையில் (அரசு விலைக் கொள்கையின்படி) விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

விலைக் கட்டுப்பாடு உள்ள மற்றும் கட்டுப்பாடு நீக்கம் செய்யப்பட்ட உரங்களுக்கு மைய அரசே அதிகபட்ச விலையை நிர்ணயம் செய்து அவ்வப்போது மாநில அரசுகளுக்கு அறிவிக்கின்றது.

51—

## விவசாயிகள் உயர்மட்டக் குழு

**வினா எண் 3814—திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக விவசாயிகளின் குறை தீர்க்க மீண்டும் மாநில அளவிலான விவசாயிகள் உயர்மட்டக் குழுவை உருவாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) விவசாயிகளின் உயர்மட்டக் குழு உருவாக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

52—

## ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்புத் திட்டம்

**வினா எண் 3902—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவிரிப் படுகை விவசாயிகள் பெரும் வறட்சி, வெள்ளத்தால் பாதிக்கப்படும்போது ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்புத் (இன்சூரன்ஸ் திட்டம்) திட்டத்தினை அரசு அமல்படுத்துமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம் 2000 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் அமல்படுத்தப்பட்டுள்ளது. எனவே, மேற்படி திட்டம் மூலம் காவிரிப் படுகை விவசாயிகளும் பெரும் வறட்சி மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்படும்போது பயனடையலாம். நடப்பு ஆண்டிலும் காவிரிப் படுகையில் உள்ள வட்டாரங்கள் இத்திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளன.



53—

## வேளாண்மைப் பயிர்க் காப்பீடு

**வினா எண் 4063—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேசிய பயிர்ப் பாதுகாப்புறுதித் திட்டத்தைத் தமிழ்நாட்டில் எப்பொழுது முதல் நடைமுறைப்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தேசிய வேளாண்மைப் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தைக் காரிப் பருவம் 2001 முதல் தமிழக அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது.

54—

## விதைப் பண்ணை

**வினா எண் 4735—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாகளுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியில் அரசு விதைப் பண்ணை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

55—

## விதைச் சுத்திகரிப்பு நிலையம்

**வினா எண் 4742—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியில் விதைச் சுத்திகரிப்பு நிலையம் (Seed Processing Unit) அமைக்கத் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

56—

## விவசாய நிலங்கள்

**வினா எண் 4866—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் விவசாய நிலங்களில் வீடுகள் கட்டுவது தடை செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவசாய நிலங்களின் பரப்பை அதிகரிக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் விவசாய நிலங்களில் வீடு கட்டுவது முன்பு தடை செய்யப்பட்டிருந்தது. அத்தடையாணைகள் உயர் நீதிமன்றத்தால் செல்லாதவை எனத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதையடுத்து, தக்க சட்டத் திருத்தங்களைக் கொண்டுவருவது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

(ஆ) தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தினைச் செயல்படுத்துவதன் மூலம் விவசாய நிலங்களின் பரப்பு அதிகரிக்கப்பட்டு வருகிறது.

57—

## தனித் திட்டம்

**வினா எண் 4906—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



குறுகிய காலத்தில் வறட்சியைத் தாங்கி 100 நாட்களில் நெல் மகசூல் தரக்கூடிய பயிர் வகையைப் பெருக்க விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கும் திட்டம் அரசிடம் ஏதேனும் இருக்கிறதா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

குறுகிய காலத்தில் வறட்சியைத் தாங்கி 100 நாட்களில் நெல் மகசூல் தரக்கூடிய பயிர் வகையைப் பெருக்க விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கும் தனித்திட்டம் அரசிடம் ஏதும் இல்லை.

58—

## டீசல் மானிய விலை

**வினா எண் 5113—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயத்தை ஊக்குவிக்க விவசாயிகள் உபயோகிக்கும் டீசலினை மானிய விலையில் கொடுக்கும் திட்டம் அரசு நடவடிக்கையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடைமுறைக்கு வரும் என அரசு தெரிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

59—

## விதைப் பொருள்

**வினா எண் 5425—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, மாதானம் பகுதியில் விவசாய விதைப் பொருள் கிடங்கு அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேளாண்மை விரிவாக்க மையம் புதிதாக ஏற்படுத்துதல் தொடர்பாக அரசு வரவு-செலவுத் திட்டத்தில் சேர்க்கப்படாத புதிய திட்டங்களுக்கு இந்த நிதியாண்டில் ஒப்புதல் அளிக்கப்பட மாட்டாது என்று தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், மாதானம் கிராமத்தில் புதிதாக விவசாய விதைப் பொருள் கிடங்கு (வேளாண்மை விரிவாக்க மையம்) தற்போது அமைக்க வாய்ப்பில்லை.

60—

## இயந்திர டெப்போ

**வினா எண் 5707—திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசுக் கட்டணத்தில் டிராக்டர் முதலான விவசாய உபகரணங்கள் பெற திருப்பூர், பல்லடம், தாராபுரம் போன்ற நகரங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளதைத் தவிர்க்க, பொங்கலூர் தொகுதியில் மையப் பகுதியில் அரசு விவசாய இயந்திர டெப்போ அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

பொங்கலூர், வருவாய்க் கோட்டத்தின் தலைமையிடமாக இல்லாததாலும், பொருளாதார ரீதியாகச் சாத்தியமில்லாததாலும் பொங்கலூர் மையப் பகுதியில் விவசாய இயந்திர டெப்போ அமைக்க வாய்ப்பில்லை.

61—

## சிறப்புத் திட்டம்

**வினா எண் 5805—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) மூலிகைச் செடிகளை வணிக ரீதியில் சாகுபடி செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் விவசாயிகள் பயன்பெற சிறப்புத் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

62—

## விவசாயத் திட்டங்கள்

**வினா எண் 5834—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாய விரிவாக்க அலுவலர்கள் விவசாயம் சம்பந்தமாக அரசின் திட்டங்கள் மற்றும் மானியம் ஆகியவற்றை விவசாயிகளுக்குத் தெரியப்படுத்த உரிய நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசிடமிருந்து பெறப்பட்ட திட்டங்கள் மற்றும் அரசாணையும், மானிய விவரமும், உடனடியாக மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டு, வேளாண்மை உதவி அலுவலர்கள் மற்றும் வேளாண்மை அலுவலர்கள் தங்கள் இரு வாரப் பயிற்சியின்போது கிராம விவசாயிகளிடம் அரசின் விவசாயத் திட்டங்கள் மற்றும் மானிய விவரங்களைப் பற்றித் தெரிவித்து வருகிறார்கள்.

63—

## விவசாய நிலங்கள்

**வினா எண் 5839—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாய நிலங்களில் வீடுகள் கட்டப்படுவது குறித்து அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசிடம் என்ன திட்டம் உள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நன்செய் நிலங்களை வீட்டுமனைகளாக மாற்றுவதைக் கட்டுப்படுத்தும் அரசாணைகள் உயர் நீதிமன்றத்தினால் செல்லாதவையாக்கப்பட்டுத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதால், இதுகுறித்து சட்டத் திருத்தம் கொண்டுவருவது அரசின் பரிசீலனையில் உள்ளது.

64—

## நிலங்களின் பரப்பு

**வினா எண் 5842—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் விவசாய நிலங்களின் பரப்பை அதிகரிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தில் 5 ஆண்டுகளில் 20 இலட்சம் எக்டர் சாகுபடிக்குக் கொண்டுவரத் திட்டம் வகுக்கப்பட்டு வருகிறது.



65—

## நவீன சாகுபடி

**வினா எண் 5872—திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விவசாய வேலைக்குக் கூலி ஆட்கள் கிடைப்பது அரிதாக உள்ளதால் நவீன சாகுபடி இயந்திரங்களைக் கண்டுபிடித்து விவசாயத்தைச் சீர்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

வேளாண்மையை நவீனமாக்கி விவசாயிகளின் வேலைகளை விரைந்து முடிப்பதற்கு ஏதுவாக, கோயம்புத்தூரிலுள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஆராய்ச்சி மேற்கொண்டு பல நவீன வேளாண் கருவிகளைக் கண்டுபிடித்து அறிமுகப்படுத்தியுள்ளது. தேவைக்கேற்ப இக்கருவிகளைப் பயன்படுத்தலாம்.

66—

## மண் ஆய்வு மையம்

**வினா எண் 5919—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழியில் விவசாய மண் ஆய்வு மையம் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் பெரும்பாலும் மாவட்டத் தலைநகரைத் தலைமையிடமாகக் கொண்டு மண் பரிசோதனை நிலையங்கள் 19 மையங்களில் இயங்கி வருகின்றன. தஞ்சாவூர் மாவட்டத்திற்கு ஆடுதுறையைத் தலைமையிடமாகக் கொண்டு மண் பரிசோதனை நிலையம் இயங்கி வருகின்றது. சீர்காழியில் விவசாய மண் ஆய்வு மையம் அமைக்கும் திட்டம் தற்பொழுது அரசிடம் இல்லை.

67—

## உலர் களங்கள்

**வினா எண் 5941—திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம், உடுமலைப்பேட்டை பகுதியில் உள்ள அமராவதி பழைய ஆயக்கட்டுப் பகுதியில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலமாக உலர்களங்கள் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

அமராவதி ஆயக்கட்டுப் பகுதியில் உள்ள மடத்துக்குளம் யூனியன், பாப்பான்குளம் பகுதியில் 1999-2000 ஆம் ஆண்டில் 400 ச.மீ. அளவு உள்ள உலர்களம் ரூ.1.75 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் அப்பகுதியில் உள்ள "காரத் தொழுவு" என்ற இடத்தில் உலர்களம் அமைக்கும் கருத்துரு ஆய்வில் உள்ளது.

68—

## தோட்டக்கலைப் பயிர்கள்

**வினா எண் 6001—திரு. மா.பெ. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தோட்டக்கலைப் பயிர்கள் பயிரிடுவதை ஊக்குவிக்க சொட்டு நீர்ப்பாசனத்திற்கு அதிக மானியம் அளிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், இதுகுறித்து வங்கிகள் மூலம் கடன் அதிக அளவில் வழங்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தோட்டக்கலைப் பயிர் வளர்ச்சியை மேம்படுத்தும் பொருட்டு மத்திய, மாநில நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் வேளாண்மையில் பிளாஸ்டிக் உபயோகம் என்ற திட்டத்தின்கீழ்



சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க சிறு விவசாயிகள், குறு விவசாயிகள், ஆதிதிராவிட விவசாயிகள், பழங்குடி விவசாயிகள் மற்றும் பெண் விவசாயிகளுக்கு ஒரு ஹெக்டேருக்கு ரூ.22,500-க்கு மிகாமல் மொத்தச் செலவில் 50%-ம், இதர விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு ரூ.16,000-க்கு மிகாமல் மொத்த செலவில் 35% மானியமும் தற்போது அரசால் வழங்கப்படுகிறது. அதிக விவசாயிகள் பயன்பெறும் வகையில் குடும்பத்தில் ஒரு நபருக்கு அதிகபட்சமாக 4 ஹெக்டேர் வரை இத்திட்டத்தில் சொட்டு நீர்ப்பாசனம் அமைத்துக் கொடுக்கப்படுகிறது. இதற்கு மேலும் அதிக மானியம் அளிக்கும் திட்டம் எதுவும் அரசிடம் இல்லை.

(ஆ) சொட்டு நீர்ப்பாசனம் அமைக்கும் செலவினத்தில் மானியம் வழங்கப்படுவதோடு எஞ்சியுள்ள மீதிச் செலவுத் தொகையினை விவசாயிகள் விரும்பினால் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் இருந்து கடன் உதவி பெற உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் குறித்து விவசாயிகள் பயன்பெறும் வகையில், நபார்டு வங்கி ஆலோசனையுடன் அனைத்து முன்னோடி வங்கிகளும் (Lead Banks) கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன.

69—

## இடுபொருட்கள்

**வினா எண் 6005—திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயிகளுக்கு இடுபொருட்கள் மானிய விலையில் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விவசாயிகளுக்கு சில இடுபொருட்கள் மானிய விலையில் கிடைக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

[2002 மே 10

70—

## மண் பரிசோதனை

**வினா எண் 6844—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாய நிலங்களை மண் பரிசோதனை செய்வது அவசியம் என்பதை விவசாயிகளுக்கு அறிய வைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) மண் பரிசோதனை செய்யும் முறை விவசாயிகளுக்கு எளிதில் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மண் பரிசோதனை மூலம் மண்ணில் உள்ள சத்துக்களின் அளவிற்கேற்ப உரமிடுவதால், இரசாயன உரங்களைச் சிக்கனமாக உபயோகிக்க இயலும் என்பதையும், அதே சமயம் அதிக மகசூலையும் அடைய முடியும் என்பதையும் விவசாயிகளுக்கு மண் பரிசோதனை விழிப்புணர்வு முகாம்கள் மூலமாகவும், விவசாயிகளின் நிலங்களிலேயே அமைக்கப்படும் நிருபணத் திடல்கள் மூலமாகவும், பயிற்சி மற்றும் துண்டுப் பிரசுரங்கள் மூலமாகவும், வேளாண்மைத் துறையில் உணர்த்தப்பட்டு வருகிறது.

(ஆ) மண் பரிசோதனை செய்யும் முறைகளை விளக்கும் பொருட்டு இத்தொழில்நுட்பம் சார்ந்த வெளியீடுகள், துண்டுப் பிரசுரங்கள், பயிற்சிகள் ஆகியவை விவசாயிகளுக்கு வேளாண்மைத் துறையில் வழங்கப்பட்டு வருகின்றன.

71—

## மூலிகைப் பயிர்கள்

**வினா எண் 6846—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2002 மே 10]

(அ) மூலிகைப் பயிரான தண்ணீர் விட்டான் கிழங்குப் பயிரினை அதிக அளவில் பயிரிட அரசு விவசாயிகளை ஊக்குவிக்குமா?

(ஆ) அதன் மருத்துவ முக்கியத்துவத்தை அரசு விளம்பரப்படுத்துமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். மத்திய, மாநில அரசு நிதி உதவியுடன் செயல்படும் ஒருங்கிணைந்த மூலிகை மற்றும் நறுமணப் பயிர்கள் அபிவிருத்தித் திட்டத்தில் பரப்பு விரிவாக்கத்தின்கீழ் ஒரு எக்டர் பரப்பில் மூலிகை மற்றும் நறுமணப் பயிர்கள் பயிரிடுவதற்கு ரூ.12500/- வரை மானியமும், செயல்விளக்கப் பாத்திகள் ஒவ்வொன்றும் 0.05 எக்டர் பரப்பில் அமைத்திட, பாத்தி ஒன்றுக்கு ரூ.1500/- மானியமும் வழங்கப்படுகிறது.

(ஆ) ஆம். தண்ணீர் விட்டான் கிழங்கின் மருத்துவக் குணங்கள் பற்றி களப் பணியாளர்கள் மூலம் விவசாயிகளுக்குத் தெரியப்படுத்தப்படுகிறது. செயல்விளக்கப் பாத்திகள் அமைப்பதன் மூலம் விவசாயிகள் இப்பயிர் பற்றி நன்கு அறிந்துகொள்ள வாய்ப்பளிக்கப்படுகிறது.

72—

## சிறப்புத் திட்டம்

**வினா எண் 6850—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலையில்லாத வேளாண்மைப் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பிற்காக அரசிடம் ஏதேனும் சிறப்புத் திட்டம் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஏதுமில்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

73—

## ஒன்றியம்

**வினா எண் 7871—திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒன்றியத்திற்கு ஒரு நடவு மிஷினும், ஒரு அறுவடை மிஷினும் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) கருத்துரு ஏதுமில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

74—

## உற்பத்தி கிராமங்கள்

**வினா எண் 7872—திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாதிரி விவசாய உற்பத்தி கிராமங்கள் தேர்ந்து எடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மாதிரி விவசாய உற்பத்தி கிராமங்கள் தேர்ந்தெடுக்கும் திட்டம் தற்பொழுது அரசிடம் ஏதுமில்லை.



75—

## விவசாயத் துறை

**வினா எண் 7880—திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயத் துறை மூலம் விவசாயிகளுக்குத் தேவையான உழவு டிராக்டர் (பவர் டில்லர், டிராக்டர்) நேரடியாக வாடகைக்கு விடத் திட்டம் இருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) வேளாண்மைப் பொறியியல் துறை மற்றும் தமிழ்நாடு வேளாண் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு இணையம் மூலம் ஏற்கெனவே பவர் டில்லர், டிராக்டர் வாடகைக்கு விடப்படுகின்றன.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

76—

## கரும்புச் சாகுபடி

**வினா எண் 7953—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருத்தாச்சலம் பகுதியில் பல கரும்புச் சாகுபடிச் சாலைகளைச் சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

விருத்தாச்சலம் பகுதியில் உள்ள நான்கு சாலைகளைக் கரும்புச் சாலைகள் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

77—

## பருத்தி உற்பத்தி

**வினா எண் 8271—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பருத்தி உற்பத்தியைப் பெருக்க அரசு எடுத்த நடவடிக்கைகள் யாது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் பருத்தி ஆண்டுதோறும் சுமார் 2.50 இலட்சம் எக்டரில் சாகுபடி செய்யப்பட்டு, அதன் மூலமாக சுமார் 4.00 இலட்சம் பேல் பருத்தி உற்பத்தி செய்யப்படுகிறது. மாநில அரசு மூலமாகப் பருத்தி மேம்பாட்டுக்கென,

(அ) உயர் விளைச்சல் இரகங்களின் சான்று பெற்ற விதை உற்பத்தி மற்றும் விநியோகம்

(ஆ) புரோடினியா புழுவைக் கட்டுப்படுத்த என்.பி.வி. வைரஸ் உற்பத்தித் திட்டம்

(இ) ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்புத் திட்டம் மற்றும்

(ஈ) மத்திய அரசு ஒப்புதலுடன், மாநில அரசுப் பங்கீட்டுடன் தீவிர பருத்திச் சாகுபடித் திட்டமானது தொழில்நுட்பவியல் சிறு குழுத் திட்டம் 2-ன்கீழ் நன்கு செயல்படுத்தப்படுகிறது.

78—

## விற்பனைக் கூடம்

**வினா எண் 8840—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, தெள்ளாரில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமையவும், அதற்கென நிலப் பட்டா வழங்கவும் அரசு ஆவன செய்யுமா—



விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தெள்ளாரில் தற்போது ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. சொந்த இடத்தில் விற்பனைக் கூடம் அமைக்க, தகுதியான இடம் தேர்வு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

79—

## தோட்டக் கலை

**வினா எண் 9271—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு சட்டமன்றத் தொகுதி, மோர்தானா டேமில் தோட்டக்கலைப் பண்ணை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) பேரணாம்பட்டு சட்டமன்றத் தொகுதி, மோர்தானா டேமில் தோட்டக்கலைப் பண்ணை அமைக்கும் திட்டம் அரசிடம் இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

80—

## நீர்க் குட்டைகள்

**வினா எண் 9640—திருமதி ஆர். சசிகலா:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதியில் உள்ள அரசுகவுண்டனூர், காமகவுண்டனூர், முனயனூர் பகுதிகளில் உள்ள கசிவு நீர்க்குட்டைகள் எப்பொழுது சரி செய்யப்படும்?

(ஆ) ஆம் எனில், எப்போது பணி தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) கசிவுநீர்க் குட்டைகள் கட்டி முடிக்கப்பட்டவுடன் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒப்படைக்கப்பட்டு விடுகின்றன. அதனால் பராமரிப்புப் பணிகள் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டும்.

(ஆ) எழவில்லை.

**81—**

## மானாவாரி விதைகள்

**வினா எண் 9726—திரு. கே.என். இலட்சுமணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மானாவாரி விதைக்கு மானியம் கொடுப்பதில்லை. விதை நெல் அனைத்து ரகங்களுக்கும் மானியம் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தானிய உற்பத்தித் திட்டத்தில் மத்திய அரசு சிபாரிசுப்படி 10 வருடங்களுக்குள் அறிவிக்கப்பட்ட அனைத்து நெல் ரகங்களுக்கும், ஒரு கிலோவுக்கு ரூ.2/- வீதம் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகைக்கேற்ப அந்தந்த மாவட்டத்திலுள்ள வேளாண் விரிவாக்க மையங்கள் மூலம் நெல் விதை வழங்கப்படுகின்றது. இவ்வாறு வழங்கப்படும் விதைகளில் மானாவாரி ரகங்களும் அடங்கும்.

**82—**

## தனி சலுகைகள்

**வினா எண் 10931—திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) விவசாயிகளுக்குத் தனிச் சலுகைகள் அளிக்கும் சிறப்புத் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): ஆம். வேளாண்மைத் துறை மூலம் செயல்படுத்தப்படும் அனைத்துத் திட்டங்களும் விவசாயிகளுக்கு தனிச் சலுகை அளிக்கும் திட்டங்களே. விவசாயிகளின் நலத் திட்டங்களின் ஒதுக்கீட்டில் 25% முதல் 30% வரை ஆதி திராவிட விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. 1999-2000 ஆம் ஆண்டில் மட்டும் இத்திட்டங்களுக்காக ரூ. 9,481.40 இலட்சம் செலவிடப்பட்டு, மொத்தம் 30,20,816 விவசாயிகள் இத்திட்டங்களால் பயனடைந்துள்ளனர். இத்திட்டங்கள் குறித்து வட்டார வேளாண் வளர்ச்சி அலுவலர் மற்றும் உதவி வேளாண் இயக்குநர்களைத் தொடர்பு கொண்டு விவசாயிகள் அறிந்து கொள்ளலாம்.

**83—**

## வேளாண்மைக் கல்லூரி

**வினா எண் 10996—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குத்தாலம் தொகுதி, குத்தாலத்தில் வேளாண்மைக் கல்லூரி அமைத்துத் தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

53-138—47a

84—

## வேளாண்மைத் துறை

**வினா எண் 11000—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளாண்மைத் துறையில் உள்ள டிராக்டர்களின் எண்ணிக்கை எத்தனை?

(ஆ) அதன் மூலம், அரசுக்குக் கிட்டும் வருமானம் எவ்வளவு?

(இ) அரசுக்கு லாபம் இல்லையேல் டிராக்டர்களை விற்பனை செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) வேளாண்மைப் பொறியியல் துறையில் நல்ல முறையில் இயங்கும் 122 டிராக்டர்கள் உள்ளன.

(ஆ) 2000-2001 ஆம் ஆண்டில் வாடகை மூலம் ஈட்டிய வருமானம் ரூபாய் 95 இலட்சம்.

(இ) லாபத்தைக் கருதாமல், விவசாயிகள் பயன்பெறும் வகையில் டிராக்டர்கள் வாடகைக்கு விடப்படுகின்றன. எனவே டிராக்டர்களை விற்பனை செய்யும் திட்டம் ஏதும் துறையில் இல்லை.

85—

## வேளாண் கல்லூரி

**வினா எண் 11121—திரு.வை.சிவபுண்ணியம்**—மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒன்றுபட்ட தஞ்சாவூர் மாவட்டத்தின் மையப் பகுதியான மன்னார்குடியில் வேளாண் கல்லூரி அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?



விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

86—

## தொழில் வளர்ச்சி

**வினா எண் 11131—திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளைச்சல் நிலங்களில் கட்டடம் கட்டும் திட்டத்தை அறவே ஒழிப்பதற்கு அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) விளை நிலங்களில் கட்டடம் கட்டும் திட்டத்தை அறவே ஒழிப்பது சாத்தியமல்ல. வளரும் நகர்ப்புறத் தொழில் வளர்ச்சித் தேவைக்கு ஈடுகொடுத்து, அதிக அளவு மாற்றம் நேராமல் நெறிப்படுத்தப் பரிசீலிக்கப்படுகிறது.

(ஆ) வினா எழவில்லை.

87—

## நிதி ஒதுக்கீடு

**வினா எண் 13579—திரு. பீ.எச். பால்மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, சேரன்மகாதேவி பேரூராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் கசிவுநீர்க் குட்டைகள் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) கசிவுநீர்க் குட்டை கட்ட நிதி ஒதுக்கீடு இல்லாததால், சேரன்மகாதேவி பேரூராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் கசிவுநீர்க் குட்டை கட்ட இயலவில்லை.

(ஆ) எழவில்லை.

**88—**

## விவசாயப் பயிற்சி மையம்

**வினா எண் 13652—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பாப்பாரப்பட்டியில் இயங்காமலிருக்கும் விவசாயப் பயிற்சி மையத்தை நவீனப்படுத்தி இயங்க வைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கான பதில் எழவில்லை.

**89—**

## பருத்தி சாகுபடி

**வினா எண் 13727—திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட பிக்கிலி, கொல்லம்பட்டி கிராமங்களில் தரமான பருத்தி சாகுபடி செய்யப்படுவதால், தரமான பருத்தி விதைகளும், பூச்சி மருந்துகளும் மானிய விலையில் கிடைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட பிக்கிலி, கொல்லம்பட்டி கிராமங்களுக்கு 2000-2001 ஆம் ஆண்டில் பருத்தி விதைகள், பூச்சி மருந்துகள் மானியத்தில் ஏதும் வழங்கப்படவில்லை. நடப்பு ஆண்டில் பருத்திப் பெருக்குத் திட்டத்தின்கீழ் இடுபொருட்கள் வழங்க ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**90—**

## நறுமணப் பயிர்கள்

**வினா எண் 14158—திரு. பி. எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், நறுமணப் பயிர்கள் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் மிளகு, மஞ்சள் மற்றும் மிளகாய் விதைகள் மானிய விலையில் விநியோகிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதிக்குட்பட்ட கடையம், முக்கூடல், சேரன்மகாதேவி ஒன்றியங்களில் மிளகு, மஞ்சள் பயிர்களின் விதைகள் மத்திய அரசின் உதவியுடன் செயல்படுத்தப்படும் நறுமணப் பயிர்கள் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் நடப்பாண்டில் மானிய விலையில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மிளகாய்ப் பயிரின் விதைகள் தைப்பட்டத்தில் விநியோகம் செய்யப்படவுள்ளன.

91—

## தோட்டக்கலைப் பண்ணைகள்

**வினா எண் 14159—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதியில் தோட்டக்கலைப் பண்ணைகள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) திருநெல்வேலி மாவட்டம், கடையம் ஊராட்சி ஒன்றியத்திற்கருகில் 30 கி.மீ. தொலைவில் குற்றாலம் ஐந்தருவிப் பகுதியில் ஓர் அரசு தோட்டக்கலைப் பண்ணை இயங்கி வருகின்றமையால் புதியதாகக் கடையம் ஒன்றியத்தில் தோட்டக்கலைப் பண்ணை அமைக்கும் திட்டம் இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

92—

## நெல் சாகுபடி

**வினா எண் 14168—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதியில் உரங்கள் தடையின்றிக் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், சேரன்மகாதேவி தொகுதிக்குட்பட்ட கடையம் ஊராட்சி ஒன்றிய வட்டாரத்தில் பல்வேறு உர நிறுவனங்கள் மூலம் 25 தனியார் உரக் கடைகளிலும், 7 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலும், டான்ஃபெட் நிறுவனத்திலும் இரசாயன உரங்கள் போதிய அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளன. கடையம் ஊராட்சி ஒன்றியப் பகுதியிலுள்ள தனியார் மற்றும் கூட்டுறவு உர விற்பனை நிலையங்களில் முக்கிய உரங்களான யூரியா, சூப்பர் பாஸ்பேட், பொட்டாஷ், டி.ஏ.பி, கூட்டு உரம், பாக்டம்பாஸ் ஆகிய உரங்கள் போதிய அளவில் இருப்பில் உள்ளன. அம்பாசமுத்திரம் வட்டத்திலும், பிசானம் நெல் சாகுபடி தொடங்கும் நிலையை அனுசரித்து போதிய அளவில் உரங்கள் இருப்பில் வைக்கப்பட்டுள்ளன.

93—

## உழவர் பயிற்சி நிலையம்

**வினா எண் 14169—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதியில் உழவர் பயிற்சி நிலையம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கான பதில் எழவில்லை.

94—

## அரிசி உற்பத்தி

**வினா எண் 14174—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதியில் ஒட்டுரக அரிசி உற்பத்தித் திட்டத்தை அரசு உடனடியாகச் செயல்படுத்துமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதியில் ஒட்டுரக அரிசி உற்பத்தியைப் பரவலாக்க கீழ்க்கண்டவாறு செயல் விளக்கங்கள் செயல்படுத்தப்படுகின்றன:—

| வ.எண் | தொகுதி | செயல் விளக்கங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | கடையம் | 2 |
| 2. | சேரன்மகாதேவி | 2 |

(ஆ) இத்திட்டம் 2001-2002 ஆம் நிதியாண்டில் மாநில அரசு நிதியுடன் செயல்படுகின்றது.

95—

## விற்பனைக் கூடம்

**வினா எண் 14195—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஊராட்சி ஒன்றியத்தில் புதிய ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) கடையம் ஊராட்சி ஒன்றியத்தில் புதிய ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

96—

## மண் பரிசோதனை

**வினா எண் 14431—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியத்தில் மண் பரிசோதனை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில், பெரும்பாலும் மாவட்டத் தலைநகரைத் தலைமையிடமாகக் கொண்டு, மண் பரிசோதனை நிலையங்கள் 19 மையங்களில் இயங்கி வருகின்றன. இவற்றில் தென் மாவட்டங்களில் மட்டும் 8 மையங்களில் (மதுரை, திண்டுக்கல், தேனி, சிவகங்கை, பரமக்குடி, கோவில்பட்டி, திருநெல்வேலி மற்றும் நாகர்கோவில்) செயல்படுகின்றன. திருநெல்வேலி மாவட்டத்தைத் தலைமையிடமாகக் கொண்டும் ஒரு மண் பரிசோதனை நிலையம் இயங்கி வருகிறது. எனவே, சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியத்தில் மண் பரிசோதனை நிலையம் அமைப்பதற்கான திட்டம் ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

97—

## வேளாண்மைக் கல்லூரி

**வினா எண் 14774—திரு. ஐ. கணேசன்**—மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடியில் ஒரு வேளாண்மைக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

98—

## விவசாயக் கிடங்குகள்

**வினா எண் 14775—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள அனைத்துக் கிராமப் பஞ்சாயத்துகளிலும் தனித்தனி விவசாயக் கிடங்குகள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் மொத்தம் 880 **வேளாண்மை விரிவாக்க மையங்கள்** உள்ளன. அவற்றுள் 384 பிரதான **வேளாண்மை விரிவாக்க மையங்கள்,** ஒன்றியங்களிலும், 496 **வேளாண்மை விரிவாக்கத் துணை மையங்கள்,** முக்கியக் கிராமப் பஞ்சாயத்துகளிலும் **செயல்பட்டு வருகின்றன.**

(ஆ) முக்கியமான 384 கிராமப் **பஞ்சாயத்துகளில் விரிவாக்க** துணை மையங்கள் செயல்பட்டு **வருகின்றன. எஞ்சிய கிராமப்** பஞ்சாயத்துகளில் இம்மையங்களை அமைக்கக் கருத்துருக்கள் வரப்பெற்றால் அவை பரிசீலிக்கப்படும்.



99—

## வரதட்சணைக் கொடுமை

**வினா எண் 2248—திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

வரதட்சணைக் கொடுமைக்கு ஆளாகும் பெண்கள் கொடுக்கும் புகார்மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்படுகிறதா?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

ஆம். வரதட்சணைக் கொடுமைக்கு ஆளாகும் பெண்கள் கொடுக்கும் புகார்மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

100—

## பிச்சை எடுப்பு தடைச் சட்டம்

**வினா எண் 3681—திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிச்சை எடுப்பதைத் தடுக்கவோ, பிச்சைக்காரர்களை ஒழிக்கவோ அரசிடம் திட்டம் ஏதேனும் உண்டா?

(ஆ) ஆம் எனில், எம்மாதிரியான திட்டத்தை அமல்படுத்த அரசு உத்தேசித்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு பிச்சை எடுப்புத் தடைச் சட்டம், 1945-ன்கீழ் சென்னை மாநகரில் மட்டும் பிச்சை எடுப்பதற்குத் தடை செய்யப்பட்டுள்ளது. சென்னை நகரில் பிச்சை எடுப்பவர்களை, சென்னை நகரில் உள்ள காவல் துறை மூலம் நீதிமன்றத்தில் ஓர் ஆண்டு முதல்

[2002 மே 10

மூன்று ஆண்டு காலம் வரை தண்டிக்கப்பட்ட பிச்சைக்காரர்கள், மேல்பாக்கத்திலுள்ள அரசு ஏழைகள் பராமரிப்பு இல்லத்தில் பராமரிக்கப்பட்டு வருகிறார்கள்.

**101—**

## முதியோர் உதவித் தொகை

**வினா எண் 4185—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முதியோர் உதவித் தொகையை உயர்த்திக் கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

இல்லை.

**102—**

## உதவித் தொகை

**வினா எண் 4201—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமணம் ஆகாத வயது முதிர்ந்த ஆதரவற்ற ஏழைப் பெண்களுக்கு உதவித் தொகை வழங்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.



2002 மே 10]

**103—**

## மகளிர் மேம்பாட்டுத் திட்டம்

**வினா எண் 4264—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக அரசின் மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சென்ற ஆண்டு ஒதுக்கிய நிதியில் எவ்வளவு செலவு செய்யப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

தமிழக அரசின் மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், கடந்த 2000-2001 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு (B.E.) ரூ.2200.00 இலட்சமாகும். இத்துடன் பிற நிதி ஆதார வகையான கையிருப்புத் தொகை ரூ. 711.71 இலட்சமும் சேர்த்து மொத்தம் ரூ. 2911.11 இலட்சம் கடந்த 2000-2001-ல் மகளிர் மேம்பாட்டுத் திட்டத்திற்குச் செலவிடப்பட்டுள்ளது.

**104—**

## மறுவாழ்வு

**வினா எண் 5362—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கணவனால் கைவிடப்படும் ஏழைப் பெண்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். (ஆ) (i) இலவசமாகத் தையல் இயந்திரங்கள் வழங்கப்படுகின்றன.

(ii) தாம்பரம், கடலூர், தஞ்சாவூர், சேலம், திருநெல்வேலி, காரைக்குடி ஆகிய இடங்களில் ஆறு அரசு சேவை இல்லங்களில் உறைவிடம், உணவு, கல்வி, தொழிற்கல்வி ஆகியவை இலவசமாக வழங்கப்படுகின்றன.

(iii) இவ்வில்லங்களில் மேல்நிலைப் பள்ளி வகுப்புகளில் தையல் மற்றும் வடிவமைத்தல், மருத்துவ ஆய்வுக்கூடம் மற்றும் செவிலியர் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

(iv) இவ்வில்லங்களில் பயின்ற மாணவிகளுக்குப் பல்நோக்கு சுகாதாரப் பணியாளர் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

(v) மகளிர் தொழிற்கூட்டுறவுச் சங்கங்களில் அங்கத்தினர்களாகச் சேர்த்து வேலைவாய்ப்புப் பெற முன்னுரிமை அளித்து வகை செய்யப்பட்டுள்ளது.

(vi) ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் மாதம் ரூ.200/- உதவித் தொகை வழங்கப்படுகிறது.

**105—**

## வரதட்சணைக் கொடுமை

**வினா எண் 5365—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வரதட்சணைக் கொடுமையினால் பெண்கள் பாதிப்புக்கு உள்ளாவது குறித்து அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். வரதட்சணைக் கொடுமையினால் பெண்கள் பாதிப்பிற்கு உள்ளாவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.



**106—**

## உதவித் தொகை

**வினா எண் 5373—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முதியோர் மற்றும் விதவைகளின் உதவித் தொகை உயர்த்தப்பட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

இல்லை.

**107—**

## தற்காலிகப் பணி

**வினா எண் 5480—திரு. டி. மணி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை அரசு மேல்நிலைப் பள்ளியில் 6-7-2001ஆம் நாளன்று மதிய உணவு உண்ட 213 மாணவ, மாணவியர் பாதிப்படைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பாதிக்கப்பட்ட 71 மாணவர்களும் தக்கலை அரசு மருத்துவ மனையில் தக்க சிகிச்சைக்காக 6-7-2001 அன்றே அனுமதிக்கப்பட்டு 10-7-2001 அன்று பூரண உடல் நலத்துடன் பத்திரமாக அவரவர் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இச்சம்பவத்திற்குக் காரணமான அம்மைய அமைப்பாளர், உதவியாளர் மற்றும் சமையலர் ஆகியோர் உடனடியாகத் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். அதனைத் தொடர்ந்து அம்மைய அமைப்பாளர்மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளவும், விசாரணைக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.

108—

## சத்துணவு

**வினா எண் 8866—திரு. எஸ்.எம். பாலன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்துணவில் குழந்தைகளுக்குத் தினசரி வாழைப்பழம் கொடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) சத்துணவில் குழந்தைகளுக்குத் தினசரி வாழைப்பழம் வழங்கும் திட்டம் தற்போது அரசின் பரிசிலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

109—

## பழங்குடி இனத்தவர்

**வினா எண் 629—திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

லம்பாடி இன மக்களை மலைச் சாதியினர் பட்டியலில் சேர்க்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

லம்பாடி இன மக்களை பழங்குடி இனத்தவராகச் சேர்ப்பது தொடர்பாக, 1986-ல் மாநில அரசு, மைய அரசிற்கு ஏற்கெனவே பரிந்துரை செய்தது. மைய அரசு இவ்வின மக்களின் பண்பாடுகள் பற்றிய விரிவான ஓர் ஆய்வு நடத்தி, அதன்மீது மாநில அரசின் கருத்துகளையும் வழங்கி ஓர் அறிக்கையை அனுப்பும்படித் தற்போது



கேட்டுள்ளது. மைய அரசு கேட்டுள்ளதுபோல் ஆய்வு நடத்த, உதகமண்டலத்திலுள்ள பழங்குடி ஆய்வு மையத் துணை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். அவரது அறிக்கையைப் பெற்று, ஆய்வு செய்து, உரிய அறிக்கை மைய அரசுக்கு விரைவில் அனுப்பி வைக்கப்படும்.

110—

## ஆதிதிராவிடர் காலனி

**வினா எண் 4259—திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை வட்டம், செல்லப்பாளையம், அண்ணாநகர் ஆதிதிராவிடர் காலனிக்கு மயான வசதியில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது செய்து தரப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலை வட்டம், செல்லப்பாளையம் கிராமத்திற்குட்பட்ட க.ச.எண்.233/ஏ-ல், 2.90 ஏக்கர் நிலம் பொது மயானமாகப் பயன்பட்டு வருகின்றது. இதில் 35 சென்ட் நிலம் 13 அடி அகலப் பாதையுடன் ஆதிதிராவிடர் மக்கள் பயன்படுத்திக்கொள்ளத் தனி மயானமாக ஒதுக்கித் தரப்பட்டுள்ளது.

111—

## இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 5520—திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை வட்டம், ஜல்லிப்பட்டி பஞ்சாயத்து கொங்குராயர் குட்டையில் உள்ள மலைவாழ் மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) உடுமலை வட்டம், ஜல்லிப்பட்டி கிராமத்தில் 2.02.5 எக்டேர் நிலத்தில் 153 மனையிடங்கள் ஏற்படுத்தப்பட்டு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. வீட்டுமனைப் பட்டா பெற்ற நபர்களில் பெரும்பாலானோர் அவர்களுக்குப் பட்டா வழங்கப்பட்ட மனையிடங்களில் வீடு கட்டிக் குடியேறவில்லை; எனவே, நிபந்தனை மீறப்பட்டுள்ள இவ்வினங்களைக் கண்டறிந்து, அவர்களுக்கு வழங்கப்பட்ட வீட்டுமனைப் பட்டாக்களை ரத்து செய்து, புதிதாக வீட்டுமனைப் பட்டா கோரும் மனுதாரர்களுக்குக் கொங்குராயர் குட்டை உட்பட, தகுதியின் அடிப்படையில் வீட்டுமனைப் பட்டா வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**112—**

## ஆதிதிராவிடர்கள்

**வினா எண் 7071—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை அருகே உள்ள எலையமுத்தூர் ஆதிதிராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு பரிசீலிக்குமா?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை யாது?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை அருகே உள்ள எலையமுத்தூர் கிராமம், க.ச. 101/1ஏ, 1பி2, 102/1, 102/2 மற்றும் 3சி எண் காலைகளில் மொத்தம் 2.96.5 ஹெக்டேர் நிலம் ஆதிதிராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் பொருட்டு, பொள்ளாச்சி ஆதிதிராவிட நல தனி வட்டாட்சியரின் அவார்டு எண் 16/2000-01, நாள் 15-3-2001-ன்படி கையகப்படுத்தப்பட்டு, அவற்றில் 149



மனையிடங்கள், தலா 3 சென்ட் வீதம் பிரிக்கப்பட்டு, 41 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா கடந்த 19-8-2001-ல் வழங்கப்பட்டுள்ளது. மீதம் 108 மனையிடங்களுக்கு இதுவரை விண்ணப்பங்கள் எதுவும் வரப்பெறவில்லை. அவ்வாறு விண்ணப்பங்கள் வரப்பெறும் பட்சத்தில், தகுதியின் அடிப்படையில் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படும்.

**113—**

## போக்குவரத்து

**வினா எண் 7—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை நகரில் போக்குவரத்து மாற்றியமைக்கப் பட்டுள்ளதால் பொது மக்கள் சிரமப்படுவது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது மாற்றி அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) புதுக்கோட்டை நகரில் போக்குவரத்து மாற்றியமைக்கப் பட்டுள்ளதால் வாகன விபத்துகள் பெருமளவு கட்டுப்படுத்தப்பட்டு, வாகனப் போக்குவரத்து எவ்விதச் சிரமமும் இல்லாமல் நடைபெறுகிறது. இதனால், பொது மக்களுக்கு எவ்விதச் சிரமமும் இல்லை.

(ஆ) போக்குவரத்து மாற்றத்தால் நன்மைகள் அதிகம் உள்ளதால், அது மாற்றி அமைக்கப்பட மாட்டாது.

**114—**

## பேருந்து வசதி

**வினா எண் 605—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், அடங்கார் குளம் ஊராட்சிக்குட்பட்ட இளாக்குளம் கிராமத்திற்குப் பேருந்து வசதி இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பேருந்து விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கிளாக்குளம் கிராமம் சுமார் இருநூறு மக்கள் தொகையைக் கொண்டது. மதகனேரி-அழகனேரி பிரதான சாலையிலிருந்து கிளாக்குளம் கிராமத்திற்குச் செல்லும் சாலை மண் சாலையாகவும், மிகவும் குறுகலாகவும் உள்ளது. எனவே, மேற்கண்ட கிராமத்திற்குப் பேருந்து இயக்க இயலாத நிலை உள்ளது.

**115—**

## பேருந்துப் பணிமனை

**வினா எண் 904—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி அரசுப் பேருந்து பணிமனையில் இயங்காமல் இருக்கும் பேருந்துகளை மாற்றி, புதிய பேருந்துகள் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செஞ்சியில் உள்ள விழுப்புரம் அரசுப் போக்குவரத்துக் கழகப் பணிமனையில் 39 பேருந்துகள் உள்ளன. இவை அத்தனையும் நல்ல முறையில் இயக்கப்பட்டு வருகின்றன.

**116—**

## நகரப் பேருந்து

**வினா எண் 1393—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, கீழ்நெடுவாய் கிராமத்திற்கு விருத்தாச்சலம் பணிமனையிலிருந்து புதிய நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?



(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் வட்டம், ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கீழ்நெடுவாய் கிராமம், திருச்சி தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம் கோட்டம்-2) பேருந்து இயக்க எல்லைக்குட்பட்டதாகும். இக்கிராம மக்களது பெரும்பான்மையான போக்குவரத்துத் தேவை ஆண்டிமடம், ஜெயங்கொண்டம், பெரம்பலூர் மார்க்கமாகவே இருக்கும். ஆண்டிமடத்திலிருந்து இக்கிராமத்திற்குத் தற்பொழுது இரண்டு தனியார் மினி பேருந்துகள் மூலம் போக்குவரத்து வசதி அளிக்கப்பட்டுள்ளன. ஆண்டிமடத்திலிருந்து விருத்தாச்சலம் செல்லப் போதிய பேருந்து வசதிகள் உள்ளன. எனவே, விருத்தாச்சலம் பணிமனையில் இருந்து இக்கிராமத்திற்குத் தனியாக ஒரு புதிய நகரப் பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**117—**

## புதிய பேருந்துகள்

**வினா எண் 1880—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி, அரசுப் போக்குவரத்துக் கழக ஏ. பி. பணிமனைகளுக்குக் கூடுதலாகப் புதிய பேருந்துகளை வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

வந்தவாசியில், காஞ்சிபுரம் அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான பணிமனை ஒன்றும், வேலூர் அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான பணிமனை ஒன்றும் இயங்கி வருகின்றன. தேவைகளின் அடிப்படையிலும், நிதியாதாரங்களைப் பொறுத்தும் புதிய பேருந்துகள் வழித்தடங்களில் இயக்கப்படும்போது இப்பணிமனைகளுக்கும் புதிய பேருந்துகளை வழங்குவது குறித்த செயற்குறிப்பு அரசால் பரிசீலனை செய்யப்படும்.

118—

## பாலங்கள் கட்டும் பணி

**வினா எண் 2156—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரணாம்பட்டு சட்டமன்றத் தொகுதி, பேரணாம்பட்டிலிருந்து அரவட்லா வரையிலும், கொளத்தூர், பாஸ்மார பெண்டர், மோர்தானா முக்கியப் பகுதிகளை ஒருங்கிணைந்த அப்பகுதிக்குப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோரிக்கைத் தடம் மலைப் பகுதியில் அமைந்துள்ளதாலும், மேலும், சாலையின் ஒரு பகுதியில் வளைவுகள் உள்ளதாலும் மற்றும் தடுப்புச் சுவர்கள் இல்லாததாலும், சிறிய பாலங்கள் கட்டும் பணி நடப்பதாலும் கோரிக்கைத் தடத்தில் பேருந்து இயக்க இயலாது.

119—

## புதிய வழித்தடம்

**வினா எண் 2616—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், வள்ளியூரிலிருந்து ஆவரைக்குளம் கிராமம் வரை புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், வள்ளியூரிலிருந்து ஆவரைக்குளம் கிராமம் வரை பேருந்து இயக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



120—

## குதிரைக்கல்மேடு

**வினா எண் 2639—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, எடப்பாடியிலிருந்து கோனேரிப்பட்டி வரை செல்லும் நகரப் பேருந்தை குதிரைக்கல்மேடு பிரிவு பிரதான சாலை வரை நீட்டிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, எடப்பாடியிலிருந்து கோனேரிப்பட்டி வரை செல்லும் நகரப் பேருந்தை குதிரைக்கல்மேடு வரை நீட்டித்து இயக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

121—

## புதிய பேருந்துகள்

**வினா எண் 2976—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரம் அரசுப் போக்குவரத்துக் கழகப் பணிமனையில் உள்ள மிகவும் பழுதடைந்த பேருந்துகளுக்குப் பதிலாகப் புதிய பேருந்துகள் வழங்க அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரம் அரசுப் போக்குவரத்துக் கழகப் பணிமனையில் மிகவும் பழுதடைந்த பேருந்துகள் எதுவும் தடத்தில் இயக்கப்படவில்லை.

122—

## பெரியார் பேருந்து நிலையம்

**வினா எண் 3068—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை, பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து செக்கானூரணி, பன்னியான், கீழப்பட்டி வழியாக விக்கிரமங்கலத்திற்குப் பேருந்து வசதி செய்து தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

மதுரை, பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து செக்கானூரணி, பன்னியான், கீழப்பட்டி வழியாக விக்கிரமங்கலத்திற்குப் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

123—

## அரசு ஊழியர்கள்

**வினா எண் 3820—திரு. ஆஸ்டின் மற்றும் திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

போக்குவரத்துக் கழக ஊழியர்களை அரசு ஊழியர்களாக அறிவிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

போக்குவரத்துக் கழக ஊழியர்களை அரசு ஊழியர்களாக அறிவிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

124—

## அரசுப் பேருந்து

**வினா எண் 3908—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் இருந்து, கோட்டூர்—வடபாதிமங்கலம் வரை அரசுப் பேருந்து இயக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் இருந்து கோட்டூர்—வடபாதிமங்கலம் வரை நேரடிப் பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

125—

## தொழில்நுட்ப விசாரணைக் குழு

**வினா எண் 3957—திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநிலத்தில் ஏற்படும் சாலை விபத்துகளுக்கான காரணங்களையும், அதைத் தடுக்க வழிமுறைகளையும் கண்டறிய தொழில்நுட்ப விசாரணைக் குழு ஒன்றை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மாநிலத்தில் ஏற்படும் சாலை விபத்துகளுக்கான காரணங்களையும், அதைத் தடுக்க வழிமுறைகளையும் அரசின் துறைகளே மேற்கொள்வதால், தொழில்நுட்ப விசாரணைக் குழு ஒன்றை அமைக்க அவசியமில்லை.

(ஆ) கேள்வி எழாது.

126—

## குடியாத்தம் அரசு டெப்போ

**வினா எண் 4093—திருமதி சி.எம். சூரியகலா:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் தொகுதி, குடியாத்தம் அரசு டெப்போவிலிருந்து இயங்கும் பேருந்துகள் பழுதுபட்டவை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் பழுதுபட்ட பேருந்துகளை மாற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) குடியாத்தம் தொகுதி, குடியாத்தம் அரசுப் போக்குவரத்துக் கழகப் பணிமனையிலிருந்து பழுதடைந்த எந்தப் பேருந்தும் இயக்கப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

127—

## கூடுதல் பேருந்து

**வினா எண் 4281—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கந்தர்வகோட்டையில் இருந்து கறம்பக்குடிக்குப் பேருந்து விடுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கந்தர்வக்கோட்டையில் இருந்து கறம்பக்குடிக்குப் பொது மக்களின் தேவைக்கேற்ப, போதுமான பேருந்து வசதி



செய்யப்பட்டுள்ளது. எனவே இவ்வழித்தடத்தில் கூடுதல் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

128—

## விரைவுப் பேருந்து

**வினா எண் 4293— திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழியிலிருந்து சென்னைக்கு அரசு விரைவுப் பேருந்து இயக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் சீர்காழியிலிருந்து சென்னைக்கு விரைவுப் பேருந்து இயக்கத் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

129—

## படகுப் போக்குவரத்து

**வினா எண் 4731—திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலோரத்தில் உள்ள கிராமங்களுக்குப் படகுப் போக்குவரத்து ஏற்பாடு செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[2002 மே 10

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) கடலோரத்தில் உள்ள கிராமங்களுக்குப் படகுப் போக்குவரத்து ஏற்பாடு செய்தல் தொடர்பாகக் கருத்துரு ஏதும் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**130—**

## தனி நகரப் பேருந்து

**வினா எண் 4854—திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெல்லை மாவட்டம், கடையநல்லூர் தொகுதியில் கம்பனேரி கிராமத்திலிருந்து கடையநல்லூருக்கு நகரப் பேருந்து வசதி செய்து தரப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

நெல்லை மாவட்டம், கடையநல்லூர் தொகுதியில் கடையநல்லூர்-கரடிக்குளம் (வழி) கம்பனேரி என நகரப் பேருந்துகள் மூலம் கம்பனேரிக்குப் போதுமான அளவு பேருந்து வசதி உள்ளது. எனவே, கம்பனேரி-கடையநல்லூர் என கூடுதலாகத் தனி நகரப் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**131—**

## நகரப் பேருந்து

**வினா எண் 4859—திருமதி சி.எம். சூரியகலா:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், குடியாத்தம் தொகுதி, பரதராமியிலிருந்து வேலூர் வரை பூசாரிவலசை, பள்ளத்தூர், பனமடங்கி, செஞ்சி, இலத்தேரி, காட்பாடி வழியாக அதிகாலைப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?



2002 மே 10]

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், குடியாத்தம் தொகுதி, பரதராமியிலிருந்து பூசாரிவலசை, பள்ளத்தூர், பனமடங்கி, செஞ்சி, இலத்தேரி, காட்பாடி வழியாக வேலூர் வரை, வேலூர் அரசு போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து 16-எப் வழித்தடம், காலை 5-40 மணிக்கு 28-7-1993 முதல் இயக்கப்பட்டு வருகிறது.

**132—**

## நகரப் பேருந்து

**வினா எண் 4910—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, திருநகரி வழியாகப் பூம்புகாருக்குச் சென்று கொண்டிருந்த நகரப் பேருந்து 18-ஐ மீண்டும் இயக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, திருநகரி வழியாகப் பூம்புகாருக்குச் சென்று கொண்டிருந்த நகரப் பேருந்து 18ஏ-ல் பயணிகள் அடர்வு போதிய அளவு இல்லாத காரணத்தால், 1995 ஆம் ஆண்டு நிறுத்தப்பட்டது. இப்பேருந்தினை மீண்டும் இயக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**133—**

## பேருந்து வசதி

**வினா எண் 4933—திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை ஒன்றியம், கே. வல்லகுண்டாபுரத்தில் போதுமான பேருந்து வசதி இல்லாததால், நகரப் பேருந்து எண் 28 மற்றும் 14 ஆகியவற்றில் அதிக டிரிப்புகள் போய் வர அரசு .ஏற்பாடு செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டையிலிருந்து கே. வல்லகுண்டாபுரத்திற்குப் பேருந்து வழித்தட எண் 14-ன் மூலம் தினசரி 4 நடைகள் இயக்கப்படுகின்றன. உடுமலைப்பேட்டையில் இருந்து அர்த்தநாரிப்பாளையம்/செல்லப்பம்பாளையம் செல்லும் பேருந்து, வழித்தட எண் 28-ன் வாயிலாக கே. வல்லகுண்டாபுரத்தைத் தொட்டு தினசரி 22 நடைகள் இயக்கப்படுகின்றன. இந்த நடைகளின் எண்ணிக்கையை மேலும் அதிகப்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

**134—**

## நகரப் பேருந்து

**வினா எண் 4937—திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை ஒன்றியம், கே. ரெட்டிபாளையத்தில் பள்ளி செல்லும் மாணவர்களின் நலன் கருதி, நகரப் பேருந்து காலை, மாலை நேரங்களில் இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலை-ஆனைமலை வழித்தடத்தில் சுமார் 0.5 கி.மீ. தூரத்தில் கே.ரெட்டிபாளையம் என்ற கிராமம் உள்ளது. இக்கிராமத்திற்குச் செல்லும் சாலை, பேருந்து இயக்கத்திற்குத் தகுதியற்றதாக உள்ளதால், பேருந்துகளை நீட்டித்து இயக்க இயலாத நிலை உள்ளது.



**135—**

## நகரப் பேருந்துகள்

**வினா எண் 4998—திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டையிலிருந்து முக்கோணம் வழியாகப் பல்வேறு பகுதிகளுக்குச் செல்லும் நகரப் பேருந்துகளை உடுமலை-முக்கோணம் சடையபாளையம், எரிசனம்பட்டி, தேவனூர்புதூர் செல்ல ஏற்பாடு செய்யப்படுமா?

(ஆ) இது குறித்து அரசின் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டையிலிருந்து முக்கோணம் வழியாகப் பல்வேறு பகுதிகளுக்குச் செல்லும் நகரப் பேருந்துகளை உடுமலை-முக்கோணம்-சடையகவுண்டன்புதூர்-எரிசனம்பட்டி வழியாக தேவனூர்புதூர் செல்லும் திட்டம் அரசின் பரிசிலனையில் இல்லை.

**136—**

## நகரப் பேருந்து

**வினா எண் 5106—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்பாக்கம்-புதுப்பட்டினம்-பெருமாஞ்சேரி-பூந்தண்டலம்-வெங்கம்பாக்கம்-கடும்பாடி-மாமல்லபுரம்-ஆலத்தூர்-திருப்போரூர் வரை நகரப் பேருந்து இயக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எத்தனை பேருந்துகள் இயக்கப்படும் என்பதை அரசு தெரிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விதிகளின்படி நகரப் பேருந்துகளின் வழித்தடம் 30 கிலோ மீட்டருக்கு மிகாமல் இருக்க வேண்டும். கல்பாக்கம்-

புதுப்பட்டினம்-பெருமாஞ்சேரி-பூந்தண்டலம்-வெங்கம்பாக்கம்-கடும்பாடி-மாமல்லபுரம்-ஆலத்தூர்-திருப்போரூர் தடத்தின் நீளம் 32.2 கி.மீ. ஆகும். எனவே கோரிக்கை தடத்தில் நகரப் பேருந்து இயக்கச் சாத்தியக்கூறு இல்லை.

**137—**

## பேருந்து வசதி

**வினா எண் 5404—திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை வட்டம், ஜல்லிப்பட்டி பஞ்சாயத்து, ஜல்லிப்பட்டி வரை செல்லுகின்ற பேருந்து எண் 1-ஐ வெங்கிடாபுரம் வரை இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை வட்டத்தில், ஜல்லிப்பட்டி வரை செல்கின்ற பேருந்து வழித்தட எண் 1-ஐ வெங்கிடாபுரம் கிராமம் வரை நீட்டிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**138—**

## பேருந்து வசதி

**வினா எண் 5651—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, மனம்தவிழ்த்தபுத்தூர் கிராமத்திற்குப் பேருந்து வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) பண்ருட்டி தொகுதி, மனம்தவிழ்த்தபுத்தூர் கிராமத்திற்குப் போதுமான பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) இக்கேள்வி எழாது.

**139—**

## கூடுதல் பேருந்து

**வினா எண் 5700—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு-திருப்போரூர் இடையே பேருந்து வசதி மிகக் குறைவாக இயக்கப்படுவது அரசின் கவனத்திற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், 30 நிமிடங்களுக்கு ஒரு பேருந்து என கூடுதல் பேருந்து விடப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செங்கற்பட்டு-திருப்போரூர் தடத்தில் ஏற்கெனவே பொதுமக்களின் தேவைக்கேற்ப, போதுமான பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

**140—**

## பேருந்து வசதி

**வினா எண் 6426—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, மேல்மாம்பட்டு கிராமத்தில் மேல்மாம்பட்டு, புளியூர், சமுட்டிக்குப்பம் கிராமங்களுக்குப் பேருந்து வசதி செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, மேல்மாம்பட்டு, புளியூர், சமுட்டிக்குப்பம் வழித்தடத்தில் மேல்மாம்பட்டு முதல் முத்தரசன்குப்பம் வரை எந்த ஒரு கிராமமும் இல்லாத 1.8 கி.மீ. தூரம் மட்டும் பேருந்து வசதி பெறவில்லை. மற்ற கிராமங்களுக்குப் பகுதிவாரியாக ஏற்கெனவே அளிக்கப்பட்டு வரும் பேருந்து வசதி போதுமானதாகும்.

141—

## கூடுதல் பேருந்து

**வினா எண் 6439—திரு. பீஎச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், பாப்பாக்குடி ஒன்றியம், ஓடைமறிச்சான் கிராமத்தின் வழியாக ஆலங்குளம்-முக்கூடல் செல்ல, பேருந்து விடுவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், பாப்பாக்குடி ஒன்றியம், ஓடைமறிச்சான் கிராமத்தின் வழியாக ஆலங்குளம்-முக்கூடல் வழித்தடத்தில் திருநெல்வேலி அரசு மற்றும் தனியார் பேருந்துகள் மற்றும் சிற்றுந்துகள் மூலம் பொது மக்களின் தேவைக்கேற்ப ஏற்கெனவே போதுமான அளவு பேருந்து வசதி உள்ளது. எனவே, மேற்கொண்டு கூடுதல் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



142—

## பேருந்து வசதி

**வினா எண் 6646—திரு. பீஎச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம்-சேரன்மகாதேவி (வழி) ரெட்டியார்புரம், புதூர் வழித்தடம் 10ஏ-ஐ இயக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அம்பாசமுத்திரம்-சேரன்மகாதேவி (வழி) ரெட்டியார்புரம், புதூர் வழியாக இயக்கப்பட்டு நிறுத்தப்பட்ட 10ஏ பேருந்து அக்டோபர் 2001 முதல் மீண்டும் ரெட்டியார்புரம், புதூர் வழியாக 4 சுற்றுகள் இயக்கப்பட்டு வருகின்றன.

143—

## போக்குவரத்து வசதி

**வினா எண் 6824—திருமதி தமிழ்மொழி ராஜதத்தன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர்-சென்னை, (வழி—எய்யில், சேத்பட், வந்தவாசி) வழித்தடம் மற்றும் செஞ்சி-ஆரணி (வழி—ரெட்டிபாளையம், அருங்குளம், மேல்மலையூர், எய்யில், சேத்பட்) வழித்தடங்களில் புதிய போக்குவரத்து வழித்தடங்கள் ஏற்படுத்தப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

மேல்மலையனூர்-சென்னை (வழி) எய்யில், சேத்பட், வந்தவாசி வழித்தடம் மற்றும் செஞ்சி-ஆரணி (வழி) ரெட்டிபாளையம், அருங்குளம், மேல்மலையூர், எய்யில், சேத்பட் வழித்தடங்களில் தற்போதுள்ள

போக்குவரத்து வசதியைக் கருத்தில் கொண்டு, புதிய வழித்தடங்கள் ஏற்படுத்தும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

144—

## நகரப் பேருந்துகள்

**வினா எண் 6839—திரு. பீ.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலந்தூர் தொகுதி, நங்கநல்லூரில் இருந்து தாம்பரம் செல்ல புதிய வழித்தடத்தில் நகரப் பேருந்துகள் இயக்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆலந்தூர் தொகுதி, நங்கநல்லூரிலிருந்து தாம்பரம் செல்ல புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

145—

## கூடுதல் பேருந்துகள்

**வினா எண் 6922—திரு. பீ.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலந்தூர் தொகுதியில், நங்கநல்லூரில் இருந்து பாரிமுனை செல்ல பேருந்துகள் கூடுதலாக இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆலந்தூர் தொகுதி, நங்கநல்லூரிலிருந்து பாரிமுனை செல்லப் போதுமான அளவில் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, கூடுதல் பேருந்துகளை இவ்வழித்தடத்தில் இயக்குவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



146—

## பேருந்து இயக்கத் திட்டம்

**வினா எண் 7138—திரு. வெ. கோவிந்தராஜ்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பாலக்கோட்டிலிருந்து கெலமங்கலம் ஒன்றியம், கொப்பகரை ஊராட்சி, கருவாட்டுகானூர் கிராமத்திற்குப் பேருந்து இயக்க அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பாலக்கோட்டிலிருந்து கெலமங்கலம் கருவாட்டுகானூர் கிராமத்திற்குப் பேருந்து இயக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

147—

## கூடுதல் பேருந்து

**வினா எண் 7363—திரு. வெ. கோவிந்தராஜ்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி தொகுதியில் 39 ஆம் எண் நகரப் பேருந்துத் தடத்தில் கூடுதலாகப் பேருந்து இயக்க அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) கிருஷ்ணகிரி தொகுதியில் 39 ஆம் எண் நகரப் பேருந்துத் தடத்தில் கூடுதலாகப் பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

148—

## புதிய பேருந்து

**வினா எண் 7365—திரு. வெ. கோவிந்தராஜ்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கிருஷ்ணகிரி அணைக்கு, கிருஷ்ணகிரியில் இருந்து அக்ரஹாரம் நெக்குந்தி வழியாகப் பேருந்து இயக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி அணைக்கு, கிருஷ்ணகிரியிலிருந்து அக்ரஹாரம் நெக்குந்தி வழியாகப் புதியதாகப் பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

149—

## பேருந்து வசதி

**வினா எண் 7366—திரு. வெ. கோவிந்தராஜ்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி தொகுதி, கிருஷ்ணகிரி அணைக்கு, பாலக்கோடு, காவேரிப்பட்டினம் வழியாகப் பேருந்து இயக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி அணைக்கு, பாலக்கோடு, காவேரிப்பட்டினம் வழியாகப் பேருந்து இயக்கத் திட்டம் ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.



150—

## கூடுதல் பேருந்து

**வினா எண் 7578—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கந்தர்வகோட்டை-மட்டங்கால், கல்லாகோட்டை வழியாகப் பேருந்து வசதி செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கந்தர்வகோட்டை-மட்டங்கால், கல்லாகோட்டை வழித்தடத்தில் பொது மக்களின் தேவைக்கேற்ப போதுமான பேருந்து வசதி உள்ளது. எனவே, இத்தடத்தில் மேற்கொண்டு கூடுதல் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

151—

## கூடுதல் பேருந்து

**வினா எண் 7579—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கந்தர்வகோட்டை-ஊரணிபுரம், கூடுதல் பேருந்து விடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கந்தர்வகோட்டை-ஊரணிபுரத்திற்குப் பொது மக்களின் தேவைக்கேற்ப, போதுமான அளவு பேருந்து வசதி உள்ளது. எனவே, இவ்வழித்தடத்தில் கூடுதல் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

152—

## பேருந்து வசதி

**வினா எண் 7581—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கந்தர்வகோட்டை-குளத்தூர், நாயக்கன்பட்டி வழியாகத் தஞ்சாவூருக்குப் பேருந்து வசதி செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கந்தர்வகோட்டை-தஞ்சாவூர் (வழி) குளத்தூர்நாயக்கன்பட்டி வழித்தடத்தில் பகுதி, பகுதியாக மக்களின் தேவைக்கேற்ப பேருந்து வசதி உள்ளதால், மேலும் கூடுதல் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

153—

## போக்குவரத்துப் பணிமனை

**வினா எண் 7728—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) செஞ்சி வட்டம், மேல்மலையனூரில் அரசுப் போக்குவரத்து பணிமனை ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஏற்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்-கோ-1)-ன் சார்பாக செஞ்சி வட்டம், மேல்மலையனூரில் பணிமனை தொடங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் தற்சமயம் இல்லை.



154—

## புதிய பேருந்து

**வினா எண் 7743—திரு. பி.எஸ். அருள்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் நகரம் சுற்றுலா நகரமாக இருப்பதால் சிதம்பரத்திலிருந்து பெங்களூருக்குப் புதிய பேருந்து இயக்கிடும் எண்ணம் அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) சிதம்பரத்திலிருந்து பெங்களூருக்குப் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

155—

## பேருந்து வசதி

**வினா எண் 7832—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, ஏவலூர் கிராமத்திற்குப் பேருந்து வசதி செய்திட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம் கோட்டம்-1)-ன் நிதி நிலை காரணமாக, ஏவலூர் கிராமத்திற்குப் புதிய பேருந்து வசதி செய்வதற்கான திட்டம் ஏதும் இல்லை.

156—

## பேருந்து இயக்கும் திட்டம்

**வினா எண் 7845—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியம், இரும்புலிக்குறிச்சி கிராமத்தில் உடையார்பாளையம்-செந்துறை வரை செல்லும் அனைத்துப் பேருந்துகளையும் சின்ன ஏரிக்கரை வழியாகச் செல்ல அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியம், இரும்புலிக்குறிச்சி கிராமத்தில் உடையார்பாளையம்—செந்துறை வரை செல்லும் அனைத்துப் பேருந்துகளையும் சின்ன ஏரிக்கரை வழியாக இயக்கும் பட்சத்தில் பயண நேரம் அதிகரிப்பதால் பயணிகள் பாதிக்கப்படுவார்கள். ஆகவே, மேற்கூறிய வழித்தடத்தில் பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

157—

## பேருந்து வசதி

**வினா எண் 8304—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியம், தளவாய்கூடலூர் கிராமம், திட்டக்குடி—சிலுப்பனூர், பேருந்து வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியம், தளவாய்கூடலூர் கிராமம், திட்டக்குடி—சிலுப்பனூர் வழித்தடம் புதிய வழித்தடம் ஆகும். இப்புதிய வழித்தடத்தில் பேருந்துகள் இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

158—

## விரைவுப் பேருந்து

**வினா எண் 8307—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதிக்குட்பட்ட செந்துறை ஒன்றியம், பெரியாக்குறிச்சி கிராமம் வழியாக, சென்னையிலிருந்து மாத்தூர் வரை வரும் விரைவுப் பேருந்தை செந்துறை வரை இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆண்டிமடம் தொகுதிக்குட்பட்ட செந்துறை ஒன்றியம், பெரியாக்குறிச்சி கிராமம் வழியாக, சென்னையிலிருந்து மாத்தூர் வரை வரும் விரைவுப் பேருந்தை செந்துறை வரை இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

159—

## கூடுதல் பேருந்துகள்

**வினா எண் 8702—திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகரில் வேலைக்குச் செல்லும் பெண்களுக்காக, "மகளிர் மட்டும்" என்ற வகையில் கூடுதல் பேருந்துகள் இயக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எத்தனை பேருந்துகள், எப்போது முதல் இயக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) [illegible]ூர் நகரில் வேலைக்குச் செல்லும் பெண்களுக்காக, "மகளிர் [illegible]ம்" என்ற வகையில் கூடுதல் பேருந்துகள் இயக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

**160—**

## அரசுப் பேருந்து

**வினா எண் 8746—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் முதல் மேல்மருவத்தூர் வரை அரசுப் பேருந்து விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திண்டிவனத்திற்கும், செங்கல்பட்டுக்கும் இடையே மேல்மருவத்தூர் உள்ளது. சேலத்திலிருந்து சென்னை செல்லும் அனைத்துப் பேருந்துகளும் இங்கு நின்று பயணிகளை ஏற்றியும், இறக்கியும் செல்கின்றன. சேலத்திலிருந்து மேல்மருவத்தூர் வரை தனியாகப் பேருந்து விடும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**161—**

## பேருந்து வசதி

**வினா எண் 8967—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) பண்ருட்டி தொகுதி-நண்டுகுழி கிராமத்திலிருந்து விருத்தாச்சலம் வழியாக நெய்வேலி டவுன்ஷிப் வரை பேருந்து வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி-நண்டுகுழி கிராமத்திலிருந்து விருத்தாச்சலம் வழியாக நெய்வேலி நகரம் வரை உள்ள சாலைகள் பேருந்து இயக்கத்திற்கு முற்றிலும் தகுதியற்ற நிலையில் இருப்பதால், நண்டுகுழி கிராமத்திலிருந்து பேருந்து இயக்கிட வாய்ப்பு இல்லாததால், பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**162—**

## புறநகர்ப் பேருந்து

**வினா எண் 9025—திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், தருமபுரியிலிருந்து நல்லம்பள்ளி, பாகல்பட்டி வழியாக, பாப்பிரெட்டிப்பட்டிக்குப் புறநகர்ப் பேருந்து இயக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரியிலிருந்து நல்லம்பள்ளி, பாகல்பட்டி வழியாக, பாப்பிரெட்டிப்பட்டி வரை உள்ள வழித்தடம் புதிய வழித்தடமாகையால் பேருந்துகள் இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**163—**

## பேருந்து வசதி

**வினா எண் 9030—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதிக்குட்பட்ட செந்துறை ஒன்றியம், ஈச்சங்காடு கிராமத்திற்கு விருத்தாச்சலம்-ஈச்சங்காடு வரை இயங்கிக் கொண்டிருந்த பேருந்தை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆண்டிமடம் தொகுதிக்குட்பட்ட செந்துறை ஒன்றியம், ஈச்சங்காடு கிராமத்திற்கு விருத்தாச்சலம்-ஈச்சங்காடு வரை தற்காலிகமாக இயங்கிக் கொண்டிருந்த பேருந்தை மீண்டும் இயக்கிடும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**164—**

## துறைமுகம் செப்பனிடும் பணி

**வினா எண் 9454—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினத்தில் துறைமுகம் செப்பனிடும் பணியை விரைவாக முடிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

ஆம்.

**165—**

## புதிய பேருந்து

**வினா எண் 9631—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர்-சென்னைக்கு அரசினால் இயக்கப்படும் அரசு விரைவுப் பேருந்து மிகவும் பழுதடைந்துள்ளது அரசின் கவனத்திற்கு தெரியுமா?



(ஆ) மேற்படி பேருந்துகளுக்குப் பதில் புதிய பேருந்து விட அரசிடம் திட்டம் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) கரூர்-சென்னை வழித்தடத்தில் செம்மையாக இயங்கக்கூடிய பேருந்துதான் இயக்கப்பட்டு வருகிறது.

(ஆ) மற்றும் (இ) இக்கேள்விகள் எழாது.

**166—**

## விரைவுப் பேருந்து

**வினா எண் 9632—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர்மலை தொகுதி, வேலூர் நகரிலிருந்து சென்னைக்கு இயங்கிக் கொண்டிருந்த அரசு விரைவுப் பேருந்து நிறுத்தப்பட்டது குறித்து அரசின் கவனத்திற்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதனை மீண்டும் இயக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கபிலர்மலை தொகுதி, வேலூர் நகரிலிருந்து சென்னைக்கு இயங்கிக் கொண்டிருந்த அரசு விரைவுப் பேருந்து தடம் எண் 432, 2 நடைகளாக 17-2-1988 முதல் இயக்கப்பட்டு வந்தது. பின் அத்தடப் பேருந்தைப் பயன்படுத்திடப் போதிய பயணிகள் இல்லாத காரணத்தால் வருவாய் இழப்பு ஏற்பட்டதன் காரணமாக 1-7-1989-ல் பேருந்து நிறுத்தப்பட்டது. இப்பேருந்தை மீண்டும் இயக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

167—

## பேருந்து வசதி

**வினா எண் 9697—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பாப்பாரப்பட்டி, செக்கோடி வழியாக நகரப் பேருந்து எண் 47 தருமபுரி செல்வதை, பள்ளிப்பட்டிக்கு அருகில் உள்ள கரும்பணம்பட்டி வழியாக தருமபுரி செல்ல அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் உள்ள கரும்பணம்பட்டி கிராமம், பள்ளிப்பட்டி-செக்கோடி சாலையில் கரும்பணம்பட்டி பிரிவிலிருந்து 1.0 கி.மீ. தொலைவு நடைபயண தூரத்தில் உள்ளதால், அத்தடத்தில் பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

168—

## நகரப் பேருந்து

**வினா எண் 9712—திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாழப்பாடியிலிருந்து கம்மாளப்பட்டிக்குப் புதியதாக ஒரு நகரப் பேருந்து வழித்தடம் ஏற்படுத்தும் திட்டம் அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஏற்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வாழப்பாடியிலிருந்து கம்மாளப்பட்டிக்குப் புதியதாக ஒரு நகரப் பேருந்து வழித்தடம் ஏற்படுத்தும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



169—

## பேருந்து வசதி

**வினா எண் 10916—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறையிலுள்ள "கிராஸ் ஹில்ஸ்" பகுதிக்குச் சுற்றுலாப் பயணிகள் சென்று வரப் பேருந்து வசதி செய்து தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

வால்பாறை பகுதியில் அக்காமலையிலிருந்து 10 கி.மீ. தொலைவில் உள்ள "கிராஸ் ஹில்ஸ்" என்ற பகுதி அடர்ந்த வனப் பகுதியாக இருப்பதாலும், சாலை சிறு வாகனங்கள் செல்லக்கூடியதாக உள்ளதாலும், பயணிகள் பேருந்துகள் இயக்க இயலாத நிலை உள்ளது.

170—

## பேருந்து வசதி

**வினா எண் 10944—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், காங்கேய நகரம் ஊராட்சி ஆலடிக்கருப்பூர் கிராமத்திற்குப் பேருந்து வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், காங்கேய நகரம் ஊராட்சி ஆலடிக்கருப்பூர் கிராமத்திற்குப் பேருந்து வசதி செய்து கொடுக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

171—

## கூடுதல் பேருந்து

**வினா எண் 10972—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், கூந்தலூர் ஊராட்சி, கடமங்குடி கிராமத்தில் பேருந்து வசதி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், கூந்தலூர் ஊராட்சி, கடமங்குடி கிராமத்திற்குப் பொது மக்களின் தேவைக்கேற்ப, போதுமான அளவு பேருந்து வசதி உள்ளது. எனவே, கடமங்குடி கிராமத்திற்குக் கூடுதல் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

172—

## பேருந்து வசதி

**வினா எண் 11008—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், நெம்மேலி ஊராட்சிக்குப் பேருந்து வசதி செய்து தர அரசு உதவுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

குத்தலாம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், நெம்மேலி ஊராட்சிக்குப் பேருந்து வசதி செய்து தரும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.



173—

## புதிய பேருந்துகள்

**வினா எண் 11125—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடியிலிருந்து சென்னை செல்லும் அரசு விரைவுப் பேருந்துகள் மிகவும் பழுதடைந்த நிலையிலுள்ளதை மாற்றி, புதிய பேருந்துகளை இயக்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மன்னார்குடி-சென்னை வழித்தடத்தில் நல்ல நிலையில் உள்ள அரசு விரைவுப் பேருந்துகள்தான் இயக்கப்பட்டு வருகின்றன.

174—

## கூடுதல் நகரப் பேருந்துகள்

**வினா எண் 11224—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பிளியனூர் ஊராட்சி, பிக்கம்பட்டிக்கு நடப்பாண்டில் கூடுதலாக நகரப் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பிளியனூர் ஊராட்சி, பிக்கம்பட்டிக்கு நடப்பாண்டில் நிதி நிலைமையின் காரணமாகக் கூடுதல் நகரப் பேருந்துகள் இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

175— [2002 மே 10

## கப்பல் போக்குவரத்து

**வினா எண் 12802—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் கப்பல் போக்குவரத்தை மேம்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தனியார் முதலீட்டின் மூலம் தமிழகக் கடலோரங்களில் சிறு துறைமுகங்கள் அமைக்க அரசால் அனுமதிக்கப்படுகிறது. இதன்படி எண்ணூர், கடலூருக்கருகே பி.ஓய் 3 திருக்கோபுரம், திருக்கடையூர் புன்னக்காயல், மனப்பாடு, கடலூர், நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் நிறுவப்பட்டுள்ளன. குளச்சல் துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய மலேசிய அரசிடமிருந்து சாத்தியக்கூறு அறிக்கை பெறப்பட்டு மதிப்பாய்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அவர்களது பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

176—

## புதிய வழித்தடப் பேருந்து

**வினா எண் 12825—திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ராணிப்பேட்டை தொகுதி, ஆந்திர எல்லைக்கு அருகில் உள்ள தாதிரெட்டிப்பள்ளியில் இருந்து மேல்பாடி, திருவலம் வழியாக சென்னைக்குப் புதிய வழித்தடப் பேருந்து இயக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2002 மே 10]

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ராணிப்பேட்டை தொகுதி, ஆந்திர எல்லைக்கு அருகில் உள்ள தாதிரெட்டிப்பள்ளியில் இருந்து மேல்பாடி, திருவலம் வழியாக, சென்னைக்குப் புதிய வழித்தடப் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

177—

## கூடுதல் பேருந்து

**வினா எண் 13801—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரம் முதல் மேச்சேரி வரை கூடுதலாகப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரம் முதல் மேச்சேரி வரை கூடுதலாகப் பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

178—

## பேருந்து வசதி

**வினா எண் 14184—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடியிலிருந்து குள்ளம்பட்டி, தண்ணீர்தாசனூர் வழியாக அந்தியூருக்குப் பேருந்து வசதி ஏற்பாடு செய்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

எடப்பாடியிலிருந்து குள்ளம்பட்டி, தண்ணீர்தாசனூர் வழியாக அந்தியூருக்குப் பகுதிவாரியாகப் போதுமான பேருந்து வசதி உள்ளதால், இவ்வழித்தடத்தில் நேரடிப் பேருந்து வசதி அளித்திடும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**179—**

## அரசுப் பேருந்துகள்

**வினா எண் 14839—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கர்நாடக மாநிலம், சாம்ராஜ் நகர் மாவட்டம், கொள்ளேகால் வட்டம், அதிகமாகத் தமிழர்கள் வாழும் நெல்லூர், கடலூர், ஊக்கியம், ஜல்லிப்பாளையம் போன்ற 20-க்கும் மேற்பட்ட ஊர்களுக்கு, சேலம் மாவட்டம் மேட்டூர், மாதேஸ்வரன்மலை, ஒடக்கம்பள்ளம், மார்ட்டள்ளி வழியாக, தமிழக அரசுப் பேருந்துகள் இயக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கர்நாடக மாநிலம், சாம்ராஜ் நகர் மாவட்டம், கொள்ளேகால் வட்டத்தில் நெல்லூர், கடலூர், ஊக்கியம், ஜல்லிப்பாளையம் போன்ற 20-க்கும் மேற்பட்ட ஊர்களுக்கு, சேலம் மாவட்டம் மேட்டூர், மாதேஸ்வரன்மலை, ஒடக்கம்பள்ளம், மார்ட்டள்ளி வழியாக, தமிழக அரசுப் பேருந்துகள் இயக்கும் திட்டத்தை இரு மாநிலங்களுக்கிடையே கூடுதல் ஒப்பந்தம் ஏற்படும்பொழுது அரசு பரிசிலிக்கும்.

**180—**

## சமுதாயத் தோட்டங்கள்

**வினா எண் 328—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) சமூகக் காடுகள் வளர்ப்பு மூலம் ஏரி மற்றும் குளங்களில் ஏற்படுத்தப்பட்ட சமுதாயத் தோட்டங்கள் யார் மூலம் பராமரிக்கப்படுகின்றன?

(ஆ) அதனால் அரசுக்கு நல்ல வருமானம் கிடைத்துள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) சமூகக் காடுகள் தோட்டங்களை (கருவேல் மரங்கள்) பாதுகாத்துப் பராமரிக்க, சிடா திட்டத்தின்கீழ் கிராம சமூக வனப் பணியாளர்கள் மற்றும் தோட்டக் காவலர்கள் தினக்கூலி அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டனர். சிடா திட்டத்திற்குப்பின் இப்பணியிடங்கள் ஆண்டுதோறும் அரசின் ஒப்புதலுடன் தொடரப்படுகின்றது.

(ஆ) கருவேல் தோட்டங்கள் மூலம் ஆண்டுதோறும் அரசுக்குச் சுமார் ரூ.10.00 கோடி வருவாய் கிடைக்கிறது. 2000-2001 ஆம் ஆண்டு நடந்து முடிந்த பொது ஏலத்தில் கருவேல் தோட்டங்கள் விற்பனை மூலம் சுமார் ரூ.13.35 கோடி அரசுக்கு வருவாய் கிடைத்துள்ளது.

**181—**

## காடு வளர்ப்புத் திட்டம்

**வினா எண் 1068—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜப்பான் நாட்டு நிதியுதவியோடு காடு வளர்க்கும் திட்டம் செயல்படுத்தியதில் புதிதாக எத்தனை செடிகள் நடப்பட்டன?

(ஆ) நடப்பட்ட செடிகளின் பெரும் பகுதி உலர்ந்து போனதை அரசு அறியுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஜப்பானியப் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கியின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் 1997-98 முதல் கடந்த நான்கு ஆண்டுகளில் 1040 இலட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. இதில் 848 இலட்சம் கன்றுகள் உயிருடன் உள்ளன. இது 82 விழுக்காடு உயிர்ச் செடிகள் இருப்பதைக் காட்டுகிறது. கடந்த நான்கு ஆண்டுகளில், உயிர்ச் செடிகள் விழுக்காடு 71 முதல் 90 வரை காணப்படுகிறது.

182—

## சந்தன மரங்கள்

**வினா எண் 1070—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜவ்வாது மலையில் சந்தன மரங்கள் முழுமையாக அழிந்து போவதை அரசு அறியுமா?

(ஆ) அப்பகுதியில் சந்தன மரங்களை வளர்க்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஜவ்வாது மலையில் சந்தன மரங்கள் வெட்டப்படுவதை அரசு அறியும்.

(ஆ) கடந்த மூன்று ஆண்டுகளில் வேலூர், திருவண்ணாமலை கோட்டங்களை உள்ளடக்கிய வேலூர் வன மண்டலத்தில் உள்ள வனப் பகுதிகளில் சந்தன மரத் தோட்ட உற்பத்தித் திட்டத்தின்கீழ் 550 எக்டேரில் சந்தன மர விதைகள் புதர்களில் தூவப்பட்டு சந்தன மரங்களின் வளத்தினைப் பெருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.



183—

## மரம் வளர்க்கும் திட்டம்

**வினா எண் 1071—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏரிகளில் கருவேல் செடிகளை நட்டு மரம் வளர்க்கும் திட்டம் செயல்படாததை அரசு அறியுமா?

(ஆ) மீண்டும் ஏரிகளில் வனத் துறை சமூக நலக் காடுகள் திட்டம் மூலம் மரம் வளர்க்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) அரசுக்குச் சொந்தமான ஏரி மற்றும் கண்மாய்களில் தூர்வாரும் பணிக்காக, கருவேல் மரங்கள் நடுவதற்கு அரசு தடை விதித்ததன் காரணமாக, 1997 ஆம் ஆண்டு முதல் மரம் நடும் பணி நிறுத்தப்பட்டது. பின் 25-1-2000 முதல் ஏரி, குளங்கள், கால்வாய்களின் கரைகளில் மட்டும் (படுகைகளில் அல்ல), தேர்ந்தெடுக்கப்பட்ட மர வகைகளை நடவு செய்ய அனுமதி வழங்கப்பட்டது. தற்போது ஏரி, குளங்கள், கால்வாய்களின் படுகைகளில் கருவேல் மரங்கள் நடவு செய்ய விதிக்கப்பட்டுள்ள தடையினை நீக்கும் கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளது.

184—

## வனக் காவலர்கள்

**வினா எண் 1117—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காலியிடமேயின்றி முறைகேடாக நூற்றுக்கு மேற்பட்ட வனக் காவலர்களை வனச் சரக அலுவலராக நியமனம் செய்ததை அரசு அறியுமா?

[2002 மே 10

(ஆ) தவறு செய்தவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை —

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

**அறிக்கை**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு வனத் துறையில் வனவர் பதவியிலிருந்து சரகர் பதவிக்கு 15-8-1998 ஆம் தேதிய நிலையில், தகுதிபெற்ற வனவர்களிலிருந்து 1999-2000 ஆம் ஆண்டுக்கான தேர்வுப் பட்டியல் 25-3-2000-ஆம் தேதியிட்ட செயல் முறை ஆணையின்படி வெளியிடப்பட்டது. இந்தப் பட்டியலில் 139 வனவர்கள், சரகர் பதவி உயர்வுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். தமிழ்நாடு வனச் சார்நிலைப் பணி விதிகளின்படி சரகர் பதவிக்குத் தேர்வு செய்யப்பட்டவர்கள், சரகர் பதவியில் சேருவதற்கு முன்பாக தென் பிராந்திய வனச் சரகர் கல்லூரியில் ஆறு மாத கால சரகர் பயிற்சியினை முடிக்கவேண்டும். இதன்படி தேர்வுப் பட்டியலில் தேர்வு செய்யப்பட்டவர்களின் முதுநிலை வரிசைப்படி முதல் அணியாக 73 வனவர்கள் கோவை, தென் பிராந்திய வனச் சரகர் கல்லூரியில் 10-4-2000 முதல் தொடங்கும் பயிற்சிக்கு அனுப்பப்பட்டனர். பயிற்சி முடித்துத் திரும்பும் வனவர்களுக்குத் துறையில் உள்ள சரகர் பணி காலியிடங்களுக்கு ஏற்ப தற்காலிகமாக சரகராகப் பதவி உயர்வு அளித்து ஆணைகள் வழங்கப்பட்டன. தேர்வுப் பட்டியலில் அடுத்து முதுநிலை வரிசைப்படி 66 வனவர்கள், இரண்டாவது அணியாக 1-8-2000 முதல் தொடங்கும் பயிற்சிக்கு அனுப்பப்பட்டனர். துறையில் 1-4-1992 முதல் சரகராகப் பணியில் சேர்ந்தவர்கள், ஆறு மாத காலப் பயிற்சி முடிக்காதவர்கள் 13-11-2000 முதல் தென் பிராந்திய வனக் கல்லூரியில் தொடங்கும் பயிற்சிக்கு அனுப்பப்பட்டனர். இவர்கள் பயிற்சிக்குச் செல்வதால் ஏற்படும் சரகர் பணி காலியிடங்களைக் கருத்தில் கொண்டு, ஏற்கெனவே பயிற்சி முடித்து, பணி காலியிடமின்மை காரணமாக வனவராகப் பணிபுரிந்து வரும் 56 வனவர்களுக்குத் தற்காலிகமாக சரகர் பதவி அளித்து ஆணைகள் வழங்கப்பட்டன. இரண்டாவது அணியாகப் பயிற்சிக்குச் சென்ற வனவர்களில் 65 வனவர்களுக்கு சரகர் பணியிட காலியின்மை காரணமாக வனவராகவே பணிபுரிய பணியிட ஒதுக்கீடு ஆணைகள் வழங்கப்பட்டன. மண்டலங்களில் சரகர்கள் நீண்ட கால மருத்துவ விடுப்பில் சென்றுள்ளதாகவும், இதனால் சரக வேலைகள், வனப் பாதுகாப்பு பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து, உடன் சரகர்களை நியமிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டதற்கிணங்கவும், தமிழ்நாடு வன அலுவலர்கள் சங்கம் (அரசு அங்கீகாரம் பெற்றது) கேட்டுக்கொண்டதற்கிணங்கவும், தேர்வுப் பட்டியலின்படி பயிற்சி முடித்துள்ள வனவர்களுக்குத் தற்காலிமாக சரகர் பதவி உயர்வு அளிக்கப்பட்டு, பணி ஆணைகள் வழங்கப்பட்டன. மூன்றாவது அணியாக பயிற்சிக்கு அனுப்பப்பட்டு 12-5-2001-ல் பயிற்சியினை முடிக்கும் முதுநிலை சரகர்களுக்கு (Senior most Rangers) பணியிட ஒதுக்கீடு ஆணைகள் வழங்கப்பட்டு, அவர்கள் பணியில் சேருவதற்கு ஏதுவாக தற்காலிக சரகராகப் பணிபுரிந்து வரும் இளநிலையில் உள்ள சரகர்கள் (Junior most Rangers) முதுநிலை வரிசைப்படி (47 வனவர்கள்) வனவராகப் பதவியிறக்கம் செய்து ஆணை வழங்கப்பட்டது.



2002 மே 10]

2. மேலே விரிவாக்கப்பட்ட நிலையில், நடைமுறையில் உள்ள விதிகளின்படி ஏற்படும் சரகர் பணிக் காலியிடத்தைக் கருத்திற்கொண்டு, தேர்வுப் பட்டியல் வெளியிடப்பட்டது. பட்டியல் காலாவதியாவதற்குள் இவர்களுக்கு சரகர் பதவி உயர்வு ஆணைகள் வழங்கப்பட வேண்டும். துறையில் பல திட்டப் பணிகள் மூடப்பட்டதால் அநேக சரகர் பணியிடங்கள் குறைக்கப்பட்டன. எனவே, இதனால் தற்காலிகப் பதவி உயர்வில் சரகராக (நிர்வாகக் காரணங்களால்) பதவி அளிக்கப்பட்டவர்களுக்குப் பணிக் காலியிடமின்மை காரணமாக வனவராகப் பதவி இறக்கம் செய்து ஆணைகள் வழங்கப்பட்டன. துறையில் இனி ஏற்படும் சரகர் பணியிடங்களுக்கு ஏற்ப பட்டியல் முதுநிலை வரிசைப்படி உரிய காலத்தில் சரகர் பதவி உயர்வு ஆணைகள் வழங்கப்படும். அந்நிலையில், நடைமுறையிலுள்ள அனைத்து விதிமுறைகளும் சரியான முறையில் பின்பற்றப்பட்டுள்ளன என்பதுடன், நிர்வாகக் காரணங்கள் மற்றும் பணியாளர்கள் நலன்கள் கருத்திற்கொள்ளப்பட்டு, பதவி உயர்வு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. முறைகேடான நடவடிக்கை எதுவும் இல்லை.

3. முதன்மைத் தலைமை வனப் பாதுகாவலர் செயல் முறை ஆணை எண் ஆ1/73396/98, நாள் 25-3-2000 ஆம் தேதியில், வனவர் நிலையிலிருந்து பதவி உயர்வு மூலம் சரகர் பதவி உயர்வு அளிப்பது குறித்து வெளியிடப்பட்ட பட்டியல், அரசாணை எண் 368, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள் 18-10-1993-ல் குறிப்பிட்ட அறிவுரைகள் மற்றும் இதர திருத்த ஆணைகளுக்கு உட்பட்டுத் தயாரிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு வனச் சார்நிலைப் பணி விதிகளில்

[2002 மே 10

வனச் சரகர் பதவிக்கு நேரடி நியமனம் 45 விழுக்காடுகளில் பதவி உயர்வு மூலம் 54 விழுக்காடும் சேர்த்து ஆக (45+54) 99 விழுக்காடு மட்டும் சரகர் பணியிடம் நிரப்பப்பட்டு வருகிறது. 2001-2002 ஆம் ஆண்டிற்கான நேரடிப் பணி நியமனம் மூலம் சரகர் பணி நிரப்பப்படுவதற்காக, காலியிட மதிப்பீட்டினை அரசுக்கு முதன்மைத் தலைமை வனப் பாதுகாவலர் கடிதம் எண் ஆ1/79142/2000, நாள் 20-4-2001-ல் அனுப்பப்பட்டுள்ளது. அது 1-6-2001 தேதியிட்ட அரசுக் கடிதம் எண் 13011/வனம்2/2001-ல் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அமைச்சுப் பணியாளர் நிலையில் இருந்து மாறுதல் முறையில் சரகர் பணி நியமனம் 1% துறைத் தேர்வுக் கமிட்டி அமைத்துத் தேர்வு செய்யப்பட வேண்டியுள்ளது.

185—

**தார்ச் சாலை**

**வினா எண் 1151—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், ஜவ்வாது மலைப் பகுதியில் புதூர் நாடு, புங்கலூர் நாடு, நெல்லிவாசல் நாடு மலைகளுக்குச் செல்லும் தார்ச் சாலை எப்போது செப்பனிடப்படும்?

(ஆ) அதற்கான மதிப்பீடு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைத் திட்டத்தில் இச்சாலைப் பணிக்குத் தேவைப்படும் நிதியினை ஒதுக்கீடு செய்தால் செப்பனிடப்படும்.

(ஆ) திட்ட மதிப்பீடு ரூபாய் 200 இலட்சங்கள் ஆகும்.



2002 மே 10]

186—

**தார்ச் சாலை**

**வினா எண் 1153—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், ஜவ்வாது மலைப் பகுதியில், ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியம், காவலூரில் இருந்து மந்தாரக்குட்டைக்குச் செல்லும் சாலை தார்ச் சாலையாக எப்போது மாற்றப்படும்?

(ஆ) அதற்கான மதிப்பீடு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) காவலூரிலிருந்து மந்தாரக்குட்டைக்குச் செல்லும் சாலையினை தார்ச் சாலையாக மாற்றும் உத்தேசம் ஏதுமில்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

187—

**ஊதுபத்தித் தொழிற்சாலை**

**வினா எண் 1925—திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, சந்தன எண்ணெய் ஆலையில் இருந்து வெளியாகும் கழிவிலிருந்து வாசனைத் திரவியம், ஊதுபத்தி தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவ அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) இல்லை

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**188—**

**பறவைகள் சரணாலயம்**

**வினா எண் 2244—திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்தில் சமூக விரோதிகளால் பறவைகள் வேட்டையாடப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைத் தடுக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்தில் சமூக விரோதிகளால் பறவைகள் ஏதும் வேட்டையாடப்படுவதில்லை.

(ஆ) சமூக விரோதிகளால் பறவைகள் ஏதும் வேட்டையாடப்படாததால், இவ்வினா எழவில்லை.

**189—**

**சந்தன மரம்**

**வினா எண் 2246—திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேக்கு மரம் போல் சந்தன மரமும் அரசு பதிவுடன் தனியார் வளர்க்க அனுமதி அளிக்க அரசு முன்வருமா?



விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

தேக்கு, சந்தன மரம் போன்ற எந்தவித மரத்தினையும் தனியார் நிலங்களில் வளர்க்க அரசின் முன் அனுமதி தேவையில்லை. எனவே, சந்தன மரத்தினைத் தனியார் தங்கள் நிலங்களில் எந்தவிதத் தடையுமின்றி வளர்க்கலாம். ஆனால் அம்மரங்கள் அனைத்தையும் அரசுக்குத்தான் விற்க முடியும்.

**190—**

**மரக்கன்றுகள் நடும் திட்டம்**

**வினா எண் 2287—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூர் மாவட்டத்தில், மாவட்டச் சாலை மற்றும் கிராமப்புறச் சாலை ஓரங்களில் மரக்கன்றுகள் நடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**191—**

**சந்தன மரக் கிடங்கு**

**வினா எண் 2696—திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் ஜவ்வாது மலையில் விளையும் சந்தன மர ஏலத்தின் மூலம் கிடைக்கும் வருவாய் எவ்வளவு?

(ஆ) அந்த நிதியை, திருப்பத்தூர் தொகுதி மேம்பாட்டிற்கு அரசு பயன்படுத்துமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) கடந்த ஐந்து ஆண்டுகளில் திருப்பத் [illegible] சந்தன மரக் கிடங்கில் நடைபெற்ற சந்தனக் கட்டைகள் ஏ[illegible] மற்றும் சில்லரை விற்பனை மூலமாக அரசுக்குக் கிடைத்த வருவாய் ரூ.84,45,72,825/- ஆகும்.

(ஆ) சந்தனக் கட்டைகள் விற்பனை மூலம் கிடைத்த வருவாயினை நேரிடையாக திருப்பத்தூர் தொகுதிக்குப் பயன்படுத்த இயலாது.

192—

## வனப் பாதுகாப்புச் சட்டம்

**வினா எண் 2700—திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, ஜவ்வாது மலை புதூர் நாடு - இராஜபாளையம், 8 கி.மீ. மலைப் பாதையை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, ஜவ்வாது மலை புதூர் நாடு-இராஜபாளையம் 8 கி.மீ. மலைப் பாதை அமைத்துத் தர வன நிலம் தேவைப்படுவதால் அதற்கு வனப் பாதுகாப்புச் சட்டம் 1980-ன்படி மைய அரசின் முன்னனுமதி பெற வேண்டும்.



(ஆ) இச்சாலையினை வனத் துறையில் அமைத்துத் தர இயலாது. எனவே, இச்சாலையினை ஊரக வளர்ச்சித் துறை/நெடுஞ்சாலை மற்றும் கிராமச் சாலைகள் துறையினர் மூலம் செய்ய முன்வந்து தக்க பிரேரணையை உரிய படிவத்தில் அனுப்பி வைத்தால், மைய அரசின் அனுமதி பெறத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

193—

## நொய்யல் ஆறு

**வினா எண் 2822—திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிங்காநல்லூர் தொகுதிக்குட்பட்ட வெள்ளலூர் கிராமம், நொய்யல் ஆற்றில் கோவை மாநகரத்தின் கழிவு நீர் கலந்து மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவதால், அக்கழிவு நீரை குழாய்கள் மூலம் மாற்று இடத்திற்கு திருப்பி, நொய்யல் ஆற்றைத் தூய்மைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

ஆம்

194—

## தன்னார்வத் தொண்டு அமைப்புகள்

**வினா எண் 2930—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தன்னார்வத் தொண்டு அமைப்புகளுக்கு மரம் நடுவதற்காக மரக்கன்றுகள் வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

தமிழ்நாட்டில் தன்னார்வத் தொண்டு அமைப்புகளுக்கு மரம் நடுவதற்காக மரக்கன்றுகள் வழங்கும் திட்டங்கள் ஏதும் அரசிடம் இல்லை. இருப்பினும், தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் மற்றும் மாசினைத் தணித்து, சுற்றுப்புறத்தினை மேம்படுத்த பசுமைத் திட்டம் போன்ற திட்டங்கள் செயலாக்கத்தின்போது, மரங்கள் நடுதலின் முக்கியத்துவம், அவை எவ்வாறு சுற்றுச்சூழலில் சமநிலையினைப் பாதுகாக்க உதவியாக உள்ளது என்பது குறித்த விழிப்புணர்ச்சியினை மக்களிடையே ஏற்படுத்தத் தன்னார்வத் தொண்டு அமைப்புகள் வனத் துறையுடன் இணைந்து செயலாற்றக் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**195—**

## வனத் துறை

**வினா எண் 3349—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதி, உத்தப்பநாயக்கனூர் கொக்குளம் பிரதானச் சாலையிலிருந்து பிரிந்து, கீழப்பட்டி கணவாய் சாலையிலிருந்து நாராயணபுரம் வரையிலுள்ள வனத் துறைக்குச் சொந்தமான சாலையை அமைக்க அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

கீழப்பட்டியிலிருந்து நாராயணபுரம் வரை சுமார் 3 பர்லாங் நீளத்திற்கும், 18 அடி அகலத்திற்கும் சாலை செல்கிறது. வனப் பகுதிக்குள் செல்லும் இச்சாலையில் பொதுமக்கள், கால்நடைகள் மற்றும் மாட்டு வண்டிகள் செல்வதற்கு மட்டும் அனுமதிக்கப்பட்டுள்ளன.



**196—**

## வன விலங்கு சரணாலயம்

**வினா எண் 3465—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள முதுமலை வன விலங்கு சரணாலயத்தைச் சுற்றுலாப் பயணிகள் சுற்றிப் பார்க்கப் போதுமான வசதிகள் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளைக் கவர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டிலுள்ள முதுமலை வன விலங்கு சரணாலயத்தைச் சுற்றுலாப் பயணிகள் சுற்றிப் பார்க்கப் போதுமான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

(ஆ) அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளைக் கவர அரசு உரிய நடவடிக்கை எடுத்துள்ளது.

**197—**

## தோட்டக் காவலர்கள்

**வினா எண் 3672—டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2002 மே 10

சமூக வனப் பிரிவில் சமூக வன ஊழியர்கள், தோட்டக் காவலர்களாக தினக்கூலி அடிப்படையில் வேலை செய்தவர்களை வனத் துறையில் காலியான பணியிடங்களுக்கு அரசு பணி நியமனம் செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

**அறிக்கை**

அரசாணை (நிலை) எண் 64, சுற்றுப்புறம் மற்றும் வனத் (வனம்2)துறை, நாள் 8-3-1999-ன்படி தமிழில் எழுதப் படிக்கத் தெரிந்த தினக்கூலி அடிப்படையில் பணிபுரியும் அனைத்து சமூக வனப் பணியாளர்கள் மற்றும் தோட்டக் காவலர்கள் நிரந்தரப் பணியில் நியமனம் செய்யப்பட மாநில அளவிலான முதுநிலைப் பட்டியல் தயார் செய்து டிசம்பர் '99-ல் வெளியிடப்பட்டது. அதில் 5,442 பேர் இடம் பெற்றிருந்தனர். அதில் முதல் கட்டமாக, 401 நபர்களுக்குப் பணி ஆணை வழங்கப்பட்டு, 6-1-2000 வரை 219 நபர்கள் பணியில் சேர்ந்தனர். இந்நிலையில், மேற்படி பட்டியலில் இடம் பெற்றவர்களுள் எஸ்.எஸ்.எல்.சி. கல்வித் தேர்ச்சி பெற்ற ஒரு சாரார், எஸ்.எஸ்.எல்.சி. கல்வித் தகுதியுள்ளவர்களுக்கு மட்டுமே பணி நியமனம் வழங்கப்பட வேண்டும் எனவும், அரசாணை எண் 64, சுற்றுப்புறம் மற்றும் வனத் துறை, நாள் 8-3-1999-ஐ ரத்து செய்யுமாறும், அரசாணை எண் 297, சுற்றுப்புறம் மற்றும் வனத் துறை, நாள் 28-11-1994-ன்படி தங்களுக்கு முன்னுரிமை அளித்துப் பணி நியமனம் அளிக்கப்பட வேண்டும் எனவும், மற்றும் அரசாணை எண் 64, சுற்றுப்புறம் மற்றும் வனத் துறை, நாள் 8-3-1999-ன் செயல்பாட்டிற்கு இடைக்காலத் தடையாணை பிறப்பிக்கப்பட வேண்டும் எனவும், ஓ.ஏ.எண் 8191/99-ல் மாநில நிர்வாகத் தீர்ப்பாயத்தில் கேட்டு இருந்தனர். மாநில நிர்வாகத் தீர்ப்பாயம் முதன்மைத் தலைமை வனப் பாதுகாவலரால் பணி நியமனம் செய்வதற்கு இடைக்காலத் தடை விதித்து உள்ளது. வழக்கு முடிவுற்ற பின், தீர்ப்பாயத்தின் ஆணைக்கேற்ப மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.



2002 மே 10]

198—

**தமிழக வனத் துறை**

**வினா எண் 3673—டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக வனத் துறையில் கலைக்கப்பட்ட ஆறு வனக் கோட்டங்களை மீண்டும் கொண்டு வர அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

திருவள்ளூர், திண்டுக்கல் மற்றும் அரியலூரைத் தலைமையிடங்களாகக் கொண்டு செயல்பட்டு வந்த 3 ஊரக விறகு மரக் கோட்டங்கள் மட்டும், மத்திய அரசுப் பணியாளர் செலவினத்திற்குப் போதுமான அதிக நிதியுதவி அளிக்காததால் மூடப்பட்டுள்ளன. அக்கோட்டங்களை மீண்டும் கொண்டு வர இயலாத நிலை உள்ளது.

199—

**காட்டு மிருகங்கள்**

**வினா எண் 5344—திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) காட்டு மிருகங்களை வேட்டையாடுபவர்களுக்குக் கடும் தண்டனை வழங்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) வன உயிரின வேட்டையாடலுக்கு முற்றிலுமாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது. எனவே, வன உயிரினங்களை வேட்டையாடுபவர்கள் மீது வன உயிரினப் பாதுகாப்புச் சட்டம் 1972-ன்கீழ் கடும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

(ஆ) வன உயிரினப் பாதுகாப்புச் சட்டம், 1972, அட்டவணை-1-ல் குறிப்பிட்டுள்ள வன உயிரினங்களை வேட்டையாடுபவர்கள்மீது வழக்கு பதிவு செய்து, நீதிமன்றத்தில் ஆஜர் செய்து நீதிமன்றம் மூலம் தண்டனை பெற்றுத் தரப்படுகிறது.

**200—**

**வன விலங்குகள்**

**வினா எண் 5345—திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வன விலங்குகளுக்கு வனப் பகுதிகளுக்குள்ளேயே நீர்த் தேக்கங்கள் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) வன விலங்குகளுக்கு வனப் பகுதிகளுக்குள்ளேயே தேவையான இடங்களில் நீர்த்தேக்கங்கள் அமைக்கும் பணிக்கு அரசாணை வழங்கப்பட்டு, வேலைகள் நடைபெற்று வருகின்றன.

## பட்டியல் 14*

**1—**

**அரசு கலைக் கல்லூரி**

**வினா எண் 2684—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.





(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கடற்கரைப் பகுதியில் அரசு கலைக் கல்லூரி ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசின் தற்போதைய நிதி நிலைமையின் காரணமாகப் புதிய அரசு கலைக் கல்லூரிகளைத் தொடங்குவதில்லை என அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது. எனவே, ராதாபுரம் வட்டம், கடற்கரைப் பகுதியில் அரசு கலைக் கல்லூரி தொடங்குவதற்கான வாய்ப்பு இல்லை.

**2—**

**மகளிர் கல்லூரி அமைத்தல்**

**வினா எண் 2698—திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் மகளிர் கல்லூரி அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

அரசின் தற்போதைய நிதி நிலைமையின் காரணமாக புதிய அரசு கலைக் கல்லூரிகளைத் தொடங்குவதில்லையென அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது. எனவே, வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் அரசு மகளிர் கல்லூரி அமைக்க வாய்ப்பில்லை.

**3—**

**மகளிர் கலைக் கல்லூரி**

**வினா எண் 11939—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி தொகுதியில் அரசினர் மகளிர் கலைக் கல்லூரி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர் :**

சேரன்மகாதேவி தொகுதியில் அரசினர் மகளிர் கலைக் கல்லூரி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு எதுவும் இல்லை. அரசின் தற்போதைய நிதிநிலைமையின் காரணமாகப் புதிய கலைக் கல்லூரிகளைத் தொடங்குவதில்லை என அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளதால், சேரன்மகாதேவி தொகுதியில் அரசு மகளிர் கலைக் கல்லூரி அமைப்பதற்கான வாய்ப்பில்லை.

4—

## ஊதிய மானியத் தொகை

**வினா எண் 19545—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள அரசு மற்றும் உதவி பெறும் கலைக் கல்லூரிகளுக்கு ஆசிரியர்கள், ஆசிரியர்கள் அல்லாத பணியாளர்களுக்கு ஊதியமாக ஆண்டுதோறும் எவ்வளவு தொகை வழங்கப்படுகிறது?

(ஆ) அத்துடன் வளர்ச்சிக்காகத் தனியார் மற்றும் அரசுக் கல்லூரிகளுக்குத் தனித்தனியாக எவ்வளவு தொகை வழங்கப்படுகிறது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர் :**

(அ) (1) அரசுக் கல்லூரி ஆசிரியர்களுக்கு ரூ. 112.29 கோடியும், ஆசிரியர் அல்லாத பணியாளர்களுக்கு ரூ. 15.95 கோடியும், ஆக மொத்தம் ரூ.128.24 கோடி ஆண்டுதோறும் ஊதியமாக வழங்கப்படுகிற மேற்கண்ட தொகை 2001-2002 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டதாகு

(2) உதவி பெறும் தனியார் கல்லூரி ஆசிரியர்களுக் ரூ.265.57 கோடியும், ஆசிரியர் அல்லாத பணியாளர்களுக்கு ரூ. 37.09 கோடியும். ஆக மொத்தம் ரூ.302.66 கோடி ஆண்டுதோறும் ஊதிய மானியமாக வழங்கப்படுகின்றது. மேற்கண்ட தொகை 2001-2002 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டதாகும்.

(ஆ) (1) அரசுக் கல்லூரிகளுக்கு வளர்ச்சிப் பணிக்காக 2001-2002-ல் ரூ.315.14 இலட்சமும் கட்டடங்கள் பராமரிப்பதற்காக 700.00 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது.



(2) உதவி பெறும் தனியார் கல்லூரிகளைப் பொறுத்தமட்டில் தனியாக வளர்ச்சிப் பணிகளுக்கென எவ்வித் தொகையும் வழங்கப் படுவதில்லை. இருப்பினும், உதவி பெறும் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கான அத்தியாவசியத் தேவைகளுக்காகத் (Providing basic amenities to students) தேவைப்படும் கல்லூரிகளுக்கு ரூ.10.00 இலட்சம் ஆண்டுதோறும் பிரித்து வழங்கப்படுகின்றது.

5—

## கும்பாபிஷேகம் நடத்துதல்

**வினா எண் 12128—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி, கோபாலசமுத்திரம் பேரூராட்சி, மேலஓமநல்லூர் கிராமத்திலுள்ள அருள்மிகு திருச்செந்தூர் சுப்பிரமணியசுவாமி கோயில் தேவஸ்தான உபகோயிலான அருள்மிகு ப்ரணவேஸ்வரர் கோயிலின் சேதமடைந்த சிலைகளைச் சீர் செய்து கும்பாபிஷேகம் நடத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலின் உபகோயில்களில் ஒன்றான அம்பாசமுத்திரம் வட்டம், ஓமநல்லூர் கிராமத்திலுள்ள அருள்மிகு ப்ரணவேஸ்வரர் திருக்கோயிலின் திருப்பணிக்கு ரூ. 7.30 இலட்சம் மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு அனைத்துத் திருப்பணி வேலைகளும் முடிக்கப்பட்டு விட்டன. ரூ. 94,500 மதிப்பீட்டில் பிரதானக் கதவு மற்றும் மூலஸ்தானக் கதவு புதியதாக அமைக்கும் பணி முடிவடையும் தறுவாயில் உள்ளது. மேலும் ரூ. 80,000 மதிப்பீட்டில் திருக்கோயிலில் விமானம் பழுது பார்த்தல் பணியும் முடிவடையும் தறுவாயில் உள்ளது. மேற்கண்ட பணிகள் அனைத்தும் முழுமையாக முடிக்கப்பட்டு, திருக்கோயிலுக்குக் குடமுழுக்கு எதிர்வரும் ஜூலை மாத இறுதிக்குள் நடத்திட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

6—

## சிகிச்சை

**வினா எண் 7201—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாச்சலம் தொகுதியில் சில அரசு மருத்துவமனைகளில் இரவு நேரங்களில் சிகிச்சை செய்ய வசதி இல்லாததால் நோயாளிகள் பாதிக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எல்லா அரசு மருத்துவமனைகளிலும் இரவு நேரங்களில் சிகிச்சை செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) விருத்தாச்சலம் தொகுதியில் விருத்தாச்சலம் அரசு மருத்துவமனை 24 மணி நேரமும் செயல்பட்டு வருகிறது. இது தவிர, அத்தொகுதியில் உள்ள ஆறு ஆரம்ப சுகாதார நிலையங்கள் காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை செயல்பட்டு வருகின்றன. மற்ற நேரங்களில் அவசர மருத்துவச் சேவைகளுக்காக ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர்கள் தலைமையிடத்தில் தங்கி இரவு நேரங்களிலும் ஆரம்ப சுகாதார நிலையத்தில் அவசர மருத்துவ சிகிச்சையினை மேற்கொண்டு வருகிறார்கள்.

(ஆ) வினா எழாது.

7—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 2853—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, புதுக்குடி ஊராட்சி, தெற்குக் கரைமேடு கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?



(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆண்டிமடம் தொகுதி, புதுக்குடி ஊராட்சி, தெற்குக் கரைமேடு கிராமம், ஆண்டிமடம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

8—

## குடிநீர்

**வினா எண் 4167—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், பக்கநாடு கிராமம், ஆதிதிராவிடர் தெரு, அருந்ததியர் தெரு மக்களுக்குக் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், பக்கநாடு கிராமம், ஆதிதிராவிடர் தெரு, அருந்ததியர் தெரு மக்களுக்குத் தற்போது கையிறைப்பான் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. மேலும், இக்குடியிருப்பிற்கு இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் காவிரிக் குடிநீர் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

9—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 4216—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, முத்தரசன்குப்பம் கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை— [2002 மே 10

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி ஒன்றியம், கீழ்மாம்பட்டு ஊராட்சியைச் சார்ந்த, முத்தரசன்குப்பம் குடியிருப்பில் உள்ள 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட இரண்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மூலம் தற்சமயம் நாளொன்றுக்கு, நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, இக்குடியிருப்பிற்குப் புதிய குடிநீர்த் திட்டம் மேற்கொள்வது பரிசீலனையில் இல்லை.

10—

## குடிநீர்த் திட்டப் பணிகள்

**வினா எண் 4260—திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை ஒன்றியம், கே. வல்லக்குண்டாபுரம், குடிதண்ணீர் தட்டுப்பாட்டைப் போக்க அரசு எடுக்கவுள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை ஒன்றியம், கொடுங்கியம் ஊராட்சி, கே.வல்லக்குண்டாபுரம் குடியிருப்புக்கு நடப்பு நிதியாண்டில் குடிநீர்த் திட்டம் செயலாக்க உத்தேசிக்கப்பட்டு ஆழ்குழாய்க் கிணறு நீராதாரம் அமைக்கப்பட்டுள்ளது. குடிநீர்த் திட்டப் பணிகளை 3/2002-க்குள் முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

11—

## குடிநீர் கிடைத்தல்

**வினா எண் 4325—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், தக்காவூர் கிராமம், கொத்துக்காடு பகுதி மக்களுக்குக் குடிநீர் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?



2002 மே 10]

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

அரசு ஏற்கெனவே ஆவன செய்துள்ளது.

12—

## தொகுப்பு வீடுகள் பழுதுபார்த்தல்

**வினா எண் 4669—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 15 ஆண்டுகளுக்கு முன்னர் ஏழைகளுக்கு அரசு மூலம் கட்டிக் கொடுத்த தொகுப்பு வீடுகள் பழுதடைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைப் பழுது பார்க்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போதுள்ள நிதி நெருக்கடியின் காரணத்தினால் ஏற்கெனவே கட்டிக் கொடுக்கப்பட்ட தொகுப்பு வீடுகளை அரசால் தற்போது. பழுது பார்க்கும் வாய்ப்பு ஏதும் இல்லை.

## தொகுப்பு வீடுகள்

**வினா எண் 5436—திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை அருகே ராகல்பாவி கிராமத்தில் ஆதிதிராவிட மக்களுக்கு மேலும் தொகுப்பு வீடுகள் கட்டித் தர அரசு பரிசீலிக்குமா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது நிறைவேறும்?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை அருகே உள்ள ராகல்பாவி கிராம ஊராட்சிக்கு 1996-97-ல் 15 வீடுகளும், 1998-99-ல் 27 வீடுகளும் ஆதிதிராவிட மக்களுக்குக் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேலும், தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

14—

## தொகுப்பு வீடுகள் கட்டுதல்

**வினா எண் 5437—திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை அருகே வடபூதனம் கிராமத்தில் ஆதிதிராவிட மக்கள் ஏராளமாக வசிப்பதால் தொகுப்பு வீடுகள் மேலும் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) அரசின் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை வட்டம், வடபூதனம் கிராம ஊராட்சியில் 1997-98-ல் 50 வீடுகள் கட்டப்பட்டு உள்ளன. இனி வரும் ஆண்டுகளில் மைய அரசின் நிதி ஒதுக்கீடு அதிகமாக வரப்பெற்றால் இவ்வூராட்சிக்கு அதிகத் தொகுப்பு வீடுகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

15—

## ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்தல்

**வினா எண் 7064—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை வட்டம், உடுக்கம்பாளையம் கிராமத்திலுள்ள குடிநீர்ப் பிரச்சினையைக் களைய இங்கு 3 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?



விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தற்போதுள்ள நீராதாரங்களே போதுமானதாக உள்ளன. ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கத் தேவையில்லை.

16—

## குடிநீர் வசதி

**வினா எண் 7102—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, ஓலக்கூர் ஒன்றியம், ஆத்திப்பாக்கம் ஊராட்சி ஆதிதிராவிடர் காலனிக்குக் குடிநீர் வசதி செய்திட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செஞ்சி தொகுதி, ஓலக்கூர் ஒன்றியம், ஆத்திப்பாக்கம் ஊராட்சியைச் சார்ந்த, ஆத்திபாக்கம் ஆதி திராவிடர் காலனிக்குத் தற்சமயம் நான்கு கையிறைப்பான்கள் மூலம் அத்தியாவசிய தேவைக்கான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. ஊரகக் குடிநீர்த் திட்ட கோட்பாடுகளுக்குட்பட்டு, தேவை, தகுதி மற்றும் நிதி ஆதார அடிப்படையில் இக்குடியிருப்பிற்கு, வரும் நிதியாண்டுகளில் புதிய குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் நிறைவேற்றப் பரிசீலிக்கப்படும்.

17—

## மேற்கூரை அமைத்தல்

**வினா எண் 11140—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நாகமரை ஊராட்சி, அன்னை இந்திரா நகர் (கீழ்க்காலனிக்கு) காலனி வீடுகள் மிகவும் பழுதடைந்துள்ளதைச் சீர் செய்து மேற்கூரை அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போதுள்ள நிதி நெருக்கடியின் காரணத்தால் தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நாகமரை ஊராட்சி, அன்னை இந்திரா நகரில் (கீழ்க்காலனியில்) உள்ள பழுதடைந்த வீடுகளை அரசால் சீர் செய்து மேற்கூரை அமைக்கும் வாய்ப்பு இல்லை.

18—

## கூடுதல் தொகுப்பு வீடுகள்

**வினா எண் 13798—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, அஜ்ஜனஅள்ளி ஆதிதிராவிட மக்களுக்குக் கூடுதலாகத் தொகுப்பு வீடுகள் கட்டித் தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், அஜ்ஜனஅள்ளி ஊராட்சியில் 2000-2001 வரை 46 வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன. எனவே, நடப்பாண்டில் இவ்வூராட்சியில் மேலும் கூடுதலாக வீடுகள் கட்டுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

19—

## சார் பதிவாளர் அலுவலகம் அமைத்தல்

**வினா எண் 1406—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியத்தில் ஆர்.எஸ். மாத்தூரை மையமாக வைத்துப் புதிய சார் பதிவாளர் அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியத்தில் ஆர்.எஸ். மாத்தூரை மையமாக வைத்துப் புதிய சார் பதிவாளர் அலுவலகம் அமைக்கச் சாத்தியக்கூறு இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

20—

## தனி வட்டம் அமைத்தல்

**வினா எண் 3277—திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேன்கனிக்கோட்டை வட்டத்தை இரண்டாகப் பிரித்து ராயக்கோட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு தனி வட்டம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.

21—

## புதிய மாவட்டம் அமைத்தல்

**வினா எண் 7211—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாச்சலம் நகரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

22—

**மொத்த மின் உற்பத்தி**

**வினா எண் 3248—திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டின் மொத்த மின் உற்பத்தி எவ்வளவு?

(ஆ) அதில் பிற மாநிலப் பங்கீடு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் மொத்த மின் உற்பத்தி நிறுவு திறன் 7,818 மெகாவாட்டாகும்.

(ஆ) பிற மாநிலங்களிலிருந்து மின் பங்கீடு ஏதுமில்லை. ஆனால் பிற மாநிலத்திலுள்ள மத்திய மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து மின்சாரம் பெறப்படுகிறது.

23—

**செயற் பொறியாளர் அலுவலகம் மாற்றம்**

**வினா எண் 3752—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டையில் மின்சாரத் துறை செயற் பொறியாளர் அலுவலகம் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், மீண்டும் பழைய இடத்திற்கே மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?



விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) செயற் பொறியாளர் அலுவலகத்தை மீண்டும் பழைய இடத்திற்கே மாற்ற இயலாது.

24—

**தொழிற்சாலை**

**வினா எண் 2—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை, சிப்காட் தொழிற்பேட்டையில் உள்ள தொழிற்சாலைகள் எத்தனை?

(ஆ) அவற்றில் இயங்காத தொழிற்சாலைகளை மூடிவிட்டு அவற்றிற்குப் பதிலாக வேறு தொழிற்சாலை கொண்டுவர அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) புதுக்கோட்டை, சிப்காட் தொழிற்பேட்டையில் 51 தொழிற்சாலைகள் உள்ளன. இவற்றில் தற்சமயம் 16 தொழிற்சாலைகள் இயங்கவில்லை.

(ஆ) இயங்காத தொழிற்சாலைகளை மூடிவிட்டு, அவற்றிற்குப் பதிலாக வேறு தொழிற்சாலை கொண்டுவர அரசிடம் திட்டம் ஏதுமில்லை.

25—

## தொழிற்பேட்டை அமைத்தல்

**வினா எண் 459—திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மிகவும் பின்தங்கிய மாவட்டமாகிய தருமபுரி தலைநகரில் தொழிற்பேட்டை (சிப்காட்) அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

தருமபுரி தலைநகரில் சிப்காட் தொழிற்பேட்டை அமைக்கும் உத்தேசம் இல்லை.

26—

## பின்தங்கிய தொகுதி

**வினா எண் 976—திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதியை தொழிலில் மிகவும் பின்தங்கிய பகுதியாக அறிவிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஒட்டன்சத்திரம் தொகுதியை மிகவும் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.



27—

## புதிய தொழிற்சாலை தொடங்குதல்

**வினா எண் 993—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதி தொழில் துறையில் மிகவும் பின்தங்கிய பகுதியாக இருப்பதால் புதிய தொழிற்சாலையை அரசு தொடங்குமா?

(ஆ) தனியார் தொழிற்சாலை தொடங்கப்பட அரசு ஆவன செய்யுமா?

(இ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) வந்தவாசி தொகுதியில் புதிய தொழில்கள் தொடங்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

(ஆ) மற்றும் (இ) தனியார் தொழில் தொடங்க முன்வந்தால் அவர்களுக்கு அரசு ஆவன செய்யும்.

28—

## ஆழ்குழாய்க் கிணறுகள்

**வினா எண் 1018—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் காவிரிப் படுகையில் எண்ணெய் எரிவாயுக் (மத்திய அரசின் ஓ.என்.ஜி.சி.) கழகம் எத்தனை ஆழ்குழாய்க் கிணறுகளைத் தோண்டியுள்ளது?

(ஆ) எத்தனை குழாய்களில் இயற்கை எண்ணெய் எரிவாயு கிடைக்கிறது?

(இ) இதன் மூலம் தமிழக அரசுக்கு மத்திய அரசிடமிருந்து மானியம் எவ்வளவு கிடைக்கிறது?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் காவிரிப் படுகையில் எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுக் கழகத்தினர் (ஓஎன்ஜிசி) மொத்தம் 387 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்துள்ளனர்.

(ஆ) எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுக் கழகத்தினால் தோண்டப்பட்ட கிணறுகளில் 108 ஆழ்குழாய்க் கிணறுகளில் எண்ணெய் (Crude Oil) கிடைக்கிறது. 44 ஆழ்குழாய்க் கிணறுகளில் இயற்கை எரிவாயு (Natural Gas) கிடைக்கிறது. மீதமுள்ள 235 ஆழ்குழாய்க் கிணறுகள் வறண்டு போய் விட்டன.

(இ) மத்திய அரசிடமிருந்து தமிழக அரசுக்கு 2000-2001 ஆம் ஆண்டில் உரிமத் தொகையாக (Royalty) ரூ.37,17,01,100 கிடைக்கப் பெற்றுள்ளது.

**29—**

## கூட்டுறவுச் சர்க்கரை ஆலை

**வினா எண் 1964—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பாலக்கோடு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்குட்பட்ட கரும்பு விவசாயிகளுக்கு வெட்டுக்கூலி, கரும்பு ஏற்றிச் செல்லும் வாகன வாடகை உட்பட எல்லாச் செலவுகளையும் சர்க்கரை ஆலையே ஏற்றுக்கொள்ள அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்ட கூட்டுறவுச் சர்க்கரை ஆலையின் நிதி நெருக்கடி காரணமாக வெட்டுக்கூலி மற்றும் வாகன வாடகை ஆகிய செலவுகளை ஆலையே ஏற்க இயலாத நிலை உள்ளது.



**30—**

## இணக்கத் தொகை

**வினா எண் 1979—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி நகரத்திலும், பெண்ணாகரத்திலும் உள்ள திரையரங்குகளில் நுழைவுக் கட்டணம் வசூல் செய்து நுழைவுச் சீட்டு கொடுக்காமல் உள்ளது. நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்திற்கு மேல் வசூலிப்பது போன்ற முறைகேடுகள் செய்வதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி நகரத்திலும் மற்றும் பெண்ணாகரத்திலும் உள்ள திரையரங்குகளில் சிறப்புத் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு அனுமதிக்கப்பட்ட கட்டணத்தைவிட அதிகக் கட்டணம் வசூலித்த திரையரங்குதாரர்களிடமிருந்து இணக்கத் தொகை வசூலிக்கப்பட்டுள்ளது.

**31—**

## காகிதத் தொழிற்சாலை அமைத்தல்

**வினா எண் 2013—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் எவ்விதத் தொழிற்சாலைகளும் இல்லாத காரணத்தால் ஒகேனக்கல்லில் காகிதத் தொழிற்சாலை ஒன்று அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம் பென்னாகரம் தொகுதியில் ஒகேனக்கல்லில் காகித ஆலை தொடங்குவதற்குத் தேவையான வசதிகள் இல்லாததால் அங்கு ஒரு காகித ஆலை தொடங்கும் செயற்குறிப்பு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

32—

## கல்லுடைக்கும் தொழிற்கூடம்

**வினா எண் 2017—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதியைச் சுற்றியுள்ள மலைப் பகுதிகளில் கல்லுடைக்கும் தொழிற்கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதியைச் சுற்றியுள்ள மலைப் பகுதிகளில் கல்லுடைக்கும் தொழிற்கூடம் அமைக்கும் முன்மொழிவுகள் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

33—

## சிமெண்ட் ஆலை அமைத்தல்

**வினா எண் 2504—திரு. க. சிவராஜ்:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) ரிஷிவந்தியம் தொகுதி, திருக்கோவிலூர் ஊராட்சி ஒன்றியத்தில் லைம்ஸ்டோன் அதிக அளவில் கிடைப்பதால் அங்கு சிமெண்ட் ஆலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ரிஷிவந்தியம் தொகுதி, திருக்கோவிலூர் ஊராட்சி ஒன்றியத்தில் சுண்ணாம்புப் படிவங்கள் இருப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை. எனவே, இப்பகுதியில் சிமெண்ட் ஆலை அமைக்கும் வாய்ப்பு இல்லை.

34—

## வருமானம்

**வினா எண் 2391—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் கடந்த 1999-2000 ஆம் ஆண்டில் வணிக வரி மூலம் வந்த வருமானம் எவ்வளவு?

(ஆ) அதேபோல் 2000-2001 ஆம் ஆண்டில் வணிக வரி மூலம் வந்த வருமானம் எவ்வளவு?

(இ) இந்த இரண்டாண்டுகளில் வருவாயில் ஏற்பட்ட வித்தியாசம் எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

| | ரூபாய் கோடியில் |
|---|---|
| (அ) தமிழகத்தில் கடந்த 1999-2000 ஆம் ஆண்டில் வணிக வரி மூலம் வந்த வருமானம் | 7380.66 |
| (ஆ) அதேபோல் 2000-2001 ஆம் ஆண்டில் வணிக வரி மூலம் வந்த வருமானம் | 8663.72 |
| (இ) இந்த இரண்டாண்டுகளில் வருவாயில் ஏற்பட்ட வித்தியாசம் | 1283.06 |
| வளர்ச்சி வீதம் | 17.38% |

35—

## அந்நியச் செலாவணி

**வினா எண் 2401—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் அதிகமாக வெட்டி எடுக்கப்படுகிற கனிமங்கள் யாவை?

(ஆ) அதனால் அரசுக்குக் கிடைக்கும் வருமானம் எவ்வளவு?

(இ) அதனால் கிடைக்கும் அந்நியச் செலாவணி எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட கனிமங்கள் அதிகமாக வெட்டியெடுக்கப்படுகின்றன:

சுண்ணாம்புக் கல், கருப்பு மற்றும் பல வண்ண கிரானைட் கற்கள், ஜல்லி, பழுப்பு நிலக்கரி, கார்னட் (Garnet) மணல், பாக்சைட் (Bauxite), மேக்னசைட் (Magnesite), இல்மனைட் (Ilmenite), வெங்கக்கற்கள் (Quartz) மற்றும் பில்லைக் கற்கள்.



(ஆ) மேற்படி கனிமங்களால் (பழுப்பு நிலக்கரி நீங்கலாக) அரசுக்கு 1998-99 ஆம் ஆண்டில் ரூ.74,32,70,264-ம், 1999-2000-ல் ரூ. 69,16,85,513-ம், 2000-2001-ல் ரூ.79,90,62,607-ம் வருமானம் கிடைத்துள்ளது. பழுப்பு நிலக்கரிக்கு ராயல்டி தொகை ரூ.250 கோடி, 2000-2001 முதல் மூன்று வருடங்களுக்கு முன்பணமாகக் கிடைத்துள்ளது.

(இ) தனியார் ஏற்றுமதியாளர்கள் மூலம் ஏற்றுமதி செய்யப்படுகிற கனிமங்கள் தவிர அரசு நிறுவனமான தமிழ்நாடு கனிம நிறுவனம் (TAMIN) மூலம் 1999-2000 ஆம் நிதி ஆண்டில் 6132 கன மீட்டர் கற்கள் ஏற்றுமதி மூலம் ரூ.20,72,24,240 அன்னியச் செலாவணி ஈட்டப்பட்டுள்ளது.

36—

## சிப்காட் தொழிற்பேட்டை அமைத்தல்

**வினா எண் 2517—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதியில் சிப்காட் தொழிற்பேட்டை அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டத்தில் ஏற்கெனவே செய்யாறில் அனைத்து அடிப்படை வசதிகளுடனும் சிப்காட் தொழிற்சாலை வளாகம் அமைக்கப்பட்டு வருகிறது. ஆகவே, வந்தவாசி தொகுதியில் தொழில் வளாகம் அமைக்கும் உத்தேசம் இல்லை.

37—

## சிமெண்ட் விற்பனை

**வினா எண் 2608—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு தொகுதியில் கட்டுமானத் தொழிலாளர் நலன் கருதி கட்டுமானப் பொருள் சிமெண்ட் விலை ஏற்றத்தைக் குறைத்து நியாய விலையில் விற்பனை செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிமெண்ட் விலையைக் குறைக்கும் அதிகாரம் மாநில அரசிடம் இல்லை. சிமெண்ட் விலைக் கட்டுப்பாட்டு அதிகார மையம் அமைப்பது மைய அரசின் அதிகாரத்திற்குட்பட்டது. இது குறித்து மைய அரசுக்கு மாநில அரசு கடிதம் எழுதியுள்ளது. மேலும், சிமெண்ட் உற்பத்தியாளர்களுடன் அமைச்சர்கள் மட்டத்தில் விவாதித்து, விலையைக் குறைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

38—

## மாலிப்டினம் தொழிற்சாலை

**வினா எண் 3267—திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூரில் மாலிப்டினம் தொழிற்சாலை தொடங்கிட அரசு திட்டமிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரூரில் மாலிப்டினம் தொழிற்சாலை தொடங்கிட அரசிடம் தற்பொழுது திட்டம் ஏதுமில்லை.



39—

## மணல் எடுப்பதைத் தடைசெய்தல்

**வினா எண் 3286—திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆறுகளில் மணல் திருட்டைத் தடுக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

1. அரசு ஆணை (நிலை) எண் 253, தொழில் துறை, நாள் 26-6-2000-ல் வெளியிடப்பட்டுள்ள ஆணைக்கிணங்க அபராதத் தொகை ரூ.15,000-லிருந்து ரூ.25,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

2. அனுமதியின்றி கனிமங்களைக் (ஆற்று மணல்) கடத்திச் செல்லும் வாகனங்கள் அவ்வப்போது கைப்பற்றப்பட்டு, கனிம விதிமுறைகளின்படி அபராதத் தொகையோ அல்லது குற்ற நடவடிக்கைகளோ எடுக்கப்பட்டு வருகின்றன.

3. மாவட்ட அளவில் நிதி மேலாண்மைக் குழுக்கள் அமைக்கப்பட்டு, ஆறுகளில் மணல் எடுப்பது கண்காணிக்கப்படுகிறது.

4. அதிகமாக மணல் உள்ள பகுதிகளைக் கண்டறிந்து, பொதுப் பணித் துறையின் அறிவுரையின்படி பொது ஏலம் விடுவதன் மூலம் மணல் திருட்டு குறைக்கப்படுகிறது.

40—

## தொழில் வளர்ச்சி

**வினா எண் 3945—திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென் தமிழகத்தில் தொழில் வளர்ச்சி ஏற்படுத்த தமிழக அரசு 1999 ஆம் ஆண்டு நியமனம் செய்த நீதியரசர் திரு. எஸ். இரத்தினவேல் பாண்டியன் தலைமையிலான குழுவின் அறிக்கை அரசுக்கு கொடுக்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் முக்கியச் சிபாரிசுகளில் அரசு நடைமுறைப்படுத்தியவையின் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) உயர்நிலை ஆணையத்தின் பரிந்துரைகள், சம்பந்தப்பட்ட துறைகளில் விரிவாக ஆய்வு செய்யப்பட்டன. அப்பரிந்துரைகள், துறைகளின் நடைமுறையில் உள்ள திட்டங்களில் எங்கெல்லாம் சேர்க்க முடியுமோ, அங்கெல்லாம் சேர்க்கப்பட்டுள்ளன. சிறப்பு முதலீடு செய்யும் திட்டங்கள் ஏதேனும் இருந்தால் அவற்றை ஆய்வு செய்வதற்காக நிதித் துறைச் செயலரைத் தலைவராகக் கொண்ட அதிகாரக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அவ்வதிகாரக் குழுவின் பரிசீலனைக்கு வைப்பதற்கேற்ற எந்தவொரு கருத்துருவும் இதுவரை பெறப்படவில்லை.

41—

## சர்க்கரை ஆலை

**வினா எண் 4410—திரு. ஐ. கணேசன் மற்றும் திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் அதிகப்படியான கரும்பு உற்பத்தி செய்யப்படுவதால், அங்கு புதிதாகச் சர்க்கரை ஆலை தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்தில் தற்போது புதிதாகச் சர்க்கரை ஆலை அமைக்க உத்தேசம் ஏதும் இல்லை.



42—

## எரிசாராயத் தொழிற்சாலை

**வினா எண் 4803—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், ஆப்பக்கூடலில் உள்ள சர்க்கரை ஆலையில் கிடைக்கும் மொலாஸஸைக் கொண்டு எரிசாராயத் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

ஈரோடு மாவட்டம், ஆப்பக்கூடலில் தனியார் துறையில் இயங்கும் சர்க்கரை ஆலையில் (சக்தி சுகர்ஸ் யூனிட்-1) கிடைக்கும் மொலாஸஸைக் கொண்டு ஏற்கெனவே ஒரு எரிசாராயத் தொழிற்சாலை அமைக்கப்பட்டு இயங்கி வருகிறது.

43—

## கணினித் தொழிற்சாலை

**வினா எண் 5609—திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒசூர், கிருஷ்ணகிரி பகுதிகளில் கணினித் தொழிற்சாலைகளை நிறுவிட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டத்தில் ஒசூர், கிருஷ்ணகிரி ஆகிய பகுதிகளில் கணினித் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

44—

## தொழிற்சாலை

**வினா எண் 5820—திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதிதாகத் தொழிற்சாலை தொடங்க லைசன்ஸ் வழங்க ஒற்றைச் சாளர முறை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதிதாகச் சிறிய தொழிற்சாலைகள் தொடங்க மாவட்டத் தொழில் மையம் மூலமாக அந்தந்த மாவட்ட ஆட்சியர் மூலமும், நடுத்தர மற்றும் பெரிய தொழிற்சாலைகள் தொடங்க தமிழ்நாடு தொழில் வழிகாட்டுதல் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகத்தின் இயக்குநர் மூலமும் அனைத்து அனுமதிகளையும் விரைவில் ஒற்றைச் சாளர முறையின்கீழ் பெறுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

45—

## பதவி உயர்வு

**வினா எண் 6055—திரு. க. பாரமலை:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலுள்ள கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் கடந்த 5 ஆண்டுகளாகக் காலியாக உள்ள பணியிடங்களை பணிமூப்பு மற்றும் கல்வித் தகுதி அடிப்படையில் பதவி உயர்வு வழங்கி நிரப்ப அரசு நடவடிக்கை எடுக்குமா?



விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் திருத்திய ஆள்பலப் பட்டியலைவிடக் கூடுதலாக பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். எனவே, திருத்திய ஆள்பலப் பட்டியலின்படி காலியிடங்கள் ஏற்படும்போது பணிமூப்பு மற்றும் கல்வித் தகுதி அடிப்படையில் பதவி உயர்வு வழங்கி நிரப்பிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

46—

## தொழிற்பேட்டை

**வினா எண் 6558—திரு. எஸ்.எம். பாலன்:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) லால்குடி தொகுதியில் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) லால்குடி தொகுதியில் தொழிற்பேட்டை அமைக்கும் உத்தேசம் இல்லை.

47—

## புதிய சிமெண்ட் ஆலை

**வினா எண் 7490—திருமதி ஆர். சசிகலா:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் பகுதியில் புதிய சிமெண்ட் ஆலை தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணராயபுரம் பகுதியில் புதிய சிமெண்ட் ஆலை தொடங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**48—**

## தொழிற்சாலை

**வினா எண் 8161—திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மொரப்பூரில் மாவிட்டினம் என்ற தாதுப்பொருள் வெட்டி எடுக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மொரப்பூரில் மாவிட்டினம் என்ற தாதுப்பொருள் வெட்டி எடுக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**49—**

## திரையரங்குக் கட்டணம்

**வினா எண் 8203—திரு. மா. இராஜசேகர்:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



இராஜபாளையம் நகரிலும், புறநகர்ப் பகுதியிலும் உள்ள 20 திரையரங்குகளில் நபர் ஒருவருக்கு ரூ.30/- கட்டணமாக வசூலிக்கப்படுவது குறித்து நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

இராஜபாளையம் நகரிலும், புறநகர்ப் பகுதியிலும் உள்ள திரையரங்குகளில் நபர் ஒருவருக்கு ரூபாய் முப்பது கட்டணமாக வசூலிக்கப்படுவதாக எவ்விதப் புகாரும் அரசிற்கு வரவில்லை. தணிக்கையின்போதும் இக்குறைபாடு கண்டுபிடிக்கப்படவில்லை.

**50—**

## விற்பனை வரி

**வினா எண் 8642—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) படிவம் XX, R.C. உரிமையாளர்களே அச்சடித்துக் கொள்ளலாம் என்ற முறையை உருவாக்கியதால், விற்பனை வரி ஏய்ப்பு நடைபெறுகிறது என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசின் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் பதிவு பெற்ற வணிகர்கள் சரக்குகளை ஓரிடத்திலிருந்து வேறொரு இடத்திற்குக் கொண்டு செல்ல விற்பனைச் சீட்டு அல்லது படிவம் 20-ஐப் பயன்படுத்த வேண்டும். படிவம் 20-ஐ வணிக வரி அலுவலகங்களிலிருந்து வணிகர்கள் பெறுவதிலுள்ள சிரமங்கள் மற்றும் வணிக வரித் துறையின் பணிப்பளு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு வணிகர்களே படிவம் 20-ஐ அச்சிட்டுக் கொள்ள அனுமதிக்கப்பட்டது. இதனால் விற்பனை வரி ஏய்ப்பு நடைபெறுகிறது என, குறிப்பிட்ட

புகார்கள் ஏதும் அரசுக்கு வரவில்லை. எனினும், இதனால் அரசுக்கு வரி இழப்பு ஏற்படுகிறதா என்பது கண்காணிக்கப்பட்டு வருகிறது.

**51—**

## தொழிற்பேட்டை

**வினா எண் 9839—திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரம் வட்டம், கயத்தார், ழுகுமலை அல்லது ஒட்டப்பிடாரத்தில் தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரம் வட்டம், கயத்தார், கழுகுமலை அல்லது ஒட்டப்பிடாரத்தில் தொழிற்பேட்டை அமைக்கும் உத்தேசம் அரசிடம் இல்லை.

**52—**

## கணினி வழங்குதல்

**வினா எண் 9941—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்ட வணிக வரித் துறை அலுவலகத்திற்குக் கணினி வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

பல்லவன் போக்குவரத்துக் கழகக் கலந்தாய்வுக்குரியரின் இட்ட அறிக்கையின் அடிப்படையில் 11-வது நிதிக் குழுவின் சிறப்பு இடருதவித்



திட்டத்தின்கீழ் (Special Problems Grant) வணிக வரித் துறையை ரூ.8.6 கோடி மதிப்பீட்டில் முழுமையாகக் கணினிமயமாக்கும் செயற்குறிப்பு அரசின் தீவிரப் பரிசீலனையில் உள்ளது. இதில் புதுக்கோட்டை மாவட்ட வணிக வரி விதிப்பு வட்டமும் அடங்கும். பிற வணிக வரி விதிப்பு வட்டங்கள் கணினிமயமாக்கப்படும்பொழுது புதுக்கோட்டை மாவட்ட வணிக வரி அலுவலகமும் கணினி மயமாக்கப்படும்.

**53—**

## விலை நிர்ணயம்

**வினா எண் 11677—திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்திற்கு வாங்கப்படும் மூலப்பொருளான கரும்புச் சக்கை எந்த அடிப்படையில் விலை நிர்ணயம் செய்து வாங்கப்படுகிறது?

(ஆ) கூட்டுறவு ஆலைகளில் வாங்குவதோடு தனியார் ஆலைகளிலும் வாங்கப்படுகிறதா?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம், கூட்டுறவு மற்றும் தனியார் ஆலைகளில் நிலக்கரியால் எரியக்கூடிய பாய்லர்களை நிறுவி, அதன் மூலம் நீராவியை உற்பத்தி செய்து சர்க்கரை ஆலைகளுக்குக் கொடுத்து, பதிலுக்குக் கரும்புச் சக்கையைச் சர்க்கரை ஆலைகளிடமிருந்து நீண்ட கால ஒப்பந்தத்தின் அடிப்படையில் குறிப்பிட்ட விகிதத்தில் மாற்றிக் கொள்வதால் இது விற்பனையாகக் கருதப்படுவதில்லை. இது ஒரு பண்டமாற்று முறையாகும். தனியாக விலை நிர்ணயம் செய்யப்படுவதில்லை. மேலும், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் சில தனியார் ஆலைகளிடமிருந்து கிடைக்கக்கூடிய உபரிக் கரும்புச் சக்கையைப் பெற்றுக் கொள்கிறது. இதற்கான விலை அந்தந்த ஆண்டு உபரியாகக் கூட்டுறவு ஆலைகளிடமிருந்து கிடைக்கக்கூடிய கரும்புச் சக்கையின் விலை மற்றும் போக்குவரத்துச் செலவு ஆகியவற்றைக் கணக்கிட்டு விலை நிர்ணயிக்கப்படுகிறது.

54—

## நட்சத்திர ஆமைகள்

**வினா எண் 5364—திரு. வெ. ஏழுமலை:** *மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சென்னையிலிருந்து நட்சத்திர ஆமைகள் கடத்தப்படுகின்றனவா?

(ஆ) ஆம் எனில், கடத்தலைத் தடுக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இது தொடர்பாக வனச் சரகர் மற்றும் வனச் சிப்பந்திகளால் சென்னை மற்றும் அதன் சுற்றுப் பகுதிகளில் அவ்வப்போது திடீர்த் தணிக்கைகள் மேற்கொண்டும், சென்னை விமான நிலைய அதிகாரிகளிடம் அனுமதி பெற்று விமான நிலையங்களில் தணிக்கை மேற்கொள்ளப்பட்டும் வருகிறது.

55—

## பணி நிரந்தரம்

**வினா எண் 5488—திரு. எஸ்.எம். சீனிவேல்:** *மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வனத் துறையின் சமூகக் காடுகள் பிரிவில் குறைந்த ஊதியத்தில் 20 ஆண்டுகளாகத் தொடர்ந்து பணிபுரிபவர்களைப் பணி நிரந்தரம் செய்ய அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**



## அறிக்கை

வனத்துறையில் தினக்கூலி அடிப்படையில் பல ஆண்டுகளாகப் பணிபுரியும் சமூக வன ஊழியர்கள் மற்றும் தோட்டக் காவலர்கள் ஆகியோருக்கு நிரந்தரப் பணி அளிக்கப்பட வேண்டும் என அரசினால் முடிவு செய்யப்பட்டு, அரசாணை (நிலை) எண் 64, சுற்றுப்புறம் மற்றும் வனத் துறை (வனம்-2), நாள் 8-3-1999-ல் வழங்கப்பட்ட அறிவுரைகளின்படி, மாநில அளவிலான முதுநிலைப் பட்டியல் தயார் செய்து டிசம்பர் 1999-ல் வெளியிடப்பட்டது. அப்பட்டியலில் எழுதப் படிக்கத் தெரிந்த மற்றும் கூடுதலாகக் கல்வித் தகுதி பெற்ற 5442 நபர்கள் இடம் பெற்றிருந்தனர். இந்தப் பட்டியலிலிருந்து முதற்கட்டமாக முதுநிலைப்படி 411 நபர்களுக்கு வனக் காவலர் மற்றும் மாலி பதவியில் பணி ஆணை வழங்கப்பட்டது. இதில் 219 நபர்கள் 6-1-2000 வரை பணியில் சேர்ந்துவிட்டனர். இந்த நிலையில், மேற்படி பட்டியலில் இடம் பெற்றவர்களில் • எஸ்.எஸ்.எல்.சி. கல்வி தகுதியுள்ளவர்களுக்கு மட்டுமே பணி நியமனம் வழங்கப்பட வேண்டும் எனவும், அரசாணை எண் 64, சுற்றுப்புறம் மற்றும் வனத் துறை, நாள் 8-3-1999-ஐ ரத்து செய்யுமாறும் அரசாணை எண் 297, சுற்றுப்புறம் மற்றும் வனத் துறை, நாள் 14-12-1994-ன்படி தங்களுக்கு முன்னுரிமை அளித்து பணி நியமனம் அளிக்கப்பட வேண்டும் எனவும் மற்றும் அரசாணை (நிலை) எண் 64, சுற்றுப்புறம் & வனத் துறை, நாள் 8-3-1999-ல் செயல்பாட்டிற்கு இடைக்காலத் தடையாணை பிறப்பிக்கப்பட வேண்டும் எனவும் ஓ.ஏ. எண் 8191/1999-ல் மாநில நிர்வாக தீர்ப்பாயத்தில் கேட்டிருந்தனர். மாநில நிர்வாக தீர்ப்பாயம் தனது ஓ.ஏ.எண் 8191/1999, நாள் 6-1-2000 ஆம் தேதிய ஆணையில் முதன்மைத் தலைமை வனப் பாதுகாவலரினால் பணி நியமனம் செய்வதனை நிறுத்தி வைத்து இடைக்காலத் தடை ஆணை பிறப்பித்து, அதன்படி மேற்கண்ட 219 நபர்களுக்குப் பின்னர் எவரும் பணியில் சேர அனுமதிக்கப்படவில்லை. வழக்கு விசாரணையில் உள்ளது. வழக்கின் முடிவிற்குப் பின்னர் மாநில நிர்வாகத் தீர்ப்பாயத்தின் இறுதி ஆணைக்கேற்பத் தொடர்ந்து பணி நியமனம் அளிப்பது குறித்து முடிவு செய்யப்படும்.

56—

## மரக்கன்றுகள்

**வினா எண் 6308—திருமதி ஆர். தமிழ்மொழி ராஜதத்தன் :** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாத்தனந்தல், நல்லான்பிள்ளை பெற்றாள், பரதன்தாங்கல், கெங்காவரம் ஆகிய இடங்களில் இந்த ஆண்டில் மரக்கன்றுகள் நடும் திட்டம் அமல்படுத்தப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

நல்லான்பிள்ளை பெற்றாள் திட்டக் கிராமத்தில் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் மூலம் 1998-99-ல் 350 எக்டேர் பரப்பளவில் செடி நடும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் செயல்படுத்த, தரம் குன்றிய வனப் பகுதிகள் சாத்தனந்தல், பரதன்தாங்கல், கெங்காவரம் ஆகிய பகுதிகளில் இருப்பின், மரம் வளர்ப்புப் பணி மேற்கொள்ளப் பரிசீலனை செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது.

57—

## தொழிலாளர்களுக்குச் சலுகைகள்

**வினா எண் 6508—திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரிப் பகுதியில் தமிழக அரசின் 'டேன்டீ' நிறுவனத்தில் தொழிலாளிகளாக உள்ள இலங்கை அகதிகளுக்கு, சாதாரணத் தொழிலாளிகளுக்கு வழங்கப்படும் சலுகைகள்கூட ஏன் வழங்கப்படுவது இல்லை?

(ஆ) தோட்டத்தில் அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள வீடுகளில் தொடர்ந்து குடியமர்த்த அரசு முன்வருமா?



விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தில் பணிபுரியும் இலங்கை அகதிகள் உள்ளிட்ட அனைத்துத் தொழிலாளர்களுக்கும் சட்டப்படி வழங்கப்பட வேண்டிய அனைத்துச் சலுகைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

(ஆ) தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத் தொழிலாளர்களது குடும்பத்தினர் எவரேனும் கழகத்தில் நிரந்தர அடிப்படையில் பணிபுரிந்து வந்தால் அவர்களுக்குக் கழகத்திற்குச் சொந்தமான வீடுகளில் இலவசமாகக் குடியிருக்க அனுமதியளிக்கப்பட்டு வருகிறது.

58—

## சுகாதாரக் கேடு

**வினா எண் 7085—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு செய்தி, விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருத்தாச்சலம் தொழிற்பேட்டையிலும் மற்றும் நகரைச் சுற்றியுள்ள பீங்கான் தொழிற்சாலைகளிலும் இருந்து வரும் புகை, சுகாதாரத்திற்குக் கேடு ஏற்படுத்தாத வகையில் வெளியேற்றப்பட நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

ஆம்.

59—

## சேதம்

**வினா எண் 7307—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் மேல் பகுதியில் யானைகள் அதிகமாக வனப் பகுதிக்குள் நுழைந்து தோட்டத் தொழிலாளர்களின் குடியிருப்புக்குள் புகுந்து சேதம் விளைவித்தது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுக்கும் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) வால்பாறை பகுதியில் காட்டு யானைகள் ஏற்படுத்தும் சேதத்தை தவிர்க்க, தொழிலாளர்களின் குடியிருப்புப் பகுதிகளில் யானைகள் விரும்பி உண்ணும் வாழை மரம் போன்ற பயிர்களைப் பயிரிடாமல் இருக்கவும், பயிரிடப்பட்டவைகளை அழித்திடவும் தோட்டத் தொழிலாளர்கள் மூலமாகச் சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. மேலும், களப் பணியாளர்களும் அவ்வப்போது கண்காணித்து, உரிய தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றனர்.

60—

## சுற்றுச்சூழல் பாதுகாப்பு

**வினா எண் 7345—திரு. மீ.அ. வைத்தியலிங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் வட்டம், குரோம்பேட்டை பகுதியிலிருந்து வரும் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் கழிவு நீரால் பம்மல், நாகல்கேணி, பொழிச்சலூர் மற்றும் கௌல்பசார் பகுதிகளில் நிலத்தடி நீர் கெடுவதோடு சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுக்கும் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.



(ஆ) மேற்கண்ட இடங்களில் உள்ள தோல் தொழிற்சாலைகள், கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் மூலம் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

61—

## கட்டணத்தை ரத்து செய்தல்

**வினா எண் 7379—திரு. மா. இராஜசேகர்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராஜபாளையத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையின் அருகேயுள்ள அய்யனார் கோயில் அருவிகளில் குளிப்பதற்கு வசூலிக்கப்படும் ஐந்து ரூபாய் கட்டணத்தை அரசு ரத்து செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

இல்லை.

62—

## மரங்கள் வளர்ப்பு

**வினா எண் 7943—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மரங்கள் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் நடப்படும் மரங்கள் மக்களுக்கு நேரடியாகப் பயன்படும் வகையிலும், உடல் நலத்தைப் பேணக்கூடியதாகவும் இருக்க வேண்டும் என்பதை அரசு கட்டாயமாக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

மரம் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் வனத் துறையால் நடப்படும் மரங்கள் மக்களுக்குப் பயன்படும் வகையிலும் உடல் நலத்தைப் பேணக்கூடியதாகவும் நடப்படுவதால் இதனைக் கட்டாயமாக்கும் வினா எழவில்லை.

63—

## மரம் வளர்ப்பு, பராமரிப்பு

**வினா எண் 7944—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மரம் வளர்ப்புத் திட்டம் வெற்றி பெற மரக்கன்றுகள் நட்ட பின்பு, குறைந்தது ஒரு வருடமாவது அவற்றைப் பராமரிக்கத் தனியாரிடம் ஒப்படைக்கப்படுமா?

(ஆ) அவர்களுக்கு ஊக்கத் தொகை கொடுப்பது சம்பந்தமாக அரசு பரிசீலிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மரக்கன்றுகள் நட்ட பின்பு அவற்றை ஒரு வருடமாவது பராமரிக்கத் தனியாரிடம் ஒப்படைக்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

64—

## நிலத்தடி நீர்

**வினா எண் 8391—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் நிலத்தடி நீர் மாசுபடுவதைத் தடுக்க அரசிடம் என்ன திட்டம் உள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் :**

தமிழ்நாட்டில் நிலத்தடி நீர் மாசுபடுவதைத் தடுக்கத் தனியாகத் திட்டம் எதுவும் அரசிடம் இல்லை. இருப்பினும், அதிக அளவில் மாசுபடுத்தும் தோல் தொழிற்சாலைகள், சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ சுத்திகரிப்பு



நிலையங்கள் அமைத்து கழிவு நீரைச் சுத்திகரிப்புச் செய்ய வழிமுறைகளைக் கூறியும், தவறு செய்யும் தொழிற்சாலைகள்மீது உரிய நடவடிக்கைகளை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் எடுத்து வருவதன் மூலமும் நிலத்தடி நீர் மாசுபடுவதைப் பெருமளவில் குறைக்க ஏதுவாகிறது.

65—

## மழை வளம்

**வினா எண் 8392—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மழை வளம் குன்றியுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், காடுகள் வளர்க்கும் திட்டத்தை அரசு விரைந்து செயல்படுத்துமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் காலச் சூழ்நிலைகளின் மாற்றத்தினாலும், வறட்சியினாலும் நீர் வளம் குன்றியுள்ளது.

(ஆ) நீர் வளம் பெருகும் பொருட்டு, மக்கள் பங்கேற்புடன் மர ளர்ப்புத் திட்டத்தினை 1997-98 முதல் தமிழ்நாட்டில் அரசு யல்படுத்தி வருகின்றது. இத்திட்டத்தை விரைந்து செயல்படுத்தும் பொருட்டு வன மேம்பாட்டுப் பணிகள், மழை நீர் சேகரிப்புப் பணிகள், வேலைவாய்ப்பு உருவாக்குதல், மாற்று வேலைவாய்ப்பு, மகளிர் மேம்பாடு, கிராம நலப் பணிகள் மற்றும் பயன் பங்கீடு போன்ற பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

66—

## சந்தன எண்ணெய் விற்பனை

**வினா எண் 8907—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, தெக்குப்பட்டு கிராமத்தில் சந்தன எண்ணெய்த் தொழிற்சாலையில் தயாராகும் எண்ணெய் எந்தெந்த நாடுகளுக்கு விற்பனை செய்யப்படுகின்றது என்பதை அரசு தெரிவிக்குமா?

(ஆ) ஆம் எனில் வருட வருமானம் அரசுக்கு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) நாட்ராம்பள்ளி தொகுதி, தெக்குப்பட்டு கிராமத்தில் சந்தன எண்ணெய்த் தொழிற்சாலையில் தயாராகும் சந்தன எண்ணெய், அமெரிக்கா, துபாய், ஹாங்காங் மற்றும் சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலை சந்தனப் பொருட்களை உள்நாடு மற்றும் வெளிநாடுகளுக்கு விற்பனை செய்ததன் வாயிலாக 2000-2001 ஆம் ஆண்டில் ரூ. 687.21 லட்சம் வருவாய் ஈட்டியுள்ளது.

67—

## தொழிற்சாலைகளைத் திறந்திடல்

**வினா எண் 9023—திரு. ஆ.கு. முருகேசன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

"மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தால் நிர்ணயிக்கப்பட்டவாறு சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படாததால், சேலம் மாவட்டத்தில் மூடப்பட்ட 55 சவ்வரிசி ஆலைகளுக்குச் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்திடக் கால அவகாசம் கொடுத்து மீண்டும் தொழிற்சாலை திறந்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில், வினாவில் குறிப்பிட்டவாறு 55 சவ்வரிசி ஆலைகள் மூடப்படவில்லை. 109 ஆலைகள் சுத்திகரிப்பு நிலையம் அமைக்காததால் மூடப்பட்டன. பின்னர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்ட 101 தொழிற்சாலைகள், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு



வாரியம் இசைவாணை பெற்று இயங்கி வருகின்றன. மீதமுள்ள 8 தொழிற்சாலைகளும் சுத்திகரிப்பு நிலையம் அமைத்து வாரியத்திடம் கோரிக்கை வைத்தால், மீண்டும் இயக்க வாரியத்தால் அனுமதி வழங்கப்படும்.

68—

## தொழிற்சாலைகளை மீண்டும் திறத்தல்

**வினா எண் 9798—திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராணிப்பேட்டையில் மூடிக்கிடக்கும் தொழிற்சாலைகளைத் திறக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், இராணிப்பேட்டை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் 38 தோல் பதனிடும் தொழிற்சாலைகளும் மற்றும் ஒரு கெமிக்கல் தொழிற்சாலையும் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்காததால், உச்ச நீதிமன்றம் டபிள்யு. பி. (சிவில்) எண் 914/91-ன்கீழ் மூடப்பட்டுள்ளன. மேற்கண்ட தொழிற்சாலைகள் தனியாகவோ அல்லது கூட்டுச் சேர்ந்தோ சுத்திகரிப்பு நிலையங்களை அமைக்கும் பட்சத்தில், அவைகள் உடனடியாக இயங்க தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் இசைவாணை வழங்கும்.

69—

## தடுப்பணை

**வினா எண் 9926—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஒன்றியம், பாகல்பட்டி ஊத்துப்பள்ளம் நொண்டி ஆற்றின் குறுக்கே தடுப்பணை ஒன்று அமைத்து, உபரி நீரைத் தேக்க காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஒன்றியம், பாகல்பட்டி ஊத்துப்பள்ளம் என்ற பள்ளம் அமைந்துள்ள காளியப்பன் கொட்டாய் என்ற குக்கிராமம் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் 2002-2003 ஆம் வருட திட்ட நிலமாகத் தெரிவு செய்யப்பட்டு, கிராம மக்களின் வேண்டுகோளுக்கிணங்க ஊத்துப்பள்ளத்தின் குறுக்கே கசிவு நீர்க் குட்டை ஒன்று அமைக்கப்பட உள்ளது.

70—

## தினக் கூலிப் பணியாளர்கள்

**வினா எண் 10255—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வனத் துறையில் கடந்த 12 ஆண்டுகளாகப் பணியாற்றிவரும் தினக் கூலிப் பணியாளர்களை நிரந்தரம் செய்ய அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

**அறிக்கை**

(அ) மற்றும் (ஆ) வனத் துறையில் தினக்கூலி அடிப்படையில் பணிபுரிந்துவரும் சமூக வன ஊழியர்கள்/தோட்டக் காவலர்களின் நீண்ட நாள் கோரிக்கையினைக் கருத்திற்கொண்டு அரசாணை (நிலை) எண் 64, சுற்றுப்புறம் மற்றும் வனத் துறை, நாள் 8-3-1999-ல் வழங்கப்பட்ட அறிவுரைகளின்படி, வனத் துறையில் தினக் கூலி அடிப்படையில் பணிபுரிந்துவரும் தோட்டக் காவலர்கள் மற்றும் சமூக வன ஊழியரின் ஒருங்கிணைந்த மாநில முதுநிலைப் பட்டியல் டிசம்பர் 1999-ல் தயாரித்து வெளியிடப்பட்டது. அதைத் தொடர்ந்து துறையில் காலியாக உள்ள வனக் காவலர் மற்றும் மாலி பணியாளர்களின் மேற்படி பட்டியலில் இருந்து முதுநிலை



அடிப்படையில் 401 நபர்களுக்குப் பணி நியமனம் அளிக்கப்பட்டது. அதில் 211 நபர்கள் 6-1-2000 வரை பணியில் சேர்ந்தனர். இந்நிலையில் மேற்படி பட்டியலில் இடம் பெற்றவர்களில், எஸ்.எஸ்.எல்.சி. கல்வித் தேர்ச்சி பெற்ற ஒரு சாரார் மேற்படி பணி நியமனத்தினை எதிர்த்து, அரசாணைக்குத் தடைகோரி மாநில நிர்வாகத் தீர்ப்பாயத்தில் ஒரு வழக்கு ஓ.ஏ. எண் 8191/99, தொடுத்தனர். மாநில நிர்வாகத் தீர்ப்பாயம் ஓ.ஏ. எண் 8191/99, நாள் 6-1-2000-ல் பணி நியமனம் வழங்குவதற்கு இடைக்காலத் தடையாணை பிறப்பிக்கப்பட்டது. தற்போதைய நிலையில் நிரந்தரப் பணி அளிக்க இயலாத நிலை உள்ளது. மேற்படி வழக்கின் முதல்வாதியாக அரசுச் செயலாளர் உள்ள நிலையில் அரசினால் மறுமொழி ஆணை உறுதி ஆவணம், மாநில நிர்வாகத் தீர்ப்பாயத்தில் தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு விசாரணையில் உள்ளது. வழக்கின் முடிவுக்குப் பின்னர் தீர்ப்பாய ஆணையின்படி, வனக் காவலர் மற்றும் மாநிலப் பணி நியமனம் அளிப்பது தொடர்பாக முடிவு செய்யப்படும்.

71—

## சந்தன மரக் காடுகள்

**வினா எண் 10499—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் சந்தன மரக் காடுகளைப் பாதுகாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் உள்ள சந்தன மரக் காடுகளைப் பாதுகாப்பது குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசிடமில்லை. எனினும், சந்தன மரங்களைப் பாதுகாக்கப் பல்வேறு திட்டங்கள் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

(ஆ) இக்கேள்வி எழாது.

72—

**சமூகக் காடு வளர்ப்பு**

**வினா எண் 10930—திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமூகக் காடு வளர்ப்புத் திட்டத்தை ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒரே சீராகச் செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு வனத் துறையில் சுவீடன் நாட்டு நிதியுதவியுடன் 1981 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்ட சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டம் 1997 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் நிறுத்தப்பட்டு விட்டது.

(ஆ) கேள்வி எழவில்லை.

73—

**சந்தன எண்ணெய் ஆலை**

**வினா எண் 11513—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில் மலைப் பகுதியிலிருந்து கிடைக்கும் சந்தன மரங்களைக் கொண்டு பெண்ணாகரம் பகுதியில் சந்தன எண்ணெய் ஆலையைத் தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டத்தில் மலைப் பகுதியிலிருந்து கிடைக்கும் சந்தன மரங்களைக் கொண்டு பெண்ணாகரம் பகுதியில் சந்தன எண்ணெய் ஆலையைத் தொடங்கும் செயல் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.



74—

**கழிவு நீர் சுத்திகரிப்பு ஆலை**

**வினா எண் 17004—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு தொகுதிக்குட்பட்ட வி.கே. சாலையிலுள்ள பொதுக் கழிவு நீர் சுத்திகரிப்பு ஆலையைக் கட்டி முடிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) பொதுக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அரசால் கட்டப்படுவதில்லை. தொழிற்சாலைகள் கூட்டுச் சேர்ந்து பொதுக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களை அமைக்கின்றன. இவற்றிற்கு மாநில மற்றும் மத்திய அரசுகள் மானியம் வழங்குகின்றன.

75—

**வன விலங்குகளைப் பாதுகாத்தல்**

**வினா எண் 11835—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் வன விலங்குச் சரணாலயத்தில் வேட்டை, மின் வேலி, விஷம், கம்பிச்சுருக்கு போன்றவற்றால் புலி உட்பட பல வன விலங்குகள் கொல்லப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதைத் தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் :**

(அ) ஆம். கடந்த மூன்று ஆண்டுகளில், முதுமலைச் சரகத்தில் ஒரு ஆண் புலி விஷம் வைத்துக் கொல்லப்பட்டது. அது தொடர்பாக ஒரு

குற்றவாளி கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது தவிர, வேறு சம்பவம் ஏதும் முதுமலை வன உயிரின உய்விடம் மற்றும் தேசிய பூங்காக்களில் நடைபெறவில்லை.

(ஆ) இம்மாதிரி நிகழ்வுகள் நடைபெறாவண்ணம் தடுப்பதற்கு முதுமலை வன உயிரின உய்விடத்தில் 15 வேட்டைத் தடுப்பு முகாம்கள் அமைக்கப்பட்டு, அவைகளில் 98 வேட்டைத் தடுப்புக் காவலர்கள் நியமிக்கப்பட்டு 24 மணி நேரமும் வன உயிரினச் சரணாலயத்தினைக் கண்காணிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

76—

## மாசுத் தடுப்புப் பணிகள்

**வினா எண் 12219—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேசிய நீர் செயல் திட்டத்தின்கீழ் பவானி, ஈரோடு, குமாரபாளையம், பள்ளிப்பாளையம் பகுதிகளில் மாசுத் தடுப்புப் பணிகள் எந்தத் துறை மூலம் நிறைவேற்றப்படவுள்ளன.

(ஆ) அந்த திட்டத்தின் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) தேசிய நதி நீர்ப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் காவிரியாறு மாசுபடுவதைத் தடுக்கும் பொருட்டு, பவானி, ஈரோடு, குமாரபாளையம், பள்ளிப்பாளையம் ஆகிய பகுதிகளில் மாசுத் தடுப்புப் பணிகளை சுற்றுச்சூழல் துறை ஒருங்கிணைத்து, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் அந்தந்த உள்ளாட்சி அமைப்புகள் மூலமாக நிறைவேற்றி வருகின்றன.

(ஆ) காவிரி ஆற்றங்கரையில் அமைந்துள்ள ஈரோடு, பவானி, பள்ளிப்பாளையம் மற்றும் குமாரபாளையம் ஆகிய நகரங்களில் இருந்து வெளியேறும் கழிவு நீரினால் நதி நீர் மாசுபடுவதைத் தடுக்கும் பொருட்டு ரூ. 29.73 கோடி மதிப்பீட்டில் மத்திய அரசின் முழு நிதி உதவியுடன் மாசுத் தடுப்புத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. கழிவு நீரைத் தடுத்து, குழாய்கள் மூலம் எடுத்துச்



செல்லுதல், சுத்திகரிப்பு நிலையம் அமைத்துச் சுத்திகரித்தல் முதலான பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்படுகின்றன. குறைந்த செலவில் கழிவறைகள் அமைத்தல், ஆற்றங்கரையில் தடுப்புச் சுவர் அமைத்தல், படித்துறைகள் கட்டுதல் போன்ற சிறு பணிகள் அந்தந்த உள்ளாட்சி அமைப்புகள் மூலம் செயல்படுத்தப்படுகின்றன. மேற்குறித்த நான்கு நகரங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி ரூ. 29.73 கோடியில் பிப்ரவரி 2002 வரை ரூ. 9.10 கோடி செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் காலம் 10 ஆண்டுகள் ஆகும்.

77—

## ஏற்றுமதி

**வினா எண் 334—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கதர் வாரியத்தின் மூலம் தயார் செய்யப்படும் பல்வகையான பொருள்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றனவா?

(ஆ) ஆம் எனில், அதன் மூலம் கிடைக்கும் அந்நியச் செலாவணி எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

78—

## கிராமக் குடிசைத் தொழில்கள்

**வினா எண் 1828—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, கிராமக் குடிசைத் தொழில்கள் அமைவதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தொழில் முனைவோர் கிராமக் குடிசைத் தொழில் தொடங்க முன்வந்தால் மாவட்டத் தொழில் மையம் உடனே தக்க ஆலோசனை வழங்கி, தொழில் தொடங்குவதற்கு ஆவன செய்யும்.

79—

## கயிறு தொழிற்சாலை

**வினா எண் 1896—திரு. நா. பச்சைமால்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குமரி மாவட்டத்தில் நசிந்து வரும் கயிறு தொழிலைப் பாதுகாக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

ஆம். தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

80—

## சுய வேலைவாய்ப்புக் கடன் வசதி

**வினா எண் 2012—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) படித்த இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் தொழில் தொடங்க வழங்கப்படும் கடன்கள் உடனுக்குடன் வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பாரதப் பிரதமர் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் படித்த இளைஞர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் மாவட்ட அளவிலான தேர்வுக் குழுக் கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டு, கடன் வழங்குவதற்காகப் பரிந்துரை செய்யப்படுகிறது. ஒவ்வொரு வங்கியின்



இலக்கைவிடக் கூடுதலாக 25% விண்ணப்பங்களைப் பரிந்துரை செய்ய வேண்டும் என்று அனைத்து மாவட்டங்களுக்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தேர்வுக் குழுவின் பரிந்துரையை ஏற்று வங்கி ஒப்புதல் அளிக்க உடன்பட்டபின், அப்பயனாளிகளுக்குத் தெரிவு செய்யப்பெற்ற பயிற்சி நிலையங்களின் மூலம் பயிற்சி வழங்கப்பட்டு, அப்பயிற்சி பெற்ற விண்ணப்பதாரருக்கு, வங்கி கடன் வழங்குகிறது. விண்ணப்பதாரர் ஏற்கெனவே அரசு அங்கீகாரம் பெற்ற தொழில்நுட்பப் பயிற்சி 6 மாதங்களுக்குக் குறையாமல் பெற்றிருந்தால், அவருக்குப் பயிற்சியிலிருந்து விலக்களிக்கப்பட்டு, கடன் பட்டுவாடா செய்யப்படுகிறது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டில் 15% அல்லது ரூ. 7500 மானியமாக வழங்கப்படுகிறது.

81—

## வைரம் பட்டை தீட்டும் தொழிற்சாலை

**வினா எண் 2016—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் செயற்கை வைரம் பட்டை தீட்டும் தொழிற்சாலை அமைத்து வைரம் பட்டை தீட்டும் தொழில் ஊக்குவிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் செயற்கை வைரம் பட்டை தீட்டும் தொழிற்சாலை அமைப்பது குறித் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. இத்தொழிலை ஊக்குவிக்கும் பொருட்டு அம்மாவட்டத்தில் பர்கூரில் ஒரு செயற்கை வைரம் பட்டை தீட்டும் தொழில் கூட்டுறவுச் சங்கம் 1993-தொடங்கப்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகின்றது.

(ஆ) இவ்வினா எழவில்லை.

82—

## சென்ட் தொழிற்சாலை

**வினா எண் 2338—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், ஆவரைகுளம் கிராமத்தில் சென்ட் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், ஆவரைகுளம் கிராமத்தில் சென்ட் தொழிற்சாலை அமைப்பது குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

83—

## தருமபுரி மாவட்டத்தில் சென்ட் தொழிற்சாலை

**வினா எண் 2558—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டி பகுதியில் அதிக அளவில் பூக்கள் பயிரிடுவதால் இங்கு சென்ட் தொழிற்சாலை ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

இதுகுறித்த செயற்குறிப்பேதும் அரசின் ஆய்வில் இல்லை.

84—

## வாசனைச் சாறு தொழிற்சாலை

**வினா எண் 3265—திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



காவேரிப்பட்டினம் சுற்றுப்புறப் பகுதியில் விளையும் மல்லிகைப் பூக்களில் இருந்து வாசனைச் சாறு (சென்ட்) தொழிற்சாலை தொடங்க அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

இல்லை.

85—

## பழச் சாறு தொழிற்சாலை

**வினா எண் 3618—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை பகுதியில் முந்திரிப் பழத்தைக் கொண்டு ஜூஸ் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை பகுதியில் முந்திரிப் பழத்தைக் கொண்டு ஜூஸ் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

86—

## கடன் வசதி

**வினா எண் 4414—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி ஒன்றியம், மாக்கனூர் பகுதியில் பெருமளவில் கூடை மற்றும் மூங்கில் தயாரிப்புகள் அதிகம் நடைபெறுவதால், அதில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு மானியத்துடன் கூடிய கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

மேற்காணும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

87—

## தொழிற்சாலை

**வினா எண் 5308—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதி, கல்வராயன்மலைப் பகுதியில் அதிகமாக விளையும் கடுக்காயைக் கொண்டு கடுக்காய் எண்ணெய் பிரித்து எடுக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சங்கராபுரம் தொகுதி, கல்வராயன்மலைப் பகுதியில் அதிகமாக விளையும் கடுக்காயைக் கொண்டு கடுக்காய் எண்ணெய் பிரித்து எடுக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

88—

## தேயிலைப் பயிர்

**வினா எண் 5704—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் விளையும் தேயிலை தரமானதாக இருப்பதால் பொது மக்கள் அதிகமாக அருந்தும் வகையில் பிரச்சாரம் செய்ய ஏற்பாடுகள் செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?



விடை—

**மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 1. அனைவரையும் கவரும் வகையிலும், இதர தரமான தனியார் தேயிலையைப்போல அழகிய கவர்ச்சிகரமான அச்சிடப்பட்ட 100 கிராம் பொட்டலங்களாக விற்பனை செய்யப்படுகிறது.

2. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அகில இந்திய வானொலி நிலையங்களிலிருந்தும் காலையிலும், மாலையிலும் "ஊட்டி டீ" குறித்து 20 வினாடிகள் 1 மாத காலம் விளம்பரம் செய்யப்பட்டது.

3. மேலும் "ஊட்டி டீ" குறித்து விளம்பரச் சுவரொட்டிகள் அச்சிட்டு மக்களிடையே "ஊட்டி டீ" வாங்கத் தூண்டும் வகையில் விளம்பரப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

4. தவிர, தொலைக்காட்சிகளிலும் "ஊட்டி டீ" குறித்து விளம்பரம் செய்யப்பட்டது.

5. "ஊட்டி டீ"யின் விளம்பரத்திற்காக அரசு ரூ. 10.00 இலட்சம் இண்ட்கோசர்வ் நிறுவனத்திற்கு வழங்கியுள்ளது.

89—

## பொம்மைகள் தயாரிக்கும் தொழிற்சாலை

**வினா எண் 5817—திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொம்மைகள் தயாரிக்கும் தொழிலை ஊக்குவிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மேற்காணும் பொருள் மீதான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

90—

## வங்கிக் கடன்

**வினா எண் 7244—திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக்குப் பயிற்சி அளித்து வங்கிக் கடன் வழங்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) உள்ளது.

(ஆ) 1993 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 2 ஆம் நாள் முதல் பாரதப் பிரதமர் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் படித்த இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு, வங்கிக் கடன் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டம் தொடர்ந்து நடப்பாண்டிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

91—

## கொள்முதல் மையம்

**வினா எண் 8186—திரு. கே.கே. உமாதேவன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தென்னை நார் கொண்டு தயாரிக்கப்படும் கயிறு மற்றும் அது சம்பந்தமான பொருட்களைக் கொள்முதல் செய்ய கயிறு வாரியத்தின் (Coir Board) கொள்முதல் மையம் ஒன்றை சிங்கம்புணரியில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

கயிறு வாரியத்தின் கொள்முதல் மையம் அமைப்பது குறித்த செயற்குறிப்பேதும் மாநில அரசின் ஆய்வில் இல்லை. மேலும் கயிறு வாரியம் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ளது.



92—

## பழச் சாறு தொழிற்சாலை

**வினா எண் 11514—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் அதிக அளவில் விளையும் மாம்பழங்களைக் கொண்டு அங்கு ஒரு பழச் சாறு தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் பகுதியில் விளையும் மாம்பழங்களைக் கொண்டு பழச் சாறு தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

93—

## தக்காளிச் சாறு தொழிற்சாலை

**வினா எண் 11515—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம், தருமபுரி மாவட்டங்களில் தக்காளி அதிகம் பயிரிடப்படுவதால், அப்பகுதியில் தக்காளி ஜூஸ் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் தக்காளி ஜூஸ் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

94—

## சென்ட் தொழிற்சாலை

**வினா எண் 11612—திரு. ஆ.கு. முருகேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் மல்லிகை, ரோஜா போன்ற மணம் வீசும் மலர்கள் ஏராளமாகப் பயிரிடப்படுவதால் அங்கு சென்ட் தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் விளையும் மல்லிகை, ரோஜா மலர்களிலிருந்து சென்ட் தயாரிக்கும் தொழிற்சாலை சேலத்தில் ஏற்படுத்தும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

95—

## தொழில் மையம்

**வினா எண் 13109—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில் தொழில் தகவல் மையம் மற்றும் தொழில் முனைவோர் ஊக்க மையம் ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டத்திலுள்ள தொழில் மையமே ஏற்கெனவே இப்பணியினைச் செய்து வருகிறது.

96—

## குளிர் பதனக் கிடங்கு

**வினா எண் 15207—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் உள்ள பட்டு முட்டை உற்பத்திக் கிடங்கில் செயலிழந்து இருக்கும் குளிர் பதனக் கிடங்கைச் சரி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) பெண்ணாகரம் தொகுதியில் உள்ள பட்டு முட்டை வித்தகத்தில் வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டத்தின்கீழ் 1989 ஆம் ஆண்டில் ஒரு குளிர் பதனக் கிடங்கு நிறுவப்பட்டது. பின்னர் தேசிய பட்டு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 1999ல் கூடுதலாக ஒரு குளிர் பதனக் கிடங்கு அமைக்கப்பட்டதன் மூலம் வித்தகத்திற்குத் தேவையான குளிர் பதனம் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றது. எனவே, 1989 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட பழைய குளிர் பதனச் சாதனத்தைச் செப்பனிட்டுப் பராமரிப்பது கூடுதல் செலவினமாகக் கருதப்படுவதால், பழுது நிவர்த்தி செய்ய வேண்டிய அவசியமில்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

97—

## மேம்பாலம்

**வினா எண் 824—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, தாம்பரம், முடிச்சூர் சாலையையும் வேளச்சேரி சாலையையும் இணைக்கும் இரயில்வே மேம்பாலம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இன்றைய நிலை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) போக்குவரத்து செயலாக்கத் திட்டத்தின் (TAP) கீழ் அனுமதிக்கப்பட்ட இப்பணியின் விரிவான திட்ட அறிக்கை திட்ட ஆலோசனைக் குழுவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்த ரூ. 54.00 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. திட்ட அறிக்கை ஆய்வில் உள்ளது.

98—

## அதிக வட்டி வசூல்

**வினா எண் 1516—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி வி.மு. சத்திரம் வீட்டு வசதி வாரியக் குடியிருப்பு மக்களிடம் வாரியத்தினால் அதிக வட்டி வசூல் செய்யப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், குறைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) திருநெல்வேலி வி.மு. சத்திரம் வீட்டு வசதி வாரிய வீடுகளுக்கு வாரியத்தால் நிர்ணயம் செய்யப்பட்ட வட்டி விகிதம் முறையே உயர் வருவாய்ப் பிரிவு, மத்திய வருவாய்ப் பிரிவு வீடுகளுக்கு 16.50% மற்றும் குறைந்த வருவாய்ப் பிரிவு வீடுகளுக்கு 15.25% வட்டி வசூல் செய்யப்படுகிறது. இது தவிர, கூடுதல் வட்டி ஏதும் வசூலிக்கப்படுதில்லை.

(ஆ) மேற்படி திட்டம் நிதி நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் கடனுதவியுடன் செயல்படுவதால் வட்டியைக் குறைக்க இயலாது.

99—

## குடியிருப்பு வசதி

**வினா எண் 2249—திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



சென்னையில் பணிபுரியும் தலைமைச் செயலகம் மற்றும் சட்டமன்றப் பேரவை ஊழியர்களுக்குத் தலைமைச் செயலகத்தின் அருகிலேயே குடியிருப்பு வசதி செய்து தரப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

100—

## வீடுகள் ஒதுக்கீடு

**வினா எண் 2256—திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தலைமைச் செயலகம் மற்றும் சட்டமன்றப் பேரவைச் செயலகத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வீடுகள் ஒதுக்கீடு செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

தலைமைச் செயலகம் மற்றும் சட்டமன்றப் பேரவைச் செயலகத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் குடியிருப்பு ஒதுக்கீடு செய்யும் உத்தேசம் ஏதுமில்லை.

101—

## வீடுகளைப் பழுதுபார்த்தல்

**வினா எண் 3486—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் 2-வது தொகுதி, 28-வது கோட்டம், லாரி அங்காடியிலிருந்து சித்தர்கோயில் சாலையிலுள்ள வீட்டு வசதி வாரிய அடுக்குமாடிக் கட்டடம் பழுது அடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது பழுதுபார்க்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சேலம் 2-வது தொகுதி, 28-வது கோட்டம், லாரி அங்காடியில் இருந்து சித்தர்கோயில் சாலையில் உள்ள வீட்டு வசதி வாரிய அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்குக் கீழ்க்கண்ட செலவில் கடந்த 3 ஆண்டுகளில் பழுதுபார்ப்புப் பணிகள் செய்யப்பட்டன.

| | | |
|---|---|---|
| 1998-1999 | .. | ரூ. 3.68 இலட்சம் |
| 1999-2000 | .. | ரூ. 1.48 இலட்சம் |
| 2000-2001 | .. | ரூ. 1.35 இலட்சம் |

102—

## அடுக்குமாடி வீடு கட்டடம் பராமரிப்பு

**வினா எண் 3487—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சி 28-வது கோட்டத்தில், காளியம்மன் கோயில் ஸ்ரீமான் திரையரங்கம் எதிரிலுள்ள அடுக்குமாடி வீடு கட்டடம் பல ஆண்டுகளாகப் பராமரிப்பு இல்லாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பராமரிப்பது எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சி 28-வது கோட்டத்தில் காளியம்மன் கோயில் ஸ்ரீமான் திரையரங்கம் எதிரில் குடிசை மாற்றுத் திட்டத்தின்கீழ் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடிக் குடியிருப்புகள் இதுவரை ரூ. 3.40 இலட்சம் செலவில் பழுதுபார்க்கப்பட்டுள்ளன.



103—

## புதிய வீடுகள்

**வினா எண் 4114—திருமதி சி.எம். சூரியகலா:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், குடியாத்தம் தொகுதியில் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குக் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் புதிய வீடுகள் கட்டித் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

104—

## வீடுகள் கட்டுதல்

**வினா எண் 6305—திரு. க. பாரமலை:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை சிப்காட் வளாகத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் அரசு ஊழியர்களின் நலனுக்காக சிப்காட் அருகில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடு கட்டித் தரும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

105—

## புதிய வழித்தடம்

**வினா எண் 6840—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடசென்னையில் சென்னைக் கடற்கரை முதல் மாதவரம் பால் பண்ணை வரை, மகாகவி பாரதி நகர், கவியரசு கண்ணதாசன் நகர், கொடுங்கையூர், மூலக்கடை ஆகிய பகுதிகளை இணைத்து புதிய வழித்தடத்தில் பறக்கும் இரயில் பாதை அமைக்க மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பறக்கும் இரயில் பாதைத் திட்டம், மத்திய மற்றும் மாநில அரசுகளால் செயல்படுத்தும் நான்கு கட்டங்கள் கொண்டது. முதல் கட்டம், சென்னைக் கடற்கரை முதல் திருமயிலை வரை இயக்கத்தில் உள்ளது. இரண்டாம் கட்டப் பணிகள் திருமயிலை முதல் வேளச்சேரி வரை நடைபெற்று வருகிறது. மூன்றாம் கட்டம் வேளச்சேரி முதல் வில்லிவாக்கம் வரை பரங்கிமலை வழியாக அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. நான்காம் கட்டம் வில்லிவாக்கம் முதல் திருவொற்றியூர் வரை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த நான்காம் கட்டம் அமைக்கப்படும்போது, சென்னைக் கடற்கரையும், மாதவரமும் பறக்கும் இரயில் பாதையால் இணைக்கப்பட வாய்ப்புள்ளது. எனவே, தற்போது நான்காம் திட்டம் குறித்து மத்திய அரசை வலியுறுத்தும் திட்டம் ஏதும் இல்லை.

106—

## கால்நடை மருத்துவமனை

**வினா எண் 2681—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், ஆவரைகுளம் கிராமத்தில் புதிதாகக் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) எழாது.

107—

## கால்நடை மருந்தகம்

**வினா எண் 2829—திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதியில் சத்திரப்பட்டி, வெரியப்பூர், வடகாடு, ஓடைப்பட்டி ஆகிய இடங்களில் புதியதாகக் கால்நடை மருந்தகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்பொழுது நிறைவேற்றித் தரப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) எழாது.

108—

## கால்நடை மருத்துவமனை

**வினா எண் 4213—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பச்சாரம்பாளையம் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைத்துத் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) எழாது.

**109—**

**கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 4309—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, கீழ்க்காங்கேயன்குப்பத்தில் கால்நடை மருத்துவமனையை இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) எழாது.

**110—**

**கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 5071—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) பண்ருட்டி தொகுதி, மணம்தவிழ்ந்தபுத்தூர் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) எழவில்லை.

**111—**

**கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 5383—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியம், உடையாம்புழி கிராமத்திற்குக் கால்நடை மருத்துவமனை அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) எழாது.

**112—**

**கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 6323—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருதுநகர் மாவட்டம், இராசபாளையம் வட்டம், நக்கனேரியில் அரசு கால்நடை மருத்துவமனை அமைத்திடுமா?

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

**113—**

**கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 6342—திரு. வி.ஆர். ராஜாங்கம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூர் ஒன்றியம், வெள்ளையம்பட்டி கிராமத்தில் கால்நடை மருத்துவமனை உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

**114—**

**கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 6343—திரு. வி.ஆர். ராஜாங்கம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூர் ஒன்றியம், வடுகப்பட்டி, வலையப்பட்டி ஆகிய கிராமங்களில் கால்நடை மருத்துவமனை அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?



விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

**115—**

**கறிக்கோழி**

**வினா எண் 6352—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கறிக்கோழி சாப்பிடுபவர்களுக்கு ஆண்மைக் குறைவுக் கேடுகள் வர வாய்ப்புள்ளதா?

(ஆ) ஆம் எனில், என்ன காரணம்?

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) கறிக்கோழி சாப்பிடுபவர்களுக்கு ஆண்மைக் குறைவுக் கேடுகள் வருவதற்கு வாய்ப்பே இல்லை.

(ஆ) எழாது.

**116—**

**கார்டிசான் ஊசி மருந்து**

**வினா எண் 6354—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கறிக்கோழிகளுக்கு கார்டிசான் என்னும் ஊசி மருந்து போடுவதை அரசு தடை செய்ய முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) கார்டிசான் ஊசி மருந்து. துறை மூலமாகக் கோழிகளுக்குப் போடப்படுவதில்லை.

(ஆ) எழாது.

**117—**

## கால்நடை மருந்தகம்

**வினா எண் 6721—திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் தொகுதி, உத்தமதானி ஊராட்சியில் கால்நடை மருந்தகம் கட்டித்தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

**118—**

## கால்நடை மருத்துவமனை

**வினா எண் 6953—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, பகட்டுவான்பட்டியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) எழாது.

**119—**

## கால்நடை மருத்துவம்

**வினா எண் 8071—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், பாணாபுரம், குதிரைக்காரன்புதூரில் கால்நடை மருத்துவ வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது செயற்குறிப்பு இல்லை.

(ஆ) எழாது.

**120—**

## கால்நடை மருத்துவமனை

**வினா எண் 9154—திரு. பி.எஸ். அருள்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, லால்புரம் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை தொடங்கப்படும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) எழாது.

**121—**

## கால்நடை மருந்தகம்

**வினா எண் 10317—திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமயநல்லூர் தொகுதி, தேனூரில் கால்நடை மருந்தகம் அமைத்துக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) எழாது.

**122—**

## கால்நடை மருத்துவ நிலையம்

**வினா எண் 10510—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் ஒன்றியம், புதுப்பட்டு கிராமத்திற்குக் கால்நடை மருத்துவ நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) எழாது.

**123—**

## கொள்ளை நோய்

**வினா எண் 13553—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கால்நடைகளுக்குத் திடீர் என ஏற்படும் கொள்ளை நோய்களைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களைத் தடுக்க அரசால் உரிய வடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**124—**

## குடியிருப்பு மனை

**வினா எண் 557—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலம் பீடித் தொழிலாளர்களுக்கு எடப்பாடி வட்டத்தில் குடியிருப்பு மனை வழங்கி, கட்டடம் கட்டித் தரும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

கருத்துரு ஏதுமில்லை.

125—

## மாணவர் விடுதி

**வினா எண் 576—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, வெள்ளரிவெள்ளியில் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, வெள்ளரிவெள்ளியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி இயங்கவில்லை. எனவே, கட்டடம் கட்டும் வினா எழவில்லை. வினா புதிய விடுதி திறப்பது பற்றியது என ஊகிக்கப்படுகிறது. தனியார் கட்டடங்களில் இயங்கிவரும் விடுதிகளுக்குப் போதிய அடிப்படை வசதிகளுடன் அரசின் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கும், அரசின் சொந்தக் கட்டடங்களில் இயங்கிவரும் விடுதிகளுக்குப் போதிய அடிப்படை வசதிகள் செய்வதற்கும் அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டும் என்பதாலும், தற்போதைய நிதிநிலையைக் கருத்திற்கொண்டும், எடப்பாடி தொகுதி வெள்ளரிவெள்ளியில் புதிய விடுதி திறப்பது தற்போது இயலாது.



126—

## பிற்படுத்தப்பட்டோர் பட்டியல்

**வினா எண் 643—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் உள்ள நாடார் சமூகத்தை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) நாடார் வகுப்பினை மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கக் கோரும் கோரிக்கை தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் பரிசிலனையில் இருந்து வருகிறது.

(ஆ) இக்கோரிக்கை மீதான தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் பரிந்துரை கிடைக்கப்பெற்றதும், அரசு அதனைப் பரிசீலித்து, தக்க ஆணையினை வெளியிடும்.

127—

## விடுதிகள்

**வினா எண் 933—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நெருப்பூர் அரசு மேல்நிலைப் பள்ளி, செல்லமுடி அரசு உயர்நிலைப் பள்ளி, பெரும்பாலை அரசு உயர்நிலைப் பள்ளி, இண்டூர் அரசு மேல்நிலைப் பள்ளி, ஏலகிரி அரசு மேல்நிலைப் பள்ளி ஆகிய பள்ளிகளில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தனியார் கட்டடங்களில் இயங்கிவரும் விடுதிகளுக்குப் போதிய அடிப்படை வசதிகளுடன் அரசின் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கும், அரசின் சொந்தக் கட்டடங்களில் இயங்கிவரும் விடுதிகளுக்குப் போதிய அடிப்படை வசதிகள் செய்வதற்கும் அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டும் என்பதாலும், தற்போதைய நிதிநிலையைக் கருத்தில் கொண்டும், தருமபுரி மாவட்டம், பெண்ணகரம் தொகுதி, நெருப்பூர், செல்லமுடி, பெரும்பாலை இண்டூர் மற்றும் ஏலகிரி உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்குப் புதிய விடுதிகள் தொடங்க தற்போது இயலாது.

128—

## உதவித் தொகை உயர்த்துதல்

**வினா எண் 934—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பு மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும் உதவித் தொகையை அதிகப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

129—

## விடுதிகள் கட்டுதல்

**வினா எண் 1473—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) செஞ்சி தொகுதி, ஒலக்கூரில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியர் விடுதி தனித்தனியாகக் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், செஞ்சி தொகுதி, ஒலக்கூரில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர்/மாணவியர் விடுதி ஏதும் இயங்கவில்லை. எனவே, கட்டடம் கட்டும் வினா எழவில்லை. சட்டமன்ற உறுப்பினரது வினா புதிய விடுதி திறப்பது தொடர்பானது என ஊகிக்கப்படுகிறது. தனியார் கட்டடங்களில் இயங்கிவரும் விடுதிகளுக்குப் போதிய அடிப்படை வசதிகளுடன் அரசின் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கும், அரசின் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வரும் விடுதிகளுக்குப் போதிய அடிப்படை வசதிகள் செய்வதற்கும் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டி உள்ளதால் ஒலக்கூரில் புதிய விடுதி அமைக்க இயலாத நிலை உள்ளது.

130—

## மாணவர் விடுதி

**வினா எண் 1691—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதிக்குட்பட்ட இலையூர் வாரியங்காவில் அரசு மேல்நிலைப் பள்ளி உள்ளதால், இங்கு அரசு மாணவர் விடுதி (பிற்பட்டோர் நலம்) அமைக்க ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தனியார் கட்டடங்களில் இயங்கிவரும் விடுதிகளுக்குப் போதிய அடிப்படை வசதிகளுடன் அரசின் சொந்தக்

கட்டடங்கள் கட்டுவதற்கும், அரசின் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வரும் விடுதிகளுக்குப் போதிய அடிப்படை வசதிகள் செய்வதற்கும் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டி உள்ளதால், அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் தொகுதி, இலையூர் வாரியங்காவில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி புதிதாக ஏற்படுத்த இயலாத நிலை உள்ளது.

131—

## விடுதிக் கட்டடம்

**வினா எண் 2163—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, வரதராஜன்பேட்டை பேரூராட்சியில் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிக் கட்டடம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் தொகுதி, வரதராஜன்பேட்டை பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதிக்கு அரசின் சொந்தக் கட்டடம் கட்டத் தேவையான நிலம் கிடைக்கப்பெற்றதும், அரசின் நிதிநிலைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

132—

## விடுதி கட்டுதல்

**வினா எண் 2463—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் ஒன்றியத்தில் உள்ள மேலனிக்குழி அரசு மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் விடுதி வாடகைக் கட்டடத்திலுள்ளது. இங்கு பிற்படுத்தப்பட்டோர் மாணவ விடுதி கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?



(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் ஒன்றியம், மேலனிக்குழி பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதிக்கு அரசின் சொந்தக் கட்டடம் கட்டத் தேவையான நிலத்தைப் பெற அரசின் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நிலம் கிடைக்கப்பெற்றதும் அரசின் நிதிநிலைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

133—

## கடன் வசதி

**வினா எண் 2958—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் 2000-2001 ஆம் ஆண்டில் எவ்வளவு கடன் வழங்கப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் 2000-2001 ஆம் ஆண்டில் 1544 பயனாளிகளுக்கு ரூ. 563.75 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

134—

## இலவச வீட்டுமனை

**வினா எண் 4888—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு இலவச வீட்டுமனைத் திட்டத்தில் 2000 ஆம் ஆண்டில் எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது?

(ஆ) அந்த நிதியில் எவ்வளவு செலவு செய்யப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் முற்பட்ட வகுப்பினர்களுக்கு இலவச வீட்டுமனைத் திட்டத்தில் 1999-2000 ஆம் ஆண்டில் ரூ. 18 கோடி (ரூபாய் பதினெட்டு கோடி) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில் ரூ. 12.72 கோடி செலவிடப்பட்டது.

135—

## இலவச மனைப் பட்டா

**வினா எண் 5650—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, வீரப்பெருமாநல்லூர், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இலவச மனைப் பட்டா வழங்கிட இயலுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், வீரப்பெருமாநல்லூர் கிராமத்தில் 28-7-2001 வரை பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் இன மக்கள் 228 நபர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

136—

## இலவச வீட்டுமனைகள்

**வினா எண் 6004—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) உடுமலைப்பேட்டை அருகே குமரலிங்கம் பேரூராட்சி மற்றும் எலையமுத்தூர் ஊராட்சி, பாப்பான்குளம் ஊராட்சிப் பகுதிகளில் சிறப்புத் திட்டமாக அவர்களுக்கு இலவச வீட்டுமனைகள் வழங்கும் கருத்துருவை அரசு பரிவுடன் பரிசீலிக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குமரலிங்கம் கிராமத்தில் 19-8-2001 அன்று 142 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு விட்டன. மற்ற கிராமங்களிலும் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க, பயனாளிகள் பட்டியல் தேர்வு செய்ய விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

137—

## மாணவியர் விடுதி

**வினா எண் 6826—திரு. க. பாரமலை:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, கட்டிக்குளத்தில் பிற்படுத்தப்பட்டோர் மாணவியர் விடுதி ஆரம்பிக்க உத்தேசம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், மாணவியர் விடுதி எப்போது ஆரம்பிக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தனியார் கட்டடங்களில் இயங்கிவரும் விடுதிகளுக்குப் போதிய அடிப்படை வசதிகளுடன் அரசின் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கும், அரசின் சொந்தக் கட்டடங்களில் இயங்கி

வரும் விடுதிகளுக்குப் போதிய அடிப்படை வசதிகள் செய்வதற்கும் அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டும் என்பதாலும், தற்போதைய நிதிநிலையைக் கருத்தில்கொண்டும் சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, கட்டிக்குளத்தில் புதிய விடுதி தொடங்க தற்போது இயலாது.

138—

## பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதி

**வினா எண் 6827—திரு. க. பாரமலை:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனத்தில் பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதி தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்புவனத்தில் பிற்படுத்தப்பட்ட பள்ளி மாணவியர் விடுதி ஏற்கெனவே இயங்கிவருகிறது. தனியார் கட்டடங்களில் இயங்கி வரும் விடுதிகளுக்குப் போதிய அடிப்படை வசதிகளுடன் அரசின் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கும், அரசின் சொந்தக் கட்டடங்களில் இயங்கிவரும் விடுதிகளுக்குப் போதிய அடிப்படை வசதிகள் செய்வதற்கும் அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டும் என்பதாலும், தற்போதைய நிதிநிலையைக் கருத்திற்கொண்டும், சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, திருப்புவனத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி தொடங்க தற்போது இயலாது.

139—

## புதிய கட்டடம்

**வினா எண் 6828—திரு. க. பாரமலை:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, திருப்புவனத்திலுள்ள பிற்படுத்தப்பட்டோர் மாணவியர் விடுதிக்குப் புதிய கட்டடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், கட்டடம் கட்டும் பணி எப்பொழுது தொடங்கும்?

விடை—

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதிக்குச் சொந்தக் கட்டடம் கட்டத் தேவையான நிலம் கிடைக்குமாயின், நிதி ஒதுக்கீட்டிற்கு ஏற்ப கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

140—

## விடுதிக்குக் கட்டட வசதி

**வினா எண் 7688—திரு. வி.ஆர். ராஜாங்கம்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாடிப்பட்டியில் உள்ள பிற்படுத்தப்பட்டோர் மாணவர்கள் தங்கும் விடுதிக்குச் சொந்தக் கட்டடம் கட்டித்தர நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

மதுரை மாவட்டம், சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டி பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதிக்குச் சொந்தக் கட்டடம் கட்ட நிலம் கிடைக்குமாயின், நிதி ஒதுக்கீட்டிற்கு ஏற்ப கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

141—

## தங்கும் விடுதி

**வினா எண் 7870—திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், சத்திரப்பட்டி, நாகரைகுளம், ஒத்தக்கடை ஆகிய ஊர்களில் பிற்படுத்தப்பட்டோர் மாணவ, மாணவியர் தங்கும் விடுதி கட்டும் திட்டம் அரசிடம் இருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தனியார் கட்டடங்களில் இயங்கிவரு விடுதிகளுக்குப் போதிய அடிப்படை வசதிகளுடன் அரசின் சொந் கட்டடங்கள் கட்டுவதற்கும், அரசின் சொந்தக் கட்டடங்களில் இயங்கிவரும் விடுதிகளுக்குப் போதிய அடிப்படை வசதிகள் செய்வதற்கும் அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டும் என்பதாலும், தற்போதைய நிதிநிலையைக் கருத்திற்கொண்டும், மதுரை மாவட்டம், சத்திரப்பட்டி, நாகரைகுளம், ஒத்தக்கடை ஆகிய இடங்களில் புதிய பிற்படுத்தப்பட்டோர் நல மாணவ/மாணவியர் விடுதி தொடங்க தற்போது இயலாது.

142—

## உதவித் தொகை

**வினா எண் 9257—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவியர்களுக்கு 6 ஆம் வகுப்பில் படிப்பதற்கு உதவித் தொகை ரூ. 500 அளிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

தமிழகத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்ட ஊரகப் பகுதியைச் சார்ந்த மாணவியர்களுக்கு 6 ஆம் வகுப்பில் படிப்பதற்கு உதவித் தொகை மாதமொன்றுக்கு ரூ. 100 வீதம் பத்து மாதத்திற்கு ரூ. 1000 சிறப்பு ஊக்கத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.



143—

## உதவித் தொகை வழங்குதல்

**வினா எண் 11360—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த கல்லூரி மாணவர்களுக்கு 2000 ஆண்டுக்கான உதவித் தொகை வழங்கப்படவில்லை என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கு அதை உடனடியாக வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சென்னைப் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு, 2000-2001 மற்றும் 2001-2002 ஆம் ஆண்டிற்கான கல்வி உதவித் தொகைச் செயல்முறைகள் சென்னைப் பல்கலைக்கழகத்திலிருந்து தாமதமாகப் பெறப்பட்டதால், 2000-2001 ஆம் ஆண்டிற்கு 1-3-2002 அன்றும், 2001-2002 ஆம் ஆண்டிற்கு 15-3-2002 அன்றும் காசோலைகள் வழங்கப்பட்டன.

144—

## பிற்படுத்தப்பட்டோர் பட்டியல்

**வினா எண் 13584—திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாதுச் செட்டி, தெலுங்குச் செட்டி, 24 மனை தெலுங்குச் செட்டி, தெலுங்குபட்டிச் செட்டி ஆகிய நான்கும் ஒரே சாதியைக் குறிக்கின்ற பெயர்களாக இருந்தும், தெலுங்குபட்டிச் செட்டி என்பது மட்டும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலும், மற்ற மூன்றும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலும் இருக்கின்ற வேறுபாட்டை களைகின்ற வகையில், நான்கு பெயர்களையும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்திட அரசு நடவடிக்கை

எடுக்குமா?



(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) சாதுச் செட்டி, தெலுங்குச் செட்டி, 24 மனை தெலுங்குச் செட்டி, தெலுங்குபட்டிச் செட்டி ஆகிய வகுப்புகளில் தெலுங்குபட்டிச் செட்டி வகுப்பு மட்டும் தற்போது மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. இதர வகுப்புகள் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன. சாதுச் செட்டி, தெலுங்குச் செட்டி, 24 மனை தெலுங்குச் செட்டி ஆகிய வகுப்புகளை மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கக் கோரும் கோரிக்கை தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

(ஆ) இக்கோரிக்கை மீதான தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் பரிந்துரை கிடைக்கப்பெற்றதும், அரசு அதனைப் பரிசீலித்து தக்க ஆணையினை வெளியிடும்.

145—

## இடஒதுக்கீடு

**வினா எண் 13591—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு மக்கள் தொகை அடிப்படையில் இடஒதுக்கீடு அளிக்க அரசு எண்ணியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் இத்திட்டம் அமலுக்கு வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு மக்கள் தொகை அடிப்படையில் இடஒதுக்கீடு அளிக்கும் எண்ணம் அரசுக்கு இல்லை.

(ஆ) இவ்வினா எழாது.



146—

## இலவச சைக்கிள்

**வினா எண் 13596—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பதினொன்றாம் வகுப்பு, பன்னிரெண்டாம் வகுப்புகளில் பயிலும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவிகளுக்கு இலவச சைக்கிள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பதினொன்றாம் வகுப்பு, பன்னிரெண்டாம் வகுப்புகளில் பயிலும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவிகளுக்கு இலவச சைக்கிள் வழங்கும் திட்டம் எதுவும் தற்போது இல்லை.

147—

## இலவசக் கல்வி

**வினா எண் 13597—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்ட மேற்படிப்பு வரை மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியருக்கு இலவசக் கல்வி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசின் தற்போதைய நிதி நெருக்கடியினால் பட்ட மேற்படிப்பு வரை மிகப் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியருக்கு இலவசக் கல்வி வழங்கும் திட்டத்தினைத் தற்போது செயல்படுத்த இயலாது.

148—

**பயிற்சி மையம்**

**வினா எண் 13637—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்காக தருமபுரியில் ஐ.ஏ.எஸ். மற்றும் அரசுப் பணிகள் பயிற்சி மையம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரியில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் மாணவர்களுக்கு ஐ.ஏ.எஸ். மற்றும் அரசுப் பணிகள் பயிற்சி மையம் புதியதாகத் தொடங்கும் திட்டம் ஏதுமில்லை.

149—

**விடுதிக்குக் கட்டட வசதி**

**வினா எண் 13808—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ). தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஏரியூர் அரசு மேல்நிலைப் பள்ளியின் பிற்படுத்தப்பட்ட மாணவர் மற்றும் மாணவியர் விடுதிக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஏரியூரில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி ஏதும் இயங்கவில்லை. பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி ஒன்று இயங்கி வருகிறது. அவ்விடுதிக்கு அரசு சொந்தக் கட்டடம் கட்ட,



விடுதிக்கு அருகில் தேவையான அரசு புறம்போக்கு நிலம் அல்லது தானமாக வழங்கப்படும் நிலம் கிடைத்த பின்பு, அரசின் நிதிநிலைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

150—

**விடுதிகள் அமைத்தல்**

**வினா எண் 13811—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, இண்டூர் அரசு மேல்நிலைப் பள்ளி பிற்படுத்தப்பட்டோர் நல மாணவ, மாணவியர்களுக்கு விடுதிகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

151—

**பணி நிரந்தரம்**

**வினா எண் 33—திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு தொழிலாளர் லத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசுத் தொழிலாளர் ஈட்டுறுதிக் காப்பீட்டுக் கழகம் (இ.எஸ்.ஐ.) மருத்துவமனைகளில் பத்து ஆண்டுகளுக்கு மேலாக அடிப்படைச் சம்பளத்தில் பணியாற்றும் லஸ்கர் பணியாளர்களைப் பணி நிரந்தரம் செய்ய அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

ஆம். அரசுத் தொழிலாளர் ஈட்டுறுதிக் காப்பீட்டுக் கழக மருத்துவமனைகளில் பத்து ஆண்டுகளுக்கு மேலாக அடிப்படைச் சம்பளத்தில் லஸ்கர் பணியாளர் (மருத்துவமனைப் பணியாளர்) எவரும் தற்போது பணிபுரியவில்லை. அயனாவரம் அரசுத் தொழிலாளர் ஈட்டுறுதிக் காப்பீட்டுக் கழக மருத்துவமனையில் பதிவிப்

பணியாளர்களாக மருத்துவமனைப் பணியாளர்கள் சிலரும், துப்பரவுப் பணியாளர்கள் சிலரும் அடிப்படைச் சம்பளத்தில் பணிபுரிந்து வருகிறார்கள். இவர்கள் விடுப்பில் செல்லும் பணியாளர்களுக்குப் பதிலாகப் பணியமர்த்தப்பட்டவர்கள். இவர்களைப் பணி நிரந்தரம் செய்ய தற்போதுள்ள விதிமுறைகளில் இடமில்லை. எனினும், இவர்கள் பத்து ஆண்டுகள் பணி நிறைவு செய்தவுடன், இவர்களது பணியை நிரந்தரம் செய்யப் பரிசீலிக்கப்படும்.

**152—**

## வேலைவாய்ப்பு அலுவலகம்

**வினா எண் 460—திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், தருமபுரி நகரில் துணை வேலைவாய்ப்பு அலுவலகத்தை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

தருமபுரி மற்றும் அதற்கு அருகிலுள்ள பகுதிகளில் பொதுத் துறை நிறுவனங்கள் அதிக அளவில் இல்லாததாலும், அப்பகுதிகளில் வேலைவாய்ப்புகள் இல்லாததாலும், ஒசூரில் ஏற்கெனவே ஒரு துணை வேலைவாய்ப்பு அலுவலகம் செயல்பட்டு வருவதாலும், கிருஷ்ணகிரியில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் இயங்கி வருவதாலும், தருமபுரி நகரில் புதிதாக ஒரு துணை வேலைவாய்ப்பு அலுவலகம் ஏற்படுத்தும் அவசியம் இல்லை.

**153—**

## இலவச சுயதொழில் பயிற்சி

**வினா எண் 1773—திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலையில்லாப் பட்டதாரிகள் மற்றும் இளைஞர்களுக்கு அரசால் இலவச சுய தொழிற் பயிற்சி தரும் முயற்சி மேற்கொள்ளப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

**154—**

## மகளிர் தொழிற் பயிற்சி நிலையம்

**வினா எண் 1827—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, ஆண்டிமடத்தில் மகளிர் தொழிற் பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

**155—**

## மருத்துவமனை

**வினா எண் 1922—திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், திருப்பத்தூர் தொகுதியில் பீடித் தொழிலாளர்களுக்குத் தனி மருத்துவமனை அமைத்துத்தர ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், திருப்பத்தூர் தொகுதியில் பீடித் தொழிலாளர்களுக்குத் தனி மருத்துவமனை அமைக்கும் திட்டம் எதுவும் அரசிடம் இல்லை.

(ஆ) எழவில்லை.

**156—**

## தொழிற்பயிற்சி நிலையம்

**வினா எண் 2011—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மிகவும் பின்தங்கிய பகுதியாக உள்ளதால், அங்கு ஒரு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

**157—**

## வருவாய் விவரம்

**வினா எண் 2317—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் வக்ஃப்பு வாரியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள நிலங்கள், வீடுகள் மற்றும் கடைகள் எவ்வளவு?

(ஆ) ஆண்டுக்கு அந்தச் சொத்துக்களிலிருந்து வாரியத்திற்கு வரும் வருவாய் எவ்வளவு?



விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் வக்ஃப்பு வாரியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள

| | | |
|---|---|---|
| நிலங்கள் | : | 25932.67 ஏக்கர் |
| கடைகள் | : | 13757 |
| வீடுகள் | : | 6594 |

(ஆ) மேற்காணும் சொத்துக்களிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு 1776 வக்ஃப்புகளுக்கு ரூ.16,31,32,600/- வருவாய் கிடைக்கிறது. மேற்படி வருவாயிலிருந்து வாரியத்துக்கு ஆண்டுக்கு 7 சதவிகிதம், ரூ.1,14,19,285/- சகாயத் தொகையாகக் கிடைக்கிறது.

**158—**

## தொழிலாளர் பிரச்சினையைத் தீர்த்தல்

**வினா எண் 2518—திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் டெக்ஸ்டூல் கம்பெனியில் தொழிலாளர் பிரச்சினையைத் தீர்க்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

கோவை டெக்ஸ்டூல் கம்பெனியின் தொழிலாளர்களின் சம்பள உயர்வு மற்றும் 1999-2000 கணக்காண்டிற்குப் போனஸ் குறித்து கோவை தொழிலாளர் உதவி ஆணையர் (சமரசம்-3) மற்றும் தொழிலாளர் ஆணையர் முன்பும் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. நிர்வாகம் லே-ஆஃப் அனுமதி வேண்டிய பிரச்சினையினை அரசு அரசாணை (டி) எண் 658, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை (டி1), நாள் 24-8-2001-ல் சென்னை, தொழில் தீர்ப்பாயத்தின் தீர்ப்பிற்கு விட்டு ஆணையிடப்பட்டுள்ளது. நிர்வாகம், தாவாவினை வற்புறுத்தவில்லையாதலால், 13-2-2002 அன்று சென்னை தொழிற் தீர்ப்பாயம் தாவாவினைத் தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

159—   [2002 மே 10

## தொழிற்பயிற்சி நிலையம்

**வினா எண் 3110—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதிக்கு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி அமைந்துள்ள மதுரை மாவட்டத்தில் 3 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் 20 அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன. இவை யாவும், அம்மாவட்டத்தின் தொழிற்கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்யுமாதலால் உசிலம்பட்டி தொகுதியில் தற்போது தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் அவசியம் இல்லையெனக் கருதப்படுகிறது.

160—

## வேலைவாய்ப்புப் பதிவு

**வினா எண் 3262—திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆசிரியர் பயிற்சி பெற்ற வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் தருமபுரி மாவட்டத்தில் போலியான முகவரி கொடுத்துப் பதிவு செய்ததால், இம்மாவட்டத்தைச் சேர்ந்தோர் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ஆசிரியர் பயிற்சி பெற்ற வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் தருமபுரி மாவட்டத்தில் போலியான முகவரி கொடுத்துப் பதிவு செய்துள்ளதாகப் புகார் பெறப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, போலியானவர்கள் என்று வருவாய்த் துறை அதிகாரிகளால் நிரூபிக்கப்பட்ட நேர்வுகளில் பதிவுதாரர்களுக்குக் காரணம் கோரும் கடிதம் அனுப்பி, பதில் பெற்று, ஏற்றுக்கொள்ள இயலாத நிலையில்,



அவர்களின் பதிவைப் பழைய மாவட்டத்துக்கு மாற்றும்படி கிருஷ்ணகிரி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலருக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

161—

## தொழிற்சாலைகளை மீண்டும் திறத்தல்

**வினா எண் 3268—திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டத்தில் மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளைத் திறக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டத்தில் கீழ்க்கண்ட 9 நிறுவனங்கள் இயங்காமல் உள்ளன:

1. **கலைப்பு அதிகாரி முன்பு நிலுவை:**

(1) முருகநாதன் மில்ஸ், காரியமங்கலம் 1-9-1997 79 தொழிலாளர்கள்

(2) எல்நெட், ஓசூர் 19-12-1998 136 தொழிலாளர்கள்

2. **பி.ஐ.எப்.ஆர். முன்பு நிலுவை:**

(1) டூல்ஸ் இண்டர்நேஷனல் லிமிடெட், ஓசூர் 9-2-1993 66 தொழிலாளர்கள்

(2) தமிழ்நாடு அலாய்ஸ் பவுண்டரி லிமிடெட், ஓசூர். 8-5-1993 102 தொழிலாளர்கள்

3. **தொழிலாளர் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையிலுள்ள நிறுவனங்கள்:**

(1) சகாகில் லிமிடெட், ஓசூர் 25-12-1997 300 தொழிலாளர்கள்

(2) இந்தோ ஸ்வீஸ் ஜூவெல்ஸ் லிமிடெட், ஓசூர். 19-10-1997 69 தொழிலாளர்கள்

4. **தொழிற் தகராறு எழுப்பப்படாத நிறுவனங்கள்:**

(1) மார்ஷல் லேட்டக்ஸ் புராடக்ட்ஸ் லிமிடெட், ஓசூர் 1-4-1994 60 தொழிலாளர்கள்

(2) விவேக் அலாய்ஸ் லிமிடெட், ஓசூர் 20-1-1998 56 தொழிலாளர்கள்

(3) புஷ்யா இண்டஸ்டிரியல் கேசஸ், ஓசூர். 1-12-1998 74 தொழிலாளர்கள்

கலைப்பு அதிகாரி, பி.ஐ.எப்.ஆர்., தொழிலாளர் நீதிமன்றம் முன்பு நிலுவையிலுள்ள நிறுவனங்கள் குறித்து நடவடிக்கை எடுக்க இயலாது.

162—

**பி. & சி. மில்**

**வினா எண் 3609—திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் மூடப்பட்டிருக்கும் பி. & சி. மில்லை திறப்பதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கையில் தற்போதைய நிலை என்ன?

(ஆ) பாதிக்கப்பட்டுள்ள தொழிலாளர்களின் நலனைப் பாதுகாப்பதற்காக அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர்:**

(அ) ஆலையை மீண்டும் திறக்கும் பொருட்டு நிர்வாகம் தாக்கல் செய்த புனரமைப்புத் திட்டம் குறித்து விசாரித்த பி.ஐ.எப்.ஆர்., புனரமைப்புத் திட்டத்திற்கு அங்கீகாரம் அளித்துள்ளது.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட புனரமைப்புத் திட்டத்தின்படி தொழிலாளர்களுக்குச் சேர வேண்டிய தொகைகள் பி. & சி. ஆலை நிர்வாகத்தால் வழங்கப்பட்டு வருகின்றது.

163—

**உதவித் தொகை**

**வினா எண் 3952—திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் வேலையில்லாப் பட்டதாரிகள் எத்தனை பேருக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது?

(ஆ) அந்தத் தொகையை உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?



விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு உதவித் தொகை அளிக்கும் திட்டம் 1993-94 முதல் கைவிடப்பட்டது.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

164—

**பதிவு செய்திருப்போர் எண்ணிக்கை**

**வினா எண் 3953—திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

30-6-2001 நிலவரப்படி தமிழகத்திலுள்ள வேலை தேடித்தரும் அலுவலகங்களில் பதிவு செய்திருப்போரின் எண்ணிக்கை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

30-6-2001 நிலவரப்படி தமிழகத்திலுள்ள வேலை தேடித்தரும் அலுவலகங்களில் பதிவு செய்திருப்போரின் எண்ணிக்கை 48,00,921 ஆகும்.

165—

**குழந்தைத் தொழிலாளர்கள்**

**வினா எண் 4505—திரு. கே. ஆறுமுகம் மற்றும் திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 18 வயதுக்குட்பட்ட குழந்தைகளைத் தொழிலாளர்களாக அனுப்பும் பெற்றோர் மீதும், பணியமர்த்தும் தொழில் அதிபர்கள் மீதும் அரசு மிகக் கடுமையாக நடவடிக்கை எடுக்க முன்வருமா?

(ஆ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் இதுபோன்று நடவடிக்கை எடுக்கப்பட்டதன் விவரம் என்ன?

(இ) இதுபோன்று அனைத்துத் தொழிற்சாலைகளைக் கண்டறிய அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர்:**

**அறிக்கை.**

(அ) 14 வயது முடிவடையாத நபர்களே 'குழந்தைகள்' (Child) என்றும், அவர்கள் பணியில் ஈடுபடுத்தப்படுவதைக் கீழ்க்கண்ட சட்டங்கள் மூலம் தடை செய்யப்படுகின்றது.

1. தமிழ்நாடு கடைகள் நிறுவனங்கள் சட்டம், 1948, பிரிவு 17
2. தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்டம் 1956, பிரிவு 17
3. தமிழ்நாடு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர் சட்டம் 1961, பிரிவு 29
4. தமிழ்நாடு பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர்கள் சட்டம் 1966, பிரிவு 24

1986 ஆம் வருடத்திய குழந்தைத் தொழிலாளர் (ஒழித்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டத்தில், ஆபத்தான தொழில்களில் (Hazardous Occupations) குழந்தைகள் பணி செய்வதை முற்றிலுமாகத் தடை செய்தும், ஆபத்தில்லாத தொழில்களில் (Non-Hazardous Occupations) குழந்தைகள் பணி செய்வதை முறைப்படுத்தியும் தெரிவிக்கப்பட்டுள்ளன. ஆபத்தில்லாத தொழில்களில் 14 வயதிற்குட்பட்ட குழந்தைகள் சில நிபந்தனைகளுடன் பணி செய்வது அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலே தெரிவித்துள்ள சட்டங்களுக்கு முரணாக குழந்தைத் தொழிலாளர்களைப் பணியில் ஈடுபடுத்தும் உரிமையாளர்கள்மீது தொழிலாளர் துறை அதிகாரிகள் முறையான ஆய்வு செய்து சட்டரீதியான நடவடிக்கை எடுத்து வருகின்றனர். 1948 ஆம் வருட தொழிற்சாலைகள் சட்டத்தில் 14 வயது முடிவடையாத நபர் 'குழந்தை' (Child) என்றும் 15 வயது முதல் 18 வயதுடைய நபர் 'வளர் இளம் பருவத்தினர்' (Adolescent) என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளன. மேலும் இச்சட்டத்தில், 15 வயது முதல் 18 வயதுடைய நபர்களை சான்றளிக்கப்பட்ட மருத்துவர் வழங்கும் மருத்துவச் சான்றுடன் நாளொன்றுக்கு 4½ மணிக்கு மேல் பணி செய்யக்கூடாது என்ற நிபந்தனைகளுடன் பணியமர்த்தலாம். 14 வயதிற்குட்பட்ட குழந்தைகளைப் பணிக்கமர்த்தும் நிறுவன



உரிமையாளர்கள் மீது தொழிற்சாலைத் துறை அதிகாரிகள், தொழிற்சாலைகள் சட்டம், பிரிவு 67-ன்கீழே சட்டப்படி நடவடிக்கை எடுத்து வருகின்றனர். குழந்தைகளை வேலைக்கு அனுப்பும் பெற்றோர் மீது தொழிலாளர் நலச் சட்டத்தின்கீழ் சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்க வழிவகை இல்லை.

(ஆ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் 89 குழந்தைத் தொழிலாளர்கள் கண்டறியப்பட்டு, அவர்களை வேலைக்கமர்த்திய நிறுவன உரிமையாளர்கள்மீது நீதிமன்றங்களில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு, அவை நிலுவையில் உள்ளன.

(இ) தொழிற்சாலைகள் சட்டம், 1948, பிரிவு 67-ன்படி 14 வயது பூர்த்தியடையாத குழந்தைகளை தொழிற்சாலைகளில் பணிக்கமர்த்தக் கூடாது என்பதால், இச்சட்ட மீறல்கள் இருந்தால், உடனுக்குடன் நிர்வாகத்தின்மீது நடவடிக்கை எடுத்து வழக்குத் தொடரப்படும். மேலும் இது குறித்து, குழந்தைத் தொழிலாளர்களைப் பணிக்கமர்த்துகின்றனரா என்பதைக் கண்டறிய, குழு ஆய்வுகள் மற்றும் திடீர் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, சட்ட விதிகளைக் கடைப்பிடிக்கத் தவறிய நிர்வாகத்தினர்மீது வழக்குத் தொடரப்படுகிறது.

**166—**

## வேலைவாய்ப்பில் முன்னுரிமை

**வினா எண் 4787—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் மொழிக் கல்வி பயின்றோருக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதுகுறித்த விவரம் அரசு தெரிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழைப் போதனா மொழியாகக் கொண்டு பயின்றோருக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கும் கருத்துரு அரசின் தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும் அறநிலையத் துறையின் பரிசீலனையில் உள்ளது.

167— [2002 மே 10

### வேலைவாய்ப்பு

**வினா எண் 4792—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஐ.டி.ஐ. படித்த இளைஞர்கள் நீண்ட நாட்களாக வேலை கிடைக்காமல் உள்ளனர் என்பது அரசுக்குத் தெரியுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

ஐ.டி.ஐ. படித்த இளைஞர்கள் நீண்ட நாட்களாக வேலை கிடைக்காமல் உள்ளனர் என்பதை அரசு அறியும். வேலைவாய்ப்பகங்கள் மூலம் அறிவிக்கப்படும் பணிக் காலியிடங்களுக்கு மனுதாரர்களைப் பரிந்துரைக்கத்தான் நடவடிக்கை எடுக்க இயலும்.

168—

### மையவாடி சுவரைச் சீரமைத்தல்

**வினா எண் 5381—திரு. பீ.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியம், பனஞ்சாவடி கிராமம், ஜாமியா பள்ளிவாசல் மையவாடி சுவரைச் சீரமைத்துக் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மூப்பு அடிப்படையில் 2002-2003 ஆம் நிதியாண்டில் பரிசீலிக்கப்படும்.



2002 மே 10]

169—

### மருத்துவ உதவி

**வினா எண் 5621—திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் தோட்டத் தொழிலாளர்களுக்கு மருத்துவ உதவி வழங்குவதற்கு ஏதேனும் மருத்துவமனைகள் கட்டப்பட்டுள்ளனவா?

(ஆ) அப்படியெனில் எத்தனை மனைகள்? அவை எவை?

(இ) அதில் 1999-2000 வருடங்களில் மருத்துவ வசதி பெற்ற தொழிலாளர்கள் எண்ணிக்கை எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ஒரு தோட்ட மருத்துவமனையும் (one Garden Hospital) 2 கூட்டு தோட்ட மருத்துவமனைகளும், 16 மருந்தகங்களும் உள்ளன.

(இ) 1999 ஆம் ஆண்டில் 44,089 தொழிலாளர்களும், 2000 ஆம் ஆண்டில் 49,804 தொழிலாளர்களும் மருத்துவ வசதி பெற்றுள்ளனர்.

170—

### சம்பளம் கிடைக்கச் செய்தல்

**வினா எண் 5795—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் உள்ள ஹைஃபாரஸ்ட் எஸ்டேட் தொழிலாளர்கள் கடந்த 9 மாதம் சம்பளம் கிடைக்காமல் கஷ்டப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) சம்பளம் கிடைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

(இ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பெற்றுள்ளது.

(ஆ) வால்பாறை தோட்ட நிறுவன ஆய்வர், கோவை தொழிலாளர் துணை ஆணையர் முன்பு சம்பளப் பட்டுவாடாச் சட்டத்தின்கீழ் ஜனவரி 2000 முதல் மே 2001 வரைக்கான சம்பளத்திற்கு கேட்பு மனுக்கள் தாக்கல் செய்து சம்பளம் வழங்கவும், சம்பளம் வழங்காமைக்கு அபராதம் விதித்தும் உத்தரவு வழங்கியுள்ளார். ஆனால், இவ்வாணைகள்மீது நிர்வாகம் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளது.

(இ) இப்பிரச்சினை குறித்துத் தொழிலாளர் ஆணையர் அளவில் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. கடைசியாக 12-11-2001 அன்று கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் கோவை மாவட்ட வருவாய் அலுவலர் முன்னிலையில் பேச்சு வார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டு, சில முடிவுகள் எடுக்கப்பட்டன. ஆனால் 12-11-2001 அன்று நடைபெற்ற பேச்சுவார்த்தையின்படி, நிர்வாகத்தினால் ஒப்புக்கொள்ளப்பட்டபடி நாளது தேதிவரை நிலுவையில் உள்ள சம்பளம் எதுவும் பட்டுவாடாச் செய்யப்படவில்லை. இந்நிலையில் தொழிலாளர்கள் எவரும் இதுநாள்வரை பணிக்குத் திரும்பவில்லை.

171—

## வருங்கால வைப்பு நிதி

**வினா எண் 5796—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, ஹைஃபாரஸ்ட் எஸ்டேட் தொழிலாளர்களின் வருங்கால வைப்பு நிதிப் பணம்கூட வருங்கால வைப்பு நிதி அலுவலகத்தில் கட்டாமல் உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்

(ஆ) வங்கிக் கணக்கு முடக்கி வைக்கப்பட்டுள்ளது. குற்றவியல் நடைமுறைச் சட்டப் பிரிவு 110-ன் படியும் வழக்குப் போடப்பட்டுள்ளது.



172—

## ரேஷன் அரிசி மீண்டும் வழங்குதல்

**வினா எண் 5797—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி அடங்கிய ஹைஃபாரஸ்ட் தொழிலாளர்கள் 9 மாதம் சம்பளம் கிடைக்காமல் இருக்கும்போது, அவர்களுக்குக் கொடுத்து வந்த ரேஷன் அரிசி போன்ற உணவு பொருட்களையும் நிர்வாகம் நிறுத்திவிட்டதை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை, ஹைஃபாரஸ்ட் எஸ்டேட் நிர்வாகத்தினால் நிறுத்தப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ள அரிசி போன்ற உணவுப் பொருட்களைத் தொழிலாளர்களுக்கு மீண்டும் வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

173—

## தொழிற்பயிற்சி நிலையம்

**வினா எண் 6044—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகராட்சியின்கீழ் தொழிற்பயிற்சி நிலையம் இயங்குவது போன்று சேலம் மாநகராட்சியின்கீழ் தொழிற்பயிற்சி நிலையம் தொடங்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

சென்னை மாநகராட்சியைப் போன்று சேலம் மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையம் தொடங்க முன்வந்தால், என்.சி.வி.டி. விதிகளுக்குட்பட்டு, தொழிற்பயிற்சி மையம் தொடங்க அனுமதி வழங்குவது குறித்து அரசு பரிசீலிக்கும்.

174—

## சித்த மருத்துவ மருத்துவர்கள்

**வினா எண் 6045—திரு. செ. வெங்கடாசலம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் சித்த மருத்துவ மருத்துவர்கள் எவ்வளவு பேர் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ளனர்?

(ஆ) அவர்கள் அனைவரையும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணியமர்த்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 30-6-2001 நிலவரப்படி, தமிழ்நாட்டில் சித்த மருத்துவர்கள் 1,233 பேர் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ளனர்.

(ஆ) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாகவே அரசு சுகாதார நிலையங்களுக்கு சித்த மருத்துவர்கள் நியமிக்கப்படுகின்றனர். வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் உள்ளாட்சித் துறைகளில் (Local Bodies) ஏற்படும் காலியிடங்களுக்கு மட்டுமே சித்த மருத்துவர்கள் தேர்வு செய்யப்பட்டுப் பணி நியமனம் செய்யப்படுகின்றனர்.

175—

## உடல் ஊனமுற்றோர் வேலைவாய்ப்பு

**வினா எண் 6049—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் வேலைவாய்ப்புக்காகப் பதிவு செய்துள்ள உடல் ஊனமுற்றோர் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) இதுவரை வேலைவாய்ப்புப் பெற்றவர் எவ்வளவு?

(இ) மீதம் உள்ளவர்கள் உடனடியாகப் பயன்பெறும் வகையில் அரசிடம் திட்டம் உள்ளதா?



விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 30-6-2001 நிலவரப்படி, காஞ்சிபுரம் மாவட்டத்தில் வேலை வாய்ப்புக்காகப் பதிவு செய்துள்ள உடல் ஊனமுற்றோர் 3,634 பேர் ஆவர்.

(ஆ) காஞ்சிபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் 2001 முடிய 749 உடல் ஊனமுற்றோர்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

(இ) இத்துறையினைப் பொறுத்தமட்டில், வேலைவாய்ப்பினை உருவாக்கும் திட்டங்கள் எதுவும் இல்லை.

176—

## ரப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு

**வினா எண் 6482—திரு. டி. மணி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், சிவலோகம் ரப்பர் தோட்டத்தில் கடந்த 1996 வரை பணியாற்றிய தொழிலாளர்களுக்கு வேலை மறுக்கப்பட்டுள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) இது தொடர்பாகத் தொழிலாளர்களிடமிருந்து கோரிக்கை ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், இதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ஆம்.

(இ) தொழிலாளர்களுக்குச் சட்டப்படி சேர வேண்டிய பலன்களை உடன் வழங்குமாறும், மேலும் மீண்டும் பால் வெட்டிற்குத் தொழிலாளர்கள் தேவைப்படும்போது அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து வேலை வழங்குமாறும் அரசு, நிர்வாகத்திற்கு அறிவுறுத்தியுள்ளது.

177—

## வேலைவாய்ப்பு ஏற்படுத்த சிறப்புத் திட்டம்

**வினா எண் 6579—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்த அரசிடம் சிறப்புத் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலைவாய்ப்பு அலுவலகங்கள் தன்னிச்சையாக வேலைவாய்ப்புகளை உருவாக்குவதில்லை. வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு அறிவிக்கப்படும் காலியிடங்களுக்குப் பதிவுதாரர்கள், அவர்களது கல்வி, வயது, சாதி மற்றும் பதிவு மூப்பு ஆகியவற்றின் அடிப்படையில், வேலையளிப்பவர்களுக்குப் பரிந்துரை செய்யப்படுகின்றனர். அவர்களைத் தேர்வு செய்து பணி நியமனம் செய்யும் அதிகாரம் வேலையளிப்பவர்களுக்கு மட்டுமே உள்ளது.

178—

## தொழிற்பயிற்சி நிலையம்

**வினா எண் 6659—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் 2-வது தொகுதி மிட்டா அய்யம்பெருமாம்பட்டி கிராமத்தில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க கையகப்படுத்திய நிலம் எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. வது. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

மேற்படி கிராமத்தில் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லாததால் நிலம் கையகப்படுத்தும் வினா எழவில்லை.



179—

## தொழிற்பயிற்சி நிலையம்

**வினா எண் 7036—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் தொழிற்பயிற்சிப் பயிலகம் கொண்டு வரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. வது. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, கோயம்புத்தூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. கோயம்புத்தூர் மாவட்டத்தில், கோயம்புத்தூரில் ஒரு அரசினர் தொழிற்பயிற்சி நிலையமும், மகளிருக்கென தனியே கோயம்புத்தூரில் ஒன்றும், திருப்பூரில் ஒன்றும், 32 அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களும் உள்ளன. இவையனைத்தும் கோவை மாவட்டம் மற்றும் வால்பாறைத் தொகுதி மக்களின் தொழிற்கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்யுமென்பதால், வால்பாறை தொகுதியில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் அவசியம் அரசுக்கு இல்லையெனக் கருதப்படுகிறது.

180—

## தையற் தொழிற்பயிற்சி மையம்

**வினா எண் 7042—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் வால்பாறை மேல்பகுதியில் தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகள், குறிப்பாகப் பெண்களுக்குத் தையல் தொழிற்பயிற்சி மையம் அமைக்க உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. வது. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்பொழுது வால்பாறையில் கீழ்க்கண்ட இடங்களில் தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகள், குறிப்பாகப் பெண்களுக்குத் தையல் பயிற்சிப் பிரிவு உள்ள தொழிலாளர் நல மையங்கள் இயங்கி வருகின்றன.

(1) தொழிலாளர் நல மையம் (தையல் பயிற்சி நிலையம்) முடீஸ் தியேட்டர் அருகில், வால்பாறை தாலுகா, மூடிஸ் போஸ்ட் - 642117.

(2) தொழிலாளர் நல மையம் (தையல் பயிற்சி நிலையம்) 28/107, மெயின் ரோடு, சிங்காரவேலர் ஓய்வு இல்லம், வால்பாறை-642127.

இதைத்தவிர, புதிதாக வால்பாறை பகுதியில் தொழிலாளர் நல மையங்கள்/தையற் பயிற்சி நிலையங்கள் தொடங்குவது தொடர்பாக எவ்விதமான செயற்குறிப்பும் அரசின் பரிசீலனையில் இல்லை.

181—

## தொழிற் துறையில் பிற்பட்ட வட்டம்

**வினா எண் 7453—திரு. ப. இராஜரெத்தினம்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பலூர் வட்டத்தைத் தொழிற்துறையில் பிற்பட்ட வட்டமாக அறிவிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

இல்லை.

182—

## வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம்

**வினா எண் 7516—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) சேரன்மகாதேவி தொகுதியிலுள்ள தாய்மார்களில் பெரும்பாலோர் பீடி சுற்றும் தொழில் செய்வதால், மத்திய அரசு மானியத்துடன் வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் வகுத்துள்ளதுபோல், மாநில அரசு அதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. வது. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில், பீடித் தொழிலாளர்கள் அதிகமாக வசிக்கும் இடங்களில், ஒருங்கிணைந்த பீடித் தொழிலாளர்கள் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு வீடும் ரூ.40,000/- மதிப்பீட்டில் கட்டலாம் என்றும், மத்திய தொழிலாளர் நல அமைச்சகத்திலிருந்து ஒவ்வொரு வீட்டுக்கும் ரூ.20,000/- மானியமாகப் பெறுவது என்றும், ரூ.5,000/- மாநில அரசு மானியமாக வழங்கலாம் என்றும், பயனாளிகள் தங்களுடைய சொந்தப் பணத்தைக் குறைந்தபட்சம் ரூ.15,000/- செலவழித்து, பயனாளிகளே அவர்களுடைய மேற்பார்வையில் வீடுகளைக் கட்டிக் கொள்ள அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது.

இந்த வகையில் சேரன்மகாதேவி தொகுதியிலும் சொந்தமாக வீடு கட்டும் நிலம் வைத்துள்ள பீடித் தொழிலாளர்கள் ஆண் அல்லது பெண் எவராக இருந்தாலும் அவர்களை இத்திட்டத்தின்கீழ் பயனடையச் செய்யத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

183—

## வயதானவர்களைப் பாதுகாத்தல்

**வினா எண் 7646—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) படித்துப் பட்டம் பெற்றும் அரசு வேலைவாய்ப்பு எதுவும் கிடைக்கப்படாமலேயே வயது வரம்பு தாண்டியவர்களைப் பாதுகாக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) இல்லையெனில், அதற்கு ஒரு திட்டத்தை அரசு அறிமுகப்படுத்துமா?

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) அவர்களைப் பாதுகாக்கத் தற்போது அரசிடம் கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை.

184—

## தொழிற் கல்வி நிறுவனம்

**வினா எண் 7958-அ—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாச்சலம் பகுதியில் தொழிற் கல்வி நிறுவனம் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விருத்தாச்சலம் பகுதி கடலூர் மாவட்டத்திற்கு உட்பட்டது. கடலூர் மாவட்டத்தில் கடலூரில் ஒரு அரசினர் தொழிற் பயிற்சி நிலையமும், மகளிருக்கான ஒரு அரசினர் தொழிற் நிலையமும், 8 அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களும் உள்ளன. இவையனைத்தும், கடலூர் மாவட்டத்தில் தொழிற்கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எனக் கருதப்படுவதால், விருத்தாச்சலம் பகுதியில் மேலும் ஒரு தொழிற்பயிற்சி நிலையம் தொடங்க வேண்டிய அவசியம் இல்லையெனக் கருதப்படுகிறது.

185—

## ஈ.எஸ்.ஐ. மருத்துவமனை

**வினா எண் 8177—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) பேரூர் தொகுதி, குறிச்சி பேரூராட்சியில் உள்ள ஈ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரியை, சுந்தராபுரம் பகுதிக்கு மாற்றித்தர அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) பேரூர் தொகுதியில் ஒத்தக்கால் மண்டபம், போத்தனூர், குனியமுத்தூர் ஆகிய பகுதிகளில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் இயங்கி வருகின்றன. இவற்றை சுந்தராபுரம் பகுதிக்கு மாற்ற முறையீடுகள் ஏதும் அத்தொகுதி வட்டார மக்களிடமிருந்தோ அல்லது காப்பீட்டாளர்களிடமிருந்தோ பெறப்படவில்லை. இதுகுறித்து செயல் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) இல்லை.

186—

## பதிவு செய்தல்

**வினா எண் 8184—திரு. தா. பச்சைமால்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

படித்தவர்கள் அந்தந்த மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்ய வேண்டும் என்பதை மாற்றி எந்த வேலைவாய்ப்பகத்திலும் பதிவு செய்யலாம் என அரசு ஆணையிடுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

தேசிய வேலைவாய்ப்புப் பணி நடைமுறை நூல் பத்தி-7(4)-இன் படி, மனுதாரர்கள் தாங்கள் எந்த இடத்தில் வசிக்கின்றார்களோ, அந்த எல்லைக்குட்பட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் மட்டுமே தங்களது கல்வித் தகுதியைப் பதிவு செய்துகொள்ள இயலும்.

187— [2002 மே 10

## தேயிலைத் தொழிலாளர் பிரச்சினைகள்

**வினா எண் 8256—திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம், மாஞ்சோலை தேயிலைத் தோட்டத் தொழிலாளர் சம்பளம் போன்ற பிரச்சினைகளை, கம்பெனி நிர்வாகம், தொழிற் சங்கம் இரண்டையும் அழைத்துப் பேசித் தீர்வு காணும் திட்டம் எதுவும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தற்சமயம் எதுவும் இல்லை. தொழிற்சங்கம் வலியுறுத்தினால் இதுகுறித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(அ) இக்கேள்வி எழ இடமில்லை.

188—

## மாற்று வேலைவாய்ப்பு

**வினா எண் 8489—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொது இடங்களில் புகை பிடிக்கத் தடை விதித்ததாலும், போதைப் பாக்குத்தூள் விற்பனையைத் தடை செய்ததாலும் பாதிக்கப்படும் தொழிலாளர்களுக்கு மாற்று வேலைவாய்ப்புத் தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

பாதிக்கப்படும் தொழிலாளர்களுக்கு மாற்று வேலைவாய்ப்புத் தரும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.



2002 மே 10]

189—

## நிவாரண உதவி

**வினா எண் 8493—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலைக்காக வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து வேலைகிடைக்காத இளைஞர்கட்கு மாதந்தோறும் வழங்கப்பட்டு வந்த நிவாரண உதவித் திட்டம் செயல் முறையில் இருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

190—

## ஒப்பந்தத் தொழிலாளர்

**வினா எண் 8743—திரு. டி.என். சிவசுப்பிரமணியன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒப்பந்தத் தொழிலாளர் முறைப்படுத்துதல் மற்றும் ஒழிப்பு (ரெகுலேஷன் மற்றும் அபாலிஷன்) சட்டத்தின்கீழ் காகித ஆலைகளில் ஒப்பந்தத் தொழிலாளர் முறையை நீக்குவதற்கான பணியிடங்களைக் கண்டறிந்து அரசுக்குப் பரிந்துரை செய்வதற்காக, அரசாணை (பல்வகை) எண் 148, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 11-11-1998-ல் அமைக்கப்பெற்ற துணைக் குழுவின் பரிந்துரைகளை வெளியிடவும், அதன்மீது நடவடிக்கை எடுக்கவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—



**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) துணைக் குழுவின் பரிந்துரைகளை வெளியிடுவதற்குரிய சூழ்நிலையில் தற்போது அரசு இல்லை.

**191—**

## மெட்டல் பாக்ஸ் கம்பெனி

**வினா எண் 9476—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடசென்னைப் பகுதியில் உள்ள மெட்டல் பாக்ஸ் கம்பெனி மீண்டும் திறக்கப்படுமா?

(ஆ) தற்பொழுது அக்கம்பெனி ஊழியர்களுக்கு அரசு சார்பில் உதவித் தொகை வழங்கப்படுகிறதா?

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மெட்டல் பாக்ஸ் கம்பெனியை மீண்டும் திறப்பது தொடர்பான பிரச்சினை தற்போது புதுதில்லி உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதால், அக்கம்பெனியை மீண்டும் திறப்பது தொடர்பாக அரசளவில் நடவடிக்கை ஏதும் எடுக்க இயலாத நிலை உள்ளது.

மேலும், வடசென்னையில் உள்ள மெட்டல் பாக்ஸ் கம்பெனி என்ற நிறுவனத்தில் பணிபுரிந்த 376 தொழிலாளர்களுக்கு 1-5-1999 முதல் மாதம் ரூ.250 உதவித் தொகை வழங்கிட அரசு ஒப்புதல் அளித்து உள்ளது. அவர்களில் உதவித் தொகை வழங்குவதற்கு ஏதுவாக வங்கியில் சேமிப்புக் கணக்கு தொடங்கி விவரம் தெரிவித்துள்ள 360 தொழிலாளர்களுக்கு, 1999 ஆம் ஆண்டு மே மாதம் முதல் 2000 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை, உதவித் தொகை ரூ. 9,64,750 அனுமதிக்கப்பட்டு பட்டுவாடாச் செய்யப்பட்டுள்ளது. அவர்களில் தொடர்ந்து உதவித் தொகை பெறத் தகுதியுடைய 347 தொழிலாளர்களுக்கு ஏப்ரல் 2000 முதல் உதவித் தொகை வழங்குவது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



**192—**

## காச நோய்ப் பிரிவு

**வினா எண் 9493—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி அரசு மருத்துவமனையில் தொழிலாளர் நலத் துறை மூலம் காச நோய் தனிப் பிரிவு ஒன்றை அரசு கட்டித்தர முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி அரசு மருத்துவமனையானது மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம், சென்னை-6-ன் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகிறது. தொழிலாளர் நலத் துறைக்கு முற்றிலும் சாராத பகுதியில் தொழிலாளர் நலத் துறை மூலம் காச நோய் தனிப் பிரிவு ஒன்று கட்டுவதற்கான சாத்தியக்கூறு அரசிடம் ஏதுமில்லை.

(ஆ) இல்லை.

**193—**

## விடுமுறை இல்லம்

**வினா எண் 9496—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் மூலமாகத் தொழிலாளர்கள் குடும்பத்துடன் சுற்றுலாச் சென்று தங்குவதற்கு விடுமுறை இல்லம் ஒன்று சேலம் மாவட்டம் ஏற்காட்டில் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) சென்னை, தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் தற்போதைய நிதிநிலை காரணமாக தொழிலாளர்கள் குடும்பத்துடன்

சுற்றுலாச் சென்று தங்குவதற்கு விடுமுறை இல்லம் ஒன்று சேலம் மாவட்டம், ஏற்காட்டில் கட்டுவதற்கான திட்டம் தற்போது தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை என்பதால், விவரங்கள் ஏதுமில்லை.

194—

## மருத்துவமனைக்குக் கூடுதல் வசதி

**வினா எண் 9796—திரு. எம். எஸ். சந்திரசேகரன்:** மாண்புமி தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராணிப்பேட்டையில் மிகவும் பின்தங்கிய பகுதியில் ஏற்கெனவே இயங்கி வரும் ஈ.எஸ்.ஐ. மருந்தகத்தை 50 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வது. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

இராணிப்பேட்டையில் இயங்கி வரும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்தை 50 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக மாற்ற கருத்துரு ஏதும் அரசிடம் இல்லை.

195—

## வேலைவாய்ப்பு அலுவலகம்

**வினா எண் 9867—திருமதி செ. சுந்தராம்பாள்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் நகரத்திலிருந்த வேலைவாய்ப்பு அலுவலகம், நாமக்கல்லுக்குக் கொண்டு செல்லப்பட்டதை மீண்டும் மேட்டூர் நகரத்திற்குக் கொண்டுவர அரசு ஆவன செய்யுமா?



விடை—

**மாண்புமிகு திரு. வது. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

196—

## ஆலையை மீண்டும் திறத்தல்

**வினா எண் 9873—திருமதி செ. சுந்தராம்பாள்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் நகரத்தில் தங்கமாபுரிபட்டினத்தில் இயங்கி வந்த "மைகோபார்ம்" என்ற ஆலை கடந்த நான்கு ஆண்டுகளாக மூடியிருப்பதை அரசு அறியுமா?

(ஆ) மீண்டும் திறப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வது. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அறியும். மத்திய அரசின் தடை ஆணையின்படி ஆலை மூடப்பட்டு உள்ளதால், அதனை திறப்பது தொடர்பாக மாநில அரசு நடவடிக்கை எடுத்திட இயலாது.

197—

## ஓய்வூதியம்

**வினா எண் 9878—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் சவரத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் கொண்டு வரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

[2002 மே 10

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் உள்ள சவரத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

**198—**

## தொழிற்பயிற்சிப் பள்ளி

**வினா எண் 10069—திரு. வி.ஆர். ராஜாங்கம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டியில் தொழிற்பயிற்சிப் பள்ளி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட வாடிப்பட்டி, மதுரை மாவட்டத்தில் அமைந்துள்ளது. மதுரை மாவட்டத்தில் தற்போது மதுரையில் ஓர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையமும், ஒரு மகளிர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையமும், செக்கானூரணியில் ஓர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையமும் உள்ளன. இதைத் தவிர இம்மாவட்டத்தில், 20 அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன. இவை அனைத்தும் அம்மாவட்டத்தின் தொழிற் கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்யும். எனவே, சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டியில் மேலும் ஒரு தொழிற்பயிற்சி நிலையம் தொடங்கும் அவசியம் அரசுக்கு இல்லையெனக் கருதப்படுகிறது.

**199—**

## தொழிற்பயிற்சி நிலையம்

**வினா எண் 11628—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2002 மே 10]

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், கந்திலி ஊராட்சி ஒன்றியத்தில் தொழிற்பயிற்சி நிலையம் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டத்தில், வேலூர் மற்றும் அரக்கோணம் ஆகிய இடங்களில் அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களும் மற்றும் 38 அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களும் இயங்கி வருகின்றன. கந்திலி ஊராட்சி ஒன்றியத்தில் YMCA JTC என்னும் அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சி நிலையம் இயங்கி வருகின்றது. எனவே, இங்கு மேலும் ஓர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் தொடங்கும் அவசியம் இல்லை எனக் கருதப்படுகிறது.

**200—**

## மருத்துவமனை

**வினா எண் 11688—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் எடப்பாடியில் இ.எஸ்.ஐ. மருத்துவமனை ஒன்று புதிதாக உருவாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் புதியதாக தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் அமைக்கக் கருத்துரு ஏதும் இல்லை.

## பட்டியல் 15*

[2002 மே 10

1—

### பாசன வசதி

**வினா எண் 678—திரு. ஊ. சந்தானம்:** மாண்புமிகு பொதுப் பணி மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி 58 கிராமக் கால்வாய்த் திட்டப் பணியை முடித்து விரைவில் பாசன வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

இத்திட்டத்தின்கீழ் கால்வாய் வெட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. வேலைகள் துரிதமாகச் செய்யப்பட்டு, திட்டத்தை முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2—

### தடுப்புச் சுவர்

**வினா எண் 1019—திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு பொதுப் பணி மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை கிழக்கு ஒன்றியம், சுந்தரராஜன்பட்டி பஞ்சாயத்தில் குடியிருப்புக்கு அருகில் உள்ள கண்மாயில் நீர் தேங்குவதைத் தடுக்க ஒரு தடுப்புச் சுவர் கட்ட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

போதுமான நிதியின்மையால் நிரந்தரத் தடுப்புச் சுவர் கட்ட இயலாது.

---

* இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.



3—

### பாசன வசதி

**வினா எண் 3605—திரு. எஸ்.எம். சீனிவேல்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பரங்குன்றம் தொகுதி, தென்பழஞ்சிக்கு மேற்கே மாவிலிப்பட்டியில் கால்வாய்த் திட்டத்தின்கீழ் வருகின்ற தண்ணீரை கீழ்க்குயில்குடி கிராமத்திற்கு மேல்புறத்திலுள்ள 15 கிராமங்களுக்கும் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது மாவிலிப்பட்டி கண்மாய்க்கே உரிய நீர் வழங்க இயலவில்லை. எனவே, மேலும் பாசன வசதியை விரிவு செய்ய இயலாது.

4—

### அணை கட்டுதல்

**வினா எண் 3986—திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், குற்றாலம் அருவியில் விழும் தண்ணீரைத் தேக்குவதற்கு அணை கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

குற்றாலம் அருவியில் விழும் தண்ணீரைத் தேக்குவதற்கு அணை கட்டும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

5—

## பாசனம்

**வினா எண் 4026—திரு. எஸ்.எம். சீனிவேல்:** மாண்புமிகு பொதுப் பணி மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை வைகை அணையிலிருந்து வரும் நிலையூர் கால்வாய் மூலம் திருப்பரங்குன்றம் தொகுதியில் ஒருபோக சாகுபடி நிலங்களை இருபோக சாகுபடி நிலமாக மாற்றவும், வைகை அணை நீர் ஆடி மாதத்தில் திறந்து விடவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

6—

## விவசாய நிலங்களுக்கு பாசன வசதி

**வினா எண் 4028—திரு. எஸ்.எம். சீனிவேல்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பரங்குன்றம் தொகுதி, கீழக்குயில்குடி கிராமத்திற்கு மேல்புறம் உள்ள 15 கிராமங்களுக்குத் திருமங்கலம் தொகுதி மாவிலிப்பட்டி கிராமம் வழியாகச் செல்லும் வைகை அணை வாய்க்கால் தண்ணீரை, 1 கி.மீ. வாய்க்கால் வெட்டி நீட்டிப்பதன் மூலம் மேற்படி விவசாய நிலங்கள் பயனடைய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

மாவிலிப்பட்டி கண்மாய்ப் பாசனத்துக்குத் தேவையான நீர் வழங்க இயலாத நிலை இருக்கும்போது, கீழ்க்குயில்குடி கிராமத்திற்கு மேல்புறம் உள்ள 15 கிராமங்களுக்குப் பாசன வசதி அளிக்க வாய்ப்பில்லை.



7—

## சாலை பராமரிப்பு

**வினா எண் 4577—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, திருநெல்வேலி-பொட்டல்புதூர் சாலையை (கி.மீ. 14/4-24/0) மேம்படுத்திப் பராமரிப்புச் செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இச்சாலையில் 6.4 கி.மீ. மேம்பாடு செய்யப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள பகுதிகளை மேம்பாடு செய்ய நிதிநிலைமைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

8—

## பச்சையாறு நீர்த்தேக்கத் திட்டம்

**வினா எண் 4623—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதியில் சம்பந்தன் குளத்தையும், வேலியார் குளத்தையும், வடக்கு இடையன் குளத்தையும், ஓனேக் குளத்தையும், அதியன் குளத்தையும் பச்சையாறு நீர்த்தேக்கத் திட்டத்தில் சேர்ப்பதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நீரியல் விவரப்படி மேற்கண்ட குளங்களைத் தற்போது பச்சையாறு நீர்த்தேக்கத் திட்டத்தில் சேர்க்க இயலாது.

9—

## ஆக்கிரமிப்பு

**வினா எண் 6587—திரு. வி.ஆர். ராஜாங்கம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதி, நாச்சிகுளத்திலுள்ள விவசாயிகளுக்குப் பயன்படும் கண்மாயில் உள்ள ஆக்கிரமிப்புகளை நீதிமன்றம் காலி செய்ய உத்தரவிட்டும், ஆக்கிரமிப்புகள் அகற்றப்படாமல் உள்ளதைக் கருதி அரசு தீவிர நடவடிக்கை எடுத்து ஆக்கிரமிப்பை அகற்ற முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

நாச்சிகுளம் கண்மாயின் நீர்பிடிப்புப் பகுதியில் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுள்ளன.

10—

## நீர்த்தேக்கம்

**வினா எண் 8104—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், பச்சனம்பட்டி ஊராட்சியில் ஆலக்கரடு அருகில் சாபங்கா ஆற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், பச்சனம்பட்டி ஊராட்சியில் ஆலக்கரடு அருகில் சாபங்கா





ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்க ரூ.15.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்) அவர்கள் பரிசீலனையில் உள்ளது.

11—

## பாசன வசதி

**வினா எண் 8185—திரு. கே.கே. உமாதேவன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரியாறு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட ஏழாவது வாய்க்காலில் நிரந்தரமாகப் பாசனத்திற்குத் தண்ணீர் திறந்துவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

பெரியாறு பங்கீட்டுத் தண்ணீர் போதுமான அளவு இருந்தால் மட்டுமே பெரியாறு நீட்டிப்புக் கால்வாயில் பாசனத்திற்குத் தண்ணீர் திறந்துவிட இயலும் என்று நடைமுறையில் உள்ளது.

12—

## கட்டுமானப் பணி

**வினா எண் 8507—திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் கடானா அணையின் வலதுபுற மேல்மட்டக் கால்வாயின் கட்டுமானப் பணியின் நிலை என்ன?

(ஆ) இந்த ஆண்டுக்குள் அத்திட்டம் முடிவடைந்து விடுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) கடானா அணையின் வலதுபுற மேல்மட்டக் கால்வாய் என்று கிடையாது. ஆனால் கடனா அணையின் வலதுபுறத்தில் பிரதானக் கால்வாய் வெட்டும் பணி நடைபெற்றுக்கொண்டு வருகிறது.

(ஆ) இத்திட்டம் 2002-2003-ல் முடிக்கப்படும்.

13—

## முதுகலைப் பாடப் பிரிவுகள்

**வினா எண் 265—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி அரசினர் ராஜகோபாலசுவாமி கலைக் கல்லூரியில் முதுகலைப் பாடப் பிரிவுகள் இவ்வாண்டே தொடங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) அரசின் நிதிநிலையைக் கருத்தில் கொண்டு கூடுதல் நிதிச்சுமையுடன் கூடிய புதிய பாடப் பிரிவுகள் ஏதும் நடப்பாண்டில் தொடங்குவது இல்லையென அரசு முடிவெடுத்துள்ளது. எனவே, இக்கல்லூரியில் முதுகலைப் பாடப் பிரிவுகள் தொடங்கும் உத்தேசமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

14—

## உயர்நிலைப் பள்ளி

**வினா எண் 1639—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், கோ. சத்திரம் ஆரம்பப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியை நேரடியாக உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலாது. தொடக்கப் பள்ளியை முதலில் நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திய பின்புதான் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலும்.



15—

## கணினிக் கல்விக் கட்டணம்

**வினா எண் 3843—டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுக் கல்லூரிகளில் இரண்டாம் ஆண்டு பயிலும் மாணவர்கள் கட்டாயக் கணினிக் கல்வி பெற ரூ.2000/- என்.ஐ.பு.டி. நிறுவனம் பெறுவதால், கட்டணம் செலுத்த முடியாதோரின் படிப்பு பாதிக்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், கட்டாயக் கட்டணம் செலுத்துவதை அரசு ரத்து செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் உள்ள 60 அரசுக் கல்லூரிகளில் 2000-2001 ஆம் கல்வியாண்டு முதல் கணினிக் கல்வித் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தில் மாணவர்கள் தங்கள் விருப்பத்தின் அடிப்படையிலேயே இணைந்து பயிற்சி பெறுகிறார்கள். இத்திட்டத்தில் சேருமாறு எந்த மாணவரும் கட்டாயப்படுத்தப்படவில்லை. இத்திட்டம், என்.ஐ.ஐ.டி. தவிர, மேலும் இரு நிறுவனங்களான, எஸ்.ஆர்.எம். சிஸ்டம்ஸ் மற்றும் ரவிச்சந்திரா சிஸ்டம்ஸ் அண்டு சாப்ட்வேர் ஆகிய நிறுவனங்கள் மூலம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தில் சேரும் மாணவ-மாணவியர் பயிற்சிக் கட்டணமாக ரூ.2000/--ஐக் கல்லூரியில் செலுத்த வேண்டும். மாணவர்களின் நலன் கருதி இத்தொகையை ரூ.500/- வீதம் நான்கு தவணைகளில் செலுத்தலாம். இத்தொகை கல்லூரியிலிருந்து அரசுக் கணக்கில் செலுத்தப்படுகிறது. என்.ஐ.ஐ.டி. நிறுவனமோ அல்லது பிற நிறுவனங்களோ நேரடியாகக் கட்டணம் எதுவும் வசூலிப்பதில்லை.

(ஆ) இந்தப் பயிற்சியில் சேரும் எந்தவொரு அரசுக் கல்லூரி மாணவரிடமிருந்தும் கட்டாயப்படுத்திக் கட்டணம் வசூலிக்கப்படவில்லை. விருப்பமுள்ள மாணவர்கள் பயிற்சியில் சேர்க்கப்படுகிறார்கள்.

16—

## கல்லூரிகள் இணைப்பு

**வினா எண் 3848—திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள அரசு மற்றும் சுயநிதிப் பொறியியல் கல்லூரிகள் அனைத்தையும் அண்ணா பல்கலைக்கழகத்தில் இணைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டிலுள்ள 6 அரசுப் பொறியியல் கல்லூரிகள் அண்ணா பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளாக மாற்றப்பட்டுள்ளன. அரசு நிதியுதவி பெறும் மற்றும் சுயநிதிப் பொறியியல் கல்லூரிகள் 210-ம் அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டு, (அண்ணா பல்கலைக்கழகத் திருத்தச் சட்டம் 2001-ன்படி) 31-12-2001 முதல் இயங்கி வருகின்றன.

17—

## கல்விப் பயிற்சி மையம்

**வினா எண் 5338—திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்விப் பயிற்சி (Tuition Centre) மையம் என்று வைத்து மாணவர்களிடம் சிலர் பணம் வசூலிப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதை வரைமுறைப்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) உள்ளது.



18—

## கலைக் கல்லூரி

**வினா எண் 6761—திரு. கே.கே. சிவசாமி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை தொகுதி, காரியாப்பட்டியில் அரசு கலைக் கல்லூரி அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) அரசின் தற்போதைய நிதிநிலைமையின் காரணமாகப் புதிய அரசு கலைக் கல்லூரிகளைத் தொடங்குவதில்லை என அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது. எனவே, அருப்புக்கோட்டை தொகுதி காரியாப்பட்டியில் அரசு கலைக் கல்லூரி தொடங்குவதற்கான வாய்ப்பு இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

19—

## அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகம்

**வினா எண் 6861—திரு. மா. சின்னசாமி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 160-க்கும் மேற்பட்ட சுயநிதி மற்றும் அரசுப் பொறியியல் கல்லூரிகளை அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைத்து அதனை "அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகம்" எனப் பெயர் மாற்றம் செய்ய அரசு பரிசீலிக்குமா?

(ஆ) ஆம் எனில், அரசின் நிலை யாது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டிலுள்ள 6 அரசுப் பொறியியல் கல்லூரிகள், அண்ணா பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளாக மாற்றப்பட்டுள்ளன. அரசு நிதியுதவி பெறும் மற்றும் சுயநிதிப் பொறியியல் கல்லூரிகள் 210-ம் அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டு, (அண்ணா பல்கலைக்கழகத் திருத்தச் சட்டம் 2001-ன்படி) 31-12-2001 முதல் இயங்கி வருகின்றன. அண்ணா பல்கலைக்கழகத்தை அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் எனப் பெயர் மாற்றம் செய்யும் கருத்துரு ஏதுமில்லை.

20—

## கலைக் கல்லூரி

**வினா எண் 7152—திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், திருவொற்றியூர் தொகுதியில் அரசு கலைக் கல்லூரி அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

அரசின் நிதிநிலைமை காரணமாக புதிய அரசுக் கல்லூரிகளைத் தொடங்குவது இல்லை என அரசு கொள்கை முடிவெடுத்துள்ளது. எனவே, திருவள்ளூர் மாவட்டம், திருவொற்றியூர் தொகுதியில் அரசு கலைக் கல்லூரி ஆரம்பிக்கும் திட்டம் ஏதுமில்லை.

21—

## அரசு கலைக் கல்லூரி

**வினா எண் 7386—திருமதி ஆர். சசிகலா:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, குளித்தலை வட்டம் பகுதியில் அரசு கலைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதற்கான பணிகள் எப்போது தொடங்கப்படும்?



விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) தற்போதைய நிதிநிலைமையின் காரணமாக புதிய அரசு கலைக் கல்லூரிகளைத் தொடங்குவது இல்லை என அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது. எனவே, கிருஷ்ணராயபுரம் தொகுதி, குளித்தலை வட்டம் பகுதியில் அரசு கலைக் கல்லூரி ஆரம்பிக்கும் வாய்ப்பு இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

22—

## மாதிரிப் பல்கலைக்கழகம்

**வினா எண் 16857—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய அரசின் மாதிரிப் பல்கலைக்கழகம் ஒன்றைத் தமிழகத்தில் தொடங்கலாம் என அரசு தீர்மானித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடைமுறைப்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

23—

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 1758—திருமதி கே. பவானி கருணாகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, தக்கோலம் கூட்டு ரோடு, அரிசிலபாடியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், நெமிலி ஊராட்சி ஒன்றியம், அரிசிலபாடி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

24—

## தனியார் மருத்துவக் கல்லூரிகள்

**வினா எண் 3958—திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழகத்தில் தனியார் மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்க அனுமதி அளிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் தனியார் மருத்துவக் கல்லூரிகள் தொடங்க அனுமதி கோரி பல விண்ணப்பங்கள் வந்துள்ளன. இந்த விண்ணப்பங்களை ஆய்வு செய்வதற்கான நெறிமுறைகளை அரசு ஆணை எண் 211, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 13-8-2001 மூலம் தற்போது ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இது குறித்துத் தனியார் மருத்துவம்/பல் மருத்துவக் கல்லூரி தொடங்க அனுமதி கோரி வந்துள்ள விண்ணப்பங்கள் புதிய நெறிமுறைகளின்படி பரிசீலிக்கப்படும்.

25—

## சிறப்புச் சலுகைகள்

**வினா எண் 3963—திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இலவசமாக இரத்த தானம் செய்யும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு பஸ் பாஸ், வேன் வசதி போன்ற சிறப்புச் சலுகைகள் வழங்க அரசு முன் வருமா?



(ஆ) ஆம் எனில், என்னென்ன சலுகைகள் வழங்கப்பட உள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இலவசமாக இரத்த தானம் செய்யும் தொண்டு நிறுவனங்களுக்கு பஸ் பாஸ், வேன் வசதி போன்ற சிறப்புச் சலுகைகள் எதுவும் வழங்கப்படுவதில்லை. தொண்டு நிறுவனங்கள் இரத்த தான முகாம்கள் நடத்த ஏற்பாடு செய்து அரசு உரிமம் பெற்ற இரத்த வங்கிகளுக்குத் தெரிவித்தால், இரத்த வங்கிக் குழு, முகாம் நடத்தப்படும் இடங்களுக்குச் சென்று இரத்தக் கொடையாளிகளுக்குத் தேவையான இலவச மருந்தும், சிற்றுண்டியும் வழங்கும். மேலும் அரசு தரும் ரூ.10 உடன், தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம் வழங்கும் ரூ.10-ஐயும் சேர்த்து ரூ.20 இரத்தக் கொடையாளிகளுக்கு சிற்றுண்டிக்காக வழங்கப்பட உள்ளது.

26—

## பணியிடங்களை உயர்த்துதல்

**வினா எண் 5254—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை அருகே குமரலிங்கம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் செவிலியர், உதவியாளர் பணியிடங்களின் எண்ணிக்கையை உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) குமரலிங்கம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் செவிலியர் உதவியாளர் பணியிடங்கள் உயர்த்தும் திட்டம் ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

27— [2002 மே 10

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 6093—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சின்னமனை பகுதி மக்களுக்கு அரசு ஆரம்பு சுகாதார நிலையம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம், சின்னமனை கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

28—

## சலுகைகள்

**வினா எண் 7267—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலமாக இலவச மருத்துவ முகாம்களை ஊக்குவிக்கும் பொருட்டு அரசு அந்நிறுவனங்களுக்குச் சலுகைகள் வழங்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலமாக இலவச மருத்துவ முகாம்களை ஊக்குவிக்க அந்நிறுவனங்களுக்குச் சலுகைகள் வழங்கும் குறிப்பு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.



2002 மே 10]

29—

## மருத்துவமனை

**வினா எண் 8685—திருமதி ஆர். சசிகலா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதியை மையமாகக் கொண்டு புதிய அரசு மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கிருஷ்ணராயபுரத்தில் ஏற்கெனவே அரசு தாலுகா மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. எனவே, அத்தொகுதியில் புதியதாக அரசு மருத்துவமனை அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) வினா எழாது.

30—

## யானைக்கால் வியாதி

**வினா எண் 11604—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் இன்னும் யானைக்கால் வியாதியால் பாதிக்கின்றவர்கள் இருக்கிறார்களா?

(ஆ) ஆம் எனில், அதனைத் தடுக்க அரசு எடுத்து வரும் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டில் 38109 பேர் யானைக்கால் நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நோய் பரவாமல் தடுக்கும் பொருட்டு, இந்நோய் பாதிக்கப்பட்டுள்ள 12 மாவட்டங்களில், டி.இ.சி. ஒட்டு மொத்த சிகிச்சை எனும் புதிய உத்தி மூலம் கடந்த நான்கு ஆண்டுகளாக அனைத்து மக்களுக்கும் டி.இ.சி. மாத்திரைகள் வழங்கப்பட்டு வருகிறது.

31—

## நோயாளிகளுக்கு உணவு வழங்குதல்

**வினா எண் 19580—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி அரசு மருத்துவமனையில் உள்நோயாளிகளுக்கு உணவு தயாரித்து வழங்குவதற்கான ஏற்பாடு இல்லாத நிலையில், தனியார் உணவு வழங்குவதற்கான அரசு ஆணையும் வந்து சேராததால், உள்நோயாளிகளுக்கு உணவு வழங்க இயலாத நிலை ஏற்பட்டு உள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக உள்நோயாளிகளுக்கு உணவு வழங்க மாற்று ஏற்பாடு அரசு செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி அரசு மருத்துவமனையில் தற்போது உள்நோயாளிகளுக்குத் தினமும் காலை 500 மில்லி பால் மாலை 400 மில்லி பால் வழங்கப்பட்டு வருகிறது.

(ஆ) அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் உள்நோயாளிகளுக்கு உணவு வழங்கும் பணியினைத் தனியார் மூலம் செயல்படுத்த அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் தனியார் நிறுவனம் மூலம் எடப்பாடி மருத்துவமனையிலும் உணவு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

32—

## கூட்டுக் குடிநீர்

**வினா எண் 2783—திரு. வெ. கோவிந்தராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலமாக கிருஷ்ணகிரி நகருக்குக் குடிநீர் வழங்க அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஒகேனக்கல் அருகே காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு குடிநீர் மற்றும் சுகாதார வசதியுடன் ஒருங்கிணைந்த திட்டம் ஒன்றினை தருமபுரி மாவட்டம் முழுவதிலும் உள்ள 3 நகராட்சிகள், 17 பேரூராட்சிகள் மற்றும் 18 ஒன்றியங்களிலுள்ள 5542 குடியிருப்புகளும் பயன்பெறும் வகையில் ரூ.1008 கோடிக்குத் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் கிருஷ்ணகிரி நகராட்சியும் பயன்பெறும்.

இத்திட்ட மதிப்பீடு ரூ.1008 கோடியைக் கருத்தில் கொண்டு வெளிநாட்டு நிதி உதவி மூலம் இத்திட்டத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அரசின் நிர்வாக ஒப்புதலும், நிதி ஒதுக்கீடும் பெற்றவுடன் திட்டப் பணிகள் ஆரம்பிக்கப்படும்.

33—

## நிதி உதவி

**வினா எண் 3546—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் (இஏஎஸ்) வழங்கப்படும் நிதியைச் செலவிடும் போக்கைக் கண்காணிக்கவும், கட்டுப்படுத்தவும் அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்திற்கான ஆண்டுத் திட்டம், மாவட்ட ஊராட்சியின் மூலம் முடிவு செய்யப்பட்டு, பணிகளுக்கான நிர்வாக அனுமதி, மாவட்ட ஊராட்சியின் செயலாளரால் வழங்கப்படுகிறது.

(ஆ) இத்திட்டத்திற்கான நிதிப் பயன்பாட்டு முன்னேற்றம் மாதந்தோறும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் தலைவரான மாவட்ட ஆட்சித் தலைவராலும் மற்றும் திட்ட அலுவலராலும் மாதந்தோறும் ஆய்வு செய்யப்பட்டுக் கண்காணிக்கப்படுகிறது.

34—

## குடிநீர் வசதி

**வினா எண் 5483—திரு. டி. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை உபகோட்டம், விளாத்துறை குடிநீர்த் திட்டக் கிணறு உடைந்ததைப் பற்றிய தகவல் ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது சீர் செய்யப்பட்டு மக்களுக்குக் குடிநீர் வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை உபகோட்டம், விளாத்துறை குடிநீர்த் திட்டக் கிணறு விளாத்துறை அருகில் குழித்துறை ஆற்றில் அமைந்துள்ளது. இக்கிணற்றில் உடைப்பு எதுவும் ஏற்படவில்லை. இக்கிணற்றின் மூலமாகத் தொடர்ந்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

35—

## பள்ளிக் கட்டடம்

**வினா எண் 6291—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரி அருகே உள்ள கன்னேரிமுக்கு அரசு உயர்நிலைப் பள்ளிக் கட்டடம் கோத்தகிரி ஊராட்சி ஒன்றியப் பொறுப்பில் உள்ளது. இதனைப் பொதுப் பணித் துறையிடம் ஒப்படைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரி அருகேயுள்ள கன்னேரிமுக்கு அரசு உயர்நிலைப் பள்ளிக் கட்டடம், கோத்தகிரி ஊராட்சி ஒன்றியப் பொறுப்பிலிருந்து பொதுப் பணித் துறைக்கு 30-8-2001 அன்று ஒப்படைக்கப்பட்டுள்ளது.

36—

## அவினாசி—அத்திக்கடவு குடிநீர்த் திட்டம்

**வினா எண் 7420—திரு. ப. சிதம்பரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசி-அத்திக்கடவு குடிநீர்த் திட்டம், பவானிசாகர் தொகுதிக்கு வரும்போது பல இலட்சம் மக்கள் பயன் அடைவார்கள் என்பதால் திட்டம் இந்த ஆண்டே செயல்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்த விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இத்திட்டத்தை இந்த ஆண்டு செயல்படுத்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

37—

## அடிபம்பு அமைத்தல்

**வினா எண் 8458—திரு. பீ.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஊராட்சி ஒன்றியம் ஐந்தாங்கட்டளை கிராமத்தில் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க அடிபம்பு அமைத்துக் கொடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், ஐந்தாங்கட்டளை கிராமத்தில் அடிபம்பு அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை.

38—

## குடிநீர் வசதி

**வினா எண் 15206—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கெண்டையனஅள்ளி ஊராட்சி குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க உடனடியாகக் கைப்பம்புகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கெண்டையனஅள்ளி ஊராட்சியில் ஏற்கெனவே 29 கைப்பம்புகளும், 3 விசைப்பம்புகளும் அமைக்கப்பட்டு, குடிநீர் விநியோகம் சீராகச் செய்யப்பட்டு, குடிநீர்ப் பிரச்சினை ஏதுமில்லாமல் உள்ளது.

39—

## கூட்டுறவு துணைப் பதிவாளர் அலுவலகம்

**வினா எண் 3066—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், கூட்டுறவு துணைப் பதிவாளர் அலுவலகத்தை மீண்டும் திருமங்கலத்திலிருந்து உசிலம்பட்டிக்கு மாற்றித்தர அரசு முன்வருமா?



விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

இல்லை.

40—

## நெல் மூட்டைகள் இருப்பு

**வினா எண் 11101—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் கொள்முதல் செய்யப்படுகின்ற நெல் மூட்டைகள் இரயில் வேகன்களின் மூலம் சென்னை சால்ட்குவாட்டர்ஸ் கூட்ஸ் ஷெட்டில் இறக்கப்படுவதை மாற்றி இராயபுரம் கூட்ஸ் ஷெட்டில் இறக்கப்படுவதால் ஏற்படும் கோடிக்கணக்கான ரூபாய் இழப்பு குறித்து அரசு அறியுமா?

(ஆ) அதை மாற்றி பழையபடியே சால்ட்குவாட்டர்ஸ் கூட்ஸ் ஷெட்டில் நெல் மூட்டைகள் இறக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் கொள்முதல் செய்யப்படுகின்ற நெல் மூட்டைகள் இரயில் வேகன்கள் மூலம் சென்னை சால்ட்குவாட்டர்ஸ் கூட்ஸ் ஷெட்டில் இறக்கப்படுவதை மாற்றி இராயபுரம் கூட்ஸ் ஷெட்டில் இறக்கப்படுவதால் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு இலாபமே தவிர, இழப்பு ஏதும் இல்லை.

(ஆ) வேகன்கள் காவிரிப் பாசன மண்டலங்களில் பதிவு செய்யும்போது இரயில்வே துறையினர் சென்னையைப் பொறுத்தவரை சால்ட்குவாட்டர்ஸ் மற்றும் இராயபுரம் கூட்ஸ் ஷெட்டில் வேகன்கள் இறக்குவதற்கான நிலவரத்தை அனுசரித்தே வேகன்கள் ஒதுக்கீடு செய்து வருகிறார்கள். மேலும் இராயபுரம் கூட்ஸ் ஷெட்டில் சரக்குகளைக் கையாளுவதில் இரயில் கட்டணம் மிச்சப்படுவதாலும், சரக்குகளை உடனுக்குடன் இறக்கம் செய்யத் தற்போது இரண்டு

இரயில் முனைகளிலும் ஒதுக்கீடு செய்யக் கோரி அது நடைமுறைப்படுத்தப்படுகிறது.

41—

## பரிசோதனை நிலையம்

**வினா எண் 14164—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதியில் பூச்சி மருந்துப் பரிசோதனை நிலையம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கான பதில் எழவில்லை.

42—

## தொகுப்பு வீடுகள்

**வினா எண் 1258—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், கொளத்தூர் ஒன்றியத்தில் குடியிருக்கும் அனைத்து மலைவாழ் மக்களுக்கும் தொகுப்பு வீடுகள் கட்டித் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 3863 பழங்குடியினர் குடும்பங்களில் 541 பழங்குடியினர் குடும்பங்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன. மீதமுள்ள



குடும்பங்களுக்குத் தகுதியின் அடிப்படையில் ஒவ்வோர் ஆண்டும் படிப்படியாக வீடுகள் கட்டித்தர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

43—

## நில ஆர்ஜிதம்

**வினா எண் 5522—திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை அருகே சின்னப் பூலாங்கிணர் ஏழை கிராம ஆதிதிராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க நிலம் ஆர்ஜிதம் செய்ய அரசு பரிசீலிக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலை வட்டம், பூலாங்கிணர் கிராமம், க.ச. எண் 244/ஏ காலையில் 1.54.5 எக்டேர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு, ஆர்ஜித நிலத்தில் 82 மனையிடங்கள் கொண்ட மனைப் பிரிவு ஏற்படுத்தப்பட்டு, 48 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 34 மனையிடங்களுக்கு பூலாங்கிணர் மற்றும் சின்னப் பூலாங்கிணர் ஆகிய பகுதிகளில் வசிக்கும் 85 நபர்கள் வீட்டுமனையிடம் வேண்டி விண்ணப்பம் செய்துள்ளனர். இவர்களில் தகுதியான நபர்களைத் தேர்வு செய்து, மீதமுள்ள 34 மனை இடத்திற்குப் பட்டா வழங்கப்படும். இதுபோக மேலும் தகுதியான நபர்கள் இருப்பின் புதிதாகத் தனியார் நிலம் ஆர்ஜிதம் செய்து வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

44—

## இடஒதுக்கீடு முறை

**வினா எண் 6704—திரு. இரா. திருமாவளவன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசாணை எண் 44-ஐ இரத்து செய்ததை மீண்டும் நடைமுறைப்படுத்தி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இட ஒதுக்கீடு முறையை முறையாகப் பின்பற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், இந்நிதியாண்டில் நிறைவேற்றப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 44, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 20-5-1998-ஐ மீண்டும் செயல்படுத்த அரசாணை (நிலை) எண் 91, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 28-11-2001-ல் விரிவான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. அதன்படி துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

45—

## கிரானைட் உற்பத்தி

**வினா எண் 7504—திரு. மா. சின்னசாமி:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இந்திய கிரானைட்களுக்கு உலகச் சந்தையில் தேவை அதிகரித்துள்ளதைக் கருத்தில் கொண்டு தமிழக அரசு போதுமான குவாரிகளை ஏலம் விட்டு கிரானைட் உற்பத்தியைப் பெருக்கும் சூழலை ஏற்படுத்த முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

அரசு நிலங்களில் கிடைக்கும் கிரானைட் கற்களை ஒப்பந்தப் புள்ளி மற்றும் ஏல முறையில் குத்தகை வழங்குவதற்கு, 1959 ஆம் ஆண்டின் தமிழ்நாடு சிறு கனிமச் சலுகை விதிகளில் விதி 8-ஏல் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு ஒப்பந்தப் புள்ளி மற்றும் ஏல முறையில் குவாரிக் குத்தகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதற்காகப் புவியியல் மற்றும் சுரங்கத் துறையைச் சார்ந்த புவியியல் வல்லுநர்கள் ஆய்வு நடத்தி, அரசு நிலங்களில் கிடைக்கப்பெறும் கிரானைட் கற்களைக் கண்டறிந்து, அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலம் அறிவிப்புச் செய்து மேற்கண்ட முறையின் மூலம் குவாரிக் குத்தகை வழங்கி வருகின்றனர்.



46—

## கல் எடுக்க அனுமதி

**வினா எண் 8217—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மகளிருக்கு என்று ஒரு குழு அமைத்து வால்பாறையில் கல்குவாரியில் கல் எடுக்க அனுமதி நிறுத்தப்பட்டதை மீண்டும் தொடர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு ஆணை எண் 44, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை, நாள் 2-4-1990-ன்படி கோவை மாவட்டத்தில் உள்ள வால்பாறை வட்டம், மலைப் பகுதிப் பாதுகாப்புக் குழுமத்தின் கட்டுப்பாட்டில் வருவதால் கல்குவாரிகளுக்கான குத்தகை உரிமம் வழங்க இக்குழுமத்தின் தடையில்லாச் சான்று பெறுதல் அவசியமாகும் என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது. இக்குழுவிடமிருந்து தடையில்லாச் சான்று பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அது கிடைக்கப்பெற்றவுடன் மட்டுமே பெண்கள் சுய உதவிக் குழுக்களுக்குக் கல் உடைக்க அனுமதி வழங்க இயலும்.

47—

## குடியிருப்புகள்

**வினா எண் 3838—திரு. எஸ். மகாலிங்கம்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவிநாசி, சாமந்தனகோட்டைக்கு உட்பட்ட வெங்கமேடு பகுதியில் வீட்டு வசதி வாரியம் மூலம் குடியிருப்புகள் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

48—

**நிலம் கையகப்படுத்துதல்**

**வினா எண் 6658—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் 2-வது தொகுதி மிட்டா அய்யம்பெருமாள்பட்டி மற்றும் கன்னக்குறிச்சி கிராமத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்காக இதுவரையிலும் எவ்வளவு நிலங்களை அரசு கையகப்படுத்தியுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

சேலம் 2-வது தொகுதி மிட்டா அய்யம்பெருமாள்பட்டி மற்றும் கன்னங்குறிச்சி கிராமங்களில் 69.92 ஏக்கர் நிலம் வீட்டு வசதி வாரியம் வசம் ஒப்படைப்புச் செய்யப்பட்டுள்ளது.

49—

**கால்நடை மருந்தகம்**

**வினா எண் 3357—திரு. டி. மணி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், இடைக்கோடு பேரூராட்சிப் பகுதியில் கால்நடை மருந்தகம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?



விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

50—

**கால அவகாசம்**

**வினா எண் 8141—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள அனைத்து வேலைவாய்ப்பகங்களிலும் பதிவு செய்தவர்களில் விடுபட்டவர்களுக்குக் கால அவகாசம் கொடுத்து மீண்டும் புதுப்பிக்க (Mass Renewal) வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் உள்ள அனைத்து வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும் 1-1-1999-லிருந்து 31-12-2000 ஆகிய காலத்தில் தங்களது வேலைவாய்ப்பிற்கான பதிவைப் புதுப்பிக்காத மனுதாரர்கள், அவர்கள் ஏற்கெனவே புதுப்பித்தல் சலுகையை எந்த வகையிலாவது அனுபவித்திருந்தாலும், சிறப்பு நேர்வாக சம்பந்தப்பட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை அணுகி, தங்களின் பதிவை பழைய மூப்புடன் புதுப்பித்துக் கொள்ள மீண்டும் ஒரு புதுப்பித்தல் சலுகை வழங்கி அரசாணை (நிலை) எண் 124, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 6-9-2001-ல் அரசு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது. இந்த அரசாணை வெளியிட்ட நாளிலிருந்து மூன்று மாத காலத்திற்குள் அவர்கள் தங்களது பதிவினைப் புதுப்பித்துக்கொள்ளலாம்.

51—

## பீடித் தொழிலாளர்களுக்கு வீடுகள்

**வினா எண் 12101—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பீடித் தொழிலாளர்கள் வீடுகள் கட்ட அரசு மானியம் வழங்கும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடைமுறைக்கு வரும்?

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பீடித் தொழிலாளர்கள் வீட்டு வசதித் திட்டம் மத்திய அரசின் திட்டமாகும். மத்திய அரசு பீடித் தொழிலாளர்கள் நல நிதியிலிருந்து பீடித் தொழிலாளர்களுக்கான "ஒருங்கிணைந்த பீடித் தொழிலாளர்கள் வீட்டு வசதித் திட்டத்தின்"கீழ் ரூ. 20,000/- மானியமாக வழங்குகிறது. மாநில அரசும் பீடித் தொழிலாளர்களின் நலனில் அக்கறை கொண்டு மாநில அரசின் மானியமாக வீடு ஒன்றுக்கு ரூ. 5,000/- வீதம் வழங்க அரசாணை (2டி) எண் 23, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 13-12-2001-ல் ஆணை வழங்கியுள்ளது. இத்திட்டத்தின்படி வீடு ஒன்றின் திட்ட மதிப்பீடு ரூ. 40,000/- ஆகும். மத்திய, மாநில அரசுகளின் மானியத் தொகை ரூ. 25,000/- போக மீதம் ரூ. 15,000/-ஐப் பயனீட்டாளர்கள் ஏற்று, தாங்களே வீடுகளைக் கட்ட வேண்டும். இவ்வகையில் தமிழ்நாட்டில் 1285 வீடுகள் கட்ட தலா ரூ. 20,000/- வீதம் மொத்தம் ரூ. 2,57,00,000/- மானியம் கோரி மாநில அரசு மத்திய அரசுக்கு முன்மொழிவு அனுப்பியுள்ளது. மத்திய அரசின் மானியத்திற்கான ஆணை பெறப்பட்டதும் மாநில அரசின் மானியத் தொகையும் பெற்று இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.



52—

## மருத்துவமனை

**வினா எண் 12872—திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராணிப்பேட்டை சிப்காட்டில் உள்ள இ.எஸ்.ஐ. மருந்தகத்தை இ.எஸ்.ஐ. மருத்துவமனையாக மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

இராணிப்பேட்டையில் சிப்காட்டில் உள்ள இ.எஸ்.ஐ. மருந்தகத்தை இ.எஸ்.ஐ. மருத்துவமனையாக மாற்றும் கருத்துரு ஏதும் அரசிடம் இல்லை.

53—

## குழந்தைத் தொழிலாளர்களுக்குக் கல்வி

**வினா எண் 12898—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம், வெள்ளித் தொழிலில் குழந்தைத் தொழிலாளர்கள் அதிகம் ஈடுபடுத்தப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்குக் கல்வி அறிவு வழங்க என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

### அறிக்கை

(அ) சேலம், வெள்ளித் தொழிலில் குழந்தைத் தொழிலாளர்கள் அதிகம் ஈடுபடுத்தப்பட்டுள்ளதை அரசு அறியும். பெரும்பாலும் இத்தொழில் குடிசைத் தொழிலாகவே நடைபெற்று வருகிறது. 1948 ஆம் வருட தொழிற்சாலைச் சட்டத்தின்கீழ் இவ்வகைத் தொழில்கள் பதிவு செய்து ஆய்வு செய்யும் வரம்பில் வருவதில்லை. இவை குடும்ப உறுப்பினர்களைக் கொண்டும் நடைபெற்று வருகிறது.

(ஆ) தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் சேலம் மாவட்டத்தில் 1995 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. (Salem-Smile—Society for Monitoring and Implementation of Child Labour Elimination) இத்திட்டத்தின் மூலம் 1999-2000 மற்றும் 2001 ஆம் ஆண்டுகளில் குழந்தைத் தொழிலாளர் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. அதன்படி 416 குழந்தைத் தொழிலாளர்கள் வெள்ளித் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது கண்டறியப்பட்டது. அவற்றில் 395 குழந்தைகள் தொழிலிலிருந்து விடுவிக்கப்பட்டு, தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டத்தின்கீழ் செயல்பட்டு வரும் சிறப்புப் பள்ளிகளில் சேர்க்கப்பட்டனர்.

117 குழந்தைகள் சிறப்புப் பள்ளிகளில் கல்வி பயின்று முறை சார்ந்த பள்ளிகளில் சேர்க்கப்பட்டனர். தற்பொழுது 278 குழந்தைகள் சிறப்புப் பள்ளிகளில் கல்வி பயின்று வருகின்றனர். இக்குழந்தைகளில் 70 மாணவர்களுக்குத் தையல் மற்றும் எம்ப்ராய்டரி போன்ற தொழிற்கல்விகள் கற்பிக்கப்படுகின்றன. 10 சிறப்புப் பள்ளிகள் இக்குழந்தைகளுக்காகச் செயல்பட்டு வருகின்றன.

**54—**

## பாதுகாப்பு வசதி

**வினா எண் 12989—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா:-

விற்பனை அபிவிருத்திக்காக வீடு, வீடாகச் சென்று பொருட்களை விற்பனை செய்ய நியமிக்கப்படுகின்ற பெண்களுக்குத் தொழிலாளர் பாதுகாப்புச் சட்டங்கள் மூலம் பாதுகாப்பு அளிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை.—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

தொழிற்தகராறு சட்டப் பிரிவு 2(ஜே)-வில் குறிப்பிட்டுள்ள அனைத்துத் தொழில்களில் பணிபுரியும் விற்பனை மேம்பாட்டுத் தொழிலாளர்களுக்கும், 1976 ஆம் ஆண்டு விற்பனை மேம்பாட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டம் பொருந்தும் வகையில் இச்சட்டத்திற்குத் திருத்தம் கொண்டு வரலாம் என்ற மத்திய அரசின் கருத்துருவிற்கு இம்மாநில அரசு இசைவினைத் தெரிவித்துள்ளது. நாடாளுமன்றத்தில் இச்சட்டத் திருத்தம் நிறைவேறி அமலாக்கப்படும்



போது விற்பனை அபிவிருத்திக்காக வீடு, வீடாகச் சென்று பொருட்களை விற்பனை செய்ய நியமிக்கப்படுகின்ற பெண்களுக்கும் பாதுகாப்பு கிடைக்கும்.

**55—**

## தனியார் தொழிற்சாலைகளில் கூடுதல் வசதி

**வினா எண் 12990—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அனைத்து அரசு மற்றும் தனியார் தொழிற்சாலைகளில் மருத்துவம் மற்றும் சிற்றுண்டி வசதி ஆகியவற்றை ஏற்படுத்துவதைக் கட்டாயப்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 1948 ஆம் வருட தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் 1950ஆம் வருட தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகளில் உள்ள காப்புரைகளின்படி முதல் உதவி சிகிச்சை அளித்தல், அவசர கால மருத்துவ அறை பராமரித்தல், சிற்றுண்டி விடுதிகள் பராமரித்தல் ஆகியவை அனைத்து அரசு மற்றும் தனியார் தொழிற்சாலைகளில் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

**56—**

## தொழிற் பயிற்சி நிலையம்

**வினா எண் 13001—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் தொழிற் பயிற்சி நிலையம் ஒன்று தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டத்தில், தருமபுரி மற்றும் ஓசூரில் அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களும், 26 அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களும் இயங்கி வருகின்றன. இவை தருமபுரி மாவட்டத்தின் தொழிற்கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் என்பதால், மேலும் ஒரு தொழிற் பயிற்சி நிலையம் தொடங்க தற்போது அவசியம் இல்லை எனக் கருதப்படுகிறது.

57—

## தையல் தொழிற் பயிற்சி நிலையம்

**வினா எண் 13259—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சேரன்மகாதேவி பேரூராட்சிப் பகுதியில் தையல் தொழிற் பயிற்சி நிலையம் கிராமந்தோறும் அமைக்க அரசு உடனடியாக ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவியில் அமைந்துள்ள தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள் மற்றும் தொழிற் பள்ளியில் தையல் சம்பந்தப்பட்ட தொழிற் பிரிவில் பயிற்சி அளிக்கப்படவில்லை. எனினும், சேரன்மகாதேவி அமைந்துள்ள திருநெல்வேலி மாவட்டத்தில் 6 அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற் பள்ளிகளிலும், அங்கீகரிக்கப்பட்ட ஒரு தனியார் தொழிற் பயிற்சி மையத்திலும் தையல் தொழிற் பிரிவில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், தையல் பற்றிய தொழிற் பிரிவு, சேரன்மகாதேவி பேரூராட்சிப் பகுதியிலிருந்து தொடங்க தனியார் எவரும் முன்வருவார்கள் என்றால், தொழிற் பள்ளிகள் அடிப்படையில், தகுதிக்கு உட்பட்டு அங்கீகாரம் வழங்கப் பரிசீலிக்கப்படும். எனவே,



தையல் தொழிற் பயிற்சி நிலையம் தொடங்கும் அவசியம் அரசுக்கு இல்லையெனக் கருதப்படுகிறது.

58—

## மின் பற்றவைப்புப் பயிற்சி நிலையம்

**வினா எண் 14541—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா:—

சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியத்தில் மின் பற்றவைப்புப் பயிற்சி நிலையம் தொடங்க உடனடியாக அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

பாப்பாக்குடி ஊராட்சி ஒன்றியம் அமைந்துள்ள திருநெல்வேலி மாவட்டத்தில் மின் பற்றவைப்புத் தொழிற் பிரிவு, இரண்டு அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களில் உள்ளன. மேலும், திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பேட்டை அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில், மின் பற்றவைப்புத் தொழிற் பிரிவு (96 இருக்கைகள்) பயிற்றுவிக்கப்படுகிறது. எனவே, மின் பற்றவைப்புப் பயிற்சிக்கெனத் தனியே தொழிற் பயிற்சி நிலையம் தொடங்க அவசியம் இல்லையெனக் கருதப்படுகிறது.

59—

## ஊதியக் குழு

**வினா எண் 15104—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடந்த 10 ஆண்டுகளாக சிமெண்ட் தொழிலாளர்களின் ஊதியக் குழு (வேஜ் போர்டு) செயல்படாமல் உள்ளதை உடனடியாகச் சரிசெய்ய நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

சிமெண்ட் தொழில் மத்திய அரசின் கட்டுப்பாட்டின்கீழ் வருவதால், ஊதியக் குழு (வேஜ் போர்டு) மத்திய அரசின் அதிகாரத்திற்குட்பட்டதாகும். எனவே, ஊதியக் குழு செயல்படாமல் உள்ளது குறித்து மாநில அரசு நடவடிக்கை ஏதும் எடுக்க இயலாது.

**60—**

## தொழிலாளர் நல மருத்துவமனை

**வினா எண் 15124—திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் தொகுதி, கழுகுமலையில் தீப்பெட்டித் தொழில் புரியும் மகளிருக்குத் தொழிலாளர் நல மருத்துவமனை கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

தூத்துக்குடி மாவட்டத்தில் கழுகுமலையில் உள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் காப்பீட்டாளர்களுக்காக, அரசு ஆணை எண் 43, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (கே1) துறை, நாள் 27-2-2001-ல் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் தொடங்க பணியாளர்கள், உபகரணங்கள் மற்றும் இதரச் செலவினங்கள் (கழுகுமலை தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்திற்கென) ஆணையிடப்பட்டுள்ளது. தற்சமயம் கழுகுமலையில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் தொடங்க அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. புது டெல்லியிலுள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் காப்பீட்டுக் கழகத்திலிருந்து முறைப்படியான அறிவிக்கை பெறப்பட்டவுடன் கழுகுமலையில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் திறக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

**61—**

## ஹை ஃபாரஸ்ட் நிர்வாகம்

**வினா எண் 15854—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) வால்பாறை தொகுதி, ஹை ஃபாரஸ்ட் நிர்வாகத்தை அரசே ஏற்று நடத்த நடவடிக்கை எடுத்து வருகிறதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மகாவீர் தோட்ட நிறுவனத்திற்குச் சொந்தமான ஹை ஃபாரஸ்ட் எஸ்டேட், பிராஸ்பெக்ட் எஸ்டேட், விடில் ஸ்டேல் மற்றும் சிபோர்த் எஸ்டேட் ஆகிய நான்கு எஸ்டேட்களையும் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்துடன் இணைத்து நடத்த இயலுமா என்பது குறித்து அரசு பரிசீலனை செய்து வருகின்றது.

(ஆ) மகாவீர் தோட்ட நிறுவனம், தனது நிறுவனத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படைச் சலுகைகளான சம்பளம், போனஸ், பணிக்கொடை போன்றவற்றைச் சரிவர வழங்குவதில்லை. பல்வேறு சமரச முயற்சிகள் மேற்கொண்டும், இந்நிறுவனம் இப்பிரச்சினைக்கு முடிவு எதுவும் எடுக்கவில்லை. எனவே, இந்நிறுவனத்தின்கீழ் இயங்கும் 4 தோட்ட நிறுவனங்களையும் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்துடன் இணைத்து நடத்த இயலுமா என்பது குறித்து அரசு தீவிரமாகப் பரிசீலனை செய்து வருகின்றது.

**62—**

## வீடுகள் கட்டுதல்

**வினா எண் 16125—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையிலுள்ள தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கும், கூலித் தொழிலாளர்களுக்கும் வீட்டு வசதி வாரியம் மூலம் வீடு கட்டித் தரும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறையிலுள்ள தோட்டத் தொழிலாளர்களுக்கும், கூலித் தொழிலாளர்களுக்கும் வீட்டு வசதி வாரியம் மூலம் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழாது.

63—

**வயது வரம்பு**

**வினா எண் 16732—திரு. க. பாரமலை:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருத்துவ அடிப்படையில் நலிவு ஓய்வு பெறும் அரசுப் பணியாளர்களின் வாரிசுகளுக்குக் கருணை அடிப்படையில் வேலை வழங்குவதற்கு, ஓய்வு பெறும் அரசுப் பணியாளர்களின் வயது வரம்பு ஏதும் நிர்ணயிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதைத் தளர்த்தி நலிவு ஓய்வு பெறும் அரசுப் பணியாளர்களின் வாரிசுகளுக்குக் கருணை அடிப்படையில் வேலை வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) நடைமுறையில் உள்ள அரசாணைகளின்படி, இயலாமை காரணமாக மருத்துவச் சான்றின் அடிப்படையில், 53 வயதிற்குள் ஓய்வு பெறும் அரசுப் பணியாளரின் வாரிசுதாரர்கள் மட்டுமே கருணை அடிப்படையில் பணி நியமனம் பெறத் தகுதியுடையவர் ஆவார்.

(ஆ) மேற்படி வயது வரம்பினை மேலும் தளர்த்தி, இயலாமை காரணமாக மருத்துவச் சான்றின் அடிப்படையில் பணியிலிருந்து ஓய்வுபெறும் அரசு ஊழியரின் வாரிசுதாரர்களுக்குக் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்குவது குறித்த கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

64—

**தனி வாரியம்**

**வினா எண் 17742—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



தங்க நகை உற்பத்தி செய்யும் தொழிலாளர்களின் நலனைப் பாதுகாக்க ஒரு தனி வாரியம் அமைக்க அரசு ஆவன செய்ய முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு கைவினைத் தொழிலாளர் நல வாரியம் என்ற நல வாரியத்தினை 18-10-2000 அன்று அமைத்து அரசு உத்தரவிட்டது. பொன் மற்றும் வெள்ளி நகைகள் தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள், ரூ.100/- பதிவுத் தொகை செலுத்தி இந்நல வாரியத்தில் தங்களைப் பதிவு செய்து, வாரியத்தின் நலத் திட்டங்களின் பயனைப் பெறலாம். இச்சூழ்நிலையில் தங்க நகை உற்பத்தி செய்யும் தொழிலாளர்களுக்காக மட்டும் தனி நல வாரியம் அமைக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

65—

**வேலை நேரத்தை நிர்ணயம் செய்தல்**

**வினா எண் 17744—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் நகரில் தங்க நகைகள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையில் தொழிலாளர் நலச் சட்டத்திற்கேற்ப வேலை நேரத்தை நிர்ணயம் செய்ய அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் நகரில் 1948 ஆம் வருட தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ் பதிவு பெற்ற தங்க நகைகள் செய்யும் தொழிற்சாலைகள் நான்கு உள்ளன. இத்தொழிற்சாலைகள் அனைத்திலும் 1948 ஆம் வருட தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் 1950 ஆம் வருட தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகளில் வரையறுக்கப்பட்டுள்ளவாறே வேலை நேரங்கள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன.

66—

## பால் குளிரூட்டும் நிலையம்

**வினா எண் 1248—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் அதிக அளவில் பால் உற்பத்தி செய்யப்படுவதால் பெண்ணாகரத்தில் பால் குளிரூட்டும் நிலையம் ஒன்று அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

67—

## மேட்டூரில் பால் குளிரூட்டும் நிலையம்

**வினா எண் 1249—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூரில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) சாத்தியக்கூறுகள் இல்லை

(ஆ) வினாவிற்கு இடமில்லை.



68—

## செந்துறையில் பால் குளிரூட்டும் நிலையம்

**வினா எண் 1690—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறையில் பால் குளிரூட்டும் நிலையம் அமைய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) சாத்தியக்கூறுகள் இல்லை

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

69—

## பால் விநியோகம்

**வினா எண் 2903—திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் ஆவின் பால் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) பெண்ணாகரம் நகரத்திற்குத் தற்சமயம் மடம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் தேவையான பால் விற்பனை செய்யப்பட்டு வரப்படுகிறது. ஆவின் பால் விற்பனை வாய்ப்புகள் குறித்தும் ஆராயப்பட்டு வருகிறது.

(ஆ) இக்கேள்விக்குப் பதில் எழவில்லை.

70—

## பால் உற்பத்தியாளர் சங்கம்

**வினா எண் 2907—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கெண்டையனஅள்ளி ஊராட்சியில் பால் உற்பத்தியாளர் சங்கம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் நிறைவேற்றப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) கெண்டையனஅள்ளி ஊராட்சிப் பகுதியில் ஏற்கெனவே ஒரு பால் உற்பத்தியாளர் சங்கம் செயல்பட்டு வருவதால், அங்கு புதிய சங்கம் அமைக்க வாய்ப்பில்லை.

(ஆ) இக்கேள்விக்குப் பதில் எழவில்லை.

71—

## செஞ்சியில் பால் குளிரூட்டும் நிலையம்

**வினா எண் 6739—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சியில் பால் குளிரூட்டும் நிலையம் ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.



72—

## மேட்டூரில் பால் குளிரூட்டும் நிலையம்

**வினா எண் 7548—திருமதி செ. சுந்தராம்பாள்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் தொகுதியிலிருந்து 90 கி.மீ. தூரத்தில் சேலத்திற்குப் பால் எடுத்துச் செல்ல சிரமமாக உள்ளதால், மேட்டூர் நகரத்தில் பால் குளிரூட்டும் நிலையம் அரசு அமைத்து தருமா?

விடை—

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

மேட்டூரில் பால் குளிரூட்டும் நிலையம் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.

73—

## தானியங்கி பால் வழங்கு நிலையங்கள்

**வினா எண் 9671—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகரத்தில் தற்பொழுது மொத்தம் எத்தனை தானியங்கி பால் வழங்கும் நிலையங்கள் இருக்கின்றன?

(ஆ) அவற்றில், எத்தனை தற்பொழுது இயங்கிக் கொண்டிருக்கின்றன?

விடை—

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) 213 தானியங்கி பால் வழங்கும் நிலையங்கள் உள்ளன.

(ஆ) அவற்றில், 195 தானியங்கி பால் வழங்கும் நிலையங்கள் இயங்கி வருகின்றன.

74—

## அண்ணா கலையரங்கம்

**வினா எண் 1154—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூரில் உள்ள அண்ணா கலையரங்கத்தைப் புதுப்பிக்கும் பணி எப்போது நிறைவேற்றப்படும்?

(ஆ) அதற்கான செலவு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

(அ) வேலூரிலுள்ள அண்ணா கலையரங்கத்தைப் புதுப்பிக்கும் பணிகள் முடிவுற்று, 19-11-2001 முதல் திரையரங்கமாக நடைபெற்று வருகிறது.

(ஆ) செலவுத் தொகை ரூ.10.00 இலட்சம்.

75—

## ஊக்குவித்தல்

**வினா எண் 2657—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாதி மத உணர்வை எதிர்த்துப் போராடும் வகையில் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துகிற திரைப்படங்கள் தயாரிப்பதை ஊக்குவிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

(அ) சிறந்த தமிழ்த் திரைப்படங்கள் தயாரிப்பதை ஊக்குவிக்கும் வகையில் அத்தகைய திரைப்படங்களுக்கு ரொக்கப் பரிசு மற்றும்



நினைவுப் பரிசுகளையும், குறைந்த செலவில் தரமான திரைப்படங்கள் தயாரிப்பதை ஊக்குவிக்கும் வகையில் அத்திரைப்படங்களுக்குத் தலா ரூ. 5.00 லட்சம் மானியமும் மற்றும் கேளிக்கை வரி விலக்கும் அரசு அளித்து வருகிறது.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

76—

## எம்.ஜி.ஆர். திரைப்பட நகர்

**வினா எண் 6854—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எம்.ஜி.ஆர். திரைப்பட நகரினைக் கூடுதலாக அழகுபடுத்திப் பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

(அ) எம்.ஜி.ஆர். திரைப்பட நகரினை அழகுபடுத்த அவ்வப்போது தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

77—

## சிறுவர் பூங்கா

**வினா எண் 9255—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அடையார் எம்.ஜி.ஆர். திரைப்பட நகரில், கவர்ச்சிகரமாகவும் இலாபகரமாகவும் தனியார் நடத்தும் சிறுவர் பூங்காவினைப்போல் நிறுவ அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

(அ) எம்.ஜி.ஆர். திரைப்பட நகரில், ஏற்கெனவே அரசினால் ஒரு சிறுவர் பூங்கா நிறுவப்பட்டது. இது தற்போது தனியாரால் கவர்ச்சிகரமாகவும் இலாபகரமாகவும் நடத்தப்பட்டு வருகிறது.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**78—**

## பல்நோக்கு அரங்கம்

**வினா எண் 14807—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையிலுள்ள கலைவாணர் அரங்கம்போல், ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் ஒரு பல்நோக்கு அரங்கம் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

இதுபோன்ற கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**79—**

## தலைவர்களின் வாழ்க்கை வரலாற்றைத் திரைப்படமாக்குதல்

**வினா எண் 14811—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேசப்பற்றை வளர்க்கும் வகையில், காந்தி, நேரு, ராஜாஜி, காமராஜர், வ.உ. சிதம்பரனார் போன்ற தலைவர்களின் வாழ்க்கை வரலாற்றைத் திரைப்படமாக எடுக்க அரசு முன்வருமா?



விடை—

**மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

காந்தி, நேரு, ராஜாஜி, காமராஜர், வ.உ. சிதம்பரனார் போன்ற தலைவர்களின் வாழ்க்கை வரலாற்றை, திரைப்படமாக எடுக்கும் கருத்துரு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

**80—**

## அண்ணா வரலாற்றைத் திரைப்படமாக்குதல்

**வினா எண் 14818—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரறிஞர் அண்ணா வரலாற்றைத் திரைப்படமாக எடுத்து வெளியிட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

பேரறிஞர் அண்ணா அவர்களது வாழ்க்கை வரலாறு குறித்து, தமிழ்நாடு அரசு, திரைப்படப் பிரிவு மூலம் 'அண்ணா வாழ்கின்றார்' என்ற கருத்து விளக்கப் படம் தயாரிக்கப்பட்டு, ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது.

**81—**

## ஏற்றுமதி வசதி

**வினா எண் 385—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் நெசவுத் தொழில் நலிந்து வருவதைத் தடுத்து, அதைக் காப்பாற்ற, ஏற்றுமதியை அதிகரிக்க அரசு எடுத்து வரும் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

ஏற்றுமதியை அதிகரிக்க, 2005-ல் வரவிருக்கும் உலக வர்த்தக அரங்கின் தாக்கத்தை விளக்கும் வகையில் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டும், ஏற்றுமதி ரக உற்பத்தியில் நெசவாளர்களைப் பயிற்றுவித்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**82—**

## பண்டிகை முன்பணம்

**வினா எண் 1221—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கூட்டுறவு கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் பண்டிகை முன்பணத்தை அதிகரிக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

கூட்டுறவு கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் பண்டிகை முன்பணத்தை உயர்த்தி வழங்குவது தொடர்பாக, சங்க நிதிநிலையின் அடிப்படையில் சங்க நிர்வாகமே முடிவு எடுத்து, முறைப்படி கூட்டுறவுச் சங்கத் துணை விதிக்குத் திருத்தம் மேற்கொண்டபின், பண்டிகை முன்பணத்தை உயர்த்தி வழங்கிக் கொள்ளலாம்.

**83—**

## நெசவு ஆலை

**வினா எண் 3447—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டத்தில் ஒரு நெசவு ஆலை, அரசு மூலதனத்துடன் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



விடை—

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

பஞ்சு விலை, பஞ்சுத் தட்டுப்பாடு, தொழிலாளர் பிரச்சினை, நிதி நெருக்கடி உள்ளிட்ட பிரச்சினைகளின் காரணமாக, ஏற்கெனவே தொடங்கப்பட்ட கூட்டுறவு நூற்பாலைகளைச் செயல்படுத்துவதே கடினமாக உள்ளது. இந்நிலையில், மேலும் ஒரு கூட்டுறவு நூற்பாலையைத் தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

**84—**

## கூட்டுறவு நூற்பாலைகள்

**வினா எண் 5475—திரு. ப. அரசன்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலுள்ள எத்தனை கூட்டுறவு நூற்பாலைகள் முழுமையாக இயங்குகின்றன?

விடை—

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

தமிழகத்தில் மொத்தம் 18 கூட்டுறவு நூற்பாலைகள் உள்ளன. அவற்றில் தற்போது 14 கூட்டுறவு நூற்பாலைகள் இயங்கி வருகின்றன. மீதம் 4 கூட்டுறவு நூற்பாலைகள் இயங்காத நிலையில் உள்ளன.

**85—**

## கல் வீடுகள்

**வினா எண் 1420—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், உவரி கிராமப் பகுதியில் வசித்து வரும் மீனவ மக்களின் ஓலைக் குடிசைகளைக் கல் வீடாக மாற்றிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மீனவர்களுக்கு இலவச வீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ், விதிமுறைகளின்படி தகுதிக்குட்பட்டு உவரி கிராமப் பகுதியில் வசித்து வரும் மீனவர்களின் கோரிக்கை, மீனவர் சங்கத்தினரிடமிருந்து பெறப்படின், வீடுகள் கட்டி வழங்கப்படும்.

86—

## தொகுப்பு வீடுகளைப் பழுதுபார்த்தல்

**வினா எண் 1530—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தான்குளம் தொகுதி, பெரியதாழையில் உள்ள மீனவர்களுக்குத் தொகுப்பு வீடுகள் அனைத்தும் பழுதடைந்து விட்டதால், அரசு புதுப்பித்துத் தருமா? அல்லது புதிய வீடுகள் கட்டித் தருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சாத்தான்குளம் தொகுதி, பெரியதாழையில் மீனவர்களுக்கு ஏற்கெனவே கட்டிக் கொடுத்த தொகுப்பு வீடுகளில் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கிடக் கோரி, இதுவரையில் அக்கிராம மீனவர்களிடமிருந்து கோரிக்கை எதுவும் பெறப்படவில்லை. அவ்வாறு பெறப்பட்டால், அக்கோரிக்கை விதிமுறைகளின்படி பரிசீலிக்கப்பட்டு, பழுதுகளை நிவர்த்திக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மீனவர் இலவச வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் ஏற்கெனவே வீடு வழங்கிய அதே பயனாளிகளுக்கு அவ்வீடுகள் பழுதடைந்திருந்தாலும் மீண்டும் புதியதாக வீடுகள் ஒப்பளிக்கும் திட்டம் ஏதும் நடைமுறையில் இல்லை என்பதால், பழுதடைந்த வீடுகளைப் புதிதாகக் கட்டி வழங்கிட வாய்ப்பில்லை.



87—

## மீன் அங்காடி

**வினா எண் 1546—திருமதி கே. பவானி கருணாகரன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் நகர், பழனிப்பேட்டை பகுதியில் மீன் அங்காடி (மீன் மார்க்கெட்) அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் நகர், பழனிப்பேட்டை பகுதியில் மீன் அங்காடி அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

88—

## மீனவர்களின் துயர் துடைப்பு நிதி

**வினா எண் 2732—திரு. என். ரெங்கநாதன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மீனவர்களின் துயர் துடைப்பு நிதி வழங்கப்படாமல் உள்ளதை, விரைவில் நடப்பு நிதியாண்டில் அரசு வழங்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நடப்பு நிதியாண்டில் (2001-2002) கடல் மீனவர்கள் கடலுக்குச் செல்ல இயலாத 4 மாதங்களுக்கு, ரூ. 1200/- வழங்க உரிய ஆணைகள் 9-11-2001 அன்று வெளியிடப்பட்டுவிட்டன.

89—

## இலவச வீடுகள்

**வினா எண் 2786—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஊட்டமலை, குருக்கணையனூர், கொண்டையனூர், ஒகேனக்கல் ஆகிய கிராமங்களில் வசிக்கும் மேட்டூர் அணை மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக உள்ள மீனவர்களுக்கு இலவச வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மேட்டூர் அணை மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ளவர்கள், சம்பந்தப்பட்ட உதவி இயக்குநர் மூலம் விண்ணப்பித்தால், தகுதியுடைய மீனவர்கள் இத்திட்டத்தின்கீழ் பயன் அடைவர்.

90—

## மீன் விற்பனை அங்காடி

**வினா எண் 2901—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஒகேனக்கல் சுற்றுலா மையத்தில், மேட்டூர் கூட்டுறவு மீன் விற்பனை அங்காடி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மீன் விற்பனை அங்காடி 26-7-2001 முதல் செயல்பட்டு வருகிறது.



91—

## மீனவர்களை மீட்டல்

**வினா எண் 3361—திரு. டி. மணி:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையைச் சார்ந்த மீனவர்கள் கடலுக்குள் மீன்பிடிக்கச் சென்றபோது, சுமார் 60 பேரை ஆந்திரக் கடல் கொள்ளையர்கள் கடத்திச் சென்று சித்திரவதை செய்து பணம் பறித்துள்ள சம்பவம் தொடர்பாக அம்மீனவர்களிடமிருந்து ஏதேனும் புகார் வந்துள்ளதா?

(ஆ) அம்மீனவர்களை மீட்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

(இ) அவர்களிடமிருந்து பறிக்கப்பட்ட பணத்தை மீட்டுத்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

**அறிக்கை**

(அ) சென்னையைச் சேர்ந்த 10 மீன்பிடி விசைப்படகுகள் மற்றும் 60 மீனவர்கள், கடந்த 2-6-2001 அன்று ஆந்திர மாநிலம், நெல்லூர் மாவட்டம், ஊத்துப்பூர், பெத்தபாளையம் அருகே பிடித்து வைக்கப்பட்டு, 6-6-2001 அன்று விடுவிக்கப்பட்டதாக, சென்னை (கடல் மீன்வளம்) மீன் துறை உதவி இயக்குநர், மீன் துறை அலுவலகத்திற்குத் தகவல் தெரிவித்தார். சென்னை மீனவர்களை ஆந்திரக் கடல் கொள்ளையர்கள் கடத்திச் சென்று சித்திரவதை செய்து பணம் பறித்துள்ளதாகப் புகார் ஏதும் பெறப்படவில்லை.

(ஆ) ஆந்திரக் கடல் பகுதியில் தமிழக (சென்னை) மீனவர்கள் மற்றும் மீன்பிடி விசைப்படகுகள் கைப்பற்றல் நடவடிக்கை குறித்து முதலில் அரசின் கவனத்திற்குக் கொண்டு வராத நிகழ்வுகள் இருந்துள்ளன. இவ்வாறான நிகழ்வுகளின்போது சென்னை மீன்பிடி விசைப்படகுகளின் உரிமையாளர்கள் நேரடியாக ஆந்திர மாநிலம் சென்று மீன்பிடி விசைப்படகுகள் மற்றும் மீனவர்களைப் பிடித்து வைத்துள்ள ஆந்திர மீனவர் கிராமங்களைச் சார்ந்த ஊர் நிர்வாகஸ்தர்களுடன் உடன்பாட்டினைச் செய்து கொண்டு, படகு ஒன்றுக்குக் குறிப்பிட்ட தொகை வழங்கி, படகுகள் மற்றும் மீனவர்களை

விடுவித்து வரும் நடைமுறையைப் பின்பற்றி வந்துள்ளனர். எனினும், ஆந்திர மீனவர்களுக்குக் குறிப்பிட்ட தொகை வழங்குவதைத் தவிர்க்கும் பொருட்டு, மீன் துறையின் கவனத்திற்குக் கொண்டு வரப்படும் நிகழ்வுகளில் மட்டும் ஆந்திர மாநில மீன்வளத் துறை ஆணையருக்குத் தகவல் தெரிவித்து மீனவர்கள் மற்றும் மீன்பிடி விசைப்படகுகளை உடனடியாக விடுவிக்கக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

(இ) எந்த ஒரு நிகழ்விலும் இரு மாநில மீன்வளத் துறை அலுவலர்கள் முன்னிலையில் மீன்பிடி விசைப்படகுகள் மற்றும் மீனவர்களை விடுவிக்க ஆந்திர மீனவர்களுக்குத் தொகை வழங்கப்படவில்லை. சென்னை மீனவர்கள் மீன்பிடி விசைப்படகுகளைத் தொடர்ந்து தொழிலில் ஈடுபடுத்த வேண்டியதன் கட்டாயத்தின் அடிப்படையில் அவர்களுக்குள்ளாகவே உடன்பாட்டினைச் செய்து கொண்டும், படகு ஒன்றுக்குக் குறிப்பிட்ட தொகை வழங்கியும் உள்ளனர். எனவே, அரசின் தலையீட்டிற்கு வழிவகை இல்லாத நிகழ்வுகளில் ஆந்திர மீனவர்களுக்கு வழங்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ள பணத்தை மீட்டுத்தர வாய்ப்பில்லை. ஆனால், பாதிக்கப்பட்ட சென்னை மீனவர்கள் ஆந்திர மீனவர்களுக்குப் பணம் வழங்கியதற்கு ஆதார ஆவணங்கள் இருப்பின், காவல் துறை மூலம் புகார் அளித்தோ அல்லது நீதிமன்றத்தில் முறையீடு செய்தோ தீர்வு பெற இயலும்.

92—

## இலவச வீடுகள்

**வினா எண் 3656—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழியில் மீனவர் கிராமங்களில் உள்ளவர்களுக்கு இலவச வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மீனவர்களுக்கு இலவச வீடுகள் கட்டி வழங்கிடும் திட்டத்தினைச் செயல்படுத்த ஆணை வழங்கப்பட்டு உள்ளது. விதிமுறைகளின்படி தகுதியிருப்பின், இப்பகுதி மீனவர்களின் கோரிக்கை மீனவர் சங்கத்தினரிடமிருந்து பெறப்படின், வீடுகள் கட்டி வழங்கப்படும்.



93—

## மீனவர்களைப் பாதுகாத்தல்

**வினா எண் 3888—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டு மீனவர்களைக் கடல் கொள்ளையர்கள் தாக்கியது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டு மீனவர்களைக் கடல் கொள்ளையர்கள் தாக்கியதாக மீனவர்களிடமிருந்து புகார் ஏதும் பெறப்படவில்லை.

(ஆ) கடல் கொள்ளையர்களால் மீனவர்கள் தாக்கப்பட்டது குறித்துப் புகார் ஏதும் பெறப்படாததால், துறை அளவிலான நேரடி நடவடிக்கை எழவில்லை.

94—

## தொகுப்பு வீடுகள்

**வினா எண் 5047—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் மாவட்டத்தில் மீனவ மக்கள் பயன்பெறும் வகையில் மீண்டும் தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

ம. சிங்காரவேலர் நினைவு மீனவர் இலவச வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 2001-2002 ஆம் நிதியாண்டிற்குக் கடல் மற்றும் உள்நாட்டு மீனவர்களுக்கு 4000 இலவச வீடுகள் கட்ட ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. நாகப்பட்டினம் மீனவ மக்களுக்கு விதிமுறைகள் மற்றும் தகுதிகளின் அடிப்படையில் இலவச வீடுகள் கட்டித்தர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

95—

## நிவாரண உதவி

**வினா எண் 6697—திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வீரபாண்டியன் பட்டணத்திலிருந்து மீன் பிடிக்கச் சென்ற மன்னராஜ் மற்றும் அல்பர்ட் பற்றி எந்தத் தகவலும் இல்லாமல் உள்ளதால், வறுமையில் வாடும் இவர்களது குடும்பத்திற்கு ஏதேனும் நிவாரண உதவி வழங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

வீரபாண்டியன் பட்டணத்திலிருந்து மீன் பிடிக்கச் சென்ற மன்னராஜ் மற்றும் அல்பர்ட் ஆகிய இரண்டு மீனவர்களும் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக இல்லை. எனவே, இவர்களது குடும்பத்திற்கு மீன் துறை மூலம் வழங்கப்படும் நிவாரண உதவிகள் வழங்கிட இயலாது. வருவாய்த் துறையின் நலிந்தோர் நலத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் நிவாரண உதவித் தொகையினை மட்டுமே, காணாமல் போன மீனவர்களின் வாரிசுதாரர்கள் பெற்றிட இயலும்.

96—

## புதிய துறைமுகம்

**வினா எண் 7045—திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எண்ணூர், திருவொற்றியூர், பழவேற்காடு பகுதிகளைச் சார்ந்த (மக்கள்) மீனவர்கள் கடலரிப்பு மற்றும் புதிய துறைமுகம் அமைக்கப்பட்ட காரணத்தால் தொழிலே செய்ய முடியாமல் உள்ளதால் மாற்று வேலைவாய்ப்பு அளிக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

எண்ணூர், திருவொற்றியூர், பழவேற்காடு பகுதிகளைச் சார்ந்த (மக்கள்) மீனவர்கள் கடலரிப்பு மற்றும் புதிய துறைமுகம் அமைக்கப்பட்ட காரணத்தால் தொழிலே செய்ய முடியாததால் அவர்களுக்கு மாற்று வேலைவாய்ப்பு அளிக்க மீன் துறையின் மூலம் முடிவெடுக்க இயலாது.



97—

## மீனவர்களுக்கு இலவச வீடுகள்

**வினா எண் 12186—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிங்காரவேலர் நினைவு மீனவர் இலவச வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் சேலம் மாவட்டத்திலுள்ள மீனவர்களுக்கு இலவச வீடு கட்டித் தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது நடைமுறைக்கு வரும்?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

98—

## மீன்கள் வழங்குதல்

**வினா எண் 12590—திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டத்தில் குளங்களில் வளர்க்கப்படும் 'கேட்பிஷ்' ஒட்டுரக மீன் குஞ்சுகளை ஏழை விவசாயிகள் ஆந்திராவிலும், கல்கத்தாவிலுமிருந்து வாங்கி வருவதால் இவ்வகை மீன்களை அரசே வழங்கிட முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

இல்லை.

99—

## மீன் குஞ்சு உற்பத்தி நிலையம்

**வினா எண் 13171—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகப் பராமரிப்பின்கீழ் மேட்டூர் அணையில் மீன் குஞ்சு உற்பத்தி நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகப் பராமரிப்பின்கீழ் மேட்டூர் அணையில் மீன் குஞ்சு உற்பத்தி நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**100—**

## திசை காட்டும் கருவிகள்

**வினா எண் 13537—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக மீனவர்கள் கடல் எல்லையைக் கடந்து செல்லாமல் இருப்பதற்குத் திசை காட்டும் கருவிகளை மீனவர்களுக்கு இவ்வரசு இலவசமாக வழங்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

கடலில் திசை காட்டும் கருவிகளை மீனவர்களுக்கு இலவசமாக வழங்க இயலாது.

**101—**

## மீனவர் மையம்

**வினா எண் 13539—திரு. ஐ. கணேசன் மற்றும் திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இயற்கைச் சீற்றத்தால் அடிக்கடிக் காணாமல் போகும் மீனவர்களை மீட்க மையம் ஒன்றை இவ்வரசு அமைக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

இயற்கைச் சீற்றத்தால் அடிக்கடிக் காணாமல் போகும் மீனவர்களை மீட்க மையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.



**102—**

## மீன் வளர்ப்பு

**வினா எண் 13550—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் பண்ணை மீன் வளர்ப்புத் தொழிலை ஊக்கப்படுத்தி ஏற்றுமதி செய்ய வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

ஆம். பண்ணை மீன் வளர்ப்பை ஊக்கப்படுத்த மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் மற்றும் உவர் நீர் மேம்பாட்டு முகமைகள் வாயிலாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இதன் மூலம் மீன், நன்னீர் இறால் மற்றும் உவர் நீர் இறால் உற்பத்தி மேற்கொள்ளப்படுகிறது. கடற் பொருட்கள் ஏற்றுமதி அபிவிருத்தி ஆணையம் உதவியுடன் நன்னீர் இறால் மற்றும் கடல் மீன் இறால் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

**103—**

## இலவச வீடுகள்

**வினா எண் 14310—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடியில் வசிக்கும் மீனவர்களுக்கு இலவச வீடு கட்டித் தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கத்திடமிருந்து வீடு கட்டித்தரக் கோரி கோரிக்கை ஏதும் பெறப்படவில்லை.

104—

## சுற்றுலா மையம்

**வினா எண் 922—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்கு உட்பட்ட நாகாவதி அணையைச் சுற்றுலா மையமாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்கு உட்பட்ட நாகாவதி அணையைச் சுற்றுலா மையமாக அறிவிக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை. சுற்றுலாத் துறை எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் வருகையைக் கருத்திற்கொண்டு நிதி ஆதாரங்களுக்கு ஏற்பத் தேவையான அடிப்படை வசதிகள் செய்யப்படுகின்றன.

105—

## சுற்றுலா மையம் அமைத்தல்

**வினா எண் 1476—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜேடர்பாளையம் அணைக்கட்டிற்கு அருகில் சுற்றுலா மையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டத்திலுள்ள ஜேடர்பாளையம் அணைக்கட்டிற்கு அருகில் சுற்றுலா மையம் அமைக்கும் செயற்குறிப்பு



அரசின் பரிசிலனையில் இல்லை. சுற்றுலாத் துறை எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் வருகையைக் கருத்திற்கொண்டு நிதி ஆதாரங்களுக்கு ஏற்பத் தேவையான அடிப்படை வசதிகள் செய்யப்படுகின்றன.

106—

## சுற்றுலா மையமாக்குதல்

**வினா எண் 2155—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரணாம்பட்டு தொகுதி, சிந்தமண் பெளிக்குண்டா, வெலத்திமா பெளிக்குண்டா போன்ற பகுதிகளை சுற்றலா மையமாக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

பேரணாம்பட்டு தொகுதி, சிந்தமண் பெளிக்குண்டா, வெலத்திமா பெளிக்குண்டா போன்ற பகுதிகளை சுற்றலா மையமாக்கும் குறிப்பு அரசின் பரிசிலனையில் இல்லை. சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் வருகையினைக் கருத்திற்கொண்டு நிதி ஆதாரங்களுக்கேற்பத் தேவையான அடிப்படை வசதிகளை சுற்றுலாத் துறை ஏற்படுத்தி வருகிறது.

107—

## சுற்றுலாத் தலமாக்குதல்

**வினா எண் 4096—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் 2-வது தொகுதி, கன்னங்குறிச்சி ஏரியைச் சுற்றுலாத் தலமாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் இத்திட்டம் நிறைவேற்றப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் 2-வது தொகுதி கன்னங்குறிச்சி ஏரியைச் சுற்றுலாத் தலமாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை. சுற்றுலாத் துறை எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் வருகையைக் கருத்திற்கொண்டு நிதி ஆதாரங்களுக்கு ஏற்பத் தேவையான அடிப்படை வசதிகள் செய்யப்படுகின்றன.

**108—**

## மயில் அருவி

**வினா எண் 4732—திரு. ப. இராஜரெத்தினம்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் ஒன்றியம், லாடபுரம் மயில் ஊத்து என்ற இடத்தைச் சுற்றுலாத் தலமாக அறிவித்து அங்குள்ள மயில் அருவியை மேலும் சீர்செய்ய சுற்றுலாத் துறை மூலம் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் ஒன்றியம், லாடபுரம் மயில் ஊத்து என்ற இடத்தைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை. சுற்றுலாத் துறை எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் வருகையைக் கருத்திற்கொண்டு நிதி ஆதாரங்களுக்கு ஏற்பத் தேவையான அடிப்படை வசதிகள் செய்யப்படுகின்றன.



**109—**

## திருப்பரங்குன்றத்தைச் சுற்றுலாத் தலமாக்குதல்

**வினா எண் 4862—திரு. எஸ்.எம். சீனிவேல்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பரங்குன்றம் முருகன் திருக்கோயிலுக்கு எதிர்ப்புறத்தில் உள்ள பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான தென்கால் கண்மாயில் தண்ணீர் நிரப்பி படகு சவாரி செய்வதற்கு ஏற்பாடு செய்து திருப்பரங்குன்றத்தைச் சுற்றுலாத் தலமாக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

திருப்பரங்குன்றம் முருகன் திருக்கோயிலுக்கு எதிர்ப்புறத்தில் உள்ள பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான தென்கால் கண்மாயில் தண்ணீர் நிரப்பி படகு சவாரி செய்வதற்கு ஏற்பாடு செய்து திருப்பரங்குன்றத்தைச் சுற்றுலாத் தலமாக்கும் திட்டம் தற்பொழுது சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இல்லை.

**110—**

## புலிக் குகையை அழகுபடுத்துதல்

**வினா எண் 5111—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாமல்லபுரத்தில் புலிக் குகை உள்ள பகுதி சுற்றுலாப் பயணிகளைக் கவரும் விதத்தில் மாற்றி அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

மாமல்லபுரத்தில் அமைந்துள்ள 'புலிக் குகை' பகுதி புராதனச் சின்னமாக இந்தியத் தொல்பொருள் துறையால் பராமரிக்கப்பட்டு வருவதால் இப்பகுதியில் சுற்றுலாத் துறையின் மூலம் எந்தப் பணியும் மேற்கொள்ள இயலாது.

111—

## சுற்றுலா மையம்

**வினா எண் 5447—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதியில் அருள்மிகு பட்டீஸ்வரர் ஆலயம் மற்றும் அருள்மிகு ஈச்சனாரி விநாயகர் கோவில் உள்ளதால் இத்தொகுதியை ஒரு சுற்றுலாத் தொகுதியாக அறிவிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், பேரூர் தொகுதியை ஒரு சுற்றுலாத் தொகுதியாக அறிவிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை. சுற்றுலாத் துறை எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் வருகையைக் கருத்திற்கொண்டு நிதி ஆதாரங்களுக்கு ஏற்பத் தேவையான அடிப்படை வசதிகள் செய்யப்படுகின்றன.

112—

## சுற்றுலாத் தலம்

**வினா எண் 6276—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேளாங்கண்ணி, நாகூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய இடங்களைச் சுற்றுலாத் தலமாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

சுற்றுலாத் துறை எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் வருகையைக் கருத்திற்கொண்டு நிதி



ஆதாரங்களுக்கு ஏற்பத் தேவையான அடிப்படை வசதிகள் செய்யப்படுகிறது. இதனடிப்படையில் வேளாங்கண்ணி, நாகூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் நட்சத்திர விடுதிகள் ஏற்படுத்த நிலம் தெரிவு செய்து நிலத்தினைச் சுற்றுலாத் துறையிடம் ஒப்படைக்க நில நிர்வாக ஆணையர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்
## பட்டியல்-16*

1—

## பாசன வசதி

**வினா எண் 13874—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம் பெண்ணாகரம் தொகுதி, வட்டுவனஹள்ளி ஊராட்சியைச் சேர்ந்த வரட்டுப்பள்ளம் ஏரியை மேம்படுத்தி பாசன வசதியை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம் பெண்ணாகரம் தொகுதி, வட்டுவனஹள்ளி ஊராட்சியைச் சேர்ந்த வரட்டுப்பள்ளம் ஏரியை மேம்படுத்தி பாசன வசதியை அதிகரிக்கும் பணி செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, 2001-2002 நிதியாண்டில் முடிக்கப்பட்டுள்ளது. இந்த ஏரியின் மொத்தப் பாசனப் பரப்பு 243 ஏக்கர். இந்த ஏரி மற்றும் வாய்க்கால்களில் உள்ள தூரினை அகற்றும் பணி மற்றும் சீரமைக்கும் பணிகள் தூர்வாரல் சிறப்புத் திட்டத்தின்கீழ் ரூ.7.00 லட்சம் மதிப்பளவில் 2001-2002 நிதியாண்டில் அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் மொத்தப் பாசன நிலங்களும் பாசன வசதி பெறும்.

*இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

2—

## பெண் கைதிகளின் சிறைச்சாலை

**வினா எண் 16935—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் பெண் கைதிகளை மட்டும் சிறைகளில் அடைக்க எந்தெந்த இடங்களில் சிறைச்சாலை உள்ளது?

(ஆ) இதை அதிகப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் பெண் சிறைவாசிகளை மட்டும் அனுமதிக்க பிரத்தியேகமாக வேலூர் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் பெண்கள் தனிச் சிறைகள் உள்ளன. மேலும், கோவை மத்திய சிறையில் உள்ள பெண்கள் தொகுதியிலும், திருச்சி, சேலம், கொக்கிரகுளம் ஆகிய இடங்களில் உள்ள தனிக் கிளைச் சிறைகளின் பெண்கள் தொகுதியிலும், பெண் சிறைவாசிகள் அனுமதிக்கப்படுகின்றனர்.

(ஆ) தமிழகத்தில் பரவலாக 8 கிளைச் சிறைகள், இரண்டு தனிக் கிளைச் சிறைகள் ஆகியவற்றைப் பெண்கள் சிறைகளாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளது.

3—

## குடிதண்ணீர் வசதி

**வினா எண் 10203—திரு. பி.எஸ். அருள்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, சி. முட்லூர் அரசு கலைக் கல்லூரியில் குடிதண்ணீர் மற்றும் கழிப்பறை வசதி செயல்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2001-2002 ஆம் நிதியாண்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய சிறப்புப் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புப் பணிகளுக்கென சிதம்பரம், சி. முட்லூர் அரசு கலைக் கல்லூரிக்கு ரூ.9,87,000 நிதி ஒதுக்கீடும், ஆட்சி ஒப்பளிப்பும் வழங்கப்பட்டுள்ளது. இத்தொகையில் கல்லூரியில் குடிதண்ணீர் வசதிகளை மேம்படுத்திட ரூ.1,50,000-க்கான ஒதுக்கீடு, கழிப்பறை வசதிகளை மேம்படுத்திட ரூ.3,50,000-க்கான நிதி ஒதுக்கீடும், உரிய ஆட்சி ஒப்பளிப்பும் வழங்கப்பட்டுள்ளன. மேற்காண் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. மேற்கண்ட பணிகள் நிறைவேற்றப்பட்டவுடன், அக்கல்லூரியில் போதுமான குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகள் உருவான நிலை ஏற்படும்.



4—

## உயர்நிலைப் பள்ளியாக மாற்றுதல்

**வினா எண் 10271—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி, தென்னாம்பட்டினம் ஊராட்சியில் கோணயாம்பட்டினம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்ற அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி, தென்னாம்பட்டினம் ஊராட்சியில் கோணயாம்பட்டினம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை அரசு உயர்நிலைப் பள்ளியாக அரசாணை எண் 94, பள்ளிக் கல்வித் (இ1) துறை, நாள் 28-6-2001-ன்படி 2001-2002 ஆம் ஆண்டில் தரம் உயர்த்தி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

5—

## சொந்தக் கட்டடம்

**வினா எண் 10359—திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை இசைப் பள்ளிக்கு சொந்தக் கட்டடம் கட்டித் தரும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) திருவண்ணாமலை இசைப் பள்ளிக்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தரும் திட்டம் ஏதும் தற்போது அரசின் ஆய்வில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

6—

## விளையாட்டு வளாகம்

**வினா எண் 10364—திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டத்தில் விளையாட்டுக் கூடம் (Sports Stadium) அமைக்கும் செயற்குறிப்பு ஆய்வில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டத்தில் மாவட்ட விளையாட்டு வளாகம் அமைக்கும் செயற்குறிப்பு ஆய்வில் உள்ளது.

7—

## உடற்பயிற்சிக் கருவிகள்

**வினா எண் 10395—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குடவாசல் ஒன்றியம், அன்னியூர் ஊராட்சி, சருக்கை கிராமத்திற்கு உடற்பயிற்சிக் கருவிகள் வழங்க அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

குடவாசல் ஒன்றியம், அன்னியூர் ஊராட்சி, சருக்கை கிராமத்திற்குத் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மூலம் உடற்பயிற்சிக் கருவிகள் வாங்கி வழங்கிட செயற்குறிப்பு ஏதுமில்லை.



8—

## கற்றலின் இனிமைத் திட்டம்

**வினா எண் 10455—திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மிகவும் பின்தங்கிய விளாத்திக்குளம் தொகுதியை உள்ளடக்கிய தூத்துக்குடி மாவட்டத்திற்கு, கற்றலின் இனிமைத் திட்டத்தின் அடிப்படையில் அதிக ஆசிரியர்களையும், நிதியையும் ஒதுக்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், இதுபற்றிய விவரத்தினைத் தர இயலுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கற்றலின் இனிமைத் திட்டம் என்பது செயல்பாடுகள் நிறைந்த கற்பித்தல் பயிற்சியாகும். இத்திட்டத்தின் அடிப்படையில் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. அதனால் அதிக ஆசிரியர்களை ஒதுக்கீடு செய்ய இயலாது. மேலும், தூத்துக்குடி மாவட்டத்தில் பணியாற்றும் 5883 அனைத்து ஆசிரியர்களுக்கும் யுனிசெஃப் நிறுவனத்தின் மூலம் ரூ.7,46,317/- நிதியுதவி அளிக்கப்பட்டு, கற்றலின் இனிமைப் பயிற்சி ஆசிரியர்களுக்கு மாநிலக் கருத்தாளர்களால் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

9—

## விளையாட்டு மைதானம்

**வினா எண் 10469—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை அரசினர் பெண்கள் கலைக் கல்லூரியில் டென்னீஸ் மற்றும் கைப்பந்து மைதானம் அமைத்துத்தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

புதுக்கோட்டை அரசினர் மகளிர் கலைக் கல்லூரியில் ஏற்கெனவே கைப்பந்து மைதானம் இருக்கிறது. டென்னீஸ் மைதானம் இல்லை. டென்னீஸ் மைதானம் அமைப்பது தொடர்பாகக் கருத்துரு ஏதும் அக்கல்லூரி முதல்வரிடமிருந்து பெறப்படவில்லை.

10—

## கல்லூரி பழுதுபார்ப்பு

**வினா எண் 10471—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை அரசினர் பெண்கள் கலைக் கல்லூரி மாணவர்களுக்குக் கூடுதலான கழிவறையும், ஆசிரியைகளுக்குத் தனி ஓய்வறையும், கழிவறை வசதியும் செய்து கொடுக்க அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

2001-2002 ஆம் நிதியாண்டில் சிறப்புப் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புப் பணிகளுக்கென, புதுக்கோட்டை அரசினர் மகளிர் கலைக்கல்லூரிக்கு ரூ.10,00,000-க்கு நிதி ஒதுக்கீடும், ஆட்சி ஒப்பளிப்பும் வழங்கப்பட்டுள்ளது. இந்நிதி ஒதுக்கீட்டில் கல்லூரியின் கழிப்பறை வசதியை மேம்படுத்த ரூ.50,000/-க்கு நிதி ஒதுக்கீடும், ஆட்சி ஒப்பளிப்பும் வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் 2001-2002 ஆம் நிதியாண்டில் அரசுக் கல்லூரிகளில் சில கட்டுமானப் பணிகளை நிறைவேற்றுவதற்கென திட்டத் தலைப்பின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.3,00,000-ல் ரூ. 1,50,000 மதிப்பீட்டில் இக்கல்லூரியின் வேதியியல் துறைக்கு அருகில் உள்ள கழிப்பறையை விரிவுபடுத்தி, மாணவிகள் பயன்பெறும் வகையில் கூடுதல் கழிப்பறை வசதிகள் செய்து தர நிதி ஒதுக்கீடும், ஆட்சி ஒப்பளிப்பும் வழங்கப்பட்டு, தற்போது பணிகள் நடைபெற்று வருகின்றன. தற்போது நிறைவேற்றப்பட்டு வரும் பணிகள் நிறைவு பெற்றவுடன் மாணவிகள் மற்றும் ஆசிரியைகளுக்குப் போதுமான கழிப்பறை வசதிகள் ஏற்படும்.

11—

## நடுநிலைப் பள்ளியாக மாற்றுதல்

**வினா எண் 10634—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதிக்குட்பட்ட கோட்டமேட்டுப்பட்டி ஊராட்சியில் உள்ள மேட்டுப்பட்டி பஞ்சாயத்து யூனியன் தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மேட்டுப்பட்டி ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் ஐந்தாம் வகுப்பில் 17 மாணவர்களே பயில்வதாலும், 2½ கிலோ மீட்டர் தூரத்தில் அரசு உயர்நிலைப் பள்ளி உள்ளதாலும் மேட்டுப்பட்டி ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்தத் சாத்தியக் கூறுகள் இல்லை.

12—

## புதிய பள்ளி தொடங்குதல்

**வினா எண் 10642—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், தெத்திகிரிப்பட்டி கிராமம், கரும்பு சாலையூரில் நடுநிலைப் பள்ளி தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், தெத்திகிரிப்பட்டி கிராமம் கரும்பு சாலையூரில் தற்போது உள்ள தொடக்கப் பள்ளியில் 5ஆம் வகுப்பில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை 20. இப்பள்ளிக்கு 2½ கி.மீ. தூரத்தில் வெள்ளார் அரசு உயர்நிலைப் பள்ளி உள்ளதாலும் விதிகளின்படி கரும்பு சாலையூரில் நடுநிலைப் பள்ளி தொடங்க சாத்தியக்கூறுகள் இல்லை.

13—

## ஆசிரியர் நியமனம்

**வினா எண் 10643—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், தொளசம்பட்டி ஊராட்சி, அரசினர் மேல்நிலைப் பள்ளியில் தமிழ் ஆசிரியர் இல்லாத காரணத்தால் தமிழ் ஆசிரியர் நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்தில் உள்ள ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், தொளசம்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் மூன்று தமிழாசிரியர் பணியிடங்கள் உள்ளன. அந்த மூன்று பணியிடங்களிலும் ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இப்பள்ளியில் தமிழாசிரியரைப் பொறுத்த அளவில் காலிப் பணியிடம் ஏதும் இல்லை.

**14—**

## தொழில்நுட்பப் பயிலகம்

**வினா எண் 12158—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலியில் தொழில்நுட்பப் பயிலகம் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**15—**

## தமிழ் வளர்ச்சி

**வினா எண் 13306—திரு. இ. கணேசன்,** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை தரமணியிலுள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் கிளைகளை மதுரை, சேலம், கோயம்புத்தூர், திருச்சி மாநகரங்களில் ஏற்படுத்தி, தமிழ் வளர்ச்சிக்கு வழிவகை செய்ய அரசு ஆவன செய்யுமா?



(ஆ) அதன் விவரம் அரசு தெரிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் கிளைகளைத் தொடங்கும் கருத்துரு ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) இக்கேள்விக்குப் பதில் எழவில்லை.

**16—**

## புதிய கட்டடங்கள் கட்டுதல்

**வினா எண் 13422—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி ஊராட்சி ஒன்றியம், அம்மையப்பட்டு கிராம நடுநிலைப் பள்ளிக்குப் போதிய வகுப்பறைகள் இல்லை என்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இந்த நடுநிலைப் பள்ளிக்கு மேலும் புதிய கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) ஆம். மாணவர் எண்ணிக்கைக்கு ஏற்ப கூடுதல் கட்டடம் தேவையுள்ளது.

(ஆ) அனைவருக்கும் கல்வி (சர்வ சிக்ஷா அபியான்) திட்டத்தின்கீழ் கூடுதல் கட்டுமானப் பணி செய்யப்பட உள்ளது.

**17—**

## மேல்நிலைப் பள்ளியாக்கும் திட்டம்

**வினா எண் 16297—திரு. கோவை தங்கம் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, சோமந்தூர் சித்தூர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2001-2002 ஆம் கல்வியாண்டில் 125 அரசு/நகராட்சி/மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. வால்பாறை தொகுதி, சோமந்துார் சித்துார் உயர்நிலைப் பள்ளி குறித்து வரும் கல்வியாண்டில் கருத்துரு பெறப்பட்ட[illegible] உயர்மட்டக் குழுவால் பரிசீலிக்கப்பட்டு, அரசின் நிதிநிலைக்கு [illegible]ட்டு மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தக் கருதப்படும்.

**18—**

## உடற்பயிற்சிச் சாதனங்கள்

**வினா எண் 16459—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், இருக்கன்துறை ஊராட்சி, நக்கனேரி கிராமத்திற்கு உடற்பயிற்சிச் சாதனங்கள் வழங்கிட அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், இருக்கன்துறை ஊராட்சி, நக்கனேரி கிராமத்திற்கு உடற்பயிற்சிச் சாதனங்கள் வழங்கிட செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**19—**

## புதிய பள்ளிகள்

**வினா எண் 16611—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் 2001 ஆம் ஆண்டு புதிதாக எத்தனை தொடக்கப் பள்ளிகள் உருவாக்கப்பட்டன?



விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

தமிழ்நாட்டில் 2001-2002 ஆம் கல்வி ஆண்டில் 452 புதிய தொடக்கப் பள்ளிகள் சர்வ சிக்ஷா அபியான் திட்டத்தின்கீழ் தொடங்கப்பட்டுள்ளன.

**20—**

## திருட்டு

**வினா எண் 8406—திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் கோயில்களில் திருட்டுகள் சம்பந்தமான தகவல்கள் அரசின் கவனத்திற்கு வந்துள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையரால் களவுகள் குறித்த விவரம்—உடனுக்குடன்—களவு நடந்த நாள், களவாடப்பட்ட பொருட்களின் விவரம், அவற்றின் தோராய மதிப்பு, காவல் நிலைய முதல் தகவல் அறிக்கை எண் மற்றும் களவு குறித்த தகவல், தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வரும் விவரம் ஆகியவை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்படுகின்றது. கடந்த மூன்றாண்டுகளில் (1999 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரை 266 களவுகள் நடைபெற்றுள்ளன. இதுவரை 29 களவுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியவை தீவிர விசாரணையில் உள்ளன) களவுகளைக் கண்டுபிடிக்க காவல் துறை குற்றப் பிரிவு மற்றும் காவல் துறையில் சிலைகள் களவு தடுப்புப் பிரிவு ஆகியவை மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்துறை மூலம் களவு ஏற்படாது தடுக்க கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகின்றன:—

(1) திருக்கோயில் பாதுகாப்புப் படை அமைப்பு

(2) இரட்டைப் பூட்டு முறை

(3) பாதுகாப்புப் பெட்டக வசதி

(4) கள்வர் எச்சரிக்கை மணி

(5) கோள் சொல்லிக் கடிகாரம் அமைப்பு

(6) திருவாபரணங்கள் காப்பீடு

(7) இரவு நேரத்தில் ஒரு மணிக்கு ஒரு முறை மணி ஒலித்தல்.

(8) விக்ரகப் பாதுகாப்பு மையங்களில் வைத்து விக்ரகங்கள் பாதுகாப்புச் செய்தல்.

21—

## ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்

**வினா எண் 10550—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, மேல்காங்கேயன்குப்பம் அருள்மிகு அங்காள பரமேஸ்வரி கோயில் நிர்வாகத்தை அரசு எடுத்து நடத்தி வருவதால், பக்தர்கள் வசதிக்கு ஆழ்குழாய்க் கிணறு அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, மேல்காங்கேயன்குப்பம், அருள்மிகு அங்காள பரமேஸ்வரி திருக்கோயிலின் பூஜை மற்றும் அபிஷேகங்களுக்கும், சேவார்த்திகள் பயன்பாட்டிற்கும் ஊராட்சி மன்றக் குடிநீர் இணைப்பிலிருந்து தனி இணைப்பு பெறப்பட்டு, திருக்கோயிலுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. திருவிழாக் காலங்களில், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு சேவார்த்திகள் குடிநீர்த் தேவை பூர்த்தி செய்யப்பட்டு வரப்படுவதால், மேற்படி திருக்கோயிலுக்கு ஆழ்குழாய்க் கிணறு அமைக்காமலே சேவார்த்திகளுக்குக் குடிநீர்த் தேவை பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது. எனவே, ஆழ்குழாய்க் கிணறு அமைத்துத் தர வேண்டிய அவசியம் எழவில்லை.



22—

## திருக்கோயிலுக்குப் பூஜை

**வினா எண் 16162—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், வடரங்கத்தில் உள்ள பிரசித்திப் பெற்ற அருள்மிகு ரெங்கநாதர் திருக்கோயிலுக்கு இருகால பூஜை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், வடரெங்கம் அ/மி. ரங்கநாத சுவாமி திருக்கோயிலில் நான்கு கால பூஜை நடைபெற்று வருகிறது.

23—

## மருத்துவமனைகளின் விவரம்

**வினா எண் 475—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் இயங்கி வரும் அரசு மருத்துவமனைகள் எத்தனை?

(ஆ) அவைகளில் நியமன விதிப்படி பணியாளர்கள் எவ்வளவு பேர் தேவை?

(இ) தற்பொழுது பணியாற்றும் பணியாளர்கள் எத்தனை பேர்?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் 9 அரசு மருத்துவமனைகள் இயங்கி வருகின்றன.

(ஆ) அம்மருத்துவமனைகளில் நியமன விதிப்படி 239 பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள்.

(இ) தற்போது அம்மருத்துவமனைகளில் 222 பணியாளர்கள் பணியாற்றுகிறார்கள்.

24—

## மருத்துவமனை பற்றிய விவரம்

**வினா எண் 4824—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள அரசு மருத்துவமனை மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் காலியாக உள்ள மருந்தாளுநர் பணியிடங்கள் 2000-2001 முடிய எத்தனை உள்ளன?

(ஆ) அதை நிரப்ப அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

**அறிக்கை.**

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் உள்ள அரசு மருத்துவமனைகளில் மருத்துவக் கல்வி இயக்ககத்தின் கட்டுப்பாட்டில் உள்ள மருத்துவமனைகளில் மட்டும் 36 மருந்தாளுநர் பணியிடங்கள் காலியாக உள்ளன. இவற்றில், சென்னை அரசு பொது மருத்துவமனையில் உள்ள 8 காலிப் பணியிடங்களும், அரசு குழந்தைகள் நல மருத்துவமனையில் உள்ள 10 காலிப் பணியிடங்களும் நிரப்புவதற்கு அரசு ஆணை 105, சுகாதாரம், நாள் 3-5-2000 மூலம் அரசு அனுமதி



அளித்துள்ளது. மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்ககத்தின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் அரசு மருத்துவமனைகளில் காலியாக இருந்த 127 மருந்தாளுநர் பணியிடங்கள், மாவட்ட வேலைவாய்ப்பகத்தின் மூலம் பதிவு மூப்பின் அடிப்படையில், நேரடி நியமனம் செய்து நிரப்பிட அரசாணை எண் 105, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 3-5-2000-ன் வழியே மருந்தாளுநர் பணி நியமன அலுவலர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அதனையடுத்து காலியாக இருந்த பணியிடங்களில், சுமார் 60 பணியிடங்கள் ஏற்கெனவே பணி நியமன அலுவலர்களாகிய மாவட்ட நலப் பணிகள் இணை இயக்குநர்களால் நேரடி நியமனம் மூலம் நிரப்பப்பட்டுவிட்டன. எஞ்சிய பணியிடங்கள் வேலைவாய்ப்பகத்தில் பதிவு செய்துள்ள மருந்தாளுநர்களில் சிலர் வேலை கோரி நீதிமன்றத்தில் வழக்குகள் தொடர்ந்து தடை உள்ளதால், பணியிடங்கள் நிரப்புவதில் சிறிது இடர்ப்பாடுகள் ஏற்பட்டுள்ளன. இவ்வழக்குகள் முடிக்கப்பட்டு, நீதிமன்றத்திலிருந்து உரிய ஆணை பெறப்பட்ட பின்னர், அவைகள் உடன் நிரப்பப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

அரசாணை எண் 191, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 14-6-2000-ல் ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்ள மருந்தாளுநர் காலிப் பணியிடங்களை அந்தந்த மாவட்ட வேலைவாய்ப்பகங்களிலிருந்து பெறப்படும் தகுதி வாய்ந்த நபர்கள் பட்டியலிலிருந்து முன்னுரிமை அடிப்படையிலும் சாதிச் சுழற்சி விதிகளின் அடிப்படையிலும் மற்றும், மருந்தாளுநர் பணி நியமனம் சம்பந்தமாக அவ்வப்பொழுது அரசு வெளியிடும் அறிவுரைகளின்படியும், மருந்தாளுநர்களை நியமனம் செய்ய அரசு அறிவுரை வழங்கியுள்ளது. துணை இயக்குநர்கள், சுகாதாரப் பணிகள்தான் மருந்தாளுநரின் பணி நியமன அதிகாரிகளாதலால் அக்கடித நகல் அனைத்து மாவட்ட சுகாதாரப் பணிகள் துணை இயக்குநர்களுக்கும் அனுப்பப்பட்டு, காலிப் பணியிடங்களை நிரப்பத் தேவையான அறிவுரைகளும் வழங்கப்பட்டுள்ளன. மேலும் ஐந்து மாதங்களுக்கு மேலாக உள்ள காலிப் பணியிடங்களை நிரப்ப அரசு விதித்த தடை, மருந்தாளுநர்கள் காலிப் பணியிடங்களை நிரப்புவதற்குப் பொருந்தாது என்று அறிவித்து அனுப்பப்பட்ட அரசு கடித எண் 32514/எல்1/2001-1, சுகாதாரத் துறை நாள் 29-6-2001 அனைத்து துணை இயக்குநர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. எனவே, ஐந்து மாதங்களுக்கு மேலான காலிப் பணியிடங்களை நிரப்புவதிலும் துணை இயக்குநர்கள் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்ற நிலையில், அரசுக்கு ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடி காரணமாக, காலிப் பணியிடங்களைப் புதிய நியமனம்

மூலம் நிரப்புவதில், அரசு தற்காலிகத் தடை விதித்துள்ளதால், அப்பணி நிறுத்தப்பட்டுள்ளது. தடை நீக்கப்பட்டதும் மீண்டும் மருந்தாளுநர் காலிப் பணியிடங்களைப் புதிய நியமனம் மூலம் நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**25—**

### பிரசவ நோயாளிகளின் எண்ணிக்கை

**வினா எண் 7886—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி பொது மருத்துவமனைக்கு வரும் பிரசவ நோயாளிகளில் எத்தனை பேர் பாண்டிச்சேரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பப்பட்டார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) தெரியும்.

(ஆ) செஞ்சி அரசு மருத்துவமனைக்கு ஏப்ரல் 2001 முதல் ஆகஸ்ட் 2001 வரை பிரசவத்திற்காக 638 தாய்மார்கள் வந்துள்ளனர். அவர்களில் 8 பேர் மட்டுமே பாண்டிச்சேரி மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

**26—**

### நோயாளிகளின் எண்ணிக்கை

**வினா எண் 7887—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செஞ்சி அரசு மருத்துவமனையில் குழந்தைகள் பிரிவில் மே 2001 முதல் ஆகஸ்ட் 2001 வரை எத்தனை குழந்தைகள் உள்நோயாளிகளாகவும், புறநோயாளிகளாகவும் அனுமதிக்கப்பட்டனர் என்ற விவரத்தை அரசு அறிவிக்க முன்வருமா?





விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

செஞ்சி அரசு மருத்துவமனையின் குழந்தைகள் பிரிவில் மே 2001 முதல் ஆகஸ்ட் 2001 வரை 245 குழந்தைகள் உள்நோயாளிகளாகவும், 13726 குழந்தைகள் புறநோயாளிகளாகவும் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளனர்.

**27—**

### அறுவை சிகிச்சை மூலம் பிரசவ விவரம்

**வினா எண் 7893—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செஞ்சி அரசு பொது மருத்துவமனையில் மே 2001 முதல் ஆகஸ்ட் 2001 வரை பிரசவ நோயாளி எத்தனை பேருக்கு அறுவை சிகிச்சை மூலம் பிரசவம் பார்க்கப்பட்டது என்ற விவரத்தை அரசு அறிவிக்க முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

செஞ்சி அரசு மருத்துவமனைக்கு மே 2001 முதல் ஆகஸ்ட் 2001 வரை பிரசவத்திற்காக வந்துள்ள 532 தாய்மார்களில் யாருக்கும் அறுவை சிகிச்சை மூலம் பிரசவம் பார்க்கப்படவில்லை.

**28—**

### சாலை வசதி

**வினா எண் 8075—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஆரூர்பட்டி கிராமம், சேடப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு இந்நிதியாண்டில் சாலை வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

சேடப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில் 100 மீட்டர் தூரம் 15 அடி அகல மண் பாதை வசதி உள்ளது. மாநில அரசின் தற்போதைய நிதிநிலைமையைக் கருத்தில் கொண்டு மண் சாலைக்குப் பதில் தார்ச் சாலை வசதி செய்யும் கருத்துரு பரிசீலனையில் இல்லை.

**29—**

## நிதி உதவி

**வினா எண் 8568—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்ட மருத்துவமனைக்கு 1999-2000, 2000-2001 ஆம் ஆண்டுகளில் எவ்வளவு ரூபாய் மதிப்புள்ள மருந்துகள் வாங்க அரசு நிதி உதவி அளித்தது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்ட மருத்துவமனைகளுக்கு மருந்துகள் வாங்க 1999-2000 ஆம் ஆண்டு ரூ.64,79,000/- (ரூபாய் அறுபத்து நான்கு இலட்சத்து எழுபத்தொன்பதாயிரம் மட்டும்) மற்றும் 2000-2001 ஆம் ஆண்டு ரூ.68,74,000/- (ரூபாய் அறுபத்து எட்டு இலட்சத்து எழுபத்து நான்கு ஆயிரம் மட்டும்) நிதி உதவி செய்யப்பட்டுள்ளது.



**30—**

## பிறப்பு விகிதம்

**வினா எண் 8570—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் குழந்தைகள் பிறப்பு விகிதம் 1990, 1995, 2000 ஆம் ஆண்டு எவ்வளவு என்று அரசு வெளியிடுமா?

(ஆ) அதில் ஆண், பெண் குழந்தைகள் எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் 1990 ஆம் ஆண்டு பிறப்பு விகிதம் 21.6 (1000 மக்கள் தொகைக்கு) 1995 ஆம் ஆண்டு பிறப்பு விகிதம் 20-3-2000 ஆம் ஆண்டு பிறப்பு விகிதம் மாதிரி கணக்கெடுப்பின்படி 18.3 ஆகும்.

(ஆ) <u>1990 ஆம் ஆண்டு</u>

ஆண் குழந்தைகள்-6,17,348

பெண் குழந்தைகள்-5,87,932

<u>1995 ஆம் ஆண்டு</u>

ஆண் குழந்தைகள்-6,11,356

பெண் குழந்தைகள்-5,82,284

<u>2000 ஆம் ஆண்டு (உத்தேசக் கணக்கீடு)</u>

ஆண் குழந்தைகள்-5,90,350

பெண் குழந்தைகள்-5,54,650

**31—**

## வேலைவாய்ப்பு

**வினா எண் 8603—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 2001 ஆம் ஆண்டு மே மாதம் முடிய மருந்தாளுநர் பயிற்சி முடித்தவர்கள் எத்தனை பேர் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ளனர்?

(ஆ) சேலம் மாவட்டத்தில் எவ்வளவு பேர் பதிவு செய்துள்ளனர்?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் 2001 ஆம் ஆண்டு மே மாதம் முடிய மருந்தாளுநர் (D. Pharm) மற்றும் (B.Pharm) முடித்தவர்கள்.

<u>மருந்தாளுநர் (D. Pharm)</u>

| | |
|---|---|
| 1. ஆண்கள் | 6621 |
| 2. பெண்கள் | 4059 |
| | **10680** |

<u>மருந்தாளுநர் (B.Pharm)</u>

| | |
|---|---|
| 1. ஆண்கள் | 954 |
| 2. பெண்கள் | 1855 |
| மொத்தம் | **2809** |

(ஆ) சேலம் மாவட்டத்தில் பதிவு செய்தவர்கள்:

| | பட்டயம் | பட்டப்படிப்பு |
|---|---|---|
| 1. ஆண்கள் | 405 | 143 |
| 2. பெண்கள் | 176 | 36 |
| மொத்தம் | **581** | **179** |

32—

## தொலைபேசி இணைப்பு

**வினா எண் 11518—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



தமிழகத்திலுள்ள அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் உடனடியாகத் தொலைபேசி இணைப்பு ஏற்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

தற்போது 424 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குத் தொலைபேசி வசதி செய்யப்பட்டுள்ளது. நிதிநிலைக்கேற்ப மீதமுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் தொலைபேசி வசதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

33—

## தமிழ்நாடு அரசு நிதி

**வினா எண் 11671—திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மருத்துவப் பணிக் கழகத்திற்கு மத்திய அரசு நிதி ஒதுக்குகிறதா?

(ஆ) ஆம் எனில், ஆண்டிற்கு எவ்வளவு நிதி வழங்குகிறது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு மருத்துவ நிலையங்களுக்குத் தேவையான மருந்துகள் மற்றும் கருவிகள் கொள்முதல் செய்து விநியோகிப்பதற்கு என 1994 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மருத்துவச் சேவைக் கழகம் நிறுவப்பட்டது. தமிழ்நாடு அரசு ஒதுக்கும் நிதியிலிருந்து மருந்துகள் மற்றும் கருவிகள் வாங்கப்படுகின்றன. மத்திய அரசு நிதி வழங்குவதில்லை.

34—

## கட்டடப் பராமரிப்பு

**வினா எண் 15973—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடங்களைப் பராமரிக்கும் பொறுப்பு எத்துறையிடம் உள்ளது.

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் அரசுக் கட்டடங்களில் செயல்படும் அனைத்து ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்களைப் பராமரிக்கும் பொறுப்பு பொதுப் பணித் துறையினரைச் சார்ந்ததாகும்.

35—

## சொந்தக் கட்டடம்

**வினா எண் 15975—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, அரசு பொது மருத்துவமனையில் சித்தா மருத்துவப் பிரிவுக்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி அரசு பொது மருத்துவமனையில் சித்தா மருத்துவப் பிரிவுக்குச் சொந்த கட்டடம் கட்டும் கருத்துரு எதுவும் அரசிடம் தற்போது இல்லை.



36—

## புதிய தனிக் கட்டடம்

**வினா எண் 16647—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், நல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் சித்த மருத்துவமனைக்குத் தனியாகக் கட்டடம் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மாவட்டத் தலைமை மருத்துவமனை, வட்டம் (மற்றும்) வட்டம் சாரா மருத்துவமனை மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் செயல்பட்டு வரும் இந்திய மருத்துவப் பிரிவுகளுக்குத் தனிக் கட்டட வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்ற கொள்கைத் திட்டம் அரசிடம் உள்ளது. அரசின் நிதிநிலையின் அடிப்படையில் படிப்படியாக அனைத்து இந்திய மருத்துவப் பிரிவுகளுக்கும் தனிக் கட்டட வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படும். தற்சமயம் நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், நல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் இயங்கி கொண்டிருக்கும் சித்த மருத்துவமனைக்குத் தனியாகக் கட்டடம் கட்டும் கருத்துரு எதுவும் அரசிடம் நிலுவையில் இல்லை. இதற்கான மற்றொரு முயற்சியாக அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் செயல்பட்டு வரும் இந்திய மருத்துவப் பிரிவுகளுக்கு தனிக் கட்டடம் கட்ட சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஒரு கட்டடத்திற்கு தலா ரூ.2.00 லட்சம் வீதம் வழங்க வேண்டப்பட்டுள்ளது. அரசின் நிதிநிலையின் அடிப்படையில் அல்லது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ஆகியவைகளில் நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெறும்போது இப்பிரிவிற்குத் தனிக் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

37—

## கூட்டுக் குடிநீர்த் திட்டம்

**வினா எண் 3439—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி, மகுடஞ்சாவடி ஒன்றியத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் கட்டப்பட்ட மேல்நிலைத் தொட்டிகள் எத்தனை?

(ஆ) அதில் பொதுமக்களுக்குக் குடிநீர் வழங்கப்பட்ட பகுதிகள் எத்தனை? அதனால் பலனடையும் மக்கள் தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி ஒன்றியத்தில் காவிரி ஆற்றின் நீரை நீராதாரமாகக் கொண்ட இராசிபுரம்-எடப்பாடி கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் ஆழ்துளைக் கிணற்று நீரை நீராதாரமாகக் கொண்ட மின் இறைப்பான் திட்டம் மூலம் குடிநீர் வழங்க 59 மேல்நிலைத் தொட்டிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் கட்டி முடிக்கப்பட்டு 59 குடியிருப்புகளுக்கும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இதனால் சுமார் 35,091 மக்கள் பயனடைகிறார்கள்.

மகுடஞ்சாவடி ஒன்றியத்தில் ஆழ்துளைக் கிணற்று நீரை நீராதாரமாகக் கொண்ட மின் இறைப்பான் திட்டம் மூலம் 17 மேல் நிலைத் தொட்டிகளும் எடப்பாடி—ராசிபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் 29 மேல்நிலைத் தொட்டிகளும் கட்டப்பட்டு, குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இதனால் சுமார் 19,345 மக்கள் பயனடைகிறார்கள்.

38—

## குடிநீர்த் திட்டம்

**வினா எண் 3479—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) சேலம் மாவட்டத்தில் குடிநீர்த் திட்டங்களுக்கு அரசு ஒதுக்கீடு செய்த நிதி எவ்வளவு?

(ஆ) சென்ற நிதியாண்டில் செலவிடப்பட்ட தொகை எவ்வளவு?

(இ) அதில் ஆழ்துளைக் கிணறுகள் மற்றும் மேல்நிலைத் தொட்டிகள் எத்தனை உருவாக்கப்பட்டன?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் குடிநீர்த் திட்டங்களுக்கு 2000-01 ஆம் ஆண்டில் ரூ.54.48 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

(ஆ) சென்ற நிதியாண்டில் குடிநீர்த் திட்டங்களுக்கு ரூ.54.29 கோடி செலவிடப்பட்டது.

(இ) அதில் 342 ஆழ்துளைக் கிணறுகள் உருவாக்கப்பட்டு, 421 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டன.

39—

## தெருவிளக்கு அமைக்கும் திட்டம்

**வினா எண் 8922—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், தெற்குமடத்தூர் ஊராட்சி, எம்.ஜி.ஆர். காலனிக்குத் தெருவிளக்குகள் அமைக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், தெற்குமடத்தூர் ஊராட்சி எம்.ஜி.ஆர். காலனியில் ஏற்கெனவே 3 குழல் விளக்குகளும், 1 சோடியம் விளக்கும் அமைக்கப்பட்டு நல்ல முறையில் எரிகின்றன. ஊராட்சியில் நிதிநிலை சரியில்லாத காரணத்தால் கூடுதல் தெருவிளக்குகள் அமைக்கத் தற்போது இயலாது.

40—

## அடி பம்பு அமைத்தல்

**வினா எண் 8925—திரு. பி. எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, குத்தபாஞ்சான் பஞ்சாயத்தில் மேலகுத்தபாஞ்சான் வடக்குத் தெரு ஊராட்சி அலுவலகத்தின் மேல்பக்கத்தில் அடி பம்பு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, குத்தபாஞ்சான் பஞ்சாயத்து, மேலகுத்தபாஞ்சான் வடக்குத் தெரு ஊராட்சி அலுவலகத்திற்கு மேல்பக்கம் ஏற்கெனவே தெரு நல்லிகள் உள்ளன. எனவே, கூடுதலாகப் பம்பு தேவை இல்லை.

41—

## தெரு நல்லிகள் அமைத்தல்

**வினா எண் 8934—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், அ.பெ.நாடானூர் ஊராட்சிக்குட்பட்ட சிவநாடானூர் வடக்குத் தெருவிற்கு நல்லி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், அ.பெ. நாடானூர் ஊராட்சி, சிவநாடானூர் வடக்குத் தெருவில்



ஏற்கெனவே இரண்டு ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு நல்ல நிலையில் இயங்கி வருகின்றன. மேலும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் பாப்பான்குளம் ஆற்று நீர் பொது மக்களுக்குப் போதுமான அளவு வழங்கப்படுகிறது. ஊராட்சியில் போதுமான நிதி வசதி இல்லாத காரணத்தால் கூடுதலாகத் தெரு நல்லிகள் அமைக்கத் தற்போது வாய்ப்பில்லை.

42—

## தெரு நல்லி அமைத்தல்

**வினா எண் 8935—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி சட்டமன்றத் தொகுதி, கடையம் ஒன்றியம், அ.பெ. நாடானூர் ஊராட்சிக்குட்பட்ட வேலூர் குடியிருப்புக்கு நல்லி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் நுறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி சட்டமன்றத் தொகுதி, கடையம் ஒன்றியம், அ.பெ. நாடானூர் ஊராட்சி, வேலூர் குடியிருப்பு பாப்பான்குளம் ஆற்றுத் தண்ணீர் பொது மக்களுக்குத் தற்போது வழங்கப்பட்டு வருகிறது. ஊராட்சியில் போதுமான நிதி வசதி இல்லாத காரணத்தால் கூடுதலாகத் தெரு நல்லி அமைக்க வாய்ப்பில்லை.

43—

## தெரு நல்லி அமைப்பு

**வினா எண் 8941—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், தெற்கு மடத்தூர் ஊராட்சிக்குட்பட்ட காவூர் மெயின் ரோட்டின் வடக்குப் புறத்தில் இரண்டு நல்லிகள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், தெற்குமடத்தூர் ஊராட்சி, கடலூர் மெயின் ரோடு வடக்குப் புறத்தில் ஏற்கெனவே ஒரு ஆழ்குழாய்க் கிணறு அமைக்கப்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகிறது. மேலும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது ஊராட்சியில் நிதி வசதி இல்லாத காரணத்தால் கூடுதலாகத் தெரு நல்லி அமைப்பதற்கு வாய்ப்பில்லை.

44—

## தெருவிளக்கு அமைத்தல்

**வினா எண் 8943—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், தெற்கு மடத்தூர் ஊராட்சி, சங்கரலிங்கபுரம் கிராமத்திற்கு இரண்டு தெருவிளக்குகள் அமைக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், தெற்குமடத்தூர் ஊராட்சி, சங்கரலிங்கபுரம் கிராமத்தில் 1 சோடியம் விளக்கு, 4 குழல் விளக்குகள் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளன.



ஊராட்சியில் தற்போது போதிய நிதிவசதி இல்லாத காரணத்தால் கூடுதலாகத் தெருவிளக்குகள் அமைக்கத் தற்போது வாய்ப்பில்லை.

45—

## அடிபம்பு அமைத்தல்

**வினா எண் 8945—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதியில் பாப்பாக்குடி பஞ்சாயத்து யூனியனுக்கு உட்பட்ட தெற்கு பிள்ளையார் கோயில் அருகில் அடிபம்பு அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஊராட்சி ஒன்றியம், தெற்குப் பிள்ளையார் கோயில் பக்கம் ஏற்கெனவே தெரு நல்லிகள் இருப்பதால் புதிதாகப் பம்பு அமைக்கத் தேவை இல்லை.

46—

## அடி பம்புகள் அமைத்தல்

**வினா எண் 8990—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, புதுப்பட்டி யூனியனில் காசிநாதபுரத்தில் 3 அடிபம்புகளை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, புதுப்பட்டி யூனியனில் காசிநாதபுரத்தில் ஏற்கெனவே தெரு நல்லிகள் அமைக்கப்பட்டு குடிதண்ணீர்ப் பிரச்சினை இல்லாமல் உள்ளது. எனவே, தற்போது அடி பம்புகள் அமைக்க அவசியம் எழவில்லை.

47— [2002 மே 10

## நல்லி அமைத்தல்

**வினா எண் 8994—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், மடத்தூர் ஊராட்சிக்குட்பட்ட வள்ளியம்மாள்புரம் நடுத்தெருவில் ஒரு பொது நல்லி அமைக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், மடத்தூர் ஊராட்சி, வள்ளியம்மாள்புரம் நடுத்தெருவில் நான்கு ஆழ்குழாய்க் கிணறுகள் ஏற்கெனவே அமைக்கப்பட்டு சீரான முறையில் குடிநீர் விநியோகம் நடைபெற்று வருகிறது. மேலும், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட்டு, போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது. ஊராட்சியில் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தால் தற்சமயம் கூடுதலாகப் பொது நல்லி அமைக்க வாய்ப்பில்லை.

48—

## புதிய நல்லி அமைத்தல்

**வினா எண்—8995 திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமி உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், அ.பெ. நாடானூர் ஊராட்சிக்குட்பட்ட சிவஞானபுரம் (ஆதிதிராவிடர் காலனி) 60மி நல்லி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2002 மே 10]

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், அ.பெ. நாடானூர் ஊராட்சிக்குட்பட்ட சிவஞானபுரம் ஆதிதிராவிடர் காலனிக்கு ஏற்கெனவே இரண்டு அடிப்பம்பும், 5000 லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டியும் அமைக்கப்பட்டு பொதுமக்களுக்கு சீரான முறையில் குடிநீர் விநியோகம் நடைபெற்று வருகிறது. ஊராட்சியில் போதிய நிதிவசதி இல்லாத காரணத்தினால் கூடுதலாக நல்லிகள் அமைக்க தற்சமயம் வாய்ப்பில்லை.

49—

## பொது நல்லி அமைத்தல்

**வினா எண் 9190—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், மடத்தூர் ஊராட்சி, சங்கரலிங்கபுரம், அம்மன்கோயில் தெருவில் இரண்டு பொது நல்லிகள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், மடத்தூர் ஊராட்சி, சங்கரலிங்கபுரம் தெருவில் ஏற்கெனவே 4 ஆழ்துளைக் கிணறு அமைக்கப்பட்டு குடிநீர் விநியோகம் சீராக நடைபெற்று வருகிறது. ஊராட்சியில் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தால் தற்சமயம் கூடுதலாக இரண்டு பொது நல்லிகள் அமைக்க வாய்ப்பில்லை.

50—

## தெரு விளக்குகள் அமைத்தல்

**வினா எண் 9191—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், தெற்குமடத்தூர் ஊராட்சி, கோதண்டராமபுரம் கிராமத்திற்கு நான்கு தெருவிளக்குகள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், தெற்குமடத்தூர் ஊராட்சி கோதண்டராமபுரம் கிராமத்திற்கு ஏற்கெனவே 1 சோடியம் விளக்கும், 12 குழல் விளக்குகளும் அமைக்கப்பட்டு நல்லமுறையில் எரிந்து வருகின்றன. ஊராட்சியில் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தால் கூடுதலாகத் தெருவிளக்குகள் அமைக்க தற்போது வாய்ப்பில்லை.

51—

## பொது நல்லி அமைத்தல்

**வினா எண் 9192—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், வெங்கடாம்பட்டி ஊராட்சி, வடமலைப்பட்டி மேற்குப் பகுதியில் ஒரு பொது நல்லி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், வெங்கடாம்பட்டி ஊராட்சி, வடமலைப்பட்டி மேற்குப் பகுதியில் ஏற்கெனவே 1 ஆழ்துளைக் கிணறு, 4 பொது நல்லிகள் அமைக்கப்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகின்றன. மேலும் பாப்பான்குளம் திட்ட



ஆற்று நீர் மேல்நிலைத் தொட்டி மூலம் நிரப்பப்பட்டு, பொது மக்களுக்குக் குடிநீர் சீராக வழங்கப்பட்டு வருகிறது. ஊராட்சியில் நிதி வசதி இல்லாத காரணத்தால் கூடுதலாகத் தெரு நல்லிகள் அமைக்கத் தற்போது வாய்ப்பில்லை.

52—

## பொது நல்லி அமைத்தல்

**வினா எண் 9193—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், வெங்கடாம்பட்டி ஊராட்சி, மைலப்புரம் வடக்குத் தெருவில் ஒரு பொது நல்லி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், வெங்கடாம்பட்டி ஊராட்சி, மைலப்புரம் வடக்குத் தெருவில் ஓர் ஆழ்குழாய்க் கிணறு ஏற்கெனவே அமைக்கப்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகிறது. அதில் போதுமான அளவு குடிநீர் உள்ளது. ஏழு பொது நல்லிகள் அமைக்கப்பட்டு சீராகக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. ஊராட்சியில் நிதி வசதி இல்லாத காரணத்தால், கூடுதலாக நல்லி அமைக்க வாய்ப்பில்லை.

53—

## மின் விளக்கு வசதி

**வினா எண் 11252—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி வட்டம் - புலியூர் பெத்தனாங்குப்பம் ஊராட்சியில் மின் விளக்கு வசதி அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புலியூர் ஊராட்சியில் பெத்தனாங்குப்பம் கிராமத்தில் தற்போது 1 சோடியம் ஆவி விளக்கும் 3 குழல் விளக்குகளும் நல்ல நிலையில் எரிகின்றன. கூடுதலாகத் தெருவிளக்கு அமைக்க ஊராட்சியின் நிதிநிலை அனுமதித்தால், ஊராட்சி அனுமதியுடன் கூடுதல் தெருவிளக்குகள் ஊராட்சி மன்றத் தலைவரே அமைத்துக் கொள்ளலாம்.

54—

## கூடுதல் தெரு விளக்குகள்

**வினா எண் 11253—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பெத்தனாங்குப்பம் ஊராட்சியில் மயானப் பாதையில் மின் வசதி அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, பெத்தனாங்குப்பம் ஊராட்சியில் மயானப் பாதையில் மின் வசதி செய்ய செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. ஊராட்சியில் போதிய நிதி வசதியிருப்பின், முறையாகத் தீர்மானம் இயற்றி, கூடுதல் தெருவிளக்குகள் அமைத்துக்கொள்ளலாம்.

55—

## தொலைக்காட்சிக் கூடம்

**வினா எண் 11254—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) பண்ருட்டி தொகுதி, புலியூர் பெத்தனாங்குப்பம் ஊராட்சியில் தொலைக்காட்சிக் கூடத்தைப் புதுப்பித்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, புலியூர் பெத்தனாங்குப்பம் ஊராட்சியில் உள்ள தொலைக்காட்சி அறையின் கதவு மட்டுமே பழுதடைந்துள்ளது. இக்கதவைச் சரிசெய்து புதிய கதவு பொருத்த ஊராட்சித் தலைவருக்குத் தக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

56—

## மின் விளக்கு வசதி

**வினா எண் 11257—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்திரம்-ஊராட்சியில் மின் விளக்குகள் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சத்திரம் ஊராட்சியில் சத்திரம் கிராமத்திற்குப் போதிய மின் விளக்கு வசதி செய்து தரப்பட்டுள்ளது.

57—

## புதிய தொலைக்காட்சிப் பெட்டி அறை

**வினா எண் 11260—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, மதனகோபாலபுரம் ஊராட்சியில் தொலைக்காட்சிப் பெட்டியும், அறையும் ஏற்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை— [2002 மே 10

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஊராட்சிகளுக்குத் தொலைக்காட்சிப் பெட்டி வாங்கி வழங்க அரசிடம் திட்டம் ஏதுமில்லை. அரசின் விதிமுறைகளுக்கு உட்பட்டு ஊராட்சியின் நிதிநிலைமைக்கு ஏற்ப சம்பந்தப்பட்ட ஊராட்சியே தொலைக்காட்சிப் பெட்டி அறை கட்டிக்கொள்ளவும், தொலைக்காட்சிப் பெட்டி வாங்கவும் அரசின் தடையேதுமில்லை.

58—

## தொலைக்காட்சிப் பெட்டி வாங்குதல்

**வினா எண் 11274—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, வேசத்திரம் கிராமத்தில் உள்ள மக்களுக்குத் தொலைக்காட்சிப் பெட்டி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஊராட்சிகளுக்குத் தொலைக்காட்சிப் பெட்டி வாங்கி வழங்க அரசுத் திட்டம் ஏதுமில்லை. ஊராட்சியின் நிதிநிலைமைக்கு ஏற்ப, அரசின் விதிமுறைகளுக்கு உட்பட்டு, ஊராட்சியே தொலைக்காட்சிப் பெட்டி வாங்கிக்கொள்ள அரசின் தடையேதுமில்லை.

59—

## குடிநீர் வசதி

**வினா எண் 12690—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சானாகரை பகுதியில் குடிநீர் வசதி செய்து தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**



2002 மே 10]

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சானாகரை பகுதி 430 மக்கள் தொகை உள்ள குடியிருப்பு ஆகும். இப்பகுதியில் இரண்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளும், இந்தியா மார்க்-2 கைப்பம்பு ஒன்றும் நல்ல நிலையில் இயங்கி வருகின்றன. இப்பகுதிக்குப் போதுமான குடிநீர் ஆதாரம் உள்ளதால், மேலும் குடிநீர் வசதி செய்து கொடுக்கப் பரிசீலனை இல்லை.

60—

## குடிநீர் வசதி

**வினா எண் 12704—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், செறுவாவிடுதி வடக்குப் பகுதி மக்களுக்குக் குடிநீர் வசதி செய்து தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், செறுவாவிடுதி ஊராட்சி, 3134 மக்கள் தொகை உடைய ஊராட்சி ஆகும். இவ்வூராட்சியில் அனைத்துப் பகுதிகளும் முழுமையாகப் பயன்பெறும் வகையில் 3.50 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், ஆறு இந்தியா மார்க்-2 கைப்பம்புகளும் அமைக்கப்பட்டு, குடிநீர் வசதி செய்யப்பட்டு குடிநீர்த் தட்டுப்பாடு இல்லாமல் உள்ளது. இதைத் தவிர கூடுதலாகக் குடிநீர் வசதி செய்ய செயற்குறிப்பு ஏதுமில்லை.

61—

## குடிநீரைப் பிரித்து வழங்கும் திட்டம்

**வினா எண் 12714—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஆண்டிக்காடு ஊராட்சியில் சின்ன ஆவுடையார் கோவிலில் இருந்து வரும் குடிநீரை காரியாபுரம் பகுதிக்குப் பிரித்து வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஆண்டிக்காடு ஊராட்சி, காரியாபுரம் பகுதி புதிதாகக் குடியேற்றப்பட்ட இடமாகும். இங்கு 60 குடும்பங்கள் உள்ளன. இவர்களுக்குக் குடிநீர் வசதியானது சின்ன ஆவுடையார் கோவில் பகுதியிலிருந்து வரும் குடிநீரைப் பிரித்து வழங்கத் தற்போது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

62—

## குடிநீர் வசதி

**வினா எண் 12719—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், களத்தூர் ஊராட்சி, நாடங்காடு கிராமத்திற்குக் குடிநீர் வசதி செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், களத்தூர் ஊராட்சி, நாடங்காடு கிராமத்தில் 1568 பேர் மக்கள் தொகை உள்ளனர். இங்கு 60,000 லி. கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட்டு, குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது. மேலும், இப்பகுதியை இரண்டாகப் பிரித்து நாடங்காடு முஸ்லீம் தெருப் பகுதியில் 30,000 லி. கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளதால், இங்கு குடிநீர்ப் பிரச்சினை இல்லை. இதைத் தவிர இங்கு மேலும் குடிநீர் வசதி செய்ய செயற்குறிப்பு ஏதுமில்லை.

63—

## குடிநீர் வசதி

**வினா எண் 12721—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஊமத்தநாடு ஊராட்சி, குப்பத் தேவன் வலசையில் குடிநீர் வசதி செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஊமத்தநாடு ஊராட்சி, குப்பத் தேவன் கிராமத்தில் 14 பொது பீலிகளுடைய ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், ஒரு இந்தியா மார்க்-2 பம்பும் உள்ளது. இக்கிராமத்தில் குடிநீர்த் தட்டுப்பாடு ஏதுமில்லை. தனியார் வீடுகளுக்கும் குடிநீர் இணைப்புத் தரப்பட்டுள்ளது. மேலும், கூடுதல் குடிநீர் வசதி குறித்த செயற்குறிப்பு ஏதுமில்லை.

64—

## குடிநீர்த் திட்டம்

**வினா எண் 12744—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், மேற்குடிக்காடு கிராம மக்களுக்குக் குடிநீர் வசதி செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், மேற்குடிக்காடு கிராமம், புக்கரம்பை ஊராட்சிக்கு உட்பட்டதாகும். இங்கு ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும் ஒரு இந்தியா மார்க்-2 கைப்பம்பும் இயங்கி வருகின்றன. இப்பகுதியில் குடிநீர்த் தட்டுப்பாடு ஏதுமில்லை. கூடுதல் குடிநீர் வசதி தொடர்பாக செயற்குறிப்பு ஏதுமில்லை.

65—

## குடிநீர் வசதி

**வினா எண் 12747—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கஞ்சங்காடு கிராமத்திற்குக் குடிநீர் வசதி செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கஞ்சங்காடு கிராமத்தில் ஏற்கெனவே ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், ஒரு இந்தியா மார்க்-2 கைப்பம்பும் அமைக்கப்பட்டு உள்ளதால், தண்ணீர்ப் பற்றாக்குறை ஏதுமில்லை. இதைத் தவிர, கூடுதலாகக் குடிநீர் வசதி செய்ய அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

66—

## பகுதி நேர நியாய விலைக் கடை

**வினா எண் 8898—திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், தருமபுரி (தாலுக்கா), நல்லம்பள்ளி ஒன்றியத்தில் 575 பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு உட்பட்ட கெட்டுப்பட்டியில் உள்ள கூட்டுறவு அங்காடியில் இருந்து தாதநாய்க்கன் பட்டிக்குப் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், தருமபுரி வட்டம், நல்லம்பள்ளி ஒன்றியத்தில் உள்ள எஸ். 575 பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு



வங்கியினால் நடத்தப்பட்டு வரும், டொக்குபோதனஅள்ளியில் உள்ள, கெட்டுப்பட்டி நியாய விலைக் கடையுடன் இணைக்கப்பட்டுள்ள 790 குடும்ப அட்டைகளிலிருந்து 393 குடும்ப அட்டைகளைப் பிரித்து தாதநாயக்கன்பட்டியில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை 29-10-2001 அன்று துவக்கப்பட்டு, அன்று முதல் செயல்பட்டு வருகிறது.

67—

## புதிய கட்டடம் கட்டுதல்

**வினா எண் 11233—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி அப்பியம்பேட்டை கிராமத்தில் உள்ள நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி சத்திரம் அங்காடியைச் சேர்ந்த கோ. அப்பியம்பேட்டை கிராமத்தில் 15-6-1998 முதல் ஒரு பகுதி நேர அங்காடி செயல்பட்டு வருகிறது. பகுதி நேர நியாயவிலைக் கடை அமைக்கும்பொழுது கடைக்கு வேண்டிய கட்டட வசதியை ஊர்ப் பொது மக்களே செய்து தரவேண்டும் என்ற வரையறையுடன்தான் பகுதி நேர அங்காடிக்குக் கட்டடம் அமைக்கப்படுகிறது. மேலும் அரசுத் திட்டங்களில் வழிவகையில்லாததால் அப்பியம்பேட்டையில் உள்ள பகுதி நேர அங்காடிக்கு அரசு கட்டடம் கட்டித்தர வாய்ப்பில்லை.

68—

## சொந்தக் கட்டடம் கட்டுதல்

**வினா எண் 14178—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கோபாலசமுத்திரம் [2002 மே 10 பேரூராட்சி ஓமநல்லூர் மற்றும் கோபாலசமுத்திரத்தில் இரண்டு நியாய விலைக் கடைகள் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர் 'வார் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நியாய விலைக் கடைகளுக்கு அரசுத் திட்டத்தின்படி கூட்டுறவுத் துறை மூலம் நேரடியாகக் கட்டடங்கள் கட்டும் திட்டம் எதுவும் செயலில் இல்லை. தற்போது மாவட்ட ஊரக வளர்சசி முகமை மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் அரசு நிதியுதவித் திட்டத்தின் கீழ் ஊராட்சிப் பகுதிகளில் மட்டுமே நியாயவிலைக் கடைகளுக்கான கட்டடங்கள் கட்டித் தரப்படுகின்றன. ஓமநல்லூர் மற்றும் கோபால சமுத்திரம் 1 மற்றும் 2 நியாய விலைக் கடைகள் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இருப்பதால், அரசு நிதியுதவித் திட்டத்தின்படி கட்டடங்கள் கட்டித்தர வாய்ப்பு இல்லை. இருப்பினும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் உள்ள நிதியிலிருந்து நியாய விலைக் கடைகளுக்கான கட்டடங்கள் கட்டித்தர இயலுமா என்று ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

69—

## சொந்தக் கட்டடம்

**வினா எண் 14193—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி தொகுதி, வீரவநல்லூர் பேரூராட்சி, வீரவநல்லூர் ஒன்று மற்றும் இரண்டாம் நியாய விலைக் கடைகளுக்கு நடப்பாண்டில் சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?



2002 மே 10]

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால் கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தொகுதி, வீரவநல்லூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி நடத்திவரும் வீரவநல்லூர் 1 மற்றும் வீரவநல்லூர் 2 ஆகிய நியாய விலைக் கடைகள் பேரூராட்சிப் பகுதியில் வாடகைக் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. நியாய விலைக் கடைகளுக்கு அரசு நேரடியாகக் கட்டடங்கள் கட்டித் தருவதில்லை. ஆனால் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் அரசு நிதியுதவி பெறும் வேலைவாய்ப்புத் திட்டங்களின்படி ஊரகப் பகுதியில் உள்ள நியாய விலைக் கடைகளுக்கு மட்டுமே கட்டடங்கள் கட்டித் தரப்படுகின்றன. வீரவநல்லூர் நியாய விலைக் கடைகள் பேரூராட்சிப் பகுதியில் உள்ளதால் மேற்சொல்லப்பட்ட திட்டங்களின்கீழ் கட்டடம் கட்டித் தர வாய்ப்பில்லை.

70—

## பங்க் விநியோகம்

**வினா எண் 14256—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, சித்தூரில் மண்ணெண்ணெய் பங்க் மூலம் விநியோகப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், சித்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி 9 நியாய விலைக் கடைகளை நடத்தி வருகிறது. இவற்றிற்கு 3,462 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. இக்குடும்ப அட்டைகளுக்கான மண்ணெண்ணெய் மொத்தத் தேவை 12,442 லிட்டராகும். அரசு ஆணைகளின்படி மண்ணெண்ணெய் வழங்கும் நிலையம் இலாபகரமாகத் தன்னாற்றல் பெற்றுச் செயல்பட மாதமொன்றுக்கு 50,000 லிட்டர் மண்ணெண்ணெய் விநியோகம்

செய்ய வேண்டுமென உள்ளது. சித்தூர் பகுதியினைச் சுற்றி 2 கி.மீ. தூரத்திற்கு அப்பால்தான் நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருவதால் மேற்கொண்டு குடும்ப அட்டைகள் இணைக்க வாய்ப்பு இல்லை. மேலும், குறைந்த அளவில் குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டால், மண்ணெண்ணெய் வழங்கு நிலையம் இலாபகரமாகச் செயல்பட வாய்ப்பில்லையாதலால், சித்தூர் பகுதியில் மண்ணெண்ணெய் வழங்கும் நிலையம் அமைக்க சாத்தியக்கூறு இல்லை.

71—

## பங்க் விநியோகம்

**வினா எண் 14258—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, இடங்கணசாலைப் பேரூராட்சியில் மண்ணெண்ணெய் பங்க் மூலம் விநியோக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், மகுடஞ்சாவடி ஒன்றியத்தில் இடங்கணசாலைப் பகுதியில் 6 நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றிற்கு இணைக்கப்பட்டுள்ள குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை 7,610 ஆகும். இக்குடும்ப அட்டைகளுக்கான மண்ணெண்ணெய் மொத்தத் தேவை 22,830 லிட்டராகும். அரசு விதிகளின்படி, மண்ணெண்ணெய் வழங்கு நிலையம் இலாபகரமாகத் தன்னாற்றல் பெற்றுச் செயல்பட மாதமொன்றுக்கு 50,000 லிட்டர் மண்ணெண்ணெய் விநியோகம் செய்யப்பட வேண்டும். மேற்கொண்டு குடும்ப அட்டைகள் இணைக்க வாய்ப்பு இல்லை. மேலும், குறைந்த அளவில் குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டால், மண்ணெண்ணெய் வழங்கு நிலையம் இலாபகரமாகச் செயல்பட வாய்ப்பில்லையாதலால், இடங்கணசாலை பேரூராட்சியில் மண்ணெண்ணெய் வழங்கும் நிலையம் அமைக்க சாத்தியக்கூறு இல்லை.



72—

## புதிய பங்க் திறப்பு

**வினா எண் 17139—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, இடங்கணசாலைப் பேரூராட்சியிலும் மற்றும் சித்தூரிலும் உள்ள மக்களுக்கு மண்ணெண்ணெய் பங்க் ஒன்று புதிதாகத் திறக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமல்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) அரசு நிர்ணயித்துள்ள விதிமுறைகளின்படி ஒரு மண்ணெண்ணெய் வழங்கு நிலையம் தற்சார்புடன் இயங்க, அது மாதம் ஒன்றுக்கு 50,000 லிட்டர் வரை மண்ணெண்ணெய் விற்பனை செய்யப்பட வாய்ப்புள்ளதாக இருக்க வேண்டும். அதேபோல், அந்நிலையத்துடன் 2 கிலோ மீட்டர் தூரத்திற்கு மேற்பட்ட பகுதிகளில் உள்ள குடும்ப அட்டைகளை இணைக்கக்கூடாது. ஆனால், எடப்பாடி தொகுதி, இடங்கணசாலை மற்றும் சித்தூர் பகுதிகளின் மாதாந்திர மண்ணெண்ணெய்த் தேவை முறையே, 13,295 லிட்டர் மற்றும் 8,487 லிட்டராக உள்ளதால், இப்பகுதிகளில் மண்ணெண்ணெய் வழங்கு நிலையம் அமைக்க வாய்ப்பில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

73—

## சொந்தக் கட்டடம்

**வினா எண் 13686—திரு. பி. எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி தொகுதி, சேரன்மகாதேவி பேரூராட்சி, சேரன் கோவில்பத்து நியாய விலைக் கடைக்கு நடப்பு நிதியாண்டில் சொந்தக் கட்டடம் கட்ட அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தொகுதி, சேரன்மகாதேவி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி நடத்தும் சேரன்கோவில்பத்து நியாய விலைக் கடை சேரன்மகாதேவி பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள அலுவலக வளர்ச்சிக்கான சொந்தக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. நியாய விலைக் கடைகளுக்கு அரசு நேரடியாகக் கட்டடங்கள் கட்டி முடிக்கும் திட்டம் ஏதுமில்லை. ஆனால் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் ஊராட்சிப் பகுதியில் உள்ள நியாய விலைக் கடைகளுக்கு மட்டுமே கட்டடங்கள் கட்டித் தரப்படுகின்றன. சேரன்கோவில்பத்து நியாய விலைக் கடை பேரூராட்சிப் பகுதியில் செயல்படுவதால் மேற்சொல்லப்பட்ட திட்டத்தின்கீழ் கட்டடம் கட்ட வாய்ப்பில்லை.

74—

## ஆக்கிரமிப்பு நிலம்

**வினா எண் 8059—திருமதி வி. சிவகாமி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாராபுரம் தொகுதி, தாராபுரம் நகரிலுள்ள சி.எஸ்.ஐ. மிஷன் மருத்துவமனைக்குப் பின்புறமாகவும், தெற்குப்புறத்திலுள்ள இரண்டு ஏக்கர் நிலம் ஆக்கிரமித்து உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பொது மக்கள் நலன் கருதி ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாராபுரம் தொகுதி, தாராபுரம் நகரிலுள்ள சி.எஸ்.ஐ. மிஷன் மருத்துவமனைக்குப் பின்புறமாகவும், தெற்குப் புறத்திலுள்ள இரண்டு ஏக்கர் நிலத்தில் ஆக்கிரமிப்புகள் ஏதுமில்லை.



75—

## பட்டா வழங்கும் திட்டம்

**வினா எண் 15643—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி தொகுதி, நல்லாட்டூர் கிராமத்தில் வசிக்கும் நூற்றுக்கு மேற்பட்ட முத்திரையர் சமூக மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதி, நல்லாட்டூர் கிராமத்தில் வசிக்கும் நூற்றுக்கு மேற்பட்ட முத்திரையர் சமூக மக்கள் வீட்டுமனைப் பட்டா கேட்டு விண்ணப்பிக்கும் பட்சத்தில் வீட்டுமனைப் பட்டா கோருபவர்களின் தகுதியின் அடிப்படையிலும், வீட்டுமனைப் பட்டா கோரும் நிலத்தின் தன்மையின் அடிப்படையிலும் வீட்டுமனைப் பட்டா வழங்க மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுப்பார்.

76—

## வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 15871—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி தொகுதி, திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், கடம்பத்தூர் ஒன்றியம், உளுந்தை கிராமத்தில் வாழும் மக்கள் 60 பேருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருத்தணி தொகுதி, திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், கடம்பத்தூர் ஒன்றியம், உளுந்தை கிராமத்தில் வாழும் மக்கள் 60 பேர் வீட்டுமனைப் பட்டா கோரி விண்ணப்பிக்கும் படசத்தில் வீட்டுமனைப் பட்டா கோருபவர்களின் தகுதியின் அடிப்படையிலும், வீட்டுமனைப் பட்டா கோரும் நிலத்தின் தன்மையின் அடிப்படையிலும் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க மாவட்ட ஆட்சியரால் நடவடிக்கை எடுக்கப்படும்.

77—

## விட்டுமனைப் பட்டா வழங்குதல்

**வினா எண் 15872—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், திருவாலங்காடு ஒன்றியம், பொன்பாடியில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், திருவாலங்காடு ஒன்றியம், பொன்பாடியில் வசிக்கும் மக்கள் இலவச வீட்டுமனைப் பட்டா கேட்டு விண்ணப்பிக்கும் பட்சத்தில், இலவச வீட்டுமனைப் பட்டா கோருபவர்களின் தகுதியின் அடிப்படையிலும், இலவச வீட்டுமனைப் பட்டா கோரும் நிலத்தின் தன்மையின் அடிப்படையிலும் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க மாவட்ட ஆட்சியரால் நடவடிக்கை எடுக்கப்படும்.



78—

## இலவச விட்டுமனைப் பட்டா

**வினா எண் 15876—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், திருவாலங்காடு ஒன்றியம், ஆற்காடு குப்பம் பப்படா காலனி பொது மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், திருவாலங்காடு ஒன்றியம், ஆற்காடு குப்பம், பப்படா காலனி பொது மக்கள் பட்டா கேட்டு விண்ணப்பிக்கும் பட்சத்தில், பட்டா கோருபவர்களின் தகுதியின் அடிப்படையிலும், பட்டா கோரும் நிலத்தின் தகுதியின் அடிப்படையிலும் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க மாவட்ட ஆட்சியரால் நடவடிக்கை எடுக்கப்படும்.

79—

## புதிய பட்டா வழங்குதல்

**வினா எண் 15877—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், திருவாலங்காடு ஒன்றியம், பூனிமாங்காடு சந்தியா நகர் மக்கள், நீண்ட காலமாக வசிப்பவர்களுக்குப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், திருவாலங்காடு ஒன்றியம், பூனிமாங்காடு சந்தியா நகரில் நீண்ட காலமாக வசிப்பவர்கள் பட்டா கேட்டு விண்ணப்பிக்கும் பட்சத்தில்

225169. சென்னை-600 009

பட்டா கோருபவர்களின் தகுதியின் அடிப்படையிலும், பட்டா கோரும் நிலத்தின் தகுதியின் அடிப்படையிலும் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க மாவட்டாட்சியரால் நடவடிக்கை எடுக்கப்படும்.

**80—**

## இலவச வீட்டுமனை

**வினா எண் 15878—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், திருவாலங்காடு ஒன்றியம், காவேரிராசபுரம் கிராம மக்களுக்கு இலவச வீட்டுமனை வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், திருவாலங்காடு ஒன்றியம், காவேரிராசபுரம் கிராம மக்கள் இலவச வீட்டுமனை கேட்டு விண்ணப்பிக்கும் பட்சத்தில், இலவச வீட்டுமனை ஒப்படை கோருபவர்களின் தகுதியின் அடிப்படையிலும், இலவச வீட்டுமனை ஒப்படை கோரும் நிலத்தின் தகுதியின் அடிப்படையிலும் இலவச வீட்டுமனை ஒப்படை வழங்க மாவட்ட ஆட்சியரால் நடவடிக்கை எடுக்கப்படும்.

**81—**

## இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 15879—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், திருவாலங்காடு ஒன்றியம், ஆற்காடு குப்பம் கிராமம், திடீர் நகர் மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், திருவாலங்காடு ஒன்றியம், ஆற்காடு குப்பம் கிராமம் திடீர் நகர் மக்கள் பட்டா கேட்டு விண்ணப்பிக்கும் பட்சத்தில், பட்டா கோருபவர்களின் தகுதியின் அடிப்படையிலும், பட்டா கோரும் நிலத்தின் தகுதியின் அடிப்படையிலும் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க மாவட்ட ஆட்சியரால் நடவடிக்கை எடுக்கப்படும்.

**82—**

## இலவச வீட்டுமனை

**வினா எண் 15880—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், கடம்பத்தூர் ஒன்றியம், கடம்பத்தூர் ராஜாஜி சாலையில் உள்ள மக்களுக்கு அரசு இலவச வீடு அல்லது வீட்டுமனை வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், கடம்பத்தூர் ஒன்றியம், கடம்பத்தூர் ராஜாஜி சாலையில் உள்ள மக்கள் இலவச வீட்டுமனை ஒப்படை கேட்டு விண்ணப்பிக்கும் பட்சத்தில் வீட்டுமனை ஒப்படை கோருபவர்களின் தகுதியின் அடிப்படையிலும், வீட்டுமனை கோரும் நிலத்தின் தகுதியின் அடிப்படையிலும் இலவச வீட்டுமனை ஒப்படை வழங்க மாவட்டாட்சியரால் நடவடிக்கை எடுக்கப்படும்.

**83—**

## இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 15881—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், கடம்பத்தூர் ஒன்றியம், பேரம்பாக்கம் எம்.ஜி.ஆர். நகர் பகுதியில் வசிப்பவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், கடம்பத்தூர் ஒன்றியம், பேரம்பாக்கம் எம்.ஜி.ஆர். நகர் பகுதியில் வசிப்பவர்கள் பட்டா கேட்டு விண்ணப்பிக்கும் பட்சத்தில் பட்டா கோருபவர்களின் தகுதியின் அடிப்படையிலும், வீட்டுமனைப் பட்டா கோரும் நிலத்தின் தகுதியின் அடிப்படையிலும் வீட்டுமனைப் பட்டா வழங்க மாவட்ட ஆட்சியரால் நடவடிக்கை எடுக்கப்படும்.

**84—**

## விவசாய உர மானியம்

**வினா எண் 4053—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001 ஆம் ஆண்டு தமிழகத்திலுள்ள விவசாயிகளுக்கு அளிக்கப்படும் உரங்களுக்கு எவ்வளவு மானியம் தமிழக அரசு வழங்கி வருகிறது?

(ஆ) இந்த மானியத்தில் மத்திய அரசின் பங்கு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) விவசாயிகளுக்கு உர விநியோகத்திற்கான மானியம் மத்திய அரசு வழங்குகிறது. மாநில அரசினால் வழங்குவதில்லை.

(ஆ) கட்டுப்பாடு மற்றும் கட்டுப்பாடு நீக்கம் செய்யப்பட்ட உரங்களுக்கு வழங்கப்படும் சலுகைத் தொகை முழுவதையும் மைய அரசே ஏற்கிறது.

*கட்டுப்பாடு உரங்கள்*

கட்டுப்பாடு உரம் என்பது நியாயமான விலையில் உரங்கள் சீராக



விநியோகம் செய்யும் பொருட்டு மத்திய அரசு அதிகபட்ச விலையை
நிர்ணயம் செய்கிறது. தற்போது யூரியா, சிங்க்கேட்டட் யூரியா,
அன்ஹைட்ரஸ் அம்மோனியா ஆகியவை கட்டுப்பாடு உரங்களாக
அங்கீகரிக்கப்பட்டு, அதில் யூரியா 85% அளவில்
உபயோகப்படுத்தப்படுகிறது. இந்தக் கட்டுப்பாடு, உர நடமாட்டக்
கட்டுப்பாடு ஆணை 1973-க்குள் செயல்படுகிறது. இதன்படி, ஒரு
மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு யூரியா உரம் எடுத்துச்
செல்ல கட்டுப்பாடு உள்ளது. 2000-2001 ஆம் ஆண்டில் யூரியா
உரத்திற்கு (டன் ஒன்றுக்கு) ரூ.4600/- என மத்திய அரசு விலை
நிர்ணயம் செய்துள்ளது. இவ்விலையின் அடிப்படையில் 2 சதவீதம்
விற்பனை வரி சேர்த்து அதிகபட்ச விலையாக ரூ.4688/- என மாநில
அரசால் நிர்ணயம் செய்யப்பட்டு யூரியா (டன் ஒன்றுக்கு) தமிழ்நாட்டில்
விற்பனை செய்யப்படுகிறது.

கட்டுப்பாடுடைய உரங்களுக்கான விலையினை மத்திய அரசு
நிர்ணயம் செய்கின்றது. இதில் 8% யூரியா உரமே பயன்பாட்டிலுள்ளது.
இந்தியாவிலுள்ள அனைத்து விவசாயிகளுக்கும் ஒரே சீரான விலை
கிடைக்கும்படி மத்திய அரசு விலை நிர்ணயம் செய்கின்றது.
2000-2001-ல் மத்திய அரசு யூரியாவின் விலையினை டன் ஒன்றுக்கு
ரூ.4600/- என நிர்ணயம் செய்துள்ளது. உற்பத்தி விலைக்கும், விற்பனை
விலைக்கும் உள்ள வித்தியாசத் தொகையுடன் உற்பத்திச் செலவின்
12% தொகையைச் சேர்த்து மத்திய அரசு கட்டுப்பாடுடைய உரங்களுக்கு
மானியமாக வழங்குகிறது. விலைக் கட்டுப்பாட்டை மத்திய அரசே
தக்க வைத்துள்ளது. விற்பனை விவரங்களை உற்பத்தியாளர்களிடமிருந்து
நேரடியாகப் பெற்று மானியத் தொகையை மத்திய அரசே நேரடியாகக்
கொடுக்கிறது. இதில் மாநில அரசுகளுக்கு எந்தப் பணியும் இல்லை.

மேலும், தமிழகத்திற்கு 1999-2000 ஆம் ஆண்டில் 8,71,339 மெட்ரிக்
டன் யூரியாவும், 2000-2001 ஆம் ஆண்டில் 8,67,774 மெட்ரிக் டன்
யூரியாவும் மத்திய அரசினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
1999-2000-ல் மத்திய அரசு யூரியாவிற்கான மானியம் டன்னுக்கு
சராசரி ரூ.4377/- ஆகவும் 2000-2001-க்கு சராசரி ரூ.4831/- ஆகவும்
நிர்ணயம் செய்துள்ளது. இதன்படி, தமிழகத்தைப் பொறுத்தமட்டில்
1999-2000 ஆம் ஆண்டில் தோராயமாக ரூ.381.39 கோடியும்,
2000-2001 ஆம் ஆண்டில் தோராயமாக ரூ.419.22 கோடியும் மத்திய
அரசு யூரியாவிற்கான மானியமாக வழங்கும்.

கட்டுப்பாடு நீக்கம் செய்யப்பட்ட உரம்

கட்டுப்பாடு நீக்கம் செய்யப்பட்ட உரத்திற்கு உற்பத்தி மற்றும் விநியோகம் ஆகியவை மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இல்லாமல் உற்பத்தி செய்யும் நிறுவனங்களே விற்பனை செய்யும் விலையினையும், விநியோகிக்கும் மாநிலத்தையும் தீர்மானிக்கலாம். கட்டுப்பாடு நீக்கம் செய்யப்பட்ட உரங்கள், டை-அமோனியம் பாஸ்பேட் (DAP), மியூரியேட் ஆஃப் பொட்டாஷ் (MOP), சிங்கிள் சூப்பர் பாஸ்பேட் (SSF) மற்றும் கலப்பு உரங்களாகும். இருப்பினும் இவ்வுரங்களை விவசாயிகளுக்கு சீராக, குறைந்த விலையில் கிடைக்க வேண்டுமென்பதற்காக இவ்வுரங்களுக்கும் மத்திய அரசு (உள்ளூர் வரி அல்லாது) விலை நிர்ணயம் செய்கிறது. அதனடிப்படையில் மாநில அரசு 4 சதம் விற்பனை வரியையும் சேர்த்து விலை நிர்ணயம் செய்கிறது. கட்டுப்பாடு நீக்கம் செய்யப்பட்ட உரங்களுக்கு சலுகைத் தொகை வழங்கும்போது மத்திய அரசு உற்பத்திச் செலவினைக் கருத்திற்கொள்ளாது ஒட்டுமொத்தமாக விற்பனை செய்யும் ஒரு மெட்ரிக் டன்னுக்கு என சலுகைத் தொகை நிர்ணயிக்கிறது. 2000-2001 ஆம் ஆண்டில் ஒரு மெட்ரிக் டன்னுக்கு ரூ.950/-ம், ரூ.2000/-ம், முறையே இறக்குமதி செய்த உரங்களுக்கும், உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட உரங்களுக்கும் நிர்ணயம் செய்யப்பட்டது. இந்தக் காலத்தில் DAPயின் அதிகபட்ச விலை ஒரு மெட்ரிக் டன்னுக்கு ரூ.8900 ஆக நிர்ணயிக்கப்பட்டது. கட்டுப்பாடு மற்றும் கட்டுப்பாடு நீக்கம் செய்யப்பட்ட உரங்களுக்கு வழங்கப்படும் சலுகைத் தொகை முழுவதையும் மைய அரசே ஏற்கிறது.

மாநில அரசு உற்பத்தியாளர்களிடமிருந்து கட்டுப்பாடு நீக்கம் செய்யப்பட்ட உரம் விவரம், மாதவாரியாக விநியோகிக்கப்பட்ட உரங்களுக்கான உரச் சலுகைப் பிரேரணைகளை ஆய்வு செய்து மைய அரசுக்குச் சிபாரிசு செய்கின்றது. இந்த உரங்களுக்கான சலுகைத் தொகையினை சிபாரிசு செய்யப்படும் அளவிற்கேற்ப மைய அரசு கணக்கீடு செய்து உர உற்பத்தியாளர்களுக்கும் மற்றும் இறக்குமதியாளர்களுக்கும் நேரடியாக இச்சலுகைத் தொகையினை வழங்குகின்றது. மைய அரசிற்கு, வேளாண் இயக்ககம் மூலம் 1999-2000 ஆம் ஆண்டில் உரச் சலுகையாகப் பல்வேறு உர உற்பத்தி மற்றும் இறக்குமதி நிறுவனங்களுக்கு ரூ.380.01 கோடியும், 2000-2001 ஆம் ஆண்டில் (ஏப்ரல் 2000 முதல் செப்டம்பர் 2000 முடிய பெறப்பட்ட பட்டியல்படி) ரூ.119.24 கோடியும் வழங்க வேண்டிப் பரிந்துரை செய்து அனுப்பப்பட்டுள்ளது. இவ்வாறு வழங்கப்படும் உரச் சலுகையினை மைய அரசே முழுமையாக ஏற்கிறது. இதில் மாநில அரசின் பங்கு எதும் இல்லை.





1999-2000 மற்றும் 2000-2001 ஆண்டுகளின் கட்டுப்பாடு மற்றும் கட்டுப்பாடு நீக்கப்பட்ட உரங்களுக்கு அனுமதித்த உரச் சலுகை விவரம் பின் வருமாறு:

| உரத்தின் பெயர் | 1999-2000 மானிய வீதம் (மெ. டன்) (ரூபாயில்) | 1999-2000 அளவு (மெ. டன்) | 1999-2000 மானியத் தொகை (ரூ.கோடி) | 2000-2001 மானிய வீதம் (மெ. டன்) (ரூபாயில்) | 2000-2001 அளவு (மெ. டன்) | 2000-2001 மானியத் தொகை (ரூ.கோடி) |
|---|---|---|---|---|---|---|
| கட்டுப்பாடு உரங்கள் | | | | | | |
| யூரியா | 4377 | 8,74,339 | 625.91 | 4831 | 8,67,774 | 756.04 |
| கட்டுப்பாடற்ற உரங்கள் | | | | | | |
| 1. டை-அமோனியம் பாஸ்பேட் (உள்ளூர்) | 4230 | 2,30,662.751 | 96.610 | 4037.5 | 2,23.576.882 | 90.847 |
| 2. டை-அமோனியம் பாஸ்பேட் (இறக்குமதி) | 2790 | 31,156.792 | 11.720 | 1625 | 18,952.6325 | 2.895 |
| 3. மியூரியேட்-ஆஃப் பொட்டாஷ் | 3200 | 3,81,486.359 | 134.650 | 3087.5 | 2.61,444.621 | 82.162 |
| 4. சூப்பர் பாஸ்பேட் | 880 | 96,720.519 | 8.710 | 800 | 47.744.775 | 3.849 |
| கூட்டு உரங்கள் | | | | | | |
| 5. 20:20:0 | 2643.2 | 1,63,880.834 | 44.330 | 2523.25 | 2.11,018.010 | 50.746 |
| 6. 16:20:20 | 2378.8 | 47,224.417 | 11.420 | 2270.75 | 22,649.340 | 2.640 |
| 7. 15:15:15 | 2782.6 | 10,388.850 | 2.950 | 2664 | 4,945.900 | 1.250 |
| 8. 17:17:17 | 3145.8 | 1,77,351.785 | 57.100 | 3019.25 | 1,44,166.888 | 42.054 |
| 9. 19:19:19: | 3530.6 | — | — | 3374.5 | 3,949.750 | 1.290 |
| 10. 14:28:14 | 3522 | 1,129.170 | 0.410 | 3369.25 | 962.000 | 0.327 |
| 11. 10:26:26 | 3765.6 | 31,467.810 | 12.110 | 3608.25 | 25,386.901 | 6.410 |

85—

## தொட்டில் குழந்தைகள்

**வினா எண் 3434—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2000-2001 ஆம் நிதியாண்டில் சேலத்தில் அரசு தொட்டில் குழந்தைகள் இல்லத்தில் எத்தனை பெண் குழந்தைகள் வளர்க்கப்பட்டனர்?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

2000-2001 ஆம் நிதியாண்டில் சேலம் தொட்டில் குழந்தை இல்லத்தில் 6 குழந்தைகள் பெறப்பட்டன. அதில் ஒரு குழந்தை பெற்றோர் வசமும், நான்கு குழந்தைகள் ஆனந்தா ஆசிரமம், ஓசூர் என்ற தத்து நிறுவனத்திலும், ஒரு குழந்தை, குழந்தைகள் குடும்பம், கோவை என்ற தத்து நிறுவனத்திடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆக, 2000-2001 ஆம் நிதியாண்டில் ஆறு குழந்தைகள் பெறப்பட்டன என்ற விவரத்தினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

86—

## கொடி நாள்

**வினா எண் 1747—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1999-2000, 2000-2001 ஆம் ஆண்டு கொடி நாள் மூலம் எவ்வளவு தொகை வசூலானது?

(ஆ) இத்தொகையினை மேலும் கூடுதலாக வசூலிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**



(அ) கொடி நாள் மூலம் வசூல் ஆன தொகை

1999-2000 ரூ.5,56,92,821/-

2000-2001 ரூ.6,65,82,298/-

(ஆ) ஒவ்வொரு ஆண்டும் வசூல் இலக்கு அதிகரிக்கப்பட்டு வருகிறது. கொடி நாள் வசூலில் இந்தியாவிலேயே தொடர்ந்து தமிழகம் முதலிடம் வகிக்கிறது. சிறப்பாக வசூல் செய்யும் அலுவலர்களுக்குப் பதக்கமும், சான்றும் வழங்கி ஊக்குவிக்கப்படுகிறது.

87—

## மானியக் கடன்

**வினா எண் 3448—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, வீரப்பம்பாளையத்தில் அருந்ததியர்களுக்குக் கற்றாழை நார் எடுக்க மானியத்துடன் கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

தாட்கோ திட்டங்களில் ஒன்றான தனி நபர் தொழில் முனைவோர் திட்டத்தின்கீழ் வருவாய் ஈட்டித் தரக்கூடிய எந்தத் திட்டத்திற்கும் கடன் மற்றும் மானியம், வங்கிக் கடன் ஆகியவை வழங்க வழிவகைகள் உள்ளன.

மேலும், கற்றாழை நார் எடுக்கும் திட்டத்திற்கான திட்ட மதிப்பீடு (Project Report) வங்கிகளால் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும் பட்சத்தில் இந்தத் திட்டத்திற்கும் கடனுதவி வழங்கப்படும்.

88—

## பணி நியமனங்கள்

**வினா எண் 3469—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001 ஆம் ஆண்டில் மார்ச் மாதம் வரை அரசுப் பணிகளில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இனத்தவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் எத்தனை பணியிடங்கள் இன்னும் நிரப்பப்படாமல் உள்ளன?

(ஆ) அவைகளை உடனடியாக நிரப்ப அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ)

**தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு ஆணையம்:** 2000-2001 ஆம் ஆண்டில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் பணி நியமனங்கள் செய்திட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்ட பின்வரும் பணியிடங்கள், அந்தந்தப் பதவிக்கான கல்வித் தகுதி உடையவர் கிடைக்கப் பெறாமையால் நிரப்பப்படாமல் உள்ளன. இப்பணியிடங்கள் அடுத்த தேர்வுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, தகுதிபெறும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இன பணி நாடுநர்களைக் கொண்டு நிரப்பப்படும்.

| பதவியின் பெயர். | நிரப்பப்படாத பணியிடங்களின் எண்ணிக்கை. | | |
|---|---|---|---|
| | ஆதி திராவிடர். | பழங்குடியினர் | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) |
| 1. உதவி பல் மருத்துவர் | .. | 2 | 2 |
| 2. உதவி மருத்துவர் (ஆயுர்வேதம்) | 1 | .. | 1 |
| (யுனானி) | 3 | .. | 3 |
| 3. வட்டார சுகாதார புள்ளி யியலர் | .. | 1 | 1 |
| 4. உரிமையியல் நீதிபதி | 3 | 2 | 5 |
| 5. குரூப் 5 ஏ பணியிடங்கள் | 21 | 2 | 23 |
| **தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம்** | | | |
| 6. இரண்டாம் நிலைக் காவலர்கள் (ஆண்கள்) | 630 | 35 | 665 |

குறிப்பு: தகுதியுடையோரைத் தேர்வு செய்யும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.



| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| **ஆசிரியர் தேர்வு வாரியம்** | | | |
| 7. பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் | 9 | 18 | 27 |
| 8. முதுநிலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் | 17 | 18 | 35 |

குறிப்பு: தகுதி வாய்ந்தவர்கள் இன்மையால் இப்பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன.

89—

## பேருந்து வசதி

**வினா எண் 9691—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரம், பாப்பாரப்பட்டி வழியாக பிக்கிலி-கொல்லப்பட்டிக்குக் கூடுதலாகப் பேருந்து இயக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரம். பாப்பாரப்பட்டி வழியாக பிக்கிலி-கொல்லப்பட்டி வரை நகரப் பேருந்து வசதி கோரியுள்ள வழித்தடத்தின் நீளம் 39 கி.மீ. ஆகும். தற்போதுள்ள அரசு ஆணைப்படி யாதொரு பேருந்து வசதியும் பெறாத 35 கி.மீ. தூரத்திற்கு உட்பட்ட கிராமங்களுக்கு மட்டுமே நகரப் பேருந்து வசதி செய்திட இயலும். ஆனால் பேருந்து வசதி கோரியுள்ள இத்தடத்தில் பெண்ணாகரம் முதல் பாப்பாரப்பட்டி வரையும், பாப்பாரப்பட்டி முதல் பிக்கிலி-கொல்லப்பட்டி வரையும் ஏற்கெனவே போதுமான அளவு பேருந்து வசதியுள்ளது. இந்நிலையில் கோரியுள்ள வழித்தடத்தில் நேரடி நகரப் பேருந்து இயக்கிட இயலாத நிலை உள்ளது.

90—

## சுய வரி விதிப்புத் திட்டம்

**வினா எண் 4822—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வணிக வரித் துறையில் சுய வரி விதிப்புத் திட்டத்தின்கீழ், ஒரு கோடி ரூபாய்க்கும் குறைவாக விற்பனை செய்த வணிகர்களுக்கு அரசு சலுகை அளித்த பின்பு 1998-99, 1999-2000 மற்றும் 2000-2001 ஆம் ஆண்டுகளுக்கான வரி வருமானம் எவ்வளவு?

(ஆ) இந்த சுய வரி விதிப்பினால் அரசுக்கு ஏற்பட்ட வரி இழப்பு எவ்வளவு? அதைச் சரிசெய்ய அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) சுய வரி விதிப்புத் திட்டம் கடந்த 20-06-2000 அன்று அறிமுகப்படுத்தப்பட்டு, 26-07-2000-லும், 07-12-2000-லும் தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. இத்திட்டத்தில் 1999-2000 மற்றும் 2000-2001 ஆகிய ஆண்டுகளுக்கான வரி விதிப்பு உள்ளடங்கும். இதனால் அரசுக்குக் கிடைத்த வருவாய் விவரம் பின்வருமாறு:

| வருவாய். | 1999-2000 | 2000-2001 |
|---|---|---|
| | (ரூபாய் | கோடிகளில்.) |
| தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் 1959-ன்கீழ் மொத்த வருவாய் | 6,185 | 7,354 |
| தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் 1959-ன் கீழ் ரூ. 1.00 கோடிக்கு கீழ் விற்றுமுதல் கொண்ட வணிகர்கள் மூலம் கிடைக்கப்பெற்ற வருவாய் | 858 | 759 |



(ஆ) இத்திட்டத்தின் தனித்தன்மை மூலம் அரசின் வருவாய் குறித்த போக்கினை அளவிடுவது கடினம். அரசின் வருவாயினைப் பெருக்கும் பொருட்டு ஏற்கெனவே அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சுய வரி விதிப்புத் திட்டத்தின் குறைகளை ஆய்வு செய்து 2002-2003 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் சில மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.

91—

## அலுவலக மாற்றம்

**வினா எண் 9091—திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாபநாசம் மலைப் பகுதிகளில் தான் "முண்டந்துறை புலிகள் காப்பகம்" இருப்பதால் அதற்குரிய கள இயக்குநர் முதலான அலுவலகங்களை விக்கிரமசிங்கபுரம், பாபநாசம் பகுதிக்கு மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) களக்காடு வன உயிரினச் சரணாலயம் மற்றும் முண்டந்துறை வன உயிரின சரணாலயம் ஆகியவற்றை உள்ளடக்கிய புலிகள் காப்பகத்தின் கள இயக்குநர் அலுவலகம், திருநெல்வேலியிலும், துணை இயக்குநர் அலுவலகம் அம்பாசமுத்திரத்திலும் இயங்கி வருகின்றன. அந்தப் புலிகள் காப்பகத்தினை நிர்வகிக்க தற்போது இயங்கிவரும் இடங்களே வசதியாக உள்ளதால் அந்த அலுவலகங்களை விக்கிரமசிங்கபுரம், பாபநாசம் பகுதிக்கு மாற்ற வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. அவ்வாறு மாற்றினால் நிர்வாக வசதிக் குறைவு ஏற்படும்.

(ஆ) வினா எழவில்லை.

92—

## சாலை வசதி

**வினா எண் 13421—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பிக்கிலி ஊராட்சி, மலையூர் கிராமத்திற்கு வனத் துறை மூலம் சாலை வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பாப்பாரப்பட்டியிலிருந்து மலையூருக்குச் செல்ல மொத்தமுள்ள 5.50 கி.மீ. நீளப் பாதையில் ஏற்கனவே 3.0 கி.மீ. நீளத்திற்குப் போடப்பட்ட கப்பிப் பாதையைத் தவிர்த்து, மீதமுள்ள 2.50 கி.மீ. நீளத்துக்குப் பாதை அமைக்கவேண்டியுள்ளது. வனத் துறை சார்ந்த சாலைப் பணிகளுக்கென ஒதுக்கப்படும் சொற்ப நிதியைக் கொண்டு இச்சாலையை மேம்படுத்த இயலாத நிலை உள்ளது. எனவே, இப்பாதை அமைக்க இதர துறைகளின் திட்டங்களில் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை/தொகுதி மேம்பாட்டுத் திட்டம் போன்றவை) நிதி ஒதுக்கீடு செய்யும் பட்சத்தில், வனத் துறை மூலமாகவே இச்சாலை அமைக்கும் பணியை மேற்கொள்ள இயலும்.

93—

## சாலை வசதி

**வினா எண் 13422—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, வட்டுவனஅள்ளி ஊராட்சி, கோட்டூர் மலை கிராமத்திற்கு வனத் துறை மூலம் சாலை வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?



(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் தொகுதியைச் சார்ந்த வட்டுவன அள்ளி ஊராட்சியிலுள்ள கோட்டூர் மலைக் கிராமத்திற்குச் செல்ல 'கன்சால்பைல்' கிராமத்திலிருந்து 4.0 கி.மீ. தூரத்துக்குக் கால்தடமும், 'வெள்ளரம்பட்டு' கிராமத்திலிருந்து கோட்டூர் மலைக் கிராமத்துக்கு 7.0 கி.மீ. தூரத்திற்குக் கால்தடமும் உள்ளது. இவ்விரு கால்தடங்களும் தருமபுரி வனக் கோட்டத்தைச் சார்ந்த கெதகுழி காப்புக் காட்டில் அமைந்துள்ளது. கோட்டூர்மலை கிராமம், மலையின் உச்சியில் அமைந்துள்ள ஒரு குக்கிராமமாகும். இக்கிராமத்தில் சுமார் 75 வீடுகளில் சுமார் 300 பேர் வசித்து வருகின்றனர். கால்தடம் செல்லும் இருமருங்கிலும் அடர்ந்த வனப் பகுதி உள்ளது. வன உயிரினங்களும் இங்கு அதிக அளவில் காணப்படுகின்றன. இந்த கால்தடத்தினை அகலப்படுத்தி சாலையாக மாற்றும் பட்சத்தில் கூடுதலாக வன நிலம் தேவைப்படுவதுடன், அதிக அளவில் மரங்கள் வெட்ட நேரிடும். தவிரவும், வன உயிரினப் பாதுகாப்புக்கு அபாயமும் ஏற்படும். வன நிலத் தேவைக்கு வனப் பாதுகாப்புச் சட்டம் 1980-ன்படி மைய அரசின் முன் அனுமதி பெறவேண்டும். எனவே, இங்கு சாலை வசதி செய்ய அரசுக்கு உத்தேசம் இல்லை.

94—

## தொழிலகங்கள் துவக்குதல் மானியத் தொகை

**வினா எண் 9511—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் 2000-2001 ஆம் ஆண்டில் மாவட்டத் தொழில் மையங்கள் மூலம் வழங்கப்பட்ட மானியத் தொகை மற்றும் துவங்கப்பட்ட தொழில்களின் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் 2000-2001 ஆம் ஆண்டில் மாவட்டத் தொழில் மையம் மூலம் மானியத் தொகையாக ரூ.20,83,000/- வழங்கப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டத்தில் 2000-2001 ஆம் ஆண்டில் 1390 தொழிலகங்கள் துவங்கப்பட்டுள்ளன. விவரங்கள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

## இணைப்பு

**2000-2001 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் தொடங்கப்பட்ட தொழில்களின் விவரம்:**

| வ.எண். | தொழிலின் பெயர். | அலகுகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| 1. | தையல் (பணி மட்டும்) (Job work only) | 1330 |
| 2. | வீட்டு உபயோகப் பொருட்களைப் பழுதுபார்த்தல் | 20 |
| 3. | பொது பொறியியல் பணிகள் | 1 |
| 4. | வீணாகும் பிளாஸ்டிக் பொருட்களை உருமாற்றம் செய்தல் | 1 |
| 5. | மரம் அறுத்தல் | 2 |
| 6. | புத்தகம் பைண்டிங் செய்தல் | 10 |
| 7. | மாவு மற்றும் நெல், உமி நீக்குதல் | 7 |
| 8. | கொலுசு செய்தல் | 3 |
| 9. | இரும்பு நாற்காலி | 1 |
| 10. | குழல் அப்பளம் | 1 |
| 11. | கொசுவலை | 2 |
| 12. | கணினி மென்பொருள் தயாரித்தல் மற்றும் தகவல் தொகுப்பு | 2 |
| 13 | சிமெண்ட், செங்கல் | 1 |
| 14. | டோலமைட் போன்ற தாதுப் பொருட்கள் உடைத்தல் | 1 |
| 15. | மெழுகுவர்த்தி | 1 |
| 16. | பி.வி.சி. பைப்புகள் | 2 |
| 17 | பருப்பு உடைத்தல் | 1 |
| 18 | இயந்திரம் மூலம் கோரைப்பாய் முடைதல் | 2 |
| 19. | மரவள்ளிக் கிழங்கு மாவு தயாரித்தல் | 1 |
| 20. | தடையில்லா மின் வழங்கு சாதனம் (UPS) அவசர காலத்திற்கான விளக்கு (Emergency lamp) | 1 |
| | மொத்தம் | **1390** |



**95—**

### கதர் கிராமத் தொழில்

**வினா எண் 13262—திரு. பி.எச் பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி பேரூராட்சியில் விளிம்புத் தொகைத் திட்டத்தின் கீழ் கதர் கிராமத் தொழிலை மேம்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தில் விளிம்புத் தொகைத் திட்டம், தற்போது அரசுடைமையான 27 வங்கிகள் மூலமாகச் செயல்பட்டு வருகிறது. சேரன்மகாதேவி பேரூராட்சியில் மக்கள் தொகை 20,000-க்குக்கீழ் இருப்பின், அப்பேரூராட்சியில் உள்ள நபர்கள் கிராமத் தொழில் செய்ய அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளை அணுகி விளிம்புத் தொகைத் திட்டத்தின்கீழ் நிதியுதவி பெற்றுக் கொள்ள வகையுள்ளது.

**96—**

### புதிய வீடுகள்

**வினா எண் 1373—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி வீட்டு வசதி வாரியத்தில் 2000-2001 முடிய கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் எத்தனை?

(ஆ) அதில் குறைந்த வருவாய்ப் பிரிவு, நடுத்தர வருவாய்ப் பிரிவு, உயர்தர வருவாய்ப் பிரிவு வீடுகள் எத்தனை?

(இ) அவைகளில் விற்பனை இல்லாமல் இருக்கும் வீடுகள் எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

| | |
|---|---|
| (அ) சேலம் மாவட்டம் எடப்பாடியில் 2000-2001 முடிய கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் | 714 குடியிருப்புகள் |
| (ஆ) குறைந்த வருவாய்ப் பிரிவு வீடுகள் | 101 குடியிருப்புகள் |
| நடுத்தர வருவாய்ப் பிரிவு வீடுகள் | 224 குடியிருப்புகள் |
| உயர்தர வருவாய்ப் பிரிவு வீடுகள் | 131 குடியிருப்புகள் |
| பொருளாதாரத்தில் நலிந்தோர்க்கான குடியிருப்புகள் | 258 குடியிருப்புகள் |
| மொத்தம் | 714 குடியிருப்புகள் |
| (இ) விற்பனை ஆகாமல் இருக்கும் வீடுகள் | 26 (ம.வ.பி.) |
| | 16 (உ.வ.பி.) |
| மொத்தம் | 42 |

97—

## புதிய குடியிருப்பு கட்டுதல்

**வினா எண் 1548—திருமதி கே. பவானி கருணாகரன்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் நகரிலுள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் குடியிருப்புப் பகுதியில் மீதியாக உள்ள இடத்தில் மீண்டும் புதிய குடியிருப்பு கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

98—

## விற்பனை ஆகாத வீடுகள்

**வினா எண் 6674—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் 2-வது தொகுதி, மிட்டா அய்யம்பெருமாள்பட்டி மற்றும் கன்னங்குறிச்சி கிராமத்தில் 1981-ல் நில ஆர்ஜிதம் செய்து கட்டப்பட்ட வீடுகளில் எத்தனை வீடுகள் விற்பனை ஆகாமல் உள்ளன?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

அய்யம்பெருமாள்பட்டி பகுதி-2-ல் அரசு விருப்புரிமைப் பங்கின்கீழ் 7 வீடுகளும், அய்யம்பெருமாள்பட்டி பகுதி 3-ல் வாரியப் பங்கில் வீடுகளும் அரசு விருப்புரிமைப் பங்கில் 7 வீடுகளும் (10+7=17) வீடுகளும், கன்னங்குறிச்சி திட்டத்தில் 2 வீடுகளும், ஆக மொத்தம் 17 வீடுகளும், மொத்தத்தில் 36 வீடுகள் விற்பனை ஆகாமல் உள்ளன.

99—

## கால்நடை மருந்தகம் அமைத்தல்

**வினா எண் 10547—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, குள்ளஞ்சாவடி கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதி, குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம், குள்ளஞ்சாவடி கிராமத்தில் 04-8-1983 முதல் கால்நடை மருந்தகம் ஒன்று செவ்வனே செயல்பட்டு வருகின்றது.

(ஆ) எழாது.

**100—**

## கூடுதல் மருத்துவமனை

**வினா எண் 10592—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, கந்திலி ஒன்றியம், பெரியகரம் கிராமத்திற்குக் கூடுதல் கால்நடை மருத்துவமனை அமைத்துத்தர அரசு பரிசீலனை செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) எழாது.

**101—**

## தண்ணீர் வசதி

**வினா எண் 3046—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி அரசு கள்ளர் மாணவியர் விடுதியில் நிரந்தரத் தண்ணீர் வசதி செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி கள்ளர் சீரமைப்பு மாணவியர் விடுதிக்கு ஏற்கெனவே இரண்டு முறை ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. தற்போது ஆழ்குழாய்க் கிணறுகள் வற்றிவிட்டதால், மாணவியர்கள் நலன் கருதி, உசிலம்பட்டி மாணவியர் விடுதிக்கு மேலும் ஒரு ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் வசதி ரூ.72,000 செலவில் 2001-2002 நிதியாண்டில் அளிக்கப்பட்டுள்ளது.

**102—**

## உச்ச நீதிமன்றத் தீர்ப்பு

**வினா எண் 5841—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுத் துறைகளில் பதவி உயர்வுகளிலும் இடஒதுக்கீடு முறை பின்பற்றப்பட வேண்டும் என உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) அரசுத் துறைகளில் பதவி உயர்வுகளிலும் இடஒதுக்கீடு முறை பின்பற்றப்பட வேண்டும் என உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கவில்லை.

(ஆ) வினா எழாது.

103—

## இலவசப் பட்டா வழங்குதல்

**வினா எண் 13810—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகம் முழுவதும் உள்ள பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர்களுக்கு, வீட்டுமனை இல்லாதவர்களுக்கு இலவசப் பட்டாக்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வீட்டுமனை இல்லாமல் இருந்து, ஆண்டு வருமானம் கிராமப்புறங்களில் ரூ.16,000- நகர்ப் பகுதிகளில் ரூ.24,000/-க்கு உட்பட்டு தமிழ்நாட்டில் வாழும் பிற்படுத்தப்பட்டோர்/முற்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தவர்களுக்குச் சென்னையைத் தவிர அனைத்து மாவட்டங்களிலும் ஏற்கனவே நிலம் கையகப்படுத்தப்பட்ட இடங்களில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

104—

## விடுதிகள் அமைத்தல்

**வினா எண் 13813—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, செல்லமுடி அரசு உயர்நிலைப் பள்ளி பிற்படுத்தப்பட்டோர் நல மாணவ, மாணவியர் விடுதிகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**



(அ) திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

105—

## விடுதிகள் அமைத்தல்

**வினா எண் 13814—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஏலகிரி உயர்நிலைப் பள்ளியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவ, மாணவியர்க்கு விடுதிகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) திட்டம் எதுவும் அரசின் ஆய்வில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

106—

## விடுதிகள் அமைத்தல்

**வினா எண் 13815—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நெருப்பூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவ, மாணவியர் விடுதிகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தனியார் கட்டடங்களில் இயங்கி வரும் விடுதிகளுக்குப் போதிய அடிப்படை வசதிகளுடன் அரசின் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கும், அரசின் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வரும் விடுதிகளுக்குப் போதிய அடிப்படை வசதிகள் செய்வதற்கும் அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டுமென்பதாலும், அரசின் தற்போதைய நிதி நிலையைக் கருத்தில் கொண்டு, தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நெருப்பூரில் பிற்படுத்தப்பட்டோர் நல புதிய மாணவ மாணவியர் விடுதிகள் துவக்குவது தற்போது இயலாது.

**107—**

## விடுதிகள்

**வினா எண் 13825—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பி. அக்ரஹாரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவ, மாணவியர் விடுதிகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தனியார் கட்டடங்களில் இயங்கி வரும் விடுதிகளுக்குப் போதிய அடிப்படை வசதிகளுடன் அரசின் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கும், அரசின் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வரும் விடுதிகளுக்குப் போதிய அடிப்படை வசதிகள் செய்வதற்கும் அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டுமென்பதாலும், அரசின் தற்போதைய நிதி நிலையைக் கருத்தில் கொண்டு தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பி. அக்ரஹாரத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல புதிய மாணவ/ மாணவியர் விடுதிகள் துவக்குவது இயலாது.



**108—**

## ஆசிரியர் பணி

**வினா எண் 12175—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2001 ஆம் ஆண்டு ஏப்ரல் வரை பிட்டி (B.T.) மற்றும் ப்பிஜி (P.G.) ஆசிரியர்கள் பணி வேண்டி எத்தனை பேர் பதிவு செய்துள்ளார்கள்?

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

2001 ஆம் ஆண்டு ஏப்ரல் வரை 1,14,149 பிட்டி (B.T.) ஆசிரியர்களும், 69,440 ப்பிஜி (P.G.) ஆசிரியர்களும் தமிழ்நாட்டில் உள்ள வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பணி வேண்டிப் பதிவு செய்துள்ளனர்.

**109—**

## பட்டதாரி ஆசிரியர்கள்

**வினா எண் 12297—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001 ஆம் ஆண்டு வரை தமிழகத்தில் வேலை கோரி வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ள பட்டதாரி ஆசிரியர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களில் அரசின் புதிய ஆணையின்படி வயது வரம்பு 35 என நிர்ணயிக்கப்பட்டதால், பாதிப்படைந்துள்ளவர்கள் எத்தனை பேர்?

(இ) அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பைச் சரிக்கட்ட அரசிடம் புதிய திட்டம் உள்ளதா?

(ஈ) ஆம் எனில், அதுபற்றி அரசு விவரம் தெரிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 2000-2001 ஆம் ஆண்டு வரை தமிழகத்தில் வேலை கோரி வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ள பட்டதாரி ஆசிரியர்களின் எண்ணிக்கை 1,29,551 ஆகும்.

(ஆ) அவர்களில் வயது வரம்பு 35 முடிக்கப் பெற்றவர்கள் 19,745 ஆகும். பட்டதாரி ஆசிரியர்கள் நியமனத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட உச்ச வயது வரம்பு 35 என்பது தற்போது அரசாணை (நிலை) எண் 174, பள்ளிக் கலவி (எம்-2) துறை, நாள் 12-10-2001-ன் மூலம் நீக்கப்பட்டுள்ளது. எனவே, 35 வயது முடிவுற்றவர்களுக்கு எவ்விதப் பாதிப்பும் இல்லை.

(இ) மற்றும் (ஈ) இவ்வினாக்கள் எழவில்லை.

**110—**

## உலோகப் பயிற்சி நிலையம்

**வினா எண் 13238—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன் :** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி பேரூராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உலோகப் பயிற்சி நிலையம் தொடங்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின்கீழ் திருச்செந்தூர், அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் உட்பட 11 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் உலோகத் தகடு வேலையாள் (ஷீட் மெட்டல் ஒர்க்கர்) தொழிற்பிரிவில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இத் தொழிற்பிரிவிற்கு பொது மக்களிடையே போதிய வரவேற்பு இல்லாததால், மேலும் விஸ்தரிக்கப்படவில்லை. இந்நிலையில் சேரன்மகாதேவி பேரூராட்சி உட்பட மற்ற இடங்களில் இத்தொழிற் பிரிவு ஏற்படுத்த அரசுக்குத் தற்போது உத்தேசம் இல்லை.



**111—**

## கருணைத் தொகை

**வினா எண் 17743—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வறுமையினாலோ, பட்டினியினாலோ இறந்து போகும் தங்க நகைத் தொழிலாளர்கள் குடும்பத்திற்குக் கருணைத்தொகையாக ரூ.1 லட்சம் வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

இல்லை. இருப்பினும், தங்கம் மற்றும் வெள்ளி நகை தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் ரூ.100/- பதிவுத் தொகையாகச் செலுத்தி, தமிழ்நாடு கைவினைத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்து கொள்ளலாம். பதிவு பெற்ற தொழிலாளர்கள் இயற்கையாக மரணம் அடையும் சூழ்நிலையில், அவ்வாறு மரணமடையும் பதிவு பெற்ற தொழிலாளர் நியமனதாரருக்கு ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) இயற்கை மரண உதவித் தொகை வழங்கப்படும். இதைத் தவிர ரூ.2,000/- (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) ஈமச் சடங்கு உதவி தொகை நியமனதாரருக்கு வழங்கப்படும்.

**112—**

## அரசு விருது

**வினா எண் 14808—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திரைப்படங்களில் தேசப் பற்று உணர்வுடன் எடுக்கும் படங்களுக்கு அரசு விருது வழங்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை படங்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

(அ) பல்வேறு அம்சங்களையும் கருத்தில் கொண்டு ஆண்டுதோறும் சிறந்த தமிழ்த் திரைப்படங்களுக்கு விருதுகள் வழங்கப்படுகின்றன. தேசப் பற்று உணர்வுடன் தயாரிக்கும் படங்களுக்கு என்று தனியே விருதுகள் வழங்கப்படுவதில்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**113—**

## புதிய நூற்பாலை துவங்குதல்

**வினா எண் 13107—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரத்தில் அரசு ஒரு நூற்பாலை துவக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பஞ்சு விலை, பஞ்சுத் தட்டுப்பாடு, தொழிலாளர் பிரச்சினை, நிதி நெருக்கடி உள்ளிட்ட பிரச்சினைகளின் காரணமாக, ஏற்கெனவே தொடங்கப்பட்ட கூட்டுறவு நூற்பாலைகளைச் செயல்படுத்துவது கடினமாக உள்ளது. இந்நிலையில் அரசு மேலும் ஒரு நூற்பாலையைத் தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

**114—**

## விற்பனைக்கூடம் கட்டுதல்

**வினா எண் 4878அ—திரு நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



**(அ)** சீர்காழி ஒன்றியத்திலுள்ள நாயக்கர்குப்பம் கிராமத்தில் மீன் விற்பனைக் கூடங்கள் கட்டிக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) சீர்காழி ஒன்றியத்திலுள்ள நாயக்கர்குப்பம் கிராமத்தில் மீன் விற்பனைக் கூடங்கள் கட்டும் திட்டம் ஏதுமில்லை.

(ஆ) வினா எழவில்லை.

**115—**

## இலவச வீடுகள்

**வினா எண் 14986—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், மேட்டூர் வட்டம், பெண்ணாகரம் தொகுதி, கொண்டையனூர் கிராமத்தில் வசிக்கும் மீனவர்களுக்கு இலவச வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது.

விடை—

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடல் மீனவர்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டித் தருவது போல் 2001-2002 ஆம் நிதியாண்டில், நிலமுள்ள 500 உள்நாட்டு மீனவர்களுக்கு வீடு கட்டித் தரத் திட்டமிடப்பட்டுள்ளது. கொண்டையனூர் கிராமத்தில் உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக உள்ள மீனவர்கள் வீடு வேண்டி விண்ணப்பத்தினை தருமபுரி (உள்நாட்டு மீன்வளம்) மீன் துறை உதவி இயக்குநர் மூலமாக உரிய வழியில் அனுப்பினால், தகுதிவாய்ந்த உள்நாட்டு மீனவர்களுக்கு விதிமுறைக்குட்பட்டு வீடுகள் கட்டப் பரிசீலிக்கப்படும்.

## இணைப்பு-III

( 1 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

### விதி 55-ன்கீழ் அனுமதிக்கப்பெற்று அவற்றிற்குச் சம்பந்தப்பட்ட அமைச்சர்களால் அளிக்கப்பட்ட விவர அறிக்கைகளுடன் பேரவைமுன் வைக்கப்பெற்ற கவன ஈர்ப்பு* (1 முதல் 43 வரை)

I வேலூர் மாவட்டம், சதுப்பேரி கால்வாய் தூர்வாரும் பணி

**உறுப்பினர்: திரு சி. ஞானசேகரன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் (பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)**

**அறிக்கை**

வேலூர் மாவட்டம், வேலூர் வட்டத்தில் உள்ள சதுப்பேரி, ஒரு முறைசாரா (Non-system) ஏரியாகும். அதன் பாசனப் பரப்பளவு 497.87 ஹெக்டேர் ஆகும். உலக வங்கி நிதியுதவியின்கீழ் நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்தில், முறைசாரா ஏரிகள் 620 புனரமைப்பு மற்றும் நவீனப்படுத்துதலுக்கான அரசாணை எண் 106, பொதுப் பணித் துறை, நாள் 8-3-2001-ல் ரூ.106.26 கோடி வழங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தில் சதுப்பேரி ஏரியும் மேம்பாட்டுப் பணிகள் செய்ய எடுக்கப்பட்டுள்ளது. சதுப்பேரிக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.68.20 இலட்சம். இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளி 16-3-2001 அன்று பெறப்பட்டது. ஒப்பந்தத் தேதி 14-9-2001 ஆகும். ஒப்பந்தத் தொகை ரூ.78.67 இலட்சம் ஆகும். செப்டம்பர் 15, 2001 அன்று பணி தொடங்கப்பட்டு, நவம்பர் 2001 முதல் வாரம் வரை பணிகள் நடைபெற்றன. இதுவரை 50% பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ஏரியில் தண்ணீர் இருப்பதாலும், கால்வாய்களில் தண்ணீர் ஓடுவதாலும், அறுவடைக்குப் பிறகுதான் (மார்ச் 21, 2002-க்குப் பின்) நிலுவையிலுள்ள

*இப்பட்டியலில் உள்ள கவன ஈர்ப்புகளுக்கான விவர அறிக்கைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.



பணிகளைத் தொடர முடியும். கால்வாய்ப் பணிகள், மேம்பாட்டுப் பணிகள் மற்றும் கட்டுமான வேலைகள் பயிர்ப் பருவத்திற்குப் பிறகுதான் தொடங்கப்பட முடியும். இதுவரை செலவிடப்பட்ட தொகை ரூ.32 இலட்சமாகும். எல்லாப் பணிகளும் 30-6-2002-ல் முடிக்கப்படும்.

II. கபிலர்மலை தொகுதி இராஜ வாய்க்கால் மறு சீரமைப்பு

**உறுப்பினர்கள்:**

திரு. க. முருகவேல் ராஜன்

திரு. ஜி.கே. மணி

திரு. தி. வேல் முருகன்

திரு. கே. ஆறுமுகம்

திரு. அ.இரா. மலையப்பசாமி

திரு. பி.எஸ். உலகரட்சகன்

**அமைச்சர்: மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் (பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)**

**அறிக்கை**

நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதிக்குட்பட்ட இராஜ வாய்க்காலிலுள்ள அனுமதியற்ற நீரேற்றுப் பாசன நிலங்களான 5.514 ஏக்கர் நிலங்களை வரன்முறைப்படுத்தி 3-10-1988-ல் அரசாணை வெளியிடப்பட்டது. மேற்படி அரசாணையில் இராஜ வாய்க்காலை மறுசீரமைக்க (Remodelling) ஆகும் செலவை, அனுமதியற்ற நீரேற்றுப் பாசனதாரர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் இராஜ வாய்க்காலை மறு சீரமைக்க வேண்டி ரூ.95.71 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மேற்படி தொகையை, அனுமதியற்ற நீரேற்றுப் பாசனதாரர்களிடமிருந்து வசூல் செய்து, பொதுப் பணித் துறைக்குச் செலுத்தக் கோரி, தனி அலுவலர், இராஜ வாய்க்கால், நீரேற்றுக் கூட்டுறவுப் பாசனச் சங்கம், வேலூர், அவர்களை செயற்பொறியாளர், பொதுப் பணித் துறை, நீர்வள ஆதார அமைப்பு, சரபங்கா வடிநிலக் கோட்டம், நாமக்கல்,

அவர்களால் 21-2-2002-ல் கேட்டுக்கொள்ளப்பட்டது. மேற்கண்ட தொகையை அனுமதியற்ற நீரேற்றுப் பாசனதாரர்களிடமிருந்து வசூலிக்க, 'பதிவாளர்' கூட்டுறவுச் சங்கங்கள், சென்னை அவர்களிடம், தனி அலுவலர், இராஜ வாய்க்கால் கூட்டுறவுப் பாசனச் சங்கம், வேலூர் அவர்களால் அனுமதி கோரப்பட்டுள்ளது. இதுகுறித்து அரசின் ஒப்புதலை கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் கோரியுள்ளார். இது அரசின் பரிசீலனையில் உள்ளது. அரசு ஒப்புதல் அளித்து, அதன் அடிப்படையில் மேற்படி தொகை பொதுப் பணித் துறைக்குச் செலுத்தப்பட்டவுடன் இராஜ வாய்க்கால் மறு சீரமைக்கும் பணி தொடங்கப்படும். தற்பொழுது மோகனூர் மற்றும் குமாரபாளையம் வாய்க்கால்களின் கடைமடைப் பகுதியில் நீர் விநியோகம் நல்ல முறையில் நடைபெற்று வருகிறது.

## III. சிதம்பரம் டிவிஷன் நீர்ப்பாசன வாய்க்கால்கள்

**உறுப்பினர்: டாக்டர் பி. வள்ளல் பெருமான்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் (பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)**

**அறிக்கை**

சிதம்பரம், பொதுப் பணித் துறை, கொள்ளிடம் வடிநிலக் கோட்டத்தின் எல்லையில் வருவாய்த் துறை சார்ந்த 215 வாய்க்கால்கள் உள்ளன. இவற்றின் மொத்த நீளம் 540 கிலோ மீட்டர் ஆகும். பொதுப் பணித் துறையின் பராமரிப்பில் 21 பெரிய வாய்க்கால்கள் உள்ளன. அவற்றின் மொத்த நீளம் 377 கிலோ மீட்டர் ஆகும்.

வருவாய்த் துறையைச் சார்ந்த வாய்க்கால்கள் அனைத்தும் குடிமராமத்தின்கீழ் பராமரிக்கப்படவேண்டும். அவ்வாறு கிராம குடிமராமத்தின்கீழ் சரிவர பராமரிக்கப்படாமையால், விவசாயிகள் வேண்டுகோளுக்கிணங்க மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் மூலம் நிதி அளிக்கப்படும் 'ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம்', 'நமக்கு நாமே திட்டம்', 'தன்னிறைவு திட்டம்' மற்றும் அரசு நிர்வாக ஒப்புதல் மூலம் அளிக்கப்படும் சிறப்பு தூர்வாரும் திட்டம் போன்ற திட்டங்களினால் அவற்றின் பராமரிப்பு பணிகள் செய்யப்படுகின்றன.



இந்த வருவாய்த் துறையைச் சார்ந்த வாய்க்கால்கள் பொதுப் பணித் துறையின் பராமரிப்பு நிதியிலிருந்து பராமரிக்கப்படுவதில்லை.

பொதுப் பணித் துறையில் நிதி ஒதுக்கீடு, பொதுப் பணித் துறை பொறுப்பிலுள்ள அணைக்கட்டுகள், ஒழுங்கியங்கள் (Regulators) மற்றும் பொதுப் பணித் துறையைச் சார்ந்த பெரிய வாய்க்கால்கள் மற்றும் ஆற்றின் கரைகள், பெரிய வடிகால்கள் ஆகியவற்றின் பராமரிப்புக்கே போதுமானதாக உள்ளது.

எனவே, அனைத்து வருவாய்த் துறையின் வாய்க்கால்களையும் பொதுப் பணித் துறையின் மூலம் பராமரிக்கப் போதுமான நிதி ஒதுக்கீடு மற்றும் தேவையான களப் பணியாளர்கள் இல்லாத நிலையில் இவற்றைப் பொதுப் பணித் துறையின் மூலம் பராமரிக்க இயலாது என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

## IV. சீர்காழி தொகுதி கல்லணையிலிருந்து தண்ணீர் திறந்து விடுதல்

**உறுப்பினர்: திரு. நா. சந்திரமோகன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் (பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)**

**அறிக்கை**

சீர்காழி வட்டம், புதுமண்ணியாறு, தெற்கு இராஜன் வாய்க்கால் கடைமடைப் பகுதிகளில் சுமார் 6000 ஏக்கர் குள்ளக்கார் பயிர் செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டு குள்ளக்கார் பயிரிடுவதற்கு முன்பே சம்பந்தப்பட்ட விவசாயிகளிடம் மேட்டூர் அணையில் போதிய நீர்மட்டம் இல்லாததாலும், ஊற்று நீர் போதிய அளவிற்குக் கிடைப்பதற்கு வாய்ப்பில்லை என்பதாலும், குள்ளக்கார் சாகுபடி செய்ய வேண்டாம் என முன் அறிவிப்பாக சம்பந்தப்பட்ட பொதுப் பணித் துறை பிரிவு அலுவலர்கள் மூலம் தெரிவிக்கப்பட்டது.

மேட்டூர் அணை பாசனத்திற்கு நீர் விடுவதை நிறுத்திய பிறகு மேட்டூர் அணையிலிருந்து குடிநீர் மற்றும் மின் உற்பத்திக்காகக் குறைந்த அளவில் திறந்துவிடப்படும் தண்ணீரால் உண்டாக்கும் ஊற்று

நீரைப் பயன்படுத்தி மார்ச் மாதம் முதல் மே மாதம் வரை வயல்களில் குள்ளக்கார் சாகுபடி செய்வது வழக்கம். போதிய ஊற்று நீர் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் விவசாயிகள் சொந்தப் பொறுப்பில் குள்ளக்கார் பயிரிட்டுள்ளதால் மேட்டூர் அணையை மீண்டும் திறந்து தண்ணீர் வழங்கக் கோரியுள்ளனர். மேட்டூர் அணையில் நீர் இருப்பு 25-4-2002 அன்று 42.19 அடியே இருப்பதாலும், அணைக்கு நீர் வரத்து மிகவும் குறைவாக இருப்பதாலும், டெல்டா பகுதிகளின் பாசனத்திற்கு நீர் விடுவதை நிறுத்திய பிறகு மீண்டும் திறப்பது சாத்தியமில்லை.

மேலும் நாமக்கல், முசிறி, குளித்தலை பகுதிகளில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், குடிநீர்த் தேவைக்காக நீர் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்து நீர் எடுப்பதால் கல்லணையில் தேவையான அளவிற்கு நீர் பெறப்படவில்லை. கல்லணையில் நீர் வரத்து இருந்தால்தான் மணல்போக்கி மூலம் கொள்ளிடத்தில் தண்ணீர் விடப்படும். இதனால் உண்டாகும் ஊற்று நீர் குள்ளக்கார் பயிருக்கு. கீழணையிலிருந்து திறந்து விடப்படும். கீழணையில் நீர்வரத்து தற்போது ஏதும் இல்லாததாலும், மேட்டூர் அணையில் நீர் மிகவும் குறைவாக இருக்கும் சூழ்நிலையிலும், குள்ளக்கார் பயிர்களுக்குத் தண்ணீர் அளிக்க இயலாது என்று தெரிவிக்கப்படுகிறது.

V. திருத்துறைப்பூண்டி தாலுகா இறைவைப் பாசனம்

**உறுப்பினர்: திரு. ஜி. பழனிசாமி**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் (பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)**

**அறிக்கை**

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தாலுகாவில் உள்ள தொருக்கை தலைக்காடு இறைவைப் பாசனத் திட்டத்தின்கீழ் உள்ள பாசன பரப்பு 585.20 ஏக்கர் ஆகும். இந்த நிலங்களில் வடக்கு நோக்கிச் செல்லும் பாசன வாய்க்காலில் உள்ள கீழ்க்குமிழி (Syphon) பழுதுபட்டு இருந்த காரணத்தால் சென்ற ஆண்டு வரை 203.32 ஏக்கர் நிலங்களுக்குத்தான் பாசனம் அளிக்கப்பட்டது. சென்ற ஆண்டு கீழ்க்குமிழி (Syphon) பழுது மற்றும் மோட்டார் பழுதுபார்ப்பு



செய்ததன்பேரில் இந்த ஆண்டு 504.48 ஏக்கர் நிலங்கள் பாசனம் பெற்று, பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்த பசலியில் 16-8-2001 முதல் நீர் இறைவை தொடங்கி 2-2-2002 வரை இயக்கப்பட்டுள்ளது. இந்த இறைவைத் திட்டத்தில் 15 குதிரைத்திறன், (15 எச்.பி.) இரண்டும், 20 குதிரைத்திறன் (20.எச்.பி.) இரண்டும் உள்ளன. இதில் 20 குதிரைத்திறன் (20. எச்.பி.) ஒன்று மாற்று மோட்டாராகும். இந்த மோட்டார் தற்போது பழுதடைந்துள்ளது. நிதி நிலைமைக்கு ஏற்ப 2002-2003 ஆம் நிதியாண்டில் பழுதடைந்த மோட்டாரை பழுது நீக்கம் செய்யவும். பழுதடைந்த வரத்து வாய்க்காலைப் பழுது நீக்கம் செய்யவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

VI. வால்பாறை தொகுதி, காண்டூர் கால்வாய் சீரமைப்புப் பணி

**உறுப்பினர்: திரு. கோவை தங்கம்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் (பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)**

**அறிக்கை**

சமமட்டக் கால்வாய் (காண்டூர் கால்வாய்) சர்க்கார்பதி மின் நிலையத்தில் தொடங்கி உடுமலை தாலுகாவில் உள்ள திருமூர்த்தி அணைப் பகுதி வரை சுமார் 49 கிலோ மீட்டர் தூரத்திற்கு ஆங்காங்கே அடர்ந்த மலைப் பகுதியின் நடுவே செல்கிறது. இச்சமமட்டக் கால்வாய் பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தின் ஒரு பகுதியாகும். இக்கால்வாய் வழியாக கடந்த 40 (நாற்பது) ஆண்டுகளாக, திருமூர்த்தி அணைக்குத் தண்ணீர் எடுத்துச் செல்லப்பட்டு வருகிறது. இயற்கையிலேயே அடர்ந்த மலைப் பகுதிகளுக்கிடையே இக்கால்வாய் செல்வதால், மழைக் காலங்களில் பலவிதமான இயற்கைச் சீற்றங்களுக்கு உட்படுகிறது. அப்பருவத்தில் கால்வாயில் பெரிய, பெரிய பாறைகள் உருண்டு விழுவதாலும், கரை மருங்குகளில் உள்ள பெரிய மரங்களின் பருமனான வேர்களின் ஊடுருவலாலும் கால்வாய்க்குக் கணிசமான பாதிப்புகள் ஏற்படுகின்றன. மேலும், இந்தக் கால்வாய் பல்வேறு இடங்களில் மலைக் குகைகளின் வழியாக கொண்டு செல்லப்பட்டுள்ளது. இந்த காண்டூர் கால்வாயினை நவீனப்படுத்த ஒரு பகுதியாகக் கிடைக்கப்பெற்ற நிதி ஆதாரம் ரூ.1410 இலட்சத்திற்கு ஏற்றவாறு மதிப்பீடு ஒன்று, பொள்ளாச்சி மண்டலத் தலைமைப் பொறியாளரால் தயாரிக்கப்பட்டது. மதிப்பீட்டில் வாய்க்கால் வலதுபுறம் மற்றும் குகைப் பாதைகள் ஆகியவற்றில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ள வகை செய்யப்பட்டது. கால்வாயின் இடதுபுறம் மற்றும் எதுவும் செய்யப்படவில்லை.

அடிமட்டம் ஆகிய இடங்களில் மட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும், கால்வாயில் சீரமைப்புப் பணிக்கு முன்பு இருந்த தண்ணீர் இழப்பைக் காட்டிலும் தற்போது அதன் அளவு கணிசமாகக் குறைந்துள்ளது.

இதுவரை கால்வாயில் மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்குப் பகுதிப் பட்டியல்கள் மட்டுமே பட்டுவாடா செய்யப்பட்டுள்ளன. உலக வங்கித் திட்ட ஒப்பந்தப்படி அவ்வப்போது ஏற்படும் விலையேற்றத்தை சரிக்கட்டும்பொருட்டு ஒப்பந்தக்காரருக்கு ரூ.83.30 இலட்சம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. எனினும், நிறைவேற்றப்பட்ட பணியில் உள்ள சிற்சில குறைபாடுகளைச் சரி செய்யாத காரணத்தால் இதுகாறும் இறுதிப் பட்டியல் வழங்கப்படாமல் உள்ளது. மேலும் ஒப்பந்தக்காரர் தற்போது பணிக்கான இறுதிப் பட்டியல் பெறும்பொருட்டு பணிகள் சம்பந்தமாக ஏற்படும் தாவாக்களை முறையீடு செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள நடுவர் (Adjudicator) அவர்களை அணுகியுள்ளார். இந்த நடுவர், துறை அலுவலர்களுடன் தள ஆய்வு மற்றும் கலந்துரையாடல்கள் மேற்கொண்டுள்ளனர். எனவே இதுகுறித்து வழங்கப்படும் இறுதியான நடுவர் தீர்ப்பைப் பொறுத்து தான் பணிக்கான இறுதிப்பட்டியல்கள் வழங்குவது குறித்து முடிவு செய்யப்படும்.

இதைத்தவிர, வரும் ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் காண்டூர் வாய்க்காலில் நீர்வரத்து இல்லாத காலத்தில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட பணிகளில் உள்ள குறைகளைச் சரிசெய்யும் பொருட்டு ஒப்பந்தக்காரருக்குத் தக்க அறிவுரைகளும் பொள்ளாச்சி மண்டலத் தலைமைப் பொறியாளரால் வழங்கப்பட்டுள்ளன. எனவே நடுவர் தீர்ப்பினைப் பெற்று, பணிகளில் சுட்டிக்காட்டப்பட்ட குறைகளைச் சரிசெய்த பின்னரே இப்பணிக்கான இறுதிப் பட்டியல் வழங்கப்படும்.

## VII. நங்கஞ்சியாறு நீர்த்தேக்கத் திட்டம்

**உறுப்பினர்: திரு. ஆர். சக்ரபாணி**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் (பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)**

### அறிக்கை

நங்காஞ்சியாறு நீர்த்தேக்கத் திட்டத்திற்கு ரூ.20.70 கோடி மதிப்பீட்டில் ஒப்பளிக்கப்பட்டு, 4/91-ல் பணிகள் தொடங்கப்பட்டன. 12/96 வரை





பணிகள் நடைபெற்றன. அதன்பின், இத்திட்டத்திற்குத் தொடர்ந்து பணிகள் நடைபெற்றன. அதன்பின், இத்திட்டத்திற்குத் திருத்திய மதிப்பீடு ரூ.37.36 கோடிக்கு அரசு ஒப்புதல் அளித்தது. புதிய ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு, அனேகப் பணிகளுக்கு ஒப்பந்தக்காரர்கள் நியமிக்கப்பட்டுவிட்டனர். இதுவரை 80% பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியப் பணிகள், நடைபெற்று வருகின்றன.

2. இத்திட்டத்திற்கு இதுவரை ரூ. 31 கோடி செலவாகியுள்ளது. எஞ்சிய பணிகள் முழுவதும் முடிக்கத் தேவைப்படும் நிதி ரூ.6.34 கோடி ஆகும். 2002-2003 நிதி ஒதுக்கீடு ரூ.1.26 கோடி.

3. இத்திட்டத்திற்கு நில ஆர்ஜிதம் செய்த வகையில் விவசாயிகள்/நில உரிமைதாரர்களுக்கு, ரூ. 82.66 லட்சம் வழங்கப்பட வேண்டியுள்ளது. நங்காஞ்சியாறு நீர்த்தேக்கத் திட்டம், காவிரி வடிநிலப் பகுதியில் உள்ளமையால், நிதி நிறுவனங்களிடமிருந்து நிதி உதவி பெற இயலாது. மாநில அரசின் நிதி உதவியோடு இத்திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும். எனவே, நிதிநிலைமைக்கேற்ப இப்பணிகளை தொடர்ந்து விரைவில் முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## VIII. பள்ளிக் கல்வித் துறை, தொகுப்பூதிய மருத்துவர்கள், பணி நிரந்தரம் செய்தல்

**உறுப்பினர்: திரு. சி. ஞானசேகரன்**

**அமைச்சர்: மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை (கல்வித் துறை)**

### அறிக்கை

அரசாணை (நிலை) எண் 315, கல்வி, நாள் 4-3-1968-ன்படி மதுரை மற்றும் திருச்சி மாவட்டங்களில் பள்ளி மாணவர்களுக்கு மருத்துவப் பரிசோதனை செய்யும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, பின்பு பல மாவட்டங்களில் இத்திட்டம் ஏற்படுத்தப்பட்டு, செயற்படுத்தப்பட்டு வருகிறது. இதன்படி மருத்துவ உதவிக் குழு ஏற்படுத்தப்பட்டு அதன் நிர்வாகம் கீழ்க்கண்ட அமைப்பில் வருவாய் மாவட்டங்களில் செயல்பட்டு வருகிறது.

1. முதன்மைக் கல்வி அலுவலர் - தலைவர்
2. மாவட்டக் கல்வி அலுவலர் - துணைத் தலைவர்
3. மாவட்டத்தின் மருத்துவ அலுவலர் - உறுப்பினர்
4. 5 அல்லது 6 பள்ளிகளின் அனுபவம் வாய்ந்த தலைமை ஆசிரியர்கள்

இதில் ஒரு தலைமை ஆசிரியர், செயலர் மற்றும் பொருளாளராக பள்ளிக் கல்வி இயக்குநரின் ஒப்புதலுடன் நியமனம் செய்யப்படுகிறார்.

இந்த மருத்துவ உதவிக் குழுவிற்கு மருத்துவர் மற்றும் இதரப் பணியாளர்களைத் தற்காலிகமாகத் தொகுப்பூதிய அடிப்படையில் நியமனம் செய்யும் அதிகாரம் மாவட்ட மருத்துவ ஆய்வுக் குழுவிற்கு உள்ளது.

மருத்துவ ஆய்வுக் குழுப் பணியாளர்களுக்கு முற்றிலும் தொகுப்பூதியம் மட்டுமே வழங்கப்படுகிறது. ஒவ்வொரு மாணவரிடமிருந்தும் ஆண்டிற்கு ரூ.1/- வசூலிக்கப்படும். மருத்துவக் கட்டணத் தொகையைக் கொண்டு இத்தகைய பணியாளர்களுக்குத் தொகுப்பூதியம் வழங்கப்படுவதால் மாவட்ட மருத்துவ ஆய்வுக் குழுவின் நிதிநிலையின் அடிப்படையில் மாவட்டத்திற்கு மாவட்டம் ஊதியம் வேறுபடுகிறது.

மருத்துவர்கள், பள்ளியிலுள்ள மாணவர்களைப் பரிசோதனை செய்து நோயின் தன்மையைக் கண்டறிந்து மேற்கொண்டு எடுக்கவேண்டிய சிகிச்சை குறித்து, பக்கத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் சிகிச்சை பெற அறிவுரை வழங்கப்பட்டு வருகிறது. பெரும் நோயாக இருந்தால் மாவட்ட மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காகப் பரிந்துரை செய்யப்படுகிறது. மருத்துவர்கள் முழுநேரப் பணியாளர்கள் அல்ல. இவர்கள் மருத்துவக் குழுவால் முற்றிலும் தற்காலிகமாகப் பணியமர்த்தப்படுகிறார்கள். ஒவ்வொரு கல்வியாண்டு இறுதியில் பணி நீக்கம் செய்யப்பட்டு, மீண்டும் அடுத்த கல்வியாண்டில் பணி நியமனம் செய்யப்படுகின்றனர். இதற்கிடையில் இவர்களுக்கு வேறு நிரந்தரப் பணி கிடைத்தால் இத்தற்காலிகப் பணியிலிருந்து விடுவிப்பு செய்யப்பட்டு வருகின்றனர்.

அரசாணை (நிலை) எண் 315, கல்வி, நாள் 4-3-68-ன்படி அரசு நிதியிலிருந்து எந்தவிதமான செலவினமும் மேற்கொள்ளப்படுவதில்லை. மாறாக, மாணவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் மருத்துவக் கட்டண தொகையிலிருந்துதான் மருத்துவக் குழுப் பணியாளர்களுக்குத் தொகுப்பூதிய அடிப்படையில் ஊதியம் வழங்கப்பட்டு வருவதால் இவர்களை நிரந்தரம் செய்ய இயலாது.



**IX. பொள்ளாச்சி பெண்கள் பள்ளியை வேறு இடத்திற்கு மாற்றுதல்**

**உறுப்பினர்: திரு. வி. ஜெயராமன்**

**அமைச்சர்: மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை (கல்வித் துறை)**

**அறிக்கை**

பொள்ளாச்சி நகராட்சி, கோட்டூர் சாலையை ஒட்டி அமைந்துள்ள 10 ஏக்கர் நிலப்பரப்பில் நகராட்சி நடுநிலைப் பள்ளி மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. இப்பள்ளிக் கட்டடத்தை அகற்றிவிட்டு, புதிதாகக் கட்டடங்கள் கட்ட வேண்டியுள்ளது. பொள்ளாச்சி நகராட்சியில் உடுமலை சாலையை ஒட்டி அமைந்துள்ள நகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளி 1.75 ஏக்கர் நிலப்பரப்பில் இயங்கி வருகிறது. மேற்படி பள்ளி மிகவும் இடநெருக்கடியாக அமைந்துள்ளது. கூடுதலாக வகுப்பறை கட்ட இடவசதியும் தற்போது இப்பள்ளியில் இல்லை. மேற்படி பள்ளியை அதிகப் பரப்பளவு கொண்ட இடத்திற்கு மாறுதல் செய்ய வேண்டியுள்ளது.

எனவே, 10 ஏக்கர் நிலப்பரப்புள்ள கோட்டூர் சாலையை ஒட்டி அமைந்துள்ள இடம் அதிக இடவசதியைக் கொண்டதாக இருப்பதாலும், ஓரளவு போக்குவரத்து நெரிசல் குறைந்த இடமாக இருப்பதாலும், அங்கு இயங்கிவரும் நடுநிலைப் பள்ளி மற்றும் நகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளி இரண்டையும் கோட்டூர் சாலையை அடுத்துள்ள பகுதியில் புதிதாகக் கட்ட நகரமன்ற ஒப்புதல் பெற்று மேல் நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. அப்பள்ளிக்குக் கட்ட உத்தேசித்துள்ள பள்ளிக் கட்டடங்களைக் கட்ட நகராட்சி நிர்வாகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

**X. மேல்நிலைப் பள்ளி பகுதிநேர தொழிற்கல்வி ஆசிரியர்கள் பணி நிரந்தரம்**

**உறுப்பினர்கள்: திரு. சி. ஞானசேகரன்**
**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்**
**திரு. எம். ராம்குமார்**

**அமைச்சர்: மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை. (கல்வித் துறை)**

**அறிக்கை**

தமிழ்நாட்டில் 1978 ஆம் ஆண்டு மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற்பாடப் பிரிவுகள் துவக்கப்பட்டன. முதலில் தொழிற்பாடப்

பிரிவுகளைக் கற்பிக்க பகுதிநேர தொழிற்கல்வி ஆசிரியர்களை மட்டுமே நியமித்துக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. இதன் பிறகு மேல்நிலைப் பள்ளிகளில் பகுதிநேர தொழிற்கல்வி ஆசிரியர்களாகப் பணிபுரிந்து வந்த ஆசிரியர்களிடமிருந்து பெறப்பட்ட பல்வேறு கோரிக்கைகளின் அடிப்படையில் அரசால் 16-7-1990-க்கு முன் நியமனம் செய்யப்பட்ட முழுக் கல்வித் தகுதிவாய்ந்த பகுதிநேர தொழிற்கல்வி ஆசிரியர்களை முழுநேர ஊதிய விகித அடிப்படையில் கீழ்க்கண்டவாறு ஊதிய விகிதத்தில் ஊதியம் வழங்கி ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன:

பட்டதாரி ஆசிரியர் ஊதிய விகிதம்

| | |
|---|---|
| 1. அரசாணை எண் 834, நாள் 23-9-1994 | 1990 |
| 2. அரசாணை எண் 790 கல்வி, நாள் 6-11-1996 (கணினி) | 88 |
| மொத்தம் .. | 2078 |

இடைநிலை ஆசிரியர் ஊதிய விகிதம்

| | |
|---|---|
| 1. அரசாணை எண் 834, கல்வி, நாள் 23-9-1994 | 90 |
| 2. அரசாணை எண் 79, கல்வி, நாள் 6-11-1996 | 29 |
| 3. அரசாணை எண் 358, கல்வி, நாள் 18-8-1997 | 667 |
| 4. அரசாணை எண் 39, கல்வி, நாள் 12-8-1999 | 92 |
| மொத்தம் .. | 878 |
| ஆக மொத்தம் .. | 2956 |

2. அரசாணை (நிலை) எண் 991, கல்வி, நாள், 16-7-1990-ல் தனி நபர்களைத் தொழிற்கல்வி ஆசிரியர்களாக நியமிக்கக் கூடாது என்றும், அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களில் பணிபுரிபவர்களையே பகுதிநேர ஆசிரியர்களாக நியமிக்க வேண்டுமெனவும் ஆணை வழங்கப்பட்டது. மேற்காணும் ஆணையின்படி அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களில் பணிபுரிந்தவர்கள் பகுதிநேர ஆசிரியராக பணியாற்ற முன் வராததன் காரணமாகத் தனி நபர்கள் தொழிற்கல்வி ஆசிரியர்களாக நியமனம் செய்யப்பட்டனர் என்றும் இவ்விதமாக நியமனம் செய்யப்பட்ட நபர்களில் முழுக் கல்வி தகுதி பெற்ற 235 நபர்களை அரசாணை எண் 680, கல்வி, நாள் 20-9-1996-ன்படி 20-9-1996 முதல் [அரசாணை (நிலை) எண் 991, கல்வி, நாள்



16-7-1990-ன் நிபந்தனையைத் தளர்த்தி] பகுதிநேர ஆசிரியர்களாக ஒப்புதல் அளிக்க அரசு ஆணைகள் வழங்கியுள்ளது. மேற்காணும் அரசாணை மூலம் பகுதிநேர தொழிற்கல்வி ஆசிரியர்களாக நியமனம் பெற்ற 235 நபர்கள் தங்களை முறையான ஊதிய விகிதத்திற்குக் கொண்டு வந்து ஊதியம் வழங்கக் கோரிக்கை அனுப்பியதன் பேரில் மேற்காணும் 235 முழுத் தகுதிபெற்ற பகுதிநேர ஆசிரியர்களையும் இவர்களை ஒத்த அரசு ஒப்புதல் பெறாமல் விடுபட்டுப் போன 126 பகுதிநேர ஆசிரியர்களையும் மாநிலத்தில் காலியாக உள்ள தொழிற்கல்வி ஆசிரியர் பணியிடங்கள் மற்றும் உபரியாக உள்ள இடைநிலை ஆசிரியர் பணியிடங்களில் தொழிற்கல்வி ஆசிரியர் நிலை II என்ற பணிப் பெயரில் உட்படுத்தும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

## XI. மன்னார்குடி, சார்பு நீதிமன்றம் அமைத்தல்

உறுப்பினர்: திரு. வை. சிவபுண்ணியம்

**அமைச்சர்: மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் (சட்டத் துறை)**

**அறிக்கை**

மன்னார்குடியில் சார்பு நீதிமன்றம் அமைப்பது குறித்த கருத்துரு 1999-2000 ஆம் ஆண்டு பகுதி II திட்டமாகக் கொண்டு வரப்பட்டது. ஆனால், நிதிப்பற்றாக்குறை காரணமாக அக்கருத்துரு ஏற்கப்படவில்லை. நாகப்பட்டினத்தில் இயங்கி வரும் கூடுதல் சார்பு நீதிமன்றத்தை மன்னார்குடிக்கு மாற்றி, மன்னார்குடியில் ஒரு சார்பு நீதிமன்றம் ஏற்படுத்துமாறு 21-12-2001 அன்று மன்னார்குடி வழக்கறிஞர்கள் சங்கத் தலைவர் அரசைக் கேட்டுக் கொண்டார். இதன்மீது சென்னை உயர் நீதிமன்றத்தின் கருத்துக் கேட்கப்பட்டது. மன்னார்குடியில் சார்பு நீதிமன்றம் ஏற்படுத்தக்கூடிய அளவுக்குப் போதுமான வழக்குகள் நிலுவையில் இல்லை என்று சென்னை உயர் நீதிமன்றத் தலைமைப் பதிவாளர் தெரிவித்துள்ளார். மேற்கூறிய காரணத்தினால் மன்னார்குடியில் சார்பு நீதிமன்றம் ஏற்படுத்தும் வாய்ப்பு தற்போது இல்லை.

## XII. வேலூர் சத்துவாச்சாரி, ரங்காபுரம், இராமர் கோயில் இடிந்துவிழும் நிலை

**உறுப்பினர்: திரு. சி. ஞானசேகரன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி (இந்து சமய மற்றும் அறநிலையத் துறை)** [2002 மே 10

## அறிக்கை

வேலூர் மாவட்டம், வேலூர் வட்டம் மற்றும் நகர், சத்துவாச்சாரி பேரூராட்சியைச் சார்ந்த ரங்காபுரம் கிராமம், அருள்மிகு கோதண்டராமசாமி திருக்கோயில், சட்டப் பிரிவு 46(1)-ன்கீழ் விளம்புகை செய்யப்பட்ட திருக்கோயிலாகும். மேற்படி திருக்கோயிலின் இராஜகோபுரம், விமானங்கள், மதிற்சுவர் ஆகியவை காலத்தால் சிதிலமடைந்துள்ளதால், மேற்படி திருக்கோயிலின் திருப்பணிக்கு முதற்கட்டமாக, பின்வரும் விபரப்படி இந்து சமய அறநிலையத் துறை ஆணையரால் மதிப்பீடுகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

| திருப்பணி | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|
| (1) 5-நிலை ராஜகோபுரம் பழுதுபார்த்து வர்ணம் பூசுதல் | ரூ.3.20 லட்சம் |
| (2) மதிற்சுவர் பழுதுபார்த்துப் புதுப்பித்தல் | ரூ.1.75 " |
| (3) மூலவர் விமானம் பழுதுபார்த்தல் | ரூ.0.80 " |
| மொத்தம் " | ரூ.5.75 லட்சம் |

மேற்படி திருக்கோயிலில் திருப்பணிகள் மேற்கொள்ள ஏதுவாக திருப்பணிக் குழு அமைக்கவும், உபயதாரர்களை அணுகிடவும் நன்கொடைச் சீட்டுகள் அச்சிடவும், எஞ்சிய பணிகளுக்கு மதிப்பீடு தயாரித்து அங்கீகாரம் அளிக்கவும், வேலூர் துணை ஆணையரைக் கோரப்பட்டுள்ளது. விரைவில் திருப்பணியினைத் தொடங்க நடவடிக்கை எடுக்கவும் அறிவுறுத்தப்பட்டு, சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையரால் கண்காணிக்கப்படுகிறது.

## XIII. எடப்பாடி அரசு மருத்துவமனை படுக்கை வசதி

**உறுப்பினர்: திரு. ஐ. கணேசன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. செ. செம்மலை (மக்கள் நல்வாழ்வுத் துறை)**

## அறிக்கை

சேலம் மாவட்டம், எடப்பாடி அரசு மருத்துவமனையில் தற்போது உள்ள படுக்கை எண்ணிக்கை 26 ஆகும். மேலும், மருத்துவமனையின்



2002 மே 10]

படுக்கை எண்ணிக்கையினை அதிகரித்திடும் பொருட்டு அரசு ஆணை என் 62, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, நாள் 6-2-1998 மற்றும் 688, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 23-12-1998-ன்படி 12 படுக்கைகள் கொண்ட பிரசவப் பிரிவு மற்றும் 12 படுக்கைகள் கொண்ட குழந்தைகள் பிரிவு, இவற்றுக்கான கட்டடங்கள் கட்ட ஒப்பளிக்கப்பட்டது. இப்பிரிவுகளுக்கான கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டது. இப்பிரிவுகளுக்கான கட்டில், மெத்தை போன்ற உபகரணங்கள் வாங்க, மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

## XIV. எடப்பாடி மருத்துவமனை, தாலுகா அரசு மருத்துவமனையாக்குதல்

**உறுப்பினர்: திரு. ஐ. கணேசன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. செ. செம்மலை, (மக்கள் நல்வாழ்வுத் துறை)**

## அறிக்கை

அரசு மருத்துவமனைகள் உருவாக்கப்படும்பொழுது தரம் உயர்த்தப்படும்பொழுதும் அவை அமைந்துள்ள அமைவிடத்தைப் பொறுத்தே தாலுகா அரசு மருத்துவமனை/தாலுகா அல்லது அரசு மருத்துவமனை என வழங்கப்படுகிறது. எனவே, அரசு மருத்துவமனை எடப்பாடி தாலுக்காவில் இருப்பதால், அது தாலுகா மருத்துவமனைதான். இதற்காகத் தனியாக அரசு ஆணை ஏதும் வழங்கப்படுவதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## XV. சிதம்பரம், அரசு மருத்துவமனை, சுகாதாரச் சீர்கேடுகள்

**உறுப்பினர்: திரு. துரை. கி. சரவணன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. செ. செம்மலை (மக்கள் நல்வாழ்வுத் துறை)**

## அறிக்கை

சிதம்பரம், அரசு மருத்துவமனை வளாகத்தில் மருத்துவமனைக்கு வருகின்ற பொது மக்கள் சாப்பிட்டபின் கீழே போடுகின்ற இலைகள், குப்பைகள் ஆகியவற்றைக் குப்பைத் தொட்டியில் போடச் செய்து, அவ்வப்போது நகராட்சி மூலம் அப்புறப்படுத்தப்படுகிறது. மருத்துவமனை சுற்றுச்சுவர்களில் சில இடங்களில் உள்ள ஓட்டைகள் அடைக்கப்பட்டு,

பன்றிகள் உள்ளே நுழைவது தடுக்கப்பட்டுள்ளது. மேலும், மருத்துவமனை வளாகத்தில் நுழையும் பன்றிகள் நகராட்சி மூலம் அவ்வப்போது சுட்டுக் கொல்லப்படுகின்றன. இதனால் பன்றிகள் திரிவது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மருத்துவமனைப் பணியாளர்கள் மற்றும் நகராட்சி துப்பரவுத் தொழிலாளர்கள் மூலம் மருத்துவமனை வளாகம் தூய்மையாகப் பராமரிக்கப்படுகிறது.

## XVI. எடப்பாடி அரசு மருத்துவமனை, போதிய மருத்துவர்கள் நியமனம்

**உறுப்பினர்: திரு. ஐ. கணேசன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. செ. செம்மலை (மக்கள் நல்வாழ்வுத் துறை)**

**அறிக்கை**

தாலுகா மருத்துவமனைக்கு 7 மருத்துவர்கள் வழங்கப்பட வேண்டும் என்று வரைமுறை ஏதும் நிர்ணயிக்கப்படவில்லை. சேலம் மாவட்டம், எடப்பாடி அரசு மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள் 4. ஆனால், அம்மருத்துவமனையில் தற்போது 5 மருத்துவர்கள் (ஒதுக்குப் பணி மருத்துவர் ஒரு இடம்) பணிபுரிந்து வருகின்றனர். அங்கு பணிபுரியும் 5 மருத்துவர்களில் ஒருவர் குழந்தை நல சிகிச்சை சிறப்பு மருத்துவர். மற்றொருவர் முதுநிலை குடிமை மருத்துவர் ஆகும். இம்மருத்துவமனை 50 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகும்.

தற்போது இம்மருத்துவமனையில் ஒரு நாளைக்கு சராசரியாக 652 வெளி நோயாளிகளும், 21 உள் நோயாளிகளும் சிகிச்சை பெறுகின்றனர். இம்மருத்துவமனையில் வெளி நோயாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப மருத்துவர்கள் பணிபுரிந்து வருகின்றனர். எனவே, கூடுதலாக மருத்துவர் பணியிடங்கள் வழங்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

## XVII. சேலம், சித்தா மருத்துவமனை, படுக்கை வசதிகள்

**உறுப்பினர் திரு. மு. கார்த்தி**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. செ. செம்மலை (மக்கள் நல்வாழ்வுத் துறை)**

**அறிக்கை**

1. அனைத்து மாவட்ட தலைமை மருத்துவமனைகளிலும் சித்த மருத்துவ உள் நோயாளிகள் மற்றும் வெளி நோயாளிகள் பிரிவு தொடங்கப்பட வேண்டும் என்ற கொள்கைத் திட்டத்தின்கீழ், சேலம் உள்ளிட்ட கீழ்க்கண்ட 9 மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் 16 படுக்கைகள் கொண்ட உள்நோயாளிகள் மற்றும் வெளி நோயாளிகள்



பிரிவு தொடங்க அரசாணை எண் 584, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 27-11-1997-ல் அரசு அனுமதி வழங்கியது:

1. நாகர்கோயில், 2. நாமக்கல், 3. விழுப்புரம், 4. விருதுநகர், 5. கும்பகோணம், 6. திருவாரூர், 7. கரூர், 8. சிவகங்கை, 9. மேட்டூர் அணை அல்லது ஆத்தூர்.

சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரை சேலம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை, மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரியுடன் இணைந்திருந்ததால் 16 படுக்கைகள் கொண்ட சித்த மருத்துவமனையினை மேட்டூரிலோ அல்லது ஆத்தூரிலோ ஏற்படுத்த அரசு ஆணை பிறப்பித்தது.

2. பின்னர், மேட்டூர் அணை அரசு மருத்துவமனை மாவட்டத் தலைமை மருத்துவமனையாகக் கருதப்பட்டதால், 16 படுக்கைகள் கொண்ட சித்த மருத்துவ உள் நோயாளிகள் பகுதியினை மேட்டூர் அணை மருத்துவமனையில் அமைக்கலாம் என அரசு தெளிவுரை வழங்கியது.

3. எனவே, சேலம் மாவட்டத் தலைமை மருத்துவமனையாகச் செயல்பட்டு வரும் மேட்டூர் அணை அரசு மருத்துவமனையில் ரூ.20.00 இலட்சம் செலவில் உள் நோயாளிகள் மற்றும் வெளி நோயாளிகள் பிரிவுக்கான கட்டடம் கட்டப்பட்டு உரிய பிரிவுகள் இயங்கி வருகின்றன.

4. சேலம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் (இருப்பு மேட்டூர்) சித்த மருத்துவ உள் நோயாளிகள் பகுதி 16 படுக்கைகளுடன் செயல்பட்டு வருவதால் அங்கு சிகிச்சை பெறும் நோயாளிகளுக்குப் படுக்கை அறை வசதிகள் இல்லை என்ற நிலை ஏற்படவில்லை.

## XVIII. சென்னை, கொருக்குப்பேட்டை, தீ விபத்து

**உறுப்பினர்கள்: திரு. ஜே. ஹேமச்சந்திரன்**
**திரு. டி. மணி**
**திரு. ஜி.கே. மணி**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம் (வருவாய்த் துறை)**

**அறிக்கை**

தீ விபத்து ஏற்பட்ட நிலத்தின் பதிவுபெற்ற உரிமையாளர் ஆதிதிராவிடர் நலத் துறை ஆகும். இது காலி நிலமாக

வகைப்படுத்தப்பட்டுள்ளது. இப்பகுதி குடிசை மாற்று வாரியத்தால் குடிசைப் பகுதி என ஏற்றுக்கொள்ளப்பட்ட இடமாகும். இந்நிலத்தில் 2 கிரவுண்டு விஸ்தீரணத்தில் ஆக்கிரமணம் செய்துள்ள 25 குடிசைகள் தீ விபத்தில் எரிந்துவிட்டன. தீ விபத்து ஏற்பட்டதை அறிந்தவுடன் மாவட்டாட்சியர், இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் மற்றும் மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் ஆகியோர்களால் பார்வையிடப்பட்டது. தீ விபத்தினால் ஏற்பட்ட பொருட்சேதம் சுமார் ரூ.1,00,000 ஆகும். தீ விபத்தில் பாதிக்கப்பட்ட 25 குடும்பங்களுக்குத் தலா ரூ.2000 வீதம் நிவாரணத் தொகையும், ஒரு வேட்டி, ஒரு சேலை மற்றும் 5 கிலோ அரிசி வீதம் 11-04-2002 அன்று மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் மூலம் வழங்கப்பட்டது. பாதிக்கப்பட்ட பகுதியில் வசித்த குடும்பங்களுக்கு மாநகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் வாரியம் மூலம் குடிநீர் மற்றும் உணவு, இருப்பிட வசதி உடனடியாகச் செய்து கொடுக்கப்பட்டது. மேற்படி தீ விபத்து ஏற்பட்ட இடத்தில் பதட்ட நிலை ஏதுமில்லை.

## XIX. பட்டாபிராம், இந்துக் கல்லூரி அரசு நிலத்தில் தடுப்புச் சுவர் கட்டியுள்ளது

**உறுப்பினர்: திரு. சி. சண்முகம்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம் (வருவாய்த் துறை)**

### அறிக்கை

திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி வட்டம், தண்டுரை கிராமம் புல எண் 492/1-இல் 21.52 ஏக்கர் நிலத்தில் முன் நுழைவு செய்ய பட்டாபிராம் ஆர்.பி.சி.சி. கலவல கண்ணன் செட்டி அறக்கட்டளைக்கு, கல்லூரிக் கட்டடங்கள் கட்ட அரசு கடிதம் எண் 57303/எல்.1/69-2, வருவாய், நாள் 03-07-1969-இல் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி வழங்கப்பட்டது:-

(அ) கல்லூரிக்குத் தேவைப்படும் மொத்த விஸ்தீரணம் 40.00 ஏக்கர் நிலத்திற்கு அரசால் நிலக்கிரயமின்றி வழங்கப்பட்டுள்ள 21.52 ஏக்கர் நிலத்தைத் தவிர்த்து, மீதி நிலத்தை, அதனைச் சார்ந்துள்ள நிலங்களைக் கிரயம் வாங்கிக்கொள்ள வேண்டும் எனவும், மேற்படி நிலக்கிரயமின்றி ஒப்படைக்கப்பட்டுள்ள அரசு நிலத்தின்பேரில் இறுதி உத்தரவு வழங்கும்வரை இதன்பேரில் அரசு அவ்வப்போது வழங்குகின்ற பிரத்தியேக நிபந்தனைகளுக்குட்பட வேண்டும்;



(ஆ) மேலே குறிப்பிடப்பட்ட நிபந்தனையில் கூறியுள்ளவாறு, இக்கல்லூரிக்கு மீதம் தேவைப்படும் நிலங்களுக்கு, பட்டா நிலங்களாக வாங்க இயலவில்லை என்றால், அரசு இக்கல்லூரிக்கு மேற்படி அரசு நிலத்தில் செய்துள்ள எந்தவித முன்னேற்றத்திற்குரிய செலவினத்தையும் கருத்தில் கொள்ளாமல் அரசே இந்த நிலத்தை மீள எடுத்துக் கொள்ளும்;

(இ) இந்தக் கல்லூரி அறக்கட்டளை, இந்தக் குறைகளை இரண்டாண்டுக்குள் நிவர்த்தி செய்துகொள்ள வேண்டும்.

இந்நிபந்தனைகளைக் குறித்த காலத்திற்குள் மேற்படி கல்லூரி அறக்கட்டளை நிறைவேற்ற இயலாததால், அரசு வழங்கியுள்ள புல எண் 492ஏ/1-க்கு அருகில் உள்ள கீழ்க்காணும் 17.98 ஏக்கர் நிலங்களை, நிலக்கிரயமின்றி இக்கல்லூரிக்கு ஒதுக்கித்தரக் கோரி மேற்படி நிறுவனம் கேட்டுக்கொண்டது:—

| புல எண் | பரப்பு (ஏக்கரில்) | வகைப்பாடு |
|---|---|---|
| 492/ஏ2 | 0.36 | ஒதுக்கப்பட்ட காடு |
| 492/ஏ3 | 0.55 | " |
| 492/பி1 | 8.35 | " |
| 492/பி2 | 0.60 | " |
| 425/2 | 0.22 | புஞ்சைத் தரிசு |
| 426/2 | 4.06 | " |
| 432/1பி | 3.84 | ஒதுக்கப்பட்ட காடு |
| மொத்தம் .. | **17.98** ஏக்கர் | |

அக்கோரிக்கையின்மீது அரசு கடித எண் 28183/எப்.ஆர்.3/77-4, வனம் மற்றும் மீன்வளத் துறை, நாள் 21-11-1979-இல் கீழ்க்கண்டவாறு அரசு ஆணையிட்டது:

"இக்கல்லூரிக்கு முதலில் ஒப்படைக்கப்பட்ட 21.52 ஏக்கர் நிலத்துக்கு அன்றைய தேதிய நில மதிப்பின் அடிப்படையில் ஏக்கர் ஒன்றுக்கு ரூ.1000 நில மதிப்பாக வசூலிக்க வேண்டும். இது அன்றைய அளவையின்போது இப்புலத்தில் 21.52 ஏக்கருக்குப் பதில் 21.06 ஏக்கர் நிலம்தான் 'அ' பதிவேட்டின்படி பூமியில் உள்ளது. மீதமுள்ள 13.70 ஏக்கர் (அரசாணையின்படி 17.38 ஏக்கர் என இருக்க வேண்டும்) நிலத்தைப் பொறுத்தவரை இந்த நிலம் பாதுகாக்கப்பட்ட காட்டு

நிலம். ஆதலால் 1957 ஆம் ஆண்டின் நில மதிப்பின்படி ஏக்கர் ஒன்றுக்கு ரூ.1000 வீதமும், இதற்கு 1979 வரை ஆண்டு ஒன்றுக்கு 9% ஊக உயர்வு கொடுத்து, ஏக்கர் ஒன்றுக்கு ரூ.6,992 வீதம் வசூலிக்க வேண்டும்".

2. மேற்கூறிய நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளச் சம்மதம் தெரிவிக்குமாறு மேற்படி நிறுவனம் கேட்டுக்கொள்ளப்பட்டதில், அந்நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டதற்கான சம்மதத்தையும் கல்லூரி தெரிவிக்கவில்லை. அரசு முன் நுழைவு செய்ய அனுமதிக்கப்பட்டுள்ள புல எண் 492/1-இல் 21.52 ஏக்கர் நிலத்திற்கு, 03-07-1969 முதல் ஏக்கர் ஒன்றுக்கு ரூ.1000 என்று அரசு நிர்ணயித்துள்ள நில மதிப்பின்படி முன் நுழைவு அனுமதி வழங்கப்பட்ட நாளான 03-07-1969 முதல் 03-07-1986 வரை ஆண்டு ஒன்றுக்கு 9% ஊக உயர்வும், 03-07-1988 வரை 10% ஊக உயர்வும் 03-07-1989 முதல் 31-12-1998 வரை ஆண்டு ஒன்றுக்கு 12% ஊக உயர்வும் அளித்து 31-12-1998 தேதியில், பிரஸ்தாப நிலத்தின் மதிப்பு ரூ.3,61,025 எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்தத் தொகையை மேற்படி கல்லூரி நிர்வாகம் கடந்த 18-01-1999-இல் அரசுக் கணக்கில் செலுத்தி விட்டதாகவும், மேற்படி கல்லூரிக்குப் புல எண் 492/1-இல் ஏற்கெனவே முன் நுழைவு அனுமதி வழங்கப்பட்ட 21.52 ஏக்கர் நிலத்திற்குப் பதில் தற்போது கிராம 'அ1' பதிவேட்டின்படி பூமியில் உள்ள 21.06 ஏக்கர் நிலத்தை உரிமை மாற்றம் செய்யலாம் என மாவட்ட வருவாய் அலுவலர் பரிந்துரை செய்தார்.

3. பிரஸ்தாப கல்லூரிக்கு முன் நுழைவு செய்ய அனுமதி வழங்கப்பட்ட பரப்பு 21.52 ஏக்கர் என்றாலும், 'அ1' பதிவேட்டின்படி பூஸ்திதியில் 21.06 ஏக்கர் நிலம் மட்டுமே உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதால், 21.06 ஏக்கர் நிலத்திற்கு மட்டுமே நில மதிப்பினை நிர்ணயம் செய்திருக்க வேண்டும், என்றும், மாறாக, 21.52 ஏக்கர் நிலத்திற்கு மாவட்ட வருவாய் அலுவலர் நில மதிப்பினை நிர்ணயம் செய்துள்ளார் என்றும், இந் நேர்வில் அரசாணை எண் 907, வருவாய், நாள் 13-12-1994-இன்படி 1969 முதல் 1992 வரை 10% ஊக உயர்வும், 1993 முதல் 1998 வரை 12% ஊக உயர்வும் அளித்துக் கணக்கிட்டால் பிரஸ்தாப புலமான 21.06 ஏக்கர் நிலத்தின் மதிப்பு ரூ.3,65,571 ஆகிறது என்று சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் கூறியுள்ளார். மாவட்ட வருவாய் அலுவலர் நிர்ணயித்துள்ள நில மதிப்பிற்கும், அவ்வாரின் அலுவலகக் கணக்கீட்டுத் தாளின்படிக்



கணக்கிடப்பட்டுள்ள நில மதிப்பிற்கும் உள்ள வித்தியாசத் தொகை ரூ.4,546 ஆகிறது. காலதாமதமாக வசூலிக்கப்படும் தொகைகளுக்கு, அவை செலுத்தப்படும் நாள் வரை வட்டித் தொகை வசூலிப்பது வழக்கத்தில் உள்ளதாலும், கல்லூரி நிர்வாகம் பிரஸ்தாப புலத்தில் நுழைவு செய்த நாளிலிருந்து, அந்நிறுவனம், அந்நிலத்திற்கான கிரயம் செலுத்தும் நாள்வரை நடைமுறை விதிகளின்படி வட்டியினைக் கணக்கிட்டு அனுப்புமாறு கேட்கப்பட்ட அறிக்கை, திருவள்ளூர் மாவட்ட வருவாய் அலுவலரிடம் நிலுவையில் உள்ளதாகவும், இக்கல்லூரி நிர்வாகத்திற்கு அனுமதிக்கப்பட்ட 21.52 ஏக்கர் நிலப்பரப்பிற்குப் பதிலாக 30.62 ஏக்கர் நிலப்பரப்பில் இயங்கி வருவதாகவும் முதன்மைத் தலைமை வனப் பாதுகாவலர், வருவாய்த் துறைச் செயலருக்கு 18-12-2001 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார். கல்லூரி நிர்வாகத்திற்கு உரிமை மாற்றம் செய்யப்படவுள்ள 21.52 ஏக்கர் வன நிலங்களுக்காக வனத் துறைக்கு ஒப்படைக்கப்பட வேண்டிய ஈட்டு நிலங்கள் தொடர்பாக வருவாய் புறம்போக்கு நிலங்கள் பற்றிய விவரங்கள் பெறப்படவில்லை. எனவே, இதுகுறித்து வனத் துறைக்கு அறிக்கை அனுப்புமாறு நில நிர்வாக ஆணையர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலரைக் கேட்டுக்கொள்ளுமாறு வருவாய்த் துறை கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது எனவும், மேற்படி கல்லூரிக்கு நில உரிமை மாற்றம் செய்வது குறித்து ஆணைகள் எதுவும் வெளியிடப்படவில்லை எனவும், இந்நில உரிமை மாற்றத்திற்கு 1980 ஆம் ஆண்டின் வனப் பாதுகாப்புச் சட்டத்தின்படி மைய அரசின் முன் அனுமதி பெறப்பட வேண்டும் எனவும் முதன்மைத் தலைமை வனப் பாதுகாவலர் தெரிவித்துள்ளார்.

4. மேற்படி கல்லூரி புல எண் 492-இல் தடுப்புச் சுவர் கட்ட முயற்சித்தல் மற்றும் அதற்குப் பொது மக்களின் எதிர்ப்பு பற்றிய பொருள் பற்றி திருவள்ளூர் மாவட்டாட்சியரின் அறிக்கை பெறப்பட்டது. திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி வட்டம், தண்டுரை கிராமம், புல எண்கள் 492/ஏ மற்றும் 432/பி-க்கு அருகில் உள்ள சஞ்சீவி நகர் கிராமவாசிகள், புல எண் 492ஏ/1-இல் உள்ள குடிநீர்க் கிணற்றிலிருந்து நீர் கொண்டு செல்வதாகவும், அவர்களுடைய போக்குவரத்தினைத் தடுக்கும் வகையில் ஒரு தடுப்புச் சுவரைக் கட்ட, கல்லூரி நிர்வாகம் முயற்சித்ததாகவும், அதைக் கிராமவாசிகள் எதிர்த்ததால், மறு ஆணைகள் பிறப்பிக்கப்படும்வரை கட்டுமானப் பணிகள் வட்டாட்சியரால் நிறுத்தப்பட்டுள்ளனவென்று மாவட்ட ஆட்சியர் கூறியுள்ளார்.

492/ஏ1-ல் உள்ள நிலம், கிராமவாசிகளால் நடைபாதையாக பயன்படுத்தப்பட்டும், கல்லூரிக்குச் சொந்தமான கிணற்றிலிருந்து குடிநீர் எடுப்பதும் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும், எனவே, அங்கு எவ்விதமான பதட்டமான சூழ்நிலையும் இல்லை என்றும் மாவட்டாட்சியர் கூறியுள்ளார். இந்நேர்வில் புல எண் 492/1-இல், 21.52 ஏக்கர் நிலத்தில் முன் நுழைவு செய்ய மட்டுமே அறக்கட்டளைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. உரிமை மாற்றம் இன்னும் செய்யப்படவில்லை. எனவே, உரிமை மாற்றம் செய்து ஆணையிடும்போது, மேற்படி ஊர் மக்களின் நீர் கொண்டு செல்லும் போக்குவரத்துக்கு இடைஞ்சல் ஏற்படாவண்ணம் உரிய நிபந்தனைகளை விதிப்பது குறித்து ஆராய்ந்து ஆணைகள் பிறப்பிக்கப்படும்.

## XX காஞ்சிபுரம், கழிப்பட்டூர், குடிசைகள் எரிந்தது

**உறுப்பினர்: திரு. கே. ஆறுமுகம்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம் (வருவாய்த் துறை)**

**அறிக்கை**

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கற்பட்டு வட்டம், கழிப்பட்டூர் கிராமம் சமத்துவபுரம் என்ற இடத்தில் 09-04-2002 பிற்பகல் 2-30 மணி அளவில் ஏற்பட்ட தீ விபத்தில் 38 குடிசைகள் தீக்கிரையாகின. அதில் 37 குடிசைகள் முழுவதுமாக எரிந்துவிட்டன. ஒரு குடிசை பகுதியாக எரிந்துவிட்டது. முழுவதுமாகப் பாதிக்கப்பட்ட 37 நபர்களுக்குத் தலா ரூ. 2000 வீதமும் மற்றும் ஒரு குடிசை பகுதியாக பாதிக்கப்பட்டதற்கு ரூ. 1000-ம் ஆக மொத்தம் ரூ.75,000/- நிவாரணத் தொகையாக 10-04-2002-ல் வழங்கப்பட்டுள்ளது. மேலும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குத் தலா 5 கிலோ அரிசி, ஒரு லிட்டர் மண்ணெண்ணெய், ஒரு வேட்டி, ஒரு சேலை ஆகியவையும் வழங்கப்பட்டுள்ளன.

## XXI. புதுக்கோட்டை, அரிமளம், சத்துணவு மையம், குழந்தைகள் வாந்தி, மயக்கம்

**உறுப்பினர்: திரு. ப. அரசன்**

**அமைச்சர்: மாண்புமிகு திருமதி பா. வளர்மதி (சமூக நலத் துறை)**

**அறிக்கை**

புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த அரிமளம் ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளி சத்துணவு மையத்தில் 19-04-2002 ஆம்



தேதியன்று 350 மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது என்றும் வெள்ளிக்கிழமைதோறும் கொண்டைக் கடலை மாணவர்களுக்கு வழங்கப்படும் என்பதால் 19-04-2002 ஆம் தேதியன்று மாணவர்களுக்கு வேக வைத்த கொண்டைக் கடலை வழங்கப்பட்டது என்றும், அதனைச் சாப்பிட்டதில் இரண்டு மாணவர்கள் வாந்தியெடுத்தனர் என்றும், இதனைத் தொடர்ந்து 18 மாணவர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட கொண்டைக் கடலையில் கலப்படமேதும் இருக்கலாமென்ற பய உணர்வில் வாந்தியெடுத்தனர் என்றும் தெரிவித்துள்ளார். உடனடியாக அரிமளம் அரசு மருத்துவமனையிலிருந்து மருத்துவர்கள் மூலம் 243 மாணவர்களுக்குத் தடுப்பு மாத்திரை மற்றும் 107 மாணவர்களுக்குத் தடுப்பூசி போடப்பட்டது என்றும் அனைத்து மாணவர்களும் 19-04-2002 மாலையிலேயே நல்ல ஆரோக்கியத்துடன் வீட்டிற்குச் சென்று விட்டனர் என்றும், தெரிவித்துள்ளார். இது தொடர்பாக சத்துணவு மையத்தில் விநியோகம் செய்யப்பட்ட கொண்டைக் கடலையை பார்வையிட்டதில், அவை சனவரி 2002 ஆம் மாதத்தில் விநியோகம் செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. சனவரி 2002-ம் மாதத்தில் வழங்கப்பட்ட கொண்டைக் கடலையை ஏப்ரல் மாதத்தில் சமைத்து வழங்கிய சம்பந்தப்பட்ட பள்ளி சத்துணவு மைய அமைப்பாளர் மற்றும் உதவியாளர் ஆகியோர் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார். மேலும், இம்மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சி ஒன்றிய ஆணையர்களையும், அனைத்துப் பள்ளி சத்துணவு மையங்களையும் உடனடியாக ஆய்வு செய்து, தரம் குறைந்த அல்லது கெட்டுப்போன கொண்டைக்கடலை ஏதும் உள்ளதா என்பதைக் கண்டறிந்து அறிக்கை சமர்ப்பிக்கக் கோரப்பட்டது என்றும், ஊராட்சி ஒன்றிய ஆணையர்களிடமிருந்து அறிக்கை பெறப்பட்டதில், இம்மாவட்டத்தில் உள்ள 13 ஊராட்சி ஒன்றியங்களில், 3 ஊராட்சி ஒன்றியங்களில் மட்டும் 44 பள்ளி சத்துணவு மையங்களில் 384.190 கிலோ கொண்டைக்கடலை நல்ல நிலையில் இல்லாததைக் கண்டறிந்து, அவற்றை உடனடியாக அகற்ற உத்தரவிடப்பட்டது என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும், இம்மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பள்ளி சத்துணவு மையங்களுக்கும் நல்ல நிலையில் உள்ள கொண்டைக்கடலையையே வழங்க வேண்டுமென்றும் தமிழ்நாடு நுகர்பொருள் விநியோக மண்டல மேலாளர், புதுக்கோட்டை அவர்களுக்குத் தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்துள்ளார்.

[2002 மே 10

**XXII.** கோடம்பாக்கம், ஆற்காடு சாலை—நேரு சாலை சந்திப்பு போக்குவரத்து நெரிசல்

**உறுப்பினர்: திரு. ஜெ. அன்பழகன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன் (போக்குவரத்துத் துறை)**

**அறிக்கை**

ஆற்காடு சாலை—100 அடி சாலை (ஜவஹர்லால் நேரு சாலை) சந்திப்பில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக, கோடம்பாக்கம் மேம்பாலம் மற்றும் பல இடங்களில் இருந்து வடபழனி நோக்கிச் செல்லும் வாகனங்கள் என்.எஸ்.கே. சாலையின் வழியே நேரிடையாக 100 அடி சாலை சந்திப்பைச் சென்றடையாமல் இச்சந்திப்பிற்கு முன்பாக இருக்கும் துரைசாமி சாலை வழியாகத் திருப்பி விடப்படுகின்றன. இவ்வாகனங்கள் அசோக் நகர் இரண்டாவது நிழற்சாலை வழியாக 100 அடி சாலை சந்திப்பு சென்று, பின்னர் இடது பக்கம் திரும்பி வடபழனி நோக்கிச் செல்ல வகை செய்யப்பட்டுள்ளது. இத்தகைய போக்குவரத்து மாற்றத்தால் ஆற்காடு சாலை—100 அடி சாலை சந்திப்பில் போக்குவரத்து நெரிசல் குறைந்துள்ளது. மேலும், சென்னை தென்பகுதியில் இருந்து ஆவடி நோக்கிச் செல்லும் கனரக வாகனங்கள், பேருந்துகள் மற்றும் இரு சக்கர வாகனங்கள் இந்தச் சந்திப்பு வழியாகத்தான் சென்னை வடபகுதியை சென்றடைய வேண்டும். இதைக் கட்டுப்படுத்த வேண்டி, தாம்பரம் இரும்புலியூரில் இருந்து கோயம்பேடு அருகே உள்ள மதுரவாயல் வரை 200 அடி புறவழிச் சாலை அமைக்கப்பட்டு, தற்பொழுது வாகன போக்குவரத்திற்காகத் திறப்பதற்குத் தயாராக உள்ளது. இந்தப் புறவழிச் சாலை போக்குவரத்திற்காகத் திறந்துவிடப்பட்ட பின்னர், ஆற்காடு சாலை—100 அடி சாலை சந்திப்பில் போக்குவரத்து நெரிசல் வெகுவாகக் குறைந்துவிடும். மேலும், இந்தச் சந்திப்பில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க 100 அடி சாலையில் கோயம்பேடு பக்கம் இருந்து மேற்படி சந்திப்பில் இடது புறம் திரும்பும் வாகனங்களை, இந்தச் சந்திப்பிற்கு முன்பாக உள்ள நெற்குன்றம் பாதையில் குமரன் நகர் பிரதான சாலை வழியாக வடபழனி பேருந்து நிலையம் அருகே ஆற்காடு சாலை செல்ல வழிவகை செய்யப்பட்டு உள்ளது. இந்தப் போக்குவரத்து மாற்றத்தால் இச்சந்திப்பில் இடதுபுறம் திரும்பிச் செல்லும் வாகனங்கள் தேக்கம் இல்லாமல் உள்ளது.



2002 மே 10].

(2) வாகனங்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகி வருகின்றது. மேலும், இப்பகுதியில் புறநகர் ரயில் போக்குவரத்து வசதி இல்லாததால் மக்கள் மோட்டார் வாகனங்களையே சார்ந்திருக்க வேண்டியுள்ளது. எனினும், சீரான போக்குவரத்தை உருவாக்க, காவல் துறை அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது.

**XXIII.** வட சென்னை, அனல் மின் நிலையம், குளோரின் சுடுநீர் ஆற்றில் கலத்தல்

**உறுப்பினர்: திரு. த. ஆறுமுகம்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன் (மின் துறை)**

**அறிக்கை**

வட சென்னை, அனல் மின் நிலையத்திலிருந்து எவ்வித சாம்பல் மற்றும் குளோரின் கலந்த சுடுநீரும் வெளியேற்றப்படவில்லை. இம் மின் நிலையத்திலிருந்து வெளியேற்றப்படுவது வெதுவெதுப்பான நீரே தவிர சுடுநீர் அல்ல. அந்நீரும் மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் நிர்ணயித்திற்கேற்ப வெளிப்புற வெப்பத்தைக் காட்டிலும் 2 அல்லது 3 சென்டிகிரேடு மட்டுமே அதிகமானது. இந்நீர் கடலிலிருந்து எடுக்கப்பட்டு மின் நிலையத்தில் குளிருட்டப்படுவதற்குப் பயன்படுத்தப்பட்ட பிறகு, அதே நிலையில் வெளியேற்றப்படுவதால் எவ்வித வேதியல் குணமாற்றமோ, நச்சுத்தன்மையோ ஏற்பட வாய்ப்பில்லை.

மின் நிலையத்தில் உற்பத்தி ஆகும் சாம்பல் நீரானது, அதற்கென நிறுவப்பட்ட (ash dyke) சாம்பல் தொட்டியில் முழுப் பாதுகாப்போடு தனிக்குழாய்கள் மூலம் வெளியேற்றப்படுகிறது.

**XXIV.** பெரம்பலூர், குறும்பலூர், கோனேறியாற்றின் கரை, திருட்டு மணல் எடுக்கும்போது மூன்று பேர் இறந்தது

**உறுப்பினர்கள்: திரு. ஜே. ஹேமச்சந்திரன்**

**திரு. டி. மணி**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி (தொழில் மற்றும் வணிக வரித் துறை)**

**அறிக்கை**

பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் வட்டம், குறும்பலூர் (வடக்கு) கிராமப் புல எண் 292, கோனேறியாற்றில் 05-04-2002 ஆம் தேதி

இரவு சுமார் 10-30 மணி அளவில் டிராக்டர் எண் 46-6490 கப்பி மண் வெட்டியெடுக்கச் சென்றது. கப்பி மண் வெட்டியெடுத்துக் கொண்டிருந்த போது மண் சரிந்து விழுந்ததில் மண்ணில் புதையுண்டு மூச்சுத் திணறி 3 நபர்கள் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டனர்.

இறந்தவர்கள் விபரம்:

(1) அழகப்பக் கோனார் மகன் வெள்ளைச்சாமி (40)

(2) முத்துசாமி மகன் பெருமாள் (35)

(3) வெங்கடாஜலக் கோனார் மகன் பச்சைமுத்து (45)

2. இதில் அழகப்பக் கோனார் மகன் வெள்ளைச்சாமி மற்றும் முத்துசாமி மகன் பெருமாள் ஆகியோரது பிரேதங்களை எரித்துவிட்டனர். வெங்கடாஜலக் கோனார் மகன் பச்சைமுத்துவின் பிரேதம் போலீசாரால் கைப்பற்றப்பட்டு பிரேதப் பரிசோதனைக்காக பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டது. மேலும், பிரேதங்களை எரித்தது தொடர்பாகவும், விபத்து குறித்தும் பெரம்பலூர் காவல் நிலையத்தில் இந்திய தண்டனைச் சட்டம் 304ஏ, 379, 288, 201, 176 மற்றும் குற்ற எண் 164-ல் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

3. மேற்படி குறும்பலூர் கிராமப் புல எண் 292, கோனேரியாற்றில் மணல் குவாரிக்குக் குத்தகை ஏதும் விடப்படவில்லை. மேலும், விபத்து நடந்த இடத்தில் வெட்டியெடுக்கப்பட்டவை கப்பி மண் (பெரு மணல்) (Filling Soil). மேற்படி கப்பி மண் குறும்பலூர் கிராமத்திலுள்ள ஆவடியான் கோயில் மண்டபத்திற்காக வெட்டியெடுக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

4. மேலும், பெரம்பலூரில் வெள்ளாறு ஆற்றுப் பகுதியில் திருவாலந்துறை கிராமத்தில் புல எண் 327/4-ல் மட்டும்தான் ஒரே மணல் குவாரி உள்ளது. மேற்படி குவாரியிலும் பொது மக்களின் ஆட்சேபணையால் மணல் குவாரி நடைபெறவில்லை.

5. 2001-2002 ஆம் ஆண்டில் கள்ளத்தனமாக சிறு கனிமம் கடத்தப்பட்ட 119 வாகனங்கள் கைப்பற்றப்பட்டு, ரூ.30,30,392 அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளது.



**XXV. நெய்வேலி நிலக்கரி நிறுவனப் பங்குகள், தனியாருக்கு விற்பது**

**உறுப்பினர்கள்:** டாக்டர் பி. வள்ளல் பெருமான்

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்

திரு. சி. ஞானசேகரன்

திரு. கே.சி. கருணாகரன்

திரு. ஐ. கணேசன்

**அமைச்சர்:** மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி (தொழில் மற்றும் வணிக வரித் துறை)

**அறிக்கை**

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் ஒரு மைய அரசு நிறுவனமாகும். இந்நிறுவனத்தின்மீது இவ்வரசுக்கு அதிகாரம் ஏதும் இல்லை.

2. இந்நிறுவனம் இலாபத்தில் இயங்குவதாகத் தெரிய வருகிறது. பத்திரிகைச் செய்திகளின்படி, முதலீட்டை விடுவிக்கும் குழுவினர் (Disinvestment Commission) தனது 13-வது அறிக்கையில் நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தின் பங்கு முதலீடுகள் குறைப்பது தொடர்பாக மைய அரசிற்கு ஓர் அறிக்கை அனுப்பியுள்ளனர் என்றும், மைய அரசு இதன்மீது இன்னமும் முடிவு எடுக்கவில்லை என்றும், நெய்வேலி நிலக்கரி நிறுவனத்திற்கு இது தொடர்பாக எந்தவிதத் தகவலும் பெறப்படவில்லை எனவும் நிறுவனத்தின் உதவி நிறுவனச் செயலர் (Assistant Company Secretary) அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**XXVI. கூட்டுறவு, அரசு சர்க்கரை ஆலைகள், கரும்பு விவசாயிகளுக்குப் பங்குத் தொகை வழங்காதது**

**உறுப்பினர்:** திரு. லா. சந்தானம்

**அமைச்சர்:** மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி (தொழில் மற்றும் வணிக வரித் துறை)

**அறிக்கை**

கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளுக்குக் கரும்பு வழங்கும் விவசாயிகளுக்கு அரசு பங்குத் தொகை எதுவும் வழங்குவது

கிடையாது. கரும்புக்கு மைய அரசு நிர்ணயிக்கும் குறைந்தபட்ச விலைக்கு (SMP) மேல் மாநில அரசு கூடுதலாகப் பரிந்துரை விலை (SAP) நிர்ணயம் செய்து வந்துள்ளது.

2. 2000-2001 ஆம் ஆண்டு அரவைப் பருவத்தில் கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளுக்குக் கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு மைய அரசு சட்டபூர்வ விலையாக 8.5 விழுக்காடு சர்க்கரைக் கட்டுமானம் கொண்ட கரும்பிற்கு டன் ஒன்றுக்கு ரூ. 595 என்ற அடிப்படையிலும், மாநில அரசு பரிந்துரை விலையாக ரூ.775 என்ற அடிப்படையிலும், 10 விழுக்காடு சர்க்கரைக் கட்டுமானம் கொண்ட கரும்பிற்கு ஒரே விலையாக டன்னுக்கு ரூ.1,000 என்ற அடிப்படையிலும் கரும்பு விலை வழங்க ஆணையிடப்பட்டது.

3. 2000-2001 ஆம் அரவைப் பருவத்தில் கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகள் மைய அரசின் சட்டபூர்வ விலை முழுவதையும் 15-11-2001-க்குள் வழங்கி விட்டன. ஆனால், கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் நிலவிய கடுமையான நிதி நெருக்கடி, சர்க்கரை விலை வீழ்ச்சி போன்ற காரணங்களினால் ரூ.810.90 கோடி திரண்ட நட்டம் ஏற்பட்டதால் மாநில அரசு பரிந்துரை விலை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டது. 31-05-2001-ல் கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் கரும்புக் கிரயம் ரூ.175 கோடி பாக்கி இருந்தது. அதில் வங்கிக் கடன், சர்க்கரை விற்றதன் மூலம் கிடைத்த நிதியைக் கொண்டு ரூ.50 கோடி பட்டுவாடா செய்யப்பட்டது.

4. கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் நடைமுறை மூலதன நிதியுதவிக்காகவும் மற்றும் இந்த ஆலைகள் 2000-2001 ஆம் அரவைப் பருவத்திற்குக் கரும்பு விவசாயிகளுக்குக் கரும்பு விலை பாக்கியைக் கொடுப்பதற்கும், அரசு, தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடம் ரூ.125.88 கோடி கடனுதவி வழங்கக் கோரியது. தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் ரூ.87.20 கோடி கடன் வழங்க ஒப்புக்கொண்டு, முதல் தவணையான ரூ.50 கோடியில், அமராவதி மற்றும் சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் செலுத்த வேண்டிய கடன் நிலுவைத் தொகை ரூ.2.67 கோடியைப் பிடித்தம் செய்துகொண்டு ரூ.47.33 கோடியை அரசுக்கு வழங்கியது. அரசு, இத்தொகையை, பரிந்துரை விலைப்படியான நிலுவையினை கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் செலுத்துவதற்குக் கடனுதவி அளித்தது. அதன்படி, அனைத்துக் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளும் 2000-2001 ஆம் அரவைப் பருவத்திற்கான கரும்புக் கிரய நிலுவை அனைத்தையும் விவசாயிகளுக்கு வழங்கி விட்டன.



## XXVII. திருவண்ணாமலை மாவட்டம், கொத்தந்தவாடி, விவசாயியைக் காட்டு மிருகம் கடித்துக் குதறியது

**உறுப்பினர்: திரு. சி. ஞானசேகரன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. ப. மோகன் (வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை)**

### அறிக்கை

மேற்காண் சம்பவம் தொடர்பாக போளூர் வட்டாட்சியரிடமிருந்து 4-3-2002 அன்று வரப்பெற்ற தொலைபேசித் தகவலை அடுத்து கொத்தந்தவாடி கிராமம் மற்றும் சேத்துப்பட்டு கிராமத்திற்கு மாவட்ட வன அலுவலர், திருவண்ணாமலை சென்று விசாரித்ததில் அக் கிராமத்தைச் சேர்ந்த திரு. க. கிருஷ்ணமூர்த்தி (வயது 42) என்பவரை 4-3-2002 அன்று அதிகாலை வேளையில் சிறுத்தைப் புலி தாக்கியதால் காயமுற்றதாகவும், அவரை சேத்துப்பட்டு புனித தோமையர் மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரியவந்தது. அவரை மாவட்ட வன அலுவலர் சென்று பார்வையிட்டதில், காயமுற்ற நபருக்கு இடது கையில் எலும்பு முறிவும், கீறல்களும், வலது தொடையில் சிராய்ப்புகளும் ஏற்பட்டிருந்தது எனவும், எலும்பு முறிவிற்கும், மற்ற காயங்களுக்கும் கட்டுப் போடப்பட்டுள்ளது எனவும், பாதிக்கப்பட்டவரின் உடல் நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது எனவும் மாவட்ட வன அலுவலர் தெரிவித்துள்ளார். அந்த மருத்துவமனையில் உள்ள மருத்துவர் கார்த்திகேயனிடம் விசாரித்ததில், 4-3-2002 அன்று அதிகாலை 5-30 மணியளவில் மேற்படி நபர் காட்டு மிருகத்தால் தாக்கப்பட்டதற்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. பாதிக்கப்பட்டவரை விசாரித்ததில், சிறுத்தைப் புலியால் தாக்கப்பட்டதாகத் தெரிவித்தார். மேலும், காயமுற்ற திரு. கிருஷ்ணமூர்த்தி தொடர்ந்து இன்னும் சில நாட்களுக்கு மருத்துவ சிகிச்சையில் இருப்பார் என்றும், அவர் விரும்பினால் சிறப்பு சிகிச்சைக்காக வேறு மருத்துவமனைக்கு மாற்றப்படுவார் என்றும் மருத்துவர் தெரிவித்துள்ளார். மேலும், தாக்குதல் நடந்த இடத்தை மாவட்ட வன அலுவலர் தணிக்கையிட்டதில், பல கால் தடங்கள் உள்ளது தெரிய வந்ததாகவும், அதனைச் சரிபார்த்ததில் மேற்படி கால் தடம் சிறுத்தையின் கால் தடம்தான் என்பது தெரிய வந்துள்ளது. இக்கிராமம், ஆளியாலமங்கலம் காப்புக் காட்டிற்கு சுமார் 10 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. மேலும், கிழக்கு-மேற்குப் பகுதிகளும் காப்புக் காட்டிற்கு அருகில்

உள்ளன. மேற்காண் சம்பவம் தொடர்பாக சரகப் பணியாளர்கள் தேடுதல் வேட்டை நடத்தினர். சிறுத்தையின் நடமாட்டம் தொடர்பாக விழிப்புடனும், கவனத்துடனும் இருக்குமாறு உள்ளூர் காவல் துறையினர் மற்றும் வருவாய்த் துறையினருடன் மாவட்ட வன அலுவலர் விவாதித்து உள்ளார். சந்தனத் தோட்ட உதவி வனப் பாதுகாவலர், மேற்கண்ட இடத்தில் முகாமிட்டு முழு நடவடிக்கைகளை மேற்பார்வையிட்டு, கண்காணிக்க கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். மேலும், சிறுத்தையால் தாக்கப்பட்டு சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருந்த திரு. கிருஷ்ணமூர்த்தி என்பவர் 6-3-2002 அன்று புனித தோமையர் மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டு, எலும்பு முறிவு தொடர்பாக சிகிச்சை பெற வேண்டி 8-3-2002 அன்று சென்னை, அரசு பொது மருத்துவமனையில் எலும்பு முறிவு சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## XXVIII. தமிழகத்தில் தோல், சாராவி, இரசாயன சாயத் தொழிற்சாலைகள் உரிமம் இல்லாமல் நடைபெறுவது

**உறுப்பினர்: திரு. சி. ஞானசேகரன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. ப. மோகன் (வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை)**

### அறிக்கை

தமிழகத்தில் மொத்தமாக 970 தோல் தொழிற்சாலைகளும், 15 எரிசாராயத் தொழிற்சாலைகளும், 75 இரசாயனத் தொழிற்சாலைகளும், 1,792 சாயத் தொழிற்சாலைகளும் உள்ளன. இவற்றில் உரிமம் இல்லாமல், உரிமம் புதுப்பிக்கப்படாமல் நடைபெறும் தொழிற்சாலைகளின்மீது மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

*(1) தோல் தொழிற்சாலைகள்:*

970 தோல் தொழிற்சாலைகளில், 794 தொழிற்சாலைகள் "முதல் இசைவாணைகள்" வாரியத்தில் பெற்றுள்ளன. மீதமுள்ள 176 தொழிற்சாலைகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்காததால், உச்ச நீதிமன்ற உத்தரவுப் படி மூடப்பட்டுள்ளன. 2001-2002 வரை 3 தோல் தொழிற்சாலைகளுக்கு மட்டும் உரிமம் வாரியத்தால் புதுப்பிக்கப்பட்டுள்ளது. சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரில் கரைந்துள்ள திடப் பொருட்களின் அளவு, வாரியம் நிர்ணயித்த அளவான 2100 மி.கி./லி. அளவைவிட அதிகமாகக்



காணப்படுவது பிற தொழிற்சாலைகளுக்கு உரிமம் புதுப்பிக்கப் படாததற்குக் காரணமாகும். மேலும், மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம் (Central Leather Research Institute, Chennai), தேசிய சுற்றுச்சூழல் ஆராய்ச்சி நிறுவனம் (National Environmental Engineering Research Institute), நாக்பூர், ஐக்கிய நாடுகள் தொழில் வளர்ச்சி நிறுவனம் (United Nations Industrial Development Organisation) ஆகியவை பரிந்துரைத்துள்ள தூய தொழில்நுட்ப முறைகளைப் பின்பற்றுமாறு வாரியம் வலியுறுத்தி வருகிறது. இதுதவிர, எதிர்மறை சவ்வூடுப் பரவல் முறையினைப் பின்பற்ற வேண்டுமென்றும் வாரியம் வலியுறுத்தி வருகிறது. முதற்கட்டமாக வாரியம் குறிப்பிட்டுள்ள மேற்காணும் வழிமுறைகளைப் பின்பற்றாத 376 தொழிற்சாலைகளுக்கு முகாந்திர விளக்கம் கேட்டு வாரியம் கடிதம் அனுப்பியுள்ளது. வாரியத்தின் அறிவுரைகளை ஏற்று, தனியாகவோ அல்லது கூட்டாகவோ சேர்ந்து கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்குமாயின் அவற்றுக்கு வாரியம் இசைவாணை வழங்கும்.

*(2) எரிசாராயத் தொழிற்சாலை:*

எரிசாராயத் தொழிற்சாலைகளைப் பொறுத்தமட்டில் "முதல் இசைவாணை" பெற்றுள்ள 15 தொழிற்சாலைகளில், எந்தவொரு தொழிற்சாலைக்கும் 2001-2002 வரை உரிமம் புதுப்பிக்கப்படவில்லை, தொழிற்சாலைக் கழிவு நீரை சர்க்கரை ஆலையின் கசடு மண்ணுடன் சேர்த்து உயிரக உரம் முழுவதுமாகத் தயாரிக்காததால், உரிமம் புதுப்பிக்கப்படவில்லை. மேலும், சுற்றுச்சூழலை மேம்படுத்துவதற்காகத் தற்போது தயார் செய்யும் உயிரக உரத்தின் அளவை அதிகரிக்க வாரியத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சுத்திகரித்த கழிவு நீருடன் கலந்து முழுமையாக விவசாயத்திற்கு உபயோகிக்குமாறு வாரியத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதனால் நிலத்தடி நீர் மாசுபடும் அச்சுறுத்தல் குறைய வாய்ப்புள்ளது.

*(3) இரசாயனத் தொழிற்சாலை:*

"முதல் இசைவாணைகள்" பெற்றுள்ள மொத்தத் தொழிற்சாலைகள் 75-ல், 10 தொழிற்சாலைகளுக்கு மட்டும், 2001-2002 வரை உரிமம் புதுப்பிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 65 தொழிற்சாலைகள் நிறுவியுள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் காற்று மாசுத் தடுப்புச் சாதனங்கள், வாரியம் நிர்ணயித்துள்ள குறியீட்டிற்கு உட்படாமல் இருப்பதால் அவற்றிற்கு இசைவாணை புதுப்பிக்கப்படவில்லை.

**(4) சாயத் தொழிற்சாலைகள்:**

மொத்தமுள்ள 1,792 சாயத் தொழிற்சாலைகளில், 1,273 தொழிற்சாலைகள் மட்டும் "முதல் இசைவாணை" பெற்றுள்ளன. 519 தொழிற்சாலைகள் உரிமம் இல்லாமல் (முதல் இசைவாணை) செயல்படுகின்றன. 11 தொழிற்சாலைகளுக்கு மட்டும் 2001-2002 வரை உரிமம் புதுப்பிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலான தொழிற்சாலைகள் அரசு ஆணை 213, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை, நாள் 30-3-1989-ல் குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்கு மாறாக, நீர்நிலைகளிலிருந்து 1 கிலோ மீட்டர் தொலைவிற்குள் இருப்பதாலும், தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீர் நீர்நிலைகளில் கலந்து மாசு ஏற்பட வாய்ப்பு இருப்பதாலும், அவற்றுக்கு வாரியம் "முதல் உரிமம்" வழங்கவில்லை. மேலும், சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரில் கரைந்துள்ள திடப் பொருட்களின் அளவு 2,100 மி.கி./லி. விட அதிகமாகக் காணப்பட்டதாலும், எதிர்மறை சவ்வூடு பரவல் முறையினைத் தொழிற்சாலைகள் பின்பற்ற வேண்டுமென்று வாரியம் வலியுறுத்தியும் அதனைப் பின்பற்றாததாலும், சுத்திகரிப்பு நிலையத்தைத் திறம்பட இயக்காததாலும், தொழிற்சாலைகளுக்கு வாரியம், உரிமத்தைப் புதுப்பிக்கவில்லை. மேற்கண்ட வழிமுறைகளைப் பின்பற்றாத தொழிற்சாலைகள்மீது வாரியம் நீர் சட்டம் பிரிவு 33-A-ன்கீழ் மூடுதல் உத்தரவினைப் பிறப்பித்துள்ளது.

தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீர் மற்றும் புகையின் தரம், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் நிர்ணயித்த தரத்திற்கு உட்பட்டு இருக்கும் பட்சத்தில், தொழிற்சாலைகளுக்கு இசைவாணை வாரியத்தால் புதுப்பிக்கப்படும்.

**XXIX. பண்ருட்டி, கெம்பிளாஸ்ட் கம்பெனி, சமட்டிக்குளம் ஏரியில் கழிவு நீரைத் தேக்கி வைப்பது**

**உறுப்பினர்: திரு. தி. வேல் முருகன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. ப. மோகன் (வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை)**

**அறிக்கை**

திருவாளர்கள் கெம்பிளாஸ்ட் சன்மார் லிமிடெட் என்ற நிறுவனம், ஈடாம்புலியூர் கிராமம், பண்ருட்டி வட்டம், கடலூர் மாவட்டத்தில் 972 முதல் இயங்கி வருகிறது. இதில் மாதத்திற்கு 2,100 கிலோ



லிட்டர் எரிசாராயம் தயாரிக்கப்படுகின்றது. உற்பத்தியின்போது நாளொன்றுக்கு 1,200 கி.லி. கழிவு நீர் வெளி வருகின்றது. அக்கழிவு நீரைத் தொழிற்சாலை தன்னிடம் உள்ள சுத்திகரிப்பு நிலையத்தின் மூலம் சுத்திகரித்த பின் தொழிற்சாலை அருகில் உள்ள 50 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள 66 எண்கள் கொண்ட மண் குட்டைகளில் தேக்கி வைத்து சூரிய வெப்பத்தால் ஆவியாக்கப்படுகிறது. இந்த மண் குட்டைகளிலிருந்து கழிவு நீர் எதுவும் வெளியேற்றப்படுவதில்லை.

மேற்படி மண் குட்டைகள் அமைந்துள்ள 50 ஏக்கர் நிலப்பரப்பிற்கு அருகில் சமட்டிக்குளம் என்ற குட்டை உள்ளது. இதன் பரப்பளவு சுமார் 6 ஏக்கர் ஆகும். இது அரசு புறம்போக்கு நிலமாகும். இந்த சமட்டிக்குளத்தில் 4 ஏக்கர் பரப்பை மேற்கண்ட தொழிற்சாலை அதன் சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரை உலர வைப்பதற்காக மண் குட்டைகள் அமைத்து உபயோகப்படுத்தி வருகின்றது. இதற்காக இந்நிறுவனம் 1996 ஆம் ஆண்டு வரை அரசாங்கத்திற்கு அபராதத் தொகை கட்டி வந்துள்ளதாகத் தெரிவித்துள்ளது. மீதமுள்ள 2 ஏக்கர் நிலத்தைத் தனியார் ஆக்கிரமித்து முந்திரி பயிரிட்டு வருகின்றனர் என்று அறியப்பட்டது. இந்தக் குட்டைக்கு அருகில் கிராமமோ, குடியிருப்பு வீடுகளோ இல்லை. மேலும், இக்குட்டையைச் சுற்றி தனியாருக்குச் சொந்தமான நிலங்கள் உள்ளன. இதில் முந்திரி பயிரிடப்பட்டுள்ளது.

இத்தொழிற்சாலையைச் சுற்றியுள்ள ஆழ்துளைக் கிணறுகளில் நீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டன. அதில் இரண்டு ஆழ்துளைக் கிணறுகள் பாசனத்திற்காகவும், மூன்று ஆழ்துளைக் கிணறுகள் வீட்டு உபயோகத்திற்காகவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஆய்வு முடிவுகளின்படி, நிலத்தடி நீரின் தரம் குடிநீரின் தரத்திற்கு உட்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் இந்நிறுவனத்தை கழிவு நீரினால் உயிரக உரம் (Bio-Compost) தயாரிக்கும்படி அறிவுறுத்தியுள்ளது. அதனடிப்படையில் உயிரக உரம் தயாரிப்பதற்கான வேலைகளைத் தொழிற்சாலை தொடங்கியுள்ளது. முதல் கட்டமாக 15-5-2002-ல் உயிரக உரம் தயாரிக்கப்படும் என்று தொழிற்சாலை உறுதி அளித்துள்ளது.

[2002 மே 10

**XXX.** கடலூரர் டான்பாக் நிறுவனம், ஜிப்சம் பவுடர், மக்களுக்குக் கண் எரிச்சல்.

**உறுப்பினர்: திரு. தி. வேல் முருகன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. ப. மோகன் (வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை)**

**அறிக்கை**

திருவாளர்கள் டான்பாக் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் என்ற இத்தொழிற்சாலையானது, சிப்காட், குடிகாடு, கடலூரில் 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்துடன் (டிட்கோ) இணைந்து ஆரம்பிக்கப்பட்டது. இத்தொழிற்சாலையில் அலுமினியம் புளோரைடு மற்றும் கிரையோலைட், மேலும் அதனைச் சார்ந்த இரசாயனப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இத்தொழிற்சாலையில் கிரையோலைட் உற்பத்திப் பிரிவில் மாதமொன்றுக்கு 2550 டன் ஜிப்சம் உற்பத்தி செய்யப்படுகின்றது. இந்நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட முதல் இரண்டு வருடங்களில் உற்பத்தி செய்த ஜிப்சம் விற்க முடியாத காரணத்தினால், தொழிற்சாலை வளாகத்திலேயே கொட்டி வைக்கப்பட்டுள்ளது. அது தற்போது மிகவும் கெட்டியாகி இறுகிய நிலையில் உள்ளது. இது சிதம்பரம் சாலையில் இருந்து 335 மீட்டர் தூரத்தில் தொழிற்சாலை வளாகத்துக்குள் கொட்டி வைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த இடைப்பட்ட பகுதியில் மரங்களும், அலுவலகக் கட்டடமும் உள்ளன. இருப்பினும், இந்த ஜிப்சம் அனைத்தும் மிகவும் கெட்டியாகி இறுகிய நிலையில் உள்ளதாலும், தற்போது உற்பத்தி செய்யப்படும் ஜிப்சம் உடனுக்குடன் விற்கப்படுவதாலும், ஜிப்சம் துகள்கள் காற்றில் கலந்து மாசுபடுவதற்கான வாய்ப்பு ஏதும் இல்லை.

**XXXI.** திருப்போரூர், தொழிற்சாலைக் கழிவு நீர், விவசாயம் பாதிப்பு

**உறுப்பினர்: திருமதி எஸ். கனிதா சம்பத்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. ப. மோகன் (வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை)**

**அறிக்கை**

திருப்போரூர் தொகுதிக்கு உள்ளடங்கிய பகுதிகளில் பல வகைப்பட்ட தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. குறிப்பாக, ஆலத்தூர் பகுதியில்



2002 மே 10]

மருந்துப் பொருட்கள் தயாரிப்பதற்கான தொழிற்சாலைகள் அமைந்துள்ள சிட்கோ தொழிற்பேட்டையும் இயங்கி வருகிறது. இத்தொகுதியில் அமைந்துள்ள அனைத்துத் தொழிற்சாலைகளும் தொழிற்சாலை செயல் முறைகளிலிருந்து கழிவு நீர் வெளியாகும் தொழிற்சாலைகள் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திடம் இசைவாணை பெற்று இயங்கி வருகின்றன. செயல்முறைக் கழிவு நீர் வெளியேற்றும் தொழிற்சாலைகள் அதற்கான சுத்திகரிப்பு நிலையம் அமைத்து கழிவு நீரை வாரியம் நிர்ணயித்துள்ள அளவீடுகளுக்கு உட்பட்டு சுத்திகரிப்புச் செய்வதை வாரியம் முனைப்புடன் கண்காணித்து வருகிறது. மேலும், சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரைத் தொழிற்சாலை வளாகத்திலிருந்து வெளியேற்றாமல் வளாகத்திற்குள்ளாகவே மரங்களை வளர்ப்பதற்கும் அல்லது முறையாகச் சுத்திகரிப்பு செய்யப்பட்ட கழிவு நீரைத் தொழிற்சாலை உபயோகத்திற்கே மறு சுழற்சி முறையில் பயன்படுத்தவும் இசைவாணையில் தகுந்த நிபந்தனைகள் விதிக்கப்படுகின்றன.

திருப்போரூர் தொகுதிக்குட்பட்ட புதுப்பாக்கத்தில் திருவாளர்கள் ஒயிட் அவுஸ் பிராசஸ் (பி) லிமிடெட் மற்றும் ஆம்பிண்ட் என்ற இரு சாயத் தொழிற்சாலைகள் அமைந்துள்ளன. திருவாளர்கள் ஆம்பிண்ட் லிமிடெட் தற்போது ஒரு வருடமாக இயங்கவில்லை. மேற்கூறிய இந்தத் தொழிற்சாலையை இயக்கும் உத்தேசம் இல்லை என இத்தொழிற்சாலை உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர். திருவாளர்கள் ஒயிட் அவுஸ் பிராசஸ் லிமிடெட் 1991 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகின்றது. நாளொன்றுக்கு 2.5 டன் துணிக்குச் சலவை மற்றும் சாயம் இடப்படுகின்றது. இத்தொழிற்சாலையிலிருந்து நாளொன்றுக்கு 150 கிலோ லிட்டர் கழிவு நீர் வெளியேற்றப்படுகிறது. இந்தத் தொழிற்சாலைக் கழிவு நீரைச் சுத்திகரிப்பு செய்ய சுத்திகரிப்பு நிலையம் அமைந்திருந்தபோதிலும், சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீர், வாரியம் நிர்ணயித்துள்ள அளவீடுகளுக்குள் இல்லாமல் இருந்த காரணத்தினால், அவர்களுடைய நிலத்தில் தேக்கி வைக்கப்பட்ட சுத்திகரிப்பு செய்யப்பட்ட கழிவு நீரால் அருகில் உள்ள கிணறுகளில் நிலத்தடி நீர் பாதிப்பு ஏற்பட்டு, விவசாயத்திற்குப் பாதிப்பு ஏற்பட்டதாகப் புகார் வந்தது. எனவே, வாரியத்தால் 23-4-2001 தேதியிட்ட ஆணையில், இத்தொழிற்சாலை மூடப்பட்டு, அதனுடைய மின் இணைப்புத் துண்டிக்கப்பட்டது. கழிவு நீரைச் சுத்திகரிப்புச் செய்ய சுத்திகரிப்பு நிலையத்தை மேம்படுத்தி, வாரியம் நிர்ணயித்துள்ள அளவுகளுக்குள் சுத்திகரிப்புச் செய்வதாகவும் உறுதியளித்தது. தொழிற்சாலை அளித்த உறுதியின்பேரில், வாரியம் இத்தொழிற்சாலையை மூன்று மாத காலம் இயக்குவதற்கு 8-2-2002 அன்று ஆணை பிறப்பித்தது. மேலும் இந்தத்

தொழிற்சாலைக் கழிவு நீரிலுள்ள சாயத்தின் நிறத்தைப் போக்குவதற்கும் எதிர்மறை சவ்வூடு பாவல் முறை அமைத்து கழிவு நீரைச் சுத்திகரிக்கச் செய்து மறு சுழற்சி மூலம் மீண்டும் பயன்படுத்தி தொழிற்சாலையிலிருந்து எந்தவிதமான கழிவு நீரையும் வெளியேற்றாமல் இருக்க நிபந்தனை விதித்துள்ளது.

மகாபலிபுரம் பகுதியில் அமைந்துள்ள இறால் பண்ணைகள், உச்ச நீதிமன்ற உத்தரவின்படி, மாவட்ட நீர்வாழ் உயிரின வளர்ப்புக் குழுமத்திடம் உறுதியளித்து (அஃபிடவிட்) இறால் பண்ணைகளை நடத்தி வருகின்றன. இந்த இறால் பண்ணைகள் மாவ்ட்ட, மாநில, தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்புக் குழுமத்திடம் அனுமதி பெறுதல் வேண்டும். பக்கிங்காம் கால்வாயிலிருந்தும், பேக் வாட்டர்களிலிருந்தும் நீரை எடுத்து இறால் வளர்த்து, பின்னர் அந்தப் பகுதியிலேயே நீர் வெளியேற்றப்படுகிறது. விவசாய நிலங்களில் நீரை வெளியேற்ற அனுமதி அளிக்கப்படுவதில்லை.

ஆலததூரில் அமைந்துள்ள தொழிற்பேட்டையில் உள்ள தொழிற்சாலைகள் கழிவு நீரைச் சுத்திகரிப்பு செய்து மறு சுழற்சி மூலம் மீண்டும் பயன்படுத்துகின்றன. அல்லது, சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரை தொழிற்சாலை வளாகத்திற்குள்ளாகவே மரங்களை வளர்ப்பதற்குப் பயன்படுத்துகின்றன. மீதமுள்ள கழிவு நீர் சிட்கோ நிறுவனத்தால் அமைக்கப்பட்டுள்ள ஆக்ஸிடேசின் குட்டையிலேயே தேக்கி வைக்கப்படுகின்றன. மேலும் ஏதாவது ஒரு குறிப்பட்ட தொழிற்சாலை கழிவு நீரைச் சரியாகச் சுத்திகரிப்பு செய்யாமலிருப்பதோ அல்லது கழிவு நீரைத் தொழிற்சாலை வளாகத்திலிருந்து வெளியேற்றுவதோ, கண்காணிப்பின்போது அறியப்பட்டாலோ அல்லது அதுகுறித்து, புகார்கள் பெறப்பட்டாலோ, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் உடனடியாகக் கழிவு நீர் வெளியேற்றுவதைத் தடுத்து நிறுத்தி, தொழிற்சாலைகள்மீது நீர் (மாசுத் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுத்து வருகிறது. இதுபோன்ற புகார்கள் குறிப்பிட்ட தொழிற்சாலைகள்மீது பெறப்பட்டால், வாரியத்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளிக்கப்படுகிறது.



## XXXII. கடலூர் மாவட்டம், டானெக்ஸ் நிறுவனம், உரிய அனுமதியின்றி இயங்குவது

**உறுப்பினர்: திரு. தி. வேல் முருகன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. ப. மோகன் (வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை)**

### அறிக்கை

கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், மருங்கூரில் உள்ள திருவாளர்கள் டானெக்ஸ் லெதர்ஸ் (பி) லிமிடெட் என்னும் தொழிற்சாலை 1994 ஆம் ஆண்டிலிருந்து இயக்கத்தில் உள்ளது. இத்தொழிற்சாலைக்கு 14-12-1996 நாளிட்ட தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் நிலை ஆணையில் நீர் மற்றும் காற்று சட்டத்தின்கீழ் இசைவாணை வழங்கப்பட்டு, 31-3-2001 வரை புதுப்பிக்கப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலை ஆஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஆட்டுத் தோலைப் பதனிடுகிறது. தோல் பதனிடும் செயல்முறையிலிருந்து வெளிவரும் கழிவு நீர் தற்போது நாளொன்றுக்கு 312 கிலோ லிட்டர் சுத்திகரிக்கப்பட்டு, ஏற்கெனவே தொழிற்சாலையின் வளாகத்தில் முந்திரித் தோப்புக்குப் பாசனத்திற்குப் பயன்படுத்தப்பட்டது. தற்போது தொழிற்சாலையின் மறு உபயோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. அதில் கரைந்துள்ள திடப்பொருட்கள் (Total dissolved solids) உள்ள கழிவு நீர் மட்டும் தற்போது நாளொன்றுக்கு 23 கிலோ லிட்டர், சூரிய வெப்பத்தைக் கொண்டு ஆவியாக்கும் நீர் கழிவு இல்லாத தொட்டிகளில் தேக்கி வைக்கப்பட்டு ஆவியாக்கப்படுகிறது. கழிவு நீரில் கலந்துள்ள குரோமியத்தைப் பிரித்தெடுக்க அதற்கான அமைப்பு (Chrome Recovery Plant) குரோமியத்தைப் பிரித்தெடுத்து, மறு சுழற்சி செய்யப்படுகின்றது. எனவே, இத்தொழிற்சாலையிலிருந்து உள்ளேயும் மற்றும் வெளியேயும் எந்தவிதமான கழிவு நீரும் தற்போது வெளியேற்றப்படுவதில்லை. சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரின் தரம், பொதுவாக வாரியம் நிர்ணயித்த தரத்திற்கு உட்பட்டுள்ளது.

தொழிற்சாலைக்குத் தேவையான மூலப்பொருட்கள் கிடைக்கப் பெறாததால், கடந்த ஐந்து மாதங்களாக தோல் பதனிடும் வேலை நடைபெறுவதில்லை. எனவே கடந்த ஐந்து மாதங்களாக இத்தொழிற்சாலையில் கழிவு நீர் மற்றும் திடக்கழிவுகள் உற்பத்தி செய்யப்படுவதில்லை. தொழிற்சாலை மீண்டும் இயங்கத்

தொடங்கியவுடன், அதன் செயல்பாடுகளைக் கண்காணித்து பின்பு இசைவாணையைப் புதுப்பிக்க வாரியம் பரிசீலனை செய்யும்.

## XXXIII. நீலகிரி மாவட்டம், பச்சைத் தேயிலை விலை, விவசாயிகள் பாதிப்பு.

**உறுப்பினர்கள்: திரு. கா. கந்தசாமி**

**திரு. ஜி. பழனிசாமி**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. இரா. விஸ்வநாதன் (ஊரகத் தொழில் துறை)**

### அறிக்கை

நீலகிரி மாவட்டத்தில் சுமார் 75,000 ஏக்கர் நிலப்பரப்பில் தேயிலை பயிரிட்டு வரும் ஏறத்தாழ 50,000 சிறு தேயிலை விவசாயிகள் உள்ளனர். இவர்களில் 21,000 சிறு தேயிலை விவசாயிகள் தேயிலையை வாங்கி விற்கின்ற 16 தொழிற்சாலைகளைக் கொண்ட தேயிலை தொழிற் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ளனர். இது தவிர, 150 தனியார் தேயிலைத் தூள் வாங்கி விற்கின்ற தொழிற்சாலைகள் உள்ளன.

1999-2000-ல் தேயிலைத் தூளின் விலை கடுமையாக வீழ்ச்சி அடைந்து பச்சைத் தேயிலையின் விலை கிலோ ஒன்றுக்கு ரூ.4.50 ஆக குறைந்தது. இது தயாரிப்புச் செலவைவிடக் குறைவானதாகும்.

நீலகிரி மாவட்டத்திலுள்ள சிறு தேயிலை விவசாயிகளின் பிரச்சினைகளைச் சமாளிக்கும் பொருட்டு, மாநில அரசு கீழ்க் குறிப்பிட்டவாறு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தது:

(அ) தமிழ்நாடு பொது விற்பனை வரி 8 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைக்கப்பட்டது.

(ஆ) மத்திய விற்பனை வரி 4 சதவீதத்திலிருந்து 2 சதவீதமாக குறைக்கப்பட்டது.

(இ) பச்சைத் தேயிலையின் விலை வீழ்ச்சியடைந்ததற்கு ஸ்ரீலங்கா, இந்தோனேசியா போன்ற நாடுகளிலிருந்து தேயிலை இறக்குமதித் செய்ததும் ஒரு காரணமாகும். தேயிலைக்கான இறக்குமதித் தீர்வையை அதிகரிக்கும்படி மத்திய அரசு வலியுறுத்தப்பட்டது. மத்திய அரசும் இறக்குமதித் தீர்வையை 15 சதவீதத்திலிருந்து 70 சதவீதமாக அதிகரித்தது.



தேயிலைக்கான இறக்குமதி வரியை 70 சதவீதத்திலிருந்து 100 சதவீதமாக உயர்த்துவதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

(ஈ) சிறு தேயிலை விவசாயிகளுக்கு ஏற்பட்ட நட்டத்தினை ஈடுகட்டும் பொருட்டு விலை மானியத் திட்டத்தைச் செயற்படுத்தும்படி மத்திய அரசை மாநில அரசு வேண்டியது. அவ்வாறே மத்திய அரசும் விலை மானியத் திட்டத்தைத் தேயிலை வாரியம் வாயிலாகச் செயற்படுத்தியது. இத்திட்டத்தின்கீழ், தேயிலைத் தூளின் விலை கிலோ ஒன்றுக்கு ரூபாய் 55/-க்குக்கீழ் குறைகின்ற நேரத்தில் ஒரு கிலோ பச்சைத் தேயிலைக்கு ரூபாய் 2/- வீதம் சிறு தேயிலை விவசாயிகளுக்கு விலை மானியம் வழங்கப்பட்டது. இத்திட்டத்திற்கு 31-10-2000 வரையான காலத்திற்கு ரூ.26 கோடி விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. 11-2000 முதல் 31-3-2001 வரையுள்ள காலத்திற்கு, மேற்கொண்டு 26.00 கோடி மத்திய அரசிடமிருந்து பெறப்பட வேண்டி உள்ளது. க்காலத்திற்கு உரிய தொகையினை விரைவில் விடுவிக்கும்படி மத்திய அரசு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. விலை மானியத் திட்டத்தைத் தொடர்ந்து செயற்படுத்தும்படியும் மத்திய அரசு கேட்டுக்கொள்ளப்படவுள்ளது.

(உ) "ஊட்டி" தேயிலையை, இண்ட்கோசர்வ் நிறுவனம் மூலம் பொது விநியோக முறை வாயிலாக விற்பனை செய்யும் திட்டத்தை ஆகஸ்ட் 2001-ல் இவ்வரசு அறிமுகப்படுத்தியது. மாதம் ஒன்றுக்கு 200 மெட்ரிக் டன்னாக இருந்த நியாயமான விலை கொண்ட நல்ல தரமான இத்தேயிலையின் விற்பனை தற்பொழுது மாதம் ஒன்றுக்கு 250 மெட்ரிக் டன்னாக அதிகரித்துள்ளது. 20-3-2002 வரை இண்ட்கோசர்வ் நிறுவனம் 1892 மெட்ரிக் டன் "ஊட்டி" தேயிலையை விற்பனை செய்துள்ளது.

(ஊ) வட இந்தியாவிலும், வெளிநாட்டிலும் அதிக அளவு தேயிலையை விற்பனை செய்யும் பொருட்டு, நீலகிரி மாவட்டத்தில் தேயிலையின் தரத்தை மேம்படுத்துவதற்கான திட்டத்தையும் தேயிலை வாரியம் அறிமுகப்படுத்தியது.

(எ) மத்தியதர வர்க்கம் எதிர்பார்க்கும் தரம் வாய்ந்ததாக உள்ளதாலும், மற்ற முன்னோடி நிறுவனங்கள் தயாரிக்கும் தேயிலையை விட விலை குறைவாக உள்ளதாலும், "ஊட்டி தேயிலை" பொது மக்களுக்கு மற்ற வர்த்தக வழிகளில் விற்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாட்டிற்கு வெளியே "ஊட்டி தேயிலை"யை விற்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

(ஏ) தேயிலை ஏல விற்பனை முறையிலுள்ள குறைபாடுகளைத் திறம்படக் களைய இவ்வரசு, மத்திய அரசு, தேயிலை வாரியம், தேயிலை வியாபாரிகள், தரகர்கள், தோட்ட உரிமையாளர் சங்கங்கள் மற்றும் ஒருங்கிணைந்த தென்னிந்திய தோட்ட உரிமையாளர் சங்கம் (உபாசி) ஆகியோருடன் விரிவான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளது. அரசே ஏல மையத்தினைத் துவக்குவது குறித்தும் பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றது.

அரசு மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளின் விளைவாக பச்சைத் தேயிலையின் விலை தற்போது கிலோ ஒன்றுக்கு ரூ.6/- ஆ உயர்ந்துள்ளது. இது மேலும் உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது

வட இந்தியாவிலும் விளையக்கூடிய வணிகப் பயிராகத் தே உள்ளதால், தேயிலைக்குக் குறைந்தபட்ச விலை நிர்ணயம் செ கடினமானது. தேயிலைக் கட்டுப்பாட்டு ஆணை, 1953 ஆம் ஆ தேயிலைச் சட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டது. இச்சட்டம் இந்திய அளவிலான ஒரு சட்டமாகும். எனவே, தேயிலை குறைந்தபட்ச விலை நிர்ணயிப்பதற்கான முடிவு மத்திய அளவில் எடுக்கப்பட வேண்டியுள்ளது.

பச்சைத் தேயிலையைப் பறிப்பதில் உள்ள தரம் மற்றும் தேயி தயாரிக்கும் முறை ஆகியவற்றைப் பொறுத்து, தேயிலை விலை பெரிய வித்தியாசங்கள் உள்ளன. விலை, பகுதிக்குப் பகுதி மாறுபடுகி மேலும், பச்சைத் தேயிலையின் விலை ஏல மையங்களில் தேயி ஏல விற்பனையில் தேயிலைக்குக் கிடைக்கும் விலையைப் பொறு நிர்ணயிக்கப்படுகிறது. ஒவ்வொரு வாரமும் ஏல விற்பனை விலை பெறப்படுகிறது. அதன் அடிப்படையில் பச்சைத் தேயிலையின் வில அறுதியிடப்படுகிறது. தேயிலை வியாபாரத்தில் அடிப்படையாகத் திகழும் தேயிலை வாங்குபவரை, குறிப்பிட்ட விலைக்கு வாங்க வேண்டும் என அரசு வற்புறுத்தாதபட்சத்தில், குறைந்தபட்ச விலை நிர்ணயிப்பது முடியாத காரியமாகும். ஜனநாயக அமைப்பில், அரசியலமைப்புச் சட்டத்தில் உள்ள உரிமைப் பாதுகாப்பின் காரணமாக, தனியார் தேயிலை வாங்குபவர்களை வற்புறுத்துவது இயலாததாகும். எனவே, பச்சைத் தேயிலைக்குக் குறைந்தபட்ச விலை நிர்ணயம் செய்ய இயலாது.



## XXXIV. தலைமைச் செயலகப் பணியாளர் கூட்டுறவு வீட்டுமனைச் சங்கம், செயல்பாடுகள்

**உறுப்பினர்: திரு. தி. வேல் முருகன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் (வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை)**

### அறிக்கை

காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் வட்டம், ஒக்கியம் துரைப்பாக்கம் கிராமத்தில், புல எண்கள் 402 முதல் 404-ல் உள்ள 23.02.0 ஹெக்டேர் நிலத்தினைத் தலைமைச் செயலகச் சங்கத்திற்கு வீட்டுமனைத் திட்டத்திற்காக அரசு ஒதுக்கியது. மேற்படி நிலங்களைத் தலைமைச் செயலகச் சங்க உறுப்பினர்களாக இருப்பவர்களை மட்டும் கொண்ட கூட்டுறவுச் சங்கம் உருவாக்கி, அவர்களுக்கு வழங்க ஏதுவாக அரசாணை (நிலை) எண் 306, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (வீட்டு-2), துறை, நாள் 23-7-1999-ன் மூலம் "தமிழ்நாடு தலைமைச் செயலகப் பணியாளர்கள் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம்" பதிவு செய்யப்பட அனுமதி அளித்து ஆணை வழங்கப்பட்டது.

2. இச்சங்கம் 26-7-1999-ல் பதிவு செய்யப்பட்டு, 27-9-1999-லிருந்து செயல்படத் தொடங்கியுள்ளது. தற்போது சங்கம், தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுவின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. இதன் அடிப்படையில், தமிழ்நாடு தலைமைச் செயலகப் பணியாளர்கள் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்தின் பொதுப் பேரவைக் கூட்டம் 10-3-2002-ல் கூட்டப்பட்டு, உறுப்பினர்களுக்கு நிலம் வழங்குவது தொடர்பாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நெறிமுறைகளுக்குப் பொதுப் பேரவைக் கூட்டத்தில் ஒப்புதல் பெறப்பட்டது. [இதற்கு, துணைப் பதிவாளர் (வீட்டு வசதி), சென்னை மண்டலம் ஒப்புதல் அளித்துள்ளார்].

3. மேற்கூறியவாறு ஏற்படுத்தப்பட்ட நெறிமுறைகளின் அடிப்படையில் சங்க உறுப்பினர்களுக்கு நிலம் ஒதுக்குவதற்கு, துணைப் பதிவாளர் (வீட்டு வசதி), சென்னை, முன்னிலையில் குலுக்கல் 27-4-2002 அன்று நடைபெற்றது. இச்சிறப்புப் பேரவைக் கூட்டத்தில் பெருவாரியான உறுப்பினர்கள் வருகை தந்து, வீட்டுமனைக்காக நடைபெற்ற குலுக்கலில் பங்கேற்றனர். உறுப்பினர்களின் பெயர்கள் குலுக்கல் முறையில் எடுக்கப்பட்டுப் பதிவு செய்யப்பட்டது. வீட்டுமனைக்கு ஒதுக்கீடு வழிகாட்டி முறைகளின்படித் தெரிவு செய்யப்பட்டவர்களில் 524

நபர்கள் முன்பணம் செலுத்தியிருந்தனர். இவர்களின் விவரம் வகை வாரியாகப் பின்வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| வகை: 1 | .. | 169 | (1800 சதுர அடி மற்றும் அதற்கு மேற்பட்டது) |
| வகை: 2 | .. | 246 | (1600 சதுர அடி முதல் 1800 சதுர அடி வரை) |
| வகை: 3 | .. | 109 | (1600 சதுர அடிக்குக் குறைவு) |
| | | **524** | |

4. சங்க உறுப்பினர்களுக்கு மனை ஒதுக்கீடு செய்வதற்காக நடத்தப்பட்ட இக்குலுக்கலை எதிர்த்து திரு. எஸ். சகஜானந்தம் என்ற உறுப்பினர் உயர் நீதிமன்றத்தில் ரிட் மனு 18627/2002 (டபிள்யு.எம்.பி) தொடர்ந்துள்ளார். இதன்மீது 24-4-2002 அன்று, ஆறு வாரங்களுக்கு இடைக்காலத் தடை வழங்கப்பட்டுள்ளது. இந்த இடைக்காலத் தடை இருக்கும் வரை, அல்லது இத்தடை நீக்கப்படும் வரை மேல் நடவடிக்கை தொடர இயலாது.

5. இச்சங்கத்தின் கணக்குகள் முறையாகப் பராமரிக்கப்படவில்லை என இணைப் பதிவாளர் (ஆய்வுக் குழு)-வால் சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்து, சங்கச் செலவினக் கணக்குகளை ஆய்வு செய்ய தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப் பிரிவு 82-ன்கீழ் ஆய்வுக்கு துணைப் பதிவாளர் (வீட்டு வசதி), சென்னை, அவர்களால் உத்தரவிடப்பட்டுள்ளது. ஆய்வு முடிந்து, ஆய்வறிக்கை பெற்று, அதன் அடிப்படையில் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**XXXV.** கபிலர்மலை, கால்நடைகளுக்குக் கோமாரி நோய்

**உறுப்பினர்கள்:** **திரு. பி.எஸ். உலகரட்சகன்**
**திரு. கே. ஆறுமுகம்**
**திரு. கி. பாரிமோகன்**
**திரு. சி. சண்முகம்**
**திரு. ஆர். கிருஷ்ணன்**
**திரு. மு. கார்த்தி**
**திரு. அ. இரா. மலையப்பசாமி**
**திரு. ஜி.கே. மணி**
**திரு. எஸ். நடராஜன்**



**அமைச்சர்: மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் (கால்நடை பராமரிப்புத் துறை)**

**அறிக்கை**

நாமக்கல் மாவட்டம், மோகனூர் ஊராட்சி ஒன்றியம், ஓலப்பாளையம் கிராமத்தில் கால் மற்றும் வாய்க் கோமாரி, 'O' வகை நச்சுயிரியினால் ஏற்பட்டது.

முதலில் 14-4-2002 அன்று, கே. நடராஜன், த/பெ. பி.கே. கருப்பண்ணன் என்பவரின் பண்ணையில் கோமாரி நோயின் அறிகுறி காணப்பட்டது. பாதிக்கப்பட்ட கால்நடைகளுக்கு உரிய சிகிச்சை அளிக்கப்பட்டு, தற்பொழுது நோய் குணமாகிவிட்டது. சுற்றுவட்டாரத்திலுள்ள கால்நடைகளுக்கு இந்நோய் பரவுவதால் அவற்றையும் பார்வையிட்டு உரிய சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

கால்நடை வளர்ப்போருக்கு இந்த நோய்த் தாக்குதலைச் சமாளிப்பது பற்றி விரிவான அறிவுரைகள், துண்டுப் பிரசுரங்கள், பத்திரிகை விளம்பரங்கள் ஆகியன வழங்கப்படுகின்றன.

மொத்தம் 95 கால்நடைகள் (மாட்டினம்-54, எருமையினம்-41) பாதிக்கப்பட்டன. அவற்றில் 13 கால்நடைகள் (மாட்டினம்-6, எருமையினம்-3, எருமைக் கன்று-4) இறந்துள்ளன.

தற்பொழுது இறப்புகள் ஏதும் இல்லை.

**தடுப்பூசி விவரம்**

**ஓலப்பாளையம் கிராமம்**

| கிராமத்தின் பெயர் | மாட்டினம் | எருமையினம் | வெள்ளாடு | மொத்தம் |
|---|---|---|---|---|
| (1) கட்டமராபாளையம் | 92 | 202 | 72 | 366 |
| (2) ஊஞ்சபாளையம் | 66 | 137 | 44 | 247 |
| (3) வாயுமந்தை | 12 | 48 | - | 60 |
| (4) காமாட்சி நகர் | 6 | 80 | 65 | 151 |
| (5). பொய்யேரி | 7 | 83 | 47 | 137 |
| (6) கோட்டணப்பாளையம் | 11 | 221 | 32 | 264 |
| மொத்தம் | **194** | **771** | **260** | **1225** |

மேற்கண்டவாறு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

[2002 மே 10

**XXXVI. வத்தலகுண்டு, ஆதிதிராவிடர், பழங்குடியினர் வீடுகள் இடிக்கப்பட்டது.**

**உறுப்பினர்: திரு. க. முருகவேல் ராஜன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. கே. சுதர்சனம் (பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை)**

**அறிக்கை**

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டம், வத்தலகுண்டு கிராமத்தில் சர்வே எண் 373-1A. (0.70.0 ஹெக்டேர்)-இல் 0.02.0 ஹெக்டேர் அரசு புறம்போக்கு நிலத்தில் அரசு சீர்மரபினர் மாணவர் விடுதிக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. கடந்த 5 ஆண்டுகளில் விடுதியைச் சுற்றியுள்ள மீதமுள்ள நிலத்தை 57 நபர்கள் ஆக்கிரமிப்புச் செய்து கூரை வீடுகள் மற்றும் நிரந்தரக் கட்டடங்கள் கட்டியுள்ளனர். இந்த ஆக்கிரமிப்புகளை அகற்றுமாறு கோரிக்கைகள் பெறப்பட்டன. 6-9-2001 அன்று ஆக்கிரமிப்புப் பகுதியில் குடிதண்ணீர்ப் பம்பு காரணமாக ஆக்கிரமிப்பாளர்களுக்கும், விடுதி மாணவர்களுக்கும் தகராறு ஏற்பட்டது. ஆக்கிரமிப்புகள் மாணவர் விடுதி இயங்கத் தடையாக இருந்ததால், மதுரை (கள்ளர் சீரமைப்பு) தனித் துணை ஆட்சியர் அவர்கள் மேலும் தகராறு ஏற்படாவண்ணம் ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை மேற்கொண்டார். அமைதிக் குழுக் கூட்டம் ஒன்றை நடத்தி, அக்கூட்டத்தில் ஆக்கிரமிப்புகளை அகற்ற முடிவு செய்யப்பட்டது. 57 ஆக்கிரமிப்பாளர்களில் 20 நபர்கள் ஆக்கிரமிப்புச் செய்த நிலத்தில் ஓட்டு வீடுகள் மற்றும் நிரந்தரக் கட்டடங்கள் கட்டியுள்ளனர்.

2. தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டம் 1905-இல் பிரிவு எண் 5,7 மற்றும் 6-ன்கீழ் ஆக்கிரமிப்பாளர்களுக்கு முன் அறிவிப்புக் கொடுக்கப்பட்டது. திரும்பத் திரும்ப அறிவுரை வழங்கியும் 6 நபர்களைத் தவிர, மற்ற ஆக்கிரமிப்பாளர்கள் வெளியேறவில்லை. எனவே, விதிமுறைகளைப் பின்பற்றி, திண்டுக்கல் மாவட்டத் துணை ஆட்சியர் மற்றும் கூடுதல் காவல் துறைக் கண்காணிப்பாளர், திண்டுக்கல் ஆகியோர் முன்னிலையில், மதுரை (கள்ளர் சீரமைப்பு) தனித் துணை ஆட்சியர் அவர்களால் 3-3-2002 அன்று ஆக்கிரமிப்புகள் அகற்றப்பெற்றன. வருவாய்த் துறை மற்றும் காவல் துறை அலுவலர்கள் ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்குத் தேவையான உதவிகளை அளித்தனர். ஆக்கிரமிப்புகளை அகற்றும்போது, எந்தவித அசம்பாவித நிகழ்ச்சியும் நடைபெறவில்லை. பின்பு விடுதியின் பாதுகாப்புக் கருதி, விடுதியைச்



2002 மே 10]

சுற்றியுள்ள மொத்த நிலமும் அளக்கப்பட்டு, எல்லைகள் குறிக்கப்பட்டு, மதுரை (கள்ளர் சீரமைப்பு) தனித் துணை ஆட்சியருக்குக் காண்பித்து, அதற்கான சான்றிதழ் அவரிடமிருந்து பெறப்பட்டது. விடுதி நிலத்தை மீண்டும் யாரும் ஆக்கிரமிப்புச் செய்யாமல் பார்த்துக்கொள்ளுமாறு விடுதிக் காப்பாளருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

3. விடுதி நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்ட ஆக்கிரமிப்பாளர்கள் வீட்டுமனை வேண்டி மனுக் கொடுத்தனர். அம் மனுதாரர்கள் கோரிக்கை மீது வத்தலகுண்டு வருவாய் ஆய்வாளரால் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. விசாரணையில், 31 நபர்கள் வீட்டுமனைப் பட்டா பெறுவதற்குத் தகுதியானவர்கள் என்று கண்டறியப்பட்டது. அவர்களுக்கு வீட்டுமனை வழங்க கணவாய்ப்பட்டி கிராமத்தில் ச.எண். 396/1 ஏ1ஏ-இல் தற்காலிகமாக நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இதற்கிடையில் விடுதியைச் சுற்றித் தற்காலிகமாக வேலி போடும்போது பக்கத்திலுள்ள சில நில உரிமையாளர்கள் (அரசு புறம்போக்கு நிலத்தின் ஆக்கிரமிப்பாளர்கள்) விடுதி நிலத்திற்கு மட்டும் வேலி போடவில்லை என எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். எனவே, மீண்டும் நிலத்தை அளக்க ஆணையிடப்பட்டுள்ளது.

**XXXVII. தியாகி சுந்தரலிங்கம் பிறந்த நாள் விழா கொண்டாடப்படாதது**

**உறுப்பினர்: திரு. க. முருகவேல் ராஜன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன் (செய்தி மற்றும் விளம்பரத் துறை)**

**அறிக்கை**

வீரன் சுந்தரலிங்கம் பிறந்த நாள் விழா அரசு சார்பில் கொண்டாடப்பட வேண்டும் என்ற கோரிக்கை வரப்பெற்றதன் அடிப்படையில், தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் மாவட்ட அளவில் முதன்முதலாக தூத்துக்குடி மாவட்டம், ஓட்டப்பிடாரம் வட்டம், சுவர்ணகிரியில் அரசு சார்பில் 16-4-2000 அன்று கொண்டாடப்பட்டது. 16-4-2001 அன்று அரசின் சார்பில் தியாகி சுந்தரலிங்கம் பிறந்த நாள் விழா கொண்டாடப்படவில்லை.

2001 மற்றும் 2002 ஆம் ஆண்டுகளில் வீரன் சுந்தரலிங்கம் பிறந்த நாள் விழா கொண்டாடப்பட வேண்டும் என்ற கோரிக்கை ஏதும் வரப்பெறவில்லையாதலால் விழா கொண்டாடப்படவில்லை.

[2002 மே 10

**XXXVIII.** சிட்டா நூல், இரண்டு சதவீத விற்பனை வரியை இரத்துச் செய்வது

**உறுப்பினர்கள்: திரு. ஐ. கணேசன்**

**திரு. சி. ஞானசேகரன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம் (கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை)**

**அறிக்கை**

சிட்டா நூல் விற்பனைமீது விதிக்கப்படும் 2 சதவீத விற்பனை வரியை ரத்துச் செய்யக் கோரி பலதரப்பட்ட கைத்தறி நெசவாளர்களிடமிருந்தும் தொடர்ந்து முறையீடுகள் வந்தவண்ணம் உள்ளன.

2. சிட்டா நூலுக்கு சமச்சீர் தளவரி 4 விழுக்காடாகும். எனவே, இதற்குத் தற்போது விதிக்கப்பட்டுள்ள 2 விழுக்காடு விற்பனை வரியினை ரத்துச் செய்ய இயலாது.

**XXXIX.** விளவங்கோடு, மீனவர் திசை மாறியதால் மீன்பிடிப் படகுடன் மாலத்தீவு அதிகாரிகளால் சிறைப் பிடிக்கப்பட்டது

**உறுப்பினர்கள்: திரு. டி. மணி**

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன் (மீன்வளத் துறை)**

**அறிக்கை**

கன்னியாகுமரி மாவட்டம், தூத்தூர் கிராமத்தைச் சேர்ந்த 11 மீனவர்கள் 9-1-2002 அன்று நதிஷா என்ற இயந்திர மீன்பிடி விசைப்படகில் மீன்பிடிக்கச் சென்றனர். மீன்பிடிக்கச் சென்ற இவர்கள் கடலில் திசை மாறிச் சென்றதால் மாலத்தீவு அரசாங்கத்தினரால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர். இவர்கள் மாலத்தீவு அரசாங்கத்தால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ள செய்தி இவ்வரசிற்குத் தெரிந்ததும், மாலத்தீவிலுள்ள இந்தியத் தூதரக அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு இம்மீனவர்கள் பற்றிய விவரங்களைத் தெரிவித்து, அவர்களை விரைவில் மீட்டு, தாயகம் திருப்பி அனுப்பக் கேட்டுக்கொள்ளப்பட்டனர்.



2002 மே 10]

(2) இந்தியத் தூதரகத்தின் மூலம் தெரிவிக்கப்பட்ட இவ்வரசின் வேண்டுகோளை மாலத்தீவு அரசாங்கம் ஏற்றது. 11 மீனவர்களில் அவர்கள் சென்ற இயந்திரப் படகின் தலைவன் சுனில் மற்றும் இயந்திர படகு தவிர, ஏனைய 10 பேர்களும் மாலத்தீவு அரசாங்கத்தால் 13-2-2002 அன்று விடுதலை செய்யப்பட்டு, அன்று மாலை கேரள மாநிலம் திருவனந்தபுரம் வழியாகக் கன்னியாகுமரி வந்தடைந்தனர்.

(3) இப்படகின் தலைவன் திரு. சுனிலுக்கு, மாலத்தீவு அரசாங்கத்தின் Exclusive Economic Zone பகுதியில் சட்டபூர்வமற்ற முறையில் நுழைந்ததால், மாலத்தீவு ரூபாயில் 1,80,000 அபராதம் விதிக்கப்பட்டுள்ளதால் அவரை விடுதலை செய்ய இயலவில்லை.

(4) தற்போதுள்ள அரசாங்கத்தின் நிதி நெருக்கடியில் திரு. சுனில் அவர்களை, அவர் செலுத்த வேண்டிய மாலத்தீவு ரூபாய் 1,80,000/ தமிழக அரசாங்கத்தால் செலுத்தி மீட்டு வர வாய்ப்பில்லை.

**XL.** நாகப்பட்டினம், மீனவர்கள்மீது இலங்கை கடற்படையினர் தாக்குதல்

**உறுப்பினர்கள்: திரு. இ. புகழேந்தி**

**திரு. எ.வ. வேலு**

**திரு. டி. மணி**

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன் (மீன்வளத் துறை)**

**அறிக்கை**

நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் தாலுகா, கீச்சாங்குப்பத்தைச் சேர்ந்த திருவாளர்கள்

1. அரிச்சந்திரன், த/பெ. ரங்கசாமி,
2. மாணிக்கசாமி, த/பெ. பக்கிரிசாமி,
3. பெருமாள், த/பெ. முத்துசாமி,
4. வீரப்பன், த/பெ. குஞ்சுபாபு
5. வேலுசாமி, த/பெ. நல்லக்குட்டி மற்றும்
6. இராமு, த/பெ. வடமலை

ஆகியோர் 19-4-2002 அன்று நாகப்பட்டினம் மாவட்டம், கோடியக்கரைக்குக் கிழக்கே 10 கி.மீ. தூரத்திற்கப்பால் மீன்பிடிக்கச்

[2002 மே 10

சென்றனர். 20-4-2002 அன்று மீன்பிடித்துக் கொண்டிருக்கும்பொழுது இலங்கை கடற்படையினர் சுட்டதில், ரெங்கசாமி மகன் அரிச்சந்திரன் என்பவருக்குக் காயம் ஏற்பட்டது. அன்னாரின் இடது பக்க இடுப்பிலும், தொடையின் மேற்பகுதியிலும் காயம் ஏற்பட்டதைத் தொடர்ந்து நாகப்பட்டினம், அரசு தலைமை மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை அளித்து, பின்னர் நலமுடன் வீட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டார். மற்ற ஐவரும் எந்தவிதமான காயமுமின்றி வீடு திரும்பினர். இத்துன்பியல் நிகழ்வு குறித்து இந்திய அரசின் கடுங்கண்டனத்தை இலங்கை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருமாறு இலங்கையிலுள்ள இந்தியத் தூதரக அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

**XLI.** கொள்ளிடம் ஆறு, ஊற்று நீர், கான்சாகிப் கால்வாய்க்குத் திருப்பி விடுதல்

**உறுப்பினர்: டாக்டர் பி. வள்ளல் பெருமான்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், (பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)**

### அறிக்கை

கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், கொள்ளிடம் நதி ஊற்று நீரை, கான்சாகிப் வாய்க்காலுக்குத் திருப்பி விடும் திட்டம் ரூ.183 இலட்ச மதிப்பீட்டில் 1995-96 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட ஜூன் 1995-இல் அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கி ஆணை வெளியிட்டது. மேற்படி திட்டத்தினைச் செயல்படுத்தத் தேவையான நில எடுப்பை எதிர்த்து நிலச் சொந்தக்காரர்களால் வழக்குத் தொடரப்பட்டதால், நிலம் கையகப்படுத்துவதில் ஏற்பட்ட காலதாமதத்தின் காரணமாகவும், இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்குச் சரியான மாற்று இடம் கிடைக்காததாலும் மற்றும் பல தொழில்நுட்பக் காரணங்களாலும் கொள்ளிடம் நதி ஊற்று நீரை கான்சாகிப் கால்வாய்க்குத் திருப்பி விடும் திட்டத்தைக் கைவிட டிசம்பர் 1999-ல் அரசு ஆணை வெளியிட்டது. தற்பொழுது பொது மக்களின் கோரிக்கையின்பேரால், இத்திட்டம் மறு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ளது.



2002 மே 10]

**XLII.** இராமநாதபுரம், மலட்டாறு அணைத் திட்டம், வேலைகள் தொடர்ந்து நடைபெறாமல் இருப்பது

**உறுப்பினர்: திரு. சோ. பாலகிருஷ்ணன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் (பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)**

### அறிக்கை

மலட்டாறு அணை கட்டும் திட்டத்திற்கு அரசு ரூ.1,694 இலட்சம் மதிப்பீட்டிற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. இந்தத் திட்டத்திற்குத் திருத்திய மதிப்பீடு ரூ.23.00 கோடி ஆகும் எனத் தற்போது கணக்கிடப்பட்டுள்ளது.

2. இந்தத் திட்டத்திற்கு 127.75.0 எக்டேர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட வேண்டும். இதில் 56.12.0 நிலம் பொதுப் பணித் துறை வசம் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. 48.82.0 எக்டேர் நிலத்தை ஆர்ஜிதம் செய்ய 4(1) அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. மீதியுள்ள 22.81.00 எக்டேர் நிலத்தை ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வலதுபுறப் பிரதானக் கால்வாய்க்குத் தேவையான நிலங்கள் சம்பந்தமான நில ஆர்ஜித வேலைகள் முழுமையாக முடிக்கப்பட்டு விட்டன. இடதுபுறப் பிரதானக் கால்வாய் மற்றும் அதனைச் சார்ந்த கிளைக் கால்வாய்களுக்குத் தேவையான நிலங்களை ஆர்ஜிதம் செய்யத் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

3. மலட்டாறு அணை கட்டும் திட்டம் தொடர்பாக, உடலகச் சுவர் (Body Wall) கட்டும் பணி முடிக்கப்பட்டு உள்ளது. மண் அணை அமைக்கும் பணி 50% முடிக்கப்பட்டுள்ளது. மார்ச் 2002 வரை ரூ.580 இலட்சம் மதிப்பீடு கொண்ட பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ஆனால் ரூ.380 இலட்சம் மட்டும் செலவினம் செய்யப்பட்டுள்ளது. இன்னும் ரூ.200 இலட்சம் பட்டுவாடா செய்யப்பட வேண்டியுள்ளது.

4. 2002-2003 ஆம் நிதி ஆண்டுக்கு ரூ.100 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நபார்டு வங்கியிடமிருந்து நிதியுதவி பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நபார்டு வங்கியின் நிதி உதவி கிடைக்கப்பெற்றால், அனைத்து வேலைகளும் மார்ச் 2004-க்குள் முடிக்கப்பட இயலும்.

**XLIII. சென்னை, இலாயிட்ஸ் காலனி குடியிருப்பு, பராமத்துப் பணிகள்**

**உறுப்பினர்: திரு. எஸ்.ஏ.எம். உசேன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் (வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை)**

**அறிக்கை**

சென்னை, திருவல்லிக்கேணி தொகுதியைச் சார்ந்த இலாயிட்ஸ் காலனி (கே.ஆர்.ஆர். நகர்) பகுதியில் 240 அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புகளும், 290 வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகளும், 51 வாகனக் கூடங்களும், 20 அங்காடிகளும், 46 தனி நபர் குடியிருப்புகளும், 1 சமுதாயக் கூடமும் 270 கிரவுண்டு (14.87 ஏக்கர்) நிலப்பரப்பளவில் அமைந்துள்ளன. இக்குடியிருப்புகளுக்குத் தினசரி தண்ணீர் விநியோகம் வாரியத்தால் அனுமதிக்கப்பட்டுள்ள 3 ஆழ்துளைக் கிணறுகள் மூலமாகவும் மற்றும் சென்னைப் பெருநகர் குடிநீர் வடிகால் வாரியத்தால் பெறப்படும் 12 லாரிகள் மூலமும் முறையாக வழங்கப்பட்டு வருகிறது.

பிரதான கழிவு நீர் அகற்று பராமரிப்புப் பணிகளை, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம் மேற்கொண்டு வருகிறது. ஏனைய வீட்டு இணைப்பின் பராமரிப்புப் பணிகளை வீட்டு வசதி வாரியம் வருடாந்திரப் பராமரிப்பின்கீழ் செய்து வருகிறது.

பிரதான சாலைகளின் குப்பைகளை சென்னை மாநகராட்சி அப்புறப்படுத்தி வருகிறது. திட்டப் பகுதியின் உட்புறம் மற்றும் மாடிப்படி போன்ற பொது இடங்களை வாரியம் பராமரித்து வருகிறது.

மற்ற சிறிய பழுதுபார்ப்புப் பணிகளை வாரியம், வருடாந்திரப் பராமரிப்பின் நிதி ஒதுக்கீட்டில் மேற்கொண்டு வருகிறது. அப்பகுதிவாழ் மக்களுக்கு இன்னல் எதுவும் இல்லை. மேலும் சிறப்பு பழுதுபார்ப்புப் பணிகளை மேற்கொள்ள அரசு ஆணை எண் 118, நாள் 7-3-2001-ல் அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புத் திட்டங்களுக்கு மொத்தம் ரூபாய் 13.18 கோடி ஒதுக்கீடு செய்துள்ளதில் இக்குடியிருப்புகளுக்காக ரூபாய் இரண்டு இலட்சம் வழிவகை செய்யப்பட்டு, சீரமைப்புப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. செப்பனிடும் பணிகள் இந்த ஆண்டில் செப்டம்பர் மாதத்தில் முடிவு பெறும்.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
225169.
சென்னை-600 008

அரசு மைய அச்சகம், சென்னை — 600 079.

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.

53/138